666

ப்புறங்களுக்குப் புறப்பட்டுப்போய்,

௨௩ நாசரேத்தென்றுள்ள ஊரிலே வந்து வாசம்பண்ணி னான். நசரேயனென்னப்படுவாரென்கிறதாய் * தீர்க்கதரிசிகளாலே உரைக்கப்பட்டது நிறைவேறும் படியாகத்தானே. * ஏசா. ௰௧, ௧. சகரி. ௬, ௰௨.

## ௩. அதிகாரம்.

¶ யோவான் ஸ்நானகனுடைய ஊழியம்.
மாற்கு ௧, ௨ ... ௮. லூ. ௩, ௧ ... ௰௮.
யோவா. ௧, ௬. ௭.

அந்தநாள்களிலே யோவான் ஸ்நானகன் வந்து யூதேயாவின் வனாந்திரத்திலே பிரசங்கம் பண்ணி:

௨ * குணப்படுங்கோள், ஏனென்றால் வானராட்சியஞ் சமீபமாய்ச் சேர்ந்துதென்றான். * ௪, ௰௭.

௩ அதேதெனில்: வனாந்திரத்திலே கர்த்தரின் வழியை ஆயத்தப்படுத்துங்கோள், அவருடைய பாதைகளைச் செவ்வைப்பண்ணுங்கோள் என்று கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்று * ஏசாயா தீர்க்கதரிசியினாலே உரைக்கப்பட்டவன் இவன்தானே. * ஏசா. ௪௰, ௩.

௪ இந்தயோவானேவென்றால் ஒட்டகமயிர் உடுப்பைத் தரித்து, தன் அரையிலே தோற்கச்சையைக்கட்டிக் கொண்டிருந்தான், வெட்டுக்கிளிகளுங் காட்டுத்தேனும் அவனுடைய ஆகாரமாயிருந்தது.

௫ அப்போ எருசலேமும் யூதேயா வனைத்தும் யோர்தானுக்கடுத்த சுத்துப்புறத்தாரியாவரும் அவனிடைக்குப் புறப்பட்டுப்போய்,

௬ தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தானிலே அவனாலே ஸ்நானம்பெற்றார்கள்.

௭ ஆனால் பரிசேயரிலுஞ் சதுசேயரிலும் அநேகர் தன்னுடைய ஸ்நானத்துக்கு வருகிறதை அவன் கண்டு அவர்களுக்குச் சொன்னதாவது, விரியன்பாம்புகளின் குட்டிகளே, நீங்கள் வருங் கோபத்துக்குத் தப்பிக் க்கொள்வது உங்களுக்குக் காட்டினவனார்.

௮ ஆகையால் குணப்படுதலுக்கேற்றக் கனிகளைக் கொடுங்கோள்.

௯ ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பனென்று உங்களுள்ளத்திலே சொல்ல நினைவுகொள்ளாதேயுங்கோள், ஏனென்றால் பராபரன் இந்தக் கல்லுகளிலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰ அப்போதே கோடாலியும் மரங்களின் வேரிலே வைத்தாச்சுது, ஆனபடியினாலே நல்ல கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு, அக்கினியிலே போடப்படும்.

௰௧ * நானோவென்றால் குணப்படுதலுக்கென்று ஜலத்திலே உங்களுக்கு ஸ்நானம்பண்ணுவிக்கிறேன், எனக்குப் பின்னாக வருகிறவர் என்னிலும் பெலத்தவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்க நான் பாத்திரவானல்ல. அவர் பரிசுத்த

ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் பண்ணிவிப்பார். * மாற்கு ௧, ௭. ௮. லூ. ௩, ௰௬. யோவ. ௧, ௨௬. அப்போ. ௨, ௩. ௪.

௰௨ அவர் கையிலே அவருடைய தூற்றுக்கூடையிருக்குது, அவர் தமது களத்தை அறவிளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்திலே சேர்ப்பார், ஆனாற் பதரை அவியாத அக்கினியிலே சுட்டுப்போடுவாரென்றான்.

¶ கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றது.
மாற்கு ௧, ௯...௰௧. லூ. ௩, ௨௧. ௨௨.

௰௩ அப்போது யேசு கலிலேயாவிலிருந்து யோர்தானருகே யோவானண்டைக்கு அவனாலே ஞானஸ்நானம் பெற வந்தார்.
௰௪ ஆனால் யோவான் அவருக்குத் தடைபண்ணி: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறத் தேவையாமே, நீர் என்னண்டைக்கு வருகிறீரோ என்றான்.
௰௫ யேசுவோவென்றால் அவனுடனே; இப்போ திடங்கொடு, ஏனெனில் இப்படி நீதியை யெல்லாம் நிறைவேற்ற நமக்கு ஏற்றதாயிருக்குதென்று மறுமொழி சொன்னார், அப்போதவருக்கிடங்கொடுத்தான்.
௰௬ யேசு ஞானஸ்நானம் பெற்றவுடனே தண்ணீரிலே நின்றேறினார், அப்போதே, பரமண்டலங்கள் அவருக்குத் திறக்கப்பட்டுது, பராபரனுடைய * ஆவி புறாப்போலிறங்கி அவர் மேலே வருகிறதைக் கண்டான். * யேசா. ௰௧, ௨. யோவ. ௧, ௩௨...௩௪.
௰௭ இதோ ஒரு சத்தமும் பரமண்டலங்களிலிருந்துண்டாகி: * இவர் நாம் பிரியமாயிருக்கிற நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறாரென்றுரைத்துது.
* ௰௭, ௫. யேசா. ௪௨, ௧.

## ௪. அதிகாரம்.

¶ கிறிஸ்து பிசாசினாலே சோதிக்கப்பட்டது. மாற்கு ௧, ௰௨.
௰௩. லூ. ௪, ௧...௰௩.

அப்போ யேசு பிசாசினாலே சோதிக்கப்படுவதற்கு ஆவியினாலே வனாந்திரத்திலக் கொண்டுபோகப்பட்டார்.
௨ அவர் நாற்பது நாள் இரவும் பகலும் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசித்துது.
௩ அப்போ சோதனைக்காரன் அவரண்டைக்கு வந்து: நீ பராபரனுடைய குமாரனானால், இந்தக் கல்லுகள் அப்பமாகச் சொல்லென்றது.
௪ ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: * மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, பராபரனுடைய வாயிலிருந்து புறப்படுகிற சகல வார்த்தையினாலே பிழைப்பானென்றெழுதியிருக்குதென்றார். * ௫. மோ. ௮, ௩.
௫ அப்போ பிசாசு அவரைப் பரிசுத்தப்பட்டணத்துக்குக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்து உப்பரிகையின் மேலே நிறுத்தி;

௬ நீ பராபரனுடைய குமாரனானால், தாழக் குதி, ஏனெனில்: தம்முடைய தூதர்களுக்கு உன்னைக் காக்கக் கற்பிப்பார், உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்களென்று * எழுதியிருக்குதென்று அவருக்குச் சொல்லிற்று. * சங்கீ. ௯௧, ௰௧. ௰௨.

௭ யேசு அதற்கு: உன் பராபரனாகிய கர்த்தரைப் பரிட்சைபாராயாகவென்று பின்னையும் * எழுதியிருக்குதென்றார்.

* ௫. மோ. ௬, ௰௬.

௮ மறுபடியும் பிசாசு அவரை மகா உயர்ந்த பர்வதத்தின் மேலே கொண்டுபோய், லோகத்தின் சகல ராட்சியங்களையும் அதுகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:

௯ நீ தாழ விழுந்து என்னைப் பணிந்தால், இதுகளெல்லாத்தையும் உனக்குத் தருவேனென்று அவருக்குச் சொல்லிற்று.

௰ அப்போ யேசு அதற்கு: போ, சாத்தானே, அதேனென்றால் * பராபரனாகிய கர்த்தரைப் பணிந்து, அவரொருவருக்கு ஆராதனை செய்வாயாகவென்று எழுதியிருக்குதென்றார். * ௫. மோ. ௬, ௰௩.

௰௧ அன்னேரம் பிசாசு அவரை விட்டுப்போச்சுது, தேவதூதர்கள் சேர்ந்து வந்து அவருக்கு ஊழியஞ்செய்தார்கள்.

¶ கிறிஸ்து தம்முடைய போதகத்தொழி
லைத்துவக்க, சிலரைச் சீஷராக
அழைத்து, நோவாளிகளு
க்கு ஆரோக்கியம்
அளித்தது.

மாற்கு. ௧, ௰௪---௨௰.

லூக். ௪, ௰௪. ௰௫.

௰௨ ஆனாலே யோவான் ஒப்புக்கொடுக்கப்பட்டானென்று யேசு கேட்டு, கலிலேயாவுக்குப் புறப்பட்டுப்போய்,

௰௩ நாசரேத்தை விட்டு, செபுலோன் நவ்தலீன் தேசங்களின் எல்லைகளிலிருக்குங் கடற்கரையான கப்பர்னகூம் பட்டணத்திலே வந்து வாசம்பண்ணினார்.

௰௪ * யேசாயா தீர்க்கதெரிசியைக் கொண்டு உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாகத்தான். அவன் சொன்னதாவது:

* யேசா. ௯, ௧. ௨.

௰௫ கடற்கரை வழியும் யோர்தானந்திரமுமான செபுலோன் தேசமும் நவ்தலி தேசமும் புறச்சாதியாருடைய கலிலேயாவுமென்கிற,

௰௬ இருளிலே இருக்குஞ் சனம் பெரிய வெளிச்சத்தைக் கண்டது, மரணத்தின் திசையிலும் நிழலிலுமிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்ததென்றே.

௰௭ அதுமுதல் யேசு: * குணப்படுங்கோள், ஏனென்றால் வானராட்சியஞ் சமீபமாய்ச் சேர்ந்துதென்று பிரசங்கிக்கத் துவக்கினார். * ௩, ௨.

௰௮ ஆனால் * யேசு கலிலேயாக் கடலோரம் நடக்கையில், ரெண்டு சகோதரராகிய பேதுருவென்னப்பட்ட சீமோனும் அவனுடைய சகோதரன் அந்திரேயாவுங் கடலிலே வலைபோடுகிறதைக் கண்டார், ஏனென்றால் மீன் பிடிக்கிறவர்களாயிருந்தார்கள். * மாற்கு. ௧, ௰௬ --- ௨௰.

௰௯ அவர்களோடே: என் பிறகே வாருங்கோள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்குவேனென்றார்.

௨௰ உடனே அவர்கள் வலைகளை விட்டு அவரைப் பின்சென்றார்கள்.

௨௰௧ அவர் அவ்விடம் விட்டப்பாலே போகையில், வேறே ரெண்டு சகோதரராகிய செபெதேயுவின் மகன் யாக்கோபும் அவனுடைய சகோதரன் யோவானுந் தங்கள் தகப்பன் செபெதேயுவுடனே படகிலிருந்து தங்கள் வலைகளைப் பொத்திக்கொண்டிருக்கிறதைக் கண்டு, அவர்களை அழைத்தார்.

௨௰௨ உடனே அவர்கள் படவையுந் தங்கள் தகப்பனையும் விட்டு அவரைப் பின்சென்றார்கள்.

௨௰௩ பிறபாடு யேசு கலிலேயா வெங்குஞ் சுத்தி நடந்து, அவர்களுடைய ஆலயங்களிலே போதகம் பண்ணி, ராட்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, சனத்திலிருந்த சகல வியாதியையுஞ் சகல நோக்காட்டையுங் குணமாக்கினார்.

௨௰௪ அவருடைய கீர்த்தி சூரியாவிலெங்கும் பிரபலியமாச்சுது, ஆகையால் பல வியாதிகளையும் உபாதிகளையும் அடைந்த சகல பிணியாளிகளையும் பிசாசு பிடித்தவர்களையுஞ் சந்திர ரோகிகளையுந் திமிர்வாதக்காறரையும் அவரண்டைக்குக் கொண்டு வந்தார்கள், அவர்களைக் குணமாக்கினார்.

௨௰௫ கலிலேயாவிலும் பதுப்பட்டணங்களிலும் எருசலேமிலும் யூதேயாவிலும் யோர்தானுக்கப்புறத்திலுமிருந்து அனேகங் கும்புகள் வந்து அவரைப் பின்சென்றது.

## ௫. அதிகாரம்.

¶ கிறீஸ்து ஒரு பருவதத்திலே பிரசங்கம்
பண்ணி, விசுவாசிகளைப் பாக்கியவான
களென்றுகூறி, தங்கள் நற்சீரை
விளங்கப்பண்ண ஏவினது.
லூ. ௬. ௨௰---௨௬.

அவர் சனங்களைக் கண்டு, பருவதத்தின்மேலேறினார். அவர் உக்கார்ந்தபோது அவருடைய சீஷர்கள் அவரண்டையிலே சேர்ந்தார்கள்.

௨ அப்போதவர் தம் வாயைத் திறந்து, அவர்களுக்குப் போதகம் பண்ணிச் சொன்னதாவது:

௩ * மனத்தரித்திரர் பாக்கியவான்கள், அதேனென்றால் வானராட்சியம் அவர்களுடையதாயிருக்கிறது. * யெசா. ௫௭, ௰௫. * லூ. ௰௭, ௰.

௪ * துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்,
அதேனெ

அதேனனாலெ அவர்கள் தேற்றப்படுவார்கள்.
* ஏசா. ௬௧, ௧-௩.

௫ சாந்தனவர் பாக்கியவான்கள், அதேனனாலெ அவர்கள் * பூமியைச் சுதந்திரித்துக்கொள்ளுவார்கள். * சங்கீ. ௩௭, ௰௧. ஏசா. ௬௰, ௨௧.

௬ நீதியின்மேல் * பசித்தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அதேனனாலெ அவர்கள் திருப்தியடைவார்கள். * ஏசா. ௫௫, ௧.

௭ இரக்கவான்கள் பாக்கியவான்கள், * அதேனனாலெ அவர்கள் இரக்கம்பெறுவார்கள். * வாக்க். ௰௯, ௰௭. ௨௧, ௨௧.

௮ இருதயத்திலே சுத்தமானவர்கள் பாக்கியவான்கள், அதேனனாலெ அவர்கள் * பராபரனைத் தெரிசிப்பார்கள். * ௧. யோவா. ௩, ௨. ௩. சங்கீ. ௨௪, ௩. ௪.

௯ சமாதானத்தை நடத்துகிறவர்கள் பாக்கியவான்கள், அதேனனாலெ அவர்கள் பராபரனுடைய புத்திரரென்னப்படுவார்கள்.

௰ * நீதியினிமித்தியமாகத் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், அதேனனாலெ வானராட்சியம் அவர்களுடையதாயிருக்குது. * ௧. பேது. ௩, ௰௪.

௰௧ என்னிமித்தியமாக உங்களைத் தூஷணித்துத் துன்பப்படுத்தி, தீதுமொழியெல்லாம் உங்கள்மேலே பொய்யாய்ச் சொன்னார்களானால், பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். * ௧. பேது. ௪, ௰௪.

௰௨ சந்தோஷப்பட்டு * களிகூருங்கோள், ஏனெனனாலெ உங்கள் பலன் பரமண்டலங்களிலே திரளாயிருக்கும். ஏனெனில் உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதெரிசிகளை இப்படியே துன்பப்படுத்தினார்கள். * யா. ௫, ௨௩.

௰௩ நீங்கள் பூமியினுடைய உப்பாயிருக்கிறீர்கள், உப்பு * சாரமற்றுப்போச்சுதேயானால் அது எதினாலே சாரமுண்டாக்கப்படும். வெளியே கொட்டுண்டு மனுஷராலே மிதிக்கப்படவே யொழிய வேறொன்றுக்குமாகாது. * மாற்கு. ௯, ௫௰. லூ. ௰௪, ௩௪.

௰௪ நீங்கள் லோகத்தின் * வெளிச்சமாயிருக்கிறீர்கள், மலையின்மேலிருக்கிற பட்டணம் மறைந்திருக்கக்கூடாது. * பிலி. ௨, ௰௫.

௰௫ * விளக்கைக்கொளுத்தி, பறையின்கீழே வைக்கிறதுமில்லை, விளக்குத்தண்டின்மேலே வைப்பார்கள், அப்போ வீட்டிலேயிருக்கிறவர்களெல்லாருக்கும் பிரகாசிக்கும். * மாற்கு ௪, ௨௧.

௰௬ இப்படியே, * மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்துகிறதுக்காக உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது.
* ௧. பேது. ௨, ௰௨.

¶ என்றைக்குங் கொள்ளப்பட்டாத
தாயப்பிரமாணக் கற்பனைகளின்
அர்த்தத்தைக் காண்பிக்கது.

௰௭ தாயப்பிரமாணத்தையாகிலுந் தீர்க்கதெரிசிங்களையாகிலுந் தள்ளிப்போட வந்தே

னென்றெண்ணிக்கொள்ளாதேயுங்கோள், கொ-
லைத்துப்போடவல்லை நிறைவேற்றவந்தேன்.
௰௮ அதேதென்னறால் உங்களுக்கு மெய்யாகவே
சொல்லுகிறேன், * வானமும்பூமியும் ஒழியுமட்டும்
வேதத்திலெ ஒரேசிந்தெழுத்தாகிலும் ஒரே அட்சரக்கா-
லெனகிலும் சகலமுநடந்தேறுமட்டாக ஒழியாது.
* லூ. ௰௬, ௰௭.
௰௯ ஆனபடியினாலெ ஆராகிலும் இந்த எல்லாக்கற்-
பனைகளிலே ஒருசிறிதான கற்பனையை தள்ளிவிட்டு
துப்படி மனுஷரை உபதேசிக்கிறான், வானராட்சிய-
த்திலெல்லாரிலுஞ் சின்னவனென்னப்படுவான், ஆ-
னாலாராகிலும் அதுகளைச் செய்து உபதேசிக்கிறால் அவ-
ன் வானராட்சியத்திலெ பெரியவனென்னப்படு-
வான்.
௨௰ அதேதென்னறால் உங்களுக்குச் சொல்லுகிறேன்,
உங்கள் நீதி * வேதபாரகர் பரிசேயரென்றவர்களி-
ன் நீதியைப்பார்க்க அதிகப்படாதிருந்தாலொழிய வா-
னராட்சியத்துக்குள்ளே பிரவேசிக்கமாட்டீர்கள்.
* ௨௩, ௨௫…௨௮.
௨௧ கொலைசெய்யாயாகவென்பதும், ஆராகிலுங்
கொலைசெய்தால் நியாயத்தீர்ப்புக்கேதுவாயிருப்பா-
னென்பதும் பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டதெ-
ன்றுகேட்டீர்கள்.
௨௨ ஆனால் நானுங்களுக்குச் சொல்லுகிறேன், த-
ன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்ளு-
பவனெல்லாம் நியாயத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான்,
ஆராகிலும் சகோதரனைச் சீயென்றால் ஆலோசி-
சனைச்சங்கத்தீர்ப்புக்கேதுவாயிருப்பான், ஆராகிலும்
மதிகெட்டவனேயென்றால் * எரிநரகத்துக்கேதுவாயி-
ருப்பான். * ௧. யோவ. ௩, ௰௫.
௨௩ ஆகையால் நீ பீடத்தண்டையிலுன் காணிக்கை-
யைச் செலுத்தவந்து, உன் சகோதரனுக்குன் பேரிலே
ஏதேனுமுண்டென்று அங்கே நினைவுகூர்ந்தாயாகில்,
௨௪ அவ்விடத்திலெ பீடத்தின் முன்னே உன்காணிக்கை-
யை வைத்துவிட்டுப்போய், உன் சகோதரனோடெ முந்-
த ஒப்புரவாகி, பிறபாடுவந்து உன் காணிக்கையைச்
செலுத்து.
௨௫ எதிரியானவன் உன்னை நியாயாதிபதிக்குக் கொடுப்ப-
க்கொடாமலும் நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தி-
லெ ஒப்புக்கொடாமலும் நீ சிறைச்சாலையிலே வை-
க்கப்படாமலுமிருக்க, நீ சீக்கிரமாக உன் எதிரியோ-
டெ வழியிலேயிருக்கக்கொள்ள * அவனோட-
னெ நல்மனம் பொருந்து. * லூ. ௰௨, ௫௮. ௫௯.
௨௬ மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், நீ
கடைசிக்காசைக் கொடுத்துத்தீருமட்டாக அவ்விடத்தி-
லிருந்து புறப்படமாட்டாய்.
௨௭ விபசாரம்பண்ணாயாக என்பது பூர்வத்தா-
ருக்குரைக்கப்பட்டதென்று கேட்டீர்கள்.
௨௮ ஆனால் நானுங்களுக்குச் சொல்லுகிறேன்,
ஒருபெண்சாதியை * இச்சிச்சுப் பார்க்கிறவனெ-
வனானாலும் தன் இருதயத்திலெ அவளோடெ விபசாரம்
பண்ணினானாச்சுது. * யோபு. ௩௧, ௧.

௨௯ * உன் வலது கண் உனக்கிடறல் வருத்திவித்ததேயானால், அதைப் பிடுங்கியெறிந்துபோடு, ஏனென்றால் உன் சரீரமெல்லாம் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நலமாயிருக்குது. * மத். ௰௮, ௮, ௯. மாற்கு. ௯, ௪௩---௪௮. கலாத். ௫, ௨௪.

௩௰ உன் வலதுகையும் உனக்கிடறல் வருத்திவித்தால், அதைத் தறித்தெறிந்துபோடு. ஏனென்றால் உன் சரீரமெல்லாம் நரகத்திலே தள்ளப்படாதபடிக்கு உன் அவயவங்களில் ஒன்று கெட்டுப்போகிறதே உனக்கு நலமாயிருக்குது.

௩௧ * ஆராகிலுந் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டால், தள்ளுதலின் சீட்டை அவளுக்குக் கொடுக்கக்கடவானென்று சொல்லப்பட்டுது. * ௫. மோ. ௨௪, ௧.

௩௨ நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன், * ஆராகிலும் வேசித்தனமுகாந்திரமேயல்லாமல் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டால், அவளை விபசாரம்பண்ணுவிக்கிறான், ஆராகிலுந் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணினாலவன் விபசாரம்பண்ணுகிறான். * ௰௯, ௯.

௩௩ பின்னையும்: * பொய்யாணையிடாதாயாக என்பதும், ** உன் ஆணைகளைக் கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்பதும் பூர்வத்தாருக்குச் சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். * ௩. மோ. ௰௯, ௰௨. ** ௪. மோ. ௩௰, ௩.

௩௪ நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன், பரிச்சேதமாய்ச் சத்தியம்பண்ணவேண்டாம், வானத்தின் பேரிலானாலுஞ் சரி, ஏனென்றால் அது பராபரனுடைய * ஆசனமாயிருக்குது. * எசா. ௬௬, ௧.

௩௫ பூமியின் பேரிலானாலுஞ் சரி, ஏனென்றால் அது அவருடைய பாதப்படியாயிருக்குது, யெருசலேமின் பேரிலானாலுஞ் சரி, ஏனென்றால் அது பெரிய ராசாவின் பட்டணமாயிருக்குது.

௩௬ உன் சிரசின் பேரிலேனுஞ் சத்தியம்பண்ணாயாக, ஏனென்றால் ஒரு மயிரை வெண்மையாக்கவு மல்லது கறுப்பாக்கவு மாட்டாய்.

௩௭ உங்கள் சொல்லோவென்றால் * ஆமாம் அல்லல்லவென்றிருக்கக்கடவது, இதுகளுக்கு மிஞ்சினது பொல்லாப்பினாலுண்டாயிருக்குது. * யாக். ௫, ௰௨.

௩௮ கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்லென்பது * சொல்லப்பட்டுதென்று கேட்டீர்கள். * ௨. மோ. ௨௧, ௨௪. ௩. மோ. ௨௪, ௨௰.

௩௯ நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன், * பொல்லாப்போடெதிர்த்து நிற்கவேண்டாம், ** ஒருத்தன் உன் வலது கன்னத்திலே உன்னை அறைந்தால், அவனுக்கு மற்றக்கன்னத்தையுந் திருப்பிக்கொடு. * ஷோக். ௨௰, ௨௨, ** லூ. ௬, ௨௯.

௪௰ உன்னோடே * வழக்காடி உன் மேலங்கியை எடுத்துக்கொள்ள வேணுமென்றிருக்கிறவனுக்கு வஸ்திரத்தையும் விட்டுவிடு. * ௧. கொரி. ௬, ௭.

௪௧ யாதொருத்தன் உன்னை ஒருகாதவழி வரப்பே

லை

லவந்தம் பண்ணினால், அவனோடே ௫ காதவழி நடந்து போ.

௪௨ * உன்னை வேண்டிக்கொள்ளுகிறவனுக்குக் கொடு, உன்னிடத்திலே கடன் வாங்க வருகிறவனுக்கு முகங் கோணாதே. * லூ. ௬, ௩௰.

௪௩ * உன் அடுத்தவனைச் சிநேகித்து, உன் ** சத்துருவைப் பகைக்கக்கடவாயென்பது சொல்லப்பட்டதென்று கேட்டீர்கள். * ௩ மோ. ௰௯, ௰௮. ** ௫. மோ. ௭, ௨. ௨௩, ௬.

௪௪ ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், * உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கோள், உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கோள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கோள், உங்களைத் துண்டரிக்கம் பண்ணுகிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ** செபம் பண்ணுங்கோள். * லூ. ௬, ௨௭—௩௬. ** லூ. ௨௩, ௩௪.

௪௫ நீங்கள் பரமண்டலங்களிலிருக்கிற * உங்கள் பிதாவின் புத்திரராயிருக்கத்தக்கதாகத்தானே. அதென்னில் அவர் தீயோர் பேரிலும் நல்லோர் பேரிலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியர் பேரிலும் அநீதியர் பேரிலும் வருஷிக்கப்பண்ணுகிறார். * எபே. ௫, ௧.

௪௬ அன்றியே உங்களைச் சிநேகிக்கிறவர்களையே சிநேகித்தீர்களானால், உங்களுக்குப் பலனென்ன, ஆயக்காறரும் அப்படித்தானே செய்கிறார்களல்லவோ.

௪௭ உங்கள் சகோதரரை மாத்திரம் வினவினீர்களானால், நீங்கள் விசேஷத்துச் செய்கிறதென்ன, ஆயக்காறரும் அப்படிச் செய்கிறார்களல்லவோ.

௪௮ ஆகையால் பரமண்டலங்களிலிருக்கிற * உங்கள் பிதா பூரணசற்குணராயிருக்கிறபடியாலே, நீங்களும் பூரணசற்குணராயிருக்கக்கடவீர்கள். * கொலோ. ௩, ௰௨—௰௪.

## ௬. அதிகாரம்.

¶ அப்பாலும் பருவதத்திலே பண்ணின பிரசங்கம். தருமஞ் செபம் உபவாசமென்றதுகள் மாயமற்றிருக்கவேணுமென்பது.

மனுஷராலே காணப்படுவதற்கு, அவர்கள் முன்பாக உங்கள் தருமத்தைச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கோள். மற்றப்படி பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதாவினிடத்தில் உங்களுக்குப் பலனில்லை.

௨ ஆனபடியால் நீ தருமஞ் செய்கிறபோது, மாயக்காறர் தாங்கள் மனுஷராலே புகழப்படுவதற்கு, ஆலயங்களிலும் வீதிகளிலுஞ் செய்கிறபடியே, உன் முன்பாகத் தாரை ஊதுவியாதே. மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர்கள் தங்கள் பலனை

[illegible]லனை அடைநததிர்நதது.
௩ நீயோவெனிலதருமஞ்செயகிறபோது, உனதரு-
மமஅநதரஙகமாயிருககிறததுகாக உனவலதுகைசெ-
யகிறததைஉனஇடதுகைஅறியாதிருககககடவது.
௪ அபபோஅநதரஙகததிலேபாககிறஉனபிதாததா-
மே * வெளியரஙகமாயஉனககுபபலனை அளிபபார்.
* லூா. ௰௪, ௰௪.
௫ நீசெபமபணணுகிறபோதும, மாயககாறரைப-
போலிராதே. அதேதெனறாலதாஙகளமனுஷருககு-
ககாணபபட ஆலயஙகளிலுமவீதிகளின முககு-
களிலுமநினறுகொணடு செபமபணணவிருமபுகி-
றார்கள. மெயயாகவேஉஙகளுககுசசொலலுகிறே-
ன அவர்களதஙகளபலனை அடைநததிர்நதது.
௬ நீயோவெனிலசெபமபணணுகிறபோது, உ-
ன அறைவீடடுககுளபிறவேசிதது, உனகதவைப-
பூடி, அநதரஙகததிலிருககிற உனபிதாவைநோககிச-
செபமபணணு, அபபோஅநதரஙகததிலேபாககிறஉ-
னபிதாவெளியரஙகமாகஉனககுபபலனைஅளிபபார்.
௭ நீஙகளசெபமபணணுகிறபோதோவெனறா-
ல, * அஞஞானிகளைபபோலவீணவாறதைகளை
அலபபாதேயுஙகோள, ஏனெனிலதாஙகள வெகுவ-
சனிபபினாலேதாஙகளகேடகபபடுவோமெனறுநி-
னைககிறார்கள. * ௧ ராசா. ௰௮, ௨௬ --- ௨௯.
௮ ஆனதுகொணடுஅவர்களசாயலாயிராதேயுங-
கோள, அதேதெனறால உஙகளபிதா உஙகளுககுவே-
ணடுதேதுவெனறுநீஙகளதமமை வேணடிககொ-
ளளுகிறதுககுமுனனே அறிநதிருககிறார்.
௯ ஆகையாலநீஙகளசெபமபணணவேணடிய *
விதமாவது: பரமணடலஙகளிலிருககிற எஙகளபி-
தாவே, உமமுடைய நாமமபரிசுததமாவதாக.
* லூா. ௰௧, ௨ --- ௪.
௰ உமமுடையராசசியமவருவதாக. உமமுடை-
யசிததமபரமணடலததிலேசெயயபபடுமாபபோ-
லேபூமியிலேயுஞசெயயபபடுவதாக.
௰௧ அனறனறுளளஎஙகளஅபபததைஎஙகளுககி-
னறுதாரும.
௰௨ எஙகளகடனகாறருககுநாஙகள மனனிககு-
மாபபோலேஎஙகளகடனகளை எஙகளுககுமன-
னியும.
௰௩ எஙகளைசசோதனைககுளபிறவேசிககப-
பணணாதேயும, ஆனாலோதுனமையினினறெஙகளை-
ரடசிததுககொளளும. அதேதெனறாலராசசிய-
முமபெலனுமமகிமையும உமககெனறெனறைககு-
முணடாயிருககுது, ஆமெனனெனபதுதானே.
௰௪ அதேதெனனிலமனுஷருககுஅவர்களதபபிதங-
களைமனனிததீர்களானால, உஙகளபரமபிதாஉஙக-
ளுககுமமனனிபபார்.
௰௫ மனுஷருககுஅவர்களதபபிதஙகளை * மனனி-
யாதேபோனீர்களேயாகில, உஙகளபிதா உஙகள
தபபிதஙகளையுமமனனியாதிருபபார் * ௰௮, ௨௪-௩௫.
௰௬ நீஙகளஉபவாசிககுமபோதோவெனில, மா-
யககாறரைபபோல முகவாடடலாயிராதேயுங-
கோள

கோள், அதேதென்னால் அவர்கள் உபவாசிக்கிறவர்களென்று மனுஷருக்குக் காணப்பட, தங்கள் முகங்களை வதங்கப்பண்ணுகிறார்கள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், அவர்கள் தங்கள் பலனை அடைந்துதீர்ந்தது.

௰௭ நீயோவெனில் உபவாசிக்கும்போது, நீ உபவாசிக்கிறவனென்று மனுஷருக்கல்ல அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவுக்கே காணப்படுகிறதுக்காக, உன் சிரசைத் தயிலத்தால் பூசி, உன் முகத்தைக் கழுவு.

௰௮ அப்போ அந்தரங்கத்திலே பார்க்கிற உன் பிதாவே வெளியரங்கமாக உனக்குப் பலனளிப்பார்.

¶ பொருளாசையும் பிழைப்பினைக் கவலையும் வேண்டாமென்பது.

௰௯ * பூமியின்மேலே உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிவைக்காதேயுங்கோள், அங்கே பொட்டுந்துருவும் அதுகளைக் கெடுக்கும், அங்கே திருடருங் கன்னமிட்டுத் திருடுகிறார்கள். * யாகப். ௫, ௨-௩.

௨௰ * வானத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைக் கூட்டிவையுங்கோள், அங்கே பொட்டானாலுந் துருவானாலும் அதுகளைக் கெடுக்கிறதுமில்லை, அங்கே திருடர் கன்னமிடுகிறதுந் திருடுகிறதுமில்லை. * லூ. ௰௨, ௩௩: ௧: தீமோ. ௬; ௰௭--௰௯.

௨௧ ஏனெனில் உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்குதோ, அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.

௨௨ கண் சரீரத்தின் விளக்காயிருக்குது. ஆகையால் உன் கண் கபடமற்றதாயிருந்தால், உன் சரீரமெல்லாம் வெளிச்சமாயிருக்கும்.

௨௩ உன் கண் பொல்லாததாயிருந்ததேயானால், உன் சரீரமெல்லாம் இருண்டிருக்கும். இப்போதும் உன்னிலுள்ள வெளிச்சம் இருளாயிருந்தால், இருளெத்தனை பெரிதாயிருக்கும்.

௨௪ * ஒருவனும் இரண்டெஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது. ஏனென்றால் ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைச் சார்ந்துகொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான், நீங்கள் பராபரனுக்கும் லோகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்யக்கூடாது.

௨௫ ஆனதுகொண்டு உங்களுக்குச் சொல்லுகிறேன் * என்னத்தை உண்போமென்னத்தைக் குடிப்போமென்று உங்கள் சீவனுக்காகவும், என்னத்தை உடுப்போமென்று உங்கள் சரீரத்துக்காகவுங் கவலைப்படாதேயுங்கோள். ஆகாரத்தைப்பார்க்கச் சீவனும் உடையைப்பார்க்கச் சரீரமும் அதிகமாயிருக்குதல்லவோ. * லூ. ௰௨; ௨௨--௩௧. எபி. ௰௩; ௫.

௨௬ ஆகாசத்தின் பட்சிகளை நோக்கிப்பாருங்கோள். அதுகள் விதைக்கிறதும் அறுக்கிறதும் களஞ்சியங்களில் கூட்டிவைக்கிறதுமில்லை, இல்லாவிட்டாலும் உங்கள் பரமபிதா அதுகளைப் பிழைப்பூட்டுகிறார். அதுகளைப்பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்களல்லவோ, * சங்கீ. ௱௪௫, ௰௫. ௰௬,

௨௭ ஆனாலும் உங்களில் கவலைப்படுகிறதினால்

தன்

னசரீர அளவின்மேலொருமுழத்தைக்கூட்ட...

௨௮ உடைக்காகவும் நீங்கள் கவலைப்படுகிறதென்ன, வெளியிலே லீலிப்புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று அதுகளைக் கவனித்துப் பாருங்கள், அதுகள் உழைக்கிறதுமில்லை நூற்கிறதுமில்லை.

௨௯ ஆகிலும் சாலொமோனானவர் தம்முடைய சகல மகிமையிலும் இதுகளிலொன்றைப்போல உடுத்தியிருந்ததில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௩௰ இப்போதும் இன்றைக்கிருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படுகிற வெளியின் புல்லைப் பராபரன் இவ்விதமாக உடுத்துவித்தால், விசுவாசக் குறைவுள்ளவர்களே, உங்களை உடுத்துவிப்பாரல்லவா; அற்ப விசுவாசிகளே.

௩௧ ஆனபடியால் என்னத்தை உண்போம் என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப்போம் என்று சொல்லிக் கவலைப்படாதேயுங்கள்.

௩௨ ஏனென்றால் அதுகளெல்லாத்தையும் அஞ்ஞானிகள் நாடித் தேடுகிறார்கள். உங்கள் பரம பிதாவோவென்றால் இதுகளெல்லாம் உங்களுக்குத் தேவையென்றறிவார்.

௩௩ ஆனால் முந்தப் பராபரனுடைய ராச்சியத்தையும் அவருடைய நீதியையுந் தேடுங்கள், அப்பொழுது இதுகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

௩௪ ஆகையால் நாளையத்தினத்துக்காகக் கவலைப்படாதேயுங்கள், ஏனென்றால் நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்; அந்தந்த நாளுக்கு அதினதின் பாடு போதும்.

## ௭. அதிகாரம்.

¶ அப்பாலும் பர்வதத்தில் பண்ணின
பிரசங்கம். புறணிந்தாணமாக நடத்
தவும், செபம்பண்ணவுஞ்
சொன்ன புத்தி.

நீங்கள் குற்றமாய்த் தீர்க்கப்படாதிருக்கும்படிக்குக் குற்றமாய்த் தீர்க்காதேயுங்கள்.

௨ அதேதென்றால் எந்தத் தீர்ப்பினாலே நீங்கள் தீர்க்கிறீர்களோ, அத்தீர்ப்பினாலே நீங்கள் தீர்க்கப்படுவீர்கள், எந்த அளவினாலே அளக்கிறீர்களோ, அத்தாலே உங்களுக்குத் திரும்ப அளக்கப்படும்.

௩ ஆனால் நீ உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலிருக்குஞ் சிறு துரும்பைப் பார்க்கிறதென்ன.

௪ அல்லது உன் சகோதரனிடத்திலே: நான் உன் கண்ணிலிருக்குந் துரும்பை எடுத்துப்போடட்டுமென்று சொல்லுவதெப்படி, இதோ உத்திரம் உன் கண்ணிலிருக்குதே,

௫ மாயக்காரனே, முந்த உன் கண்ணிலிருக்கும் உத்திரத்தை எடுத்துப்போடு, பிறகு உன் சகோதரன் கண்ணிலிருக்குந் துரும்பை எடுக்கிறதுக்கு வகை பார்ப்பாய்.

௬ நீங்கள் * பரிசுத்தமானதை ** நாய்களுக்குக் கொடாமலும், உங்கள் முத்துக்களைப் பன்றிகள் தங்கள் கால்களால் மிதித்துப்போட்டுத் திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடாதபடிக்கு முத்துக்களை அதுகளுக்கு முன்பாகப் போடாமலுமிருங்கள்: * ௧. கொரி. ௰, ௨௧. ** ௨. பேது. ௨, ௨௨.

௭ கேளுங்கள், அப்போ உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்போ கண்டுபிடிப்பீர்கள், தட்டுங்கள், அப்போ உங்களுக்குத் திறக்கப்படும்.

௮ ஏனென்றால் கேட்கிறவனெல்லாம் * வாங்குகிறான், தேடுகிறவன் கண்டுபிடிக்கிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். * யெரே ௨௯, ௰௨ --- ௰௪.

௯ அல்லது உங்களில் எந்த மனுஷனாகிலுந் தன்னை அப்பங்கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானோ.

௰ இவன் மீனைக் கேட்டால், அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானோ.

௰௧ ஆகப்போதும் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா தம்மைக் கேட்கிறவர்களுக்கு * நன்மைகளைக் கொடுப்பார். * லூ. ௰௧, ௩, --- ௰௩.

௰௨ ஆகப்போதும், மனுஷர் என்னென்னத்தை உங்களுக்குச் செய்யவேணுமென்றிருக்கிறீர்களோ, அதையெல்லாம் நீங்கள் அவர்களுக்கும் அப்படியே செய்யுங்கள், ஏனென்றால் * நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகளும் இதுதானே. * ரோம. ௰௩, ௰.

¶ ஆகாத வழிகளுக்குப் போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொன்ன புத்தி.

௰௩ * இடுக்கவாசலாலே உட்பிரவேசியுங்கள், ஏனென்றால் கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்குது, அதுக்குள்ளே பிரவேசிக்கிறவர்கள் அநேகம் பேராயிருக்கிறார்கள். * லூ. ௰௩, ௨௪.

௰௪ ஆனால் சீவனுக்குக் கொண்டுபோகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்குது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் கொஞ்சம் பேராயிருக்கிறார்கள். * அப்போ. ௰௪, ௨௨.

௰௫ ஆனால் * கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்கள் ** ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களண்டைக்கு வருகிறார்கள், உள்ளேயோ கவ்வுகிற ஓநாய்களாயிருக்கிறார்கள். * ௨. பேது. ௨, ௧. ** [illegible]. ௰௯, ௰௩. ௨. கொரி. ௰௧, ௰௩ --- ௰௫.

௰௬ அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்களாக. முள்ளுச்செடிகளிலே திராட்சிப்பழங்களையும், முட்பூண்டுகளிலே அத்திப்பழங்களையும் அறுக்கிறார்களோ.

௰௭ அந்தப்படி நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும், ஆகாத மரமோ ஆகாத கனிகளைக்

கொ

கொடுக்கும்.

௰௮ நல்லமரம் ஆகாதகனிகளைக் கொடுக்கக்கூடாது, ஆகாதமரம் நல்லகனிகளைக் கொடுக்கவுங் கூடாது.

௰௯ * நல்லகனிகொடாதமரமெல்லாம் வெட்டப்பட்டு, அக்கினியிலே போடப்படும். * ௩, ௰.

௨௰ ஆகையாற்கொண்டு அவர்கள் கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.

௨௧ என்னுடனே: * ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லுகிறவனெவனுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சித்தத்தை ** செய்கிறவனே வானராச்சியத்துக்குள் பிரவேசிப்பான். * லூ. ௬, ௪௬. ** யாக். ௧, ௨௨. ரோம. ௨, ௰௩.

௨௨ அந்நாளில் அநேகம் பேர் என்னுடனே: ஆண்டவரே ஆண்டவரே, உமது நாமத்திலே தீர்க்கதரிசனமுரைக்காமலோ, உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்திவிடாமலோ, உமது நாமத்திலே அநேக அற்புதங்களைச் செய்தோமல்லோ என்பார்கள்.

௨௩ அப்போது நான்: ஒருக்காலும் உங்களை அறிந்தேனில்லை, அக்கிரமஞ்செய்கைக்காறரே, * என்னைவிட்டகன்றுபோங்கோளென்று அவர்களுக்கு அறிக்கைபண்ணுவேன். * ௨௫, ௪௧.

¶ தேவவசனத்தைக் கேட்டுச்செய்கிறவனுக்கு வரும் பிரயோசனம், செய்யாதவனுக்கு வருங்கேடு. லூ. ௬, ௪௭—௪௯.

௨௪ ஆனபடியாலெவனாகிலும் இந்த என்னுடைய வார்த்தைகளைக் கேட்டு அதுகளின்படி செய்தால், அவனைப் புத்தியுள்ள மனுஷனுக்கொப்பிடுகிறேன். அவன் தன் வீட்டைக் கல்மலையின் மேலே கட்டினான்.

௨௫ பெருமழை சொரிந்து, பெருவெள்ளமும் வந்து, காத்துகளும் அடித்து, அந்த வீட்டின் மேலே மோதியும் அது விழுந்ததில்லை; ஏனென்றால் கல்மலையின் மேலே அஸ்திவாரம் போட்டிருந்தது.

௨௬ ஆனாலெவனாகிலும் இந்த என்னுடைய வார்த்தைகளைக் கேட்டும் அதுகளின்படி செய்யாதிருந்தால், அவன் புத்தியற்ற மனுஷனுக்கொப்பாயிருக்கிறான். அவன் தன் வீட்டை மணலின் மேலே கட்டினான்.

௨௭ பெருமழை சொரிந்து, பெருவெள்ளமும் வந்து காத்துகளும் அடித்து அந்த வீட்டின் மேலே மோதுகிறபோது அது விழுந்தது, அதின் விழுத்தல் பெரிதுமாயிருந்ததென்றார்.

௨௮ யேசு இந்த வார்த்தைகளை முடித்தபோது சம்பவித்ததேதென்றால்; கும்புகள் அவருடைய போதகத்துக்காக விஸ்மயித்தது.

௨௯ அதேனென்றால் வேதபாரகரைப் போலல்லாமல், அதிகாரமுள்ளவரைப் போல அவர்களைப் போதிக்கிறவராயிருந்தார்.

## ௮. அதிகாரம

¶ கிறிஸது ஒருகுஷடரோகியைககு
ணமாககினது.

௧ அவர பறவததிலிருநதிறஙகினபோது திரளாஙகுமபு
கள அவரைபபினசெனறது.
௨ இதோ * ஒருகுஷடரோகிவநதுஅவரைபபணிந
து: ஆணடவரே, உமககுமனதுணடானால, எனனைச
சுததமாககஉமமாலேஆமென்றான. * மாறகு ௧,
௪௰—௪௫.
௩ அபபோயேசுகையைநீடடி, அவனைததொடடு:
எனககுமனதுணடு, சுததமாகுவெனறார. உடனேஅவ
னகுஷடரோகஞசுததமாசசுது.
௪ யேசுஅவனுடனே: இதைஆருககுஞசொலலாத
படிககுபபார, ஆனால * நீபோயஆசாரியனுககுனனைக
காணபிதது, மோசேகறபிததகாணிககையைஅவ
ரகளுககுசசாடசியாகசசெலுததெனறார. * ௩. மோ.
௰௪, ௨, ௩.

¶ அவர சேரவைககாறனுடையவேலைககா
றனைககுணமாககினது. லூ. ௭, ௧—௰.

௫ யேசுகபபறனகூமுககுளபிறவேசிககையி
ல, நூறறுககுசசேரவைககாறனஅவரணடைவநது
அவரைவேணடிககொணடு:
௬ ஆணடவரே, எனவேலைககாறனமிகவுமஉ
பாதிபபடடுவீடடிலேதிமிரவாதமாயககிடககிறா
னெனறான.
௭ யேசுஅவனுடனே: நானவநதுஅவனைககுண
மாககுவேனெனறார.
௮ சேரவைககாறனபிறததியுததாரமாகசசொனன
தாவது: ஆணடவரே, நீரஎனதலைவாசலுககுள
பிறவேசிககநானபாததிரவானலல, ஒருவாறததை
மாததிரஞசொலலும, அபபோஎனவேலைககாறன
ஆரோககியமாவான.
௯ அதேதெனனாலநானஅதிகாரததுககுககீழான
மனுஷனாயிருநதும, எனககுககீழாயிருககிறசேவகர
எனககுணடு. நானஒருவனைபபோவெனககபபோ
றான, பினனொருவனைவாவெனகவருகிறான, என
பணிவிடைககாறனுககு: இதைசசெயயெனறு
சொலலசசெயகிறானெனறான.
௰ யேசுஇதைககேடடுஆசசரியபபடடுபபினசெல
லுகிறவரகளுடனேசொனனதாவது: மெயயாக
உஙகளுககுசசொலலுகிறேன, இஸறவேலிலே
முதலாயநானிபபடிககொததவிசுவாசததைககண
டதிலலை.
௰௧ ஆனாலுஙகளுககுசசொலலுகிறேன, அனேக
மபேர * கிழககிலுமமேறகிலுமிருநதுவநது, வா
னராடசியததிலஆபிரகாமஈசாககியாககோபெனற
வரகளுடனேகூடடபபநதியிருபபாரகள. * யெசா.
௪௯, ௰௨.
௰௨ * ராடசியததினபுததிரரோவெனறாலஎலலா
ததுககுமபுறமபானஇருளிலேதளளபபடுவார
கள, அஙகேஅழுகையுமபலககடிபபுமுணடாயிரு
ககுமெனறார. * ௨௧, ௪௩.

௰௩

௰௩ அப்போ யேசு சேர்வைகாறனுடனே: போ, நீ விசுவாசித்தபடி உனக்காகக்கடவதென்றார், அந்த நாழிகையிலே அவன வேலைக்காறனாரோக்கியமானான்.

¶ அவர் பேதுருவின் மாமியையும் அநேகம் நோவாளிகளையுஞ் சுகமாக்கினது.

௰௪ * யேசு பேதுருவின் வீட்டிலே வந்து, அவன் மாமி சுரமாய்க் கிடக்கிறதைக் கண்டு, * மாற்கு ௧. ௨௯—௩௪.

௰௫ அவளுடைய கையைத் தொட்டார். அப்போ சுரம் அவளை விட்டு நீங்கிற்று. அவள் எழுந்திருந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்தாள்.

௰௬ ஆனால் அஸ்தமானமானபோது பிசாசு பிடித்த அநேகம் பேரை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். அவர் ஆவிகளை வார்த்தையினாலே துரத்திவிட்டு, பிணியாளிகளெல்லாரையுஞ் சுகமாக்கினார்.

௰௭ அவர் நம்முடைய பெலயீனங்களை மேலே போட்டுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தாரென்று * யெசாயா தீர்க்கதரிசியினாலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படியாகத்தானே. * யெசா. ௫௩. ௪. ௫.

¶ அவர் தம்மைப் பின்செல்லுகிறவர்களுக்குச் சொன்ன புத்தி. லூ. ௯, ௫௭—௬௰.

௰௮ ஆனால் யேசு தம்மைச் சுற்றிலும் அநேகங் கும்புகளைக் கண்டு, அக்கரைக்குப் போகக் கற்பித்தார்.

௰௯ வேதபாரகனொருவன் சேர்ந்துவந்து, அவருடனே போதகரே, நீர் எங்கே போனாலும் உம்மைப் பின்செல்லுவேனென்றான்.

௨௰ யேசு அவனுடனே: நரிகளுக்குக் குழிகளுண்டு ஆகாசத்துப் பறவைகளுக்குக் கூடுகளுமுண்டு, * மனுஷனுடைய குமாரனுக்கோ தலைசாய்க்க இடமில்லையென்றார். * ௨. கொரி. ௮, ௯, சகரி. ௯, ௯.

௨௰௧ ஆனால் அவருடைய சீஷர்களில் வேறொருத்தன் அவருடனே: ஆண்டவரே, நான் முந்திப்போய், என் தகப்பனை அடக்கம்பண்ண எனக்குத் தாரங்கொடுமென்றான்.

௨௰௨ யேசுவோவென்றால் அவனுடனே: என்னைப் பின்சென்றுவா, * மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டுமென்றார். * எபே. ௨, ௧. ௧. தீமோ. ௫, ௬. அறி. ௩, ௧.

¶ அவர் கடலின் கொந்தளிப்பை அமர்த்தினது. மாற்கு, ௪. ௩௫—௪௧. லூ. ௮, ௨௨.—௨௫.

௨௰௩ அவர் படவிலேறுகிறபோது அவர் சீஷர்கள் அவர் பிறகே சென்றார்கள்.

௨௰௪ இதோ, படகு அலைகளினாலே மூடப்படத்தக்கனையாய்க் கடலிலே பெரிய கொந்தளிப்பெடுத்தது, அவரோவென்றால் நித்திரைபண்ணினார்.

௨௰௫ அப்போ அவருடைய சீஷர்கள் சேர்ந்துவந்து * அவரை எழுப்பி: ஆண்டவரே, எங்களை ரட்சியும், மடிந்துபோறோமென்றார்கள். * சங்கீ. ௩௫, ௨௩, ௱௪, ௨௪.

௨௬ அபபோ அவர் அவர்களுடனே: அறபவிசுவா
சிகளே, ஏன பயமடைநதிருககிறீர்களெனறுசொல
லி, எழுநதிருநது காததுகளையுங கடலையும அதட்டி
னார், அபபோ மகா அமைசசல உணடாசசுது.
௨௭ ஆனால மனுஷர் ஆசசரியபபட்டு: இவர் எபப
டிபபட்டவரோ, காததுகளுங கடலும இவருககுக கீ
ழபபடியுதேனறார்கள.

¶ அவர் பிசாசுகளைத துரததி, அதுகளைப பனனி
களுககுள போக உததாரங கொடுததது.
மாறகு. ௫, ௧ — ௨௰. லூா.
௮, ௨௬. — ௩௯.

௨௮ அவர் அககரையிலே கெர்கெசேனர் தேசததிலே
வநதபோது, பிசாசுபிடிததவர் இரணடு பேர் பிரேததகக
லலறைகளிலிருநது புறபபட்டு அவருககெதிராக வ
நதார்கள. அவர்கள மகாகொடியராகையால அ
நதவழிபாககலொருவனும நடககககூடாதிருநதது.
௨௯ இதோ அவர்கள: யேசுவே, பராபரனுடைய
குமாரனே, எங்களுககும உமககுமெனன, * காலம
வருமுனனே எங்களை உபாதிகக இங்கே வநதீரோ
வெனறு கூபபிட்டார்கள. * ௨. பேது. ௨, ௪.
௩௰ அவர்களுககபபுறநதூரமாய அனேகமபன
னிகளுடையமநதை மேயநதுகொணடிருநதது.
௩௧ அபபோ பிசாசுகள: நீர் எங்களைததுரததுகிற
தானால, பனனிகளினமநதையிலே நாங்கள போக உ
ததாரங கொடுமெனறு அவரை வேணடிககொணடுது.
௩௨ அவர் அதுகளுககு: போங்கோளெனறார். அ
துகள புறபபட்டு, பனனிகளுடைய மநதைககுள
போசசுது, இதோ பனனிகளுடைய மநதையெல
லாம உயர்நத மேட்டிலிருநது கடலிலே பாய்நது, தண
ணீரிலே மாணடுது.
௩௩ ஆனால மேயததவர்கள ஓடி பட்டணததிலே சே
னறு சகலததையும பிசாசுபிடிததவர்களுடைய வறத
மானங்களையும அறிவிததார்கள.
௩௪ அபபோ இதோ பட்டணததாரெலலாம யே
சுவுககெதிராகப புறபபட்டு, அவரைககணடதையி
லே, தங்களெலலைகளை விட்டுப போக அவரை வே
ணடிககொணடார்கள.

௯, அதிகாரம

¶ கிறிஸது திமிர்வாதககாறனைச
சொஸததமாககினது.

அபபோ * அவர் படகிலேறி, இககரைபபட்டுதம
முடைய பட்டணததிலே வநதார். * மாறகு. ௨, ௧ —
௰௨. லூா. ௫, ௰௭ — ௨௬.
௨ இதோ படுககையின மேலே கிடககிற ஒருதிமிர்
வாதககாறனை அவரணடைககுககொணடுவநதார்
கள. யேசு அவர்களுடைய விசுவாசததைககணடு,
திமிர்வாதககாறனுடனே: மகனே, திடனகொள,
உன பாவங்கள உனககுமனனிககபபட்டுதெனறார்.
௩ அபபோ இதோ, வேதபாரகர் லசிலர் தங்கள
உளளததிலே: இவன தேவதூஷணஞ சொலலுகிற
னெனறார்கள.

௪ ஆனாலயேசு அவர்கள நினைவுகளைககணடு
சொனனதாவது: நீஙகள உஙகள இருதயஙகளிலெ
பொலலாததுகளைநினைககிறதேது.
௫ ஏனெனில எதுஎளிதாயிருககுது, பாவஙகள
உனககுமனனிககபபடடுதெனறு சொலவதெளி
தோ, எழுநதிருநதுநடவெனறுசொலவதெளிதோ.
௬ ஆனாலபூமியிலெபாவஙகளமனனிகக மனுஷ
னுடையகுமாரனுககுஅதிகாரமுணடென கிறதைத
நீஙகள அறியவேணுமெனறுசொலலி, திமிர்வாதக
காறனுடனே: நீஎழுநதிருநது * உனபடுககையை
யெடுததுககொணடுஉனவீடடுககுபபோவெனறார்.
* யோவ. ௫, ௮.
௭ அபபொஅவனஎழுநதிருநது தனவீடடுககுப
போனான.
௮ ஜனஙகளஅதைககணடுஆசசரியபபடடு, மனுஷ
ருககுஅபபடிககொததஅதிகாரததைககொடுததபரா
பரனைமகிமைபபடுததினார்கள.

¶ அவர்மததேயுவைஅழைததது
உபவாசததினபேரிலெஉததரஞ
சொனனதும.

௯ யேசுஅவவிடமவிடடுபபொகையில, *
ஆயததுறையிலஉடகார்நதிருநதமததேயு எனனப
படடஒருமனுஷனைககணடார். அவனுடனே: என
னைபபினசெனறுவாவெனறார், அவன எழுநதிருநது
அவரைபபினசெனறான. * மாற்கு ௨, ௰௪.—௨௨. லூ
௫, ௨௭—௩௯.
௰ அபபொ சமபுவிததைததெனறால, அவர்வீடடி
லெபநதியிருககையில, அநேகம ஆயககாற
ருமபாவிகளுமவநது, யேசுவொடுமஅவர்சீஷாகக
ளொடுஙகூடபபநதியிருநதார்கள.
௰௧ பரிசேயர் அதைககணடுஅவருடையசீஷாகக
ளுடனே: உஙகளபோதகர்ஆயககாறரொடுமபா
விகளொடுமஅசனமபணணுவானெனனெனறார்கள.
௰௨ யேசுவொவெனறாலஅதைககேடடுஅவர்க
ளுககுசசொனனதாவது: பெலனுளளவனுககுவயித்தி
யனதேவையாயிராமல, பிணியாளிகளுககுததே
வையாயிருககிறன.
௰௩ ஆனால * பெலியையலல, இரககததைவிருமபு
கிறெனெனறதெதெனறுபோயககறறுககொள
ளுஙகோள, அதெனனாலநீதிமானகளையலல,**
பாவிகளைஆணைபபடுததுகூபபிடவநதெனனெனறார்.
*ஒசே ௬, ௬. மீகா. ௬, ௭. அ. ** க. தீமொ. ௧, ௰௫.
௰௪ அனனெரததிலெ யொவானுடையசீஷாகக
ள அவரணடைககுவநது: நாஙகளுமபரிசெயருமஅ
னெகநதரம உபவாசமபணணககொளளஉமமு
டையசீஷாககளஉபவாசமபணணாமலிருபபானெ
னனெனறார்கள.
௰௫ யேசுஅவர்களுககுசசொனனதாவது: கலியா
ணமனுஷர், * மணவாளனதஙகளொடிருககுமட்டு
ருநதுயரபபடககூடுமொ, மணவாளனஅவர்களை
விடடுஎடுபடுபபோமநாளககளவருமு, அப
பொஉபவாசமாயிருபபார்கள. * யோ. ௩, ௨௯.

௰௬

௰௬ ஒருவனுங் கோடித்துண்டைப் பழய வஸ்திரத்தின்மேலே போட்டு இணையான், ஏனெனில் அதில் இணைத்த துண்டு வஸ்திரத்தைக் கிழித்துவிட்டுப் போய்ப் பின்னையுங் கெட்டபீறலாகுது.

௰௭ திராட்சப்பழங்களின் புதுரசத்தைப் பழந் துருத்திகளில் வார்ப்பாருமில்லை, வார்த்தால், துருத்திகள் பீறுண்டு ரசமுஞ் சிந்திப்போம், துருத்திகளுங் கெட்டுப்போம். புதுரசத்தைப் புதுத்துருத்திகளில் வார்த்து வைக்கிறார்கள் அப்போ இரண்டும் பத்திரப்படுமென்றார்.

¶ அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயை ஆரோக்கியமாக்கினதும் யவீருவினுடைய மகளை எழுப்பினதும்.
மாற்கு. ௫, ௨௨—௪௩. லூ. ௮, ௪௧—௫௬.

௰௮ அவர் இதுகளை அவர்களோடே பேசுகிறபோது, இதோ ஒரு தலைவன் சேர்ந்து அவரைப் பணிந்து: என் மகள் இந்நேரத்திலே செத்துப்போனாள், ஆகிலும் நீர் வந்து அவள் மேலே உமது கையை வையும், அப்போ பிழைப்பாளென்றான்.

௰௯ யேசு எழுந்திருந்து தம்முடைய சீஷர்களோடேங்கூட அவன் பிறகே போனார்.

௨௰ இதோ பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ பிறகே சேர்ந்துவந்து அவர் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்:

௨௰௧ ஏனென்றால் தன்னுள்ளத்திலே: அவருடைய * வஸ்திரத்தைமாத்திரந் தொட்டேனாகில் சொஸ்தமாவேனென்றாள். * ௰௪, ௩௰௬.

௨௰௨ யேசுவோவென்றால் திரும்பி, அவளைக் கண்டு: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை ரட்சித்ததென்றார். அந்நேரமுதல் ஸ்திரீ சொஸ்தமானாள்.

௨௰௩ யேசு தலைவன் வீட்டிலே வந்து, தாரைக்காறரையும் ஜனக்கூச்சந்தடியையுங் கண்டு.

௨௰௪ அவர்களோடே: அகன்றுபோங்கோள், ஏனென்றால் சிறுபெண் மரித்திராமல் * நித்திரைபண்ணுதென்றார், ஆனால் அவரை நகைத்தார்கள். * யோவ. ௰௧, ௰௩.

௨௰௫ கும்பு வெளியே துரத்தப்பட்டபின்பு, அவர் உள்ளே பிரவேசித்து அதின் கையைப் பிடித்தார், அப்போ சிறுபெண் எழுந்திருந்தது,

௨௰௬ இந்தக் கீர்த்தி அத்தேசத்திலெங்கும் பிரபலியமாச்சுது.

¶ அவர் இரண்டு குருடரையும் பிசாசு பிடித்த ஒருவனையும் ரெட்சித்தது.

௨௰௭ யேசு அவ்விடம் விட்டப்பாலே போகையில், இரண்டு குருடர் அவரைப் பின்சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கிரங்குமென்று கூப்பிட்டார்கள்.

௨௰௮ அவர் வளவிலே வந்தபின், அந்தக் குருடர் அவரண்டை வந்தார்கள். யேசு அவர்களோடே: இதைச் செய்ய என்னாலே கூடுமென்று விசுவாசிக்கிறீர்களோ என்றார்

என்றார். அவருக்கு: ஆண்டவரே, ஆமென்றார்கள்.
௨௯ அப்பொழுதவர்களுடைய கண்களைத்தொட்டு: * உங்
கள் விசுவாசத்தின்படி உங்களுக்காகக் கடவதென்
றார். * அ, ௰௩.
௩௰ அப்பொழுதவர்களுடைய கண்கள் திறக்கப்
பட்டது. யேசுவோவெனில்: ஒருவனும் இதை அறி
யாதபடிக்குப் பாருங்கோளென்று அவர்களுக்குக்
கெட்டியாயக் கற்பித்தார்.
௩௧ ஆனால் அவர்கள் புறப்பட்டு, அத்தேசத்திலெ
ங்கும் அவரைப் பிரசித்தம் பண்ணினார்கள்.
௩௨ அவர்கள் புறப்படுகையில், பேய்பிசாசுபி
டித்த ஊமையான மனுஷனை அவரண்டைக்குக்
கொண்டுவந்தார்கள்.
௩௩ பிசாசு துரத்தப்பட்டபின், ஊமையன் பேசி
னான். குமபுகள் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலிலே இப்ப
டி ஒருக்காலுங் கண்டதில்லையென்றார்கள்.
௩௪ பரிசேயரோவென்றால்: * பிசாசுகளின் தலை
வனாலே பிசாசுகளைத் துரத்துகிறானென்றார்கள்.
* ௰௨, ௨௪.

¶ அவர் மேய்ப்பனில்லாத ஆடுகள்
மேல் மனதுருகினது.

௩௫ யேசு சகலப்பட்டணங்களிலுங் கிராமங்களிலு
ஞ் சுற்றித்திரிந்து, அவர்கள் ஆலயங்களிலே போதகம்
பண்ணி, ராட்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து,
சனத்திலிருந்த சகல வியாதியையுஞ் சகல நோக்காட்
டையுங் குணமாக்கினார்.
௩௬ ஆனால் அவர் குமபுகளைக் காணுகையில், அ
வர்கள் பேரில் மனதுருகினார். அதேதென்றால் *
மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலே கோதுசுப்போ
னவர்களுஞ் சிதறப்பட்டவர்களுமாயிருந்தார்கள் *
சகரி. ௰, ௨. மாற்கு ௬, ௩௪.
௩௭ அப்பொழுதவர் தம்முடைய சீஷர்களுக்குச்
சொன்னதாவது: * அறுப்பு மிகுதி, வேலையாட்
கள் கொஞ்சம். * லூ. ௰, ௨. யோவ. ௪, ௩௫.
௩௮ ஆனபடியால் அறுப்புக்கெசமான் தம்முடைய அறுப்பு
க்கு வேலையாட்களை அனுப்பும்படி வேண்டிக்
கொள்ளுங்கோளென்றார்.

## ௰. அதிகாரம்.

¶ கிறிஸ்து அப்போஸ்தலரைத் தெரிந்தெடு
த்து அனுப்பி அவர்களுக்குக் கொடுத்த
அதிகாரமுங் கட்டளைகளும்.
மாற்கு. ௬, ௭—௰௩. லூ.
௯. ௧—௫.

அப்பொழுதவர் தம்முடைய பன்னிரண்டு சீஷர்களைத் தம்
மிடத்தழைத்து, அசுத்த ஆவிகளைத் துரத்துவதற்
குஞ் சகல வியாதியையுஞ் சகல நோக்காட்டையுங் குண
மாக்குவதற்கும், அவர்களுக்கதிகாரங் கொடுத்தார்.
௨ பன்னிரண்டு அப்போஸ்தலருடைய * நாமங்
களாவது: முந்தினவன் பேதுருவென்னப்பட்ட சீமோ
ன், அவன் சகோதரனாகிய அந்திரேயா, செபெதே
யுவின் குமாரனாகிய யாகோபு, அவன் சகோதரன்
யோ

யோவானும், * அப்போ. ௧, ௰௩.

௩ பிலிப்பும், பற்தொலொமேயும், தோமாவும், ஆயக்காரனாகிய மத்தேயும், அல்பேயின் குமாரனாகிய யாக்கோபும், * ததேயுவென்கிற மறுநாமமுள்ள லெபேயும்.

௪ சீமோனென்கிற கானானியனும், அவனைக் காட்டிக்கொடுக்கிறவனாகிய யூதாஸ் காரியோத்தென்பவனே.

௫ இந்தப் பன்னிருவரையும் யேசு அனுப்பி, அவர்களுக்குக் கட்டளையிட்டுச் சொன்னதாவது: * நீங்கள் புறசாதிகளுடைய வழிக்குப் போகாமலும், ** சமாரியர் பட்டணத்திலே பிரவேசியாமலும், * அப்போ. ௰௩. ௪௬. ** ௨. ராசா. ௰௭, ௨௪. மற்

௬ * இஸ்ரவேல் வீட்டாருடைய காணாமற்போன ஆடுகளண்டைக்குப் போங்கள். * ௰௫. ௨௪.

௭ போகையில்: * வானராட்சியம் சமீபமாய்ச் சேர்ந்ததென்று பிரசங்கியுங்கள். * ௩, ௨. ௪, ௰௭.

௮ வியாதிக்காரரைக் குணமாக்குங்கள், குஷ்டரோகிகளைச் சுத்தம்பண்ணுங்கள், மரித்தவர்களை எழுப்புங்கள், பிசாசுகளைத் துரத்துங்கள். * இலவிசமாய்ப் பெற்றீர்கள், இலவிசமாய்க் கொடுங்கள். * அப்போ. ௮, ௰௮-௨௰. ௧. பேது. ௫, ௨.

௯ உங்கள் கச்சைகளில் * பொன்னையாகிலும் வெள்ளியையாகிலும் செம்பையாகிலும். * லூ, ௨௨. ௩௫. ௩௬.

௰ வழிக்குப் பையையாகிலும், இரண்டங்கியையாகிலும், பாதரட்சைகளையாகிலும், தடியையாகிலும் தேடிவைக்காதிருங்கள், ஏனென்றால் * வேலையாளன் தன் ஆகாரத்துக்குப் பாத்திரவானாயிருக்கிறான். * லூ. ௰, ௭. ௧. தீமோ. ௫, ௰௮.

௰௧ எந்தப் பட்டணத்திலாகிலுங் கிராமத்திலாகிலும் பிரவேசித்தீர்களானால், அதிலே பாத்திரவானாரென்று விசாரித்துக்கொண்டு நீங்கள் புறப்படுந்தனையும் அங்கேயிருங்கள்.

௰௨ ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போதே அதைச் சேமம் வினவுங்கள்.

௰௩ அந்த வீடு பாத்திரமாயிருந்தால், உங்கள் சமாதானம் அதின்பேரிலே வரவும்; பாத்திரமல்லாதிருந்ததேயாகில், உங்கள் சமாதானம் உங்களிடமாய்த் திரும்பவுங்கடவது.

௰௪ ஆர் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும், உங்கள் வார்த்தைகளைக் கேளாமலும் போனாலோ, அந்த வீட்டை அல்லது பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டு, உங்கள் கால்களின் தூளை உதறிப்போடுங்கள்,

௰௫ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நியாயத்தீர்ப்பு நாளிலே அந்தப் பட்டணத்தாரைப் பார்க்கச், சோதோம் கொமோறு தேசத்தாருக்கு நேரிதமாயிருக்கும். * ௰௧, ௨௪.

¶ அவர்களுக்கு வருந்துன்பங்களை முன்னறிவித்தது.

௰௬ இதோ * நான் உங்களை ஆடுகளைப் போல

அனுப்

ஓநாய்களின் நடுவே அனுப்புகிறேன், ஆனபடியினாலே பாம்புகளைப்போல வினாவுள்ளவர்களும் புறாக்களைப்போல கபடற்றவர்களுமாயிருங்கோள். * ௧. சாமு. ௨௪, ௰௨. ரோ. ௰௬, ௰௯.

௰௭ ஆனாலும் மனுஷருக்கு எச்சரிக்கையாயிருங்கோள், அதெந்நென்றால் ஆலோசனைசபைகளுக்கு உங்களை * ஒப்புக்கொடுத்து, தங்கள் ஆலயங்களிலே உங்களை வாரினால் அடிப்பார்கள். * ௨௪, ௯.

௰௮ என் நிமித்தியமாகத் துரைகளுக்கு முன்னடக்கும் ராசாக்களுக்கு முன்னடக்கும், அவர்களுக்கும் புறசாதிகளுக்கும் சாட்சியாகக் கொண்டுபோயவிடப்படுவீர்கள்.

௰௯ அவர்கள் உங்களை ஒப்புக்கொடுக்கும்போது, * எப்படியல்லது என்னத்தைப் பேசுவோமென்று கவலைப்படாதேயுங்கோள், ஏனென்றால் பேசவேண்டியது அந்நேரத்திலே உங்களுக்குக் கொடுக்கப்படும். * மாற்கு ௰௩, ௰௧.

௨௦ அதெந்நென்றால் பேசுகிறவர்கள் நீங்களல்ல, * உங்கள் பிதாவின் ஆவி உங்களிலிருந்து பேசுகிறவர். * ௨. மோ. ௪, ௰௧. ௰௨.

௨௧ ஆனாற் சகோதரன் சகோதரனையும், பிதா பிள்ளையைத் தகப்பனும் மரணத்துக்கொப்புக்கொடுப்பான். பெற்றாருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி, அவர்களைக் கொலைப்படுத்துவார்கள்.

௨௨ நீங்கள் என் நாமத்தின் நிமித்தியம் எல்லாராலும் பகைக்கப்பட்டிருப்பீர்கள், ஆனால் முடிவுபரியந்தம் நிலைத்திருப்பவனே ரெட்சிக்கப்படுவான். * அற. ௨, ௰:

௨௩ ஒரு பட்டணத்திலே உங்களைத் துன்பப்படுத்தினார்களேயானால், மற்றப் பட்டணத்துக்கு ஓடிப்போங்கோள். அதெந்நென்றால் உங்களுக்கு மெய்யாகச் சொல்லுகிறேன், மனுஷனுடைய குமாரன் வருமட்டாக நீங்கள் இஸ்றவேலுடைய பட்டணங்களைச் சுத்தி முடியாது.

௨௪ சீஷன் போதகனிலும், பணிவிடைக்காறன் தன் எசமானிலும் மேற்பட்டவனல்ல.

௨௫ சீஷன் தன் போதகனைப்போலவும் பணிவிடைக்காறன் தன் எசமானைப்போலவும் இருக்கிறது அவனுக்குப் போதும். * வீட்டெசமானைப் பெயல்செபூலென்று சொன்னார்களானால், அவர் வீட்டாரை எத்தனையதிகம். * ௯, ௩௪.

¶ அவர்களுக்குச் சொன்ன ஆறுதல்

௨௬ ஆகையால் அவர்களுக்குப் பயப்படாதேயுங்கோள், ஏனென்றால் வெளியாகாத மறைபொருளிலேயும், அறியப்படாத அந்தரங்கமுமில்லை.

௨௭ நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை வெளிச்சத்திலே சொல்லுங்கோள், நீங்கள் காதிலே கேட்கிறதை வீடுகள் மீதிலே பிரசங்கியுங்கோள்.

௨௮ ஆத்துமத்தைக் கொல்லவல்லவர்களாயிராமல், சரீரத்தைக் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல், ஆத்துமத்தையும் சரீரத்தையும் நரகத்திலே கெடுக்கத்தக்கவல்லவருக்குப் பயப்படுங்கோள்.

௨௯ ஒரு காசுக்கிரண்டு அடைக்கலாங் குருவிகள்.

விற்குதல்லவோ. என்றாலும் உங்கள் பிதாவன்றியிலே அதுகளிலொன்றாகிலுந் தரையிலே விழாது.

௩௰ உங்கள் தலையிலுள்ள சகலமயிர்களுமெண்ணப்பட்டிருக்குது.

௩௧ ஆனபடியினாலே பயப்படாதேயுங்கோள், அநேகமடைக்கலான் குருவிகளைப் பார்க்க நீங்கள் விசேஷித்திருக்கிறீர்கள்.

¶ உண்மையான பத்திக்கேவினது.

௩௨ யெப்போதுமாவனுக்கு மனுஷர்முன்பாக * என்னை அறிக்கைபண்ணினால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிறவென் பிதாமுன்பாக அறிக்கை பண்ணுவேன். * அபொவி. ௩, ௫.

௩௩ ஆனாலெவனுக்கும் மனுஷர்முன்பாக * என்னை மறுதலித்தால், அவனை நானும் பரமண்டலங்களிலிருக்கிறவென் பிதாமுன்பாக மறுதலிப்பேன். * மாற்கு அ, ௩அ. ௨. திமொ. ௨, ௰௨.

௩௪ பூமியின்மேலே * சமாதானத்தை வரப்பண்ண வந்தேனென்றெண்ணிக்கொள்ளாதேயுங்கோள். சமாதானத்தையல்ல, பட்டயத்தை வரப்பண்ண வந்தேன். * லூா. ௰௨, ௫௧—௫௩.

௩௫ அத்தேனென்றால் மனுஷனை அவன்தகப்பனுக்கும் மகளை அவள் தாய்க்கும் மருமகளை அவள் மாமிக்கும் * விரோதமாயப்பிரியப்பண்ண வந்தேன், * மீகா எ, ௬.

௩௬ மனுஷனுடைய சத்துருக்கள் அவன்வீட்டார் தானே.

௩௭ * என்னிலும் அதிகமாகத் தகப்பனையாகிலுந் தாயையாகிலுஞ் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல என்னிலும் அதிகமாக மகனையாகிலும் மகளையாகிலுஞ் சிநேகிக்கிறவன் எனக்குப் பாத்திரவானல்ல. லூா. ௰௪, ௨௬.

௩அ தன் * சிலுவையெடுத்துக்கொண்டென்னைப் பின்செல்லாதவன் எனக்குப் பாத்திரவானுமல்ல. * ௰௬, ௨௪.

௩௯ தன் சீவனைக் கண்டடைந்தவன் அதைக்கெழந்து போவான், என் நிமித்தியமாகத் தன்சீவனையிழந்தவன் அதைக்கண்டடைவான்.

௪௰ உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவனென்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். * யோவா. ௰௩, ௨௰.

௪௧ தீர்க்கதரிசியென்ற நாமத்துக்காகத் தீர்க்கதரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசியினுடைய பலனையடைவான். நீதிமானென்ற நாமத்துக்காக நீதிமானை ஏற்றுக்கொள்ளுகிறவன் நீதிமானுடைய பலனையடைவான்.

௪௨ எவனுக்குஞ் சீஷனென்ற நாமத்துக்காக * இந்தச் சிறியரிலொருத்தனுக்கு ஒருகலம் பச்சைத்தண்ணீர் மாத்திரங் குடிக்கக்கொடுத்தால், தன்பலனை இழந்துபோகானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேனென்றார். * ௨௫, ௪௰. மாற்கு ௯, ௪௧. எபிரே. ௬, ௰.

## ௰௧. அதிகாரம்

௧ யோவானஸ்நானனுடைய இரண்டு சீஷரை அனுப்பினபோது யேசுகுரு நாதவசனங்கள்.

அப்பொசம்புவித்தத்தேதென்றால், யேசுதம்முடைய பன்னிரெண்டுசீஷர்களுக்குக் கட்டளைகொடுத்து முடித்தபின்பு, அவர்களுடைய பட்டணங்களிலே உபதேசிக்கவும் பிரசங்கம்பண்ணவும் அவ்விடம்விட்டுப் புறத்தேபோனார்.

௨ ஆனால் காவலிலிருக்கிற * யோவான் கிறிஸ்துவின் கிரியைகளைக் கேட்டு, தன் சீஷர்களில் இரண்டுபேரை அனுப்பி: * லூ. ௭, ௰௮—௩௫.

௩ * வருகிறவர் நீர்தானோ, அல்லது வேறொருவருக்குக் காத்திருப்போமோ வென்று அவரைக் கேட்கச்சொன்னான். * ௫. மோ. ௰௮, ௰௫.

௪ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீங்கள் போய், கேட்கிறதையுங் காண்கிறதையும் யோவானுக்கு அறிவியுங்கோள்.

௫ * குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், ** தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகுது. * யேசா. ௩௫, ௫, ௬. ** யேசா. ௬௧, ௧.

௬ ஆர் என்னிடத்தில் இடறல்படாதிருக்கிறானோ அவன் பாக்கியவானென்றார்.

௭ அவர்கள் போனபோதே யேசு ஜனங்களுக்கு யோவானைக் குறித்துச் சொல்லத்துவக்கினதாவது: வனாந்திரத்திலே எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், காத்தடித்து அசையப்படும் நாணலையோ.

௮ அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த மனுஷனையோ, இதோ மெல்லிய வஸ்திரங்களை உடுக்கிறவர்கள் அரசர்மாளிகைகளிலிருக்கிறார்கள்.

௯ அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், தீர்க்கதரிசியையோ, ஆம், தீர்க்கதரிசியிலும் அதிகப்பட்டவனை உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰ அதேதென்றால்: இதோ * நாம் நம்முடைய தூதனை உம்முடைய முகத்துக்கு முன்பாக அனுப்புகிறோம், அவன் உமக்கு முன்னே உமது வழியை ஆயித்தம்பண்ணுவானென்று எழுதிக்கிடக்கப்பட்டவன் இவன்தானே. * மலாகி ௩, ௧.

௰௧ உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்: ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப் பார்க்கப் பெரியவனெழும்பினதில்லை, வானராட்சியத்திலே சிறியவனோ அவனைப் பார்க்கப் பெரியவனாயிருக்கிறான்.

௰௨ ஆனால் யோவான்ஸ்நானனுடைய நாள் துவக்கியிற்றையில்வரைக்கும் வானராட்சியம் பெலபந்தப்படுகுது, பெலபந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக்கொள்ளுகிறார்கள்.

௰௩ அதேதென்னில் சகல தீர்க்கதரிசிகளும் ஞாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனம் உரைத்தது யோவான்

மட்டு

மட்டுக்குந்தானே.

௰௪ நீங்கள் ஏத்துக்கொள்ள மனதாயிருந்தால்; அவனே * வரப்போற எலியாவாயிருக்கிறான், * ௰௭, ௰௨. மலகி ௪, ௫.

௰௫ கேட்கிறத்துக்குக் காதுள்ளவன் கேட்கக்கடவான்.

௰௬ ஆனால் * இந்தச் சந்ததியை ஆருக்கொப்பிடுவேன், சந்தைவெளிகளில் உட்கார்ந்து தங்கள் தோழரோடே: * லூ. ௭, ௩௧—௩௫.

௰௭ நாங்கள் உங்களுக்கு ஊதினோம், நீங்கள் கூத்தாடவில்லை, உங்களுக்குப் புலம்பினோம், நீங்கள் மாரடிக்கவில்லையென்று அவர்களுக்கு எதிர்க்கூப்பிடுகிற குழந்தைகளுக்கொப்பாயிருக்குது.

௰௮ அதெப்படியென்றால் யோவான் வந்து * சாப்பிடாமலுங் குடியாமலுமிருந்தான். அதற்கவர்கள்: பிசாசைக் கொண்டிருக்கிறானென்கிறார்கள். * ௩, ௪.

௰௯ மனுஷனுடைய குமாரன் வந்திருந்து சாப்பிட்டுக் குடிக்கிறார், அதற்கவர்கள்: இதோ போசனப்பிரியனும் மதுபானனுமான மனுஷன், ஆயக்காறருக்கும் பாவிகளுக்குஞ் சிநேகிதனென்கிறார்கள். ஆனால் ஞானந்தன் பிள்ளைகளாலே நீதி விளங்கப்பட்டுதென்றார். * ௯, ௰, ௰௩.

௨௰ அப்போதவர் தமது மிச்சமான வல்லமைகள் சம்புவித்த பட்டணங்களை, குணப்படாமற்போனதுக்காக, அதட்டத்துவக்கிச் சொன்னதாவது:

௨௧ * கோறாசினே, உனக்கையோ, பெத்சாயிதாவே, உனக்கையோ, ஏனென்றால் உங்களில் சம்புவித்த வல்லமைகள் தீருவிலுஞ் சீதோனிலுஞ் சம்புவித்திருந்தால், பூர்வத்திலே ரெட்டிலுஞ் சாம்பலிலுமிருந்து குணப்படுவார்கள். * லூ. ௰, ௰௩.

௨௨ ஆனாலுங்களுக்குச் சொல்லுகிறேன்: ஞாயந்தீர்க்கு நாளிலே உங்களைப் பார்க்கத் தீருவுக்குஞ் சீதோனுக்கும் நெலிகமாயிருக்கும்.

௨௩ வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நகூமே, நீயுமோ பாதாளபரியந்தந் தாழ்த்தப்பட்டுப்போவாய். அதெப்படியென்றால் உன்னில் சம்புவித்த வல்லமைகள் சோதோமிலே சம்புவித்திருந்தாலது இந்நாள் வரைக்குமிருக்கும்.

௨௪ ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன்; * ஞாயந்தீர்க்கு நாளிலே உன்னைப் பார்க்கச் சோதோம் தேசத்தாருக்கு நெலிகமாயிருக்குமென்றார். * ௰, ௰௫.

¶ அவர் சிறியவர்களின் குணப்படுதலுக்காகப் பிதாவை மகிமைப்படுத்தினதும் மனஸ்தாபமுள்ளாள்களைத் தம்மண்டை வரவழைத்ததும்.

௨௫ அந்த வேளையிலே * யேசு மறுமொழியாகச் சொன்னதாவது: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, ** இதுகளை ஞானிகளுக்குங் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினீரென்கிறதுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன். * லூ. ௰, ௨௧. ௨௨. ** ௧. கொரி. ௧, ௰௯—௨௬. சங். ௮, ௩.

உசா ஆம, பிதாவே, அபபடியே உமககு முனபாகபபிரியமாயிருநதது.

உஎ எனபிதாவினாலே எனககுசசகலமும * ஒபபுககொடுககபபட்டிருககுது, பிதா தவிர, ஒருவனுங குமாரனை அறியான: குமாரனுங குமாரன எவனுககு வெளிபபடுததசசித்தமாயிருககிறாரோ அவனுந்தவிர, ஒருமபிதாவையும அறியான. * உஅ, யஅ. யோவ. ௩, ௩ரு. யஎ, உ.

உஅ பிறயாசபபட்டுபபாரஞசுமநதவர்களாகியிருககிற எல்லாரும் எனனணடைககு வாருங்கோள, நான உஙகளை இளைபபாறபபணணுவேன.

உகூ எனனுகததடியை உஙகளமேலேஏற்ததுககொணடு, எனனிடததிலே கறறுககொளளுஙகோள, அதேனனறால மெதுவும மனததாழமையுமாயிருககிறேன, அபபடியே உஙகள ஆததுமாககளுககு இளைபபாறுதல கிடைககும.

௩ய ஏனனெனில என நுகததடி மெதுவும, * என சுமை லேசுமாயிருககுதேனறார. * க. யோவ. ரு, ௩.

## யஉ. அதிகாரம.

¶ சீஷாககளுககு கறபிததுபரிநது பேசினது.

அககாலததிலே யேசு ஓயவுநாளிலே * விளைசசலவழியே போனார. அவருடைய சீஷாககள பசியாயிருநது, கதிர்களைககொயது, சாபபிடததுவககினார்கள, * மாறகு உ, உ௩—உஅ.

உ பரிசேயர் அதைககணடு, அவருடனே: இதோ ஓயவுநாளிலே செயயததகாததை உமமுடைய சீஷாககள செயகிறார்களெனறார்கள.

௩ ஆனால அவர் அவர்களுககுசசொனனதாவது: * தாவீதும அவனோடிருநதவர்களும பசிததிருககிறபோது, * க. சாமு. உக, சா.

ச அவனபராபரனுடைய வீட்டுககுளபபிரவேசிதது, * ஆசாரியர்மாததிரமே அனறி தானுககுந்தனனோடேகூட இருககிறவர்களுககும சாபபிடததகாத தேவசமுகததபபஙகளைசசாபபிட்ட அவன செயகையை வாசிததீர்களிலலையோ. * ௩. மோ. உச, ரு—கூ.

ரு அலலது * ஆசாரியர்கள ஓயவுநாளககளிலே தேவாலயததிலே ஓயவுநாளை வேலைநாளாககிறுஙகுற்றமிலலாதிருககிறார்களெனறு தாயபபிரமாணததிலே வாசிததீர்களிலலையோ. * ச. மோ. உஅ, கூ. ய.

சா ஆனால தேவாலயததைபபார்ககபபெரியவர் இஙகே இருககிறாரெனறு உஙகளுககுசசொலலுகிறேன.

எ பலியையலல, இரககததையே விருமபுகிறேனெனபதேதெனறு அறிநதிருநதீர்களானால, குற்றமிலலாதவர்களை நீஙகள குற்றபபடுததுவதிலலை. * சா, ய௩.

அ அதேனனறால மனுஷனுடைய குமாரன ஓயவுநாளுககும ஆணடவராயிருககிறாரெனறார.

¶ அவர

¶ அவர் சூம்பின கையுடையவனை ஓய்வு
நாளிலே குணமாக்கினது.

௯ அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப்போய், அவர்கள் + ஜெபாலயத்திலே வந்தார். + மாற்கு ௩, ௧—௫. லூக். ௬, ௬—௰௧.

௰ இதோ, சூம்பின கையுடைய மனுஷனிருந்தான். அப்பொழுது அவர்மேலே குற்றஞ்சாட்டுகிறதற்காக: ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குகிறது நியாயமோவென்று அவரைக் கேட்டார்கள்.

௰௧ அவரோவென்றால் அவர்களுக்குச் சொன்னதாவது: உங்களில் எந்த மனுஷனுக்காகிலும் ஒரு ஆடிருந்து அது ஓய்வுநாளிலே ஒரு குழியிலே விழுந்தால், அதைப் பிடித்துத் தூக்கிவிடானோ.

௰௨ இப்பொழுது ஆட்டைப்பார்க்க ஒரு மனுஷன் எத்தனை விசேஷித்திருக்கிறான். ஆனபடியால் ஓய்வுநாளிலே நன்மைசெய்ய நியாயந்தானென்றார்.

௰௩ அப்பொழுது அந்த மனுஷனோடே: உன் கையை நீட்டென்றார். அவன் அதை நீட்டினான்; அது மற்றக் கையைப்போலே சொஸ்தமாகச் சீருக்கு வந்தது.

௰௪ ஆனால் பரிசேயர் புறப்பட்டு அவரைச் சங்கரிக்க அவருக்கு விரோதமாக யோசனைபண்ணினார்கள்.

¶ அவர் வெகு அற்புதங்களைச் செய்ததும்
தம்மைப் பிரசித்தம்பண்ணவேண்
டாமென்று கற்பித்தது.

௰௫ யேசுவோவென்றால் அதை அறிந்து அவ்விடம்விட்டு நீங்கிப்போனார். அநேகங் கும்புகள் அவரைப் பின்சென்று, எல்லாரையும் அவர் குணமாக்கி,

௰௬ தம்மைப் பிரசித்தம்பண்ணாதபடிக்கு அவர்களை உறுக்கினார். + ௯, ௩௰. மாற்கு. ௩, ௰௨.

௰௭ + யெசாயா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாகத்தானே. அதாவது: + யெசா. ௪௨, ௧—௪.

௰௮ இதோ நாம் தெரிந்துகொண்ட நம்முடைய பணிவிடைக்காரன், அவர் நம்முடைய ஆத்தும பிரியமாயிருக்கிற நம்முடைய நேசமுள்ளவர், நம்முடைய ஆவியை அவர்மேலே வைப்போம், அவர் சாதிகளுக்கு நியாயத்தை அறிவிப்பார்.

௰௯ அவர் சண்டைபண்ணவுங் கூப்பிடவுமாட்டார், அவருடைய சத்தத்தை வீதிகளிலே ஒருவனுங் கேளான்.

௨௰ அவர் நியாயத்தை ஜெயத்துக்குக் கொண்டுபோகுமட்டும், நெரிந்த நாணலை முறிக்கவுமாட்டார் மங்கியெரிகிற திரியை அவிக்கவுமாட்டார்.

௨௰௧ அவருடைய நாமத்தின்மேலே சாதிகள் நம்பிக்கையாயிருப்பார்களென்பதுதானே.

¶ தம்மைத் தூஷணிக்கவர்களுக்குந் தம்
மையறியாதவர்களுக்
கும் அவர் சொன்ன புத்தி.

௨௰௨ அப்பொழுது பிசாசு பிடித்த குருடும் + ஊமையுமான ஒருத்தன் அவரண்டைக்குக் கொண்டுவரப்பட்டான், குருடும் ஊமையுமானவன் பேசவுங் காணவுமாகத்தக்கதாய் அவனைக் குணமாக்கினார். + ௯, ௩௨. லூக். ௰௧, ௰௪.

௨௩

௨௩ ஜனங்களெல்லாம் விஸ்மயமடைந்து: இவர் தாவீதுடைய குமாரன் அல்லவோ என்றார்கள்.
௨௪ ஆனால் பரிசேயர் அதைக் கேட்டு: இவன் * பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்துகிறானேயல்லாமல் மற்றப்படியல்லவென்றார்கள். * ௯, ௩௪.
௨௫ ஆனால் இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து அவர்களுக்குச் சொன்னதாவது: தனக்குத் தானே விரோதமாகப் பிரிந்திருக்கிற எந்த ராட்சியமும் பாழாய்ப் போம், தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமாகிலும் வீடாகிலும் நிலைநிற்காது.
௨௬ சாத்தான் சாத்தானைத் துரத்தினால் தனக்குத்தானே விரோதமாகப் பிரிக்கப்பட்டுப்போமே, பின்னை எப்படி அதின் ராட்சியம் நிலைநிற்கும்.
௨௭ நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அதுகளை ஆராலே துரத்துகிறார்கள். ஆகையால் அவர்கள் உங்களுக்கு நியாயாதிபதிகளாயிருப்பார்கள்.
௨௮ * நான் பராபரனுடைய ஆவியாலே பிசாசுகளைத் துரத்தினேனேயாகில், பராபரனுடைய ராட்சியம் அல்லவோ உங்களிடத்தில் வந்தது. * ௧. யோவா. ௩, ௮.
௨௯ அல்லது, பலவானை முந்திக் கட்டினாலொழிய, பலவானுடைய வீட்டிலே ஒருத்தன் உள்ப்பிரவேசித்து அவனுடைமைகளைக் கொள்ளையிடுவதெப்படி, கட்டினானால் அப்போது அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்.
௩௰ என்னோடிராதவன் எனக்கு விரோதமாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.
௩௧ ஆனபடியினாலே உங்களுக்குச் சொல்லுகிறேன்: * சகல பாவமும் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும், ஆனால் ஆவியை நிந்திக்குந் தூஷணம் மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை. * மாற்கு ௩, ௨௮—௩௰.
௩௨ எவனாகிலும் மனுஷனுடைய குமாரனுக்கு விரோதமான விசேஷத்தைச் சொன்னால், அவனுக்கு மன்னிக்கப்படும், ஆனால் எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால், அவனுக்கு இம்மையிலாகிலும் மறுமையிலாகிலும் மன்னிக்கப்படுவதில்லை.
௩௩ * ஒன்றில் நல்ல மரத்தையும் அதின் கனியையும் நல்லதாம், ஒன்றில் ஆகாத மரத்தையும் அதின் கனியையும் ஆகாததாம். ஏனெனில் கனியினாலே மரம் அறியப்படும். * ௭. ௰௮, ௰௭.
௩௪ விரியன்பாம்புக் குட்டிகளே, நீங்கள் பொல்லாதவர்களாயிருக்கையில், நல்லதுகளைப் பேசக் கூடுகிறதெப்படி. ஏனென்றால் இருதயத்தின் நிறைவினாலே வாய் பேசும்.
௩௫ * நல்ல மனுஷன் இருதயத்தின் நல்ல பொக்கிஷத்திலே நல்லதுகளை எடுக்கிறான், பொல்லாத மனுஷன் பொல்லாப் பொக்கிஷத்திலே பொல்லாததுகளை எடுக்கிறான். * லூக். ௬, ௪௫.
௩௬ ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன், மனுஷர்

பேசுந்

எந்தவீணவார்த்தையைப்பேசினார்களோ அதற்கெல்லாம் ஞாயந்தீர்க்கும்நாளிலே கணக்கொப்பிவிப்பார்கள்.

௩௭ அதேனென்னில் உன்வார்த்தைகளினாலே நீதிமானென்று தீர்க்கப்படுவாய், உன்வார்த்தைகளினாலே நேரஸ்தனென்று தீர்க்கப்படுவாயென்றார்.

௩௮ அப்போ வேதபாரகரிலும் பரிசேயரிலும் சிலர் பிரத்தியுத்தாரமாக: போதகரே, உம்மாலே *ஒருஅடையாளத்தைக்காணவேணுமென்றிருக்கிறோமென்றார்கள். ௰௬, ௧—௪. லூ. ௰௧, ௨௯—௩௨.

௩௯ அவரோவென்றால் அவர்களுக்குப்பிரத்தியுத்தாரமாகச்சொன்னதாவது, பொல்லாத விபசாரச்சந்ததி அடையாளத்தைக்கேட்குது, ஆனாலும் யோனாதீர்க்கதெரிசியின் அடையாளமன்றியே வேறே அடையாளம் அதுக்குக்கொடுக்கப்படுவதில்லை.

௪௰ அதெத்தென்றால் *யோனா திமிங்கலத்தின் வயற்றிலே அல்லும்பகலும் மூன்றுநாளிருந்ததுபோலே மனுஷனுடையகுமாரன் பூமியினிருதயத்திலே அல்லும்பகலும் மூன்றுநாளிருப்பார். *யோனா ௨. ௧.

௪௧ ஞாயந்தீர்க்குதலிலே நினிவேபட்டணத்தார் இந்தச்சந்ததியோடேயெழுந்துநின்று அதைக்குத்தமுள்ளதென்று தீர்ப்பார்கள், அதேனென்றால் யோனாவின் பிரசங்கத்துக்குக் குணப்பட்டார்கள், ஆனால் இதோ யோனாவைப்பார்க்கிலுமிங்கே அதிகம். யோனா ௩, ௫.

௪௨ ஞாயந்தீர்க்குதலிலே தெற்குராசாத்தி இந்தச்சந்ததியோடேயெழுந்துநின்று அதைக்குத்தமுள்ளதென்று தீர்ப்பாள். அதேனென்னிற் சாலொமோனின் ஞானத்தைக்கேட்கப் பூமியினெல்லைகளிலிருந்து வந்தாள், ஆனால் இதோ சாலொமோனைப்பார்க்கிலுமிங்கே அதிகம். *௧. ராசா. ௰, ௧.

௪௩ * அசுத்தஆவி மனுஷனைவிட்டுப்புறப்படுகிறபோது, தண்ணீரில்லாதேடங்களிலே அலைந்து இளைப்பாறுதலைத்தேடியும் அடையாது.

௪௪ அப்போது: நான் புறப்பட்ட என்வீட்டுக்குத் திரும்பப்போவேனென்று சொல்லிவந்து, அதை வெறும்வீடாகவும் பெருக்கிச்சோடிக்கப்பட்டதாகவுங்காணும்.

௪௫ அப்போதது போய், தன்னிலும் பொல்லாத வேறேழு ஆவிகளைத் தன்னுடனே கூட்டிக்கொண்டுவந்து பிரவேசித்து, அங்கே குடியிருக்கும், அப்போ அந்தமனுஷனுடைய பிற்காரியங்கள் முற்காரியங்களைப்பார்க்கக்கேடாம், இப்படியிந்தப்பொல்லாத சந்ததிக்கும் வரும். ௨. பே. ௨, ௨௰.

¶ அவர்தம்முடைய தாயுஞ்சகோதரங்களும் ஆரென்றறிவிக்குது.

௪௬ அவர்கும்புகளோடேயின்னம்பேசுகையிலே இதோ * அவருடைய தாயுஞ்சகோதரரும் வெளியே நின்று அவரோடே பேசப்பார்த்தார்கள். * மாற்கு ௩, ௩௧. லூ. ௮, ௰௯—௨௧.

௪௭ அப்போ ஒருத்தன் அவருடனே: இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மோடே பேசப்பார்க்கிறார்களென்று

றன்

௪௮ அவரோவெனறால தமமககுதசொனனவனுககுப பிரதியுததாரமாக: எனதாய ஆர, என சகோதரரும ஆரென்று சொலலி,

௪௯ தமமுடைய கையைத தமமுடைய சீஷாககளமேல நீட்டி: இதோ என்தாயும என சகோதரரும.

௫௰ அதெனனில எவனாகிலும பரமணடலஙகளிலிருககிற என பிதாவுடைய சித்ததைச செயதால, அவனே என சகோதரனுஞ சகோதரியுந தாயுமாயிருககிறானெனறார,

## ௰௩. அதிகாரம.

### ¶ பலவிதநிலததின உவமை.

அநதநாளிலே யேசு வீட்டிலிருநது புறபபட்டு, சமுததிரததருகே உடகாரநதார.

௨ அவரணடையிலே அநேகஙகுமபுகள கூடினபடியினாலே அவர படகிலேறி உடகாரநதார. ஆனால குமபனைததுங கரையிலே நினறது.

௩ அவர வெகுவிசேஷஙகளை உவமைகளாய அவர்களோடே பேசிசசொனனதாவது: + இதோ விதைககிறவன விதைககப புறபபட்டான. + மாறகு. ௪, ௩. லூ
கா. ௮, ௫. லூ

௪ அவன விதைககையிலே, சிலது வழியருகே விழுநதது. அபபோ பறவைகள வநது அதைப பட்சிததுப போட்டுது.

௫ வேறேசிலது வெகுமணணிலலாதகறபாறை இடஙகளிலவிழுநது, அதறகு ஆழமணணிலலாததினாலே உடனே முளைததது:

௬ ஆனால சூரியன உதிததபோது அது தீகசுபோய, அதுககு வேரிலலாதததினாலே உலரநதுது:

௭ வேறேசிலது முளளுகளிலே விழுநதுது. முளளுககள வளரநது அதை நெருககிபபோட்டுது.

௮ வேறேசிலது நலலநிலததிலே விழுநது, சிலது நூறாகவுஞசிலது அறுபதாகவுஞசிலது முபபதாகவும பலனதநதுது:

௯ கேட்கிறதுககுக காதுளளவன கேட்ககககடவானெனறார:

௰ சீஷாககள சேரநது வநது அவருடனே: நீர உவமைகளாய அவர்களோடே பேசுவானேனெனறார்கள.

௰௧ அவர பிரதியுததாரமாக அவர்களுககுச சொனனதாவது: வானராட்சியததின ரகசியஙகளை அறியதல + உஙகளுககருளபபட்டுது, ஆனால அவர்களுககருளபபட்டதிலலை: + ௰௧, ௨௫.

௰௨ ஏனெனறால + எவனுளளவனாயிருக்கிறானோ அவனுககுக கொடுககபபடும, பரிபூரணமுமாகும, ஆனால எவனிலலாதவனாயிருக்கிறானோ அவனிடததிலே உளளதுமெடுததுககொளளபபடும. + ௨௫, ௨௯.

௰௩ ஆனபடியினாலே அவர்களோடே உவமைகளாயப பேசுகிறேன, ஏனெனிலகணடுஙகாணாமலுங கேட்டுங கேளாமலும உணராமலுமிருககிறார்கள.

௰௪ ஏசாயாவின் தீர்க்கதரிசனம் அவர்களிடத்திலே நிறைவேறுது. அதாவது: காதாரக்கேட்டு முணராமலும், கண்ணாரக்கண்டு மறியாமலுமிருப்பீர்கள். ஏசா. ௬, ௯. ௰.

௰௫ அந்தஜனங்கள் கண்களினாலே காணாமலும், காதுகளினாலே கேளாமலும், இருதயத்தினாலே உணர்ந்து மனந்திரும்பாமலும், நானவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்கும்படியாக, அவர்களிருதயம் நிணந்திருக்குது. காதுகளினாலே மந்தமாய்க்கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்களென்கிறதுதானே.

௰௬ ஆனால் உங்கள் கண்கள் காண்கிறபடியினாலும், உங்கள் காதுகள் கேட்கிறபடியினாலும் பாக்கியமுள்ளதுகள். லூக். ௰, ௨௩. ௨௪.

௰௭ அநேகந்தீர்க்கதரிசிகளும் நீதிமான்களும் நீங்கள் காண்கிறதைக் காணவுங் கேட்கிறதைக் கேட்கவும் ஆசையாயிருந்துங் காணாமலுங் கேளாமலும் போனார்களென்றுங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.

௰௮ ஆனபடியினாலே நீங்கள் விதைக்கிறவனுடைய உவமையைக் கேளுங்கோள்.

௰௯ எவனாகிலும் ராட்சியத்தின் வசனத்தைக்கேட்டு உணராதிருந்தால், பொல்லாங்கன் வந்து, அவனிருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறிக்கிறான். இவன்தான் வழியருகே விதைக்கப்பட்டவன்.

௨௰ கற்பாறையிடங்களில் விதைக்கப்பட்டவனென்றால், வசனத்தைக்கேட்டுடனே அதைச்சந்தோஷத்தோடே ஏற்றுக்கொள்ளுகிறவனாயிருக்கிறான்.

௨௧ ஆனால் தனக்குள்ளே வேர்ப்பற்றியிராமல் அநித்தியனாயிருக்கிறான். வசனத்தினிமித்தியம் உபத்திரமுந் துன்பமுமுண்டாகையில் உடனே இடறலப்படுகிறான்.

௨௨ முள்ளுகளில் விதைக்கப்பட்டவனென்றால் வசனத்தைக் கேட்கிறவனாயிருக்கிறான். ஆனால் இந்தப்பிரபஞ்சியத்தின் கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிறதினாலே கனியற்றுப்போறான். ௧. தீமோ. ௬, ௯.

௨௩ நல்லநிலத்தில் விதைக்கப்பட்டவனென்றால், அவன் வசனத்தைக் கேட்கிறவனும் உணருகிறவனுமாயிருந்து, ஒன்று நூறாகவும் ஒன்று அறுபதாகவும் ஒன்று முப்பதாகவும் கனியைத்தருகிறானென்றார்.

¶ களை, கடுகு, புளித்தமாவென்கிறதுகளின் உவமைகள்.

௨௪ வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக்காட்டினார். அதாவது: வானராட்சியந்தன் வயலிலே நல்லவிதையை விதைக்கிற மனுஷனுக்கொப்பாயிருக்குது.

௨௫ ஆனால் மனுஷர் நித்திரைபண்ணுகையில், அவனுடைய சத்துரு வந்து, கோதுமைக்குள்ளே களைகளை விதைத்துப்போட்டுப்போனான்.

௨௬ பயிரானது வளர்ந்து கனியைப் பிறப்பிக்கிறபோது,

போது, களைகளுங் காணப்பட்டது.

௨௭ வீட்டெசமானுடைய பணிவிடைக்காரர் சேர்ந்து வந்து, அவனுடனே: ஆண்டவனே, நீர் உமது வயலிலே நல்ல விதையை விதைத்தில்லையோ, பின்னை களைகள் அதுக்கெங்கேயிருந்து வந்ததென்றார்கள்.

௨௮ அவனவர்களுக்கு: சத்துராதிமனுஷன் அதைச் செய்தானென்றான். ஆனால் பணிவிடைக்காரர் அவனுடனே: நாங்கள் போய் அதுகளைப் பிடுங்கிப்போடச் சித்தமாயிருக்கிறீரோவென்றார்கள்.

௨௯ அதற்கவன்: இல்லை, களைகளைப் பிடுங்குகையிலே நீங்கள் கோதுமையையுங்கூட வேரோடே பிடுங்காதபடிக்கு, இரண்டையும் அறுப்புமட்டும் வளரவிடுங்கோள்.

௩௰ அறுப்புநாளிலே நான் அறுக்கிறவர்களுடனே: முந்திக் களைகளைப் பிடுங்கி, அதுகளைச் சுட்டுப்போடுகிறதுக்குக் கட்டுகளாகக் கட்டுங்கோள், கோதுமையையோவெனில் களஞ்சியத்திலே சேருங்கோளென்பேனென்று சொன்னானென்றார்.

௩௧ வேறொரு உவமையை அவர்களுக்குச் சொல்லிக் காட்டினார், அதாவது: வானராட்சியம் * கடுகு விதைக்கொப்பாயிருக்குது, அதை ஒரு மனுஷன் எடுத்துத் தன் வயலிலே விதைத்தான். * மாற்கு ௪, ௩௰—௩௨. லூ. ௰௩, ௰௮. ௰௯.

௩௨ அது சகல விதைகளிலேச் சின்னதாயிருந்தும், வளரும்போது கீரைகளிலே பெரிதாயிருந்து, ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளிலே வந்தடையத்தக்கதான செடியாமென்றார்,

௩௩ வேறொரு உவமையை அவர்களுக்குச் சொன்னார்: வானராட்சியம் * புளித்தமாவுக்கொப்பாயிருக்குது, அதை ஒரு ஸ்திரீ எடுத்து, மூன்றுபறை மாவிலே, அனைத்தும் உப்பிப்போகுமட்டும், அடக்கி வைத்தாளென்றார். * லூ. ௰௩, ௨௰. ௨௧.

௩௪ * இதுகளையெல்லாம் யேசு கும்புகளோடே உவமைகளாய்ப் பேசினார், உவமைகளின்றி அவர்களோடே பேசினதில்லை. * மாற்கு. ௪, ௩௩. ௩௪.

௩௫ என்வாயை உவமைகளாலே திறப்பேன், லோகத்தோற்ற முதலாய்ப் புதைபொருளானதுகளை வெளிப்படுத்துவேனென்று தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக. * சங்கீ. ௭௮, ௨.

௩௬ அப்போ யேசு கும்புகளை அனுப்பிவிட்டு வீட்டுக்கு வந்தார். அவருடைய சீஷர்கள் அவரண்டையிலே வந்து: வயலின் களைகளின் உவமையை யெங்களுக்கு வெளிப்படுத்துமென்றார்கள்.

௩௭ அவர் பிரத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: நல்ல விதையை விதைக்கிறவர் மனுஷனுடைய குமாரன்.

௩௮ வயலோ லோகம், நல்ல விதையோ ராட்சியத்தின் புத்திரர்கள், களைகளோ பொல்லாங்கனுடைய புத்திரர்.

௩௯ அதுகளை விதைக்கிற சத்துராதி பிசாசு, * அறுப்போ யுகத்தின் முடிவு, அறுக்கிறவர்கள் தேவதூதர்தானே. * அபி. ௰௪, ௰௫.

௪௰

௪௰ ஆப்போது களைகளெப்படிச் சேர்க்கப்பட்டுத் தக்கினியாலேசுட்டெரிக்கப்படுகுதோ, அப்படியிந்தப்பிரவஞ்சியத்தின் முடிவிலே நடக்கும்.
௪௰௧ மனுஷனுடைய குமாரன் ✦ தம்முடைய தூதரை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராட்சியத்திலிருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ்செய்கிறவர்களையுஞ் சேர்த்து, ✦ ௨௫, ௩௨.
௪௰௨ அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள், அங்கே ✦ அழுகையும் பல்லுக்கடிப்பும் உண்டாயிருக்கும். ✦ ௮, ௰௨. ௨௨, ௰௩.
௪௰௩ அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராட்சியத்திலே ✦ சூரியனைப்போலப் பிரகாசிப்பார்கள். கேட்கிறதுக்குக் காதுள்ளவன் கேட்கக்கடவான். ✦ தானி. ௰௨, ௩.

## ¶ ஒளித்தபொக்கிஷம், நல்லமுத்து, வலையென்பதுகளின் உவமைகள்.

௪௰௪ மேலும், வானராட்சியம் வயலிலே ஒளிக்கப்பட்ட பொக்கிஷத்துக்கொப்பாயிருக்குது. அதை ஒரு மனுஷன் கண்டடக்க, ✦ அதற்காகவுண்டான சந்தோஷத்தினாலே போய்த் தனக்குண்டானதெல்லாத்தையும் விற்று அந்தவயலைக் கொள்ளுகிறான். ✦ ௰௯, ௨௧. பிலி. ௩, ௭, ௮.
௪௰௫ மேலும் வானராட்சியம் நல்லமுத்துகளைத் தேடுகிற வியாபாரமனுஷனுக்கொப்பாயிருக்குது.
௪௰௬ அவன் ✦ விலையேறப்பெற்ற ஒரே முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாத்தையும் விற்று அதைக்கொண்டான். ✦ வாக்கி. ௮, ௰. ௰௧.
௪௰௭ மேலும் வானராட்சியம் கடலிலே போட்டு எச்சாதியையுஞ் சேர்த்துவாருகிற வலைக்கொப்பாயிருக்குது.
௪௰௮ அது நிறைந்தபின் அதைக்கரையிலிழுத்து, உட்கார்ந்து, நல்லதுகளைக் கூடுகளிலே சேர்த்து ஆகாத்துகளை எறிந்துபோடுவார்கள்.
௪௰௯ இவ்வண்ணமாகப் பிரவஞ்சியத்தின் முடிவிலே நடக்கும், ✦ தேவதூதர் புறப்பட்டுப் பொல்லாதவர்களை நீதிமான்களின் நடுவிலிருந்து பிரித்து, ✦ ௨௫, ௩௨.
௫௰ அவர்களை அக்கினிச்சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பல்லுக்கடிப்பும் உண்டாயிருக்குமென்றார்.
௫௰௧ இயேசு அவர்களுக்கு: இதெல்லாத்தையும் அறிந்துகொண்டீர்களோ என்றார். அவர்கள் அவருக்கு: ஆம், ஆண்டவரே என்றார்கள்.
௫௰௨ அவரோவென்றால் அவர்களுடனே: ஆகையால் வானராட்சியத்துக்கென்று சீஷனாக்கப்பட்ட வேதபாரகனெல்லாந் தன் பொக்கிஷத்திலே புதியதுகளையும் பழயதுகளையும் எடுக்கிற வீட்டெசமானுக்கொப்பாயிருக்கிறனென்றார்.

¶ கிறிஸ்து தம்மூரில் அசட்டை
பண்ணப்பட்டது.

௫௩ பின்னையுஞ் சம்பவித்ததென்றால், யேசு இந்த உவமைகளைச் சொல்லி முடித்தபிறபாடு அவ்விடம் விட்டு.

௫௪ தாம் * வளர்ந்த ஊரிலே வந்து அவர்கள் ஆலயத்திலே அவர்களை உபதேசித்தார். அவர்கள் விறம்மித்து: இவனுக்கிந்த ஞானமும் வல்லமைகளும் எங்கேயிருந்து வந்தது. * மாற். ௬, ௧—௬. லூ. ௪, ௰௬.

௫௫ இவன் தச்சனுடைய குமாரனல்லவோ. இவன் தாய் மரியாளென்னப்படுகிறாளல்லவோ, இவன் சகோதரர் யாக்கோபும் யோசேயும் சீமோனும் யூதாவுமென்கிறவர்களல்லவோ.

௫௬ இவன் சகோதரிகளெல்லாரும் நம்மிடத்திலிருக்கிறார்களல்லவோ, பின்னை இவனுக்கிதெல்லாம் எங்கேயிருந்து வந்ததென்று சொல்லி.

௫௭ அவரிடத்தில் இடறல்பட்டார்கள். * யேசுவோவென்றால் அவர்களுடனே: ஒரு தீர்க்கதரிசிக்கு அவனூரிலும் அவன் அகத்திலுமிருக்கிற கனயீனம் பின்னெங்குமில்லையென்றார். * யோவ. ௪, ௪௪.

௫௮ அங்கே அவர்கள் அவிசுவாசத்தினிமித்தியம் அவர் அனேகம் வல்லமைகளைச் செய்ததில்லை.

## ௰௪. அதிகாரம்.

¶ யோவான் ஸ்நானகன் தலைவெட்டுண்டது.
மாற். ௬, ௰௪—௨௯. லூ. ௯, ௭—௯.

அந்தக்காலத்திலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே யேசுவின் கீர்த்தியைக் கேட்டு.

௨ தன் ஊழியக்காரருடனே: இவன் யோவான் ஸ்நானகனாயிருக்கிறான், அவன் மரித்தோரிலிருந்தெழுந்தான், ஆகையால் வல்லமைகள் அவனிடத்திலே நடத்தையாயிருக்குதென்றான்.

௩ அதேதென்றால் ஏரோதே தன் தம்பி பிலிப்புவின் பெண்சாதி ஏரோதியாள் நிமித்தியமாக யோவானைப் பிடித்துக் கட்டிக் காவலிலே வைத்திருந்தான்.

௪ ஏனென்றால் யோவான் அவனுக்கு: * அவளைப் படைப்பது உமக்குக் கூடாதென்று, சொல்லியிருந்தான். * ௩. மோ. ௰௮, ௰௬.

௫ அவனைக் கொல்லமனசாயிருந்து சனத்துக்குப் பயந்தான், ஏனென்றால் * அவனைத் தீர்க்கதரிசியென்றெண்ணினார்கள். * ௨௧, ௨௬.

௬ ஆனாலும் ஏரோதேயின் சென்மவாரங் கொண்டாடப்படுகிறபோது, ஏரோதியாளின் குமாரத்தி அவர்கள் நடுவே கூத்தாடினாள் அது ஏரோதேய்க்குப் பிரியமாயிருந்தது.

௭ ஆனபடியால்: நீ எதைக்கேட்டாலுந் தருவேனென்று அவளுக்கு ஆணையிட்டு வாற்றைக் கொடுத்தான்.

௮ அவளோவென்றால் தன் தாயாலே முன் போதிக்கப்பட்டபடி யோவான் ஸ்நானகனின் சிரசை இங்கே

ஒருதா

ஒருதாலத்திலேயெனக்குத்தாருமென்றாள்.
௯ ராசாதுக்கமடைந்தான், ஆனாலும் ஆணையினிமித்
தமும் பந்தியிலேகூடயிருந்தவர்களுக்காகவும்
அதைக்கொடுக்கக்கட்டளையிட்டு,
௰ ஆளனுப்பி, காவற்கூடத்திலே யோவானை
சிரச்சேதம்பண்ணுவித்தான்.
௰௧ அவன் சிரசு ஒருதாலத்தில் ஏந்தி, சிறுபெண்ணு
க்குக்கொடுக்கப்பட்டது. அவள் அதைத்தன்தாயக்கு
க்கொண்டுபோனாள்.
௰௨ அப்பொழுது அவனுடைய சீஷர்கள் சேர்ந்துவந்து, உட
லையெடுத்து அடக்கம்பண்ணி, வந்து யேசுவுக்கு அ
றிவித்தார்கள்.

¶ கிறிஸ்து ஐயாயிரம்பேருக்குப்போசனங்
கொடுத்தது. மாற்கு. ௬, ௩௰—௪௪.
லூக். ௯, ௰—௰௭. யோவா.
௬, ௧—௰௪.

௰௩ யேசு அதைக்கேட்டு அவ்விடம்விட்டு கப்ப
லிலேறி வனாந்தரத்துக்குத் தனியப்போனார்,
ஜனங்கள் அதைக்கேட்டு, பட்டணங்களிலிருந்து கால
நடையாய் அவரைப் பின்சென்றார்கள்.
௰௪ யேசு புறப்பட்டு, திரள் கூட்டத்தைக்கண்டு, * அ
வர்கள்பேரில் மனதுருகி, அவர்களில் வியாதியாயி
ருந்தவர்களைச் சொஸ்தமாக்கினார். * ௯, ௩௬. ௰௫, ௩௨.
௰௫ சாயங்காலமானபோது அவருடைய சீஷர்க
ள் அவரிடத்தில் வந்து: இவ்விடம் வனாந்தரமாயிருக்
குது, நேரமுமாச்சுப்போச்சுதே, ஜனங்கள் கிராமங்க
ளுக்குப்போய், தங்களுக்குப் போசனங்கொள்ள அ
வர்களை அனுப்பிவிடுமென்றார்கள்.
௰௬ ஆனாலும் யேசு அவர்களுடனே: அவர்கள் போ
கத்தேவையில்லை, நீங்களே அவர்களுக்குச் சாப்பாடு
கொடுங்கோளென்றார்.
௰௭ அவர்களோவென்றால்: ஐந்தப்பமும் ரெ
ண்டுமீனுமல்லாமல் எங்களுக்கொன்றுமி
ல்லையென்று அவருக்குச்சொன்னார்கள்.
௰௮ ஆனாலும் அவர்: அதுகளை எனக்கிங்கே கொண்டு
வாருங்கோளென்றார்.
௰௯ அப்பொழுது அவர் ஜனங்களைப் புல்லின்மேலே பந்
தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஐந்தப்பத்தையும் ரெண்டு
மீனையும் எடுத்து, பரமண்டலத்தை அண்ணாந்து
பார்த்து ஸ்தோத்திரம்பண்ணி, அப்பங்களைப் பி
ட்டு, சீஷர்களுக்குக் கொடுத்தார், சீஷர்கள் ஜனங்
களுக்குக் கொடுத்தார்கள்.
௨௰ எல்லாரும் சாப்பிட்டுத் திருப்தியடைந்ததுந்
மீதமிருந்த துணிக்கைகளைப் பன்னிரண்டு கூடை நிறை
ய எடுத்தார்கள்.
௨௧ சாப்பிட்டபேரோவென்றால் பெண்டுகள்
பிள்ளைகள் தவிர ஏறக்குறைய ஐயாயிரம் புருஷரா
யிருந்தார்கள்.

¶ அவர் கடலமேல் நடந்தது. மாற்கு. ௬,
௪௫—௫௨. யோவா. ௬,
௰௬—௨௧.

௨௨ உடனேதானே யேசு தம்முடைய சீஷாக்களைப்
படகிலேறவும், தாம் ஜனங்களை அனுப்பிவிடுமட்
டுந் தமக்கு முன்னே அக்கரைக்குப் போகவுந் துரிச
ப்பண்ணினார்.
௨௩ அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பிற்பாடு, *
ஜெபம்பண்ண ஒரு பர்வதத்தின்மேலே தனித்தேறி,
அஸ்தமனமான போது அங்கே தனியாயிருந்
தார். * லூக். ௬, ௰௨. ௯, ௰௮.
௨௪ படகோவெனில் அப்போது நடுக்கடலிலே
வந்திருந்து அலைகளால் அலைத்தப்பட்டது. அதேனெ
ன்றால் எதிர்க்காற்றாயிருந்தது.
௨௫ ராவின் நாலாஞ்சாமத்திலே யேசு அவர்களண்
டைக்குக் கடலின்மேல் நடந்துவந்தார்.
௨௬ சீஷாக்கள் அவர் கடலின்மேல் நடக்கிற
தைக் கண்டு திகைத்து, ஆவேசமாயிருக்குமென்று
சொல்லி, பயத்தினாலே கூப்பிட்டார்கள்.
௨௭ ஆனால் யேசு உடனே அவர்களோடே பேசி: தி
டன்கொள்ளுங்கோள், நானதான், பயப்படாதே
யுங்கோளென்றார்.
௨௮ பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்
டவரே, நீரேயானால், என்னைத் தண்ணீரின்மேல்
உம்மண்டைக்கு வரச்சொல்லுமென்றான்.
௨௯ அதற்கவர்: வாவென்றார். அப்போ பேதுரு
படகைவிட்டிறங்கி, யேசுவண்டைக்கு வரத்தண்ணீ
ரின்மேல் நடந்தான்.
௩௰ ஆனால் காற்றைக் கண்டு, பயந்து, அமி
ழ்ந்தத்துவக்கி: ஆண்டவரே, என்னை ரெட்சியுமெ
ன்று கூப்பிட்டான்.
௩௧ உடனே யேசு கையை நீட்டி அவனைப் பிடித்
துக்கொண்டு, அவனோடே: * அற்பவிசுவாசியே,
ஏன் சந்தேகப்பட்டாயென்றார். * ௮, ௨௬.
௩௨ அவர்கள் படகிலேறின போது காத்தமர்ந்
தது.
௩௩ ஆனால் படகிலுள்ளவர்கள் வந்து அவரைப்
பணிந்துகொண்டு. * மெய்யாகவே பராபரனுடை
ய குமாரனாயிருக்கிறீரென்றார்கள். * ௰௬, ௰௬.

௰. பிணியாளிகள் அவர் வஸ்திரத்தின் ஓரத்
தைத் தொட்டதினாலே சொஸ்தமானது.
மாற்கு. ௬, ௫௩—௫௬.

௩௪ அக்கரைக்கோடி, கெனேசரேத் தேசத்தில
வந்தார்கள்.
௩௫ அத்தலத்து மனுஷர் அவரை அறிந்தபோது,
அந்தச் சுத்துப்புற மெங்குஞ் செய்தி அனுப்பினார்கள்; அ
ப்போ பிணியாளிகளெல்லாரையும் அவரண்டைக்
குக் கொண்டுவந்து,
௩௬ அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைமாத்திரந்
தொட அவரை வேண்டிக்கொண்டார்கள். தொட்
டயாவருஞ் சொஸ்தமானார்கள்.

## ௰௫. அதிகாரம்.

¶ கிறிஸ்து பாரம்பரைத்தாயங்களைக்குறித்துச் சொன்னது. மாற்கு ௭, ௧—௨௩:

அப்போது யெருசலேமியாராகிய வேதபாரகரும்
பரிசேயரும் யேசுவண்டை வந்து.
௨ உம்முடைய சீஷர்கள் முன்பானவர்களின் பார
ம்பரைத்தாயத்தை மீறுவானேன், அதேதென்றால் அ
வர்கள் அப்பஞ்சாப்பிடும்போது தங்கள் கைகளைக்
கழுவுகிறதில்லையென்றார்கள்.
௩ ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக அவர்களுக்குச்
சொன்னதாவது: நீங்களோ பராபரனுடைய கற்பி
னையை உங்கள் பாரம்பரைத்தாயத்துக்காக மீறுவா
னேன்.
௪ அதேதென்றால் உன் தகப்பனையுந் தாயையுங்
கனம்பண்ணுவாயாக வென்றும், + தகப்பனையா
வது தாயையாவது நிந்திப்பவன் சாகவே சாக
வேண்டுமென்றும் பராபரன் கற்பித்தாரே. + ௨. மோ.
௨௧, ௰௭. ௩. மோ. ௨௰, ௯. வாக்கி: ௨௰, ௨௰.
௫ ஆனால், யாதொருத்தன் தகப்பனுடனே அல்லது
தாயுடனே: உனக்கு என்னாலே உதவுகிறதெதுவோ
அது காணிக்கையென்று சொன்னானாகில், ஆமென்கிறீ
ர்கள்: அந்தவிதத்தினாலே தன் தகப்பனை அல்லது தன் தா
யைக் கனம்பண்ணாதிருப்பானே.
௬ இப்படிப் பராபரனுடைய கற்பினையை உங்கள் பா
ரம்பரைத்தாயத்துக்காகச் செல்லாமற்பண்ணி
னீர்கள்.
௭ மாயக்காரரே, உங்கள் பேரிலே + யெசாயா
நன்றாய்த் தீர்க்கதரிசனமுரைத்துச் சொன்னதா
வது. + யெசா. ௨௯, ௰௩.
௮ இந்தச் சனந்தங்கள் வாயினாலே நம்மண்டை சேர்
ந்து உதடுகளினாலே நம்மைக் கனம்பண்ணுது, அவர்க
ளிருதயமோ வெகு நமக்குத் தூரமாய் விலகியிரு
க்குது.
௯ ஆனாலும் மனுஷருடைய கற்பினைகளாகிய போதகங்
களைப் போதிக்கிறவர்களாய் வீணாய் நம்ம
க் காராதனை செய்கிறார்கள் என்கிறதைத்தானே
என்று சொல்லி,
௰ சனக்கூட்டத்தையழைத்து, அவர்களுடனே:
கேட்டுணருங்கோள்.
௰௧ வாயில் உள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்ப
டுத்தாமல், வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷ
னைத் தீட்டுப்படுத்துமென்றார்.
௰௨ அப்போ அவருடைய சீஷர்கள் சேர்ந்துவந்
து அவருடனே: பரிசேயர் இந்த விசேஷத்தைக் கேட்டு
இடறல்பட்டார்களென்று அறிவீரோ வென்றார்
கள்.
௰௩ அதற்கு அவர் பிரத்தியுத்தாரமாக: என் பரம பி
தா நடாத நாற்றெல்லாம் பிடுங்கப்படும்.
௰௪ அவர்களை விட்டுவிடுங்கோள், குருடருக்கு +
குருட்டுவழிகாட்டிகளாயிருக்கிறார்கள். குருடனுக்
குக்குரு

குருடனுக்குக் குருடன் வழிகாட்டினானால், இருவருங் குழியிலே விழுவார்களென்றார். * ௨௩, ௰௬.

௰௫ பேதுரு அவருடனே பிரதியுத்தரமாக: இந்த உவமையை எங்களுக்குத் தெளிவுபடுத்துமென்றான்.

௰௬ ஆனால் யேசு சொன்னதாவது: நீங்களும் இன்னமும் உணர்வற்றவர்களாயிருக்கிறீர்களோ.

௰௭ வாய்க்குள் போகிறதெல்லாம் வயிற்றிலே போய் ஆசனவழியாய்க் கழிந்துபோமென்று இன்னம் நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா.

௰௮ * வாயிலிருந்து புறப்படுகிறதுகளோவெனில் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும், அதுகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும். * யாக. ௩, ௬:

௰௯ அதெப்படியென்றால், * இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளுங் கொலைகளும் விபசாரங்களும் வேசித்தனங்களும் களவுகளும் பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டுவரும். * க; மோ. ௬, ௫. ௮, ௨௧:

௨௰ இதுகளே மனுஷனைத் தீட்டுப்படுத்துகிறதுகள், கழுவாத கைகளினாலே சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாதென்றார்.

¶ அவர் கானானிய ஸ்திரீயின் மகளைக் குணமாக்கினது. மாற்கு ௭; ௨௪—௩௰.

௨௧ யேசு அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, தீருசீதோன் பட்டணங்களின் திசைகளுக்குப் போனார்.

௨௨ இதோ கானான் சாதியாளான ஸ்திரீ அந்த எல்லைகளிலிருந்து புறப்பட்டுவந்து, அவருடனே: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கிரங்கும், என் மகள் பிசாசினாலே கடினமாய் வாதிக்கப்படுகிறாளென்று சொல்லிக் கூப்பிட்டாள்:

௨௩ ஆனால் அவர் அவளுக்கொரு வார்த்தையையும் மறுஉத்தாரமாகச் சொல்லவில்லை. அப்போ அவருடைய சீஷர்கள் சேர்ந்துவந்து: அவளை அனுப்பிவிடும், ஏனெனில் நம்முடைய பிறகே கூப்பிடுகிறாளென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௨௪ ஆனாலவர் பிரதியுத்தரமாக: இஸ்றவேல் வீட்டிலே காணாமல்ப்போன ஆடுகளண்டைக்கு அனுப்பப்பட்டேனொழிய மற்றப்படியில்லையென்றார்.

௨௫ அவளோவென்றால் வந்து: ஆண்டவரே, எனக்குச் சகாயம்பண்ணுமென்று அவரைப் பணிந்துகொண்டாள்.

௨௬ அவரோவெனில் பிரதியுத்தரமாக: பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நன்றாயிராதென்றார்.

௨௭ ஆனாலவள்: ஆம்; ஆண்டவரே, ஆகிலுமோ நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜைப்பலகைகளிலிருந்து விழுகிற துணிக்கைகளிலே தின்னுமேயென்றாள்:

௨௮ அப்போ யேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: ஸ்திரீயே, உன் விசுவாசம் பெரியது, நீ வேண்டுகிறபடி உனக்காகக்கடவதென்றார். அந்நேர

ந்துவக்கீ அவள் மகள் ஆரோக்கியமானாள்.

¶ அவர் பல வியாதிக்காறரைக் குணமாக்கி, நாலாயிரம் பேருக்குப் போசனங் கொடுத்தது. மாற்கு ௭, ௩௧—௩௭. ௮, ௧—௰

௨௯ யேசு அவ்விடம் விட்டுப் புறப்பட்டுக் கலிலேயாக் கடலண்டை வந்து, ஒரு பருவதத்திலேறி அங்கே உட்கார்ந்தார்.

௩௰ அப்பொழுது சப்பாணிகளையுங் குருடரையும் ஊமையரையும் ஊனவாளிகளையும் வேறே அநேகரையுங் கூட்டிக்கொண்டு வந்த அநேக சனக்கும்புகள் அவரண்டைக்குச் சேர்ந்து, அவர்களை யேசுவின் பாதத்திலே போட்டார்கள். அவர்களை அவர் குணமாக்கினார்.

௩௧ ஊமையர் பேசுகிறதையும் ஊனவாளிகள் சொஸ்தமாகிறதையுஞ் சப்பாணிகள் நடக்கிறதையுங் குருடர் காண்கிறதையுங் கும்புகள் கண்டு ஆச்சரியப்பட்டு, இஸ்ரவேலின் பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

௩௨ ஆனால் யேசு தம்முடைய சீஷர்களைத் தம்மிடத்தில் அழைத்து: சனத்தின்பேரிலே * மனதுருகிறேன், அதென்னாலே அவர்கள் என்னண்டையிலே மூன்றுநாள் தரித்து, போசிக்க ஒன்றுமில்லாதிருக்கிறார்கள், அவர்கள் வழியிலே தொய்ந்துபோகாதப்படிக்குப் பட்டிணியாய் அவர்களை அனுப்பிவிட எனக்கு மனதில்லையென்றார். * ௰௪, ௰௪.

௩௩ அப்போ அவருடைய சீஷர்கள் அவருடனே: இத்தனை சனத்துக்குத் திருத்தியாகும்படிக்கு வனாந்திரத்திலே இத்தனை அப்பங்கள் நமக்கெங்கேயிருந்து வருமென்றார்கள்.

௩௪ யேசு அவர்களுடனே: உங்களுக்கெத்தனை அப்பங்களுண்டென்றார். அதற்கவர்கள்: ஏழப்பமுங் கொஞ்சஞ் சிறுமீன்களுமிருக்குதென்றார்கள்.

௩௫ அப்போதிவர் கும்புகளைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு,

௩௬ ஏழப்பங்களையும் மீன்களையும் வாங்கி ஸ்தோத்திரம்பண்ணிப் பிட்டு, தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்தார், சீஷர்கள் சனத்துக்குக் கொடுத்தார்கள்.

௩௭ எல்லாருஞ் சாப்பிட்டுத் திருத்தியடைந்தது நக்கவிரமீர்ந்த துணுக்கைகளை ஏழுகூடை நிறைய எடுத்தார்கள்.

௩௮ சாப்பிட்டபேரோவென்னில், பெண்டுகள் பிள்ளைகள் தவிர நாலாயிரம் புருஷராயிருந்தார்கள்.

௩௯ அவர் கும்புகளை அனுப்பிவிட்டு, படகிலேறி, மக்தலாவின் எல்லைகளில் வந்தார்.

# ௰௬. அதிகாரம்.

¶ அடையாளங்கேட்ட பரிசேயரைக்கண்டித்துக் கடிந்துகொண்டது. மாற்கு, ௮. ௰௧—௨௧.

அப்போ பரிசேயரும் சதுசேயரும் சேர்ந்துவந்து; பரமண்டலத்திலிருந்து ஒரு அடையாளத்தைத் தங்களுக்குக் காட்டவேண்டுமென்று அவரைச் சோதித்துக் கேட்டார்கள்.

௨ ஆனால் அவர் பிரதியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: * அஸ்தமானமாகும்போது நீங்கள்: வானம் வெளிவாங்கும், ஏனென்றால் செம்மானமிட்டிருக்குதென்கிறீர்கள். * லூக். ௰௨, ௫௪ — ௫௬.

௩ காலமே: இன்றைக்குக் காத்தும் மழையுண்டாம், ஏனென்றால் செம்மானமும் மந்தாரமுமாயிருக்குதென்கிறீர்கள். மாயக்காரரே, வானத்தின் முகத்தை வகையறுக்க அறிந்திருக்கிறீர்கள், காலங்களின் அடையாளங்களை வகையறுக்கமாட்டீர்களோ.

௪ பொல்லாத விபசாரசந்ததி அடையாளங்கேட்குது, ஆனாலும் யோனாதீர்க்கதரிசியின் அடையாளமேயல்லாமல் வேறடையாளம் அதுக்குக் கொடுபடாதென்று சொல்லி, அவர்களை விட்டுப் புறப்பட்டுப்போனார். * ௰௨, ௩௯. ௪௰.

¶ புளித்தமாவென்று பரிசேயரின் உபதேசத்துக்குள்ளப்படாதபடிக்கு எச்சரித்தது. மாற்கு. ௮, ௰௪ — ௨௧.

௫ அவருடைய சீஷர்கள் அக்கரைசேர்ந்தபோது அப்பங்களை எடுத்துவர மறந்திருந்தார்கள்.

௬ யேசு அவர்களுடனே: பரிசேயர் சதுசேயரென்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கப்பாருங்கோளென்றார். * லூக். ௰௨, ௧.

௭ அப்போ அவர்கள் தங்களுக்குள்ளே; நாம் அப்பங்களை எடுத்துவராததைக்கொண்டுதான் இதைச் சொல்லுகிறாரென்று ஆலோசிச்சுப்பட்டார்கள்,

௮ யேசுவோ அதை அறிந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: * அற்பவிசுவாசிகளே, நீங்கள் அப்பங்களை எடுத்துவராததைக்காக உங்களுக்குள்ளே ஆலோசிப்பானேன். ௬, ௩௰.

௯ இன்னம் உணராமலிருக்கிறீர்களோ, * ஐயாயிரம்பேர்களுடைய அஞ்சப்பங்களையுமெத்தனை கூடைகள் எடுத்தீர்களென்கிறதையும், * ௰௪, ௰௭. ௨௰.

௰ * நாலாயிரம்பேர்களுடைய ஏழப்பங்களையுமெத்தனை கூடைகள் எடுத்தீர்களென்கிறதையும் நீங்கள் நினைவுகூருகிறதில்லையோ. * ௰௫, ௩௪. ௩௭.

௰௧ பரிசேயர் சதுசேயரென்பவர்களின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொன்னது அப்பத்தைக்குறித்து உங்களுக்குச் சொன்னதல்லவென்று நீங்கள் உணராதிருக்கிறதெப்படியென்றார்.

௰௨ அப்போ அவர் அப்பத்தின் புளித்தமாவுக்கல்ல, பரிசேயர் சதுசேயருடைய உபதேசத்துக்கு எச்ச

ரிக்கை

ரிக்கையாயிருக்கச்சொன்னாரென்று உணர்ந்தார்கள்.

¶ பேதுரு யேசுவின்பேரிலப்பக்ந்தசாட்சி
மாற்கு. ௮. ௨௭—௨௯. லூக். ௯,
௰௮—௨௰.

௰௩ யேசு பிலிப்புக்கெசாரியாவின் திசைகளிலே வந்தபோது, தம்முடைய சீஷர்களை மனுஷனுடைய குமாரனுக்கு ஜனமனுஷர் ஆரென்று சொல்லுகிறார்களென்று கேட்டார்.

௰௪ அதற்கவர்கள்: சிலர்: யோவான் ஸ்நானகனென்றும், வேறுசிலர்: எலியாவென்றும், மற்றவர்கள்: யெரேமியா, அல்லது தீர்க்கதரிசிகளிலொருவனென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.

௰௫ அவர்களுடனே: நீங்களோவென்னை ஆரென்று சொல்லுகிறீர்களென்றார்.

௰௬ அதற்குச் சீமோன் பேதுரு பிரத்தியுத்தரமாக: * நீர் சீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறீஸ்துவாயிருக்கிறீரென்றான். * யோவ. ௧, ௫௰. ௬, ௬௯.

௰௭ யேசு பிரத்தியுத்தரமாக அவனுக்குச் சொன்னது: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான், அதேனென்றால் மாம்சமும் இரத்தமுமல்ல, பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவே இதை உனக்கு வெளிப்படுத்தினார்.

௰௮ ஆகையால் நானுமுனக்குச் சொல்லுகிறேன். நீ பேதுருவாயிருக்கிறாய், * இந்தக் கல்லின் மேலே என் சபையைக் கட்டுவேன், நரகத்தின் வாசல்கள் அதை மேற்கொள்ளமாட்டாது. * எபே. ௨, ௨௰.

௰௯ * நான் வானராட்சியத்தின் திறவுகோல்களை உனக்குக் கொடுப்பேன், பூமியிலே எதைக் கட்டுப்படுத்துவாயோ, அது வானத்திலே கட்டப்பட்டதாயிருக்கும், பூமியிலே எதைக் கட்டவிழ்ப்பாயோ அது வானத்திலே கட்டவிழ்க்கப்பட்டதாயிருக்குமென்றார்.
* ௰௮, ௰௮. யோவ. ௨௰, ௨௩.

௨௰ * அப்போது தாம் கிறீஸ்துவாகிய யேசுவென்று ஒருவருக்குஞ் சொல்லாதபடிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கற்பித்தார். * லூக். ௯, ௨௧.

¶ கிறீஸ்து தம்முடைய பாடுகளை முன்னறிவித்து
தம்மைப் பின்செல்லப் புத்திசொன்னது. மாற்கு. ௮. ௩௧—௩௮.
லூக். ௯, ௨௨—௨௭.

௨௧ அதுமுதல் யேசு * தாம் யெருசலேமுக்குப் போய், மூப்பரானவர்களாலும் பிரதான ஆசாரியர்களாலும் வேதபாரகராலும் வெகுபாடுபட்டு, கொல்லப்பட்டு, மூன்றாம் நாளிலே எழுந்திருக்க வேண்டியதைத் தம்முடைய சீஷர்களுக்குக் காட்டத்துவக்கினார்.
* ௰௭, ௰௨. ௨௨. ௨௯. ௨௰, ௰௮. ௰௯.

௨௨ அப்போ பேதுரு அவரைத் தனியே அழைத்து, அவரை அதம்பத்துவக்கி: ஆண்டவரே, உம்முடைமேலே இரக்கமாயிரும்; அப்படி உமக்கு வரவேண்டாமென்றான்.

௨௩ ஆனாலவர் திரும்பிப்பார்த்து, பேதுருவுடனே: என்பிறகேபோ, சாத்தானே, நீ எனக்கு இடறலாயிருக்கிறாய், ஏனென்றால் தேவனுக்கடுத்தவையில்லமனுஷருக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறாயென்றார்.

௨௪ அப்போ இயேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னதாவது: யாதொருத்தன் * என்பிறகே வரவேணுமென்றால், தன்னைத்தான் வெறுத்து, தன்சிலுவையை யெடுத்துக்கொண்டு என்னைப்பின் செல்லக்கடவான். * ௰, ௩௮.

௨௫ ஏனென்றால், * தன்சீவனை ரட்சிக்கவேணுமென்றிருக்கிறவன் அதையிழந்து போவான், ஆனால் என்நிமித்தியமாகத் தன்சீவனை யிழந்து போகிறவன் அதைக்கண்டடைவான். * யோவ. ௰௨, ௨௫.

௨௬ ஏனென்னில் மனுஷன் லோகத்தையெல்லாம் ஆதாயப்படுத்திக்கொண்டு, தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்தினால், அவனுக்கு லாபமென்ன, அல்லது மனுஷன் * தன் ஆத்துமத்தை மீட்கிறதுக்குக் கைம்மாறாக என்னத்தைக்கொடுப்பான். * சங்கீ. ௪௯, ௯.

௨௭ அதேனென்னில் * மனுஷனுடைய குமாரன் தம்முடைய பிதாவின் மகிமையாய்த் தம்முடைய தூதர்களோடுங்கூட வரப்போறார், அப்போது ** ஒவ்வொருத்தனுக்கு அவனவன் செய்கையின்படியே பலனளிப்பார். * ௨௫, ௩௧. ** றோ. ௨, ௬. ௨. கொ. ௫, ௰.

௨௮ மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், இங்கே நிற்கிறவர்களில் சிலருண்டு. அவர்கள் மனுஷனுடைய குமாரனை அவருடைய ராச்சியத்திலே வரக்காணுமளவும் மரணத்தைருசிபாரார்களென்றார்.

## ௰௭, அதிகாரம்.

¶ கிறிஸ்து பருவதத்திலே மகிமைப்பட்டது.
மாற்கு. ௯, ௨—௯. லூ. ௯,
௨௮—௩௬.

ஆறுநாளைக்குப்பிறகு இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவன் தம்பியோவானையுங் கூட்டிக்கொண்டு, தனிப்பட உயர்ந்த பருவதத்தின் மேலேயழைத்துப்போய்,

௨ அவர்களுக்குமுன்பாக மறுரூபமானார், அவர் முகஞ்சூரியனைப்போலே பிரகாசித்தது, அவர் வஸ்திரங்களோ வெளிச்சத்தைப்போலே வெண்மையாச்சுது.

௩ மோசேயும் எலியாவும் அவர்களுக்குத் தெரிசனையாகி, அவரோடே பேசிக்கொண்டிருந்தார்கள்.

௪ அப்போ பேதுரு பிரத்தியுத்தரமாக இயேசுவுடனே: ஆண்டவரே, நாமிங்கேயிருக்கிறது நல்லது, உமக்குச் சித்தமானால் இங்கே மூன்று கூடாரங்களைப் போடுவோம், உமக்கொன்றும் மோசேக்கொன்றும் எலியாவுக்கொன்றுமென்றான்.

௫ அவனின்னம் பேசுகையில், இதோ ஒளிவுள்ள மேகம் அவர்கள்மேல் நிழலிட்டதுமல்லாமல்,

இதோ

இதோ மேகத்திலிருந்து: * இவர் நாம் பிரியமாயிருக்கி
நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறார், ** இவர் சொல்லுக்கே
ஞங்கொள்ளுங்களென்று சத்தம் பிறந்தது. * ௩, ௰௭.
உ.பே. ௧, ௰௬—௰௮. ஏசா. ௪௨, ௧. ** ௫. மோ.
௰௮; ௰௫.

௬ சீஷர்கள் அதைக்கேட்டு முகங்குப்புற விழுந்து, மிகவும் பயந்தார்கள்.

௭ அப்போ யேசு சேர்ந்துவந்து அவர்களைத் தொட்டு: எழுந்திருங்கோள் பயப்படாதேயுங்கோளென்றார்.

௮ அவர்கள் தங்கள் கண்களை ஏறெடுக்கையிலே யேசுவொருத்தரைத் தவிர ஆரையுங்காணவில்லை.

௯ அவர்கள் பருவதத்திலிருந்திறங்குகிறபோது, * யேசு அவர்களுக்கு: மனுஷனுடைய குமாரன் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குமட்டும் நீங்கள் தெரிசனத்தையு ஆரோடுஞ்சொல்லாதேயுங்கோளென்று கற்பித்தார். * ௰௬, ௨௰.

¶ அவர் ரெண்டாம் எலியா ஆரென்று
அறிவித்தது. மாற்கு ௯, ௰௧—௰௩.

௰ அப்போ அவருடைய சீஷர்கள்: ஆனால் * எலியா முந்திவரவேணுமென்று வேதபாரகர் சொல்லுகிறதென்னென்று கேட்டார்கள். * ௰௧, ௰௪. மல்கி. ௪, ௫.

௰௧ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: எலியா முந்திவந்து * எல்லாத்தையுஞ் சீர்திருத்துவது மெய்தான். * லூக். ௧, ௰௭.

௰௨ ஆனால் உங்களுக்குச் சொல்லுகிறேன், எலியா வந்தாச்சுது, அவனை அறியாதிருந்து * தாங்கள் வேணுமென்றபடியெல்லாம் அவனுக்குச் செய்தார்கள், இவ்வண்ணமாக மனுஷனுடைய குமாரனும் அவர்களால் பாடுபடப்போறாரென்றார். * ௰௪, ௩—௰௨.

௰௩ அப்போ அவர் யோவான்ஸ்நானனைக்குறித்துத் தங்களுக்குச் சொன்னாரென்று சீஷர்கள் உணர்ந்தார்கள்.

¶ அவர் சந்திரரோகியைச் சொஸ்தமாக்கினது.
மாற்கு ௯, ௰௪—௨௯. லூக். ௯,
௩௭—௪௩.

௰௪ அவர்கள் கும்பலண்டைக்குவந்தபோது, ஒரு மனுஷன் அவரண்டைவந்து அவர் முன்பாக முழங்காற்படியிட்டு:

௰௫ ஆண்டவரே, என்மகனுக்கிரங்கும், அவன் சந்திரரோகியாயிருந்து கடினமாய் வாதைப்படுகிறான். அதேதென்றால் பலவிசை தீயிலும் பலவிசை தண்ணீரிலும் விழுகிறான்.

௰௬ உம்முடைய சீஷர்களிடத்திலே அவனைக் கொண்டுவந்தேன், ஆனால் அவனைக் குணமாக்கமாட்டாதேபோனார்களென்றான்.

௰௭ யேசுவோவென்றால் பிரத்தியுத்தரமாக: விசுவாசமில்லாததுமாறுபாடான சந்ததியே, எந்தமட்டு

மே

மே உங்களோடிருப்பேன், எந்தமட்டும் உங்களைப் பொறுத்திருப்பேன், அவனை இங்கே என்னண்டையிலே கொண்டுவாருங்கோளென்றார்.
௧௮ யேசு அதை அதட்டினார்; அப்போ பிசாசு அவனை விட்டுப் புறப்பட்டுது. அந்நேரந்துவக்கி இளைகுத்தனுக்குக் குணமாச்சுது.
௧௯ அப்போ சீஷாக்கள் தனிப்புற யேசுவண்டை வந்து. நாங்கள் அதைத் துரத்திவிடக்கூடாதே போனதென்னென்றார்கள்.
௨௰ யேசு அவர்களோடே: உங்கள் அவிசுவாசத்தினாலேதானே அதென்னிலே உங்களுக்கு மெய்யாகச் சொல்லுகிறேன்: கடுகுவிதையத்தனை விசுவாசம் உங்களுக்குண்டானால், * இந்தப் பர்வதத்தோடே: இவ்விடம் விட்டப்புறத்தே போவென்று நீங்கள் சொல்ல, அப்புறத்தே போம், உங்களால் ஆகாமல் போவதொன்றுமில்லை. * ௨௧, ௨௧.
௨௧ இந்தச் சந்ததியோவென்றால் ஜெபத்தினாலும் உபவாசத்தினாலுமேயல்லாமற் புறப்படாதென்றார்.

¶ அவர் தமது மரணத்தையும் உயிர்த்தெழுந்ததையும் முன்னறிவித்தது. மாற். ௯. ௩௰—௩௨. லூ. ௯, ௪௩—௪௫.

௨௨ அவர்கள் கலிலேயாவிலே சஞ்சரிக்கும்போது யேசு அவர்களோடே: மனுஷனுடைய குமாரன் மனுஷர் கையிலே ஒப்புக்கொடுக்கப்படப்போறார்,
௨௩ அவர்கள் அவரைக் கொல்லுவார்கள், மூன்றாநாளிலே எழுந்திருப்பாரென்றார். அப்போ மிகுந்த துக்கமடைந்தார்கள்.

¶ அவர் வரிக்காசைக் கொடுத்தது.

௨௪ அவர்கள் கப்பர்னவூமிலே வந்தபோது, வரிக்காசை வாங்கிறவர்கள் பேதுருவண்டை வந்து: உங்கள் போதகர் வரிக்காசைக் கொடுக்கிறதில்லையோவென்றார்கள்.
௨௫ கொடுக்கிறாரென்றான். அவன் வளவுக்குள் வந்தபோது, யேசு அவனுக்கு முந்திக்கொண்டு உனக்கெப்படிக்காணுது, சீமோனே, பூமியினராசாக்கள் ஆர்கையிலே தீர்வையல்லது வரி வாங்குகிறார்கள், தங்கள் பிள்ளைகள் கையிலோ அன்னியர் கையிலோ என்றார்.
௨௬ பேதுரு அவரோடே: அன்னியர் கையிலே என்றான். யேசு அவனுக்குச் சொன்னதாவது: ஆகையால் பிள்ளைகள் நீங்கலாயிருக்கிறார்கள்.
௨௭ ஆனாலும் நாம் அவர்களுக்கிடறலாயிராதபடிக்கு நீ கடலுக்குப் போய், தூண்டிலைப் போட்டு, முந்த எழும்பின மீனை எடு, அதின் வாயைத் திறந்தால், ஒரு வெள்ளிக்காசைக் கண்டுபிடிப்பாய், அதை எடுத்து, எனக்காகவும் உனக்காகவும் அவர்களுக்குக் கொடுவென்றார்.

மனத்தாழ்மையும் மனச்சரிதையுமாயிருக்க
வுங் குத்தத்துக்குச் செய்தவனைச் சீர்ப்பொருந்
தப்பண்ணப் பார்க்கவும் அவர்
சொன்னபுத்தி.

அந்நேரத்திலே சீஷர்கள் யேசுவண்டை வந்து:
வானராட்சியத்திலே பெரியவன் ஆரென்றார்கள்.
மாற்கு. ௯, ௩௩. லூ. ௯, ௪௬—௪௮.

௨ யேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து அதை அவர்கள் நடுவே நிறுத்திச் சொன்னதாவது.

௩ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மனந்திரும்பி * பிள்ளைகளைப் போலானாலொழிய வானராட்சியத்துக்குள் பிரவேசிக்கமாட்டீர்கள். * லூ. ௰௮, ௰௭. ௰. ௧. பே. ௨, ௩.

௪ ஆகையால் இந்தப் பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவனே வானராட்சியத்தில் பெரியவனாயிருக்கிறான்.

௫ ஆகிலும் இப்படிக்கொத்த ஒரு பிள்ளையை என் நாமத்துக்காக ஏற்றுக்கொண்டால், என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்:

௬ ஆனாலும் * என்பேரில் விசுவாசிக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்கினால் அவன் கழுத்திலே ஏந்திரக்கல்லைக் கட்டி அவனைச் சமுத்திரத்தின் ஆழத்திலே அமிழ்த்தப்படுவது அவனுக்குத் தகுவிதம். * லூ. ௰௭, ௧. ௨.

௭ இடறல்களினிமித்தம் லோகத்துக்கையோ, இடறல்கள் வருகிறது அவசியம். ஆனாலும் எந்த மனுஷனால் இடறல் வருகுதோ அவனுக்கையோ.

௮ * உன் கையாகிலும் உன் காலாகிலும் உனக்கு இடறலுண்டாக்கிறதேயானால், அதுகளைத் தறித்தெறிந்துபோடு, ஏனென்றால் சப்பாணியாய் அல்லது ஊனனாய்ச் சீவனுக்குள் பிரவேசிப்பது இரண்டு கையுள்ளவனாய் அல்லது இரண்டு காலுடைத்தானாய் நித்திய அக்கினியிலே தள்ளப்படுவதைப் பார்க்க உனக்கு நலமாயிருக்கும்.
* ௫, ௨௯. ௩௰.

௯ உன் கண் உனக்கு இடறலுண்டாக்கினால். அதைப் பிடுங்கியெறிந்துபோடு, ஏனென்றால் ஒற்றைக்கண்ணனாய்ச் சீவனுக்குள் பிரவேசிப்பது இரண்டு கண்ணுடைத்தானாய் அக்கினிநரகத்தில் தள்ளப்படுவதைப் பார்க்க உனக்கு நலமாயிருக்கும்.

௰ இந்தச் சிறியரில் ஒருவனை அற்பமாய் எண்ணாதே பாருங்கோள். அதேதென்றால் * அவர்களுடைய தேவதூதர்கள் பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவின் சமுகத்தைப் பரமண்டலங்களிலே எப்போதுந் தெரிசிக்கிறார்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * சங்கீ. ௩௪, ௮.

௰௧ ஏனென்றால் * மனுஷனுடைய குமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார். * லூ. ௰௯, ௰.

௰௨ உங்களுக்கென்னமாய்க் காணுது, * ஒரு மனுஷனுக்கு நூறாடிருந்து, அதுகளில் ஒன்று சிதறிப்போ

னா

னால்; அவன் தொண்ணூற்றொன்பதையும் பர்வத
ங்களில் விட்டுப்போய், சிதறிப்போனதைத் தேடித்
தேடானோ. + லூ. யரு, ச.
யங அதைக்கண்டுபிடித்தானானால், அவன் சித
றிப்போகாத தொண்ணூற்றொன்பதைப்பார்க்கிலு
ம் அதைக்காக அதிகமாய்ச் சந்தோஷப்படுகிறானென்று உ
ங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.
யச இவ்விதமாய் இந்தச்சிறியரில் ஒருவன் கெட்டு
ப்போகிறது பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா
வுக்குச் சித்தமில்லை.
யரு உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றக்
குசெய்தானேயானால், போய், + நீயும் அவனுமாயி
ருந்து அவனைக் கடிந்துகொள். உன்னைக் கேட்டா
னாகில் உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய்
. + ங. மோ. யகூ, யஎ.
யசா கேளானேயாகில், சகல காரியமும் + இரண்
டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்பட
டுமின்னம் இரண்டொருத்தரை உன்னோடே அழைத்துக்
கொள். + ரு. மோ. யகூ, யரு.
யஎ அவர்களைக் கேட்க அசட்டையாயிருந்தானேயா
கில், சபைக்குச் சொல்லு, சபையையுங் கேட்க அசட்
டையமாயிருந்தானேயாகில், அவன் உனக்கு ஒருஅஞ்ஞா
னியைப்போலவும் ஆயக்காரனைப்போலவு
மிருப்பானாக.
யஅ உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்,
+ பூமியிலெதுகளைக் கட்டுப்படுத்துவீர்களோ, அ
துகள் வானத்திலே கட்டுப்பட்டதாயிருக்கும், பூமியி
லெதுகளைக் கட்டவிழ்ப்பீர்களோ அதுகள் வான
த்திலே கட்டவிழ்க்கப்பட்டதாயிருக்கும். + யசா, யகூ.
யகூ மீளவும் உங்களுக்குச் சொல்லுகிறேன். உங்
களில் இரண்டுபேர்தாங்கள் கேட்கப்போகிற எந்தக்
காரியத்துக்காகிலும் பூமியிலே ஒருமித்திருந்தால், அ
து பரமண்டலங்களிலிருக்கிற என் பிதாவினாலவர்க
ளுக்குண்டாகும். + க. யோ. ங, உஉ. ரு, யச.
உய அதேதென்றால் இரண்டு பேராவது மூன்று
பேராவது என் நாமத்திலே எங்கே கூடியிருக்கிறார்
களோ, அங்கே + அவர்கள் நடுவிலே இருக்கிறே
னென்றார். + உஅ, உய.

¶ மன்னிப்பதற்குணம்.

உக அப்போது பேதுரு அவரண்டையில் வந்து, ஆண்டவ
ரே, என்க்கு விரோதமாகக் குற்றஞ்செய்து வருகிற என்
சகோதரனுக்கு எத்தனைதரம் மன்னிப்பேன், ஏழுத
ரமட்டுமோ என்றான்.
உஉ யேசு அவனுக்குச் சொன்னதாவது. + ஏழுதரமட்
டுமல்ல, எழுபது விசை ஏழுதரமாகுமட்டுமென்
றுனக்குச் சொல்லுகிறேன். + லூ. யஎ, ச.
உங ஆனபடியால் வானராட்சியந்தன் பணிவி
டைக்காறரோடே கணக்குப்பார்க்க வேணுமென்றி
ருந்த ராசாவாகிய மனுஷனுக்கொப்பாயிருக்குது.
உச அவன் கணக்குப்பார்க்கத்துவக்கினபோது பத்
தினாயிரந்தாலந்து கடன்பட்ட ஒருவனவனுக்கு முன்
F
பாக

பாக்கக்கொண்டுவந்துவிடப்பட்டான்.
௨௫ ஆனாற் கொடுத்துத்தீர்க்க அவனுக்கில்லாமை
யால, அவன் எசமான் அவனையும் அவனுடைய பெண்சாதி
பிள்ளைகளையும் அவனுக்குண்டானதெல்லாத்தை
யும் விற்றுக்கடனைத்தீர்க்கச்சொல்லக்கட்டளையிட்டான்.
௨௬ அதற்கு அந்தப்பணிவிடைக்காரன் தாழ
விழுந்து: ஆண்டவனே, என்னிடத்தில் பொறு
மை, உமக்கு எல்லாத்தையுங்கொடுத்துத்தீர்ப்பேனெ
ன்று அவனைப்பணிந்துகொண்டான்.
௨௭ எசமானானவன் அந்தப்பணிவிடைக்கார
ன்பேரில் மனதுருகி, அவனை விடுதலைபண்ணி, க
டனையுமவனுக்கு மன்னித்துவிட்டான்.
௨௮ ஆனால் அந்தப்பணிவிடைக்காரன் புறப்பட்டு,
தன் பணிவிடைத்தோழரிலே தனக்கு நூறு வெள்ளிக்
காசு கடன்பட்டிருந்த ஒருவனைக் கண்டு அவனைப்
பிடித்து, தொண்டையை நெரித்து: நீ பட்டகடனை எ
னக்குக்கொடுத்துத்தீரென்றான்.
௨௯ ஆகையால் அவனுடைய பணிவிடைத்தோழன்
அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறு,
உனக்கு எல்லாத்தையுங்கொடுத்துத்தீர்ப்பேனெ
ன்று அவனை வேண்டிக்கொண்டான்.
௩௰ ஆனால் அவன் மாட்டேனென்றுபோய், அவ
ன் பட்டகடனைக்கொடுத்துத்தீர்க்குமளவும் அவனை
ச்சிறைச்சாலையிலே போட்டுவிட்டான்.
௩௧ அவன் பணிவிடைத்தோழர் அப்போ சம்ப
வித்ததைக்கண்டு, மிகுந்ததுக்கமடைந்துவந்து சம்ப
வித்ததெல்லாத்தையும் எசமானுக்கு அறிக்கைபண்
ணினார்கள்.
௩௨ அப்போ அவன் எசமான் அவனை அழைப்பித்து
அவனுக்குச்சொன்னதாவது: பொல்லாத பணிவி
டைக்காரா, நீ என்னை வேண்டிக்கொண்டதினாலே அந்
தக்கடனையெல்லாம் உனக்குமன்னித்துவிட்டேனே.
௩௩ நான் உனக்கிரங்கினபோலே நீயும் உன் பணி
விடைத்தோழனுக்கிரங்கவேண்டியதாயிருந்ததில்
லையோவென்று,
௩௪ அவனுடைய எசமான் கோபமடைந்து, * அவ
ன் தனக்குப்பட்ட கடனையெல்லாங்கொடுத்துத்தீர்க்
குமளவும் அவனை உபாதிக்கிறவர்களுக்கு ஒப்புக்
கொடுத்தான். * ௫, ௨௫. யாக ௨. ௰௩.
௩௫ * நீங்களும் உங்கள் மனப்பூர்வமாய் அவனவன்
தன் சகோதரனுக்கு அவன் தப்பிதங்களை மன்னி
யாதேபோனால், இந்தப்பிரகாரமாக என் பரமபிதா
உங்களுக்குச்செய்வாரென்றார், * ௬, ௰௫. மாற்கு
௰௧, ௨௫. ௨௬.

## ௰௯. அதிகாரம்.

¶ விவாகப்பிரிவைக்குறித்துக்
கிறிஸ்துபண்ணின போதகம்.
மாற்கு. ௰, ௧—௰௨.

அப்பாற்சம்பவித்ததென்னவெனில் யேசு இந்தவசனங்க
ளை முடித்தபின்பு கலிலேயாவைவிட்டு, யோர்தா
னுக்கு

னுக்கக்கரையான யூதேயாவின் எல்லைகளில் வந்தார்.
௨ அநேகம் ஜனங்கள் அவரைப் பின்சென்றது ; அவர்களை அவ்விடத்திலே சொஸ்தமாக்கினார்.
௩ அப்பொழுது பரிசேயர் அவரண்டைக்கு வந்து, அவரைச் சோதிக்க அவருடனே : எந்தக் காரணத்தினாலாகிலும் மனுஷன் தன் பெண்சாதியைத் தள்ளிவிடுகிறது நியாயமோவென்றார்கள்.
௪ அவர் பிரதியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது : * ஆதியிலே அவர்களை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினாரென்கிறதையும். * ௧. மோ. ௧, ௨௭.
௫ இதுநிமித்தியமாக மனுஷன் தகப்பனையுந்தாயையும் விட்டு, தன் பெண்சாதியுடனே சேர்ந்து, இருவரும் ஒரேமாம்சமாயிருப்பார்களென்றுஞ்சொல்லியிருக்கிறதை நீங்கள் வாசிக்கவில்லையோ.
* ௧. மோ. ௨, ௨௪.
௬ இவ்விதமாய் அவர்கள் இனி இருபேராயிராமல் ஒரேமாம்சமாயிருக்கிறார்கள். ஆகையால் பராபரன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக் கடவானென்றார்.
௭ அவர்கள் அவருடனே : ஆனால் * தள்ளுதல் சீட்டைக் கொடுத்து அவளைத் தள்ளிவிட மோசே கற்பித்தது ஏனென்றார்கள். * ௫. மோ. ௨௪, ௧.
௮ அவர் அவர்களுடனே : உங்கள் இருதயக்கடினத்தினிமித்தம் மோசே உங்களுக்கு உங்கள் பெண்சாதிகளைத் தள்ளிவிட உத்தாரங்கொடுத்தான். ஆனால் ஆதியிலே அப்படியிருந்ததில்லை.
௯ ஆகையால் உங்களுக்குச் சொல்லுகிறேன். * ஆனாலும் வேசித்தனம் நிமித்தமேயல்லாமல் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம்பண்ணினால் விபசாரம்பண்ணுகிறான், தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரம்பண்ணுகிறானென்றார். * ௫, ௩௨. லூ. ௰௬, ௰௮.
௰ அவருடைய சீஷர்கள் அவருடனே : பெண்சாதியைத்தொட்டு மனுஷனுடைய காரியம் இப்படியிருந்தால், விவாகம்பண்ணுகிறது நல்லதல்லவென்றார்கள்.
௰௧ அவரோவெனில் அவர்களுக்குச் சொன்னதாவது : எவர்களுக்கருளப்பட்டதோ அவர்களுக்குச்சேருமேயல்லாமல் எல்லாருக்கும் இந்த வசனம் பிடிபடாது.
௰௨ ஏனென்றால் அண்ணகர்களுண்டு, அவர்கள் அப்படியே தாயின் வயிற்றிலிருந்து பிறந்தார்கள், பின்னும் அண்ணகர்களுண்டு அவர்கள் மனுஷராலே உண்டாக்கப்பட்டார்கள், பின்னும் அண்ணகர்களுண்டு அவர்கள் * பரலோகராச்சியத்துக்காகத் தங்களைத் தாமே அரிந்தார்கள். இதுக்குப் பிடிபட வல்லவனுக்குப் பிடிபடக்கடவதென்றார். * ௧. கொ. ௭, ௩௨—௩௫.

¶ அவர் பிள்ளைகளை ஆசீர்வதித்தது.
மாற்கு. ௰, ௰௩—௰௬. லூக். ௰௮, ௰௫—௰௭.

௰௩ அப்பொழுது பிள்ளைகளை அவரண்டைக்கு
அவர்

அவர் அதுகளின்பேரிலே கைகளை வைத்து செபம்பண்ணுகிறதுக்காகக் கொண்டுவந்தார்கள். ஆனாற் சீஷர்கள் அவர்களை அதட்டினார்கள்.

௰௪ யேசுவோவென்றால்: பிள்ளைகளைக் கிட்டக் கொடுங்கோள், என்னிடத்திலே வர அதுகளைத் தடைபண்ணாதேயுங்கோள், ஏனென்றால் * வானராட்சியம் அவ்வண்ணத்தாருதாயிருக்குதென்று சொல்லி, * ௰௮. ௨—௪.

௰௫ அதுகளின்பேரிலே கைகளை வைத்து, அவ்விடம்விட்டுப் புறப்பட்டுப் போனார்.

¶ அயிசுரியவான்கள் கரையேறுகிறதரிதென்பது. மாற்கு. ௰, ௰௭—௨௭. லூ. ௰௮, ௰௮—௨௭.

௰௬ ஒருத்தன் சேர்ந்துவந்து, அவருடனே: நல்லபோதகரே, * நித்திய சீவனை அடைகிறதுக்கு நான் நன்மையைச் செய்யவேணுமென்றான். * லூ. ௰, ௨௫.

௰௭ அவரோ அவனுடனே: நீ என்னை நல்லவனென்பானேன், பராபரன் ஒருவர் தவிர நல்லவனொருவனுமில்லையே. நீ * சீவனுக்குள் பிரவேசிக்க மனதாயிருந்தாயேயானால், கற்பனைகளைக் கைக்கொள்ளென்றார். * லூ. ௰, ௨௬—௨௮.

௰௮ அவன் அவருடனே: எதுகளையென்றான். அதற்கு யேசு: கொலைசெய்யாயாக, விபசாரம்பண்ணாயாக, களவுசெய்யாயாக, பொய்ச்சாட்சி சொல்லாயாக,

௰௯ உன் தகப்பனையுந் தாயையுங் கனம்பண்ணு. பின்னை: உன் கூடுத்தவனை * உன்னைப்போலச் சினேகிப்பாயாகவென்பதுகளைத்தானென்றார். * ௩. மோ. ௰௯, ௰௮.

௨௰ அந்தவாலிபகாறன் அவருடனே: இதெல்லாத்தையும் என் சிறுவயது துவக்கிக் கைக்கொண்டிருக்கிறேன், இன்னமென்னிடத்திலே தாழ்ச்சியென்னவென்றான்.

௨௧ யேசு அவனுடனே: நீ உத்தமனாயிருக்கவேணுமென்றால், போய், * உனக்குண்டானதுகளை விற்று, தரித்திரருக்குக் கொடு, அப்போ பரமண்டலத்தில் உனக்குப் பொக்கிஷமிருக்கும், நீயோ வெளிவந்து என்னைப் பின்செல்லென்றார். * ௬, ௨௰. லூ. ௰௨, ௩௩. ௧. தீமோ. ௬, ௰௮. ௰௯.

௨௨ ஆனால் வாலிபகாறன் இந்தவார்த்தையைக் கேட்டபோது, துக்கமடைந்து போய்விட்டான், ஏனெனில் வெகு ஆஸ்தியுள்ளவனாயிருந்தான்.

௨௩ அப்போ யேசு தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னதாவது: அயிசுரியவான் வானராட்சியத்துக்குள் பிரவேசிப்பதரிதென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்.

௨௪ திரும்பவும் உங்களுக்குச் சொல்லுகிறேன், அயிசுரியவான் பராபரனுடைய ராட்சியத்துக்குள் பிரவேசிப்பதைப் பார்க்க ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைவதெளிதாயிருக்குமென்றார்.

௨௫ அவர் சீஷர்கள் இதைக் கேட்டு, மிகவும் வி

ஆவி

ஸ்தீந்து: அப்படியானால், ஆர் ரெட்சிக்கப்படக்கூடுமென்றார்கள்.

௨௬ இயேசுவானவர் அவர்களை நோக்கி, அவர்களுடனே: மனுஷராலே இது கூடாததாயிருக்கும், ஆனால் * பராபரனாலே எல்லாங்கூடுகிறதாயிருக்குமென்றார். * யோபு. ௪௨, ௨. எரே. ௩௨, ௰௭. லூ. ௧, ௩௭.

¶ கிறிஸ்துநிமித்தியமாக எல்லாத்தையும் விட்டுவிட்டவனுக்குவரும்பலன். மாற்கு. ௰, ௨௮—௩௧. லூ. ௰௮, ௨௮—௩௰.

௨௭ அப்போ பேதுரு அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இதோ நாங்கள் எல்லாத்தையும் விட்டு உம்மைப் பின்சென்றோம், ஆனபடியால் எங்களுக்கென்ன வருமென்றான்.

௨௮ ஆனால் இயேசு அவர்களுக்குச் சொன்னதாவது: மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், மறு சென்மத்திலே மனுஷனுடைய குமாரன் தம்முடைய மகிமையாசனத்தின்மேலிருக்கும்போது, என்னைப் பின்சென்ற நீங்களும் * இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களை நியாயந்தீர்க்கிறவர்களாகப் பன்னிரண்டு ஆசனங்களின்மேலிருப்பீர்கள். * லூ. ௨௨, ௩௰.

௨௯ * என் நாமத்தின்நிமித்தியமாக வீட்டையாகிலும், சகோதரரையாகிலும், சகோதரிகளையாகிலும், தகப்பனையாகிலும், தாயையாகிலும், பெண்சாதியையாகிலும், பிள்ளைகளையாகிலும், நிலங்களையாகிலும் விட்டவனெவனும் நூறத்தனையாய் அடைந்து நித்தியசீவனையுஞ் சுதந்தரித்துக்கொள்ளுவான். * ௰, ௩௭.

௩௰ ஆகிலும் * முந்தினோர் அனேகர் பிந்தினோருமாய், பிந்தினோர் முந்தினோருமாயிருப்பார்களென்றார். * ௨௰, ௰௬. லூ. ௰௩, ௩௰.

## ௨௰. அதிகாரம்.

¶ திராட்சத்தோட்ட வேலையாளர்களுவமை.

அதேதென்றால் வானராட்சியம் வீட்டெசமானாகிய மனுஷனுக்கொப்பாயிருக்குது, அவன் தன் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாளர்களைக் கூலிபொருந்தியழைக்க அதிகாலமே புறப்பட்டான்.

௨ வேலையாளர்களுடனே நாளொன்றுக்கொரு பணம் பொருந்திக்கொண்டு, அவர்களைத் தன் திராட்சத்தோட்டத்துக்கனுப்பினான்.

௩ மூன்றாம்மணிவேளையிலும் புறப்பட்டு, கடைத்தெருவிலே வீணராய் நிற்கிற வேறே சிலரைக் கண்டான்.

௪ அவர்களுடனே: நீங்களும் திராட்சத்தோட்டத்திலே போங்கோள், ஞாயமானபடி உங்களுக்குத் தருவேனென்றான்.

௫ அவர்களும் போனார்கள். திரும்பவும் ஆறாம் ஒன்பதாம்மணிவேளையிலும் புறப்பட்டு, அவ்விதமாய்

செய

சடுசெய்தான்.

௬ பதினோராம் மணி வேளையிலும் அவன் புறப்பட்டு, வீணராய் நின்ற மற்றவர்களைக் கண்டு, அவர்களுடனே: நீங்கள் பகல் முழுதும் இங்கே வீணராய் நிற்கிறதென்னவென்றான்.

௭ அவர்கள் அவனுடனே: எங்களை ஒருவரும் வேலைகொண்டதில்லையென்றார்கள். அவன் அவர்களுடனே: நீங்களும் திராட்சத்தோட்டத்திலே போங்கள், நியாயமானபடி வாங்கிக்கொள்வீர்களென்றான்.

௮ அந்தப்படி மாலை நேரமானபோது திராட்சத்தோட்டத்து எசமான் தன் காரியக்காரனுடனே: நீ வேலையாளரை அழைத்து, பிந்தினவர்கள் தொடங்கி முந்தினவர்கள் மட்டுக்கும் அவர்களுக்குக் கூலியைக் கொடுவென்றான்.

௯ அப்படியே பதினோராம் மணி வேளையிலே வேலைகொள்ளப்பட்டவர்கள் வந்து, ஒவ்வொரு பணத்தை வாங்கினார்கள்.

௰ பிறகு முந்தினவர்கள் வந்து, தாங்கள் அதிகம் பெறுவோமென்றெண்ணியிருந்து, அவர்களும் ஒவ்வொரு பணத்தை வாங்கினார்கள்.

௧௧ வாங்கிக்கொண்டு எசமானுக்கு விரோதமாய் முறுமுறுத்து.

௧௨ பிந்தினவர்கள் ஒரே மணி நேரம் வேலை செய்தார்கள், நீரோ அவர்களைப் பகலின் பாரத்தையும் வெயிலையும் சுமந்த எங்களுக்குச் சரியாக்கினீரென்றார்கள்.

௧௩ அவன் அதற்குப் பிரதியுத்தரமாக அவர்களிலொருத்தனுக்குச் சொன்னதாவது: சிநேகிதனே, உனக்கு நான் அநியாயஞ் செய்யவில்லை, நீ என்னுடனே ஒரு பணத்துக்குச் சம்மதித்துக்கொண்டதில்லையோ.

௧௪ உன்னுடையதை நீ வாங்கிக்கொண்டு போய்விடு. உனக்குக் கொடுத்ததுபோலப் பிந்தினவனுக்குங் கொடுக்க எனக்கு மனதுண்டு,

௧௫ அல்லது நான் என்னுடையதைக்கொண்டு என் மனதின்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையோ, அல்லவென்றால் நான் நல்லவனாகையால் நீ வன்கண்ணனாயிருக்கிறாயோ என்றான்.

௧௬ இவ்விதமாகப் பிந்தினோர் முந்தினோராய் முந்தினோர் பிந்தினோராயிருப்பார்கள், அழைக்கப்பட்டவர்கள் அநேகம், தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ கொஞ்சமென்றார். ✚ ௨௨, ௧௪.

¶ தாம் பட்டப்போறபாடுகளைக் கிறிஸ்து மறுபடியும் முன்னறிவித்தது.
மாற்கு ௰, ௩௨—௩௪. லூக். ௧௮. ௩௧—௩௪.

௧௭ பின்பு இயேசு எருசலேமுக்குப் போகிறபோது வழியிலே பன்னிரண்டு சீஷரையும் தனியே அழைத்து அவர்களுக்குச் சொன்னதாவது:

௧௮ இதோ எருசலேமுக்குப் போகிறோம், மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர்களுக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்

அவர்களவரைமரணத்துக்குள்ளாகத்தீர்த்து, •
ம௯. ௨௧. ௰௭, ௰௨. ௨௨. ௨௫.

௰௯ அவரைப்பரியாசம்பண்ணுகிறதுக்கும் வாரினா
லடிக்கிறதுக்குஞ்சிலுவையிலறைகிறதுக்கும்
பிறசாதியாருக்கொப்புக்கொடுப்பார்கள், மூன்
றாநாளிலேயுயிர்த்தெழுந்திருப்பாரென்றார்.

¶ செபெதேயுவின்குமாரருடைய விண்ணப்பம். மாற்கு. ௰, ௩௫—௪௫.

௨௰ அப்பொழுது செபெதேயுவின் குமாரருடைய தாய
தன்குமாரரோடேகூட அவரண்டையிலே வந்துபணிந்து,
அவரிடத்திலொருவிண்ணப்பஞ்செய்தாள்.
௨௧ அவர் அவளுடனே: உனக்கென்னவேணுமெ
ன்றார். அவள் அவருடனே: நீர் என்னிரண்டுகுமா
ரர் உம்முடைய ராச்சியத்திலே ஒருத்தன் உமது வலதுபாரிச
மாகவும் ஒருத்தன் உமது இடதுபாரிசமாகவும் உட்கா
ர்ந்திருக்க அருளிச்செய்யுமென்றாள்.
௨௨ இயேசு பிரதியுத்தரமாக: நீங்கள் கே
ட்கிறதின்னதென்று அறியீர்கள், • நான் குடிக்கப்போ
றபாத்திரத்தை நீங்கள் குடிக்கவும், நான் பெறுகிற ஸ்
நானத்தை நீங்கள் பெறவுங்கூடுமோவென்றார். அ
வர்கள் அவருக்கு: கூடுமென்றார்கள். • யோவா.
௰௮, ௰௧.
௨௩ அப்பொழுது அவர் அவர்களுடனே: என் பாத்திர
த்தைக்குடிப்பீர்கள், நான் பெறுகிற ஸ்நானத்
தையும் பெறுவீர்கள். ஆனாலும் என் வலதுபாரிசத்தி
லும் என்னிடதுபாரிசத்திலும் உட்கார்ந்திருக்கத்
தக்கதை அளிக்கிறது என்னுதல்ல, என் பிதாவினாலெவர்
களுக்கு ஆயத்தம்பண்ணப்பட்டதோ அவர்களுக்குக்
கொடுக்கப்படுமென்றார்.
௨௪ மற்றப்பத்துப்பேரும் அதைக்கேட்டு, அந்த இர
ண்டு சகோதரர்பேரிலே கோபங்கொண்டார்கள்.
௨௫ இயேசு அவர்களைக்கிட்டவழைத்துச்சொ
ன்னதாவது: • சாதிகளுடைய தலைவர் அவர்களையா
ளுகிறார்களென்றும், பெரியவர்கள் அவர்கள் பேரி
லே அதிகாரிகளாயிருக்கிறார்களென்றும் நீங்கள் அறி
வீர்கள். • லூ. ௨௨, ௨௫—௨௭.
௨௬ உங்களுக்குள்ளே அப்படிவேண்டாம், உங்
களிலொருவன் பெரியவனாயிருக்க மனதிருந்
தால், உங்கள் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.
௨௭ • உங்களிலொருவன் முதல்வனாயிருக்கவே
ணுமென்றிருந்தால், உங்கள் பணிவிடைக்காரனாயிரு
க்கக்கடவன். • ௨௩, ௰௧.
௨௮ அந்தப்படியே மனுஷனுடைய குமாரன் ஊ
ழியஞ்செய்விக்கக்கொள்ளவராமல், ஊழியஞ்செ
ய்யவும் தமதுசீவனை • • அநேகரை மீட்கும்பொ
ருளாகத்தரவும் வந்தாரென்றார். • பிலி. ௨, ௭. • •
ஏசா. ௫, ௰௫. ௧. தீமோ. ௨, ௬. ௧. யோ. ௨, ௨.

¶ அவர் இரண்டு குருடருக்குப் பார்வை கொடுத்தது.

௨௯ • அவர்கள் எரிகோவிலிருந்து புறப்படுகை
யில்

யில், வெகு கும்பு அவரைப் பின்சென்றது. * மாற்கு
௰, ௬. லூக். ௰௮, ௩௫.
௩௰ இரண்டு குருடர் வழியருகே உட்கார்ந்திருந்து, யேசு வழியே போகிறாரென்று கேட்டு: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்குமென்று கூப்பிட்டார்கள்.
௩௧ அமைந்திருக்கக் கும்பு அவர்களை அதட்டினது, அவர்களோ அதிகமாய்: ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்குமென்று கூப்பிட்டார்கள்.
௩௨ யேசு தரித்து நின்று, அவர்களை அழைத்து: நான் உங்களுக்கென்ன செய்யவேண்டுமென்றிருக்கிறீர்களென்றார்.
௩௩ அவர்கள் அவருடனே: ஆண்டவரே, எங்கள் கண்கள் திறக்கப்படவேண்டுமென்றிருக்கிறோமென்றார்கள்.
௩௪ யேசு மனதுருகி, அவர்கள் கண்களைத் தொட்டார். உடனே அவர்கள் கண்கள் பார்வையடைந்தது. அவர்கள் அவரைப் பின்சென்றார்கள்.

## ௨௧. அதிகாரம்.

¶ கிறிஸ்து யெருசலேமுக்குள் பிரவேசம்பண்ணினது. மாற்கு. ௰௧, ௧—௰. லூக். ௰௯, ௨௯—௪௪. யோவா. ௰௨, ௰௨—௰௯.

அவர்கள் யெருசலேமுக்குச் சமீபமாகச் சேர்ந்து, ஒலிவமலைக்கருகான பெத்பகேயக்கு வந்த போது, யேசு இரண்டு சீஷர்களை அனுப்பி அவர்களுக்குச் சொன்னதாவது:
௨ உங்களுக்கெதிரேயிருக்கிற கிராமத்திலே போங்கோள், அங்கே கட்டியிருக்கிற ஒரு கழுதையையும் அதனோடேகூட ஒரு குட்டியையும் உடனே காண்பீர்கள். அதுகளை அவிழ்த்து எனக்குக் கொண்டுவாருங்கோள்.
௩ ஒருவன் உங்களுக்கேதாகிலுஞ் சொன்னால், அப்போ: அதுகள் ஆண்டவருக்குத் தேவையென்று சொல்லுங்கோள். உடனே அதுகளை அனுப்புவானென்றார்.
௪ ஆனால் தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறுகிறதற்கு இதெல்லாஞ் சம்பவித்தது.
௫ அவன் உரைத்ததாவது: * சீயோன் குமாரத்தியுடனே: இதோ உன் ராசா யெகுனவருமாய், கழுதையின் மேலும் நுகத்தடிக்குக் கீழ்ப்பட்ட கழுதையினுடைய குட்டியின் மேலும் ஏறியிருக்கிறவருமாய் உன்னண்டைக்கு வருகிறாரென்று சொல்லுங்கோளென்கிறது. * எசா. ௬௨, ௰௧. சகரி. ௯, ௯.
௬ சீஷர்கள் போய், யேசு தங்களுக்குக் கற்பித்தபடி செய்து,
௭ கழுதையையுங் குட்டியையுங் கொண்டுவந்து, அதுகள் மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, அவரை அதுகள் மேல் ஏற்றினார்கள்.

அ

௮ ஜனத்திரளாகும் பலர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள், வேறே சிலர் மரங்களின் கிளைகளைத் தறித்து, வழியிலே தெளித்தார்கள்.
௯ முன்பின்போற வாற கும்புகளோவெனில்: தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னா, * கர்த்தர் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், உன்னதமானதுகளில் ஓசியன்னாவென்று கூப்பிட்டார்கள்.*

சங்கீ. ௱௰௮, ௨௫. ௨௬:

௰ அவர் யெருசலேமுக்குள் பிரவேசிக்கும்போது இவன் ஆரென்று பட்டணமெல்லாம் அசைக்கப்பட்டது.
௰௧ சனங்களோவென்றால்: இவர் கலிலேயதேசத்தின் நாசரேத்தூராராகிய யேசு தீர்க்கதெரிசியாயிருக்கிறாரென்றார்கள்.

¶ அவர் தேவாலயத்திலிருந்து விற்பாரையும் கொள்வாரையும் துரத்தினது.
மாற்கு. ௰௧; ௰௧. ௰௫. ௰௭.
லூக். ௰௯, ௪௫.

௰௨ யேசுபராபரனுடைய தேவாலயத்துக்குள் பிறவேசித்து, * தேவாலயத்திலே விற்கிறவர்களும் கொள்ளுகிறவர்களுமாயிருந்த யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காறருடைய மேசைப்பலகைகளையும் புறாவிற்கிறவர்களின் ஆசனங்களையுங் கவிழ்த்துப்போட்டு, * யோவ. ௨, ௰௩—௰௬.
௰௩ அவர்களுடனே: * நம்முடைய வீடு செபத்தின் வீடென்னப்படுமென்றெழுதியிருக்குது, ஆனால் நீங்கள் அதை ** கள்ளர் கெபியாக்கினீர்களென்றார்.
* யெசா. ௫௬, ௭. ** யெரே. ௭, ௰௧.
௰௪ அப்போது குருடருஞ் சப்பாணிகளுந் தேவாலயத்திலே அவரண்டை வந்தார்கள். அவர்களைக் குணமாக்கினார்.

¶ பிள்ளைகள் அவருக்கு ஓசியன்னாவென்று கூப்பிட்டது.

௰௫ ஆனால் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் அவர் செய்த அதிசெயங்களையும். தாவீதின் குமாரனுக்கு ஓசியன்னாவென்று தேவாலயத்திலே கூப்பிடுகிற பிள்ளைகளையுங்கண்டு, காங்கலடைந்து.
௰௬ அவருடனே: இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோவென்றார்கள். யேசு அவர்களுடனே: ஆம், * குழந்தைகள் வாயினாலும் பாலகர் வாயினாலுந் தின் உண்டுபண்ணினீரென்கிறதை நீங்கள் ஒருக்காலும் வாசித்ததிலையோவென்றார். * சங்கீ. ௮, ௩.
௰௭ அவர்களைவிட்டு, பட்டணத்திலிருந்து புறப்பட்டு, பெத்தானியாவுக்குப்போய் அங்கே தங்கினார்.

¶ அவர் கனிகொடாத அத்திமரத்தைச் சபித்தது.
மாற்கு ௰௧, ௰௨—௰௪. ௨௰—௨௪.

௰௮ காலமே அவர் பட்டணத்துக்குத் திரும்புகையில்


அவ

அவர்பசியாயிருந்து.

௰௯ வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதினண்டை வந்து, அதிலே இலைகளேயொழியப் பின் ஒன்றையுங்காணாமல், அதை நோக்கி: இனிமேல் உன்னிடத்திலென்றைக்குங் கனியுண்டாகாதிருக்கக்கடவதென்றார். உடனே அத்திமரம் பட்டுப்போச்சுது.

௨௰ சீஷர்கள் அதைக்கண்டு, அத்திமரம் எத்தனை சீக்கிரமாய்ப்பட்டுப்போச்சுதென்று ஆச்சரியப்பட்டார்கள்.

௨௧ ஆனால் யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் * சந்தேகப்படாமல், ** விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், நீங்கள் அத்திமரத்துக்குச் செய்வதுமல்லாமல், இந்த பர்வதத்தைக்கண்டு: நீ எழும்பி, சமுத்திரத்திலே விழுவென்று சொன்னாலும் ஆகும். * யாக். ௧, ௬. ** ௰௭, ௨௰. லூ. ௰௭, ௬.

௨௨ நீங்கள் * ஜெபத்திலே எதைக் கேட்டாலும் விசுவாசித்தீர்களானால், யாவையும் பெறுவீர்களென்றார். * ௭, ௭. யோவா. ௰௪, ௰௩.

¶ தம்முடைய அதிகாரத்தைக்குறித்துத் தம்மைக்கேட்டவர்களுக்கவர் சொன்ன கனடிய பாவிசேஷங்கள். மாற். ௰௧, ௨௭—௩௩. லூ. ௨௰, ௧—௮.

௨௩ அவர் தேவாலயத்திலே வந்தபோது பிரதான ஆசாரியர்களும் ஜனத்தின் மூப்பரும் போதகம் பண்ணுகையில் அவரண்டைக்கு வந்து: எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறீர், ஆர் உமக்கிந்த அதிகாரத்தைக் கொடுத்தாரென்றார்கள்.

௨௪ ஆனால் யேசு பிரத்தியுத்தாரமாக அவர்களுடனே: நானும் உங்களை ஒரே விசேஷத்தைக் கேட்பேன், அதை எனக்குச் சொன்னீர்களானால், நானும் உங்களுக்கு, எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்று சொல்லுவேன்.

௨௫ யோவானுடைய ஞானஸ்நானம் எத்தினாலே உண்டாயிருந்தது, பரமண்டலத்தினாலுண்டாயிருந்ததோ, மனுஷராலுண்டாயிருந்ததோவென்றார். அவர்கள் தங்களுக்குள்ளே ஆலோசனைப்பட்டு, பரமண்டலத்தினாலேயென்றால், நம்முடனே: பின்னை ஏன் அவனை விசுவாசியாதே போனீர்களென்பார்.

௨௬ மனுஷராலேயென்றோமாகில், ஜனத்துக்குப் பயப்படுகிறோம், ஏனென்றால் எல்லாரும் யோவானை * தீர்க்கதரிசியென்றெண்ணுகிறார்களென்று சொல்லி, * ௰௪, ௫.

௨௭ யேசுவுக்குப் பிரத்தியுத்தாரமாக: அறியோமென்றார்கள். ஆகையால் அவரவர்களுக்குச் சொன்னதாவது: நானும் எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேன்.

௨௮ ஆனால் உங்களுக்கென்னமாய்க் காணுது, ஒரு மனுஷனுக்கிரண்டு குமாரர் இருந்தார்கள், அவன் முந்

தின

தீனவனண்டைக்கு வந்து: மகனே, நீ போய், இன்றைக்கு என் திராட்சத்தோட்டத்திலே வேலைசெய் என்றான்.

உகூ அவனுக்குப் பிரதியுத்தாரமாக: மாட்டேன் என்றான், ஆனாலும் பிற்பாடு மனஸ்தாபப்பட்டுப் போனான்.

ஙய அவன் இரண்டாங்குமாரனண்டைக்கு வந்து, அப்படியே சொன்னான். அதற்கு அவன் பிரதியுத்தாரமாக: ஐயா, நான் போகிறேன் என்றுசொல்லியும் போகவில்லை.

ஙக இவ்விரண்டுபேர்களில் தகப்பனுடைய சித்தத்தின்படி செய்தவன் எவன் என்றார். அவர்கள்: முந்தினவன் என்றார்கள். அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முந்தி தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்கிறார்கள். * லூக். எ, உகூ. ஙய.

ஙஉ அதெப்படியென்றால், யோவான் நீதியின் வழியிலே உங்களிடத்தில் வந்திருந்தும், நீங்கள் அவனை விசுவாசிக்கவில்லை, ஆயக்காரரும் வேசிகளுமோ அவனை விசுவாசித்தார்கள், அதை நீங்கள் கண்டும், பிற்பாடு அவனை விசுவாசிக்கும்படிக்கு மனஸ்தாபப்படாதே போனீர்கள்.

ஙங வேறொரு உவமையைக் கேளுங்கள். * வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனிருந்தான், அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை நாட்டி அதைச் சுற்றிலும் வேலியடைத்து, அதில் ஆலை நாட்டி, கோபுரத்தையும் கட்டி, அதைத் தோட்டக்காரர் வசமாய் விட்டு, புறதேசத்துக்குப் போனான். மாற். யஉ, க—யஉ. லூ, உய, கூ—யகூ.

ஙச கனிகாலம் சமீபித்தபோது, அதின் கனிகளை வாங்கும்படிக்கு, தன் ஊழியக்காரரைத் தோட்டக்காரரிடத்தில் அனுப்பினான்.

ஙரு அப்பொழுது தோட்டக்காரர் அவன் ஊழியக்காரரைப் பிடித்து, ஒருவனை அடித்தார்கள், ஒருவனை வெட்டிப்போட்டார்கள், பின்னொருவனைக் கல்லெறிந்து கொன்றார்கள்.

ஙசா மறுபடியும் முந்தினவர்களிலும் அதிகமான வேறே ஊழியக்காரரை அனுப்பினான், * அவர்களையும் அப்படியே செய்தார்கள். * அப்போ, எ. ரு. க. ருஉ.

ஙஎ கடைசியாக, தன் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று, தன் குமாரனை அவர்களிடத்தில் அனுப்பினான்.

ஙஅ தோட்டக்காரர் குமாரனைக் கண்டபோது: இவன் சுதந்தரவாளியாயிருக்கிறான், இவனைக் கொன்று, இவன் சுதந்தரத்தைக் கட்டிக்கொள்ளுவோம் வாருங்கள் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டு, * உசு, ஙச.

ஙகூ அவனைப் பிடித்து, திராட்சத்தோட்டத்துக்குப் புறம்பே தள்ளிக் கொன்றுபோட்டார்கள்.

சய அப்படியிருக்க, திராட்சத்தோட்டத்துக்கு எஜமான் வரும்போது அந்தத் தோட்டக்காரரை என்னசெய்

வான்

வானென்றார்.

௪௧ அவர்கள் அவருடனே: அந்தப்பொல்லாதவர்களைத் திங்கானப்பிரகாரமாய் அழித்துப்போட்டு, ஏற்றகாலங்களிலே தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே தோட்டக்காரர்வசமாய்த் திராட்சத்தோட்டத்தை விடுவானென்றார்கள்.

௪௨ யேசு அவர்களுக்குச் சொன்னதாவது, * வீடு கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே கோடிக்குத் தலையானகல்லாச்சுது, அது கர்த்தராலே ஆச்சுது, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கிறதென்று நீங்கள் வேதாகமங்களிலே ஒருக்காலும் வாசித்ததில்லையோ. * சங்கீ. ௱௰௮, ௨௨. ௨௩. அப். ௪, ௰௧.

௪௩ ஆகையால் உங்களுக்குச் சொல்லுகிறேன், பராபரனுடைய ராச்சியம் * உங்களை விட்டு எடுக்கப்பட்டு, அதின்கனிகளைத் தருகிற சாதிக்குக் கொடுக்கப்படும். * ௮, ௰௨. அப், ௰௩, ௪௬.

௪௪ இந்தக்கல்லின்மேலே விழுகிறவன் நொறுங்கிப்போவான், இது எவன்மேலே விழுமோ அவனை நசுங்கடிக்குமென்றார். * யேசா. ௮, ௰௪. ௰௫. தானி. ௨, ௩௪.

௪௫ பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் அவருடைய உவமைகளைக் கேட்டபோது, தங்களைக் குறித்துச் சொல்லுகிறாரென்றறிந்தார்கள்.

௪௬ அவரைப் பிடிக்கப்பார்த்து, சனங்களுக்குப் பயந்தார்கள், ஏனெனில் அவர்கள் அவரைத் தீர்க்கதரிசியென்றெண்ணினார்கள்.

## ௨௨. அதிகாரம்.

### ¶ ராசாவின்கலியாண உவமை.

யேசு மறுஉத்தரவு கொடுத்து, திரும்ப அவர்களுக்குச் சொன்னதாவது:

௨ * வானராச்சியந்தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ராசாவாகிய மனுஷனுக்கொப்பாயிருக்குது. * யேசா. ௨௫, ௬. லூக். ௰௪, ௰௬—௨௪.

௩ அவன் அழைக்கப்பட்டவர்களைக் கலியாணத்துக்கு வரச்சொல்ல அவன் தன் ஊழியக்காரரை அனுப்பினான், ஆனால் அவர்கள் வரமாட்டோமென்றார்கள்.

௪ மறுபடியும் அவன் வேறே ஊழியக்காரரை அனுப்பி, அழைக்கப்பட்டவர்களுக்கு: இதோ, * என் விருந்தை ஆயித்தம்பண்ணினேன், என் எருதுகளுங் கொழுத்த செந்துக்களும் அடிக்கப்பட்டு, எல்லாம் ஆயித்தமாச்சுது. கலியாணத்துக்கு வாருங்களென்று சொல்லுங்களென்றான். * வாக்கி. ௯, ௨—௫.

௫ ஆனால் அவர்கள் அசட்டைபண்ணி, ஒருவன் தன் வயலுக்கும் மற்றொருவன் தன் வியாபாரத்துக்கும் போய்விட்டார்கள்.

௬ மற்றவர்களோ அவன் ஊழியக்காரரைப் பிடித்து நிந்தித்து, கொன்றுபோட்டார்கள்.

௭ ராசா அதைக்கேட்டபோதோ வெகுகோபம்

கொ

டைநது, தன சேனைகளை அனுபபி, அந்த கொலை பாதகரை அழிதது, அவர்கள பட்டணததைச சுட்டுப போடடான.

௮ அபபோது தன ஊழியககாரருடனே: கலியாண மோ ஆயததமாயிருககுது, அழைககபபட்டவர்க ளோ வெனறால அதுககுப பாததிரவானகளாயிருந்ததி லலை.

௯ ஆனபடியால நீஙகள வழிபபிரிவுகளிலே போய, அகபபட்டபாவரையுங கலியாணததுககு அழையுங்கோளெனறான.

௰ அந்த ஊழியககாரர் வழிகளிலேபுறபபட்டுப போய, அகபபட்டபொலலாரையும நலலாரையு ஙகூட்டிவந்தார்கள, கலியாணமபந்தியிருககிறவர்க ளாலநிறைந்தது.

௰௧ அப்பொழுது பந்தியிருககிறவர்களைப்பார்ககிறதது ககுராசாவுளளேப்பிரவேசிததபோது, * கலியாணவஸ திரந்தரிககாதிருந்த மனுஷனை அஙகே கண்டு, * ரோ. ௰௩, ௰௪. ௨. கொ. ௫, ௩. எபே. ௩, ௰௮.

௰௨ அவனுடனே: சிநேகிதனே, கலியாணவஸதி ரமிலலாதவனாயிஙகே எபபடி உளபிரவேசித தாயெனறான. அவனுககோவெனறால வாயடைததுப போசசுது.

௰௩ அபபோது ராசா பணிவிடைககாரருடனே: அவ னைக கைகளையுங காலகளையுஙகட்டி, * அவனை எடுத துபபோய, எலலாததுககும புறமபான இருளிலே போடுஙகோள, அஙகே அழுகையும பலககடிபபு முண்டாயிருககுமெனறான. * ௮, ௰௨.

௰௪ ஏதெனறால * அழைககபபட்டவர்கள அநே கம, தெரிந்துகொளளபபட்டவர்களோ கொஞச மெனறார். * ௨௰, ௰௬.

¶ ராயனுடையவரிககாகசசொனனது.
தததரவு. மாறகு. ௰௨, ௰௩—௰௭.
லூக. ௨௰, ௨௰—௨௬.

௰௫ அபபோது பரிசேயர்போய, வசனததிலே அ வரைசசிககபபணணயோசிசனைபணணி,

௰௬ தஙகள சீஷர்களை ஏரோதேயின மனுஷ ரோடேகூட அவரண்டைககு அனுபபினார்கள. வே தகனே: போதகரே, நீர்சததியமுளளவராயிருந்து, பராபரனுடைய வழியைசசததியமாயபபோதிககிறீ ரெனறும, எவனைககுறிததும உமககுககவலையிலலை யெனறும அறிவோம, ஏதெனறால நீர்மனுஷர்மு கமாயப்பார்ககிறதிலலை:

௰௭ ஆகையால உமககெபபடித தோணுது, ராயனு ககுவரிககொடுககுறதுநியாயமோ அலலவோ வெனறெங களுககுசசொலலுமெனறார்கள.

௰௮ அபபோ யேசு அவர்களதுறகுணததை அறிந்து, மாயககாரரே, நீஙகளெனனைசசோதிககிறதேதது:

௰௯ வரிககாசைஎனககுககாட்டுஙகோளெனறார் அவர்கள ஒருபணததை அவருககுககொண்டுவந்தார் கள.

௨௰ அபபோ அவர்களுடனே: இந்தச சுரூபமும

மே

மேலெழுத்தும் யாருடையதென்றார்.

௨௧ அவருடனே ராயனுடையதென்றார்கள். அப்பொழுதவர்களுடனே: ஆகையால் ராயனுடையதை ராயனுக்கும் பராபரனுடையதைப் பராபரனுக்குஞ் செலுத்துங்கோளென்றார். * ரோ. ௰௩, ௭.

௨௨ அவர்களதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு அவரைவிட்டுப் போய்விட்டார்கள்.

¶ அவர் மரித்தோருடைய உயிர்த்தெழுந்தலுண்டென்றுறுதிப்படுத்தது.

மாற்கு. ௰௨, ௰௮—௨௭. லூக். ௨௰, ௨௭—௩௰.

௨௩ * உயிர்த்தெழுந்தலில்லையென்கிற சதுசேயர் அன்னாளிலவரண்டை வந்து, கேட்டதாவது. * அப். ௨௩, ௮.

௨௪ போதகரே, * யாதொருத்தன் சந்தானமில்லாமல் செத்துப்போனால், அவனுடைய சகோதரன் அவனுடைய பெண்சாதியை விவாகம்பண்ணி; தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேணுமென்று மோசே சொன்னாரே. * ௫, மோ. ௨௫. ௫,

௨௫ இப்போது எங்களிடத்திலேழு சகோதரரிருந்தார்கள்; முந்தினவன் விவாகம்பண்ணி இறந்து, தனக்குச் சந்தானமில்லாததினாலே, தன் பெண்சாதியைத் தன் சகோதரனுக்குப் பின்வைத்தான்.

௨௬ ரெண்டாம் மூன்றாம் பேருமேழாம் பேர்மட்டுமப்படியேதானே.

௨௭ எல்லாருக்கும் பிறபாடு பெண்சாதியுஞ் செத்துப்போனாள்.

௨௮ இப்போது உயிர்த்தெழுந்தலிலே அவ்வேழுபேரிலே யாருடைய பெண்சாதியாயிருப்பாள். அவர்களவளெல்லாருமவளைப் படைத்திருந்தார்களென்றார்கள்.

௨௯ ஆனாலேயேசு பிறத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் வேதவெழுத்துகளையும் பராபரனுடைய பெலத்தையுமறியாமல், மோசம்போகிறீர்கள்.

௩௰ அதேனென்றால் * உயிர்த்தெழுந்தலிலே கொள்வினையுங்கொடுப்பினையுமில்லாமல் பரமண்டலத்திலே பராபரனுடைய தூதரைப்போலிருக்கிறார்கள்.

௩௧ ஆனால் மரித்தோருடைய உயிர்த்தெழுந்தலைக் குறித்து * பராபரனாலே உங்களுக்குரைக்கப்பட்டதை நீங்கள் வாசிக்கவில்லையா. ௨. * மோ. ௩, ௬.

௩௨ நாம் ஆபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிறோமென்றாரே. பராபரன் மரித்தோருடைய பராபரனாயிராமல். சீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கிறாரென்றார்.

௩௩ கும்புகளிதைக் கேட்டு, * அவருடைய போதகத்துக்காக விஸ்மயித்துக்கொண்டார்கள். ௭, ௨௮.

¶ பிறதான கற்பினையேதென்பது.

மாற்கு. ௰௨, ௨௮—௩௪.

௩௪ ஆனாலவர் சதுசேயருடைய வாயையடைத்தாரே.

தாரென்று பரிசேயர் கேட்டுக் கூட்டமாய்க் கூடினார்கள்.
௩௫ அவர்களில் நியாயசாஸ்திரி ஒருவன் அவரைச் சோதித்து.
௩௬ போதகரே, நியாயப்பிரமாணத்திலே எந்தக் கற்பனை பெரியதென்று கேட்டான்.
௩௭ யேசு அவனுக்குச் சொன்னதாவது: * உன் தேவனாகிய கர்த்தரிடத்திலே உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமாவோடும் உன் முழுக் கருத்தோடும் அன்புகூருவாயாக. ரு. மோ. ௬, ௫.
௩௮ இது முதலாம் பெரிய கற்பனையாயிருக்குது.
௩௯ இதற்கொத்த இரண்டாங் கற்பனையாவது * உன்னைப்போல உன் அயலானையும் சினேகிப்பாயாக. * ௩. மோ. ௰௯, ௰௮.
௪௰ இவ்விரண்டு கற்பனைகளில் எல்லா நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகளுந் தொங்கிக்கொண்டிருக்கிறார்.

¶ கிறிஸ்து யாருடைய குமாரனென்பது. மாற்கு. ௰௨, ௩௫ — லூக். ௨௰, ௪௧ — ௪௪.

௪௧ இப்படிப் பரிசேயர் கூடியிருக்கையில், யேசு அவர்களை:
௪௨ கிறிஸ்துவைக் குறித்து உங்களுக்கு எப்படித் தோன்றுகிறது, அவர் யாருடைய குமாரனென்று கேட்டார். அவர்கள்: தாவீதினுடைய குமாரனென்றார்கள்.
௪௩ அப்போ அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: அப்போது தாவீது ஆவியினாலே அவரை ஆண்டவரென்கிறதெப்படி.
௪௪ கர்த்தர் என் ஆண்டவருடனே: * நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கும் வரைக்கும் நீர் என் வலது பாரிசத்திலே உட்காருமென்று சொன்னாரே. * சங்கீ. ௱௰. ௧.
௪௫ தாவீது அவரை ஆண்டவரென்று சொன்னானேயாகில், அவர் அவனுடைய குமாரனாயிருக்கிறதெப்படி யென்றார்.
௪௬ ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் உத்தரமாகச் சொல்லக்கூடாதிருந்தது, அந்நாள்முதல் ஒருவனும் அவரைக் கேட்கத் துணிந்ததுமில்லை.

## உங. அதிகாரம்.

¶ அவர் வேதபாரகர் பரிசேயருமென்பவர்களுடைய மாயத்தைப் பகிரங்கமாய்க் காண்பித்து, அவர்களுக்கு ஐயோ வென்கிறது. மாற்கு. ௰௨, ௩௮-௪௰. லூ. ௨௰, ௪௫-௪௭.

அப்போது யேசு ஜனங்களோடுந் தம்முடைய சீஷரோடும் பேசிச் சொன்னதாவது,
௨ மோசேயினுடைய ஆசனத்திலே வேதபாரகரும் பரிசேயருமுட்கார்ந்திருக்கிறார்கள்.
௩ ஆகையால் அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிறதெல்லாமதைக் கைக்கொண்டு செய்யு

யுங்

யுங்கோள். ஆனால் அவர்கள் கிரிகைகளின்படி செய்யாதேயுங்கோள், ஏனென்றால் சொல்லுகிறார்கள் சொல்லியுஞ்செய்யாதேபோகிறார்கள்.

௪ ஏனென்றால் * பாரமும் சுமக்கப்படாததுமான சுமைகளைக் கட்டி மனுஷர் தோள்களின்மேல் வைக்கிறார்கள். ஆனால் தங்களுடைய விரலினால் அதுகளை அசைக்க அவர்கள் ஒருப்படுகிறதில்லை. * லூ. ௰௧, ௪௬.

௫ தங்களுடைய யெல்லாக்கிரிகைகளையும் வேணுமென்றால், தாங்கள் மனுஷரால் காணப்படுக்கிறதுக்காகச் செய்கிறார்கள், * * கலப்பீத்தைகளை நீளச்செய்து தங்கள் நாட்டுக்களை அகலமுடிய தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களைப் பெரிதுமாக்குகிறார்கள். * ௬, ௧. * * ௪. மோ. ௰௫, ௩௮—௪௰.

௬ விருந்துகளில் * முதலிருப்பையும், ஆலயங்களில் முதல் ஆசனங்களையும், * லூ. ௰௧, ௪௩.

௭ சந்தைவெளிகளில் வந்தனங்களையும் மனுஷரால் ரபீ ரபீயென்றழைக்கப்படுதலையும் விரும்புகிறார்கள்.

௮ ஆனால் நீங்கள் ரபீயென்றழைக்கப்பட வேண்டாம். ஏனென்றால் ஒருத்தர் உங்களுக்குக் குருவாயிருக்கிறார், அவர் கிறிஸ்து, நீங்களெல்லாரும் சகோதரராயிருக்கிறீர்கள்.

௯ பூமியின்மேலிருக்கிறவனை உங்களுடைய பிதாவென்றழையாதேயுங்கோள், ஏனென்றால் ஒருத்தர் உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார், அவர் பரமண்டலங்களிலிருக்கிறவர்தானே.

௰ நீங்கள் குருக்களென்றும் அழைக்கப்பட வேண்டாம், ஏனென்றால் ஒருவர் உங்களுக்குக் குருவாயிருக்கிறார், அவர் கிறிஸ்துதானே.

௰௧ * உங்களில் பெரியவனானவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவான். * ௨௰, ௨௬. ௨௭.

௰௨ * தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான். * வாக்கி. ௨௯, ௨௩. லூ. ௰௪, ௰௧. ௰௮, ௰௪. ௧. பே. ௫, ௫.

௰௩ ஆனால் மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, ஏனென்றால் மனுஷரின் முன்னே வானராச்சியத்தைப் பூட்டிப்போடுகிறீர்கள், நீங்கள் அதுக்குள் பிரவேசிக்கிறதுமில்லை உள் பிரவேசிக்கிறவர்களைப் பிரவேசிக்கவொட்டுகிறதுமில்லை. * லூ. ௰௧, ௫௨.

௰௪ மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கையோ, ஏனென்றால் விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட செபம்பண்ணுகிறீர்கள். இதினிமித்தம் அதிக ஆக்கினையை அடைவீர்கள்.

௰௫ மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, ஏனென்றால் ஒருத்தனை மார்க்கத்துக்குள்ளாக்கக் கடலையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவனுள்ளானால், உங்களிலும் இரட்டிப்பாய் அவனை நரகமகனாக்குகிறீர்கள்.

௰௬ குருட்டுவழிகாட்டிகளே, உங்களுக்கையோ

எவன

எவனாகிலுந் தேவாலயத்தின்பேரிலே சத்தியம்பண்ணினால், அதொன்றுமில்லை, எவனாகிலுந் தேவாலயத்தின் பொன்பேரிலே சத்தியம்பண்ணினானேயாகில், அவன்கடனாளியென்கிறீர்கள்.

௰௭ மதிகேடருங்குருடருமானவர்களே, எது பெரிதாயிருக்குது, பொன்னோ பொன்னைப்பரிசுத்தமாக்கிற தேவாலயமோ.

௰௮ பின்னையும்: எவனாகிலும் பீடத்தின்பேரிலே சத்தியம்பண்ணினால், அதொன்றுமில்லை, எவனாகிலும் அதின்மேலிருக்கிற காணிக்கையின்பேரிலே சத்தியம்பண்ணினானேயாகில் அவன்கடனாளியென்கிறீர்கள்.

௰௯ மதிகேடருங்குருடருமானவர்களே, எது பெரியது, காணிக்கையோ காணிக்கையைப் பரிசுத்தமாக்கிற பீடமோ.

௨௰ ஆகையால் பீடத்தின்பேரிலே சத்தியம்பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதின்மேலுள்ள யாதெல்லாத்தின்பேரிலுஞ் சத்தியம்பண்ணுகிறான்.

௨௧ தேவாலயத்தின்பேரிலே சத்தியம்பண்ணுகிறவன் அதின்பேரிலும் அதிலேவாசமாயிருக்கிறவர்பேரிலுஞ் சத்தியம்பண்ணுகிறான்.

௨௨ * வானத்தின்பேரிலே சத்தியம்பண்ணுகிறவன் பராபரனுடசிங்காசனத்தின்பேரிலும் அதின்மேலே உட்கார்ந்திருக்கிறவர்பேரிலுஞ் சத்தியம்பண்ணுகிறான். * ௫, ௩௪.

௨௩ மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, ஏனென்றால் * நீங்கள் ஏற்தெலாமிலும் வெந்தயத்திலுஞ் சீரகத்திலும் பத்திலொன்று கொடுத்து; வேதத்திலே கனமான காரியங்களாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள்: இதுகளையே நடப்பித்து, அதுகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டியதாயிருந்தது. * லூ. ௰௧, ௪௨.

௨௪ குருட்டுவழிகாட்டிகளே; கொசுகிலே வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்.

௨௫ மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, ஏனென்றால் * குடிக்கிற போசிக்கிற பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்கிறீர்கள், ஆனால் உள்ளே அதுகள் கொள்ளையினாலும் சூறறைமயினாலும் நிரம்பியிருக்குது. * லூ. ௰௧, ௩௯.

௨௬ குருட்டுப்பரிசேயனே, குடிக்கிறபோசிக்கிற பாத்திரங்களின் * வெளிப்புறமுஞ் சுத்தமாகும்படிக்கு, அதுகளின் உள்புறத்தை முந்தச் சுத்தமாக்கு. * தீத். ௧, ௰௫.

௨௭ மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, ஏனென்றால் சாந்து பூசப்பட்ட கல்லறைகளுக்கொப்பாயிருக்கிறீர்கள், அதுகள் புறம்பே யோக்கியமாய்க் காணும், உள்ளேயோ மரித்தோரின் எலும்புகளினாலுஞ் சகல அசுத்தத்தினாலும் நிரம்பியிருக்குது.

௨௮ அப்படி நீங்களும் புறம்பே மனுஷருக்கு

குநீதிமானகளெனறு காணபபடுகிறீர்கள, உள
ளேயோ மாயததினாலும அக்கிறமததினாலுமநிறைநதி
ருக்கிறீர்கள.

௨௯ மாயக்காரராகியவேதபாரகரேபரிசேயரே, உஙகளுக்கையோ, ஏனெனறால * நீஙகளதீர்க்கதரிசிகளினபிரேதககுழிகளைகடடி, நீதிமானகளினகலலறைகளைச்சிஙகாரிதது: * லூ. ௰௧, ௪௭. ௪௮.

௩௰ எஙகளபிதாக்களின நாளகளிலேயிருநதோமானால, அவர்களோடேகூடததீர்ககதரிசிகளினரததபபழிக்குஉடநதையாயிரோமெனகிறீர்கள.

௩௧ ஆகையாலதீர்ககதரிசிகளைககொலைசெயதவர்களின * புததிரராயிருக்கிறீர்களெனறுஉஙகளுககுநீஙகளதானேசாடசிகளாயிருக்கிறீர்கள. * அப
போ. ௭, ௫௧. ௫௨.

௩௨ நீஙகளுமஉஙகளபிதாககளினஅளவைநிரபபுஙகோள.

௩௩ சறபஙகளே, விரியனபாமபுகளின குடடிகளே, * நரகாககினைக்கெபபடிதபபிவிததுக்கொளளுவீர்கள. * ௩, ௭.

## ¶ அவர்களுக்குமயெருசலேமுக்குமவரும தேவகோபாககினைகளைமுனன றிவிததது.

௩௪ இதுநிமித்தியமாக இதோ * நானஉஙகளிடததுககுததீர்க்கதரிசிகளையுமஞானிகளையுமவேதபாரகரையுமஅனுபபுகிறேன, * * அவர்களிலசிலரைககொனறுசிலுவைகளிலஅறைவீர்கள, சிலரைஉஙகளசபைகளிலவாரினாலடிததுஊருககுஊர துனபபபடுததுவீர்கள. * லூ. ௰௧, ௪௯—௫௧. * * அப
௫, ௪௰. ௭, ௫௮. ௨. கொரி. ௰௧, ௨௪.

௩௫ * நீதிமானாகியஆபேலினரததநதுவக்கி நீஙகள * * தேவாலயததுககுமபீடததுககுமநடுபபுறககொலைசெயதபரகியாவினகுமாரனசகரியாவினரததமடடுமபூமியினமேலசிநதபபடடநீதியானரததமெலலாமஉஙகளமேலேவருமபடியாகததானே. * ௧. மோ. ௪, ௮. * * ௨. நாள. ௨௪, ௨௧.
௨௨.

௩௬ மெயயாகவே உஙகளுககுச்சொலலுகிறேன, இதுகளெலலாமஇநதசநததியினமேலேவரும.

௩௭ * தீர்ககதரிசிகளைககொனறு உனனணடைககு அனுபபபபடடவர்களைக்கலலெறிகிற யெருசலேமே, யெருசலேமே, கோழிதனகுஞசுகளைசசெடடைகளினகீழகூடடிசசேர்ககுமவணணமாயநானஉனபிளளைகளைககூடடிசசேர்ககவேணுமெனறிருநதேன, ஆனாலமாடடோமெனறீர்கள. * லூ. ௰௩, ௩௪. ௩௫.

௩௮ இதோ * உஙகளவீடுஉஙகளுககுபபாழாககிவிடபபடும. * ௧. ராசா. ௯, ௭.

௩௯ அததெனறால: பராபரனநாமததினாலேவருகிறவர் ஸ்தோததிரிககபபடடவரெனறு * நீஙகள சொலலுமளவும, இதுமுதலஎனனைககாணாதிருப்பீர்

ருபயீர்களென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார். * எசே. ௩, ௪. ௫.

## உ௪. அதிகாரம்

¶ அவர் எருசலேமின் அழிவையும் லோகத்தின் முடிவையுங் குறித்துச் சொன்னது.
மாற்கு. ௰௩, ௧—௩௨. லூக்.
உ௧, ௫—௩௩.

யேசு தேவாலயத்தைவிட்டுப் புறப்பட்டுப் போனார், அப்போ அவருடைய சீஷர்கள் தேவாலயங்கட்டியிருக்கும் வேலைகளை அவருக்குக் காண்பிக்கச் சேர்ந்துவந்தார்கள்.

உ ஆனால் யேசு அவர்களுடனே: இதுகளெல்லாத்தையும் பார்க்கிறீர்களல்லவோ, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * இடிக்கப்படாமல் கல்லின்மேல் ஒரு கல்லுமிங்கே வைக்கப்படுவதில்லையென்றார். * லூ. ௰௯, ௪௪.

௩ அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் தனியே அவரண்டை வந்து: இதுகள் எப்போ வருமென்றும், உம்முடைய வருகைக்கும் லோகத்தின் முடிவுக்கும் அடையாளம் ஏதென்றும் எங்களுக்குச் சொல்லுமென்றார்கள்.

௪ அப்போது யேசு பிரத்தியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: * உங்களை ஒருவனும் மோசம் போக்காதபடிக்குப் பாருங்கோள். * எே. ௰௯, ௰௭. யெரே. உ௯, ௮.

௫ ஏனென்றால் அனேகர் வந்து: நானே கிறிஸ்துவாயிருக்கிறேனென்று என் நாமத்தைச் சொல்லி, * அனேகரை மோசம் போக்குவார்கள். * யோ. ௫, ௪௩.

௬ யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையுங் கேட்கப்போகிறீர்கள். கலங்காதே பாருங்கோள், ஏனென்றால் இதுகளெல்லாஞ் சம்பவிக்கவேணும், ஆகிலும் முடிவு இன்னுமில்லை.

௭ ஏனென்றால் சாதிக்குச்சாதியும் ராச்சியத்துக்கு ராச்சியமும் விரோதமாக யெழும்பும், பஞ்சங்களும் பெருவாரிக்காச்சல்களும் பூமியதிர்ச்சிகளும் அங்கங்கே யுண்டாயிருக்கும்.

௮ ஆனால் இதுகளெல்லாம், உபாதிகளின் துவக்கம்.

௯ * அப்போது நீங்கள் உபத்திரப்பட உங்களை ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொன்றுபோடுவார்கள், என் நாமத்துக்காகச் சகல சாதிகளாலும் பகைக்கப்பட்டிருப்பீர்கள். * யோவ. ௰௯, உ—௩.

௰ அப்போ அனேகர் இடறலடைந்து, ஒருத்தரையொருத்தர் காட்டிக்கொடுத்து, ஒருத்தரையொருத்தர் பகைப்பார்கள்.

௰௧ அனேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளுமெழும்பி அனேகரை மோசம் போக்குவார்கள்.

௰௨ * அக்கிரமம் மிஞ்சிப்போவதினாலே அனேகருடைய சினேகங் குளிர்ந்துபோம். * உ. தீமோ. ௩, ௧.

௰௩ ஆனாலும் முடிவுபரியந்தம் * நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான். ௰, உஉ. அப். ௨, ௰.

௰௪ சகலசாதிகளுக்குஞ் சாட்சியாக ராட்சியத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்கும் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவுவரும்.

௰௫ ஆனால் * தானியேலென்கிற தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்குகிற அருவருப்பானது பரிசுத்தஸ்தலத்திலே நிற்கக்கண்டீர்களானால், அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான். * தானி. ௯, ௨௭.

௰௬ அப்போது யூதேயாவிலுள்ளோர் பர்வதங்களின்மேலே ஓடிப்போகக்கடவார்கள்.

௰௭ * வீட்டின்மேலிருப்பவன் தன் வீட்டிலே ஏதேயாகிலுமெடுப்பதற்கு இறங்கவேண்டாம். * லூ. ௰௭, ௩௧.

௰௮ வயலிலிருப்பவன் தன் வஸ்திரங்களை எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத்திரும்பவும் வேண்டாம்.

௰௯ ஆனால் அந்தநாட்களிலே கெர்ப்பவதிகளுக்கும் பால்கொடுக்கிறவர்களுக்கும் ஐயோ.

௨௰ ஆனால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலும் ஓய்வுநாளிலுஞ் சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கோள்.

௨௧ அத்தென்னென்றால் மகாஉபத்திரவம் அப்போதுண்டாயிருக்கும். அப்படிப்பட்டது லோகத்தின் ஆதிகாலந்தொட்டு இதுவரைக்குஞ் சம்பவித்ததுமில்லை இனிச் சம்பவிப்பதுமில்லை.

௨௨ அந்தநாட்கள் குறைக்கப்படாதேபோனால் ஒருமாம்சமாகிலுந் தப்பிப்போவதில்லை. தெரிந்துகொள்ளப்பட்டவர்களினிமித்தமோவென்றால் அந்தநாட்கள் குறைக்கப்படும்.

௨௩ * அப்போது யாதொருத்தன் உங்களுடனே: இதோ கிறிஸ்து இங்கே, அதோ அங்கே என்று சொன்னானால், நம்பாதேயுங்கோள். * லூ. ௰௭, ௨௩.

௨௪ ஏனென்றால் கள்ளக்கிறிஸ்துகளும் * கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கத்தக்கதாய் பெரிய அடையாளங்களையும் அதிசயங்களையுஞ் செய்வார்கள். * ௫, மோ. ௰௩; ௧—௫, ௨. தெச. ௨, ௯—௰௧. அ௸வி. ௰௩, ௰௩. ஹ

௨௫ இதோ, உங்களுக்கு முன்னமே சொன்னேன்.

௨௬ ஆகையால்: இதோ வனாந்திரத்திலிருக்கிறாரென்று உங்களுக்குச் சொன்னார்களானால், வெளிப்புறப்படாதேயுங்கோள். இதோ அறைவீடுகளிலிருக்கிறாரென்றால், நம்பாதேயுங்கோள்.

௨௭ அதேதென்றால் மின்னல் கிழக்கிலே முளைத்து மேற்குமட்டும் பிரகாசிக்கிறவண்ணமாய் மனுஷனுடைய குமாரன் வருகையிருக்கும்.

௨௮ அதேதென்றால் * பிணமெங்கேயிருக்குமோ அங்கே கழுகுகள் வந்துகூடும். * ஆப. ௧, ௮. லூ. ௰௭, ௩௭.

௨௯ ஆனால் அந்தநாட்களின் உபத்திரவத்துக்குப் பிற்பாடு சீக்கிரத்துக்குள் * சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் தன் ஒளியைக் கொடாதேபோம், நட்சேத்திரங்கள் வானத்திலிருந்து விழுந்து, வானங்களின் பெலன்கள் அசைக்கப்படும். * யெச. ௰௩, ௯. ௰. அ௸வி. ௬, ௰௨. ஹ

௩௰ அப்பொழுது மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்திலே காணப்படும். அப்போ * பூமியின் சாதிகளெல்லாம் புலம்பி, மனுஷகுமாரன் வானத்தின் மேகங்களின்மேலே மகாவல்லமையோடும் மகிமையோடும் வருகிறதைக் காண்பார்கள். * மாற்கு. ௰௪, ௬௨, அறிவு. ௧. ௭.

௩௰௧ அவர் தம்முடைய தூதரை * வலுவாய்த்தொனிக்கும் எக்காளத்துடனே அனுப்புவார். இவர்கள் வானத்தின் ஒருமுனை துவக்கி அதின் மறுமுனைமட்டும் நாலுகாத்துத்திசைகளிலிருந்து அவர் தெரிந்துகொண்டவர்களைக் கூட்டிச்சேர்ப்பார்கள். * ௧. கொ. ௰௫, ௫௨.

௩௰௨ ஆனால் அத்திமரத்தினாலே ஒரு உபமானத்தைக் கற்றுக்கொள்ளுங்கோள், அதின்கிளை நொற்பமாகித் துளிர்விடும்போது, வசந்தகாலஞ்சமீபமென்று அறிகிறீர்கள்.

௩௰௩ அப்படி நீங்களும் இதுகளெல்லாம் நடக்கிறதைக் காணும்போது, அது சமீபமாய்க் கதவண்டை வந்திருக்குதென்று அறியுங்கோள்.

௩௰௪ மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுகளெல்லாஞ்சம்பவிக்குமட்டும் இந்தச்சந்ததி ஒழியாது.

௩௰௫ வானமும் பூமியும் ஒழியும், ஆனாலென்வார்த்தைகள் ஒழியாது,

௩௰௬ அந்தநாளையும் நாழிகையையுமோவென்பிதா ஒருவர்தவிர ஒருவனுமறியான், பரமண்டலங்களின் தூதருமறியார்கள்.

¶ நிர்விசாரமாயிராமல் தம்முடைய வருகைக்காயித்தமாயிருக்க அவர் புத்திசொன்னது. மாற்கு. ௰௩, ௩௩. லூ. ௨௧, ௩௪—௩௬.

௩௰௭ ஆனால் * நோவாவின் நாட்களெப்படியிருந்ததோ அப்படி மனுஷனுடையகுமாரனின் வருகையுமிருக்கும். * ௧. மோ. ௬, ௰௧. லூ. ௰௭, ௨௬. ௨௭.

௩௰௮ அதேதென்றால் சலப்பிரளயத்துக்கு முன்னுள்ள நாட்களிலே, நோவா பேழைக்குள் பிரவேசிக்குநாளமட்டும் அவர்கள் உண்டு குடித்துப் பெண்கொண்டுகொடுத்து.

௩௰௯ சலப்பிரளயம் வந்து அனைவரையுங்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்ததுபோலே, மனுஷனுடையகுமாரனின் வருகையுமிருக்கும்.

௪௰ அப்போ * இரண்டுபேர் வயலிலிருப்பார்கள் ஒருத்தனேற்றுக்கொள்ளப்படுவான் ஒருத்தனைகைவிடப்படுவான். * லூ. ௰௭, ௩௪—௩௬.

௪௰௧ இரண்டுபெண்டுகள் எந்திரமரைத்துக்கொண்டிருப்பார்கள், ஒருத்தியேற்றுக்கொள்ளப்படுவாள் ஒருத்திகைவிடப்படுவாள்.

௪௰௨ ஆகையால் முழித்திருங்கோள், ஏனென்றால் * உங்களாண்டவர் எந்தநாழிகையிலே வருவாரென்றறியீர்கள். * ௨௫, ௰௩.

௪௩ ஆனாலொருகாரியத்தை அறியுங்கோள் திருடன் எந்தச் சாமத்திலே வருவானென்று வீட்டெசமான் அறிந்திருந்தானானால் அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடவொட்டானே. * லூ. ௰௨, ௩௯. ௧. தெச. ௫, ௨.

௪௪ * ஆனபடியால் நீங்களும் ஆயத்தமாயிருங்கோள், ஏனென்றால் நீங்கள் அறியாத நாழிகையிலே மனுஷனுடைய குமாரன் வருகிறார்.

௪௫ ஏப்போதும் ஏசமானுக்குப் பணிவிடைக்காரங்களாகிலே, அவர்களுக்குத் தருணகாலத்திலே போசனங்கொடுக்கவைத்த உண்மையும் புத்தியுமுள்ள ஊழியக்காரனார்.

௪௬ ஏசமான் வந்து, அப்படிச் செய்யக்காணும் ஊழியக்காரனே பாக்கியவான்.

௪௭ மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன் தன் ஆஸ்திகளெல்லாத்தின் மேலும் அவனை வைப்பான்.

௪௮ ஆனால் அந்தப் பொல்லாத ஊழியக்காரன் தன் நெஞ்சத்திலே: என்னுடையவர் வர நாள் செல்லுமென்று சொல்லி,

௪௯ தன்னோடே கூடப் பணிவிடைக்காரரை அடிக்கவும் வெறியரோடே போசிக்கவுங் குடிக்கவுந் தொடங்கினால்,

௫௰ அந்த ஊழியக்காரனுடைய ஏசமான் அவன் பார்த்திராத நாளிலும் அறியாத நாழிகையிலும் வந்து,

௫௧ அவனைத் துண்டித்துப்போட்டு, மாயக்காரருடனே அவன் பங்கை வைப்பான். * அங்கே அழுகையும் பல்லுக்கடிப்புமுண்டாயிருக்கும். * ௨௫, ௩௰.

## ௨௫. அதிகாரம்.

¶ பத்துக் கன்னியாஸ்திரீகள் உவமை.

அப்போது வானராட்சியந் தங்கள் தீவட்டிகளைப் பிடித்து மணவாளனுக்கெதிர்க்கொண்டுபோகப் புறப்படுகிற பத்துக் கன்னியாஸ்திரீகளுக்கொப்பாயிருக்கும்.

௨ அவர்களில் அயந்துபேர் புத்தியுற்றோரும் அயந்துபேர் புத்தியற்றோருமாயிருந்தார்கள்.

௩ புத்தியற்றோரானவர்கள் தங்கள் தீவட்டிகளைப் பிடித்தும், எண்ணெயைக் கொண்டுபோனதில்லை.

௪ புத்தியுற்றோரோ தங்கள் தீவட்டிகளோடேகூடத் தங்கள் பாத்திரங்களிலெண்ணெயைக் கொண்டுபோனார்கள்.

௫ மணவாளன் தாமதித்துப்போகையிலே எல்லாரும் நித்திரைமயக்கமாகி, தூங்கிவிட்டார்கள்.

௬ ஆனால் பாதிராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கெதிர்க்கொண்டுபோகப் புறப்படுங்கோளென்கிற கூக்குரலுண்டாச்சுது.

௭ அப்போ அந்தக் கன்னியாஸ்திரீகளெல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளைச் சோடிக்

தார்

தார்கள்.

௮ புத்தியற்றோரோவென்றால் புத்தியுள்ளோருடனே: உங்கள் எண்ணெயிலே எங்களுக்குக் கொஞ்சந் தாருங்கோள், ஏனெனில் எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகுதென்றார்கள்.

௯ ஆனால் புத்தியுள்ளோர் பிரத்தியுத்தாரமாக: அப்படி வேண்டாம், எங்களுக்கும் உங்களுக்கும் போதாமல் போகாதபடிக்கு நீங்கள் விற்கிறவர்களிடத்திலே போய் உங்களுக்குக் கொள்ளுங்கோளென்றார்கள்.

௰ அவர்கள் கொள்ளப்போறபோதோவெனில் மணவாளன் வந்தார். அப்போ ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாணத்துக்குப் பிரவேசித்தார்கள், கதவு பூட்டப்பட்டுது.

௰௧ பின்பு மற்றக் கன்னிகாஸ்திரீகளும் வந்து: * ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறவுமென்றார்கள். * லூ. ௰௩, ௨௫.

௰௨ ஆனால் அவர் பிரத்தியுத்தாரமாக: * உங்களை அறியேனென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். * ௭, ௨௩.

௰௩ ஆனபடியால் * முழித்திருங்கோள், ஏனெனில் மனுஷனுடைய குமாரன் வரும் நாளையாகிலும் நாழிகையையாகிலும் அறியீர்கள். * க. கொ. ௰௬, ௰௩. அஸ். ௰௬, ௰௫.

¶ ஊழியக்காரருக்கொப்பிவித்த திரவியங்கள்.

௰௪ ஏனென்றால் * புறதேசத்துக்குப் போற மனுஷன் தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்களுக்கொப்பிவித்ததுபோலேயிருக்குது: * லூ. ௰௯, ௰௨.

௰௫ அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருத்தனுக்கு ஐயந்து தாலந்தும், ஒருத்தனுக்கு ரெண்டும், ஒருத்தனுக்கு ஒன்றுமாயக் கொடுத்து, உடனே புறதேசத்துக்குப் போனான்.

௰௬ ஐயந்து தாலந்தை வாங்கினவன் போய், அதுகளாலே வியாபாரம் பண்ணி, வேறே ஐயந்து தாலந்தைச் சம்பாதித்தான்.

௰௭ அப்படியே ரெண்டை வாங்கினவனும் வேறே ரெண்டை ஆதாயம் பெத்தான்.

௰௮ ஆனால் ஒன்றை வாங்கினவன் போய், நிலத்தைத் தோண்டி, தன்னெசமானுடைய திரவியத்தைப் புதைத்து வைத்தான்.

௰௯ வெகுகாலமான பின்பு அந்த ஊழியக்காரருடையெசமான் வந்து அவர்களோடே கணக்குப் பார்த்தான்.

௨௰ அப்போ ஐயந்து தாலந்தை வாங்கினவன் சேர்ந்து, வேறே ஐயந்து தாலந்தைக் கொண்டுவந்து: ஆண்டவனே, ஐயந்து தாலந்தை எனக்கொப்பிவித்தீரே, இதோ அதுகளாலே வேறே ஐயந்து தாலந்தை ஆதாயம் பெற்றேனென்றான்.

௨௧ அவனெசமான் அவனுடனே: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரா, கொஞ்சத்

திலே

த்திலே உண்மையாயிருந்தாய், அனேகத்தின்மேல் உன்
னை அதிகாரியாக்கிவைப்பேன். உன்னெசமானுடைய ச
ந்தோஷத்துக்குள் பிரவேசியென்றார்.

௨௨ இரண்டுதாலந்துவாங்கினவனும் சேர்ந்துவ
ந்து: ஆண்டவனே, இரண்டுதாலந்தெனக்கு ஒப்
பிவித்தீரே, இதோ அதுகளாலே வேறிரண்டுதாலந்
து ஆதாயம்பெற்றேனென்றான்.

௨௩ அவனெசமானவனுடனே: நல்லதாச்சுது: உ
த்தமமுமுண்மையுமான ஊழியக்காரா, கொஞ்சத
்திலே உண்மையாயிருந்தாய். அனேகத்தின்மேல் உன்
னை அதிகாரியாக்கிவைப்பேன், உன்னெசமானுடைய ச
ந்தோஷத்துக்குள் பிரவேசியென்றான்.

௨௪ ஆனால் ஒருதாலந்துவாங்கினவனுஞ் சேர்ந்து
வந்து: ஆண்டவனே, நீர் விதைக்காதிடத்தில் அறு
க்கிறவரும் தெளிக்காதிடத்திற் சேர்க்கிறவருமான க
டினமனுஷனாயிருக்கிறீரென்றுமறிவேன்.

௨௫ ஆகையால் பயந்துபோய், உமதுதாலந்தை நி
லத்தில் புதைத்துவைத்தேன், இதோ உம்முடையது உ
மக்குவந்ததென்றான்.

௨௬ ஆனால் அவனெசமான் பிறத்தியுத்தாரமாக அவ
னுக்குச்சொன்னதாவது: பொல்லாதவனும் சோம்
பனுமான ஊழியக்காரா, நான் விதைக்காதிடத்தி
ல் அறுக்கிறேனென்றும் தெளிக்காதிடத்திற் சேர்க்கி
றேனென்றும் அறிந்திருந்தாயே.

௨௭ ஆனதினாலே நீயென்திரவியத்தைக்காசுக்காறர்வ
சத்திலே விட்டுவைக்கவேண்டியதாயிருந்தது. அப்
போநான் வந்து என்னுடையதை வட்டியோடேகூட
வாங்கிக்கொள்ளுவேனே.

௨௮ ஆனபடியினாலே அந்தத்தாலந்தை அவனண்டையி
லே வாங்கி, பத்துத்தாலந்துள்ளவனுக்குக்கொடுங்
கோள்.

௨௯ அதேனென்றால் * உள்ளவனுக்கியாவனுக்குங்
கொடுக்கப்படும், பரிபூரணமுமடைந்திருப்பான்,
இல்லாதவனைக்கையிலில்லாவென்றால் அவனுக்குள்ள
தும் வாங்கப்படும். * ௰௩. ௰௨. லூ. ௮, ௰௮.

௩௰ அந்தஅப்பிரயோசனமான ஊழியக்காற
னையோவென்றால் * எல்லாத்துக்குமப்புறமான
இருளிலேதள்ளிப்போடுங்கோள். அங்கே அழுகை
யும் பல்லுக்கடிப்புமுண்டாயிருக்குமென்றான்.
* ௨௨, ௰௩.

¶ ஞாயத்தீர்க்குங்கடைசிநாளினுடைய
விபரம்.

௩௧ ஆனால் * மனுஷனுடைய குமாரன் தமது மகிமை
யிலே தம்முடைய சகலபரிசுத்தத்தூதரோடுங்கூட வரும்
போது, அவர் தமது மகிமையினுடைய ஆசனத்தின்மே
லே உக்கார்ந்திருப்பார். * ௰௬, ௨௭.

௩௨ அப்போதவருக்குமுன்பாக * எல்லாச்சாதி
களுங்கூட்டப்படுவார்கள், அவர்களை அவரொரு
மேய்ப்பன் ஆடுகளையுங்கிடாய்களையும் பிரிக்கிற
ப்போலே வெவ்வேறாகப்பிரித்து, * ௨. கோ.
௫, ௰.

௩௩ ஆடுகளைத்தம்முடைய வலதுபக்கத்திலுங்கிடாய்

களை

களை இடதுபக்கத்திலும் நிறுத்துவார்.

௩௪ அப்பொழுது ராசா தம்முடைய வலதுபக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்லுவதாவது: வாருங்கோள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, லோகத்தோற்றமுதல் உங்களுக்காயித்தம்பண்ணப்பட்ட ராட்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கோள்.

௩௫ ஏனென்றால் * பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள், பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், * ஏசை. ௫௮, ௭. ௮. எபிரே. ௧௩; ௨.

௩௬ அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னண்டைக்கு வந்தீர்களென்பார்.

௩௭ அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தாரமாகச் சொல்லுவதாவது: ஆண்டவரே; உம்மை நாங்கள் எப்பொழுது பசியாயிருக்கக்கண்டு போஷித்தோம், அல்லது தாகமாயிருக்கக்கண்டு உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்.

௩௮ உம்மை நாங்கள் எப்பொழுது பரதேசியாயிருக்கக்கண்டு சேர்த்துக்கொண்டோம், அல்லது அம்மணமாயிருக்கக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்.

௩௯ உம்மை நாங்கள் எப்பொழுது வியாதியாகவும், அல்லது காவலிலிருக்கிறவராகவுங் கண்டு உம்மண்டைக்கு வந்தோமென்பார்கள்.

௪௰ ராசா அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் * எல்லாரிலுஞ் சிறியரான இந்த என்னுடைய சகோதரரில் ஒருத்தனுக்குச் செய்தீர்களோ அதை எனக்குச் செய்தீர்களென்பார். * ௰, ௪௰. லூக்கா. ௰௬, ௰௭.

௪௧ அப்பொழுது இடதுபக்கத்திலுள்ளவர்களுக்குச் சொல்லுவார்: சபிக்கப்பட்டவர்களே, * என்னைவிட்டு; பிசாசுக்கும் அதின் தூதருக்கும் ஆயித்தம்பண்ணப்பட்ட நித்திய அக்கினியிலே போங்கோள். * ௭, ௨௩.

௪௨ ஏனென்றால் பசியாயிருந்தேன், எனக்குச் சாப்பாடு கொடுத்தீர்களில்லை, தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்களில்லை:

௪௩ பரதேசியாயிருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்களில்லை, அம்மணமாயிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்களில்லை, வியாதியாகவுங் காவலிலுமிருந்தேன், என்னைப் பார்க்கவந்தீர்களில்லையென்பார்.

௪௪ அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தாரமாக: ஆண்டவரே, உம்மை நாங்கள் எப்பொழுது பசியாகவுந் தாகமாகவும் பரதேசியாகவும் அம்மணமாகவும் வியாதியாகவுங் காவலிலிருக்கிறவராகவுங் கண்டு உமக்கூழியஞ்செய்யாதிருந்தோமென்பார்கள்.

௪௫ அப்பொழுது அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக:

மெயயாகவெஉஙகளுககுச சொலலுகிறேன, நீஙக
ள * எலலாசசிறியரான இவரகளில ஒருவனு
ககுளளனசெயயாதிருநதீரகளோ, அதுகளைககுத
செயயாதிருநதீரகளெனபார. * யாகுகோ. ௨, ௰௩.
௪௬ அபபடியெ * இவரகளநதததியவெதனையிலு
மநீதிமானகளோநிததியசீவனிலுமபோவாரகளெ
னறார். * யோவ. ௫, ௨௯:

## ௨௬. அதிகாரம.

¶ யேசுபரிமளதைலததாலபூசபபடடதுமயூதாஅ
வரைககாடடிக்கொடுக்கபிரதானஆசா
ரியரோடடெபொருநதிக்கொணட
துமமற்கு. ௰௪, ௧—௰௧. லூ.
௨௨, ௧—௬.

இபபாலசமபுவிதககதேதகெனில, யேசுஇநதவசனங
களெலலாமுரைததபினபுஅவரதமமுடைசீஷரு
டனே:
௨ இரணடுநாளைககுபபிறகுபஸகாவாயிருக்குமென
றறிவீரகள, அபபோமனுஷனுடையகுமாரனசிலு
வையிலஅறையபபடுவதறகுஏபபுககொடுக்கப
படுகிறாரெனறார்.
௩ அபபோதுபிரதானஆசாரியரகளுமவேதபார
கருமுசனததினமுபபருஙகாயிபாவெனனபபடடபிர
தானஆசாரியனுடையஅரமனையிலேகூடிவநது.
௪ யேசுவைககவடாயபபிடிததுக்கொலைசெய
கிறதற்குயோசினைபணணினாரகள.
௫ ஆனாலசனததிலகலகமணடாமலபடிக்குப
பணடிகையிலவெணடாமெனறாரகள.
௬ ஆனாலயேசுபெததானியாவிலகுஷடரோகசீ
மோனவீடடிலிருக்கையில.
௭ * விலையேறபபெறறதயிலததினபறணியை
உடையஒருஸதிரீஅவரணடைவநது, பநதியிருநத
அவரசிரசினமேலவாரததாள. * யோ. ௰௨. ௩—௮.
௮ அவருடையசீஷரஅதைககணடபோதேகோவெ
ணில, தாஙகளுடநது: இநதஅழிமபுஎதுக்கு.
௯ இநததயிலததைஉயரநதகிரயமபணணி, தரித
திரருக்குக்கொடுக்கலாமெனறாரகள.
௰ ஆனாலயேசுஅதையறிநதுஅவரகளுக்குச்சொன
னதாவது: நீஙகளஇஸதிரியைவருததபபணணுவா
னேன, எனனிடததிலநறகிரியையைசசெயதாளே.
௰௧ ஏனெனறாலஉஙகளிடததிலஎபபோதுநதரி
ததரஉஙகளுக்கிருக்கிறாரகள, ஆனாலநானுஙகளுக்
கெபபோதுமிரேன.
௰௨ இவளிநததயிலததைஎனசரீரததினமேலவார
ததினதுஎனனைஅடககமபணணுகிறதறகாக
ககாகசசெயதாள.
௰௩ மெயயாகவெஉஙகளுககுச்சொலலுகிறே
ன, இநதசுவிசேஷமஉலோகமெஙகுமஙகேபிரசங
கிககபபடுமோ, அஙகேயிவளசெயததுமஅவளைநி
னைபபதறகாகசசொலலபபடுமெனறார்.

யச அப்போது பன்னிருவரிலொருத்தனாகிய யூதாஸ்காரி யோத்தென்னப்பட்டவன் பிரதான ஆசாரியர்களி னிடத்துக்குப்போய்.
ய௫ எனக்கென்ன தரமனதாயிருக்கிறீர்கள், நா னவரை உங்களுக்குக் காட்டிக்கொடுப்பேனென் றான். ஆனால் அவர்கள் * முப்பது வெள்ளிக்காசை அவனுக்கு நிறுத்துப் பண்ணினார்கள். * சகரி. யக, யஉ.
ய௬ அதுமுதலவனவரைக் காட்டிக்கொடுக்கத் தகுந்த சமயந்தேடினான்.

¶ அவர் சீஷரோடேகூடப் பஸ்காவைப் போசித்து, பரிசுத்த ராப்போசனத்தைக் கட்டளையிட்டது. மாற். யச, யஉ—உ௫. லூ. உஉ, எ—௨௰.

யஎ ஆனால் புளிப்பில்லாத அப்பங்களின் முதலா ம் நாளிலே சீஷர் யேசுவினிடத்துக்கு வந்து, அவரிட த்தில்: பஸ்காவைப் போசிப்பதற்கு உமக்கு நாங்களெ ங்கே ஆயித்தம்பண்ணச் சித்தமாயிருக்கிறீரென்றார் கள்.
யஅ அதற்கவர்: நீங்கள் பட்டணத்திலே இன்னா னிடத்துக்குப்போய், அவனிடத்தில்: என்னுடைய கால ம் சமீபித்திருக்குது, உன்னிடத்திலே என் சீஷரோடே கூடப் பஸ்காவை ஆசரிப்பேனென்று குருவானவர் சொல்லுகிறாரென்று சொல்லுங்களென்றார்.
யகூ சீஷர் யேசு தங்களுக்குக் கற்பித்தபடி செய் து, பஸ்காவை ஆயித்தம்பண்ணினார்கள்.
உய அஸ்தமனமானபோது பன்னிருவரோடே கூடப் பந்தியிருந்தார்.
உக * அவர்கள் போசனம்பண்ணுகையிலவர்: மெ ய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களி லொருத்தன் என்னைக் காட்டிக்கொடுப்பானென் றார். * யோவா. யங, உக—
உஉ அப்போ அவர்கள் மிகவுந் துக்கப்பட்டு, அவ ரவருமவரை நோக்கி: ஆண்டவரே, நானோ வென்று சொல்லத்தொடங்கினார்கள்.
உ௩ ஆனால் அவர் பிரத்தியுத்தரமாகச் சொன்னதா வது: என்னோடே கூடத் தாலத்திலே கையைத் தோய்க்கிறவ னே என்னைக் காட்டிக்கொடுப்பான்.
உச மனுஷனுடைய குமாரன் தன்னைக்குறித் தெழுதியிருக்கிறபடியே போகிறார், ஆனால் மனுஷகுமார னைக் காட்டிக்கொடுக்கிறவனுக்கு ஐயோ, அந்த மனுஷன் பிறவாதிருந்தானாகில் அவனுக்கு நலமாயிருக்குமென்றார்.
உ௫ ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கிற யூதா பிர த்தியுத்தரமாக: ரபீ, நானோவென்றான். அவனிட த்தில்: நீ சொன்னபடியென்றார்.
உ௬ ஆனால் அவர்கள் போசனம்பண்ணுகையில், * யே சு அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரஞ்செய்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கோள், இது என்னுடைய சரீரமாயிருக்கு

தென்

தென்றார். * ௧. கொரி. ௰௧, ௨௩—௨௫.
௨௭ பின்னும் அப்பாத்திரத்தை எடுத்துக் கொண்டு
ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொ
டுத்துச் சொன்னதாவது; நீங்களெல்லாருமிதிலே குடியுங்
கோள்.
௨௮ அதேனென்றால் பாவமன்னிப்புக்கென்
று * அநேகருக்காகச் சிந்தப்படுகிற * * புதுஉடன்படி
க்கையினுடைய இரத்தமாயிருக்குது. * ஏ.
௫, ௮ ௫. * * யெரே. ௩௧, ௩௧—௩௪.
௨௯ ஆனாலுங்களுக்குச் சொல்லுகிறேன். இந்தத்
திராட்சரசத்தை நானுங்களோடே கூட நவ
மானதாயென் பிதாவின் ராட்சியத்திலே குடிக்கும்போ
தவரைக்கும் இதுமுதல் அதைக் குடியேனெ
ன்றார்.
௩௰ அவர்கள் ஸ்தோத்திரம் பாடின பின்பு ஒ
லிவமலைக்குப் புறப்பட்டுப் போனார்கள்.

¶ அவர் ஒலிவமலைக்குப் போற வழியிலே
சீஷருடனே பேசின வார்த்தைகள்.
மாற்கு. ௰௪, ௨௬—௩௧.

௩௧ அப்பொழுது யேசு அவர்களுக்குச் சொன்னதாவது:
இந்த ராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிடத்தி
லே இடறலப்படுவீர்கள். ஏனென்றால்: * மேய்ப்ப
னை வெட்டுவோம். அப்பொழுது மந்தையின் ஆடுகள் சித
றிக்கப்படுமென்றெழுதியிருக்குது. * சகரி. ௰௩, ௭.
௩௨ ஆனால் நான் எழுந்திருந்த பின்பு உங்களுக்கு மு
ன்னே * கலிலேயாவுக்கேகுவேனென்றார். * ௨௮.
௰௬.
௩௩ பேதுரு வோவென்றால் அவருக்குப் பிரதியு
த்தாரமாக: உம்மிடத்திலெல்லாரும் இடறலப்ப
ட்டாலும், நானொருக்காலும் இடறலப்படேனெ
ன்றான்.
௩௪ யேசு அவனுடனே: மெய்யாகவே உனக்குச்
சொல்லுகிறேன், இந்த ராத்திரியிலே * சாவல் கூவு
கிறதுக்குமுன்னே மூன்று விசை என்னை மறுதலிப்பா
யென்றார். * யோவ. ௰௩, ௩௮.
௩௫ பேதுரு அவருடனே: நான் உம்மோடே சாக
வேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலியேனெ
ன்றான். அந்தப்படியே சீஷர்களெல்லாருஞ் சொ
ன்னார்கள்.

¶ அவர்பட்ட சூத்தும்பாடுகள். மாற்கு. ௰௪,
௩௨—௪௨. லூக். ௨௨, ௩௯—௪௬.

௩௬ அப்பொழுது யேசு அவர்களோடே கெத்சேம
னேயென்னப்பட்டதுக்கு வந்து. சீஷருடனே:
நான்போயங்கே செபம்பண்ணுமளவும் இவ்வி
டத்துக்கார்ந்திருங்கோளென்று சொல்லி,
௩௭ * பேதுருவையுஞ் செபெதேயுவின் ரண்டு கு
மாரரையுங் கூட்டிக்கொண்டு, துக்கமடையவுமிக
வியாகுலப்படவுந் துவங்கினார். * ௰௭, ௧. ௨.
௩௮ அப்பொழுதவர்களுடனே: என்னுத்துமம் * ம
ரணபரியந்தங் கனத்துக்கமாயிருக்குது, நீங்களிங்
கேத்

கே தரித்து என்னோடேகூட முழித்திருங்கோளென்று சொல்லி, * சங்கீ. ௬௯, ௨, ௩.

௩௯ சத்தப்புறமே போய், முகங்குப்புற விழுந்து செபம்பண்ணி: என் பிதாவே கூடுமானால், * இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கக்கடவது, எனக்கோ அல்ல உமக்கு இச்சித்தமாயிருக்கிறபடியே ஆவதாகவென்றார். * ௨௰, ௨௨. எபிரே. ௫, ௭.

௪௰ அவர் சீஷரிடத்தில் வந்து, அவர்களை நித்திரைப் பண்ணக்கண்டு, பேதுருவுடனே: இப்படி நீங்கள் ஒரு மணிவேளையாகிலும் என்னோடேகூட முழித்திருக்கக்கூடாதிருந்ததோ.

௪௧ நீங்கள் * சோதினைக்குள்ளாகப் படாதபடிக்கு முழித்திருந்து செபம்பண்ணுங்கோள், ஆவி மனதுள்ளதுதான், மாங்கிஷமோ பெலனற்றிருக்குதென்றார். * கலாத். ௫, ௰௭. ௧. பேது, ௫, ௮.

௪௨ திரும்பவும் இரண்டாம் விசை போய், செபம்பண்ணி: என் பிதாவே, இந்தப் பாத்திரத்தை நான் குடித்தாலொழிய அது என்னை விட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படியாகக்கடவதென்றார்.

௪௩ அவர் வந்து அவர்கள் மறுபடியும் நித்திரைப் பண்ணக்கண்டார் அதேதென்றால் அவர்களுடைய கண்கள் பாரந்தத்தினா லடைந்திருந்தது.

௪௪ அவர்களை விட்டுத் திரும்பவும் போய், மூன்றாம் விசை செபம்பண்ணி, அந்த வார்த்தையைத்தானே சொன்னார்.

௪௫ அப்போ தம்முடைய சீஷரண்டை வந்து, அவர்களுடனே: இன்னமும் நித்திரைப் பண்ணி இளைப்பாறுவீர்களோ, இதோ மனுஷனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளிலே ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை சமீபித்தது.

௪௬ எழுந்திருங்கோள், போவோம், இதோ என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் சமீபமாய் வந்தானென்றார்.

¶ அவர் பிடிபட்டது. மற்கு. ௰௪, ௪௩—௫௨.
லூ. ௨௨, ௪௭—௫௪. யோவ. ௰௮,
௨—௰௪,

௪௭ அவரின்னம் பேசுகையில், இதோ பன்னிருவரிலொருவனாகிய யூதா வந்தான். அவனோடேகூடப் பிரதான ஆசாரியர்களிடத்திலும் சனத்தின் மூப்பரிடத்திலுமிருந்து திரளாங் கும்பு கத்திகளையும் தடிகளையும் பிடித்து வந்தது.

௪௮ ஆனால் அவனைக் காட்டிக்கொடுக்கிறவன் அவர்களுக்கு: எவனை முத்தமிடுவேனோ, அவன் தான், அவனைப் பிடியுங்கோளென்று அடையாளஞ் சொல்லி.

௪௯ உடனே யேசுவண்டை சென்று: வாழ, றபீயென்று அவரை முத்தமிட்டான்.

௫௰ ஆனால் யேசு அவனுடனே: சிநேகிதனே, ஏதுக்கு வந்திருக்கிறாயென்றார். அப்போ அவர்கள் சேர்ந்து வந்து யேசுவின் மேலே கைகளைப் போட்டு அவ

ரைப்

னைப்பிடித்தார்கள்.

௫௧ இதோ யேசுவோடே இருந்தவர்களிலொருவன் கையைநீட்டி, கத்தியையுருவி, பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனைக் காதற வெட்டினான்.

௫௨ அப்போது யேசு அவனுக்குச் சொன்னதாவது: உன் கத்தியைத் திரும்ப அதினிடத்திலே போடு, ஏனென்றால் * கத்தியை எடுக்கிறயாவரும் கத்தியாலே மடிந்துபோவார்கள். * ௧. மோ. ௯, ௬. அபி. ௰௩, ௰.

௫௩ அல்லது என்பிதா பனிரெண்டு லேகியோனுக்கதிகமான தேவதூதரை என்னிடத்தில் நிறுத்த நானிப்போ அவரை வேண்டிக்கொள்ளக்கூடாதென்று நினைக்கிறாயோ.

௫௪ ஆனால் வேதஎழுத்துகள் எப்படி நிறைவேறும் அதேதென்றால் அந்தப்படியாகச் சம்பவிக்கவேண்டியதென்றார்.

௫௫ அந்நேரத்திலே யேசு கும்புகளுடனே: நீங்கள் கள்ளன்மேலே புறப்பட்டாப்போலே கத்திகளோடுந் தடிகளோடும் என்னைப்பிடிக்கவந்தீர்கள். நான் தினம் உங்களண்டையிலே தேவாலயத்திலே உட்கார்ந்து உபதேசம்பண்ணிக்கொண்டிருந்தேன். அப்போ நீங்கள் என்னைப்பிடித்ததில்லையே.

௫௬ ஆனால் தீர்க்கதரிசிகளின் எழுத்துகள் நிறைவேறத்தக்கதாக இதெல்லாஞ் சம்பவித்ததென்றார். அப்போது சீஷரெல்லாரும் அவனை விட்டோடிப்போனார்கள்.

¶ அவர் பிரதான ஆசாரியனரண்மனையிலே பட்டபாடுகளும் பேதுருவினால் மறுதலிக்கப்பட்டதும். மாற்கு. ௰௪, ௫௩. லூ. ௨௨, ௫௫. யோவா. ௰௮, ௰௩—௨௭.

௫௭ ஆனால் யேசுவைப்பிடித்தவர்கள் அவரைப் பிரதான ஆசாரியனாகிய காய்பாவினிடத்துக்குக் கொண்டுபோனார்கள், அங்கே வேதபாரகரும் மூப்பருங்கூடியிருந்தார்கள்.

௫௮ பேதுருவோ வெகுதூரத்திலே அவரைப் பிரதான ஆசாரியனுடைய அரண்மனைமட்டும் பின்சென்று, உள்ளே பிரவேசித்து, முடிவைப் பார்க்கிறதற்கு வேலைக்காரருடனே உட்கார்ந்தான்.

௫௯ ஆனால் பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஆலோசனைக்கூட்டமனைத்தும் யேசுவுக்கு விரோதமாக அவரைக் கொலைசெய்யும்படிக்கு, பொய்ச்சாட்சியைத் தேடினார்கள்.

௬௰ ஆனால் அகப்படவில்லை. அனேகம் பொய்ச்சாட்சிகள் சேர்ந்துவந்தும் அகப்படவில்லை. கடைசியிலே ரெண்டு * பொய்ச்சாட்சிகள் சேர்ந்து வந்து: * சங்கீ. ௩௫, ௰௧. ௰௨.

௬௧ பாராபரனுடைய * தேவாலயத்தைத் தகர்க்கவும் மூன்றுநாளைக்குள்ளே கட்டவும் என்னாலேயாமென்றிவன் சொன்னானென்றார்கள். * யோவா. ௨, ௰௯—௨௧.

சாஉ பிறதான ஆசாரியன் எழுந்திருந்து, அவருடனே: நீ பிறத்தியுத்தரமொன்றுஞ் சொல்லாயோ, இவர்கள் உன்பேரிலே என்ன சாட்சி சொல்லுகிறார்களென்றான்.

சாங ஆனாலும் யேசு மவுனமாயிருந்தார். அப்போது பிறதான ஆசாரியன் மாறுத்தரமாக அவருடனே: நீ பராபரனுடைய சுதனாகிய கிறிஸ்துவாயிருக்கிறாயோவென்று எங்களுக்குச் சொல்லு, ஜீவனுள்ள பராபரன் பேரிலே உன்னை ஆணையிடுகிறேனென்றான்.

சாச யேசு அவனுடனே: நீர் சொன்னபடியே, பின்னையும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுமுதல் * மனுஷனுடைய குமாரன் சர்வவல்லமையின் வலதுபாரிசத்திலே உட்காந்திருக்கவும் வானத்து மேகங்களின்மேலே வரவுங் காண்பீர்களென்றார்.

* யகூ, உஎ. உரு

சாரு அப்போது பிறதான ஆசாரியன் தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: இவன் தேவதூஷணஞ் சொன்னான், இனிச் சாட்சிகள் நமக்குத் தேவையாயிருக்கிறதென்ன, இதோ இவன் தூஷணிப்பதை இப்போது கேட்டீர்களே.

சாசா உங்களுக்கென்னமாய்த் தோணுதென்றான். அதற்கவர்கள்: மரணத்துக்கேதுவாயிருக்கிறானென்று பிறத்தியுத்தரஞ் சொன்னார்கள்.

சாஎ * அப்போது அவருடைய முகத்திலே துப்பி * அவரைக் குட்டினார்கள். சிலர் அவரை அறைந்து, யெச, ருய, சா.

சாஅ கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் ஆரென்று தீர்க்கதரிசனமாய் எங்களுக்குச் சொல்லுமென்றார்கள்.

சாகூ ஆனாலும் பேதுரு அரமனையிலே வெளியே உட்காந்திருந்தான். அப்போது ஒரு வேலைக்காரி அவனண்டை வந்து: நீயுங் கலிலேயனாகிய யேசுவோடிருந்தாயென்றாள்.

எய அவன் எல்லாருக்கும் முன்பாக மறுதலித்து: நீ சொல்லுகிறதை அறியேனென்றான்.

எக அவன் முன்கட்டத்திலே புறப்பட்டபின் வேறொருத்தி அவனைக் கண்டு, அங்கேயிருந்தவர்களுடனே: இவனும் நசரேயனாகிய யேசுவோடேகூட இருந்தானென்றாள்.

எஉ அவன் மறுபடியும்: அந்த மனுஷனை அறியேனென்று ஆணையிட்டு மறுதலித்தான்.

எங சற்றுநேரத்துக்குப்பின்பு அங்கே நின்றவர்கள் சேர்ந்து வந்து, பேதுருவுடனே: மெய்யாகவே நீயும் அவர்களிலொருவன், ஏனெனில் உன் பேச்சும் உன்னை வெளிப்படுத்துகிறதென்றார்கள்.

எச அப்போது: அந்த மனுஷனை அறியேனென்று அவன் சபித்துக்கொள்ளவுஞ் சத்தியம் பண்ணவுந் துவக்கினான். உடனே சாவல் கூவிற்று.

எரு அப்போது பேதுரு: சாவல் கூவுகிறதுக்கு முன்னே நீ மூன்றுதரம் என்னை மறுதலிப்பாயென்று யேசு தன்னுடனே சொன்ன வசனத்தை நினைத்துக்கொண்டு, வெளியே புறப்பட்டு, மனங்கசந்தழுதான்.

## உஎ. அதிகாரம்.

### ¶ யூதா நான்றுகொண்டு செத்தது.

விடியற்காலமானபோதோவென்னில் * சகல பிரதான ஆசாரியர்களும் ஜனத்தின் மூப்பரும், யேசுவைக் கொலைப்படுத்தும்படிக்கு அவருக்கு விரோதமாக யோசனைபண்ணி; * சங். உ, உ. மாற்கு. யரு, க.

உ அவரைக் கட்டிக்கொண்டுபோய், பொந்தியுபிலாத்தென்கிற துரைக்கு அவரை ஒப்புக்கொடுத்தார்கள்.

௩ அப்பொழுது அவரைக் காட்டிக்கொடுத்த யூதா அவர் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டதைக் கண்டு மனஸ்தாபப்பட்டு, அந்த முப்பது வெள்ளிக்காசை பிரதான ஆசாரியர்களுக்கும் மூப்பருக்கும் திருப்பிக் கொண்டுவந்து:

௪ குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்கொடுத்து நான் பாவஞ்செய்தேனென்றான். அதற்கு அவர்கள்: எங்களுக்கென்ன, நீயே பாரென்றார்கள்.

ரு அப்பொழுது அவன் அந்த வெள்ளிக்காசை தேவாலயத்திலே எறிந்து, புறப்பட்டுப்போய், * நான்றுகொண்டான். * அப்போ. க, யஅ.

சா ஆனால் பிரதான ஆசாரியர்கள் அந்த வெள்ளிக்காசை எடுத்து: அதுகளைக் காணிக்கைப் பெட்டியிலே போடப்போகாது, ஏனென்றால் இரத்தக்கிரயமாயிருக்குதென்று சொல்லி,

எ ஆலோசினைபண்ணி, அதுகளாலே பரதேசிகளை அடக்கம்பண்ணுவதற்கு, குயவனுடைய நிலத்தைக் கொண்டார்கள்.

அ ஆதுநிமித்தியமாய் அந்த நிலம் இந்நாள்வரைக்கும் * இரத்தநிலமென்னப்படுகுது. * அப். க, யகூ.

கூ அப்பொழுது யெரேமியா தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறிற்று, அதாவது: அவர்கள் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் மதிக்கப்பட்டவரின் விலைக்கிரயமாகிய முப்பது வெள்ளிக்காசை வாங்கி, * சகரி, யக, யஉ. யங.

ய அதுகளை, கர்த்தர் எனக்குக் கற்பித்தபடி, குயவனுடைய நிலத்துக்குக் கொடுத்தார்களென்கிறதுதானே.

### ¶ கிறிஸ்து பிலாத்துவுக்கு முன்பாகப் பட்ட பாடுகள். மாற்கு. யரு, க—யகூ, லூக். உங, க—ரு. யங—உரு. யோவ. யஅ. உஅ—சய. யகூ, க—யசா.

யக யேசுவோவென்றால் துரைக்கு முன்பாக நின்றார். துரை அவரை: நீ யூதருடைய ராசாவோவென்று கேட்டான். யேசு அவனுடனே: நீர் சொல்லுகிறபடியேயென்றார்.

யஉ பிரதான ஆசாரியர்களாலும் மூப்பராலும் அவர் குற்றஞ்சாட்டப்படுகையிலே அவர் மறுஉத்தரமொன்

றுஞ்

த்தரஞ்சொல்லவில்லை.

ய௩ அப்போ பிலாத்து அவருடனே: அவர்கள் உன பேரிலே எத்தனை சாட்சி சொல்லுகிறார்களென்று நீ கேட்கவில்லையோவென்றான்.

ய௪ அவரோ துரைக்கு மிகவும் ஆச்சரியமாக ஒரு வார்த்தைக்காகிலும் அவனுக்குப் பிரதியுத்தாரஞ் சொல்லாதிருந்தார்.

ய௫ ஆனால் பண்டிகைதோறும், காவல்பண்ணப்பட்டவர்களில் ஜனம் வேணுமென்று கேட்கிற ஒருவனை அவர்களுக்கு விடுதலையாக்கத் துரைக்குப் பழக்கமாயிருந்தது.

ய௬ அப்போ தோவெளிக் காவல்பண்ணப்பட்டவர்களில் பறபா என்னப்பட்ட பேர்போன ஒருவன் அவர்களுக்கிருந்தான்.

ய௭ ஆகையால் அவர்கள் கூடியிருக்கையில் பிலாத்து அவர்களுடனே: நான் எவனை உங்களுக்கு விடுதலைப்பண்ணவேணுமென்றிருக்கிறீர்கள், பறபாவையோ வல்லது க்றீஸ்துவென்னப்படுகிற யேசுவையோவென்றான்.

ய௮ அதேதென்னில் பொறாமையினாலே அவரை ஒப்புக்கொடுத்தார்களென்றறிந்தான்.

ய௯ அவன் ஞாயாசனத்தில் உட்கார்ந்திருக்கையில் அவனுடைய பெண்சாதி அவனுக்கு ஆளனுப்பி: உமக்கும் அந்த நீதிமானுக்குங் கவை வேண்டாம், ஏனென்றால் இன்று சொப்பனத்தில் அவர் நிமித்தியம் வெகுபாடுபட்டேனென்று சொல்லச்சொன்னாள்.

உய பிரதான ஆசாரியர்களும் மூப்பருமோவென்றால் பறபாவைவிடக் கேட்கிறதற்க்கும் யேசுவையோ கொல்லுவதற்க்குங் கும்புகளைச் சம்மதப்படுத்தினார்கள்.

உக துரை மறுஉத்தாரமாக அவர்களுடனே: இந்த இருவரிலே எவனை நான் உங்களுக்கு விடுதலைப்பண்ணவேணுமென்றான். அவர்கள்: பறபாவையென்றார்கள்.

உஉ பிலாத்து அவர்களுடனே: ஆனால் க்றீஸ்துவென்னப்படுகிற யேசுவை என்ன செய்வேனென்றான். எல்லாரும் அவனுடனே: சிலுவையில் அறையப்படட்டுமென்றார்கள்.

உ௩ துரையோவென்றால்: ஏன், என்ன பொல்லாங்குப் பண்ணினானென்றான். ஆனால் அவர்கள்: சிலுவையில் அறையப்படட்டுமென்று அதிகமாக் கூப்பிட்டார்கள்.

உ௪ பிலாத்து ஒன்றுமாகாமல் கலகம் அதிகப்படுகிறதைக் கண்டு, தண்ணீரை அள்ளி, கும்புக்கு முன்பாகக் கைகளைக் கழுவி: இந்த நீதிமானுடைய இரத்தத்துக்கு நான் குற்றமற்றவன், நீங்களே பாருங்கோளென்றான்.

உ௫ ஜனமெல்லாம் பிரதியுத்தாரமாக: அவனுடைய இரத்தம் * எங்கள் மேலும் எங்கள் பிள்ளைகள் மேலும் இருப்பதாகவென்றார்கள். * உ௩, ௩௫.

உ௬ * அப்போ பிலாத்து பறபாவை அவர்களுக்கு விடுதலையாக்கி, யேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையப்படுவதற்கு ஒப்புக்கொடுத்தான்.

உஎ அப்போது துரையின் சேவகர் யேசுவை அதிகாரசாலையிலே கொண்டுபோய், சேனையெல்லாம் அவர்மேலே கூட்டி,

உஅ அவர் வஸ்திரங்களைக் களைந்து, சிகப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி.

உகூ முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேலே வைத்து, அவர் வலதுகையிலே ஒரு கோலைக் கொடுத்து அவர் முன்பாக முழங்கால்படியிட்டு: யூதருடைய ராசாவே, வாழ்கவென்று அவரைப் பரியாசம்பண்ணி,

ஙய * அவர்மேலே துப்பி, கோலை எடுத்து, அவர் சிரசிலே அடித்தார்கள். * உசா, சாஎ. யேசா. ருய, சா.

¶ அவர் சிலுவையில் அறையுண்டது
மாற்கு. யரு. உய—ஙசா.
லூக். உங, உசா—சரு.
யோவா. யகூ, யஎ—உகூ.

ஙக அவரைப் பரியாசம்பண்ணின பின்பு அவருக்குத் துரைமேலங்கியைக் கழற்றி அவருடைய வஸ்திரங்களை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறைவதற்குக் கொண்டுபோனார்கள்.

ஙஉ புறப்படுகையில், சீமோனென்னும் நாமமுள்ள கிரேனேயனான ஒரு மனுஷனைக் கண்டார்கள், அவனை அவருடைய சிலுவையைச் சுமக்கப் பலவந்தம்பண்ணினார்கள்.

ஙங அவர்கள் தலையோட்டிடமென்றர்த்தங்கொள்ளுங் கொல்கொதா என்னப்படுகிற ஸ்தலத்துக்கு வந்தபோது,

ஙச பிச்சுக்கலந்த * காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள். அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதேபோனார். * சங்கீ. சாகூ, உஉ.

ஙரு அவரைச் சிலுவையில் அறைந்தபின்பு அவர் வஸ்திரங்களைச் சீட்டுப்போட்டுப் பங்கிட்டார்கள். என் வஸ்திரங்களைத் தங்களுக்குள் பங்கிட்டு என்னுடையின்மேலே சீட்டுப்போட்டார்களென்று * தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டது நிறைவேறத்தக்கதாக. * சங்கீ. உஉ, யஅ.

ஙசா அவர்கள் உட்கார்ந்து அங்கே அவரைக் காத்திருந்தார்கள்.

ஙஎ அவர் சிரசுக்குமேலாக: இவன் யேசு யூதருடைய ராசாவென்று அவருடைய ஆக்கினையின் முகாந்தரத்தை எழுதிப்போட்டார்கள்.

ஙஅ அப்போது இரண்டு கள்ளர், வலதுபுறத்தில் ஒருவனும் இடதுபுறத்தில் ஒருவனுமாக, அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்டார்கள். * யேசா. ருங, யஉ.

ஙகூ ஆனால் அந்த வழிநடந்துபோனவர்கள் அவரைத் தூஷணித்து, * தங்கள் தலைகளைத் துலுக்கி: * சங்கீ. உஉ, அ.

சய * தேவாலயத்தை இடித்து மூன்று நாளைக்குள்ளே கட்டுகிறவனே, உன்னை நீதானே ரட்சி, நீ பராபரனுடைய சுதனானால், சிலுவையிலிருந்திறங்கெண

கொண்டார்கள். * உகூ, கூக.

௪௧ அந்தப்படிக்குப் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரோடும் மூப்பரோடுங்கூட, பரியாசம் பண்ணிச் சொன்னதாவது:

௪௨ மற்றவர்களை ரட்சித்தான், தன்னைத்தானே ரட்சிக்கமாட்டான், இவன் இஸ்ரவேலின் ராசாவானால் இப்போது சிலுவையிலிருந்திறங்கட்டும், அப்போது அவனை விசுவாசிப்போம்.

௪௩ * பராபரனை நம்பியிருந்தானே, அவர் அவன் பேரிலே பிரியமாயிருந்தால் இப்போது அவனை விடுவிக்கட்டும், ஏனென்றால் நான் பராபரனுடைய சுதனென்று சொன்னானே என்றார்கள். * சங்கீ. உஉ, ௮.

௪௪ அவ்விதமாயத்தானே அவனோடேகூடச் சிலுவையிலறையப்பட்ட கள்ளரும் அவனை நிந்தித்தார்கள்.

௪௫ ஆறாம் மணிவேளை துவக்கி ஒன்பதாம் மணிவேளைமட்டும் பூமியெங்கும் அந்தகாரமுண்டாச்சுது.

௪௬ ஒன்பதாம் மணிவேளையிலே யேசு மகா சத்தத்தோடே: ஏலீ, ஏலீ, லாமா சபக்தானியென்று கூப்பிட்டார். அது: * என் பராபரனே, என் பராபரனே, நீர் என்னைக் கைவிட்டதென்னவென்று அர்த்தமாயிருக்குது. * சங்கீ. உஉ, உ. எபிரே. ரு, எ.

௪எ அங்கே நின்றவர்களில் சிலர் கேட்ட போது: இவன் எலியாவைக் கூப்பிடுகிறானென்றார்கள்.

௪௮ உடனே அவர்களில் ஒருத்தன் ஓடி, கடற்காளானை எடுத்து, காடியாலே நிரப்பி, அதை ஒரு கோலிலே மாட்டி அவருக்குக் குடிக்கக் கொடுத்தான்.

௪௯ மற்றவர்களோவென்றால்: பொறு எலியா அவனை ரட்சிக்க வருகிறானோ பார்ப்போமென்றார்கள்.

¶ அவர் மரித்தடக்கம்பண்ணப்பட்டது.
மாற்கு. ௰௫, ௩எ — ௪எ. லூ. உ௩,
௪௬ — ௫௬. யோவா. ௰௯,
௩௰ — ௪உ.

௫௰ ஆனாலேசு மறுபடியும் மகாசத்தமாய்க் கூப்பிட்டு ஆவியை விட்டார்.

௫௧ அப்போதே தேவாலயத்தின் * திரைச்சீலை மேல் துவக்கிக் கீழ்மட்டும் ** ரெண்டாகக் கிழிந்தது, பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. * உ. மோ. உசு, ௩௧ — ௩௩. ** எபிரே. ௰, ௰௯ — உ௰.

௫௨ கல்லறைகளுந் திறந்துபோய, நித்திரையடைந்திருந்த பரிசுத்தவான்களுடைய அநேகஞ் சரீரங்களுமெழுந்திருந்தது.

௫௩ அவரெழுந்த பிற்பாடு அவர்கள் கல்லறைகளை விட்டுப் புறப்பட்டுப் பரிசுத்த பட்டணத்துக்குள்ளே பிரவேசித்து அநேகருக்குக் காணப்பட்டார்கள்.

௫௪ சேர்வைக்காரனு மவனோடேகூட யேசுவைக் காத்திருந்தவர்களுமோவென்றால், பூமியதிர்ச்சியையுஞ் சம்பவித்த காரியங்களையுங் கண்டு மிகவும்

கவும்பயந்து: மெய்யாய் இவர் பராபரனுடைய சுதனாயிருந்தாரென்றார்கள்.

௫௫ ஆனால் * யேசுவுக்கு ஊழியஞ்செய்து கலிலேயாவிலிருந்து அவரைப் பின்சென்று வந்த அநேகம் ஸ்திரீகள் அங்கே தூரத்திலே பார்த்துக்கொண்டிருந்தார்கள். * லூ. ௮. ௨.

௫௬ அவர்களில் மக்தலாவூர் மரியாளும் யாக்கோபுக்கும் யோசேக்குந் தாயாகிய மரியாளும் செபெதேயுவின் குமாரருடைய தாயுமிருந்தார்கள்:

௫௭ அஸ்தமனமானபோது, அரிமத்தியா ஊரானாகிய ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் வந்தான், அவன் பேர் யோசேப், அவன்தானும் யேசுவுக்குச் சீஷனானவன்.

௫௮ இவன் பிலாத்தனிடத்துக்குப் போய் யேசுவின் சரீரத்தைக் கேட்டான், அப்போ பிலாத்து சரீரத்தைக் கொடுக்கக் கட்டளையிட்டான்.

௫௯ யோசேப் சரீரத்தையெடுத்து, துய்யதான மெல்லிய புடவையிலே சுத்தி,

௬௦ * தான் கல்மலையிலே வெட்டுவித்திருந்த தன்னுடைய புதிய கல்லறையிலே அதை வைத்து, கல்லறையின் வாசலிலே ஒரு பெரிய கல்லைப் புரட்டிவைத்துப் போனான். * யெசா. ௫௩, ௯.

௬௧ ஆனால் அங்கே மக்தலாவூர் மரியாளும் வேறே மரியாளுங் கல்லறைக்கெதிராக உக்கார்ந்திருந்தார்கள்.

௬௨ ஆயத்தநாளுக்குப் பின்னான மறுநாளிலே பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் பிலாத்திடத்திலே கூடிவந்து சொன்னதாவது:

௬௩ ஆண்டவனே, அந்த எத்தன் இன்னமுயிரோடிருக்கையிலே, தான் மூன்று நாளைக்குப் பிறகு எழுந்திருப்பேனென்று சொன்னதை நினைத்திருக்கிறோம்.

௬௪ ஆகையால் அவனுடைய சீஷர் ராத்திரியிலே வந்து அவனைக் களவாயக் கொண்டுபோய்: மரித்தோரிலிருந்தெழுந்தானென்று சனங்களுக்குச் சொல்லி, பிந்தின எத்து முந்தின எத்திலுங் கொடியதாகாதபடிக்கு நீர் மூன்றாம் நாள்வரைக்குங் கல்லறையைப் பத்திரம் பண்ணக் கற்பியுமென்றார்கள்.

௬௫ பிலாத்து அவர்களோடே: உங்களுக்குக் காவல் கொடுத்திருக்குது, நீங்கள் போய் உங்களுக்குத் தெரிந்தபடி பத்திரம் பண்ணுங்கோளென்றான்.

௬௬ அவர்கள் போய், கல்லை முத்திரைபோட்டுக் காவல் வைத்து, கல்லறையைப் பத்திரம் பண்ணினார்கள்.

## ௨௮. அதிகாரம்.

¶ க்றீஸ்து உயிர்த்தெழுந்ததைத் தேவதூதன் அறிவித்தது. மாற்கு. ௧௬.
௧—௮. லூ. ௨௪, ௧—௭.

ஓய்வுநாள் முடிந்து, வாரத்தின் முதலாங்கிழமை விடிகையில், மக்தலாவூர் மரியாளும் வேறே

மரி

மரியாளுங் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்.
௨ இதோ மகா பூமியதிர்ச்சலுண்டாச்சுது. ஏனென்றால் பராபரனுடைய தூதன் வானத்திலிருந்திறங்கி, சேர வந்து, கல்லை வாசலிலிருந்து புரட்டித் தள்ளி, அதின்மீதிலே உட்கார்ந்தான்.
௩ அவனுடைய ரூபம் மின்னலைப் போலவும் அவனுடைய உடை உறைந்த மழையின் வெண்மையாகவுமிருந்தது.
௪ காவல் காத்திருந்தவர்களோவெனில் அவனுக்குப் பயந்ததினால் அதிர்ந்து செத்தவர்களைப் போலானார்கள்.
௫ ஆனால் தூதன் உத்தரவு கொடுத்து ஸ்திரீகளுடனே சொன்னதாவது: நீங்கள் பயப்படாதேயுங்கோள், ஏனென்றால் சிலுவையிலறையப்பட்ட யேசுவைத் தேடுகிறீர்களென்றறிவேன்.
௬ அவர் இங்கேயில்லை, அவர் தாம் சொன்னபடி * யெழுந்திருந்தார். நீங்கள் வந்து கர்த்தர் வைக்கப்பட்ட ஸ்தலத்தைப் பார்த்து. * ௰௬, ௨௧. ௰௭, ௨௩. ௨௰, ௰௯.
௭ சீக்கிரமாய்ப் போய், அவர் மரித்தோரிலிருந்தெழுந்தாரென்று அவருடைய சீஷருக்குச் சொல்லுங்கோள். இதோ உங்களுக்கு முன்னே * கலிலேயாவுக்கேகுவார், அங்கே அவரைக் காண்பீர்கள், இதோ உங்களுக்குச் சொன்னேனென்றான். * ௨௬, ௩௨.
௮ அவர்கள் பயத்தோடும் மகா சந்தோஷத்தோடுஞ் சீக்கிரமாகக் கல்லறையை விட்டுப் புறப்பட்டு, அவருட சீஷருக்கறிவிக்கவோடினார்கள்.

## ¶ அவர் தாமே ஸ்திரீகளுக்குத் தெரிசனையானது.

௯ ஆனால் அவர்கள் அவருடைய சீஷருக்கு அறிவிக்கப் போகிறபோது, இதோ யேசு அவர்களுக்கெதிர்ப்பட்டு: வாழுங்கோளென்றார். அவர்களோவெனில் சேர்ந்து வந்து அவர் பாதங்களைப் பிடித்து, அவரைப் பணிந்துகொண்டார்கள்.
௰ அப்போ யேசு அவர்களுடனே: பயப்படாதேயுங்கோள், போய், என் * சகோதரர்கள் கலிலேயாவுக்குப் போகும்படிக்கு இதை அவர்களுக்கறிவியுங்கோள், அங்கே என்னைக் காண்பார்களென்றார்.
* யோவா, ௨௰, ௰௭.

## ¶ அவர் உயிர்த்தெழுந்ததுக்குக் காவல்காறர் சாட்சி சொன்னது.

௰௧ அவர்கள் போகையிலே இதோ காவல்காறரில் சிலர் பட்டணத்திலே வந்து, சம்பவித்ததெல்லாத்தையும் பிரதான ஆசாரியர்களுக்கு அறிவித்தார்கள்.
௰௨ அவர்கள் மூப்பருடனே கூடி, யோசனை பண்ணி, சேவகருக்குப் போர்ந்த திரவியங் கொடுத்து:
௰௩ நாங்கள் நித்திரை பண்ணுகையிலே அவன் சீஷாக்கள் ராத்திரியிலே வந்து அவனைக் களவாய்க் கொண்டுபோனார்களென்று சொல்லுங்கோள்.

௰௪ தேசாதிபதிக்குக் கேழ்வியானாலும், நாங்கள் அவனைப் போதித்து, உங்களைக் கவலையின்றிருக்கப் பண்ணுவோமென்றார்கள்.

௰௫ அவர்கள் திரவியத்தை வாங்கிக்கொண்டு, தாங்கள் போதிக்கப்பட்டபடி செய்தார்கள். இந்த வார்த்தை யூதருக்குள்ளே இந்நாள்வரைக்கும் பரம்பப்பட்டிருக்குது.

¶ அவர் கலிலேயாவிலே தெரிசனமாகி
அப்போஸ்தலருக்குக் கட்டளையிட்டது.
மாற்கு ௰௬, ௰௫—௰௮.

௰௬ பதினொரு சீஷர்களோவென்றால் * கலிலேயாவிலே யேசு தங்களுக்குக் குறித்திருந்த பர்வதத்துக்குப் போய், * ௨௬, ௩௨. ௨௮, ௭. ௰. ௧. கொரி. ௰௫, ௬.

௰௭ அவரைக் கண்டபோது அவரைப் பணிந்துகொண்டார்கள். சிலரோ சந்தேகப்பட்டார்கள்.

௰௮ அப்போ யேசு சேர்ந்து, அவர்களுடனே பேசிச் சொன்னதாவது: வானத்திலேயும் பூமியிலேயும் * எனக்குச் சகல அதிகாரமுங் கொடுக்கப்பட்டிருக்குது, * ௰௧, ௨௭. யோவா. ௩, ௩௫.

௰௯ ஆகையால் நீங்கள் போய், சகல சாதிகளையுஞ் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியினுடைய நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து.

௨௰ நான் உங்களுக்குக் கற்பித்ததெல்லாத்
தையுங் கைக்கொள்ள அவர்களைப் போதி
யுங்கோள். இதோ நான் லோகமுடிவு
மட்டாகச் சகல நாட்களிலும்
* உங்களுடனே கூடயி
ருக்கிறேனென்றார்.
ஆமென்.

* ௰௮, ௨௰.

# மாற்கு எழுதின

## சுவிசேஷம்.

### ௧. அதிகாரம்.

¶ கிறிஸ்து யோவானாலே ஞானஸ்நானம் பெற்றது, வனாந்தரத்திலே சோதிக்கப்பட்டது. மத். ௩, ௧ — ௬, ௧—௰௧. லூக். ௩, ௧. ௨௨. ௪, ௧—௰௩.

**ப**ராபரனுடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் துவக்கம்.

௨ தீர்க்கதரிசிகளின் புஸ்தகங்களிலே: இதோ, நாம் * உம்முடைய தூதனை உமக்கு முன்பாக அனுப்புகிறோம், அவன் உம்முடைய வழியை உமக்கு முன்னே ஆயத்தம்பண்ணுவானென்னவும், * மல்கி. ௩, ௧.

௩ * வனாந்தரத்திலே கர்த்தருடைய வழியை ஆயத்தப்படுத்துங்கோள், அவருடைய பாதைகளைச் செவ்வைபண்ணுங்கோளென்று கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டென்றும் எழுதியிருக்கிற பிரகாரமாய், * யேச. ௪௰, ௩. யோவா. ௧, ௨௩.

௪ யோவானானவன் வனாந்தரத்திலே ஞானஸ்நானங்கொடுத்து, பாவமன்னிப்புக்கென்று மனக்குணப்படுதலினுடைய ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்துக்கொண்டிருந்தான்.

௫ அவனண்டைக்கு யூதேய தேசத்தாரனைவரும் யெருசலேம்பட்டணத்தாரும் புறப்பட்டுப்போய், தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, அனைவரும் யோர்தான் நதியிலே அவனாலே ஞானஸ்நானம் பெற்றார்கள்.

௬ யோவானென்றவன் ஒட்டகமயிர் உடுப்பும் தன்னரையிலே வார்க்கச்சையுந் தரித்துக்கொண்டவனும், வெட்டுக்கிளிகளையுங் காட்டுத்தேனையும் போசிக்கிறவனுமாயிருந்தான்.

௭ அவன் பிரசங்கம்பண்ணிச் சொன்னதாவது: * என்னிலும் பெலத்தவர் என் பின்னாக வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரைக் குனிந்து அவிழ்க்க நான் பாத்திரவானல்ல. * யோவா. ௧, ௨௭.

௮ நான் * சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம்பண்ணிவித்தேன், ஆனால் அவர் பரிசுத்த ஆவியினாலே உங்களுக்கு ஞானஸ்நானம்பண்ணிவிப்பாரென்றான். * யோவா. ௧, ௨௬.

௯ அந்தநாட்களிலே சம்பவித்ததென்னவென்றால், யேசு

கலி

கலிலேயாவிலுள்ள நாசரேத்தூரிலிருந்துவந்து,
யோர்தானதியிலே யோவானாலே ஞானஸ்நா-
னம்பெற்றார்.
௧0 அவர் ஜலத்திலிருந்து கரையேறினபோது உடனே
வானங்கள் திறவுண்டதையும், * ஆவியானவர் புறாவைப்போ
லே அவர்மேல் இறங்குகிறதையுங் கண்டார். * யோவா. ௧, ௩௨—௩௪.
௧௧ நீர் நாமப்பிரியமாயிருக்கிற நம்முடைய நேசகு
மாரனாயிருக்கிறீரென்று ஒருசத்தமும் பரமண்டலங்
களிலிருந்துண்டாச்சுது.
௧௨ உடனே ஆவியானவர் அவரை வனாந்தரத்துக்குச்
செல்லப்பண்ணினார்.
௧௩ அவர் அங்கே வனாந்தரத்திலே நாற்பதுநாளிரு
ந்து, சாத்தானாலே சோதிக்கப்பட்டு, மிருகங்களோடே
இருந்தார். தேவதூதர் அவருக்கூழியஞ்செய்
தார்கள்.

¶ அவர் சுவிசேஷத்தை அறிவிக்கவும் சீஷரை
அழைக்கவுந் துவக்குகிறது.
மத். ௪, ௧௨—௨௨.

௧௪ யோவான் ஒப்புக்கொடுக்கப்பட்டபி
ன்பு இயேசு கலிலேயாவிலே வந்து, பராபரனுடைய
ராட்சியத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து:
௧௫ * காலம் நிறைவேறி, பராபரனுடைய ராட்சி
யஞ் சமீபமாய்ச் சேர்ந்தது, குணப்பட்டு சுவிசேஷத்
தை விசுவாசியுங்கோளென்றார். * கலா. ௪, ௪.
௧௬ அவர் கலிலேயாக்கடலின் ஓரத்தே நடக்கக்கொ
ள்ள சீமோனையும் அவன் சகோதரன் அந்திரேயா
வையுங் கடலிலே வலைபோட்டுக்கொண்டிருக்கக் கண்டார்; ஏனென்
றால் மீன்பிடிக்கிறவர்களாயிருந்தார்கள்.
௧௭ யேசு அவர்களுடனே: என்பிறகே வாருங்
கோள், உங்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்
குவேனென்றார்:
௧௮ உடனே தங்கள் வலைகளை விட்டு அவரைப்
பின்சென்றார்கள்.
௧௯ அவர் அவ்விடம்விட்டுச் சற்றப்பாலே போன
போது, செபெதேயுவின் குமாரனாகிய யாக்கோபையும்
அவன் சகோதரனாகிய யோவானையும் படகிலே வலைக
ளைப் பொத்தக்கண்டார்.
௨0 உடனே அவர்களை அழைத்தார், அப்போதவர்
கள் தகப்பனாகிய செபெதேயுவைக் கூலியாளர்களுட
னே படகிலே விட்டு, அவர்பிறகே போனார்கள்.

¶ அவர் பெலனுள்ள போதகம்பண்ணி,
பிசாசுகளைத் துரத்தி வியாதிக்கார
ரைச் சுகமாக்கினது.
லூ. ௪, ௩௧.

௨௧ பிறபாடு கப்பர்நகூமுக்குள் பிரவேசித்தா
ர்கள். உடனே அவர் ஓய்வுநாளிலே ஆலயத்துக்குள்
ப்பிரவேசித்து, போதகம்பண்ணினார்.
௨௨ அவருடைய போதகத்துக்காக அதிசெயப்பட்டா
ர்கள், ஏனென்றால் வேதபாரகரைப்போலல்ல *
அதி

அதிகாரமுள்ளவனைப்போலே அவர்களைப்போதகம்பண்ணுகிறவராயிருந்தார். * மத்தே. ௭, ௨௮. யோவா. ௭, ௪௬.

௨௩ * அவர்களுடைய ஆலயத்திலே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷனிருந்தான்.

௨௪ அவன்: ஐயோ, * எங்களுக்கும் உமக்குமென்ன, யேசுநாசரேத்தானே, எங்களைக் கெடுக்க வந்தீரோ, உம்மை ஆரென்றறிவேன், நீர் பராபரனுடைய பரிசுத்தர் தானே என்று கூப்பிட்டான். * ௫, ௭. மத்தே. ௮, ௨௯.

௨௫ அப்போ யேசு: நீ மவுனமாகி அவனைவிட்டுப் புறப்படென்று அதட்டினார்.

௨௬ அப்போ அசுத்த ஆவி அவனை அலைக்கழித்து, மகா சத்தமாய்க் கூப்பிட்டுப் புறப்பட்டுது.

௨௭ அதற்கெல்லாரும்: இதென்ன, இவர் அதிகாரத்துடனே அசுத்த ஆவிகளுக்குங் கற்பிக்கிறதும் அதுகள் அவருக்குக் கீழ்ப்படிகிறதுமாயிருக்கிற இந்தப் புதிதான போதகமென்னவென்று, ஒருவற்கொருவர் தர்க்கித்துக்கொள்ளும்படியாய்த் திகைத்தார்கள்.

௨௮ உடனே அவருடைய கீர்த்தி கலிலேயாவின் சுத்துப்புறமெங்கும் பரம்பிற்று.

௨௯ உடனே அவர்கள் ஆலயத்தைவிட்டுப் புறப்பட்டு, யாக்கோபோடும் யோவானோடுங்கூட * சீமோன் அந்திரேயா என்றவர்களுடைய வீட்டிலே வந்தார்கள். * மத்தே ௮, ௧௪. ௧௫.

௩௦ ஆனால் சீமோனுடைய மாமி சுரமாய்க்கிடந்தாள். உடனே அவளுடைய செய்தியை அவருக்குச் சொன்னார்கள்.

௩௧ அவர் சேர்ந்துவந்து, அவளைக் கையைப்பிடித்து அவளைத் தூக்கிவிட்டார், உடனே சுரம் அவளைவிட்டு நீங்கிற்று, அப்போ அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௩௨ * சாயுங்காலமாகி, சூரியன் அஸ்தமித்தபோதோவெனில், சகலபிணியாளிகளையும் பிசாசுபிடித்தவர்களையும் அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். மத்தே. ௮, ௧௬.

௩௩ பட்டணத்தாரெல்லாரும் வீட்டுவாசலண்டையிலே கூடிவந்தார்கள்.

௩௪ அவர் பலவியாதிகளால் வாதைப்பட்டிருந்த அனேகரைக் குணமாக்கி, அனேகம் பிசாசுகளையுந் துரத்திவிட்டு, பிசாசுகளைப் பேசவொட்டாதிருந்தார், ஏனெனில் அதுகள் அவரை அறிந்திருந்தது.

௩௫ அவர் அதிகாலமே இருட்டோடே எழுந்திருந்து புறப்பட்டு, வனாந்திரமான ஒருதலத்துக்குப் போய் அங்கே செபம்பண்ணினார். * லூ. ௫, ௧௬.

௩௬ சீமோனும் அவனோடிருந்தவர்களும் அவரைத் துடர்ந்துபோய்,

௩௭ அவரைக் கண்டபோது: உம்மை எல்லாருந் தேடுகிறார்களென்று அவரோடே சொன்னார்கள்.

௩௮ ஆனால் அவர் இவர்களுடனே: அடுத்திருக்கிற ஊர்களிலும் நான் பிரசங்கம்பண்ண அங்கே போவோம்

போமவாருங்கோள், ஏனெனில் * இதற்காகப்புறப்பட்டுவந்தேனென்றுசொல்லி, * யெசா. ௬௧, ௧.

௩௰௯ கலிலேயாவெங்கும் அவர்கள் ஆலயங்களிலே பிரசங்கம்பண்ணி, பிசாசுகளைத்துரத்திவிட்டார்.

௪௰ * ஒருகுஷ்டரோகி அவரண்டைக்குவந்து, அவரைவேண்டிக்கொண்டு அவர்முன்பாக முழங்காற்படியிட்டு அவருடனே: உமக்குச்சித்தமுண்டானால் என்னைச்சுத்தமாக்க உம்மாலேலுமென்றான். * மத்தே. ௮. ௨—௪. லூ. ௫, ௰௨—௰௪.

௪௰௧ ஆனபோதுயேசுமனதுருகி, கையைநீட்டி அவனைத்தொட்டு, அவனுடனே: எனக்குமனதுண்டு, சுத்தமாகென்றார்.

௪௰௨ இப்படி அவர்சொல்லுகையில் உடனே குஷ்டரோகம் அவனைவிட்டுநீங்கிற்று அவன்சுத்தமானான்.

௪௰௩ அவர்: நீ ஆருக்குமொன்றுஞ்சொல்லாதேபாரென்று, * அவனுக்குக்கெட்டியாய்க்கற்பித்து, * மத்தே. ௯, ௩௰.

௪௰௪ அவனுடனே: நீ போய், ஆசாரியனுக்குன்னைக்காண்பித்து, நீ சுத்தமானதின்நிமித்தியம் மோசேகற்பித்ததுகளை அவர்களுக்குச்சாட்சியாகச்செலுத்தென்றுசொல்லி, உடனே அவனை அனுப்பிவிட்டார்.

௪௰௫ ஆனால் அவன்புறப்பட்டு, வெகுவாய்ப்பிரசங்கிக்கவும் அந்தவர்த்தமானத்தைப்பிரசித்தம்பண்ணவுந்தொடங்கினான். ஆனதினால் அவர் இனிவெளியரங்கமாய்ப்பட்டணத்திலேபிரவேசிக்கக்கூடாமல். வெளியேவனாந்திரமிடங்களிலிருந்தார். ஆனாலெங்குமிருந்துசனங்கள் அவரண்டைக்குவந்தார்கள்.

## ௨. அதிகாரம்.

¶ அவர் ஒருதிமிர்வாதக்காரனைக்குணமாக்கினது. லூ. ௫, ௰௭—௨௬.

சிலநாளைக்குப்பிறபாடு அவர்திரும்பக்கப்பர்னகூமுக்குள்பிரவேசித்தார். அவர்வீட்டிலிருக்கிறாரென்றுகேழ்வியாய்.

௨ உடனே அநேகர், வாசற்படிக்குமுன்னுமிடங்கொள்ளாதபடியாய்க்கூடிவந்தார்கள். அவர்களுக்குவசனத்தைச்சொன்னார்.

௩ அப்பொழுது நாலுபேராற்சுமக்கப்பட்ட * ஒருதிமிர்வாதக்காரனை அவரண்டைக்குக்கொண்டுவந்தார்கள், * மத்தே. ௯, ௧—௮.

௪ வெகுசனமிருந்தபடியினாலே அவரருகேசேரக்கூடாமல், அவரிருந்தவீட்டின்தளத்தைத்திறப்பாக்கி, திமிர்வாதக்காரன்கிடக்கிறபடுக்கையையிறக்கினார்கள்.

௫ யேசுவோவென்றால் அவர்கள்விசுவாசத்தைக்கண்டு, திமிர்வாதக்காரனுடனே: மகனே, உன்பாவங்கள் உனக்குமன்னிக்கப்பட்டுதென்றார்.

௬ ஆனால் வேதபாரகரிற்சிலர் அங்கேஉட்கார்ந்திருந்து, தங்களிருதயங்களில்:

௭ இவனிப்படிக்கொத்த தேவதூஷணங்களைச் சொல்லுவானேன், பராபரனொருத்தரேயல்லாமல் பாவங்களை மன்னிக்கத்தக்கவராரென்று சிந்தித்துக்கொண்டிருந்தார்கள்.

௮ அவர்கள் தங்களுக்குள்ளே இப்படிச் சிந்திக்கிறதை யேசு தம்முடைய ஆவியிலே உடனே அறிந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் உங்கள் இருதயங்களிலே இப்படிச் சிந்திப்பானேன்.

௯ ஏதுவானது லகுவாயிருக்குது, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்லுவதோ, எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்லுவதோ.

௰ ஆனாலும் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரமுண்டென்று நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்காரனுடனே:

௰௧ நீ எழுந்திருந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப் போவென்று உனக்குச் சொல்லுகிறேனென்றார்.

௰௨ அப்போ எல்லாரும் விஸ்மயித்து: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று பராபரனை மகிமைப்படுத்தும்படியாய், உடனே அவன் எழுந்திருந்து படுக்கையை எடுத்துக்கொண்டு, எல்லாருக்கும் முன்பாகப் புறப்பட்டான்.

¶ அவர் ஆயக்காரரோடே போசிக்கிறதும் உபவாசத்தைக் குறித்து உத்தாரஞ்சொன்னதும். லூ. ௫, ௨௭——௩௯.

௰௩ மறுபடியும் அவர் கடலண்டைக்குப் புறப்பட்டுப் போனார், அப்போது ஜனமெல்லாம் அவரண்டைக்கு வந்தது, அவர்களுக்கு உபதேசித்தார்.

௰௪ அவர் நடந்துபோகையிலே, * ஆயத்துறையிலே உட்கார்ந்திருந்த அல்பேயுவின் குமாரனாகிய லேவியைக் கண்டு, அவனுடனே: என்னைப் பின்செல்லென்றார். அவனெழுந்திருந்து அவரைப் பின்சென்றான். * மத்தே. ௯, ௯——௰௭.

௰௫ அப்போது அவர் அவன் வீட்டிலே பந்தியிருக்கையிலே, அநேக ஆயக்காரரும் பாவிகளும் யேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். அநேகரானவர்கள் அவரைப் பின்சென்றவர்களும் அநேகம்பேராயிருந்தார்கள்.

௰௬ வேதபாரகரும் பரிசேயரும், அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசிக்கிறதைக் கண்டு, அவருடைய சீஷருடனே: அவர் ஆயக்காரரோடும் பாவிகளோடும் போசிக்குடிக்கிறதேதென்றார்கள்.

௰௭ யேசு அதைக் கேட்டபோது அவர்களுடனே: பெலனுள்ளவர்களுக்கு வைத்தியன் தேவையாயிராமல், பிணியாளிகளுக்குத் தேவையாயிருக்குது, நான் நீதிமான்களையல்ல, பாவிகளைக் குணப்படுதலுக்கழைக்கவந்தேனென்றார்.

௰௮ யோவானுடைய சீஷரும் பரிசேயருடைய சீஷரும் உபவாசிக்கிறவர்களாயிருந்தார்கள். ஆகையால்

வந்து,

வநது, அவருடனே: யோவானுடைய சீஷருமபரி
சேயருடையசீஷருமஉபவாசிககககொளள உமமு
டையசீஷர்உபவாசியாதிருபபானேனனெனறார்கள.
௰௯ யேசுஅவர்களுககுசசொனனதாவது: கலியா
ணமனுஷர், மணவாளனதஙகளுடனேகூடயிருக
குமமட்டுமஉபவாசிககககூடுமோ, அவர்களமண
வாளனதஙகளுடனேகூடஇவவதத்துககுமகாலம
டடுமஉபவாசிக்ககககூடாது.
௨௰ ஆனாலமணவாளனஅவர்களைவிட்டெடுப
டுமநாளககளவரும, அபபோஅநதநாளககளிலே
உபவாசிபபார்கள.
௨௧ ஒருவனுஙகோடிததுணியைபபழவஸதிரத
திலேதையான, தைததாலஅதிலேதைததபுதுததுணி
டுபழையதைவிட்டெடுபடுபபோய, பினனையுங
கெடடீறலாகுது.
௨௨ ஒருவனுநதிவிதாடசபபழைஙகளிலே புதுரசத
தைபபழநதுருததிகளிலவார்ததுவைககிறதுமிலலை,
வைததால அநதபபுதுரசநதுருத்திகளைபபீறிபபோ
டடு, ரசமுஞசிநதிபபோம, துருததிகளுஙகெடடுப
போம. புதுரசததைப புதுததுருததிகளிலவார்ததுவை
ககவேணுமெனறார்.

¶ ஓயவுநாளிலகதிர்களைககொயதசீஷருக
குஅவர்பரிநதுபேசினது. லூா. ௬,
௧—௫.

௨௩ பினனையுஞசமபவிததததெனனவெனறால அவர்ஓய
வுநாளிலே * விளைசசலவழியேபோறபோது, அவ
ருடையசீஷர்நடககையிலகதிர்களைககொயயதது
வஙகினார்கள. * மததே. ௰௨, ௧—௮.
௨௪ பரிசேயர்அவருடனே: இதோஓயவுநாளிலே
அடாததைததனசெயகிறார்களெனறார்கள.
௨௫ அபபோதவரிவர்களுககுசசொனனதாவது:
தாவீது, தனககுததேவையாயிருநது, தானுநதனனு
டனேகூடயிருநதவர்களுமபசிததிருககிறபோது.
௨௬ * அபயததாரெனறபிறதானஆசாரியனகால
ததிலேபராபரனுடையவீட்டுககுளபபிறவேசிதது,
ஆசாரியர்களனறிஒருததனுமபோசிககததகாததெய
வசமுகததபபஙகளைபபோசிதது, தனனுடனேயிரு
நதவர்களுககுஙகொடுதததவனசெயததையினீஙக
ளொருககாலுமவாசிததிலலையோவெனறார். *
௧. சாமு. ௨௧, ௬.
௨௭ பினனையுமஅவர்களுடனே: மனுஷனஓயவு
நாளுககாகஉணடாகவிலலை, ஓயவுநாளமனுஷ
னுககாகஉணடாசசுது.
௨௮ ஆகையாலமனுஷனுடையகுமாரனஓயவுநா
ளுககுஙகூடஆணடவராயிருககிறாரெனறார்.

## ௩. அதிகாரம.

¶ சூமபினகையுளளவனைச்சொஸததுணே
மாககினது. லூா. ௬, ௬—௰௧.

திருமபஆலயததுககுளபபிறவேசிததார். அஙகே *
சூமபி

கூம்பின கையுள்ள ஒரு மனுஷன் இருந்தான். * மத்தே.
௰௨, ௯—௰௪.
௨ அப்பொ அவர்பேரிலே குற்றஞ்சாட்டும்படிக்கு அவனை ஓய்வுநாளிலே சொஸ்தமாக்குவாரோ வென்று அவரை நோக்கியிருந்தார்கள்.
௩ அப்பொ அவர் கூம்பின கையுள்ள மனுஷனுடனே: எழுந்து நடுவே வாவென்று சொல்லி.
௪ அவர்களுடனே: ஓய்வுநாளிலே நன்மை செய்வதோ, தின்மை செய்வதோ, ஜீவனை ரட்சிப்பதோ கொல்லுவதோ, எது நியாயமாயிருக்குமென்றார். அப்பொ அவர்கள் மௌனமாயிருந்தார்கள்.
௫ அவர் கோபத்துடனே அவர்களைச் சுற்றிலும் பார்த்து, அவர்களிருதயத்தின் கடினத்துக்காகத் துக்கப்பட்டு, அந்த மனுஷனுடனே: உன் கையை நீட்டென்றார். அவன் நீட்டினான், அவன் கை மற்றக் கையைப்போலச் சொஸ்தமாகிச் சீருக்கு வந்தது.
௬ அப்பொ பரிசேயர் புறப்பட்டுப்போய், உடனே ஏரோதேய மனுஷருடனே கூட அவரைக் கொலைப்படுத்த அவருக்கு விரோதமாய் ஆலோசனைபண்ணினார்கள்.

## ¶ அவர் கடலோரத்திலே செய்த அற்புதங்கள்

௭ அப்பொ யேசு தம்முடைய சீஷருடனே கூட அவ்விடம் விட்டுக் கடலோரத்துக்குப் போனார், வெகு திரளான ஜனங்கள் கலிலேயாவிலும் யூதேயாவிலும்,
௮ யெருசலேமிலும் இதுமேயாவிலும் யோர்தானுக்கக்கரையிலுமிருந்து வந்து அவரைப் பின்சென்றார்கள். தீருவுக்கும் சீதோனுக்கும் சுத்துப்புறத்தாராகிய வெகு திரளான ஜனங்களும் அவர் எத்தனை பெரிய காரியங்களைச் செய்தாரென்று கேட்டு அவரண்டைக்கு வந்தார்கள்.
௯ ஜனம் தம்மை நெருக்காதபடிக்கு அது நிமித்தியம் தமக்கு ஒரு படவு ஆயத்தமாயிருக்கத் தம்முடைய சீஷருக்குச் சொன்னார்.
௰ ஏனென்றால் அநேகரைச் சொஸ்தமாக்கினார். அதினாலே வாதைப்பட்டயாவரும் அவரைத் தொடுவதற்கு அவர்மேலே விழுந்தார்கள்.
௰௧ அசுத்த ஆவிகளும் அவரைக் காணும்போது, அவர்முன்னே விழுந்து: நீர் பராபரனுடைய குமாரனாயிருக்கிறீரென்று கூப்பிட்டது.
௰௨ * அப்பொ தம்மைப் பிரசித்தம்பண்ணவேண்டாமென்று அதுகளை மிகுதியும் அதட்டினார். * ௧, ௨௫.

## ¶ அவர் அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டது. லூ. ௬, ௰௨—௰௬.

௰௩ அவர் ஒரு பருவதத்தின்மேலேறி, தமக்குச் சித்தமானவர்களை வரவழைத்தார், அவர்கள் அவரண்டைக்கு வந்தார்கள்.
௰௪ அப்பொ அவர் பன்னிரண்டுபேரை, தம்முடனே கூடவிருக்கவும், பிரசங்கம்பண்ணத் தாம் அவர்களை அனுப்பவும்,

௧௫ அவர்கள் வியாதிகளைச் சுகமாக்கி, பிசாசு களைத் துரத்த அதிகாரமுடைத்திருக்கவும் அனுமதித்தார்.

௧௬ அதுவுமன்றி, * சீமோனை, பேதுருவென்று நாமந் தரித்தார். * மத்தே. ௰, ௨.

௧௭ செபெதேயுவின் குமாரனாகிய யாகோபையும், யாகோபின் சகோதரனாகிய யோவானையும், இவர்களுக்கு இடிமுழக்கக் குமாரரென்று அர்த்தங்கொள்ளும் பொவனெர்கேஸ் என்னும் நாமங்களைத் தரித்தார்.

௧௮ அந்திரேயாவையும் பிலிப்புவையும் பற்தொலொமேயுவையும் மத்தேயுவையும், தோமாவையும் அல்பேயுவின் குமாரனாகிய யாகோபையும், ததேயுவையுங் கானானியனாஞ் சீமோனையும்,

௧௯ தம்மைக் காட்டிக்கொடுத்த யூதா ஸ்காரியோத்தையுந்தானே; பிற்பாடு வளவுக்கு வந்தார்கள்.

¶ அவர் பரிசேயரால் தூஷணிக்கப் பட்டது.

௨௦ அவர்கள் அப்பம் புசிக்கவுங் கூடாதபடி யாய்க் கும்பல் மறுபடியுங் கூடிவந்தது.

௨௧ அவரண்டையிருந்தவர்கள் இதைக்கேட்டு, அவன் அஸ்ரியாதிருக்கிறானென்று அவனைக் கட்டப்பண்ணப் புறப்பட்டார்கள்.

௨௨ யெருசலேமிலிருந்திறங்கிவந்த வேதபாரகர்: * அவர் பெயெல்செபூலைக்கொண்டிருந்து பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறாரென்றார்கள். * லூ. ௧௧, ௧௫. மத். ௧௨, ௨௪.

௨௩ அவர்களை அவர் அழைத்து உவமைகளாய் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தானைச் சாத்தான் துரத்தக்கூடுகிறதெப்படி.

௨௪ ஒரு ராச்சியந் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்தால், அந்த ராச்சியம் நிலைநிற்கமாட்டாது.

௨௫ ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்தால் அந்த வீடு நிலைநிற்கமாட்டாது.

௨௬ சாத்தான் தனக்குத்தானே விரோதமாக எழும்பிப் பிரிந்தால், அது நிலைநிற்கமாட்டாமல் முடிவடைந்திருக்குது.

௨௭ முந்திப் பலவானைக் கட்டினாலொழிய, ஒருத்தனும் பலவானுடைய வீட்டுக்குள் புகுந்து அவனுடைமைகளைக் கொள்ளையிடக் கூடாது, கட்டினால் அப்போ அவன் வீட்டைக் கொள்ளையிடுவான்,

௨௮ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * மனுஷபுத்திரருக்குள்ள எல்லாப் பாவங்களும் அவர்கள் தூஷணிக்கும் எந்தெந்தத் தூஷணங்களும் மன்னிக்கப்படும். * லூ. ௧௨. ௰.

௨௯ ஆனாலொருவனும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணித்தால், அவனென்றென்றைக்கும் மன்னிப்படையாமல் நித்திய ஆக்கினைக்குள்ளாயிருக்கிறான்.

௩௦ அவனசுத்த ஆவியைக் கொண்டிருக்கிறானென்று சொல்லியிருந்தார்கள்.

அவர்

¶ அவர்தம்முடைய தாய்க்குஞ்சகோதரருக்கும் ஆரென்றறிவிக்கிறது:

௩௧ அவருடைய சகோதரருந்தாயும் வந்து வெளி யேநின்று, அவரை அழைத்தனுப்பினார்கள். * மத்தே. ௰௨, ௪௬—௫௦. லூக். ௮, ௰௯—௨௧.

௩௨ அவரைச்சுற்றிலுங் ஜனங்கள் உட்கார்ந்திருந்தது, அப்போ அவருடனே: இதோ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் வெளியேநின்று உம்மைத்தேடுகிறார் களென்றார்கள்.

௩௩ அவர் அவர்களுக்குப்பிரதியுத்தரமாக: என்னுடைய தாயுமென்னுடைய சகோதரரும் ஆரென்றுசொல் லி,

௩௪ தம்மைச்சூழ உட்கார்ந்திருந்தவர்களைச்சுற்றிப் பார்த்து: * இதோ என்னுடைய தாயுமென்னுடைய சகோ தரரும். * ரோமா. ௰௫, ௰௬. எபி. ௨, ௰௧.

௩௫ ஏனென்றால் எவனாகிலும் பராபரனுடைய சித் தத்தின்படியேசெய்தால், அவனே எனக்குச் சகோத ரனுஞ்சகோதரியுந்தாயுமாயிருக்கிறானென்றார்.

## ௪. அதிகாரம்.

¶ நாலுவித நிலத்தின் உவமை.
லூக். ௮, ௪—௰௮.

பின்னும் * கடலோரத்திலே போதகம்பண்ணத் துவக்கினார். வெகுதிரளான ஜனங்கள் அவரண்டை கூடினபடியினாலே அவர் படவிலேறி, கடலிலே உட்கார்ந் தார், ஜனமெல்லாங் கடலோரக் கரையிலிருந்தது. * மத்தே. ௰௩, ௧—௨௩.

௨ அப்போ அவர் அநேகக் காரியங்களை உவமைக ளாய் அவர்களுக்குப் போதித்து, தம்முடைய போ தகத்திலே அவர்களுக்குச் சொன்னதாவது:

௩ கேளுங்கோள், இதோ விதைக்கிறவன் விதைக் கப்புறப்பட்டான்.

௪ அவன் விதைக்கையிலே சம்பவித்ததேதென்றால், சிலது வழியருகே விழுந்தது, அப்போ ஆகாசத்துப் பட்சிகள் வந்து அதைப் பட்சித்துப்போட்டுது.

௫ வேறேசிலது கொஞ்சமண்ணுள்ள கற்பாறை நிலத்திலே விழுந்தது, அதற்கு ஆழமண் ணில்லாதத்தினாலே உடனே முளைத்தது.

௬ சூரியனுதித்தபோது தீய்ந்துபோய், அதுக் குவேரில்லாமையினாலே உலர்ந்துபோச்சுது.

௭ வேறேசிலது முள்ளுகளுக்குள்ளே விழுந்தது, முள் ளுகள் ஓங்கி அதை நெருக்கிப்போட்டுது, ஆகை யால் அது கனிகொடுக்கவில்லை.

௮ வேறேசிலது நல்ல நிலத்திலே விழுந்து ஓங்கி வள ருகிற பயிராகி, கனிகொடுத்து, ஒன்று முப்பதும், ஒன் று அறுபதும், ஒன்று நூறுமாய்த் தந்தது.

௯ கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவானென்று அவர்களுக்குச் சொன்னார்:

௰ ஆனால் அவர் தனித்திருக்கிறபோது அவரைச் சுற்றியி ருந்தவர்கள் பன்னிருவரோடேகூட வந்து இந்த உவமை யை அவரைக் கேட்டார்கள்.

௰௧ அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: பராபரனுடைய ராச்சியத்தின் இரகசியத்தை அறிய உங்களுக்குக் கொடுக்கப்பட்டது, புறத்தியிலேயிருக்கிறவர்களுக்கோவெனில்.

௰௨ கண்ணாரக் கண்டுங் காணாமலும் காதாரக் கேட்டும் உணராமலும் மனந்திரும்பாமலும் பாவங்கள் அவர்களுக்கு மன்னிக்கப்படாமலும் இருக்க, எல்லாம் அவர்களுக்கு உவமைகளாய்ச் சம்பவிக்குதென்றார். * ஏசா. ௬, ௯. ௰. அப்போ. ௨௮, ௨௬. ௨௭.

௰௩ பின்பு அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: இந்த உவமையை அறியீர்களோ, பின்னை எல்லா உவமைகளையும் எப்படி அறிவீர்கள்.

௰௪ விதைக்கிறவன் வசனத்தை விதைக்கிறான்.

௰௫ வசனம் விதைக்கப்படுகிற வழியருகானவர்களோவெனில், அவர்கள் கேட்கும் போது உடனே சாத்தான் வந்து அவர்கள் இருதயங்களில் விதைக்கப்பட்ட வசனத்தை எடுத்துப்போடும்.

௰௬ அப்படியே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்களுமுண்டு. அவர்கள் வசனத்தைக் கேட்கும்போது உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டு.

௰௭ தங்களிலே வேர்கொள்ளாமல் அநித்தியராயிருக்கிறார்கள், வசனத்தின் நிமித்தியமாக உபத்திரவந்துன்பமும் உண்டானால் உடனே இடறலப்படுகிறார்கள்.

௰௮ முள்ளுகளின் நடுவில் விதைக்கப்பட்டவர்களாரெனில், இவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்கள்.

௰௯ ஆனாலும் இந்தப் பிரபஞ்சத்தின் கவலைகளும் * ஐசுவரியத்தின் மயக்கமும் மற்றக் காரியங்களைத் தொட்டுண்டாகிற இச்சைகளும் உள்ளே பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போடும். அதினால் கனியற்றுப்போம். * ௧. தீமோ. ௬, ௯.

௨௰ நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்களோவெனில், இவர்கள் வசனத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதாகவும் ஒன்று அறுபதாகவும் ஒன்று நூறாகவுங் கனிகொடுக்கிறவர்களென்றார்.

௨௧ அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்னதாவது: * விளக்குக் கொண்டுவந்து விளக்குத்தண்டின் மேலே வைக்கப்படுவதற்கேயல்லாமல், மரக்காலின் கீழாகிலுங் கட்டிலின் கீழாகிலும் வைக்கப்படுவதற்குக் கொண்டுவரப்படுமோ. * மத்தே. ௫, ௰௫.

௨௨ ஏனெனில் வெளியரங்கமாகாத அந்தரங்கமுமில்லை வெளிக்குவாராத மறைபொருளுமில்லை.

௨௩ கேட்கிறதுக்கு ஒருவனுக்குக் காதுகள் உண்டாயிருந்தால், கேட்கக்கடவானென்றார்.

௨௪ அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் கேழ்விப்படுகிறதைத் தேர்ந்து பாருங்கோள், எந்த அளவினால் அளக்கிறீர்களோ அதினால் உங்களுக்கும் அளக்கப்பட்டு, கேட்கிற உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.

௨௫ ஏனெனில் * எவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்படும், எவன் இல்லாதவனாயிருக்

திருக்கிறானே அவனிடத்திலே உள்ளதும் வாங்கப்படுமென்றார். * மத்தே. ௨௫, ௨௯.

¶ பயிர் உவமை.

௨௬ பின்னையும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியம் ஒரு மனுஷன் நிலத்திலே விதையை விதைக்கிறதுபோலிருக்குது.

௨௭ ராவும் பகலுமாகிறநாளளவரையிலே நித்திரையும் பண்ணுகிறான் எழுந்துமிருக்கிறான்; அவனறியாமல் விதை முளைத்துப் பயிராம்.

௨௮ அதெப்படியென்றால் நிலந்தானாய் முந்தி முளையையும் பிறகு கதிரையும் பிறகு கதிரிலே நிறைந்த கோதுமையையுந் தந்து பலன் கொடுக்கும்.

௨௯ பலன் கொடுக்கும்போதுடனே அவன், அறுப்புக்காலம் வந்தபடியினாலே, அரிவாளை அனுப்புகிறானென்றார்.

¶ கடுகுமணியின் உவமை

௩௰ பின்னையும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியத்தை எதற்கு ஒப்பிடுவோம்; அல்லது எந்த உவமையை அதற்குச் சொல்லுவோம்.

௩௧ * ஒரு கடுகுமணிக்கு ஒப்பாயிருக்குது, அது நிலத்தில் விதைக்கப்படும்போது பூமியிலிருக்கிற சகல விதைகளிலுஞ் சிறியதாயிருக்குது. * மத். ௰௩, ௩௧. ௩௨. லூ. ௰௩, ௰௮. ௰௯.

௩௨ அது விதைக்கப்பட்டபோதோ வெளிவந்து, சகல கீரைகளிலும் பெரிதாகி, ஆகாசத்துப் பறவைகள் அதினுடைய நிழலின் கீழ் வந்தடையத்தக்க பெரிய கிளைகளை விடுமென்றார்.

௩௩ அவர் அப்படிக்கொத்த வெகு உவமைகளினாலே அவர்கள் கேட்கக் கூடிய மாத்திரத்திலே அவர்களுக்கு வசனத்தைச் சொல்லி,

௩௪ உவமைகளின்றி அவர்களுக்குச் சொல்லாதிருந்தார், தம்முடைய சீஷருக்கோவென்றால் எல்லாத்தையுந் தனியே விடுவித்துச் சொன்னார்.

¶ கிறீஸ்து கடல் கொந்தளிப்பை அமர்த்தினது. மத்தே. ௮, ௨௩—௨௭. லூ. ௮, ௨௨—௨௫.

௩௫ அன்னாள் சாயுங்காலமானபோது அவர்களோடே: அக்கரைக்குப் போவோம் வாருங்கோளென்றார்:

௩௬ ஆகையால் கும்பலை அனுப்பிவிட்டு, அவர் படகிலேருந்தபிரகாரமாகத்தானே அவரைக் கொண்டு போனார்கள். ஆனாலும் வேறே படகுகளும் அவருடனே கூடவிருந்தது.

௩௭ அப்போ மகா சுழல்காற்றுண்டாய், அலைகள் படகின் மேல் அது நிரம்பத்தக்கதாய் விழுந்தது.

௩௮ அவர் அமரத்திலே ஒரு தலைகாணியின் மேல் நித்திரை கொண்டிருந்தார். அவர்கள் அவரை எழுப்பி, அவருடனே: போதகரே, நாங்கள் மடிந்து

போறது உமக்குக் கவலையாயிராதோ வென்றார்கள்.

௩௯ அவர் எழுந்து காற்றை அதட்டி, கடலுடனே: மவுனமாயடங்கு, ஊமையாயிருவென்றார். அப்போ காத்து நின்று மகா அமைச்சல் உண்டாச்சுது.

௪௰ அவர் அவர்களுடனே: நீங்கள் இத்தனை பயமாயிருப்பானேன், விசுவாசம் உங்களுக்கில்லாதிருக்கிறதெப்படியென்றார்.

௪௧ அவர்கள் மகா பயமாய்ப் பயந்து: இவர் ஆரோ. காத்துங் கடலும் அவருக்குக் கீழ்ப்படியுதே என்று ஒருவரொடொருவர் சொல்லிக்கொண்டார்கள்.

## ௫. அதிகாரம்.

௧ அவர் பிசாசுகளைத் துரத்தி அதுகளைப் பன்றிகளுக்குள் போக உத்தாரங் கொடுத்தது. மத்தே. ௮, உ௮—௩௪. லூ. ௮, உ௬—௩௯.

அவர்கள் கடலுக்கக்கரையான கதரேனருடைய தேசத்துக்கு வந்தார்கள்.

௨ அவர் படவிலிருந்திறங்கின போது, உடனே அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக் கல்லறைகளிலிருந்து அவருக்கெதிராக வந்தான்.

௩ அவனுடைய குடியிருப்புப் பிரேதக் கல்லறைகளிலுண்டாயிருந்தது, ஒருத்தனும் அவனைச் சங்கிலிகளினாலுங்கூடக் கட்டக்கூடாதிருந்தது.

௪ ஏனெனில் அவன் அநேகந்தரம் விலங்குகளினாலுஞ் சங்கிலிகளினாலுங் கட்டுண்டிருந்தும் அவனாலே சங்கிலிகளும் நொறுக்கப்பட்டு விலங்குகளும் ஒடிக்கப்பட்டுது, அவனைப் படியப்பண்ண ஒருத்தனாலுமாகாதிருந்தது.

௫ அவன் எப்போதும் ராவும் பகலும் பர்வதங்களிலுங் கல்லறைகளிலுமிருந்து கூப்பிட்டு, தன்னைத்தான் கல்லுகளாலே மோதிக்கொண்டிருந்தான்.

௬ ஆனால் அவன் யேசுவைத் தூரத்திலே கண்டபோது ஓடிவந்து * அவரைப் பணிந்துகொண்டு, * ௩, ௰௧.

௭ மகா சத்தத்துடனே: யேசுவே, உன்னதமான பராபரனுடைய குமாரனே, எனக்கும் உமக்குமென்ன, தேவரீர் என்னை வாதைப்படுத்தாதபடிக்குப் பராபரன் பேரிலே உம்மை ஆணையிடுகிறேனென்றான்.

௮ அதேனென்றால் அவர் அவனுடனே: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போவென்றார்.

௯ அவர் அவனை: உனக்குப் பேரென்னவென்று கேட்டார். அது பிறத்தியுத்தாரமாக: எனக்குப் பேர் லேகியோன், ஏனெனில் அநேகராயிருக்கிறோமென்று சொல்லி,

௰ தங்களைத் தேசத்துக்குப் புறம்பாக அனுப்பிவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டுது.

௰௧

௰௧ ஆனால் அவிடத்திலே பர்வதங்களுக்குச் சேர பண்ணிகளுடைய பெரிய மந்தை மேய்ந்துகொண்டிருந்தது.
௰௨ பிசாசுகளெல்லாம்: பண்ணிகளுக்குட் புகுத எங்களை அனுப்புமென்று அவரை வேண்டிக்கொண்டுது.
௰௩ உடனே யேசு அதுகளுக்கு உத்தாரங்கொடுத்தார். அப்போ அசுத்த ஆவிகள் புறப்பட்டு, பண்ணிகளுக்குள் புகுந்தது, அப்போ ஏறக்குறைய இரண்டாயிரம் பண்ணிகளான அந்த மந்தை உயர்ந்த மேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்தி மாண்டுது.
௰௪ ஆனால் பண்ணிகளை மேய்க்குவர்கள் ஓடி அந்தப் பட்டணத்திலும் வெளிப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்போ சம்பவித்ததேதென்று பார்க்க, சனங்கள் புறப்பட்டு,
௰௫ யேசுவண்டை வந்து, லேகியோன் பிசாசுகள் பிடித்திருந்தவன் உடுத்திக்கொண்டு உக்கார்ந்து புத்தியுடனிருக்கிறதைக் கண்டு பயப்பட்டார்கள்.
௰௬ பிசாசுகள் பிடித்தவனுக்குச் சம்பவித்ததையும் பண்ணிகளுடைய செய்தியையும் கண்டவர்களும் அவர்களுக்கு வயணமாய்ச் சொன்னார்கள்.
௰௭ அப்போ தங்களெல்லைகளை விட்டுப்போக அவரை வேண்டிக்கொள்ளத் துடங்கினார்கள்.
௰௮ அவர் படவிலேறுகிறபோது பிசாசு பிடித்திருந்தவன், தான் அவருடனே கூட வர அவரை வேண்டிக்கொண்டான்.
௰௯ ஆனால் யேசு அவனை வரவொட்டாமல் அவனுடனே: நீ உன் வீட்டிலே உன் இனத்தாரண்டைக்குப் போய், கர்த்தர் உனக்கெத்தனையாய்ச் செய்து உன்மேலிரங்கினாரென்று அவர்களுக்கறிவியென்றார்.
௨௰ அவன் போய், யேசு தனக்கெத்தனையாய்ச் செய்தாரென்று, பத்துப்பட்டணங்களிலும் பிரசங்கிக்கத் துவக்கினான். எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.

௩ அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைக் குணமாக்கி, யவீருவின் மகளை எழுப்பினது. மத். ௯, ௰௮—௨௬. லூ. ௮, ௪௧—௫௬.

௨௰௧ யேசு படவிலே மறுபடியும் அக்கரைக்குச் சேர்ந்து வந்தபோது, வெகு கூட்டம் கடலோரத்திலிருக்கிற அவரண்டை வந்துகூடிற்று.
௨௰௨ அப்போ ஜெபாலயத்தலைவரில் யவீருவென்றுபேர்கொண்ட ஒருத்தன் வந்து, அவரைக்கண்டபோது அவர் பாதத்திலே விழுந்து:
௨௰௩ என் குமாரத்தி மரணாவஸ்தைப்படுகிறாள், அவள் ஆரோக்கியமடையும்படிக்கு நீர் வந்து அவள்மேலே கைகளை வைக்கவேணும், அப்போ பிழைப்பாளென்று அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.
௨௰௪ அவர் அவனோடே கூடப்போனார். வெகு சனம் அவரைப் பின்செல்லுகையால் அவரை நெருக்கினார்கள்.

௨௫ ஆனாற் பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ இருந்தாள்.
௨௬ அவள் அநேகம் பரியாரிகளால் வெகு பாடுபட்டுத் தன்னிடத்திலுண்டானதெல்லாத்தையுஞ் செலவழித்தும் லாபமொன்றுங் காணாமல் பின்னையும் அவஸ்தைக்குக் கேடாச்சுது.
௨௭ அவள் யேசுவின் செய்தியைக் கேட்டு, கும்பக்குள்ளே பின்னாலே வந்து அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்.
௨௮ ஏனென்றால் அவருடைய வஸ்திரங்களையாகிலும் நான் தொட்டேனால், குணமாவேனென்றாள்.
௨௯ உடனே அவளுடைய உதிரத்தின் ஊற்றல் வற்றிப்போச்சுது, அந்த வாதை நீங்கி, தான் ஆரோக்கியமடைந்ததைச் சரீரத்தில் உணர்ந்தாள்.
௩௰ உடனே யேசு தம்மிலிருந்து புறப்பட்ட வல்லமையைத் தமக்குள் அறிந்து, கும்பிலே திரும்பி: என் வஸ்திரங்களைத் தொட்டதாரென்றார்.
௩௧ அவருடைய சீஷர் அவருடனே: கும்பு உம்மை நெருக்கிறதைக் கண்டும், என்னைத் தொட்டதாரென்கிறீரோ என்றார்கள்.
௩௨ இதைச் செய்தவளைக் காணச் சுத்திலும் பார்த்தார்.
௩௩ தன்னிடத்திலே சம்பவித்ததை அந்த ஸ்திரீ அறிந்து, பயந்து, நடுங்கி வந்து அவர் முன்பாக விழுந்து, உண்மையெல்லாம் அவருக்குச் சொன்னாள்.
௩௪ ஆனால் அவர் அவளுடனே: மகளே, * உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய், உன் வாதையற்றுச் சுகமாயிருவென்றார். * ௰. ரு௨.
௩௫ அவரின்னம் பேசுகிறபோது, ஆலயத்தலைவன் வீட்டிலிருந்து சிலர் வந்து: உம்முடைய குமாரத்தி மரித்தாள், இனியேன் போதகரைப் பிரயாசப்படுத்துகிறீரென்றார்கள்.
௩௬ ஆனால் சொன்ன வார்த்தையை யேசு உடனே கேட்டு, ஆலயத்தலைவனுடனே: பயப்படாதே, விசுவாசித்தேயிருவென்று சொல்லி,
௩௭ பேதுருவையும் யாக்கோபையும் யாக்கோபின் சகோதரன் யோவானையுந் தவிர வேறொருத்தரையுந் தம்மைப் பின் செல்லவொட்டாமல்,
௩௮ ஆலயத்தலைவனுடைய வீட்டிலே வந்து, சந்தடியையும் அழுதுகொண்டு வெகுவாய்ப் புலம்புகிறவர்களையுங் கண்டு,
௩௯ உள்ளே பிரவேசித்து, அவர்களுடனே: நீங்கள் சந்தடிபண்ணி அழுகிறதென்ன, பிள்ளை * மரித்திராமல் நித்திரைபண்ணுகிறதென்றார். * யோ. ௰௧, ௰௪.
௪௰ அப்போ அவரை நகைத்தார்கள். ஆனால் அவர் எல்லாரையுந் துரத்திவிட்டு, பிள்ளையின் தகப்பனையுந் தாயையுந் தம்முடனேயிருந்தவர்களையும் அழைத்துக்கொண்டு, பிள்ளை கிடந்தவிடத்துக்குள்ளே பிரவேசித்து,
௪௧ பிள்ளையின் கையைப் பிடித்து, அத்துடனே:

தலீத்

தலீத்தாகூமி என்றார்; அது: சிறுபெண்ணே, எழுந்திரு (என்று உனக்குச் சொல்லுகிறேன்) என்கிற அர்த்தம்.

௪௨ உடனே சிறுபெண் எழுந்திருந்து நடந்தது, அது பனிரண்டு வயதாயிருந்தது. அப்போ மகா விஸ்மயப் பயவிஸ்மயித்தார்கள்.

௪௩ அவர், இதை ஒருவரும் அறியவேண்டாமென்று மிகவும் அவர்களுக்குக் கற்பித்து, அதுக்குச் சாப்பாடு கொடுக்கச் சொன்னார்.

## ௬. அதிகாரம்.

¶ அவர் தம்முடைய ஊரிலே அசட்டைபண்ணப்பட்டது.

அவர் அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த* ஊரிலே வந்தார். அவருடைய சீஷர் அவரைப் பின்சென்றார்கள். *லூ. ௪, ௰௬—௩௰. மத். ௰௩, ௫௩—௫௮.

௨ ஓய்வுநாள் வந்தபோது ஆலயத்திலே உபதேசிக்கத் துவக்கினார். அநேகர் கேட்டுத் திகைத்து: இதுகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது, இவன் கைகளினாலே இப்படிப்பட்ட வல்லமைகள் நடக்க இவனுக்குக் கொடுபட்ட ஞானமென்ன.

௩ இவன் மரியாளுடைய குமாரனும் யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் என்றவர்களுடைய சகோதரனுமாகிய *தச்சனல்லவோ. இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்திலேயிருக்கிறார்களல்லவோ என்று சொல்லி, அவரிடத்திலே இடறலடைந்தார்கள். *யோவா. ௬, ௪௨.

௪ ஆனாலியேசு அவர்களுடனே: *ஒரு தீர்க்கதரிசிக்கு அவனுடைய ஊரிலும், அவன் இனத்தாரிடத்திலும் அவன் வீட்டிலும் சங்கணயீனமின்னே எங்குமில்லையென்றார். *யோவா. ௪, ௪௪.

௫ அங்கே அவர் நோவாளிகளாகிய கொஞ்சம்பேர்கள் மேல் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினதேயழிய வேறொரு வல்லமையையுஞ் செய்யக்கூடாமல்,

௬ அவர்களுடைய அவிசுவாசத்துக்காக ஆச்சரியப்பட்டு, கிராமங்களைச் சுற்றித்திரிந்து உபதேசித்தார்.

¶ அவர் அப்போஸ்தலரை வெளிப்புறங்களுக்கனுப்பினது. மத்தே. ௰, ௧. லூ. ௯, ௧—௫.

௭ அவர் பன்னிருவரை வரவழைத்து, அவர்களை இவ்விரண்டுபேராக அனுப்பத் துவக்கி, அவர்களுக்கு அசுத்த ஆவிகளின்பேரில் அதிகாரங்கொடுத்து,

௮ தடிக்கவிர பின்னொன்றையும், பையையாகிலும் அப்பத்தையாகிலுஞ் சஞ்சியில் காசையேனகிலும், வழிக்கெடுத்துப்போகாமல்,

௯ பாதரட்சைகளைப் போட்டுக்கொண்டிருக்க-

வும

வும், இரண்டாங்கியைத் தரியாதிருக்கவும் அவர்களுக்குக் கற்பித்து,

௰ அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் எங்கேயாகிலும் ஒரு வீட்டுக்குள் பிரவேசித்தால், அங்கே நீங்கள் அவ்விடம் விட்டுப் புறப்படுமட்டாகத் தங்கியிருங்கோள்.

௰௧ எவர்களாகிலும் உங்களை ஏற்றுக்கொள்ளாமலும் உங்கள் வசனங்கேளாமலுமிருந்தால் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு உங்கள் உள்ளங்கால்களிலே படிந்திருக்குந் தூளை அவர்களுக்குச் சாட்சியாக உதறிப்போடுங்கோள். மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நியாயத்தீர்க்குநாளிலே அந்தப் பட்டணத்துக்குப் பார்க்கச் சோதோம் ஊராருக்குங் கொமோரா ஊராருக்கும் இலேசாயிருக்குமென்றார்.

௰௨ அவர்கள் புறப்பட்டு: * குணப்படுங்கோளென்று பிரசங்கித்து, * மத்தே. ௩, ௨. ௪, ௰௭.

௰௩ அநேகம் பிசாசுகளைத் துரத்திவிட்டு, அநேகம் நோயாளிகளை எண்ணெயால் பூசிக் குணமாக்கினார்.

¶ யோவான் தலைவெட்டுண்ட செய்தி.
மத்தே. ௰௪, ௧—௰௨. லூ. ௯,
௭—௯.

௰௪ ஆனால் அவருடைய பேர் பிரசித்தமான படியினாலே ஏரோதேராசா கேட்டு. ஸ்நானங்கொடுத்த யோவான் மரித்தோரிலிருந்தெழுந்தான், ஆகையால் வல்லமைகள் அவனிடத்திலே நடந்தேறியாயிருக்குதென்றான்.

௰௫ வேறேசிலர்: * அவர் எலியாவென்றும் வேறுசிலர்: அவர் ஒருதீர்க்கதரிசி யல்லது தீர்க்கதரிசிகளிலொருத்தனைப் போலிருக்கிறாரென்றுஞ் சொன்னார்கள். * மத். ௰௬, ௰௪.

௰௬ ஆனாலேரோதே கேட்டபோது: நான் சிரச்சேதம்பண்ணின யோவான்தான், அவன் மரித்தோரிலிருந்தெழுந்தானென்றான்.

௰௭ அதெப்படியென்றாலேரோதே, * தான் விவாகம்பண்ணின தன் சகோதரனாகிய பிலிப்புவின் பெண்சாதி எரோதியாளினிமித்தியஞ் சேவகரை அனுப்பி யோவானைப் பிடித்து, காவலிலே கட்டி வைத்தான். * லூ. ௩, ௰௯. ௨௰.

௰௮ ஏனெனில் யோவானேரோதேயுடனே: நீர் உம்முடைய சகோதரனுடைய பெண்சாதியை வைப்பது உமக்கு ஞாயமல்லவென்று சொல்லியிருந்தான்.

௰௯ ஆகையாலெரோதியாள் அவனுக்குச் சத்துருவாயிருந்து, அவனைக் கொன்றுபோட மனதாயிருந்தாள், ஆனாலவளாலே கூடாதே போயிற்று.

௨௰ அதேனென்றாலே யோவான் நீதியும் பரிசுத்தமுமான புருஷனென்று ஏரோதே அறிந்து அவனுக்குப் பயந்து, அவனைக் காத்து அநேக காரியங்களை அவன் சொல்லக் கேட்டுச் செய்து அவனை விருப்பமாய்க் கேட்டான்.

௨௧ ஆனாலேரோதே தன் சென்மவாரத்திலே தன்னு
டைய பெரிய மனுஷருக்குஞ் சேர்வைகாறருக்குங் கலிலே
யாவின் பிரபுக்களுக்கும் ஒரு விருந்து பண்ணின ச
மயமான நாள் வந்தபோதும்,
௨௨ ஏரோதியாளின் குமாரத்தி உள்ளே பிரவேசித்து
கூத்தாடி, ஏரோதேக்குங் கூடப்பந்தியிருந்தவர்களுக்
கும் பிரியமாயிருந்தபோதும், ராசாச்சிறுபெண்ணு
டனே: உனக்குவேண்டியதெதானாலுங் கேள், உ
னக்குத்தருவேனென்று சொல்லி.
௨௩ என்ராட்சியத்திலே பாதிமட்டும் நீ என்னத்
தைக்கேட்டாலும் உனக்குத்தருவேனென்று அவளுக்
காணையிட்டான்.
௨௪ அப்போ அவள் புறப்பட்டு, தன் தாயுடனே:
என்னை கேட்பேனென்றாள். அவளோ: யோவா
ன் ஸ்நானகனுடைய தலையைக் கேளென்றாள்.
௨௫ உடனே அவள் சீக்கிரமாக ராசாவண்டைக்
குள்பட்டுவந்து: நீர் இப்போதானே யோவான் ஸ்
நானகனுடைய தலையை ஒரு தாலத்திலே எனக்குத்
தரவேணுமென்றிச்சிக்கிறேனென்று கேட்டாள்.
௨௬ அப்போ ராசா மிகவுந்துக்கமடைந்து, ஆணை
களினிமித்தமாகவுங் கூடப்பந்தியிருந்தவர்களினிமித்
த்தமாகவும் அவளுக்கல்லத்தட்ட மனதில்லாமல்.
௨௭ உடனே கொலைகாறனை அனுப்பி அவன் தலை
யைக்கொண்டுவரக் கட்டளையிட்டான்.
௨௮ அவன் போய் அவனைக் காவற்கூடத்திலே
சிரச்சேதம் பண்ணி, அவன் தலையை ஒரு தாலத்திலே
கொண்டுவந்து, அதைச்சிறுபெண்ணுக்குக் கொடுத்தா
ன், சிறுபெண் அதைத் தன் தாய்க்குக் கொடுத்தாள்.
௨௯ அவனுடைய சீஷர் அதைக் கேட்டுவந்து, அவ
ன் உடலை எடுத்து, அதை ஒரு கல்லறையிலே வைத்
தார்கள்.

ஸ்ரீ கிறிஸ்து, அய்யாயிரம் பேருக்கு வனாந்திரத்தி
லே போசனங்கொடுத்தது. மத. ௰௪,
௰௩—௨௧. லூக். ௯, ௰—௰௭.
யோவா. ௬, ௫—௰௫.

௩௰ அப்போஸ்தலர் யேசுவண்டையிலே வந்து
கூடி, தாங்கள் செய்ததுகளையும் உபதேசித்ததுக
ளையுமெல்லாம் அவருக்கு அறிவித்தார்கள்.
௩௧ அப்போதவர்களுக்கு: நீங்கள் தனியே ஒரு
வனாந்திரத்துக்குவந்து, சற்றே இளைப்பாறுங்
கோளென்றார், ஏனெனில் வருகிறவர்களும் போ
றவர்களும் அனேகராயிருந்தார்கள், போசிக்கக்கூ
ட அவர்களுக்கு நேரமில்லாதிருந்தது.
௩௨ அப்படியே படவிலேறி ஒருவனாந்திர ஸ்தலத்து
க்குத் தனியே போனார்கள்.
௩௩ கும்புகள் அவர்கள் போகிறதைக் கண்டு, அ
நேகம்பேர் அவர் தானென்றறிந்தார்கள், ஆகை
யால் கால்நடையாய்ச் சகல பட்டணங்களிலுமிருந்
து அங்கே கூடி ஓடி, அவர்களுக்கு முந்திக்கொண்டு,
அவரண்டையிலே வந்துகூடினார்கள்.
௩௪ யேசு புறப்பட்டுவந்து, வெகுஜனங்களைக் கண்டு,
அவர்

அவர்கள் பேரில் + மனதுருகினார். ஏனென்றால் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலிருந்தார்கள். அவர்களுக்கு அனேககாரியங்களை உபதேசிக்கத் துவக்கினார், + மத். ௯, ௩௬.

௩௫ வெகு நேரஞ்சென்றபிறபாடு, அவருடைய சீஷர் அவரண்டை வந்து: இது வனாந்திர இடமாயிருக்குது, வெகுநேரமுமாச்சுது.

௩௬ அவர்கள் சுத்துக்கிராமங்களுக்கும் ஊர்களுக்கும் போய், தங்களுக்கப்பங்களைக் கொள்ள அவர்களை அனுப்பிவிடும், ஏனென்றால் போசிக்க அவர்களுக்கொன்றுமில்லையென்றார்கள்.

௩௭ ஆனால் அவர் பிரத்தியுத்தரமாக அவர்களுடனே: நீங்கள் அவர்களுக்குப் போசனங் கொடுங்கோளென்றார். அவர்கள் அவருடனே: நாங்கள் போய் இருநூறு பணத்துக்கப்பங்களைக் கொண்டு அவர்களுக்குப் போசிக்கக் கொடுப்போமோவென்றார்கள்.

௩௮ அவரோவென்றால் அவர்களுடனே: உங்களுக்கெத்தனை அப்பங்களுண்டு, போய்ப்பாருங்கோளென்றார். அவர்கள் அறிந்தபோது: ஐந்தப்பமும் இரண்டு மீனுமிருக்குதென்றார்கள்.

௩௯ அப்போதெல்லாரையும் பச்சைப்புல்லின்மேல் பந்திபந்தியாக அமர்த்த அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

௪௰ அப்படியே வரிசைவரிசையாய் நூறுநூறும் அன்பதன்பதுமாக உக்கார்ந்தார்கள்.

௪௧ அவர் ஐந்தப்பங்களையும் இரண்டு மீன்களையும் வாங்கி, வானத்தை அண்ணாந்து பார்த்து இஸ்தோத்திரம்பண்ணி, அப்பங்களைப் பிட்டு, அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்து, இரண்டு மீன்களையும் எல்லாருக்கும் பங்கிட்டார்.

௪௨ எல்லாருஞ் சாப்பிட்டுத் திருப்தியடைந்தார்கள்.

௪௩ பனிரண்டு கூடை நிறைய துணிக்கைகளையும் மீன்களில் மிகுந்ததையும் எடுத்தார்கள்.

௪௪ அப்பங்களைச் சாப்பிட்டவர்களோவென்றால் ஏறக்குறைய ஐயாயிரம் புருஷராயிருந்தார்கள்.

♯ அவர் கடலின்மேல் நடந்தது. மத். ௰௪, ௨௨. ஹ. யோவ. ௬, ௰௬. ஹ.

௪௫ உடனே அவர் தம்முடைய சீஷரை, படகிலேறவும், தாம் ஜனத்தை அனுப்பிவிடுவதற்குள்ளே அக்கரைக்குப் பெத்சாயிதாவுக்கெதிராக முன்னேபோகவுந் துருசுபண்ணினார்.

௪௬ அவர்களை அனுப்பிவிட்டபின்பு, செபம்பண்ண ஒரு பர்வதத்திலே போனார்.

௪௭ சாயுங்காலமான பிறபாடு படகு நடுக்கடலிலிருந்தது, ஆனால் அவர் ஒருத்தரே கரையிலிருந்து,

௪௮ அவர்கள் படகைத் தள்ளுகிறதிலே வருந்தப்படுகிறதைக் கண்டார், ஏனென்றால் காத்து அவர்களுக்கெதிராயிருந்தது. ராத்திரியில் நாலாஞ்சாமத்திலே அவர்களண்டையிலே கடலின்மேல் நடந்துவந்து, அவர்களுக்கு

களுக்குப் பக்கமாய் அப்பாலே போகமனதாயிருந்தார்.
௪௯ ஆனால் அவர்கள் அவரைக் கடலின்மேலே நடக்கக்கண்டு, ஆவேசமென்றெண்ணி, சத்தமிட்டார்கள்.
௫௰ ஏனென்றால் எல்லாரும் அவரைக்கண்டு கலங்கினார்கள், உடனே அவர் அவர்களுடனே பேசி: திடன்கொள்ளுங்கோள், நான்தான், பயப்படாதேயுங்கோளென்று சொல்லி,
௫௧ அவர்களிடத்துக்குப் படவிலேறினார், அப்போ காற்றமர்ந்தது. ஆனால் அவர்கள் மிகுதியும் மட்டில்லாமல் தங்களிலே பிரமித்து ஆச்சரியப்பட்டார்கள்.
௫௨ அதேனென்றால் அப்பங்களின் அதிசயத்தினாலே அவர்களுக்குணர்வுண்டாகவில்லை, ஏனென்றால் அவர்கள் இருதயம் அழுத்தமுள்ளதாயிருந்தது.
௫௩ அவர்கள் அக்கரைக்குப்போய், * கெனேசரேத்தேசத்திலே வந்து கரைபிடித்தார்கள். * மத்தே. ௰௪, ௩௪—௩௬.
௫௪ அவர்கள் படவிலிருந்திறங்கினவுடனே சனங்கள் அவரை அறிந்து,
௫௫ அந்தச் சுற்றுப்புறமெங்குமோடித்திரிந்து, அவர் இருக்கிறாரென்று கேட்டதுக்கெல்லாம் பிணியாளிகளைப் படுக்கைகளிலே எடுத்துவரத்தொடங்கினார்கள்.
௫௬ அவர் எந்த ஊர்களிலே பட்டணங்களிலே கிராமங்களிலே பிரவேசித்தாரோ, அங்கே வியாதிக்காரரைச் சந்தைவெளிகளிலே வைத்து, அவர்கள் அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தையாகிலுந்தொட அவரை வேண்டிக்கொண்டார்கள். அவரைத் தொட்டயாவரும் ஆரோக்கியமானார்கள்.

## ௭. அதிகாரம்.

¶ கிறிஸ்து பாரம்பரைத்தாபகங்களுக்குத் திருத்துப்பண்ணின போதகம். மத். ௰௫, ௧—௨௰.

எருசலேமிலிருந்து வந்த பரிசேயரும் வேதபாரகரில் சிலரும் அவரிடத்திலே கூடினார்கள்.
௨ அப்போ அவருடைய சீஷரிலே சிலர் வெளுக்காததாகிய கழுவாதகைகளாலே அப்பங்களைப் போசிக்கிறதை அவர்கள் கண்டு குற்றம்பிடித்தார்கள்.
௩ அதேனென்றால் பரிசேயரும் யூதரனைவரும் பூர்வ பாரம்பரைத்தாபகத்தைக் கைக்கொண்டிருந்து, முழங்கைமட்டுங் கழுவினாலொழியப் போசியார்கள்.
௪ கடையிலிருந்து வந்தபோதும், முழுகினாலொழியப் போசியார்கள். இப்படி அவர்கள் கைக்கொள்ளுகிறதுக்குக் கொண்டதாகிய பாத்திரங்கள் குடங்கள் செம்புகள் மணைகளுடைய முழுகுதல் முதலான வேறே அநேக காரியங்களுமுண்டு.
௫ பின்பு பரிசேயரும் வேதபாரகரும் அவரை: உம்முடைய சீஷர் பூர்வருடைய பாரம்பரைத்தாபகத்தின்

N

படி

படியே நடவாமல், கழுவாத கைகளால் அப்பஞ் சாப்பிடுவானேனென்று கேட்டார்கள்.

௬ அவரோவென்றால் அவர்களுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: இந்த ஜனம் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுது, அவர்களிருதயமோ எனக்குத் தூரமாயிருக்குதென்றும்,

௭ * மனுஷருடைய கற்பனைகளாகிய போதகங்களைப் போதிக்கிறவர்களாய் வீணாய் என்னை ஆராதனை செய்கிறார்களென்றும் எழுதியிருக்கிறபிரகாரமாக மாயக்காரராகிய உங்களைக்குறித்து ** யெசாயா நன்றாய்த் தீர்க்கதரிசனஞ் சொன்னான்.

* கொலொ. ௨, ௨௰—௨௨. ** யெச. ௨௯, ௰௩.

௮ அதேதென்றால் நீங்கள் பராபரனுடைய கற்பனையை விட்டு, * மனுஷருடைய பாரம்பரைதாயமாகிய குடங்கள் பாத்திரங்களுடைய கழுவுதலைக் கைக்கொண்டு இப்படிக்கொத்த வேறே அனேகங் காரியங்களையுஞ் செய்கிறீர்களென்றார். * மத. ௨௩, ௨௫. ௨௬.

௯ அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் உங்கள் பாரம்பரைதாயத்தைக் காக்கிறதுக்காக பராபரனுடைய கற்பனையைத் தள்ளினீர்கள்.

௰ அதேதென்றால்: * உன் தகப்பனையும் உன் தாயையுங் கனம்பண்ணென்றும், தகப்பனையாகிலுந் தாயையாகிலும் நிந்திக்கிறவன் சாகவே சாகக்கடவானென்றும் மோசே சொன்னான். * ௨. மோ. ௨௰, ௰௨.

௰௧ ஆனாலொரு மனுஷன் தகப்பனிடத்திலாவது தாயிடத்தில்: உனக்கென்னாலே உதவுகிறதேதாகிலுமுண்டானால், அது கொர்பான், அதாவது, காணிக்கையாயிருக்குதென்றால், நீங்கள் சும்மாவென்று சொல்லி,

௰௨ அவனை, இனிமேல் தன் தகப்பனுக்காவது தன் தாய்க்காவது ஒன்றுஞ் செய்யவொட்டாமல்,

௰௩ நீங்கள் போதிச்ச உங்கள் பாரம்பரைதாயத்தினாலே பராபரனுடைய வசனத்தைச் செல்லாமற்பண்ணி, இப்படிக்கொத்த அனேகங் காரியங்களைச் செய்கிறீர்களென்றுஞ் சொல்லி,

௰௪ ஜனக்கூட்டமெல்லாத்தையுஞ் சேரவழைத்து, அவர்களுக்குச் சொன்னதாவது: எல்லாரும் என் வசனங் கேட்டுணருங்கோள்.

௰௫ * மனுஷனுக்குப் புறம்பேயிருந்து அவனுக்குள் படப்போறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தக்கூடாது, அவனுக்குள்ளிருந்து புறப்படுகிற காரியங்களே மனுஷனைத் தீட்டுப்படுத்துகிறதாயிருக்குது.

௰௬ கேட்கிறதுக்குக் காதுள்ளவனாயிருந்தால் கேட்கக்கடவானென்றார்.

௰௭ அவர் ஜனக்கூட்டத்தை விட்டு வீட்டுக்குள் பிரவேசித்தபோது அவருடைய சீஷர் இந்த உவமையின் செய்தியை அவரைக் கேட்டார்கள்.

௰௮ அப்போது அவர் அவர்களுடனே சொன்னதாவது: நீங்களும் அத்தனை உணர்வற்றவர்களாயிருக்கிறீர்களோ, புறம்பேயிருந்து மனுஷனுக்குள் போறது

தே

தொன்றும் அவனைத்தீட்டுப்படுத்தக்கூடாதென்கி
றதை அறிந்துகொள்ளமாட்டீர்களா.
௰௯ ஏனென்றால் அது அவன் இருதயத்துக்குள்ளே போ
காமல், வயிற்றுக்குள்ளே போய், எல்லாப் போச
னங்களையுங் கழிக்கிற ஆசனவழியாய்ப் புறப்பட்டுப்
போம்.
௨௰ ஆனாலும் மனுஷனுக்குள்ளிருந்து புறப்படுகிற
தே மனுஷனைத்தீட்டுப்படுத்துமென்றார்.
௨௧ ஏனென்றால் + உள்ளே மனுஷருடைய இருதயத்
திலிருந்து பொல்லாத நினைவுகளும் விபசாரங்களும் வே
சித்தனங்களுங் கொலைபாதகங்களும், + மத். ௰௫.
௰௯. ௨௰.
௨௨ களவுகளும் பொருளாசைகளும் பொல்லா
ங்குகளுங் கவடுங் காமவிகாரமும் வன்கண்ணுந் தூ
ஷணமும் பெருமையும் மதிகேடும் புறப்படும்.
௨௩ இந்தப்பொல்லாக்காரியங்களெல்லாம் உ
ள்ளேயிருந்து புறப்பட்டு, மனுஷனைத்தீட்டுப்படுத்
துமென்றார்.

¶ அவர் கானானியஸ்திரீயின் மகளைப் பிசாசி
னாலாகுத்துக்குநீங்கலாக்கிரட்சித்
தது. மத். ௰௫, ௨௧—௨௮.

௨௪ அவர் அவ்விடம்விட்டெழுந்திருந்து, தீருசீ
தோன் பட்டணங்களின் எல்லைகளில் வந்து, ஒரு
வீட்டுக்குள்ப்பிரவேசித்து, ஒருவரும் அறியாதிருக்கம
னதாயிருந்தார், ஆனாலவர் ஒளிக்கக்கூடாதிருந்தது.
௨௫ ஏனென்றால் அசுத்தஆவிபிடித்திருந்த ஒரு சின்ன
மகளின் தாயாகிய ஒரு ஸ்திரீ அவர் செய்தியைக்
கேட்டுவந்து, அவர் பாதத்தில் விழுந்தாள்.
௨௬ அந்தஸ்திரீயோவென்றால் சீரோபேனி
க்கேசாதியாகிய கிரேக்கஸ்திரீயாயிருந்தாள். பிசா
சைத்தன் மகளைவிட்டுத்துரத்த அவள் அவரைவேண்டி
க்கொண்டாள்.
௨௭ ஆனாலேசு அவளுடனே: முந்திப்பிள்ளைகள்
திர்ப்தியடையட்டும், ஏனென்றால் பிள்ளைகளுடைய
அப்பத்தையெடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது
நல்லதல்லவென்றார்.
௨௮ அவளோவென்றால் அவருக்குப்பிரத்தியுத்தர
மாக: ஆம் ஆண்டவரே, ஆகிலும் மேஜைப்பல
கையின் கீழிருக்கும் நாய்க்குட்டிகள் பிள்ளைகளுடை
ய துணுக்குகளில் கொஞ்சந்தின்னுமேயென்றாள்.
௨௯ அப்போ அவர் அவளுடனே: இந்த வார்த்தை
யினிமித்தியம் நீபோ, பிசாசு உன்மகளை விட்டுநீங்
கிப்போச்சுதென்றார்.
௩௰ அவள் தன் வீட்டுக்குவந்தபோது, பிசாசு நீங்
கிப்போனதையும் மகள் கட்டிலின்மேல் படுத்திருக்
கிறதையுங் கண்டாள்.

¶ அவர் செவிடும் ஊமையுமான மனுஷ
னைக் குணமாக்கினது. மத். ௰௫,
௨௯—௩௧.

௩௧ மறுபடியும் அவர் தீருசீதோன் பட்டணங்க
ளின்

ளின் எல்லைகளை விட்டுப் புறப்பட்டு, பத்துப்பட் டணங்களுடைய எல்லைகளின் நடுவாய் கலிலேயாக் கடலண்டை வந்தார்.

௩௨ அப்போ பேசமாட்டாத ஒரு செவிடனை அவ ரண்டைக்குக் கொண்டுவந்து, அவன் மேல் கையை வைக்க அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௩௩ அப்போதவர் அவனைக் கும்பலை விட்டுத் தனியே அழைத்துப்போய், தம்முடைய விரல்களை அவன் காது களில் வைத்து, * உமிழ்ந்து அவனுடைய நாவைத் தொட்டு, * அ, ௨௩.

௩௪ வானத்தை * அண்ணாந்து பார்த்துப் பெருமூச்சு விட்டு: எப்பத்தா, அதாவது: திறவுண்டு போவென் றார். * யோவா. ௰௧; ௪௧.

௩௫ உடனே அவனுடைய செவிகள் திறவுண்டு அ வனுடைய நாவின் கட்டும் அவிழ்ந்து போய், செவ் வையாய்ப் பேசினான்.

௩௬ ஒருவருக்குஞ் சொல்லாதிருக்க அவர் அவர்க ளுக்குக் கட்டளையிட்டார். ஆனால் அவர் அவர்களுக்கெத்தனை கட்டளையிட்டாரோ அத்தனையதிகமாய் அவர்கள் பிரசங்கித்து,

௩௭ எல்லாத்தையும் நன்றாய்ச் செய்தார், செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் பண்ணுகிறாரென்று மட்டில்லாமல் ஆச்சரியப்பட்டுச் சொன்னார்கள்.

## அ. அதிகாரம்.

௧ கிறிஸ்து வனாந்தரத்திலே நாலாயிரம் பே ருக்குப் போசனங்கொடுத்தது. மத். ௧௫, ௩௨.

அந்நாட்களிலே திரளாங் கும்பிருந்து அவர்களுக்குப் போசிக்கவொன்றுமில்லாதபோது யேசு தம்முடைய சீஷரைச் சேரவழைத்து அவர்களோடே:

௨ கும்பின்மேல் மனதுருகிறேன், ஏனென்றால் அவர்கள் இப்போ மூன்று நாளாய் என்னோடே தரித்து போசிக்கவொன்றுமில்லாதிருக்கிறார்கள். * ௫, ௰௪.

௩ நான் அவர்களைப் பட்டினியாக அவர்களை வீட்டுக்கனுப்பினால் வழியிலே சோர்ந்துபோவார்கள், ஏனென்றால் அவர்களில் சிலர் தூரத்திலேயிருந்து வந்தார்களென்றார்.

௪ அவருடைய சீஷர் அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இவர்களொருவனிங்கே வனாந்தரத்திலே அப்பங் களினாலே திர்ப்திப்பண்ணவெங்கேயிருந்து வருமென்றார்கள்.

௫ அவர்களை: உங்களுக்கெத்தனை அப்பங்களுண்டென்று கேட்டார். அவர்கள்: ஏழென்றார்கள்.

௬ அப்போ அவர் சனத்தைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, ஏழப்பங்களை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணிப் பிட்டு அவர்கள் முன்னே வைக்கத் தம்முடைய சீஷருக்குக் கொடுத்தார். அவர்கள் சனத்தின் முன்னே வைத்தார்கள்.

௭ கொஞ்சஞ் சிறுமீன்களும் அவர்களுக்குண்டாயிருந்தது. அவர் ஸ்தோத்திரம்பண்ணி, அதுகளையும் அவர்களுக்கு முன்னே வைக்கச்சொன்னார்.
௮ ஆனால் அவர்கள் * போசித்து, திருத்தியடைந்து, மீந்த துணிக்கைகளை ஏழு கூடை எடுத்தார்கள். * ௨. இராசா. ௪, ௪௪.
௯ போசித்தவர்களோ வெளிலேறக்குறைய நாலாயிரம் பேராயிருந்தார்கள். அவர் அவர்களை அனுப்பிவிட்டு,
௰ உடனே தம்முடைய சீஷரோடே கூடப் படவிலேறி, தல்மனுத்தாவின் எல்லைகளில் வந்தார்.

¶ பரிசேயர் அவரை அடையாளங் கேட்டது. மத்தே. ௧௬, ௧—௪.

௧௧ அப்போ பரிசேயர் புறப்பட்டு வந்து அவருடனே தர்க்கித்து, வானத்திலிருந்துண்டாகும் ஒரு அடையாளத்தை அவரிடத்திலே தேடி, அவரைச் சோதித்தார்கள்.
௧௨ அவர் தம்முடை ஆவியிலே பெருமூச்சுவிட்டு, இந்தச் சந்ததி அடையாளந் தேடுகிறதென்ன, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * இந்தச் சந்ததிக்கடையாளங் கொடுக்கப்படுவதில்லையென்று சொல்லி, * லூ. ௧௧, ௨௯.
௧௩ அவர்களை விட்டுத் திரும்பப் படவிலேறி அக்கரைக்குப் போனார்.

¶ அவர் பரிசேயருடைய புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருக்கச் சொன்னது. மத்தே. ௧௬, ௫—௧௨.

௧௪ அப்பங்களை எடுத்துவர மறந்திருந்தார்கள்; படவிலே ஒரு அப்பமேயல்லாமல் வேறொன்றும் அவர்களுக்கில்லாதிருந்தது.
௧௫ அவர் அவர்களுக்கு: நீங்கள் பரிசேயருடைய புளித்தமாவுக்கும் ஏரோதேயின் புளித்தமாவுக்கும் * எச்சரிக்கையாயிருக்கப்பாருங்கோளென்று கற்பித்தார். * லூ. ௧௨, ௧. கலா. ௫, ௯.
௧௬ அப்போ அவர்கள் ஒருத்தரோடொருத்தர்: நமக்கப்பங்களில்லாத நிமித்தியமே இதைச் சொல்லுகிறாரென்று ஆலோசனைப்பட்டார்கள்.
௧௭ இயேசு அறிந்து, அவர்களுடனே: உங்களுக்கப்பங்களில்லாத நிமித்தியமா நீங்கள் ஆலோசனைப்படுகிறதென்ன, * இன்னுஞ் சிந்தியாமலும் உணராமலுமிருக்கிறீர்களோ, இன்னும் உங்களிருதயங்களுக்குக் கெட்டியாயிருக்குதோ, * ௬, ௫௨.
௧௮ உங்களுக்குக் கண்களிருந்துங் காணீர்களோ, காதுகளிருந்துங் கேளீர்களோ, நினையாமலுமிருக்கிறீர்களோ.
௧௯ நான் * ஐந்தப்பங்களை ஐயாயிரம் பேருக்குப் பிட்டபோது, துணிக்கைகளெத்தனை கூடை நிறைய எடுத்தீர்களென்றார். அவருடனே: பன்னிரண்டென்றார்கள். * ௬, ௪௩. ௪௪.
௨௰ ஆனால் நானேழப்பங்களை * நாலாயிரம் பே
ருக்கு

ருக்குப்பிட்டபோது, துணிக்கைகளால் நிறைந்த கூடைகள் எத்தனையெடுத்தீர்களென்றார். அவர்களேழென்றார்கள். * அ. ௬. வசனம்.

௨௧ அப்பொழுதவர்களுடனே: நீங்களுணராதிருக்கிறதெப்படியென்றார்.

¶ அவர் ஒருகுருடனுக்குப்பார்வை கொடுத்தது

௨௨ அவர் பெத்சாயிதாவுக்கு வந்தார், அப்போது அவரண்டையிலே ஒருகுருடனைக் கொண்டுவந்து, அவனைத்தொடவேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டார்கள்.

௨௩ அவர் குருடனுடைய கையைப்பிடித்து, * அவனைக் கிராமத்துக்குவெளியே அழைத்துக்கொண்டுபோய், அவனுடைய கண்களில் உமிழ்ந்து, அவன்மேலே கைகளை வைத்து: யாதொன்றைக்காண்கிறாயோவென்று அவனைக் கேட்டார். * ௭, ௩௩.

௨௪ அவன் ஏறிட்டுப்பார்த்து: மனுஷரை மரங்களைப்போல நடக்கக்காண்கிறேனென்றான்.

௨௫ பின்பு திரும்ப அவனுடைய கண்களின்மேலே கைகளை வைத்து, அவனை ஏறிட்டுப்பார்க்கப்பண்ணினார், அப்போது அவன் சீரடைந்து, தூரத்திலே யாவரையுந்தெளிவாய்க்கண்டான்.

௨௬ அவர்: நீ கிராமத்துக்குள்ளே பிரவேசியாமலும், * கிராமத்தாரிலொருத்தருக்குஞ் சொல்லாமலுமிருப்பாயாகவென்று அவனை அவன் வீட்டுக்கனுப்பினார். * ௭, ௩௬.

¶ பேதுரு யேசுவின்பேரிலே பகர்ந்த சாட்சி.
மத்தே. ௰௬, ௰௩—௨௰. லூ. ௯, ௰௮—௨௰.

௨௭ யேசுவும் அவருடைய சீஷரும் புறப்பட்டு, பிலிப்புகெசரியாப்பட்டணத்தின் கிராமங்களுக்குப்போனார்கள். வழியிலே அவர் தம்முடைய சீஷரை: மனுஷர் என்னை யாரென்கிறார்களென்று கேட்டார்.

௨௮ அவர்கள் பிரதியுத்தரமாக: யோவான் ஸ்நானனென்றும், வேறே சிலர் எலியாவென்றும், வேறே சிலர் தீர்க்கதரிசிகளில் ஒருத்தரென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.

௨௯ அவர் அவர்களை: நீங்கள் என்னை யாரென்கிறீர்களென்று கேட்டார். பேதுரு அவருக்குப் பிரதியுத்தரமாக: நீர் * கிறிஸ்துவாயிருக்கிறீரென்றான். * யோவா. ௬, ௬௯. ௧௧, ௨௭.

¶ கிறிஸ்து தாம் படப்போகிறபாடுகளை முன்னறிவித்ததும் தம்மைப் பின்செல்லப்படுத்தினதும். மத்தே. ௰௬, ௨௰. லூ. ௯, ௨௧—௨௭.

௩௰ அப்போது அவர் தம்மைக்குறித்து ஒருவரோடுஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கற்பித்து,

௩௧ மனுஷனுடைய குமாரன் அநேகம் பாடுபட்டு, மூப்பர்களாலும் பிரதான ஆசாரியர்களாலும் வேத

வேதபாரகராலுமஆகாதவனென்று தளளுணடு
கொலலபபடடு, மூனறுநாளைககுப்பிறபாடுதிரும
பாமுநதருககவேணடியதெனறு அவரகளைப
போதிககததுவஙகி,

௩௨ இநதவாரததையைததாராளமாயச்சொனனார். அபபோபேதுரு அவரைததனியேயழைததுஅவரைஉத மபகததுவஙகினான.

௩௩ ஆனாலவர்திருமபிக்கொணடுதமமுடைய சீஷரைப பார்தது, பேதுருவைக்கமபி: * எனபினனேபோசாத்தானே, ஏனெனறால நீயர்பராபரனுககடுததுகளையல்லமனுஷருககடுததுகளைசசிநதிககிறாய எனறார்.

௨. சாமு. ௰௯, ௨௨.

௩௪ அவர்சனஙகளையுநதமமுடைய சீஷரையுமகூடடகம மனனடககழைதது, அவர்களுககுச சொனனது: எனபினனேவரமனதாயிருககிறவன தனனைத தானவெறுதது, தனசிலுவையெடுததுககொணடு * எனனைப்பினசெல்லககடவான.

௩௫ ஏனெனறால எவன * தனசீவனைரடசிததுக கொளளமனதாயிருககிறானோ அவன அதை இழநது போவான, ஆனாலெவனெனனிமித்தமும சுவிசேஷத்தினிமித்தமுமதனசீவனையிழநதுபோறானோ, அவன அதைரடசிததுககொளளுவான. *

மத. ௰, ௩௯.

௩௬ அதேனெனறால மனுஷன லோகததையெலலாமசுதாயபபடுததிககொணடாலும, தனஆததுமததைசசேதபபடுததினால அவனுககுலாபமெனன.

௩௭ அலலது மனுஷனதனஆததுமததைமீடகிறததுககீடாகஎனனததைககொடுபபான. * சங. ௪௯, ௯.

௩௮ அதேனெனறால * எவனுக்கும விபசாரமும பாவமுமானஇநதசநததியிலெனனைக்காகவுமெனவசனஙகளுக்காகவும வெடகபபடடால, அவனுககாகமனுஷனுடையகுமாரனுநதமமுடையபிதாவினமகிமையாயபரிசுததராகிய தூதரோடேகூடவருமபோது வெடகபபடுவாரெனறார். * மத. ௰, ௩௩. ௨. தீமோ. ௨, ௰௨.

## ௯. அதிகாரம்.

¶ அவர்பறுவததிலமகிமைபபடடது.
மத. ௰௭, ௧—௰௩. லூ. ௯,
௨௮—௩௬.

பினனையும அவர்களுடனே: * மெயயாகவேஉங களுக்குச்சொலலுகிறேன, இஙகேநிறகிறவர்களிலசிலர் உணடு, அவர்கள பராபரனுடையராஜசியமபெலததுடனேவநதததைககாணுமடடுமமரணததைருசிபாரார்களெனறார். * மத. ௰௬. ௨௮.

௨ ஆறுநாளைககுப்பிறபாடுயேசுபேதுருவையும யாககோபையும யோவானையுமகூடடிககொணடு அவர்களைமாததிரமஉயர்நதஒருபறுவதததினமேலதனிததழைததுபபோய, அவர்களுககுமுனபாக மறுருபமானார்.

௩ அவருடைய வஸ்திரங்கள் காந்தியுள்ளதுக்கும் உறைந்த மழையைப் போல மிகுந்த வெண்மையுமாச்சுது, பூமியின் மேல் வண்ணான் அத்தனை வெண்மையாக்கக்கூடாது.

௪ அப்போ எலியா மோசேயோடுங்கூட அவர்களுக்குக் காணப்பட்டார்கள், அவர்கள் யேசுவுடனே பேசிக்கொண்டிருந்தார்கள்.

௫ பேதுரு பிரத்தியுத்தாரமாக யேசுவுடனே: றபி, நாமிங்கேயிருக்கிறது நன்றாயிருக்குது. நாங்கள் மூன்று கூடாரங்களைப் போடுவோம், உமக்கொன்றும் மோசேக்கொன்றும் எலியாவுக்கொன்றுமாமென்றான்.

௬ ஏனென்றால் தான் பேசுகிறதின்னதென்றறியாதிருந்தான், அதேதென்றால் அவர்கள் அச்சங்கொண்டார்கள்.

௭ அப்போ அவர்கள் மேல் நிழலிடுகிற ஒரு மேகமுண்டாய், மேகத்திலிருந்து: * இவர் நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறார், இவர் சொல்லைக் கேளுங்கோளென்கிற சத்தமுண்டாச்சுது. * மத். ௩, ௰௭. ௨. பே. ௧, ௰௭.

௮ அப்படியே அவர்கள் சுத்தும் பார்க்கிறபோது யேசு ஒருத்தரையேயல்லாமல் வேறொருத்தரையுந் தங்களுடனே அப்புறங்கண்டதில்லை.

௯ ஆனால் அவர்கள் பர்வதத்திலிருந்திறங்குகிறபோது அவர் இவர்களுக்கு, மனுஷனுடைய குமாரன் மரித்தோரிலிருந்தெழுந்த போதானறிவதுக்கு முன்னே ஆரோடுந் தாங்கள் கண்டதுகளைச் சொல்லாதபடிக்குக் கற்பித்தார்.

௰ அவர்கள்: மரித்தோரிலிருந்தெழுந்திருக்கிறதென்ன வென்றொருத்தரோடொருத்தர் தர்க்கித்துக்கொண்டு, அந்த வார்த்தையைத் தங்களுக்குள்ளே வைச்சுக்,

௰௧ எலியா முந்தி வரவேணுமென்று வேதபாரகர் சொல்லுகிறதேதென்றவரைக் கேட்டார்கள்.

௰௨ அவரோவென்றால் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: மெய்தான், எலியா முந்தி வந்து எல்லாத்தையுஞ் சீர்திருத்துகிறான். ஆனாலும் மனுஷனுடைய குமாரனைக் குறித்து, அவர் அனேகம் பாடுபட்டு அற்பமாயெண்ணப்படுவாரென்றெழுதியிருக்கிறதேபடி.

௰௩ * எலியாவோவென்றால் வந்தானென்றும் அவனைக் குறித்தெழுதியிருக்கிறபிரகாரமாய் அவர்கள், தாங்களுக்கு வேணுமென்றபடி எல்லாம் அவனுக்குச் செய்தார்களென்றும் உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். * மத். ௰௧, ௰௪.

¶ அவர் சந்திரரோகியான ஒருத்தனைச் சொஸ்தமாக்கினது. மத். ௰௭, ௰௪—௨௧. லூக். ௯, ௩௭—௪௩.

௰௪ அவர் சீஷருண்டையிலே வந்தபோது, அவர்களைச் சுத்தித் திரளாகு மனுஷரையும் அவர்களோடே தர்க்கிக்கிற வேதபாரகரையுங் கண்டார்.

௰௫ உடனே கூட்டமெல்லாம் அவரைக் கண்டபோது ஆச்சரியப்பட்டு, ஓடிவந்து அவரை உபசரித்தார்கள்.

௰௬ அவர் வேதபாரகரை: நீங்கள் அவர்களோடே தர்க்கிக்கிறதென்னவென்று கேட்டார்.

௰௭ அப்பொழுது ஜனக்கூட்டத்திலொருத்தன் பிரத்தியுத்தரமாக: போதகரே, ஊமையாவியுள்ள என் மகனை உம்மண்டையிலே கொண்டுவந்தேன்.

௰௮ அது அவனைப் பிடிக்கிறவிடமெல்லாம் அவனை நோவச்சுது, அப்போ நுரைதள்ளித் தன் பல்லுகளைக் கடித்துக்கொண்டு தொய்ந்துபோறான். அதைத் துரத்திவிட உம்முடைய சீஷரோடே கேட்டேன், அவர்களாலே கூடாதே போச்சுதென்றான்.

௰௯ ஆனால் அவர் அவனுக்குப் பிறத்தியுத்தரமாக: அவிசுவாசமுள்ள சந்ததியே, எந்தமட்டும் உங்களோடேயிருப்பேன், எந்தமட்டும் உங்களைப் பொறுத்திருப்பேன்; அவனை என்னண்டைக்குக் கொண்டுவாருங்கோளென்றார்.

௨௰ அப்போ அவனை அவரண்டைக்குக் கொண்டுவந்தார்கள். அவனைக் கண்டவுடனே ஆவி அவனை அலைக்கழித்தது, அவன் தரையிலே விழுந்து நுரைதள்ளிப் பிரண்டான்.

௨௧ அவர் அவனுடைத் தகப்பனை: இது அவனுக்கு வந்து எத்தனை காலமாச்சுதென்று கேட்டார். அதற்கவன்: சிறுபோதே வந்திருக்குது.

௨௨ அது அவனைக் கெடுக்கத்தக்கதாக வெகுதரம் அவனைத் தீயிலுந் தண்ணீரிலுந் தள்ளுது, உம்மாலே ஆகக்கூடுமேயானால் எங்கள்மேலே மனதுருகி எங்களுக்கு உதவிசெய்யுமென்றான்:

௨௩ ஆனால் யேசு அவனுடனே: விசுவாசிக்க உனக்குக் கூடுமேயானால், விசுவாசிக்கிறவனுக்கு + எல்லாக் காரியங்களுங் கூடுமென்றார். + ஞா. ௰௭; ௯:

௨௪ உடனே பிள்ளையின் தகப்பன்: விசுவாசிக்கிறேன்; ஆண்டவரே, என் அவிசுவாசத்துக்கு உதவிசெய்யுமென்று கண்ணீர்விட்டுக் கூப்பிட்டான்:

௨௫ ஆனால் கும்பு சேர்ந்தோடி வருகிறதை யேசு கண்டு, அசுத்த ஆவியுடனே: ஊமையுஞ் செவிடுமான ஆவியே; அவனை விட்டுப் பிறப்படு, இனி அவனுக்குள்ளே போகாதேயென்று நான் உனக்குக் கற்பிக்கிறேனென்று அதை அதட்டினார்.

௨௬ அப்போ அது கூப்பிட்டு அவனை வெகுவாய் அலைக்கழித்துப் புறப்பட்டுது. அவன் மரித்தானென்று அனேகர் சொல்லத்தக்கதாய்ச் செத்தவன் போலானான்:

௨௭ ஆனால் யேசு அவனைக் கையைப் பிடித்தெடுத்தார், அப்போ எழுந்திருந்தான்.

௨௮ அவர் வீட்டுக்குள் பிரவேசித்தப்போது அவருடைய சீஷர் அவரைத் தனியே: நாங்கள் அதைத் துரத்திவிடக் கூடாதே போனதென்னவென்று கேட்டார்கள்.

௨௯ அவர் அவர்களுடனே: இந்தச் சாதி செபத்தினாலும் உபவாசத்தினாலுமேயொழிய பின்னெந்த வகையினாலும் புறப்படமாட்டாதென்றார்.

¶ அவர் தம்முடைய மரணத்தையும் உயிர்த்தெழுந்திருத்தலையும் முன்னறிவித்தது. மத். ௰௭, ௨௨. ௨௩. லூ. ௯, ௪௪—௪௫.

௩௰ அவ்விடம்விட்டுப் புறப்பட்டு, கலிலேயாவுக்குக் கடந்துபோனார்கள். அதை ஒருத்தரும் அறிய அவருக்கு மனதில்லாதிருந்தது.

௩௧ ஏனென்றால் அவர் தம்முடைய சீஷரைப் போதகம்பண்ணி, அவர்களோடே: * மனுஷனுடைய குமாரன் மனுஷர் கைகளிலே ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரைக் கொன்றுபோடுவார்கள், கொல்லப்பட்டு மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருப்பாரென்றார். * அ, ௩௧.

௩௨ அவர்களோவென்றால் அந்த வார்த்தையை அறியாமல் போய், அதை அவரைக் கேட்கப் பயந்தார்கள்.

¶ மனத்தாழ்மையாயிருக்கவும் மேட்டிமை உண்டாக்காமலும் மேட்டிமையுடையாமலுமிருக்கவும் அவர் சொன்ன புத்தி. லூ. ௯, ௪௬—௫௰.

௩௩ அவர் கப்பர்நகூமுக்கு வந்தார்; வீட்டிலேயிருக்கும்போது அவர்களை: நீங்கள் வழியிலே உங்களுக்குள்ளே தர்க்கித்ததென்னவென்று கேட்டார்.

௩௪ ஆனால் அவர்கள் மவுனமாயிருந்தார்கள், ஏனென்றால் ஆர் பெரியவனென்று வழியிலே ஒன்றாய்க் கொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள்.

௩௫ அவர் உட்கார்ந்து பன்னிருவரை அழைத்து, அவர்களோடே: * யாதொருவன் முதலாளியாயிருக்க மனதாயிருந்தால், எல்லாரிலுங் கடைசியானவனும் எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருப்பானென்று சொல்லி, * மத். ௰௮, ௧. ௨௰.

௩௬ ஒரு பிள்ளையை எடுத்து அதை அவர்கள் நடுவே நிறுத்தி, அதை * அணைத்துக்கொண்டு, * ௰, ௰௬.

௩௭ எவனாகிலும் இப்படிக்கொத்த பிள்ளைகளிலே ஒன்றை என் நாமத்துக்காக ஏற்றுக்கொண்டால் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், எவனாகிலும் என்னை ஏற்றுக்கொண்டால் அவன் என்னை ஏற்றுக்கொள்ளாமல் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறானென்று அவர்களுக்குச் சொன்னார்.

௩௮ ஆனால் யோவான் அவருக்குப் பிரத்தியுத்தரமாக: போதகரே, நம்மைப் பின்செல்லாத ஒருத்தன் உமது நாமத்திலே பிசாசுகளைத் துரத்த விடக்கண்டோம், அவன் நம்மைப் பின்செல்லாதபடியினாலே அவனுக்குத் தடைசொன்னோமென்றான்.

௩௯ ஆனால் யேசு சொன்னதாவது: அவனுக்குத் தடைசொல்லாதேயுங்கோள், ஏனென்றால் என் நாமத்திலே வல்லமையைச் செய்து, சீக்கிரத்திலே என்னைத் தீங்குசொல்லத்தக்கவனொருவனுமில்லை.

௪௰ அதேதென்றால் நமக்கு விரோதமாயிராதவன் நமக்கானவனாயிருக்கிறான்.

௪௧ * ஏனென்றால் எவனாகிலும் நீங்கள் கிறீஸ்துவினுடையவர்களென்று ஒருகலயந்தண்ணீர் என் நாமத்தினிமித்தியம் உங்களுக்குக் குடிக்கக்கொடுத்தால்

தால், அவன் தன் பலனை இழந்துபோகானென்று உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன். * மத். ௰, ௪௨.

௪௨ ஆனாலெவனாகிலும் என்னையேற்றில விசுவாசிக்கிற சிறியரில் * ஒருவனுக்கிடறல் உண்டாக்கினால், அவன் கழுத்தில் ஏந்திரக்கல்லு கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்திலே தள்ளுண்டுபோனது அவனுக்குத்தா வி[illegible]. * மத். ௰௮, ௬—௯.

௪௩ * உன்னுடைய கை உனக்கிடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு, நீ ஊனவாளியாய் சீவனுக்குள் பிறவேசிப்பது இரண்டு கையுடையதாய் அவியாத அக்கினியாகிய நரகத்துக்குள் போவதைப் பார்க்க உனக்கு நலமாயிருக்கும். * மத். ௫, ௨௯. ௩௰.

௪௪ அங்கே * அவர்கள் பூச்சி சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும். * எசா. ௬௬, ௨௪.

௪௫ உன் கால் உனக்கிடறலுண்டாக்கினால் அதைத் தறித்துப்போடு, நீ சப்பாணியாய் சீவனுக்குள் பிறவேசிப்பது இரண்டு காலுடையதாய் அவியாத அக்கினியாகிய நரகத்திலே தள்ளுண்டுபோவதைப் பார்க்க உனக்கு நலமாயிருக்கும்.

௪௬ அங்கே அவர்கள் பூச்சி சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

௪௭ உன் கண் உனக்கிடறலுண்டாக்கினால் அதைப் பிடுங்கிப்போடு, நீ ஒற்றைக்கண்ணனாய் பராபரனுடைய இராச்சியத்துக்குள் பிறவேசிப்பது இரண்டு கண்ணுடையதாய் அக்கினியாகிய நரகத்திலே தள்ளுண்டுபோவதைப் பார்க்க உனக்கு நலமாயிருக்கும்.

௪௮ அங்கே அவர்கள் பூச்சி சாகாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்.

௪௯ ஏனெனில் எவ்வொருத்தன் அக்கினியினால் உப்பிடப்படுவான், * சகல பெலியும் உப்பினால் உப்பிடப்படும். * ௩. மோ. ௨, ௰௩.

௫௰ * உப்பு நல்லவஸ்து, உப்பு சாரமற்றுப் போச்சுதேயானால், அதை எதினாலே சாரமுண்டாக்குவீர்கள், உங்களில் உப்புடைந்திருங்கோள், ஒருத்தரோடொருத்தர் சமாதானமுமாயிருங்கோளென்றார். * மத். ௫, ௰௩.

## ௰. அதிகாரம்.

¶ விவாகப்பிரிவுக்குச் சொன்ன உத்தரம். மத். ௰௯, ௧—௰௨.

அவர் அவ்விடம் விட்டெழுந்திருந்து யோர்தானுக்கு அக்கரையான தேசத்தைக் கடந்து, யூதேயாவினெல்லைகளில் வந்தார். கும்புகள் திரும்ப அவரண்டை கூடி வந்தது, அவர் திரும்பவும் தம்முடைய பழக்கத்தின்படியே அவர்களுக்குபதேசித்தார்.

௨ அப்போ பரிசேயர் சேர்ந்து வந்து: பெண்சாதியைத் தள்ளிவிடப் புருஷனுக்குத் தாயமோவென்று அவரைச் சோதித்துக் கேட்டார்கள்.

௩ அவரோவென்றால் அவர்களுக்குப் பிரதியுத்தார

மாக

மாக: மோசே உங்களுக்குக் கற்பித்ததென்னவென்றார்.

௪ அதற்கவர்கள்: தள்ளுதலின் சீட்டை எழுதித் தள்ளிவிட ✝ மோசே உத்தாரங்கொடுத்தாரென்றார்கள். * ௫. மோ. ௨௪, ௧.

௫ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: உங்கள் இருதயக்கடினத்தினிமித்தியம் இந்தக் கற்பனையை உங்களுக்கெழுதினான்.

௬ ஆனால் லோகசிஷ்டிப்பு முதல் பராபரன் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கி:

௭ இதுநிமித்தியம் மனுஷன் தன் தகப்பனையுந் தாயையும் விட்டுத் தன் பெண்சாதியோடே இசைந்திருப்பான். * ௧. மோ. ௨, ௨௪.

௮ இருவரும் ஒரே மாங்கிஷமாயிருப்பார்களென்றார். இவ்விதமாயவர்கள் இனி இரண்டு பேராயிராமல் ஒரே மாங்கிஷமாயிருக்கிறார்கள்.

௯ ஆகையால் பராபரன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவானென்றார்.

௰ வீட்டிலே அவருடைய சீஷர் அந்தக் காரியத்தையே அவரைத் திரும்பவுங் கேட்டார்கள்.

௰௧ அவரவர்களுடனே: * எவனாகிலுந் தன் பெண்சாதியைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால், அவன் அவளுக்கு விரோதமாய் விபசாரம் பண்ணுகிறான். * மத. ௫, ௩௨.

௰௨ பெண்சாதியுந் தன் புருஷனைத் தள்ளிவிட்டு வேறொருத்தனை விவாகம் பண்ணினால், விபசாரம் பண்ணுகிறவளென்றார்.

¶ அவர் பிள்ளைகளை ஆசீர்வதித்தது.
மத. ௰௯. ௰௩—௰௫. லூ.
௰௮, ௰௫—௰௭.

௰௩ அப்போது அவரண்டைக்குப் பிள்ளைகளை அவர் அதுகளைத் தொடுகிறதுக்காகக் கொண்டுவந்தார்கள். ஆனாற் சீஷர் அதுகளைக் கொண்டுவந்தவர்களை அதட்டினார்கள்.

௰௪ யேசு அதைக் கண்டபோது வெஞ்சலந்தாங்கலடைந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: பிள்ளைகளென்னண்டைக்கு வருகிறதுக்கு இடங்கொடுங்கோள், அதுகளைத் தடைபண்ணாதேயுங்கோள், அதேனென்றால் பராபரனுடைய ராட்சியம் அப்படிக்கொத்தவர்களுக்காயிருக்குது.

௰௫ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்: * ஆராகிலுஞ் சிறுபிள்ளையைப்போலே பராபரனுடைய ராட்சியத்தை ஏற்றுக்கொள்ளாதேபோனால், அதுக்குள் பிறவேசிக்கமாட்டானென்று சொல்லி. * மத. ௰௮, ௩. ௧. பேது. ௨, ௩. ௧. கொ. ௰௪, ௨௰.

௰௬ * அதுகளை அணைத்துக்கொண்டு, அதுகள் மேலே கைகளை வைத்து அதுகளை ஆசீர்வதித்தார். * ௯, ௩௬.

¶ அவர்

¶ அவர் அய்சுரியமுள்ள ஒருத்தனுக்குச் சொன்னது. மத். ௰௯, ௰௬—௨௬. லூ. ௰௮, ௰௮—௨௭.

௰௭ அவர் வழியே புறப்பட்டபோது, ஒருத்தன் ஓடிவந்து, அவர் முன்பாக முழங்கால் படியிட்டு: நல்ல போதகரே, நித்திய சீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் செய்யவேண்டியதென்னவென்று அவனைக் கேட்டான்.

௰௮ ஆனால் யேசு அவனுக்குச் சொன்னதாவது: நீ என்னை நல்லவரென்பானேன், பராபரன் ஒருத்தர் தவிர ஒருவனும் நல்லவனல்லவே.

௰௯ விபசாரம்பண்ணாயாக, கொலை செய்யாயாக, களவு செய்யாயாக, பொய்ச்சாட்சி சொல்லாயாக, கவடு செய்யாயாக, உன் தகப்பனையும் தாயையுங் கனம்பண்ணுவாயாக என்கிற கற்பனைகளை அறிவாயேயென்றார்.

௨௰ ஆனால் அவன் அவருக்குப் பிறத்தியுத்தாரமாக: போதகரே, இதுகளெல்லாம் என் சிறுவயது துவக்கிக் கைக்கொண்டிருக்கிறேனென்றான்.

௨௧ யேசுவோவென்றால் அவனை நோக்கிப் பார்த்து, அவனைச் சிநேகித்து: உனக்கு ஒன்று குறையுது, நீ போய் உனக்குண்டானதையும் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்போ பரமண்டலத்திலே உனக்குப் பொக்கிஷமுண்டாயிருக்கும், நீயோவென்றால் வந்து, சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்செல்லென்றார். * மத். ௬, ௰௯. ௨௰.

௨௨ ஆனால் அவன் அந்த வார்த்தையினாலே மனம் நொந்துகொண்டு, துக்கமாய்ப் போய்விட்டான், அதேனென்றால் வெகு ஆஸ்தியுள்ளவனாயிருந்தான்.

௨௩ அப்போ யேசு சுத்திலும் பார்த்து, தம்முடைய சீஷருடனே: திரவியங்களுள்ளவர்கள் பராபரனுடைய ராச்சியத்துக்குள் பிரவேசிப்பதெத்தனை அரிதாயிருக்குமென்றார்.

௨௪ சீஷரோவென்றால் அவருடைய வார்த்தைகளுக்காகப் பிரமித்தார்கள். ஆனால் யேசு திரும்பப் பிறத்தியுத்தாரங் கொடுத்து: பிள்ளைகளே, திரவியங்களின் பேரிலே * நம்பிக்கையாயிருக்கிறவர்கள் பராபரனுடைய ராச்சியத்துக்குள் பிரவேசிக்கிறதெத்தனை அரிதாயிருக்குது. * சங்கீ. ௬௨, ௰௧.

௨௫ அய்சுரியவான் பராபரனுடைய ராச்சியத்துக்குள் பிரவேசிக்கிறதைப் பார்க்க ஒரு ஒட்டகம் ஊசியின் காதிலே நுழைகிறது எளிதாயிருக்குமென்று அவர்களுக்குச் சொன்னார்.

௨௬ ஆனால் அவர்கள் அதிகமாய்த் திகைத்து ஒருத்தரோடொருத்தர்: அப்படியானால், ஆர் ரட்சிக்கப்படக்கூடுமென்றார்கள்.

௨௭ யேசுவோவென்றால் அவர்களை நோக்கிப் பார்த்து: மனுஷரால் இது கூடாததாயிருக்குது, பராபரனாலேயோ இது கூடாததல்ல, அதேனென்றால் பராபரனால் * எல்லாக் காரியங்களுங் கூடுகிறதாயிருக்குதென்றார். * லூ. ௧, ௩௭. ௧. மோ. ௰௮, ௰௪.

¶ கசீல

¶ க்ரிஸ்துநிமித்தியமாகஎதையாகிலும்
விட்டுவிட்டவர்களுக்குவரும்பலன்.
மத். ௰௯, ௨௭—௩௰. லூக்.
௰௮, ௨௮—௩௰.

௨௮ அப்போ பேதுரு அவருடனே: இதோ நாங்களெல்லாத்தையும் விட்டு உம்மைப் பின்சென்றோமேயென்று சொல்லத்தொடங்கினான்.

௨௯ ஆனாலே இயேசு பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என்னிமித்தியமாகவுஞ் சுவிசேஷத்தினிமித்தியமாகவும் வீட்டையாகிலுஞ் சகோதரனையாகிலுஞ் சகோதரிகளையாகிலுந் தகப்பனையாகிலுந் தாயையாகிலும் பெண்சாதியையாகிலும் பிள்ளைகளையாகிலும் நிலங்களையாகிலும் விட்டுவிட்டவனெவனும்,

௩௰ இப்போ இம்மையிலே துன்பங்களுடனேகூட நூறத்தனையாக வீடுகளையுஞ் சகோதரரையுஞ் சகோதரிகளையுந் தாய்களையும் பிள்ளைகளையும் நிலங்களையும் வரப்போற லோகத்திலே நித்தியசீவனையும் அடையாதிருப்பதில்லை.

௩௧ ஆகிலும் * முந்தினோரநேகர் பிந்தினோருமாய் பிந்தினோர் முந்தினோருமாயிருப்பார்களென்றார். * மத். ௨௰, ௰௬.

¶ படப்போறபாடுகளைக் க்ரிஸ்துமுன்னறிவிக்கிறது. மத். ௨௰, ௰௭—௰௯.
லூக். ௰௮, ௩௧—௩௪.

௩௨ ஆனாலெருசலேமுக்குப் போயேறுகிறவர்களாய் வழியிலேயிருந்தார்கள். இயேசு அவர்களுக்கு முன்னடந்தார், அவர்கள் திகைத்து, பயந்தே பின்சென்றார்கள். அப்போ அவர் பன்னிருவரை மறுபடியும் அழைத்து, தமக்குச் சம்பவிக்கப்போறதுகளை அவர்களுக்குச் சொல்லத்துவக்கி:

௩௩ இதோ யெருசலேமுக்குப் போறோம், அங்கே மனுஷனுடைய குமாரன் பிரதான ஆசாரியர்களுக்கும் வேதபாரகருக்கும் ஒப்புக்கொடுக்கப்படுவார், அவர்கள் அவரை மரணத்துக்குள்ளாகத் தீர்த்து, புறசாதியாருக்கொப்புக்கொடுப்பார்கள்.

௩௪ அவரைப் பரியாசம்பண்ணி, அவரை வாரினாலடித்து, அவர்மேலேதுப்பி, அவரைக் கொன்றுபோடுவார்கள், மூன்றாம்நாளிலே திரும்பவும் எழுந்திருப்பாரென்றார்.

¶ செபெதேயுவின்குமாரருடைய வின்னப்பம். மத். ௨௰, ௨௰—௨௮.

௩௫ செபெதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரண்டைக்கு வந்து: போதகரே, நாங்கள் கேட்கப்போறதைத் தேவரீர் எங்களுக்குச் செய்யவேணுமென்றிருக்கிறோமென்றார்கள்.

௩௬ அவர் அவர்களுடனே: நான் உங்களுக்கென்ன செய்யவேணுமென்றிருக்கிறீர்களென்றார்.

௩௭ அப்போதவர்கள் அவருடனே: உம்முடைய மகிமையிலே நாங்கள், ஒருத்தன் உம்முடைய வலதுபாரிசத்

திலும

ஒருமருத்தன் உம்முடைய இடதுபாரிசத்திலும் உட்காரந்திருக்கும்படிக்கு எங்களுக்கு அருள்செய்யுமென்றார்கள்.

௩௮ ஆனாலியேசு அவர்களோடே: நீங்கள் கேட்கிறது இன்னதென்று அறியீர்கள், நான் குடிக்கிற பாத்திரத்திலே நீங்கள் குடிக்கவும், நான் பெறுகிற ஸ்நானத்தை நீங்கள் பெறவும் உங்களாலே கூடுமோ என்றார்.

௩௯ அவர்கள் அவரோடே: கூடுமென்றார்கள், ஆனாலியேசு அவர்களோடே: நான் குடிக்கிற பாத்திரத்தையோ குடிப்பீர்கள், நான் பெறுகிற ஸ்நானத்தையும் பெறுவீர்கள்.

௪௰ ஆனாலென் வலதுபாரிசத்திலும் என் இடதுபாரிசத்திலும் உட்காருகிறதை அளிக்கிறது என்னுடையதல்ல, எவர்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டதோ அவர்களுக்கே அளிக்கப்படுமென்றார்.

௪௧ மற்றப்பத்துப்பேர் அதைக்கேட்டபோது, யாக்கோபின் பேரிலும் யோவானின் பேரிலும் தாங்கலாயிருக்கத்துவக்கினார்கள்.

௪௨ ஆனாலியேசு அவர்களைச்சேரவழைத்து அவர்களுக்குச்சொன்னதாவது: ஜாதிகளுக்குத் தலைவராக எண்ணப்பட்டவர்கள் அவர்களை ஆளுகிறார்களென்றும், அவர்களிற் பெரியவர்கள் அவர்கள் மேலதிகாரிகளாயிருக்கிறார்களென்றும் அறிவீர்கள்.

௪௩ உங்களிலோ அப்படிவேண்டாம். உங்களிலெவனாகிலும் பெரியவனாகவேணுமென்றிருந்தால், உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருப்பான்:

௪௪ உங்களிலெவனாகிலும் முதலாளியாகவேணுமென்றிருந்தால், எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருப்பான்.

௪௫ ஏனென்றால் மனுஷனுடைய குமாரனும் ஊழியத்துக்குச்செய்விக்கக்கொள்ள வராமல், ஊழியத்துக்குச்செய்யவுந் தம்முடைய ஜீவனை அநேகரை மீட்கும்பொருளாகத்தரவும் வந்தாரென்றார்.

## ௩ குருடனாய பர்த்திமேயு பார்வையடைந்தது.

௪௬ பிற்பாடு எரிகோவுக்கு வந்தார்கள். அவரும் அவருடைய சீஷருந் திரளான ஜனங்களும் * எரிகோவிலிருந்து புறப்படுகிறபோது, திமேயுவின் மகனாகிய பர்த்திமேயு என்கிற குருடன் வழியருகே உட்கார்ந்திரந்துகொண்டிருந்து, * மத். ௨௰, ௨௯. லூ.

௪௭ அவர் நாசரேத்தாரான இயேசுவென்று கேட்கிறபோது: இயேசுவே, தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று கூப்பிடத்துவக்கினான்.

௪௮ அமர்ந்திருக்க அநேகர் அவனை அதட்டினார்கள், ஆனாலவன் வெகு அதிகமாய்: தாவீதின் குமாரனே, எனக்கிரங்குமென்று கூப்பிட்டான்.

௪௯ அப்போ யேசு நின்று அவனை அழைக்கச்சொன்னார். அவர்கள் குருடனை அழைத்து, அவனோடே: திடன்கொண்டெழுந்திரு, உன்னை அழைக்கிறாரென்றார்கள்.

௫௰ அப்போ அவன் தன் வஸ்திரத்தைக் களைந்துபோட்டெழுந்திருந்து இயேசுவினிடத்தில் வந்தான்.

௫௧

௫௧ யேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: நான் உனக்கென்ன செய்யவேண்டுமென்றிருக்கிறாயென்றார். குருடனவருடனே: குருவே, நான் பார்வையடையவேண்டுமென்றான்.

௫௨ ஆனாலியேசு அவனுடனே: போ, * உன் விசுவாசமுன்னை ரட்சித்ததென்றார். உடனே அவன் பார்வையடைந்து யேசுவை வழியிலே பின்சென்றான். * ௫, ௩௪.

## ௰௧. அதிகாரம்.

¶ கிறிஸ்து யெருசலேமுக்குள் பிறவேசமாயின்னது. மத. ௨௧, ௧—௰.
லூ. ௰௯, ௨௯. யோவ.
௰௨, ௰௨—௰௯.

அவர்கள் யெருசலேமுக்குச் சமீபமாய் ஒலிவமலைக்கருகான பெத்பகேயக்கும் பெத்தானியாவுக்கும் வந்தபோது, அவர் தம்முட் சீஷரிலிரண்டுபேரை அனுப்பி,

௨ அவர்களுக்குச் சொன்னதாவது: உங்களுக்கெதிரேயிருக்கிற கிராமத்துக்குப் போங்கோள், அதுக்குள் பிறவேசித்தவுடனே, மனுஷரொருமித்தேறாத ஒரு குட்டி கட்டியிருக்கிறதைக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக்கொண்டுவாருங்கோள்.

௩ யாதொருத்தனுங்களுடனே: ஏனிதைச் செய்கிறீர்களென்றால்: அது கர்த்தருக்குத் தேவையாயிருக்கிறதென்று சொல்லுங்கோள் உடனே அதை இங்கேயனுப்புவானென்றார்.

௪ அவர்கள் போய், குட்டியை வழிப்பிரிவான வெளியிலே ஒரு கதவடியிலே கட்டியிருக்கிறதைக் கண்டுபிடித்து, அதை அவிழ்த்தார்கள்.

௫ அப்போ அங்கே நின்றவர்களிலே சிலரவர்களுடனே: நீங்களிக்குட்டியை அவிழ்க்கிறகாரியமென்னவென்றார்கள்.

௬ ஆனாலவர்கள் யேசு கற்பித்தபடியே அவர்களுக்குச் சொன்னார்கள். அப்போ அவர்களைப் போகவிட்டார்கள்.

௭ அவர்கள் அந்தக் குட்டியை யேசுவினிடத்துக்குக் கொண்டுவந்து, அதின் மேலே தங்கள் வஸ்திரங்களைப் போட்டார்கள், அவர் அதின் மேலேறினார்.

௮ ஆனால் அனேகர் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள், வேறே சிலர் விருட்சங்களின் கிளைகளைத் தறித்து வழியிலே தெளித்தார்கள்.

௯ முன்னே போனவர்களும் பின்னே வந்தவர்களும் சத்தமிட்டு: * ஓசியன்னா, கர்த்தாவின் நாமத்திலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். * சங்கீ. ௱௰௮, ௨௫. ௨௬.

௰ கர்த்தாவின் நாமத்திலே வருகிற நம்முடைய பிதாவாகிய தாவீதின் ராட்சியம் ஆசீர்வதிக்கப்பட்டது; உன்னிதமானதுகளிலே ஓசியன்னாவென்றார்கள்.

௰௧ யேசு யெருசலேமுக்குத் தேவாலயத்துக்குட்

உள்ளு

உள்ப்பிறவேசித்து எல்லாத்தையுஞ் சுத்திப் பார்த்து;
சாயுங்காலமான போது பன்னிருவரோடுங்கூட
பெத்தானியாவுக்குப் புறப்பட்டுப்போனார்.

¶ அவர் கனிகொடாத அத்திமரத்தைச் சபித்தது. மத். ௨௧, ௰௮. ௰௯.

௰௨ மறுநாளிலே அவர்கள் பெத்தானியாவிலிருந்து வருகையிலே அவர் பசியாயிருந்து,
௰௩ இலைகளுள்ள அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு; அதிலே ஏதையாகிலுங் கண்டுபிடிக்கலாமோவென்று வந்தார்: அவர் அதினிடத்திலே வந்தபோது, இலைகளல்லாமல் பின்னொன்றையுங் கண்டதில்லை; அதேனென்றால் அத்திப்பழக்காலமாயிருந்ததில்லை:
௰௪ அப்போ யேசு உத்தரமாக அத்துடனே: இனிமேலென்னைக்கும் ஒருத்தரும் உன்னிடத்திலே கனிபோசியாதிருக்கக்கடவதாகவென்றார். அதை அவருடைய சீஷர் கேட்டார்கள்.

¶ அவர் தேவாலயத்தைச் சுத்திகரித்தது.

௰௫ அவர்கள் யெருசலேமுக்கு வந்தார்கள். * யேசு தேவாலயத்துக்குள்ளப் பிறவேசித்து, தேவாலயத்திலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையுந் துரத்திவிட்டுக், காசுக்காறருடைய பலகைகளையும் புறா விற்கிறவர்களின் ஆசனங்களையுங் கவிழ்த்துப்போட்டு, * மத். ௨௧, ௰௨. ௰௩. லூ. ௰௯, ௪௫—௪௮.
௰௬ ஒருவனுந் தேவாலயத்து வழியாக யாதொரு பண்டம் பாடியைக் கொண்டுபோகவொட்டாமல்;
௰௭ * நம்முடைய வீடு எல்லாச் சாதிகளுக்குஞ் செபத்தின் வீடென்னப்படுமென்றெழுதியிருக்கச் சொல்லலையோ. நீங்களோவெனில் ** அதைக் கள்ளர்கெபியாக்கினீர்களென்று அவர்களுக்குச் சொல்லி உபதேசித்தார். * யெச. ௫௬, ௭. ** யெரே. ௭, ௰௧.
௰௮ அதை வேதபாரகரும் பிரதான ஆசாரியர்களுங் கேட்டு, அவரை எப்படிக் கொல்லச் செய்வதென்று வகைதேடினார்கள். ஏனென்றால் சனமெல்லாம் அவர் உபதேசத்துக்குத் திகைத்திருந்தபடியினாலே அவருக்குப் பயப்பட்டார்கள்.
௰௯ சாயுங்காலமானபோது பட்டணத்திலிருந்து வெளியே புறப்பட்டார்.

¶ அவர் விசுவாசத்தையுஞ் செபத்தையுங் குறித்துச் சொன்னபுத்தி. மத். ௨௧. ௨௰—௨௨.

௨௰ காலமே அவர்கள் கடந்து நடக்கும்போது; அத்திமரம் வேர்கள் முதலாய்ப் பட்டுப்போச்சுதென்று கண்டார்கள்.
௨௧ அப்போ பேதுரு நினைவுகூர்ந்து, அவருடனே: ரபி, நீர் சபித்த அத்திமரம் பட்டுப்போச்சுதென்றான்.

௨௨ யேசு பிறத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொ
ன்னதாவது: பராபரனைப் பேரிலே விசுவாசமுள்ள
வர்களாயிருங்கோள்.
௨௩ ஏனென்றால் * எவனாகிலும் இந்தப் பர்வதத்
துடனே: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே விழுவென்று
சொல்லி, தன் இருதயத்திலே சந்தேகப்படாமல், தா
ன் சொல்லுகிறது ஆகுமென்று விசுவாசித்தால், அ
வனுக்கு அவன் சொன்னயாவுமாகுமென்று மெய்
யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத. ௰௭,
௨௰.
௨௪ ஆனபடியினாலே நீங்கள் ஜெபம்பண்ணி எதுக
ளைக் கேட்டாலும் அதை அடைவோமென்று விசுவாசியுங்
கோள், அப்போ உங்களுக்கு வருமென்று உங்களுக்
குச் சொல்லுகிறேன். * மத. ௭, ௭.
௨௫ நீங்கள் ஜெபம்பண்ணி நிற்கும்போது யாதொ
ருவன் பேரிலே உங்களுக்குக் குறை ஏதாகிலுமுண்
டானால், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா
உங்கள் தப்பிதங்களையும் உங்களுக்கு மன்னிக்கும்ப
டிக்கு, அதை மன்னியுங்கோள்.
௨௬ நீங்கள் * மன்னியாதே போனீர்களேயானா
ல், பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா உங்க
ள் தப்பிதங்களையும் மன்னியாதே போவாரென்றார்.
* மத. ௬, ௰௫.

¶ அவருடைய அதிகாரத்துக்காக யூதருடை
யமுப்பர் வந்து கேட்டது. மத. ௨௧,
௨௩—௨௭. லூ. ௨௰, ௧—௮.

௨௭ பிறபாடு மறுபடியும் யெருசலேமுக்கு வந்
தார்கள். அவர் தேவாலயத்திலே உலாவுகையி
லே பிறதான ஆசாரியர்களும் வேதபாரகரும் மூப்பா
னவர்களும் அவரண்டையிலே வந்து அவருடனே:
௨௮ எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறீர்,
இதுகளைச் செய்ய உமக்கிந்த அதிகாரத்தைக் கொடுத்த
வராரென்றார்கள்.
௨௯ ஆனால் யேசு அவர்களுக்குப் பிறத்தியுத்தாரமா
க: நானும் உங்களை ஒரே வார்த்தையைக் கேட்பேன்,
நீங்கள் எனக்குத்தாரஞ் சொன்னால், நானும் உங்களு
க்கு எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்
று சொல்லுவேன்.
௩௰ யோவானுடைய ஞானஸ்நானம் பரமகட்ட
ளையினாலுண்டாயிருந்ததோ அல்லது மனுஷராலே உ
ண்டாயிருந்ததோ, எனக்குத்தாரஞ் சொல்லுங்கோ
ளென்றார்.
௩௧ அப்போ அவர்கள்: பரமகட்டளையினாலுண்
டாயிருந்ததென்றோமாகில், அவர்: பின்னை ஏன் அ
வனை விசுவாசியாதே போனீர்களென்பார்.
௩௨ மனுஷராலேயென்றோமேயாகில், சனத்துக்கா
கப் பயமுண்டு, ஏனென்றால் எல்லாரும் யோவானை
மெய்யாய்த் தீர்க்கதெரிசியாயிருந்தானென்றெண்ணி
னார்களென்று தங்களுக்குள்ளே சிந்தித்துக்கொண்டு,
௩௩ யேசுவுக்குப் பிறத்தியுத்தாரமாக: அறியோ
மென்

மென்றார்கள். அப்பொழுது யேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: நானும் எந்த அதிகாரத்தினாலே செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேனென்றார்.

## ௰௨. அதிகாரம்.

¶ பொல்லாத திவிதாட்சத்தோட்டக்காரர் உவமை. மத. ௨௧, ௩௩. லூக். ௨௰, ௯—௰௯.

அவர் உவமைகளாய் அவர்களுக்குச் சொல்லத்துவக்கினது: ஒரு மனுஷன் திவிதாட்சத்தோட்டத்தை நாட்டி, சுத்திவேலி அடைத்து, அதிலே ஆலையைப் போட்டு, கோபுரங்கட்டி, அதைத் திவிதாட்சத்தோட்டக்காரருக்குவிட்டு, மறுதேசத்துக்குப் போய்,

௨ தருணகாலத்திலே தோட்டக்காரரிடத்திலே திவிதாட்சத்தோட்டத்துக் கனியிலே சிலதை வாங்க, தோட்டக்காரரண்டைக்கு ஒரு ஊழியக்காரனை அனுப்பினான்.

௩ அவர்களோ அவனைப் பிடித்து, அடித்து, வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.

௪ திரும்ப வேறொரு ஊழியக்காரனை அவர்களண்டைக்கனுப்பினான். அவனை அவர்கள் கல்லெறிந்து, தலையிலே காயப்படுத்தி, கனயீனமாக அனுப்பிவிட்டார்கள்.

௫ திரும்பவும் வேறொருத்தனை அனுப்பினான், அவனை அவர்கள் கொன்று, வேறும் அநேகரிலே சிலரை அடித்துஞ் சிலரைக் கொன்றும் போட்டார்கள்.

௬ பின்னும் அவனுக்குப் பிரியமான ஒரே குமாரனிருக்கையில: என் குமாரனுக்கு அஞ்சுவார்களென்று, அவனையுங்கடைசியிலே அவர்களண்டைக்கனுப்பினான்.

௭ ஆனால் அந்தத்தோட்டக்காரர் ஒருத்தரோடொருத்தர்: இவன் சுதந்தரவாளியாயிருக்கிறான், இவனைக் கொன்றுபோடுவோம் வாருங்கோள், அப்பொழுது சுதந்திரம் நம்முடையதாமென்று சொல்லிக்கொண்டு,

௮ அவனைப்பிடித்துக் கொன்று, திவிதாட்சத்தோட்டத்துக்குப் புறம்பே எறிந்துபோட்டார்கள்.

௯ பின்பு திவிதாட்சத்தோட்டத்து எசமான் என்ன செய்வான், வந்து தோட்டக்காரரைச் சங்கரித்து, திவிதாட்சத்தோட்டத்தை வேறேபேர்களுக்குவிடுவான்.

௰ * வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே கோடிக்குத்தலையான கல்லாச்சுது. * சங்கீ. ௱௰௮, ௨௨. ௨௩.

௰௧ அது கர்த்தராலே ஆச்சுது, அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்குதென்றெழுதியிருக்கிறதை நீங்கள் வாசித்ததில்லையோவென்றார்.

௰௨ அப்பொழுது அவரைப்பிடிக்கவகைதேடினார்கள்; * சனத்துக்குப் பயந்தார்கள். ஏனென்றால் அந்த உவமையைத் தங்களுக்குச் சொன்னாரென்றறிந்தார்கள். * மத. ௰௪, ௫.

¶ ராய

¶ ராயனுடையவர்க்காக அவர் சொன்ன
உத்தரவு. மத். ௨௨, ௰௫—௨௨.
லூ. ௨௰, ௨௰—௨௬.

௰௩ அப்போ அவர்கள் அவரை விட்டுப்போய், வார்த்தையில் அவரைக் குத்தம்பிடிக்க, பரிசேயரிலும் ஏரோதேயின மனுஷரிலுஞ் சிலரை அவரண்டைக்கனுப்பினார்கள்.

௰௪ இவர்கள் வந்து, அவருடனே: போதகரே, நீர் சத்தியமுள்ளவர், எவனைன்றும் உமக்குக் கவலையில்லையென்று அறிந்திருக்கிறோம். ஏனென்றால் நீர் மனுஷமுகமாய்ப் பாராமல், சத்தியமாய்ப் பராபரனுடைய வழியைப் போதிக்கிறீர், ராயனுக்கு வரி கொடுக்க ஞாயமோ அல்லவோ, கொடுப்போமோ கொடாதிருப்போமோவென்றார்கள்.

௰௫ ஆனால் அவர்களுடைய மாயத்தை அவர் அறிந்து, அவர்களுடனே: நீங்கள் என்னைச் சோதிக்கிறதேது, நான் பார்க்கும்படிக்கு ஒரு பணத்தை எனக்குக் கொண்டுவாருங்கோளென்றார்.

௰௬ அப்படியே கொண்டுவந்தார்கள். அவர் இவர்களுடனே: இந்தச் சுரூபமும் மேலெழுத்தும் ஆருடையதென்றார். அவர்கள் அவருக்கு: ராயனுடையதென்றார்கள்.

௰௭ அப்போ யேசு அவர்களுக்குப் பிறதியுத்தாரமாக: ராயனுடையதை * ராயனுக்கும் பராபரனுடையதை பராபரனுக்குங் கொடுங்கோளென்றார். அவர்கள் அவர் பேரிலே ஆச்சரியப்பட்டார்கள். * ரோ. ௰௩, ௭.

¶ மரித்தோரெழுந்திருக்கிறது நிச்சயமென்று
ரூபித்தது. மத். ௨௨, ௨௩—௩௩.
லூ. ௨௰, ௨௭—௪௰.

௰௮ பிறபாடு உயிர்த்தெழுந்தலில்லையென்று சொல்லுகிற * சதுக்கேயர் அவரண்டை வந்து, அவரைக் கேட்டதாவது: * அப்போ. ௨௩, ௮.

௰௯ போதகரே, ஒருத்தனுடைய சகோதரன் புத்திரசந்தானமில்லாமல் மரித்து, பெண்சாதியைப் பின்வைத்தால், அவனுடைய சகோதரன் அவன் பெண்சாதியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேணுமென்று * மோசே எங்களுக்கெழுதிவைத்தான். * ௫. மோ. ௨௫, ௫.

௨௰ இப்போது ஏழு சகோதரர் இருந்தார்கள். முந்தினவன் ஒரு பெண்சாதியை விவாகம்பண்ணி, சந்தானமில்லாமல் மரித்தான்.

௨௧ இரண்டாஞ் சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனுஞ் சந்தானமில்லாமல் மரித்தான், மூன்றாஞ் சகோதரனும் அந்தப்படியே.

௨௨ ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி, சந்தானமில்லாமல் சென்றுபோனார்கள். எல்லாருக்குங் கடைசியிலே பெண்சாதியும் மரித்தாள்.

௨௩ இப்போது உயிர்த்தெழுந்தலிலே, அவர்கள் எழுந்திருக்கும்போது அவர்களில் ஆருடைய பெண்சாதியாயிருப்பாள். ஏழுபேரும் அவளைப் பெண்சா

தியாக

தியாகப்பட்டத்திருந்தார்களே என்றார்கள்.

௨௪ யேசுவவர்களுக்குப் பிறத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நீங்கள் வேதவெழுத்துக்களையாகிலும் பராபரனுடைய வல்லமையையாகிலும் அறியாததினாலேயல்லோ மோசம் போகிறீர்கள்.

௨௫ ஏனென்றால் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கும்போது கொள்வினையுங் கொடுப்பினையுமில்லாமல், பரமண்டலங்களிலிருக்கிற தூதரைப்போலிருப்பார்கள்.

௨௬ ஆனால் மரித்தோரெழுந்திருக்கிறார்களென்கிறதைத் தொட்டு நீங்கள் மோசேயின் புஸ்தகத்திலே: * நானாபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாயிருக்கிறேனென்று பராபரன் முட்செடியிலே அவனுடனே சொன்னதை வாசித்ததில்லையோ. * ௨. மோ. ௩, ௬.

௨௭ அவர் மரித்தோருடைய பராபரனாயிராமல், சீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கிறார், ஆகையினாலே நீங்கள் மிகவும் மோசம் போகிறீர்களென்றார்.

¶ பிறதான கற்பினையேதென்பது. மத். ௨௨, ௩௪—௪௰.

௨௮ அவர்கள் தர்க்கித்துக்கொள்ளுகிறதை வேதபாரகரிலொருத்தன் கேட்டு, அவர்களுக்கு நன்றாயுத்தாரஞ் சொன்னாரென்றறிந்து, சேர்ந்து வந்து: எல்லாக் கற்பினைகளிலும் பிறதானமானதேதென்று அவரைக் கேட்டான்.

௨௯ ஆனால் யேசு அவனுக்குப் பிறத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: எல்லாக் கற்பினைகளிலும் பிறதானமானதேதென்றால், * இஸ்றவேலே, கேள். நம்முடைய பராபரனாகிய கற்தர் ஏககற்தராயிருக்கிறார். * ௫. மோ. ௬, ௪. ௫.

௩௰ உன் பராபரனாகிய கற்தனை உன் முழு இருதயத்தாலும் உன் முழு ஆத்துமத்தாலும் உன் முழு வினாவினாலும் உன் முழுப்பெலத்தினாலுஞ் சினேகிப்பாயாகவென்கிறதே பிறதான கற்பினை.

௩௧ அதற்கொத்த இரண்டாங் கற்பினை: * உன் அயலானை உன்னைப்போலச் சினேகிப்பாயாக என்பதுதானே. இதுகளிலும் பெரிய கற்பினை வேறொன்றுமில்லையென்றார். * ௩. மோ. ௧௯, ௧௮.

௩௨ அப்போ வேதபாரகன் அவருடனே: நல்லவாறை, போதகரே, நீர் மெய்யாய்ச் சொன்னீர், ஏனெனில் பராபரன் ஒருத்தராயிருக்கிறார், அவரைத் தவிர வேறொருத்தரில்லை.

௩௩ அவரை முழு இருதயத்தாலும் முழு அறிவாலும் முழு ஆத்துமத்தாலும் முழுப்பெலத்தாலுஞ் சினேகிக்கிறதும் அயலானைத் தன்னைப்போலச் சினேகிக்கிறதும் எல்லாச் சர்வாங்கத் தகனங்களுக்கும் மற்றப் பெலிகளுக்கும் அதிகமாயிருக்குதென்றான்.

௩௪ அவன் புத்தியுடனே உத்தரஞ் சொன்னதை யேசு கண்டு, அவனுடனே: நீ பராபரனுடைய ராட்சியத்துக்குத் தூரமானவனல்லவென்றார். அப்புறம்

ஒருத்தரும்

ஒருத்தரும் அவரைக் கேட்கத் துணிந்ததில்லை.

¶ கிறிஸ்து தாவீதினுடைய குமாரனென்பது. மத். ௨௨, ௪௧—௪௬. லூ. ௨௰, ௪௧—௪௪.

௩௫ யேசு தேவாலயத்திலே உபதேசித்து, உத்தரவு கொடுத்துச் சொன்னதாவது: கிறிஸ்து தாவீதின் குமாரனென்று வேதபாரகர் எப்படிச் சொல்லுகிறார்கள்.

௩௬ * கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப் போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காருமென்று சொன்னாரென்று தாவீதானவன் பரிசுத்த ஆவியினாலே சொன்னானே. * சங்கீ. ௱௰, ௧.

௩௭ ஆகையினாலே தாவீதானவன் அவரை ஆண்டவரென்கிறானே, பின்னை எப்படி அவனுடைய குமாரனாயிருக்கிறாரென்றார். வெகு சனம் அவரை விருப்பமாய்க் கேட்டார்கள்.

¶ வேதபாரகரின் மாயத்தைக் காண்பித்தது. மத். ௨௩, ௧—௩௩. லூ. ௨௰, ௪௫—௪௭.

௩௮ அவர் தம்முடைய போதகத்திலே அவர்களுக்குச் சொன்னதாவது: * நீளவஸ்திரங்களைத் தரித்து நடக்கிறதையும் சந்தைவெளிகளிலே வந்தனங்களையும். * லூ. ௰௧, ௪௩—௫௨.

௩௯ ஆலயங்களிலே முதலாசனங்களையும் விருந்துகளிலே முதலிடங்களையும் விரும்பி,

௪௰ விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணுகிற வேதபாரகருக்கு எச்சரிக்கையாயிருங்கோள். இவர்கள் அதிக ஆக்கினை அடைவார்களென்றார்.

¶ சனங்கள் காணிக்கை போடுகிறவிதத்தை அவர் நோக்கிப்பார்த்தது. லூ. ௨௧, ௧—௪.

௪௧ யேசு தருமப்பெட்டிக்கு எதிராக உட்கார்ந்து, சனங்கள் அந்தப் பெட்டியிலே எப்படிக் காசு போடுகிறார்களென்கிறதைப் பார்த்திருந்தார். ஐசுவரியவான்கள் அநேகர் அநேகமாய்ப் போட்டார்கள்.

௪௨ ஒரு ஏழை விதவை வந்து, ஒரு துட்டுக்குச் சரியான இரண்டு காசைப் போட்டாள்.

௪௩ அப்போ அவர் தம்முடைய சீஷரைச் சேர அழைத்து, அவர்களுடனே: மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * இந்த ஏழை விதவை தருமப்பெட்டியிலே காசு போட்டவர்களெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய்ப் போட்டாள். * ௨. கொ. ௮, ௰௨.

௪௪ ஏனெனில் எல்லாரும் தங்கள் பரிபூரணத்திலே எடுத்துப் போட்டார்கள், இவளோ தன் தாட்சியிலே எடுத்து, தனக்குண்டானதெல்லாத்தையும் தன் முழுச்சீவனத்தையும் போட்டாளென்றார்.

## ௰௩. அதிகாரம்.

௧ அவர் தேவாலயத்தின் அழிவையும் லோக
ளுடைய முடிவையுங் குறித்துச் சொன்னது. ம.
௨௪, ௧ — ௩௫. லூ. ௨௧,
௫ — ௩௩.

அவர் தேவாலயத்தைவிட்டுப் புறப்படுகையில், அவருடைய சீஷரிலொருத்தன் அவரோடே: போதகரே, இதோ எப்படிப்பட்ட கல்லுகளும் எப்படிப்பட்ட கட்டடங்களும் பாருமென்றான்.

௨ இயேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: நீ இந்தப் பெரிய கட்டடங்களைப் பார்க்கிறாயோ, * இடிக்கப்படாமல் கல்லின்மேலே ஒரு கல்லும் வைக்கப்படுவதில்லையென்றார். * லூ. ௰௯, ௪௪.

௩ அவர் தேவாலயத்துக்கெதிராக ஒலிவமலையின்மேலே உட்கார்ந்திருக்கிறபோது, பேதுரும் யாக்கோபும் யோவானும் அந்திரேயாவும்:

௪ எப்போ இதுகளுண்டாம், இதுகளெல்லாம் நிறைவேறுகிறதற்கடையாளமென்னவென்று எங்களுக்குச் சொல்லுமென்று அவரைத் தனித்துக் கேட்டார்கள்.

௫ ஆனால் இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாகச் சொல்லத்துவக்கினதாவது: ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்குப் பாருங்கோள்.

௬ ஏனென்றால் அநேகர்: நான்தானென்று என் பேர்கொண்டுவந்து அநேகரை மோசம்போக்குவார்கள்.

௭ ஆனால் யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் நீங்கள் கேட்கும்போது கலங்காதேயுங்கோள், ஏனென்றால் இப்படிச் சம்பவிக்கவேண்டியது, முடிவோவென்றால் இன்னமில்லை.

௮ அதெப்படியென்றால் சாதிக்குச் சாதியும் ராச்சியத்துக்கு ராச்சியமும் விரோதமாயெழும்பும், அங்கங்கே பூமியதிர்ச்சிகளுமுண்டாம், பஞ்சங்களுங் கலகங்களுமுண்டாம்.

௯ இதுகள் உபாதிகளின் துவக்கங்கள். நீங்களோவென்றால் எச்சரிக்கையாயிருங்கோள் அதெப்படியென்றால். ஆலோசனைச்சபைகளுக்கும் ஆலயங்களுக்கும் உங்களை ஒப்புக்கொடுப்பார்கள். நீங்கள் அடிபட்டு, என்நிமித்தியந் தேசாதிபதிகளுக்கும் ராசாக்களுக்கும் முன்பாக, அவர்களுக்குச் சாட்சியாக நிறுத்தப்படுவீர்கள்.

௰ எல்லாச் சாதிகளிடத்திலும் முந்திச் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேணும்.

௰௧ * அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போதோவென்றால், நீங்கள் என்னத்தைப் பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலும், அந்நாழிகையிலே உங்களுக்குக் கொடுக்கப்படுகிறதைப் பேசுங்கோள். ஏனென்றால் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவிதானே. * மத். ௰, ௰௯.

௰௨ * ஆனால் சகோதரனைச் சகோதரனும் பிள்ளையைத் தகப்பனும் மரணத்துக்கொப்புக்கொடுப்பான்.

ருக்குவிரோதமாய்ப் பிள்ளைகளெழும்பி அவர்களைக் கொலைப்படுத்துவார்கள். * மீகா. ௭, ௬.

௰௩ எல்லாராலும் என் நாமத்தினிமித்தம் பகைக்கப்பட்டிருப்பீர்கள். ஆனாலும் முடிவுபரியந்தம் நிலைநிற்கிறவனே இரட்சிக்கப்படுவான்.

௰௪ * தானியேலால் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்ட பாழாக்குதலின் அருவருப்பை நீங்கள் தகாத தலத்திலே நிற்கக்காணும்போதோவென்றால் (அதை வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவான்) அப்போ யூதேயாவிலிருக்கிறவர்கள் பர்வதங்களுக்கோடிப்போகக்கடவார்கள். * தானி. ௯, ௨௭.

௰௫ ஆனால் வீட்டின்மேலிருக்கிறவன் தன் வீட்டுக்குள்ளிறங்கவேண்டாம், தன் வீட்டிலே ஏதாகிலும் எடுத்துக்கொள்ள உள்ளே போகவும் வேண்டாம்.

௰௬ வயலிலிருக்கிறவன் தன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ளப் பின்னிட்டுத் திரும்பவும் வேண்டாம்.

௰௭ ஆனால் அந்நாட்களிலே கெர்ப்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் அய்யோ.

௰௮ ஆனால் நீங்கள் ஓடிப்போவது மாரிகாலத்திலே சம்பவியாதபடிக்கு வேண்டிக்கொள்ளுங்கோள்.

௰௯ ஏனென்றால் அந்நாட்களிலே மகா உபத்திரமாயிருக்கும், அப்படிக்கொத்தது பராபரன் சிஷ்டித்த சிஷ்டியின் ஆதிமுதற்கொண்டு இதுவரைக்கும் சம்பவித்ததுமில்லை இனிச் சம்பவிக்கப்போறதுமில்லை.

௨௰ கர்த்தர் அந்நாட்களைக் குறைக்காதிருந்தாரானால், ஒரு மாம்சமாகிலும் தப்பிப்போவதில்லை, தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தியமேயாவென்றால் அவர் அந்தநாட்களைக் குறைச்சார்.

௨௰௧ * அப்போது யாதொருத்தன் உங்களுடனே: இதோ கிறீஸ்து இங்கே, அதோ அங்கேயென்றால், நம்பாதேயுங்கோள்.

௨௰௨ ஏனென்றால் * கள்ளக்கிறீஸ்துகளுங் கள்ளத் தீர்க்கதரிசிகளுமெழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களை முதலாய் மோசம்போக்கத் தக்கதாய அடையாளங்களையும் அற்புதங்களையும் பண்ணுவார்கள். * ௫. மோ. ௰௩, ௧—௩. ௨. தெச. ௨, ௯—௰௨.

௨௰௩ ஆனால் நீங்கள் எச்சரிக்கையாயிருங்கோள், இதோ எல்லாத்தையும் உங்களுக்கு முன்னறச் சொன்னேன்.

௨௰௪ அந்நாட்களிலே அந்த உபத்திரத்துக்குப்பிறபாடு * சூரியன் அந்தகாரப்பட்டு, சந்திரன் தன் ஒளியைக்கொடாதேபோம், * மத. ௨௰௪, ௨௰௯.

௨௰௫ * வானத்தினுடைய நட்சத்திரங்கள் விழுகிறதாகி, வானங்களிலுள்ள பெலன்களும் அசைக்கப்படும். * அபொ. ௬, ௰௨.

௨௰௬ அப்போ * மனுஷனுடைய குமாரன் மேகங்களிலே வெகு வல்லமையோடும் மகிமையோடும் வரக்காண்பார்கள். * தானி. ௭, ௰௩.

௨௰௭ அப்போதவர் தம்முடைய தூதரை அனுப்பி, தாம்

தெரிந்

தெரிந்துகொண்டவர்களைப் பூமியின் முகஎல் வானத்தின் முகஎல்லைமட்டுமுள்ள நாலுகாத களிலுமிருந்துகூட்டிச்சேர்ப்பார்.

௨௮ * அத்திமரத்தில் ஒரு உவமையைக் கற் கொள்ளுங்கோள், அதின் கிளைகள் நொற் துளிர்க்கும்போது வசந்தகாலம் சமீபமாயி னறறிகிறீர்கள். * மத. ௨௪, ௩௨—௩௪.

௨௯ அப்படியே நீங்களும் இதுகள் சம்ப ணும்போது; அது சமீபமாய்க் கதவண்டை வ தென்றறியுங்கோள்.

௩௰ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறே இதுகளெல்லாஞ் சம்பவிக்குமட்டும் இந்தச் சந்ததி ஒழியாது.

௩௧ * வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆனாலென் வார்த்தைகள் ஒழியாது. * மத. ௨௪, ௩௫.

௩௨ அந்த நாளையும் நாழிகையையுமோவெனில், பிதா தவிர வானத்திலுள்ள தூதராவது குமாரனாவது ஒருமறியார்கள்.

¶ தம்முடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்க அவர் புத்தி சொன்னது. மத. ௨௪, ௩௭. லூ. ௨௧, ௩௪—௩௬.

௩௩ எச்சரிக்கையாயிருங்கோள், * முழித்திருங்கோள், ஏனெனில் காலம் எப்போவென்றறியீர்கள். * மத. ௨௫, ௰௩.

௩௪ புறதேசத்துக்குப் பயணம் போற ஒருமனுஷன் தன் வீட்டை விட்டு, தன் ஊழியக்காறருக்கு அதிகாரத்தையும் அவனவனுக்கு அவனவனுடைய வேலையையுங் கொடுத்து, முழித்திருக்க வாசல்காறனுக்குக் கற்பித்ததுபோலிருக்குது.

௩௫ ஆகையினாலே வீட்டுக்கெசமான் அசப்பிலே வந்து உங்களை நித்திரைபண்ணுகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு முழித்திருங்கோள்.

௩௬ ஏனெனில் எப்போ வருகிறார், சாயுங்காலத்திலோ, பாதிராத்திரியிலோ, சாவல் கூவுகிறபோதோ, காலமேயோ வென்றறியீர்கள்.

௩௭ நான் உங்களுக்குச் சொல்லுகிறதையோவெனில் எல்லாருக்குஞ் சொல்லுகிறேன், முழித்திருங்கோளென்றார்.

## ௰௪. அதிகாரம்.

¶ யேசு பரிமளதயிலம் பூசப்பட்டது. மத. ௨௬, ௧—௰௩.

இரண்டுநாளைக்குப் பிறபாடு பெஸ்காவும் புளிப்பில்லா அப்பங்களின் பண்டிகையும் வருகிறதாயிருந்தது. * அப்போ பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும், அவரை எப்படித் தந்திரமாய்ப் பிடித்துக் கொன்றுபோடலாமென்று அவனைத் தேடினார்கள். * லூ. ௨௨, ௧. ௨.

௨ ஆனாலும் சனத்திலே கலகமுண்டாகாதபடிக்குப் பண்டிகையிலே வேண்டாமென்றார்கள்.

௩ அவர் பெத்தானியாவிலே குஷ்டரோகியான சீமோன் வீட்டிலே பந்தியிருக்கையிலே, விலையேறப்பெற்ற உத்தமமான நளதத் தைலத்தின் பரணியையுடைய ஒரு ஸ்திரீ வந்து பரணியையுடைத்து அவர் சிரசின் மேலே வார்த்தாள். * யோவா. ௰௨, ௧—௮.
௪ ஆனால் சிலர் தங்களுக்குள்ளே தாங்கலடைந்து: இந்தத் தயிலவழிம்பு ஏதுக்குண்டாச்சுது,
௫ இதை முந்நூறு பணத்துக்கதிகமாய் விக்கப்படுத்தி, தரித்திரருக்குக் கொடுக்கலாமே என்று சொல்லி, அவள் பேரிலே சினந்தார்கள்.
௬ ஆனாலேயேசு சொன்னதாவது: அவளை விடுங்கோள், ஏன் அவளை வருத்தப்படுத்துகிறீர்கள், என்னிலே நற்கிரிகையைச் செய்தாள்.
௭ ஏனென்றால் உங்களிடத்திலே எப்போதுந் தரித்திரர் இருக்கிறார்கள், உங்களுக்கு மனதுண்டானால் நீங்கள் அவர்களுக்கு நன்மைசெய்யலாம், நானோவென்றால் உங்களிடத்திலே எப்போதுமிரேன்.
௮ இவள் தனக்குள்ளபடி செய்தாள், பிரேதலங்காரத்துக்காக என் சரீரத்தைத் தயிலம் பூசமுந்திக்கொண்டாள்.
௯ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்தச் சுவிசேஷம் லோகமெங்கும் எங்கே பிரசங்கிக்கப்படுமோ, அங்கே இவள் செய்ததும் இவளை நினைப்பதற்காகச் சொல்லப்படுமென்றார்.

¶ யூதா அவரைக் காட்டிக்கொடுக்க உடன்படிக்கைபண்ணிக்கொண்டது. மத். ௨௰௬, ௰௪—௰௬. லூா. ௨௰௨, ௩—௬.

௰ பன்னிருவரிலொருத்தனான யூதா இஸ்காரியோத்தோவென்பவன் பிரதான ஆசாரியர்களண்டைக்கு, அவரை அவர்களுக்குக் காட்டிக்கொடுக்கும்படிக்குப் புறப்பட்டுப்போனான்.
௰௧ அவர்கள் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, அவனுக்கு வெள்ளிக்காசைத் தருவோமென்று வாக்குக்கொடுத்தார்கள், ஆகையினாலே அவரைச் சமயமான வேளையிலே காட்டிக்கொடுக்க வகைதேடினான்.

¶ அவர் சீஷருடனே கூடப் பஸ்காவைப் போசித்தது. மத். ௨௰௬, ௰௭—௨௰௫. லூா. ௨௰௨, ௭—௰௪.

௰௨ பஸ்காவைப் பலியிடும் புளிப்பில்லா அப்பங்களின் முதல்நாளிலே அவருடைய சீஷர் அவருடனே: நீர் பஸ்காவைப் போசிப்பதற்கு நாங்கள் எங்கே போய் ஆயத்தம் பண்ண உமக்குச் சித்தமுண்டென்றார்கள்.
௰௩ அப்போ அவர் தம்முடைய சீஷரில் இருவரை அனுப்பி, அவர்களுக்குச் சொன்னதாவது: பட்டணத்திலே போங்கோள், அங்கே தண்ணீர்க்குடஞ் சுமந்துபோகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான், அவனைப் பின்செல்லுங்கோள்.
௰௪ அவன் எங்கே உட்பிரவேசிக்கிறானோ அந்த வீட்டுக்காரனுடனே: நான் என் சீஷருடனே கூடப் பஸ்கா

பஸ்காவைப்போசிக்கத்தங்குமிடமெங்கே என்கி
றபோதகர் கேட்கிறாரென்றுசொல்லுங்கோ
௰௫ அவன் தளவரிசைப்படுத்தியிருக்கிற ஆய
னபெரியமேல்வீட்டை உங்களுக்குக்காண்
ன, அங்கேநமக்கு ஆயத்தம்பண்ணுங்கோள
௰௬ அப்போ அவருடையசீஷர் புறப்பட
ணத்தில்வந்து, அவர்தங்களுக்குச் சொன்னப
கண்டுபிடித்து, பஸ்காவை ஆயத்தப்பண்ணின
௰௭ சாயுங்காலமானபோது அவர்ப
ரோடுங்கூட வந்தார்.
௰௮ அவர்கள்பந்தியிருந்து போசிக்கையில், யேசு:
மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * உங்
களிலொருவன் என்னுடனே போசிக்கிற ஒருத்தன் என்னைக்கா
ட்டிக்கொடுப்பானென்றார். * லூ. ௨௨, ௨௧—௨௩.
யோவ. ௰௩, ௨௧—௩௰.
௰௯ அப்போ அவர்கள் துக்கப்பட்டு ஒருத்தனொருத்
னாய் அவருடனே: நானோவென்றும், மற்றொருத்தன்:
நானோவென்றுஞ் சொல்லத்துவங்கினார்கள்.
௨௰ அவரோ வென்றுபிறத்தியுத்தாரமாக அவர்
களுக்குச்சொன்னதாவது: என்னுடனேகூடத்தாலத்
தி லனைக்கதோய்க்கிறவனுண்டாயிருவரில் ஒருத்தனதா
தானே.
௨௧ மெய்தான், மனுஷனுடைய குமாரன்தம்மைக்
குறித்தெழுதியிருக்கிறபடியே போறார், ஆனாலெவனா
ல்மனுஷனுடைய குமாரன் காட்டிக்கொடுக்கப்படு
கிறாரோ அந்தமனுஷனுக்கய்யோ, அந்தமனுஷன் பிற
வாதிருந்தானானால் அவனுக்குநலமாயிருக்குமென்றார்.

¶ அவர் பரிசுத்தராப்போசனத்தைக்கற்ப
னையிட்டது. மத. ௨௬, ௨௬—௨௯.
லூ. ௨௨, ௰௯. ௨௰.

௨௨ அவர்கள் போசனம்பண்ணுகையில் யேசு அப்பத்
தையெடுத்து ஸ்தோத்திரம்பண்ணி, பிட்
டு அவர்களுக்குக்கொடுத்து: நீங்கள் வாங்கிப்போசியு
ங்கோள், இதுஎன்னுடைய சரீரமாயிருக்குதென்றார்.
௨௩ பின்பும்பாத்திரத்தையெடுத்து ஸ்தோத்திர
ம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார், அவர்
களெல்லாரும்அதிலேகுடித்தார்கள்.
௨௪ அப்போ அவர் இவர்களுக்குச் சொன்னதாவ
து: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிறபுது உடன்படி
க்கையினுடைய என்இரத்தமாயிருக்குது.
௨௫ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்,
நான் பராபரனுடைய ராட்சியத்தில் திராட்சியின்
ரசத்தைநவமானதாய்க் குடிக்கும்நாள்மட்டுமே
னி அதைக்குடியேனென்றார்.

¶ அவர் ஒலிவமலைக்குப்போனது. மத. ௨௬,
௩௰—௩௫. யோவ. ௰௮, ௧.

௨௬ அவர்கள் ஸ்தோத்திரம்பாடின்பிறபாடு
ஒலிவமலைக்குப்புறப்பட்டுப்போனார்கள்.
௨௭ அப்போயேசு அவர்களுக்குச்சொன்னதாவது:
நீங்களெல்லாரும் இந்தராத்திரியிலே என்னிடத்தில்
இடறி

இடறலப்படுவீர்கள், ஏனெனில்: * மேய்ப்பனை வெட்டுவேம், அப்போ ஆடுகள் சிதறுண்டு போம் என்றெழுதியிருக்குது. * சகரி. ௰௩, ௭. யோவா. ௰௬, ௩௨.

௨௮ ஆனால் நான் * எழுந்திருந்தபின்பு உங்களுக்கு முன்னே கலிலேயாவுக்குப் போவேனென்றார். * ௰௬, ௭.

௨௯ பேதுருவோவெனில் அவருடனே: எல்லாரும் இடறலப்பட்டாலும் நான் இடறலப்படேனென்றான்.

௩௰ யேசு அவனுடனே: மெய்யாக உனக்குச் சொல்லுகிறேன், இந்த ராத்திரியிலே சாவல் இரண்டுதரங் கூவுகிறதற்கு முன், முன்று தரம் * என்னை மறுதலிப்பாயென்றார். * லூக். ௨௨, ௩௪. யோவா. ௰௩, ௩௮.

௩௧ ஆனால் அவன் பின்னையும் அதிகமாய்: நான் உம்முடனே கூட மரிக்கவேண்டியதாயிருந்தாலும் உம்மை மறுதலியேனென்றான். அந்தப்படியே எல்லாருஞ் சொன்னார்கள்.

¶ அவர் தோட்டத்திலே பட்ட ஆத்தும்பப்பாடுகள். மத். ௨௬, ௩௬—௪௬. லூக். ௨௨, ௩௯—௪௬.

௩௨ அப்போ கெத்செமனே என்னும் பேர்கொண்ட தோட்டத்துக்கு வந்தார்கள். அவர் தம்முடைய சீஷருடனே: நான் ஜெபம்பண்ணுமட்டும் இங்கே உட்கார்ந்திருங்கோளென்று சொல்லி,

௩௩ பேதுருவையும் யாக்கோபையும் யோவானையுந் தம்முடனே கூட அழைத்துக்கொண்டு, திகிலடையவும் மிகவும் வியாகுலப்படவுந் துவக்கி,

௩௪ அவர்களுடனே: என் ஆத்துமம் மரணபரியந்தங் கனத்துக்கமாயிருக்குது, நீங்களிங்கே தங்கி முழித்திருங்கோளென்று சொல்லி,

௩௫ சத்தப்புறம் போய், தரையிலே விழுந்து, கூடுமானால், அந்த வேளை தம்மைவிட்டுப் போகவேண்டிக்கொண்டு,

௩௬ அப்பா பிதாவே, எல்லாம் உமக்குக் கூடும், இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்தெடுத்துக்கொள்ளும், எனக்கோவல்ல, * உமக்கிச்சகமாயிருக்கிறது ஆகக்கடவதென்றார். * யோவா. ௬, ௩௮.

௩௭ பிறபாடு வந்து அவர்களை நித்திரைபண்ணக் கண்டு, பேதுருவுடனே: சீமோனே, நித்திரைபண்ணுகிறாயோ, ஒரே மணிநேரம் முழித்திருக்கப் பெலனில்லாமல் போனாயோ,

௩௮ நீங்கள் சோதனைக்குள்ளாகப்படாதபடிக்கு முழித்திருந்து ஜெபம்பண்ணுங்கோள், ஆவி மனதுள்ளதுதான், மாங்கிஷமோவெனில் பெலயீனமானதென்றார்.

௩௯ அவர் திரும்பவும் போய், ஜெபம்பண்ணி, அந்த வார்த்தையைத்தானே சொன்னார்.

௪௰ அவர் திரும்பி வந்தபோது, அவர்களை மறுபடியும் நித்திரைபண்ணக் கண்டார், ஏனெனில் அவர்களுடைய கண்கள் பாரநித்திரை அடைந்திருந்தது,

தாங்க

தாங்கள் பிறத்தியுத்தாரமாக அவருக்குச் சொ
ன்னவென்று அவர்கள் அறிந்ததில்லை.
௪௧ அவர் மூன்றாம் விசை வந்து அவர்களுக்குச்
சொன்னதாவது: இன்னம் நித்திரை பண்ணி இளை
க்றீர்கள், ஆச்சுது, வேளை வந்தது, இதோ
ஷனுடைய குமாரன் பாவிகளுடைய கைகளில்
கொடுக்கப்படுகிறார்.
௪௨ எழுந்திருங்கோள், போவோம், இதோ
என்னைக் காட்டிக்கொடுக்கிறவன் சமீபித்து வந்
னார்.

¶ அவர் பிடிபட்டது. மத். ௨௬, ௪௭—௫௬.
லூக். ௨௨, ௪௭—௫௩. யோவா.
௰௮, ௨—௰௪.

௪௩ உடனே அவர் இன்னம் பேசுகையில், பன்னிரு
வரிலொருத்தனாகிய யூதாவும் அவனோடே கூட பிறதா
ன ஆசாரியர்களிடத்திலும் வேதபாரகரிடத்திலும் மூ
ப்பரிடத்திலுமிருந்து திரள் கும்பும் பட்டையங்க
ளையும் தடிகளையும் பிடித்து வந்தார்கள்.
௪௪ ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கிறவன்: நா
ன் எவனை முத்தமிடுவேனோ அவன் தான், அவனைப்
பிடித்து பத்திரமாய்க் கொண்டுபோங்கோளென்று
அவர்களுக்குக் குறிப்புச் சொல்லியிருந்தான்.
௪௫ அவன் வந்து உடனே அவரண்டை சேர்ந்து: ரபி,
ரபி என்று சொல்லி அவரை முத்தமிட்டான்.
௪௬ அவர்களோ வெளில அவர் மேல் தங்கள் கைக
களைப் போட்டு அவரைப் பிடித்துக்கொண்டார்கள்.
௪௭ ஆனால் அண்டையிலே நின்றவர்களில் ஒருத்த
ன் பட்டையத்தை உருவி, பிறதான ஆசாரியனுடைய
வேலைக்காறனைக் காதறவெட்டினான்.
௪௮ யேசு பிறத்தியுத்தாரமாக அவர்களுக்குச் சொ
ன்னதாவது: ஒருக்கள்ளன் மேல் வருகிறாப்போலப்
பட்டையங்களோடும் தடிகளோடும் என்னைப் பிடிக்
கப் புறப்பட்டு வந்தீர்களோ,
௪௯ நான் தினம் உங்களண்டையிலே தேவாலை
யத்தில் உபதேசித்திருந்தேன், அப்போ என்னைப் பிடி
யாதிருந்தீர்களே. ஆனால் வேத எழுத்துகள் நிறைவே
றப்படி ஆகுதென்றார்.
௫௰ அப்போ எல்லாரும் அவரை விட்டோடிப்
போனார்கள்.
௫௧ நிற்மாணசரீரத்தின் மேல் பிடவையைப் போ
ர்த்திருந்த வாலிபகாறன் ஒருத்தன் அவரைப் பின்சென்
றான், அவனை வாலிபகாறர் பிடித்தார்கள்.
௫௨ அவனோ வெளிப்பிடவையை விட்டு நிற்மா
ணமாய் அவர்களுக்கு விலகியோடிப்போனான்.

¶ அவர் பிறதான ஆசாரியன் அரண்மனையிலே பட்
டபாடுகளும் பேதுருவினாலே மறுதலிக்க
ப்பட்டதும். மத். ௨௬, ௫௭. ௭௫.
லூக். ௨௨, ௫௫. ௭௫. யோவா.
௰௮, ௰௫—௨௭.

௫௩ அவர்கள் யேசுவை பிறதான ஆசாரியனண்
டைக்கு

டைக்குக் கொண்டுபோனார்கள். அங்கே பிரதான ஆசாரியர்களும் பெரியவர்களும் வேதபாரகர் அனைவருங் கூடினார்கள்.

௫௪ பேதுரு பிரதான ஆசாரியனுடைய அரண்மனையின் உள்ப்புறமட்டும் தூரத்திலே அவனைப் பின்சென்று, வேலைக்காரருடனே கூட உட்கார்ந்து, நெருப்பண்டை குளிர்காய்ந்திருந்தான்.

௫௫ பிரதான ஆசாரியனும் ஆலோசனைக் கூட்டம் அனைத்தும் யேசுவைக் கொலைசெய்யும்படிக்கு அவருக்கு விரோதமாச் சாட்சி தேடினார்கள், ஆனாலும் அவர்களுக்குக் கிடைக்கப்பட்டதில்லை.

௫௬ ஏனெனில் அநேகர் அவருக்கு விரோதமாய்ப் பொய்ச்சாட்சி சொல்லியுஞ் சாட்சிகள் சரிப்பட்டதில்லை.

௫௭ சிலர் எழுந்திருந்து, அவருக்கு விரோதமாய்:

௫௮ * கைவேலையான இந்தத் தேவாலயத்தை நான் இடித்துப்போட்டு, கைவேலையில்லாத வேறொன்றை மூன்று நாளைக்குள்ளே கட்டுவேனென்றிவன் சொன்னதை நாங்கள் கேட்டோமென்று பொய்ச்சாட்சி சொன்னார்கள். * யோவ. ௨, ௰௯—௨௧.

௫௯ அப்படியும் அவர்கள் சாட்சி சரிப்பட்டதில்லை.

௬௰ அப்போ பிரதான ஆசாரியன் எழுந்து நடுவே நின்று, யேசுவை: நீ உத்தரமொன்றுஞ் சொல்லாயோ, இவர்கள் உன்மேலே என்ன சாட்சி சொல்லுகிறார்களென்று கேட்டான்.

௬௧ அவரோவென்றால் * உத்தரமொன்றுஞ் சொல்லாமல் மௌனமாயிருந்தார். மறுபடியும் பிரதான ஆசாரியன் அவரை: நீ ஸ்தோத்திரிக்கப்பட்டவருடைய குமாரனாகிய கிறீஸ்துவாயிருக்கிறாயோ என்று கேட்டான். * யெசா. ௫௩, ௭.

௬௨ அப்போ யேசு: நான் அவர்தான், நீங்கள் * மனுஷனுடைய குமாரனை வல்லமையின் வலதுபாரிசத்திலே உட்கார்ந்திருக்கவும் வானத்தின் மேகங்களுடனே வரவுங் காண்பீர்களென்றார். * மத். ௨௪, ௩௰.

௬௩ ஆனால் பிரதான ஆசாரியன் தன் அங்கிகளைக் கிழித்துக்கொண்டு: இனி நமக்குச் சாட்சிகள் தேவையென்ன.

௬௪ தெய்வதூஷணத்தைக் கேட்டீர்களே, உங்களுக்கென்னமாய்க் காணுதென்றான். ஆனால் அவர்களெல்லாரும் அவரை மரணத்துக்குள்ளாகத் தீர்த்தார்கள்.

௬௫ அப்போ சிலர் அவர்மேலே துப்பவும் அவருடைய முகத்தை மூடி அவரைக் குட்டி, அவருடனே: ஞானதிஷ்டியிலே பாரென்று சொல்லவுந் துவக்கினார்கள். வேலைக்காரர் அவரைத் தாடைகளிலே அடித்தார்கள்.

௬௬ பேதுரு அரண்மனையிலே தாழ்வேயிருக்கையிலே பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரிகளில் ஒருத்தி வந்து;

௬௭ குளிர்காய்ந்துகொண்டிருக்கிற பேதுருவைக் கண்டு, அவனை நோக்கிப் பார்த்து: நீயும் நாசரேத்தூரானாகிய யேசுவுடனே கூடேயிருந்தாயென்றாள்.

௬௰௮ ஆனால் அவன்: அறியேன், நீ சொல்லு[கிறது எ]னக்குத் தெரிகிறதுமில்லையென்று மறுதலித்து, [வெ]ளியே முன்வாசலிலே புறப்பட்டுப்போனான், [அப்போ] சாவல் கூவிற்று.

௬௰௯ வேலைக்காரிப்பெண் மறுபடியும் அவனை[க் கண்டு] அண்டையிலே நிற்கிறவர்களுடனே: இவன் அ[வர்களி]லொருத்தனென்றாள்.

௭௰ ஆனால் அவன் திரும்ப மறுதலித்தான். [சற்று நே]ரத்துக்குப்பிற்பாடு மறுபடியும் அண்டையிலே நிற்கிறவர்கள் பேதுருவுடனே: மெய்யாய் நீ அவர்களிலொருத்தனாயிருக்கிறாய், ஏனென்றால் நீ கலிலேயன், உன் பேச்சும் அதற்கொத்திருக்குதென்றார்கள்.

௭௰௧ அவனோவெனில்: நீங்கள் சொல்லுகிற இந்த மனுஷனை அறியேனென்று சபித்துக்கொள்ளவும் ஆணையிடவுந் துவக்கினான்.

௭௰௨ அப்போ சாவல் ரெண்டாந்தரங் கூவிற்று, அப்போ பேதுரு: சாவல் ரெண்டுதரங் கூவுகிறதுக்கு முன்னே மூன்றுதரம் என்னை மறுதலிப்பாயென்று யேசு தன்னுடனே சொன்ன வார்த்தையை நினைவுகூர்ந்து, அவ்விடம்விட்டு விலகிப்போய் அழுதான்.

## ௰௫. அதிகாரம்.

௧ கிறீஸ்து பிலாத்துவுக்கு முன்பாகப் பட்டபாடுகள். மத். ௨௭, ௧. ௨. ௰௧—௩௰. லூக்.
௨௩, ௧—௨௫. யோவ. ௰௮, ௨௮.
ஷு. ௰௯, ௧—௰௬.

பொழுதுவிடிந்தவுடனே பிரதான ஆசாரியர்களும் அவர்களோடேகூட மூப்பானவர்களும் வேதபாரகரும் ஆலோசனைசபையனைத்தும் ஆலோசனைபண்ணி, யேசுவைக் கட்டிக்கொண்டுபோய், பிலாத்துவுக்கொப்புக்கொடுத்தார்கள்.

௨ பிலாத்து அவரை: நீ யூதருடைய ராசாவோவென்று கேட்டான். அவர் அவனுக்குப் பிறத்தியுத்தாரமாக: நீர் சொல்லுகிறபடியேயென்றார்.

௩ பிரதான ஆசாரியர்கள் அவர்மேல் அனேகங் குத்தங்களைச் சாட்டினார்கள்.

௪ அப்போ பிலாத்து மறுபடியும் அவரை: நீ உத்தரமொன்றுஞ் சொல்லாயோ, இதோ உன்மேலே குத்தமாக எத்தனை சாட்சியைச் சொல்லுகிறார்களென்று கேட்டான்.

௫ ஆனால் பிலாத்துவுக்கு ஆச்சரியமாக யேசு அப்பவும் ஒன்றும் பிறத்தியுத்தாரஞ் சொல்லாதிருந்தார்.

௬ ஆனால் காவலிலே பண்ணப்பட்டவர்களில் பண்டிகைதோறும் அவர்கள் விடக்கேட்கிற ஒருத்தனை அவர்களுக்கு விடுதலைபண்ணுவான்.

௭ ஆனால் கலாதியிலே கொலைசெய்து, மத்தக் கலாதிக்காறருடனே கூடக் கட்டிவைக்கப்பட்ட பரபாவென்கிறவொருத்தனிருந்தான்.

௮ கும்புசத்தமிட்டு, எப்போதுந் தங்களுக்குச் செய்தத்தின்படியே அவன் செய்யவேணுமென்று கேட்கத் துவக்கினார்கள்.

ஆனாற் பிலாத்து அவர்களுக்குப் பிரதியுத்தர
நான் உங்களுக்கு யூதருடைய ராசாவை விடுத்
தால் உங்களுக்கு மனதுண்டோவென்றான்.
ஏனென்றால் பிரதான ஆசாரியர்கள் அவரைப் பொ
றாமையினாலே ஒப்புக்கொடுத்தார்களென்றறிந்திருந்
தான்:
ஆனாற் பரபாவையே தங்களுக்கு விட்டுக்கேட்க
ஆசாரியர்கள் கும்பலை ஏவிவிட்டார்கள்.
௰௨ பிலாத்து மறுபடியும் அவர்களுக்குப் பிறுத்தி
யுத்தரமாக: ஆனால் யூதருடைய ராசாவென்று நீங்
கள் சொல்லுகிறவனை நான் என்ன செய்ய உங்களு
க்கு மனதுண்டென்றான்.
௰௩ அவர்களோ பின்னும்: அவனைச் சிலுவையில்
அறையுமென்று மறுபடியுங் கூப்பிட்டார்கள்.
௰௪ ஆனால் பிலாத்து அவர்களிடத்தில்: ஏன், என்ன
பொல்லாப்பைச் செய்தானென்றான். அவர்க
ளோ பின்னையும் அதிகமாய்: அவனைச் சிலுவையில்
அறையுமென்று கூப்பிட்டார்கள்.
௰௫ ஆனால் பிலாத்து கும்பலுக்குச் சரிப்படப்பண்ண
மனதாயிருந்து, அவர்களுக்குப் பரபாவை விடுதலைப்
பண்ணி, யேசுவை வாரினால் அடிப்பித்து, சிலுவையில்
அறையப்படுவதற்குக் கொடுத்தான்.
௰௬ சேவகரோவென்றால் அவரை அரண்மனை
க்குள்ளிருப்பறமாகிய அதிகார சாலையிலே கொண்டு
போய், சேர்வையெல்லாங் கூட்ட வழைத்து,
௰௭ அவருக்குச் சிகப்பான மேற்சட்டையை உடுத்தி,
முள்முடியைப் பின்னி அவருக்குச் சூட்டி:
௰௮ யூதருடைய ராசாவே, வாழ்கவென்று அவ
ரடம் வசத்துவசக்கி;
௰௯ அவர் சிரசைக் கோலால் அடித்து; அவர்மேல்
துப்பி, முழங்காற்படியிட்டு அவரைப் பணிந்து
கொண்டார்கள்:

¶ அவர் வெளியே கொண்டுபோகப்பட்டுச்
சிலுவையில் அறையுண்டது. மத்.
௨௭, ௩௧—௪௯. லூ. ௨௩,
௨௬—௪௫. யோவா.
௰௯, ௰௭—௨௯.

௨௰ அவரைப் பரியாசம் பண்ணின பிற்பாடு சிகப்
பான சட்டையைக் கழற்றி அவருடைய வஸ்த்திரங்க
ளை அவருக்கு உடுத்தி, அவரைச் சிலுவையில் அறையவெ
ளியே கொண்டுபோனார்கள்.
௨௰௧ வயலிலிருந்து வந்து கடந்துபோற அலெக்
சாந்தருக்கும் ருபுக்குந் தகப்பனாகிய கிரேனேயூரானாகிய
சீமோனென்கிறவனை அவருடைய சிலுவையைச்
சுமக்கப் பலவந்தம் பண்ணினார்கள்.
௨௰௨ அவரைத் தலையோட்டிடமென்றர்த்தங்கொ
ள்ளுங் கொல்கதாவென்ற ஸ்தலத்துக்குக் கொ
ண்டுபோய்,
௨௰௩ வெள்ளைப்போளங் கலந்த திராட்சப்பழ
ரசத்தை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள், அவரோ
வெனில் அதை வாங்கினதில்லை.

௨௪ அவனைச் சிலுவையிலே அறைந்த பின்பு [illegible]
உடைய * வஸ்திரங்களின் மேலே அவர்கள் ஒ[illegible]
ருத்தனெத்தனை எடுத்துக் கொள்ளவேணுமென்று [illegible]
போட்டு, அதுகளைப் பங்கிட்டுக் கொண்டா[illegible]
* சங். ௨௨, ௰௮.

௨௫ அவனைச் சிலுவையிலே அறைந்தது மூன்[illegible]
வேளையாயிருந்தது.

௨௬ யூதருடைய ராசாவென்கிற அவருடை[illegible]
ணையின முகாந்திரமான எழுத்து மேலே எ[illegible]
ந்தது.

௨௭ அவருடனேகூட இரண்டு கள்ளரையும், ஒ[illegible]
த்தனை அவருக்கு வலது பக்கத்திலும் ஒருத்தனை இடது பக்
கத்திலுஞ் சிலுவைகளிலே அறைந்தார்கள்.

௨௮ அப்படியே: * அக்கிரமக்காரரிலே ஒருவராக
எண்ணப்பட்டாரென்கிற வேதவெழுத்து நிறைவேறி
ற்று. * ஏசா. ௫௩, ௰௨.

௨௯ அந்த வழி நடந்து போறவர்கள் அவரைத் தூஷ
ணித்து, தங்கள் தலைகளைத் துலுக்கி: ஆகா, * தேவ
ஆலயத்தை இடித்து மூன்று நாள்களிலே கட்டுகி
றவனே: * ௰௪, ௫௮. யோவா. ௨, ௰௯——௨௧

௩௰ உன்னை நீயே ரட்சித்து; சிலுவையிலி[illegible]
றங்கென்றார்கள்.

௩௧ அப்படியே பிரதான ஆசாரியர்களு[illegible]
பாரகருடனேகூடப் பரியாசம் பண்ணி, ஒரு[illegible]
டொருவர்: மற்றவர்களை ரட்சித்தான், தன[illegible]
தானே ரட்சிக்கமாட்டானென்றும்,

௩௨ இஸ்றவேலுக்கு ராசாவாகிய கிறீஸ்த்து பே
போர், நாம் பார்த்து விசுவாசிக்கத்தக்கதாக, சிலுவை
யிலிருந்திறங்கட்டுமென்று சொல்லிக்கொண்டா
ர்கள். அவருடனேகூடச் சிலுவைகளிலே அறையுண்
டவர்களும் அவரை நிந்தித்தார்கள்.

௩௩ ஆறாமணி வேளையான போது ஒன்ப
தாமணி வேளைமட்டுக்கும் பூமியின் மீதெங்கும் அந்
தகாரமுண்டாச்சுது.

௩௪ ஒன்பதாமணி வேளையிலே யேசு மகா சத்தமா
ய: * எலோயீ, எலோயீ, லம்மா சபக்தானீ என்
றுகூப்பிட்டார். அது: என் பராபரனே, என் பராபர
னே, நீர் என்னைக் கைவிட்டதேதென்கிற அற்தம்.
* சங். ௨௨, ௨.

௩௫ அண்டையிலே நின்றவர்களிலே சிலர் அதைக்
கேட்டபோது: இதோ எலியாவைக் கூப்பிடுகிற
னென்றார்கள்.

௩௬ ஆகிலொருத்தனோடி, ஒரு கடற்காளானை *
காடியாலே நிரப்பி, ஒரு கோலிலே மாட்டி; அவருக்கு
க் குடிக்கக்கொடுத்து: பொறுங்கோள், எலியா அவ
னை இறக்கவருவானோவென்று பார்ப்போமென்றான். * சங்.
௬௯, ௨௨.

¶ அவர் மரித்தது. மத். ௨௭, ௫௰——௫௬.
லூக். ௨௩, ௪௬——௪௯. யோவா.
௰௯, ௩௰——௩௭.

௩௭ ஆகிலும் யேசு மகா சத்தமிட்டுச் சீவனை விட்டார்.

௩௮ அப்போதே ஐயவாசலத்தின் திரை மேலே துவக்கிக் கீழ்மட்டும் ரெண்டாயக் கிழிந்தது.
௩௯ அவருக்கெதிராய் நின்ற நூற்றுச் சேர்வைகாரனென்கிறவன் அவரிப்படிக் கூப்பிட்டுச் சீவனை விட்டதைக் கண்டபோது: மெய்யாய் இந்த மனுஷன் பராபரனுடைய குமாரனாயிருந்தாரென்றான்.
௪௰ ஆனாலுந் தூரத்திலிருந்து பார்க்கிற ஸ்திரீகளுமிருந்தார்கள். அவர்களுக்குள்ளே அவர் கலிலேயாவிலிருக்கக்கொள்ள * அவரைப் பின்சென்று அவருக்கூழியஞ்செய்த மக்தலா ஊர் மரியாளுஞ் சின்னயாகக்கோபுக்கும் யோசேய்க்குந் தாயாகிய மரியாளுஞ் சலோமேயும், * லூ. ௮, ௨. ௩.
௪௧ அவருடனே கூட எருசலேமுக்கு வந்தேறின வேறே அநேக ஸ்திரீகளுமிருந்தார்கள்.

¶ அவர் அடக்கம்பண்ணப்பட்டது, மத். ௨௭, ௫௭. லூ. ௨௩, ௫௰. யோவ. ௰௯, ௩௮.

௪௨ சாயுங்காலமான போது ஓய்வுநாளுக்கு முன்னுள்ள ஆயித்த நாளானபடியால்,
௪௩ பராபரனுடைய ராச்சியத்துக்குக் காத்திருந்தவனுமுள்ள ஆலோசனைக்காரனான அரிமத்தியா ஊரானாகிய யோசேப்பு வந்து, துணிந்து, பிலாத்தினிடத்துக்குள் பிரவேசித்து, யேசுவின் சரீரத்தைக் கேட்டான்.
௪௪ ஆனால் பிலாத்து அவர் அப்போதே மரித்தாரோ வென்றாச்சரியப்பட்டு, சேர்வைகாரனை அழைப்பித்து, அவர் மரித்து நேரமாச்சுதோ வென்று அவனைக் கேட்டான்.
௪௫ அந்தச் சேர்வைகாரனாலே அறிந்துகொண்ட பிறபாடு சரீரத்தை யோசேப்புக்குக் கொடுத்தான்.
௪௬ அவன் மெல்லிய புடவையைக் கொண்டு, அவரையிறக்கி, புடவையிலே சுத்தி, கன்மலையிலே வெட்டப்பட்டிருந்த ஒரு கல்லறையிலே அவரை வைத்து, கல்லறையின் வாசல் மேலே ஒரு கல்லைப் பிரட்டி வைத்தான்.
௪௭ ஆனால் மக்தலா ஊர் மரியாளும் யோசேயின் தாயாகிய மரியாளும் அவர் எங்கே வைக்கப்பட்டாரென்கிறதைப் பார்த்தார்கள்.

## ௰௬. அதிகாரம்.

¶ கிறிஸ்து உயிர்த்தெழுந்ததைத் தேவதூதன் அறிவித்தது. மத். ௨௮, ௧—௮. லூ. ௨௪, ௧—௭.

ஓய்வுநாளான பின்பு மக்தலா ஊர் மரியாளும் யாகோபின் தாயாகிய மரியாளுஞ் சலோமேயும், தாங்கள் வந்து அவரைப் பூசவேணுமென்று கெந்தவர்க்கங்களைக் கொண்டு,
௨ வாரத்து முதலாங்கிழமையிலே அதிகாலமே சூரியனுதிக்கையிலே கல்லறையினிடத்துக்கு வந்து:

க.

௩ கல்லறைக் கல்லை அறையின் வாசலிலிருந்து நமக்குப்
புரட்டித் தள்ளுபவனாரென்று ஒருத்தியோடொருத்தி சொ
ல்லிக்கொண்டார்கள்.
௪ அவர்கள் நோக்கிப்பார்க்கிறபோது. கல்லுப் பு
ரட்டித் தள்ளப்பட்டிருக்கிறதென்று கண்டார்கள், ஏனெ
னில் அது மெத்தப் பெரிதாயிருந்தது.
௫ அவர்கள் கல்லறைக்குள் பிரவேசித்து, வெ
ள்ளை அங்கி தரித்த ஒரு வாலிபன் வலது பாரிசத்
தில் உட்கார்ந்திருக்கக் கண்டு திகைத்தார்கள்.
௬ அவனோவென்றால் அவர்களுக்குச் சொன்னதா
வது: திகையாதேயுங்கோள், சிலுவையில் அறையுண்
ட நாசரேத்தாளாகிய யேசுவைத் தேடுகிறீர்கள், அவர்
எழுந்திருந்தார், அவரிங்கேயில்லை, இதோ அவரை
வைத்த இடம்.
௭ ஆனால் நீங்கள் போய் அவருடைய சீஷருக்கும்
பேதுருவுக்கும்: உங்களுக்குமுன்னே கலிலே[illegible]
க்குப் போகிறாரென்றும் அவர் உங்களுக்குச்[illegible]
படி அங்கே * அவரைக் காண்பீர்களென்[illegible]
லுங்கோளென்றான். * ௰௪, ௨௮.
௮ அவர்கள் சீக்கிரமாய்ப் புறப்பட்டு, க[illegible]
றையை விட்டோடினார்கள், அந்தேனென்றால் ந[illegible]
மவிறமிப்பும் அவர்களைப் பிடித்தது, ஆரு[illegible]
றுக்குச் சொல்லாமலும் போனார்கள், ஏனெனி[illegible]
திருந்தார்கள்.

அவர் எழுந்தநாள் முதல் கொண்டுப[illegible]
ஜனத் தெரிசனையாக, அப்போஸ்தல[illegible]
கட்டளை.

௯ ஆனால் அவர் வாரத்தின் முதலாங் கிழமைக் கால
மே எழுந்திருந்தபின்பு தாம் ஏழு பிசாசுகளைத் துரத்தி வி
ட்டிருந்த * மக்தலேனாளாகிய மரியாளுக்கு முதலில் தெ
ரிசனையானார். * யோவ. ௨௰, ௪——௰௮.
௰ அவள் போய், அவருடனே சஞ்சரித்திருந்து துக்க
ப்பட்டழுகிறவர்களுக்கு அதை அறிவித்தாள்.
௰௧ இவர்கள், அவர் உயிரோடிருக்கிறாரென்றும்
அவளுக்குத் தெரிசனையானாரென்றுங் கேட்டபோது ந
ம்பாதே போனார்கள்.
௰௨ இதுகளுக்குப் பிறபாடு அவர்களிலே * ஒருக்
கிராமத்துக்கு நடந்துபோகிற ரெண்டு பேருக்கும் மறுரூப
மாய்த் தம்மை வெளிப்படுத்தினார். * லூ. ௨௪,
௰௩——௩௫.
௰௩ அவர்களும் போய் மற்றவர்களுக்கு அறிவித்
தார்கள், அவர்களையும் நம்பாதே போனார்கள்.
௰௪ பிறபாடு * பந்தியிருக்கிற பதினொருவருக்கு அவ
ர் தம்மை வெளிப்படுத்தி, எழுந்திருந்த தம்மைக் கண்
டவர்களை அவர்கள் நம்பாமல் போனதின் நிமித்
தியம் அவர்களுடைய அவிசுவாசத்தையும் இருதயக்க
டினத்தையும் அதட்டினார். * லூ. ௨௪, ௩௬. யோ.
௰௫ அவர் இவர்களுக்குச் சொன்னதாவது: * நீங்
கள் லோகமெங்கும் போய், சிஷ்டியாயிருக்கிற
யாவருக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கோள். *
மத். ௨௮, ௰௯.
௰௬ விசுவாசமுள்ளவனாய்க் ஞானஸ்நானம் பெறு
வன்

வன்ரட்சிக்கப்படுவான், * விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான். * யோவ. ௩, ௰௮.

௰௭ விசுவாசிக்கிறவர்களைப் பின்செல்லும் அடையாளங்களாவது: என்நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்திவிடுவார்கள், * நவமான பாஷைகளைப் பேசுவார்கள். * அப்போ. ௨, ௪.

௰௮ சர்ப்பங்களை நீக்கிவிடுவார்கள், சாவுக்கேமானயாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களுக்குச் சேதம்பண்ணாது, ஆரோக்கியமில்லாதவர்கள்மேலே கைகளை வைப்பார்கள் அப்போ குணமாவார்களென்றார்.

¶ அவர் பரமண்டலத்துக்கேறினது. லூா. ௨௪, ௫௰. ௵. அப்போ. ௧, ௪—௰௧.

௰௯ கர்த்தரோவென்றால் அவர்களுடனே பேசினதுக்குப்பிறபாடு பரமண்டலத்துக்கேற்றுக்கொள்ளப்பட்டு, பராபரனுடைய வலதுபாரிசத்திலுட்கார்ந்தார்.

௨௰ ஆனால் அவர்கள் புறப்பட்டு எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தரோவெனில் துணையாய்க் கிரியைநடப்பித்து, பின்செல்லும் அடையாளங்களினாலே வசனத்தைத் திடப்படுத்தினர்.

லூா[...]

# க. அதிகாரம.

## ¶ சுவிசேஷகனுடையமுகவுரை.

ஓ பலவானன்தேயோபபிலே, எஙகளு[...]
ளேமுழுநிற செயமான செயதிக[...]
விபரதனத
உ ஆதிமுதல * கணணாரககணடவர்களுமவ[...]
துசகூழியககாறருமான பேர்கள் எஙகளுக[...]
பிவிததபடிவரிசையாயசசேர்கக அநேகமபேர்[...]
யிடடுககொணடபடியினலே, * க. யோவா. [...]
ங ஆதிமுலமாய எலலாததையுஙகவனமா[...]
ணபறறின நானுமஉமககுபதேசிககபபட வற[...]
ஙகளின நிறசெயகதைநீர் அறியவேணடுமெ[...]
ச அதைஉமககுவரிசையாயஎழுதுவதுஎன[...]
நனறயககணடேது.

## ¶ யோவானுடையபிறபபறிவிககபபட[...]

ரு யூதேயா தேசததின ராசாவாகிய எரோதே[...]
நாளகளிலே* அபியாவின முறைசசுகநகரனு[...]
ரியாஎனறபேர்கொணட ஒரு ஆசாரியனிருநத[...]
அவனபெணசாதிஆரோனுடையகுமாரததிகளில[...]
அவளுடையபேர்எலிசபேத். * க. நாளா. உச[...]
சா ஆனாலஇருவருமபராபரனுககுமுனபா[...]
மாணகளாயிருநது, கறதருடைய சகலகற்ப[...]
ளிலுமநீதிதாயஙகளிலுங குறறமறறவர்க[...]
நடநதுகொணடார்கள்.
எ அவர்களுககுபிளளையிலலாதிருநது[...]
ணணறலாளிசபேத்மலடியாயிருநதாள், [...]
ருமவயசுசெனறவர்களுமாயிருநதார்கள்.
அ ஆனால அவனதனமுறைவரிசையிலே பரா[...]
னுககுமுனபாகஆசாரியஊழியஞ்செயயுமபோ[...]
புவிததகாலது:
கூ ஆசாரியஊழியமுறைமையினபடி அவன [...]
பஙகாடடுகிறததுககுசசீடடுபபெறறு, க[...]
உடையதேவாலயததுகதுளபிறவேசிததா[...]
உ. மோ. ஙய, எ. அ.
ய தூபஙகாடடுமவேளையிலேசனததின க[...]
மெலலாமபுறமபேபெபமபணணிககொ[...]
ருநதது.
யக அபபோதுகர்தருடையதூதன ஒருதன[...]
படத தினவலதுபககததிலேநினறுஅவனுககு [...]
ணபபடடான.

சகரியா கண்டு கலங்கினான், பயம் அவனைப் பிடித்தது.

ஆனால் தூதன் அவனுடனே சொன்னதாவது: சகரியாவே, பயப்படாதே, ஏனென்றால் உன் வேண்டுதல் கேட்கப்பட்டது, உன் பெண்சாதியாகிய எலிசபெத்து உனக்கொரு குமாரனைப் பெறுவாள், அவனுக்கு யோவானென்று பேரிடுவாயாக.

அதனால் உனக்குச் சந்தோஷமும் மகிழ்ச்சியுமுண்டாம், அவன் பிறப்புக்காக அநேகர் சந்தோஷப்படுவார்கள்.

ஏனென்றால் கர்த்தருக்கு முன்பாக* பெரியவனுமாவான், திராட்சப்பழரசத்தையும் மதுபானத்தையும் குடியான், தன் தாயின் கெற்பத்திலே தானே பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படுவான். * மத. ௰௧. ௯—௰௧.

அவன் இஸ்ரவேல் புத்திரரில் அநேகரை அவர்கள் பராபரனாகிய கர்த்தரண்டைக்குத் திருப்புவான்.

பிதாக்களுடைய இருதயங்களைப் பிள்ளைகளண்டைக்குங் கீழ்ப்படியாதவர்களை நீதிமான்களுடைய உணர்வுக்குந் திருப்பவும், கர்த்தருக்குச் சவரணையான சனத்தை ஆயித்தம்பண்ணவும் அவன் * எலியாவின் ஆவியிலும் பெலத்திலும் அவருக்கு முன்பாக நடப்பானென்றான். * மலா. ௪, ௫. ௬. மத. ௰௧, ௰௪.

அப்பொழுது சகரியா தேவதூதனுடனே: இதை எதினால் அறிவேன், நான் கிழவனும் என் பெண்சாதி வயசு சென்றவளுமாமே என்றான்.

தேவதூதன் அவனுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: நான் பராபரனுக்கு முன்பாக நிற்கிற * காபிரியேலென்கிறவன், உன்னுடனே பேசவும் உனக்கிதுகளைச் சுவிசேஷமாய் அறிவிக்கவும் அனுப்பப்பட்டு வந்தேன். * தானி. ௮, ௰௬. ௯, ௨௧.

இதோ தன் காலத்திலே நிறைவேறப்போகிற என்னுடைய வார்த்தைகளை நீ விசுவாசியாதபடியினாலே இதுகள் சம்புவிக்கும் நாள் மட்டும் பேசமாட்டாமல் ஊமையாயிருப்பாயென்றான்.

சனங்கள் சகரியாவுக்குக் காத்திருந்து, அவன் தேவாலயத்திலே தாமதித்ததுக்காக ஆச்சரியப்பட்டார்கள்.

அவன் வெளியே வந்தபோதோ வென்றால் அவர்களுடனே பேசமாட்டாதிருந்தான், அதினாலே தேவாலயத்திலே ஒரு தரிசனங் கண்டானென்றறிந்தார்கள். அவன் அவர்களுக்குச் சயிக்கினை காட்டி ஊமையாயிருந்தான்.

பிற்பாடு சம்புவித்ததேதென்றால் அவன் ஊழிய நாட்களை நிறைவேற்றின பின்பு தன் வளவுக்குப் போனான்.

அந்நாட்களுக்குப் பிற்பாடு அவன் பெண்சாதியாகிய எலிசபெத்து கெற்பந்தரித்து ஐந்து மாதந்தன்னை ஒளித்து:

* கர்த்தர் மனுஷரில் எனக்குண்டாயிருந்த நிந்தையை நீக்கிப்போடுகிறதுக்காக என்னை நோக்கிப் பார்

பார்த்தநாட்களிலே எனக்கிப்படி செய்தா
ளென்று. * ௧. மோ. ௩௰, ௨௩.

¶ கிறிஸ்த்துவினுடையபிறப்பு
அறிவிக்கப்பட்டது

௨௬ ஆறாமாதத்திலே காபிரியேலெ
ன்னுந்தூதனநாசரேத்தென்னும்பேர்கொண்ட கலிலே
வின்ஊருக்கு,
௨௭ தாவீதின்வீட்டானுக்கியயோசேப்பென்ன
ப்பேர்ப்புருஷனுக்கு * நேமிக்கப்பட்டிருந்த ஒ
கன்னியாஸ்திரியினிடத்துக்குப்பராபரனாலே அனு
பட்டான், அந்தக்கன்னியாஸ்திரியின்பேர்மரியா
மத். ௧, ௰௮.
௨௮ தூதன அவளிருந்தவீட்டுக்குள்பிரவேசி
து: வாழ், கிருபைபெற்றவளே, கர்த்தர் உன்
னேயிருக்கிறார், பெண்சாதிகளுக்குள்ளே நீ ஆசீ
க்கப்பட்டவளென்றான்.
௨௯ அவளோவென்றால் அவனைக்கண்டு, அ
வார்த்தையினாலேகலங்கி, இந்தவினவுதலெப்ப
கொத்ததோவென்றுசிந்தித்தாள்.
௩௰ தூதனவளுக்குச்சொன்னதாவது: ப
படாதே, மரியாளே, ஏனெனில்பராபரனிடத்
கிருபைபெற்றாய்.
௩௧ * இதோநீகெற்பந்தரித்தொருகுமாரனை
றுவாய், அவருக்கு ** யேசுவென்றுபேரிடுவா
க. * யெச. ௭, ௰௪. ** மத். ௧, ௨௧.
௩௨ இவர்பெரியவராயிருந்து, உன்னிதமான
டையகுமாரனென்னப்படுவார், பராபரனாகிய க
த்தர் அவருக்குஅவருடையபிதாவாகிய தாவீதின் *
சாசனத்தைக்கொடுப்பார். * யெச. ௯, ௬. ௭. ௨.
சாமு. ௭, ௰௨. ௰௩.
௩௩ அவர் யாக்கோபுடையவீட்டின்மேலெ
றென்றைக்குமராசாவாயிருப்பார், * அவரு
ராசாங்கத்துக்குமுடிவில்லையென்றான். * தானி
சுசு. ௭, ௰௪. மீகா. ௪, ௭.
௩௪ ஆனால்மரியாள்தூதனுடனே: இதெப்பட
ம், புருஷனையறியேனேயென்றாள்.
௩௫ தூதனவளுக்குப்பிறத்தியுத்தாரமாக
ன்னதாவது: * பரிசுத்தஆவியுன்மேலெவந்து,
தமானவருடையபெலனுன்மேலநிழலிடு
தகையினாலேஉன்னிடத்திலேபிறக்கப்போறப
மானதுபராபரனுடையகுமாரனென்னப்படு
மத். ௧, ௰௮. ௨௰.
௩௬ இதோஉன்னுப்பெந்துவாயிருக்கிறஎலி
த்தாளுந்தன்முதிர்வயதிலேஒருபுத்திரனைக்கெ
ந்தரித்தாள், மலடியென்றுசொல்லப்பட்டஅவ
இது ஆறாமாதம்.
௩௭ ஏனென்றால் பராபரனாலேகூடாதகா
ஒன்றுமில்லையென்றான். * ௧. மோ. ௰௮, ௰௪.
௩௮ மரியாளோவென்றால்: இதோ, ஆண்ட
டையஅடிமையாயிருக்கிறேன், உம்முடைய வா

டி... நாக்..டவுத்தேனறுள. அபபோதெய்
நா..வுளை விட்டகனறான.

மரியாள் எலிசபேதைச்சநதித்தது.

மரியாயேளாயேனறு அந்தநாளிலே எழுந்து, மலைத்தேசத்திலிருக்கிற யூதாவினுடைய பட்டணத்துக்குத் தீவிரமாயப்போய,
சகரியாவினுடைய வீட்டுக்குளபிரவேசித்து, எலிசபேத்தை வாழ்த்தினாள.
அபபோது எலிசபேத்து மரியாளுடைய வாழ்த்துதலைக் கேட்டவுடனே அவளுடைய கெற்பத்திலே பிளளை துள்ளிற்று; எலிசபேத்துமிஸ்பிரித்துசாந்துவினாலே நிரப்பப்பட்டு,
மகாசத்தத்துடனே கூப்பிட்டுச்சொனனது: பெண்சாதிகளுக்குளளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள, உம்முடைய கெற்பத்தின் கனி ஆசீர்வதிக்கப்பட்டது.
என ஆண்டவருடையதாயார் என்னண்டையிலே வர எனக்கு எங்கே கிடைத்தது.
இதோ நீ என் வாழ்த்துதலின் சத்தம் என் காதுகளிலே விழுந்தவுடனே கெற்பத்திலே பிளளை களிப்பாயத்துள்ளிற்று.
விசுவாசித்தவள * பாக்கியவதி, ஏனென்றால் கர்த்தராலே சொல்லப்பட்டதுகளுக்கு நிறைவேறுதல் வருமெனறுள. * யோ. உய, உசு.
அபபோது மரியாள் சொனனதாவது: என ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது,
* என ஆவியானது என் இரட்சகராகிய பராபரனாலே களிகூர்ந்தது: * க. சாமு. உ, க.
ஏனென்றால் தம்முடைய அடிமையின் தாழ்மையைப் பார்த்தார், இதோ இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதியென்பார்கள.
அதேனெனறால் வல்லமையுடையவரானவர் மகிமையானதுகளை என்னிடத்திலே செய்தார், அவருடைய நாமமும் பரிசுத்தமாயிருக்கிறது.
* அவருடைய இரக்கம் தலைமுறை தலைமுறையாக அவருக்குப் பயந்தவர்கள்மேலே நிற்கும் * சங். ருஎ, யள.
தம்முடைய கையினாலே பெலனைச் செய்தார், தங்கள் இருதயத்தின் சிந்தையிலே * பெருமையுள்ளவர்களைச் சிதறப்பண்ணினார். * க. பேது. ரு, ரு.
அவர் பெலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளிவிட்டுத், தாழ்மையானவர்களை உயர்த்தினார்.
அவர் பசித்தவர்களை நன்மைகளினாலே திருப்தியாக்கினார், ஐசுவரியவான்களை வெறுமையாய் அனுப்பினார்.
அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னபடியே * ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைப்பதற்காக, * க. மோ. யஎ, எ. யஅ, யஅ.
தம்முடைய தாசனாகிய * இஸ்ரவேலைக் கைதூக்கி
ஆதரி

ஆகாததா ரென்றாள்
௫௬ மரியாள் ஏற...
டுமாதமிருந்து, தன்வீட்டுக்குத் திரும்பினாள்.

¶ யோவானுடைய சென்னமும் நாம
கர்ணமும்.

௫௭ எலிசபேத்துக்குப் பேறுகாலம் நிறை...
ணபோது அவள் ஒரு புத்திரனைப் பெற்றாள்.
௫௮ அவளுடைய அயலகத்தாரும் பெந்து...
ருங்கறதர் அவளிடத்தில் தம்முடைய இரக்கத்தை...
ர்தாகக்கினரென்று கேட்டு, அவளுடனே ச...
ந்தோஷப்பட்டார்கள்.
௫௯ எட்டாம் நாளிலே பிள்ளையைச் சுன்னத்துப் பண்ண வந்து, அத...
பனுடைய நாமத்தின்படி அதுக்குச் சகரியா வென்று...
பேரிட்டார்கள்.
௬௰ அப்போ அதின் தாய் பிரதியுத்...
மாக: அப்படியில்ல, அதுக்கு யோவானென்று...
பேரிடுவதென்றாள்.
௬௧ அவர்கள் அவளுடனே: உன் உறவிலே...
பேராக அழைக்கப்பட்டவர்கள் ஒருத்தருமில்ல...
என்று சொல்லி,
௬௨ அதினுடைய தகப்பன், அதுக்கென்ன...
மனதுண்டென்று சயிகைகேட்டார்கள்.
௬௩ அவன் எழுத்துப்பலகையைக் கேட்(டு)...
கி: அவன் பேர் யோவானென்றெழுதினான்; எ...
ரும் ஆச்சரியப்பட்டார்கள்.
௬௪ உடனே அவனுடைய வாயும் நாவும் திற...
பட்டு, அவன் பராபரனை ஸ்தோத்திரித்துப்
பேசினான்.
௬௫ ஆனால் அவர்களைச் சுற்றும் வாசமாயிரு...
ல்லார்க்கும் பயம் வந்தது, யூதேயாவின் ம...
தேசமெங்கும் இந்த வர்த்தமானங்களெல்லாம்...
ந்கொள்ளப்பட்டுது:
௬௬ கேட்டவர்களெல்லாரு மிதுங்களுமன...
து: இந்தப் பிள்ளை எப்படிக் கொத்த...
ரவென்றார்கள். அவனுடனே கூடக் க...
யிருந்துது.

¶ சகரியா சொன்ன ஸ்தோத்திரமும்
தீர்க்கதெரிசனமும்.

• ௬௭ அவனுடைய தகப்பன் சகரியா பரிசுத்த...
ரப்பப்பட்டு, தீர்க்கதெரிசனஞ் சொல்...
ாவது:
௬௮ இஸ்ரவேலுடைய பராபரனுக்கு ஸ...
ஸ்தோத்திரிக்கப்படவர், அதேதென்றா...
தனதந்நோக்கிப் பார்த்து, அதுக்கு மீட்கு...
ரக்கி,
தம்முடைய தாசனுக்கு தாவீதின் வீட்டி(லே)...
ரட்சிப்பின் கொம்பை எழும்பப்பண...
* சங். ௱௩௨. ௰௭.
நம்முடைய பிதாக்களுக்கு அவர் இரக்கம்...

[illegible] னையயும,
[illegible] யெரூபிரசாற்றெசகப்ப
[illegible] ம, * க. யோ. உஉ,
யகா — யக.
[illegible] முட்சத்துருக்களுடையகைக்கு நாம
நீங்கலாக்கப்பட்டு,
[illegible] ட்டோடிருக்கச்சகலநாளுநம்மையுமிகலைா
சுத்தத்தோடு நீதியோடுந்தமக்குமுன்பா
தமக்கு ஊழியஞ்செய்யக்கொடுநமக்களிப்ப
[illegible] க. * க. பேது. க, யரு.
[illegible] வர்சூதிமுதலுண்டாக்கொண்டநந்தகடமுடபரிசு
[illegible] துரிச்சுளினவாகக்றுமொசொனனத்தினப

[illegible] முட்சந்துருகளைக்கும் நம்மையயனைக
[illegible] வர்களைக்கும நமக்குமநீங்கலாக்கும் [illegible]
[illegible] ளடாக்கினர்.
[illegible] யோ, பாலகனே, உன்னதமானவரு [illegible]
[illegible] நாசித்தியனந்திருமுகத்தப்பதிவாய, அக்த [illegible]
[illegible] த்தருடையவழிகளைசூயத்தமபண்ணவ [illegible]
* யேச. சய, ரு.
[illegible] முடபாராபரனுடைய உருக்கமான [illegible]
[illegible] ல அவருடையசனத்துக்கு அவர்களுட
[illegible] மன்னத்தலாகியரேட்சிப்பின அறிவைக்
[illegible] வும, நீஅவருடையமுகத்துக்குமுனனுக்ப
ப.
[illegible] நத்தேரக்கஙசளிலும் * உன்னதத்திலிருந்து
[illegible] து, * மலா. ச, உ.
[illegible] நதகாரத்திலேமரணநிழலிலுமஉட்காரி
[illegible] நக்குப்பிரகாசநதரவும நம்முட காலக
[illegible] காலத்தின வழிக்குளநடத்தவும நமைக
[illegible] தித்துதேனனனை. * யேச. கூ, உ. சஉ, கா. எ.
[illegible] ஞலெபிளளவளர்ந்துஆவியிலேபலன
[illegible] து, ேலருலேவறுசகுககுளணை கசாண்பிக
[illegible] மயடாகஅவனவனாந்திரஙகளிலிருந்தான.

## உ. அதிகாரம.

### யேசுக்கிறிஸ்துவினுடையசென்னம.

[illegible] களில சமபுவிநத்தேதேனறல, லோகமெ
[illegible] லுட்டுமதிப்பெழுதப்பட, * அகுஸதது
[illegible] நதாரடடிறகதுது. * க. மோ. சகூ, ய.
[illegible] யாவிலே சிரேனியுதுரையான போது ேநதமு
[illegible] டடிமதிப்புஉணடாச்சுது.
[illegible] லொருஙகுட்டிமதிபபெழுதிவிக்க, தங்கள
[illegible] ஊநதகமானஊருக்குப்போனார்கள.
[illegible] யோசேப்பும, தானதாவீதினவீட்டா
[illegible] துத்தானுமானபடியினாலே, தனக்கு நம
— கெப்பவதியாகிய பெணசாதி மரியாளுட
[illegible] குட்டிமதிப்பெழுதிவிசக, * க, உஎ.
[illegible] லியாவின ஊராகிய நாசரேத்திலிருந்
[illegible]

[illegible]வில் இருக்கிற பெத்லெகேமென்னப் [illegible]
[illegible]ளருக்குப் போயார்கள்.
[illegible] அப்போசமயுவிதத்தில், அவ [illegible]
[illegible] பிருச்சையில் அவர் பெற்றதுக்கு [illegible]
[illegible]றவெல,
[illegible] * முதலே பெண்குமாரனைப் பெற் [illegible]
[illegible] துவகளில் சுசுத்; அவரை முன்னணை [illegible]
[illegible] துவத்தார், ஏனெனில் மடத்திலே அவ [illegible]
[illegible] ல்லாதிருந்தது. * மத். க, உரு.

## ௺. தேதசுவிசேழமமேய்ப்பருக்க கறிக்கப்பட்டது.

[illegible] அந்தப்புறங்களிலே வெளிகளி [illegible]
[illegible] ந்கருயா [illegible] லேகாவல் காத்துக் [illegible]
[illegible] ந்தார்கள்.
[illegible] தாக [illegible] யநூதன அவர்களா [illegible]
[illegible], சக [illegible] யமக்கும் அவர்களைச [illegible]
[illegible]; அப்போமகாப்பயமாய்ப்பயந்த [illegible]
[illegible] தேயவதூதன் அவர்களுக்குச் [illegible]
[illegible] பயப்படாதேயுங்கோள், ஏனெ [illegible]
[illegible] லாசசனைத்துக்கும் வரப்போற [illegible]
[illegible] உங்களுக்குச் சுவிசேழமாக அ [illegible]

அதாவது: உங்களுக்கின்றைக்கிறதாகிய [illegible]
[illegible] ரெட்சகர் * காவிதின் ஊரிலேபி [illegible]
* [illegible] ரு, க.
[illegible] பிள்ளையைத் துகிலாசுகதி முன [illegible]
[illegible] டுக்கவைத்திருக்கக் காண்பீர்களா [illegible]
[illegible] யாள மென்றான்.
[illegible] அப்பிலேபரமசேனையினுடைய திர [illegible]
[illegible] நுடனேகூட இருந்து பராபரனைத் துதி [illegible]
[illegible] உன்னதங்களிலிருக்கிற பராபரனுக்கு [illegible]
[illegible] பூமியிலே சமாதானமும், மனுஷர் மே [illegible]
[illegible] உண்டாவதாகவென்றார்கள்.
௰௫ அப்போசமயுவிதத்தேதன் [illegible] தூதர்கள் அவர்களைவிட்டு வானத்துக்குப் [illegible] போடு, மேய்ப்பரானமனுஷர் ஒருவர் [illegible] நாமபெத்லெகேமட்டும் போய், சம்பந்தமாக [illegible] நடந்திருக்கிற காரியத்தைப் பார்ப்போம் [illegible] கோள் [illegible] கொண்டு,
௰௬ [illegible] தீவிரிக்கவந்து, மரியாளையும், யோசே [illegible] முன்னணையிலே படுத்திருக்கிற பிள்ளை [illegible] கண்டார்கள்.
௰௭ கண்டு, அந்தப்பிள்ளையைக் குறித்து [illegible] சொல்லப்பட்டவார்த்தையினை செய [illegible] பிரசித்தம் பண்ணினார்கள்.
௰௮ [illegible] கேழ்விப்பட்டவர்களெல்லாரும் [illegible] தாங்களுக்குச் சொல்லப்பட்டவிசேழ [illegible] காக ஆச்சரியப்பட்டார்கள்.
௰௯ மரியாளோவென்றால் இந்த வார்த்தைகள் எல்லாந்தனனிருதயத்திலே வைத்துத் தியா [illegible] பண்ணிக்கொண்டிருந்தாள்.

டனே சொல்லப்பட்டபடி யே கேட்டுக் கண்டயாவுக்காகவும் பராபரனை மகிமைப்படுத்தி, துதித்துக்கொண்டே திரும்பினார்.

## யேசுபாலகனுக்குச் சுன்னத்துப் பண்ணப்பட்டது.

பிள்ளையைச் சுன்னத்துப்பண்ண * எட்டு நாள் நிறைவேறினபோது, அது கெற்பத்திலே உற்பவிக்கிறதுக்கு முன்னே ** தேவதூதனாலே சொல்லப்பட்டபடியே என்கிற நாமம் அதுக்கிடப்பட்டது. * ௧ மோ. ௰௭, ௰௨. ** ௧, ௩௧.

## அவர் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தப்பட்டது.

மோசேயினுடைய * ஞாயப்பிரமாணத்தின்படியே அவர்கள் சுத்திகரிப்பின் நாள்கள் நிறைவேறினபோது, * ௩. மோ. ௰௨, ௨. ௬.

* கெற்பந்திறந்து பிறக்கும் ஆண்பிள்ளைகளெல்லாங் கர்த்தருக்குப் பரிசுத்தமானதென்றழைக்கப்படுவதாகக் கர்த்தருடைய ஞாயப்பிரமாணத்திலே எழுதியிருக்கிறபடி அவனைக் கர்த்தருக்கு முன்பாக நிறுத்தவும், * ௨. மோ. ௰௩, ௨. ௨௨, ௨௯. ௩௬, ௰௯.

கர்த்தருடைய ஞாயப்பிரமாணத்திலே சொல்லப்பட்டபடி ஒரு சோடு காட்டுப்புறா, அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியாகச் செலுத்தவும் அவனை எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். * ௩. மோ. ௰௨, ௮.

௫ இதோ சீமெயோனென்று பேர்கொண்ட ஒருமனுஷன் யெருசலேமிலிருந்தான்; அந்த மனுஷன் நீதியுந் தேவபக்தியுமுள்ளவனும் இஸ்றவேலுடைய ஆறுதலுக்குக் காத்திருக்கிறவனுமாயிருந்தான், அவன்மேலே பரிசுத்த ஆவியிருந்தார்.

அவனுக்கு: நீ கர்த்தருடைய கிறீஸ்துவைக் காணுமுன்னே மரணத்தைப் பாராயென்று பரிசுத்த ஆவியினாலே உத்தாரமுண்டாச்சுது.

அவன் ஆவியின் ஏவுதலாலே தேவாலயத்திலே வந்தான். யேசுபாலகனிமித்தியமாக ஞாயப்பிரமாண முறைமையின்படி செய்ய, தாய்தகப்பனார் உள்ளே கொண்டுவருகையில்,

அவன் அவரைத் தன் கைகளிலேந்திக்கொண்டு பராபரனைத் தோத்திரித்துச் சொன்னதாவது:

ஆண்டவரே, இப்போ உமதடியானை உம்முரைத்தையின்படி சமாதானத்துடனே அனுப்பிவிடும்.

ஏனென்றால் புறசாதிகளுக்குத் தெளிவையும் முடசணமாகிய இஸ்றவேலுக்கு மகிமையையும் ஆக்கும் வெளிச்சமாக, * யெச. ௪௨, ௬. ௭.

தேவரீர் * சகலசனங்களுடைய முகத்துக்கு முன்பாக ஆயித்தம்பண்ணின உம்முடைய ரட்சிப்பை * யெச. ௪௯, ௬.

என்கண்கள் கண்டுதேறின.

௩௩ அவரைக்குறித்துச் சொல்லப்பட்டவைகளுக்காக யோசேப்பும் அவருடைய தாயும் ஆச்சரியப்பட்டார்கள்.

௩௪ சிமியோன் அவர்களை ஆசீர்வதித்து, அவருடைய தாயாகிய மரியாளுடனே சொன்னதாவது: இதோ, அநேகம்பேருடைய இருதயங்களுடைய சிந்தனைகள் வெளியரங்கமாகும்படிக்கு, இவர் இஸ்ரவேலிலே அநேகருடைய * விழுகிறதுக்கும் எழுந்திருக்கிறதுக்கும், விரோதமாய்ப் பேசப்படும் அடையாளமாகவும் வைக்கப்பட்டிருக்கிறார். + ஏசா. ௮, ௰௪. ரோ. ௯. ௩௩. கொரி. ௧, ௨௩.

௩௫ உன்னுடைய ஆத்துமத்தையும் ஒரு பட்டயம் ஊடுருவிப்போம் என்றான்.

௩௬ ஆசேருடைய கோத்திரத்தாளும் பானுவேலின் குமாரத்தியுமான அன்னாளென்கிற ஒரு தீர்க்கதரிசியிருந்தாள்; இவள் கன்னியாஸ்திரியாயிருந்து, பின்பு ஏழு வருஷம் புருஷனுடனே வாழ்ந்து, மிகுந்த வயதுசென்றவள்,

௩௭ ஏறக்குறைய எண்பத்துநாலு வயதான விதவையாயிருந்தாள்; இவள் தேவாலயத்தை விட்டுப் பிரியாமலே, இரவும் பகலும் உபவாசங்களினாலும் ஜெபங்களினாலும் ஆராதனை செய்வாள்.

௩௮ இவளும் அந்நேரத்திலே சேர்ந்து நின்று, கர்த்தரைப் புகழ்ந்து, எருசலேமிலே மீட்புக்குக் காத்திருந்த யாவருக்கும் அவரைக்குறித்துச் சொன்னாள்.

௩௯ அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் முடித்தபின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள்.

௪௦ பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பலங்கொண்டு, ஞானத்தினாலே நிறைந்திருந்தது; தேவனுடைய கிருபை அதின்மேலிருந்தது.

* ௫௨. வசனம்.

¶ அவர் தம்முடைய தாய்தகப்பனுக்குக் கீழ்ப்படிந்தவராயிருந்தது.

௪௧ அவருடைய தாய்தகப்பன் வருஷந்தோறும் பஸ்காப்பண்டிகையிலே எருசலேமுக்குப் போவார்கள். + உ. மோ. ௩௪. ௨௩.

௪௨ அவர் பன்னிரண்டு வயதானபோது, அவர்கள் அந்தப் பண்டிகை முறைமையின்படியே எருசலேமுக்குப் போய்,

௪௩ நாட்களை நிறைவேற்றினபின்பு திரும்புகையில், பிள்ளையாகிய இயேசு எருசலேமிலே இருந்துவிட்டார்; அதை யோசேப்பும் அவருடைய தாயும் அறியாமல்,

௪௪ அவர் பயணக்காரருடைய கூட்டத்திலே இருப்பாரென்றெண்ணி, ஒருநாள் பிரயாணம் போய், உறவின்முறையாரிடத்திலும் அறிமுகமானவர்களிடத்திலும் அவரைத் தேடி,

௪௫ அவரைக் காணாமல், அவரைத் தேடிக்கொண்டே எருசலேமுக்குத் திரும்பினார்கள்.

...புவிக்கத்தேன...
...ஆவலரதேயவாக...
...உட்கார்ந்திருக்கவும்...
பக்கச்சுழவிப்படவும் அவர்களை...
ரக்கண்டார்கள்.
௪௭ ஆனால் அவர் பேசக்கேட்கிறவ... டயபுத்திக்கும் பிறத்தியுத்தரங்களுக்... ர்கள்.
௪௮ அவரைக்கண்டு அதிசயப்பட்ட... டய தாய் அவருடனே: மகனே, ஏ... படி செய்தாய், இதோ உன் தகப்பனு... ளாயுடனே உன்னைத் தேடினோமென...
௪௯ அவர் இவர்களுடனே: நீங்கள்... னேத்து, என் பிதாவுக்கடுத்தவைகளி... வண்ணமயதென்று அறியீர்களோ...
௫௦ ஆனால் அவர் தங்களுக்குச் சொ... அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை...
௫௧ அவர்களுடனே கூட அவர் இற... சரேத்துக்கு வந்து, அவர்களுக்குக்கீ... நார். அவருடைய தாயோ இந்த வசனமா... ளாந்தன் இருதயத்திலே வைத்தாள்.
௫௨ யேசுவோவென்றால் ஞானத்திலே... யிலேயும், * பராபரனிடத்திலும் மனு... வருடைய தயவிலேயும் அதிகப்பட்டார். * க. ச...

## ௩. அதிகாரம்.

### ¶ யோவான் ஸ்நானகனுடைய ஊழியம்.

மத். ௩, ௧—௰௨. மாற்கு. ௧, ௧—௮.

௧ திபேரியுராயனராட்சியபாரம்பண்ணும் பதினை... காம் வருஷத்திலே, யூதேயாவுக்குப் பொந்தியு... த்துரையுமாய், கலிலேயாதேசமாகிய சலி... வுக்கு ஏரோதே அதிபதியுமாய், காலிபங்குதே... கியத்துரேயாவுக்கும் திறகோனித்தூமிக்கும... வுடைய சகோதரன் பிலிப்பு அதிபதியுமாய், கா... ங்குதேசமாகிய அபிலேனேக்கு லிசானியு அதிபதி... யாய்,
௨ அன்னாவும் காயிபாவும் பிரதான ஆசாரியரா... க்கும் போது, வனாந்திரத்திலே சகரியாவின் கு... கிய யோவானுக்குப் பராபரனுடைய வார்த்தையு... ச்சுது.
௩ அப்போது அவன் யோர்தானதிக்கருகான தே... ங்கும் வந்து, பாவமன்னிப்புக்கென்று குணப... ஸ்நானத்தை ஸ்நானத்தைப் பிரசங்கித்தான்.
௪ வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம... னுங்கோள், அவருடைய பாதைகளைச் செ... ப்பண்ணுங்கோளென்றும்,
௫ பள்ளமெல்லாம் நிரப்பப்பட்டு, சகல ம... குன்றுந் தாழ்த்தப்பட்டு, கோணலானது... வானவையாக், முரடுவழிகள் சமனானதுகளா... வதேனென்றும்,

௬ மாம்சமான யாவும் பரா
பரனுடைய ரட்சிப்பைக் காணுமென்று சொல்லப்பட்(
உண்டாமென்று அனாதத * யெ
டைய வாக்கியங்களின் பொ
க்குப்பிரகாரமாகத்தானே. *

௫௨, ௩.

௭ அவன் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படிப் புறப்பட்டு வந்த ஜனங்களோடே சொன்னதாவது: விரியன்பாம்புகளுடைய குட்டிகளே, நீங்கள் வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்குக் காட்டினவனார்.

௮ ஆனபடியால் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கோள்; ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பனென்று உங்களுக்குள்ளே சொல்லத் துடங்காதேயுங்கோள்; ஏனென்றால் பராபரன் இந்தக் கல்லுகளிலேயிருந்து ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை எழுப்ப வல்லவரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯ இப்போதே கோடாலியும் மரங்களின் வேருக்கு அருகே வைத்திருக்குது, ஆகையால் நல்ல கனிகொடாத எந்த மரமும் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுமென்றான்.

௰ ஜனங்கள் அவனை: ஆனால் நாங்கள் என்ன செய்யவேணுமென்று கேட்டார்கள்.

௰௧ அவன் அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: * இரண்டு சட்டையுடையவன் இல்லாதவனுக்குக் கொடுக்கக்கடவான், போசனங்களுடையவனும் அப்படியே செய்யக்கடவானென்றான். * ௧. யோவ.

௩, ௰௭.

௰௨ ஆயக்காரரும் ஞானஸ்நானம் பெறவந்து, அவனோடே: போதகரே, நாங்கள் என்ன செய்யவேணுமென்றார்கள்.

௰௩ அவன் அவர்களோடே: உங்களுக்குத் திட்டம் பண்ணியிருக்கிறதுக்கதிகமாய் ஒன்றுந் தேடாதேயுங்கோளென்றான்.

௰௪ சேவகரும் அவனை: நாங்களும் என்ன செய்யவேணுமென்று கேட்டார்கள். அவன் அவர்களோடே: ஒருத்தனுக்கும் இடுக்கண் அநியாயமுஞ்செய்யாமல், உங்கள் சம்பளம் போதுமென்றிருங்கோளென்றான்.

௰௫ ஆனால் ஜனங்கள் காத்துக்கொண்டிருக்கிறபோதே யோவானைக்குறித்து, எல்லாருந் தங்களிருதயங்களில் அவனைக்குறித்துச் சிந்திக்கிறவர்களாயிருக்கிறபோது,

௰௬ யோவான் எல்லாருக்கும் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: நான் ஜலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் பண்ணிவிக்கிறேன், ஆனாலென்னிலும் பெலத்தவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்ல, அவர் உங்களைப் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் ஞானஸ்நானம் பண்ணிவிப்பார்.

௰௭ அவருடைய தூற்றுக்கூடை அவர் கையிலே இருக்குது, அவர் தம்முடைய களத்தை அறவிளக்கி, கோ

துமை

...னதுசியத்திலே சேர்த்து, பதரை
...யால் சுட்டுப்போடுவாரென

...ங்காரியங்களையும் புத்தியாக
...னமாருக்குச் சுவிசேஷத்தை அறிவித்தான்.

௰௯ ஆனால் * காலபங்குத் தேசாதிபதியான ஏரோதே தன சகோதரனாகிய பிலிப்புவின் பெண்சாதி ஏரோதியாளி னிமித்தியமாகவும், தான் செய்த சகல பொல்லாப்புகளினிமித்தியமாகவும் அவனாலே கடிந்து சொல்லப்பட்டபோது, * மத். ௰௪, ௩. மாற்கு. ௬, ௰௭.

௨௰ ஏரோதேப்பட்டமெல்லாத்துக்குஞ் செய்து தவிர யோவானைக் காவலிலே அடைத்தான்.

¶ யேசு ஞானஸ்நானம் பெற்றது. மத். ௩, ௰௩. மாற்கு. ௧, ௯—௰௧.

௨௧ சனமெல்லாம் ஞானஸ்நானம் பெற்றுக்கையில்; சம்புவித்ததென்னவென்றால், யேசுவும் ஞானஸ்நானம் பெற்றுச் செபம் பண்ணுகிறபோது, வானந் திறக்கப்பட்டு,
௨௨ பரிசுத்த ஆவியானவர் சரீரப்பிரகாரமாய்ப் புறாப்போலே அவர்மேலே இறங்கினார். * வானத்திலிருந்து: நீர் நம்முடைய நேசகுமாரனாயிருக்கிறீர், உம்முடைய பேரிலே பிரியமாயிருக்கிறோமென்கிற சத்தமுமுண்டாச்சுது. * ௯, ௩௫.

கிறிஸ்துவினுடைய தாயின் வங்கிஷவர்ச்சை.

௨௩ யேசுவானவர் முப்பது வயது போலிருக்கத் துடங்கினார்: யோசேப்பினுடைய குமாரனென்றெண்ணப்பட்ட அவர் ஏலியின் வங்கிஷகுமாரனாயிருந்தார்.
௨௪ ஏலி மாத்தாத்துக்கும், இவன் லேவிக்கும், இவன் மெல்கிக்கும், இவன் யன்னாவுக்கும், இவன் யோசேப்புக்கும்,
௨௫ இவன் மத்தத்தியாவுக்கும், இவன் ஆமோசுக்கும், இவன் நாகூமுக்கும், இவன் எஸ்லிக்கும், இவன் நங்கேக்கும்,
௨௬ இவன் மாகாத்துக்கும், இவன் மத்தத்தியாவுக்கும், இவன் சேமெயிக்கும்; இவன் யோசேப்புக்கும், இவன் யூதாவுக்கும்,
௨௭ இவன் யோவன்னாவுக்கும், இவன் ரேசாவுக்கும், இவன் சோரோபாபேலுக்கும், இவன் சலாத்தியேலுக்கும், இவன் நேரிக்கும்,
௨௮ இவன் மெல்கிக்கும், இவன் அத்திக்கும், இவன் கோசாமுக்கும், இவன் எல்மோதாமுக்கும், இவன் ஏருக்கும்,
௨௯ இவன் யோசேக்கும், இவன் எலியேசேருக்கும், இவன் யோரீமுக்கும், இவன் மாத்தாத்துக்கும், இவன் லேவிக்கும்,
௩௰ இவன் சிமேயோனுக்கும், இவன் யூதாவுக்கும், இவன் யோசேப்புக்கும், இவன் யோனானுக்கும், இவன்

இவன் எலியாக்கீமுக்கும்,
௩௧ இவன் மெலேயாவுக்கு[illegible]
க்கும், இவன் மாத்தத்தாவுக்கும், [illegible]
க்கும், இவன் தாவீதுக்கும், * ௨ : சாமு. ௫, ௰௪.
௩௨ இவன் ஈசாயிக்கும், இவன் ஓபேதுக்கும், இவன் போவாசுக்கும், இவன் சல்மோனுக்கும், இவன் நாகசோனுக்கும்,
௩௩ இவன் அமினதாபுக்கும், இவன் ஆராமுக்கும், இவன் எஸ்ரோமுக்கும், இவன் பாரேசுக்கும், இவன் யூதாவுக்கும்,
௩௪ இவன் யாக்கோபுக்கும், இவன் ஈசாக்குக்கும், இவன் ஆபிரகாமுக்கும், இவன் தாராகுக்கும், இவன் நாகோருக்கும்,
௩௫ இவன் சாருக்குக்கும், இவன் ரகூவுக்கும், இவன் பேலேக்குக்கும், இவன் ஏபேருக்கும், இவன் சாலாக்குக்கும்,
௩௬ இவன் கேனானுக்கும், இவன் அர்ப்பக்சாத்துக்கும், இவன் சேமுக்கும், இவன் நோவாவுக்கும், இவன் லாமேக்குக்கும்,
௩௭ இவன் மெத்துசலாக்குக்கும், இவன் ஏனோக்குக்கும், இவன் யாரேத்துக்கும், இவன் மகலாலெயேலுக்கும், இவன் கேனானுக்கும்,
௩௮ இவன் ஏனோசுக்கும், இவன் சேத்துக்கும், இவன் ஆதாமுக்குக் குமாரனானவன், இவன் பராபரனால் உண்டானவன்.

## ௪. அதிகாரம்.

¶ கிறிஸ்து பிசாசினாலே சோதிக்கப்பட்டது.
மத். ௪, ௧—௰௧. மாற்கு ௧, ௰௨. ௰௩.

யேசுவோவென்றால் பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியினாலே வனாந்தரத்திலே கொண்டுபோகப்பட்டு,
௨ நாற்பது நாள் பிசாசினாலே சோதிக்கப்பட்டு, * அந்நாட்களிலே ஒன்றும் போசியாதிருந்தார், அதுகள் முடிந்தபிற்பாடு அவருக்குப் பசித்தது. * ௨ : மோ. ௩௪, ௨௮.
௩ அப்போ பிசாசு அவரோடே: நீ பராபரனுடைய குமாரனானால், இந்தக் கல்லை அப்பமாகச் சொல்லென்றது:
௪ யேசு அதுக்குப் பிரத்தியுத்தரமாக: * மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல, பராபரனுடைய சகல வார்த்தையினாலே பிழைப்பானென்றெழுதியிருக்குதென்றார். * ௫ : மோ. ௮, ௩.
௫ பிற்பாடு பிசாசு அவரை உயர்ந்த பர்வதத்தின்மேலே கொண்டுபோய், ஒருசெணப்பொழுதிலே லோகத்தின் ராட்சியங்களெல்லாம் அவருக்குக் காண்பித்தது:
௬ இந்த எல்லா அதிகாரத்தையும் அதுகளின் மகிமையையும் உனக்குத் தருவேன், ஏனென்றால் [illegible] கொப்புக்கொடுக்கப்பட்டிருக்குது, எனக்கு மனதா

...த்தக்கிறேன் :
...ந்தால், எல்லாம் உன்னுடைய
...பிசாசு அவரோடே சொல்லிற்று.
௮ யேசு அதுக்குப் பிறத்தியுத்தாரமாக: என் பின்னாகப்போ, சாத்தானே, ஏனென்றால் * உன் பராபரனாகிய கற்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருத்தருக்கே ஆராதனை செய்வாயாகவென்றெழுதியிருக்குதென்றார்.
* ௫ : மோ : ௫, ௭ : ௰ . ௨௰ ;

௯ அது அவரை யெருசலேமுக்குக் கொண்டுபோய், அவரைத் தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி, அவரோடே சொன்னதாவது: நீ பராபரனுடைய குமாரனானால், இங்கேயிருந்து தாழக்குதி,

௰ ஏனென்றால்: உன்னைக் காக்கும்படிக்கு உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கற்பிப்பாரென்றும்

௰௧ உன் பாதங் கல்லிலே இடறாதபடிக்கு, அவர்கள் உன்னைக் கைகளிலே ஏந்திக்கொண்டு போவார்களென்றும் * எழுதியிருக்குதென்று சொல்லிற்று. * சங்கீ. ௯௧, ௰௧. ௰௨,

௰௨ யேசு அதுக்குப் பிறத்தியுத்தாரமாக: * உன் பராபரனாகிய கற்த்தரைப் பரீட்சை பாராயாகவென்று சொல்லியிருக்குதென்றார். * ௫ : மோ . ௬, ௰௬.

௰௩ பிசாசு சோதனையெல்லாம் முடித்தபின்பு, சில காலம் அவரை விட்டகன்றது.

## ௩ கிறிஸ்துவினுடைய முதல் பிரசங்கங்கள்.

மத். ௪, ௰௭. மாற்கு ௧, ௰௪. ௰௫. ௨௧, ௨௨.

௰௪ யேசுவானவர் ஆவியினுடைய பெலத்தோடே கலிலேயாவுக்குத் திரும்பினார், அவருடைய கீர்த்தி சுத்துத் தேசமெங்கும் பரம்பிற்று.

௰௫ அவர்களுடைய ஆலயங்களிலே உபதேசித்து, எல்லாராலும் புகழப்பட்டார்.

௰௬ அவர் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து, தமக்குப் பழக்கமானபடி ஓய்வுநாளிலே ஆலயத்துக்குள் பிரவேசித்து, வாசிக்க எழுந்திருந்தார்.

௰௭ அப்போ யேசாயா தீர்க்கதரிசியின் பொஸ்தகம் அவருக்குக் கொடுக்கப்பட்டது, அவர் பொஸ்தகத்தை விரித்தபோது:

௰௮ கற்த்தருடைய ஆவி என்மேலிருக்கிறார், ஆனபடியினாலே தரித்திரருக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கவும், இருதயம் நொறுங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் குருடருக்குப் பார்வையையும் அடையுமென்று பிரசங்கிக்கவும், நொறுங்குண்டவர்களை மன்னித்து அனுப்பவும்,

௰௯ கற்த்தருடைய பிரியமான வருஷத்தைப் பிரசங்கிக்கவும், என்னை அபிஷேகம் பண்ணினபடியினாலே என்று * எழுதியிருந்த இடத்தைக் கண்டுபிடித்து, * யேசா. ௬௧, ௧—௩.

௨௰ பொஸ்தகத்தைச் சுருட்டி, ஊழியக்காரனுக்குக் கொடுப்பித்து, உட்கார்ந்தார், ஆலயத்திலெல்லாருடைய கண்களும் அவர்மேல் நோக்கமாயிருந்தது.

௨௧ அவரோவென்றால்: இன்றையதினம் இந்த

வேத

வேதாகமத்து உங்கள் செவிகள் கேட்க நிறை(வேறி)
ற்றென்று அவர்களுடனே சொல்லத்தொடங்கினார்.
௨௨ எல்லாரும் அவருக்குச் சாட்சி கொடுத்து அவ
ருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வா
ர்த்தைகளுக்காக ஆச்சரியப்பட்டு: இவன் * யோசேப்பு
டைய குமாரனல்லவோ என்றார்கள். * மத். ௰௩,
௫௫—௫௮. மாற். ௬, ௩—௬.
௨௩ அப்பொழுது அவர் அவர்களுடனே சொன்னதாவ
து: வைத்தியனே, உன்னை நீயே குணமாக்கிக்கொள்ளென்கிற உ
வமையையும், கப்பர்னகூமிலே நீ செய்யப்பட்ட
தென்று கேட்டோமோ, அதை உன்னூராகிய இங்
கேயுஞ் செய்யென்கிறதையும் நீங்கள் எனக்குச் சொல்
லுவது நிச்சயம்.
௨௪ ஆனால் * ஒரு தீர்க்கதரிசியுந் தன் ஊரிலே அங்கீ
கரிக்கப்படுவதில்லையென்று மெய்யாகவே உங்க
ளுக்குச் சொல்லுகிறேன். * யோவா. ௪, ௪௪.
௨௫ ஆனால் * எலியாவின் நாட்களிலே மூன்று வ
ருஷமும் ஆறு மாதமும் வானம் அடைக்கப்பட்டு, சீ
மையெங்கும் மகா பஞ்சம் உண்டாயிருந்த
போது, இஸ்ரவேலிலே அநேகம் விதவைகளிரு
ந்தார்கள். * ௧. ராசா. ௰௭, ௯.
௨௬ அவர்களில் ஒருத்தியிடத்துக்கும் எலியா அனு
ப்பப்படாமல், சீதோன் தேசமாகிய சரெப்தாவூரி
லுள்ள விதவையாகிய ஒரு ஸ்திரீயினிடத்துக்கே அனுப்ப
ப்பட்டான்.
௨௭ * எலிசா தீர்க்கதரிசியின் காலத்திலே இஸ்ரவே
லிலே அநேகங் குஷ்டரோகிகளுமிருந்தார்கள், அ
ஞ்ஞ சீரியதேசத்தானாகிய நாகமானேயல்லாமல் அவ
ர்களில் வேறொருத்தனுஞ் சுத்தமாக்கப்படவில்லையெ
ன்று சத்தியத்தின்படியே உங்களுக்குச் சொல்லுகிறே
னென்றார். * ௨. ராசா. ௫, ௰௪.
௨௮ ஜெபாலயத்திலிருந்த எல்லாரும், இதுகளைக்
கேட்டபோது, கோபத்தால் நிறைந்து,
௨௯ எழுந்திருந்து, அவரை ஊருக்குப்புறம்பே தள்
ளி, தங்கள் ஊர் கட்டியிருந்த மலையின் செங்குத்தான
முனையிலிருந்து அவரைத் தாழத்தள்ள, அந்தமட்டும்
அவரைக் கொண்டுபோனார்கள்.
௩௰ அவரோவென்றால் * அவர்கள் நடுவாய்ப் புறப்
பட்டுப்போய், * யோவா. ௮, ௫௯.
௩௧ கலிலேயா தேசத்தின் கப்பர்னகூம் பட்டணத்
துக்கு வந்து, ஓய்வு நாட்களிலே அவர்களை உபதேசித்
துக்கொண்டிருந்தார்.
௩௨ அவர்கள் * அவருடைய உபதேசத்துக்குத் திகை
த்தார்கள், ஏனென்றால் அவருடைய வசனம் அதிகார
முள்ளதாயிருந்தது. * மத். ௭, ௨௮. ௨௯, யோவா.
௭, ௪௬.

¶ அவர் கப்பர்னகூமிலே செய்த அதிசெயங்
கள். மாற். ௧, ௨௩—௩௪.

௩௩ அசுத்த பிசாசின் ஆவியுள்ள ஒரு மனுஷன் ஜெபால
யத்திலேயிருந்தான், அவன் மகா சத்தத்தோடே:
௩௪ ஐயையோ, எங்களுக்கும் உமக்குமென்ன, யேசு
நசரே

நாசரேத்தானே, எங்களைக் கெடுக்க வந்தீரோ, நீர் ஆரென்று அறிவேன், நீர் பராபரனுடைய * பரிசுத்தர் தானென்றான். * ௧, ௩௫.

௩௫ இயேசுவோவென்றால்: நீ மவுனமடைந்து அவனை விட்டுப் புறப்படுவென்று அதட்டினார். அப்போ பிசாசு அவனை நடுவே தள்ளி, அவனுக்கு ஒரு சேதமுஞ் செய்யாமல் அவனை விட்டுப் புறப்பட்டுது.

௩௬ எல்லாருக்கும் ஆச்சரியமுண்டாய் ஒருத்தரோடொருத்தர்: இதென்ன வார்த்தையோ, அதிகாரமும் வல்லமையுமாய் அசுத்த ஆவிகளுக்குக் கற்பிக்கிறார் அதுகள் புறப்பட்டுப் போகுதேயென்றார்கள்.

௩௭ அவருடைய கீர்த்தி சுற்றுத்தேசத்திலுள்ள எல்லாவிடத்திலும் பிரசித்தியமாய்ப் போச்சுது.

௩௮ அவர் எழுந்திருந்து ஆலயத்தை விட்டு, சீமோன் வீட்டுக்குள் பிரவேசித்தார், * சீமோனுடைய மாமியோவென்றால் மகா சுரமாய்க் கிடந்தாள், அவளுக்காக அவரை வேண்டிக் கொண்டார்கள். * மத். ௮, ௰௪. ௰௫.

௩௯ அப்போ அவளுக்கு மேலாகக் குனிந்து நின்று சுரத்தை அதட்டினார், அது அவளை விட்டு நீங்கிற்று. உடனே அவள் எழுந்திருந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தாள்.

௪௰ சூரியன் அஸ்தமிக்கப்போது, * பல பல வியாதிகளால் வாதைப்பட்டவர்களுட மனுஷர் யாவரும் அவர்களை அவரண்டையிலே கொண்டு வந்தார்கள், அவர்களில் ஒவ்வொருத்தன் மேலே அவர் கைகளை வைத்து, அவர்களைச் சுகமாக்கினார். * மத். ௮, ௰௬.

௪௧ பிசாசுகளும்: நீர் பராபரனுடைய குமாரனாகிய கிறீஸ்துவென்று கூப்பிட்டு, அநேகரை விட்டுப் புறப்பட்டுது. அவர் அதுகளை அதட்டி, பேசவொட்டாதிருந்தார், ஏனென்றால் அவர் கிறீஸ்துவென்று அதுகள் அறிந்திருந்தது.

¶ அவர் கலிலேயாவிலே மறுபடியுந் திரிந்து பிரசங்கித்தது. மாற். ௧, ௩௫—௩௯.

௪௨ உதயமானபோது அவர் புறப்பட்டு வனாந்திரமான இடத்துக்குப் போனார், கும்புகள் அவரைத் தேடி, அவரண்டையிலே வந்து, தங்களை விட்டுப் போகாதபடிக்கு அவரை நிறுத்திக் கொண்டார்கள்.

௪௩ அவரோவென்றால் அவர்களுடனே: நான் மற்றவூர்களுக்கும் பராபரனுடைய ராட்சியத்தைச் சுவிசேஷமாய் அறிவிக்கவேணும், ஏனென்றால் இதற்கு அனுப்பப்பட்டேனென்றார்.

௪௪ அப்படியே கலிலேயத்தேசத்தின் ஆலயங்களில் பிரசங்கித்துக்கொண்டிருந்தார்.

## ௫. அதிகாரம்.

¶ பேதுருவின் மீன் வேட்டை அதிசெயம்

பின்னையுஞ் சம்பவித்ததென்றால், கும்புகள் பராபரனுடைய வசனத்தைக் கேட்க அவரை நெருக்கி நிற்கை

நிற்கையில், அவர் கெனேசரேத்தின் சமு[illegible] ண்டையிலே நின்றிருந்து,

௨ கடற்கரையிலே ரெண்டு பட்டுக்கள் நிற்கக் கண்டார், மீன்பிடிக்கிறவர்களோவென்றால் அதுகளை விட்டிறங்கி, வலைகளை அலசிக்கொண்டிருந்தார்கள்.

௩ அப்போ அந்தப் பட்டுகளில் ஒன்றுக்குள் ஏறினார், அது சீமோனுடையதாயிருந்தது, அதைக் கரையிலேயிருந்து சற்றே தள்ள அவர் அவனை வேண்டிக்கொண்டு. * அந்தப் பட்டிலே உட்கார்ந்திருந்து கும்புகளைப் போதகம்பண்ணினார். * மாற்கு. ௪, ௧.

௪ வசனித்து முடித்தபின்பு அவர் சீமோனுடனே: நீ ஆழத்திலே தள்ளிக்கொண்டுபோய், மீன்வேட்டைக்கு உங்கள் வலைகளைத் தாழவிடுங்கோள் என்றார்.

௫ சீமோன் அவருக்குப் பிரதியுத்தாரமாக: ஐயரே, ராமுழுதும் நாங்கள் பிரயாசப்பட்டு ஒன்றும் பிடித்ததில்லை, உம்முடைய வார்த்தையின்படியோவென்றால் வலையைத் தாழவிடுவேன் என்றான்.

௬ அவர்கள் அப்படிச் செய்து, வெகு ஏராளமான மீன்களைச் சேர்த்துக்கொண்டார்கள். அவர்கள் வலையோவென்றாற் கிழிந்தது.

௭ அப்போ வேறே பட்டிலேயிருந்த பங்காளிகள் வந்து தங்களுக்கு ஒத்தாசைப்பண்ண, அவர்களுக்குச் சயிகைகாட்டினார்கள், அவர்கள் வந்து ரெண்டு பட்டுகளையும் அமிழ்ந்தத்தக்க பாரமாக ரொப்பினார்கள்.

௮ அதைச் சீமோன் பேதுரு கண்டு, யேசுவின் முழங்கால்களண்டையிலே விழுந்து: ஆண்டவரே, என்னை விட்டுப் புறப்படும், ஏனென்றால் பாவியான மனுஷனாயிருக்கிறேன் என்றான்.

௯ ஏனென்றால் பண்ணின மீன்வேட்டையினாலே அவனுக்கும் அவனுடனே கூட இருந்த யாவருக்குந் திகைப்புண்டாச்சுது.

௰ சீமோனுக்குக் கூட்டாளிகளான செபெதேயுவின் குமாரராகிய யாகோபுக்கும் யோவானுக்கும் அந்தப்படி தானே. அப்போ யேசு சீமோனுடனே: பயப்படாதே, இதுமுதல் மனுஷரைப் பிடிக்கிறவனாயிருப்பாய் என்றார்.

௰௧ அவர்கள் பட்டுகளைக் கரையிலே கட்டிவைத்து, எல்லாத்தையும் விட்டு அவரைப் பின்சென்றார்கள்.

## ¶ ஒரு குஷ்டரோகி குணமாக்கப்பட்டது. மாற்கு. ௧, ௪௰—௪௫.

௰௨ பின்னையும் சம்புவித்ததேதென்றால் அவர் ஒரு ஊரிலேயிருக்கையில், இதோ: குஷ்டரோகம் நிறைந்த ஒரு மனுஷன் அங்கேயிருந்தான், அவன் யேசுவைக் கண்டு முகங்குப்புற விழுந்து: ஆண்டவரே, உமக்குச் சித்தமுண்டானால், என்னைச் சுத்தமாக்க உம்மாலேயாகுமென்று அவரை வேண்டிக்கொண்டான்.

௰௩

௰௩ அவர் கையை நீட்டி, அவனைத் தொட்டு: என
க்குச் சித்தமுண்டு, சுத்தமாகு என்றார்; உடனே குஷ்ட
ரோகம் அவனை விட்டு நீங்கிற்று.

௰௪ அவர் அவனுக்கு: நீ ஒருவருக்குஞ் சொல்லா
மல், போய் உன்னை ஆசாரியனுக்குக் காண்பித்து, உ
ன் சுத்திகரிப்புக்காக * மோசே கற்பித்தத்தி
ன்படியே, அவர்களுக்குச் சாட்சியாகப் பலி செலு
த்தென்று கற்பித்தார். * ௩. மோ. ௰௪, ௨.

௰௫ ஆனால் அவருடைய கீர்த்தி அதிகமாகப் பரம்பி
ற்று, வெகு கும்புகள் அவரைக் கேட்கிறதற்கும் அவ
ராலே தங்கள் பிணிகளுக்குச் சொஸ்தமாக்கக் கொள்ளுகி
றதற்குக் கூடிவந்தது.

௰௬ அவரோ வெளியான வனாந்திரங்களில் தனித்து
ப்போய், * ஜெபம்பண்ணிக்கொண்டிருப்பார். *
மாற். ௧, ௩௫.

¶ ஒருதிமிர்வாதக்காரனைக் குணமாக்கப்
பட்டது. மாற். ௨, ௧—௰௨.

௰௭ பின்னையுமொருநாளிலே சம்பவித்ததாவது,
அவர் உபதேசித்துக் கொண்டிருந்தார், கலிலேயா யூ
தேயா தேசங்களிலுள்ள சகல கிராமத்திலும் எருசலேமி
லுமிருந்து வந்த பரிசேயரும் நியாயப்பிரமாணப் போத
கருமுட்கார்ந்திருந்தார்கள், கர்த்தருடைய பெ
லனவர்களைக் குணமாக்கத் தக்கதாயிருந்தது.

௰௮ அப்பொழுது, சிலமனுஷர் * திமிர்வாதக்கா
ரனாகிய ஒருமனுஷனைப் படுக்கையின்மேல் எடுத்துவ
ந்து, அவனை உள்ளே கொண்டுபோகவும் அவர்
முன்பாக வைக்கவும் வகைதேடி; * மத். ௯, ௨—௮.

௰௯ அவனை எந்த வழியாய் உள்ளே கொண்டு
போகலாமென்று நினைத்தும் வகைகாணாம
ல், வீட்டின்மேலேறி, கட்டோடுகள் வழியாய் அ
வனைப் படுக்கையுடனே நடுவே இயேசுவுக்கு மு
ன்பாக இறக்கினார்கள்.

௨௰ அவர் அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு,
அவனுக்கு: மனுஷனே, * உன் பாவங்கள் உனக்கு ம
ன்னிக்கப்பட்டிருக்கிறது என்றார். * எ, ௬௮.

௨௧ அப்பொழுது வேதபாரகரும் பரிசேயரும்: தேவ
தூஷணங்களைச் சொல்லுகிற இவன் ஆர், பராப
ரன் ஒருவர் தவிர பாவங்களை மன்னிக்கத் தக்கவர்
ஆரென்று சிந்திக்கத் தொடங்கினார்கள்.

௨௨ இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து,
அவர்களுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவ
து: உங்கள் இருதயங்களிலே நீங்கள் சிந்திக்கிறதெ
ன்ன.

௨௩ எதெளிதாயிருக்குது, உன் பாவங்கள் உனக்
கு மன்னிக்கப்பட்டதென்று சொல்லவெளிதோ, அ
ல்லது, எழுந்து நடவென்று சொல்லவெளிதோ.

௨௪ ஆனாலும் பூமியிலே பாவங்களை மன்னிக்க மனு
ஷனுடைய குமாரன் அதிகாரமுள்ளவரென்றத்தை
நீங்கள் அறியவேண்டுமென்று சொல்லி, திமிர்வாதக்
காரனுடனே: நீ எழுந்திருந்து உன் படுக்கையை

எடுத்

எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போவென்று உ
னக்குச் சொல்லுகிறேனென்றார்.

௨௫ உடனே அவன் அவர்களுக்கு முன்பாக எழுந்தி
ருந்து, தான் படுத்திருந்ததை எடுத்துக்கொண்டு, பரா
பரனை மகிமைப்படுத்திக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான்.

௨௬ எல்லாருக்கும் விஸ்மயமுண்டாகி, அவ
ர்கள் பராபரனை மகிமைப்படுத்தி, பயத்தால் நிறை
யப்பட்டு: புதுமைக்குரிய ஆச்சரியங்களை இன்
று கண்டோமென்றார்கள்.

## ¶ கிறிஸ்து மத்தேயுவை அழைத்ததும் உபவாசத்தைக் குறித்துச் சொன்னதும்.

மாற்கு. ௨, ௰௩—௨௨.

௨௭ இதுகளுக்குப் பிற்பாடு அவர் புறப்பட்டு, ஆய
த்துறையில் உட்கார்ந்திருந்த * லேவியென்கிற பேரு
டைய ஆயக்காரனைக் கண்டு. அவனை நோக்கி: என்
னைப் பின்செல்லென்றார். * மத். ௯, ௯—௰௩.

௨௮ அவன் எல்லாத்தையும் விட்டு எழுந்திருந்து அ
வரைப் பின்சென்றான்.

௨௯ பின்பு லேவி அவருக்குத் தன் வீட்டிலே பெரிய வி
ருந்து பண்ணினான், ஆயக்காரரும் அவர்களுடனே
பந்தியிருந்த மற்றவர்களும் வெகுசனமாயிருந்தார்
கள்.

௩௰ ஆனால் அவர்களுடைய வேதபாரகரும் பரிசே
யரும் அவருடைய சீஷருக்கு விரோதமாக * முறு
முறுத்து: நீங்கள் ஆயக்காரரோடும் பாவிகளோடும்
போசித்துக் குடிப்பானேனென்றார்கள். * ௭, ௩௪.

௩௧ யேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: சு
ரோக்கியவான்களுக்கு வயித்தியன் தேவையாயிராம
ல் நோவாளிகளுக்குத் தேவையாயிருக்கிறான்.

௩௨ நீதிமான்களையல்ல பாவிகளைக் குணப்படு
த்துக்கு அழைக்கவந்தேனென்றார்.

௩௩ ஆனால் * அவர்கள் அவருடனே: யோவானு
டைய சீஷரும் அப்படியே பரிசேயருடைய சீஷரும்
வெகுதரம் உபவாசித்து, ஜெபங்களைப் பண்ணிக்கொ
ண்டிருக்கிறார்கள், உம்முடைய சீஷர் போசித்துக்
குடிப்பானேனென்றார்கள். * மத். ௯, ௰௪—௰௭.

௩௪ அவரோவென்றால் அவர்களுடனே: மணவா
ளன் கலியாணபந்தியோடேயிருக்குமட்டும் நீங்கள்
அவர்களை உபவாசிக்கப்பண்ணக்கூடுமோ.

௩௫ மணவாளன் அவர்களை விட்டெடுபடும் நா
ட்கள் வரும், அப்போ அந்த நாள்களிலே உப
வாசிப்பார்களென்றார்.

௩௬ அவர்களுக்கு ஒரு உவமையையுஞ் சொன்னார்:
ஒருவனும் புது வஸ்திரத்தின் துண்டைப் பழைய வஸ்
திரத்திலே போடுவதில்லை, போட்டால், புதான
தும் விட்டுப்போம், பழையதானதுக்குப் புது வஸ்
திரத்துண்டு ஏவுகிறதுமில்லை.

௩௭ ஒருவனும் புது திராட்சரசத்தைப் பழந்து
ருத்திகளிலே வார்க்கிறதுமில்லை, வார்த்தால்,
புதுரசந் துருத்திகளைப் பீறிப்போடும், அப்போ

அது

அதுவுஞ்சிந்திப்போம் துருத்திகளுங்கெட்டுப்போம்;
௩௮ புதுரசத்தைப் புதுத்துருத்திகளிலே வார்த்துவைக்க வேணும், அப்போ இரண்டும் பத்திரப்படும்.
௩௯ பழரசத்தைக் குடிக்கிற எவனும் உடனே புதுரசத்தை விரும்பான், ஏனென்றால் பழரசம் மெதுவாயிருக்குதென்பானென்று சொன்னார்.

## ௬. அதிகாரம்.

¶ ஓய்வுநாளிலே கதிர்களைக் கொய்த சீஷர்களுக்காக அவர் பரிந்து பேசினது. மாற்கு ௨; ௨௩—௨௮.

௧ இரண்டாவதான ஏருஓய்வுநாளிலே சம்புவித்ததென்னென்றால், அவர் * விளைச்சலின்வழியே நடந்துபோனார், அப்போ அவருடைய சீஷர்கள் கதிர்களைக் கொய்து, கைகளினாலே நிமிண்டி, தின்றார்கள். * மத். ௰௨, ௧—௮.
௨ ஆனாலே பரிசேயரிலே சிலர் அவர்களுடனே: ஓய்வுநாட்களிலே செய்யத்தகாததை நீங்கள் செய்கிறதென்னவென்றார்கள்.
௩ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொன்னதாவது: தாவீதும் அவனுடனே இருந்தவர்களும் பசித்திருக்கிறபோது, அவன் பராபரனுடைய வீட்டுக்குள் பிரவேசித்து, * ஆசாரியர்கள்மாத்திரமேயொழிய பின்னை ஆரும் போசிக்கத்தகாத தேவசமுகத்தப்பங்களை வாங்கிக்கொண்டு, * ௩. மோ. ௨௪. ௫—௯.
௪ தானும் போசித்து, தன்னுடனே இருந்தவர்களுக்குங் கொடுத்த * அவன் செய்கையை நீங்கள் வாசித்ததில்லையோவென்றார். * ௧. சாமு. ௨௧, ௬.
௫ பின்னையும் அவர்களுடனே: மனுஷனுடைய குமாரன் ஓய்வுநாளுக்கும் ஆண்டவராயிருக்கிறாரென்று சொன்னார்.

¶ சூம்பின கையுடைய மனுஷனை அவர் குணமாக்கினது. மாற்கு ௩, ௧—௬.

௬ வேறொரு ஓய்வுநாளிலுஞ் சம்புவித்ததென்னென்றால், அவர் ஆலயத்துக்குள் பிரவேசித்து உபதேசித்தார், அங்கே ஒரு மனுஷனிருந்தான், * அவனுடைய வலதுகை சூம்பியிருந்தது. * மத். ௰௨, ௯—௰௪.
௭ ஆனாலே வேதபாரகரும் பரிசேயரும் அவனைக் குத்தம்பிடிக்க, ஓய்வுநாளிலே குணமாக்குவாரோவென்று * அவரைக் காத்திருந்தார்கள். * ௰௪, ௯.
௮ அவரோவென்றால் அவர்களின் சிந்தனைகளை அறிந்து, சூம்பின கையையுடைய மனுஷனுடனே: நீ எழுந்திருந்து, நடுவே நில்லென்றார். அவன் எழுந்திருந்து நின்றான்.
௯ அப்போ யேசு அவர்களுடனே: உங்களை ஒன்று கேட்கிறேன், ஓய்வுநாட்களிலே நன்மை

செய

செய்வதோ தீமைசெய்வதோ, சீவனை ரட்சிப்பதோ அழிப்பதோ, எது நியாயமானது சொல்லீர்,

௰ சுற்றிலும் அவர்களெல்லாரையும் பார்த்து, அந்த மனுஷனோடே: உன் கையை நீட்டென்றார். அப்படியே அவன் செய்தான், அவனுடைய கை மற்றதைப்போலே சொஸ்தமாகச் சீருக்கு வந்தது:

௰௧ அவர்களோவெனில் அவமதியாலே நிறைந்தவர்களாய்ப் பட்டு, யேசுவை நாமென்ன செய்வோமென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

¶ அவர் அப்போஸ்தலரைத் தெரிந்துகொண்டது. மாற்கு ௩, ௰௩——௰௯.

௰௨ அந்நாட்களிலே சம்பவித்ததேதென்றால் அவர் செபம்பண்ணுகிறதுக்குப் பர்வதத்துக்குப் புறப்பட்டுப் போய், பராபரனைச் செபிக்கிறதிலே ராத்திரிகாலம் போக்கி,

௰௩ பொழுதுவிடிந்தபோது தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களிலே பன்னிருவரைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு * அப்போஸ்தலரென்கிற நாமத்தையுந் தரித்தார். * மத். ௰, ௨——௫.

௰௪ அவர்களாரென்றால், அவர் பேதுருவென்று பேரிட்ட சீமோனும் அவன் சகோதரனாகிய அந்திரேயாவும், யாக்கோபும் யோவானும், பிலிப்பும் பற்தொலோமேயும்,

௰௫ மத்தேயுந் தோமாவும், அல்பேயுவினுடைய குமாரனாகிய யாக்கோபும் செலோத்தேயனென்னப்பட்ட சீமோனும்,

௰௬ யாக்கோபின் * சகோதரனாகிய யூதாவும், துரோகியுமான யூதாஸ் இஸ்காரியோத்துந்தானே. * யூதா ௧. வசனம்.

¶ அவர் ஒரு பருவதத்தின் சமனான இடத்திலே பண்ணின பிரசங்கம். மத். ௫. ௬. ௭. அதிகாரம்.

௰௭ அவர்களுடனே கூட இறங்கி, சமனான ஓரிடத்திலே நின்றார்; அவருடைய சீஷரின் கூட்டமும் அவரைக் கேட்கவும் தங்கள் வியாதிகளினின்று குணமாக்கிக் கொள்ளவும் யூதேயாதேசமெங்கும் எருசலேமிலும், தீரு சீதோன் பட்டணங்களின் கரைதுறையிலுமிருந்து வந்த சனத்தின் பெருந்திரளும்,

௰௮ அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களும் அங்கே வந்து கூடினார்கள், ஆரோக்கியமும் அடைந்தார்கள்:

௰௯ சனமெல்லாம் அவரைத் தொடப் பார்த்தது, ஏனென்றால் வல்லமை அவரிலிருந்து புறப்பட்டு எல்லாரையுங் குணமாக்கிற்று.

௨௰ அவர் தம்முடைய சீஷர்மேலே தம்முடைய கண்களை ஏறெடுத்துச் சொன்னதாவது: * தரித்திரரான நீங்கள் பாக்கியவான்கள், ஏனென்றால் பராபரனுடைய இராச்சியம் உங்களுடையதாயிருக்கிறது. * மத். ௫, ௨:௰௨.

௨௧ இப்பொழுது பசியாயிருக்கிறவர்களாகிய நீங்கள் பாக்கியவான்

கள், அதேனென்றால் திருத்தியடைவீர்கள்; இப்
போ * அழுகிறவர்கள் பாக்கியவான்கள், அதேனெ
ன்றால் நகைப்பீர்கள். * யெச. ௬௧, ௩—௬.
௨௨ மனுஷனுடைய குமாரனிமித்தம் மனுஷ
ர் * உங்களைப் பகைத்து உங்களை விலக்கி நிந்தைப்படு
த்தி, உங்கள் நாமத்தைப் பொல்லாததென்று தள்ளிப்
போடும்போது பாக்கியவான்களாயிருக்கிறீர்கள். * ௧.
பேது. ௪. ௰௪.
௨௩ * அந்நாளிலே நீங்கள் சந்தோஷப்பட்டுக் களி
கூருங்கோள்: ஏனென்றால் பரமண்டலத்திலே
உங்கள் பலன் திரளாயிருக்கும், அதேனென்றால் இப்ப
டியே அவர்கள் பிதாக்கள் தீர்க்கதரிசிகளுக்குச் செ
ய்தார்கள். * அப். ௫, ௪௧.
௨௪ ஆனாலும் * ஐசுவரியவான்களாகிய உங்களுக்கு
ஐயோ, அதேனென்றால் உங்கள் ஆறுதலை நீங்க
ள் அடைந்து தீர்ந்தது. * ௰௬, ௨௫.
௨௫ * நிறைவாய்ப்பட்டிருக்கிற உங்களுக்கு ஐயோ, அ
தேனென்றால் பசித்திருப்பீர்கள், இப்போ நகைக்கி
ற உங்களுக்கு ஐயோ, அதேனென்றால் துக்கப்பட்
டழுவீர்கள். * பெசா. ௬௫, ௰௩. ௰௪.
௨௬ எல்லா மனுஷரும் உங்களைக் குறித்து நல்ல
தாய்ப் பேசினால் உங்களுக்கு ஐயோ, ஏனென்றால் இப்ப
டியே அவர்கள் பிதாக்கள் கள்ளத் தீர்க்கதரிசிக
ளுக்குச் செய்தார்கள்.
௨௭ ஆனாலும் கேழ்விப்படுகிற உங்களுக்குச் சொல்
லுகிறேன்: உங்கள் * சத்துருக்களைச் சினேகியுங்
கோள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செ
ய்யுங்கோள். * மத். ௫, ௪௪, ௪௫.
௨௮ உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்
கோள், உங்களை அக்கிரமிக்கிறவர்களுக்காக வே
ண்டிக்கொள்ளுங்கோள்.
௨௯ உன்னைத் தாடையில் அறைகிறவனுக்கு மற்
றதையும் ஏப்புக்கொடு, உன் வஸ்திரத்தை எடுத்
துக்கொள்ளுகிறவனுக்கு உன் அங்கியையுந் தடை
பண்ணாதே. * மத். ௫, ௩௯—௪௧.
௩௰ * உன்னை வேண்டிக்கொள்ளுகிற எவனு
க்குங் கொடு, உன்னுடையதை எடுத்துக்கொள்ளுகி
றவனை அதைத் திரும்பக் கேளாதே. * மத். ௫, ௪௨.
௩௧ * உங்களுக்கு மனுஷர் எப்படிச் செய்ய வேணு
மென்றிருக்கிறீர்களோ அப்படி அவர்களுக்கு நீ
களுஞ் செய்யுங்கோள். * மத். ௭, ௰௨.
௩௨ * உங்களைச் சினேகிக்கிறவர்களையே நீங்க
சினேகித்தால், உங்கள் தயவு எப்படிக்கொத்தத்தா
யிருக்குது, பாவிகளுந் தங்களைச் சினேகிக்கிறவர்
களைச் சினேகிக்கிறார்களே. * மத். ௫, ௪௬. ௪௭.
௩௩ உங்களுக்கு நன்மை செய்கிறவர்களுக்கே நீங்
கள் நன்மை செய்தால், உங்கள் தயவு எப்படிக்கொ
த்ததாயிருக்குது, பாவிகளும் அப்படித்தான் செய்கி
றார்களே.
௩௪ வரப்பற்றிக்கொள்ளலாமென்றிருக்கிற
வர்களுக்கே நீங்கள் கடன் கொடுத்தால், உ
ங்கள் தயவு எப்படிக்கொத்ததாயிருக்குது; பாவிகளு
சரிய

சரியாய்ப் பற்றிக்கொள்வதற்குப் பாவிகளுக்குக் கடன் கொடுக்கிறார்களே.

௩௫ ஆகையால் உங்கள் சத்துருக்களைச் சிநேகித்து, நன்மைசெய்து, ஒன்றுக்கும் ஆசைவைக்காமல் கடன் கொடுங்கள்; அப்பொழுது உங்கள் பலன் திரளாயிருந்து, * உன்னதமானவருடைய பிள்ளைகளாயிருப்பீர்கள், ஏனென்றால் அவர் நன்றியறியாதவர்கள் பேரிலும் பொல்லாதவர்கள் பேரிலும் உபகாரியாயிருக்கிறார். * மத. ௫, ௪௨.

௩௬ ஆனபடியினாலே உங்கள் பிதா * இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோலே நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள். * மத. ௫, ௪௮.

௩௭ * குற்றமாய் நிதானியாதேயுங்கள், அப்பொழுது குற்றமாய் நிதானிக்கப்படாதிருப்பீர்கள், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்காதேயுங்கள், அப்பொழுது ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள், விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது விடுதலைபண்ணப்படுவீர்கள். * மத. ௭, ௧.

௩௮ கொடுங்கள், * அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், அமுத்திக் குலுக்கிச் சரிந்து விழும் நல்ல அளவு உங்கள் மடியிலே கொடுப்பார்கள், ஏனென்றால் எந்த அளவால் அளக்கிறீர்களோ அதினால் உங்களுக்குத் திரும்ப அளக்கப்படுமென்றார். * சங்கீ. ௪௧, ௨.—௪.

௩௯ அவர் பின்னையும் அவர்களுக்குச் சொன்ன உவமையாவது: * குருடனுக்குக் குருடன் வழிகாட்டலாமோ, இருவரும் பள்ளத்தில் விழுவார்களல்லவோ. * மத. ௰௫, ௰௪.

௪௰ சீஷன் தன் போதகனுக்கு மேற்பட்டவனல்ல, தேறினவனெல்லாம் தன் போதகனைப்போலிருப்பான்.

௪௧ ஆனால் * நீ உன் சுயகண்ணிலுள்ள உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயைப் பார்க்கிறதென்ன. * மத. ௭, ௩—௫.

௪௨ அல்லது நீ உன் கண்ணிலுள்ள உத்திரத்தைக் காணாமல், உன் சகோதரனுடனே: சகோதரனே, நான் உன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போடட்டுமென்று எப்படிச் சொல்லமாட்டுவாய். மாயக்காரா, முந்த உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு, பிற்பாடு உன் சகோதரன் கண்ணிலுள்ள சிராயை எடுத்துப்போட வகைபார்ப்பாயாக.

௪௩ ஏனென்றால் * ஆகாதகனி கொடுக்குமரம் நல்லமரமல்ல, நல்லகனி கொடுக்குமரம் ஆகாதமரமல்ல. * மத. ௭, ௰௭. ௰௮.

௪௪ எந்தமரமும் தன் சுயகனியினாலே அறியப்படும், ஏனென்றால் முள்செடியிலே அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெரிஞ்சிச்செடியிலே திராட்சப்பழத்தை அறுக்கிறதுமில்லை.

௪௫ நல்லமனுஷன் தன் இருதயத்தின் * நற்பொக்கிஷத்திலே நல்லதை எடுத்துக்கொடுக்கிறான், பொல்லாத மனுஷன் தன் இருதயத்தின் பொல்லாப்பொக்கிஷத்திலே பொல்லாததை எடுத்துக்கொடுக்கிறான், ஏனென்றால்

இருத

ருதயத்தின் பரிபூரணத்தினாலே அவன் வாய் பேசும்; * மத். ௰௨, ௩௪. ௩௫.

௪௬ ஆனால் நான் சொல்லுகிறதுகளை நீங்கள் செய்யாமல் போனால், என்னை * ஆண்டவரே, ஆண்டவரே என்று அழைப்பானேன். * மத். ௭, ௨௧—௨௩.

௪௭ * என்னண்டை வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு அதுகளின்படி செய்கிறவனெவனோ அவன் ஆருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன். * மத். ௭, ௨௪, ளு.

௪௮ வெட்டி ஆழத்தோண்டி, கல்மலையின் மேல் அஸ்திவாரம் போட்டு வீடு கட்டின மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து. நீரோட்டம் அந்த வீட்டை மோதியும் அதை அசைக்கமாட்டாமல் போச்சுது, ஏனென்றால் கல்மலையின் மேல் அஸ்திவாரம் போட்டிருக்குது.

௪௯ கேட்டுச் செய்யாதவனோ வெளியில் அஸ்திவாரமில்லாமல் பூமியின் மேல் வீடு கட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான், நீரோட்டம் அதை மோதின உடனே அது விழுந்தது, அந்த வீட்டின் இடிதல் பெரிதாயிருந்ததென்றார்.

## ௭. அதிகாரம்.

௧ கலிலத்துச் சேர்வைக்காரனுடைய வேலைக்காரனைக் குணமாக்கினது. மத். ௮, ௫—௰௩.

அவர் தம்முடைய வார்த்தைகளை எல்லாம் சனத்தின் காதுகள் கேட்கச் சொல்லி முடித்தபின்பு, கப்பர்நகூமுக்குள் பிரவேசித்தார்.

௨ ஆனால் நூத்துக்குச் சேர்வைக்காரனாகிய ஒருத்தனுக்குப் பிரியமான அவனுடைய வேலைக்காரன் பிணியாயிருந்து, சாகக்கிடந்தான்.

௩ அவன் யேசுவின் செய்தியைக் கேட்டிருந்து, அவர் வந்து தன் வேலைக்காரனைக் குணமாக்க அவரை வேண்டிக்கொள்ளுகிறதுக்கு யூதருடைய மூப்பரை அவரண்டைக்கனுப்பினான்,

௪ இவர்கள் யேசுவண்டையிலே வந்து அவரைக் கருத்தாய் வேண்டிக்கொண்டு: நீர் அவனுக்கிதைச் செய்யப்பாத்திரவானாயிருக்கிறான்.

௫ ஏனென்றால் நம்முடைய சாதியைச் சிநேகிக்கிறான், எங்களுக்கு ஆலயத்தையும் அவனே தான் கட்டினானென்றார்கள்.

௬ யேசு அவர்களுடனே கூடப் போனார், வீட்டுக்கு அவர் தூரமாயிராதபோதே வெளியில், சேர்வைக்காரன் அவரண்டையிலே சிநேகிதரை அனுப்பி: ஆண்டவரே, பிரயாசப்படாதேயும், ஏனென்றால் தேவரீர் என் வீட்டுவாசலுக்குள் பிரவேசிக்க நான் போந்தவனல்ல.

௭ ஆகையால் உம்மண்டைக்கு வரவும் என்னை நான் பாத்திரவானாக எண்ணினதில்லை, ஒரு வார்த்தையைச் சொல்லும், அப்போது என் வேலைக்காரன் குணமாவான்.

௮ ஏனென்றால் நான் அதிகாரத்துக்குக் கீழ்ப்பட்டவனாயிருந்தும், என் கீழ்க்கிருக்கிற சேவகருக்குள்ளே நான் ஒருவனுக்கு: போவென்று சொன்னால், போகிறான், மற்றொருவனுக்கு: வாவென்று சொன்னால், வருகிறான், என் வேலைக்காரனுக்கு: இதைச் செய்யென்று சொன்னால், செய்கிறானென்று அவருக்குச் சொல்லச் சொன்னான்.
௯ யேசு இதுகளைக் கேட்டபோது, அவன்மேலே ஆச்சரியப்பட்டு, திரும்பிக்கொண்டு, தம்மைப் பின்சென்ற ஜனங்களை நோக்கி: இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிக்கொத்த விசுவாசத்தைக் கண்டதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.
௰ அனுப்பப்பட்டவர்கள் திரும்ப வீட்டுக்கு வருகிறபோது வியாதியாயிருந்த வேலைக்காரன் சுகமடைந்தவனாகக் கண்டார்கள்.

¶ நாயீன் ஊரிலே மரித்த ஒரு வாலிபகனை அவர் எழுப்பினது.

௰௧ மறுநாளிலே சம்பவித்ததென்னவென்றால், நாயீன் என்னப்பட்ட ஒரு ஊருக்குப் போனார், அவருடைய சீஷர் அநேகரும் வெகு ஜனங்களும் அவருடனே கூடப்போனார்கள்.
௰௨ அவர் ஊர்வாசலுக்குச் சமீபித்தபோதே இதோ, தன் தாயிக்கு ஒரே குமாரனாயிருந்த மரித்த ஒருவனை வெளியே எடுத்துவரப்பட்டான், அவளோ விதவையாயிருந்தாள், ஊரார் வெகுஜனங்கள் அவளுடனே கூட வந்திருந்தார்கள்.
௰௩ கர்த்தர் அவளைப் பார்த்து அவள்மேலே மனதுருகி, அவளுடனே: அழாதேயென்று சொல்லி,
௰௪ சேர வந்து, பாடையைத் தொட்டார், சுமந்தவர்கள் நின்றார்கள். அப்போது அவர்: வாலிபகனே, * எழுந்திருவென்று உனக்குச் சொல்லுகிறேனென்றார். * மத். ௯, ௨௫. யோவ. ௰௧, ௪௩.
௰௫ அப்போது மரித்தவன் எழுந்து உட்கார்ந்து பேசத்துவக்கினான். அவர் அவனை அவன் தாயிக்கு ஒப்பிவித்தார்.
௰௬ ஆனால் எல்லாருக்கும் பயம் பிடித்து: மகா தீர்க்கதரிசி நம்மக்குள்ளே எழுந்திருந்தாரென்றும், பராபரன் தம்முடைய ஜனத்தைச் சந்தித்தாரென்றும் பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.
௰௭ இந்த அவருடைய வர்த்தமானம் யூதேயா முழுதுக்குந் தேசமெங்கும் பிரசித்தமாச்சுது.

¶ யோவான் அவரண்டைக்குத் தூதனுப்பினபோது அவர் சொன்ன வசனங்கள்.

௰௮ யோவானுக்கு அவனுடைய சீஷர் இதுகளெல்லாத்தையும் அறிவித்தார்கள் அப்போ * யோவான் தன் சீஷரில் இரண்டுபேரை அழைத்து, * மத். ௰௧, ௨—௯.
௰௯ யேசுவண்டைக்கனுப்பி: வருகிறவர் நீரோ,
அல்லது

அல்லது வேறொருத்தருக்குக் காத்திருக்கப்போமோ வென்று கேட்கச் சொன்னான்.

௨௰ அந்த மனுஷர் அவரண்டைக்கு வந்து: வருகிறவர் நீரோ, அல்லது வேறொருத்தருக்குக் காத்திருக்கப்போமோவென்று கேட்கும்படி யோவான் ஸ்நானகன் எங்களை உம்மண்டைக்கு அனுப்பினானென்றார்கள்.

௨௧ அந்நேரத்திலேதானே அவர் அநேகரை வியாதிகளும் உபாதி + களும் பொல்லா ஆவிகளும் நீங்கக் குணமாக்கி, அநேகங் குருடருக்குப் பார்வையருளினார்.

௨௨ யேசு அவர்களுக்குப் பிரதியுத்தாரமாக: குருடர் பார்வையடைகிறார்கள், சப்பாணிகள் நடக்கிறார்கள், குஷ்டரோகிகள் சுத்தமாகிறார்கள், செவிடர் கேட்கிறார்கள், மரித்தோர் எழுந்திருக்கிறார்கள், தரித்திரருக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படுகிறதென்று நீங்கள் பார்த்தவைகளையுங் கேட்டவைகளையும் யோவானுக்குப் போய் அறிவியுங்கோள்.

௨௩ என்னண்டத்திலே இடறல்படாதவன் பாக்கியவானென்றார்.

௨௪ யோவானுடைய தூதாக்கள் போனபோது, அவர் யோவானைக்குறித்து ஜனங்களோடே சொல்லத் துவக்கினதாவது: + வனாந்திரத்திலே எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், காற்றால் அசையும் நாணலையோ, + மத். ௰௧, ௭—௰௫.

௨௫ அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், மெல்லிய வஸ்திரங்களைத் தரித்த மனுஷனையோ, இதோ மகிமையான உடுப்புப் போட்டுச் செல்வத்தோடுமிருக்கிறவர்கள் அரசர் அரமனைகளிலே இருக்கிறார்கள்.

௨௬ அல்லது எதைப் பார்க்கப் புறப்பட்டீர்கள், தீர்க்கதரிசியையோ, ஆம், தீர்க்கதரிசியிலும் அதிகமானவனையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௭ + இதோ நான் உம்முடைய முகத்துக்கு முன்பாக நம்முடைய தூதனை அனுப்புகிறேன், அவன் உமக்கு முன்னே உமக்கு வழியை ஆயத்தம்பண்ணுவானென்றெழுதிக்கப்பட்டவனிவனே. + மலா. ௩, ௧.

௨௮ ஏனென்றால் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான் ஸ்நானகனைப் பார்க்கப் பெரிய தீர்க்கதரிசி ஒருவனுமில்லை, பராபரனுடைய ராட்சியத்திலே சிறியவனேவெனில் அவனைப் பார்க்கிலும் பெரியவனாயிருக்கிறான்.

௨௯ சகலசனமும் ஆயக்காரரும் யோவானைக் கேட்டபோது பராபரனை நீதியரென்று சொல்லி அவனுடைய ஞானஸ்நானத்தைப் பெற்றார்கள்.

௩௰ ஆனால் பரிசேயரும் சாஸ்திரிகளும் பராபரனுடைய ஆலோசனையைத் தங்களுக்குக் கேடாகத் தள்ளி, அவன் கையிலே ஞானஸ்நானம் பெறாதே போனார்களென்றார்.

௩௧ பின்னையும் கர்த்தர் சொன்னதாவது: + இந்தச் சந்ததியின் மனுஷரை ஆருக்கு ஒப்பிடுவேன், ஆருக்கு ஒப்பாயிருக்கிறார்கள். + மத். ௰௧, ௰௬—௰௯.

௩௨ சந்தைவெளியிலே உட்கார்ந்திருந்து: உங்க

ளுக்கு

க்கூத்தினோம்; நீங்கள் கூத்தாடவில்லை, உங்களுக்குப் புலம்பினோம் நீங்கள் அழவில்லை, என்று ஒன்றுக்கொன்று சாற்றிக்கூப்பிடுகிற பிள்ளைகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

௩௩ ஆக்குளெனில் யோவான ஸ்நானகன் வந்து, அப்பம் போசியாமலும் திராட்சப்பழரசங்குடியாமலுமிருந்தான், அதற்கு நீங்கள்: பிசாசை உடையவனாயிருக்கிறானென்கிறீர்கள்.

௩௪ மனுஷனுடைய குமாரன் வந்திருந்து போசித்துக் குடிக்கிறார், அதற்கு நீங்கள்: இதோ போசனப்பிரியனும் மதுபானம் பண்ணுகிற மனுஷன், ஆயக்காரருக்கும் பாவிகளுக்குஞ் சினேகிதனென்கிறீர்கள்.

௩௫ ஆனாலும் ஞானந் தன் பிள்ளைகளெல்லாராலும் நீதிவிளங்கப்பட்டுதென்றார்.

௩ அவர் மகாபாவியான ஒருஸ்திரீயின பாவங்களை மன்னித்தது.

௩௬ ஆனால் பரிசேயரில் ஒருத்தன் அவரைத் தன்னோடே போசனம் பண்ணவேண்டிக்கொண்டான், அவர் பரிசேயனுடைய வீட்டுக்குள் பிரவேசித்து, பந்தியிருந்தார்.

௩௭ இதோ, அவ்வூரிலிருக்கிற பாவியாகிய ஒருஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, * ஒரு பரிமளதயிலங்கொண்டுவந்து, *
யோவா. ௰௨, ௩.

௩௮ அவருடைய பாதங்களண்டையிலே பின்னாக அழுதுகொண்டு நின்று, அவருடைய பாதங்களைக் கண்ணீரினாலே நனைக்கத்துவக்கி, தன் தலைமயிர்களாலே துடைத்து, அவருடைய பாதங்களை முத்திசெய்து பரிமளதயிலத்தினாலே பூசினாள்.

௩௯ அவரை அழைத்திருந்த பரிசேயன் அதைக்கண்டபோதே தோவெனில: இவர் தீர்க்கதரிசியாயிருந்தாராகில், தம்மைத்தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் எப்படிக்கொத்தவளென்றும் அறிந்திருப்பார், ஏனெனில் * பாவியாயிருக்கிறாளென்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். * யரு. ௨.

௪௰ யேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: சீமோனே, உன்னுடனே சொல்லவேண்டிய ஒருகாரியமுண்டென்றார். சொல்லும், போதகரேயென்றான்.

௪௧ கடன்கொடுத்தொருத்தனுக்குக் கடன்பட்டிரண்டுபேரிருந்தார்கள், ஒருத்தன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசுங்கொடுக்கவேண்டியதாயிருந்தது.

௪௨ ஆனால் கொடுக்க அவர்களுக்கில்லாதபோது இருவருக்கும் மன்னித்துவிட்டான். இப்போதும் அவர்களில் எவன் அவனை அதிகமாய்ச் சினேகிப்பான், அதைச்சொல்லென்றார்.

௪௩ சீமோன் பிரதியுத்தாரமாக: எவனுக்கதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனென்று நினைக்கிறேனென்றான். அப்போ அவர் அவனுடனே: நிதானமாய்த்தீர்த்தாயென்றுசொல்லி,

ஸ்த

௪௪ ஸ்திரீயினிடத்தில் திரும்பி, சீமோனுடனே
சொன்னதாவது: இந்த ஸ்திரீயைக் காண்கிறாயே,
உன் வீட்டுக்குள் பிரவேசித்து வந்தேன், தண்ணீ
ரை என் கால்களுக்கு நீ தந்ததில்லை, இவளோ வெ
ன்றால் கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் த
லைமயிர்களாலே துடைத்தாள்.
௪௫ முத்தமொன்றும் நீ தந்ததில்லை; இவளோ வெ
ன்றால் நான் உள்ப்பிரவேசித்தது முதலாய் என் பாதங்க
ளை ஓயாமல் முத்திசெய்தாள்.
௪௬ எண்ணெயாலே என் தலையை நீ பூசினதில்
லை, இவளோ வென்றால் பரிமளதயிலத்தினாலே என் பா
தங்களைப் பூசினாள்.
௪௭ ஆனபடியினாலே உனக்குச் சொல்லுகிறேன்,
இவளுடைய மிகுவான பாவங்கள் மன்னிக்கப்பட்டு
து. ஏனென்றால் மிகுவாய்ச் சினேகித்தாளே, ஆனா
ல் எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன்
கொஞ்சமாய்ச் சினேகிக்கிறான் என்றார்.
௪௮ அவளுக்குச் சொன்னது: *உன் பாவங்கள் மன்
னிக்கப்பட்டதென்றார். *௫, ௨௰. ௨௧.
௪௯ அப்போது கூடப் பந்தியிருந்தவர்கள் தங்களுக்
குள்ளே: பாவங்களையும் மன்னிக்கிற இவன் ஆர்
என்று சொல்லத்தொடங்கினார்கள்.
௫௰ ஆனாலும் அவர் ஸ்திரீயுடனே: உன் விசுவாச
ம் உன்னை ரட்சித்தது, சமாதானத்தோடே போ
என்றார்.

## ௮ அதிகாரம்.

¶ கிறிஸ்து மறுபடியும் கலிலேயாவிலே
சுற்றிப்பயணம்பண்ணினது

பிற்பாடு சம்பவித்ததென்னவெனில் அவர் ஊரூருக்கும்
கிராமம் கிராமத்துக்கும் பயணம்பண்ணித் திரிந்து ப
ராபரனுடைய ராட்சியத்தைப் பிரசங்கித்து, சுவிசேஷ
மாய் அறிவித்தார்.
௨ பன்னிருவரும், பொல்லாத ஆவிகளுக்கும் வியா
திகளுக்கும் நீங்கலாக்கிக் குணமாக்கப்பட்ட சில ஸ்திரீ
களும், *ஏழு பிசாசுகள் நீங்கிப்போன மகதலே
னாளென்னப்பட்ட மரியாளும், *மாற்கு. ௰௬, ௯.
௩ ஏரோதேயின் காரியக்காரனாகிய கூசாவின் பெ
ண்சாதி யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆ
ஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்துகொண்டிருக்கி
ற மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்
தார்கள்.

¶ நாலுவித நிலத்தின் உவமை. மாற்கு ௪,
௧—௨௫.

௪ வெகு ஜனங்கள் சகல ஊர்களிலுமிருந்து அவரண்டை
யிலே வந்தவர்களோடே கூடினபோதோவென்றால், அ
வர் உவமையாய்ச் சொன்னதாவது:
௫ *விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்
பட்டான், அவன் விதைக்கையில், சிலது வழியரு
கே

தே விழுந்து மிதியுண்டது, ஆகாசத்தின் பறவைகளும் வந்து அதைப் பட்சித்துப் போட்டது. * மத். ௰௩, ௩—௨௩.

௬ வேறே சிலது கற்பாறையின்மேல் விழுந்தது, அது முளைத்தபின் அதற்கு ஈரமில்லாததினாலே உலர்ந்து போச்சுது.

௭ வேறே சிலது முள்ளுகளின் நடுவே விழுந்தது, முள்ளுகள்கூட முளைத்து அதை நெருக்கிப் போட்டது.

௮ வேறே சிலது நல்ல நிலத்திலே விழுந்தது; அது முளைத்து, ஒன்று நூறாய்ப் பலனைத் தந்ததென்றார். இதுகளைச் சொல்லி: கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவானென்று கூப்பிட்டார்.

௯ அவருடைய சீஷரோவென்றால் இந்த உவமானமென்னவென்று அவரைக் கேட்டார்கள்.

௰ அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராச்சியத்தின் ரகசியங்களை அறியுதல் உங்களுக்குக் கொடுக்கப்பட்டது, மற்றவர்களோவென்றால் கண்டுங் காணாமலுங் கேட்டும் உணராமலும் இருக்க அவர்களுக்கு உவமைகளாய் அளிக்கப்பட்டது.

௰௧ ஆனால் உவமையின் அற்தமாவது: விதை பராபரனுடைய வசனமாயிருக்குது.

௰௨ வழியருகே விதைக்கப்பட்டவர்களோ கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், பிறபாடு அவர்கள் விசுவாசித்து ரெட்சிக்கப்படாதபடிக்கு, பிசாசு வந்து வசனத்தை அவர்கள் இருதயத்திலிருந்தெடுத்துப் போடுது.

௰௩ கற்பாறையின்மேல் விதைக்கப்பட்டவர்களோவென்றால், கேட்கும்போது சந்தோஷத்துடனே வசனத்தை ஏற்றுக்கொள்ளுகிறார்கள், ஆனால் அவர்களுக்கு வேரில்லை, சிலகாலம் விசுவாசித்து, சோதினையின் காலத்திலே பின்வாங்குகிறார்கள்.

௰௪ முள்ளுகளில் விழுந்ததோவென்றால், இவர்கள் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள், ஆனாலே போய்க் கவலைகளினாலும் * ஐசுரியத்தினாலுஞ் சீவனத்தின் செல்விகங்களினாலும் நெருக்கிப் போட்டப்பட்டு, பலனுக்கு வராதிருக்கிறார்கள். * ௰௮, ௨௪. ௧. தீமோ. ௬, ௯.

௰௫ நல்ல நிலத்திலே விதைக்கப்பட்டதோவென்றால் இவர்கள் வசனத்தைக் கேட்டு, நன்றுஞ் சற்குணமுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே கனிகொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள். * கலாத். ௫, ௨௨.

௰௬ ஆனால் ஒருத்தனும் * விளக்கைக் கொளுத்தின போது அதை ஒரு பாத்திரத்தினாலே மூடான், கட்டிலின் கீழே வையான், உள்ளே போகிறவர்கள் வெளிச்சங் காண அதை விளக்குத்தண்டின் மேலே வைப்பான். * மத். ௫, ௰௫.

௰௭ ஏனென்றால் வெளியாக்கமாகாத அந்தரங்கமுமில்லை, அறியப்பட்டு வெளிக்குவராத மறைபொருளுமில்லை.

௰௮ ஆனபடியினாலே எப்படிக் கேட்கிறீர்களென்று பாருங்கோள், ஏனென்றாலவன் உள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்படும்; எவ

ல்லாதவனாயிருக்கிறானோ அவனிடத்திலே தனக்குண்டென்று அவனெண்ணுகிறதுமெடுத்துக்கொள்ளப்படுமென்றார்.

¶ அவர்தம்முடைய தாயுஞ்சகோதரரும் ஆரென்றறிவித்தது.

௰௯ அல்லாமல் * அவருடைய தாயுஞ்சகோதரரும் அவரண்டைக்கு வந்து, கும்புநிமித்தியமாய் அவரைச்சேர மாட்டாதிருந்தார்கள். * மத். ௰௨, ௪௬—௫௰.
௨௰ அப்போ உம்முடைய தாயாரும் உம்முடைய சகோதரரும் உம்மைப்பார்க்கவேணுமென்று வெளியிலே நிற்கிறார்களென்று அவருக்கறிவிக்கப்பட்டுது.
௨௧ அவரோவெனில் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாக: பராபரனுடைய வாக்குத்தனத்தைக் கேட்டு அதின்படி செய்கிறவர்களே என்னுடைய தாயும் என்னுடைய சகோதரருமாயிருக்கிறார்களென்றார். * யோவ. ௰௫, ௰௪.

¶ அவர் கடலைக் கொந்தளிப்பையமர்த்தினது. மத். ௮, ௨௩—௨௭. மாற்கு. ௪, ௩௫—௪௧.

௨௨ ஒருநாளிலே சம்பவித்ததேதென்றால் அவர் தம்முடைய சீஷரோடேகூட ஒருபடவிலேறி, அவர்களுடனே: சிறுகடலுக்கக்கரைக்குப் போவோமென்றார். அப்போ கரையைவிட்டோடினார்கள்.
௨௩ ஆனால் அவர்கள் படவோட்டத்துக்கையிலே நித்திரைபோனார். அப்போ கடலிலே சுழல்காத்தடிங்கி, தண்ணீரால் படகு நிரப்பப்படுகிறதினாலே அவர்கள் மோசமடைந்து,
௨௪ சேரவந்து: அய்யரே, அய்யரே, மடிந்துபோறோமென்று அவனை எழுப்பினார்கள். அவரோவெனில் எழுந்திருந்து, காத்தையுந் தண்ணீர் அலையையும் அதட்டினார். அப்போ அதுகளநின்றுபோய், அமைச்சலுண்டாச்சுது.
௨௫ அவரோவென்றால் அவர்களுக்கு: உங்கள் விசுவாசமெங்கேயென்றார். ஆனால் அவர்கள் பயந்து ஆச்சரியப்பட்டு, ஒருவரோடொருவர்: இவரெப்படிக்கொத்தவரோ, காத்துகளுக்குந் தண்ணீர்களுக்குங் குழுலாய்க்கற்பிக்கிறார், அதுகளவருக்குக் கீழ்ப்படியுதென்றார்கள்.

¶ அவர் பிசாசுகளைத் துரத்தி அதுகள் பன்னிகளுக்குள்ளப் போக உத்தாரங்கொடுத்தது. மத். ௮, ௨௮—௩௪. மாற்கு. ௫, ௧—௰.

௨௬ கலிலேயாவுக்கெதிரான கதரேனர்தேசத்திலே ஓடிச்சேர்ந்தார்கள்.
௨௭ அவர்கரையிலிறங்கிறபோதோ வெளியிலே அனேகநாளாய்ப்பிசாசுகள்பிடித்தவனும் வஸ்திரந்த

ரிக

ரீக்காலமாயும் வீட்டிலிராமலும் பிரேதக்கல்லறைக்
ளிலே தங்கிறவனுமான அந்தப்பட்டணத்து மனுஷனொ
ருத்தன் அவருக்கெதிராக வந்தான்.

௨௮ அவன் யேசுவைக் கண்டபோது, கூப்பிட்டுக்
கொண்டு, அவருக்கு முன்பாக விழுந்து, மகா சத்தத்
தோடே: உன்னதபராபரனுடைய சுதனாகிய யேசுவே,
எனக்கும் உமக்கும் என்ன, என்னை உபாத்திக்காதிருக்
க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேனென்றான்.

௨௯ அதேதென்றால் அவர் அசுத்த ஆவிக்கு, அந்தம
னுஷனைவிட்டு நீங்கக்கட்டளையிட்டார். ஏனென்றால் அநே
கநாளாய் அது அவனைப் பாய்ந்துபிடித்திருந்தது, அவ
னை சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டுண்டு
காவலாய்ப் பண்ணப்பட்டிருந்தும் கட்டுகளை முறித்துப்
போட்டு, பிசாசினாலே வனாந்திரங்களுக்குத் துரத்துண்டு
போனான்.

௩௰ யேசு அவனை: உன் பேரென்னவென்று கேட்
டார். அது: லேகியோனென்றது, அதேதென்றால்
அநேகம் பிசாசுகள் அவனுக்குள் புகுந்திருந்தது.

௩௧ அவைகள் தங்களைப் பாதாளத்திலே போகக்கற்பி
யாதபடிக்கு அவரை வேண்டிக்கொண்டது.

௩௨ அவ்விடத்திலே அநேகம் பன்றிகளு
டைய பெருந்திரளாய் மலையிலே மேய்ந்துகொண்டிருந்தது,
அதுகளுக்குள்ளே போகத்தங்களுக்கு உத்தாரங்கொடுக்க
அவரை வேண்டிக்கொண்டது. அதுகளுக்கு உத்தாரங்
கொடுத்தார்.

௩௩ அப்படியே பிசாசுகள் அந்தமனுஷனைவிட்டு
நீங்கி, பன்றிகளுக்குள்ளே புகுந்தது, அப்போ அந்தம
ந்தை உயர்ந்தமேட்டிலிருந்து கடலிலே பாய்ந்து அமி
ழ்ந்திப்போச்சுது.

௩௪ மேய்த்தவர்களோவென்றால் நடந்ததைக்
கண்டு ஓடிப்போய், பட்டணத்திலும் வெளிப்புறங்
களிலும் அறிவித்தார்கள்.

௩௫ அப்போ நடந்ததைப் பார்க்கும்படிக்குச் சன
ங்கள் புறப்பட்டு யேசுவினிடத்துக்கு வந்து, பிசாசுக
ள் விட்டுப்போனமனுஷன் யேசுவின் பாதத்தண்
டையிலே உடுக்கையுடுத்து, புத்தியடைந்திருக்கிற
தைக்கண்டு பயந்தார்கள்.

௩௬ பிசாசுகள் பிடித்திருந்தவன் எப்படி ரட்சிக்
கப்பட்டானென்று கண்டவர்களும் அவர்களுக்கு
அறிவித்தார்கள்.

௩௭ அப்போ கதரேனருடைய சுத்துதேசத்தின் திர
ளான ஜனமெல்லாம் அவரை, தங்களைவிட்டுப் போக வே
ண்டிக்கொண்டார்கள். ஏனென்றால் மகா பயம் பி
டித்திருந்தார்கள். அவரோ படவிலேறித் திரு
ம்பிப்போனார்.

௩௮ பிசாசுகள் விட்டுப்போனமனுஷன் அவருட
னே கூடப்போயிருக்க அவரை வேண்டிக்கொண்
டான், யேசுவோவென்றால் அவனை அனுப்பிவிட்டு:

௩௯ நீ உன் வீட்டுக்குத் திரும்பிப்போய், பராபரன்
உனக்கெத்தனையாய்ச்செய்தாரென்று விவரித்துச் சொ
ல்லென்றார். அவன் போய், யேசு தனக்கெத்தனையா
ய்ச்செய்தாரென்று பட்டணமெங்கும் பிரசங்கித்தான்.

௪௰ அவர்

¶ அவர் பெரும்பாடுள்ள ஸ்திரீயைச் சுகமாக்கினதும் யவீருவின் மகளை எழுப்பினதும். மத். ௯, ௰௮—௨௬. மாற். ௫, ௨௧. மு.

௪௰ பின்னையுஞ் சம்புவித்ததேதென்றால், யேசு திரும்பி வருகையில் கும்பு அவரை ஏற்றுக்கொண்டது. ஏனென்றால் எல்லாரும் அவருக்குக் காத்திருந்தார்கள்.

௪௧ ஜெபாலயத்துக்குத் தலைவனாயிருந்த யவீருஎன்ற நாமமுள்ள ஒருமனுஷன் வந்து. யேசுவின் பாதத்திலே விழுந்து, தன் வீட்டுக்குள் பிரவேசிக்க அவரை வேண்டிக்கொண்டான்.

௪௨ ஏனென்றால் அவனுக்குப் பன்னிரண்டு வயதுள்ள ஒரே ஒருகுமாரத்தியிருந்தாள். அவள் மரணாவஸ்தைப்பட்டாள். ஆனால் அவர் போகையிலும் கும்புகள் அவரை நெருக்கிற்று.

௪௩ அப்போ பன்னிரண்டு வருஷமாகப் பெரும்பாடுவியாதியுடனேயிருந்து, சீவனத்தையெல்லாம் பரியாரிகளுக்குச் செலவழித்து, ஒருவனாலுஞ் சுகமாக்கப்படக்கூடாதேபோன ஒரு ஸ்திரீ,

௪௪ பிறகே சேர்ந்துவந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள், உடனே அவளுடைய பெரும்பாடுவியாதி நின்றுபோச்சுது.

௪௫ அப்போ யேசு: என்னைத் தொட்டதார் என்றார். இல்லையாமென்றெல்லாருஞ் சொன்னபோது பேதுருவும் அவனுடனேகூட இருந்தவர்களும்: ஐயரே, கும்புகள் உம்மை நெருக்கி ஒடுக்கியும், என்னைத் தொட்டதார் என்கிறீரோ என்றார்கள்.

௪௬ யேசுவோவென்றால்: ஒருசனம் என்னைத் தொட்டதுண்டு, அதேதென்றால் என்னிலிருந்தொரு வல்லமை புறப்பட்டதை நானறிவேனென்றார்.

௪௭ ஆனால் ஸ்திரீதான் ஒளிந்திராததைக் கண்டு, நடுங்கிவந்து, அவர் முன்பாக விழுந்து, தான் அவரைத் தொட்ட முகாந்திரத்தையும் உடனே தான் சுகமானதையும் எல்லாச் சனத்துக்கு முன்பாக அவருக்கு அறிவித்தாள்.

௪௮ அவரோவென்றால் அவளுடனே: திடன்கொள், மகளே, உன் விசுவாசம் உன்னை ரட்சித்தது, * சமாதானத்தோடே போவென்றார். * ௭, ௫௰.

௪௯ அவர் இன்னம் பேசுகையில் ஜெபாலயத் தலைவன் வீட்டிலிருந்தொருத்தன் வந்து அவனுடனே: உம்முடைய குமாரத்தி மரித்தாள், போதகரை வருத்தப்படுத்தாதேயுமென்றான்.

௫௰ ஆனால் யேசு அதைக் கேட்டு, அவனுக்குப் பிரதியுத்தாரமாக: பயப்படாதே, விசுவாசித்தேயிரு அப்போ ரட்சிக்கப்படுவாளென்றார்.

௫௧ அவர் வீட்டுக்குள் பிரவேசிக்கிறபோதோவென்றால், * பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் பெண்ணுடைய தகப்பனையுந் தாயையுமேயொழிய வேறொருத்தரையும் உட்பிரவேசிக்க ஒட்டாதிருந்தார். * மத். ௰௭, ௧. ௨௬, ௩௭.

௫௨ எல்லாரும் அழுது அவளுக்காகத் துக்கங்

கொண்

கொண்டாடினார்கள், அவரோவென்றால்: அழாதேயுங்கோள், அது மரித்திராமல் நித்திரை பண்ணுதென்றார்.

௫௩ ஆனால் மரித்ததென்றவர்கள் அறிந்து அவனை நகைத்தார்கள்.

௫௪ அவரோவென்றால் எல்லாரையும் வெளியே துரத்தி, அதின் கையைப்பிடித்து: பிள்ளையே, எழுந்திருவென்று சத்தமிட்டார்.

௫௫ * அப்போ அதின் ஆவி திரும்ப வந்தது, உடனே அது எழுந்திருந்தது, அதுக்குச் சாப்பாடு கொடுக்கக் கட்டளையிட்டார். * ௭, ௰௫. யோவா. ௰௧, ௪௪.

௫௬ அதின் தாய் தகப்பன் விஸ்மயித்தார்கள், அவரோவென்றால் நடந்ததை ஆரோடுஞ் சொல்லாதிருக்க அவர்களுக்குக் கற்பித்தார்.

## ௯. அதிகாரம்.

¶ அப்போஸ்தலர்களழைத்துக் கனுப்பப்பட்டது. மத். ௰, ௧. மாற்கு. ௬, ௭—௰௩.

அவர் தம்முடைய பன்னிரண்டு சீஷரைக் கூட்டி வரவழைத்து, சகல பிசாசுகளின்மேலும் வியாதிகளைக் குணமாக்கவும், அவர்களுக்கு வல்லமையையும் அதிகாரத்தையுங் கொடுத்து,

௨ பராபரனுடைய இராச்சியத்தைப் பிரசங்கிக்கவும், பிணியாளிகளைச் சொஸ்தமாக்கவும் அவர்களை அனுப்பி,

௩ அவர்களுடனே சொன்னதாவது: வழிக்குத் தடிகளையாகிலும் பையையாகிலும் அப்பத்தையாகிலுங் காசையாகிலும் ஒன்றையும் எடுத்துக் கொள்ளாதேயுங்கோள், இரண்டு அங்கியையும் வைத்திராதேயுங்கோள்.

௪ எந்த வீட்டிலே பிரவேசித்தீர்களோ, அங்கே தங்கி, அங்கேயிருந்து புறப்படுங்கோள்.

௫ * எவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளார்களோ, அந்த ஊரை நீங்கள் விட்டுப் புறப்பட்டு, அவர்கள் மேல் சாட்சிக்காக உங்கள் கால்களின் தூளை உதறிப்போடுங்கோளென்றார். * அ, ௩௭.

௬ அவர்கள் புறப்பட்டு, கிராமங்களுக்குப் போய்த்திரிந்து, எங்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, குணமாக்கினார்கள்.

௭ * ஆனால் காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோதே அவராலே செய்யப்பட்டதெல்லாத்தையுங் கேட்டு, சிலபேரால்: யோவான் மரித்தோரிலிருந்தெழுந்தானென்றும், * மத். ௰௪, ௧. ௨.

௮ சிலபேராலே: எலியா காணப்பட்டானென்றும், வேறே பேராலே: பழைய தீர்க்கதரிசிகளிலொருத்தன் உயிர்த்தெழுந்தானென்றுஞ் சொல்லப்பட்டபடியினாலே அயம்பட்டு:

௯ யோவானை நான் சிரச்சேதம் பண்ணினேனே, ஆனால் இப்படிக்கொத்ததுகளென்னுக்குக் கேழ்வியாகுதே,

அவன்,

இவன் யாரோ என்று சொல்லி, அவரைப் பார்க்கத் தேடினான்.

¶ கிறிஸ்து வனாந்தரத்தில் ஐயாயிரம் ஜனங்களுக்குப் போசனங்கொடுத்தது. மத். ௰௪, ௰௩—௨௩. மாற். ௬, ௩௰—௪௪. யோவா. ௬, ௧—௰௫.

௰ அப்போஸ்தலர் திரும்ப வந்து, தாங்கள் செய்ததெல்லாவற்றையும் அவருக்கு விவரித்தார்கள், அப்பொழுதவர் அவர்களைக் கூட்டிக்கொண்டு, பெத்சாயிதா என்னப்பட்ட பட்டணத்தின் வனாந்திரமான ஒரு இடத்துக்குத் தனித்துப் போனார்.

௰௧ ஜனங்கள் அதை அறிந்து அவருக்குப் பின்சென்றார்கள். அவர்களைச் சேர்த்துக்கொண்டு, பராபரனுடைய ராச்சியத்தைக் குறித்து அவர்களுக்குச் சொல்லி, சொஸ்தமாகத் தேவையானவர்களைச் சொஸ்தமாக்கினார்.

௰௨ ஆனால் பொழுது சாயத்துவக்கினபோது, அப்பொழுது பன்னிருவரும் அவருக்குச் சேர்ந்துவந்து, அவருடனே: சுற்றுமிருக்கிற ஊர்களிலேயும் கிராமங்களிலேயும் போய்த் தங்கவும் போசனஞ் சம்பாதித்துக்கொள்ளவும் அவர்களை அனுப்பிவிடும், ஏனென்றால் இங்கே வனாந்திர இடத்திலே இருக்கிறோமென்றார்கள்.

௰௩ அவரோ அவர்களுடனே: நீங்கள் அவர்களுக்குச் சாப்பாடு கொடுங்கோளென்றார். ஆனால் அவர்கள்: நாங்கள் போய் இந்தச் சனத்துக்கெல்லாம் ஆகாரங்களைக் கொண்டாலேயொழிய, எங்கள் கையிலே அய்ந்தப்பத்துக்கும் இரண்டு மீனுக்கும் அதிகமில்லையென்றார்கள்.

௰௪ ஏனென்றால் ஏறக்குறைய அய்யாயிரம் மனுஷர் இருந்தார்கள், ஆனால் அவர் தம்முடைய சீஷருடனே: பந்திக்கைம்பதாக அவர்களை உட்காரச் சொல்லுங்கோளென்றார்.

௰௫ அப்படியே செய்தார்கள், எல்லாரும் உட்கார்ந்தார்கள்.

௰௬ அப்பொழுதவர் அந்த அய்ந்தப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்துக்கொண்டு வானத்தை அண்ணாந்து பார்த்து, அதுகளை ஆசீர்வதித்து, பிட்டு, சனத்துக்கு முன்னே வைக்க, சீஷர்களுக்குக் கொடுத்தார்.

௰௭ எல்லாரும் போசித்து, திருப்தியடைந்தார்கள், அவர்களுக்கு மீந்தது துணிக்கைகளால் பன்னிரண்டு கூடை எடுக்கப்பட்டது.

¶ அவர் தம்மைக் குறித்துச் சீஷருடனே சம்பாஷித்தது. மத். ௰௬, ௰௩—௨௩. மாற்கு ௮, ௨௭—௩௩.

௰௮ பின்னையுஞ் சம்பவித்ததென்னவென்றால், அவர் தனியே செபம்பண்ணிக்கொண்டிருக்கையிலே அவருடைய சீஷர் அவருடனே கூடேயிருந்தார்கள். அப்பொழுதவர்: சனங்கள் என்னை ஆரென்கிறார்களென்று அவர்களைக் கேட்டார்.

௰௯

௰௯ அவர்கள் பிரத்தியுத்தரமாக: யோவானஸ்நானனென்றும், வேறேசிலர் எலியாவென்றும், வேறேசிலரோவென்றால் பழயதீர்க்கதரிசிகளில் ஒருத்தன் உயிர்த்தெழுந்தானென்றுஞ் சொல்லுகிறார்களென்றார்கள்.
௨௰ அப்போதவர்களுடனே: நீங்களோவென்னை ஆரென்கிறீர்களென்றார். பேதுரு பிரத்தியுத்தரமாக: பராபரனுடைய கிறீஸ்துவென்றான்.
௨௧ ஆனாலவர், இதைஒருத்தருக்குஞ் சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கெட்டியாய்க் கற்பித்து:
௨௨ மனுஷனுடைய குமாரன் அநேகம்பாடுபடவும், மூப்பராலும் பிரதான ஆசாரியர்களாலும் வேதபாரகராலும் ஆகாதவனென்று தள்ளுண்டு கொல்லப்படவும், மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டியதென்றார்.

¶ அவர் தம்மைப் பின்செல்லப் புத்திசொன்னது.
மத. ௰௬, ௨௪. ழு. மற்கு. ௮, ௩௪. ழு.

௨௩ ஆனால் எல்லாரோடும் அவர் சொன்னதாவது: ஒருவன் என்பிறகே வரமனதாயிருந்தால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு என்பின்செல்லக்கடவான்.
௨௪ ஏனெனில் எவன் * தன் சீவனை ரட்சித்துக்கொள்ளமனதாயிருக்கிறானோ அவன் அதை இழந்துபோவான், எவன் தன் சீவனை என்னிமித்தியமாக இழந்துபோவானோ அவன் அதை ரட்சித்துக்கொள்ளுவான்.
* யோவா. ௰௨, ௨௫.
௨௫ ஏனென்றால் மனுஷன் லோகமுழுதையும் ஆதாயப்படுத்திக்கொண்டு, தன்னைத்தான் இழந்து சேதப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன.
௨௬ ஏனென்றால் எவனென்னைக்காகவும் என்வசனங்களுக்காகவும் வெட்குகிறானோ, அவனுக்காக மனுஷனுடைய குமாரன் தமக்கும் பிதாவுக்கும் பரிசுத்த தூதருக்கும் இருக்கிற மகிமையோடே வரும்போது, வெட்குவார்.
௨௭ ஆனால் உங்களுக்கு மெய்யாகச் சொல்லுகிறேன், பராபரனுடைய ராட்சியத்தைப் பார்க்குமட்டும் மரணத்தை ருசிபாராத சிலர் இங்கே நிற்கிறவர்களிலிருக்கிறார்களென்றார்.

¶ அவர் ஒருபர்வதத்தின்மேல் மகிமைப்பட்டது. மத. ௰௭, ௧—௯. மற்கு. ௯, ௨—௯.

௨௮ இந்தவார்த்தைகளுக்குப் பிற்பாடு ஏறக்குறைய எட்டுநாளானபோது சம்பவித்ததேதென்றால், அவர் பேதுருவையும் யோவானையும் யாக்கோபையுங் கூட்டிக்கொண்டு. * ஜெபம்பண்ண ஒருபர்வதத்தில் ஏறினார். * ௬, ௰௨.
௨௯ அவர் ஜெபம்பண்ணுகையில் அவருடைய முகரூபமாறி, அவருடைய உடுப்பு வெண்மையாகி, மின்னிக்கொண்டிருந்தது.

௩௰ இதோ மோசேயும் எலியாவுமாகிய இரண்டு
புருஷர் அவருடனே பேசினார்கள்.
௩௧ இவர்கள் மகிமையுடனே காணப்பட்டு, அவ
ர் எருசலேமிலே நிறைவேறப்போகிற அவருடை
ய முடிவைச் சொன்னார்கள்.
௩௨ ஆனாலும் பேதுருவும் அவனுடனே கூட இருந்த
வர்களும் பாரநித்திரை அடைந்தார்கள். அவர்கள்
விழித்துக்கொண்டபோதோவென்றால் அவருடைய
மகிமையையும் அவரண்டை நின்ற இரண்டு புருஷரை
யுங்கண்டார்கள்.
௩௩ அப்போ சம்பவித்ததென்னவென்றால், இவர்கள்
அவரை விட்டுப் பிரிகையில், பேதுரு யேசுவுடனே:
ஐயரே, நாமிங்கேயிருக்கிறது நல்லது, நாங்கள்
மூன்று கூடாரங்களைப் போடுவோம், ஒன்று உம
க்குமொன்று மோசேக்குமொன்று எலியாவுக்குமொ
ன்று, தான் பேசுகிறதின்னதென்று அறியாமல் சொ
ன்னான்.
௩௪ இதுகளை அவன் சொல்லுகிறபோதோவென்
றல், ஒரு மேகம் வந்து அவர்கள் மேல் நிழலிட்டது. அ
வர்கள் மேகத்துக்குள் பிரவேசிக்கையில் இவர்க
ள் பயந்தார்கள்.
௩௫ அப்போ மேகத்திலிருந்து: * இவர் நம்முடை
ய நேசமுள்ள குமாரனாயிருக்கிறார், இவர் சொல் கே
ளுங்களென்கிற சத்தமுண்டாச்சுது. * ௩, ௨௨.
௩௬ அந்தச் சத்தமுண்டாகையில் யேசு ஒருத்தரே கா
ணப்பட்டார். ஆனால் அவர்கள் தாங்கள் கண்டதுக
ளிலொன்றையும் அந்நாட்களிலொருவருக்கும் அறி
வியாமல் மவுனமாயிருந்தார்கள்.

¶ அவர் சந்திரரோகியானொரு பிள்ளைக்குண
மாக்கினது. மத். ௰௭, ௰௪—௨௩. மாற்கு.
௯, ௰௪—௩௨.

௩௭ மறுநாளிலே சம்பவித்ததென்னவென்றால், அவர்
கள் பருவதத்திலிருந்திறங்கினபோது வெகுகும்பு அ
வருக்கெதிர்க்கொண்டுவந்தது.
௩௮ இதோ கும்பிலே ஒரு மனுஷன் கூப்பிட்டுச் சொ
ன்னதாவது: போதகரே, என் மகனை நோக்கிப்பா
ர்க்க உம்மை வேண்டிக்கொள்ளுகிறேன், அவனெ
னக்கொரே பிள்ளையாயிருக்கிறான்.
௩௯ இதோ ஆவி அவனைப் பிடிக்குது, உடனே அல
றுகிறான், அது அவனை நுரைதள்ளி அலைக்கழித்து அவ
னைக் கசக்கின பின்பும் அவனை விட்டு நீங்க அரிதாயிரு
க்குது.
௪௰ அதைத் துரத்திவிட உம்முடைய சீஷரை வேண்டிக்
கொண்டேன், அவர்களாலே கூடாதே போச்சுதெ
ன்றான்.
௪௧ யேசு பிரத்தியுத்தரமாக: விசுவாசமில்லாத
மாறுபாடான சந்ததியே, எந்தமட்டும் உங்களண்
டையிலிருந்து உங்களைப் பொறுத்திருப்பேன், உன்
மகனை இங்கே கொண்டுவாவென்றார்.
௪௨ அவன் சேர்ந்து வருகிறபோது பிசாசு அவனை
நொறுக்கி அலைக்கழித்தது. ஆனால் யேசு அசுத்த ஆவியை
அதட்டி,

அதட்டி, பிள்ளையைக் குணமாக்கி, அவனை அவனத்
தகப்பனுக்கு ஒப்புவித்தார்.
௪௩ அப்பொழுதெல்லாரும் பராபரனுடைய மகத்து
வத்தைக் குறித்துப் பிரமித்தார்கள். யேசு செய்த எல்லா
து[illegible]காகவும் அனைவரும் ஆச்சரியப்படுகிறபோ
தேயென்றால் அவர் தம்முடைய சீஷர்களுடனே:
௪௪ நீங்கள் இந்த வார்த்தைகளை உங்கள் காதுகளி
லே வையுங்கோள், ஏனென்றால் மனுஷனுடைய குமா
ரன் * மனுஷரின் கைகளிலே ஒப்புக்கொடுக்கப்பட
ப்போகிறாரென்றார். * ௰௮, ௩௨—௩௪.
௪௫ அவர்களோவென்றால் இந்த வார்த்தையை அறி
யாமற்போனார்கள், அது அவர்களுக்குத் தெரியாத
படி மறைபொருளாயிருந்தது, இந்த வார்த்தையைக்
குறித்து அவரைக் கேட்கப் பயமுமாயிருந்தார்கள்.

¶ சீஷரிடத்திலே கண்ட பெருமையானநி
னைவு. மாற்கு: ௯, ௩௩—௪௧.

௪௬ பின்பு தங்களிலே பெரியவனாயிருப்பவனாரெ
ன்கிற சிந்தனை அவர்களுக்குள்ளே வந்தது.
௪௭ யேசுவோவென்றால் அவர்கள் இருதயத்தின்
சிந்தனையைக் கண்டு, ஒரு குழந்தையை எடுத்து அதைத்
தம்மண்டை நிறுத்தி, * மத் ௰௮, ௨. ௩.
௪௮ அவர்களுக்குச் சொன்னதாவது: எவனாகிலும்
இந்தக் குழந்தையை என் நாமத்துக்காக ஏற்றுக்கொ
ண்டாலென்னை ஏற்றுக்கொள்ளுகிறான், எவனாகி
லும் என்னை ஏற்றுக்கொண்டாலென்னை அனுப்
பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான். ஏனென்றால் * உ
ங்களெல்லாரிலுஞ் சிறியவனாயிருக்கிறவனே பெரி
யவனாயிருப்பானென்றார். * ௰௪, ௰௧.
௪௯ யோவானப்பிரதியுத்தரமாக: ஐயரே, உ
ம்முடைய நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துகிற ஒ
ருத்தனை நாங்கள் கண்டு, அவன் எங்களுடனேகூட
உம்மைப் பின்செல்லாதபடியினாலே அவனுக்குத் த
டை சொன்னோமென்றான்.
௫௰ யேசு அவனுடனே: தடை சொல்லாதேயுங்
கோள், ஏனென்றால் நமக்கு விரோதமாயிராதவன் ந
மக்கானவனாயிருக்கிறானென்றார்.

¶ விடுதிகொடாதவர்கள் பேரிலே சீஷருக்
குண்டான எரிச்சல்

௫௧ அவரெடுபட்டுப்போம் நாள் சகலநிறை
வேறுகிறபோதோவென்றால் அவர் யெருசலேமுக்கு
ப்போகத் தம்முகத்தைத் திருப்பி,
௫௨ தம்முடைய முகத்துக்கு முன்னகத் தூதர்களை அ
னுப்பினார். அவர்கள் போய் அவருக்கு விடுதியை ஆயித்
தப்படுத்த, சமாரியருடைய ஒருக்கிராமத்திலே பிர
வேசித்தார்கள்.
௫௩ ஆனாலவர்கள் அவரை ஏற்றுக்கொண்டபடி
தில்லை, அதேனென்றால் அவருடைய முகம் யெருசலே
முக்குப் போகிறதாயிருந்தது.

௫௪ அவருடையசீஷராகியயாக்கோபுமயோவா னுமதைக்கணடபோதேவென்ல: ஆண்டவ ரே, * எலியாசெய்ததுபோலேவானத்திலி ருநது அக்கினியிறஙகவும அவர்களையழிக்கவுங சொலலடமககுசசித்தமுணடோவென்றார்கள். * உ. ராச. க, ய, யஉ.

௫௫ ஆனால அவர்திருமபி அவர்களை அதட்டி: நீங களெநதஆவியினசமமநதமென றறியீர்களோ, * மத. யக, உசு.

௫௬ ஏனென்றால மனுஷனுடைய குமாரன மனுஷ ருடையஆததுமாஙகளைககெடுககவலல, * ரட்சிக ககவநதாரெனறார். அபபோவேறொருகிராமததுக குபபோனார்கள். * யோவ. ௩, ௰௭.

¶ தமமைபபின்செலலுகிறததுககாகக்றிஸ துசிலருககுசசொனனநியாயஙகள.

௫௭ ஆனால அவர்களவழியிலேபோகையிலசமபு விததததெனனவெனறால, ஒருதன * அவருடனே: ஆண்ட வரே, நீர்போறஎவவிடததுமஉமமைபபினசெ லலுவேனெனறான. * மத. ௮, ௰௯—௨௨.

௫௮ யேசுஅவனுடனே: நரிகளுககுககுழி களுமஆகாசததுபபறவைகளுககுககூடுகளுமுணடு, ஆனா லமனுஷனுடையகுமாரனுககுததலைசாயககஇடமில லையெனறார்.

௫௯ அவர்வேறொருததனுககு: என்னைப்பினசெல லெனறார். அவனோவென்ல: ஆண்டவரே, முநதி நானபோயஎனதகபபனை அடககமபணணுகிறதுக குததாரஙகொடுமெனறான.

௬௦ ஆனாலயேசுஅவனுடனே: மரிததோர்தஙக ளுடையமரிததோரை அடககமபணணடடும, நீ யோவென்லபோயபராபரனுடைய ராட்சியததை அறிவியெனறார்.

௬௧ வேறொருததனும: ஆண்டவரே, உமமைபபி னசெலலுவேன, ஆனாலமுநதிஎனவீட்டிலிருககிறவ ர்களுககுசசொலலஅனுபபிவிததுககொளளுகிறதுக குததா ரஙகொடுமெனறான.

௬௨ யேசுவோவென்லஅவனுடனே: கலபபையி னமேலேதனகையைபபோடடு, * பினனுககுபபார்க கிறவனொருததனுமபராபரனுடையராட்சியததுககாகாவ னலலவெனறார். * பில. ௩, ௰௪.

## ௰. அதிகாரம்.

¶ க்றிஸதுவேறேளுபதுசீஷரைய னுபபியதது.

இதுகளுககுபபிறபாடுக்றதர் * வேறேளுபதுபே ரைககுறிததுத, தாமவரபபோறஎலலாபபட டணததுககுமஙகுமஅவர்களைததமமுடைமுனத துககுமுனனேரெணடுரெணடுபேராயஅனுபபி,

௨ அவர்களுடனேசொனனதாவது: * அறுபபோ

மிகுதி

மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம், ஆகையினாலே அறுப்புக்கெச்சமானனானவனோடே அறுப்புக்கு வேலையாட்களை அனுப்ப அவரை * * வேண்டிக்கொள்ளுங்கோள். * மத். ௯, ௩௭. ௩௮. * * ௨. தெச. ௩, ௧.

௩ போங்கோள், இதோ * நான் உங்களை ஆட்டுக்குட்டிகளைப்போலே ஓநாய்கள் நடுவே அனுப்புகிறேன். * மத். ௰, ௧௬.

௪ * வட்டுவத்தையாகிலும் பையையாகிலும், பாதரட்சைகளையாகிலுஞ் சுமக்காதேயுங்கோள், வழியிலே ஒருத்தரையும் வினவாதேயுங்கோள். * ௯, ௩. மத். ௰, ௯—௰.

௫ எந்த வீட்டுக்குள் பிரவேசிக்கிறீர்களோ, அங்கே முந்தி: இந்த வீட்டுக்குச் சமாதானமென்று சொல்லுங்கோள்.

௬ அங்கே சமாதானத்தின் பிள்ளையிருந்தால், அவன்மேலே உங்கள் சமாதானம் வந்து தங்கும், இல்லாதிருந்தால் அது உங்களிடமாய்த் திரும்பும்.

௭ அந்த வீட்டிலே தானே நீங்களிருந்து, அவர்களுக்குண்டானதுகளைப் போசித்துக் குடியுங்கோள், ஏனென்றால் வேலையாளதன் கூலிக்குப் பாத்திரவானாயிருக்கிறான். ஒரு வீட்டை விட்டு மற்றொரு வீட்டுக்குப் போகாதேயுங்கோள்.

௮ எந்தப் பட்டணத்திலாகிலும் நீங்கள் பிரவேசித்து அவர்கள் உங்களை ஏற்றுக்கொண்டால் உங்களுக்கு முன் வைத்ததுகளைப் போசித்து,

௯ அதிலிருக்கிற பிணியாளிகளைக் குணமாக்கி: பராபரனுடைய ராச்சியம் உங்களுக்குக் கிட்டி வந்ததென்று அவர்களுக்குச் சொல்லுங்கோள்.

௰ * ஆனாலும் எந்தப் பட்டணத்திலாகிலும் நீங்கள் பிரவேசித்து அவர்கள் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அதின் வீதிகளிலே நீங்கள் புறப்பட்டு, * ௯, ௫.

௰௧ எங்களுக்கொட்டின உங்கள் பட்டணத்தின் தூளையும் உங்களுக்கெதிராகத் துடைத்துப்போடுகிறோம், ஆனாலும் பராபரனுடைய ராச்சியம் உங்களுக்குச் சமீபமாயிருந்ததென்கிறதை அறியுங்கோள் என்று சொல்லுங்கோள்.

௰௨ அந்தப் பட்டணத்தைப் பார்க்கச் சோதோமூராருக்கு அந்நாளிலே எளிதமாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௰௩ * கோறாசீனே, உனக்கையோ, பெத்சாயிதாவே, உனக்கையோ. ஏனென்றால் உங்களில் சம்பவித்த வல்லமைகள் தீருவிலுஞ் சீதோனிலுஞ் சம்பவித்திருந்ததானால், பூர்வத்திலே இரட்டிலுஞ் சாம்பலிலும் உட்கார்ந்து குணப்படுவார்கள். * மத். ௰௧, ௨௧—௨௪.

௰௪ ஆனாலும் நியாயத்தீர்ப்பிலே உங்களைப் பார்க்கத் தீருவுக்குஞ் சீதோனுக்கும் எளிதமாயிருக்கும்.

௰௫ வானபரியந்தம் உயர்ந்த கப்பர்நாகூமே, நீ பாதாளபரியந்தந் தாழ்த்தப்படுவாய்.

௰௬ உங்களைக் கேட்கிறவன் என்னைக் கேட்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் * என்னை

அசட்டை

அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணு கிறவனோ என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணு கிறானென்றார். * மத். ௰, ௪௰. யோவ. ௰௩, ௨௰.

¶ அவர்கள் திரும்பிவந்தது.

௰௭ ஆனால் அந்த எழுபதுபேர் சந்தோஷத்துடனே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படியுதே என்றார்கள்.

௰௮ அவரோவெனில் அவர்களுக்குச் சொன்னதாவது: சாத்தான் வானத்திலிருந்து மின்னலைப்போல விழுகிறதைக் கண்டேன்.

௰௯ இதோ * சர்ப்பங்கள்மேலும் தேள்கள்மேலும் சத்துருவினுடைய சகல வல்லமையின்மேலும் மிதிக்கத்தக்க அதிகாரங்கொடுக்கிறேன், ஒன்றும் உங்களைச் சேதப்படுத்தாது. * மாற். ௰௬, ௨௰. சங்கீ. ௯௧, ௰௩.

௨௰ ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதுக்கே நீங்கள் சந்தோஷப்படாமல்; * உங்கள் நாமங்கள் பரமண்டலங்களில் எழுதியிருக்கிறதுக்கே சந்தோஷப்படுங்கோளென்றார், அபி. ௩, ௫.

௨௧ அந்நேரத்திலே யேசு ஆவியிலே களிகூர்ந்து சொன்னதாவது: பிதாவே, வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே, இதுகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினதுக்காக உம்மை மகிமைப்படுத்துகிறேன், ஆம். பிதாவே, அப்படியே உமக்கு முன்பாகப் பிரியமாயிருந்தது. * மத். ௰௧, ௨௫. டிற.

௨௨ * எல்லாமென் பிதாவினாலே எனக்கொப்புக் கொடுக்கப்படிருக்குது, பிதாத்தவிர ஒருத்தனுங் குமாரனை இன்னானென்றறியான், குமாரனுங் குமாரன் ஆருக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனுந்தவிர ஒருத்தனும் பிதா ஆரென்றும் அறியான். * மத். ௨௮, ௰௮.

௨௩ அவர் சீஷரண்டைக்குத் திரும்பி, தனித்துச் சொன்னதாவது: நீங்கள் பார்க்கிறதுகளைப் பார்க்குங் கண்கள் பாக்கியமுள்ளதுகள்.

௨௪ ஏனெனில் * அநேகந் தீர்க்கதரிசிகளும் ராசாக்களும் நீங்கள் பார்க்கிறதுகளைக் காணவும் நீங்கள் கேட்கிறதுகளைக் கேட்கவும் ஆசையாயிருந்துங் காணாமலுங் கேளாமலும் போனார்களென்றுங்களுக்குச் சொல்லுகிறேனென்றார். * க. பே. ௧, ௰—௰௨.

¶ ஒருசாஸ்திரிக்கு நித்தியசீவனைச்சுத
ந்தரிக்கக்கொள்ளச்செய்யவேண்டிய
தேதென்றதைக்கேட்டவனுக்கு
னல்லக்கேட்டதுக்குச்சிலுத்
துச்சொன்னவுத்தரவு.

௨௫ இதோ ஞாயசாஸ்திரி ஒருத்தன் எழுந்திருந்து: போதகரே, நானென்ன செய்து நித்தியசீவனைச் சுதந்தரிக்கக்கொள்ளுவேனென்று அவரைச் சோதித்தான்.

௨௬ அவரோவெனில் அவனுடனே: ஞாயப்பிரமா

மாணத்திலே என்ன எழுதியிருக்குது, எப்படி வாசிக்கிறாயென்றார்.

௨௭ அவன் பிரத்தியுத்தரமாக: உன் பராபரனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும் உன் முழு ஆத்துமத்தோடும் உன் முழுப் பெலத்தோடும் உன் முழுச் சிந்தையினோடும் உனக்குக் கூடவுள்ளவனை உன்னைப்போலேயும் சிநேகிப்பாயாக என்று எழுதியிருக்குதென்றான்.

௨௮ அவர் அவனுடனே: நிதானமாய் மறுஉத்தரஞ் சொன்னாய், இப்படிச் செய், அப்போ பிழைப்பாயென்றார்.

௨௯ அவனோ தன்னைத் தான் நீதிமானாக்க மனதாய் யேசுவுடனே: ஆனால் என்னக் கடுத்தவனாரென்றான்.

௩௰ யேசு பிரத்தியுத்தரங் கொடுத்துச் சொன்னதாவது: ஒரு மனுஷன் யெருசலேமிலிருந்து எரிகோவுக்கு இறங்கிப்போய், கள்ளர் கையிலே அகப்பட்டான், அவர்கள் அவனை உரிந்துகொண்டு காயப்படுத்தி, குத்துயிராக விட்டுப்போனார்கள்.

௩௧ ஆனால் தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியிறங்கி வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௨ அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான்.

௩௩ ஆனால் சாமாரியனொருத்தன் வழிப்பயணம் பண்ணி, அவனண்டை வந்து அவனைக் கண்டு மனதுருகி,

௩௪ சேர்ந்து, அவனுடைய காயங்களிலே எண்ணெயும் திராட்சப்பழரசமும் வார்த்து, அதுகளைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின் மேலே ஏற்றி அவனை ஒரு சத்திரத்திலே கொண்டுபோய், அவனைப் பராமரித்து,

௩௫ மறுநாளிலே புறப்படும்போது, ரெண்டு வெள்ளிக்காசை எடுத்து மடத்தானுக்குக் கையிலே கொடுத்து, அவனுடனே: இவனைப் பராமரித்துக்கொள், அதிகமாய் நீ ஏதாகிலுஞ் செலவழித்தால் நான் திரும்ப வருகையிலே உனக்குக் கொடுப்பேனென்றான்.

௩௬ இப்போது கள்ளர் கையிலே அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேர்களிலே ஆர் அடுத்தவனாக உனக்குக் காணுதென்றார்.

௩௭ அவன்: இரக்கத்தை அவனிடத்திலே செய்தவனென்றான். ஆகையால் யேசு அவனுடனே: நீ போய், நீயும் அந்தப்படி செய்யென்றார்.

¶ மற்தாள் வெகுவூழியஞ் செய்யுதலுக்காகக் கவலைப்பட்டதுக்கு அவர் சொன்னவாறதை.

௩௮ பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால் அவர்கள் பயணம் போகையிலே அவர் ஒரு கிராமத்துக்குள் பிரவேசித்தார், ஆனால் * மற்தாளென்கிற பேர்கொண்ட ஒரு ஸ்திரீ அவரைத் தன் வீட்டிலேற்றுக்கொண்டாள். * யோவ. ௰௧, ௧.

௩௯ அவளுக்கு மரியாளென்னப்பட்ட ஒரு சகோதரிக்குந்

ரிருந்தாள், அவள் யேசுவினுடைய பாதத்தண்டே உட்கார்ந்துகொண்டிருந்து அவருடைய வசனத்தைக் கேட்டாள்.

௪௰ மற்தாளோவென்னில் வெகு ஊழியத்தைச் செய்யுதலுக்காக அலுவலாயிருந்தாள், அவள் வந்து: ஆண்டவரே, என் சகோதரி என்னை மாத்திரம் ஊழியஞ்செய்யவிட்டிருக்கிறது உமக்குக் கவலையில்லையோ, அவள் எனக்கொத்தாசை பண்ண அவளுக்குச் சொல்லுமென்றாள்.

௪௧ ஆண்டவர் அவளுக்குப் பிரதியுத்தரமாக: மற்தாளே, மற்தாளே, நீ அநேக காரியங்களுக்காகக் கவலைப்பட்டுக் கலங்குகிறாய்.

௪௨ ஆனால் * ஒன்றே தேவை, மரியாளோவென்னில் தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாளென்றார். * மத். ௬, ௩௩.

## ௰௧. அதிகாரம்.

௧ செபம்பண்ணுவதற்காகக் கற்பித்துச் சொன்ன அறிவு.

பின்னையுஞ் சம்பவித்ததேதென்றால் அவரொரு இடத்திலே செபம்பண்ணிக்கொண்டிருந்து முடிந்தபின்பு அவருடைய சீஷரிலொருத்தன் அவருடனே: ஆண்டவரே, யோவானுந் தன் சீஷருக்குச் செபம்பண்ணப் போதித்ததுபோல நீரும் எங்களுக்குப் போதியுமென்றான்.

௨ அவரவர்களுக்குச் சொன்னதாவது: நீங்கள் செபம்பண்ணும்போது சொல்லவேண்டியதென்னவென்னில்: * பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தமாவதாக, உம்முடைய இராட்சியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே பூமியிலேயுஞ் செய்யப்படுவதாக: * மத். ௬, ௯—௰௩.

௩ அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு அன்றன்று தாரும்.

௪ எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும், ஏனென்னில் எங்களுக்கு நேரஸ்தனானவனுக்கெல்லாம் நாங்களும் மன்னிக்கிறோம். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிப்பியாமல், துன்மையினீக்கி எங்களை ரெட்சித்துக்கொள்ளுமென்று சொல்லுங்கோளென்றார்.

௫ பின்னையும் அவரவர்களுக்குச் சொன்னதாவது: உங்களிலொருத்தன் தனக்கொரு சிநேகிதனிருக்கக்கொள்ள, அவனண்டைக்குப் பாதிராத்திரியிலே போய், அவனுடனே: சிநேகிதனே, மூன்றப்பங்களை எனக்குக் கடனாகக்கொடு.

௬ ஏனென்னில் என் சிநேகிதன் வழிப்பயணத்திலிருந்து என்னண்டைக்கு வந்தான், அவன் முன்னே வைக்க எனக்கொன்றுமில்லையென்று சொல்லுகிறபோது,

௭ உள்ளேயிருக்கிறவன் பிரதியுத்தரமாக: என்னைப் பிரயாசப்படுத்தாதே, கதவு பூட்டித்தி

ருந்து

ந்துது, என்பிள்ளைகளென்னுடனே கூடப்படுக்கையிலிருக்கிறார்கள், நானெழுந்திருந்து உனக்குக் கொடுக்கக்கூடாதென்று சொல்லியும்,

௮ அப்படியாகிலும் அவன் அவனுக்குச் சிநேகிதனாயிருக்கிறதினாலே எழுந்து அவனுக்குக் கொடாவிட்டாலும், தன்னை அவன் வருத்தப்படுத்துகிறதினாலே எழுந்திருந்து, அவனுக்குத் தேவையானமட்டுங் கொடுப்பானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௯ நானும் உங்களுக்குச் சொல்லுகிறதென்னவென்றால், * கேளுங்கோள் அப்போ உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கோள் அப்போ கண்டுபிடிப்பீர்கள், தட்டுங்கோள் அப்போ உங்களுக்குத் திறக்கப்படும். * மத. ௭, ௭—௰௧.

௰ ஏனென்றால் கேட்கிறவனெல்லாம் வாங்குகிறான், தேடுகிறவன் கண்டுபிடிக்கிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.

௰௧ உங்களில் தகப்பனாயிருக்கிறவனிடத்தில் குமாரன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானோ, மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானோ.

௰௨ அல்லது முட்டையைக் கேட்டால் அவனுக்குத் தேளைக் கொடுப்பானோ,

௰௩ ஆகையால் பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருந்தால், எத்தனை அதிகமாய்ப் பரமபிதாவானவர் தம்மைக் கேட்கிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பாரென்றார்.

## ¶ அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டதும் தம்மை அதுக்காகத் தூஷணித்தவர்களுக்கு எதிர் உத்தரஞ் சொன்னதும்.

௰௪ அவர் ஒரு பிசாசைத் துரத்திவிட்டார், அது ஊமையாயிருந்தது, அப்போ சம்பவித்ததென்னவென்றால் பிசாசு புறப்பட்டபின் ஊமையன் பேசினான், அதற்கு ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்.

௰௫ ஆனால் அவர்களில் சிலர்: பிசாசுகளின் தலைவனாகிய * பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறானென்றார்கள். * மத. ௯, ௩௨—௩௪. ௰௨, ௨௨—௩௰. மாற்கு ௩, ௨௨—௩௰.

௰௬ வேறே பேர்களோவென்றால் சோதித்து, * வானத்திலிருந்துண்டாகும் ஒரு அடையாளத்தை அவரிடத்திலே தேடினார்கள். * மத. ௰௨, ௩௮. ௰௬, ௧.

௰௭ ஆனால் அவர் அவர்களுடைய சிந்தனைகளை அறிந்து அவர்களுக்குச் சொன்னதாவது: தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்த எந்த ராச்சியமும் பாழாகி, எந்த வீடும் விழுந்துபோம்.

௰௮ சாத்தானுந் தனக்குத்தானே விரோதமாகப் பிரிந்தால், அதின் ராச்சியம் எப்படி நிற்கும், ஏனென்றால் பெயெல்செபூலைக்கொண்டு பிசாசுகளைத் துரத்திவிடுகிறேனென்கிறீர்கள்.

௰௯ நானே பெயெல்செபூலைக்கொண்டு

பிசாசு

பிசாசுகளைத்துரத்திவிட்டால், உங்கள்பிள்ளைகள்ஆ
ரைக்கொண்டு அதுகளைத்துரத்திவிடுகிறார்கள். ஆ
கையால் அவர்கள்உங்களுக்குநியாயந்தீர்க்கிறவர்களா
யிருப்பார்கள்.

௨௰ நானோ பராபரனுடைய விரலினால்பிசாசுகளைத்
துரத்திவிட்டேனேயாகில், பராபரனுடையராட்சி
யம் உங்களிடத்தில்வந்தது.

௨௧. ஆயுதந்தரித்தபலவான் தன் அரமனையைக்
காக்கிறபோது அவனுக்குள்ளது பத்திரப்பட்டிருக்
கும்.

௨௨ அவனிலும்பலவான் * அவன்மேல்வந்து
அவனைச்செயித்தானேயாகில், அவன்நம்பியிருந்தச
கல ஆயுதவர்க்கத்தையும் பறித்துக்கொண்டு, அவனு
டைமைகளைப்பங்கிடுகிறான். * கொலொ. ௨, ௰௫.

௨௩ என்னுடனேயிராதவன் எனக்குவிரோதமா
யிருக்கிறான், என்னுடனே சேர்க்காதவன் சிதறடிக்கி
றான்.

௨௪ அசுத்தஆவிமனுஷனைவிட்டுப்பிறப்படுகிற
போது அந்தந்தண்ணீரற்றஇடங்களில் இளைப்பாற
லைத்தேடித்திரிந்து, கிடையாமல்போனால், நான்
விட்டுப்பிறப்பட்டுவந்தஎன்வீட்டுக்குத்திரும்பிப்பு
போவேனென்றுசொல்லி, * மத. ௰௨, ௪௩—௪௫.

௨௫ வரும்போது அதைப்பெருக்கிச்சிங்காரிக்கப்
பட்டதாகக்கண்டுபிடிக்கும்.

௨௬ அப்போதுபோய், தன்னிலும்பொல்லா
தவேறே ஏழாவிகளைக்கூட்டிக்கொண்டு உள்பிர
வேசித்து, அங்கேகுடியிருக்கும், அப்போ அந்தமனு
ஷனுடையபின்காரியங்கள் முன்காரியங்களைப்பார்
க்கிலும் * கேடாகுமென்றார். * ௨. பே. ௨, ௨௰.

௨௭ அவரிதுகளைச்சொல்லுகையிலசம்பவித்த
தென்றால், குடியிலேஒருஸ்திரீசத்தமிட்டுவருட
னே: உம்மைச்சுமந்தகெற்பமும் நீர் பாலுண்ட மு
லைகளும் பாக்கியமுள்ளதென்றாள்.

௨௮ அவரோவெனில்: பராபரனுடைய வார்
த்தையைக்கேட்டு அதைக்காத்துக்கொள்ளுகிறவர்
கள் பாக்கியவான்களென்றார்.

௲ தம்மிடத்தில் அடையாளந்தரக்கேட்டவ
ர்களுக்குஅவர்சொன்னஉத்தரவு

௨௯ சனக்கும்புகள்திரளாய்க்கூடினபோது அவ
ர்சொல்லத்துவக்கினதாவது: * இந்தச்சந்ததிபொல்
லாததாயிருக்குது; அது அடையாளந்தேடுது, யோ
னாத்தீர்க்கதெரிசியினுடையாளமேயல்லாமல் அத
ற்குவேறேஅடையாளங்கொடுபடாது. * மத. ௰௨,
௩௯—௪௨. யோனா ௨, ௧.

௩௰ அதெதென்றால் யோனாநினிவேபட்டணத்தாரு
க்கு அடையாளமாயிருந்ததுபோலே, மனுஷனுடைய
குமாரனுமிந்தச்சந்ததிக்கிருப்பார்.

௩௧ * நியாயத்தீர்ப்பிலேதெற்கிராசாத்தி இந்தச்சந்த
தியின்மனுஷருடனேகூடஎழுந்திருந்து அவர்களைக்
குற்றவாளிகளாகத்தீர்ப்பாள், ஏனென்றால் அவ

சா

சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க, பூமியின் கடையாந்தரங்களிலிருந்து வந்தாள், ஆனாலிதோ சாலொமோனிலும் இங்கே அதிகம். * ௨. நாளா. ௯, ௧.

௩௨ நியாயத்தீர்ப்பிலே நினிவே மனுஷர் இந்தச் சந்ததியுடனே கூட எழுந்திருந்து அதைக் குற்றவாளியாகத் தீர்ப்பார்கள். ஏனென்றால் யோனாவின் பிரசங்கத்துக்கு * குணப்பட்டார்கள், ஆனாலிதோ யோனாவிலும் இங்கே அதிகம். * யோனா. ௩, ௫. மறு.

௩௩ ஆனால் ஒருத்தனும் விளக்கைக் கொளுத்தின போது அதை அந்தரங்கத்திலாவது பறையின் கீழேயாவது வையான், உள்ளே போகிறவர்கள் வெளிச்சங் காண அதை விளக்குத் தண்டின் மேலே வைப்பான்.

௩௪ * சரீரத்தின் விளக்குக் கண், இப்போதும் உன் கண் கவடற்றதாயிருந்தால், உன் சரீரமெல்லாம் வெளிச்சமாயிருக்கும், பொல்லாததாயிருந்தேயானால், உன் சரீரமும் இருண்டிருக்கும். * மத். ௬, ௨௨. ௨௩.

௩௫ ஆகையால் உனக்குள்ளிருக்கும் வெளிச்சம் இருளாயிராதே பார்.

௩௬ உன் சரீரம் ஒரு புறமும் இருள் அடைந்திராமல் முழுதும் வெளிச்சமாயிருந்தால், அப்போ ஒரு விளக்கு உனக்கு மின்னலினாலே பிரகாசிக்குமாப்போலே, அது முழுதும் வெளிச்சமாயிருக்குமென்றார்.

¶ அவர் பரிசேயர் மேலும் வேதபாரகர் மேலும் ஐயோ வென்று கூறினது.

௩௭ அவர் பேசுகையில், பரிசேயன் ஒருத்தன் அவரைத் தன்னுடனே பகல் அசனம் பண்ண வேண்டிக் கொண்டான். அவர் உள்ளே பிரவேசித்துப் பந்தியிருந்தார்.

௩௮ ஆனால் அவர் அசனம் பண்ணுமுன்னே கழுவாமலிருந்தாரென்று பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

௩௯ கர்த்தரோவெனில் அவனுடனே சொன்னதாவது: * இப்போ பரிசேயராயிருக்கிற நீங்கள் குடிக்கிற போசிக்கிற பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தம் பண்ணுகிறீர்கள், உங்கள் உள்புறமோ கொள்ளையினாலும் பொல்லாப்பினாலும் நிறைந்திருக்குது. * மத். ௨௩, ௨௫. ௨௬.

௪௰ மதியற்றவர்களே, வெளிப்புறமானதைப் பண்ணினவர் உள்புறமானதையும் பண்ணினதில்லையோ.

௪௧ ஆனால் * உண்டானதுகளிலே பிச்சை கொடுங்கோள், அப்போதோ, எல்லாம் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும். * ௰௨, ௩௩. ஏசா. ௫௮, ௭.

௪௨ * ஆனால் பரிசேயராகிய உங்களுக்கு ஐயோ, ஏனென்றால் நீங்கள் ஒற்தலாமிலும் அறுகாவிலும் சகல விதக் கீரையிலும் பத்திலொன்று கொடுத்து, ஞாயத்தையும் தேவசினேகத்தையும் விலகிப்போகிறீர்கள். இதுகளையே நடப்பித்து அதுகளையும் விட

X விட

விடாதிருக்கவேண்டியதாயிருந்தது. * மத. ௨௩, ௨௩.

௪௩ * பரிசேயராகிய உங்களுக்கையோ, அதேனெனில் ஜெபஆலயங்களில் முதலாசனத்தையுஞ் சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள். * மத. ௨௩, ௬. ௭.

௪௪ * மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே, உங்களுக்கையோ, அதேனெனில் காணப்படாத பிரேதக்குழிகளைப்போலிருக்கிறீர்கள், அதுகளின்மேல் உலாவுகிற மனுஷருக்கு அதுகள் தெரியாதிருக்குதென்றார். * மத. ௨௩, ௨௭. ௨௮.

௪௫ அப்போது நியாயசாஸ்திரிகளில் ஒருத்தனவருக்குப் பிரத்தியுத்தாரமாக: போதகரே, இதுகளைச் சொல்லுகிறதினாலெங்களையும் நிந்திக்கிறீரென்றான்.

௪௬ ஆனாலவர் சொன்னதாவது: நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கும் ஐயையோ, அதேனெனில் * சுமக்கவரிதாகிய சுமைகளை மனுஷர்மேல் வைக்கிறீர்கள், நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும் அந்தச் சுமைகளைத் தொடுகிறதில்லை. * மத. ௨௩, ௪.

௪௭ உங்களுக்கையோ, * அதேனெனில் தீர்க்கதரிசிகளுடைய கல்லறைகளைக் கட்டுகிறீர்கள், உங்கள் பிதாக்களோவென்றால் அவர்களைக் கொன்றுபோட்டார்கள். * மத. ௨௩, ௨௯—௩௧.

௪௮ ஆகையால் உங்கள் பிதாக்களுடைய கிரிகைகளுக்கு நீங்கள் கூட்டுதேமியமாயிருக்கிறீர்களென்று சாட்சிவிளங்கிக்கிறீர்கள், அதேனென்றால் அவர்கள் அவர்களைக் கொன்றுபோட்டார்கள், நீங்களோ அவர்கள் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்.

௪௯ * ஆகையினாலே பராபரனுடைய ஞானஞ் சொல்லுகிறதாவது: தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தலர்களையும் அவர்களண்டைக்கனுப்புவோம், அவர்களில் சிலரைக் கொன்றுபோட்டு, சிலரைத் துன்பப்படுத்துவார்கள். * மத. ௨௩, ௩௪. [illegible].

௫௰ லோகத்தோற்றமுதல், * ஆபேலினுடைய இரத்தந்துவக்கி, பீடத்துக்குந் தேவாலயத்துக்கும் நடுவே அழிக்கப்பட்ட * * சகரியாவினுடைய இரத்தமட்டுக்குஞ் சிந்துண்ட சகல தீர்க்கதரிசிகளுடைய இரத்தப்பழியும் இந்தச் சந்ததியினிடத்திலே கேட்கப்படும்படியாகத்தானே.
* ௧. மோ. ௪, ௮. * * ௨. நாளா. ௨௪, ௨௧. ௨௨.

௫௧ ஆம், இந்தச் சந்ததியினிடத்திலே கேட்கப்படுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௫௨ நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கையோ, அதேனெனில் அறிவின் திறவுகோலை எடுத்துப்போட்டீர்கள், நீங்கள் தானே உள்ளே பிரவேசிக்கிறதில்லை, உள்ளே பிரவேசிக்கிறவர்களைத் தடையும் பண்ணினீர்களென்றார். * மத. ௨௩, ௰௩.

௫௩ ஆனால் அவரிதுகளை அவர்களோடே சொல்லும்போது, வேதபாரகரும் பரிசேயரும் அவரை மிகவும் நெருக்கவும், வெகுகாரியங்களைக் குறித்து அவரைப் பேசும்படி நெருக்கப்பார்க்கவுந் துடங்கி,

௫௪ அவருக்குச் சமயியனாய்க் காத்திருந்து, அவர்மேல் குற்றஞ்சுமத்தும்படிக்கு அவர் வாய்மொழியிலேதாகிலும் பிடிக்கப்பார்த்தார்கள்.

## ௰௨. அதிகாரம்.

### ௧ மாயமும் மனுஷபயமும் வேண்டாமென்பது.

இத்தேலே வெகு ஆயிரஞ்சனம் ஒருத்தருக்கொருத்தர் மிதித்துக்கொள்ளத்தக்கதாய்க் கூட்டங்கூடினபோது, அவர் தம்முடைய சீஷருக்குச் சொல்லத்தொடங்கினதாவது: முதலாவது மாயமான பரிசேயருடைய * புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருங்கோள். * மத். ௰௬, ௬.

௨ * வெளியாகாத மறைபொருளும் அறியப்படாத அந்தரங்கமும் ஒன்றுமில்லை. * ௮, ௰௭.

௩ ஆனபடியால் நீங்கள் இருளிலே என்ன பேசினீர்களோ, அது வெளிச்சத்திலே கேட்கப்படும், நீங்கள் அறைகளில் காதிலே என்ன சொன்னீர்களோ, அது வீடுகள்மேல் பிரசங்கிக்கப்படும்.

௪ ஆனாலென் சினேகிதரான உங்களுக்குச் சொல்லுகிறேன்: * சரீரத்தைக் கொன்றுபோட்டு, அதின்பிறகு அதிகமொன்றுஞ் செய்யமாட்டாதவர்களுக்கு * * பயப்படாதேயுங்கோள். * மத். ௰, ௨௮—௩௧. * * யெச. ௫௧, ௭.

௫ ஆருக்கு நீங்கள் பயப்படவேண்டியதென்று உங்களுக்குக் காண்பிப்பேன், கொன்றுபோட்டபின்பு நரகத்திலே தள்ள அதிகாரமுடையவருக்குப் பயப்படுங்கோள், ஆம் இவருக்கே பயப்படுங்கோளென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௬ இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிகள் விற்குதல்லவோ, ஆனால் அதுகளிலே ஒன்றாகிலும் பராபரனுக்கு முன்பாக மறக்கப்பட்டதல்ல.

௭ உங்கள் தலையிலுள்ள எல்லா மயிர்களும் எண்ணப்பட்டிருக்குது, ஆகையால் பயப்படாதேயுங்கோள், அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்க விசேஷித்திருக்கிறீர்கள்.

௮ ஆனாலுங்களுக்குச் சொல்லுகிறேன்: * எவனும் மனுஷர் முன்பாக என்னை அறிக்கைபண்ணினால் அவனை மனுஷனுடைய குமாரனும் பராபரனுடைய தூதர்கள் முன்பாக அறிக்கைபண்ணுவார். * மத். ௰, ௩௨. ௩௩.

௯ ஆனால் மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் பராபரனுடைய தூதர்கள் முன்பாக மறுதலிக்கப்படுவான்.

௰ * எவனும் மனுஷனுடைய குமாரனுக்கு விரோதமான வார்த்தையைச் சொன்னால், அவனுக்கு மன்னிக்கப்படும், ஆனால் பரிசுத்த ஆவிக்கு விரோதமாய்த் தூஷணிக்கிறவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. * மத். ௰௨, ௩௧. ௩௨.

௰௧ உங்களை அவர்கள் ஆலயங்களுக்குந் துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் * முன்பாகக் கொண்டுபோய்விடும்போதோவென்றால், எப்படி அல்லது என்னத்தை உத்தரமாகச் சொல்லுவோமென்றும், அல்லது என்னத்தைப் பேசுவோமென்றுங் கவலைப்படாதேயுங்கோள். * மத். ௰, ௰௯.
௨௰

௰௨ ஏனெனில சொலலவேணடியதுகளை பரிசுததஆவி அநநேரததிலே உஙகளுககுப போதிபபா ரெனறார்.

¶ அயிசுரியமுளள மனுஷனஉவமை.

௰௩ ஜனககுமபிலொருததன அவருடனே: போதக ரே, எனசகோதரனனைக கதிநதன குடிருககிற சுதந திரஆஸதியை பஙகிட்டுக கொளள அவனுககுச சொ லலுமெனறான.
௰௪ அவரோவெனில அவனுடனே: மனுஷனே, எனனை உஙகளுககுநியாயாதிபதியாகவும அலலது ப ஙகிடுகிறவனாகவும வைததவனாரெனறார்.
௰௫ அவர்பினனையும அவர்களுடனே: * பொரு ளாசைககு எசசரிககையாயிருககப பாருஙகோள, ஏனெனில ** ஒருததனுககும அவனசீவன அவனஆஸ தி களினதிரட்சியிலேஉணடாயிராதெனறார். * ௧ தீமோ. ௬, ௬—௰. ** மத. ௪, ௪.
௰௬ அவர்களுககுஒருஉவமையைசசொனனார், அ தாவது: அயிசுரியமுளள ஒருமனுஷனுடைய காணி நனறாயவிளைநதது.
௰௭ அவனதனககுளளேசிநதிததுககொணடுசொ னனதாவது; எனனசெயவேன, எனதானியஙகளை சசேர்ததுவைகக எனககிடமிலலை,
௰௮ நானஒனறு செயவேன, என களஞசியஙக ளைஇடிததுபபோட்டு, பெரிதாயககட்டி, எனககுவி ளைநத எலலாததையும எனனுடைய நலலவஸது ககளையும அஙகேசேர்ததுவைதது
௰௯ என ஆததுமததுடனே: ஆததுமமே, உனககு அ நேகமவருஷஙகளுககுவேணடுநலலவஸததுக க ளி ருககுது; இளைபபாறு, போசி, குடி, பூரிப பாயிருஎனறுசொலலுவேனெனறான.
௨௰ ஆனாலபராபரனஅவனுடனே: மதியறற வ னே, இநதராததிரியிலே * உனஆததுமம உனனிடத திலே கேட்கபபடும், அபபோ நீஆயிததமபண ணினதுகள ** ஆருடையதாமெனறார். * சஙகீ. ௩௭, ௩௫, ௩௬. ** சஙகீ. ௩௯, ௭.
௨௧ பராபரனுககுள அயிசுரியவானாயிராமல, தன னுககுததான பொககிஷஙகளைசசேர்ககிறவன அபபடி யிருககிறானெனறார்.

¶ பிழைபபினகவலைகள வேணடாம என்பது.

௨௨ அவர்தமமுடைசீஷருடனே சொனனதாவது: ஆகையாலஎனனஉணபோமெனறு உஙகளசீவனுக ககாகவும, எனனஉடுபபோமெனறு உஙகள சரீ ரததுககாகவுஙகவலைபபடாதேயுஙகோளஎனறு உ ஙகளுககுசசொலலுகிறேன. * மத. ௬, ௨௫.
௨௩ ஆகாரததைபபார்ககசசீவனும, உடையைப பார்ககசசரீரமும அதிகமாயிருககுது.
௨௪ காகஙகளைககவனிததுபபாருஙகோள, அது களவிதைககிறதுமிலலை அறுககிறதுமிலலை. அது

களுக்குப்பண்டகசாலையுமில்லை களஞ்சியமுமில்
லை, இல்லாவிட்டாலும் பராபரன் அதுகளைப்பி
ழைப்பூட்டுகிறார், பட்சிகளைப்பார்க்கநீங்கள் எ
த்தனைவிசேஷித்திருக்கிறீர்கள்.

௨௫ உங்களிலார் கவலைப்படுகிறதினாலே தன்சரீ
ரஅளவோடே ஒருமுழத்தைக்கூட்டலாம்.

௨௬ இப்போதுமெல்லாத்திலுஞ்சிறியதும் உங்
களால் ஆகாதிருக்கச்சே, மற்றதுகளுக்காக நீ
ங்கள் கவலைப்படுவானேன்.

௨௭ லீலிபுஷ்பங்கள் எப்படி வளருகிறதெ
ன்று கவனித்துப்பாருங்கோள், அதுகள் உழைக்கிறது
மில்லை நூற்கிறதுமில்லை, இல்லாவிட்டாலுஞ்சா
லோமோன் முதலாய்த் தன்சகலமகிமையிலும் இதுக
ளிலொன்றைப்போலுடுத்தியிருந்ததில்லையென்
று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

௨௮ இப்போது இன்றைக்கிருந்து நாளை அடுப்பி
லேபோடப்படும் வெளியின் புல்லைப் பராபரனி
வ்விதமாய் உடுத்துவித்தால், உங்களை எத்தனை அதிக
ம், அற்பவிசுவாசிகளே.

௨௯ ஆனபடியால் என்னத்தை உண்போமென்
னத்தைக்குடிப்போமென்று நீங்கள் கேளாமலும்
மனசிலே அனுமானப்படாமலுமிருங்கோள்.

௩௰ ஏனென்றால் இதுகளெல்லாத்தையும் லோ
கச்சாதியார் நாடித்தேடுகிறார்கள், உங்கள் பிதாவோ
வென்றால் இதுகள் உங்களுக்குத்தேவையென்றறிந்
திருக்கிறார்.

௩௧ பராபரனுடைய ராட்சியத்தையே தேடுங்கோ
ள், அப்போ இதுகளெல்லாம் உங்களுக்குக்கூட்டிக்
கொடுக்கப்படும்.

௩௨ பயப்படாதே, சிறுமந்தையே, ஏனென்றால்
உங்கள் பிதா உங்களுக்கு ராட்சியத்தைக் கொடுக்கப்
பிரியச்சித்தமாயிருக்கிறார்.

௩௩ உங்களுக்குண்டானதுகளை விற்றுப்பிச்சை
கொடுங்கோள், * பழசாய்ப்போகாத பைசலையு
ம்மாளாப்போக்கிஷத்தையும் பரமண்டலங்களில்
உங்களுக்குண்டாக்குங்கோள், அங்கே திருடன்சே
ருகிறதுமில்லை பொட்டுக்கெடுக்கிறதுமில்லை. * மத்.
௬, ௰௯—௨௧.

௩௪ ஏனென்றால் உங்கள் பொக்கிஷமெங்கேயிருக்
கிறதோ அங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.

¶ முழித்திருப்பதற்காகச்சொன்னபுத்தி.

௩௫ * உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்
கள் விளக்குகள் எரிகிறதாகவும், * எபே. ௬, ௰௪.

௩௬ தங்கள் ஏசமான் கலியாணத்திலிருந்து திரும்பி
வந்து தட்டும்போது, உடனே அவருக்குத்திறக்கும்ப
டிக்கு, எப்போ வருவாரென்று அவருக்குக்காத்தி
ருக்கிற மனுஷருக்கொப்பாகவுமிருங்கோள்.

௩௭ ஏசமான் வந்து முழித்திருக்கக்காணும் அந்த ஊழி
யக்காறரே பாக்கியவான்கள். மெய்யாகவே உங்
களுக்குச்சொல்லுகிறேன், அவர் அரைக்கட்டிக்கொ
ண்டு

ண்டு அவர்களைப் பந்தியமர்த்தி, சேர்ந்து வந்து அவர்களுக்கு ஊழியஞ்செய்வார்.

௩௮ அவர் இரண்டாஞ்சாமத்திலாகிலும் மூன்றாஞ்சாமத்திலாகிலும் வந்து இப்படிக் கண்டுபிடித்தால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்.

௩௯ * ஆனாலிது காரியத்தை அறியுங்கோள், திருடன் எந்நேரத்திலே வருவானென்று வீட்டெசமானறிந்திருந்தால், அவன் முழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடவொட்டானே. * மத். ௨௪, ௪௩. ௪௪.

௪௰ ஆகையால் நீங்களும் * ஆயத்தமாயிருங்கோள், ஏனென்றால் நீங்கள் நினையாத நேரத்திலே மனுஷனுடைய குமாரன் வருகிறானென்றார். * ௨௧, ௩௪. ௩௬.

௪௧ ஆனால் பேதுரு அவருடனே: ஆண்டவரே, இந்த உவமையை எங்களோடே சொல்லுகிறீரோ, எல்லாரோடுஞ் சொல்லுகிறீரோவென்றான்.

௪௨ அப்பொழுது கர்த்தர் சொன்னதாவது: * போசனத்தருணகாலத்திலே படிகொடுக்கச் சேமான் தன் பணிவிடைக்காரங்கள்மேலே வைக்கப்போற உண்மையும் புத்தியுமுள்ள உக்கிராணக்காரனார். * மத். ௨௪, ௪௫. ௫.

௪௩ சேமான் வந்து அப்படிச் செய்யக்காணும் ஊழியக்காறன் பாக்கியவான்.

௪௪ மெய்யாக உங்களுக்குச் சொல்லுகிறேன், தமக்குண்டானதெல்லாத்தின்மேலும் அவனை வைப்பார்.

௪௫ அந்த ஊழியக்காறனோவென்றால்: என்னெசமான் வரத்தாமதிக்கிறானென்று தன்னிருதயத்திலே சொல்லிக்கொண்டு, வேலைக்காறரையும் வேலைக்காறிகளையும் அடிக்கவும் போசித்துக் குடித்து வெறிக்கவுந்துடங்கினால்,

௪௬ அந்த ஊழியக்காறனுடைய சேமான் அவன் பார்த்திராத நாளிலும் அறியாத நேரத்திலும் வந்து, அவனைத் துண்டித்துப்போட்டு, உண்மையில்லாதவர்களுடனே அவன் பங்கைக் குறிப்பார்.

௪௭ தன்னெசமானுடைய சித்தத்தை அறிந்தும், ஆயித்தப்படாமலும் அவர் சித்தத்தின்படி செய்யாமலும் போன ஊழியக்காறனே அநேகம் அடிகளால் அடிக்கப்படுவான்.

௪௮ அறியாதவனாயிருந்து, அடிகளுக்குப் பாத்திரமானதுகளைச் செய்யாதவனோவென்றால் கொஞ்சமடிகளால் அடிக்கப்படுவான். ஏனென்றால் எவனுக்கனேகங் கொடுக்கப்பட்டிருக்குதோ அவனிடத்தில் அனேகந் தேடப்படும், ஆர்வசத்திலே அனேகம் வைத்திருக்குதோ அவனை அதிகங் கேட்பார்கள்.

¶ சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும்போது மனுஷருக்குள்ளே பிரிவினைகள் உண்டாமென்பது.

௪௯ அக்கினியைப் பூமியின்மேலே போடவந்தேன், அது அப்போதே பத்தியெரிந்திருக்க எனக்கு ஆசையாயிராதோ. * யெரே. ௨௩, ௨௯.

௫௰ ஆனால் நான் * முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்

றேன், அது முடியுமட்டாக எவ்வளவோ நெருக்கமடைந்தி
ருக்கிறேன். * மத. ௨௰, ௨௨. சங்கீ. ௬௯, ௨.
௫௧ * நான் பூமியிலே சமாதானத்தைத் தர வந்தே
னென்று நினைக்கிறீர்களோ, அல்ல. பிரிவினை
யைத்தானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத.
௰, ௩௪—௩௬.
௫௨ அதேதெனில் இதுமுதல் ஒரே வீட்டிலே ஐம்
துபேர் பிரிந்திருப்பார்கள், மூன்று பேருக்கு வி
ரோதமாய் இரண்டு பேரும் இரண்டு பேருக்கு விரோத
மாய் மூன்று பேருந்தானே.
௫௩ தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்கும்,
தாய் மகளுக்கும் மகள் தாய்க்கும் விரோதமாகவும்
மாமி தன் மருமகளுக்கும் மருமகள் தன் மாமிக்கும் வி
ரோதமாகவும் பிரிந்து போவார்களென்றார்.

¶ தம்மைக் கிறிஸ்துவென்றறிய மனதில்
லாதவர்களுக்கு அவர் சொன்ன புத்தி.

௫௪ பின்னும் அவர் கும்புகளோடு சொன்னதாவது:
நீங்கள் மேற்கே மேகமெழும்புகிறதைக் காணுகி
றபோது: மழை வருமென்று உடனே சொல்
லுகிறீர்கள், அந்தப்படியுமாம்.
௫௫ தென்றலடிக்கிறதைக் காணுகிற
போது காங்கை உண்டாமென்கிறீர்கள், அந்தப்ப
டியுமாம்.
௫௬ மாயக்காரரே, பூமியினுடையதையும் வான
த்தினுடையதையும் வகைகூறவறிந்திருக்கிறீர்கள். *
இந்தக் காலத்தையோ நீங்கள் வகையறுக்காதிருக்கி
றதெப்படி. * மத. ௰௬, ௩.
௫௭ ஞாயமின்னதென்று நீங்களே நிதானியாமலி
ருப்பானேன்.
௫௮ * நீ உன் எதிரியுடனே கூடத் துரையினண்டைக்குப்
போகிறபோது அவன் உன்னை ஞாயாதிபதியினண்டை
க்கிழுக்காமலும், ஞாயாதிபதி உன்னைச் சேவகனுக்கு
ஒப்புக்கொடாமலும், சேவகன் உன்னைச் சிறைச்
சாலையிலே போடாமலுமிருக்க, வழியிலே அவனை
விட்டுவிடுதலையாகப் பிரயாசப்படு. * மத. ௫,
௨௫, ௨௬.
௫௯ நீ கடைசிக்காசைக் கொடுத்துத் தீருமட்டும் அ
ங்கேயிருந்து புறப்படமாட்டாயென்று உனக்குச் சொ
ல்லுகிறேனென்றார்.

## ௰௩ அதிகாரம்.

### ¶ கனிகொடாத அத்திமர உவமை.

பிலாத்து சில கலிலேயருடைய இரத்தத்தை அவர்க
ளுடைய பலிகளுடனே கலந்ததைப் பற்றிச் செய்தியை அவரு
க்கு அறிவிக்கிற சிலர் அந்தவேளையிலே அங்கேயிருந்தா
ர்கள்.
௨ யேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாகச் சொ
ன்னதாவது: இந்தக் கலிலேயர் அப்படிக்கொத்தவை
அனுப

அநுபவித்ததினால், எல்லாகலிலேயரைப்பார்க்
கிலும் பாவிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்
களோ.

௩ இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்:
நீங்கள் * குணப்படாதேபோனால் எல்லாரும் அப்
படிகெடுவீர்கள். * சங்கீ. எ, ௰௩.

௪ அல்லது சீலோவாவிலே கோபுரம் விழுந்து
கொன்ற அந்தப் பதினெட்டுப்பேரும் எருசலேமிலே கு
டியிருக்கிற எல்லா மனுஷரைப் பார்க்கிலுங் குற்றவா
ளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ.

௫ இல்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்,
நீங்கள் குணப்படாதேபோனால் எல்லாரும் அப்ப
டிகெடுவீர்களென்றார்.

௬ அவர் சொன்ன உவமையாவது: ஒருத்தனுக்குத் தன்
திராட்சத்தோட்டத்திலே நட்டப்பட்ட ஒரு அத்திமரமி
ருந்தது, அதிலே கனியைத் தேடிவந்து காணாதே
போனான்.

௭ அப்பொழுது அவன் தோட்டக்காரனுடனே: இதோ
மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்தில் கனியைத் தே
டிவருகிறேன், காணவில்லை, இதை வெட்டிப்போ
டு, இது நிலத்தையும் ஏன் கெடுக்குதென்றான்.

௮ அவன் அவனுக்குப் பிறத்தியுத்தரமாக:
ஐயா, நான் அதைச்சுற்றிலுங் கொத்தி எருப்போட்
டு, கனிகொடுக்குமோவென்று பார்க்குமட்டாக, இது
இந்த வருஷமுமிருக்கட்டும்.

௯ கனிகொடாவிட்டால், இனிமேலதை வெ
ட்டிப்போடுமென்று சொன்னானென்றார்.

¶ கூனிநடக்கிற ஒரு ஸ்திரீ குணமாக
கப்பட்டது.

௰ அவர் ஓய்வுநாளிலே ஜெபாலயங்களிலொன்றிலே
போதகம்பண்ணிக்கொண்டிருந்தார்.

௰௧ அப்பொழுது பதினெட்டு வருஷமாய் வியா
தியின் ஆவி பிடித்திருந்த ஒரு ஸ்திரீ அங்கேயிருந்தாள்,
அவள் பரிச்சேதம் நிமிரமாட்டாத கூனியாயிருந்தாள்.

௰௨ இயேசு அவளைக் கண்டபோது தம்மண்
டைக்கழைத்து, அவளுடனே: ஸ்திரீயே, உன்
வியாதிக்கு நீங்கலானாயென்று சொல்லி,

௰௩ அவள்மேல் கைகளை வைத்தார், உடனே அவ
ள் நிமிர்ந்து பராபரனை மகிமைப்படுத்தினாள்.

௰௪ இயேசு ஓய்வுநாளிலே குணமாக்கினத
ற்காக ஜெபாலயத்தலைவன் தாங்கலடைந்து, ஜனங்களு
டனே: வேலைசெய்யவேண்டிய ஆறுநாளுண்டு,
ஆகையால் ஓய்வுநாளில் அல்ல அதுகளிலே வந்து கு
ணமாக்கிக்கொள்ளுங்கோளென்று உத்தரவு சொ
ன்னான்.

௰௫ அப்பொழுது கர்த்தர் அவனுக்குப் பிறத்தியுத்தரமா
மாக: மாயக்காரனே, உங்களில் அவனவன் ஓய்வுநா
ளில் தன் எருதை அல்லது தன் கழுதையைத் தொழு
வத்தைவிட்டவிழ்த்துக்கொண்டுபோய், அதுக்குத் தண்
ணீர் காட்டுகிறதில்லையோ.

௰௬ ஆனாலிதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியாகிய இவளை ஓய்வுநாளிலே இந்தக் கட்டவிழ்த்துவிடத் தேவையாயிருந்ததல்லவோவென்றார்.

௰௭ அவர் இவைகளைச் சொன்னபோது, அவரை விரோதித்திருந்தவர்களெல்லாரும் வெட்கப்பட்டார்கள். எல்லா ஜனமும் அவராலே செய்யப்பட்ட சகல மகிமைகளுக்காகவுஞ் சந்தோஷப்பட்டார்கள்.

¶ கடுகுவிதை, புளித்தமாவென்பதுகளின் உவமைகள்.

௰௮ ஆனால் அவர் சொன்னதாவது: * பராபரனுடைய ராட்சியம் எதுக்கொப்பாயிருக்குது, அதை எதுக்கொப்பிடுவேன். * மத். ௰௩, ௩௧ — ௩௩.

௰௯ கடுகுவிதைக் கொப்பாயிருக்குது, அதை ஒருத்தன் எடுத்து, தன் தோட்டத்திலே போட்டான், அது வளர்ந்து பெரிய செடியாகி, ஆகாசத்துப் பறவைகள் அதின் கிளைகளிலே கூடுகட்டித்தங்கினதென்றார்:

௨௰ மீளவும் அவர் சொன்னதாவது: பராபரனுடைய ராட்சியத்தை எதுக்கொப்பிடுவேன்.

௨௰௧ புளித்தமாவுக்கொப்பாயிருக்குது, அதை ஒரு ஸ்திரீயெடுத்து; மூன்றுபடிமாவிலே அனைத்தும் புளிப்புண்டாக அடக்கிவைத்தாளென்றார்.

௨௰௨ அவர் எருசலேமுக்குப் பயணமாய், பட்டணங்களையுங் கிராமங்களையும் உருவப்போய், போதகம்பண்ணினார்.

¶ ரட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சம்பேரோ என்றதற்குக் கிறிஸ்து சொன்ன பிறத்தியுத்தாரம்.

௨௰௩ ஒருத்தன் அவரிடத்தில்: ஆண்டவரே, ரட்சிக்கப்படுகிறவர்கள் கொஞ்சம்பேரோவென்றான். அவரோவென்றால் அவர்களுக்குச் சொன்னதாவது:

௨௰௪ * இடுக்கவாசலாலே உள்ளே பிறவேசிக்கப் போராடுங்கோள், ஏனென்றால் அநேகர் உள்ளே பிறவேசிக்க வகைதேடியும் அவர்களாலே கூடாதிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * மத். ௭, ௰௩. ௰௪.

௨௰௫ வீட்டெசமானன் எழுந்திருந்து, கதவைப்பூட்டினதுமுதல் நீங்கள் வெளியேநின்றுகொண்டும், * ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறவுமென்று கதவைத்தட்டவுந்தொடங்குவீர்கள், ஆனால் அவருங்களுக்குப் பிறத்தியுத்தாரமாக: உங்களை எவ்விடத்தாரென்றறியேனென்பார். * வாக்கி. ௬, ௨௪.

௨௰௬ அப்போ நீங்கள்: உமக்கு முன்பாகப் போசித்தோங் குடித்தோம், எங்கள் வீதிகளிலேயும் போதகம்பண்ணினீரென்று சொல்லத்தொடங்குவீர்கள்.

௨௰௭ ஆனால் அவர்: உங்களை எவ்விடத்தாரென்றறியேனென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், அக்கிரமக்காறராகிய நீங்களெல்லாரும் என்னைவிட்டகன்றுபோங்கோளென்பார்.

௨௰௮ அங்கே நீங்கள் ஆபிரகாமையும் ஈசாக்கையும் யாக்கோபையும் எல்லாத் தீர்க்கதரிசிகளையும்

பராபரனுடையராட்சியததிலேருககிறவர்களாக
வுமஉஙகளையோபுறமபேதளளபபடடவர்களா
கவுஙகாணுமபோது, அழுகையுமபலககடிபபு
உணடாயிருககும.
௨௯ * கிழககிலுமமேறகிலுமவடககிலுநதெற
கிலுமிருநதுவநதுபராபரனுடையராட்சியததில பந
தியிருபபார்கள. * மத. ௮, ௰௧. ௰௨.
௩௰ இதோ * முநதினோராகபபோகிறபிநதினோருமு
பிநதினோராகபபோகிறமுநதினோருமுணடெனறார.
* மத. ௰௯, ௩௰.

¶ தமமைககொலலபபோறவர்களுககு
அவர்சொனனவாககியம

௩௧ அநதநாளிலேசிலபரிசேயர்சேர்நதுவநது, அ
வருடனே: நீஙகேயிருநது புறபபடடுபபோம, ஏ
ரோதே உமமைககொலலமனதாயிருக
றானெனறார்கள.
௩௨ அவர் அவர்களுககுச்சொனனதாவது, நீங
ளபோயஅநதநரிககு: இதோ இனறுநாளையுமநா
னபிசாசுகளைததுரததி, ஆரோககியஙகளையளிதது
தீர்நது, மூனறாமநாளில முடிககபபடுவேன.
௩௩ ஆனாலும இனறைககுமநாளைககுமநாளையின
றைககுமநானநடமாடவேணடியதெனறுசொ
லலுஙகோள; ஏனெனில எருசலேமுககுபபுற
பேஒருதீர்ககதரிசிமடிநதுபோறதிலலை.
௩௪ * தீர்ககதரிசிகளைககொனறு உனனணடை
அனுபபபபடடவர்களைககலலெறிகிற எருசலே
மே, எருசலேமே, ஒருகோழிதன குஞசுகளைக கூடட
றகுசெடடைகளினகீழககூடடிசசேர்ககுமவணண
மாகநானெததனைதரமஉனபிளளைகளைககூடடி
சேர்ககவேணுமெனறிருநதேன, ஆனாலநீஙகளமா
டடோமெனறீர்கள. * மத. ௨௩, ௩௭—௩௯.
௩௫ இதோ * உஙகளவீடுஉஙகளுககுப பாழாக
விடபபடும. மெயயாகவே உஙகளுககுச்சொலலு
கிறேன, நீஙகள: கர்ததருடையநாமததில வருகி
றவர் ஸதோததிரிககபபடடவரெனறு சொலலு
காலமவருமடடும எனனைககாணாதிருபபீர்கள எ
னறார்.

௰௪. அதிகாரம.

¶ நீர்ககோவைவியாதியுளளஒருததனைச்சொ
ஸதகுணமாககினது.

பினனையுஞசமபவிததததெனறால: பரிசேயரி
தலைவனாகியஒருததனவீடடிலே அவர் ஓயவுநா
ளிலேஅபபமபோசிககவருகையில, அவர்கள அ
ரைசசறடபியாகககார்ததிருநதார்கள.
௨ இதோநீர்ககோவைவியாதியுளளஒருமனுஷ
அவருககுமுனபாகஇருநதான.
௩ இயேசுநியாயசாஸததிரிகளுககுமபரிசேயருக
பிறததியுததரமாக: ஓயவுநாளிலேகுணமாககஞ
ஞாயமோவெனறார.

௪ அவர்களொன்றும் பேசாதிருந்தார்கள், அப்போது அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கிவிட்டு,
௫ அவர்களுடனே: * உங்களிலொருவனுடைய கழுதையாகிலும் மாடாகிலும் ஒரு துரவிலே விழுந்தால், அதை அவன் உடனே ஓய்வுநாளிலே தூக்கிவிடானோ என்றார். * ௰௩, ௰௫.
௬ அதற்கவர்கள் எதிருத்தரஞ்சொல்லமாட்டாதே போனார்கள்.

¶ விருந்துக்கழைக்கப்பட்டவர்களுக்கும் அழைத்தவனுக்கும் அவர் சொன்ன ஞாயங்கள்.

௭ ஆனால் விருந்துக்கழைக்கப்பட்டவர்கள் பந்தியிலே முதலிடங்களை எப்படித் தெரிந்துகொண்டார்களென்கிறதை அவர் கவனித்துப்பார்த்து, அவர்களுக்குச் சொன்ன உவமையாவது:
௮ நீ யொருத்தனால் கலியாணத்துக்கழைக்கப்பட்டால், பந்தியிலே முதலிடத்தில் உட்காராதே, ஏனெனில் ஒருவேளை உன்னிலுங் கனமுள்ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்கக்கூடும்,
௯ உன்னையும் அவனையும் அழைத்தவன் வந்து, உன்னுடனே: இவனுக்கிடங்கொடுவென்பான், அப்போ நீ வெட்கத்துடனே கடைசியிடம் பிடிக்கத்துவக்குவாய்.
௰ நீ அழைக்கப்பட்டால், போய், கடைசியிடத்திலே உட்காரு, அப்போ உன்னை அழைத்தவன் வந்து உன்னுடனே: சிநேகிதனே, உயரப்போயிருவென்றால், உன்னுடனே கூடப்பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பாக உனக்குக் கனமுண்டாம்.
௰௧ அதேனென்றால், * தன்னைத்தான் உயர்த்துகிறவனெல்லாந் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவானென்றார். * வாக. ௨௬, ௨௩.
௰௨ ஆனால் அவர் தம்மை விருந்துக்கழைத்தவனுக்குச் சொன்னதாவது: நீ பகல்விருந்தை அல்லது ராவிருந்தைப் பண்ணினால், உன் சிநேகிதரையாவது உன் சகோதரரையாவது, உன் பெந்துசனங்களையாவது, அயிசுரியமுள்ள அசலகத்தாரையென்கிலும் அழையாதே, ஏனென்றால் உன்னை அவர்களுந் திரும்ப அழைப்பார்களாம், அப்போ உனக்கு வதிலுக்குவதில் நடந்திருக்கும்.
௰௩ நீ விருந்து பண்ணும்போதோவென்றால், ஏழைகளையும் ஊனரையுஞ் சப்பாணிகளையுங் குருடரையும் அழை.
௰௪ அப்போ பாக்கியவானாயிருப்பாய், ஏனென்றால் உனக்கு வதில்செய்ய அவர்களுக்கில்லை, நீதிமான்களுடைய உயித்தெழுந்தலிலேயோவென்றால் உனக்கு வதில் செய்யப்படுமென்றார்.

¶ பெரிய விருந்துவமை

௰௫ கூடப்பந்தியிருந்தவர்களில் ஒருத்தன் இதுகளைக் கேட்டபோது, அவருடனே: பராபரனுடைய

ராட்சி

ராட்சியத்தில் அப்பம் போசிக்கிறவன் பாக்கியவானென்றான்.

௰௬ அவர் அவனுக்குச் சொன்னதாவது: ஒரு மனுஷன் பெரிய விருந்துபண்ணி, அனேகரை அழைத்து.

௰௭ விருந்துவேளையில்: வாருங்கள், எல்லாமாயத்தமாச்சுதென்று அழைக்கப்பட்டவர்களுக்குச் சொல்ல, தன் ஊழியக்காரனை அனுப்பினான்.

௰௮ அவர்களெல்லாரும் ஏகமாய் வரக்கூடாதென்று மனுக்கேட்கத் துடங்கினார்கள். முந்தினவன் அவனுடனே: ஒரு வயலைக்கொண்டேன், நான் புறப்பட்டுப்போய் அதைப்பார்க்கிறது தேவையாயிருக்குது, என்னை மன்னிக்கவேண்டிக்கொள்ளுகிறேனென்றான்.

௰௯ வேறொருத்தன்: ஐந்தேர்க்குண்டைக் கொண்டேன், அதுகளைச் சோதிக்கப்போறேன். என்னை மன்னிக்கவேண்டிக்கொள்ளுகிறேனென்றான்.

௨௰ வேறொருத்தன்: பெண்ணை விவாகம்பண்ணினேன், ஏதுநிமித்தியம் நான் வரக்கூடாதென்றான்.

௨௧ அந்த ஊழியக்காரன் வந்து தன் எசமானுக்கு இதுகளை அறிவித்தான், அப்போ வீட்டுக்கெசமான் கோபமடைந்து, தன் ஊழியக்காரனுடனே: நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெருக்களிலும் வீதிகளிலும் புறப்பட்டுப்போய், தரித்திரரையும் ஊனரையும் சப்பாணிகளையும் குருடரையும் இங்கே உள்ளே அழைத்துவாவென்றான்.

௨௨ ஊழியக்காரன்: ஆண்டவரே, நீர் கற்பித்தபடி செய்யப்பட்டுது, இன்னம் இடமுண்டென்றான்.

௨௩ அப்போ எசமான் ஊழியக்காரனுடனே: நீ வழிகளிலும் வேலிகளருகேயும் புறப்பட்டுப்போய், என் வீடு நிறையும்படிக்குச் சனங்களை உள்ளேவர வருந்தி அழை.

௨௪ ஏனென்றால் அழைக்கப்பட்ட அந்த மனுஷரிலே ஒருத்தனும் என் விருந்தை ருசிபார்ப்பதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொன்னார்.

௩ எல்லாத்தையும் வெறுத்துத் தம்மைப்பின்
செல்லாதவன் தம்முடைய சீஷனாயிரு
க்கமாட்டானென்று க்றிஸ்த
து எச்சரித்தது.

௨௫ வெகுகும்புகள் அவரோடேகூட வழிநடந்துவந்து, அவர் திரும்பிக்கொண்டு அவர்களுடனே சொன்னதாவது:

௨௬ யாதொருத்தன் என்னண்டைக்கு வந்து, தன் தகப்பனையுந் தாயையும் பெண்சாதியையும் பிள்ளைகளையுஞ் சகோதரரையுஞ் சகோதரிகளையும், தன் சுயசீவனையுங்கூட * பகையாதேபோனால் என் சீஷனாயிருக்கமாட்டான். * மத். ௰, ௩௭. ௩௮.

௨௭ தன் சிலுவையைச் சுமந்துகொண்டு என்பிறகே வராதவன் என் சீஷனாயிருக்கமாட்டான்.

௨௮ ஏனெனில் உங்களிலாவனாகிலும் ஒரு கோபுரத்தைக் கட்ட மனதாயிருந்தால்,
௨௯ தான் அஸ்திவாரம் போட்டபின்பு முடிக்கக் கூடாமற் போனால், பார்க்கிறவர்களெல்லாரும்:
௩௰ இந்த மனுஷன் கட்டத்துவக்கி முடிக்கக் கூடாமற்போனானென்று பரியாசம் பண்ணத் தொடங்காதபடிக்கு, அவன் முந்தி உட்கார்ந்து, அதைச் சம்பூர்த்திசெய்கிறதற்குத் தனக்கு உண்டோவென்று செலவைக் கணக்குப் பாரானோ.
௩௧ அல்லது ஒரு ராசாவானவன் மற்றொரு ராசாவோடே யுத்தஞ்செய்யப் போனால், முந்தி உட்கார்ந்து, தன் மேல் இருபதினாயிரம் பேரோடே வருகிறவனைத் தான் பதினாயிரம் பேரோடே எதிர்க்கப் போகச் சாலியோவென்று ஆலோசியாதிருப்பானோ.
௩௨ அல்லவென்று கண்டால், அவனின்னந் தூரத்திலிருக்கச்சே, ஸ்தானாபதிகளை அனுப்பி, சமாதானத்துக்கடுத்தவைகளைக் கேட்டுக்கொள்ளுகிறான்.
௩௩ அப்படியே உங்களில் தனக்குண்டானதெல்லாத்தையும் வெறுத்துவிடாதவன் எவனும் என் சீஷனாயிருக்கமாட்டான்.
௩௪ * உப்பு நல்லவஸ்து, உப்பு சாரமற்றுப் போச்சுதேயானால் எதினாலே சாரமுண்டாக்கப்படும். * மத. ரு, ௰௩.
௩௫ அது நிலத்துக்காகிலும் எருவுக்காகிலும் பிரயோசனப்படாது, அதை வெளியே கொட்டிப்போடுவார்கள். கேட்கக் காதுள்ளவன் கேட்கக்கடவானென்றார்.

## ௰௫. அதிகாரம்,

¶ காணாமல்போனாடுடன் உவமை

௧ அந்நாட்களில் * ஆயக்காரரும் பாவிகளும் அவர் வசனங்களைக் கேட்க அவரண்டைக்குச் சேருகிறவர்களாயிருந்தார்கள். * மத. ௯. ௰.
௨ அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும்: இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களுடனே சாப்பிடுகிறாரென்று முறுமுறுத்தார்கள்.
௩ அவரோவென்றால் அவர்களுடனே சொன்ன உவமையாவது:
௪ உங்களில் எந்த மனுஷனுக்கு நூறு ஆடுண்டாயிருந்து, அதுகளில் ஒன்றைக் காணாமற் போனால், தொண்ணூற்றொன்பதையும் வனாந்திரத்திலே விட்டு, * காணாமற்போனதைக் கண்டுபிடிக்குமட்டும் அதைத் தேடிப்போகானோ. * மத. ௰௮, ௰௨.
௫ கண்டுபிடித்தால், அவன் அதைச் சந்தோஷமாய்த் தன் தோள்களின்மேலே போட்டுக்கொண்டு,
௬ வீட்டுக்கு வரும்போது சிநேகிதரையும் அயல்வீட்டுக்காரரையும் வரவழைத்து, அவர்களுடனே: என்

கெட்டு

ஞோடே சந்தோஷமாயிருங்கோள், அதேனென்னில் காணாமல்போன என்னுடைய ஆட்டைக் கண்டுபிடித்தேனென்பான்.
௭ அப்படியே, * திண்ணப்படுதல் தேவையில்லாத தொண்ணூற்றொன்பது நீதிமான்களைப்பார்க்க, குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பரமண்டலத்திலே சந்தோஷமுண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். * ரு; ௩௧. ௩௨.

¶ காணாமல்போனவெள்ளிக் காசின் உவமை.

௮ அல்லது எந்த ஸ்திரீயாகிலும் பத்துவெள்ளிக்காசையுவைத்திருந்து, ஒருவெள்ளிக்காசை இழந்தால், விளக்கைக்கொளுத்தி வீட்டைப்பெருக்கி, அதைக்கண்டுபிடிக்குமட்டாகக் கவனமாய்த்தேடாளோ.
௯ கண்டுபிடித்தால், அவள் சிநேகிதிகளையும் அயல்வீட்டுக்காரிகளையுங்கூடவரவழைத்து: என்னோடே சந்தோஷமாயிருங்கோள், அதேனென்னில் நானிழந்திருந்த வெள்ளிக்காசைக் கண்டுபிடித்தேனென்பாள்.
௰ அப்படியே குணப்படுகிற ஒரே பாவியின் பேரிலே பராபரனுடைய தூதருக்குள்ளே சந்தோஷமுண்டாகுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

¶ காணாமல்போனகுமாரனுவமை.

௰௧ பின்னையும் அவர் சொன்னதாவது: ஒரு மனுஷனுக்கிரண்டுகுமாரரிருந்தார்கள்.
௰௨ அவர்களில் இளையவன் தகப்பனுடனே: தகப்பனே, ஆஸ்தியிலே எனக்குவரும்பங்கை எனக்குத்தாருமென்றான். அவன் அவர்களுக்குச் சீவனத்தைப் பங்கிட்டான்.
௰௩ கொஞ்சநாளுக்குப் பிற்பாடு இளைய மகன் எல்லாத்தையுஞ்சேர்த்துக்கொண்டு தூரதேசத்துக்குப் பயணம்புறப்பட்டுப்போய், அங்கே துன்மார்க்கமாய்ச் சீவனம்பண்ணி, தன் ஆஸ்தியை அழித்துப் போட்டான்.
௰௪ அவன் எல்லாத்தையுஞ்செலவழித்த பிற்பாடோவெனில் அந்தத்தேசத்திலே மகாபஞ்சமுண்டாச்சுது. அவன் தாட்சியடையத்துவக்கி,
௰௫ போய், அந்தத்தேசத்துக்குடிகளில் ஒருத்தனண்டையேயடிக்கொண்டான், இவன் அவனைத் தன் வயல்களில், பன்னிகளைமேய்க்க அனுப்பினான்.
௰௬ அப்போ பன்னிகள் தின்ற தவுடுகளினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஆனால் ஒருத்தனும் அதை அவனுக்குக் கொடுத்ததில்லை.
௰௭ அவன் தன்னுணருகிறபோதோவெனில் அவன் சொன்னதாவது: என் தகப்பனுடைய கூலிக்காறரெத்தனைபேருக்கு அப்பந்திரட்சியாயிருக்குது,

நானோ

நானோவென்றால் பசியினாலே கெட்டுப்போகிறேன்.

௰௮ நான் எழுந்து புறப்பட்டு, என் தகப்பனிடத்துக்குப் போய், அவரோடே: தகப்பனே, வானத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்.

௰௯ இனிமேல் உம்முடைய குமாரனென்று அழைக்கப்படுகிறதுக்கு நான் பாத்திரவானல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருத்தனைப்போலே என்னை வைத்துக்கொள்ளுமென்பேனென்று சொல்லி,

௨௰ எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான். ஆனால் அவன் இன்னந் தூரமாயிருக்கக்கொள்ள, அவனுடைய தகப்பன் அவனைக் கண்டு மனதுருகி, ஓடி, அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு அவனை முத்தமிட்டான்.

௨௧ ஆனால் குமாரன் அவனோடே: தகப்பனே, வானத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனிமேல் உம்முடைய குமாரனென்று அழைக்கப்படுகிறதுக்கு நான் பாத்திரவானல்லவென்றான்.

௨௨ தகப்பனோவென்றால் தன்னூழியக்காரரை நோக்கிச் சொன்னதாவது: நீங்கள் பிரதான வஸ்திரத்தை வெளியே கொண்டுவந்து, அவனுக்கு உடுத்தி, அவன் கைக்கு மோதிரத்தையுங் கால்களுக்குப் பாதரட்சைகளையுங் கொடுத்து,

௨௩ கொழுத்த கன்றைக் கொண்டுவந்தடியுங்கோள், நாம் போசித்து, சந்தோஷமாயிருப்போம்.

௨௪ ஏனென்றால் இந்த என் குமாரன் மரித்திருந்து திரும்ப உயிர்த்தான், காணாமற்போனவனாயிருந்து காணப்பட்டானென்றான். அப்போ சந்தோஷப்படத் துவக்கினார்கள்.

௨௫ ஆனால் அவனுடைய மூத்தகுமாரன் வயலிலிருந்தான், அவன் வந்து வீட்டுக்குச் சமீபித்தபோது, கீதவாத்தியத்தையுங் களிகூருதலையுங் கேட்டு,

௨௬ ஊழியக்காரரில் ஒருத்தனை அழைத்து, இதேதென்று விசாரித்தான்.

௨௭ இவன் அவனோடே: உன் சகோதரன் வந்தான், அவன் திரும்பச் சுகத்துடனே தனக்ககப்பட்டபடியினாலே உன் தகப்பன் கொழுத்த கன்றை அடித்தானென்றான்.

௨௮ அப்போ அவன் கோபமடைந்து, உள்ளே போகமாட்டேனென்றான், அவன் தகப்பனோவென்றால் வெளியே வந்து அவனை வருந்தி அழைத்தான்.

௨௯ ஆனால் அவன் தகப்பனுக்குப் பிரதியுத்தரமாகச் சொன்னதாவது: இதோ இத்தனை வருஷமா நான் உமக்கு ஊழியஞ்செய்து, ஒருக்காலும் உம்முடைய கற்பனையை மீறாதிருந்தும், நான் என் சிநேகிதரோடே சந்தோஷமாயிருக்கும்படிக்கு நீர் ஒருக்காலும் எனக்கு ஒரு ஆட்டுக்குட்டியைக் கொடுத்ததில்லை.

௩௰ வேசிகளோடே உம்முடைய சீவனத்தைக் கப்பட்டசித்துப்போட்ட இந்த உம்முடைய குமாரன் வந்தபோதோவென்றால், கொழுத்த கன்றை அவனுக்கு அடித்தீரேயென்றான்.

௩௧ அவனோவென்றால் இவனோடே: மகனே, நீ

எப்

ளப்பொழுது மென்னோடேயிருக்கிறாய், எனக்குள்ளதெல்லாமுன்னுடையதாயிருக்குது.

௩௨ ஆனாலிந்த உன்சகோதரன் மரித்திருந்து திரும்ப உயிர்த்ததினாலேயும், காணாமற்போனவனாயிருந்து கண்டுபிடிக்கப்பட்டதுக்காகச் சந்தோஷமுமகிழ்ச்சியாகச் சந்தோஷப்படவேண்டியதாயிருக்குமென்றான்.

## ௰௬. அதிகாரம்.

### ¶ புத்தியாய்ச்செய்த அநீத உக்கிராணக்காரனுவமை.

அவர் தம்முடைய சீஷரை நோக்கிச் சொன்னதாவது: ஐசுவரியவானாயிருந்த ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரனிருந்தான், இவன் அவனுடைய ஆஸ்திகளை அழித்துப்போடுகிறானென்று அவன்மேல் குற்றஞ்சாட்டப்பட்டான்.

௨ அப்பொழுது அவனை அழைத்து, அவனோடே: உன்பேரிலே நான் கேட்கிறதென்ன? உன் உக்கிராணக்கணக்கையொப்புவி, இனிமேல் நீ உக்கிராணக்காரனாயிருக்கக்கூடாதென்றான்.

௩ உக்கிராணக்காரன் தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: நான் என் செய்வேன், என்னெஜமான் உக்கிராணவிசாரிப்பை என்னைவிட்டு வாங்கிப்போடுகிறானே, கொத்துகிறதுக்கு எனக்குப் பெலனில்லை, பிச்சையெடுக்க வெட்கப்படுகிறேன்.

௪ நான் உக்கிராணவிசாரிப்புக்குப் புறம்பாயத் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளிலே ஏற்றுக்கொள்ளுவார்களுண்டாக நான் செய்யவேண்டியதின்னதென்றறிவேனென்று சொல்லி,

௫ தன்னெஜமானுக்குக் கடன்பட்டவர்களிலே ஒவ்வொருத்தனை வரவழைத்து, முந்தினவனோடே: நீ என்னெஜமானுக்குப் பட்டகடன் எத்தனையென்றான்.

௬ அவன்: நூறுகுடம் எண்ணெயென்றான். அப்பொழுது அவன்: நீ உன் சீட்டை வாங்கி உட்கார்ந்து அம்பதென்று சீக்கிரமாயெழுதென்றான்.

௭ பின்பு வேறொருத்தனோடே: நீ யெப்பட்ட கடன் எத்தனையென்றான், அவன் நூறுகலங் கோதுமையென்றான், அப்பொழுது அவனோடே நீ உன் சீட்டை வாங்கி எண்பதென்றெழுதென்றான்.

௮ அநீத உக்கிராணக்காரன் புத்தியாய்ச் செய்ததென்று எஜமான் அவனைப் புகழ்ந்தான், ஏனென்றால் * வெளிச்சத்தின் பிள்ளைகளைப் பார்க்க, இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் தங்களுடைய சந்ததிக்குப் புத்திமான்களாயிருக்கிறார்கள். * எபேச. ரு, அ.

௯ நானுமுங்களுக்குச் சொல்லுகிறேன்: * நீங்கள் மாண்டுபோகும்போது, உங்களை நித்திய கூடாரங்களிலேற்றுக்கொள்ளுவாருண்டாக, அநீதலோகப்பொருளாலே உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கொள். *

௧. தீமோ. ௬, ௰௭—௰௯.

௰ சிறியதிலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையாயிருக்கிறான், சிறியதிலே அநீதமுள்ளவன் அநேகத்திலும் அநீதமாயிருக்கிறான்,

௪௨ அப்போ யேசு அவனுடனே: பார்வையடை; உன் விசுவாசமுன்னை ரட்சித்ததென்றார்.
௪௩ உடனே பார்வையடைந்து, பராபரனை மகிமைப்படுத்திக்கொண்டு அவரைப் பின்சென்றான். ஜனமெல்லாம் அதைக்கண்டு பராபரனுக்குத் தோத்திரஞ்செலுத்தினார்கள்.

## ௰௯. அதிகாரம்.

### ¶ சக்கேயுண்ணப்பட்டது.

அவர் யெரிகோவில் பிரவேசித்து உருவ நடந்துவந்தார்.
௨ சக்கேயுவென்னப்பட்ட ஒரு மனுஷனிருந்தான்; அவன் ஆயக்காறரிலே தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்தான்.
௩ அவன் யேசு என்றவர் யாரென்று அவரைப் பார்க்க வகைதேடினான், ஆனால் அவன் சரீர அளவில் குள்ளனானபடியினாலே, கும்பைத்தோடே அவனுக்குக் கூடாதே போச்சுது.
௪ அப்பொழுது அவன் முன்னோடி, அவரைப் பார்க்கிறதுக்கு ஒரு காட்டத்திமரத்தின்மேலே ஏறினான், ஏனென்றால் அந்த வழியாய் அவர் வருகிறவராயிருந்தார்.
௫ யேசு அந்த இடத்துக்கு வந்தபோது, அண்ணாந்து பார்த்து அவனைக் கண்டு, அவனுடனே: சக்கேயுவே, தீவிரமாயிறங்கு, ஏனென்றால் நான் இன்றைக்கு உன் வீட்டிலே இருக்கவேணுமென்றார்.
௬ அவன் தீவிரமாயிறங்கி, அவரைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டான்.
௭ அதைக் கண்டு எல்லாரும்: * பாவியான மனுஷனிடத்திலே தங்கப் பிரவேசித்தாரென்று முறுமுறுத்தார்கள். * லூ. ௫, ௨.
௮ சக்கேயு நின்று கர்த்தருடனே: ஆண்டவரே, என் ஆஸ்தியில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கியிருந்தால், நாலத்தனையாயத் திரும்பச் செலுத்துகிறேனென்றான்;
௯ யேசு அவனுடனே: இன்றைக்கு இந்த வீட்டுக்கு ரட்சிப்புண்டாச்சுது, ஏனென்றால் இவனும் ஆபிரகாமுடைய குமாரனாயிருக்கிறான்.
௰ ஏனெனில் * கெட்டுப்போனதைத் தேடவும் ரட்சிக்கவும் மனுஷனுடைய குமாரன் வந்தாரென்றார். * மத். ௯, ௰௩. ௰௮, ௰௧. ௧. தீமோ. ௧. ௰௫.

### ¶ சேமனைப் பத்து ஊழியக்காறருக்குக் கொடுப்பித்த திரவிய உவமை.

௰௧ அவர்கள் இதுகளைக் கேட்டுக்கொண்டிருந்தபோது, அவர் பின்னையும் பேசி, தாம் யெருசலேமுக்குச் சமீபித்திருந்தபடியினாலும், பராபரனுடைய ராச்சியம் தீட்சணமாகக் காணப்படுமென்று அவர்கள் நினைத்தபடியினாலும் ஒரு உவமையைச் சொன்னார்.
௰௨ அவர் சொன்னதாவது: * உயர்குலமனுஷன்

ஒருத்தன், ஒரு ராட்சியத்தைக்கட்டிக் கொண்டுதிரும்பிவருகிறேனென்று. தூரதேசத்துக்குப் போனான். *

மத். ௨௫, ௰௪—௩௰.

௰௩ போறப்போது அவன் தன்னுடைய பத்து ஊழியக்காறரை அழைத்து, அவர்களுக்குப் பத்து றாத்தல் திரவியங்கொடுத்து, அவர்களோடே: நான் வருமட்டாக்கந் தொழில்பண்ணுங்கோளென்றான்.

௰௪ ஆனால் அவனூரார் அவனைப் பகைத்து, இவன் நம்முடமேலே ராசாவாயிருக்க நமக்கு மனதில்லையென்று, அவன்பிறகே தாறுபத்தியத்தை அனுப்பினார்கள்.

௰௫ பிற்பாடு சம்பவித்ததேதென்றால், அவன் ராட்சியத்தைக் கட்டிக்கொண்டுதிரும்பினபோது, தான் திரவியங்கொடுத்திருந்த அந்த ஊழியக்காறரை, அவனவன் தொழில்பண்ணித்தேடினதை அறிய, தன்னண்டைக்கழைக்கச்சொன்னான்.

௰௬ அப்படியே முந்தினவன் சேர்ந்துவந்து: ஆண்டவனே, உம்முடைய றாத்தல் பத்து றாத்தல் ஆதாயம்பண்ணிற்றென்றான்.

௰௭ அப்போதவனுடனே: நல்ல தாசனே, உத்தம ஊழியக்காறா, நீ சிறியதிலே உண்மையாயிருந்தபடியினாலே பத்துப்பட்டணங்களமேல அதிகாரியாயிருவென்றான்.

௰௮ ரெண்டாம ஊழியக்காறனுவந்து: ஆண்டவனே, உம்முட றாத்தல் அஞ்சு றாத்தல் ஆதாயம்பண்ணிற்றென்றான்.

௰௯ அப்போதவனுடனேயும்: நீயும் அஞ்சுப்பட்டணங்களமேல அதிகாரியாயிருவென்றான்.

௨௰ வேறொருத்தன்வந்து: ஆண்டவனே, இதோ உம்முட றாத்தல், இதை ஒரு சீலையிலே வைத்துக்கொண்டிருந்தேன்.

௨௧ ஏனென்றால் நீர் வைக்காததை எடுக்கிறவரும் நீர் விதைக்காததை அறுக்கிறவருமான கடினமனுஷனென்று உமக்குப் பயந்திருந்தேனென்றான்.

௨௨ ஆனால் அவன் இவனுடனே: * உன் வாயினாலே உன்னைக் குற்றந்தீர்க்கிறேன், பொல்லாத ஊழியக்காறா, நான் வைக்காததை எடுக்கிறவனும் நான் விதைக்காததை அறுக்கிறவனுமான கடினமனுஷனென்றறிந்திருந்தாயே, * மத். ௰௨, ௩௭.

௨௩ பின்னை ஏன் என் திரவியத்தைக் காசுக்கடையிலே கொடாதேபோனாய், அப்போ நான் வந்து வட்டியுடனே அதை வரப்பற்றிக் கொள்ளுவேனென்று சொல்லி,

௨௪ அண்டைநிற்கிறவர்களோடே: அந்த றாத்தலை அவனையிலே வாங்கி, பத்து றாத்தலுள்ளவனுக்குக் கொடுங்கோளென்றான்.

௨௫ அப்போ அவனுடனே: ஆண்டவனே, அவனுக்குப் பத்து றாத்தல் இருக்குதேயென்றார்கள்.

௨௬ ஆனால் அவன் சொன்னது: உள்ளவனுக்குக் கொடுக்கப்படும், இல்லாதவனையிலேயென்றால் அவனுக்குள்ளதும் வாங்கப்படுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௭

௨௭ பின்னையும் நான் தங்களின்மேலே ராசாவாயிருக்கிறதற்கு மனதில்லாத அந்த என்னுடைய சத்துருக்களை இங்கே கொண்டுவந்து, என்க்குமுன்பாக வெட்டிப்போடுங்கோளென்று சொன்னார்.
௨௮ இதுகளைச் சொல்லி அவர் யெருசலேமுக்குப் போயனமுன்னுக்கு நடந்தார்.

¶ கிறீஸ்து யெருசலேமுக்குள் பிரவேசம் பண்ணினது. * மத். ௨௧, ௧—௰௧. மாற்கு. ௰௧, ௧—௰. யோவா. ௰௨, ௨—௰௯.

௨௯ அப்போ சம்பவித்ததாவது, அவர் ஒலிவமலையென்னப்பட்ட பர்வதத்துக்கருகான பெத்பகேக்கும் பெத்தானியாவுக்கும் சமீபித்தபோது அவர் தம்முடைய சீஷரிலிரண்டுபேரையனுப்பி, சொன்னதாவது:
௩௰ எதிராகயிருக்கிற கிராமத்துக்குப் போங்கோள், அதிலே பிரவேசித்து, மனுஷரிலொருத்தனும் ஒருக்காலுமேறியிராத ஒரு கழுதைமறியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள், அதை அவிழ்த்துக் கொண்டுவாருங்கோள்.
௩௰௧ அதை ஏன் அவிழ்க்கிறீர்களென்று யாதொருத்தன் உங்களைக் கேட்டால், அது கர்த்தருக்குத் தேவையாயிருக்கிறதென்று அவனுக்குச் சொல்லுங்கோளென்றார்.
௩௰௨ அனுப்பப்பட்டவர்கள் போய் அவர் தங்களுக்குச் சொன்னபிரகாரமாகக் கண்டுபிடித்தார்கள்.
௩௰௩ அவர்கள் மறியை அவிழ்க்கும்போது, அதின் செமானர்கள் அவர்களுடனே: மறியையேன் அவிழ்க்கிறீர்களென்றார்கள்.
௩௰௪ அவர்களோவென்னில்: அது கர்த்தருக்குத் தேவையாயிருக்கிறதென்று சொல்லி,
௩௰௫ அதை யேசுவினிடத்துக்குக் கொண்டுவந்து, தங்கள் வஸ்திரங்களை மறியின்மேலே போட்டு, யேசுவை அதின்மேலேறப்பண்ணினார்கள்.
௩௰௬ அவர் போகையில், தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்துப்போட்டார்கள்.
௩௰௭ அவர் ஒலிவமலையிறக்கத்துக்குச் சமீபித்தபோது சீஷருடைய திரளெல்லாம், தாங்கள் கண்ட சகல வல்லமைகளுக்காகவும் சந்தோஷப்பட்டவர்களாய், பராபரனை மகா சத்தத்துடனே துதிக்கத்துவக்கி:
௩௰௮ * கர்த்தருடைய நாமத்திலே வருகிற ராசா ஸ்தோத்திரிக்கப்பட்டவர், பரமண்டலத்திலே சமாதானமும் உன்னதங்களிலே மகிமையும் உண்டாவதாக என்றார்கள். * சங்கீ. ௱௰௮, ௨௬.
௩௰௯ அப்போது பரிசேயரிலே சிலர் அவருடனே: போதகரே, உம்முடைய சீஷரை அதட்டுமென்றார்கள்.
௪௰ அதற்கு அவர் அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக: இவர்கள் மவுனமாயிருந்தால் கல்லுகள் கூப்பிடுமென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்றார்.

¶ அவர்

¶ அவர் யெருசலேமுக்காக அழுதது.

௪௧ அவர் சமீபித்தபோது பட்டணத்தைப் பார்த்து அதின்மேல் அழுது:
௪௨ நீயும், இந்த உன்னுடைய நாளிலாகிலும், உன் சமாதானத்துக்கானதுகளை + அறிந்தாலதாவிளா, இப்போதோ வென்றால் உன் கண்களுக்கும் மறைவாயிருக்குது. + ௫. மோ. ௩௨, ௨௯.
௪௩ அதேதென்றால், + உன்னைச் சந்திக்குங் காலத்தை நீ அறியாமல் போனபடியினாலே உன் சத்துருக்கள் உன்னைச் சூழத்தெத்துப்போட்டு உன்னை வளைந்துகொண்டு, எங்கும் உன்னை நெருக்கப்பிடித்து, + மத். ௨௩, ௩௭.
௪௪ உன்னையும் உன்னிலிருக்கிற உன் பிள்ளைகளையுந் தரையாக்கிப்போட்டு, உன்னில் + கல்லின்மேல் கல்லிலவைக்காதிருக்கும் நாட்கள் உன்மேல் வருமென்றார். + ௨௧, ௬.

¶ விற்பாரையுங் கொள்வாரையும் அவர் தேவாலயத்திலிருந்து துரத்தினது. மத். ௨௧, ௰௨—௰௪. மாற்கு. ௰௧, ௰௫.

௪௫ அவர் தேவாலயத்துக்குள் பிறவேசித்து, அதிலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத்தொடங்கி, அவர்களோடே:
௪௬ + நம்முடைய வீடு செபத்தின் வீடாயிருக்குமென்றெழுதியிருக்குது, ஆனால் நீங்கள் அதை ++ கள்ளர்கெபியாக்கினீர்களென்றார். + யெச. ௫௬, ௭. ++ யெரே. ௭, ௰௧.
௪௭ அவர் அனுதினமுந் தேவாலயத்திலே உபதேசித்துக்கொண்டிருந்தார். ஆனால் பிறதான ஆசாரியர்களும் வேதபாரகருஞ் சனத்தின் மூப்பரும் அவரைக் கொன்றுபோட வகைதேடி,
௪௮ அதைன்படி செய்வதென்று காணாமற் போனார்கள்: ஏனென்றால் சனமெல்லாம் அவரைக் கேட்டுக்கொண்டிருந்தது.

## ௨௰. அதிகாரம்.

¶ யேசுவினுடைய அதிகாரத்தைக்குறித்து மூப்பர்கள் வந்து கேட்டது. மத். ௨௧, ௨௩—௨௭. மாற்கு. ௰௧, ௨௭. ஷ.

அந்நாட்களிலொருநாளிலே சம்பவித்ததென்னவென்றால். அவர் தேவாலயத்திலே சனத்தை உபதேசித்து, சுவிசேஷத்தைப் பிறசங்கிக்கிறபோது, பிறதான ஆசாரியர்களும் வேதபாரகரும் மூப்பரோடேகூட வந்துநின்று,
௨ அவரோடே: நீர் எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறீர், அல்லது உமக்கிந்த அதிகாரத்தைக் கொடுத்தவராரென்றெங்களுக்குச் சொல்லுமென்றார்கள்.
௩ அவரோவென்றால் அவர்களுக்குப் பிறதியுத்

தார

காரமாக: நானும் உங்களை ஒரே வார்த்தையைக் கேட்பேன், அதற்குச் சொல்லுங்கோள்.

௪ யோவானுடைய ஞானஸ்நானம் பரமண்டலத்தினின்றுண்டாயிருந்ததோ, அல்லது மனுஷரால் உண்டாயிருந்ததோவென்றார்.

௫ ஆனால் அவர்கள் தங்களுக்குள்ளே யோசனைபண்ணி: பரமண்டலத்தினின்றென்றோமானால், பின்னை ஏன் அவனை விசுவாசியாதே போனீர்களென்பார்.

௬ மனுஷராலென்றோமேயாகில் சனமெல்லாம் நம்மைக் கல்லெறியும், ஏனெனில் யோவானைத் தீர்க்கதரிசியென்று நம்பியிருக்கிறார்களென்று சொல்லி,

௭ எதினாலுண்டானதென்றறிந்தது அறியோமென்று பிரதியுத்தாரஞ்சொன்னார்கள்.

௮ அப்போ யேசு அவர்களோடே: நானும் எந்த அதிகாரத்தினாலே இதுகளைச் செய்கிறேனென்று உங்களுக்குச் சொல்லேனென்றார்.

¶ பொல்லாத்தீவிதாட்சத்தோட்டக்காறர் உவமை. மத். ௨௧, ௩௩. ௸. மாற்கு. ௰௨, ௧—௰௨.

௯ பின்பு அவர் சனத்துடனே சொல்லத்துவக்கின உவமையாவது: ஒரு மனுஷன் தீவிதாட்சத்தோட்டத்தை நாட்டி, அதைத் தீவிதாட்சத்தோட்டக்காறருக்குக் கொடுத்து, வெகுகாலங்களாய்ப் புறதேசத்தில் போயிருந்தான்.

௰ தருணகாலத்தில் அந்தத்தோட்டக்காறர் தீவிதாட்சத்தோட்டத்தின் கனியிலே சிலதைத் தனக்குக் கொடுக்கும்படி, அவனொரு ஊழியக்காறனை அவர்களிடத்துக்கனுப்பினான், ஆனால் தோட்டக்காறர் அவனை அடித்து வெறுமையே அனுப்பிவிட்டார்கள்.

௰௧ அவன் வேறொரு ஊழியக்காறனைத் திரும்பவும் அனுப்பினான். அவர்களோவெனில் அவனையும் அடித்து நிந்தைப்படுத்தி வெறுமையே அனுப்பிவிட்டார்கள்.

௰௨ அவன் மூன்றாம் ஊழியக்காறனைத் திரும்பவும் அனுப்பினான், ஆனால் அவர்கள் அவனையுங் காயப்படுத்தித் துரத்திவிட்டார்கள்.

௰௩ அப்போ தீவிதாட்சத்தோட்டத்து எசமான்: நானென்னசெய்வேன், என்பிரியமான குமாரனை அனுப்புவேன், அவனையாகிலுங்கண்டு கூசுவார்களென்றான்.

௰௪ ஆனால் தோட்டக்காறர் அவனைக் கண்டபோது: இவன் சுதந்திரவாளியாயிருக்கிறான், சுதந்திரம் நம்முடையதாகும்படிக்கு அவனைக் கொல்லுவோமென்று தங்களுக்குள்ளே யோசனைபண்ணிப்பட்டு,

௰௫ அவனைத் தீவிதாட்சத்தோட்டத்துக்கு வெளியே தள்ளி, கொன்றுபோட்டார்கள், ஆகையால் தீவிதாட்சத்தோட்டத்து எசமான் அவர்களையென்ன செய்வார்.

௰௬ வந்து இந்தத்தோட்டக்காறரைச் சங்கரித்து,

திராட்சத்தோட்டத்தை அன்னியருக்குக் கொடுப்பாரே
ன்றார், அவர்கள் அதைக் கேட்டு: அப்படியாகாதிருப்ப
தாக என்றார்கள்.

௰௭ ஆனால் அவர் அவர்களை நோக்கிப்பார்த்து: பே
போதும், வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின
கல்லே கோடிக்குத் தலையான கல்லாச்சுதென்
றெழுதியிருக்கிறதென்ன.

௰௮ அந்தக் கல்லின் மேல் விழுகிறவனெவனும்
நொறுங்கப்படுவான், அது எவன் மேல் விழுமோ அவன் மேல்
விழுந்தோ அவனை நசுங்கடிக்குமென்றார். * ஏசா.
௮, ௰௪. ௰௫.

௰௯ அந்நேரத்திலே தானே பிரதான ஆசாரியர்
களும் வேதபாரகரும் அவர் மேலே கைகளைப் போ
டவகைதேடி, சனத்துக்குப் பயந்திருந்தார்கள். ஏ
னென்றால் இந்த உவமையைத் தங்கள் மேலே சொன்னாரே
ன்றறிந்தார்கள்.

¶ ராயனுடைய வரிக்காகக் கேட்டதுக்குச் சொன்
ன உத்தரவு. மத். ௨௨, ௰௫—௨௨.
மாற்கு. ௰௨, ௰௩—௰௭.

௨௰ அவர்கள் சற்பனையாய்க் காத்திருந்து, தா
ங்கள் நீதிமான்களென்று மாயம் பண்ணும் வேவுகா
ரர்களை, அவரை வசனத்திலே குற்றம் பிடிப்பதற்கு
துரையின் ஆதீனத்துக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்
புக்கொடுப்பதற்குமாக, அனுப்பினார்கள்.

௨௧ அவர்கள்: போதகரே, நீர் நிதானமாய்ப் பே
சிப் போதிக்கிறீரென்றும், முகம் பாராமல் சத்
தியமாய்ப் பராபரனுடைய வழியைப் போதிக்கி
றீரென்றும் அறிந்திருக்கிறோம்,

௨௨ ராயனுக்கு வரி கொடுக்கிறது நமக்கு நியாயமோ
அல்லவோ என்றவரைக் கேட்டார்கள்.

௨௩ அவரோ அவர்களுடைய தந்திரத்தை
உணர்ந்திருந்து, அவர்களுடனே: நீங்கள் என்னை
சோதிப்பானேன்.

௨௪ பணத்தைத் தனக்குக் காண்பியுங்கோள், அது
யாருடைய சுருபமும் மேலெழுத்துமிருக்குதென்
றார். அவர்கள் பிரத்தியுத்தரமாக: ராயனுடைய
தென்றார்கள்,

௨௫ அப்போ அவர் அவர்களுடனே: ஆகையால்
ராயனுடையதை ராயனுக்கும் பராபரனுடையதைப்
பராபரனுக்குங் கொடுங்கோளென்றார். * ரோ. ௰௩, ௭.

௨௬ அவர்கள் சனத்துக்கு முன்பாக அவரை வசன
த்திலே குற்றம் பிடிக்கக் கூடாமல், அவர் உத்தரத்துக்
கு ஆச்சரியப்பட்டு மௌனமாயிருந்தார்கள்.

¶ மரித்தோர் எழுந்திருப்பது மெய்யென்றொ
ப்பித்தது. மத். ௨௨, ௨௩—௩௩.
மாற்கு. ௰௨, ௰௮—௨௭.

௨௭ ஆனால் உயிர்த்தெழுந்தலில்லையென்று தர்க்
கிக்கிற சதுசேயரில் சிலர் சேர்ந்து வந்து. அவரைக் கே
ட்டதாவது:

௨௮ போதகரே, * ஒருத்தனுடைய சகோதரன்,
பெண்

பெண்சாதி தனக்கிருக்கக் கொள்ளா, பிள்ளையில்லாதவனாய் மரித்தால், அவன் சகோதரன் அவன் பெண்சாதியை விவாகம்பண்ணி, தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேணுமென்று மோசே எங்களுக்கெழுதிவைத்தான். ✱ரு. மோ. ௨ரு, ரு.

௨௯ இப்போதும் ஏழு சகோதரரிருந்தார்கள், முந்தினவன் பெண்சாதியை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாதவனாய் மரித்தான்.

௩௰ இரண்டாஞ்சகோதரன் அந்தப் பெண்சாதியை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாதவனாய் மரித்தான்.

௩௧ மூன்றாஞ்சகோதரனும், அப்படியே ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணி, பிள்ளைகளைப் பின் வைக்காமல் மரித்தார்கள்.

௩௨ எல்லாருக்குங் கடைசியிலே பெண்சாதியும் மரித்தாள்.

௩௩ இப்போதும் உயிர்த்தெழுதலில் அவர்களில் ஆருடைய பெண்சாதியாவாள், ஏழுபேரும் அவளைப் பெண்சாதியாகப் படைத்திருந்தார்களே என்றார்கள்.

௩௪ யேசு பிரத்தியுத்தரமாக அவர்களுக்குச் சொன்னதாவது: இந்தப் பிறவத்துச் சந்ததின் பிள்ளைகள் பெண்கொண்டு கொடுக்கிறார்கள்.

௩௫ ஆனால் அந்த லோகத்தையும் மரித்தோரிலிருந்தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரவான்களாய் எண்ணப்பட்டவர்களுக்குக் கொள்வினையுமில்லை கொடுப்பினையுமில்லை.

௩௬ ஏனெனில் அவர்கள் இனி மரிக்கவுங்கூடாமல் தேவதூதர்களுக்குச் சரியாயிருந்து, தாங்கள் உயிர்த்தெழுந்தலின் பிள்ளைகளானபடியால் பராபரனுடைய பிள்ளைகளுமாயிருக்கிறார்கள்.

௩௭ ஆனால் மரித்தோரெழுந்திருக்கிறதை ✱மோசேயும் முட்செடியைக் குறித்தெழுதின சரித்திரத்திலே கர்த்தரை ஆபிறகாமுடைய பராபரனென்றும் ஈசாக்குடைய பராபரனென்றும் யாக்கோபுடைய பராபரனென்றும் சொல்லுகிறதினாலே தெரியப்பண்ணினான். ✱௨. மோ. ௩, ௬.

௩௮ பராபரனோவெனில் மரித்தோருடைய பராபரனாயிராமல் சீவனுள்ளோருடைய பராபரனாயிருக்கிறார், ஏனென்றால் அவர்களெல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே என்றார்.

௩௯ அப்போ வேதபாரகரில் சிலர் பிரத்தியுத்தரமாக: போதகரே, நன்றாய்ச் சொன்னீரென்றார்கள்.

௪௰ அப்புறம் அவர்கள் அவரை ஒன்றுங் கேட்கத் துணிந்ததில்லை.

¶ கிறிஸ்து ஆருடைய குமாரனென்பது. மத். ௨௨, ௪௧. ௸. மாற்கு. ௰௨, ௩௫—௩௭.

௪௧ அவரோவெனில் அவர்களுடனே சொன்னதாவது: கிறிஸ்து தாவீதின் குமாரனாயிருக்கிறாரென்றெப்படிச் சொல்லுகிறார்கள்.

௪௨ கர்த்தர் என் ஆண்டவருடனே: நாம் உம்முடைய

சத்

ச்சத்துருக்களை உம்முடைய பாதப்படியாக்கிப் போடுமட்டும்,
௪௩ நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காருமென்று என்றே தாவீதானவன் * சங்கீதப்புஸ்தகத்திலே சொல்லுகிறான் ; * சங். ௱௰. க.
௪௪ இப்போதும் தாவீது அவரை ஆண்டவரென்கிறானே, பின்னையெப்படி அவனுடைய குமாரனாயிருக்கிறாரென்றார்.

¶ வேதபாரகருடைய மாயத்தைக் காணபிக்கிறது. மத். உ௩, க. ௵. மாற்கு. ௰௨, ௩௮—௪௰.

௪௫ ஜனமெல்லாங் கேட்க அவர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது:
௪௬ நீள வஸ்திரங்களைத் தரித்து நடக்க மனதாயிருந்து, சந்தைகளிலே வந்தனங்களையும் ஜெப ஆலயங்களிலே முதன்மையான ஆசனங்களையும் விருந்துகளிலே முதலிடங்களையும் விரும்பி,
௪௭ * விதவைகளின் வீடுகளைப் பட்சித்து, பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுகிற வேதபாரகருக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருங்கோள், இவர்கள் அதிக்க ஆக்கினையடைவார்களென்றார்.

## உக. அதிகாரம்:

¶ ஜனங்கள் தங்கள் காணிக்கைகளைப் போடுகிற விதத்தைக் கிறிஸ்து நோக்கிப் பார்த்தது. மாற்கு. ௰௨, ௪௧. ௵.

அவர் கண்ணேறெடுத்துப் பார்க்கிறபோது, தங்கள் காணிக்கைகளைத் தருமப்பெட்டியிலே போடுகிற ஐசுவரியவான்களைக் கண்டார்.
௨ ஆனால் இரண்டு காசை அதிலே போடுகிற ஒரு ஏழை விதவையையும் அவர் கண்டு:
௩ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த ஏழை விதவை எல்லாரைப் பார்க்கிலும் அதிகம் போட்டாள்.
௪ எப்படியெனில் இவர்களெல்லாரும் தங்கள் பரிபூரணத்திலெடுத்து, பராபரனுடைய காணிக்கைகளுக்குப் போட்டார்கள், இவளோவென்றால் தன் தாழ்ச்சியிலெடுத்து, தனக்குள்ள சீவனத்தையெல்லாம் போட்டாளென்றார்.

¶ அவர் எருசலேமின் அழிவையும் லோகத்தின் முடிவையுங் குறித்துச் சொன்னது. மத். உ௪, க. ௵. மாற்கு. ௰௩, க. ௵.

௫ சிலர் தேவாலயத்தைக் குறித்து: அது நல்ல கற்களினாலும் காணிக்கைச் சிறப்புகளினாலும் சோடிக்கப்பட்டிருக்கிறதென்று சொன்னபோது,
௬ அவர்: நீங்கள் பார்க்கிற இதுகளுக்குள்ளே நாள்கள் வரும், அப்போது இடிக்கப்படாமல் கல்லின்

மேல்

மேலொருகல்லும் மவிக்கப்படுவதில்லையென்றார்.
௭ அவர்களவரை: போதகரே, இதுகளெப்போவரும், இதுகள் சம்பவிக்கப்போற காலத்துக் கடையாளமென்னவென்று கேட்டார்கள்.
௮ அதற்கவர் சொன்னதாவது: நீங்கள் மோசம் போகப்படாதபடிக்குப் பாருங்கோள், ஏனெனில் அனேகர் என் பேர்கொண்டு, நான் தானென்று சொல்லுவார்கள்; அந்தக்காலஞ்சமீபித்திருக்குது: ஆகையாலவர்கள் பிறகே போகாதேயுங்கோள்.
௯ உயித்தங்களைக் கலகங்களுடைய செய்தியை நீங்கள் கேட்கும்போதோ வென்றால், திகிலடையாதேயுங்கோள்; ஏனெனில் இதுகள் முன் நடக்கவேண்டியது; முடிவோ உடனே வராதென்றார்.
௰ அப்போ அவரவர்களுக்குச் சொன்னதாவது: சாதிக்குச் சாதியும் ராச்சியத்துக்கு ராச்சியமும் விரோதமாகஎழும்பும்.
௰௧ அந்தந்தத் தேசங்களிலே பெரிய பூமியதிர்த்தல்களும் பஞ்சங்களும் பெருவாரிக்காச்சல்களும் உண்டாயிருக்கும், வானத்திலிருந்து பயங்கரங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாம்.
௰௨ இதுகளெல்லாத்துக்கும் முன்னேயோ அவர்கள் உங்கள்மேலே + தங்கள் கைகளைப் போட்டு, என் நாமத்தினிமித்தியமாக உங்களைத் துன்பப்படுத்தி, ஆலயங்களுக்குஞ் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுப்பார்கள்; ராசாக்களுக்கும் துரைகளுக்கும் முன்பாகவுங் கொண்டுபோகப்படுவீர்கள். + யோவ. ௰௬. ௨.
௰௩ ஆனால் இது சாட்சியொப்புவிக்குதலாக உங்களுக்கு முடியும்.
௰௪ ஆகையாலெப்படி உத்தரஞ்சொல்லலாமென்று + முன்கவலைப்படாதிருக்குந்தனை உங்களிருதயங்களில் நிலைவையுங்கோள். + மத. ௰, ௰௯.
௰௫ ஏனெனில் உங்களுக்கு விரோதிக்கிறவர்களெல்லாரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவுங்கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். + ௨. யோ. ௬, ௰௨.
௰௬ ஆனால் பெற்றாராலும் + சகோதரராலும் பெந்துசனங்களாலுஞ் சிநேகிதராலும் முதலாய்க் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள், உங்களிலே சிலரைக் கொன்றுபோடுவார்கள். + மீகா. ௭, ௬.
௰௭ என் நாமத்தினிமித்தியமாக எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள்.
௰௮ + ஆனாலுங்கள் தலையிலொரு மயிரும் அழியாது. + ௰௨, ௭.
௰௯ உங்கள் பொறுமையிலே உங்களாத்துமங்களைக் காத்துக்கொண்டிருங்கோள்.
௨௰ யெருசலேம் சேனைகளாலே சூழப்பட்டதை நீங்கள் காணும்போதோவென்றால் அதின் அழிவு சமீபித்ததென்றறியுங்கோள்.
௨௧ அப்போ யூதேயாவிலிருக்கிறவர்கள் பருவதங்களுக்கோடிப்போகவும், அதின் நடுவிலிருக்கிறவர்கள் வெளியேபடவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் அதற்குள்ளே வராதிருக்கவுங்கடவார்கள்.

௨௨ ஏனென்றால் எழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேறும்படியாய், நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அதுகள்தானே.

௨௩ ஆனாலும் அந்நாட்களிலே கெற்பவதிகளுக்கும் முலைகொடுக்கிறவர்களுக்கும் ஐயோ, ஏனெனில் தேசத்தின் மேலே மகா உபத்திரவமும் இந்தச் சனத்தின் பேரிலே கோபமும் உண்டாயிருக்கும்.

௨௪ பட்டயக் கூர்மையினாலே விழுவார்கள், சகல சாதிகளிடத்திலுஞ் சிறைப்பட்டுப் போவார்கள், யெருசலேமோவென்றால் புறசாதிகளுடைய காலங்கள் * நிறைவேறுமட்டாக, புறசாதிகளாலே மிதிக்கப்பட்டதாயிருக்கும். * ரோ. ௰௧, ௨௫.

௨௫ சூரியனிலுஞ் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்களும் பூமியின் மேலிருக்கிற சாதிகளுக்குள்ளே கலக்கமான மனநெருக்கமும் உண்டாம், சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். * யேச. ௰௩, ௰.

௨௬ பூச்சக்கரத்தின் மீதில் வருங்காரியங்களுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினாலே மனுஷர் சோர்ந்து போவார்கள், ஏனெனில் வானங்களின் பெலன்கள் அசையும்.

௨௭ அப்போ * மனுஷனுடைய குமாரன் மேகத்திலே வல்லமையோடும் மகிமையோடும் வரக் காண்பார்கள். * அப்போ. ௧, ௰௧.

௨௮ இதுகள் சம்பவிக்கத் துடங்கும்போதோவென்றால் நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை ஏறெடுங்கோள், அதேனென்றால் * உங்கள் மீட்பு சமீபிக்குதே. * ரோம. ௮, ௨௩.

௨௯ ஒரு உபமானத்தையும் அவர்களுக்குச் சொன்னார். அத்திமரத்தையுஞ் சகல மரங்களையும் பாருங்கோள்.

௩௰ அதுகள் துளிர்விடுகையிலே வசந்தகாலஞ் சமீபமாச்சுதென்று அதுகளாலே கண்டறிகிறீர்கள்.

௩௧ அப்படியே நீங்களும் இதுகள் சம்பவிக்கிறதைக் காணும்போது, பராபரனுடைய ராச்சியஞ் சமீபமாயிருக்குதென்றறியுங்கோள்.

௩௨ மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், எல்லாஞ் சம்பவிக்குமட்டும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாது.

௩௩ * வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோகாது. * யசா, யஎ. சங்கீ. ௱௨, ௨௭.

௩௪ உங்களிருதயங்கள் ஒருவேளை * பெருந்தீனடியினாலும் வெறியினாலும் பிழைப்பின் கவலைகளினாலும் பாரமாக்கப்பட்டு, அசுப்பிலே அந்தநாள் உங்கள்மேலே வராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கோள். * ரோ. ௰௩, ௰௩. எபே. ௫, ௰௮.

௩௫ அதேனென்றால் பூமியின்மேலெல்லாங் குடியிருக்கிறவர்மேலும் அது * ஒரு கண்ணியைப்போலே வரும். * ௧. தெச. ௫, ௩.

௩௬ ஆகையால் சம்பவிக்கப்போற இதுகளுக்கெல்லாம் நீங்கள் தப்பிவிடக்கொண்டு, மனுஷனுடைய குமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக

எண

எணணபபடுவதறகு, எலலாககாலஙகளிலுஞசெபம
பணணிமுழிததிருஙகோளளுஙகள.
௩எ அவர்பகலகாலஙகளிலெதெயவாலய
ததிலெஉபதேசிததிருநது, ராககாலஙகளிலெவெளி
யெபோயஒலிவமலையெனனபபடடபறுவததிலெ
தஙகுவார்.
௩அ சனமெலலாமஅவரைககெட்கஅதிகாலமெ
தெயவாலயததிலஅவரணடைககுவருவார்கள.

## உஉ. அதிகாரம.

¶ யெசுவைககாடடிககொடுககயூதாபொருந
ததககொணடது. மத. உசு, க—யசு.
மாறகு. யசு, க—யக.

க பஸகாஎனனபபடடபுளிபபிலலாஅபபஙக
ளினபணடிகைசமீபிததது.
உ அபபொபிரதானஆசாரியருஞவெதபாரகரு
ம, அவரைஎநதபபடிபோககிவிடுவதெனறுவழிகை
தெடினார்கள, ஏனெனிலசனததுககுபபயமாயிருந
தார்கள.
௩ பனனிருவர்துணைககுளளானஇஸகாரி
யோததெனறுமறுபேர்கொணடயூதாவுககுளசாத
தானபுகுநதது.
௪ அவனபோய: நானஅவரைஉனனிடததிலக
காடடிககொடுபபெனெனறுபிரதான
ஆசாரியர்களொடுஞசேனைவகாறரோடுமபெசிக
கொணடான.
௫ அவர்களசநதோஷபபடடு, அவனுககுததிரவிய
ஙகொடுககததிர்மானிததார்கள.
௬ அவனவாககுககொடுதது, அவரைசசநதடியில
லாமலஅவர்களுககுககாடடிககொடுககசசமயந
தெடினான.

¶ சீஷருடனெபஸகாவைப
போசிததது. மத. உசு, யஎ—உரு.
மாறகு. யசு, யஉ—உக.

எ பஸகாவைபபலியிடவெணடியபுளிபபி
லலாஅபபஙகளுடையநாளவநதது.
அ அபபொதவர்பெதுருவையுமயோவானையும
அனுபபி: நாமபஸகாவைபபோசிககததககதாகநீஙக
ளபோயஅதைநமககுஆயததமபணணுஙகோளென
றார்.
௯ அவர்களஅவரடனெ: நாஙகளெஙகெஆயதத
மபணணஉமககுசசிததமெனறுகேடடார்கள.
ய அவர்அவர்களுடனெசொனனதாவது: நீஙகளபடடணததுககுளபிரவெசிககுமபொது, த
ணணீர்ககுடஞசுமநதுவருகிறவொருமனுஷனுஙக
ளுககெதிர்பபடுவான, அவனுளபொறவீடடுககு
நீஙகளஅவனபினனெசெனறு,
யக அநதவீடடுஎசமானனுடனெ: நானஎனசீஷ
ரொடுஙகூடபஸகாவைபபோசிககததககதஙகுமிட
மெங

ரெஙகேயெனறுபோதகர உனனைககேடடனுபபு
கிறரெனறுசொலலுஙகோள.
௰௨ அவன உஙகளுககுததளவரிசைபபடுததிருககிற
பெரியமேலவீடடைககாணபிபபான, அஙகே ஆ
யிததமபணணுஙகோளளெனறார.
௰௩ அவரகளபோய, அவரதஙகளுடனேசொன
னபிரகாரமாக * கணடுபிடிதது, பஸ்காவை ஆயிதத
மபணணினாரகள. * ௰௯, ௩௨.
௰௪ வேளைவநதபோது அவருமஅவருடனேகூட
பனனிரணடு அபபோஸதலருமபநதியிருநதாரகள.
௰௫ அபபோ அவரவரகளுடனே: நானபாடுபடு
கிறதுககுமுனனே இநதபபஸ்காவை உஙகளுடனே
புசிககமிகவுமவாஞசைபபடடேன.
௰௬ ஏனெனறால பராபரனுடையராசசியத
திலே அதுநிறைவேறுமட்டாகுமஅதிலேபோசியே
னனெனறுஙகளுககுசசொலலுகிறேனெனறுசொ
லலி,
௰௭ பாததிரததைஎடுததுககொணடு, ஸ்தோத
திரிதது: நீஙகளிதைவாஙகிஉஙகளுககுளளே பங
கிடடுககொளளுஙகோள.
௰௮ ஏனெனறால, பராபரனுடையராசசியமவரு
மடடாசதிராடசககனியினரசததிலேகுடியேனெ
னறுஙகளுககுசசொலலுகிறேனெனறார.

¶ அவரபரிசுததராபபோசனததைககடடளை
யிடடது. மத. ௨௬, ௨௬—௨௯.
மாறு. ௰௪, ௨௨—௨௫.

௰௯ அவர * அபபததைஎடுததுககொணடு ஸ்தோ
ததிரமபணணி, அதைபபிடடு அவரகளுககுக
கொடுதது: இதுஉஙகளுககாககககொடுககபபடுகிற
எனனுடையசரீரமாயிருககுது, இதைஎனனைநினை
ககிறதுககாகசசெயயுஙகோளெனறார. * ௧. கொ.
௰௧, ௨௩—௨௫.
௨௰ அநதபபடியேராபபோசனமபணணினதுக
குபபிறபாடு அவரபாததிரததையுஙகொடுததுசசொன
னதாவது: இநதபபாததிரமஉஙகளுககாகசசிநதபபடுகி
றஎனனுடையஇரததததிலேபுதுஉடனபடிககையா
யிருககுது,
௨௰௧ ஆகிலுமஇதோ, எனனைககாடடிககொடுககிற
வனுடையகைஎனனுடனேகூடபநதியிலேயிருககுது.
௨௰௨ மெயயதான, நிறணிககபபடடபடியேமனுஷ
னுடையகுமாரனபோறார, ஆகிலுமஎவனாலேகாடடி
ககொடுககபபடுகிறாரோ, அநதமனுஷனுககையயோ
வெனறார.
௨௰௩ அபபோதஙகளிலஆரிதைநடபபிககபபோ
றவனெனறு அவரகளஒருவரககொருவரவிசாரிக
கததுடஙகினாரகள.

¶ சீஷரிலேஉணடானவாதுவாககு
௨௰௪ * தஙகளிலேபெரியவனாயெணணபபடுவே
வனெவனெனகிறவாதுவாககுமஅவரகளுககுளளுண
டாசசுது,

௨௫ ஆனால் அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: சாதிகளுடைய ராசாக்கள் அவர்களை ஆண்டுகொள்ளுகிறார்கள், அவர்களுடைய அதிகாரிகளும் உபகாரிகளென்று அழைக்கப்படுகிறார்கள்.

௨௬ ஆனால் * உங்களில் அப்படி வேண்டாம், உங்களில் பெரியவன் சிறியவனைப்போலும் தலைவன் பணிவிடை செய்கிறவனைப்போலும் இருக்கக்கடவான். * ௧ பே, ௫, ௧—௬.

௨௭ ஏனெனில் ஆர் பெரியவன், பந்தியிருக்கிறவனோ பணிவிடை செய்கிறவனோ. பந்தியிருக்கிறவனல்லவா. * நானோவென்றால் உங்கள் நடுவிலே பணிவிடை செய்கிறவனைப்போலிருக்கிறேன். * யோவ. ௰௩. ௰௪. பிலி. ௨, ௫—௮.

௨௮ ஆனால் என்னுடைய சோதனைகளிலே என்னுடனே காத்திருந்தவர்கள் நீங்கள்தானே.

௨௯ ஆகையால் என் பிதா எனக்கு ராட்சியத்தை உண்டாக்கப்பண்ணினதுபோல, அதை நான் உங்களுக்கும்,

௩௦ நீங்கள் என் ராட்சியத்திலே என் பந்தியிலே போசித்துக்குடித்து, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய் * ஆசனங்களின்மேலே உட்கார்ந்திருக்கும்படிக்கு, உடன்படிக்கைபண்ணுகிறேனென்றார். * மத. ௰௯, ௨௮.

¶ சாத்தான் சீமோனைத் தீர்க்கத்தேடுகிறதும்
உபத்திரகாலம் வருமென்றுங் கிறிஸ்து
எச்சரித்தது.

௩௧ பின்னையுங் கர்த்தர் சொன்னதாவது: சீமோனே, சீமோனே, இதோ * சாத்தான் உங்களைக் கோதுமையைப்போலச் சலிக்கத்தக்கதாக விடச்சொல்லிக் கேட்டது. * ௧. பேது. ௫, ௮.

௩௨ ஆனால் உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு நான் உனக்காக வேண்டிக்கொண்டேன், நீயின்னந் திரும்பினபின், உன் சகோதரரைத் திடப்படுத்தென்றார்.

௩௩ ஆனால் அவன் அவருடனே: ஆண்டவரே, உம்முடனே கூடக் காவலிலுஞ் சாவிலும் போகத்துக்காயித்தமாயிருக்கிறேனென்றான்.

௩௪ அவரோவென்றால்: * பேதுருவே, நீ என்னை அறியேனென்று மூன்றுதரம் மறுதலிக்கிறதுக்கு முன்னே இன்றைக்குச் சாவல் கூவாதென்றுனக்குச் சொல்லுகிறேனென்றார். * யோவ. ௰௩, ௩௮.

௩௫ பின்னையும் அவர் அவர்களுடனே: நான் உங்களை * பையும் வட்டுவமும் பாதரட்சைகளுமில்லாமல் அனுப்பினபோது ஏதாகிலும் உங்களுக்குக் குறைப்பட்டதோவென்றார். அவர்கள்: ஒன்றுங் குறைப்பட்டதில்லையென்றார்கள். * ௯, ௩. மத. ௰, ௯. ௰.

௩௬ அவர் அவர்களுடனே சொன்னதாவது: இப்போதோவென்றால், பையுடையவன் அதை எடுத்துக்கொள்ளக்கடவான், வட்டுவத்தையும் அப்படியே, பட்டயமில்லாதவன் தன் வஸ்திரத்தை விற்றொன்றைக்கொள்ளக்கடவான்.

௩௭

௩௭ ஏனெனில்: * அக்கிரமக்காரரில் ஒருத்தனாக எண்ணப்பட்டாரென்றெழுதியிருக்கிறது முதலாய் இன்னமும் என்னிடத்தில் நிறைவேறவேண்டியதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன், அதேனென்றால் என்னைக்குறித்தெழுதியிருக்கிறதுகளுக்கு நிறைவேறுதலுமிருக்குதே என்றார். * யெசா. ௫௩, ௰௨.
௩௮ ஆனாலவர்கள்: ஆண்டவரே, இதோ இரண்டு பட்டயமிங்கேயிருக்குதென்றார்கள். அவரோவெனில் அவர்களுடனே: போதுமென்றார்.

¶ அவர்பட்ட ஆத்துமப்பாடுகள். * மத். ௨௬, ௩௬—௪௬. மாற்கு. ௰௪, ௩௨—௪௨.

௩௯ அவர் * புறப்பட்டு, வழக்கத்தின்படியே ஒலிவமலைக்குப்போனார். ஆனாலவருடைய சீஷரும் அவரைப்பின்சென்றார்கள். * யோவா. ௰௮, ௧.
௪௰ அவர் அவ்விடத்துக்குவந்தபோது அவர்களுடனே: நீங்கள் சோதனைக்குள்ப்படாதபடிக்குச் செபம்பண்ணுங்கோளென்றார்.
௪௧ அவரவர்களைவிட்டுக் கல்லெறிதூரமப்பிறப்பட்டு முழங்காலப்படியிட்டுச் செபம்பண்ணி,
௪௨ பிதாவே, உமக்குச் சித்தமானால், இந்தப்பாத்திரத்தை என்னைவிட்டு நீங்கப்பண்ணும், எனக்கோ அல்ல உமக்கேக்கமாயிருக்கிறபடி ஆவதாகவென்றார்.
௪௩ ஆனால் வானத்திலிருந்தொரு தூதன் வந்து அவருக்குக் காணப்பட்டு அவரைப் பெலப்படுத்தினான்.
௪௪ அவர் மரண அவஸ்தையாகி, அதி உக்கிரத்துடனே செபம்பண்ணினார். ஆனால் அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.
௪௫ அவர் செபமுகிந்தெழுந்திருந்து, தம்முடைய சீஷரண்டைக்கு வந்து, அவர்கள் துக்கத்தினாலே நித்திரைபண்ணக்கண்டு
௪௬ அவர்களுடனே: நீங்கள் தூங்குகிறதென்ன, நீங்கள் சோதனைக்குள்ப்படாதபடிக்கு எழுந்திருந்து செபம்பண்ணுங்கோளென்றார்.

¶ அவர்பிடிபட்டது. மத். ௨௬, ௪௭—௫௬. மாற்கு. ௰௪, ௪௩—௫௨. யோவா. ௰௮, ௨—௰௪.

௪௭ அவர் இன்னம் பேசுகையில், இதோ கும்பு வந்தது, அவர்களுக்கு முன்னாகப் பன்னிருவரில் ஒருத்தனாகிய யூதாவென்னப்பட்டவன் நடந்துவந்து, யேசுவை முத்தமிட அவரண்டை சேர்ந்தான்.
௪௮ ஆனால் யேசு அவனுடனே: யூதாவே, முத்தத்தினாலே மனுஷனுடைய குமாரனைக் காட்டிக்கொடுக்கிறாயோவென்றார்.
௪௯ அவரைச் சுற்றியிருந்தவர்கள் சம்பவிக்கப்போகிறதைக் கண்டபோதோவெனில், அவருடனே: ஆண்டவரே, பட்டயத்தினாலே வெட்டுவோமோவென்றார்கள்.
௫௰ அவர்களில் ஒருத்தன் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காறனுடைய வலதுகாதை வெட்டினான்.

ருக யேசுவோ பிரதியுத்தாரமாக: இம்மட்டும்விடுங்களென்றுசொல்லி, அவனுடையகாதைத்தொட்டு அவனைக்குணமாக்கினார்.
ருஉ பிற்பாடு யேசு தம்முடடமேல வந்தபிரதானஆசாரியர்களோடுந் தேவாலய அதிகாரிகளோடும் மூப்பரோடுஞ் சொன்னதாவது: ஒருகள்ளனைப்போல புறப்பட்டுவருமாப்போலே, பட்டயங்களோடுந்தடிகளோடும் புறப்பட்டுவந்தீர்கள்.
ருங நான்தினமுந் தேவாலயத்தில உங்களுடனே கூட இருக்கையில நீங்கள் என்மேல கைகளை நீட்டினதில்லை, இதுவோவென்றால உங்களுடையவேளையும அந்தகாரத்தின வல்லமையுமாயிருக்குதென்றார்.
ருச அவர்கள் அவரைப்பிடித்து அவரைப்பிறதானஆசாரியனுடையவீட்டுக்குள்ளாகக்கொண்டுபோயவிட்டார்கள், ஆனால்பேதுரு தூரத்திலேபின்சென்றான்.

¶ அவர்பிறதானஆசாரியனரண்மனையிலே பட்டபாடுகளும்பேதுருவினாலமறுதலிக்கப்பட்டதும். மத். உசு. ருஎ முத மாற்கு, ௰ச, ருங. முத யோவ. ௰அ, ௰ரு—உஎ.

ருரு அவர்கள் முற்றத்தினநடுவிலேநெருப்பைமூட்டி, கூடிஉட்கார்ந்தபோது, பேதுருவும் அவர்கள்நடுவிலே உட்கார்ந்தான்,
ருசு ஆனால ஒருவேலைக்காரி அவன வெளிச்சத்தினடே உட்கார்ந்திருக்கக்கண்டு, அவனை உற்றுப்பார்த்து: இவனும அவனோடேயிருந்தானென்றாள்.
ருஎ அவனோ: பெண்ணே, அவனை அறியேனென்று அவரைமறுதலித்தான்.
ருஅ சற்றுநேரத்துக்குப்பிற்பாடுவேறொருத்தன் அவனைக்கண்டு: நீயும அவர்களில ஒருத்தனென்றான், பேதுருவோவென்றால: மனுஷனே நானல்லவென்றான்.
ருகூ ஏறக்குறைய ஒருமணித்தியாலத்துக்குப்பிற்பாடுமற்றொருத்தன்: மெய்யாயவேனும அவனோடேயிருந்தான், ஏனெனில்கலிலேயனாயிருக்கிறானென்றுதிட்டப்படுத்தினான்.
சுய ஆனால்பேதுரு: மனுஷனே, நீசொல்லுகிறதை அறியேனென்றான். உடனே அவனின்னம்பேசுகையிலசாவல்கூவிற்று,
சுக அப்போகர்த்தர்திரும்பி, பேதுருவைநோக்கிப்பார்த்தார். ஆனால்பேதுரு: சாவல்கூவுகிறதுக்குமுன்னேநீமூன்றுதரம்மறுதலிப்பாயென்றுகர்த்தர்தன்னோடேசொல்லியிருந்தவாறதையைநினைவுகூர்ந்து,
சுஉ வெளியேபுறப்பட்டு, மனங்கசந்தழுதான்.
சுங ஆனால *யேசுவைப்பிடித்துக்கொண்டிருந்தமனுஷர் அவரைப்பரியாசம்பண்ணி, அடித்து, * யெச. ருய, சு.
சுச அவரை முக்காடிட்டு, அவருடைய முகத்தில

த்திலே அறைந்து, உன்னை அடித்தவனாரென்கிறதை ஞானதிஷ்டியாலே சொல்லென்று அவரைக் கேட்டு,

௬௫ வேறே அநேகங்களை அவருக்குத் தூஷணமாகச் சொன்னார்கள்.

௬௬ பொழுதுவிடிந்தபோது, சனத்தினுடைய மூப்பரும் பிரதான ஆசாரியர்களும் வேதபாரகரும் கூட்டங்கூடி, தங்கள் ஆலோசனைச் சங்கத்தில் அவரைக் கொண்டுவந்து நிறுத்தி,

௬௭ நீ க்றீஸ்துவாயிருக்கிறாயோ என்றெங்களுக்குச் சொல்லென்றார்கள். ஆனால் அவர் அவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் சொன்னாலும் நம்பமாட்டீர்கள்.

௬௮ நான் கேட்டாலும் எனக்கு உத்தரஞ் சொல்லீர்கள், என்னை விடுதலையும் பண்ணீர்கள்.

௬௯ இதுமுதல் மனுஷனுடைய குமாரன் பராபரனுடைய வல்லமையின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருப்பாரென்றார்.

௭௰ அப்போதெல்லாரும்: ஆகையால் நீ பராபரனுடைய குமாரனோவென்று கேட்டார்கள். அவர் அவர்களுடனே: நீங்கள் சொல்லுகிறபடி நானேயென்றார்.

௭௧ அவர்களோவெனில்: இனி நமக்குச் சாட்சி தேவையென்ன, நாமதானே அவன் வாயினாலே கேட்டோமேயென்றார்கள்.

## ௨௩. அதிகாரம்.

ஸ்ரீ க்றீஸ்து பிலாத்துக்கும் ஏரோதேக்கும் முன்பாகப் பட்டபாடுகள். மத. ௨௭, ௧—௩௰. மாற்கு. ௰௫, ௧—௰௬. யோவா. ௰௮, ௨௮—. ௰௬, ௧—௰௯.

அவர்களுடைய கூட்டமெல்லாமெழுந்திருந்து, அவரைப் பிலாத்தனிடத்துக்குக் கொண்டுபோய்:

௨ இவன் சாதியை மாறுபாடாக்கிறவனாகவும், தன்னைத்தானே க்றீஸ்துராசா வென்றுசொல்லி ராயருக்குவரிகொடுக்கவேண்டாமென்கிறவனாகவும் இவனைக்கண்டுபிடித்தோமென்று அவரைக் குத்தஞ்சாட்டத்தொடங்கினார்கள்.

௩ பிலாத்து அவரை: நீ யூதருடைய ராசாவோவென்று கேட்டான். அவர் அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: நீர் சொல்லுகிறபடியேயென்றார்.

௪ ஆனால் பிலாத்து பிரதான ஆசாரியர்களோடுங் கும்பல்களோடும்: இந்த மனுஷனிடத்திலே குத்தமொன்றுங்காணேனென்றான்.

௫ அவர்களோவெனில் உறுதிப்பேசி: இவன் கலிலேயாதுவக்கி இவ்விடமட்டுக்கும் யூதேயாவெங்கும் போதகஞ்சொல்லி சனத்தைக்கெடுத்துவிடுகிறானென்றார்கள்.

௬ ஆனால் கலிலேயா வென்றதைப் பிலாத்து கேள்வியானபோது: இந்த மனுஷன் கலிலேயனோ வென்று கேட்டான்.

௭ * அவர் ஏரோதேயின் அதிகாரத்துக்குள்ளானவரென்றறிந்தபோது, அந்நாட்களிலே யெருசலேமிலேதானும் வந்திருந்த ஏரோதேயண்டைக்கவரை அனுப்பினான். * ௩, ௧.

௮ ஆனால் ஏரோதே யேசுவைக்காணுகிறபோது மிகுந்த சந்தோஷப்பட்டான், ஏனென்றால் அவரைக்குறித்து அவன் அனேகங்களைக் கேழ்விப்பட்டிருந்தபடியினாலே, * வெகுநாளாய் அவரைக்காண ஆசையாயிருந்தான். அவராலே செய்யப்படும் யாதொரு அடையாளத்தைப் பார்க்கலாமென்றும் நம்பினான். * ௯, ௯.

௯ அனேகம் வார்த்தைகளினாலே அவரைக் கேட்டான், ஆனால் அவர் அவனுக்குப் பிறத்தியுத்தாரமொன்றுஞ் சொல்லாதிருந்தார்.

௰ பிறதான ஆசாரியர்களும் வேதபாரகருமோவென்றால் அவரை மெத்தவுங் குத்துச்சாட்டிக்கொண்டே நின்றார்கள்.

௰௧ ஆனால் ஏரோதே தன் ராணுவமனுஷருடனே கூட அவரை அற்பமாக்கெண்ணி, பரியாசம்பண்ணி, மினுக்குள்ள வஸ்திரத்தை அவருக்குத் தரிப்பித்து, அவரைத் திரும்பப் பிலாத்தண்டைக்கனுப்பினான்.

௰௨ அன்றையத்தினம் பிலாத்தும் ஏரோதேயும் ஒன்றுக்கொன்று சினேகிதரானார்கள், ஏனென்றால் முன்னாலே ஒருவருக்கொருவர் பகையாயிருந்தார்கள்.

௰௩ பிலாத்துவோவென்றால் பிறதான ஆசாரியர்களையுந் தலைவரையுஞ் சனத்தையுங் கூடிவரவழைத்து,

௰௪ அவர்களுடனே சொன்னதாவது: இந்த மனுஷனை, சனத்தை மாறுபாடாக்கிறவனென்று என்னண்டையிலே கொண்டுவந்தீர்கள். இதோ நான் உங்களுக்கு முன்பாக விசாரிக்கிறபோது, நீங்கள் இந்த மனுஷன்மேலே சாட்டுகிற குற்றங்களிலொன்றையும் நான் அவனிடத்திலே கண்டதில்லை.

௰௫ ஏரோதேயுங் கண்டதில்லை, உங்களை அவனண்டைக்கனுப்பினேனே, ஆனால் இதோ, மரணத்துக்கேதுவாக ஒன்றும் அவனுக்குச் செய்யப்பட்டதில்லை.

௰௬ ஆனபடியினாலே அவனைத் தெண்டித்து விடுதலையாக்குவேனென்றான்.

௰௭ ஏனென்றால் அவன் பண்டிகைதோறும் அவர்களுக்கொருவனை விடுதலையாக்க வேண்டியதாயிருந்தது.

௰௮ ஆனால் திரளாகூட்டமெல்லாம்: இவனைப் போக்கிவிட்டு, பரபாவை எங்களுக்கு விடுதலையாக்குமென்று கூக்குரலிட்டார்கள்.

௰௯ அவன் பட்டணத்திலே நடந்தொரு கலகத்துக்காகவுங் கொலைபாதகத்துக்காகவுங் காவலிலே வைக்கப்பட்டிருந்தான்.

௨௰ பிலாத்தோவென்றால் யேசுவை விடுதலையாக்க மனதாய், மறுபடியுஞ் சத்தமிட்டுப் பேசினான்,

௨௰௧ அவர்களோவென்றால்: அவனைச் சிலுவையிலறையும், சிலுவையிலறையுமென்றெதிர்க் கூந்தலிட்டார்கள்.

௨௰௨ அவன் மூன்றாம் விசை அவர்களுடனே: ஏன், இவனென்ன பொல்லாப்பைச் செய்தான், மரணத்

C c

துக

ருக்கேதுவான குற்றமொன்றும் அவனிடத்திலே நான் காணவில்லையே, ஆகையால் அவனைத் தண்டித்து விடுதலைபண்ணுவேனென்றான்.

௨௩ ஆனால் அவர்கள் அவரைச் சிலுவையில் அறையப்பட அவர்கள் மகா சத்தங்களோடே கேட்டுக்கொண்டேயிருந்தார்கள், அவர்களும் பிரதான ஆசாரியர்களுமுடைய சத்தங்கள் * பெலத்தது. * யோவ. ௰௯, ௰௨.

௨௪ பிலாத்தோவென்பவன் அவர்கள் மனுவின்படியே ஆகக்கடவதென்று தீர்த்து,

௨௫ கலகத்தினிமித்தமும் கொலைபாதகத்தினிமித்தமும் காவலிலே வைக்கப்பட்டிருந்த அவர்கள் விடக்கேட்டுக்கொண்டவனை அவர்களுக்கு விடுதலைபண்ணி, யேசுவை அவர்களுடைய மனதுக்கு ஒப்புக்கொடுத்தான்.

¶ அவர் வெளியே கொண்டுபோகப்பட்டு சிலுவையில் அறையுண்டது. மத். ௨௭, ௩௨—௫௬. மாற். ௰௫, ௨௰—௪௧. யோவ. ௰௬, ௰௭—௩௰.

௨௬ அவர்கள் அவரைக் கொண்டுபோகிறபோது வயலிலிருந்து வருகிற சிரேனே ஊரானாகிய சீமோனென்கிறவனைப் பிடித்து, சிலுவையை யேசுவின் பிறகே சுமந்துவர அதை அவன் மேலே வைத்தார்கள்.

௨௭ ஆனால் வெகு திரளான ஜனமும் அவருக்காகப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவரைப் பின்சென்றார்கள்.

௨௮ யேசு அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொன்னதாவது: யெருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கோள்.

௨௯ ஏனென்றால் இதோ: மலடிகளும் பிள்ளைபெறாத கர்ப்பங்களும் உண்கக் கொடுத்தராத முலைகளும் பாக்கியமுள்ளதென்று சொல்லப்படும் நாள்கள் வரும்.

௩௰ அப்போது * பருவதங்களோடே: எங்கள் மேலே விழுங்கோளென்றும், குன்றுகளோடே: எங்களை மறைத்துப்போடுங்கோளென்றும் சொல்லத் துடங்குவார்கள். * ஓசே. ௰, ௮.

௩௧ ஏனென்றால் பச்சைமரத்துக்கு இவைகளைச் செய்தால், பட்டமரத்துக்கென்ன செய்யப்படுமென்றார்.

௩௨ * குற்றவாளிகளாகிய வேறே இரண்டுபேரும் அவரோடே கூடக் கொலைசெய்யப்படுவதற்குக் கொண்டுபோகப்பட்டார்கள். * யேச. ௫௩, ௰௨.

௩௩ தலைஓட்டிடமென்று சொல்லப்பட்ட ஸ்தலத்துக்கு அவர்கள் வந்தபோது, அங்கே அவரையும் அந்தக் குற்றவாளிகளையும் ஒருத்தனை வலது பக்கத்திலும் ஒருத்தனை இடது பக்கத்திலுமாகச் சிலுவைகளில் அறைந்தார்கள்.

௩௪ யேசுவோவென்றால்: * பிதாவே, அவர்களுக்கு மன்னியும், ஏனென்றால் தாங்கள் செய்கிறதின்னதென்று அறியார்கள் என்றார். * * அவருடைய வஸ்திரங்

களை

கள் அவர்கள் பாகங்கிட்டுப் போட்டார்கள். * சங். ௨௨, ௰௮.

௩௫ சனமயார் நின்று பார்த்துக்கொண்டிருந்தது, ஆனால் அவர்களுடனே கூடக் கர்த்தர் வருமஞ்சுகள் பரிகாசம் பண்ணி: மற்றவர்களை ரட்சித்தானே, இவன் பராபரனால் தெரிந்துகொள்ளப்பட்ட கிறீஸ்துவானால், தன்னைத்தானே ரட்சிக்கட்டுமென்றார்கள்.

௩௬ சேவகரும் அவனைப் பரியாசம் பண்ணி, அணுகி வந்து அவருக்குக் காடியைக் கொண்டுவந்து:

௩௭ நீ யூதருடைய ராசாவானால், உன்னை நீயே ரட்சித்துக்கொள்ளென்றார்கள்.

௩௮ அவருக்கு மேலாக: இவன் யூதருடைய ராசாவென்று கிரேக்கு லத்தீன் எபிரேயு எழுத்துகளாலே எழுதப்பட்டிருந்தது.

௩௯ ஆனால் தூக்கப்பட்ட துட்டர்களில் ஒருவன் அவரைத் தூஷித்து: நீ கிறீஸ்துவானால் உன்னையும் எங்களையும் ரட்சியென்றான்.

௪௰ மற்றவனோ வென்றால் அதட்டி யுத்தரமாக: இந்த ஆக்கினைக்குள்ளாயிருக்கிற நீயும் பராபரனுக்குப் பயப்படாயோ.

௪௧ நாம் நியாயமாகத்தானிருக்கிறோம், ஏனென்றால் நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்கதுகளை அடைகிறோம், இவரோவென்றால் அவகுணமானதொன்றையும் நடப்பித்ததில்லையென்று அவனைக் கண்டித்துக்கொண்டு,

௪௨ யேசுவோடே: ஆண்டவரே, நீர் உம்முடைய ராச்சியத்திலே வரும்போது அடியேனை நினைத்துக்கொள்ளுமென்றான்.

௪௩ யேசு அவனோடே: மெய்யாக உனக்குச் சொல்லுகிறேன், இன்றைக்கு என்னுடனே கூடப் பரதீசிலேயிருப்பாயென்றார்.

௪௪ ஏறக்குறைய ஆறாம் மணி வேளையாயிருக்கிறபோது, பூமியெங்கும் ஒன்பதாம் மணி வேளைமட்டும் அந்தகாரமுண்டாச்சுது.

௪௫ சூரியன் இருண்டு, தேவாலயத்தின் திரைச்சீலை நடுப்புறக் கிழிந்து போச்சுது.

¶ அவர் மரித்து அடக்கம்பண்ணப்பட்டது.
மத். ௨௭, ௫௰. மாற்கு. ௰௫,
௩௭. யோவ. ௰௯,
௩௰. ௰௫.

௪௬ யேசு மகா சத்தமாய்: * பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேனென்று சொல்லி, ஜீவனை விட்டார். * சங்.
௩௧. ௫, ௪, ௨, ௩௪.

௪௭ ஆனால் சேர்வைகாரன் சம்பவித்ததைக் கண்டு: மெய்யாக இந்த மனுஷன் நீதிமானாயிருந்தானென்று பராபரனை மகிமைப்படுத்தினான்.

௪௮ இந்த வேடிக்கைக்குக் கூடியிருந்த கும்பல்களெல்லாம் சம்பவித்ததுகளைக் கண்டபோது, தங்கள் மார்புகளில் அடித்துக்கொண்டு திரும்பினார்கள்.

௪௯ ஆனால் அவருக்கு அறிமுகமானவர்களெல்லாரும்

தூர

ருக்கூடக் கலிலேயாவிலிருந்து அவரைப் பின்சென்று வந்த ஸ்திரீகளுந் தூரநின்றிவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

௫௰ ஜோசேப்பு அரிமத்தியா என்கிற யூதருடைய பட்டணத்தானாகிய நல்ல புருஷனும் நீதிமானும்,

௫௧ அவர்கள் ஆலோசனைக்குஞ் செய்கைக்குஞ் சம்மதியாதிருந்த ஆலோசனைக்காரனுமாகிய யோசேப்பென்னும் பேர்கொண்ட ஒரு மனுஷனிருந்தான். அவன் தானும் பராபரனுடைய ராச்சியத்துக்குக் காத்திருந்தான், ✝ ௨. ௨௫. ௩௮.

௫௨ இவன் பிலாத்தினிடையிலே போய், யேசுவின் சரீரத்தைக் கேட்டு,

௫௩ அதை இறக்கி, மெல்லிய புடவையிலே சுத்தி, கன்மலையில் வெட்டப்பட்டதும் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமான ஒரு கல்லறையிலே வைத்தான்.

௫௪ ஆயத்தநாளாயிருந்தது, ஓய்வுநாளுந் துவக்கிற்று.

௫௫ ஆனாலுங் கலிலேயாவிலிருந்து அவருடனேகூட வந்திருந்த ஸ்திரீகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் எப்படி வைக்கப்பட்டதென்கிறதையும் பார்த்து,

௫௬ திரும்பிப்போய், சுகந்த வர்க்கங்களையும் பரிமளத்தயிலங்களையும் ஆயித்தம்பண்ணி, ஓய்வுநாளிலே கற்பனையின்படியே ஓய்ந்திருந்தார்கள்.

## ௨௪. அதிகாரம்.

¶ கிறீஸ்து உயிர்த்தெழுந்தது. ✝ மத். ௨௮, ௧—௰. மாற். ௰௬, ௧—௰௧. யோவ. ௨௰, ௧—௰.

ஆனால் வாரத்தின் முதல்நாள் அதிகாலமே அவர்கள் தாங்கள் ஆயித்தம்பண்ணின சுகந்தவர்க்கங்களை எடுத்துக்கொண்டு, அவர்களும் அவர்களுடனேகூட வேறே சில ஸ்திரீகளுங் கல்லறையினிடையிலே வந்தார்கள்.

௨ ஆனால் கல் கல்லறையை விட்டுப் புரட்டித் தள்ளப்பட்டதை அவர்கள் கண்டு,

௩ உள்ளப்பிரவேசித்து, கற்தராகிய யேசுவின் சரீரத்தைக் காணாதேபோனார்கள்.

௪ அவர்கள் அதின்பேரில் ஐயப்பட்டுக் கொண்டிருக்கையிலே, சடுதியிலே தேஜசுள்ள பிரகாசமின்னும் வஸ்திரங்களுள்ள இரண்டுபேர் அவர்களண்டை வந்துநின்றார்கள்.

௫ அவர்கள் பயமடைந்து முகந்தரையை நோக்கிக் குனிந்திருக்கையிலே, இவர்கள் அவர்களுடனே சொன்னதாவது: உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்திலே தேடுவானேன்.

௬ அவர் இங்கேயில்லை, அவர் எழுந்திருந்தார், அவர் இன்னங் கலிலேயாவிலிருக்கக்கொள்ள உங்களுடனே:

௭ * மனுஷனுடைய குமாரன் பாவிகளான மனுஷர் கைகளிலே ஒப்புக்கொடுக்கப்பட்டுச் சிலுவையிலே அறையுண்கவும் மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டியதென்று சொன்னதை நினைவுகூருங்கோளென்றார்கள். * ௯, ௨௨.
௮ அப்போதவர்கள் அவர் வார்த்தைகளை நினைவுகூர்ந்து,
௯ கல்லறையைவிட்டுத் திரும்பி இதுகளையெல்லாம் பதினொருவருக்கும் மற்றவர்களெல்லாருக்கும் அறிவித்தார்கள்.
௰ இதுகளை அப்போஸ்தலர்களுடனே சொன்னவர்கள் * மக்தலவூர் மரியாளும் யோவன்னாளும், யாக்கோபின் தாய் மரியாளும், இவர்களுடனேயிருந்த மற்ற ஸ்திரீகளுந்தானே. * ௮, ௨, ௩.
௰௧ ஆனால் இவர்களுடைய வார்த்தைகள் அவர்களுக்குப் பைத்தியம் வார்த்தைகளாயக்கண்டு, இவர்களை நம்பாதேபோனார்கள்.
௰௨ பேதுருவோவென்னில் எழுந்திருந்து, கல்லறையண்டையிலோடி, அதற்குள்ளே பார்க்கக் குனிந்து சீலைகளைத் தனியே வைத்திருக்கக்கண்டு சம்புவித்ததென்று தன்னில் ஆச்சரியப்பட்டுக்கொண்டு போனான்.

¶ அவர் எம்மவுக் ஆமத்துக்குப் போற இரண்டு சீஷருக்குத் தெரிசனையானது. மாற்கு. ௰௬, ௰௨. ௰௩.

௰௩ ஆனால் அதேநாளிலே அவர்களில் இரண்டுபேர் யெருசலேமுக்கு அறுபது ஸ்தாதுரமான எம்மவு என்னுப்பேருடைய கிராமத்துக்குப் போனார்கள்.
௰௪ அவர்கள் சம்புவித்த காரியங்களெல்லாங் குறித்து ஒன்றுக்கொன்று பேசிக்கொண்டார்கள்.
௰௫ அவர்கள் ஒன்றுக்கொன்று பேசி விசாரித்துக்கொண்டிருக்கையில் சம்புவித்ததேதென்னில், யேசு தாமுஞ் சமீபித்து அவர்களுடனே கூட நடந்தார்.
௰௬ ஆனால் அவரை அறியாதபடிக்கு அவர்களுடைய கண்கள் பிடிபட்டது.
௰௭ அவர் இவர்களுடனே: நீங்கள் துக்கமுள்ளவர்களாய் வழிநடந்து ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளும் இந்த வார்த்தைகளேதென்றார்.
௰௮ அவர்களில் ஒருத்தன் க்லெயோப்பா வென்னும் பேருள்ளவன் பிரதியுத்தாரமாக அவருடனே: நீர் மாத்திரம் யெருசலேமிலே இந்நாட்களில் சம்புவித்ததுகளை அறியாத பரதேசியாயிருக்கிறீரோ வென்றான்.
௰௯ அப்போ அவர் இவர்களுடனே: எதுகளென்றார். அவர்கள் அவருடனே சொன்னதாவது: பராபரனுக்குஞ் சனத்துக்கும் முன்பாகச் செய்கையிலும் வார்த்தையிலும் வல்லமையுள்ள தீர்க்கதெரிசியாயிருந்த யேசுநாசரேத்தானை,
௨௰ நம்முடைய பிரதான ஆசாரியர்களுந் தலைவரும் மரணாக்கினைக்கொப்புக்கொடுத்து, சிலுவையிலே அறைந்தார்களென்கிறதுகளைத்தானே.

௨௧ நாங்களோவென்றால், * இஸ்ரவேலை மீட்க
ப்போறவர் அவரேயென்று நம்பினோம், ஆனாலுமிப்ப
டியெல்லாமிருந்தும், இதுகள் சம்பவித்து இன்றுமூ
ன்றாநாளாகுது. * அப்போ. ௧, ௬.
௨௨ எங்களிலே சில ஸ்திரீகளெங்களை விஸ்
மிக்கப்பண்ணினார்கள், அவர்கள் அதிகாலமேக
ல்லறையினடையிலிருந்து,
௨௩ அவருடைய சரீரத்தைக் காணாமல் அவர் உயி
ரோடிருக்கிறாரென்று சொன்ன தேவதூதருடைய தெ
ரிசனத்தையுங் கண்டோமென்று வந்தார்கள்.
௨௪ அப்போ எங்களுடனேயிருக்கிறவர்களில் சி
லர் கல்லறையினிடயிலே போய், ஸ்திரீகள்
சொன்னதுக்குச் சரியாய்க் கண்டார்கள், அவரை
யோ காணவில்லையென்றார்கள்.
௨௫ அப்போ அவர் இவர்களுடனே: தீர்க்கதரிசி
கள் சொன்னயாவையும் விசுவாசிக்கிறதுக்கு புத்
தியும் மந்த இருதயமுமானவர்களே;
௨௬ கிறீஸ்து இப்பாடுபட்டு உத்தரிக்கவும் தம்மு
டைய மகிமைக்குள் பிரவேசிக்கவும் வேண்டியதாயி
ருந்ததில்லையோவென்று சொல்லி.
௨௭ மோசேயையும் சகல தீர்க்கதரிசிகளையுந் து
வக்கி, சகல வேதவெழுத்துகளிலுந் தம்மைக்கடுத்ததுக
ளவர்களுக்கு விபரித்துக் காட்டினார்.
௨௮ அவர்கள் பயணம்பண்ணுகிற கிராமத்துக்குச் சே
ர்ந்தார்கள், அப்போ அவர் அப்புறம் போறவர்
போலேகாண்பித்தார்.
௨௯ ஆனால் அவர்கள்: எங்களுடனே கூட இரும்,
அதேனெனில் அந்திநேரமாகப்பொழுது சாய்ந்ததெ
ன்றுசொல்லி, அவரை வருந்திக்கொண்டிருந்தார்க
ள், அப்போ அவர் அவர்களுடனே கூட இருக்கிறதுக்குள்
ப்பிரவேசித்தார்.
௩௰ அவர் இவர்களுடனே கூடப் பந்தியிருக்கையி
லே சம்புவிக்கக்கேணால், அவர் அப்பத்தையெடுத்து
ஸ்தோத்திரம்பண்ணி, அதைப்பிட்டு அவர்களுக்குக்
கொடுத்தார்.
௩௧ அப்போ அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டு
அவரை அறிந்தார்கள், அவரோவென்றால் அவர்களுக்
கு அதிசயமாய்ப்போனார்.
௩௨ அப்போ ஒருத்தரோடொருத்தர்: அவர் வழியிலே
நம்முடனே பேசி, வேதவெழுத்துகளை நமக்குத்திற
ந்துசொல்லும்போது, நம்முடைய இருதயம் நம்முக்குள்ப
த்திஎரிகிறதாயிருந்ததில்லையோவென்றுசொல்லிக்
கொண்டு,
௩௩ அந்நேரமேயெழுந்திருந்து, யெருசலேமுக்குத்
திரும்பிப்போய், பதினொருவரும் அவர்களோடிரு
க்கிறவர்களுங்கூடினவர்களாகவும்:
௩௪ கர்த்தர் மெய்யாயெழுந்திருந்து * சீமோனுக்குத்
தெரிசனையானாரென்று சொல்லுகிறவர்களாகவுங்
கண்டு, * ௧. கொ. ௰௫, ௫.
௩௫ தாங்களும் வழியிலே சம்பவித்தவைகளையும் அவ
ர் அப்பத்தைப்பிட்கையிலே தங்களுக்கேப்பட்ட அறிய
ப்பட்டாரென்கிறதையும் விவரித்தார்கள்.

௩௬ அவர்

¶ அவர் அப்போஸ்தலருக்குக் காட்சியானது. மாற்கு. யசு. யச. ஞ. யோவா. உய, யசு. ஞ.

கசா அவர்கள் இதுகளைப் பேசிக்கொண்டிருக்கச்சே, யேசுதாமே அவர்கள் நடுவிலே நின்று, அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானமென்றார்.

கஎ அவர்களோவென்றால் திகிலும் பயமுமுடைத்து, தாங்கள் ஒரு ஆவியைக் காண்கிறதாய் நினைத்தார்கள்.

கஅ அப்போதவர் அவர்களுடனே சொன்னதாவது: நீங்கள் கலங்கியிருக்கிறதேது, உங்கள் இருதயங்களிலே சந்தேகங்கள் எழும்புகிறதுமேது.

ககூ நான்தானென்று என் கைகளையுங் கால்களையும் பாருங்கோள், என்னைத் தொட்டுப் பாருங்கோள், ஏனென்றால் எனக்கு மாங்கிஷமும் எலும்புமுண்டென்று நீங்கள் காண்கிறபடியே ஒரு ஆவிக்கிவையில்லையென்கிறதைச் சொல்லி,

ச0 கைகளையுங் கால்களையும் அவர்களுக்குக் காண்பித்தார்.

சக ஆனால் அவர்கள் சந்தோஷத்தினாலே இன்னம் விசுவாசியாமல் ஆச்சரியமாயிருக்கும்போது இவர் அவர்களுடனே: போசிக்கத்தக்கதும் இங்கே உங்களுக்குண்டோவென்றார்.

சஉ அவர்களோவென்றால் அவருக்குப் பொரிக்கமீன் கண்டத்தையுந் தேன்கூண்டுத்துண்டையையுங் கொடுத்தார்கள்.

சங அவர் வாங்கி அவர்களுக்கு முன்பாகப் போசித்து,

சச அவர்களுடனே சொன்னதாவது: மோசேயினுடைய பிரமாணத்திலுந் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலுஞ் சங்கீதங்களிலும் என்னைக்குறித்தெழுதியிருக்கிறதெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் இன்னம் உங்களோடிருக்கும்போது உங்களுடனே சொல்லிவந்த வசனங்கள் இதுகளென்றார்.

சரு அப்போதெழுத்துகளை உணர்ந்தறிய இவர் அவர்களுடைய அறிவைத்திறந்து;

சசா அவர்களுடனே சொன்னதாவது: இந்தப்பிரகாரமாய் எழுதியிருக்கிறது; இந்தப்பிரகாரமாகவுங் கிறிஸ்து பாடுபட்டு, மூன்றாம் நாளிலே மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்,

சஎ எருசலேமதுவக்கிலான சாதிகளிடத்திலும் * குணப்படுதலும் பாவமன்னிப்பும் அவர் நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியதாயிருந்தது.

* அப்போ. ரு, ஙக.

சஅ நீங்களே இதுகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள்.

சகூ இதோ நான் * என் பிதாவின் வாக்குத்தத்தத்தை உங்கள்மேல் அனுப்புகிறேன், நீங்களோவென்றால் உன்னதத்திலிருந்திறங்கும் பெலனால் தரிப்பிக்கப்படுமட்டும் எருசலேம் பட்டணத்திலிருங்கோளென்றார். * யோவா. யசு, உசா. அப்போ. க, ச.

¶ அவர்,

¶ அவர்பரமண்டலங்களிலேறினது.
மாற்கு. ௰௬, ௰௯, ௨௰.
அப்போ. ௧, ௪ — ௰௧.

௫௰ அவர்அவர்களைப்பெத்தானியாமட்டும்வெளியேஅழைத்துக்கொண்டுபோய், தம்முடையகைகளைஏறெடுத்துஅவர்களைஆசீர்வதித்தார்.
௫௧ அவர்களைஆசீர்வதிக்கையிலேசம்பவித்ததேதென்றால், அவர்களைவிட்டுப்பிரிந்துபரமண்டலத்திலேஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்
௫௨ அவர்கள்அவரைப்பணிந்துகொண்டு மகாசந்தோஷத்துடனேயெருசலேமுக்குத்திரும்பி,
௫௩ எப்போதுந்தேவாலயத்திலேபராபரனைப்புகழ்ந்துந்துதித்துமிருந்தார்கள்.

ஆமென்.

# யோவானெழுதின

## சுவிசேஷம்.

### ௧. அதிகாரம்

¶ கிறிஸ்துவினுடைய மேன்மையின் முகவுரை.

ஆதியிலே * வார்த்தையிருந்தது, அவ்வார்த்தை
பராபரனிடத்திலிருந்தது, அவ்வார்த்தை ** ப
ராபரனுமாயிருந்தது. * ௧. யோவ. ௧, ௧.
௫, ௭. அபோ. ௰௯, ௰௩. ** ௧. யோவ.
௫, ௨௰.
௨ அது ஆதியிலே * பராபரனிடத்திலிருந்தது. *
வாக. ௮, ௨௨—௩௰.
௩ எல்லாம் * அதினாலேயுண்டாச்சுது, உண்டான
தொன்றும் அதையல்லாமலுண்டானதில்லை. *
சங்கீ. ௩௩, ௬. கொலோ. ௧, ௰௬. ௰௭.
௪ அதிலே * சீவனுண்டாயிருந்தது, அந்தச்சீவன்
மனுஷருடைய வெளிச்சமாயிருந்தது. * ௫. ௨௬.
௫ * வெளிச்சம் இருளிலே பிரகாசிக்குது, ஆனா
லிருள் அதையுணர்ந்துகொண்டதில்லை. * ௮, ௰௨.
௯, ௫. ௰௨, ௪௬.
௬ பராபரனாலனுப்பப்பட்ட ஒரு மனுஷனிருந்
தான், அவன்பேர் யோவான். * மத். ௩, ௧.
௭ அவன் தன்னாலெல்லாரும் விசுவாசிக்கும்படிக்கு
வெளிச்சத்துக்குச் சாட்சிகொடுக்கச் சாட்சியாகவந்தான்.
௮ அவன் அந்த வெளிச்சமாயிராமல் அந்த வெளிச்ச
த்துக்குச்சாட்சிகொடுக்கவந்தான்.
௯ அது லோகத்திலே வந்து எந்தமனுஷனையும் பி
ரகாசிப்பிக்கிற மெய்யான வெளிச்சமாயிருந்தது.
௰ லோகத்திலிருந்தார், லோகம் அவராலும் * உ
ண்டாச்சுது, ஆனால் லோகம் அவரையறிந்ததில்லை.
* எபிரே. ௧, ௨.
௧௧ தம்முடைய சொந்தமானதிலே வந்தார், அவருக்குச்
சொந்தமானவர்களோ அவரையேற்றுக்கொள்ளா
மற்போனார்கள்.
௧௨ ஆனாலெத்தனைபேர் அவரையேற்றுக்கொண்டா
ர்களோ, தம்முடைய நாமத்தின்பேரில் விசுவாசிக்கி
றத்தனைபேருக்கும் அவர் * பராபரனுடைய பிள்
ளைகளாகிறதுக்கு அதிகாரங்கொடுத்தார். * ரோ.
௮, ௰௫; கலா. ௩, ௨௬.
௰௩ அவர்களிரத்தங்களினாலாகிலும் மாங்கிஷ
இச்சிக்கத்தினாலாகிலும் புருஷனுடைய சித்தத்தி
னாலும் பிறவாமல், * பராபரனாலே பிறந்தார்
௩, ௫. ௧. யோவ. ௫, ௰௯. யாக. ௧, ௰

௰௪ அந்த வார்த்தை * மாம்சமாகி, கிருபையினாலும் உண்மையினாலும் நிறைந்து, நம்மிடத்திலே வாசம்பண்ணினது, பிதாவுக்கொரே பேறானவரின் மகிமைக்கொத்த மகிமையாக அவருடைய * * மகிமையைக் கண்டோம். *
ஏச. ௭, ௰௪. மத். ௧, ௰௮. * * ௨ பேது. ௧, ௫.

## ¶ யேசுக்கிறிஸ்துக்குச் சாதகமாக யோவானுஞ் சீஷருங் கொடுத்த சாட்சிகள்.

௰௫ யோவான் * அவரைக் குறித்துச் சாட்சி கொடுத்துச் சத்தமிட்டுச் சொன்னதாவது: எனக்குப் பின்பு வருகிறவர் எனக்கு முந்தினவரானவர், ஏனெனில் எனக்கு முன்னிருந்தாரென்று சொல்லியிருந்தேனே, அவர் இவர்தான். * மத். ௩, ௰௧. மாற். ௧, ௭.
௰௬ அவருடைய பரிபூரணத்திலே நாமெல்லாருங் கிருபையின்மேலே கிருபையையும் பெற்றோம்.
௰௭ ஏனென்றால் நியாயப்பிரமாணம் மோசேயைக் கொண்டு கொடுக்கப்பட்டது, கிருபையும் உண்மையும் யேசுக்கிறிஸ்துவினாலே உண்டாச்சுது.
௰௮ பராபரனை * ஒருத்தரும் ஒருக்காலுங் கண்டதில்லை; பிதாவின் மடியிலிருக்கிற ஒரே பேறான குமாரனே * * நமக்கு அவரை வெளிப்படுத்தினார். * ௨. மோ. ௩௩, ௨௰ * * லூ. ௰, ௨௨.
௰௯ யோவானை நீர் ஆரென்று கேட்கும்படிக்கு யூதர் யெருசலேமிலிருந்து ஆசாரியர்களையும் லேவியரையும் அனுப்பினபோது அவன் கொடுத்த சாட்சியாவது:
௨௰ அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டு: நான் கிறிஸ்து அல்லவென்று அறிக்கையிட்டான்.
௨௧ அவர்கள் அவனை: பின்னை ஆர், நீர் எலியாவோவென்று கேட்டார்கள். அவன்: நான் அவனல்லவென்றான். நீர் தீர்க்கதரிசியானவரோவென்றதற்கு: அல்லவென்று பிரத்தியுத்தாரஞ் சொன்னான்.
௨௨ அப்போ அவனிடத்தில்: எங்களை அனுப்பினவர்களுக்கு நாங்கள் பிரத்தியுத்தாரங் கொடுக்க, நீர் ஆர், உம்மை நீர் ஆரென்கிறீரென்றார்கள்.
௨௩ அவன்: யேசாயா தீர்க்கதரிசி சொன்னபிரகாரமாக * நான் வனாந்திரத்திலே: கர்த்தருடைய வழியைச் செவ்வைப்பண்ணுங்கோளென்று கூப்பிடுகிறவருடைய சத்தமாயிருக்கிறேனென்றான். * மத். ௩, ௩.
௨௪ அனுப்பப்பட்டவர்கள் பரிசேயராயிருந்தார்கள்.
௨௫ அவர்கள் அவனைக் கேட்டு, அவனிடத்தில்: நீர் கிறிஸ்துவல்லாமலும் எலியாவல்லாமலும் தீர்க்கதரிசியல்லாமலுமிருந்தால், பின்னை ஏன் ஸ்நானங் கொடுக்கிறீரென்றார்கள்.
௨௬ யோவான் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரஞ் சொன்னதாவது: நான் * தண்ணீரிலே ஸ்நானங் கொடுக்கிறேன், ஆனால் நீங்கள் அறியாதிருக்கிறவர் உங்கள் நடுவிலே நிற்கிறார். * மத். ௩, ௰௧.
௨௭ அவர் எனக்குப் பின்பு வந்தும் எனக்கு முந்தினவரானவர், அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்க்க நான் பாத்திரவானல்லவென்றான்.
௨௮ இதுகள் யோர்தானுக்கக்கரையில் யோவான்

தானஸ்நானங்கொடுத்த பெத்தாபாராவிலே சம்பவித்
தது.
௨௯ மறுநாளிலே யோவான் யேசுவைத் தன்னண்
டைவரக்கண்டு சொன்னதாவது: இதோ லோகத்தி
ன்பாவத்தைச்சுமந்துதீர்க்கிற பராபரனுடைய ஆட்டு
க்குட்டி.
௩௰ எனக்குப்பிந்தியொரு புருஷன் வருகிறார் அவரெ
ன்னிலும் முந்தினவரானவர், ஏனென்றால் எனக்கு முன்
னிருந்தாரென்று நான் சொன்னேனே, அவர் இவர்
தானே.
௩௧ நானும் அவரை அறியாதிருந்தேன், ஆனால் அவ
ர் இஸ்ராயேலுக்கு வெளியாக்கப்படுவதற்காக நா
ன் வந்து தண்ணீரிலே ஞானஸ்நானங் கொடுக்கிறே
னென்றான்.
௩௨ யோவான் சாட்சிகொடுத்துச் சொன்னதாவது: *
ஆவியானவர் புறாவைப்போலே வானத்திலிருந்திறங்கி அவர்மே
லிருந்ததைக் கண்டேன், * மத். ௩, ௰௬.
௩௩ நானும் அவரை அறியாதிருந்தேன், ஆனாலும் தண்
ணீரிலே ஞானஸ்நானங்கொடுக்க என்னை அனுப்பி
னவர் என்னோடே: நீ ஆர்மேலே ஆவி இறங்கியிருக்கி
றதைக் காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியிலே
ஞானஸ்நானங்கொடுக்கிறவரென்றார்.
௩௪ அதை நான் கண்டு, இவர் பராபரனுடைய கு
மாரனென்று சாட்சிகொடுத்தேனென்றான்.

¶ சில சீஷர் கிறீஸ்துவண்டை சேர்ந்தது.
௩௫ மறுநாளிலே திரும்ப யோவானும் அவனு
டைய சீஷரிலே ரெண்டுபேரும் நின்றிருந்தார்கள்.
௩௬ உலாவுகிற யேசுவை அவன் கண்டு நோக்கி: *
இதோ பராபரனுடைய ஆட்டுக்குட்டி என்றான். *
௨௯. வசனம்.
௩௭ அவ்விரண்டு சீஷர் அவன் இதைச் சொல்லக்கேட்டு
யேசுவைப் பின்சென்றார்கள்.
யேசு திரும்பிக்கொண்டு, அவர்கள் பின்
லக்கண்டு, அவர்களோடே: என்ன தேடுகிறீ
ளென்றார்.
அவர்கள் அவரோடே: ரபீ (அதற்கர்த்தம் போத
ர,) எங்கே தங்கியிருக்கிறீரென்றார்கள்.
அவர் இவர்களோடே: வந்து பாருங்கோளெ
ர். இவர்கள் வந்து, எங்கே தங்கிறாரென்று க
, அன்றையத்தினம் அவரோடே கூட இருந்தார்
. ஏறக்குறைய பத்து மணி வேளையாயிருந்தது.
யோவான் சொல்லக்கேட்டு அவனைப் பின்செ
இருவரிலே ஒருத்தன் சீமோன் பேதுருவின் சகோ
அந்திரேயாவாயிருந்தான்.
இவன் முதல் முதல் தன்னுடைய சகோதரனாகி
மோனைக் கண்டு, அவனோடே: மெசியாவைக்க
டுபிடித்தோமென்றான். அதற்கர்த்தங் கிறீஸ்து
பது:
இதைச்சொல்லி, அவனை யேசுவண்
து வந்தான். யேசு அவனை நோக்கி
யோனாவின் மகனாகிய சீமோனாயிருக்கிற

பானென்றழைக்கப்படுவாயென்றார். அதின் அர்த்தம் பேதுருவானபது. * மத். ௧௬, ௧௮.

௪௪ மறுநாளிலே யேசு கலிலேயாவுக்குப் புறப்பட்டுப்போகமனதாயிருந்து, பிலிப்புவைக் கண்டு, அவனுடனே: என்னைப் பின்செல்லென்றார்.

௪௫ பிலிப்புவோவென்றால் அந்த்ரேயா பேதுருவென்றவர்களின் ஊராகிய பெத்சாயிதாப் பட்டணத்தானாயிருந்தான்.

௪௬ பிலிப்பு நாத்தானவேலைக் கண்டு அவனுடனே: * மோசே நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளும் எழுதினவரைக் கண்டுபிடித்தோம், யோசேப்பின் குமாரனாகிய நாசரேத்தூரான் யேசுவே யென்றான். * ௧ மோ. ௩, ௧௫. ௪௯, ௰. ௫ மோ. ௧௮, ௧௮.

௪௭ நாத்தானவேல் அவனுடனே: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமோவென்றான். பிலிப்பு அவனுடனே: வந்து பாரென்றான்.

௪௮ யேசு நாத்தானவேல் தம்மண்டைவரக்கண்டு, அவனைக்குறித்து: இதோ கபடற்ற உத்தம இஸ்ரவேலனென்றார்.

௪௯ நாத்தானவேல் அவருடனே: என்னை எப்படி அறிந்திருக்கிறீரென்றான். யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: பிலிப்பு உன்னை அழைக்கிறதுக்கு முன்னே, அத்திமரத்தின் கீழிருக்கிற உன்னைக் கண்டேனென்றார்.

௫௰ நாத்தானவேல் அவருக்குப் பிரத்தியுத்தரமாக: ரபீ, நீர் பராபரனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலுடைய ராசாவென்றான்.

௫௧ யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: அத்திமரத்தின் கீழிருக்கிற உன்னைக் கண்டேனென்று நான் உன்னுடனே சொன்னதினாலே விசுவாசிக்கிறாய், இதுகளிலும் பெரியதுகளைக் காண்பாயென்றார்.

௫௨ பின்னையும் அவனுடனே: மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், இதுமுதல் வானந்திறந்திருக்கிறதையும் பராபரனுடைய * தூதாக்கள் மனுஷனுடைய குமாரனிடத்திலிருந்தேறுகிறதையும் அவர் மேலே இறங்குகிறதையுங் காண்பீர்களென்றார். * ௧ மோ. ௨௮, ௰௨.

## உ. அதிகாரம்.

### கிறீஸ்து கானாவிலே கலியாணத்திலே செய்த அற்புதம்.

[illegible] மூன்றாம் நாளிலே கலிலேயாவின் ஊராகிய கானா[illegible]
[illegible]லே கலியாணமாயிருந்தது, அங்கே யேசுவின் [illegible]
[illegible]தாயுமிருந்தாள்.

[illegible] அதிலே யேசுவும் அவருடைய சீஷரும், கலியா[illegible]
[illegible]க்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

[illegible] திராட்சப்பழரசங் குறைப்பட்டபோது யே[illegible]
[illegible]டைய தாய் அவருடனே: திராட்சப்பழர[illegible]
[illegible]ளுக்கில்லையென்றாள்.

௪ யேசு அவளுடனே: *ஸ்திரீயே, எனக்கும் உனக்குமென்ன, என் வேளை இன்னம் வந்ததில்லை என்றார். * யசு, உக.

௫ அவளுடையதாய் பணிவிடைக்காரருடனே: உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ அதைச்செய்யுங்கோளென்றாள்.

௬ ஆனால் அங்கே, யூதர் சுத்தம்பண்ணிக்கொள்ளுகிற முறைமையின்படியே ஆறு கற்சாடிகள் வைத்திருந்தது, ஒவ்வொன்று இரண்டு மூன்று குடம் பிடித்தது.

௭ யேசு அவர்களுடனே: சாடிகளிலே தண்ணீரை ரப்புங்கோளென்றார். அவர்கள் அதுகளை வாயமட்டாக்க ரப்பினார்கள்.

௮ அப்போ அவர்களுடனே: நீங்கள் இப்போ மொண்டு, பந்திவிசாரிப்புக்காரனண்டைக் கொண்டுபோங்கோளென்றார், அவர்கள் கொண்டுபோனார்கள்.

௯ ஆனால் அந்தத்திராட்சப்பழரசமாய்ப்போன தண்ணீரைப் பந்திவிசாரிப்புக்காரன் ருசிபார்த்து, அது எங்கேயிருந்து வந்ததென்கிறதை அத்தண்ணீரை மொண்ட பணிவிடைக்காரர் அறிந்ததேயொழிய தானறியாதிருக்கிறபோது, பந்திவிசாரிப்புக்காரன் மணவாளனைக்கூப்பிட்டு,

௰ அவனுடனே: எந்தமனுஷனும் முந்தி நல்லதிராட்சப்பழரசத்தைவார்த்து, சனங்கள் திருப்தியடைந்திருந்தால் அப்போ இளப்பமானதைவார்ப்பான், நீ நல்லரசத்தை இதுவரைக்கும் வைத்து வைத்தாயேயென்றான்.

௰௧ இந்த அடையாளங்களிலே முந்தினதை யேசு கலிலேயாவின் கானாவிலே செய்து, தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார், அவருடைய சீஷர்கள் அவரிலே விசுவாசித்தார்கள்.

௩௫ பராபரனுடைய வசனம் ஆருக்குண்டாச்சுதோ, அவர்களை அவர் தேவர்களென்றால், வேதமொழிந்து கொள்ளவுங் கூடாதிருக்கக்கொள்ள,
௩௬ நீங்கள் பிதா பரிசுத்தமாக்கி லோகத்திலே அனுப்பினவனை, நான் பராபரனுடைய குமாரனென்றதுக்காக: தூஷணிக்கிறாயென்று சொல்லுகிறீர்களோ.

௩௭ நானனைபிதாவினகிரியைகளைசசெயயாதிரு
நதால, எனனைவிசுவாசியாதேயுஙகோள.
௩௮ செயதேனேயாமாகில, நீஙகளெனனைவிசுவா
சியாதிருநதும, * கிரியைகளை விசுவாசியுஙகோ
ள, பிதாவெனனிலுமநானவரிலுமிருககிறதை நீ
ஙகளறிநதுவிசுவாசிபபதறகாததானெனறார. *
௰௪, ௰௧.
௩௯ அபபொழுதுமறுபடியுமஅவரைபபிடிககபபா
ாததாாகள, * ஆனால அவர அவர்களகைககுததபபி
புறபபடடு, * ௮, ௫௯. லூ. ௪, ௩௰.
௪௰ திருமபயோாதானுககககரையிலே, யோவா
ன முநதிததானஸநானஙகொடுததிருநதஇடததுககுப
போய, அஙகேதஙகியிருநதார.
௪௧ அநேகர அவரணடையிலவநது: யோவான ஒரு
அடையாளததுஞசெயயவிலலை, இவரைககுறிதது
யோவானசொனனதெலலாம மெயயாயிருநததெ
னறு சொலலி,
௪௨ அநேகர அஙகே அவர்பேரிலே விசுவாசிததா
ாகள.

## ௰௧. அதிகாரம.

¶ மரிததடககமபணணபபடடலாசருவை
எழுபபினது.

ஆனால * மரியாளும அவளசகோதரிமாாததாளுமஇரு
நதபெததானியாகிறகிராமததிலே லாசருவெனற
ஒருததன வியாதியாயிருநதான. * லூ. ௰, ௩௮. ௩௯.
௨ * கருததரைபரிமளதைலததாலபூசி, தனமயிாக
ளாலஅவர பாதஙகளைததுடைததவள இநதமரியா
ளதான, அவளுடையசகோதரனாகியலாசரு வியா
திபபடடிருநதான. * ௰௨, ௩.
௩ அபபொழுது அவளசகோதரிகள: ஆணடவரே, நீ
ா சிநேகிககிறவன வியாதியாயிருககிறானெனறு
அவரணடைககுசசொலலியனுபபினாாகள.
௪ ஆனாலயேசு அதைககெடடபொது: இநதவியாதி ம
ரணததுககு வநததலல, * பராபரனுடைய கு
மாரன அதினாலமகிமைபபடடவேணடுமெனறு பராபர
னுடையமகிமைககாகவநதது எனறார. * ௯, ௩.
௫ ஆனாலயேசுமாாததாளையுமஅவளசகோதரியை
யும லாசருவையுஞசிநேகிததார.
௬ அவன வியாதியாயிருககிறதை அவர கெடட
பொதோவெனில, தாமிருநதஇடததிலேபினனும
இரணடுநாளதஙகினார.
௭ பினபுசீஷருடனே: மறுபடியும யூதேயா
வுககுபபோவோமவாருஙகோளெனறார.
௮ சீஷர அவருடனே: ரபி, இபபோதானயூதர உ
மமை * கலலெறியபபாாததாாகளே, மறுபடியு
ம அஙகேபோகிறீரோ எனறாாகள. * ௮, ௫௯.
௯ யேசுபிரததியுததரமாகசசொனனதாவது: ப
கலுககுபபனனிரணடுமணிநேரமுளளதலலவோ,
ஒருததன பகலிலேநடநதாலஇடறான, இநதவுல
கததின

தலோகத்தின் வெளிச்சத்தைக் காண்கிறான்.
௰ ஒருத்தன் ராவிலே நடந்தானேயாகில், இடறுகி
றான், ஏனெனில் அவனிடத்திலே வெளிச்சமில்லை
யென்று சொன்னதுக்குப் பிற்பாடு,
௰௧ அவர்களுடனே: நம்முடைய சினேகிதனாகிய
லாசரு * நித்திரையடைந்தான், ஆனாலவனை யெழுப்
பப் போகிறேனென்றார். * மத. ௯, ௨௪.
௰௨ அப்போ அவருடைய சீஷர்: ஆண்டவரே, நி
த்திரையடைந்தானானால் குணமாவானென்றார்கள்.
௰௩ யேசுவோ அவனுடைய மரணத்தைக் குறித்துச் சொ
ன்னார், அவர்களோவென்றால் அவர் நித்திரை உறக்க
த்தைக் குறித்துப் பேசினதாக நினைத்தார்கள்.
௰௪ அப்போ யேசு அவர்களுக்கு வெளிப்பொரு
ளாக: லாசரு மரித்தானென்றும்,
௰௫ நான் அங்கேயிருந்ததில்லையென்கிறதுக்காக
உங்கள் நிமித்தியமாய், நீங்கள் விசுவாசிக்கும்படி
க்கு, சந்தோஷப்படுகிறேன். ஆனாலவனிடத்
துக்குப் போவோம் வாருங்கோளென்றுஞ் சொன்னார்.
௰௬ அப்போ திதிமுவென்னப்பட்ட தோமாஸ் சீ
ஷர்களுடனே: நாமும் அவனுடனே கூட மரிக்கப்
போவோம் வாருங்கோளென்றான்.
௰௭ அப்போ யேசு வந்து, அவன் கல்லறையிலே
வைக்கப்பட்டு நாலுநாளாச்சுதென்று கண்டார்.
௰௮ பெத்தானியாவோவென்றால் எருசலேமுக்
குச் சமீபமாய் ஏறக்குறையப் பதினைந்து ஸ்தாதி
வழியாயிருந்தது.
௰௯ யூதரிலே அனேகர் மற்தாளுடைக்கும் மரி
யாளுடைக்கும், அவர்கள் சகோதரனுக்காக அவ
ர்களுக்குத் தேற்றரவு சொல்ல வந்திருந்தார்கள்.
௨௰ ஆனாலே யேசு வருகிறாரென்று மற்தாள் கேட்ட
போது அவருக்கு எதிர்கொண்டு போனாள், மரியா
ளோவென்றால் வீட்டிலே உட்கார்ந்திருந்தாள்.
௨௰௧ அப்போ மற்தாள் யேசுவுடனே: ஆண்டவ
ரே, நீரிங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரி
யான்.
௨௰௨ ஆனாலிப்பபோவும் நீர் பராபரனைக் கேட்ட
தெல்லாத்தையும் பராபரன் உமக்குக் கட்டளையிடு
வாரென்றறிவேனென்றாள்.
௨௰௩ யேசு அவளுடனே: உன் சகோதரன் திரும்ப எ
ழுந்திருப்பானென்றார்.
௨௰௪ மற்தாள் அவருடனே: * கடைசிநாளின் உயி
ர்த்தெழுந்தலிலே திரும்ப எழுந்திருப்பானென்றறி
வேனென்றாள். * ௫, ௨௪.
௨௰௫ யேசு அவளுடனே: நானே உயிர்த்தெழுந்த
லுஞ் சீவனுமாயிருக்கிறேன், என்பேரிலே விசுவாசிக்
கிறவன் மரித்தும் பிழைப்பான். * ௰௪, ௬.
௨௰௬ உயிரோடிருந்து என்பேரிலே விசுவாசிக்கிறவ
னெல்லாமானென்றைக்கும் மரியாமலிருப்
பான், இதை விசுவாசிக்கிறாயோவென்றார்.
௨௰௭ அவள் அவருடனே: ஆம், ஆண்டவரே, நீர்
லோகத்திலே வருகிற பராபரனுடைய குமாரனாகிய கிறி
ஸ்து வென்று நான் விசுவாசித்தேனென்றாள்.

௨௮ இதுகளைச்சொன்னபின்பு அவள் போய்,
தன் சகோதரிமரியாளை இரகசியமாய் அழைத்து: போத
கர் வந்திருந்து உன்னை அழைக்கிறாரென்றாள்.
௨௯ அவள் அதைக்கேட்டவுடனே சீக்கிரமாயெழுந்
து அவரிடத்திலே வந்தாள்.
௩௰ இயேசு இன்னும் கிராமத்துக்குள்
வராமல், மார்த்தாள் தம்மைச் சந்தித்த இடத்திலே இரு
ந்தார்.
௩௧ அப்போ அவளுடனேகூட வீட்டிலே இருந்து
அவளுக்குத் தேறுதல் சொல்லுகிற யூதர் மரியாள் சீ
க்கிரமாயெழுந்து புறப்பட்டுப் போகிறதைக் கண்
டு: அவள் கல்லறையினிடத்திலே, அங்கே அழுகி
றதற்குப் போகிறாளென்று, அவள் பின்சென்றா
ர்கள்.
௩௨ மரியாளோவென்றால், இயேசு இருக்கிற இடத்
துக்கு வந்து, அவரைக் கண்டபோது அவர் பாதத்திலே
விழுந்து, அவருடனே: ஆண்டவரே, நீர் இங்கே இ
ருந்தீரானால், என் சகோதரன் மரியானே என்றாள்.
௩௩ இயேசு அவளழுகிறதைக் கண்டு அவளுடனே
கூடவந்த யூதரும் அழுகிறதைக் கண்டபோது, ஆவியிலே
துடிப்பட்டு, தமக்குள் கலங்கி:
௩௪ அவனை எங்கே வைத்தீர்களென்றார். அவரு
டனே: ஆண்டவரே, வந்து பாருமென்றார்கள்.
௩௫ இயேசு * கண்ணீர்விட்டார். * லூக். ௰௯, ௪௧.
௩௬ அப்போ யூதர்: இதோ இவனை எத்தனையாய்
சிநேகித்தாரென்றார்கள்.
௩௭ ஆனால் அவர்களில் சிலர்: குருடனுடைய கண்
களை * திறந்த இவர், இவன் மரியாமலிருக்கப்பண்ண
வுங்கூடாதிருந்ததோவென்றார்கள். * ௯, ௬. ௭.
௩௮ அப்போ இயேசு மறுபடியும் தமக்குள் துடிப்
பட்டு, கல்லறையினிடத்துக்கு வந்தார், அது ஒ
ரு கெபியாயிருந்தது, அதின் மேல் ஒரு கல்லு வைக்கப்
பட்டிருந்தது.
௩௯ இயேசு கல்லை வாங்கிப்போடுங்கோளென்றா
ர். மரித்தவனுடைய சகோதரியாகிய மார்த்தாள் அவரு
டனே: ஆண்டவரே, இப்போ நாறுகிறான், அவ
ன் புதைக்கப்பட்டு நாலுநாளாச்சுதென்றாள்.
௪௰ இயேசு அவளுடனே: நீ விசுவாசித்தால், பரா
பரனுடைய மகிமையைக் காண்பாயென்று நானுனக்
குச் சொன்னதில்லையோவென்றார்.
௪௧ அப்போ மரித்தவனை வைக்கப்பட்ட இடத்திலிரு
ந்து கல்லை வாங்கிப்போட்டார்கள். ஆனால் இயேசுக்
கண்களை உயரெடுத்து: பிதாவே. நீரென்னைக் கேட்ட
துக்காக உமக்கு ஸ்தோத்திரிக்கிறேன்.
௪௨ நீரெப்போதுமென்னைக் கேட்கிறீரென்
று நானறிவேன், ஆனால் * நீரென்னை அனுப்பின
தைச் சுற்றிலும் நிற்கும் ஜனம் விசுவாசிப்பதற்காக,
இதை அவர்கள் நிமித்தியமாகச் சொன்னேனென்றார்.
* ௰௨, ௩௰.
௪௩ இதுகளைச்சொன்னபின்பு, அவர் மகா சத்தத்து
டனே: லாசருவே, வெளியேவாவென்று கூப்பி
ட்டார்.

௪௪

௪௪ அப்பொழுது மரித்தவன், கால்களுங் கைகளும் பிரேதச்சீலைகளினாலே கட்டப்பட்டவனாய் வெளியே வந்தான்; அவன் முகம் சீலையினாலே சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி: அவனைக் கட்டவிழ்த்துப் போகவிடுங்கள் என்றார்.

௪௫ அப்பொழுது மரியாளிடத்துக்கு வந்து, இயேசு செய்ததைக் கண்ட யூதரில் அநேகர் * அவரிடத்தில் விசுவாசித்தார்கள். * ௰, ௪௨.

௪௬ ஆகிலும் அவர்களில் சிலர் பரிசேயரிடத்துக்குப் போய், இயேசு செய்தவைகளை அவர்களுக்குச் சொன்னார்கள்.

¶ கிறிஸ்துவைக் கொல்ல ஆலோசனை கூடினது.

௪௭ அப்பொழுது பிரதான ஆசாரியர்களும் பரிசேயரும் * ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டி: நாம் என்ன செய்வோம், இந்த மனுஷன் அநேக அற்புதங்களைச் செய்கிறான். * மத். ௨௬, ௩. சங். ௨, ௧. ௨.

௪௮ நாம் அவனை இப்படி விட்டுவிட்டால், எல்லாரும் அவனை விசுவாசிப்பார்கள், அப்பொழுது ரோமர் வந்து நம்முடைய ஸ்தலத்தையும் சாதியையும் எடுத்துக்கொள்ளுவார்கள் என்றார்கள்.

௪௯ ஆனால் அவர்களில் ஒருவனும் அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனுமாயிருந்த காய்பா என்பவன் அவர்களை நோக்கி: நீங்கள் ஒன்றும் அறியீர்கள்.

௫௰ சாதியனைத்துங் கெட்டுப்போகாதபடிக்கு ஒரே மனுஷன் சனத்துக்காக மரிப்பது நமக்கு நலமாயிருக்குமென்று நீங்கள் சிந்தியாமலுமிருக்கிறீர்களென்றான்.

௫௧ இதை அவன் தன் சுயமாய்ச் சொல்லாமல், அவ்வருஷத்துப் பிரதான ஆசாரியனாயிருந்தபடியினாலே, இயேசு சாதிக்காக மரிப்பாரென்று தீர்க்கதரிசனமாய்ச் சொன்னான்.

௫௨ சாதிக்காக மாத்திரமல்ல, சிதறியிருக்கிற தேவனுடைய பிள்ளைகளை * ஒன்றாகச் சேர்க்கிறதற்காகவுந்தானே. * எபே. ௨, ௰௬.

௫௩ ஆகையால் அந்நாள்முதல் அவரைக் கொலைசெய்யும்படிக்கு ஆலோசனைகூட்டிக்கொண்டிருந்தார்கள்.

௫௪ ஆகையால் இயேசு அப்புறம் வெளியரங்கமாய் யூதருக்குள்ளே சஞ்சரியாமல், அவ்விடம்விட்டு வனாந்தரத்துக்குச் சமீபத்திலே எப்பிராயீம் என்னப்பட்ட ஊருக்குப்போய், அங்கே தம்முடைய சீஷருடனே கூடச் சஞ்சரித்தார்.

௫௫ யூதருடைய பஸ்கா சமீபமாயிருந்தது, அநேகர் தங்களைச் சுத்தம்பண்ணும்படிக்குப் பஸ்காவுக்கு முன்னே நாட்டிலிருந்து எருசலேமுக்குப் போயிருந்தார்கள்.

௫௬ அவர்கள் இயேசுவைத் தேடி, தேவாலயத்திலே நின்றுகொண்டிருக்கையில், ஒருவரோடொருவர்: உங்களுக்கு எப்படித் தோணுது, பண்டிகைக்கு வாரானோவென்று பேசிக்கொண்டார்கள்.

௫௭ பிரதான ஆசாரியரும் பரிசேயருமோவெனில், யாதொருத்தன் அவரிருக்கிற இடத்தை அறிந்தால், தாங்கள் அவரைப் பிடிக்கத்தக்கதாக அதைக்
அறி-

அறிவிக்கவேணுமென்கிறகட்டளையைக் கொடுத்திருந்தார்கள்.

## ௰௨. அதிகாரம்.

¶ கிறிஸ்து பெத்தானியாவிலே பரிமளதயிலம் பூசப்பட்டது.

யேசுவோவென்றால், பஸ்கா வர ஆறு நாளைக்கு முன்னே, தாம் மரித்தோரைவிட்டெழுப்பின மரித்தவனான * லாசருவிருக்கும் பெத்தானியாவுக்கு வந்தார்.

* ௰௧, ௧.

௨ அப்பொழுதங்கே அவருக்கு ராவிருந்து பண்ணினார்கள், மற்தாள் பணிவிடை செய்தாள், லாசருவோவென்றால் அவருடனே கூடப்பந்தியிருக்கிறவர்களிலே ஒருத்தனாயிருந்தான்.

௩ அப்பொழுது மரியாள் விலையேறப்பெற்ற மெய்யான நறுதுகயிலத்திலொருறாத்தலை எடுத்து, யேசுவினுடைய காலகளைப்பூசி, தனமயிர்களால அவருடைய காலகளைத் துடைத்தாள், தயிலத்தின பரிமளத்தினாலே வீடு நிறைந்தது. * மத். ௨௬, ௬—௰௩. மாற். ௰௪, ௩—௯.

௪ அப்பொழுது அவரைக்காட்டிக்கொடுக்கப்போறவனும் அவருடைய சீஷரிலொருவனுமாகிய சீமோனின் குமாரனான யூதாஸ்கரியோத்:

௫ இந்தத்தயிலம் முந்நூறு பணத்துக்கு விற்றுத் தரித்திரருக்குக் கொடுப்படாமல் போனதென்னவென்றான்.

௬ ஆனாலிதை அவன் தரித்திரர் பேரிலே கவலையாயச்சொல்லாமல், அவன் திருடனாயிருந்து, * பணப்பையை வைத்துக்கொண்டு, போடப்பட்டதுகளைச் சுமக்கிறவனானபடியினாலே யப்படிச்சொன்னான். * ௰௩, ௨௯.

௭ அப்பொழுது யேசு: அவளைவிடு, என சரீரம அடக்கம்பண்ணப்படுமநாளுக்கு இதை வைத்திருந்தாள்.

௮ ஏனெனில * எப்போதுந்தரித்திரர் உங்களுடனேயிருக்கிறார்கள், நானோ உங்களுடனே எப்போதுமிரேனென்றார். * ௫. மோ. ௰௫, ௰௧.

௯ அப்பொழுது யூதரிலே வெகுசனம் அவர் அங்கேயிருக்கிறதை அறிந்து, யேசுவுக்காகமாத்திரமல்ல அவர் மரித்தோரைவிட்டெழுப்பின லாசருவைக் காணபதற்காகவும் வந்தது.

௰ ஆனாலப்பிரதானஆசாரியர்கள் லாசருவையுங் கொல்லஆலோசினைபண்ணினார்கள்.

௰௧ ஏனெனில அவனநிமித்தியமாக யூதரிலே அநேகர் போய, யேசுவின்பேரிலே விசுவாசித்தார்கள்.

¶ அவர் யெருசலேமுக்குள் பிறவேசம்பண்ணினது. * மத். ௨௧, ௧—௰௧. மாற். ௰௧, ௧—௰௧. லூ. ௰௯, ௨௯—௪௪.

௰௨ மறுநாளிலே பண்டிகைக்குவந்த வெகுசனம் யேசு யெருசலேமுக்கு வருகிறதைக் கேட்டு,

௰௩ குருத்தோலைகளைப் பிடித்து, அவருக்கு எதிர்கொண்டு போகப் புறப்பட்டு: * ஓசியன்னா, கர்த்தருடைய நாமத்திலே வருகிற இஸ்ரவேலின் ராசா ஸ்துதிக்கப்பட்டவரென்று சத்தமிட்டார்கள். * சங்கீ. ௱௰௮, ௨௫. ௨௬.

௰௪ ஆனாலே யேசுவுக்கு ஒரு கழுதைக்குட்டி அகப்பட்டு, அதின்மேல் அவர் ஏறினார்.

௰௫ சீயோன் குமாரத்தியே, பயப்படாதே, இதோ உன் ராசா கழுதைக்குட்டியின்மேல் ஏறிவருகிறாரென்று * எழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே. * சகரி. ௯, ௯.

௰௬ ஆனாலே இதுகளை அவருடைய சீஷர் முன்னே அறிந்திருந்ததில்லை, யேசு மகிமைப்படப்பட்ட பிறபாடோவென்றாலே இப்படி அவரைக் குறித்தெழுதியிருந்ததென்றும், இப்படியே அவருக்குச் செய்தோமென்றும் நினைவுகூர்ந்தார்கள்.

௰௭ அவர் லாசருவைக் கல்லறைக்கு வெளியே வரவழைத்து மரித்தோரை விட்டெழுப்புகிறபோது அவருடனே கூட இருந்த கும்பு அதற்குச் சாட்சிகொடுத்திருந்தது.

௰௮ ஆகையினாலே அவர் இந்த அடையாளத்தைச் செய்தாரென்று கும்பு கேட்டிருந்து, அவருக்கு எதிர்கொண்டு போச்சுது.

௰௯ அப்போ பரிசேயர் ஒருத்தரோடொருத்தர்: நீங்கள் செய்கிறது ஒரு பிரயோசனமுமல்லவென்று பாருங்கோளேன், இதோ லோகம் அவனைப் பின் சென்றுபோச்சுதே என்றார்கள்.

## ¶ தாம் மகிமைப்படுவதை அவர் முன்னறிவித்தது.

௨௰ ஆனாலே பண்டிகையிலே பணிந்துகொள்ள வந்தவர்களில் சில கிரேக்கரிருந்தார்கள்.

௨௰௧ இவர்கள் கலிலேயாதேசத்துப் பெத்சாயிதா ஊராகிய * பிலிப்பனிடத்துக்கு வந்து: ஐயா, யேசுவைக் காண ஆசையுண்டென்று அவனை வேண்டிக்கொண்டார்கள். * ௧, ௪௪. ௪௫.

௨௰௨ பிலிப்பு வந்து அந்திரேயாவுக்குச் சொன்னான், அப்புறம் அந்திரேயாவும் பிலிப்புமே யேசுவுக்குச் சொன்னார்கள்.

௨௰௩ யேசுவோவென்றால் அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: * மனுஷனுடைய குமாரன் மகிமைப்படுகிறதற்கு வேளை வந்தது. * ௰௩, ௧.

௨௰௪ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * கோதுமை மணி நிலத்துக்குள் விழுந்து மரித்ததாலொழிய, தனித்திருக்கும், மரித்ததேயானால், வெகு கனிகொடுக்கும். * ௧. கொ. ௰௫, ௩௬.

௨௰௫ * தன் சீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழப்பான், இந்த லோகத்திலே தன் சீவனைப் பகைக்கிறவனே அதை நித்திய சீவனுக்குக் காப்பான். * மத். ௰௬, ௩௩.

௨௰௬ ஒருத்தன் எனக்கு ஊழியஞ்செய்தால், என்னைப் பின்செல்லக்கடவான், நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனுமிருப்பான், ஒருவன் எனக்கொ

ருத்தன்

ருந்தன் ஊழியஞ்செய்தால், அவனைப் பிதாக்கனம்பண்
ணுவார். * ௰௪, ௩. ௰௭, ௨௪.
௨௭ இப்போதென் ஆத்துமங்கலங்குகிறது, நானென்
னசொல்லுவேன். பிதாவே, இந்த வேளைக்கெ
ன்னை நீங்கலாக்கிவிடும், ஆகிலும் இதுக்குத்தானே
இந்த வேளைக்குள்ளே வந்தேன்,
௨௮ பிதாவே, உமது நாமத்தை மகிமைப்படுத்துமெ
ன்றார். அப்பொழுது: மகிமைப்படுத்தினேம், பின்னையு
ம மகிமைப்படுத்துவோமென்கிற சத்தம் வானத்திலிரு
ந்து வந்தது.
௨௯ அப்போ நின்றுகொண்டிருந்து அதைக் கேட்ட
கும்பு: குமுறலுண்டாச்சுதென்றார்கள். வேறே
பேர்: ஒரு தேவதூதன் அவருடனே பேசினானென்
றார்கள்.
௩௰ யேசு பிரதியுத்தரமாகச் சொன்னதாவது,
எனக்காக்கிந்தச் சத்தமுண்டாகாமல், * உங்களுக்
காக்க உண்டாச்சுது. * ௰௧, ௪௨.
௩௧ இப்போ இந்த லோகத்துக்கு நியாயத்தீர்க்குதலு
ண்டாயிருக்குது, இப்போ * இந்த லோகத்தின் பிரபு
புறம்பாகத் தள்ளப்படுவான். * ௰௬, ௰௧.
௩௨ நான் * பூமியிலிருந்துயர்த்தப்பட்டேனாகில், * *
எல்லாரையும் என்னண்டைக்கிழுத்துக்கொள்ளு
வேனென்றார். * ௩, ௰௪. ௰௫. * * ௬, ௪௪.
௩௩ இதைத்தாமெப்படிக்கொத்த மரணமாய் மரி
ப்பதென்று அடையாளமாகச் சொன்னார்.
௩௪ கும்பு அவருக்குப் பிரதியுத்தரமாக: * கிறிஸ்
துதானென்றைக்குமிருக்கிறாரென்று நாங்கள்
வேதத்திலே கேழ்விப்பட்டிருக்கிறோமே, பின்னை நீர்:
மனுஷகுமாரன் உயர்த்தப்பட வேண்டிய
தென்றெப்படிச் சொல்லுகிறீர், இந்த மனுஷகுமார
னாரென்றார்கள். * சங்கீ. ௱௰, ௪.
௩௫ அப்போ யேசு அவர்களுடனே: இன்னங்கொ
ஞ்சக்காலம் வெளிச்சமுங்களுடனேயிருக்குது, இரு
ட்டுங்களைப் பிடியாதபடிக்கு நீங்கள், வெளிச்சமு
ங்களுக்கிருக்குந்தனையும், நடவுங்கோள், இருளி
லே நடக்கிறவனெங்கே போகிறானென்றறியான்,
௩௬ நீங்கள் * வெளிச்சத்தின் பிள்ளைகளாகும்ப
டிக்கு, வெளிச்சமுங்களுக்கிருக்குந்தனையும் வெளிச்ச
த்தின் பேரில் விசுவாசியுங்கோளென்றார். இதுகளை
ச் சொல்லிப் புறப்பட்டு அவர்களை விட்டு மறைந்
தார். * எபே. ௫, ௮.

¶ யூதருடைய அவிசுவாசம்.

௩௭ ஆனால் அவரித்தனை அடையாளங்களை அவ
ர்களுக்கு முன்பாகச் செய்திருந்தும், அவர் பேரில் விசு
வாசியாதே போனார்கள்.
௩௮ * கர்த்தாவே, எங்களால் கேழ்விப்பட்டதை
விசுவாசித்தவனார், கர்த்தருடைய கை ஆருக்கு வெ
ளிப்பட்டுதென்று யேசாயா தீர்க்கதரிசி சொன்ன வார்
த்தை நிறைவேறும்படியாயதானே. * யெசா. ௫௩.
௧. றோ. ௰. ௰௬.
௩௯ ஆனபடியினாலே அவர்கள் விசுவாசிக்கமாட்

டாமல்போனார்கள், ஏனென்றால் * யெசாயாம றுபடியுஞ்சொன்னதாவது: * யெச. ௬, ௯. ௰.
௪௰ அவர்கள் கண்களினாலே காணாமலும் இருதயத்தினாலே உணராமலும், மனந்திரும்பாமலும், நாம் அவர்களைக் குணமாக்காமலுமிருக்கும்படிக்கு, அவர் அவர்களுடைய கண்களைக் குருடாக்கி, அவர்களிருதயத்தைக் கடினமாக்கினாரென்று,
௪௧ யெசாயா அவருடைய மகிமையைக் கண்டு. அவரைக்குறித்துப் பேசினபோது சொன்னான்.
௪௨ ஆகிலுந்தலைவரிலும் அநேகர் அவர் பேரிலே விசுவாசித்தார்கள், ஆனாலவர்கள் * ஆலயத்துக்குப் புறம்பானவர்களாகாதபடிக்கு, பரிசேயர்நிமித்தியம் அதை அறிக்கைபண்ணாதிருந்தார்கள். * ௯, ௨௨.
௪௩ ஏனென்றால் * பராபரனுடைய மகிமையைப் பார்க்கிலும் மனுஷனுடைய மகிமையை அதிகமாய் விரும்பினார்கள். * ௫, ௪௪.
௪௪ யெசுவோ வெளிலசத்தமிட்டுச்சொன்னதாவது: என்பேரிலே விசுவாசிக்கிறவன் என்பேரிலே அல்ல. என்னை அனுப்பினவர் பேரிலே விசுவாசிக்கிறான்.
௪௫ * என்னைக் காண்கிறவன் என்னை அனுப்பினவரைக் காண்கிறான் *. ௰௪, ௯.
௪௬ என்பேரிலே விசுவாசிக்கிற எவனும் இருளிலிராதபடிக்கு, நான் * லோகத்திலே வந்த வெளிச்சமாயிருக்கிறேன். * ௧, ௯.
௪௭ ஒருத்தன் என் வார்த்தைகளைக் கேட்டும் விசுவாசியாதே போனால், அவனை நான் * ஞாயந்தீரேன், ஏனென்றால் லோகத்தை ஞாயந்தீர்க்கவல்ல, லோகத்தை ரட்சிக்க வந்தேன். * ௩, ௰௭.
௪௮ என்னைத்தள்ளி என் வார்த்தைகளை ஏர்த்துக்கொள்ளாதவனை ஞாயந்தீர்க்கிறதொன்றிருக்குது. நான் சொன்ன வசனமே அவனைக் கடசிநாளிலே ஞாயந்தீர்க்கும்.
௪௯ ஏனென்றால் நான் என் சுயமாய்ப் பேசினதில்லை, நான் பேசவுஞ் சொல்லவும் வேண்டியதின்னதென்று என்னை அனுப்பின பிதா எனக்குக் கற்பனை கொடுத்தார்.
௫௰ அவருடைய கற்பனை நித்தியசீவனாயிருக்குதென்றறிவேன், ஆகையால் நான் பேசுகிறதுகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேனென்றார்.

## ௰௩. அதிகாரம்.

¶ கிறீஸ்துசீஷருடைய கால்களைக் கழுவினது.

ஆனால் பஸ்காவின் பண்டிகைக்கு முன்னே, யேசுநாத லோகத்தைவிட்டுப் பிதாவண்டைக்குப் போகத்தம்முட்டே வேளை வந்ததென்றறிந்து, தாமிந்த லோகத்திலிருக்கிற தம்முடவர்களை எப்படிச் சினேகித்துக் கொண்டிருந்தாரோ, அப்படி முடிவுபரியந்தம் அவர்களைச் சினேகித்தார்.
௨ ராப்போசனம் பண்ணிக்கொள்ளவும், * பிசா
சும

சம அப்போதே சீமோனுடைய குமாரனாகிய யூதா ஸ்காரியோத்தின் இருதயத்திலே அவரைக் காட்டிக்கொடுக்க வேணுமென்கிறதைப் போட்டிருக்கக் கொள்ளவும், * லூக். ௨௨, ௩.

௩ இயேசு, பிதா எல்லாத்தையுந் * தம்முடைய கைகளிலே ஒப்பித்தாரென்கிறதையும், தாம் பராபரனிடத்திலிருந்து வந்ததையும் பராபரனிடத்துக்குப் போகிறதையும் அறிந்திருந்து, * மத். ௰௧, ௨௭. ௨௮, ௰௮.

௪ ராப்போசனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைப் போட்டுவைத்து, ஒரு சீலையை எடுத்து, சுத்திக் கட்டிக்கொண்டார்.

௫ பிறபாடு கழுவுகிற பாத்திரத்திலே தண்ணீர் வார்த்து, சீஷருடைய காலகளைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினாலே துடைக்கவுந் துடங்கினார்.

௬ அப்போ சீமோன் பேதுருவண்டைக்கு வந்தார், அவன் அவருடனே: ஆண்டவரே, நீர் என் காலகளைக் கழுவுகிறீரோ என்றான்.

௭ இயேசு அவனுக்குப் பிறத்தியுத்தாரமாக: நான் செய்கிறதின்னதென்று இப்போ அறியாய். பின்மேலோ அறிவாயென்றார்.

௮ பேதுரு அவருடனே: நீர் என்னுடைய காலகளைக் கழுவவேண்டாமென்றான். இயேசு அவனுக்குப் பிறத்தியுத்தாரமாக: உன்னை நான் கழுவாதே போனால், என்னுடனே உனக்குப் பங்கில்லையென்றார்.

௯ சீமோன் பேதுரு அவருடனே: ஆண்டவரே, என் காலகளை மாத்திரமல்ல, கைகளையுந் தலையையுங்கூட என்றான்.

௰ இயேசு அவனுடனே: முழுகினவனுக்குக் காலகளை மாத்திரங் கழுவத் தேவையாயிருக்குது, ஆனால் முழுதுஞ் சுத்தமாயிருக்கிறான், நீங்களும் * சுத்தமாயிருக்கிறீர்கள், எல்லாரும் அல்லவென்றார். * ௰௫, ௩.

௰௧ ஏனென்றால் * தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அறிந்திருந்தார், ஆகையினாலே: நீங்கள் எல்லாரும் சுத்தமல்லவென்றார். * ௬, ௬௪.

௰௨ அவர்களுடைய காலகளைக் கழுவின பிறபாடே, அவர் தம்முடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு திரும்ப உட்கார்ந்து, அவர்களுக்குச் சொன்னதாவது: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களோ.

௰௩ நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும் அழைக்கிறீர்கள், நிதானமாய்ச் சொல்லுகிறீர்கள், ஏனென்றால் * நான் அவர்தான். * மத். ௨௩, ௮. ௰.

௰௪ இப்போதும் * ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலகளைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருத்தருக்கொருத்தர் காலகளைக் கழுவக்கடவீர்கள். * பிலி. ௨, ௫—௭.

௰௫ ஏனென்றால் நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களுஞ் செய்யவதற்கு, * உங்களுக்கு மாதிரியைக் கொடுத்தேன். * ௧, பேது. ௨, ௨௧.

௰௬ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச்

சொல

சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எசமானிலும் பெரியவனல்ல, அப்போஸ்தலன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனுமல்ல.

௰௭ நீங்கள் இதுகளை அறிந்திருக்கக்கொள்ளாதே இதுகளைச் செய்தீர்களானால், பாக்கியவான்களாயிருக்கிறீர்கள்.

௰௮ உங்களெல்லாரையுங்குறித்து நான் சொல்லேனே, நான் தெரிந்துகொண்டவர்களை நான் அறிவேன். ஆனால் * வேதவாக்கியம் நிறைவேறும்படியாக, என்னுடனே அப்பம் புசிக்கிறவனென் மேல் தன் குதிகாலைத் தூக்கினான். * சங்கீ. ௪௧, ௰.

௰௯ இது சம்பவிக்கும்போது, நான்தானென்று நீங்கள் விசுவாசிப்பதற்கு, அது சம்பவியாததற்கு முன்னே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

௨௰ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், * நான் அனுப்பப்போறயாதொருத்தனை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவனோவெனில் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறானென்றார். * மத். ௰, ௪௰.

¶ அவர் யூதாவின் துரோகத்தைக் வெளிப்படுத்தினது.

௨௧ யேசு இதுகளை வசனித்தபிறகு, ஆவியிலே கலங்கி; மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்களிலொருத்தன் என்னைக் காட்டிக்கொடுப்பானென்று சாட்சியிட்டுச் சொன்னார்.

௨௨ அப்போ சீஷர், ஆரைக்குறித்துப் பேசுகிறாரோவென்று ஐயப்பட்டு ஒருத்தரை ஒருத்தர் பார்த்தார்கள்.

௨௩ ஆனால் அவருடைய சீஷரிலே யேசு சிநேகித்த ஒருத்தன் யேசுவின் மடியருகே படுத்திருந்தான்.

௨௪ சீமோன் பேதுரு, அவர் ஆரைக் குறித்துச் சொல்லுகிறாரென்று விசாரிக்கச் சயிகை காட்டினான்.

௨௫ அப்போ அவன் யேசுவின் மார்பிலே சாய்ந்துகொண்டு, அவருடனே; ஆண்டவரே, அவன் ஆரென்றான்.

௨௬ யேசு மறுஉத்தாரமாக: நான் துண்டத்தைத் தோய்த்துக் கொடுக்கப்பட்டவனே அவன் தானென்று சொல்லி, துண்டத்தைத் தோய்த்து, சீமோன் குமாரனாகிய யூதா ஸ்காரியோத்துக்குக் கொடுத்தார்.

௨௭ துண்டத்தை அவன் வாங்கினபின்பு சாத்தான் அவனுக்குள் பட்டது. அப்போ யேசு அவனுடனே: நீ செய்கிறதைச் சீக்கிரமாகச் செய்யென்றார்.

௨௮ ஆனால் ஏதுக்கு அவனுக்கு இதைச் சொன்னாரென்று பந்தியிருந்தவர்களிலொருத்தனும் அறிந்ததில்லை.

௨௯ சிலர் யூதா * பணப்பையை வைத்துக் கொண்டிருந்தபடியினாலே யேசு அவனுடனே: பண்டிகைக்கு நமக்குத் தேவையானதுகளைக் கொள், அல்லது தரித்திரருக்கேதாகிலுங் கொடுவென்று சொன்னாராக நினைத்தார்கள். * ௰௨, ௬.

௩௰

௩௰ அவனந்தத்துணிக்கையை வாங்கினவு
டனே புறப்பட்டுப்போனான், அப்போ ராத்திரிகால
மாயிருந்தது.

¶ யூதாபோனபின்பு கிறிஸ்து தம்முடைய சீஷ
ருடனே பண்ணின சம்பாஷணை.

௩௧ அவன் புறப்பட்டுப்போனபின்பு யேசு சொ
ன்னதாவது: இப்போ மனுஷனுடைய குமாரன் மகி
மைப்பட்டார், பராபரனும் அவரிலே மகிமைப்பட்டார்.
௩௨ பராபரன் அவரிலே மகிமைப்பட்டிருந்தால்,
பராபரன் அவரையுந் தம்மிலே மகிமைப்படுத்துவார்,
சீக்கிரமாயும் அவரை மகிமைப்படுத்துவார். ✱ ௰௭, ௧.
௩௩ பிள்ளைகளே. இன்னுங்கொஞ்சப்போது உங்
களுடனே கூடயிருக்கிறேன், என்னைத் தேடுவீர்க
ள், ஆனாலும்: நான் போகிறவிடத்துக்கு நீங்கள் வரமா
ட்டீர்களென்று நான் ✱ யூதரோடே சொன்னது
போலேப்போ உங்களோடுஞ் சொல்லுகிறேன். ✱
௭, ௩௪.
௩௪ நீங்கள் ஒருத்தரை ஒருத்தர் சிநேகியுங்கோள்,
நான் உங்களைச் சிநேகித்ததுபோல நீங்களும் ஒருத்
தரை ஒருத்தர் சிநேகியுங்கோளென்கிற புதுக்கற்பனை
யை உங்களுக்குக் கொடுக்கிறேன். ✱ ௧பே. ௫, ௨.
௩௫ நீங்கள் ஒருத்தரோடொருத்தர் சிநேகமுள்ளவர்
களாயிருந்தால், அதினாலே எல்லாரும் நீங்களென
க்குச் சீஷரென்றறிவார்களென்றார்.
௩௬ சீமோன் பேதுரு அவருடனே: ஆண்டவரே,
எங்கே போகிறீரென்றான். யேசு அவனுக்குப் பிறத்தி
யுத்தரமாக: நான் போகிறவிடத்துக்கு நீ இப்போ என்
னைப் பின்செல்லக்கூடாது, ✱ பிறபாடே என்னைப்பின்
செல்லுவாயென்றார். ✱ ௨௧. ௰௮. ௰௯.
௩௭ பேதுரு அவருடனே: ஆண்டவரே, நானிப்
போ உம்மைப் பின்செல்லக்கூடாதிருக்கிறதென்ன,
உமக்காக என் சீவனைக் கொடுப்பேனென்றான்.
௩௮ யேசு அவனுக்குப் பிறத்தியுத்தரமாக: என்னுக்
காக உன் சீவனைக் கொடுப்பாயோ, மெய்யாகவே
மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன், ✱ நீ என்
னை மூன்றுவிசை மறுதலிக்குமட்டுஞ் சேவல்
கூவாதென்றார். ✱ லூக். ௨௨, ௩௩. ௩௪. மாற்கு.
௰௪, ௩௰.

## ௰௪. அதிகாரம்.

¶ தாம் போகிறதினாலே உண்டாகும் பிற
யோசனங்களைக் கிறிஸ்து விபரித்து,
சீஷருடனே பண்ணின ஆறுத
லான சம்பாஷணை.

௧ உங்களிருதயங் கலங்கவேண்டாம், பராபரன்
பேரிலே விசுவாசியுங்கோள், என் பேரிலும் வி
சுவாசியுங்கோள்.
௨ என் பிதாவின் வீட்டிலே அநேகம் வாசஸ்தலங்
களுண்டு, அப்படியில்லாதிருந்ததேயானால், உங்

களு

உங்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப் போகிறேனென்று உங்களுடனே சொல்லுவேன்.

௩ நான் போய் உங்களுக்கு ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினேனேயாகில், * நானிருக்கிற இடத்திலே நீங்களுமிருக்கும்படிக்கு, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்திலே சேர்த்துக்கொள்ளுவேன். * ௰௨, ௨௬. ௰௭, ௨௪.

௪ நான் போகிற இடத்தை அறிந்திருக்கிறீர்கள், வழியையும் அறிந்திருக்கிறீர்களென்றார்.

௫ தோமா அவருடனே: ஆண்டவரே, நீர் போகிற இடத்தை அறியோமே, வழியை நாங்கள் எப்படி அறியலாமென்றான்.

௬ யேசு அவனுடனே: * நானே வழியுஞ் சத்தியமுஞ் சீவனுமாயிருக்கிறேன், என்னாலேயல்லாமல் ஒருத்தனும் பிதாவினிடத்துக்கு வரான். * எபே. ௩, ௰௨. எபி. ௭, ௨௫. ௰, ௰௯. ௨௰.

௭ என்னை அறிந்திருந்தீர்களானால் என் பிதாவையும் அறிந்திருப்பீர்கள், இதுமுதல் நீங்கள் அவரை அறிந்தும் அவரைக் கண்டதுமுண்டென்றார்.

௮ பிலிப்பு அவருடனே: ஆண்டவரே, பிதாவை எங்களுக்குக் காண்பியும், அப்போ எங்களுக்குப் போதுமென்றான்.

௯ யேசு அவனுடனே சொன்னதாவது: பிலிப்புவே, இத்தனைக் காலம் நான் உங்களுடனே கூட இருந்தும் நீ என்னை அறியவில்லையோ, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், பின்னை எப்படி நீ பிதாவை எங்களுக்குக் காண்பியுமென்கிறாய்.

௰ * நான் பிதாவினிடமும் பிதா என்னிடமும் இருக்கிறதை விசுவாசியாயோ. நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லேன், என்னுள் வாசமாயிருக்கிற பிதாத்தானே இந்தக் கிரியைகளைச் செய்கிறார். * ௰, ௩௮.

௰௧ நான் பிதாவினிடமும் பிதா என்னிடமும் இருக்கிறாரென்று என்னை நம்புங்கோள், அல்லவென்றால், கிரியைகளினிமித்தியமே என்னை நம்புங்கோள்.

௰௨ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், என்பேரில் விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானுஞ் செய்வான், இதுகளைப் பார்க்கப் பெரியதுகளையுஞ் செய்வான், ஏனென்றால் நான் என் பிதாவினிடத்துக்குப் போகிறேன்.

௰௩ நீங்கள் என் நாமத்திலே எதைக் கேட்பீர்களோ அதை நான், பிதா குமாரனிலே மகிமைப்படுவதற்காகச் செய்வேன்.

௰௪ நீங்கள் என் நாமத்திலே எதையாகிலுங் கேட்டால், அதை நான் செய்வேன்.

௰௫ நீங்கள் என்னைச் சிநேகித்தால், * என் கற்பினைகளைக் கைக்கொள்ளுங்கோள். * ௰௫, ௰. ௧. யோ. ௫, ௩.

௰௬ நானும் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்போ உங்களுக்குச் சத்தியத்தினுடைய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை, என்றென்றைக்கும் உங்

குளு

களோடேகூடத் தரித்திருக்கும்படிக்கு, கொடுப்பார்.

௰௭ அவரை லோகம் பெறக்கூடாது, ஏனென்றால் அது அவரைக் காண்கிறதுமில்லை அவரை அறிகிறதுமில்லை, நீங்களோ அவரை அறிகிறீர்கள், ஏனென்றால் உங்களிடத்திலே தரிக்கிறார், உங்களுக்குள்ளுமிருப்பார்.

௰௮ உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன், உங்களண்டைக்கு வருகிறேன்.

௰௯ இன்னுங்கொஞ்சம் போதிலே லோகமென்னைக் காணாதேபோம், நீங்களோ என்னைக் காண்பீர்கள். ஏனென்றால் நான் பிழைக்கிறேன், நீங்களும் பிழைப்பீர்கள்.

௨௰ அந்நாளிலே நீங்கள் * நான் என் பிதாவிலும் நீங்கள் என்னிலும் நான் உங்களிலுமிருக்கிறதை அறிவீர்கள். * ௰௭, ௨௧. ௨௨.

௨௧ என் கற்பனைகளை அடைந்திருந்து அதுகளைக் கைக்கொள்ளுகிறவனே என்னைச் சினேகிக்கிறவன், என்னைச் சினேகிக்கிறவனெவனோ என் பிதாவினாலே சினேகிக்கப்படுவான், * நானும் அவனைச் சினேகித்து அவனுக்கென்னை வெளிப்படுத்துவேனென்றார். * வாக்க. ௮, ௰௭.

௨௨ ஸ்காரியோத்தல்லாத யூதாவானவன் அவருடனே: ஆண்டவரே, நீர் லோகத்துக்கல்ல, எங்களுக்கும் உம்மை வெளிப்படுத்தப்போற முகாந்தரமென்னவென்றான்.

௨௩ யேசு அவனுக்குப் பிரத்தியுத்தாரமாக: ஒருத்தன் என்னைச் சினேகித்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்; அவனை என் பிதா சினேகிப்பார், அவனண்டைக்கு நாங்கள் வந்து அவனிடத்தில் வாசம்பண்ணுவோம்.

௨௪ என்னைச் சினேகியாதவன் என் வசனங்களைக் கைக்கொள்ளான். நீங்கள் கேட்கிற வசனம் என்னுடையதாயிராமல் என்னை அனுப்பின பிதாவினுடையதாயிருக்குது.

௨௫ நான் உங்களுடனேயிருக்கக்கொள்ள இதுகளை உங்களுக்குச் சொன்னேன்.

௨௬ ஆனால் * பிதா என் நாமத்திலே அனுப்பப்போற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே உங்களுக்கெல்லாத்தையும் போதித்து, நான் உங்களுக்குச் சொன்னதெல்லாத்தையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். * ௰௫, ௨௬.

௨௭ * சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போறேன், என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன். லோகந்தருகிறதுபோலே நான் உங்களுக்குத் தரேன், உங்களிருதயங் கலங்கவும் வேண்டாம் பயமாயிருக்கவும் வேண்டாம். * பிலி. ௪, ௭.

௨௮ போய் உங்களண்டைக்கு வருகிறேனென்று நான் உங்களுடனே சொன்னதைக் கேட்டீர்கள், என்னைச் சினேகித்தீர்களானால் பிதாவண்டைக்குப் போறேனென்று நான் சொன்னதுக்காகச் சந்தோஷப்படுவீர்கள். ஏனென்றால் என் பிதா என்னிலும் பெரியவர்.

௨௯ அதுசம்பவிக்கும்போது நீங்கள் விசுவாசிப்பதற்காக அது சம்பவியாததுக்கு முன்னே அதை உங்களுக்குச் சொன்னேன்.
௩௰ இனி உங்களோடே வெகுவாய்ப் பேசேன், ஏனென்றால் இந்த லோகத்தின் பிரபு வருகிறான், அவனுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை.
௩௧ நானே என் பிதாவைச் சிநேகிக்கிறேனென்றும், * பிதா எனக்குக் கற்பித்தபடியே செய்கிறேனென்றும் லோகம் அறியும்படிக்கு, எழுந்திருங்கோள், இவ்விடம் விட்டுப் போவோம் வாருங்கோள் என்றார். * ௰, ௰௮.

## ௰௫. அதிகாரம்.

¶ கிறீஸ்து சீஷர்களைத் தம்மில் நிலைத்திருக்கக் கற்பித்தது.

நானே மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்.
௨ என்னில் கனி கொடாத கொடியையெல்லாம் அவர் அறுத்துப்போட்டு, கனி கொடுக்கிறதையெல்லாம், அது அதிகக் கனிகளைக் கொடுப்பதற்காகச் சுத்தம் பண்ணுகிறார்.
௩ நான் உங்களுடனே பேசின வசனத்தினாலே நீங்கள் அப்போதே சுத்தமாயிருக்கிறீர்கள்.
௪ * என்னில் நிலைத்திருங்கோள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன், கொடி திராட்சச்செடியிலே நிலைத்திருந்தாலேயழிய, தானாய்க் கனி கொடுக்கக்கூடாததுபோல, நீங்களும் என்னிலே நிலைத்திருந்தாலேயழிய, கனி கொடுக்கக்கூடாது. * ௧. யோ. ௨, ௨௪.
௫ நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள், ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவனே வெகு கனியைக் கொடுக்கிறான், ஏனென்றால் என்னையல்லாமல் நீங்கள் ஒன்றுஞ் செய்யக்கூடாது.
௬ ஒருத்தன் என்னில் நிலைத்திராவிட்டால், அவன் கொடியைப்போல வெளியே எறியுண்டு உலர்ந்து போவான், அதுகளைச் சேர்த்து அக்கினியிலே போடுகிறார்கள், அப்போ வெந்துபோம்.
௭ நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், * நீங்கள் வேண்டியதைக் கேட்பீர்கள், அது உங்களுக்குண்டாம். * மாற்கு. ௰௧, ௨௪.
௮ நீங்கள் வெகு கனியைக் கொடுப்பதினாலே * என் பிதா மகிமைப்படுவார், எனக்குச் சீஷராயிருப்பீர்கள். * மத். ௫, ௰௬.

¶ அவர் சிநேகத்தைக் குறித்துச் சொன்னது.

௯ பிதா என்னைச் சிநேகித்ததுபோல நானும் உங்களைச் சிநேகித்தேன், என் சிநேகத்திலே நிலைத்திருங்கோள்.
௰ நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய சிநேகத்திலே நிலைக்கிறதுபோல, நீங்களும் * என் கற்பனைகளைக் கைக்

கொ

கொணடிருநதால, என சிநேகததிலே நிலைததிருப்பீர்கள. * ௧. யோவா. ௫, ௩.
௰௧ என்னுடைய சநதோஷம உங்களில நிலைததிருக்கிறதுக்கும, உங்கள சநதோஷம நிறைவேறுகிறதுக்கும, இதுகளை உங்களுக்குச சொன்னேன.
௰௨ நான உங்களைச சிநேகிததது போலநீங்களும ஒருததரை ஒருததர் சிநேகிக்கவேணுமெனகிறதே * என்னுடைய கற்பனையாயிருக்குது. * ௰௩, ௩௪.
௰௩ ஒருததன தன சிநேகிதருக்காகத தன பிராணனைக கொடுக்கிற சிநேகததிலும அதிகமான சிநேகம ஒருததருக்குமில்லை.
௰௪ * நான உங்களுக்குக கற்பிக்கிறயாவையுஞ செய்தீர்களானால நீங்கள என சிநேகிதராயிருக்கிறீர்கள. * மத. ௰௨, ௫௰.
௰௫ இனி உங்களை ஊழியக்காறரென்று சொல்லேன, ஏனெனில ஊழியக்காறன தன எசமான செய்கிறதை அறியான. உங்களையோ சிநேகிதரென்றேன, ஏனெனில நான என பிதாவினாலே கேழவியானதெல்லாததையும உங்களுக்கறிவிததேன.
௰௬ நீங்கள * போய, கனி கொடுக்கவும, உங்கள கனி நிலைததிருக்கவும, நீங்கள என நாமத்திலே பிதாவைத கேட்பீர்களோ அதை அவர் உங்களுக்குக கொடுக்கவும, நீங்கள என்னைத தெரிந்துகொள்ளாமல நான உங்களைத தெரிந்துகொண்டு வைததேன. * மத. ௨௮, ௰௯. ௨௰.
௰௭ நீங்கள ஒருததரை ஒருததர் சிநேகிக்க வேணுமெனபதையே உங்களுக்குக கற்பிக்கிறேன.

## ¶ அவர லோகததினுடைய பகையைக குறிததுச சொன்னது.

௰௮ லோகம உங்களைப பகைததால, அது உங்களுக்கு முன்னே என்னைப பகைசசுதென்றறியுங்கோள.
௰௯ லோகததாராயிருந்தீர்களானால, லோகந தன்னுடையதைச சிநேகிததிருக்குமாம, * நீங்களோ வெளிலோகததாராயிராமல நான உங்களை லோகததுக்குவிலக்கித தெரிந்துகொணட படியினாலே லோகம உங்களைப பகைக்குது. * ௰௭, ௰௪.
௨௰ ஊழியக்காறன தன எசமானிலும பெரியவனல்லவென்று * நான உங்களுக்குச சொன்ன வார்ததையை நினைததுக்கொள்ளுங்கோள, அவர்கள என்னைத துனபப்படுததினதுண்டானால உங்களையும துனபப்படுததுவார்கள; அவர்கள என வசனததைக கைக்கொண்டதுண்டானால உங்களுடைய வசனததையுங கைக்கொள்ளுவார்கள. * மத. ௰, ௨௪. ௨௫.
௨௧ என நாமததினிமித்தியமே இதுகளையெல்லாம உங்களுக்குச செய்வார்கள, ஏனெனில என்னை அனுப்பினவரை * அறியார்கள. * ௰௬, ௩.
௨௨ நான வந்து அவர்களுக்குச சொல்லாதிருந்தேனானால, அவர்களுக்குப பாவமுண்டாயிராது, இப்போதோ அவர்கள பாவததுக்கு அவர்களுக்குப போக்கில்லை.

௨௩ என்னைப் பகைக்கிறவன் என் பிதாவையும் பகைக்கிறான்.

௨௪ நான் அவர்களுக்குள்ளே வேறொருத்தருஞ் செய்யாத கிரியைகளைச் செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப் பாவமுண்டாயிராது. இப்பொழுதோ அவர்கள் கண்டிருந்தும் என்னையும் என் பிதாவையும் பகைத்திருக்கிறார்கள்.

௨௫ ஆனால்: ✱ முகாந்தரமில்லாமல் என்னைப் பகைத்தார்களென்று அவர்கள் வேதத்திலே எழுதியிருக்கிற வாக்கியம் நிறைவேறும்படிக்கு இப்படியாச்சுது. ✱ சங். ௬௯, ௫.

௨௬ பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்தியத்தினுடைய ஆவியென்கிற ✱ தேற்றரவாளனானவர் வரும்போதோவென்றால், அவர் என்னைக்குறித்துச் சாட்சிகொடுப்பார். ✱ ௰சா, ௨௬.

௨௭ ✱ நீங்களுஞ் சாட்சிகொடுப்பீர்கள், ஏனெனில் ஆதிமுதலாய் என்னுடனே கூட இருந்தீர்கள். ✱ அப்போ. ௧, ௮.

௰சா. அதிகாரம்.

¶ சீஷர்மேலே வருந்துன்பங்கள் அவர் முன்னறிவித்தது.

நீங்கள் இடறலடையாதபடிக்கு இதுகளை உங்களுக்குச் சொன்னேன்.

௨ ✱ உங்களை ஆலயத்துக்குப் புறம்பாக்குவார்களென்கிறதுந்தவிர வேளை வரும், அப்போ உங்களைக் கொல்லுகிறவனெல்லாம், தான் பராபரனுக்கு ஆராதனை செய்கிறவனென்று நினைப்பான். ✱ மத். ௨௪, ௯.

௩ அவர்கள் ✱ பிதாவையும் என்னையும் அறியாதபடியினாலே இதுகளை உங்களுக்குச் செய்வார்கள். ✱ ௰ரு, ௨௧.

௪ அந்த வேளை வரும்போதோவென்றால், நான் அதை உங்களுக்குச் சொன்னேனென்று உங்களுக்கு ✱ நினைப்பாக, இதுகளை உங்களுடனே பேசினேன். ஆனால் இதுகளை உங்களுக்கு ஆதிமுதலாய் நான் சொல்லவில்லை, ஏனெனில் உங்களுடனே கூட இருந்தேன். ✱ ௰௩, ௰௯.

¶ தாம்போனபின்பு பரிசுத்த ஆவியை அனுப்புவோமென்று அவர் பண்ணின வாக்குத்தத்தம்.

௫ இப்பொழுதோவென்றால் என்னை அனுப்பினவரிடத்துக்குப் போகிறேன், ஆனால் எங்கே போகிறாயென்று உங்களில் ஒருத்தனும் என்னைக் கேளாமல்,

௬ நான் இதுகளை உங்களுக்குச் சொன்னதினாலே துக்கம் உங்கள் இருதயத்தை நிரப்பிற்று,

௭ ஆனாலும் நான் உங்களுக்கு மெய்யைச் சொல்லுகிறேன், நான் போகிறது உங்களுக்குப் பிரயோசன

மாய்

மாயிருக்குது, ஏனெனில் நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களண்டைக்கு வரார், நான் போனேனேயாகில் அவரை உங்களண்டைக்கு அனுப்புவேன். * ௰௪, ௰௬.

௮ அவர் வந்து, லோகத்தைப் பாவத்தினிமித்தியும் நீதியினிமித்தியும் நியாயத்தீர்த்தலினிமித்தியும் கடிந்துகொள்ளுவார்.

௯ என்னைப் பிசுவாசியார்களானபடியினாலே பாவத்தினிமித்தியும்,

௰ நீங்கள் என்னைக் காணாமல் நான் என் பிதாவண்டைக்குப் போறேனென்கிறபடியினாலே நீதியினிமித்தியும்,

௰௧ * இந்த லோகத்தின் பிரபு தீர்க்கப்பட்டுத் தெளிந்தபடியினாலே நியாயத்தீர்த்தலினிமித்தியுந்தானே. * ௰௨, ௩௰௧.

௰௨ உங்களுக்குச் சொல்லவேண்டிய அனேகங்காரியங்களெனக்குண்டு, ஆனாலிப்போ அதுகளைச் சுமக்கமாட்டீர்கள்.

௰௩ சத்தியத்தினுடைய ஆவியானவர் வரும்போதோவெனில், அவர் உங்களைச் சகல சத்தியத்துக்குள்ளும் வழிநடத்துவார், ஏனெனில் அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேழ்வியானதையே சொல்லி, வருங்காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

௰௪ அவர் என்னை மகிமைப்படுத்துவார், ஏனெனில் என்னுடையதிலேயெடுத்து உங்களுக்கு அறிவிப்பார்.

௰௫ * பிதாவுக்குள்ளதெல்லாம் என்னுடையதாயிருக்குது, ஆகையினாலே என்னுடையதிலேயெடுத்து உங்களுக்கு அறிவிப்பாரென்றேன். * ௰௭, ௰.

¶ சீஷர்களுக்கு வருந்துக்கத்தையுஞ் சந்தோஷத்தையும் அவர் முன்னறிவித்தது.

௰௬ கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்கள், ஏனெனில் நான் பிதாவண்டைக்குப் போறேனென்றார்.

௰௭ அப்போ அவருடைய சீஷரில் சிலர் தங்களுக்குள்ளே சொன்னதாவது: கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்களென்றும், நான் பிதாவண்டைக்குப் போறேனென்றும் அவர் நம்முடனே சொல்லுகிறதென்ன.

௰௮ கொஞ்சப்போதென்கிறாரே இதேது, அவர் சொல்லுகிறதின்னதென்றறியோமென்றார்கள்.

௰௯ அப்போ யேசு, தம்மை அதைக் கேட்கமனதாயிருக்கிறார்களென்றறிந்து, அவர்களுடனே சொன்னதாவது: கொஞ்சப்போதிலே என்னைக் காணாதிருப்பீர்கள், மறுபடியுங் கொஞ்சப்போதிலே என்னைக் காண்பீர்களென்று நான் சொன்னதைக் குறித்து ஒருவரையொருவர் கேட்கிறீர்கள்.

௨௰ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் அழுது புலம்புவீர்கள், லோ

கமோ

கமோ சந்தோஷப்படும், நீங்களோ துக்கப்படுவீர்கள்; ஆனாலுங்கள் துக்கஞ் சந்தோஷமாம்.

௨௧ ஸ்திரீ பெறுகிறபோது துக்கம் அடைந்திருக்கிறாள், ஏனென்றால் அவளுடைய வேளை வந்தது, ஆனால் பிள்ளையைப் பெற்றபின்பு ஒரு மனுஷன் லோகத்திலே பிறந்தானென்கிற சந்தோஷத்தினாலே அப்புறம் உபத்திரவத்தை நினையாள்.

௨௨ நீங்களும் இப்போது துக்கம் அடைந்திருக்கிறீர்கள், ஆனாலும் மறுபடியுமுங்களைக் காண்பேன், அப்போ உங்கள் இருதயஞ் சந்தோஷப்படும், உங்கள் சந்தோஷத்தை ஒருத்தனும் உங்களிடத்திலிருந்து வாங்கான். அந்தநாளிலே நீங்கள் என்னிடத்திலொன்றுங் கேட்பதில்லை.

¶ செபம்பண்ண அவர் புத்திசொன்னது.

௨௩ மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் * என் நாமத்திலே பிதாவினிடத்திலே கேட்கப்போறயாவையும் உங்களுக்குக் கொடுப்பார். * ௰௪, ௰௩.

௨௪ இதுவரைக்கும் நீங்கள் என் நாமத்திலே ஒன்றுங் கேட்டதில்லை. உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்க, கேளுங்கோள், அப்போ வாங்குவீர்கள்.

௨௫ இதுகளை உவமைகளாய் உங்களுடனே பேசினேன், ஆனால் வேளை வரும், அப்போ நான் உவமைகளாய் அப்புறம் உங்களுடனே பேசாமல், வெளிப்பொருளாகப் பிதாவை உங்களுக்கு அறிவிப்பேன்.

௨௬ அந்தநாளிலே என் நாமத்திலே கேட்பீர்கள், உங்களுக்காகப் பிதாவை நான் கேட்பேனென்று உங்களுக்குச் சொல்லேன்.

௨௭ ஏனென்றால் நீங்கள் என்னைச் சிநேகித்து, நான் பராபரனிடத்திலிருந்து வந்ததை * விசுவாசித்தபடியினாலே, பிதாதாமே உங்களைச் சிநேகிக்கிறார். * ௰௪, ௨௧.

௨௮ நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு லோகத்திலே வந்தேன், மறுபடியும் லோகத்தை விட்டு, பிதாவினிடத்துக்குப் போகிறேனென்றார்.

௨௯ அவருடைய சீஷர் அவருடனே: இதோ இப்போ நீர் உவமை ஒன்றுஞ் சொல்லாமல், வெளிப்பொருளாய்ப் பேசுகிறீர்.

௩௰ நீர் எல்லாத்தையும் அறிந்திருக்கிறீரென்றும், உம்மை ஒருத்தன் கேட்க உமக்குத் தேவையில்லையென்றும் இப்போ அறிந்திருக்கிறோம், இதினாலே நீர் பராபரனிடத்திலிருந்து வந்ததை விசுவாசிக்கிறோமென்றார்கள்.

¶ சீஷர் சிதறுண்டுபோவதை அவர் முன்னறிவித்தது.

௩௧ யேசு அவர்களுக்குப் பிரத்தியுத்தாரமாகச் சொன்னதாவது: இப்போ விசுவாசிக்கிறீர்கள்.

௩௨ இதோ நீங்கள் அவனவன் தன்தன்னிடத்துக்குச் சிதறுண்டுபோய், என்னைத் தனித்துவிடும் வேளை வரும், இப்பவும் வந்திருக்குது. ஆனாலு நான் த

னித்து

ளித்திரேன், ஏனெனில் பிதாவானவர் என்னுடனேகூட இருக்
கிறார். * மாற்கு. ௧௪, ௨௭.
௩௩ * உங்களுக்கு என்னிலே சமாதானம் உண்டாயி
ருக்கும்படிக்கு இவைகளை உங்களுக்குச் சொன்னேன்,
லோகத்தில் உங்களுக்கு உபத்திரவமுண்டு, ஆனாலும் திட
ன்கொள்ளுங்கோள், நான் லோகத்தை ஜெயித்தே
னென்றார். * ௧௪, ௨௭. ரோம. ௫, ௧.

## ௧௭. அதிகாரம்.

௧ பாடுபடப்போகிற கிறிஸ்து தமக்காகவுந்
தம்முடைய சீஷருக்காகவுஞ் சபையனைத்
துக்காகவும் பண்ணின ஜெபம்.

இவைகளை யேசு பேசின பின்பு அவர் தம்முடைய கண்
களை வானத்துக்கு ஏறெடுத்துச் சொன்னதாவது:
பிதாவே, * வேளை வந்தது, உம்முடைய குமாரன்
உம்மை மகிமைப்படுத்தும்படிக்கு நீர் உம்முடைய கு
மாரனை மகிமைப்படுத்தும். * ௧௨, ௨௩.
௨ அவர் * எல்லா மானிடர்மேலும் நீர் தமக்கு அ
திகாரங்கொடுத்தபடி, நீர் தமக்குக் கொடுத்த அனைவ
ருக்கும் நித்தியசீவனைத் தருவதற்காகத்தானே. *
மத். ௧௧, ௨௭.
௩ அவர்கள் ஒன்றான மெய்த்தேவனாகிய உம்மை
யும் நீர் அனுப்பின * யேசுக்கிறிஸ்துவையும் அறிவதே
நித்தியசீவனாயிருக்குது. * வாக்கி. ௮, ௩௫.
௪ நான் உம்மைப் பூமியிலே மகிமைப்படுத்தினேன்,
நீர் என்னைச் செய்யக்கொடுத்த கிரிகையை முடித்தேன்.
௫ இப்போதும், பிதாவே, லோகமுண்டாகிற
துக்கு முன்னே உம்மிடத்தில் இருந்த மகிமையினாலே
என்னை உம்மிடத்திலே மகிமைப்படுத்தும்.
௬ நீர் லோகத்திலே எனக்குக் கொடுத்த மனு
ஷருக்கு உம்முடைய நாமத்தை வெளிப்படுத்தினேன்,
உம்முடையவர்களாயிருந்தார்கள், * எனக்கு அவர்களை
க்கொடுத்தீர், உம்முடைய வசனத்தைக் கைக்கொண்டி
ருக்கிறார்கள். * ௬, ௩௭.
௭ நீர் எனக்குக் கொடுத்ததெல்லாம் உம்மாலே உண்
டானதென்று இப்போது அறிந்துகொண்டார்கள்.
௮ ஏனெனில் நீர் எனக்குக் கொடுத்த வார்த்தைகளை
நான் அவர்களுக்குக் கொடுத்தேன், * அவர்கள் அது
களை ஏற்றுக்கொண்டு, நான் உம்மிடத்திலிருந்து பு
றப்பட்டு வந்தேனென்று மெய்யாய் அறிந்தார்கள்.
நீர் என்னை அனுப்பினீரென்று விசுவாசிக்கிறார்கள்.
௯ நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகி
றேன், லோகத்துக்காக அல்ல, நீர் எனக்குக் கொ
டுத்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன், ஏ
னெனில் உம்முடையவர்களாயிருக்கிறார்கள்.
௧௦ என்னுடையதெல்லாம் உம்முடையதும் * உம்
முடையது என்னுடையதுமாயிருக்குது, அவர்களிலே
நான் மகிமைப்பட்டேன், * ௧௬, ௧௫.
௧௧ நானினி லோகத்திலேயிரேன், இவர்கள் லோக
த்திலிருக்கிறார்கள், நான் உம்மண்டைக்கு வருகிறேன்.

பரிசுத்தமுள்ள பிதாவே, நீர் எனக்குக் கொடுத்தவர்களை * நம்மைப்போலே ஒன்றாயிருக்கும்படிக்கு, அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொள்ளும். * ௰, ௩௰.

௰௨ நான் அவர்களுடனே கூட லோகத்திலிருக்கக்கொள்ள நான் அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொண்டேன், நீர் எனக்குக் கொடுத்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன், * வேதவாக்கியம் நிறைவேறும்படிக்கு, கேட்டினுடைய மகனே கெட்டுப்போனதேயல்லாமல் அவர்களிலொருத்தனுங் கெட்டுப்போனதில்லை. * சங்கீ. ௱௯, ௮.

௰௩ இப்போதோவென்றால் நான் உம்மண்டைக்கு வந்து, என் சந்தோஷம் அவர்களில் நிறைந்தாயிருக்கும்படிக்கு இதுகளை லோகத்திலிருக்கக்கொள்ளச் சொல்லுகிறேன்.

௰௪ நான் அவர்களுக்கு உம்முடைய வார்த்தையைக் கொடுத்தேன், ஆனாலும் லோகம் * அவர்களைப் பகைத்திருக்குது, ஏனென்றால் நான் லோகத்தானல்லாததுபோலே, அவர்களும் லோகத்தாரல்ல. * ௰௫, ௰௪. ௰௬.

௰௫ நீர் அவர்களை லோகத்திலிருந்தெடுத்துக்கொள்ளவல்ல, நீர் அவர்களைத் தின்மைக்கு விலக்கிக் காக்கவேண்டிக்கொள்ளுகிறேன்.

௰௬ நான் லோகத்தானல்லாததுபோலே, அவர்களும் லோகத்தாரல்ல.

௰௭ உம்முடைய சத்தியத்திலே அவர்களைப் பரிசுத்தமாக்கும், * உம்முடைய வசனமே சத்தியம். * சங்கீ. ௱௰௯, ௪௨.

௰௮ நீர் என்னை லோகத்திலே அனுப்பினதுபோலே, நானும் அவர்களை லோகத்திலே அனுப்பினேன்.

௰௯ அவர்களுஞ் சத்தியத்திலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயிருக்க, அவர்களுக்காக நானென்னைத்தானே பரிசுத்தம்பண்ணுகிறேன். * எபிரே. ௰, ௰.

௨௰ ஆனாலும் இவர்களுக்காகமாத்திரம் நான் வேண்டிக்கொள்ளாமல், இவர்களுடைய வார்த்தையினாலே என்னை விசுவாசிக்கப்போகிறவர்களுக்காகவும்,

௨௧ அவர்களெல்லாரும் * ஒன்றாயிருக்கவும், பிதாவாகிய நீர் என்னிலும் நான் உம்மிலும் இருக்கிறதுபோலே அவர்களும் நம்மிலே, நீர் என்னை அனுப்பினதை லோகம் விசுவாசிப்பதற்கு, ஒன்றாயிருக்கவும், வேண்டிக்கொள்ளுகிறேன். * கலா. ௩, ௨௮.

௨௨ நாம் ஒன்றாயிருக்கும்படிபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படிக்கு நான் அவர்களுக்கு நீர் எனக்குக் கொடுத்த மகிமையைக் கொடுத்தேன்.

௨௩ அவர்கள் ஒன்றிலே தேறினவர்களாயிருப்பதற்கும், நீர் என்னை அனுப்பினதையும் நீர் என்னைச் சிநேகித்ததுபோல அவர்களைச் சிநேகித்ததையும் லோகம் அறிவதற்கும், * நான் அவர்களிலும் நீர் என்னிலும் ஆம். * ௨. கொரி. ௬, ௰௬.

௨௪ பிதாவே, * நான் எங்கேயிருக்கிறேனோ அங்கே நீர் எனக்குக் கொடுத்தவர்களும் என்னுடனே கூட இருக்கவேணுமென்றிருக்கிறேன், நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை அவர்கள் காணும்படியாகத்

க்காதே, ஏனென்றால் லோகத்தோற்றத்துக்கு முன்னே
என்னைச் சிநேகித்தீர். * ௰௨, ௨௬.
௨௫ நீதியுள்ள பிதாவே, லோகம் உம்மை அறிந்தி
ருக்கவில்லை, நானோ உம்மை அறிந்திருக்
கிறேன், இவர்களும் நீர் என்னை அனுப்பினதை அறி
ந்திருக்கிறார்கள்.
௨௬ நீர் என்னைச் சிநேகித்த சிநேகம் அவர்களிலும்
நானும் அவர்களிலும் இருக்கும்படிக்கு, உம்முடைய நா
மத்தை அவர்களுக்கு அறியப்பண்ணினேன், இன்னமும்
அறியப்பண்ணுவேனென்றார்.

## ௰௮. அதிகாரம்.

ஈ கிறிஸ்துபிடிபட்டது. மத். ௨௬, ௪௭—௫௬.
மாற். ௰௪, ௪௩—௫௨. லூக். ௨௨,
௪௭—௫௪.

இயேசு இவைகளைச் சொன்னபின்பு, தம்முடைய சீஷருட
னே * கீதரோனென்னும் ஆற்றுக்கப்பாலே புறப்ப
ட்டுப்போனார், அங்கே ஒரு தோட்டமிருந்தது, அதி
லே அவரும் அவருடைய சீஷரும் பிரவேசித்தார்கள்.
* ௨. சாமு. ௰௫, ௨௩.
௨ ஆனால் அவனைக் காட்டிக்கொடுக்கிற யூதாவும் அந்தவி
டத்தை அறிந்திருந்தான், ஏனென்றால் அநேகந்தரம் இயே
சு அங்கே தம்முடைய சீஷருடனே கூடப்போயிருப்பார்.
௩ யூதாஸ் போர்ச்சேவகரின் சேர்வையையும்
பிரதான ஆசாரியர் பரிசேயருடைய வேலைக்காரரில்
சிலரையுங் கூட்டிக்கொண்டு, பந்தங்களோடுந் தீவ
ட்டிகளோடும் ஆயுதங்களோடும் அங்கே வந்தான்.
௪ இயேசுவோவென்றால் தம்முடமேலே வரப்போ
றதெல்லாத்தையும் அறிந்திருந்து, வெளியே வந்து,
அவர்களுடனே: ஆரைத் தேடுகிறீர்களென்றார்.
௫ அவருக்குப் பிரத்தியுத்தாரமாக: இயேசு நாசரேத்
தாரனையென்றார்கள். இயேசு அவர்களுடனே: நா
ன்தானென்றார். ஆனால் அவரைக் காட்டிக்கொடுக்கி
ற யூதாவும் அவர்களுடனே கூடநின்றான்.
௬ நான்தானென்று அவர் * அவர்களுடனே சொன்
னபோதோவென்றால், இவர்கள் பின்னிட்டுத் தரையி
லே விழுந்தார்கள்.
௭ அப்போ மறுபடியும் அவர்களை: ஆரைத் தேடு
கிறீர்களென்று கேட்டார். அவர்கள்: இயேசு நாசரே
த்தாரனையென்றார்கள்.
௮ இயேசு பிரத்தியுத்தாரமாக: நான்தானென்றுங்க
ளுக்குச் சொன்னேனே, பேபோதும் என்னைத் தேடி
னீர்களானால், இவர்கள் போகட்டுமென்றார்.
௯ நீர் எனக்குக் கொடுத்தவர்களில் நான் ஒருத்தனை
யும் இழந்ததில்லையென்று அவர் * சொல்லியிருந்தவா
ர்த்தை நிறைவேறும்படியாகத்தானே. * ௰௭, ௰௨.
௰ அப்போ சீமோன் பேதுரு, தனக்கொரு பட்டயமி
ருக்கையிலே, அதை உருவி, பிரதான ஆசாரியனு
டைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான், அ
ந்த வேலைக்காரன் பேர் மல்கு.

௰௧.

௰௧ அப்போ யேசு பேதுருவுடனே: உன் பட்டயத்
தை உறையிலே போடு, பிதா எனக்குக் கொடுத்த பா
த்திரத்திலே நான் குடியாதிருப்பேனோ என்றார்.
௰௨ அப்போ சேவகரின் சேனையும் ஆயிரத்துச் சே
னாபதியும் யூதருடைய சேவகாரரும் யேசுவைப்
பிடித்து, அவரைக் கட்டி,
௰௩ அவரை முந்தி அன்னாவினிடத்துக்குக் கொண்டு
போனார்கள்; ஏனென்றால் அவன் அந்த வருஷத்துப் பிர
தான ஆசாரியனாயிருந்த காய்பாவுக்கு மாமனாயிருந்தான்.
௰௪ * ஒரே மனுஷன் ஜனத்துக்காக மடிந்து
போறது நல்லதென்று யூதருக்கு ஆலோசனை சொ
ல்லிக் கொடுத்தவன் இந்தக் காய்பா தானே. * ௰௧, ௫௰.

¶ அவர் பிரதான ஆசாரியனிடமாகக் கொண்டுபோகப்பட்
டதும், பேதுரு விழுந்ததும் ... மத்.
௨௬. ௫௭, மாற். ௰௪.
௫௩. லூக். ௨௨, ௫௪.

௰௫ சீமோன் பேதுருவும் வேறொரு
சீஷனும் யேசுவைப் பின்சென்றார்கள், அந்தச் சீஷன் பிரதான
ஆசாரியனுக்கு அறிமுகமானவனாயிருந்து, யேசுவுடனே
கூடப் பிரதான ஆசாரியனுடைய அரமனைக்குள் பிரவே
சித்தான்.
௰௬ பேதுருவோ வெளியே வாசலண்டையிலே நி
ன்றான், அப்போ பிரதான ஆசாரியனுக்கு அறிமுகமா
னவனான அந்தச் சீஷன் வெளியே வந்து, வாசல் காக்கிறவ
ளுக்குச் சொல்லி, பேதுருவை உள்ளே அழைத்துப்
போனான்.
௰௭ அப்போ வாசல் காக்கிற வேலைக்காரி பேது
ருவுடனே: நீயும் இந்த மனுஷனுடைய சீஷரில் ஒருத்
தனல்லவோ என்றாள். அவன்: நானல்லவென்றான்.
௰௮ அங்கே குளிரானபடியினாலே, ஊழியக்கார
ரும் சேவகரும் கரிநெருப்புண்டாக்கிக், குளிர்
காய்ந்து நின்றிருந்தார்கள்.
௰௯ பிரதான ஆசாரியனே யேசுவை, அவ
ர் சீஷரையும் அவர் போதகத்தையுங் குறித்துக் கேட்
டான்.
௨௰ யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: நான்
வெளியரங்கமாய் லோகத்துடனே பேசினேன், நா
னெப்போதும் யூதரெல்லாருங் கூடிவருகிற ஜெபஆல
யத்திலேயுந் தேவாலயத்திலும் உபதேசித்தேன், அந்த
ரங்கத்திலே நான் ஒன்றும் பேசினதில்லை.
௨௰௧ நீ என்னைக் கேட்பானேன், என்னிலே கே
ழ்விப்பானவர்களை, நான் அவர்களுக்குச் சொ
ன்னதைக் கேளும், இதோ நான் பேசினதுகளை
அவர்கள் அறிந்திருக்கிறார்களென்றார்.
௨௰௨ இதுகளை அவர் சொன்னபோது சேவக
ரில், * சேவகாரரில் அண்டையிலே நிற்கிற ஒருத்த
ன் இப்படியோ பிரதான ஆசாரியனுக்கு உத்தரவு சொல்
லுகிறதென்று, யேசுவை ஒரு அறை போட்டான். *
அப். ௨௩, ௨.
௨௰௩ யேசு அவனுக்குப் பிரத்தியுத்தரமாக: நான்
தப்பு

பேச்சொன்னேனானால், ஆகாத்தைத் தெப்பிவி, நிதான மாய்ச் சொன்னேனேயாகில், என்னை ஏன் அடிக்கி றாயென்றார்.

௨௪ அன்றுவேயென்றால் அவரைப் பிரதான ஆசாரியனான கயிப்பாவினிடத்துக்குக் கட்டுண்டவராக அனுப்பியிருந்தான்.

௨௫ ஆனால் சீமோன் பேதுரு குளிர் காய்ந்து நின்றான், அப்போ அவனுடனே: நீயும் அவருடைய சீஷரிலொருத்தன் அல்லவோ என்றார்கள். அவன் மறுதலித்து அல்லவென்றான்.

௨௬ பிரதான ஆசாரியனுடைய ஊழியக்காறரில் பேதுரு காதறுப்பட்டவனுக்கு இனத்தானாயொருத்தன்: நான் உன்னை அவருடனே கூடத் தோட்டத்திலே கண்டதில்லையோ என்றான்.

௨௭ அப்போ பேதுரு மறுபடியும் மறுதலித்தான்; உடனே சேவல் கூவிற்று.

௩ அவர் பிலாத்துவுக்கு முன்பாகப் பட்டபாடுகள். * மத. ௨௭, ௧. ௨. ௰௧—௩௰. மாற்கு. ௰௫, ௧—௰௫. லூா. ௨௩, ௧—௨௫.

௨௮ அவர்கள் யேசுவைக் காயிப்பாவினிடத்திலிருந்து அதிகாரவீட்டுக்குக் கொண்டுபோனார்கள், அப்போ விடியக்காலமாயிருந்தது: ஆனாலும் தாங்கள் தீட்டுப்படாமல் பஷாவைப் போசிக்கத்தக்கதாக, அதிகாரவீட்டுக்குள் பிரவேசியாதிருந்தார்கள்.

௨௯ அப்போ பிலாத்து அவர்களண்டைக்கு வெளியே வந்து: இந்த மனுஷன் பேரில் என்ன குற்றத்தைச் சாட்டிக் கொண்டுவருகிறீர்கள் என்றான்.

௩௰ அவர்கள் அவனுக்குப் பிரதியுத்தாரமாக: இவன் பொல்லாங்கு செய்தவனல்லாதிருந்தால்; அவனை உமக்கொப்புக்கொடோமென்றார்கள்.

௩௧ அப்போ பிலாத்து அவர்களுடனே: * அவனை நீங்களே கொண்டுபோய், உங்கள் நியாயப்பிரமாணத்தின்படி அவனை நியாயந்தீருங்கோள் என்றான். அப்போ யூதர் அவனுடனே: ஒருத்தனையுங் கொல்ல எங்களுக்கடாதென்றார்கள். * ௰௯, ௭.

௩௨ யேசு * தாம் எந்த மரணமாக மரிக்கப் போறேனென்று குறிப்பாய்ச் சொன்ன வார்த்தை நிறைவேறும்படியாகத்தானே. * ௰௨, ௩௨. மத. ௨௰, ௰௯.

௩௩ அப்போ பிலாத்து மறுபடியும் அதிகாரவீட்டுக்குள் பிரவேசித்து, யேசுவை அழைத்து, அவருடனே: நீ யூதருடைய ராசாவோ என்றான்.

௩௪ யேசு அவனுக்குப் பிரதியுத்தாரமாக: இதை நீராய்ச் சொல்லுகிறாயோ, அல்லது வேறே பேர்கள் என்னைக் குறித்து இதை உமக்குச் சொன்னார்களோவென்றார்.

௩௫ பிலாத்து பிரதியுத்தாரமாக: நான் யூதனோ, உன் சாதியாரும் பிரதான ஆசாரியர்களும் உன்னை என்கைக்கொப்புக்கொடுத்தார்கள், என்ன செய்தாயென்றான்.

௩௬ யேசு பிரதியுத்தாரமாக: என் ராச்சியம் இந்த லோகத்திலுள்ளதல்ல, என் ராச்சியம் இந்த லோகத்திலுள்ளதானால், நான் யூதருக்கு ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் பணிவிடைக்காரர் போராடியிருப்பார்கள்; ஆனாலும் இப்பொழுதோ என் ராச்சியம் இவ்விடத்திலுள்ளதல்லவென்றார்.

௩௭ அப்பொழுது பிலாத்து அவரிடத்தில்: ஆனால் நீ ராசாவோவென்றான். * யேசு பிரதியுத்தாரமாக: நீர் சொல்லுகிறபடி நான் ராசாதான், சத்தியத்துக்குச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதுக்காகவே இந்த லோகத்திலே வந்தேன், சத்தியவான்களெல்லாம் என் சத்தத்தைக் கேட்கிறார்கள். * ௧ தீமோ. ௬, ௰௩.

௩௮ பிலாத்து அவரிடத்தில் சத்தியமென்னவென்று சொல்லி, மறுபடியும் யூதரண்டையிலே புறப்பட்டுப் போய், அவர்களிடத்தில்: நான் அவனிலே ஒரு குற்றத்தையுங் காணேன்.

௩௯ பஸ்காவிலே நான் உங்களுக்கு ஒருத்தனை விடுதலைபண்ணுகிற வழக்கமுண்டே, ஆகையால் நான் உங்களுக்கு யூதருடைய ராசாவை விடுதலைபண்ண உங்களுக்கு மனசுண்டோ என்றான்.

௪௰ அப்பொழுது மறுபடியும் எல்லாரும்: இவனையல்ல, பறபாசை என்று கூப்பிட்டார்கள். பறபாசோ கள்ளனாயிருந்தான்.

## ௰௯. அதிகாரம்.

¶ அப்பாலுங் கிறிஸ்து பிலாத்துக்கு முன்பாகப் பட்டபாடுகள்.

அப்பொழுது பிலாத்து யேசுவைப் பிடித்து வாரினால் அடிப்பித்தான்.

௨ * சேவகரோவென்றால் முள்ளுகளினால் ஒரு முடியைப் பின்னி அவர் சிரசின்மேலே வைத்து, ஒரு சிகப்புச் சட்டையை அவருக்குடுத்தி, * மத். ௨௭, ௨௯. ௩௰.

௩ யூதருடைய ராசாவே, வாழ்கவென்று சொல்லி, அவரைக் கன்னங்களில் அறைந்தார்கள்.

௪ அப்பொழுது மறுபடியும் பிலாத்து வெளியே வந்து, அவர்களிடத்தில்: இதோ நான் அவனிலே ஒரு குற்றத்தையுங் காணேனென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்களுக்கு அவனை வெளியே கொண்டுவருகிறேனென்றான்.

௫ யேசுவோவென்றால் முள்முடியுஞ் சிகப்புச் சட்டையுந் தரித்தவராக வெளியே வந்தார். அப்பொழுது அவர்களிடத்தில்: இதோ மனுஷனென்றான்.

௬ பிரதான ஆசாரியர்களுஞ் சேவகர்களும் அவரைக் கண்டபோதோவென்றால்: சிலுவையிலே அறையுஞ் சிலுவையிலே அறையுமென்று கூப்பிட்டார்கள். பிலாத்து அவர்களிடத்தில்: அவனை நீங்களே கொண்டுபோய்ச் சிலுவையிலே அறையுங்கோள், ஏனென்றால் நான் அவனிலே குற்றங் காணேனென்றான்.

௭ யூதர் அவனுக்குப் பிரதியுத்தாரமாக: எங்களுக்கொரு நியாயப்பிரமாணமுண்டு அந்த நியாயப்

பிரமாண

பிரமாணத்தின்படியே அவன் சாகவேண்டும், அவன் தன்னை தேவனுடைய குமாரனாக்கினானே என்றார்கள்.

௮ பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபோது அதிக பயமடைந்து,

௯ மறுபடியும் அதிகாரவீட்டுக்குள்ளே போய், இயேசுவை நோக்கி: நீ எவ்விடத்தான் என்றான். அதற்கு இயேசு அவனுக்கு உத்தரவு கொடுக்கவில்லை.

௰ அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி: என்னுடனே பேசமாட்டாயோ, உன்னைச் சிலுவையில் அறைய எனக்கு அதிகாரமுண்டென்றும், உன்னை விடுதலைபண்ண எனக்கு அதிகாரமுண்டென்றும் அறியாயோ என்றான்.

௰௧ இயேசு பிரதியுத்தரமாக: உயரத்திலிருந்து உனக்குக் கொடுக்கப்படாதிருந்தால், என்மேல் உனக்கு ஒரு அதிகாரமுமிராது; ஆனபடியினாலே என்னை உனக்கு ஒப்புக்கொடுத்தவனுக்கு அதிக பாவமுண்டு என்றார்.

௰௨ அதுமுதல் பிலாத்து அவரை விடுதலைபண்ண வகைதேடினான். யூதர்களோ: நீர் இவனை விடுதலைபண்ணினால் நீர் இராயனுடைய சிநேகிதனல்ல, தன்னை ராசாவாக்குகிறவனெவனோ அவன் இராயனுக்கு விரோதி என்று சத்தமிட்டார்கள்.

௰௩ பிலாத்து இந்த வார்த்தையைக் கேட்டபோது, இயேசுவை வெளியே அழைத்துவந்து, கல்விரித்த படுத்தமேடையும், எபிரேயிலே கபத்தா எனப்பட்ட இடத்திலே நியாயாசனத்தில் உட்கார்ந்தான்.

௰௪ அந்த நாள் பஸ்காவுக்கு ஆயத்தநாளும் ஏறக்குறைய ஆறுமணி வேளையுமாயிருந்தது. அப்பொழுது அவன் யூதர்களை நோக்கி: இதோ, உங்கள் ராசா என்றான்.

௰௫ அவர்களோ: இவனை அகற்றும், அகற்றும், சிலுவையில் அறையும் என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து அவர்களை நோக்கி: உங்கள் ராசாவைச் சிலுவையில் அறையவோ என்றான். பிரதான ஆசாரியர்கள் பிரதியுத்தரமாக: இராயனேயல்லாமல் எங்களுக்கு வேறே ராசா இல்லை என்றார்கள்.

௰௬ அப்பொழுது அவரைச் சிலுவையில் அறையும்படிக்கு அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டுபோனார்கள்.

¶ அவர் சிலுவையில் அறையுண்டது. *மத். ௨௭, ௩௧—௫௬. மாற். ௧௫, ௨௰—௩௯. லூக். ௨௩, ௨௬—௪௯.

௰௭ அவர் தம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு, எபிரேயு பாஷையிலே கொல்கொதா என்னப்பட்ட கபாலஸ்தலத்துக்குப் புறப்பட்டுப்போனார்.

௰௮ அங்கே அவரையும், அவருடனேகூட, இருபக்கத்திலும் இரண்டுபேரையும், நடுவிலே இயேசுவையும் சிலுவைகளில் அறைந்தார்கள்.

௰௯ அன்றியும் பிலாத்து *ஒருவசனத்தை எழுதி, சிலு

வை

லையினடியிலே போடுவித்தான். அதிலே யேசு நாசரேத்
தான, யூதருடைய ராசாவென்றெழுதியிருந்தது. *மத்.
௨௭, ௩௭.
௨௰ இந்த வசனத்தை யூதரில் அநேகர் வாசித்தார்க
ள், ஏனென்றால் யேசு சிலுவையிலறையுண்ட இடம்
பட்டணத்துக்குச் சமீபமாயிருந்தது, எபிரேயிலுங் கி
ரேக்கிலும் லத்தீனிலுமெழுதியிருந்தது.
௨௧ அப்போ யூதருடைய பிரதான ஆசாரியர்கள் பி
லாத்துவுடனே: யூதருடைய ராசாவென்று நீரெழு
தாமல், தான் யூதருடைய ராசாவென்று அவன் சொ
ன்னானென்று எழுதுமென்றார்கள்.
௨௨ பிலாத்து: நானெழுதினது எழுதினதேயென்று
பிறத்தியுத்தாரஞ் சொன்னான்.
௨௩ சேவகரோவெனிலே யேசுவைச் சிலுவையிலே
அறைந்தபின்பு *அவர் வஸ்திரங்களை யெடுத்து ஒவ்
வொரு சேவகனுக்கொரு பங்காக நாலுபங்காக்கினா
ர்கள், அங்கியையுமெடுத்தார்கள். அங்கியோவெனி
லே தையலில்லாமல் மேலே துவக்கி முழுதும் நெ
ய்யப்பட்டிருந்தது. *மத். ௨௭, ௩௫. மாற்கு. ௰௫, ௨௪.
௨௪ அப்போ ஒருவரோடொருவர்: இதை நாம் துண்
டுதுண்டாக்காமல், ஆருக்கு வருமென்று இதின் பேரி
லே சீட்டுப்போடுவோமென்றார்கள். *என் வஸ்திர
ங்களைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு, என் உ
டையின் பேரிலே சீட்டுப்போட்டார்களென்கிற வேதவெழு
த்து நிறைவேறும்படியாகத்தானே. இப்படியே
சேவகர் அப்போ செய்தார்கள். *சங். ௨௨, ௰௮.
௨௫ ஆனாலும் யேசுவின் சிலுவையண்டையிலே அவ
ருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலே
யோப்பா மரியாளும், மக்தலா ஊர் மரியாளும் நின்
றிருந்தார்கள்.
௨௬ அப்போ யேசு தாயையும் அண்டையிலே தாம்
சினேகித்த சீஷனையும் நிற்கக்கண்டு, தம்முடைய தாயுட
னே: ஸ்திரீயே, அதோ உன் மகனென்றார்.
௨௭ பிற்பாடு சீஷனுடனே: அதோ உன் தாயென்றா
ர். அந்நேரமுதல் சீஷன் அவளைத் தன்னிடமாய் ஏற்
றுக்கொண்டான்.
௨௮ இதின்பிறகு யேசு *எல்லாம் முகிந்துதீர்ந்ததெ
ன்றறிந்து, வேதவெழுத்து நிறைவேறும்படியாய்: **
தாகமாயிருக்கிறேனென்றார். *௰௮, ௪. **சங்.
௬௯, ௨௨.
௨௯ ஆனாலங்கே காடி நிறைந்த பாத்திரம் வைக்கப்பட்
டிருந்தது. அவர்கள் கடல்காளானைக் காடியாலே
நிரப்பி, ஈசோப்புத்தண்டிலே பூட்டி, அவர் வாயண்
டைக்குக் கொண்டுபோய் நீட்டினார்கள்.

¶ அவர் மரித்தது. *மத். ௨௭, ௫௰—௫௬.
மாற்கு. ௰௫, ௩௭—௪௧. லூ. ௨௩,
௪௬—௪௯.

௩௰ யேசு காடியை வாங்கின போதோவென்றா
ல்: முகிந்ததென்று சொல்லி, தலையைச் சாய்த்து ஆவி
யை ஒப்பிவித்தார்.
௩௧ ஆனாலப்போ ஆயத்தநாளா

னபடி

ளபடியினாலே, உடல்களெ பெரியநாளாகிய அந்த ஓ
ய்வுநாளிலே சிலுவையிலிராதபடிக்கு, அவர்களு
டைய காலெலும்புகளை முறிக்கப்பட்டு அவர்க
ளெடுப்பட, யூதர் பிலாத்துவை வேண்டிக்கொண்டா
ர்கள்.
௩௨ அப்படியே சேவகர் வந்து அவனோடேகூட்ட
ச்சிலுவையிலறையுண்டிருந்தவனுக்கு காலெலும
புகளையும் மற்றவனுக்கு காலெலும்புகளையும் முறி
த்தார்கள்.
௩௩ ஆனால் யேசுவினிடத்தில் வந்து, அவர் அப்
போதே மரித்திருக்கக்கண்டபோது, அவருடைய கா
லெலும்புகளை முறிக்காமல்,
௩௪ சேவகரிலொருத்தன் ஈட்டியினாலே அவருடைய
விலாவைக் குத்தினான், உடனே இரத்தமுந்தண்ணீரு
ம் புறப்பட்டுது.
௩௫ அதைக்கண்டவன் அதுக்குச் சாட்சிகொடுத்
தான், அவன் சாட்சி மெய்யாயிருக்குது, நீங்கள் விசு
வாசிக்கும்படிக்கு, தான் சொல்லுகிறது மெய்யெ
ன்றவன் அறிந்திருக்கிறான்.
௩௬ ஏதுக்கென்றால்: * அதிலொரு எலும்
பும் முறிக்கப்படாதிருப்பதாக என்கிற வேதவெழுத்து
நிறைவேறும்படிக்குச் சம்பவித்தது. * ௨. மோ.
௰௨, ௪௬.
௩௭ பின்னையும் வேறொரு வேதவெழுத்து: * தாங்
கள் குத்தினவனை நோக்கிப் பார்ப்பார்களென்குது.
சகரி. ௰௨, ௰.

¶ அவர் அடக்கம்பண்ணப்பட்டது. மத். ௨௭,
௫௭. ழு. மாற்கு. ௰௫, ௪௨. ழு. லூ.
௨௩, ௫௰. ழு.

௩௮ இதுக்குப்பிற்பாடே வெளியிலே அரிமத்தி
யவூராருடைய யூதருக்குப் பயந்ததினாலே யேசுவுக்கு அ
ந்தரங்கச்சீஷனுமாகிய யோசேப் யேசுவின் சரீரத்தை
எடுத்துக்கொள்ளப் பிலாத்துவை வேண்டிக்கொண்
டான், பிலாத்து உத்தாரமுங் கொடுத்தான், ஆகையா
லவன் வந்து யேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்
டான்.
௩௯ ஆனால் * முந்தி ராத்திரியிலே யேசுவண்டைக்
கு வந்திருந்த நிக்கோதேமுஞ் சேர்ந்து, கலந்த வெள்
ளைப்போளத்தையுஞ் சாயப்போளத்தையும் நூறு இறா
த்தலுக்கேறக்குறைய கொண்டுவந்தான். * ௩, ௨.
௪௰ அவர்கள் யேசுவின் சரீரத்தை எடுத்துக்கொண்
டு, யூதர் பிரேதலங்காரம் பண்ணுமுறைமையின்ப
டி சுகந்தவர்க்கங்களோடேகூட சீலைகளிலே க
ட்டினார்கள்.
௪௧ அவர் சிலுவையிலறையுண்ட இடத்திலே
ஒன்றொரு தோட்டமுந் தோட்டத்திலொருக்காலு
மொருத்தனும் வைக்கப்படாததொரு புதுக்கல்லறை
யுமிருந்தது.
௪௨ யூதருடைய ஆயத்தநாளானபடியினாலும் அந்
தக்கல்லறை சமீபமானபடியினாலும் அவ்விடத்திலே
யேசுவை வைத்தார்கள்.

## ௨௰. அதிகாரம.

௺ உயிர்த்தெழுந்த கிறீஸ்து மகதலாவூர் மரியாளுக்குத் தெரிசனையானது. மத்து.
௰௮, ௯.

௧ ஞாலவாரத்தின் முதலாங்கிழமை காலமே, மகதலாவூர் மரியாள் இன்னம் இருட்டாயிருக்கையிலே கல்லறையினிடத்துக்கு வந்து கல்லானது கல்லறையிலிருந்து எடுத்துப்போடப்பட்டதைக் கண்டாள்.

மாற். ௰௬, ௧. மத்து ௰௮, ௧. லூக். ௨௪, ௧.

௨ அப்பொழுது அவளோடி, சீமோன்பேதுருவண்டைக்கும் யேசு சிநேகித்த மற்றச்சீஷனண்டைக்கும் வந்து, அவர்களோடே: கர்த்தரைக் கல்லறையிலிருந்தெடுத்தார்கள், எங்கே வைத்தார்களோ என்றறியோமென்றாள்.

௩ அப்போ பேதுருவும் மற்றச்சீஷனும் புறப்பட்டு, கல்லறையினிடத்துக்கு வந்தார்கள்.

௪ இருவரும் ஒருமித்தோடினார்கள், மற்றச்சீஷன் பேதுருவைப்பார்க்கிலும் துரிதமாயோடி முந்திக் கல்லறையினிடத்துக்கு வந்து.

௫ அதற்குள்ளே பார்க்கக் குனிந்து, சீலைகள் வைத்திருக்கக் கண்டான், ஆனால் உள்ளே பிரவேசியில்லை.

௬ சீமோன்பேதுருவோவென்றால் அவன் பின்னே சென்று வந்து, கல்லறைக்குள்ளே பிரவேசித்து, சீலைகள் வைத்திருக்கிறதையும்,

௭ அவர் தலையிலே சுத்தியிருந்த சீலையும் மற்றச் சீலைகளோடே வைத்திராமல், தனியே ஒருஇடத்திலே சுருட்டிவைத்திருக்கிறதையுங் கண்டான்.

௮ அப்போ முந்திக் கல்லறையினிடத்துக்கு வந்த மற்றச்சீஷனும் உள்ளே பிரவேசித்துக் கண்டு, அதை நம்பினான்.

௯ ஏனென்றால் அவர் மரித்தோரிலிருந்தெழுந்திருக்க வேண்டுமென்கிற வேதவாக்கியத்தை யின்னம் உணராதிருந்தார்கள்.

௰ அப்போ சீஷர்கள் வீட்டுக்குத் திரும்பினார்கள்.

௰௧ ஆனால் மரியாள் கல்லறையினண்டையில் வெளியிலே அழுதுகொண்டு நின்றாள். அழுகிறபோதே அவள் கல்லறைக்குள்ளே பார்க்கக் குனிந்து,

௰௨ யேசுவின் சரீரம் வைக்கப்பட்டிருந்த இடத்திலே வெள்ளை உடையுள்ள இரண்டு தூதர், தலைமாட்டிலொருத்தனுங் காலின்மாட்டிலொருத்தனுமாக உட்கார்ந்திருக்கிறதைக் கண்டாள்.

௰௩ அவர்கள் அவளோடே: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய் என்றார்கள். அவள் அவர்களோடே: என் ஆண்டவரை எடுத்து எங்கே வைத்தார்களோ என்றறியேனென்றாள்.

௰௪ இதுகளைச் சொல்லிப் பின்னாகத் திரும்பி யேசுவை நிற்கக்கண்டாள், ஆனால் அவர் யேசுவென்றறியாதிருந்தாள்.

௰௫ யேசு அவளோடே: ஸ்திரீயே, ஏன் அழுகிறாய், ஆரைத் தேடுகிறாயென்றார். அவள் அவரைத் தோட்டக்காரனென்றெண்ணி, அவரோடே: ஐயா, நீர் அவரை எடுத்துப்போனதுண்டானால், அவரையெங்

கே

ங்கே வைத்தீரென்றெனக்குச் சொல்லும், நான் போய் நான் அவரை எடுத்துக்கொள்ளுவேனென்றாள்.

௰௬ யேசு அவளுடனே: மரியாளே யென்றார். அவள் திரும்பிக்கொண்டு, அவருடனே: ரபூனீ யென்றாள். அது போதகரே என்னப்பட்டது.

௰௭ யேசு அவளுடனே: என்னைத் தொடாதே, ஏனென்றால் நான் இன்னும் என் பிதாவண்டைக்கு நான் ஏறிப்போகவில்லை, * என் சகோதரரண்டைக்கு நீ போய், அவர்களுடனே: நான் என் பிதாவண்டைக்கும் உங்கள் பிதாவண்டைக்கும், என் பராபரனண்டைக்கும் உங்கள் பராபரனண்டைக்கும் ஏறிப்போகிறேனென்று சொல்லென்றார். * சங்கீ. ௨௨, ௨௨.

௰௮ மக்தலாவூர் மரியாள் வந்து, தான் கர்த்தரைக் கண்டேனென்றும் அவர் தன்னுடனே இவைகளைச் சொன்னாரென்றும் * சீஷருக்கு அறிவித்தாள்.
* மாற்கு. ௰௬, ௰.

¶ அவர் அன்றையத்தினத்தில் சீஷருக்குத் தரிசனமானது. மாற்கு. ௰௬, ௰௪. லூக். ௨௪, ௩௬——௪௯.

௰௯ வாரத்தின் முதல்கிழமையான அன்றையத்தினம் அஸ்தமனமானபோதிலே, சீஷர்கூடியிருந்த வீட்டிலே யூதர் பயத்தினாலே கதவுகள் பூட்டியிருக்கையிலே, யேசு வந்து நடுவே நின்று, அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானமென்றார்.

௨௰ இதைச் சொல்லி, தம்முடைய கைகளையும் விலாவையும் அவர்களுக்குக் காண்பித்தார், அப்பொழுது சீஷர் கர்த்தரைக் கண்டு சந்தோஷப்பட்டார்கள்.

௨௰௧ அப்பொழுது யேசு மறுபடியும் அவர்களுடனே: உங்களுக்குச் சமாதானம், * பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேனென்று சொல்லி, * யோ. , ௰௮.

௨௰௨ அவர்களின்மேல் ஊதி, அவர்களுடனே: பரிசுத்தாவியை வாங்குங்கோள்.

௨௰௩ * எவர்களுக்குப் பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவர்களுக்கு மன்னிக்கப்படுகுது, எவர்களுக்குப் பாவங்களைச் சுமத்துவிக்கிறீர்களோ அவர்களின்மேல் அதுகள் சுமத்தப்பட்டிருந்ததென்றார்.
* மத். ௰௬, ௰௯. ௰௮, ௰௮.

¶ அவர் எட்டுநாளைக்குப் பிற்பாடு தோமாவுக்குங்கூடத் தரிசனமானது.

௨௰௪ பன்னிருவரிலொருத்தனாகிய திதிமுவென்னப்பட்ட தோமாவோவென்னில், யேசு வருகிறபோது அவர்களுடனே கூடயிருந்ததில்லை.

௨௰௫ அவனுடனே மற்றச் சீஷர்: கர்த்தரைக் கண்டோமென்றார்கள். அவனோவென்னில் அவர்களுடனே: நான் அவருடைய கைகளில் ஆணிகளுடைய அடையாளத்தைக் கண்டு, என் விரலை ஆணிகளுடைய அடையாளத்திலே போட்டு, என் கையை அவருடைய விலாவிலே போடாதேபோனால், விசுவாசிக்கிறேனல்லவென்றான்.

௨௰௬ எட்டுநாளைக்குப்பிற்பாடு மறுபடியும் அவ

ருடை

ருடையசீஷருமவர்களுடனேகூடத்தோமாவும் உள்ளேயிருந்தார்கள். கதவுகள்பூட்டியிருக்கக்கொள்ள, யேசுவந்துநடுவேநின்று: உங்களுக்குச் சமாதானமென்றார்.

௨௭ பிறபாடுதோமாவுடனே: நீ உன்விரலை இங்கேநீட்டி என்கைகளைப்பார்த்து, உன்கையை நீட்டி என்விலாவிலேபோட்டு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிருவென்றார்.

௨௮ தோமா அவருக்குப்பிரதியுத்தாரமாக: என் ஆண்டவரே, என் பராபரனேயென்றான்.

௨௯ யேசு அவனுடனே: தோமாவே, நீ என்னைக் கண்டபடியினாலே விசுவாசித்தாய், * காணாமல் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்களென்றார். *

௧. பேது. ௧, ௮. ௯,

௩௰ இந்தப்புஸ்தகத்திலே எழுதியிராத * வேறே அநேகம் அடையாளங்களையும் யேசு தம்முடைய சீஷருக்கு முன்பாகச்செய்தார். * ௨௧, ௨௫.

௩௧ இதுகளோவெனில், யேசு பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்துவென்று நீங்கள் விசுவாசிப்பதற்கும், விசுவாசித்து அவர்நாமத்திலே ஜீவனை அடைந்திருப்பதற்குமாக எழுதப்பட்டது.

## ௨௧. அதிகாரம்.

¶ அவர் கலிலேயாக்கடற்கரையிலே ஏழுசீஷருக்குத்தெரிசனையானது.

இதுகளுக்குப்பிறபாடு யேசு மறுபடியும் தம்மைத் திபேரியாவின்கடற்கரையிலே சீஷருக்கு வெளிப்படுத்தினார், வெளிப்படுத்தின பிரகாரமாவது:

௨ சீமோன்பேதுருவும் திதிமுவென்னப்பட்டதோமாவும், கலிலேயதேசத்துக் கானாவூராராகிய * நாத்தான்வேலும், செபெதேயுவின் குமாரர்களும், அவருடையசீஷரில்வேறேஇரண்டுபேரும்கூடியிருந்தார்கள். * ௧, ௪௫.

௩ சீமோன்பேதுரு அவர்களுடனே: மீன்பிடிக்கப்போகிறேனென்றான். அவர்கள் அவனுடனே நாங்களும் உன்னுடனேகூட வருகிறோமென்றார்கள். அவர்கள் புறப்பட்டு உடனே படகேறினார்கள், ஆனால் அந்தராத்திரியிலே ஒன்றும் பிடித்ததில்லை.

௪ விடியற்காலமாகிறபோதோவெனில், யேசு கரையிலே நின்றார், ஆனால் அவர் யேசுவென்கிறதைச் சீஷர் அறிந்ததில்லை.

௫ யேசு அவர்களுடனே: பிள்ளைகளே, போசிக்கிறதுக்கு ஏதாகிலும் உங்களுக்கு உண்டோவென்றார். அவருக்குப்பிரதியுத்தாரமாக இல்லையென்றார்கள்.

௬ அப்போ அவர் அவர்களுடனே: படகுக்கு வலதுபுறமாக வலையைப்போடுங்கோள், அப்போ உங்களுக்கு அகப்படுமென்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரள்மீன்பட்டதினாலே அதை இழுக்கமாட்டாதேபோனார்கள்.

௭ அப்போ • யேசுச்னேகித்தசீஷனே பேதுருவுட
னே: அவர் கற்தரென்றான். அவர் கற்தரென்று சீ
மோன் பேதுரு கேட்டபோது, தான் அம்மணமாயிரு
ந்தபடியினாலே சட்டையைக் கட்டிக்கொண்டு கடலி
லே குதித்தான். • ௰௩, ௨௩.
௮ மற்றச்சீஷரோவென்றால் கரைக்கு இருநூ
று முழமாத்திரந் தூரமான படியினாலே
மீன்களுடனே வலையை இழுத்துக்கொண்டு படகி
லே வந்தார்கள்.
௯ அவர்கள் கரையிலே வந்திறங்கினபோதோவெ
ன்றால், கரிநெருப்புப் போட்டிருக்கிறதையும் அதி
ன் மேலே மீன் வைத்திருக்கிறதையும் அப்பத்தையுங் க
ண்டார்கள்.
௰ யேசு அவர்களுடனே: நீங்கள் இப்போ பிடிக்கும்மீ
ன்களிலே சிலதைக் கொண்டுவாருங்கோளென்றார்.
௰௧ சீமோன் பேதுருவே, நூற்றைம்பத்து மூன்று
பெரிய மீன்களாலே நிறைந்த வலையைக் கரையிலிழு
த்தான், இத்தனை இருந்தும் வலை கிழிந்ததில்லை.
௰௨ யேசு அவர்களுடனே: வந்து சாப்பிடுங்
கோளென்றார், ஆனால் அவர் கற்தரென்று அறிந்தபடி
யினாலே, சீஷரில் ஒருத்தனும் நீர் ஆரென்று கேட்கத்து
ணிந்ததில்லை.
௰௩ அப்போ யேசு வந்து, அப்பத்தை எடுத்து அவ
ர்களுக்குக் கொடுத்து, மீனையும் அப்படியே கொ
டுத்தார்.
௰௪ யேசு மரித்தோரிலிருந்தெழுந்த பிறபாடு தம்மு
டைய சீஷருக்குத் தெரிசனையானது இது மூன்றாந்தரம்.
௰௫ அவர்கள் போசனம் பண்ணின பிறபாடோவெ
ன்றால், யேசு சீமோன் பேதுருவுடனே: யோனாவின்
குமாரனாகிய சீமோனே, இவர்களிலும் அதிகமாய் எ
ன்னைச் சிநேகிக்கிறாயோவென்றார் அவன் அவருடனே:
ஆம், ஆண்டவரே, உம்மைச் சிநேகிக்கிறேனென்
றதை நீர் அறிவீரென்றான். அவர் அவனுடனே: எ
ன் ஆட்டுக்குட்டிகளை மேயென்றார்.
௰௬ மறுபடியும் ரெண்டாந்தரம் அவனுடனே:
யோனாவின் குமாரனாகிய சீமோனே, என்னைச் சிநே
கிக்கிறாயோவென்றார். அவன் அவருடனே: ஆம் ஆண்
டவரே, உம்மைச் சிநேகிக்கிறேனென்கிறதை நீர் அ
றிவீரென்றான். அவர் அவனுடனே: என் ஆடுகளை
மேயென்றார்.
௰௭ மூன்றாந்தரம் அவனுடனே: யோனாவின் குமா
ரனாகிய சீமோனே, என்னைச் சிநேகிக்கிறாயோவென
றார். மூன்றாந்தரந் தன்னுடனே என்னைச் சிநேகிக்கி
றாயோவென்று அவர் சொன்னபடியினாலே பேதுரு து
க்கப்பட்டு, அவருடனே: ஆண்டவரே, • நீர் எல்
லாத்தையும் அறிந்திருக்கிறீர், உம்மைச் சிநேகிக்கிறே
னென்கிறதை நீர் அறிவீரென்றான். யேசு அவனுட
னே சொன்னதாவது: என் ஆடுகளை மேய. • ௰௬,
௩௰.
௰௮ மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்
லுகிறேன். நீ இளவயதாயிருக்கக்கொள்ள உன்னை
நீயே அரைக்கட்டிக்கொண்டு, வேண்டியபடியேங்க

ளீலே நடந்துதிரிந்தாய், நீமுதிர்வயதாகும்போதோ
வெனில் உன்கைகளைநீட்டுவாய், வேறொருதன்
ன் உன்னை அரைகட்டி, நீவேண்டாதவிடத்துக்குஉன்னை
க்கொண்டுபோவானென்றார்.
௰௯ இதை * எப்படிக்கொத்தமரணத்தால் அவன்
பராபரனை மகிமைப்படுத்துவானென்று குறிப்பா
ய்ச்சொன்னார். இப்படிச்சொல்லி, அவனுடனே என்
னைப்பின்செல்லென்றார். * ௨. பே. ௧, ௰௩. ௰௪.
௨௰ பேதுருதிரும்பிப்பார்த்து; * யேசுநேசித்தவ
னும், ராப்போசனம்பண்ணுகையில் அவர்மார்பி
லேசார்ந்து: ஆண்டவரே, உம்மைக்காட்டிக்கொடு
க்கிறவன் ஆரென்றுகேட்டவனுமான சீஷன் பின்செ
ல்லுகிறதைக்கண்டான். * ௰௩, ௨௫.
௨௧ இவனைப்பேதுருகண்டு, யேசுவுடனே. ஆண்
டவரே, இவனென்னமாயிருப்பானென்றான்.
௨௨ யேசு அவனுடனே: நான்வருமட்டும் இவனி
ருக்கஎனக்குச்சித்தமானால்; உனக்கென்ன, நீஎன்னை
ப்பின்செல்லென்றார்.
௨௩ ஆனதுகொண்டு அந்தச்சீஷன்மரியானென்று
தாயிந்தவார்த்தைசகோதரருக்குள் பரம்பிற்று.
ஆனால் மரியானென்று யேசு அவனுக்குச்சொல்லாம
ல்: நான்வருமட்டும் இவனிருக்கஎனக்குச்சித்தமானா
ல் உனக்கென்னவென்றுசொன்னார்.
௨௪ இதுகளுக்குச்சாட்சிகொடுக்கிறது; இதுகளையெழுதி
ன சீஷன் இவன்தான், இவன்சாட்சிமெய்யென்றறிந்
திருக்கிறோம்.
௨௫ ஆனால் * யேசுசெய்தவேறே அநேககாரிய
ங்களுமுண்டு, அதுகளெவ்வொன்றாயெழுத
ப்பட்டால், எழுதப்படும்பொஸ்தகங்
களுக்குலோகமேயிடமாகாதென்றெண்
ணுகிறேன். ஆமென். * ௨௰, ௩௰.

௨௰ ஏனெனில் சங்கீதப் புஸ்தகத்திலே: * அவ
னுடைய வீடு வாசலற்றுக் குடியிராத பாழ்நிலமாகக்
கடவதென்றும், ** அவனுடையதான கண்காணிப்
பை வேறொருத்தன் பெறக்கடவனென்றும் எழுதியிருக்
குது. * சங்கீ. ௬௯, ௨௬. ** சங்கீ. ௱௯. ௮.
௨௧ ஆகையினாலே கர்த்தராகிய யேசுவானவர் யோவானுடை
ய ஸ்நானந்துவக்கி, தாம் நம்மைவிட்டு ஏறெடுத்
துக்கொள்ளப்பட்டநாள் மட்டாக நம்மிடத்திலே வரத்
தும் போக்குமாயிருந்த எல்லாக்காலத்திலும்,
௨௨ நம்மோடேகூட இருந்த இந்தப் புருஷரிலே ஒரு
த்தன் நம்மோடேகூட அவருடைய உயிர்த்தெழுந்ததுக்
குச் சாட்சியாக வேண்டுமென்றான்.
௨௩ அப்பொழுது இரண்டுபேராகிய யுஸ்தது என்னும்
மறுநாமமுள்ள பர்சபா என்னப்பட்ட யோசேப்பை
யும் மத்தியாவையும் நிறுத்தி:
௨௪ * எல்லாருடைய இருதயங்களையும் அறிந்திருக்
கிற ஆண்டவரே, யூதாஸ் தன்னுடைய இடத்துக்குப் போ
வதற்காக விட்டுப்போன இந்த அப்போஸ்தல ஊ
ழியத்தின் பங்கடையப்பெற, * சங்கீ. ௭, ௰.
௨௫ தேவரீர் இவ்விரண்டுபேரிலே தெரிந்துகொண்
ட ஒருத்தனைக் காண்பியுமென்று செபம்பண்ணி,
௨௬ அவர்கள் மேலே சீட்டுகளைப் போட்டார்கள்,
அப்போது மத்தியாவின் பேருக்குச் சீட்டு விழுந்தது. ஆ
கையால் அவன் பதினொரு அப்போஸ்தலருடைய
துணையோடே சேர்த்துக்கொள்ளப்பட்டான்.

## ௨. அதிகாரம்.

¶ பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது.

பெந்தெகொஸ்தேநாள் நிறைவேறுகையிலே எல்
லாரும் * ஏகமனதாயொருமித்திருந்தார்கள். *
௧, ௰௪.
௨ சுப்பிலே ஓட்டி வருகிற பெலத்த காத்தைப்போலே
ஒரு முழக்கம் வானத்திலிருந்துண்டாய், அவர்கள்
உட்கார்ந்திருந்த * வீட்டை முழுதும் நிரப்பிற்று. *
௧. ராசா. ௮, ௰௧.
௩ அப்போ அக்கினியின் நாவுகளைப்போலே பிரிக்
கப்பட்ட நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அ
வர்களில் ஒவ்வொருத்தன் மேலே வந்திருந்தது.
௪ * எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிறையப்
பட்டு, ஆவி அவர்களுக்கு வசனிக்கக் கொடுத்தபடி ** ம
ற்ற பாஷைகளிலே பேசத்துவக்கினார்கள். * ௧, ௫. **
மாற்கு. ௰௬, ௰௭.
௫ ஆனால் வானத்தின் கீழிருக்கிற சகலவிதச் சாதியிலும்
இருந்து வந்த பத்தியுள்ள மனுஷராகிய யூதர் எருச
லேமிலே குடியிருந்தார்கள்.
௬ இந்தச் சத்தமுண்டானபோது திரள்கூட்டம் வந்து
கலங்கிற்று, அதேனெனில் ஒவ்வொருத்தன் அவர்க
ளைத் தன்தன் பாஷையிலே பேசக்கேட்டார்கள்.
௭ எல்லாரும் விஸ்மயித்து ஆச்சரியப்பட்டு, ஒருத்
தரோடொருத்தர் சொன்னதாவது: இதோ பேசுகிற இ

வர்க

வர்களெல்லாருங் கலிலேயரல்லவோ.
௮ பின்னை எப்படி நாம் அவரவர் தான் தான் பிற
ந்த தன் பாஷையிலே இவர்கள் பேசக்கேட்கிறோம்.
௯ பற்தரும் மேதரும் ஏலாமியரும், மெசொப்
பொத்தாமியாவிலும் யூதேயாவிலுங் கப்பதோக்கி
யாவிலும் பொந்துவிலும் ஆசியாவிலும்,
௰ பிரிகியாவிலும் பம்பிலியாவிலும் எகிப்திலும்,
கிரேனேப்பட்டணத்துச் சுற்றியிருக்கும் லீபியாவின் பு
றங்களிலுங் குடியிருக்கிறவர்களும், ரோமாபுரிப் பர
தேசத்தாரும், யூதரும் யூதமார்க்கத்தணைந்தவர்
களும்,
௰௧ கிரேத்தரும் அரபியருமாகிய நாம் அவர்கள் நம்
முடைய பாஷைகளிலே பராபரனுடைய மகத்துவங்க
ளைப் பேசக்கேட்கிறோமென்றார்கள்.
௰௨ எல்லாரும் விஸ்மித்துச் சந்தேகப்பட்டு, ஒரு
த்தரோடொருத்தர்: இதென்னமாமென்றார்கள்.
௰௩ வேறே பேர்களோவென்றால்: மதுபானத்தி
னாலே நிறைந்திருக்கிறார்களென்று சுக்கடியம்பண்ணி
னார்கள்.

## ¶ பேதுருப்பண்ணின பிரசங்கம்.

௰௪ ஆனால் பேதுரு பதினொருவரோடுங்கூட நின்று,
தன் சத்தத்தையுயர்த்தி, அவர்களுக்குரைத்ததாவது:
யூதமனுஷரும் யெருசலேமிலே குடியிருக்கிறவர்க
ளுமாகிய நீங்களெல்லாரும் அறியும்படியாக, எ
ன் வார்த்தைகளைக் காதுகொடுத்துக் கேளுங்கோள்.
௰௫ ஏனென்றால் நீங்கள் நினைக்கிறதுபோல இவர்
கள் வெறித்தவர்களல்ல, பொழுதுவிடிந்து மூன்
றாம் மணிவேளையாயிருக்குதே.
௰௬ இதுவோவென்றால், * யோவேல் தீர்க்கதெரிசி
யினாலுரைக்கப்பட்டதுதானே. * யோவேல். ௩.
௧—௫.
௰௭ கடைசிநாட்களிலே சம்பவிக்குதேதென்றால்,
நாம் சகல மாம்சத்தின்மீதும் நம்முடைய ஆவியை ஊ
ற்றுவோம், அப்போ உங்கள் குமாரரும் உங்கள் கு
மாரத்திகளுந் தீர்க்கதெரிசனஞ் சொல்லுவார்கள், உ
ங்கள் வாலிபர் தெரிசனங்களையும் உங்கள் முப்பர்
சொற்பனங்களையுங் காண்பார்களென்றும்,
௰௮ நம்முடைய ஊழியக்காரர்மேலும் நம்முடைய ஊ
ழியக்காரிகள்மேலும் அந்நாட்களிலே நம்முடைய ஆ
வியை ஊற்றுவோம், அப்போ தீர்க்கதெரிசனஞ் சொ
ல்லுவார்கள்.
௰௯ உயர வானத்தில் அதிசயங்களையும், கீழே பூ
மியிலே இரத்தம் அக்கினி புகைக்காடென்கிற அடையா
ளங்களையுங் காட்டுவோம்.
௨௰ கர்த்தருடைய பெரிதும் பிரகாசமுமான நாள்
வருமுன்னே, * சூரியன் இருளாகவுஞ் சந்திரன் இரத்த
மாகவும் மாறப்படும். * மத். ௨௪, ௨௯.
௨௧ அப்போ சம்பவிப்பதேதென்றால், கர்த்தருடை
ய நாமத்தைத் தொழுதுகொள்பவனெல்லாம் ரெட்
சிக்கப்படுவானென்று பராபரன் சொல்லுகிறார்.

௨௨ இஸ்ரவேலராகிய மனு[illegible]நான் சொல்
லும் வார்த்தைகளைக் கேளுங்கள்[illegible]யசுநாசரேத்
தூரானைக் கொண்டு பராபரன் உங்க[illegible]டுவிலே செய்த
த்தினாலும் அற்புதங்களினாலும் வல்லமை[illegible]ம் அனுப்பத்த
கங்களையும் அடையாளங்களையுங் [illegible]டுத்தாரே, அதுகளி
னாலே உங்களுக்குப் பராபரனாலே ருசுப்பிக்கப்பட்டவரா
ன அந்தப்புருஷனை நீங்கள் என்ன செய்தீர்களென்
றால்,
௨௩ பராபரன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின்ப
டியேயும் அவர் முன்னறிந்திருக்கிறதின்படியேயும்
ஒப்புக்கொடுத்து விடப்பட்ட அவரை நீங்கள் பிடித்
து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையிலே
ஆணியடித்துப் போகவிட்டீர்கள்.
௨௪ அவரைப் பராபரன் மரணஉபாதிகளினின்று
விடுவித்தெழுப்பினார், ஏனென்றால் அவர் அதினாலே பிடி
பட்டிருக்கக்கூடாதிருந்தது.
௨௫ அதேதென்றால் தாவீது அவரைக்குறித்துச்
சொல்லுகிறதாவது: * கர்த்தரை எப்போதும் எனக்
கு முன்பாகத் தரிசித்துக்கொண்டிருக்கிறேன்,
ஏனென்றால் நான் அசைக்கப்படாதபடிக்கு அவர் என்
வலதுபாரிசத்திலேயிருக்கிறார். சங்கீ. ௰௬, ௮. மு.
௨௬ ஆகையினாலே என் இருதயம் பூரித்து, என் நா
வு களிகூர்ந்திருக்குது. என் மாம்சமும் நம்பிக்கை
யிலே படுத்திருக்கும்.
௨௭ ஏனென்றால் என் ஆத்துமத்தைப் பாதாளத்திலே
விடீர், உம்முடைய பரிசுத்தவானை அழிவைக்காணவொட்
டீர்.
௨௮ ஜீவனுடைய வழிகளை எனக்குத் தெரியப்படுத்
தினீர், உம்முடைய சமுகத்திலே சந்தோஷத்தாலே என்னை நி
ரப்புவீரென்றான்.
௨௯ சகோதரராகிய மனுஷரே, கோத்திரத்தலைவ
னாகிய தாவீதைக்குறித்து நான் உங்களோடே தயிரிய
மாய்ப் பேசட்டும், அவனென்றால் * மரணமும் அ
டைந்தான், அடக்கம்பண்ணப்பட்டான், அவன்
கல்லறையானது இந்நாள்வரைக்கும் நம்மிடத்திலேயிருக்
குது. * ௰௩, ௩௬.
௩௰ ஆனால் அவன் தீர்க்கதரிசியாயிருந்து: * உன் ஆ
ணத்தில் உன் கர்ப்பத்தின் கனியினாலே மாம்ச
த்தின்படியே கிறிஸ்துவை எழுப்பப்பண்ணுவேனெ
ன்று பராபரன் தனக்கு ஆணைச்சத்தியம் பண்ணினத
தை அறிந்து, * ௨. சாமு. ௭, ௰௨. ௰௩.
௩௧ அவன் கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்ததைக்கு
றித்து, அவருடைய ஆத்துமம் பாதாளத்திலே வைத்து
விடப்படவில்லையென்றும் அவருடைய மாம்சம்
அழிவைக்காணவில்லையென்றும் முன்னறிந்து
சொன்னான்.
௩௨ இந்த யேசுவைப் பராபரன் எழுப்பினாரென்ப
தற்கு நாங்களெல்லாரும் சாட்சிகளாயிருக்கி
றோம்.
௩௩ இப்போதும் அவர் பராபரனுடைய வலது
கையினாலே உயர்த்தப்பட்டு, வாக்குத்தத்தமாகிய பரிசுத்
த ஆவியைப் பிதாவினாலே பெற்றபின்பு, நீங்கள் இப்
போ

போ காணக்கேட்கிறதாகிய இதைத் தந்தருளினார்.
௩௪ ஏனெனில் தாவீது பரமண்டலத்துக்கேறவில்லை: * கர்த்தரானவர் என் ஆண்டவருடனே: * நான் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதப்படியாக்கிப் போடுமட்டும் . . . கீ ௱௰, ௧.
௩௫ நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காருமென் றுச்சொன்னார்.
௩௬ ஆகையால் நீங்கள், சிலுவையிலறைந்த இந்த யேசுவைப் பராபரன் ஆண்டவருமாக்கிக் கிறீஸ்துவுமாக்கினாரென்று இஸ்றவேலின் வீட்டாரனைவரும் நிச்சயமாய் அறியக்கடவார்களென்றான்.

### ௩ பேதுருவின் ப்ரசங்கத்தினாலுண்டான பலன்.

௩௭ அவர்கள் இதைக் கேட்டபோதே இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவோடும் மற்ற அப்போஸ்தலரோடும்: சகோதரராகிய புருஷரே, நாங்கள் என்ன செய்யவேண்டியதென்றார்கள்.
௩௮ பேதுரு அவர்களுடனே சொன்னதாவது: நீங்கள் குணப்பட்டு, ஒவ்வொருவனும் பாவமன்னிப்புக்கென்று யேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தின் பேரிலே ஞானஸ்நானம் பெறக்கடவான், அப்போ பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.
௩௯ ஏனென்றால் இந்த வாக்குத்தத்தம் உங்களுக்கும் உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய பராபரனாகிய கர்த்தர் * வரவழைக்கப்போகிற தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டானதென்று சொல்லி, * யோவே. ௨, ௩௨.
௪௰ வேறே அநேக வார்த்தைகளாலும்: நீங்கள் மாறுபாடான சந்ததியை விட்டு உங்களை ரட்சித்துக் கொள்ளுங்கோளென்று திடச்சாட்சியாய்ச்சொல்லித் துப்புத்திச்சொன்னான்.
௪௧ ஆகையால் அவன் வார்த்தையை நலமனதாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்று, ஏறக்குறைய மூவாயிரம் ஆத்துமாக்கள் அன்றைத் தினம் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.
௪௨ அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்கிறதிலும் ஜெபங்களிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.
௪௩ ஆத்துமா யாவுக்கும் பயமுண்டாச்சுது, அநேகம் அற்புதங்களும் அடையாளங்களும் அப்போஸ்தலராலே செய்யப்பட்டது.
௪௪ அன்றியும் விசுவாசிகளெல்லாரும் ஏகமாயிருந்து, * எல்லாத்தையும் பொதுவாயனுபவித்து, * ௪, ௩௨. ௫. மோ. ௰௫, ௪.
௪௫ * ஆஸ்திகளையும் உடைமைகளையும் விற்று அவரவர்கள் எல்லாருக்கும், அவனவனுக்குத் தேவையானதுக்குத்தக்கதாய்ப் பகிர்ந்துகொடுத்தார்கள். * ௪, ௩௪. ௩௫. ஏசா. ௰௨, ௩௩.
௪௬ அவர்கள் அனுதினமும் ஒருமனப்பட்டு தேவ

வா

வாலயத்தில் தரித்திருந்து, அங்கங்கே வீடுகளிலே அப்பம்பிட்டு, போசனத்தை மகிட்சியோடுங் கபடில்லாத இருதயத்தோடும் வாங்கி,

௪௭ பராபரனைப் புகழ்ந்துகொண்டு, சனமனைவரிடத்திலுங் கிருபைபெற்றிருந்தார்கள். ஆண்டவர் நாடோறும் இரட்சிக்கப்படும் பேர்களைச் சபைக்குச் சேர்த்தார்.

## ௩. அதிகாரம்.

¶ பிறவிச்சப்பாணியொருத்தன் குணமாக்கப்பட்ட அதிசயம்.

ஆனாலே ஜெபவேளையாகிய ஒன்பதாம் மணிநேரத்திலே பேதுருவும் யோவானும் ஜெபமாய்த் தேவாலயத்துக்குப் போனார்கள்.

௨ அப்பொழுது தாயின் கெர்ப்பத்திலிருந்து சப்பாணியாய்ப் பிறந்த ஒரு மனுஷன் சுமந்துகொண்டுவரப்பட்டான், தேவாலயத்துக்குள் பிரவேசிக்கிறவர்களிடத்திலே பிட்சைகேட்கிறதுக்காக அவனை அநுதினமும் அலங்காரவாசலென்னப்பட்ட தேவாலயவாசலண்டையிலே வைப்பார்கள். * ௰௪. ௮.

௩ அவன் தேவாலயத்துக்குள் பிரவேசிக்கப்போகிற பேதுருவையும் யோவானையுங் கண்டு பிட்சைகேட்டான்.

௪ ஆனாலே பேதுரு யோவானுடனேகூட அவனை [illegible]: எங்களை நோக்கிப்பாரென்றான்.

௫ அவன் அவர்கள் கையிலே ஏதாகிலும் வாங்கப் பார்த்துக்கொண்டு, அவர்கள் பேரிலே கவனமாயிருந்தான்.

௬ ஆனாலே பேதுரு: வெள்ளியும் பொன்னும் எனக்கில்லை, எனக்குண்டானதை உனக்குத் தருகிறேன்; நாசரேத்தூரானாகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நடவென்று சொல்லி,

௭ வலதுகையினாலே அவனைப் பிடித்துக்கொண்டான், உடனே அவனுடைய கால்களுங் கணுக்கால்களும் உரங்கொண்டுது.

௮ அவன் குதித்தெழுந்து நின்று நடந்து, அவர்களுடனேகூடத் தேவாலயத்துக்குள் பிரவேசித்து, குதித்துப் பராபரனைத் துதித்தும் நடந்தான்.

௯ சனமெல்லாம் அவன் நடக்கிறதையும் பராபரனைத் துதிக்கிறதையுங் கண்டு,

௰ தேவாலயத்தின் அலங்காரவாசலண்டையிலே பிட்சைக்கு உட்கார்ந்திருந்தவன் இவனென்றறிந்து, அவனுக்குச் சம்பவித்ததுக்காக [illegible] விஸ்மயம் [illegible] ஆச்சரியப்பட்டார்கள்.

௰௧ குணமாக்கப்பட்ட சப்பாணியானவன் பேதுருவையும் யோவானையும் அண்டிக்கொண்டிருக்கையில், சனமெல்லாம் அவர்களண்டைக்குச் சாலொமோனுடையதென்னப்பட்ட மண்டபத்திலே திகைப்புள்ளவர்களாய் ஓடிவந்துகூடினார்கள்.

௰௨ பேதுரு அதைக்கண்டு சனத்துடனே சொன்னதாவது

தாவது: இஸ்ரவேலராகிய மனுஷரே, நீங்கள் இதின் பேரிலே ஆச்சரியப்படுகிறதென்ன, அல்லது நாங்கள் எங்கள் சுயவல்லமையினாலாவது தேவபக்தியினாலேயும் இவனை நடக்கப்பண்ணினோமென்கிறதாய் நீங்கள் எங்களை மேலே நோக்கமாயிருக்கிறதென்ன:

௰௩ ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் பராபரனாகிய நம்முடைய பிதாக்களுடைய பராபரன் நீங்கள் ஒப்புக்கொடுத்து, பிலாத்துக்கு முன்பாக மறுதலித்த தம்முடைய பிள்ளையாகிய இயேசுவை மகிமைப்படுத்தினார். அவனோவென்றால் அவரை விடுதலைபண்ணத் துணிந்திருக்கையில்,

௰௪ நீங்களோ * பரிசுத்தமும் நீதியுமுள்ளவரை மறுதலித்து, கொலைபாதகனான மனுஷனை உங்களுக்குத் தயவுபண்ணக்கேட்டு, * மத். ௨௭, ௨௰—௨௩.

௰௫ ஜீவனுடைய அதிபதியைக் கொன்றுபோட்டீர்கள், அவரைப் பராபரன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்.

௰௬ அவர் நாமத்தின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவருடைய நாமமானது நீங்கள் பார்த்தறிந்திருக்கிற இவனைப் பெலப்படுத்தி, அவராலுண்டான விசுவாசமே இவனுக்கிந்தச் சர்வாங்கசுகத்தை உங்களெல்லாருக்கும் முன்பாகக் கொடுத்தது.

௰௭ இப்போதும், சகோதரரே, உங்கள் தலைவரைப்போலே நீங்களும் அறியாமையினாலே அதைச் செய்தீர்களென்றறிவேன்.

௰௮ பராபரனோவென்றால், தம்முடைய எல்லாத் தீர்க்கதரிசிகளின் வாக்கினாலுங் கிறிஸ்து பாடுபடுவாரென்று முன்னறிவித்தவைகளை இப்படி நிறைவேற்றினார்.

௰௯ ஆனபடியினாலே கர்த்தருடைய சமுகத்தினாலே இளைப்பாறுதலுடைய காலங்கள் வரும்படிக்கும், முன் உங்களுக்குப் பிரசங்கிக்கப்பட்ட * இயேசுகிறிஸ்துவை அவர் அனுப்பும்படிக்கும், * அஸ். ௨௨, ௰௨—௰௪.

௨௰ * நீங்கள், உங்கள் பாவங்கள் நிவர்த்தியாக்கப்பட, குணப்பட்டு மனந்திரும்புங்கோள். * ௨. ௩௮.

௨௧ லோகத்தோற்ற முதலாய்ப் பராபரன் பரிசுத்தமான தம்முடைய எல்லாத் தீர்க்கதரிசிகளுடைய வாக்கினாலும் உரைத்ததுகளெல்லாம் நிறைவேறுங் காலங்கள் வருமட்டும், அவர் பரமண்டலத்தை அடைந்திருக்கவேண்டியது.

௨௨ ஏனென்றால் மோசே பிதாக்களுடனே: * என்னைப்போலொரு தீர்க்கதரிசியை உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்கு உங்கள் சகோதரரிலிருந்தெழும்பப்பண்ணுவார், அவர் உங்களுடனே பேசப்போறதெல்லாத்திலும் அவர் சொற்கேட்பீர்களாகவேண்டும், * ௫. மோ. ௰௮, ௰௫. ௰௮. ௰௯.

௨௩ அந்தத் தீர்க்கதரிசியின் சொற்கேளாதவனெந்த ஆத்துமாவும் ஜனத்திலிராதபடிக்கு நிர்மூலமாக்கப்படுமென்றுஞ் சொன்னான்.

௨௪ சாமுவேல் முதற்கொண்டுள்ள தீர்க்க

தரி

தெரிசிகளாகிய பேசினார்களோ, அவர்களெல்லாரும் இந்த நாட்களை முன்னறிவித்தார்கள்.
௨௫ நீங்கள் தெரிசிகளுக்கும், பராபரன் ஆபிறகாமுடனே: * உன் வித்திலே பூமியிலுள்ள வங்கிஷங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படுமென்று சொல்லி, நம்முடைய பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கைக்கும் நீங்கள் பிள்ளைகளாயிருக்கிறீர்கள். * ௧. மோ. ௰௨. ௩.
௨௬ * உங்களுக்கே முதல் பராபரன் தம்முடைய பிள்ளையாகிய யேசுவை எழுப்பி, உங்களில் அவனவன் தங்கள் பொல்லாங்குகளை விட்டுத் திரும்புகிறதினாலே உங்களை ஆசீர்வதிக்கிறவராக அவரை அனுப்பினாரென்றான். * ௰௩, ௪௬.

## ௪. அதிகாரம்.

௧ பேதுருவும் யோவானும் ஆலோசனைச் சங்கத்திலே நியாயங்கேட்கப்பட்டது.

௧ அவர்கள் சனங்களோடே பேசிக்கொண்டிருக்கையில், ஆசாரியர்களும் தேவாலயச் சேனைத்தலைவனும் சதுசேயரும் அவர்களண்டை வந்து நின்று,
௨ அவர்கள் சனத்துக்குப் போதிக்கிறதினாலும், சேசுவைக் கொண்டு மரித்தோரிலிருந்துயிர்த்தெழுந்தாரென்று அறிவிக்கிறதினாலும் விசனப்பட்டு,
௩ அவர்கள் மேல் * கைகளைப் போட்டு, மறுநாள் மட்டுங் காவலிலே வைத்தார்கள், ஏனெனில் அப்போ சாயுங்காலமாயிருந்தது. * ரு, ௰௮.
௪ வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் * விசுவாசித்தார்கள், அந்த மனுஷர் தொகைக்கு ஏறக்குறைய ஐயாயிரம் பேராயிருந்தார்கள்.
௫ மறுநாளிலே சம்பவித்ததேதெனில் அவர்களுடைய தலைவரும் மூப்பரும் வேதபாரகரும்,
௬ பிறதான ஆசாரியனாகிய அன்னாவும் காய்பாவும் யோவானும் அலெக்சந்தரும், பிறதான ஆசாரிய வங்கிஷத்தாரியாவரும் எருசலேமிலே கூடி,
௭ அவர்களை நடுவே வைத்து: * நீங்கள் எந்த வல்லமையினாலே அல்லது எந்த நாமத்தினாலே இதைச் செய்தீர்களென்று கேட்டார்கள். * மத். ௨௧, ௨௩.
௮ அப்போ பேதுரு பரிசுத்த ஆவியினாலே நிறைந்து அவர்களோடே சொன்னதாவது: சனத்தின் தலைவருமாய் இஸ்றவேலுக்கு மூப்பருமானவர்களே,
௯ * பிணியாளியாயிருந்த மனுஷனுக்குச் செய்யப்பட்ட உபகாரத்துக்காக நாங்கள் இன்று அவனெதினாலே ஆரோக்கியமானானென்று நியாயம் விசாரிக்கப்பட்டோமானால், * [illegible] ௰, ௩௨.
௰ நீங்கள் சிலுவையில் அறைந்து பராபரன் மரித்தோரிலிருந்தெழுப்பின நசரேத்தானாகிய சேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே இவன் உங்களுக்கு முன்பாகச் சொஸ்தமாய் நிற்கிறானென்று உங்களெல்லாருக்கும் இஸ்றவேல் சனம் அனைத்துக்கும் தெரிந்திருக்கக்கடவது.

௰௧ வீடுகட்டுகிறவர்களாகிய உங்களால் அற்பமாய் எண்ணப்பட்டு, கோடிக்குத் தலைக்கல்லானவர் இவர்தானே. * மத். ௨௧, ௪௨.

௰௨ வேறொருவரிடத்திலும் இரட்சிப்பில்லை, வானத்தின் கீழ் மனுஷரில் வேறொருநாமம், அதினால் நாம் இரட்சிக்கப்படவேணுமென்று, கட்டளையிடப்பட்டதுமில்லையென்றான்.

௰௩ ஆனால் அவர்கள் பேதுருவும் யோவானும் பேசுகிற தயிரியத்தைக் கண்டு, இவர்கள் படித்தேடாத கல்வியற்ற மனுஷரென்று அறிந்தபடியினாலே, ஆச்சரியப்பட்டார்கள், இயேசுவுடனே கூட இருந்தார்களென்று அவர்களை அறிந்துமிருந்தார்கள்.

௰௪ ஆனால் குணமாக்கப்பட்ட மனுஷன் அவர்களண்டையிலே நிற்கக்காணுகையில், எதிர்பேச அவர்களுக்கொன்றுமில்லாதேபோச்சுது.

௰௫ அப்போ அவர்களை ஆலோசனைச்சங்கத்துக்குப் புறம்பாகப் போகச்சொல்லி, தங்களுக்குள்ளே ஆலோசனைப்பண்ணிக்கொண்டு சொன்னதாவது:

௰௬ * இந்த மனுஷரை என்ன செய்வோம். ஏனென்றால் எருசலேமில் வாசமாயிருக்கிறவர்கள் எல்லாருக்குந் தெரியப்பட்ட வெளியரங்கமான அடையாளம் அவர்களால் செய்யப்பட்டது, அதை நாமில்லையென்று சொல்லக்கூடாது. * யோவ. ௰௧, ௪௭.

௰௭ ஆனாலும் அது அதிகமாய் சனத்துக்குள்ளே பரம்பாதபடிக்கு, இனி மனுஷரில் ஒருவரோடும் அவர்கள் இந்த நாமத்தைக்குறித்துப் பேசாதிருக்க, அவர்களைக் கெடியாய் பயமுறுத்துவோமென்று சொல்லிக்கொண்டு,

௰௮ அவர்களை அழைத்து, இயேசுவின் நாமத்தைக்குறித்துப் பரிசேதமாய்ப் பேசாமலும் போதியாமலுமிருக்க அவர்களுக்குக் கற்பித்தார்கள்.

௰௯ ஆனால் பேதுருவும் யோவானும் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: * நாங்கள் பராபரனுக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் உங்களுக்குக் கீழ்ப்படிவது பராபரனுக்கு முன்பாகத்தாயமோவென்று நிதானித்துப்பாருங்கோள். * ௫, ௨௯.

௨௰ நாங்கள் கண்டதுகளையுங் கேட்டதுகளையுஞ் சொல்லாதிருக்கக்கூடாதேயென்றார்கள்.

௨௰௧ ஆனால் அவர்களை எப்படித் தண்டிப்பதென்று சனத்தைத்தொட்டு வகையொன்றுங் காணாமல், அவர்களைப் பயமுறுத்திவிட்டுவிட்டார்கள், ஏனென்றால் சம்பவித்ததுக்காக எல்லாரும் பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

௨௰௨ அதேனென்றால் குணமாகுதலான இந்த அடையாளஞ் செய்யப்பட்ட மனுஷன் நாற்பதுவயதுக்கதிகமாயிருந்தான்.

¶ சபைசெபம்பண்ணி அனுட்டந்தத்திடம்.

௨௰௩ அவர்களோ வெளியிலே விட்டுவிடப்பட்டு, தங்களவர்களண்டையிலே வந்து பிரதான ஆசாரியர்களும் மூப்பருந் தங்களுக்குச் சொன்னதெல்லாத்தையும் அறிவித்தார்கள்.

௨௰

௨௪ அவர்கள் அதைக் கேட்டு ஒருமனப்பட்டுப் பராபரனை நோக்கிச் சத்தமிட்டுச் சொன்னதாவது: ஆண்டவரே, தேவரீர் வானத்தையும் பூமியையுஞ் சமுத்திரத்தையும் அதுகளிலுள்ள எல்லாத்தையும் உண்டாக்கின பராபரனாயிருக்கிறீர்.

௨௫ * சாதிகள் கொந்தளித்துச் சனங்கள் வீணானதாக்காரியங்களைச் சிந்திப்பானேனென்றும், * சங்கீ. ௨, ௧. ௨.

௨௬ கற்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறீஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியினராசாக்களெழும்பிநின்று, தலைவர் ஏகமாயக் கூட்டங்கூடினார்களென்று தேவரீர் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினாலே சொன்னீர்.

௨௭ அதேதென்னில் வந்துசம்புவிக்க உம்முடைய கையும் உம்முடைய ஆலோசனையும் * முன் குறித்ததுகளெல்லாஞ் செய்வதற்காக, * ௨, ௨௩.

௨௮ ஏரோதேயும் பொந்தியுபிலாத்துவும் புறச்சாதிகளோடும் இஸ்ரவேல் சனங்களோடுங் கூட, நீர் அபிஷேகம்பண்ணின உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய யேசுவுக்கு விரோதமாக மெய்யாய்க் கூட்டங்கூடினார்கள்.

௨௯ இப்போதும், ஆண்டவரே, அவர்கள் பயமுறுத்தல்களைத் தேவரீர் நோக்கிப்பார்த்து,

௩௰ உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய யேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களுஞ் செய்யப்பட, குணமாக்குதலுக்கு உம்முடைய கையை நீட்டி, உம்முடைய ஊழியக்காறர் உம்முடைய வசனத்தை முழுத்தயிரியத்தோடு சொல்ல அவர்களுக்கு வரம் அளியுமென்றார்கள்.

௩௧ அவர்கள் செபம்பண்ணின பிற்பாடு அவர்கள் கூடியிருந்தஸ்தலம் * அசைந்தது. எல்லாரும் பரிசுத்த ஆவியினாலே ரெப்பப்பட்டு, பராபரனுடைய வசனத்தைத் தயிரியத்தோடே சொன்னார்கள். * ௰௬, ௨௬.

¶ சபையினுடைய வடிப்பமான உளச்சீர்.

௩௨ ஆனால் விசுவாசிகளுடைய திரள்கூட்டத்துக்கு ஒரே இருதயமும் ஆத்துமமும் * இருந்தது. ஒருத்தனாகிலுந் தனக்குள்ளதுகளில் ஒன்றையுந் தன்னுடையதென்று சொன்னதில்லை, சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. * ௨, ௪௪.

௩௩ அப்போஸ்தலர் மகா பெலத்துடனே கற்த்தராகிய யேசுவின் உயிர்த்தெழுந்ததுக்குச் சாட்சி கொடுத்தார்கள், அவர்களெல்லார்மீதிலும் மகா கிருபையுண்டாயிருந்தது.

௩௪ அவர்களில் குறைப்பட்டவனுமில்லை, ஏனென்றால் நிலங்களாகிலும் வீடுகளாகிலும் உள்ளயாவரும் அதுகளை விற்று, விற்கப்பட்டதுகளின் விலைக்கிரயங்களைக் கொண்டுவந்து,

௩௫ அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள், * அவனவனுக்குத் தேவையானதுக்குத் தக்கதாய்ப் பகிர்ந்து கொடுக்கப்பட்டது. * யெச. ௫௮, ௭.

௩௬ கீப்புருதீவும் அனுஷனும் லேவியனும் அப்போ

ஸ்தத

ஸ்தலரால் ஆறுதலுடைய மகனென்றர்த்தங்கொள்ளு
ளும் பர்னபாவென்னும் பேரிடப்பட்டவனுமான
யோசே,
௩௭ தனக்குள்ள நிலமிருக்கையிலே அதை விற்று, திரவி
யத்தைக்கொண்டுவந்து, அப்போஸ்தலருடைய
பாதத்திலே வைத்தான்.

## ௫. அதிகாரம்.

௧ அனனியா வஞ்சகப்பிராணம்பண்ணின
டபாயத்துக்கு வந்த ஆக்கினை

ஆனால் அனனியா என்னும் நாமமுள்ள ஒருத்தனும், அவ
னுடைய பெண்சாதி சப்பீராளுங்கூட, காணியை விற்றா
ர்கள்.
௨ ஆனால் தன் பெண்சாதியும் அறிய விலைக்
கிரயத்திலே சிலதை வஞ்சித்து வைத்து; ஒரு பங்கைக்
கொண்டுவந்து; அப்போஸ்தலருடைய பாதத்திலே
வைத்தான்.
௩ ஆனால் பேதுரு சொன்னதாவது: அனனியாவே,
நீ பரிசுத்த ஆவிக்குப் பொய்சொல்லவும், நிலத்தின்
விலைக்கிரயத்திலே சிலதை வஞ்சித்து வைக்கவும், சா
த்தான் உன் இருதயத்தை ரெப்பினதேது.
௪ அது இருந்தபோது உன்னுதாயிருக்கல்லையோ,
விற்றபின்பும் உன் அதிகாரத்திலிருந்ததே, நீ இந்த கா
ரியத்தை உன் இருதயத்திலே வைத்ததென்ன, நீ மனுஷ
ருக்கல்ல பராபரனுக்குப் பொய்சொன்னாயென்றான்.
௫ அனனியா இந்த வார்த்தைகளைக் கேட்ட போ
தே வேளையில், விழுந்து சீவனைவிட்டான். இதுகளைக்
கேட்ட அனைவர் பேரிலும் மகா பயம் வந்தது.
௬ ஆனால் வாலிபகாறர் எழுந்திருந்து, அவனை எ
டுத்து, வெளியே கொண்டுபோய் அடக்கம்பண்ணி
னார்கள்.
௭ ஏறக்குறைய மூன்றுமணி வேளைகளின் நேரஞ்
சென்றபிற்பாடு சம்பவித்ததேதென்றில, நடந்ததைய
றியாத அவன் பெண்சாதி உள்ளே வந்தாள்.
௮ ஆனால் பேதுரு அவளோடே: நிலத்தை இம்மாத்
திரத்துக்குக் கொடுத்துவிட்டீர்களோ, எனக்குச்சொ
ல்லென்றான். அவள்: ஆம், இம்மாத்திரத்துக்குத்தான்
என்றாள்.
௯ பேதுருவோவென்னில அவளோடே: கர்த்த
ருடைய ஆவியைச் சோதிக்கிறதுக்கு நீங்கள் ஒருமையா
னதேது, இதோ உன் புருஷனை அடக்கம்பண்ணினவர்
களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்குது.
உன்னையும் வெளியே கொண்டுபோவார்களென்
றான்.
௰ உடனே அவள் அவன் பாதத்திலே விழுந்து சீவ
னைவிட்டாள். ஆனால் வாலிபகாறர் உள்ளே வந்து
அவள் மரித்திருக்கிறதைக் கண்டு, அவளை வெளியே
கொண்டுபோய், அவளுடைய புருஷனண்டையி
லே அடக்கம்பண்ணினார்கள்.
௰௧ சபையனைத்தின் மேலும் இதுகளைக் கேட்ட
எல்லார் மேலும் மகா பயம் வந்தது.

௧ சபை

## ¶ சபையினுடைய மேன்மைப் பிரபலியம்.

௰௨ ஆனால் அப்போஸ்தலருடைய கைகளினாலே அனேகம் அடையாளங்களும் அற்புதங்களும் சனத்துக்குள்ளே செய்யப்பட்டது. எல்லாரும் ஒருமனப்பட்டு சாலொமோனுடைய மண்டபத்திலிருந்தார்கள்.
௰௩ ஆனால் மற்றவர்களில் ஒருத்தரும் அவர்களுடனே சேர்ந்தவர்களாயிருக்கத் துணிந்ததில்லை; சனமோவென்றால் அவர்களை மகா கனமாக எண்ணினது.
௰௪ ஆனால் அதிக அதிகமாகக் கர்த்தரை விசுவாசிக்கிற புருஷரும் ஸ்திரீகளுமாகத் திரள் கூட்டங்களாய்ச் சேர்த்துக்கொள்ளப்பட்டது.
௰௫ வெளியே வீதிகளிலே முதலாய் பிணியாளிகளைக் கொண்டுவந்து, பேதுரு வருகையிலே அவன் நிழலாகிலும் அவர்களில் சிலர் மீதிலே படும்படிக்கு, படுக்கைகள் மேலுங் கட்டில்கள் மேலுங் கிடத்தி வைத்தார்கள்.
௰௬ சுத்துப்பட்டணங்களிலுமிருந்து திரளான சனம் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள், அவர்களெல்லாருங் குணமாக்கப்பட்டார்கள்.

## ¶ ஆலோசனைச் சங்கத்துக்கு முன்பாக அப்போஸ்தலர் பகர்ந்த சாட்சி.

௰௭ ஆனால் + பிரதான ஆசாரியனும் அவனுடனே கூடேயிருந்த சதுசேயர் சமயத்தார் அனைவருமெழும்பி, வயிராக்கியத்தால் நிரப்பப்பட்டு. + ௪, ௧—௩.
௰௮ அப்போஸ்தலர் பேரிலே தங்கள் கைகளைப் போட்டு, அவர்களைச் சிறைச்சாலையிலே வைத்தார்கள்.
௰௯ ஆனால் + கர்த்தருடைய தூதன் ராத்திரியிலே சிறைச்சாலையின் கதவுகளைத் திறந்து, அவர்களை வெளியே அழைத்துவந்து: + ௰௨, ௭—௰.
௨௰ நீங்கள் போய், தேவாலயத்திலே நின்று, இந்தச் சீவனுடைய வார்த்தைகளையெல்லாஞ் சனத்துக்குச் சொல்லுங்களென்றான்.
௨௧ அவர்கள் அதைக் கேட்டபோது. அதிகாலமே தேவாலயத்துக்குள் பிரவேசித்து, போதகம் பண்ணினார்கள். ஆனால் பிரதான ஆசாரியனும் அவனுடனே கூடேயிருந்தவர்களும் வந்து, ஆலோசனைச் சங்கத்தையும் இஸ்ரவேல் புத்திரருடைய எல்லா மூப்பரையுங் கூடிவரவழைத்து, அவர்களைக் கொண்டுவரச் சிறைச்சாலைக்கு ஆளனுப்பினார்கள்.
௨௨ ஆனால் சேவகர் அங்கே போய், காவலிலே அவர்களைக் காணாமல், திரும்பிவந்து:
௨௩ சிறைச்சாலையோ எல்லாப் பத்திரத்தோடும் பூட்டியிருக்கவுங் காவல்காறர் வெளியே கதவுகளுக்கு முன்னே நிற்கவுங் கண்டோம், திறந்தபோதோவெனில் உள்ளே ஒருத்தனையுங் காணோமென்று அறிவித்தார்கள்.

௨௪ இந்தவார்த்தைகளை ஆசாரியனுந் தேவாலயச்சேர்வைக்காரனும் பிரதான ஆசாரியர்களுங் கேட்டபோது இதென்னமாயிருக்குமென்று அவர்கள் பேரிலே சந்தேகப்பட்டார்கள்.

௨௫ ஆனாலொருத்தன் வந்து: இதோ, நீங்கள் காவலிலே வைத்த மனுஷர் தேவாலயத்திலே நின்றுகொண்டு சனத்துக்குபதேசிக்கிறார்களென்று அறிவித்தான்.

௨௬ அப்போ சேர்வைக்காரன் சேவகரோடுங்கூடப்போய், அவர்களை அழைத்து வந்தான், பலபந்தமாயில்லை, ஏனென்றால் சனங்கள் கல்லெறிவார்களோவென்று சனத்துக்குப் பயந்திருந்தார்கள்.

௨௭ அவர்களை அழைத்துவந்து ஆலோசனைச்சங்கத்துக்குள் நிறுத்தினார்கள். அப்போ பிரதான ஆசாரியன் அவர்களைக் கேட்டதாவது:

௨௮ நீங்கள் இந்தநாமத்தைக்குறித்துப் போதகம் பண்ணாதிருக்க * * நாங்கள் உங்களுக்குக் கட்டளையாய்க் கற்பித்ததில்லையோ, ஆனாலிதோ, இந்த மனுஷனுடைய ரெத்தப்பழியையெங்கள் மேல் சுமத்த மனதாய் யெருசலேமை உங்கள் போதகத்தினாலே நிரப்பினீர்களென்றான். * ௪, ௰௮.

௨௯ ஆனாலப்பேதுருவும் அப்போஸ்தலரும் பிரதியுத்தாரமாகச் சொன்னதாவது: * மனுஷருக்குக் கீழ்ப்படிகிறதைப்பார்க்கப் பராபரனுக்குக் கீழ்ப்படியவேணும். * ௪, ௰௯. தானி. ௬, ௰.

௩௰ * நீங்கள் மரத்திலே தூக்கிக்கொன்றுபோட்ட யேசுவை நம்முடைய பிதாக்களின் பராபரனெழுப்பினார். * ௩, ௰௫.

௩௧ இஸ்றவேலுக்குக் குணப்படுதலையும் பாவமன்னிப்பையுங் கொடுக்கிறதுக்காக அவரைப் பராபரன் தம்முடைய கையினாலே அதிபதியாகவும் இரட்சகராகவும் உயர்த்தினார். * லூ. ௨௪, ௪௭.

௩௨ இந்தவர்த்தமானங்களுக்கு நாங்களும், பராபரனுக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குக் கொடுத்த பரிசுத்த ஆவியானவரும், அவருடைய சாட்சிகளானார்கள்.

௩௩ அவர்களோவெனில் அதைக்கேட்டபோது, அது அவர்கள் உள்ளத்திலே அறுத்தபடியினாலே அவர்களைப் போக்கிவிட யோசனையாயிருந்தார்கள்.

௩௪ ஆனால் சகல சனத்தாலுங் கனம் பெற்றதாயப் பிரமாணப்போதகனுமாகிய கமாலியேலென்று பேர் கொண்டவொருபரிசேயன் ஆலோசனைச்சங்கத்திலெழுந்திருந்து, அப்போஸ்தலரைச் சத்துநேரம் வெளியேகொண்டுபோகச்சொல்லி,

௩௫ அவர்களுடனே சொன்னதாவது: இஸ்றவேல புருஷரே, இந்த மனுஷருக்காக, என்ன செய்யப்போகிறீர்களென்று, எச்சரிக்கையாயிருங்கோள்.

௩௬ ஏனென்றால் இக்காலங்களுக்குமுன்னே தேயுத்தாவென்றவன் தானொருத்தனென்றெழும்பினான், அவனோடே சுமார் நானூறு மனுஷருடைய கூட்டம் ஒருப்பட்டுக்கொண்டு அவன் போக்கிவிடப்பட்டான், அவனை நம்பியிருந்த அனைவருங் கலைந்தார்கள், அப்போ ஒன்றுமில்லாமல் போச்சுது.

௩௭ இவனுக்குப்பின்பு, குடிமதிப்பின் நாள்களி

லே

லே கலிலேயனாகிய யூதா வெழும்பி, வெகுசனங்களைத் தன் பின்பற்றக் கலகப்படுத்தினான்; அவனும் மடிந்தான், அவனை நம்பியிருந்த அனைவருஞ் சிதறடிக்கப்பட்டார்கள்.

௩௮ இப்போதும் உங்களுக்குச் சொல்லுகிறேன், இந்த மனுஷரை விலக்கிவிட்டு விடுங்கோள், ஏனென்றால் இந்த ஆலோசனை அல்லது இந்தக் கிரியை மனுஷராலுண்டாயிருந்தால் ஒழிந்துபோம்.

௩௯ அல்ல தேவனாகிய பராபரனாலே உண்டாயிருந்தால் அதை நீங்கள் ஒழித்துவிடமாட்டீர்கள், * பராபரனுடனே போர்செய்கிறவர்களாயுங் காணப்படுவீர்களென்றான். * ௯, ௫.

௪௰ அப்போ அவர்கள் அவனுக்கொப்பி, அப்போஸ்தலரை வரவழைத்து, * அடித்து இயேசுவின் நாமத்தைக் குறித்துப் பேசாதிருக்கக் கற்பித்து, அவர்களை விட்டுவிட்டார்கள். * மாற். ௰௩, ௯.

௪௧ அவர்களோவெனில் அவருடைய நாமத்துக்காகக் கனயீனம் அடையத் தாங்கள் பாத்திரவான்களாகக் காணப்பட்டதுக்கு * சந்தோஷமாய் ஆலோசினைச் சங்கத்தை விட்டுப் புறப்பட்டுப் போய், * மத். ௫, ௰௨.

௪௨ தினந்தினந் தேவாலயத்திலும் வீடுகளிலும் போதகம்பண்ணவும், இயேசுகிறிஸ்துவைச் சுவிசேஷமாய் அறிவிக்கவும் ஓயாதிருந்தார்கள்.

## ௬. அதிகாரம்.

¶ தருமவிசாரிப்புக்கு ஏழுபேரை வைத்தது.

அந்த நாட்களிலோவென்றால் சீஷர் பெருகினபோது, தங்கள் விதவைகள் அன்றாட விசாரிப்பிலே பெருமையாகக் காயப்பட்டார்களென்று, கிரேக்கருக்குள்ளே எபிரேயர் பேரில் முறுமுறுப்புண்டாச்சுது.

௨ அப்போ பன்னிருவர் சீஷரினத்தாரை வரவழைத்துச் சொன்னதாவது: நாங்கள் பராபரனுடைய வசனத்தைவிட்டு, பந்திகளுக்கு ஊழியஞ்செய்ய ஏராது.

௩ ஆனபடியினாலே, சகோதரரே, நாங்கள் இந்தத் தேவையான வேலைக்கு ஏவத்தக்கதாக. பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபுருஷரை உங்களில் தெரிந்தெடுங்கோள்.

௪ நாங்களோவெனில் ஜெபத்திலும் வசனத்தின் ஊழியத்திலும் உறுதியாய்த் தரித்திருப்போமென்றார்கள்.

௫ இந்த வார்த்தை எல்லாத் திரளுக்கும் பாங்காய்ச் சம்மதமாச்சுது, அப்போ விசுவாசமும் பரிசுத்த ஆவியும் நிறைந்த புருஷனாகிய ஸ்தேவானையும், * பிலிப்பையும், பிரொக்கோரையும் நிக்கானோரையும், தீமோனையும் பர்மேனாவையும், யூதமார்க்கத்தையடைந்த அந்தியோக்கியப்பட்டணத்தானாகிய நிக்கொலாவையுந் தெரிந்துகொண்டு, * ௮, ௫.

௬ அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் செபம்பண்ணி அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள்.

௭ ஆனால் ✠ பராபரனுடைய வசனம் வளர்ந்து, சீஷருடைய இலக்கம் எருசலேமிலே மிகவும் பெருகிற்று, ஆசாரியரான வெகு சனமும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தது. ✠ ௰௯, ௨௰.

¶ ஸ்தேவான்மீதில் யூதர்கள் மிகச் சீமத்தினது.

௮ ஸ்தேவான் விசுவாசத்தினாலும் பெலத்தினாலும் நிறைந்து, பெரிய அற்புதங்களையும் அடையாளங்களையும் சனத்துக்குள்ளே செய்தான்.

௯ ஆனால் லிபர்த்தினரென்னப்பட்டவர்களின் ஆலயத்திலுங் கிரேனேப்பட்டணத்தார், அலெக்சந்திரியபட்டணத்தார், கிலிக்கியதேசத்தார், ஆசியதேசத்தாருடைய ஆலயங்களிலுமுள்ள சிலரெழும்பி, ஸ்தேவானுடனே தர்க்கித்து,

௰ அவன் பேசின ✠ ஞானத்துக்கும் ஆவிக்கும் எதிர்த்துநிற்கப் பெலனில்லாதிருந்தார்கள். ✠ லூக். ௨௧, ௰௫.

௰௧ அப்போ மோசேக்கும் பராபரனுக்கும் விரோதமாக அவன் தூஷண வார்த்தைகளைப் பேசக்கேட்டோமென்று சொல்லும் மனுஷரை அவர்கள் சமைப்பித்து;

௰௨ சனத்தையும் மூப்பரையும் வேதபாரகரையுமெடுத்துவிட்டு, அவன் மேலே வந்து, அவனை ஆலோசனைச்சங்கத்துக்கிழுத்துக்கொண்டுபோய்,

௰௩ இந்த மனுஷன் இந்தப் பரிசுத்த ஸ்தலத்துக்கும் நியாயப்பிரமாணத்துக்கும் விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசஓயான்.

௰௪ அதேதென்னில், நசரேத்தானாகிய யேசு இந்த ஸ்தலத்தை அழித்து, மோசே நமக்கு ஒப்பிவித்த முறைமைகளை மாற்றுவானென்கிறதை அவன் சொல்லக்கேட்டோமென்று ✠ பொய்ச்சாட்சிகளை நிறுத்தினார்கள். ✠ ௩. ராசா. ௨௧, ௰௩.

௰௫ ஆலோசனைச்சங்கத்திலுட்கார்ந்திருந்த அனைவரும் அவன் மேலே கண்ணோக்காயிருந்து, அவன் முகந் தேவதூதன் முகம் போலிருக்கக் கண்டார்கள்.

## ௭. அதிகாரம்.

¶ ஆலோசனைச்சங்கத்துக்கு முன்பாக ஸ்தேவான் உத்தரஞ்சொன்னது.

ஆனால் பிரதான ஆசாரியன், இதுகள் இப்படியிருக்குதோவென்றான்.

௨ அதற்கவன் சொன்னதாவது: சகோதரரும் பிதாக்களுமாகிய புருஷரே, கேளுங்கோள். நம்முடைய தகப்பனாகிய ஆபிரகாம் ஆரானிலே குடியிராததுக்கு முன்னே, மெசொப்பொத்தாமியாவிலிருக்க

கை

க்கொள்ள, மகிமையினுடைய பராபரன் அவனுக்குத் தரிசனையாகி,

௩ அவனிடத்தில்: * உன் தேசத்தையும் உன் ஜனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கப்போற தேசத்துக்கு வாவென்றார். * ௧. மோ. ௰௨, ௧.

௪ அப்போது கல்தேயர் தேசத்தை விட்டுப் புறப்பட்டு, காரானிலே குடியிருந்தான். ஆனால் அவன் தகப்பன் மரித்த பிற்பாடு அவர் அவனை அவ்விடத்திலிருந்து நீங்கள் இப்போ குடியிருக்கிற இத்தேசத்துக்குக் குடியேற அழைத்துவந்து,

௫ அவனுக்கு இதிலே ஒரு அடிமண்ணுக்குச் சுதந்தரமாகக் கொடாமல், அவனுக்குப் பிள்ளையில்லாதிருக்கும்போதே: * இதை உனக்கும் உனக்குப் பின்புள்ள உன் சந்ததியாருக்கும் சுதந்தரமாகத் தருவேனென்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார். * ௧. மோ. ௰௨, ௭.

௬ ஆனால் * உன் சந்ததியார் அந்நிய தேசத்திலே பரதேசிகளாயிருப்பார்கள், அவர்களைச் சிறைப்படுத்தி நானூறு வருஷம் உபத்திரப்படுத்துவார்களென்றும், * ௧. மோ. ௰௫, ௰௩.

௭ அவர்களைச் சேவிக்கச் செய்த ஜனத்தை நாம் ஆக்கினையிடுவோம், அதற்குப் பிற்பாடு புறப்பட்டுவந்து இவ்விடத்திலே நமக்கு ஆராதனை பண்ணுவார்களென்றும் பராபரன் சொன்னார்.

௮ * சுன்னத்தின் உடன்படிக்கையையும் அவனுக்குக் கட்டளையிட்டார். இப்படியே அவன் ஈசாக்கைப் பெற்று, அவனை எட்டாம் நாளிலே சுன்னத்துப் பண்ணினான், ஈசாக்கு யாக்கோபையும், யாக்கோபு பன்னிரண்டு கோத்திரப்பிதாக்களையும் பெற்று, சுன்னத்துப் பண்ணினார்கள். * ௧. மோ. ௰௭, ௰.

௯ கோத்திரப்பிதாக்கள் பொறாமையடைந்து, யோசேப்பை எகிப்துக்குப் போறவர்களுக்கு விற்றுப்போட்டார்கள். ஆனால் பராபரன் அவனுடனே கூட இருந்து,

௰ அவனை அவனுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிட்டு, எகிப்து ராசாவாகிய பார்வோனுக்கு முன்பாக அவனுக்குக் கிருபையையும் ஞானத்தையுங் கொடுத்தார். இவன் அவனை எகிப்தின்மேலும் தன் வீடனைத்தின்மேலும் துரையாக வைத்தான்.

௰௧ ஆனால் எகிப்து கானானென்னுந் தேசங்களிலெங்கும் பஞ்சமும் மகா உபத்திரமும் வந்தது, அப்போது நம்முடைய பிதாக்களுக்கு ஆகாரங்கள் அகப்படாமற்போச்சுது.

௰௨ யாக்கோபு எகிப்திலே தானியங்களுண்டென்று கேட்டு, நம்முடைய பிதாக்களை முதலாம் விசை அனுப்பினான்.

௰௩ இரண்டாம் விசை யோசேப்பு தன் சகோதரருக்கு அறியப்பட்டான். யோசேப்புடைய வங்கிஷமும் பார்வோனுக்கு வெளியாச்சுது.

௰௪ யோசேப்போவென்றால் தன் தகப்பன் யாக்கோபையும், எழுபத்தைந்து ஆத்துமாக்களாகிய தன்னுடைய எல்லா ஜனத்தையும் அழைத்தனுப்பினான்.

௰௫ அப்படியே யாக்கோபு எகிப்துக்கு இறங்கிப் போனான். அங்கே அவனும் நம்முடைய பிதாக்களும் மரித்து,

௰௬ அங்கேயிருந்து சீகேமுக்குக் கொண்டுவரப்பட்டு, ஆபிரகாம் சீகேமின் தகப்பனாகிய எமோருடைய புத்திரர் கையிலே விலைக்கிரயமாய் வாங்கியிருந்த கல்லறையிலே வைக்கப்பட்டார்கள்.

௰௭ பராபரன் ஆபிரகாமுக்கு ஆணையிட்டுப் பண்ணின வாக்குத்தத்தத்தினுடைய காலஞ் சமீபித்தபோதோவென்னில்,

௰௮ ஜனம் எகிப்திலே யோசேப்பை அறியாத வேறே ராசா எழும்புமட்டும் பலுகிப் பெருகிற்று.

௰௯ இவன் நம்முடைய சாதிக்குச் சற்பனை செய்து, நம்முடைய பிதாக்கள் தங்கள் குழந்தைகளை, அதுகள் உயிரோடிராதபடிக்கு, வெளியே போட்டுவிட வேணுமென்று, உபத்திரப்படுத்தினான்.

௨௰ அக்காலத்திலே மோசே பிறந்து பராபரனுக்கு அழகுள்ளவனாயிருந்தான், அவன் மூன்று மாதந் தன் தகப்பன் வீட்டிலே வளர்க்கப்பட்டான்.

௨௰௧ அவன் வெளியே போட்டுவிடப்பட்டபோதோவென்னில், பார்வோனுடைய குமாரத்தி அவனை எடுத்துக்கொண்டு, தன்னுக்குக் குமாரனாக வளர்த்தாள்.

௨௰௨ அப்படியே மோசே எகிப்தியருடைய எல்லா ஞானத்திலுஞ் சற்பிக்கப்பட்டான், ஆனால் வாக்குகளிலுங் கிரிகைகளிலும் வல்லவனாயிருந்தான்.

௨௰௩ அவனுக்கு நாற்பது வயது காலம் நிறைவேறினபோதோவென்னில், இஸ்ரவேல் புத்திரராகிய தன் சகோதரரைக் கண்டு சந்திக்க அவனிருதயத்தில் நினைவெழும்பிற்று.

௨௰௪ அப்போ அநியாயம் அனுபவிக்கிற ஒருத்தனை அவன் கண்டு, தற்சார்த்து, எகிப்தியனை வெட்டி, உபாதிப்பட்டவனுக்கு ஞாயஞ் செய்தான்.

௨௰௫ தன் கையினாலே பராபரன் தங்களுக்கு ரெட்சிப்பைத் தருகிறாரென்கிறதைத் தன் சகோதரர் உணருவார்களென்று நினைத்தான், ஆனால் அவர்கள் உணராதேபோனார்கள்.

௨௰௬ மறுநாளிலோவென்றால், சண்டை பண்ணிக்கொண்டிருக்கிற அவர்களுக்கு அவன் தன்னைக் காண்பித்து: புருஷரே, நீங்கள் சகோதரராயிருக்கிறீர்கள். நீங்கள் ஒருத்தர்க்கொருத்தர் அநியாயஞ் செய்வானேனென்று அவர்களைச் சமாதானப்படுத்தப் பேசினான்.

௨௰௭ ஆனால் அடுத்தவனுக்கு அநியாயஞ் செய்தவன் அவனைத் தள்ளிவிட்டு: எங்கள் மேல் உன்னைத் தலைவனும் ஞாயாதிபதியுமாக வைத்தவனார்.

௨௰௮ நீ நேற்று எகிப்தியனைப் போக்கிவிட்டதுபோல என்னைப் போக்கிவிட உனக்கு மனதுண்டோவென்றான்.

௨௰௯ இந்த வார்த்தைக்கு மோசே ஓடிப்போய், மதியான் தேசத்திலே பரதேசியாயிருந்து, அங்கே இரண்டு குமாரரைப் பெற்றான்.

௩௰ நாற்பது வருஷம் நிறைவேறினபோது, சீனா பருவதத்தினுடைய வனாந்தரத்திலே கர்த்தருடைய தூதனானவர் முட்செடியின் அக்கினி சுவாலையிலே அவனுக்குத் தோன்றினார்.

௩௧ ௩௨ மோசே அதைக்காணுகிறபோது, தெரிசினைக்காக அதிசெயப்பட்டான். ஆக அதைக் கவனிக்கப் பார்க்க அவன் சேர்ந்து வருகையில்: நாம் ஆபிரகாமுடைய பராபரனும் ஈசாக்குடைய பராபரனும் யாக்கோபுடைய பராபரனுமாகிய உன் பிதாக்களுடைய பராபரனாயிருக்கிறோமென்று கர்த்தருடைய சத்தம் அவனுக்குண்டாச்சுது. மோசே நடுக்கமடைந்து, கவனித்துப் பார்க்கத் துணியாதிருந்தான்.

௩௩ ஆனால் கர்த்தர் அவனுடனே: உன் பாதங்களின் பாதரட்சைகளைக் கழட்டிப்போடு, ஏனெனில் நீ நிற்கிற ஸ்தலம் பரிசுத்த நிலமாயிருக்குது.

௩௪ எகிப்திலிருக்கிற நம்முடைய ஜனத்தினுடைய உபத்திரவத்தை நாம் பார்க்கவே பார்த்து, அவர்கள் தவிப்பைக் கேட்டோம், அவர்களை விடுவிக்கவும் இறங்கினோம். இப்போதும் நீ வா, உன்னை எகிப்துக்கு அனுப்புகிறோமென்றார்.

௩௫ உன்னைத் தலைவனும் நியாயாதிபதியுமாக வைத்தவனாரென்று அவர்கள் சொல்லி மறுதலித்திருந்த இந்த மோசேயைத்தானே பராபரன், முட்செடியில் அவனுக்குத் தெரிசனையான தூதனானவர் கையினால், தலைவனும் மீட்பனுமாக அனுப்பினார்.

௩௬ இவன் அவர்களை அங்கேயிருந்தழைத்து வந்து, எகிப்து தேசத்திலும் சிவந்த சமுத்திரத்திலும், நாற்பது வருஷ வரையிலே வனாந்தரத்திலும், அற்புதங்களையும் அடையாளங்களையுஞ் செய்தான்.

௩௭ இஸ்ரவேல் புத்திரருடனே: * என்னைப்போலொருத்தீர்க்கதெரிசியை உங்கள் பராபரனாகிய கர்த்தர் உங்களுக்கு உங்கள் சகோதரரிலிருந்தெழும்பப்பண்ணுவார், அவரைக் கேட்பீர்களாகவென்று சொன்ன மோசே இவன்தான். * ௫. மோ. ௰௮, ௰௫.

௩௮ சீனாய் மலைத்தலத்திலே அவனுடனே பேசின தூதரோடும் நம்முடைய பிதாக்களோடுங்கூட வனாந்தரத்திலே சபைக்குள்ளிருந்தவன் இவன்தான். இவன் நமக்குக் கொடுக்க, சீவனுள்ள வாக்கியங்களைப் பெற்றவன்.

௩௯ இவனுக்கு நம்முடைய பிதாக்கள் கீழ்ப்படியமனதாயிராமல், அவனைத் தள்ளிவிட்டு, தங்கள் இருதயங்களில் எகிப்துக்குத் திரும்பி,

௪௰ ஆரோனுடனே: * எங்களுக்கு முன் நடக்கும் தேவர்களை எங்களுக்குப் பண்ணு, ஏனெனில் எங்களை எகிப்து தேசத்திலிருந்தழைத்து வந்த இந்த மோசேக்கு என்னசம்பவித்ததென்றறியோமென்று சொல்லி, * ௨. மோ. ௩௨. ௧.

௪௧ அந்நாட்களில் ஒரு கன்றுக்குட்டியையுண்டாக்கி, இந்த விக்கிரகத்துக்குப் பெலியிட்டு, தங்கள் கைக்கிரிகைகளின்மேல் சந்தோஷப்பட்டார்கள்.

௪௨ ஆனால் பராபரன் திரும்பிக்கொண்டு, அவர்களை வான சேனைகளாராதனை பண்ணும்படிக்குக் கொடுத்துவிட்டார். * இஸ்ரவேல் வீட்டாரே, நீங்கள் வனாந்தரத்திலிருந்த நாற்பது வருஷ வரையிலே காணிக்கைகளையும் பெலிகளையும் நமக்குச் செலுத்தினீர்களோ. * ஆமோ. ௫, ௨௫—௨௭.

௪௩ நீங்கள் பணிந்துகொள்ள உண்டாக்கின ரூபா

களா

ளாகியமோசேயோடுடைய சபபாததையும, உஙக
தேவனுக்கு ரெமபானுடைய நட்சேததிரராசியையு
மெடுததுவநதீர்களே, ஆகையால உஙகளை பாபி
லோனுககபபாலெகுடிவிலகபபணணுவேனெனறு
தீறககதரிசிகளினபுஸதகததில, எழுதியிருக
கிறபிரகாரமாககததானே.

௪௪ * சாட்சியினுடைய கூடாரததைநீபார்ததமாதி
ரியினபடியேஉணடுபணணெனறு மோசேயுடனே
பேசினவர்கடடளையிடடபிரகாரமாக, அது நம்மு
பிதாககளுககுளளே வனாநதிரததிலிருநதது. * உ.
மோ. ௨௫, ௪௰. ௨௬, ௩௰.

௪௫ நமமுடையபிதாககளயோசுவாவோடேகூட
அதைபபெறறுககொணடு, பராபரனநமமுடையபி
தாககளுககுமுனபாகததுரததிவிடட புறசாதிகளு
டையதேசததைதாஙகளகடடிககொளளுகையில,
அதைஅதறகுளகொணடுவநது, தாவீதினுடைய கா
லமடடுககுமவைததிருநதார்கள.

௪௬ தேவனுககுபராபரனுககுமுனபாககிருபைகி
டைததபடியினாலே, * யாகோபுடையபராபரனு
ககுவாசஸதலததைததானே வேணுமெ
னறுஅவனவிணணபபமபணணினான. * சங. ௱௩௨.
௧—௫.

௪௭ ஆனாலசாலமோனஅவருககுவீடடைகடடினான.

௪௮ ஆகிலும * தீறககதரிசிசொலலுகிறபிரகார
மாக, உனனதமானவர்கைவேலையானதேவா
லயஙகளிலவாசமாயிரார். * ஏசா. ௬௬, ௧. ௨.

௪௯ வானமநமககாசனமும பூமியேநமமுடையபா
தபடியுமாயிருககுது, எபபடிககொததவீடடைநமககு
கடடுவீர்கள, இலலதுநாமதஙகததககதலமேது.

௫௰ நமமுடைகைகளலலோ இதையுமுண
டாககினதிலலையோவெனறுகறதருரைககிறார்.

௫௧ * முரடடுககழுததுளளவர்களே, இருதய
ததிலுஞசெவிகளிலுஞசுனனததடையாதவர்களே,
உஙகளபிதாககளைபபோலநீஙகளுமெபபோது
மபரிசுததஆவியோடெதிர்ததுநிறகிறீர்கள. * உ.
மோ. ௩௨, ௯.

௫௨ * தீறககதரிசிகளிலஉஙகளபிதாககளா
லுபததிரவபபடுததாதிருநதார்கள. நேசநீதிபரனு
டையவருகையைமுனஅறிவிததவர்களைஅவர்கள
கொனறுபோடடார்கள, நீஙகளஇபபோஅவரை
காடடிககொடுததுரோகிகளுஙகொலைபாதகருமானீர்கள. *
மத. ௨௩, ௩௪.

௫௩ நீஙகளதெயவதூதருடையஅணிவகுபபுகளு
ககுளளேநியாயபபிரமாணததைஅடைநதிருநதும
அதைககைககொளளாதேபோனீர்களேனறான.

¶ அவனகலலெறியுணடுமரிததது.

௫௪ அவர்களிதுகளைககேடடபோதோ வெனி
* அதுஅவர்களஇருதயஙகளிலஅறுததபடியி
னால அவனபேரிலபலலைககடிததார்கள. * ௫, ௩௩.

௫௫ ஆனாலஅவனபரிசுததஆவியினாலநிறைநதுவா
னததை

னததை அணணாநது பாரதது, பராபரனுடைய மகி
மையையும யேசு பராபரனுடைய வலது பாரிசததிலே
நிறகிறதையுங கணடு:
௫௬ இதோ வானஙகள திறநதிருககிறதையும மனு
ஷனுடைய குமாரன பராபரனுடைய வலது பாரிச
ததிலே நிறகிறதையுங காணகிறேனெனறான.
௫௭ ஆனால அவரகள மகாசசததததுடனே கூபபி
டடு, தஙகள காதுகளை அடைததுககொணடு, ஒரு
மனபபடடு அவனமேலே பாயநது,
௫௮ அவனைப படடணததுககுபபுறமபாககததளளி
கலலெறிநதாரகள. சாடசிகள தஙகள வஸதிரங
களைசசவுலெனனபபடட ஒருவாலிபனுடைய
காலகளணடையிலே போடடுவைதது,
௫௯ ஸதேவனை * கலலெறிநதாரகள. அ
வன: கறதராகிய யேசுவே, என ஆவியை ஏறறுக
கொளளுமெனறு தொழுதுகொணடு, * எபிரே
யக, ௩௭.
௬௰ முழஙகாலபடியிடடு * மகாசசததுடனே:
ஆணடவரே, இவரகளமீதிலே இநதபபாவததைச சு
மததாதேயுமெனறு கூபபிடடான. இதைசசொலலிநித
திரையடைநதான. * லூ. ௨௩, ௩௪.

## ௮. அதிகாரம.

### ¶ சபைதுனபபபடடது.

ஆனால அவனைககொலைசெயயபபடடதுககு * சவுலு
ஙகூடடுதமிததிருநதான. அநநாளிலே யெருசலே
மிலிருககிற சபையினமேலே மகாதுனபமுணடாகி
சசுது, அபபோஸதலர தவிர அனைவரும யூதேயா
சமாரியாதேசஙகளிலே சிதறபபடடாரகள. * ௭, ௫௮.
௨ ஸதேவனை யோகவானறொ பகதியுளளம
னுஷர எடுததடககமபணணி, அவனமேலே மகாபு
லமபலெடுததாரகள.
௩ சவுலோவெனில * சபையைப பாழாககி, வீ
டுககுவீடுபிறவேசிதது, புருஷரையும ஸதிரீ
களையும இழுததுபோய, காவலிலே ஒபபிவிததான. * ௬,
௪ ஆனாலசிதறபபடடவரகள திரிநது, வசனததை
சுவிசேஷமாய அறிவிததாரகள.

### ¶ சமாரியதேசததிலசபையுணடானது.

௫ * பிலிபபுசமாரியாவிலுளள ஒரு படடணதது
ககிறஙகிவநது, அவரகளுககுககிறிஸதுவைபபிரசங
கிததான. * ௬, ௫.
௬ பிலிபபுசெயத அடையாளஙகளை சனஙகள
கேடடுககாணகையிலே, அவனாலசொலலபபடடவை
களுககுஒருமனபபடடுககவனிததிருநதாரகள.
௭ ஏனெனில அசுததஆவிகளுளள அநேகரிலிரு
நது அதுகள மகாசசததததுடனே கூபபிடடுபபுறபப
டடுது, அநேகந திமிரவாதககாரருஞ சபபாணிகளு
குணமாககபபடடாரகள.

அ அந்தப் பட்டணத்திலே மகா சந்தோஷமுண்டாச்சுது.

கூ ஆனால் சீமோனென்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் முன்னே அந்தப் பட்டணத்திலே இஸ்தம்பண வித்தைக்காறனாயிருந்து. தன்னை ஒரு பெரியவனென்று சொல்லி, சமாரிய சாதியை விஸ்மிதப்பண்ணிக்கொண்டிருந்தான்.

ய சிறியார் முதல் பெரியார் மட்டும் எல்லாரும்: இவன் பராபரனுடைய பெரிதான சத்தியென்று அவன் மேல் நோக்கமாயிருந்தார்கள்.

யக அவன் அநேககாலமாய் அவர்களை இஸ்தம்பண வித்தைகளினாலே விஸ்மிதப்பண்ணினதினாலே அவன் மேல் நோக்கமாயிருந்தார்கள்.

யஉ ஆனால் பராபரனுடைய ராட்சியத்துக்கும் யேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் அடுத்தவைகளைச் சுவிசேஷமாய் அறிவிக்கிற பிலிப்புவை அவர்கள் விசுவாசித்தபோது, புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

யங அப்போ சீமோன் தானும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்புவண்டையிலே தரித்திருந்து, அடையாளங்களையுஞ் செய்யப்பட்ட பெரிய வல்லமைகளையுங் கண்டு விஸ்மிதத்தான்.

யச சமாரியா பராபரனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டதை யெருசலேமிலிருக்கிற அப்போஸ்தலர் கேட்டபோதோவெனில், பேதுருவையும் யோவானையும் அவர்களண்டைக்கு அனுப்பினார்கள்.

யரு இவர்கள் இறங்கிவந்தபோது, அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற அவர்களுக்காகச் செபம்பண்ணினார்கள்.

யசா ஏனென்றால் அவர்களில் ஒருத்தன்மேலும் அவர் இன்னம் இறங்கினதில்லை, கற்தராகிய யேசுவின் நாமத்திலே ஞானஸ்நானமாத்திரம் பெற்றிருந்தார்கள்.

யஎ அவர்கள் மேல் கைகளை வைத்தார்கள், அப்போ பரிசுத்தஆவியைப் பெற்றார்கள்.

யஅ அப்போஸ்தலர் கைகளை மேலே வைத்ததினாலே பரிசுத்தஆவி கொடுபடுகிறதைச் சீமோன் கண்டபோதோவெனில், அவர்களுக்குப் பணங்களைக் கொண்டுவந்து:

யகூ நான் ஆர்மேலே கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்தஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுங்கோளென்றான்.

உய ஆனாலே பேதுரு அவனோடே சொன்னதாவது: உன் பணம் உன்னுடனே கூடக் கெட்டுக்குள்ளாகக்கடவது, * ஏனென்றால், பராபரனுடைய ஈவைப் பணங்களாலே சம்பாதிக்க நினைத்தாய். * மத. ய, அ.

உக உனக்கிந்த வற்தமானத்திலே பங்குமில்லை பாத்தியமில்லை. ஏனென்றால் உன் இருதயம் பராபரனுக்கு முன்பாகச் செம்மையாயிராது.

உஉ ஆகையால் உன் இருதயத்தின் சிந்திப்பு உனக்கு மன்னிக்கப்படுமோவென்று, நீ இந்த உன்னுடைய துற்குணத்தை விட்டுக் குணப்பட்டுப் பராபரனை வேண்டிக்கொள்.

௨௩ ஏனெனில் நீ கசப்பான பிச்சிலும் அநியாயக்கட்
டிலும் அகப்பட்டிருக்கிறாயென்று காண்கிறேனெ
ன்றான்.
௨௪ ஆனால் சீமோன் பிரதியுத்தரமாக: நீங்கள்
சொன்னவைகளில் ஒன்றும் என்மேல் வராத
படிக்கு, நீங்கள் எனக்காகக் கர்த்தரை வேண்டிக்கொ
ள்ளுங்கோளென்றான்.
௨௫ அவர்களோவென்றால் கர்த்தருடைய வசனத்
தைத் திடச்சாட்சியாய் ஒப்புவித்துச் சொன்னபிறபாடு
யெருசலேமுக்குத் திரும்பி, சமாரியருடைய அநேக
ங்கிராமங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள்.

௩ எத்தியோப்பியதேசத்துராசாத்தியின்பிரதானி
ஞானஸ்நானம்பெற்றது.

௨௬ ஆனால் கர்த்தருடைய தூதன் பிலிப்புவுடனே:
நீ எழுந்து, தெற்கே பாழாய்க்கிடக்கிற காசாவுக்
கு யெருசலேமிலிருந்திறங்கிப்போற வழிக்குப்போ
வென்று சொன்னான்.
௨௭ அவனெழுந்து போனான். இதோ எத்தியோப்பி
யருடைய ராசாத்தியாகிய கந்தாகேயினுடைய பிர
தானியும் அவளுடைய எல்லாப் பொக்கிஷத்தின்மே
லும் வைக்கப்பட்டவனுமாகிய ஒரு எத்தியோப்
பிய மனுஷன் பணிந்துகொள்ள யெருசலேமுக்கு
வந்திருந்து,
௨௮ ஊருக்குத் திரும்பி, தன் ரதத்திலே உட்கார்ந்
து, யெசாயாதீர்க்கதெரிசியின் பொஸ்தகத்தை வாசித்
திருந்தான்.
௨௯ ஆனால் ஆவியானவர் பிலிப்புவுடனே: நீ சே
ரப்போய் இந்த ரதத்துடனே கூடிக்கொள் என்றார்.
௩௰ அப்போ பிலிப்பு சேர ஓடி, அவன் யெசாயாதீ
ர்க்கதெரிசியின் பொஸ்தகத்தை வாசிக்கிறதைக் கே
ட்டு: நீர் வாசிக்கிறதுகளை அறிகிறீரா என்றான்.
௩௧ அவனோவென்றால்: ஒருத்தன் எனக்கு வழிகாட்டி
னாலொழிய, நானெப்படி அறியலாமென்று சொ
ல்லி, பிலிப்புவை ஏறிவந்து தன்னண்டையிலே உட்
காரவேண்டிக்கொண்டான்.
௩௨ ஆனால் அவன் வாசித்த வேதத்தின் விபரமாவது:
அவர் ஒரு ஆட்டைப்போல அடிக்கப்படக் கொண்
டுபோகப்பட்டு, தன்னை மயிர்க்கத்தரிக்கிறவனுக்கு மு
ன்பாகச் சத்தமற்றிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போ
லே தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். * யெச. ௫௩.
௭. ௮.
௩௩ அவர் தம்மைத் தாழ்த்தினத்திலே அவர் ஆக்கி
னை எடுபட்டுத் தீர்ந்து, ஆனால் அவருடைய ஜீவன் பூ
மியிலிருந்தெடுபட்டபடியினாலே அவருடைய சந்தத்
தியைச் சொல்லத்தாரே முடியுமென்கிறதுதானே.
௩௪ பிரதானியோவென்றால் பிலிப்புவுக்குப் பிரத
தியுத்தரமாக: இத்தீர்க்கதெரிசி ஆரைக்குறித்துச் சொ
ல்லுகிறான், தன்னையோ அல்லது வேறொருத்தனைக்
குறித்தோ என்றெனக்குச் சொல்ல உம்மை வேண்டி
க்கொள்ளுகிறேனென்றான்.

௩௫ அப்பொழுது பிலிப்பு தன் வாயைத் திறந்து, இந்த வேதவாக்கியத்தைத் துவக்கி, அவனுக்கு யேசுவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான்.

௩௬ ஆனால் அவர்கள் வழிநடந்துபோகக்கொள்ள, தண்ணீருள்ள ஒரு இடத்திலே வந்தார்கள். அப்பொழுதவன்: இதோ தண்ணீர், நான் ஞானஸ்நானம் பெறுகிறதுக்குத் தடையென்னவென்றான்.

௩௭ அப்பொழுது பிலிப்பு: நீர் முழு இருதயத்தோடே விசுவாசித்தால், தகுமென்றான். அவன் பிரதியுத்தரமாக: யேசுகிறீஸ்து பராபரனுடைய குமாரனென்று நான் விசுவாசிக்கிறேனென்று சொல்லி,

௩௮ ரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்புவும் மந்திரியும் இருவருந் தண்ணீரிலே இறங்கினார்கள், அவனவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.

௩௯ அவர்கள் தண்ணீரிலிருந்து ஏறினபோது, கர்த்தருடைய ஆவி பிலிப்பை எடுத்துக்கொண்டார், பின்பு தான் அப்புறம் அவனைக் காணாமல் சந்தோஷத்துடனே தன் வழியே போனான்.

௪௰ ஆனால் பிலிப்பு அசோத்திலே காணப்பட்டு, உருவ நடந்து, தான் * செசாரியாவுக்கு வருமட்டாகச் சகல ஊர்களிலும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்துத் திரிந்தான். * உக, அ.

## ௯. அதிகாரம்.

¶ சவுல் குணப்பட்டது.

சவுலோவென்றால் * இன்னங் கர்த்தருடைய சீஷருக்கு விரோதமாய்ப் பயமுறுத்துகிறதையுங் கொலைசெய்கிறதையுஞ் சீறி, பிரதான ஆசாரியனிடத்துக்குப் போய், * அ, ௩.

௨ தானிந்த மார்க்கத்துச் சிலபுருஷரையும் ஸ்திரீகளையுங் கண்டுபிடித்தானால், அவர்களைக் கட்டுண்டவர்களாக யெருசலேமுக்குக் கொண்டுவரும்படிக்கு, தமஸ்குவிலிருக்கும் ஆலயங்களுக்கு அவனுடைய நிருபங்களைக் கேட்டுவாங்கினான்.

௩ ஆனால் அவன் பயணமாய்ப்போய், * தமஸ்குவுக்குச் சமீபித்து வருகையிலே சம்பவித்ததென்னவென்றால், அசுப்பிலே வானத்திலிருந்தோரு வெளிச்சம் அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. * ௨௨, ௬—௰௬. ௨௬, ௰௨—௰௪.

௪ அப்பொழுதவன் தரையிலே விழுந்து: சவுலே, சவுலே, நீ என்னைத் துன்பப்படுத்துவானேனென்று தனக்குச் சொல்லுகிற சத்தத்தைக் கேட்டான்.

௫ அவன்: நீர் ஆர், ஆண்டவரேயென்றான். அதற்கவர்: நான் நீ துன்பப்படுத்துகிற யேசுவாயிருக்கிறேன், கூருக்கெதிராக உதைக்கிறது உனக்குக் கடினமாமென்றார்.

௬ அவன் நடுங்கிப் பயந்து: ஆண்டவரே, நானென்ன செய்ய உமக்குச் சித்தமாயிருக்குதென்றான். கர்த்தர் அவனுடனே: நீ எழுந்திருந்து பட்டணத்துக்குள்ளே பிரவேசி, அங்கே உனக்கு * நீ செய்ய வேண்டியது சொல்லப்படுமென்றார். * ௰, ௫. ௬.

௭ அவனுடனேகூடவழிப்பயணம்பண்
ணுகிறமனுஷர்சத்தத்தைக்கேட்டுமொருத்தரையுங்கா
ணாமல்மரத்துநின்றார்கள்.

௮ சவுலு தரையிலிருந்தெழுந்தான்,
அவனுடைய கண்கள் திறந்திருக்கிறபோது ஒருத்த
ரையுங்காணாதவனாயிருந்தான், அப்போ அவனைக்
கைலாகுகொடுத்து, தமஸ்குவுக்கு அழைத்துக்கொ
ண்டுபோனார்கள்.

௯ அவன் மூன்றுநாள் பார்வையில்லாமலும்
போசியாமலுங்குடியாமலுமிருந்தான்.

௰ ஆனாலுந் தமஸ்குவிலே அனனியா என்னும்பேருள்
ள ஒரு சீஷனிருந்தான்; அவனுடனே கர்த்தர் தரிசன
த்திலே: அனனியாவே என்றார். அவன்: ஆண்டவ
ரே, இதோ அடியேனென்றான்.

௧௧ அப்போ கர்த்தர் அவனுடனே: நீ எழுந்து, செ
ம்மையானதென்னப்பட்ட வீதியிலே போய், யூதாவி
ன் வீட்டிலே தர்சுவூராளான சவுலென்கிற பேருள்ள
வனைத்தேடு, ஏனெனிலிதோ செபம்பண்ணுகிறான்.

௧௨ அவன் தரிசனத்திலே அனனியா என்கிற பே
ருள்ள ஒரு மனுஷன் உள்ளே வரவும் தான் பார்வை
அடையத்தக்கதாகத்தன்மேல் கைகளை வைக்கவுங்க
ண்டானென்றார்.

௧௩ அனனியாவோவென்றால்: ஆண்டவரே, இந்த
மனுஷனெருசலேமிலே உம்முடைய பரிசுத்தவான்களு
க்கெத்தனை பொல்லாப்புகளைச் செய்தானென்கிற
தை அவனைப்பற்றி அநேகராலே கேழ்வியானேன்.

௧௪ இங்கேயும் உம்முடைய நாமத்தைத் தொழுதுகொ
ள்ளுகிற அனைவரையுங் கட்ட, பிரதான ஆசாரியர்க
ளால் அதிகாரம்பெற்றிருக்கிறானென்று பிரத்தியுத்
தாரஞ்சொன்னான்.

௧௫ கர்த்தர் அவனுடனே சொன்னதாவது:
நீ போ, ஏனெனில் நம்முடைய நாமத்தைப் புறசாதிகளு
க்கும் ராசாக்களுக்கும் இஸ்ரவேல் புத்திரருக்கும் மு
ன்பாகச் சுமக்க, இவன் நமக்குத் தெரிந்துகொள்ளப்
பட்டபணிமுட்டாயிருக்கிறான்.

௧௬ * அவன் நம்முடைய நாமத்துக்காக எத்தனை பா
டுபடவேண்டுமென்கிறதை நாம் அவனுக்குக் கா
ண்பிப்போமென்றார். * ௨. கொ. ௧௧, ௨௩—௨௬.

௧௭ அனனியா போய், வீட்டுக்குள் பிறவேசித்
து, அவன்மேல் கைகளை வைத்து: சகோதரனாகிய சவு
லே, நீ வந்த வழியிலே உனக்குத் தெரிசனமான யே
சுவாகிய கர்த்தரென்பவர், நீ பார்வையடையவும் ப
ரிசுத்த ஆவியினாலே ரெப்பப்படவுமாக அனுப்பினாரெ
ன்றான்

௧௮ உடனே அவன் கண்களிலிருந்து பிராலகளைப்
போல விழுந்தது, உடனேயும் பார்வையடைந்து,
எழுந்திருந்து ஸ்நானம்பெற்று,

௧௯ போசனத்தை வாங்கித்திடப்பட்டான். சவுலு
தமஸ்குவிலுள்ள சீஷருடனே சிலநாளி
ருந்து;

௨௰ உடனே ஆலயங்களிலே கிறிஸ்துவை தேவ
பராபரனுடைய குமாரனென்று பிரசங்கித்தான். ரு

௨௧ ஆனால் கேட்கிறவர்களெல்லாரும் பிரமித்து: இவன் எருசலேமிலே இந்த நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவர்களைப் பாழாக்கி, இங்கேயும் அவர்களைக் கட்டுண்டவர்களாகப் பிரதான ஆசாரியர்களிடத்துக்குக் கொண்டுபோவதற்கு வந்தவனல்லவோவென்றார்கள்.

௨௨ சவுலுவோவென்றால் அதிகம் அதிகமாகத் திடனைப்பெற்று, இவரே கிறிஸ்துவென்று ரூபித்து, தமஸ்குவிலே குடியிருக்கிற யூதருக்கு எதிர்உத்தரந்தோணாமல்பண்ணினான்.

௨௩ அநேகநாளானபின்பாடோவென்றால் அவனைப்போக்கிவிட யூதர் ஆலோசனைபண்ணினார்கள்.

௨௪ ஆனால் அவர்களுடைய ஆலோசனை சவுலுக்கு அறியப்பட்டுது. அவர்கள் அவனைப்போக்கிவிடுவதற்கு இரவும்பகலுங் கோட்டைவாசல்களைக் காத்திருந்தார்கள்.

௨௫ சீஷரோவென்றால் அவனை ராத்திரியிலே சேர்த்துக்கொண்டு, ஒரு கூடையிலே வைத்து மதிள்வழியாய் இறக்கிவிட்டார்கள்.

௨௬ சவுலு யெருசலேமுக்கு வந்தபோது, சீஷரோடே சேர்ந்துகொள்ளப்பார்த்தான், ஆனால் எல்லாரும் அவன் சீஷனென்று நம்பாமல் அவனுக்குப் பயந்திருந்தார்கள்.

௨௭ பற்னபாவோவென்றால் அவனைச் சேர்த்து, அப்போஸ்தலரண்டைக்கு அழைத்துக்கொண்டுவந்து, அவன் எப்படி வழியிலே கற்த்தரைக் கண்டானென்கிறதையும், இவர் அவனுடனே பேசினாரென்கிறதையும், அவன் எப்படி தமஸ்குவிலே யேசுவின் நாமத்திலே தயிரியமாய்ப் பிரசங்கித்தானென்கிறதையும் அவர்களுக்கு வயணமாய்ச் சொன்னான்.

௨௮ அப்போது அவன் அவர்களுடனேகூட யெருசலேமிலே போக்கும்வரத்துமாயிருந்து,

௨௯ கற்த்தராகிய யேசுவின் நாமத்திலே தயிரியமாய்ப் பிரசங்கித்து, கிரேக்கருடனே பேசித் தற்க்கித்தான், இவர்களோ அவனைப்போக்கிவிட எத்தினம்பண்ணினார்கள்.

௩௰ சகோதரர் அதை அறிந்தபோதோவென்றால் அவனைச் செசாரியாவுக்கழைத்துப்போய், தர்சுவுக்கனுப்பினார்கள்.

௩௧ ஆனால் யூதேயா கலிலேயா சமாரியாவெங்குஞ்சபைகள் சமாதானம்பெற்றிருந்து, ஸ்தாபிக்கப்பட்டு, கற்த்தருக்குப் பயந்துநடந்து, பரிசுத்த ஆவியின் ஆறுதலோடிருந்து பெருகிற்று.

¶ பேதுருசெய்த ரெண்டு அதிசெயங்கள்.

௩௨ பேதுரு சகல இடங்களிலும் நடந்துதிரிகையிலே சம்பவித்ததென்றால், அவன் லித்தாவிலே குடியிருந்த பரிசுத்தவான்களிடத்துக்கும் வந்தான்.

௩௩ அங்கே எட்டுவருஷமாக் கட்டிலின்மேலே கிடந்த திமிர்வாதரோகியாகிய ஐனேயாவென்று பேருள்ள ஒரு மனுஷனைக் கண்டான்.

௩௪ அவனுடனே பேதுரு: ஐனேயாவே, யேசுக் கிறிஸ்து உன்னைக் குணமாக்குகிறார், நீ எழுந்திருந்து, உன்படுக்கையை நீயே போட்டுக்கொள்ளென்றான். உடனே எழுந்திருந்தான்.

௩௫ அவனை லித்தாவிலுஞ் சாரோனிலுங் குடியிருந்தவர்களெல்லாருங் கண்டு, கர்த்தரண்டைக்குத் திரும்பினார்கள்.

௩௬ யொப்பேயிலே தபீத்தாளென்ற பேரின் வியாக்கியானத்தோடே தொற்காளென்னப்பட்ட ஒரு சீஷியிருந்தாள். இவள் தான் செய்யும் நற்கிரிகைகளாலுந் தருமங்களாலும் நிறைந்தவளாயிருந்தாள்.

௩௭ அந்நாட்களிலே அவள் வியாதியாய் விழுந்து மரணமடைந்தாள். அவளைக் குளிப்பாட்டி மேல்வீட்டிலே கிடத்திவைத்தார்கள்.

௩௮ லித்தா யொப்பேக்குச் சமீபமானபடியினாலே பேதுரு அவ்விடத்திலிருக்கிறானென்று கேட்டு சீஷர் இரண்டு மனுஷரை அவனண்டைக்கு அனுப்பி தாங்களிருக்குமிடமட்டுக்குந் தாமதமில்லாமல் வர வேண்டிக்கொண்டார்கள்.

௩௯ பேதுரு எழுந்திருந்து அவர்களோடே கூட வந்தான், வந்துசேர்ந்தபோது அவனை மேல்வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். அப்போது சகல விதவைகளும் அவனண்டை வந்து நின்று அழுதுகொண்டு, தொற்காள் தங்களோடே கூட இருக்கையில் பண்ணின அங்கிகளையும் வஸ்திரங்களையுங் காண்பித்தார்கள்.

௪௰ பேதுரு வெளியே எல்லாரையும் வெளியே போகப்பண்ணி முழங்கால்படியிட்டுச் செபம்பண்ணி, சவத்தின் புறமாய்த் திரும்பி: தபீத்தாளே, எழுந்திரு என்றான். அப்போது அவள் கண்களைத் திறந்து, பேதுருவைக் கண்டு உட்கார்ந்தாள்.

௪௧ அவன் அவளுக்குக் கைகொடுத்து அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையுங் கூப்பிட்டு, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன்பாக நிறுத்தினான்.

௪௨ இது யொப்பேயிலெங்கும் பிரசித்தப்பட்டதினாலே அநேகர் கர்த்தர் பேரிலே விசுவாசித்தார்கள்.

௪௩ அப்போ சம்பவிக்கக்கென்றால் அவன் யொப்பேயிலே தோல்பதனிடுகிறவனாகிய சீமோனென்கிற ஒருத்தனிடத்திலே அநேக நாளிருந்தான்.

## ௰. அதிகாரம்.

௧ புறசாதியாராகிய கொர்னேலியும் அவனுக் கடுத்த மனுஷருங் கிறிஸ்துவின் சபைக்குள்ளானது

இத்தாலிக்காலிப் சேர்வையென்னப்பட்ட சேர்வை நூற்றுக்கதிபதியாகிய கொர்னேலியுவென்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் கேசாரியாவிலேயிருந்தான்.

பம்பண்ணிக்கொண்டிருந்தேன், அப்போதுதோ,
பிறகாசமுள்ள உடையுடனே ஒரு புருஷன் எனக்கு
முன்பாக வந்துநின்று.

௩௧ கொர்நேலியுவே, * உன் ஜெபங் கேட்கப்ப
ட்டு, உன் தருமங்கள் பராபரனுக்கு முன்பாக ஞாப
கமாச்சுது. * ஊா. ௧, ௰௩.

௩௨ இப்போதும் நீ யோப்பேக்கு மனுஷரையனுப்
பி, பேதுருவென்னும் மறுபேர்கொண்ட சீமோனை வ
ரவழை, அவன் கடலோரத்திலே தோல்பதனிடுகிறவனா
கிய சீமோனுடைய வீட்டிலே தங்கியிருக்கிறான், அவன்
வந்தபோது உனக்குச் சொல்லுவானென்றார்.

௩௩ ஆகையாலுடனே யும்மண்டைக்கு ம
னுஷரையனுப்பினேன், நீர் வந்தது நல்லகாரியம். இ
ப்போதும் பராபரனாலே உமக்குக் கற்பிக்கப்பட்டதுக
ளெல்லாங் கேட்க நாங்களனைவரும் இங்கே
பராபரனுக்கு முன்பாக இருக்கிறோமென்றான்.

௩௪ பேதுருவோவெனில் தன் வாயைத் திறந்து
சொன்னதாவது: * பராபரன் முகமாட்டமுள்ளவ
ரல்லவென்றும், * ரோ. ௨, ௰௧.

௩௫ எல்லாச்சாதியிலும் அவருக்குப் பயந்து
நீதியைச் செய்கிறவன் அவருக்கு உகந்தவனென்றும் மெ
ய்யாய் உணர்ந்துகொள்ளுகிறேன். * யெச. ௫௬,
௬. ௭. அபி. ௭. ௯.

௩௬ அவர் எல்லாருக்குங் கர்த்தராயிருக்கிற யேசு
கிறீஸ்துவைக்கொண்டு சமாதானத்தைச் சுவிசேஷ
மாய் அறிவித்து, இஸ்றவேல் புத்திரருக்கனுப்பின வா
ர்த்தையானது உங்களுக்குத் தெரியாததல்ல. * மத்.
௨௮, ௰௮.

௩௭ நாசரேத்தானாகிய யேசுவைப் பராபரன் * பரிசு
த்த ஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷே
கம்பண்ணினானென்றும், பராபரன் அவருடனே கூ
டவிருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராக
வும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையுங்
குணமாக்குகிறவராகவுஞ் சுற்றித்திரிந்தாரென்றும், *
சங்கீ. ௪௫, ௮.

௩௮ யோவான் பிரசங்கித்த ஸ்நானத்துக்குப்
பிற்பாடு * கலிலேயாதுவக்கி யூதேயாமுழுதும் நட
ந்துவந்ததுமானதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். *
மத். ௪, ௰௨. லூ

௩௯ அவர் யூதருடைய தேசத்திலும் எருசலேமி
லுஞ் செய்தவைகளுக்கெல்லாம் நாங்கள் சாட்சிகளா
யிருக்கிறோம், அவரை ஒருமரத்திலே தூக்கிப் போட்டுக்
கொன்றார்கள்.

௪௰ அவரைப் பராபரன் மூன்றாம் நாளிலெழுப்பி, பி
ரசன்னமாய்க் காணப்படப்பண்ணினார்.

௪௧ எல்லாச் சனத்துக்குமல்ல, அவர் மரித்தோ
ரிலிருந்தெழுந்தபிற்பாடு அவரோடே போசித்துக்கு
டித்தவர்களும் பராபரனாலே முன்னே நியமிக்கப்பட்டிரு
ந்த சாட்சிகளுமாகிய எங்களுக்குத்தானே,

௪௨ சனத்துக்குப் பிரசங்கிக்கவும், * தாம் உயிரோ
டிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்க்கும் பராபரனாலே
குறிக்கப்பட்ட ஞாயாதிபதியென்று திடசாட்சியாக ஒப்
பிக்க

பீவிககவும அவர்களுககுககடடளையிடடார். * மதது
௨௫, ௩௧. ௨. தீமோ ௪, ௧. ௨.

௪௩ இவர்பேரிலேவிசுவாசிககிறவனெவனோ அவன
இவருடையநாமததினாலேபாவமன்னிபபைப பெ
றுகிறானென்று * தீர்ககதரிசிகளெல்லாரும இவரு
ககுசசாடசிகொடுககிறார்களென்றான. * ௩, ௨௪.

௪௪ பேதுரு இநதவார்ததைகளைப பேசியி
ருககையில, வசனததைககேடடவர்களெல்லார்மேலும
பரிசுதத ஆவி இறஙகினார்.

௪௫ அபபோ பேதுருவுடனேகூட வநதிருநதசுன
னததுளள விசுவாசிகள, பரிசுதத ஆவியின வரம புற
சசாதியார்மேலும ஊறறபபடடுதென்று விஸமயமுற
றார்கள.

௪௬ ஏனெனில அவர்கள பாஷைகளைப பேசுகிற
தையும பராபரனை மகிமைப படுததுகிறதையுங
கேட்டார்கள. அபபோ பேதுரு பிரதியுததரமாக:

௪௭ நமமைபபோல பரிசுதத ஆவியைப பெற்ற இ
வர்கள ஞானஸநானமபெறாதபடிககு யாதொருததன
தணணீரைததடைபணணலாமோ வென்று சொ
லலி,

௪௮ அவர்களகர்ததருடைய நாமததிலே ஞானஸ
நானமபெறககற்பிததான. அபபோ அவனைசிலநா
ளங்கிருககவேணடிககொணடார்கள.

## ௰௧. அதிகாரம்.

¶ பேதுருசுன்னததிலலாதவர்களுடனே
தானகலநததுககாக உததரஞ
சொன்னது.

ஆனாலபுறசசாதியாரும பராபரனுடையவசனதமதை
ஏற்றுககொணடதையூதேயாவிலிருககிற அப
போஸததலருஞசகோதரருங கேடடார்கள.

௨ பேதுரு யெருசலேமுககுவநதபோது;
சுன்னததுளளவர்கள அவனுடனே:

௩ நீர் நுனிததோலுளளமனுஷரணடைககுளப
பிரவேசிதது அவர்களோடே போசிததீரென்று
நியாயமபேசினார்கள.

௪ ஆனாலபேதுருவரிசையாய அவர்களுககு விபரி
ககததுவககி, சொன்னதாவது:

௫ * நானயோபபேயூரிலேசெபமபணணிககொ
ணடிருநதேன, அபபோ நாலுதொஙகலுஙகடட
பபடடபெரியதுபபடடியைபபோலஒருகூடுவானதது
லிருநது என்னணடைககுறஙகிவருகிற ஒருதெரிசி
னையைததானதிஷடியிலேகணடேன. * ௰, ௯. ௰௭.

௬ அதிலேநான கணணூனறிககவனிததுபபார்க
கிறபோது, பூமியிலுளளநாலுகாலசீவனகளையு
ஙகாடடுமிருகஙகளையும ஊர்வனஙகளையும ஆ
காசததுபபறவைகளையுஙகணடேன.

௭ அபபோ எனனுடனே: பேதுருவே, எழுநதிரு,
அடிததுபபோசியென்று சொல்லுகிற ஒருசததததைககேட
டேன.

அ

௮ நானதற்கு: அப்படியல்ல, ஆண்டவரே, ஏதொன்றிலும் தீட்டும் அசுத்தமுமாயிருக்கிறதொன்றும் ஒருக்காலும் என் வாய்க்குள்ளே போனதில்லை என்றேன்.
௯ இரண்டாந்தரம் வானத்திலிருந்துண்டான சத்தம் எனக்குப் பிரதியுத்தரமாக: பராபரன் சுத்தமாக்கினதுகளை நீ தீட்டாக என்னாதேயென்று சொல்லிற்று.
௰ இப்படி மூன்றுதரஞ் சம்பவித்தது, மறுபடியும் எல்லாம் வானத்துக்கு ஏறெடுக்கப்பட்டது.
௰௧ உடனே கெசரியாவிலிருந்து என்னண்டைக்கு அனுப்பப்பட்ட மூன்று மனுஷர் நானிருந்த வீட்டுக்கு முன்னே வந்து நின்றார்கள்.
௰௨ ஆவியானவர் என்னோடே: நீ ஒன்றுக்குஞ் சந்தேகப்படாமல் அவர்களோடே கூடப் போவென்றார். இந்த ஆறு சகோதரரும் என்னோடே கூட வந்து, அந்த மனுஷனுடைய வீட்டுக்குள் பிரவேசித்தோம்.
௰௩ அவன் தன்னுடைய வீட்டில் தானொரு தேவதூதன் நிற்கக்கண்டதையும்: நீ யோப்பா பட்டணத்துக்கு மனுஷரை அனுப்பி, பேதுருவென்று மறுபேர் கொண்ட சீமோனை அழைப்பி,
௰௪ அவன் நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுமவாறுக்கு உன்னுடனே சொல்லுவானென்று அவன் தன்னுடனே சொன்னதையும் எங்களுக்கறிவித்தான்.
௰௫ நான் பேசத்துவக்கையில், பரிசுத்த ஆவி ஆதியிலே நம்மேலே இறங்கினதுபோல அவர்கள்மேலும் இறங்கினார்.
௰௬ அப்போ: யோவான் தண்ணீரிலே ஞானஸ்நானம் பண்ணுவித்தான், நீங்களோவென்றால் பரிசுத்த ஆவியிலே ஞானஸ்நானம் பண்ணப்படுவீர்களென்று * கர்த்தர் சொன்னவார்த்தையை நினைவுகூர்ந்தேன். * ௧, ௫.
௰௭ ஆகையால் நாங்கள் கர்த்தராகிய யேசுகிறிஸ்துவின் பேரில் விசுவாசித்த அவர்களுக்கு பராபரன் நமக்குக் கொடுத்ததுக்குச் சரியான வரத்தைக் கொடுத்திருக்கக் கொள்ள, பராபரனைத் தடைபண்ண நானெம்மாத்திரம் பெலவானாயிருந்தேனென்றான்.
௰௮ அவர்களிதுகளைக் கேட்டபோது, அமர்ந்து: அப்படியானால், புறசாதியாருக்கும் பராபரன் ஜீவனடைவதற்குக் கொண்டுபோகத்தக்க மனஸ்தாபத்தை யிட்டருளினாரென்று பராபரனை மகிமைப்படுத்தினார்கள்.

¶ அந்தியோகியப் பட்டணத்துப் புறசாதியாருக்குள்ளே கிறிஸ்துவுக்கொரு சபையுண்டானது.

௰௯ ஸ்தேவானிமித்தியமாய் * எழும்பின உபத்திரவத்தினாலே சிதறப்பட்டவர்களோவென்றால், பெனிக்கே தேசம், கீப்பிருதீவு, அந்தியோகியப் பட்டணம் மட்டுக்கும் நடந்து, வசனத்தை யூதருக்குமாத்திரமேயல்லாமல் மற்றொருத்தருக்குஞ் சொல்லாதிருந்தார்கள். * ௮, ௧.

உப

௨௰ ஆனால் அவர்களிலே சிப்புருதீவாருஞ் சிரே
னேயபட்டணத்தாருஞ் சிலரிருந்தார்கள், அவர்கள் அந்தி
யோகியாவுக்குள் பிரவேசித்து, கிரேக்கருடனே பேசிக்
கர்த்தராகிய யேசுவைச் சுவிசேஷமாய் அறிவித்தார்கள்.
௨௧ அவர்களுடனே கூடக் கர்த்தருடைய கையி
ருந்ததினாலே திரளான கூட்டம் விசுவாசித்து, கர்த்தரண்டை
யிலே திரும்பினார்கள்.
௨௨ அவர்களுடைய செய்தி யெருசலேமிலிருக்குஞ்
சபையின் செவிகளுக்குக் கேழ்வியாய், அவர்கள் ப
ர்னபாவை அந்தியோகியாமட்டும் போகவனுப்பினார்
௨௩ அவன் வந்துசேர்ந்து பராபரனுடைய கிரு
பையைக்கண்டபோது, சந்தோஷப்பட்டு, கர்த்தரண்டை
யிலே மனநிர்ணயமாய் * நிலைகொண்டிருக்க
எல்லாருக்கும் புத்திசொன்னான். * ௰௩, ௪௩.
௨௪ ஏனெனில் அவன் நல்ல மனுஷனும் பரிசுத்த ஆ
வியினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவனுமாயி
ருந்தான். வெகுசனங்கள் கர்த்தரிடமாய்ச் சேர்க்கப்பட்ட
௨௫ ஆனால் பர்னபா சவுலைத்தேட, தர்சுக்
குப்புறப்பட்டுப்போய், அவனைக் கண்டுபிடி
அந்தியோகியாவுக்கு அழைத்துக்கொண்டுவந்தா
௨௬ அப்போ சம்பவித்ததென்னவெனில் அவர்க
ருவருஷகாலமாய்ச் சபையிலே கூடியிருந்து
ணத்தைப் போதித்தார்கள். முதல்முதல் அந்தி
யோகியாவிலேதானே சீஷர்கள் கிறிஸ்தவர்களென்று அழை
க்கப்பட்டார்கள்.

¶ பஞ்சத்திலே கிறிஸ்தவர்கள் யூதேயாவி
லுள்ள சபைக்குத் தருமசகாயம் பண்
ணியனுப்பினது.

௨௭ அந்நாள்களிலே யெருசலேமிலிருந்துத்
தீர்க்கதரிசிகள் அந்தியோகியாவுக்கு வந்தார்கள்.
௨௮ அவர்களில் * அகாபு என்னும் பேர்கொண்
டொருத்தன் எழுந்திருந்து, பூச்சக்கரமெங்குஞ் சாப்பஞ்
வருமென்று ஆவியினாலே குறிப்பாய்க் காட்டினான்
அது அப்படியே கலவுதியுராயனுடைய நாள்களிலே
வந்துசம்பவித்தது. * ௨௧, ௰.
௨௯ ஆனால் * சீஷரில் அவரவர் தங்களாலியன்ற
மாத்திரமாய் யூதேயாவிலே குடியிருக்கிற சகோதரருக்குத் த
ருமசகாயம் பண்ணியனுப்பத் தீர்த்துக்கொண்ட
ார்கள். * ரோ. ௰௫, ௨௬. ௨௭.
௩௰ அப்படியே அவர்கள் செய்து, பர்னபா சவு
லென்கிறவர்கள் கையிலே கொடுத்து மூப்பரண்டை
க்கனுப்பினார்கள்.

## ௰௨. அதிகாரம்.

¶ யாக்கோபு கொல்லப்பட்டதும் பேதுரு
அதிசயமாய்த் தப்பினதும்.

அந்தக்காலத்திலே ஏரோதேராசன் சபையி
லே சிலர்மேலே தீங்குசெய்யக் கையைப்போட

௨ யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபைப் பட்டயத்தினாலே போக்கிவிட்டான்.

௩ இது யூதருக்கு இஷ்டமானதைக் கண்டு, பேதுருவையும் பிடிக்கப் புறந்தொடர்ந்தான். அப்போ புளிப்பில்லா அப்பங்களின் நாட்களாயிருந்தது.

௪ அவனைப் பிடித்துக் காவலிலே வைத்து, நாலுநாலு சேவகர் வசமாய் அவனைக் காக்கும்படி ஒப்புவித்து, பஸ்காவுக்குப் பிற்பாடு அவனைச் சனத்துக்கு முன்பாகக் கொண்டுவர மனதாயிருந்தான்.

௫ அப்படியே பேதுரு காவலிலே காக்கப்பட்டான், சபையினாலே அவனுக்காகப் பராபரனை நோக்கிக் கருத்தாய்ச் செபம்பண்ணப்பட்டது.

௬ ஏரோது அவனை வெளியே கொண்டுவரப் போகிற அந்த ராத்திரியிலேதானே, பேதுரு ரெண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு ரெண்டு சேவகர் நடுவே நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான், கதவுக்கு முன்னிருந்த காவலாளிகளும் வெளியிலே காவலறையைக் காத்தார்கள்.

௭ அப்போ கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான், அறையிலே வெளிச்சமும் பிரகாசித்தது. அவன் பேதுருவின் விலாவிலே தட்டி எழுப்பி: சீக்கிரமாய் எழுந்திருவென்றான். அப்போ சங்கிலிகள் அவன் கைகளை விட்டு விழுந்தது. * ரு, ௧௬.

௮ தூதன் அவனுடனே: அரைக்கட்டி உன் பாதரட்சைகளைத் தொடுத்துக்கொள்ளென்றான். அவன் அந்தப்படி செய்தான். அப்போ அவனுடனே: உன் வஸ்திரத்தைப் போர்த்துக்கொண்டு என் பின்னே செல்லென்றான்.

௯ அவன் புறப்பட்டு அவன் பின்னே சென்று, தூதனாலே செய்யப்பட்டது மெய்யென்றறியாமல், தான் தெரிசனங் காணுகிறதாய் நினைத்தான்.

௰ முதலாம் ரெண்டாங் காவலைக் கடந்த பிற்பாடு, பட்டணத்துக்குப் போகிற இருப்புக் கதவண்டைக்கு வந்தார்கள், அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது. அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள், உடனே தூதன் அவனை விட்டகன்றான்.

௧௧ பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது: கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி என்னை ஏரோதின் கைக்கும் யூதருடைய சனத்தின் எதிர்பார்க்குதல் எல்லாவற்றுக்கும் நீங்கலாக்கிவிட்டாரென்று இப்போ மெய்யாய் அறிந்திருக்கிறேனென்றான்.

௧௨ இப்படி அவனுக்கு விளங்கினபோது, மாற்கென்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான், அவ்விடத்திலே அனேகர் கூடி செபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

௧௩ பேதுரு வாசலின் கதவைத் தட்டினபோது, ரோதேயென்னும் பேர்கொண்ட ஒரு வேலைக்காரி எட்டிக்கேட்க வந்தாள்.

௧௪ அவள் பேதுருவின் சத்தத்தை அறிந்துகொண்டு, சந்தோஷத்தினாலே வாசலைத் திறவாமல், உள்ளே ஓடி: பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறதை அறிவித்தாள்.

௧௫ அவர்கள் அவளுடனே: பித்துக்கொண்டாயென்றார்கள்.

கள். ஆனால் அவள் அது மெய்தானென்று திடப்படுத்தி
னாள். அவர்களோவென்றால்: அது அவனுடைய தூத
னென்றார்கள்.
௰௬ ஆனாலும் பேதுரு பின்னையுந் தட்டிக்கொண்டிரு
ந்தான். அவர்கள் திறந்தபோது அவனைக் கண்டு விஸ்
மித்தார்கள்.
௰௭ அவனோவென்றால் அவர்களைப் பேசாதிருக்கக் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து எப்படி அழைத்துவந்தாரென்பதை அவர்களுக்கு விவரித்து, இதுகளை யாக்கோபுக்குஞ் சகோதரருக்கும் அறிவியுங்களென்று சொல்லி, புறப்பட்டு, வேறே ருஸ்தலத்துக்குப் பயணம்போனான்.
௰௮ * பொழுதுவிடிந்தபோது பேதுரு என்னமானா னென்று சேவகருக்குள்ளே யுண்டான கலக்கங் கொஞ்சமாயிருந்ததில்லை * ௫, ௨௨. ௨௩.
௰௯ ஏரோதேயோவென்றால் அவனைத் தேடிட, காணாமற்போனபோது, காவலாளிகளை நியாயங்கேட்டு அவர்களைக் கொண்டுபோகக் கற்பித்து, யூதேயாவிலிருந்து செசாரியாவுக்கிறங்கிப்போய் அங்கே சஞ்சரித்தான்.

¶ ஏரோதேசுக்கு வந்த சாக்கேடு.

௨௰ ஆனால் ஏரோதே தீரியர் பேரிலுஞ் சீதோனியர் பேரிலும் போருக்கெண்ணமாயிருந்தான். அவர்களோவென்றால் ஒருமனப்பட்டு அவனிடத்துக்கு வந்து, ராசாவின் பிறதானியாகிய பலஸ்துவைச் சம்மதப்படுத்தி, தங்கள் தேசம் ராசாவின் தேசத்தினாலே பிழைக்கிறதனாலே சமாதானங் கேட்டார்கள்.
௨௧ ஆனால் குறித்தநாளிலே ஏரோதே ராசவஸ்திரத்தை உடுத்துக்கொண்டு, நியாயாசனத்தின்மேலுட்கார்ந்து, அவர்களுக்கு வாக்குப்பிரசங்கம்பண்ணினான்.
௨௨ ஜனமோவென்றால்: இது தேவசத்தம், மனுஷ சத்தமல்லவென்று ஆர்ப்பரித்தார்கள்.
௨௩ ஆனால் அவன் பராபரனுக்கு மகிமையைச் செலுத்தாதபடியினாலே, உடனே கர்த்தருடைய தூதனவனை அடித்தான், அதினாலவன் புழுப்புழுத்திறந்தான்.
௨௪ ஆனாலும் பராபரனுடைய வசனம் வளர்ந்து பெருகிற்று.
௨௫ பர்னபாவுஞ் சவுலுமோவென்றால், * தங்கள் ஊழியத்தை நிறைவேற்றினபின்பு, மாற்குவென்னும் மறுபேர்கொண்ட யோவானைக் கூட்டிக்கொண்டு யெருசலேமைவிட்டுத் திரும்பினார்கள். * ௧௧, ௨௯. ௩௰.

## ௧௩. அதிகாரம்.

¶ பர்னபாவும் பவுலுந் தெய்வகற்பனையி னாலனுப்பப்பட்டு, சீப்புறுதீவுக்கு வந்துசெய்த காரியங்கள்.

அந்தியோகியசபையிலோவென்றால் பர்னபாவும் நீகெரென்னப்பட்ட சீமேயோனும், சிரேனே ஊரா

ரான

ராஜுக்கியஹூரக்கியும, காலபாஙகு தேசாதிபதியாகிய ஏ
ரோதேயுடனேகூடவளர்ந்தமானாயீனும, சவுலும
என்கிறசில * தீர்க்கதெரிசிகளுமபோதகருமிருந்தார்
கள. * ௰௧, ௨௭.

௨ அவர்களசபையிலேகர்த்தருக்காராதனைசெய
துஉபவாசிக்கிறபோது, பரிசுத்தஆவியானவர்: * பற
னபாவையும * * சவுலையுமநாம அழைத்த கிரியைக்க
கு அவர்களைநமக்குப்பிரித்தெடுங்கோளென்றார். *
௪, ௩௯. ௩௭. ௰௧, ௨௪. * * ௯, ௰௫.

௩ அப்போ * உபவாசித்துசெபமபண்ணி, * * அவர்
களமேலகைகளைவைத்து, அனுப்பிவிட்டார்கள. *
௰௪, ௨௩. * * ௬, ௬.

௪ அப்படியேவர்களபரிசுத்தஆவியினாலஅனுப
பப்பட்டுசெலுக்கியப்பட்டணத்துக்குவந்து, அங்கேக
ப்பலேறிசீப்பிருதீவுக்குப்போனார்கள.

௫ சாலமியபட்டணத்துக்குவந்தபோதுயூதருடைய
ஆலயங்களிலேபராபரனுடையவசனத்தைப்பிரசங்கித
தார்கள, * யோவானும அவர்களுக்குஉதவியாக
காரனாயிருந்தான. * ௰௨, ௰௨. ௨௫.

௬ அவர்களபாப்போபட்டணமட்டுக்குந்தீவைக
கடந்துவந்தபோது, பர்யேசுவென்னும்பேர்கொண
டயெஸ்த்தமபணக்காரனுங்கள்ளத்தீர்க்கதெரிசியுமா
னஒருயூதனைக்கண்டார்கள.

௭ அவனவிவேகமுள்ளமனுஷனாகியசெர்கியுப
வுலென்கிறப்பிறத்துரையுடனேகூடயிருந்தான, அவ
னபறனபாவையுஞ்சவுலையுமவரவழைத்து, பரா
பரனுடையவசனத்தைக்கேட்கஆசையாயிருந்தான.

௮ ஆனால * யெஸ்த்தமபணக்காரனென்றர்த்தங்கொ
ளளுமபேராயஎலிமாஎன்னப்பட்ட அவனப்பிறத்து
ரையைவிசுவாசத்துக்குவிலக்கப்பிரட்டவகைக்கே
டி, அவர்களோடேதிர்த்துநின்றான. * ௨. மோ. ௭.
௰௧.

௯ பவுலென்றுஞ்சொல்லப்பட்ட சவுலோவெ
னறால, பரிசுத்தஆவியினாலநிறைந்தவனாய அவனமீ
தீலகண்வைத்து:

௰ எல்லாக்கவடுமஎல்லாப்பொல்லாப்புமநி
றைந்தவனே. * பிசாசினமகனே, நீதிக்கெல்லாமப
கைக்குதனே, நீகர்த்தருடையசெம்மையானவழிகளை
ப்பிரட்ட ஓயாயோ. * யோவ. ௮, ௪௪.

௰௧ இப்போதுமஇதோ, கர்த்தருடையகை உனமீதி
லவருவதினாலநீசிலகாலஞ்சூரியனைக்காணுமலகு
ருடனாயிருப்பாயென்றான. உடனே அந்தகாரமுமஇ
ருளுமஅவனமீதிலவிழுந்தது, அவனதிரிந்துகைலா
குகொடுக்கிறவர்களைத்தேடினான.

௰௨ அப்போபிறத்துரைசமபவித்ததைக்கண்டு, க
ர்த்தருடையபோதகத்துக்காகஅதிசயப்பட்டுவிசு
வாசித்தான.

௰௩ ஆனாலபவுலுவுமஅவனனுடனிருந்தவர்க
ளுமபாப்போவைவிட்டுக்கப்பலேறிப்பம்பிலியாவி
லிருக்குமபெர்கேப்பட்டணத்துக்குவந்தார்கள. யோ
வானேவெனில அவர்களைவிட்டுப்பிரிந்து, யெருச
லேமுக்குத்திருமபினான.

¶ அவர்கள் பிசீதிய தேசத்திலுள்ள அந்தியோகியாவிலே சுவிசேஷத்தைப் பிரசங்கித்தது.

௰௪ அவர்களோவெனில் பெர்கேயிலிருந்து புறப்பட்டுப்போய், பிசீதிய தேசத்திலுள்ள அந்தியோகியாவுக்கு வந்து, ஓய்வுநாளிலே ஆலயத்துக்குள்ப் பிரவேசித்து உட்கார்ந்தார்கள்.
௰௫ ஆனாலும் நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகளுமாசமும் வாசிக்கப்பட்டுத் தீர்ந்தபிற்பாடு ஆலயத்துத் தலைவர்கள் அவர்களண்டைக்கு ஆளனுப்பி: சகோதரராகிய புருஷரே, சனத்துக்குப் புத்தியான வார்த்தை உங்களிலுண்டானால் வசனியுங்கோளென்று சொல்லச்சொன்னார்கள்.
௰௬ அப்போ பவுலுழுந்திருந்து கையமர்த்தி, சொன்னதாவது: இஸ்ரவேல் மனுஷரும் பராபரனுக்குப் பயந்தவர்களுமான சனங்களே, கேளுங்கோள்.
௰௭ இந்த இஸ்ரவேல் சனத்துடைய பராபரன் நம்முடைய தாதாக்களைத் தெரிந்துகொண்டு, சனங்களை எகிப்த்துவென்கிற பரதேசத்திலே உயர்த்தி, அதிலிருந்து அவர்களை உயர்ந்த புயத்தினாலே புறப்படப்பண்ணி,
௰௮ நாற்பது வருஷகாலமாய் வனாந்தரத்திலே அவர்கள் நடக்கையைப் பொறுத்திருந்து,
௰௯ கானான் தேசத்திலே ஏழு சாதிகளை அழித்து, அவர்கள் தேசத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகப் பங்கிட்டு.
௨௰ அதற்குப்பிற்பாடு ஏறக்குறைய நானூற்றைம்பது வருஷத்துச் சென்றபின்பு, நியாயாதிபதிகளைச் சாமுவேல் தீர்க்கதரிசிமட்டுக்குங் கட்டளைபண்ணி வந்தார்,
௨௰௧ அதுமுதல் ஒரு ராசாவைக் கட்டளையிடக் கேட்டார்கள். அப்போ பராபரன் அவர்களுக்கு நாற்பது வருஷமாகக் கீசுடைய குமாரனாகிய சவுலென்ற பென்யமீன் கோத்திரபுருஷனைக் கொடுத்தார்.
௨௰௨ அவனை விலக்கிவிட்டபின்பு, தாவீதை அவர்களுக்கு ராசாவாக எழுப்பி: * நம்முடைய இருதயத்துக்கேத்த மனுஷனாகிய ஈசாயின் குமாரன் தாவீதைக் கண்டுபிடித்தோம், இவன் நமக்குச் சித்தமானதுகளெல்லாஞ் செய்வானென்று அவனுக்குச் சாட்சியுங்கொடுத்தார். * ௧. சாமு. ௰௩. ௰௪ ௰௬' ௰௨.
௨௰௩ இவனுடைய * வித்திலே பராபரன் தம்முடைய வாக்குத்தத்தப்படியே இஸ்ரவேலுக்கு யேசுவை ரெட்சகராக எழுப்பினார். * ௨. சாமு. ௭, ௰௨. மத். ௧, ௧.
௨௰௪ இவருடைய பிரவேசத்துக்கு முன்னே யோவான் இஸ்ரவேல் சனத்துக்கெல்லாங் குணப்படுதலின் ஞானஸ்நானத்தைப் பிரசங்கித்தான்.
௨௰௫ ஆனாலும் யோவான் தன் ஓட்டத்தை நிறைவேற்றுகிறபோது: நீங்கள் என்னை ஆரென்று நினைக்கிறீர்கள், * நான் அவரல்ல, இதோ ** என்பின்னாக வருகிறார், அவருடைய பாதரட்சையை அவிழ்க்க நான் பாத்திரவானல்லவென்றான். * யோவ. ௧, ௨௰. ** ஞா. ௩, ௰௬.
௨௰௬ ஆபிரகாம் வங்கிஷப்பிள்ளைகளாகிய சகோதரரான மனுஷரே, உங்களிலே பராபரனுக்குப் பயந்திருக்க

கிறவ

கிறவர்களுமான பேர்களே. உங்களுக்கிந்த ரெட்சிப்
பின வார்த்தை அனுப்பப்பட்டது.

௨௭ ஏனென்றால் யெருசலேமிலே குடியிருக்கிறவர்
களும் அவர்களுடைய தலைவரும் அவரையும் ஓய்வுநாள்
தோறும் வாசிக்கப்படுகிற தீர்க்கதெரிசிகளின் சத்தங்க
ளையும் அறியாதே போய், அவரை ஆக்கினைக்குள்ளா
க்கத் தீர்த்ததினாலே அதுகளை நிறைவேற்றி,

௨௮ மரணத்துக்கு முகாந்தரம் ஒன்றுந் தாங்கள் கா
ணாதிருந்தும் அவரைப் போக்கிவிடப் பிலாத்துவை வே
ண்டிக்கொண்டார்கள்.

௨௯ அவரைக் குறித்தெழுதியிருக்கிறதுகளையெல்
லாம் அவர்கள் முடித்த பிற்பாடோவென்றால், அவரை
மரத்திலிருந்திறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்.

௩௰ ஆனாலும் பராபரன் அவரை மரித்தோரிலிருந்தெ
ழுப்பினார்.

௩௧ அவர் தம்முடனே கலிலேயாவிலிருந்து
யெருசலேமுக்கு வந்தவர்களுக்கு வெகுநா
ளைமட்டாகத் தெரிசனையானார். அவர்கள் சனத்துக்கு அ
வருடைய சாட்சிகளாயிருக்கிறார்கள்.

௩௨ யேசுவை எழுப்பினதினாலே பராபரன் பிதா
க்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தை
அவர்களின் பிள்ளைகளாகிய நமக்கு நிறைவேற்றினா
ரென்று நாங்களும் உங்களுக்குச் சுவிசேஷமாக அறி
விக்கிறோம்.

௩௩ அப்படி * இரண்டாஞ் சங்கீதத்திலும்: நீர் நம
முடைய குமாரனாயிருக்கிறீர், இன்று நாம் உம்மைச் செ
னிப்பித்தோமென்றெழுதியிருக்குது. * சங். ௨, ௭.

௩௪ இனி அழிவுக்குத் திரும்பாதபடிக்கு அவரை மரி
த்தோரிலிருந்தெழுப்பினாரென்கிறதைக் குறித்து: *
தாவீதின் உண்மையான தயவுகளை உங்களுக்குக் கட
ளுவேனென்கிறபிரகாரமாக உரைத்தார். *
யெச. ௫௫, ௩.

௩௫ ஆகையால் வேறே சங்கீதத்திலும்: * உம்மு
டைய பரிசுத்தவானை அழிவைப் பார்க்கவொட்டீரெ
ன்று சொல்லியிருக்குது. * சங். ௰௬, ௰.

௩௬ * தாவீதோவென்றால் தன் காலத்திலே பரா
பரனுடைய சித்தத்துக்கு ஊழியஞ் செய்த பிற்பாடு நித்திரை
அடைந்து, தன் பிதாக்களண்டையிலே சேர்க்கப்பட்
டு, அழிவைக் கண்டான். * ௨, ௨௯.

௩௭ பராபரன் எழுப்பினவரோ அழிவைக் கண்
டதில்லை.

௩௮ ஆகையால் சகோதரரான மனுஷரே, இவர் மூ
லமாய் உங்களுக்கு * பாவமன்னிப்பு அறிவிக்கப்பட்டு
தென்கிறது உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது. * லூ.
௨௪, ௪௭.

௩௯ நீங்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தினா
லெதுகளுக்கு நீங்கி நீதிமான்களாகக் கூடாதிருந்ததோ
அதுகளெல்லாத்துக்கும் விசுவாசிக்கிறவனெல்லாம் இவ
ராலே நீங்கி * நீதிமானாகிறான். * யெச. ௫௩, ௮. ௰௧.

௪௰ இப்போதும் * தீர்க்கதெரிசிகளின் புஸ்தகத்
திலே: * ஆப. ௧, ௫.

௪௧ அசட்டைக்காரரே, நீங்கள் பார்த்து, * ஆச்ச
ரிய

சியமாக, அழியுங்கோள், ஏனென்னில் ஒருத்தன் உங்களுக்கு விபரித்துச் சொன்னாலும் நீங்கள் விசுவாசியாதிருக்கும் ஒரு கிரிகையை நாம் உங்கள் நாளுகளிலே நடப்பிப்போமென்று உரைக்கப்பட்டது உங்கள்மேலே வராதபடிக்குப் பாருங்கோளென்றான். * ஏச.
௨௯, ௯.

௪௨ அவர்கள் யூதருடைய ஜெபாலயத்திலிருந்து புறப்பட்டபோதோவென்னில், இந்த வார்த்தைகள் அதற்கடுத்த ஓய்வுநாளிலே தங்களுக்குச் சொல்லப்பட, புறசாதியார் வேண்டிக்கொண்டார்கள்.

௪௩ ஆனால் ஆலயச்சபைக்கு விடைகொடுக்கப்பட்டபின் யூதரும் யூதமார்க்கத்தை மந்த பத்தியுள்ள பேர்களிலும் அனேகர் பவுலையும் பர்னபாவையும் பின்சென்றார்கள், அவர்களுடனே அவர்கள் பேசி, பராபரனுடைய கிருபையிலே * நிலைகொண்டிருக்க அவர்களைப் போதிவித்தார்கள். * ௰௧, ௨௩.
௰௪, ௨௨.

௪௪ பின்வரும் ஓய்வுநாளிலோவென்றால் கொஞ்சங்குறைய பட்டணத்தார் எல்லாரும் பராபரனுடைய வசனத்தைக் கேட்கக் கூடிவந்தார்கள்.

௪௫ யூதரோவென்னில் கும்புகளைக் கண்டபோது பொறாமையினால் நிறையப்பட்டு, பவுலினால் சொல்லப்பட்டதுகளுக்கு விரோதித்துப் பேசி, தூஷணித்து எதிர்த்தார்கள்.

௪௬ ஆனால் பவுலும் பர்னபாவுந் தயிரியங்கொண்டு, சொன்னதாவது: முந்தி உங்களுக்குப் பராபரனுடைய வசனஞ் சொல்லப்படவேண்டியதாயிருந்தது. நீங்களோவென்னில் அதைத் தள்ளிவிட்டு, உங்களை நீங்களே நித்தியசீவனுக்குப் பாத்திரராகத் தீர்த்துக்கொள்ளாதபடியினாலே, இதோ புறசாதியாரண்டைக்குத் திரும்புகிறோம்.

௪௭ ஏனென்னில்: * நீர் பூமியினுடைய பரியந்தமும் இரட்சிப்பாயிருக்க உம்மைச் சாதிகளின் வெளிச்சமாக வைத்தோமென்னப்பட்டபடியாய் கர்த்தர் எங்களுக்குக் கற்பித்தாரென்றார்கள். * ஏச.
௪௯, ௬.

௪௮ புறச்சாதியார் அதைக் கேட்டுச் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தி, நித்திய சீவனுடைய ஒழுங்குக்கிணங்கின யாவரும் விசுவாசித்தார்கள்.

௪௯ ஆனால் கர்த்தருடைய வசனம் அந்தத் தேசமெங்கும் பிரபலியமாக்கப்பட்டது.

௫௰ யூதரோவென்னில் பத்தியுங்கனமுமுள்ள ஸ்திரீகளையும் பட்டணத்து முதலாளிகளையும் எடுத்துவிட்டு, பவுலுமேலும் பர்னபாமேலுந் துன்பமெழுப்பி, அவர்களைத் தங்கள் எல்லைகளுக்குப் புறம்பாக்கத் துரத்திவிட்டார்கள்.

௫௧ ஆனால் அவர்கள் * தங்கள் கால்களுடைய தூளை அவர்கள்மேல் சாட்சியாக உதறிப்போட்டு, இக்கோனிப்பட்டணத்துக்கு வந்தார்கள். * மத். ௰, ௰௪.

௫௨ சீஷரோவென்னில் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிறையப்பட்டார்கள்.

## ௰௪. அதிகாரம்.

௧ அவர்கள் இக்கோனி, லிஸ்தரா, தெர்பே
என்கிற பட்டணங்களில் சுவிசேஷத்தை
அறிவித்து, அந்தியோகியாவுக்
குத் திரும்பினது.

இக்கோனியில் சம்பவித்ததேதென்றால் அவர்களி
ருவரும் யூதருடைய ஆலயத்துக்குள் பிரவே
சித்து, யூதரிலுங் கிரேக்கரிலுந் திரளான கூட்டம் விசுவாசி
க்கத்தக்கதாய்ப் பேசினார்கள்.
௨ விசுவாசியாத யூதரோ வெளிச் சகோதரருக்கு
விரோதமாகப் புறசாதியாருடைய ஆத்துமங்களை எ
ழுப்பிவிட்டு, பகைப்படப்பண்ணினார்கள்.
௩ ஆனால் அவர்கள் அங்கே வெகுகாலஞ் சஞ்சரித்து,
கர்த்தர்மேல் தயிரியமுள்ளவர்களாய்ப் போதகம்
பண்ணினார்கள். அவர் தம்முடைய கிருபையின் வசனத்து
க்குச் சாட்சிகொடுத்து, * அடையாளங்களும் அற்புத
ங்களும் அவர்கள் கைகளாற் செய்யப்படவரமளி
த்தார். * ௫, ௰௨.
௪ பட்டணத்தினுடைய திரளோ வெளிப்பிரிந்து, சி
லர் யூதரோடுஞ் சிலர் அப்போஸ்தலரோடுஞ் சேர்ந்
திருந்தார்கள்.
௫ ஆனால் அவர்களை நிந்திக்கவுங் கல்லெறியவு
ம், புறசாதியாராலும் யூதராலும் அவர்கள் தலைவ
ராலுங் கூட்ட அமளியுண்டானபோது,
௬ அவர்கள் அதை அறிந்து, லிக்கவோனியாவின் ப
ட்டணங்களாகிய லிஸ்திராவுக்குந் தெர்பேக்கும் அதுக
ளின் சுற்றுப்புறத்துக்கும் * ஓடிப்போய். * மத். ௰, ௨௩.
௭ அங்கே சுவிசேஷத்தை அறிவித்துக்கொண்டிரு
ந்தார்கள்.
௮ ஆனால் லிஸ்திராவிலே, * தன் தாயின் கெற்பத்
திலிருந்து சப்பாணியாய்ப் பிறந்து ஒருக்காலும் நட
வாதிருந்த கால்கள் வழங்காத ஒரு மனுஷன் உட்கார
ந்திருந்தான். * ௩, ௨.
௯ அவன் பவுல் பேசுகிறதைக் கேட்டான். இவன்
அவன்பேரிற் கண்ணோணி, ரெட்சிக்கப்படுவதற்கா
ன விசுவாசம் அவனுக்குண்டென்று கண்டு,
௰ மகா சத்தத்தோடே: * உன் கால்களை ஊன்றி
செவ்வையாய் எழுந்து நில்லென்றான். அப்போ குதி
த்தெழுந்து நடந்தான். * எசா. ௩௫, ௬.
௰௧ கும்புகளோவெனில் பவுல் செய்ததைக்க
ண்டு தங்கள் சத்தத்தை உயர்த்தி, லிக்கவோனிய பா
ஷையிலே: * தேவர்கள் மனுஷரூபாகி நம்மண்டை
க்கிறங்கிவந்தார்களென்று சொல்லி, * ௨௮, ௬.
௰௨ பர்னபாவை யூப்பித்தரென்றும் பவுலை
யோ, அவன் வார்த்தையை நடத்தினபடியினாலே மே
ர்க்கூரியுஎன்றும் அழைத்தார்கள்.
௰௩ அவர்களுடைய பட்டணவெளிமுகத்திலிருந்த யூ
ப்பித்தருடைய பூசாரியோ எருதுகளையும் பூமாலை
களையும் வாசல்வரையிலே கொண்டுவந்து, கும்
புகளோடே கூடப் பலியிடமனதாயிருந்தான்.

௰௪ அப்போஸ்தலராகிய பர்னபாவும் பவுலும் அதைக் கேட்டபோது, தங்கள் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு, கும்பலுக்குள்ளே ஓடி, கூக்குரலிட்டுச் சொன்னதாவது:

௰௫ மனுஷரே, ஏன் இதுகளைச் செய்கிறீர்கள், நாங்களும் உங்களோடொத்த பாடுள்ள மனுஷராயிருந்து, நீங்கள் இந்த வீணான தேவர்களை விட்டு, * வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அதுகளிலுள்ள எல்லாத்தையும் உண்டாக்கின சீவனுள்ள பராபரனிடத்திலே திரும்பவேணுமென்று உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கிறோம். * சங்கீ. ௱௪௬, ௬. அறிவி. ௰௪, ௭.

௰௬ * சென்ற காலங்களில் அவர் எல்லாச் சாதிகளையும் ** தங்கள் தங்கள் வழிகளிலே நடக்கவிட்டிருந்தும், * ௰௭, ௩௰. ** சங்கீ. ௮௧, ௰௩.

௰௭ அவர் நன்மை செய்துவந்து, வானத்திலிருந்து நமக்கு மழைகளையும் செழிக்கிற காலங்களையும் கொடுத்து ஆகாரத்தினாலும் சந்தோஷத்தினாலும் நம்முடைய இருதயங்களை நிரப்பி, தமக்குத் தாம் சாட்சியில்லாதிருந்ததில்லையே என்றார்கள்.

௰௮ இதுகளை அவர்கள் சொல்லியும், கும்பல்களானது தங்களுக்குப் பலியிடாதபடிக்கு அமர்த்துகிறது வெகு அரிதாயிருந்தது.

௰௯ ஆனால் அந்தியோகியாவிலும் இக்கோனியிலுமிருந்து யூதர்கள் அங்கே வந்து கும்பல்களைப் போதித்து, * பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்தானென்று நினைத்து, பட்டணத்துக்கு வெளியே இழுத்தார்கள். * ௨. கொ. ௰௧, ௨௫.

௨௰ ஆனால் சீஷர் அவனைச் சூழ்ந்துகொள்ளுகையில் அவன் எழுந்திருந்து, பட்டணத்துக்குள் பிரவேசித்து, மறுநாளிலே பர்னபாவுடனே கூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப் போனான்.

௨௧ அந்தப் பட்டணத்துக்கு அவர்கள் சுவிசேஷத்தை அறிவித்து, அனேகரைச் சீஷராக்கின பிறபாடு அவர்கள் லிஸ்திராவுக்கும் இக்கோனிக்கும் அந்தியோகியாவுக்குந் திரும்பி,

௨௨ சீஷருடைய ஆத்துமாக்களைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருங்கோளென்றும், * அனேக உபத்திரவங்களின் வழியாய் நாம் பராபரனுடைய ராச்சியத்துக்குள் பிரவேசிக்கவேண்டியதென்றும் புத்தி சொல்லி, * மத். ௰, ௩௮.

௨௩ அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பரைத் தெரிந்துவைத்து, உபவாசித்துச் செபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்து,

௨௪ பிசீதியாவை உருவப்போய், பம்பிலியாவிலே வந்து,

௨௫ பெர்கேயிலே வசனத்தைச் சொல்லி, அத்தாலியா பட்டணத்துக்கு இறங்கிப்போய்,

௨௬ அங்கே கப்பலேறி, தாங்கள் நிறைவேற்றின கிரிகைக்காகப் பராபரனுடைய கிருபையிலே ஒப்புவிக்கப்பட்டு, * புறப்பட்டணமாகிய அந்தியோகியாவுக்கு வந்தார்கள். * ௰௩, ௧—௩.

௨௭ வநதுசேர்நது, சபையைககூடடி, பராபரனத ஙகளோடே கூடியிருநது, ஈததனை பெரியகாரியங களைசசெயதாரெனகிறதையும, அவர்புறசசாதிகளு ககுவிசுவாசததினகதவைததிறநதாரெனகிறதையும அறிவிததார்கள.
௨௮ அஙகேசீஷருடனேகூடவெகுகாலஞசஞசரித திருநதார்கள.

## ௰௫. அதிகாரம்.

¶ அபபோஸததலருமமூபபருமயெருச லேமிலேயாசினைசசஙகங கூடினது.

௧ சிலர்யூதேயாவிலிருநதிறஙகிவநது: * நீஙகளமோ சேயினுடையமுறைமையினபடியேசுனனததடை யாவிடடால, ரடசிககபபடமாடடீர்களெனறுசு கோதரரைபபோதகமபணணினார்கள. * கலா. ௫, ௨—௪.
௨ அவர்களோடே பவுலுககுமபர்னபாவுக குமவெகுவானஎவவாததமுநதறககிபபுமஉணடா னபோது, இநதததறககததினநிமிததியமாகபவுலு மபர்னபாவுமஅவர்களிலவேறேசிலருமயெருச லேமிலிருககிறஅபபோஸததலரணடைககுமமூப பரணடைககுமபோயவரவேணுமெனறு தீர்ததுக கொணடார்கள.
௩ அபபடியேயவர்களசபையினாலவழிவிடடனுப பபபடடுபெனிகேயையுஞசமாரியாவையுமஉருவ பபோய, புறசசாதியாரினமனநதிருமபுதலை அறிவி தது, சகோதரரெலலாருககுமமகாசசநதோஷதை யுணடாககினார்கள.
௪ யெருசலேமுககுவநதுசேர்நதபோதோவெனில, சபையினாலுமஅபபோஸததலராலுமமூபபராலும ஏறறுககொளளபபடடு, பராபரனதஙகளோடே கூடியிருநதுஎததனைபெரியகாரியஙகளைசசெயதார் எனகிறதைஅறிவிததார்கள.
௫ ஆனாலபரிசேயர்சமயததாரிலவிசுவாசிகளான சிலரெழுநதிருநது, அவர்களைசசுனனததுபபணண வுமமோசேயினுடையநியாயபபிரமாணததைககை ககொளளவுஙகறபிககவேணுமெனறார்கள.
௬ ஆனாலஅபபோஸததலருமமூபபருமஇநதககா ரியததைசசிநதிததுபபார்ககககூடினார்கள.
௭ வெகுதறககமஉணடானபோதோவெனறால பேதுருஎழுநதிருநது, அவர்களோடேசொனனதாவ து: சகோதரராகியபுருஷரே, வெகுநாளககளுககுமு னனேஉஙகளிலொருததனாகிய * எனனுடையவாயினாலே புறசசாதியார்சுவிசேஷததினவாரததையைககேடடு விசுவாசிககவுமாக, பராபரனெனனைததெரிந துகொணடிருககிறாரெனகிறதைநீஙகளஅறிநதிருக கிறீர்கள. * ௰, ௪௪—௪௮.
௮ * இருதயஙகளைஅறிநதிருககிறபராபரனஅவர் களுககுசசாடசிதநது, நமககுமஅவர்களுககும ** ஒரு

வித

வித்தியாசம்பண்ணாமல், நமக்குக் கொடுத்தது போல அவர்களுக்கும் பரிசுத்த ஆவியைக் கொடுத்து, * சங்கீ. ௭, ௰. ** ௰, ௩௪. ௩௫.

௯ விசுவாசத்தினாலே அவர்களுடைய இருதயங்களைச் சுத்தமாக்கினார்.

௰ இப்போது நம்முடைய பிதாக்களாகிலும் நாங்களாகிலும் சுமக்கக்கூடாதிருந்த நுகத்தடியைச் சீஷர்கழுத்தின்மேல் வைக்கிறதினாலே நீங்கள் பராபரனைச் சோதிப்பானேன்.

௰௧ கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் * கிருபையினாலே ரட்சிக்கப்படுவோமென்று விசுவாசிக்கிறோம், அவர்களும் அந்தப்படி ரட்சிக்கப்பட்டார்களென்றான். * எபே. ௨, ௮. ௯.

௰௨ அப்போது திரளானவெல்லாரும் அமர்ந்திருந்து, பறனபாவும் பவுலும், தங்களைக் கொண்டு பராபரன் எத்தனை பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் புறசாதிகளிடத்திலே செய்தாரென்று விபரித்துச் சொல்லுகிறதைக் கேட்டார்கள்.

௰௩ அவர்கள் பேசி அமர்ந்தபிறபாடே வென்றால் யாக்கோபு உத்தரஞ் சொல்லி, உரைத்ததாவது: சகோதரரான புருஷரே, என்னைக் கேளுங்கோள்.

௰௪ பராபரன் முந்திப் புறசாதியாரிலே ஒரு சனத்தைத் தம்முடைய நாமத்துக்காகச் சேர்த்துக்கொள்ள நோக்கிப்பார்த்தவகையைச் சீமோன் சொன்னானே.

௰௫ இதற்குத் தீர்க்கதெரிசிகளுடைய வசனங்களும் ஒத்திருக்குது.

௰௬ குறைமனுஷர் நம்முடைய நாமம் விளங்கிய சகல சாதிகளுங் கர்த்தரைத் தேடும்படிக்கு,

௰௭ நான் இதற்குப்பிறபாடு திரும்பிவந்து, விழுந்த தாவீதினுடைய கூடாரத்தைத் திரும்பக் கட்டி, அதின் இடிந்தவைகளைத் திரும்பக் கட்டி, அதைத் திரும்பச் செவ்வையாய் நிறுத்துவேனென்று இதுகளெல்லாஞ் செய்கிற கர்த்தர் சொல்லுகிறாரென்கிறதாய் * எழுதியிருக்குது. * ஆமோ. ௯, ௰௧. ௰௨.

௰௮ அனாதிகாலமுதலாய் பராபரனுக்கு அவருடைய கிரிகைகளெல்லாந் தெரிந்திருக்குது.

௰௯ ஆகையினாலே புறசாதிகளில் பராபரனண்டைக்கு மனந்திரும்புகிறவர்களைக் கலங்கப்பண்ணாமல்,

௨௰ விக்கிரகங்களுடைய அசுசங்களுக்கும் வேசித்தனத்துக்கும், நெருக்குண்டு செத்ததுக்கும் இரத்தத்துக்கும் விலகியிருங்கோளென்று அவர்களுக்கு எழுதவேணுமென்று நான் தீர்க்கிறேன்.

௨௧ ஏனெனில் பூறுவகாலந்துவக்கிச் சகல பட்டணங்களிலும் மோசேயின் ஆகமங்களைப் பிரசங்கிக்கிறவர்களுண்டு, ஓய்வுநாள்தோறும் அதுகள் ஆலயங்களிலே வாசிக்கப்படுமென்றான்.

௨௨ அப்போதுங்களிலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குச் சகோதரருக்குள்ளே எண்ணிக்கைப்பட்டவர்களுமான மனுஷராகப் பற்சபாவென்னும் பேர்கொண்ட யூதாவையுஞ் சீலாவையும், பவுலோடும் பறனபாவோடுங்கூட அந்தியோகியாவுக்கனுப்ப அப்போஸ்தலருக்கும் மூப்பருக்குஞ் சபையனைத்துக்கும் நன்றாய்க்கண்டுது.

௨௩ அவர்கள் இவர்கள் கையிலே எழுதியனுப்பின
தாவது: அந்தியோகியாவிலுஞ் சீரியாவிலுஞ் சிலிசி
யாவிலுமிருக்கும் புறசாதியாரான சகோதரருக்கு
அப்போஸ்தலரும் மூப்பருஞ் சகோதரருமாகிய நா
ங்கள் சந்தோஷமுண்டாக வாழ்த்துகிறோம்.
௨௪ நாங்கள் கற்பனைகொடாதிருக்கச் சிலர் எங்களி
டத்திலிருந்து புறப்பட்டு, உங்களை வார்த்தைகளால
கலைத்து, சுன்னத்தடையவும் நியாயப்பிரமாணத்தைக்
கைக்கொள்ளவுஞ் சொல்லி, உங்கள் ஆத்துமங்க
ளைத் தள்ளாடப்பண்ணினார்களென்று நாங்கள் கே
ட்டபடியினாலே,
௨௫ நாங்கள் தங்கள் ஆத்துமங்களை நம்முடைய கர்
த்தராகிய யேசுக்கிறீஸ்துவின் நாமத்துக்காக ஒப்புக்கொ
டுத்த மனுஷருமாங்களுக்குப் பிரியருமான பற்னபா
வோடும் பவுலோடுங்கூட.
௨௬ தெரிந்துகொள்ளப்பட்ட பேர்களை உங்களி
ண்டைக்கனுப்ப, ஒருமனப்பட்டுக் கூடினோங்களு
க்கு நன்றாய்க்கண்டது.
௨௭ ஆகையினாலே யூதாவையுஞ் சீலாவையும் அனு
ப்பினோம், அவர்கள் வாய்ச்சொல்லாகவும் அறிவிப்
பார்கள்.
௨௮ எதெனில், விக்கிரகங்களுக்குப் படைத்ததுக
ளும் இரத்தமும் நெருக்குண்டு செத்ததும் வேசித்தனமு
மே இவைகள் விலகியிருக்க வேண்டியதுகள். இதுகளை
யொழிய வேறே அதிகமான பாரமொன்றும் உங்கள் மீதி
லே போடாதிருக்க, பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் ந
ன்றாய்க்கண்டது.
௨௯ இதுகளுக்கு நீங்கள் உங்களை விலக்கமாய்க்கா
த்தால் நன்றுசெய்வீர்கள். சுகமாயிருங்கோளெ
ன்றெழுதினார்கள்.
௩௰ அப்படி அவர்கள் அனுப்பிவிடப்பட்டு, அந்
தியோகியாவுக்குவந்து, திரளைக்கூட்டி நிருபத்தையொ
ப்பிவித்தார்கள்.
௩௧ அவர்கள் அதைவாசித்து அந்த தேற்றரவுக்
காகச் சந்தோஷப்பட்டார்கள்.
௩௨ ஆனால் யூதாவுஞ் சீலாவுந் தாங்களுந் தீர்க்கதரி
சிகளாயிருந்தபடியினாலே, வெகுவசனத்தினாலே சகோ
தரருக்கறிவுசொல்லி, அவர்களைத் திடப்படுத்தி,
௩௩ சிலகாலம் அங்கேயிருந்து, பின்பு சகோதர
ராலே சமாதானத்துடனே அப்போஸ்தலரண்டைக்க
னுப்பிவிடப்பட்டார்கள்.
௩௪ ஆனால் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நன்
றாய்க்கண்டது.
௩௫ பவுலும் பற்னபாவுமோவென்றால் அந்
தியோகியாவிலே சஞ்சரித்து, வேறே அநேகரோடுங்
கூடக் கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து, சுவிசேஷ
மாய்ப்பிரசங்கித்துக்கொண்டிருந்தார்கள்.

## ¶ பவுலுக்கும் பற்னபாவுக்கும் வந்த பிரிவினை.

௩௬ சிலநாளுக்குப் பிற்பாட்டோவென்றால் பவுலு
பற்ன

பற்னபாவுடனே: நாம் கர்த்தருடைய வசனத்தை அறிவித்த சகல பட்டணத்திலுமுள்ள நம்முடைய சகோதரர் எப்படியிருக்கிறார்களென்று திரும்பப் போய்க் கண்டு சந்திப்போமென்றான்.

௩௭ அப்போது பற்னபா * மாற்குவென்னப்பட்ட யோவானைக் கூட அழைத்துக்கொள்ள ஆலோசனைசொன்னான். * ௰௨, ௰௨. ௰௩, ௫.

௩௮ பவுலோவென்றால், * பம்பிலியாவிலே தங்களைவிட்டுப்பிரிந்து, தங்களுடனேகூட கிரியைக்குவராமல் போனவனை அழைத்துக்கொள்ளாதிருக்கிறது நியாயமென்றெண்ணினான். * ௰௩. ௰௩.

௩௯ அப்போ அவர்களொருத்தரொருத்தர்விட்டுப்பிரியவும், பற்னபா மாற்குவைக்கூட்டிக்கொண்டு சீப்பிருதீவுக்குக் கப்பலேறிப் போகவுந் தக்கதாயா யக்கடுங்குறையுண்டாச்சுது.

௪௰ பவுலோவென்றால் சீலாவைத் தெரிந்துகொண்டு, சகோதரராலே பராபரனுடைய கிருபைக்கு ஒப்புவிக்கப்பட்டு, புறப்பட்டு,

௪௧ சூரியாவையுஞ் சிலிசியாவையும் உருவ நடந்து, சபைகளைத் திடப்படுத்தினான்.

## ௰௬. அதிகாரம்.

¶ பவுலும் அப்படியே சின்னஆசியாவிலே பயணம்பண்ணினது.

பின்பு தெர்பேக்கும் லீஸ்திராவுக்கும் வந்தான். அங்கே விசுவாசியான ஒரு யூதஸ்திரீக்கும் கிரேக்கனுக்கும் குமாரனாகிய * தீமோத்தேயுவென்னப் பேர்கொண்ட ஒரு சீஷன் அங்கேயிருந்தான். * ௧. தீமோ. ௧, ௨.

௨ அவனுக்கு லீஸ்திராவிலும் இக்கோனியிலுமிருக்கிற சகோதரராலே நற்சாட்சிகொடுபட்டது.

௩ அவன் தன்னுடனே புறப்படும்படி, பவுலுமனதுள்ளவனாயிருந்து, அவனைச் சேர்த்துக்கொண்டு, அவ்விடங்களிலிருக்கும் யூதர் நிமித்தியமாய்ச் சுன்னத்துப்பண்ணினான், ஏனென்றால் அவனுடைய தகப்பன் கிரேக்கனாயிருந்தானென்று எல்லாரும் அறிந்திருந்தார்கள்.

௪ அவர்கள் பட்டணங்களை உருவப்போகையில், யெருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலுந்தீர்ந்த * சட்டங்களைக் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கொப்பிவித்தார்கள். * ௰௫, ௨௰.

௫ ஆகையால் சபைகள் விசுவாசத்திலே திடப்பட்டு, திரளாக நாளுக்குநாள் பெருகிறது.

௬ அவர்கள் பிறிகியா கலாத்தியா தேசங்களை உருவப்போனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லப் பரிசுத்த ஆவியால் தடைபண்ணப்பட்டு,

௭ மிசியதேசத்துக்கு வந்து, பித்தினிய தேசத்துக்குப் போகப்பார்த்தார்கள், ஆனால் ஆவியானவர் அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.

அ.

௮ அப்போமிசியாவைக் கடந்துபோய், துரோவாவுக்கு இறங்கிவந்தார்கள்.

௨ மக்கெதோனியதேசத்துப் பிலிப்பிப் பட்டணத்திலே நடந்த செய்திகள்.

௯ ராத்திரியிலே பவுலுக்கொரு தெரிசனங் காணப்பட்டது, என்னவெனில், மக்கெதோனிய மனுஷனொருத்தன் வந்து நின்று: நீ மக்கெதோனியாவிலே வந்து எங்களுக்கொத்தாசை செய்யென்று அவனை வேண்டிக்கொள்ளுகிறதாயிருந்தது.
௰ அவன் அந்தத் தெரிசனத்தைக் கண்டபோதோவென்றால், கர்த்தர் எங்களை அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க வரவழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போகப்பார்த்து,
௰௧ அப்படியே துரோவாவை விட்டுக் கப்பலேறி, சாமோத்திராக்கே தீவுக்கும் மறுநாள் நெயாப்போலிசுக்கும் நேராயோடி,
௰௨ அங்கேயிருந்து மக்கெதோனியதேசத்தின் தலையானதும் றோமர் குடியேறினதுமான பிலிப்பிப் பட்டணத்துக்கு வந்தோம். அந்தப் பட்டணத்திலே சில நாளாச் சஞ்சரித்திருந்தோம்.
௰௩ ஓய்வுநாளிலே பட்டணத்துக்கு வெளியே புறப்பட்டுப்போனோம், அவ்விடத்திலே ஜெபம்பண்ணப் பழக்கமாயிருந்தது. அங்கே நாங்கள் உட்கார்ந்து, வந்துகூடின ஸ்திரீகளுடனே பேசினோம்.
௰௪ அப்போது தியாத்திராஊராளும் இரத்தாம்பரம் விற்கிறவளுமாகிய லீதியாளென்று பேர்கொண்ட தேவபத்தியுள்ள ஒரு ஸ்திரீ கேட்டுக்கொண்டிருந்தாள், அவளிருதயத்தைக் கர்த்தர் பவுலினாலே சொல்லப்பட்டதுகளைக் கவனிப்பதற்குத் திறந்தார்.
௰௫ அவளும் அவள் வீட்டாரும் ஞானஸ்நானம் பெற்றபின்பு அவள்: நீங்கள் என்னைக் கர்த்தருக்கு விசுவாசியானவளென்றெண்ணினால், என் வீட்டிலே வந்து தங்கியிருங்களென்று எங்களை வருந்திக்கொண்டிருந்தாள்.
௰௬ ஆனால் நாங்கள் ஜெபத்துக்குப் போகையிலே சம்பவித்ததென்றால், பீத்தோ தேவனுடைய ஆவியைக்கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினாலே தன் எஜமானருக்கு * வெகு ஆதாயத்தை உண்டாக்கின ஒரு வேலைக்காரி எங்களுக்கெதிர்ப்பட்டாள். * ௰௯. ௨௪.
௰௭ இவள் பவுலையும் எங்களையும் பின்சென்று: * இந்த மனுஷர் உங்களுக்கு இரட்சிப்பின் வழியை அறிவிக்கிறவர்களாகிய உன்னதமான பராபரனுடைய ஊழியக்காரரென்று கூப்பிட்டாள். * மாற்கு. ௧. ௨௪. ௨௫.
௰௮ இப்படி அநேக நாளாய்ச் செய்தாள். ஆனால் பவுல் மனமடிவாகி, திரும்பிப் பார்த்து, ஆவியுடனே: நீ அவளை விட்டுப் புறப்பட உனக்கு யேசுக்கிறிஸ்த

துவி

துவினுடைய நாமத்தினாலே கற்பிக்கிறேனென்றான், அந்நேரமே அது புறப்பட்டுப்போச்சுது.

௰௯ ஆனால் அவளுடைய சேமான்கள் தங்கள் ஆதாயத்து நம்பிக்கை போச்சுதென்று கண்டு, பவுலையுஞ் சீலாவையும் பிடித்து, சந்தைவெளிக்குத் தலைவரண்டையிலேயிழுத்து,

௨௰ அவர்களை அதிகாரிகளண்டைக்குக் கொண்டுவந்துவிட்டு: இந்த மனுஷர் யூதராயிருந்து நம்முடைய பட்டணத்தைக் கலங்கப்பண்ணி,

௨௰௧ ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவுஞ் செய்யவுந்தகாத முறைமைகளை அறிவிக்கிறார்களென்றார்கள்.

௨௰௨ அப்போ கும்பு அவர்களுக்கு விரோதமாய்க் கூடியெழும்பிற்று, அதிகாரிகளோவென்றால் அவர்கள் வஸ்திரங்களைக் கிழித்துப்போட்டு, அவர்களை அடிக்கச்சொல்லி,

௨௰௩ வெகு அடிகளாய் அவர்களை அடித்தபிற்பாடு, சிறைச்சாலையிலே வைத்து, அவர்களைப் பத்திரமாய்க் காக்கச் சிறைச்சாலைக்காறனுக்குக் கற்பித்தார்கள்.

௨௰௪ அவன் அப்படிப்பட்ட கற்பனையை அடைந்தபிற்பாடு, அவர்களை உள்ளுக்குள்ளான காவலறையிலே போட்டு, அவர்கள் கால்களைத் தொழுவடித்து வைத்தான்.

௨௰௫ ஆனால் நடுச்சாமத்திலே பவுலுஞ் சீலாவுஞ் செபம்பண்ணி, * பராபரனைத் துதித்துப் பாடினார்கள், கட்டுண்டுக்கிடக்கிறவர்கள் கேட்டுக்கொண்டிருந்தார்கள். * ௫, ௪௧.

௨௰௬ அசப்பிலே (?) சிறைச்சாலையின் அஸ்திவாரங்கள் அசையும்படியாக மகா பூமியதிர்ச்சல் உண்டாய், உடனே * கதவுகளெல்லாந் திறவுண்டு, எல்லாருட (?) கட்டுகளும் அவிழ்ந்துபோச்சுது. * ௫, ௰௯.

௨௰௭ சிறைச்சாலைக்காறனேவெனில் நித்திரைதெளிந்து (?), சிறைச்சாலையின் கதவுகள் திறந்திருக்கிறதைக் கண்டு, கட்டுண்டவர்கள் ஓடிப்போனார்களென்றெண்ணி, பட்டயத்தை உருவி, தன்னைப் போக்கிக்கொள்ளப்போனான்.

௨௰௮ ஆனால் பவுல் மகா சத்தத்துடனே: நீ உனக்குக் கேடொன்றுஞ் செய்யாதே, ஏனென்றால் எல்லாரும் இங்கேயிருக்கிறோமென்று கூப்பிட்டான்.

௨௰௯ அப்போ அவன் வெளிச்சங்களை அழைப்பித்து, உள்ளே ஓடி, நடுக்கமடைந்தவனாய்ப் பவுலுக்குஞ் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,

௩௰ அவர்களை வெளியே அழைத்து வந்து: ஆண்டவமாரே, நான் ரட்சிக்கப்படுவதற்குச் செய்யவேண்டியதென்னவென்றான்.

௩௰௧ அவர்களோவென்றால்: * கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவின் பேரிலே விசுவாசி, அப்போ நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்களென்று சொல்லி, *
யோவ. ௩, ௰௬.

௩௰௨ அவனுக்கும் அவன் வீட்டிலிருந்தவர்கள் எல்லாருக்குங் கர்த்தருடைய வசனத்தைச் சொன்னார்கள்.

௩௩,

௩௩ அவன் அவர்களை அந்நேரத்திலே சேர்த்துக்கொண்டு, அடிகளைக் கழுவி, அவனும் அவனுடையவர்களெல்லாரும் உடனே ஞானஸ்நானம்பெற்று,

௩௪ அவர்களைத் தன் வீட்டுக்கு அழைத்துப்போய், பந்தியமர்த்தி; தன் வீட்டாரெல்லாரோடுங்கூடப் பராபரனை விசுவாசித்துப் பூரித்தான்.

௩௫ பொழுதுவிடிந்தபோது சேவகரை, அதிகாரிகள் தலையாரிகளை அனுப்பி: அந்த மனுஷரை விட்டுவிடென்று சொல்லச்சொன்னார்கள்.

௩௬ அப்பொழுது சிறைச்சாலைக்காரன் இந்த வார்த்தைகளைப் பவுலுக்கு அறிவித்து: நீங்கள் விடுதலையாகும்படி அதிகாரிகள் சொல்லியனுப்பினார்கள், ஆகையால் நீங்கள் இப்பொழுது புறப்பட்டு, சமாதானத்துடனே போங்களென்றான்.

௩௭ ஆனால் பவுல் அவர்களுடனே: நியாயம் விசாரிக்கப்படாதவர்களும் ரோமமனுஷருமான எங்களை வெளியரங்கமாய் அடித்துச் சிறைச்சாலையிலே போட்டார்கள், இப்போ எங்களை ரகசியமாய்த் துரத்திவிடுகிறார்களோ; அப்படியல்ல, அவர்களே வந்து எங்களை வெளியே அழைத்துப்போய் விடட்டுமென்றான். * ௨௨, ௨௫.

௩௮ அப்பொழுது சேவகர் இந்த வார்த்தைகளை அதிகாரிகளுக்கு அறிவித்தார்கள். ரோமராயிருக்கிறார்களென்று அவர்கள் கேட்டபோது பயந்து,

௩௯ வந்து அவர்களுடனே பேசி, அவர்களை வெளியே அழைத்துவந்து, * பட்டணத்தைவிட்டுப் புறப்பட்டுப்போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். * மத. ௮, ௩௪.

௪௰ ஆனால் அவர்கள் சிறைச்சாலையிலிருந்து புறப்பட்டு லீதியாளுடைய வீட்டுக்குப்போய், சகோதரரைக் கண்டு அவர்களுக்கு ஆறுதல்சொல்லி, புறப்பட்டுப் போனார்கள்.

## ௰௭. அதிகாரம்.

### ¶ தெசலோனிக்கேபட்டணத்திலே நடந்த காரியம்.

அவர்கள் அம்பிப்பொலிபட்டணத்தையும் அப்பொலோனியபட்டணத்தையும் கடந்துபோய், யூதருடைய ஆலயமிருக்கும் * தெசலோனிக்கேக்கு வந்தார்கள். * ௧. தெச. ௨, ௧. ௨.

௨ பவுல் தன் பழக்கத்தின்படியே அவர்களண்டைக்குள் பிரவேசித்து, மூன்று ஓய்வுநாள்களிலே வேதவாக்கியங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்து,

௩ * கிறிஸ்து பாடுபட்டு மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவேண்டியதாயிருந்ததென்றும், நான் உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்துவென்றும் திருஷ்டாந்தஞ்சொல்லி ருசுப்பிவித்தான். * லூக். ௨௪, ௪௬. ௪௭.

௪ அவர்களில் சிலரும் பக்தியுள்ள கிரேக்கருடைய

வெகு

வேத்திரரும் அனேகம்பற்றான ஸ்தத்திரீகளும் விசுவாசமுள்ளுடந்து, பவுலோடுஞ் சீலாவோடுஞ் சேர்த்திக்கையானார்கள்.

௫ ஆனால் விசுவாசியாத யூதர் வயிராக்கியமாகி, வீணரில் சில பொல்லாத மனுஷரைச் சேர்த்துக்கொண்டு, கும்புகூட்டி, பட்டணத்தை அமளிபண்ணி, யாசோனுடைய வீட்டுக்குள்ளே பாய வந்து நின்று, அவர்களைக் கும்புக்குள் கொண்டுவரவகைத் தேடினார்கள்.

௬ அவர்களைக் காணாமல் போனபோதோவென்றால், யாசோனையுஞ் சில சகோதரரையும் பட்டணத்துத் தலைவரண்டை இழுத்துவந்து: லோகத்தைக் கலக்கிறவர்களவர்களானவர்கள், இங்கேயும் வந்திருக்கிறார்கள். • ௰௬, ௨௰.

௭ அவர்களை யாசோன் ஏற்றுக்கொண்டான், இவர்களெல்லாரும் யேசுவென்கிற வேறொரு ராசாவுண்டென்று சொல்லி, ராயனுடைய கட்டளைகளுக்கு விரோதமாய்ச் செய்கிறார்களென்று கூப்பிட்டு,

௮ இதுகளைக் கேழ்விப்படுகிற கும்பையும் பட்டணத்துத் தலைவரையுங் கலங்கப்பண்ணினார்கள்.

௯ இவர்கள் யாசோனையும் மற்றவர்களையும் பிணைவாங்கிக்கொண்டு, அவர்களை விட்டுவிட்டார்கள்.

## ¶ பெரேயப்பட்டணத்தில் நடந்த காரியம்.

௰ ஆனால் சகோதரர் உடனே ராத்திரியிலே பவுலையுஞ் சீலாவையும் பெரேயாவுக்கனுப்பிவிட்டார்கள். அவர்கள் அங்கே வந்துசேர்ந்து, யூதருடைய ஆலயத்துக்குப் போனார்கள்.

௰௧ இவர்கள் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்து, எல்லா மனப்பூர்வத்தோடும் வசனத்தை ஏற்றுக்கொண்டு, தினம் வேதங்களில் இதுகள் இப்படி இருக்குமோவென்று • ஆராய்ந்தார்கள். • யோவ. ரு, ௩௯.

௰௨ அப்படியே அவர்களில் வெகுபேரும், கனமுள்ள அனேகங் கிரேக்க ஸ்திரீகளும் புருஷரும் விசுவாசித்தார்கள்.

௰௩ ஆனால் பெரேயாவிலும் பராபரனுடைய வசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதைத் தெசலோனிக்கேயாரான யூதர் அறிந்தபோது, அங்கேயும் வந்து கும்புகளை எடுத்துவிட்டார்கள்.

௰௪ அப்போ உடனே சகோதரர் பவுலைச் சமுத்திரத்தின்மேலே போறவனைப்போலே கொண்டுபோய், அனுப்பிவிட்டார்கள். ஆனால் சீலாவுந் தீமோத்தேயும் அங்கேயிருந்துவிட்டார்கள்.

## ¶ அத்தேனேப்பட்டணத்தில் நடந்த காரியம்.

௰௫ பவுலை வழிவிட அழைத்துப்போனவர்களோவென்றால் அவனை அத்தேனேமட்டும் அழைத்துப்போய், சீலாவுந் தீமோத்தேயும் அதிசீக்கிரத்தோடே அவனண்டைக்கு வரவேணுமென்றவர்களுக்குச் சொல்லக்

கட்பிணைபெற்று, புறப்பட்டுப்போனார்கள்.
௰௬ அத்தேனேயிலே பவுல் அவர்களுக்குக் காத்திருக்கும்போதேவெனில், பட்டணமேவிக்கிரகங்களால் நிறைந்திருக்கிறதைக் காண்கிறதினாலே அவனுடைய ஆவி அவனுக்குள்ளே கடுங்குறைவடைந்தது,
௰௭ ஆகையால் ஆலயத்திலே யூதரோடும் பத்தியுள்ளவர்களோடுஞ் சந்தைவெளியிலெதிர்ப்பட்டவர்களோடு நித்தினஞ் சம்பாஷித்தான்.
௰௮ ஆனாலெப்பிக்கூறருமஸ்தோயிக்கருமான ஞானிகளிற் சிலர் அவனோடே வாக்குவாதம்பண்ணி, சிலர்: இந்த வாயாடி என்னபேசப்போகிறானென்றார்கள். சிலரோ: அன்னியதேவர்களை அறிவிக்கிறவனாகக் காணப்படுகிறானென்றார்கள். ஏனெனில் யேசுவையும் உயிர்த்தெழுந்திருத்தலையும் அவர்களுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தான்.
௰௯ அவனை மார்ஸ்தேவனுடைய மேட்டுக்கு அழைத்துக்கொண்டுபோய்: உன்னாலே சொல்லப்படுகிற இந்தப்புதிதான உபதேசம் இன்னதென்று நாங்கள் அறியலாமோ,
௨௰ ஏனெனில் நீ சில நவமான காரியங்களை எங்கள் செவிகளில் விழப்பண்ணுகிறாய், ஆகையாலவைகள் என்னவென்கிறதை அறியமனதாயிருக்கிறோமென்றார்கள்.
௨௧ ஏனெனில் அத்தேனேயரனைவரும் அங்கே வந்து தங்கின பரதேசத்தாரும், நவமான யாதொரு காரியத்தைச் சொல்லுகிறதிலுங் கேட்கிறதிலுமே ஒழிய வேறொன்றிலும் பொழுதுபோக்க அவர்களுக்கு மனசு வராதிருக்கும்.
௨௨ பவுலோவெனில் மார்ஸ் மேட்டிலே நின்றுகொண்டு சொன்னதாவது: அத்தேனேமனுஷரே, எல்லாக்காரியங்களிலும் உங்களுக்குத் தேவதாபக்திமெத்தவுண்டாகக் காண்கிறேன்.
௨௩ ஏனெனில் நானுருவநடந்துவந்து, உங்கள் ஆராதனைகளை நோக்கிப்பார்த்தபோது, ஒரு பீடத்தைக் கண்டேன், அதின்மேல்: அறியாத தேவனுக்கென்றெழுதியிருந்தது, அப்போது நீங்கள் அறியாமல் பணிகிறவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்.
௨௪ லோகத்தையும் அதிலுள்ளதெல்லாத்தையும் உண்டாக்கின பராபரனானவர், தாமே வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவராயிருக்கக்கொள்ள, கைவேலைகளாற் கோவில்களில் வாசமாயிருக்கிறதில்லை.
௨௫ எல்லாருக்குஞ் சீவனையுஞ் சுவாசத்தையுஞ் சகலத்தையுங் கொடுக்கிற அவர், * தமக்கு யாதொன்று தேவையானதுபோல, மனுஷர் கைகளாலே பணிவிடை கொள்ளுகிறதுமில்லை. * சங். ௫௰, ௪—௰௩.
௨௬ அவர் ஒரே இரத்தத்தினாலே மனுஷசாதியையெல்லாம் பூமியெங்குங் குடியிருக்கப்பண்ணி,
௨௭ அவர்கள் கர்த்தராகிய தம்மைத் தேடி, தடவியாகிலும் பிடிக்கத்தக்கதாக, முன்னிறணிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பெல்லைகளையுங் குறித்தார். அவரோவெனில் நம்மிலொருத்தருக்குந் தூரமானவரல்ல.

௨௮ ஏனெனில் அவருக்குள் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம். உங்களிலே சிலவித்துவான்களும்: அவருடைய வம்சமாயிருக்கிறோமென்கிறதாகச் சொன்னார்களே.

௨௯ அப்போது நாம் பராபரனுடைய வம்சமாயிருக்கக்கொள்ள, * தெய்வம் மனுஷனுடைய சித்திரவேலையுந்தோற்றமுமான பொன்னுக்காகிலும் வெள்ளிக்காகிலுங் கல்லுக்காகிலும் ஒப்பானதென்று நாம் நினைக்கலாகாது. * யெச. ௪௰, ௰௮.

௩௰ * அறியாமையின் காலங்களிலே பராபரன் கண்சாடையாயிருந்தார், இப்போதோவெனில் சற்குணப்படவேணுமென்று எங்குமுள்ள எல்லா மனுஷருக்கும் ** கற்பிக்கிறார். * ௰௪, ௰௬. ௰௭. ** லூ. ௨௪, ௪௭.

௩௧ ஏனெனில் தாம் நேமித்த புருஷனைக்கொண்டு பூச்சக்கரத்தை நீதியாய் நியாயந்தீர்க்கப்போகிற ஒருநாளை அவர் குறித்திருந்து, அதின் நிச்சயத்தை அவனை மரித்தோரிலிருந்தெழுப்பினதினாலே எல்லாருக்கும் விளங்கப்பண்ணுகிறாரென்றான்.

௩௨ அவர்கள் மரித்தோருடைய உயிர்த்தெழுந்தலைச் சொல்லக்கேட்டபோதோவென்றால் சிலர் உக்ருபித்தார்கள், சிலரோவெனில்: பின்னொருவேளை யிதைக்குறித்து உன்னைக்கேட்போமென்றார்கள்.

௩௩ அப்படியே பவுலு அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப்போனான்.

௩௪ ஆனாலுஞ்சில மனுஷர் அவனுக்குச்சேர்க்கையாகி விசுவாசித்தார்கள், அவர்களில் தியோனீசியுவென்ற ஒரு அதிகார புருஷனும் தாமாரென்றபேருள்ள ஒரு ஸ்திரீயும் அவர்களுடனேகூட வேறே சிலருமிருந்தார்கள்.

## ௰௮. அதிகாரம்.

¶ கொரிந்து பட்டணத்தில் நடந்த செய்திகள்.

இதற்குப்பிறபாடே பவுலு அத்தேனையை விட்டு, கொரிந்துவுக்கு வந்து,

௨ கலவுத்தியு யூதரெல்லாரையும் றோமாபுரியைவிட்டுப்போகக் கற்பித்தபடியினாலே இத்தாலியாவிலிருந்து நவமாய்வந்திருந்த ஆக்கிலாவென்னும் நாமமுள்ள பொந்துதேசத்தானாகிய ஒரு யூதனையும் அவனுடைய பெண்சாதியாகிய பிரிஸ்கில்லாளையும் அங்கே கண்டு, அவர்களண்டைக்குப்போய்,

௩ தான் அவர்களோடே ஒத்த தொழிலாளியானபடியினாலே அவர்களிடத்திலே தங்கி * வேலை செய்தான், ஏனெனில் கூடாரம் பண்ணுகிற தொழிலாளிகளாயிருந்தார்கள். * க. கொ. ௪, ௰௨.

௪ ஆனாலு ஓய்வுநாள்தோறும் ஜெபாலயத்திலே சம்பாஷித்து, யூதரையுங்கிரேக்கரையும் போதித்தான்.

௫ மக்கெதோனியாவிலிருந்து சீலாவுந்தீமோத்தேயும் வந்தபோதோவெனில், பவுலு ஆவியிலே நெருக்கப்பட்டு, யேசுவே கிறிஸ்துவென்று யூதருக்குத் திட்டச்சாட்சியாயொப்பிவித்தான். * ௰௩; ௰௪. ௰௫.

௬ ஆனால அவர்கள எதிர்ததுநின்று, தூஷணித்த போது, * அவன தன வஸத்திரங்களை உதறி, அவர்க ளை நோக்கி: உங்கள இரததப்பழி உங்கள தலையின்மே லிருக்கும், நான சுததமாயிருக்கிறேனென்றும், இதுமு தல புறசாதியாரண்டையிலே போகிறேனென்று சொல்லி, * நெகே. ௫, ௰௩.

௭ அவ்விடத்தைவிட்டுப்போய, யூஸதது என்கிற நாமமுடைய தேவபத்தியுள்ள ஒருததனுடைய வீட்டி லே வந்தான, அவன வீடு ஆலயததுடனே சேர்ந்த தாயிருந்தது.

௮ ஆலயபத்தலைவனாகிய * கிறிஸபுவோவென்ற வன தன வீட்டாரனைவரோடுங்கூட கர்த்தரை விசுவாசித் தான, கொரிந்தியரில அனேகருங்கேட்டுவிசுவா சித்து ஞானஸநானம்பெற்றார்கள. * ௧ கொ. ௧, ௰௪.

௯ ராத்திரியிலே கர்த்தர் ஒருதெரிசனத்திலே பவுலு டனே: * நீ பயப்படாதே, பேசு, அமர்ந்திராதே. * ௨௩. ௰௧.

௰ ஏனெனில நான உன்னுடனேகூட இருக்கிறேன. ஒருவனும் உனக்குத்தீங்குசெய்ய உன்மேல்கைபோடு வதிலலை, ஏனென்றால இந்தப்பட்டணத்தில எனக்கு வெகுசனம் உண்டென்றார.

௰௧ அவன ஒருவருஷமும் ஆறுமாதமும் அங்கேயி ருந்து, பராபரனுடைய வசனத்தை அவர்களுக்குள்ளே உபதேசித்தான.

௰௨ கல்லியோன அகாயாவிலே அதிபதியாயிருந்த போதோவென்றால, யூதர் ஒருமனப்பட்டு பவுலு க்கு விரோதமாயெழும்பி, அவனை நியாயாசனத்துக்கு முன்பாகக்கொண்டுவந்து:

௰௩ இவன மனுஷரை நியாயப்பிரமாணத்துக்கு வி ரோதமானபடி பராபரனைச்சேவிக்கப் போதிக்கி றானென்றார்கள.

௰௪ ஆனால பவுலு தன வாயைத்திறக்கப் போகை யில, கல்லியோன யூதருடனே சொன்னதாவது: யூ தர்களே, இது ஒரு அநியாயம் அல்லது பொலலாங காமியமானால, உங்களை நான பொறுத்துக்கேட்க நியாயமாயிருக்கும்.

௰௫ இதுவோவெனில ஒருவசனத்துக்கும், நாமங் களுக்கும், உங்களுக்குண்டான நியாயப்பிரமாணத் துக்கும் அடுத்த தர்க்கமானபடியினாலே, நீங்களே பாரு ங்கோள, ஏனெனில இதுகளுக்கு நான நியாயாதிபதியா யிருக்க எனக்கு மனதிலலையென்றுசொல்லி,

௰௬ அவர்களை நியாயாசனத்தைவிட்டுத்துரத்தினான.

௰௭ ஆனால கிரேக்கரெல்லாரும் ஆலயத்தலைவ னாகிய சொஸதேனேயைப்பிடித்து நியாயாசனத்துக்கு முன்பாக அடித்தார்கள, இதுகளில ஒன்றையுங் கல லியோன விசாரியாதிருந்தான.

¶ பவுலு எருசலேமுக்குப்போய அங்கேயி ருந்து திரும்ப அந்தியோகியாவுக்கு வந் துபண்ணின பயணங்கள.

௰௮ பவுலு இன்னம் அனேகநாள அங்கேயிருந் தபின

துப்பிறபாடே பவுலு, சகோதரரைக்கையில அனுப்பி
வித்துக்கொண்டு, தனக்கொரு • பொருத்தனையுண்
டாயிருந்தபடியினாலெ கெங்கிரேயாவிலெ சிரசவரம
பண்ணிக்கொண்டு, சூரியாவுக்குப்போகக்கப்பலேறி
னான, பிரிஸ்கிலலாளும அக்கிலாவும அவனுட
னெகூடப்போனார்கள. • ச. மொ. ௬, ௫.
௰௯ அவன எபேசுப்பட்டணத்துக்கு வந்து, அவர்
களை அங்கெவிட்டான, அவனும்வனில ஆலயத்து
க்குள பிரவேசித்து, யூதருடனெ சமபாஷித்
தான.
௨௰ ஆனால அவர்கள அவனை இன்னஞ்சிலகாலந்த
ங்களுடனெ இருக்கவேண்டிக்கொண்டபோது, அ
வன சம்மதியாமல,
௨௧ அவர்களைக்கையில அனுப்பிவித்துக்கொண்டுவர
ப்போறபண்டிகையிலெநானெப்படியும எருச
லேமிலிருக்கவேணும, பராபரனுக்குச்சித்தமேயானா
ல • திருமபஉங்களண்டைக்குவருவேனென்று
பேசுவவிட்டுக்கப்பலேறிப்போய, • ௰௯, ௧.
௨௨ செசாரியாவுக்குவந்து, எருசலேமுக்குப்போ
ய் ஏறி, சபையைமினவி, அந்தியோகியாவுக்கிறங்கிப
போனான.
௨௩ அங்கெசிலகாலஞ்சஞ்சரித்தபிறபாடு, அவனபு
றப்பட்டு. வரிசையாககலாத்தியதேசத்தையும பிறிகி
யாவையும உருவநடந்து, சீஷரெல்லாரையுந்திடப்
படுத்தினான.

## ௧ அப்பொல்லோவின செய்தி.

௨௪ ஆனால அலெக்சந்திரியப்பட்டணத்தில பிறந்தவ
னும, சாதுரியமனுஷனும வேதஎழுத்துகளிலெ வல்
லவனுமான அப்பொல்லோஎனறபேர்கொண்ட
ஒருயூதனஎபேசுக்குவந்தான.
௨௫ அவன கர்த்தருடையவழியிலெ உபதேசிக்கப்
பட்டவனாயிருந்து, கர்த்தருக்கடுத்துகளை அனலான ஆ
வியாலபேசி, திட்டமாயப்போதகம பண்ணி, யோவா
னுடையஞானஸ்நானத்தை மாத்திரம அறிந்திருந்
தான.
௨௬ அவன ஆலயத்திலதயிரியமாயப்பேசத்துவ
க்கினான. ஆனால அக்கிலாவும பிரிஸ்கிலலாளும அவ
னபேசுகிறதைக்கேட்டபோது, அவனைச்சேர்த்துக்
கொண்டு, பராபரனுடையவழியைப்பின்னையுந்தி
ட்டமாய அவனுக்குவிபரித்தார்கள.
௨௭ அவன அகாயாவிலெபோகவேணுமெனறி
ருக்கையில, அவனைஏற்றுக்கொள்ளத்தக்கதாகச
கோதரர்சீஷருக்கெழுதினார்கள, அவன அங்கெவந்த
பிறபாடு, கிருபையினாலெவிசுவாசிகளானபேர்களு
க்கு • மிகவும உதவியாயிருந்தான. • ௧. கொ. ௩.
௬.
௨௮ ஏனெனில யேசுவேகிறிஸ்துவெனகிறதைவே
தஎழுத்துகளினாலெவெளியரங்கமாக ஒப்பிவித்து,
யூதருக்குப்பெலனாயத்தாண்டிக்காட்டினான.

௰௯.

## ௰௯. அதிகாரம.

௧ பவுல எபேசுபபடடணததில வநதிருககை
யில நடநதது.

அபபோலலோகொரிநதுவிலேயிருககையிலசம
௰௬ நாங்கள் ரோமாவுக்கு வந்தபோ கோவெனிலே சேர்வைக்காரன் கட்டுண்டவர்களைச் சேனாபதிக்கு ஒப்புவித்தான். ஆனாலும் பவுலுக்குத் தன்னைக் காக்கிற சேவகனோடே தனித்திருக்க உத்தாரமுண்டாச்சுது.

௰௭ மூன்று நாளைக்குப் பிற்பாடு சம்பவித்ததேதெனில், பவுலு யூதரில் பிரதானமானவர்களைக் கூடிவர அழைத்தான், அவர்கள் கூடிவந்தபோது, அவன் அவர்களுடனே சொன்னதாவது: சகோதரராகிய புருஷரே, சனத்துக்காகிலும் பிதாக்களுடைய முறைமைகளுக்காகிலும் விரோதமான தொன்றையுஞ் செய்யாதிருந்தும், நான் கட்டுண்டவனாய் எருசலேமிலிருந்து ரோமர் கைகளிலே ஒப்புக்கொடுக்கப்பட்டேன்.

௰௮ இவர்கள் என்னை நியாயங்கேட்டு, என்னிடத்தில் மரணத்துக்கேதுவான குற்றமொன்றுமில்லாதபடியினாலே விடுதலையாக்க மனதாயிருந்தார்கள்.

௰௯ யூதரோவென்னில் எதிர்த்துப் பேசினபோது, நான் ராயருக்கு அபயமிட வேண்டியதாச்சுது, ஆனாலும் என் சாதியின் பேரிலே யாதொரு குத்தஞ் சாட்ட வல்ல.

௨௰ இப்போதும் இந்த முகாந்திரத்துக்காக உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை வரவேண்டிக் கொண்டேன், ஏனென்னில் * இஸ்றவேலுடைய நம்பிக்கையினிமித்தியமாக இந்தச் சங்கிலியாலே சுத்துண்டேனென்றான். * உ௬, ௬. ௭.

௨௧ அவர்கள் அவனுடனே சொன்னதாவது: யூதேயாவிலிருந்து உன்னிமித்தியமாக எங்களுக்குக் காகிதங்கள் வந்ததுமில்லை, வந்த சகோதரரிலொருத்தனும் உன்பேரிலொரு பொல்லாப்பை அறிவித்ததுஞ் சொன்னதுமில்லை.

௨௨ இப்போதும் நீ சிந்திக்கிறதுகளை உன்னாலே கேழ்வியாக நியாயமென்றெண்ணுகிறோம், ஏனென்னில் இந்த மார்க்கத்துக்கு எங்கும் எதிர்ப் பேசப்படுகுதென்று அறிந்திருக்கிறோமென்றார்கள்.

௨௩ அவர்கள் அவனுக்கொரு நாளைக் குறித்து, அவன் தங்குமிடத்திலே அவனண்டை வெகுபேராய் வந்தார்கள். அவர்களுக்கவன் காலமே துவக்கிச் சாயுங்காலமட்டும் யேசுவுக்கடுத்த விசேஷங்களை மோசேயினுடைய பிரமாணத்தினாலுந் தீர்க்கதெரிசிகளின் ஆகமங்களினாலும் போதித்து, பராபரனுடைய ராச்சியத்தை அவர்களுக்குத் திடச்சாட்சியாக வெளிப்படுத்தினான்.

௨௪ சொல்லப்பட்டதுகளுக்குச் சிலரொப்பினார்கள். சிலரோவென்றால் விசுவாசியாதிருந்தார்கள்.

௨௫ ஒன்றுக்கொன்றவொவ்வாமலிருக்கிறபோதோவென்னில், பவுலொருவாக்கியத்தைச் சொன்னபிறபாடு அவர்கள் அனுப்பிவிடப்பட்டார்கள், அதாவது:

௨௬ * காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள், கண்ணாரக்கண்டும் பாராதிருப்பீர்களென்று இந்தச் சனத்தண்டைக்குப் போய்ச் சொல்லு. * யெச. ௬, ௯. ௰.

௨௭ ஏனென்னில் அவர்கள் கண்களினாலே காணாமலுங் காதுகளினாலே கேளாமலும் இருதயத்தினாலே உணர்ந்து மனந்திரும்பாமலும் நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலுமிருக்கும்படிக்கு, இந்தச் சனத்தின் இருதயம் நிணந்துர்த்திருக்குது, காதுகளினாலே வருத்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக் கொண்டார்களென்கிறதைப் பரிசுத்த ஆவி யெசாயா தீர்க்கதெரிசியைக் கொண்டு நம்முடைய பிதாக்களுடனே நன்றாய்ச் சொன்னார்.

௨௮ இப்போதும் புறச்சாதியாருக்குப் பராபரனுடைய ரட்சிப்பனுப்பப்பட்டுதென்று உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது, அவர்கள் அதைக் கேட்பார்களென்றான்.

௨௯ அவன் இதுகளைச் சொன்னபிறபாடு யூதர்கள் தங்களுக்குள்ளே வெகுவாய்த் தர்க்கித்துக்கொண்டு, போய்விட்டார்கள்.

௩௰ பவுலோவென்னில் ரெண்டு வருஷம் முழுதுந்

தற்சுயமாய் ஒரு வீட்டத்திலே குடிக்கூலிக்கிருந்து தன்னண்
டைக்கு வருகிறயாவரையுஞ் சேர்த்துக்கொண்டு,

௩௧ சகலத் தயிரியத்துடனேயுந் தடையில்லா
மலே பராபரனுடைய ராட்சியத்தை
யப்பிரசங்கித்துக் கர்த்தராகிய யேசு
கிறீஸ்துவின விசேஷ
ங்களை உபதேசித்
துக்கொண்டி
ருந்தான்.

# அபோஸ்தலனாகிய

## பவுலுரோமாபுரியாருக்கெழுதின

## நிருபம்.

### ௧. அதிகாரம்.

¶ நிருபமுகவுரை.

மாம்சத்தின்படியே தாவீதின் வித்திலே உண்டாகி
பரிசுத்தமாகிய ஆவியின்படியே பராபரனுடைய
சுதனென்று மரித்தோரிலிருந்தெழுந்ததினாலே பெலனா
யருப்பிக்கப்பட்ட,
௨ தம்முடைய குமாரனாகிய நம்முடைய கர்த்தர் யேசுக்கிறீ
ஸ்துவைக்குறித்து
௩ பராபரன் தம்முடைய தீர்க்கதெரிசிகளைக்கொண்டு
பரிசுத்த எழுத்துகளிலே முன்வாக்குத்தத்தம் பண்ணியி
ருந்த சுவிசேஷத்துக்கு * பிரித்தெடுக்கப்பட்ட, * அப்போ.
௯, ௰௫. ௰௩, ௨. கலாத். ௧, ௰௫.
௪ யேசுக்கிறீஸ்துவினுடைய ஊழியக்காரனும் அ
ழைக்கப்பட்ட அப்போஸ்தலனுமாகிய பவுலு,
௫ ரோமாவிலிருக்கிற பராபரனுடைய பிரியரும்
அழைக்கப்பட்ட பரிசுத்தவான்களுமாகிய உங்களெல்லாரு
க்கும் எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய பராபர
னாலுங் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினாலும் உங்களு
க்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக்கடவது.
* ௧. கொ. ௧, ௨.
௬ நாங்கள் சகல சாதிகளிடத்திலும் விசுவாசத்தின
கீழ்ப்படியத்தக்கதாக அவர் நாமத்தினாலே உண்டாகக் கிரு
பையையும் அப்போஸ்தல ஊழியத்தையும்
பெற்றோம்.
௭ அவர்களுக்குள்ளே யேசுக்கிறீஸ்துவினால் அழை
க்கப்பட்டவர்களாகிய நீங்களும் இருக்கிறீர்கள்.
௮ லோகமெங்கும் உங்கள் விசுவாசம் பிரசித்திய
மாகிறதினாலே முந்த முந்த உங்களெல்லாருக்
காகவும் நான் பராபரனை யேசுக்கிறீஸ்துவினாலே
ஸ்தோத்திரிக்கிறேன்.
௯ ஏனென்றால் நானெப்படி இடைவிடாமல் உங்
களை நினைத்திருக்கிறேனென்கிறதுக்குத் தம்முடைய குமா
ரனுடைய சுவிசேஷத்திலே நான் என் ஆவியிலே ஊழிய
ஞ்செய்கிற * பராபரனே எனக்குச் சாட்சியாயிருக்கிறார்.
* பிலி. ௧, ௮.
௰ உங்களிடத்துக்கு வர எனக்கு பராபரனுடை
ய சித்தத்தினாலே எப்போதாகிலும் பயணங் கிடைக்குமெ
ன்று என் செபங்களிலே எப்போதும் வேண்டுகிறேன்.
௰௧ ஏனென்றால் நீங்கள் திடப்படும்படிக்கும், [illegible]
உங்களிலும் என்னிலும் அன்னியோன்னி
யமாயுண்டாயிருக்கிற விசுவாசத்தினாலே உங்களிட
த்திலே நானுங்கூட ஆறுதலடையும்படிக்கும்,
௰௨ * நான் உங்களுக்கு ஞானவரத்திலே சில பங்கைக் கொ
டுக்கிறதுக்காக உங்களைப் பார்க்க வாஞ்சையாயிரு
க்கிறேன். * ௰௫, ௨௩.
௰௩ [illegible], சகோதரரே, மற்றச்சாதிகளிடத்திலே
என

எனக்குண்டானதுபோல உங்களிடத்திலும் எனக்குச் சில பலன் உண்டாவதற்கு நான் உங்களண்டைக்கு வரவெகுவிசைந்திட்டம் பண்ணிக்கொண்டிருந்தும், இதுவரைக்குந் தடைபட்டேன். என்கிறதை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.

௰௪ நான் கிரேக்கருக்கும் மற்றச் சாதிகளுக்கும் ஞானிகளுக்கும் மூடருக்குங் கடனாளியாயிருக்கிறேன்.

௰௫ ஆகையால் ரோமாவிலிருக்கிற உங்களுக்குஞ் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் என்னாலேயானமட்டும் மனதுள்ளவனாயிருக்கிறேன். * அப்போ. ௨௮, ௩௧.

✝ சாதிகளெல்லாம் அக்கிரமக்காரான பா
விகளாயிருந்து, விசுவாசத்தினாலொ
ழிய தங்கள் சுயசுபாவக்கிரியைக
ளினாலே நீதிமான்களாகக்
கூடாதென்பது.

௰௬ அதேனென்றால் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்காக நான் * வெட்கப்படேன், ஏனென்றால் அது விசுவாசிக்கிறவனையும், முந்தி யூதனையுங் கிரேக்கனையுங்கூட, ரெட்சிப்பதற்காகத் தேவனுடைய பெலனாயிருக்குது. * சங்கீ. ௱௰௯, ௪௬.

௰௭ ஏனென்றால் * விசுவாசத்தினாலே பலிக்குந் தேவநீதியானது, விசுவாசம் உண்டாக அதிலே வெளியாக்கப்படுகுது, ** விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பானென்றெழுதியிருக்கிறப்பிரகாரமாகத்தானே. * யோவ. ௩, ௩௬. ** ஆப. ௨, ௪. கலா. ௩, ௰௧. எபிரே. ௰, ௩௮.

௰௮ அதேனென்றால் சத்தியத்தை அநியாயத்தினாலே தடுக்கிற மனுஷருடைய சகல அவபத்தியின் மேலும் அநியாயத்தின் மேலும் பராபரனுடைய கோபம் வானத்திலிருந்து வெளியரங்கமாகுது.

௰௯ ஏனென்றால் பராபரன் உண்டென்கிற அறிவு அவர்களுக்குள் * வெளிப்படையிருக்குது, அந்தப் பராபரன் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். * அப்போ. ௰௪, ௰௭. ௰௭, ௨௪—௨௮.

௨௰ அதேனென்றால் அவருடைய அதரிசியமான லெட்சணங்களாகிய அவருடைய நித்திய வல்லமையுந் தேவத்துவமும் லோகச்சிஷ்டிப்பு முதற்கொண்டு * செய்கைகளினாலே உணர்ந்து காணப்படும், ஆகையால் போக்குச்சொல்லிக்கொள்ள அவர்களுக்கிடமில்லை. * சங்கீ. ௰௯, ௨.

௨௧ ஏனென்றால் பராபரனை அவர்கள் அறிந்தும் அவரைப் பராபரனென்று மகிமைப்படுத்தாமலும் ஸ்தோத்திரிக்காமலும், தங்கள் சிந்தனைகளில் வீணராய்ப்போனார்கள், அவர்கள் மதியற்ற இருதயமிருண்டுபோச்சுது.

௨௨ தங்களை ஞானிகளென்று சொல்லிக்கொள்ளுகிற அவர்கள் பயித்தியக்காரராகி,

௨௩ அழிவில்லாத பராபரனுடைய மகிமையை அழிவுள்ள மனுஷன் பறவைகள் நாலுகால் சீவன்கள் ஊர்வனங்களின் ரூபக்கோப்பாக * மாற்றினார்கள். * யெசா. ௪௰, ௰௮.

௨௪ ஆகையால் தங்களுடைய சரீரங்களையுந் தங்க
ளுக்குள்ளே அவசங்கைப்படுத்த, பராபரன் அவர்களை
அவர்களுடைய இருதயங்களின் இச்சைகளுக்கு, அசுத்தமு
ண்டாக்கவொப்புக்கொடுத்தார்.
௨௫ பராபரனுடைய சத்தியத்தைப் பொய்யாக மா
ற்றி, சிஷ்டிகளைப்பார்க்கிலுஞ் சிஷ்டியைப் பணிந்
து சேவித்த அவர்களைத் தானே. அவரே என்றென்
றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர், ஆமென்.
௨௬ ஆகையினாலே பராபரன் அவர்களை *இலச்சை
யான இச்சைரோகங்களுக்கொப்புக் கொடுத்தார். அ
தெப்படியென்றால் அவர்களுடைய பெண்கள் சுவாபவ
னுபோகத்தைச் சுவாபந்தப்பின அனுபோகமாக மா
ற்றினார்கள். * ௩. மோ. ௰௮, ௨௨ — ௨௫. எபே.
௫, ௰௨.
௨௭ அப்படியே ஆண்பிள்ளைகளும் பெண்ணினு
டைய சுவாபவனுபோகத்தைவிட்டு ஒன்றுக்கொன்
று தங்கள் விரகத்திலே வெந்து, * ஆணோடாண் அரு
வருப்பானதை நடப்பித்து, தங்களுடைய தப்புக்கு
த்தக்க பதிலைத் தங்களுக்குள் அடைந்தார்கள்.
* ௩. மோ. ௨௰, ௰௩.
௨௮ அவர்கள் பராபரனைத் தங்கள் அறிவிலே வை
க்கவெண்ணாமல் போனது போல. அடாததுகளைச்
செய்யப் பராபரன் அவர்களை எண்ணங்கெட்சிந்தைக்
க்கொப்புக்கொடுத்தார்.
௨௯ அவர்கள் சகல அவக்கியாயத்தினாலும் வேசித்தன
த்தினாலும் பொல்லாங்கினாலும் பொருளாசையினா
லும் ஆகாமியத்தினாலும் நிறைந்தவர்கள், பொறா
மை கொலைபாதகஞ் சண்டை சற்பனை துற்குணமு
ம் அவர்களைத் தூர்த்திருக்குது.
௩௰ அவர்கள் அவதூறுக்காரர், பின்போறணி
க்காரர், தெய்வபகைச்சதுர், உதாசினர், பெருமைக்
காரர், வீம்புக்காரர், பொல்லாப்புகளுக்காத்
காரணர், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்கள்.
௩௧ புத்தியில்லாதவர்கள், உடன்படிக்கையிலே
நில்லாதவர்கள், சுவாபவன்பில்லாதவர்கள், ஒ
ப்பரவாகாதவர்கள், இரக்கமில்லாதவர்களுமா
யிருக்கிறார்கள்.
௩௨ இப்படிக்கொத்ததுகளைச் செய்கிறவர்கள் ம
ரணத்துக்குப் பாத்திரவான்களென்கிற பராபரனுடை
ய நியாயத்தை அறிந்திருந்தும் அவர்கள் அதுகளைச் செ
ய்கிறதுமல்லாமல், செய்கிறவர்களுக்குச் சம்மதிக்க
றுமிருக்கிறார்கள்.

## ௨. அதிகாரம்.

௧ நியாயப்பிரமாணத்தைப்பெற்றயூதரும் பரா
பரனுடைய கோபாக்கினைக்குள்ளான
பாவிகளென்றருப்பிக்கப்பட்டது.

ஆகையால் குற்றவாளிகளைத் தீர்க்கிற மனுஷனே,
நீ எவனானாலுஞ்சரி, நீ போக்கற்றவனாயிருக்கிறாய்,
ஏனெனில் நீ மற்றவனைக் குற்றவாளியென்று தீர்க்
கிற

குற காரியத்திலே உன்னைத்தானே ஆக்கினைக்குள்ளாக்குகிறாய், அதேனென்றால் தீர்க்கிற நீ அதுகளையே செய்கிறாய்.

௨ ஆனால் அப்படிக்கொத்ததுகளைச் செய்கிறவர்கள்மேலே நடக்கும் பராபரனுடைய ஞாயத்தீர்ப்பு உண்மைக்கொத்ததாக்குமென்று அறிந்திருக்கிறோம்.

௩ ஓ போதும் அப்படிக்கொத்ததுகளைச் செய்கிறவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்கிறவனும் அதுகளையே செய்கிறவனுமாகிய மனுஷனே, நீ பராபரனுடைய ஞாயத்தீர்ப்புக்குத் தப்பித்துக்கொள்ளுவாயென்று எண்ணிக்கொள்ளுகிறாயோ.

௪ அல்லது * பராபரனுடைய தயவு உன்னைக் குணப்படுத்துதற்கே வருகுதென்று அறியாமல் போய், அவருடைய தயவு பொறுமை நீண்ட சாந்தத்தினுடைய ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ. * ௨. பேது. ௩, ௯.

௫ ஆனால் உன் மனக்கடினத்தினாலுங் குணப்படாக இருதயத்தினாலும் உனக்கு நீ பராபரனுடைய கோபமும் நீதியுள்ள ஞாயத்தீர்ப்பும் வெளிப்படும் நாளுக்குக் கோபாக்கினையைக் குவித்துக்கொள்ளுகிறாய்.

௬ அவர் அவனவன் கிரியைக்குத் தக்கதாய் அவனவனுக்கு * பதில் அளிப்பார். * சங். ௬௨, ௰௩. யெரே. ௰௭, ௰. மத். ௰௬, ௨௭. ௨. கொ. ௫, ௰.

௭ நற்கிரியையிலே பொறுமையாய்த் தரித்து, மகிமையையுங் கனத்தையும் அழியாமையையுந் தேடுகிறவர்களுக்கு நித்திய சீவனையும்,

௮ ஆனால் சண்டைக்காரராயிருந்து, சத்தியத்துக்குக் கீழ்ப்படியாமல் அவஞாயத்துக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கு உக்கிரத்தையுங் கோபத்தையும் அளிப்பார்.

௯ பொல்லாப்பை நடப்பிக்கிற எந்த மனுஷ ஆத்துமத்தின்மேலும், முந்தி யூதன்மேலுங் கிரேக்கன்மேலுங்கூட, உபாதியும் வியாகுலமும் வரும்.

௰ ஆனால் நன்மை செய்கிறவனுக்கெல்லாம் முந்தி யூதனுக்குங் கிரேக்கனுக்குங்கூட மகிமையுங் கனமுஞ் சமாதானமும் உண்டாம்.

௰௧ ஏனென்றால் * பராபரனிடத்திலே பாரபட்சமில்லை. * ௫. மோ. ௰, ௰௭.

௰௨ ஏனெனில் எவர்கள் ஞாயப்பிரமாணமில்லாமல் பாவஞ்செய்தார்களோ, அவர்கள் ஞாயப்பிரமாணமில்லாமலுங் கெட்டுப்போவார்கள், எவர்கள் ஞாயப்பிரமாணத்துக்குள்ளாய்ப் பாவஞ்செய்தார்களோ அவர்கள் ஞாயப்பிரமாணத்தினாலே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவார்கள்.

௰௩ பராபரன் என் சுவிசேஷத்தின்படியே யேசுக்கிறிஸ்துவைக்கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களை ஞாயந்தீர்க்கும் அந்நாளிலேதானே.

௰௪ ஏனென்றால் ஞாயப்பிரமாணத்தைக் கேட்டவர்கள் பராபரனுக்கு முன்பாக நீதிமான்களல்ல, ஞாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

௰௫ ஏனெனில் ஞாயப்பிரமாணமில்லாத புறச

சாதி

சாதியார் ஞாயப்பிரமாணத்துக்கடுத்தவைகளைச் சென்மசுவாபத்தினாலே செய்கிறதுண்டானால், ஞாயப்பிரமாணமில்லாதவர்கள் தங்களுக்குத் தாங்களே ஞாயப்பிரமாணமாயிருக்கிறார்கள்.

௰௫ அவர்களுடைய மனச்சாட்சி கூடச் சாட்சி பகருகிறதினாலும், அவர்களுடைய சிந்தனைகள் தங்களுக்குள்ளே ஒன்றுக்கொன்று குத்தமுண்டு அல்லது குத்தமில்லையென்று தீர்க்கிறதினாலும், அவர்கள் தங்கள் இருதயங்களில் ஞாயப்பிரமாணத்தின் கிரியை எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள்.

௰௭ இதோ நீ யூதனென்று பேர்பெற்றிருந்து, ஞாயப்பிரமாணத்தின்மேல் ஊன்றிக்கொண்டு, பராபரனைக்குறித்துப் பெருமைபாராட்டி,

௰௮ ஞாயப்பிரமாணத்தால் உபதேசிக்கப்பட்டவனாய் அவருடைய சித்தத்தை அறிந்து, நன்மை தின்மையின்னதென்று வகையறுக்கிறாய்.

௰௯ உன்னை நீ குருடரின் வழிகாட்டியாகவும் அந்தகாரத்திலுள்ளவர்களின் வெளிச்சமாகவும்,

௨௰ புத்தியில்லாதவர்களின் வாத்தியாராகவும் பேதைகளின் போதகனாகவும், ஞாயப்பிரமாணத்தினுடைய அறிவு சத்தியமென்றதுகளின் அச்சுடையவனாகவும் இருக்கிறேனென்று நம்புகிறாய்.

௨௧ இப்போதும் மற்றவனைப் போதிக்கிற உன்னைத்தானே போதியாமல் போறாய், களவு செய்யவேண்டாமென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்கிறாய்.

௨௨ விபசாரம்பண்ணவேண்டாமென்று சொல்லுகிற நீ விபசாரம்பண்ணுகிறாய், விக்கிரகங்களை அருவருக்கிற நீ பரிசுத்தமானதைக் கொள்ளையிடுகிறாய்.

௨௩ ஞாயப்பிரமாணத்தைக் குறித்துப் பெருமை பாராட்டுகிற நீ ஞாயப்பிரமாணத்தை மீறுகிறதினாலே பராபரனைக் கனயீனம்பண்ணுகிறாய்.

௨௪ அதேதென்ன? * எழுதியிருக்கிறபடியே பராபரனுடைய நாமம் உங்களாலே புறச்சாதிகளுக்குள்ளே தூஷணிக்கப்படும். * எசே. ௩௬. ௨௰ — ௨௩.

௨௫ நீ ஞாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு நடந்தால் சுன்னத்து பிரயோசனமான காரியந்தான், நீ ஞாயப்பிரமாணத்தை மீறி நடந்தாயேயாகில் உன் சுன்னத்து நுனித்தோலாச்சுது.

௨௬ இப்போது நுனித்தோலுள்ளவன் ஞாயப்பிரமாணத்தின் ஞாயங்களைக் கைக்கொண்டால் அவனுடைய நுனித்தோல் சுன்னத்தாயெண்ணப்பட்டு.

௨௭ சுவாபத்தின்படி நுனித்தோலுள்ளவனாய் ஞாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிற அவன், எழுத்துக்கும் சுன்னத்துக்கும் உள்ளாய ஞாயப்பிரமாணத்தை மீறுகிற உன்னைக் குற்றப்படுத்துவானல்லவோ.

௨௮ ஏனென்றால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாங்கிஷத்திலிருக்கிற சுன்னத்து சுன்னத்துமல்ல.

௨௯ உள்ளாக யூதனானவனே யூதன். எழுத்தின்படி மாத்திரமல்ல ஆவியிலே செய்யப்படும் இருதய

சுன்

சுனனததிறசுனனதது, அபபடிககொததவனுககும மனுஷராலலல, பராபரனாலே புகழசசியுணடு.
௫. மோ. ௰, ௰௬. ௩௰, ௬. யெரே. ௪, ௪.

## ௩. அதிகாரம்.

### ¶ புறசசாதிகளைபபார்ககயூதருககுமேன மையெனனவெனபது.

இபபோதுயூதனுடையமேனமையெனன, அலலதுசுனனததுடையபிரயோசனமெனன.

௨ அதுஎலலாவிதததிலும வெகுவானதுகாண. ஏனெனிலபராபரனுடையவாககியஙகள அவர்களாமபிககைககொபபிககபபடடது பிரதானகாரியமாமே.

௩ ஆனால * சிலர்விசுவாசியாமலபோனததினாலெனன அவர்கள அவிசுவாசம பராபரனுடைய உணமையை அவததமாககுமோ. * ௯, ௬.

௪ இலலையலலை, பராபரனே உணமையுளளவர், எநதமனுஷனுமோ. பொயயனெனறேபோமாக. * * நீர் உமமுடையவசனஙகளிலநீதிவிளஙகவும உமமுடையநியாயததீர்பபிலசெயஙகொளளவுமாக எனறெழுதியிருககிறபடிதானே. * சஙகீ. ௱௰௬, ௰௧. * * சஙகீ. ௫௧, ௬.

௫ ஆனாலநமமுடைய அநீதம பராபரனுடையநீதியைவிளஙகபபணணினாலெனனசொலலுவோம; கோபததைசெலுததுகிற பராபரன அநீதனாயிருககிறாரோ, மனுஷனடைவாயசசொலலுகிறேன.

௬ இலலையலலை. அபபடியானால பராபரன லோகததைநியாயநதீர்பபதெபபடி

௭ ஏனெனில என பொயயினாலே பராபரனுடையசததியம அவருககுமகிமையாகபபெருகினதுணடானால, இனிநானபாவியாகததீர்ககபபடுவானேனன.

௮ அலலது நாஙகளதூஷிககபபடுகிறபிறகாரமாகவும, நாஙகளசொலலுகிறோமெனறுசிலர்சொலலுகிறபிறகாரமாகவும, நனமைகளவரஇனிநாமபொலலாபபுகளைசசெயயாதிருபபானேனன. அபபடிககொததவர்கள மேலவருமஆககினைநீதியாயிருககுது.

### ¶ யூதர்புறசசாதிகளெனறிருநதிறததாருந தஙகளசுபாவததிலேநீதியறறவர்களெனபது.

௯ இபபோதுமெனன, மேனமையாயிருககிறோமோ, இலலையே, ஏனெனில * யூதர்கிரேககரெலலாருமபாவததுககுககீழானவர்களெனறுமுனருபபிததோம. * ௰௧, ௩௨.

௰ அபபடியும * எழுதியிருககுது: நீதிமான ஒருததனாகிலுமிலலை. * சஙகீ. ௰௪, ௩.

௰௧ உணர்வுளளவனிலலை, பராபரனைததேடுகிறவனிலலை.

எண்ணப்பட்டது, அவன் சுன்னத்துள்ளவனாயிருக்
கிறபோதோ, அல்லது சுன்னத்தில்லாதவனாயிருக்
கிறபோதோ, சுன்னத்துள்ளவனாயிருக்கிறபோதல்ல,
சுன்னத்தில்லாதவனாயிருக்கிறபோதுதானே.
௰௧ சுன்னத்தில்லாதவனுக்கு அவன் தனக்குண்டா
ன விசுவாசத்தினுடைய நீதிக்கு * முத்திரையாகச் சுன்
னத்தின் அடையாளத்தைப் பெற்றான். சுன்னத்தில்
லாதவர்களாய் விசுவாசிக்கிறயாவருக்கும் அவன் த
கப்பனாயிருக்கவும், அவர்களுக்கும் நீதிபலிக்கவும்,
* க. மோ. ௰௭, ௰. ௰௧.
௰௨ சுன்னத்துள்ளவர்களுக்கும் அவன் தகப்பனா
யிருக்கவுந்தானே, சுன்னத்தை மாத்திரம் அடைந்தவ
ர்களாயிராமல் சுன்னத்தில்லாத நம்முடைய தகப்பனாகி
ய ஆபிரகாமுக்குண்டாயிருந்த விசுவாசத்தின் காலடி
களிலும் நடக்கிறவர்களுக்குந்தானே.
௰௩ ஏனென்றால் * லோகத்தைச் சுதந்தரவாளியா
வானென்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு, அல்ல
து அவனுடைய வித்துக்கு நியாயப்பிரமாணத்தினாலல்
ல விசுவாசத்தின் நீதியினாலே கிடைத்தது. * க. மோ.
௰௨, ௨. ௩.
௰௪ ஏனெனில் * நியாயப்பிரமாணத்தைப் பிடித்தி
ருக்கிறவர்கள் சுதந்தரவாளிகளானால் விசுவாசம் வீ
ணாய்ப்போச்சுது, வாக்குத்தத்தமும் அவத்தமாய்ப்
போச்சுது. * கலா. ௩, ௰௮.
௰௫ அதேனென்றால் நியாயப்பிரமாணங் கோபத்
தை உண்டாக்குது, ஏனென்றால் நியாயப்பிரமாணமில்
லாதவிடத்திலே மீறுதலுமில்லை. * ௫. ௨௰.
௰௬ ஆகையால் விசுவாசத்தினாலே வருகிறதாயிருக்
குது. அது கிருபையாயிருக்கும்படிக்கும், வாக்குத்
தத்தம் நியாயப்பிரமாணத்துக்குள்ளானவர்களுக்கு
மாத்திரமல்ல நமக்கெல்லாருக்குந் தகப்பனாகிய ஆ
பிரகாமுடைய விசுவாசத்துக்குள்ளான எல்லா வித்
துக்குங்கூட நிலவரமாயிருக்கும்படிக்குந்தானே.
௰௭ * உன்னைத் திரளான சாதிகளுக்குத் தகப்பனாக வை
த்தேனென்றெழுதியிருக்கிறபிரகாரமாக, அவன்
தான் நம்பினவரும், மரித்தோரை உயிர்ப்பித்து இல்லா
ததுகளை இருக்கிறதுகளைப்போல அழைக்கிறவருமா
கிய பராபரனுக்கு முன்பாக அப்படிக்கொத்தவனானான்.
* க. மோ. ௰௭, ௫.
௰௮ * உன் வித்து இவ்வண்ணமாயிருக்குமென்று
சொல்லப்பட்டதின்படியே, அவன், தான் திரளான சா
திகளுக்குத் தகப்பனாவானென்று நம்பிக்கை காணாதி
ருந்தும், நம்பிக்கையாய் விசுவாசித்தான். * க. மோ.
௰௫, ௫.
௰௯ அவன் விசுவாசத்திலே பெலயீனனானதில்லை,
ஏறக்குறைய நூறு வயதாயிருந்த அவன் தன் சரீரத்
துச் செத்துப்போச்சுதென்கிறதையும் சாறாளுடைய கெ
ர்ப்பஞ் செத்துப்போச்சுதென்கிறதையும் மனதிலே வை
த்ததில்லை.
௨௰ அவன் பராபரனுடைய வாக்குத்தத்தத்துக்கா
க அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், விசுவாசத்தி
லே பெலன்கொண்டு பராபரனுக்கு மகிமைசெலுத்தி,
௨௧

௨௧ அவர் வாக்குத்தத்தம்பண்ணினதைச் செய்யவும் வல்லவராயிருக்கிறாரென்று முழுநிச்செயமாயிருந்தபின்.
௨௨ ஆனதினாலே அது அவனுக்கு நீதியாகவும் எண்ணப்பட்டது.
௨௩ ஆனாலும் அவனுக்கப்படி எண்ணப்பட்டதென்கிறது அவனுக்காகமாத்திரம் எழுதியிராமல்,
௨௪ நம்முடைய கர்த்தராகிய யேசுவை மரித்தோரிலிருந்தெழுப்பினவர் பேரிலே விசுவாசிக்கிறவர்களாகிய நம்முடைய நிமித்தியமாகவும், + நமக்கும் அப்படியெண்ணப்பட, எழுதப்பட்டிருக்குது. + ௰௫, ௪.
௨௫ அவர் நம்முடைய பாவங்களினிமித்தியம் ஒப்புக்கொடுக்கப்பட்டு, நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டார்.

## ௫. அதிகாரம்.

௧ கிறிஸ்துவினுடைய நீதிவிசுவாசிகளுக்குப் பலிக்கிறத்தினாலே உண்டாகும் பலன்கள்.

இப்போதும் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டபடியினாலே நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துமூலமாய் பராபரனிடத்திலே + சமாதானம் பெற்றிருக்கிறோம். + யெசா. ௫௩, ௫.
௨ அவர்மூலமாய் நாம் நின்றிருக்கிற இந்தக்கிருபைக்குள் + பிரவேசத்தையும் நாம் விசுவாசத்தினாலே பெற்றிருந்து, பராபரனுடைய மகிமையின் நம்பிக்கைக்காக மேன்மைபாராட்டுகிறோம். + எபே. ௨, ௰௮. ௩, ௰௨.
௩ ஆனதுமாத்திரமல்ல, உபத்திரவங்களிலும் மேன்மைபாராட்டுகிறோம், உபத்திரவம் பொறுமையையும், + மத். ௫, ௰௨. யாக். ௧, ௨. ௩.
௪ பொறுமை யோக்கியதையும், யோக்கியதை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்றறிந்திருக்கிறதினாலேதானே.
௫ நம்பிக்கையோவென்றால் + வெட்கப்படுத்தாது, ஏனென்றால் நமக்களிக்கப்பட்ட பரிசுத்தஆவியினாலே பராபரனுடைய சிநேகம் நம்முடைய இருதயங்களிலே ஊற்றப்பட்டது. + சங்கீ. ௨௫, ௩.
௬ ஏனென்றால் நாம் இன்னம் + பெலனற்றவர்களாயிருக்கக்கொள்ள, குறித்தகாலத்திலே கிறிஸ்து அக்கிருத்துவர்களுக்காக மரித்தார். + எபே. ௨, ௪. ௫.
௭ நீதிமானுக்காகவென்று மரிக்கிறது அரிதாமே, நல்லவனுக்காகவென்று ஒருத்தன் மரிக்கத் துணிவானாக்கும்.
௮ ஆனால் நாம் இன்னம் பாவிகளாயிருக்கக்கொள்ள கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே பராபரன் நம்மேலே வைத்த + தம்முடைய சிநேகத்தை விளங்கப்பண்ணுகிறார். + யோவா. ௩, ௰௬.
௯ இப்போதும் நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் வெகு அதிகமாய

அவ

அவராலே கோபத்துக்கு நீங்கலாய்த் தற்காக்கப்படுவோம்.

௰ ஏனெனில் நாம் சத்துருக்களாயிருக்கக்கொள்ள பராபரனுக்கு அவர் குமாரனுடைய மரணத்தினாலே ஏப்பிரவாக்கப்பட்டோமானால், ஏப்பிரவாக்கப்பட்டபின்பு அவருடைய சீவனாலொத்தனை அதிகமாய்த் தற்காக்கப்படுவோம்.

௰௧ ஆனால் அது மாத்திரமல்ல, ஏப்பிரவாகுதலை நமக்கிப்போ கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினாலே மாய பராபரனுக்குள்ளும் மேன்மை பாராட்டுகிறோம்.

¶ ஆதாமினால் வந்த கேடுங் கிறீஸ்து உண்டுபண்ணின மீட்பும் ஒத்துப் பார்க்கப்பட்டது.

௰௨ ஆகையால் ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினால் * மரணமும் லோகத்துக்குள் பட்டு, இந்தப்பிறகாரமாக மரணமெல்லா மனுஷர்மேலும், எல்லாரும் பாவஞ்செய்தபடியினாலே, வந்துபோலேதுவும் இருக்குது. * ௬, ௨௫.

௰௩ ஏனென்றால் நியாயப்பிரமாணம் வருமட்டாகவும் பாவம் லோகத்திலிருந்தது. ஆனால் நியாயப்பிரமாணமில்லாதிருக்கக்கொள்ள, பாவமெண்ணிக்கைப்படாதே போம்.

௰௪ ஆகிலும் மரணம் ஆதாமைத்துவக்கி மோசேமட்டுக்கும் ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்கள் மேலும் ஆண்டுகொண்டது. இந்த ஆதாம் வரப்போறவருக்கொப்பானவன்.

௰௫ ஆனால் கிருபைவரத்தின் செய்தி மீறுதலின் செய்தியைப்போலல்ல. ஏனெனில் * ஒருத்தனுடைய மீறுதலினாலே அநேகரானவர்கள் மரித்திருந்தால், [illegible]க்கு அதிகமாய்ப் பராபரனுடைய கிருபையும் ஒரே மனுஷனாகிய யேசுக்கிறீஸ்துவினுடைய கிருபையினாலே வருகிற ஈவும் அநேகரானவர்கள் மேலே பெருகிற்று. * ௧. கொ. ௰௫, ௨௨.

௰௬ ஈவினுடைய செய்தி பாவஞ்செய்த ஒருத்தனாலே சுமர்ந்ததுக்குத்தக்க செய்தியைப்போலுமல்ல, ஏனென்றால் ஒரே பாவத்தினாலே சுமர்ந்ததுக்குத்தம் ஆக்கினைக்குள்ளாகுது, கிருபைவரமோவென்றால் அநேகம் பாவங்களை நீக்கி நீதியை அளிக்குது.

௰௭ ஏனென்றால் ஒருத்தனுடைய மீறுதலினாலே மரணம் அந்த ஒருத்தனாலே ஆண்டுதானால், கிருபையின் பரிபூரணத்தையும் நீதியினுடைய ஈவின் பரிபூரணத்தையும் பெற்றவர்கள் ஒருத்தராகிய யேசுக்கிறீஸ்துவினாலே வெகு அதிகமாய்ச் சீவனிலே ஆளுவார்கள்.

௰௮ ஆகையால் ஒருத்தனுடைய மீறுதலினாலே எல்லா மனுஷர்மேலும் ஆக்கினைக்குள்ளாக்குங் குற்றம் எப்படி வந்ததோ, அப்படியே ஒருத்தனுடைய நீதியினாலே எல்லா மனுஷர்மேலும் சீவனுக்குள்ளாக்கும் நீதி வந்தது.

௰௯ ஏனென்றால் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகரானவர்கள் பாவிகளானது

போ

போலே ஒருவருடைய கீழ்ப்படியுதலினாலே அநேகரானவர்கள் நீதிமான்களாக்கப்படுவார்கள்.

௨௰ நியாயப்பிரமாணமோவென்றால் இருக்கப்பெருகினதாகும்படிக்கு வந்துகூடிற்று. ஆனாலும் பாவம் பெருகின இடத்திலே கிருபையானதும் அதிகமாய்ப் பெருகிற்று.

௨௧ பாவமானது மரணத்துக்குள்ளாக்க ஆண்டதுபோல, அப்படியே நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினாலே கிருபையானது நீதியை உண்டாக்குகிறதினாலே நித்திய சீவனுக்குள்ளாக ஆளும்படிக்குத்தானே.

## ௬. அதிகாரம்.

௧ கிறிஸ்துவினாலே நீதிமான்களானவர்கள் பரிசுத்தமாய் நடக்கவேண்டியது.

ஆகையால் என்ன சொல்லுவோம், கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்போமோ.

௨ அப்படி வராதிருப்பதாக. பாவத்துக்கு மரித்த நாமினி அதிலே எப்படி சீவனம்பண்ணுவோம்.

௩ அல்லது, கிறிஸ்து யேசுவுக்குள்ளாகத் தானஸ்நானம்பெற்ற நாமனைவரும் * அவருடைய மரணத்துக்குள்ளாகத் தானஸ்நானம்பெற்றோமென்றறியீர்களோ. * கொலோ. ௨, ௰௨.

௪ ஆகையால் கிறிஸ்து பிதாவினுடைய மகிமையினாலே மரித்தோரிலிருந்தெழுப்பப்பட்டதுபோலே நாமும் * நவமான சீவனிலே நடந்துகொள்ளும்படிக்கு, தானஸ்நானத்தினாலே அவருடனே கூட மரணத்துக்குள் அடக்கம்பண்ணப்பட்டோம். * எபே. ௪, ௨௩. ௨௪.

௫ ஏனெனில் அவருடைய மரணத்துக்கொப்பாக நாம் கூட நாட்டப்பட்டவர்களானால் அவருடைய உயிர்த்தெழுந்ததுக்கும் அப்படியிருப்போம்.

௬ நாமினிப் பாவத்துக்கு அடிமை செய்யாதபடிக்குப் பாவத்தின் சரீரம் அழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட * சிலுவையிலே அறையப்பட்டுதென்கிறதை அறிந்திருக்கிறோமே. * கலா. ௫, ௨௪.

௭ ஏனென்றால் மரித்தவன் பாவத்துக்கு நீங்கி நீதிமானாக்கப்பட்டான்.

௮ * கிறிஸ்துவுடனே கூட மரித்தோமேயானால், அவருடனே கூடப் பிழைத்துமிருப்போமென்று விசுவாசிக்கிறோம். * ௨. தீமொ. ௨, ௰௧.

௯ மரித்தோரிலிருந்தெழுந்த கிறிஸ்துவினி மரிக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோமே, மரணம் இனி அவரை ஆண்டுகொள்ளாது.

௰ ஏனெனில் அவர் மரித்தது பாவத்துக்கு ஒரேவிசை மரித்தார், அவர் பிழைத்திருக்கிறதோவென்றால் பராபரனுக்குப் பிழைத்திருக்கிறார்

௰௧ அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்துக்கு மரித்தவர்களாகவும், பராபரனுக்கென்று நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து யேசுவுக்குள் பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணுங்கோள்.

௰௨ ஆகையால் பாவமானது மரணத்துக்குரியதான உங்கள் சரீரத்திலே, நீங்கள் அதுக்குத் தேச்சைகளின்படியே கீழ்ப்படியும்படிக்கு ஆளாதிருப்பதாக.

௰௩ நீங்கள் பாவத்துக்கு உங்கள் அவயவங்களை அவக்ஞாயத்து ஆயுதங்களாகவும் நிறுத்தாமல், * பராபரனுக்கு உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்தவர்களாகவும், உங்கள் அவயவங்களைப் பராபரனுக்கு நீதியினுடைய ஆயுதங்களாகவும் நிறுத்துங்கோள்.

* ௰௨, ௧.

௰௪ ஏனெனில் பாவம் உங்களை மேற்கொள்ளப்போறதில்லை, அத்தனால் ஞாயப்பிரமாணத்தின் கீழல்ல, கிருபையின் கீழாயிருக்கிறீர்கள்.

௰௫ இப்போதுமென்ன, நாம் ஞாயப்பிரமாணத்தின் கீழிராமல் கிருபையின் கீழிருக்கிறபடியினாலே பாவஞ்செய்வோமோ. அப்படி வராதிருப்பதாக.

௰௬ மரணத்தை அடைவிக்கும் பாவத்துக்கானாலுஞ்சரி, நீதியை அடைவிக்குங் கீழ்ப்படியுதலுக்கானாலுஞ்சரி, நீங்கள் எதுக்குக் கீழ்ப்படிய உங்களை ஊழியக்காறராக நிறுத்துகிறீர்களோ, அதுக்குக் கீழ்ப்படிகிற ஊழியக்காறராயிருக்கிறீர்களென்றறியீர்களோ.

௰௭ ஆனால் நீங்கள் முந்திப் பாவத்துக்கு ஊழியக்காறராயிருந்து, இப்போதோவெனில் உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசத்தின் பிரமாணத்துக்கு மனசாரக் கீழ்ப்படிந்ததுக்காகப் பராபரனுக்கு ஸ்தோத்திரம்.

௰௮ நீங்கள் பாவத்துக்கு நீங்கி விடுதலையானபோதோவெனில், நீதிக்கு ஊழியக்காறராகப்பட்டீர்கள்.

௰௯ உங்கள் மாம்சத்தினுடைய பெலயீனத்தினிமித்தியம் மனுஷமார்க்கமாய்ச் சொல்லுகிறேன். அக்கிரமம் நடக்க நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்துக்கும் அக்கிரமத்துக்கும் ஊழியமாய் எப்படி நிறுத்தினீர்களோ, அப்படி இப்போ பரிசுத்தமாகுதல் நடக்க உங்கள் அவயவங்களை நீதிக்கு ஊழியமாய் நிறுத்துங்கோள்.

௨௰ ஏனெனில் பாவத்துக்கு நீங்கள் ஊழியக்காறராயிருக்கக்கொள்ள, நீதிக்கு நீங்கினவர்களாயிருந்தீர்கள்.

௨௰௧ ஆனால் அப்போ என்ன பலனை நீங்களிப்போ வெட்கப்படுகிறகிருதுகளால் அடைந்தீர்கள், அதுகளின் முடிவு மரணமே.

௨௰௨ இப்போதோவெனில் நீங்கள் பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டு, பராபரனுக்கு ஊழியக்காறராகப் பின்பு, பரிசுத்தமாகுதல் உங்களுடைய பலன், முடிவோ நித்தியசீவன்.

௨௰௩ ஏனென்றால் பாவத்தின் சம்பளம் * மரணம், பராபரனுடைய கிருபைவரமோவெனில் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து யேசுவுக்குள்ளாய் வரும் நித்தியசீவன்.

* ௧. மோ. ௨, ௰௭.

## ௭. அதிகாரம்.

௧ கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் ஞாயப்பிரமாணத்தின் சபிக்குத

லுக்கு

ஜுக்கும் கூஷக்கும் நீங்கினவர்
ளொப்பது.

அல்லது, சகோதரரே, மனுஷன் உயிரோடிருக்கு
மட்டும் ஞாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறி
யீர்களோ, ஞாய பிரமாணத்தை அறிந்தவர்களு
டனே பேசுகிறேன்.
௨ ஏனென்றால் புருஷனுக்குக் கீழான பெண்சாதி உ
யிரோடிருக்கிற புருஷனோடே ஞாயத்தின்படியே க
ட்டப்பட்டிருக்கிறாள். புருஷன் மரித்தானேயாகில் புரு
ஷனுடைய ஞாயந்தீர்ந்து நீங்கலாயிருக்கிறாள்.
௩ ஆகையால் புருஷன் உயிரோடிருக்கக் கொள்
ளே அவள் வேறொரு புருஷனுடைய பெண்சாதியானால்,
விபசாரியென்றழைக்கப்படுவாள், புருஷன் மரித்
தானேயாகில், அவள் வேறொரு புருஷனுக்குப் பெ
ண்சாதியானாலும் விபசாரியாயிராதபடிக்கு அந்த ஞா
யந்தீர்ந்து நீங்கினவளாயிருக்கிறாள்.
௪ அப்படியே, என் சகோதரரே, நீங்கள் மரித்
தோரிலிருந்தெழுந்தவராகிய வேறொருத்தர் வசமாகிற
தற்கும், பராபரனுக்கு நாம் கனி கொடுக்கிறதற்கு
மாக, நீங்களுங் கிறீஸ்துவின் சரீரத்தினாலே ஞாயப்
பிரமாணத்துக்கு மரித்தவர்களானீர்கள்.
௫ ஏனென்றால் நாம் மாம்சத்துக்குள்ளாயிருந்
தபோது ஞாயப்பிரமாணத்தினாலே தோன்றிய பாவரு
சைகள் நம்முடைய அவயவங்களிலே நாம் மரணத்
துக்குக் கனி கொடுக்கும்படிக்குப் பெலன் செய்தது.
௬ இப்போதோவென்றால் நாம் அகப்பட்டிருந்தது *
மரித்தப்படியினாலே ஞாயப்பிரமாணத்துக்கு நீங்கின
வர்களானோம், நாம் எழுத்தின் பழமையிலல்ல, ஆ
வியின் புதுமையிலே ஊழியஞ் செய்யத்தானே. * ௬, ௬.
௭ ஆகையால் என்ன சொல்லுவோம், ஞாயப்பிர
மாணம் பாவமோ, அல்லவே. பாவத்தையோவெ
ன்றால் ஞாயப்பிரமாணத்தினாலேயொழிய மற்றப்ப
டி அறிந்ததில்லை. ஏனெனில், * இச்சியாயாக வெ
ன்று ஞாயப்பிரமாணஞ் சொல்லாதிருந்தால், இ
ச்சை பாவமென்றறியேன். * உ. மோ. ௨௰, ௰௭.
௮ பாவமோவென்றால் கற்பனையினாலே சமயம் பெ
ற்று, சகலவித இச்சையையுமென்னிலே உண்டாக்கிற்
று. ஏனென்றால் ஞாயப்பிரமாணமில்லாமல் பா
வஞ் செத்தது.
௯ நானோவென்றால் ஞாயப்பிரமாணமில்லாமல்
முந்தி சீவனம்பண்ணினேன், ஆனால் கற்பனை வந்த
போது பாவந்திரும்ப உயிர்த்தது.
௰ நானோவென்றால் மரித்தேன். அப்படியே சீவ
னுக்கென்று கொடுக்கப்பட்ட கற்பனை எனக்கு மர
ணமாகப் பலிக்கக் கண்டேன்.
௰௧ ஏனென்றால் பாவங் கற்பனையினாலே சம
யம் பெற்று, என்னை மோசம் போக்கி, அதினாலே என்
னைக் கொன்றுபோட்டது.
௰௨ ஆகையால் ஞாயப்பிரமாணமோ பரிசுத்தமா
னது, கற்பனையும் பரிசுத்தமும் நீதியும் நன்மையான
துதானே

௰௩ அப்போதும் நன்றானது எனக்கு மரணமாச்சு
தே, அல்லவல்ல, பாவமென்னக்கப்பட்டியாச்சு
து, நன்றானதினாலே எனக்கு மரணமுண்டாக்கின அது
பாவமாகவிளங்கும்படிக்கும், பாவங்கற்பனையி
னாலே மெத்தவும் பாவமாகும்படிக்குந்தானே.
௰௪ ஏனென்றால் நியாயப்பிரமாணம் ஆவியின் சம
மந்தமாயிருக்குதென்றறிந்திருக்கிறோம், நானோ
வென்றால் பாவத்துக்குக் கீழாக விலைப்பட்டுப்போன மா
ங்கிஷசம்மந்தனாயிருக்கிறேன்.
௰௫ ஏனென்றால் நான் நடப்பிக்கிறதை அறியேன்,
அதேதென்றால் நான் வேணுமென்றிருக்கிறதைச்
செய்யாமல், நான் பகைக்கிறதையே செய்கிறேன்.
௰௬ நான் வேண்டாததைச் செய்தேனேயாகில்,
நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகி
றேன்.
௰௭ இப்போதும் இனி நானல்ல, எனக்குள் வாச
மாயிருக்கிற பாவமே அதை நடப்பிக்குது.
௰௮ அதேதென்றால் எனக்குள்ளே, அதாவது என்
மாங்கிஷத்துக்குள்ளே, * நன்மை வாசமாயிருக்கி
றதில்லையென்றறிவேன். ஏனென்றால் நன்மை செய்ய
வேணுமென்கிறது என்னுடனே இருக்குது; ஆனால்
அதை நடப்பிக்கத்தக்கதைக் காணேன். * ௧. மோ. ௬, ௫.
௰௯ ஏனென்றால் நான் செய்யவேணுமென்றிருக்கிற
நன்மையைச் செய்யாமல் செய்யவேண்டாததாகிய
தின்மையை நடப்பிக்கிறேன்.
௨௰ நான் செய்யவேண்டாததைச் செய்தேனே
யாகில், இனி நானல்ல, எனக்குள் வாசமாயிருக்
கிற பாவமே அதை நடப்பிக்குது.
௨௧ ஆகையினாலே நன்மை செய்யவேணுமென்றி
ருக்கிறவனுக்கு * தின்மை அடியிருக்குதென்கிற பிரமா
ணத்தைக் காண்கிறேன். * சங்கீ. ௫௧, ௭. எபிரே.
௰௨, ௧. ௨.
௨௨ ஏனென்றால் உள்மனுஷனின்படியே பராபரனு
டைய நியாயப்பிரமாணத்தின் மேல் பிரியமாயிருக்கி
றேன்.
௨௩ ஆனாலென் அவயவங்களில் வேறேயொரு பிர
மாணத்தைக் காண்கிறேன், அது * என் மனத்துடை
ய நியாயப்பிரமாணத்துக்கு எதிராய்ப் போரிட்டு, என்
னை என் அவயவங்களிலிருக்கும் பாவப்பிரமாண
த்துக்குச் சிறையாக்குது. * கலா. ௫, ௰௭.
௨௪ நிர்ப்பந்தமனுஷன் நான், ஆர் இந்த மரணசரீரத்
துக்கென்னை நீங்கலாக்கிவிடுவான்
௨௫ * நம்முடைக் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவுக்
ஆகப் பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன். அப்படி
யே நான் நானே மனத்தினாலே பராபரனுடைய
நியாயப்பிரமாணத்துக்கும், மாங்கிஷத்தினாலே
பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன். *
௧. கொ. ௰௫, ௫௭.

## ௮. அதிகாரம்.

¶ கிறிஸ்துவுக்குள் நீதிமான்களாக்கப்பட்டவர்கள்மேல் ஆக்கினை சுமராதென்பது.

இப்போது கிறிஸ்து யேசுவுக்குள்ளிருந்து, மாம்சத்தின்படியல்ல, ஆவியின்படியே நடக்கிறவர்கள்மேல் ஆக்கினை சுமர்த்தலென்பதில்லை.

௨ ஏனென்றால் கிறிஸ்து யேசுவுக்குள்ளிருக்கிற சீவனுடைய ஆவியின் தாயப்பிறமாணமானது என்னைப் பாவமரணமான இதுகளின் பிறமாணத்துக்கு நீங்கலாக்கிவிட்டுது.

௩ ஏனெனில் மாம்சத்தினாலே பெலயீனமாகப்பட்ட தாயப்பிறமாணத்தால் காரியமாகாதபடியினாலே, பராபரன் தம்முடைய குமாரனைப் பாவமாம்ச சாயலிலும் பாவம்போக்கும் பலியாகவும் அனுப்பி, இந்த மாம்சத்திலே பாவத்துக்கு ஆக்கினையிட்டுத் தீர்த்தார்.

௪ மாம்சத்தின்படியல்ல ஆவியின்படியே நடக்கிற நமக்குள் தாயப்பிறமாணத்தின் நீதி நிறைவேறுவதற்காகத்தானே.

௫ ஏனென்றால் ✱ மாம்சமார்க்கத்தார் மாம்சசிந்தையாயிருக்கிறார்கள். ஆவியின் மார்க்கத்தாரோ ஆவியின் சிந்தையாயிருக்கிறார்கள். ✱ ௧. கொ. ௨, ௰௪.

௬ ஏனெனில் மாம்சசிந்தை ✱ மரணம், ஆவியின் சிந்தையோவென்றால் சீவனுஞ்சமாதானமுந்தானே. ✱ ௬, ௨௧.

௭ ஏனெனில் மாம்சசிந்தை பராபரனுக்கு விரோதமான பகை, அதேனெனில் அது பராபரனுடைய தாயப்பிறமாணத்துக்குக் கீழ்ப்படிகிறதில்லை, கீழ்ப்படியக்கூடுகிறதுமில்லை.

௮ மாம்சத்துக்குள்ளானவர்களோவென்றால் பராபரனுக்கேற்றிருக்கக்கூடாது.

௯ நீங்களோவென்றால், பராபரனுடைய ஆவி உங்களில் ✱ வாசமாயிருந்தால், மாம்சத்துக்குள்ளல்ல ஆவிக்குள்ளாயிருக்கிறீர்கள், ஆனாலொருத்தனுக்குக் கிறிஸ்துவின் ஆவியில்லாதிருந்தால், அவன் அவருடையவனல்ல. ✱ ௧. கொ. ௩, ௰௬.

௰ கிறிஸ்து உங்களிலிருந்தாரேயானால், சரீரமோ பாவத்தினால் மரித்தது, ஆவியோ நீதியினால் சீவனாயிருக்குது.

௰௧ யேசுவை மரித்தோரிலிருந்தெழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தாரேயாகில், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தெழுப்பினவர் ✱ மரணத்துக்குரியதான உங்கள் சரீரங்களையும் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே உயிர்ப்பிப்பார். ✱ பிலி. ௩, ௨௧.

௰௨ ஆகையால், சகோதரரே, கடனாளிகளாயிருக்கிறோம், ஆனால் மாம்சத்தின்படி சீவனம்பண்ண மாம்சத்துக்கல்ல.

௰௩ ஏனெனில் நீங்கள் ✱ மாம்சத்தின்படி சீவனம்பண்ணினால், சாகப்போகிறீர்கள், ஆவியினாலே

சரீ

சரீரத்தின் செய்கைகளை மட்டுப்பண்ணினீர்களேயானால், பிழைப்பீர்கள். * கலா. ௬, ௮.

௰௪ ஏனென்றால் எவர்கள் * பராபரனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் பராபரனுடைய புத்திரராயிருக்கிறார்கள். * கலா. ௫, ௰௮.
சங்கீ. ௱௩. ௰.

௰௫ ஏனென்றால் திரும்ப * பயமுண்டாகிறதுக்கு அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறவில்லை, * புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள், அவராலே அப்பா பிதாவே என்று கூப்பிடுகிறோம். * ௨. தீமோ. ௧, ௭.
** கலா. ௩, ௨௰௬. ௪, ௬.

௰௬ பராபரனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று * அந்த ஆவியே நம்முட ஆவியுடனே கூடச்சாட்சி கொடுக்கிறார். * ௨. கொ. ௧, ௨௰௨.

௰௭ நாம் பிள்ளைகளேயானால், சுதந்தரருமாயிருக்கிறோம், பராபரனுடைய சுதந்தரரும், கூடமகிமைப்படக்கூட * பாடுபட்டோமானால், கிறீஸ்துவுடன் சுதந்தரருந்தானே. * ௨. தீமோ. ௨, ௰௧. ௰௨.

௰௮ ஏனென்றால் இக்காலத்துப்பாடுகள் * நம்மிலே வெளிப்படப்போற மகிமைக்குப் பாத்திரமானதுகளல்லவென்று எண்ணுகிறேன். * ௨. கொ. ௪, ௰௭.

௰௯ ஏனெனில் சிஷ்டியினுடைய ஏங்கல் பராபரனுடைய புத்திரரின் வெளிப்படுத்தலுக்குக் காத்துக்கொண்டிருக்குது.

௨௰ அத்தேனென்றால் சிஷ்டிதானுங் கேட்டினுடைய அடிமைத்தனத்துக்கு நீங்கலாகி, பராபரனுடைய பிள்ளைகளின் மகிமையான தன்னிங்கலுக்குள்ளாகுமென்கிற நம்பிக்கையாய,

௨௰௧ சிஷ்டியானது மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்குது, தன்னிச்சையாயல்ல கீழ்ப்படுத்தினவர் நிமித்தியமாகத்தானே.

௨௰௨ ஏனென்றால் சகல சிஷ்டியும் இதுவரைக்குங் கூடத்தவித்து, கூடவேதனைப்படுகிறதென்று அறிந்திருக்கிறோம்.

௨௰௩ அது மாத்திரமல்ல, ஆவியின் முதல்வரங்களைப் பெற்ற நாமுங்கூட * நம்முட சரீரத்தின் மீட்பாகிய புத்திரசுவிகாரத்துக்குக் காத்திருந்து, நம்முள்ளே தவிக்கிறோம். * லூக். ௨௰௧, ௨௰௮.

௨௰௪ ஏனென்றால் நம்பிக்கையிலே ரெட்சிக்கப்பட்டிருக்கிறோம், ஆனாலுங் காணப்படுகிறதின் நம்பிக்கை நம்பிக்கையல்ல, ஏனென்றால் ஒருத்தன் தான் காண்கிறதை நம்புகிறதுமேது.

௨௰௫ நாம் காணாததை நம்பினோமேயாகிற் பொறுமையாய் அதுக்குக் காத்திருக்கிறோம்.

௨௰௬ அப்படியே ஆவியுங்கூட நம்முட பெலயீனங்களுக்கு உதவிசெய்கிறார், ஏனென்றால் நாம் ஏர்த்தபடி எதை வேண்டிக்கொள்ளுவோமென்று அறியோம், ஆவியோவென்றால் தாமே நமக்காகச் சொல்லுக்கடங்காத பெருமூச்சுகளாலே வேண்டுதல் செய்கிறார்.

௨௰௭ ஆனாலே இதயங்களை ஆராய்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்றறிகிறார், ஏனென்றால் பரிசுத்தவான்

ளுக்

ளகளுக்காகப் பராபரனுக்கேற்றபடி வேண்டுதலை
செய்கிறார்.
௨௮ ஆனால் * தீர்மானத்தின்படியே அழைக்கப்
பட்டிருந்து பராபரனைச் சிநேகிக்கிறவர்களுக்கு எல்
லாக் காரியங்களும் நன்மைக்குதவிச் செய்யுதென்
றறிந்திருக்கிறோம். * மறு. ௰௯, ௰௯.
௨௯ ஏனென்றால் எவர்களை முன்னறிந்தாரோ,
அவர்களைத் தம்முடைய குமாரனுடைய ரூபுக்கொத்தசா
யலாகிறதுக்கு முன்குறித்தார், அவர் அனேகரு
ச கோதரருக்குள்ளே * முதலாய்ப்பிறந்தவராயிருக்கத்
தானே. * கொலொ. ௧, ௰௮.
௩௰ எவர்களை முன்குறித்தாரோ, அவர்களை அ
ழைத்துமிருக்கிறார், எவர்களை அழைத்தாரோ, அ
வர்களை நீதிமான்களுமாக்கினார், எவர்களை நீதிமான்
களாக்கினாரோ, அவர்களுக்கு மகிமையுந்தந்தார்.
௩௧ இப்போதும் இதுகளுக்கென்ன சொல்லுவோ
ம், பராபரன் நமக்கனுசாரியாயிருந்தால் நமக்கு வி
ரோதமாயிருப்பவனார்.
௩௨ அவர் * தம்முடைச் சொந்தக் குமாரனையும் பாராம
ல், அவனை நமக்கெல்லாருக்காகவும் ஒப்புக்கொ
டுத்தாரே, அவர் இவரோடுகூட யாவையும் நமக்க
ருளாதிருப்பதெப்படி. * யோவ. ௩, ௰௬.
௩௩ பராபரன் தெரிந்துகொண்டவர்களைக் குற்ற
ஞ்சுமத்துபவனார், பராபரன்தானே நீதிமான்களாக்கி
றவர்.
௩௪ ஆக்கினைக்குள்ளாக்கத்தீர்ப்பவனார், கிறிஸ்து
தானே மரித்தவர், இதினும் அதிகமாக அவர் எழுந்தவ
ருமாமே, அவர் பராபரனுடைய வலதுபாரிசத்திலு
மிருக்கிறாரே, அவர் நமக்காக வேண்டுதலுஞ் செய்கி
றார்.
௩௫ நம்மைக் கிறிஸ்துவின் சிநேகத்தை விட்டுப்பி
ரிப்பவனார், உபத்திரவமோ, வியாகுலமோ, துன்ப
மோ, பசியோ, நிருவாணமோ, நாசமோசமோ, ப
ட்டயமோ.
௩௬ * உம்முட நிமித்தியமாக நாள்தோறுங் கொ
ல்லைசெய்யப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்
போலெண்ணப்பட்டிருக்கிறோமென்றெழுதியிரு
க்கிறபடிதானே. * சங். ௪௪, ௨௩. ௧. கொ. ௪, ௯.
௩௭ ஆனாலிதுகளெல்லாத்திலும் நாம் நம்மைச்சி
நேகிக்கிறவராலே அதிகமாய் ஜெயங்கொள்ளுகி
றோம்.
௩௮ ஏனென்றால் மரணமானாலுஞ் சீவனானாலுந் தூ
தராலுந் துரைத்தனங்களானாலும், வல்லமைகளா
னாலும், நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்க
ளானாலும்,
௩௯ உயர்த்தியானாலுந் தாழ்த்தியானாலும், வேறெ
ந்தச்சிருஷ்டியெனக்கிலும் நம்மை நம்முடைய கர்த்தராகிய கிறி
ஸ்துயேசுவுக்குள்ளான பராபரனுடைய சிநேகத்
தைவிட்டுப் பிரிக்கமாட்டாதென்றறிந்திருக்கி
றேன்.

# ௯. அதிகாரம்.

௧ விசுவாசத்தினாலே வருகிற நீதியே பராபரனு
க்கு முன்பாகச் செல்லும் நீதியென்கிறத
து சகுபாராடரனயூதரத்தகளி
னது அத்தாட்சியாயிருக்கிறது.

எனக்குப் பெரிய துக்கமும் என் இருதயத்துக்கு இடை விடாத வேதனையுமிருக்குது.

௨ நான் பொய் சொல்லேன், கிறிஸ்துவுக்குள்ளாக உண்மையைச் சொல்லுகிறேனென்று பரிசுத்த ஆவியானவர் என் மனதுகூட என்கிறசாட்சியாயிருக்குது.

௩ ஏனென்றால் மாம்சத்தின்படி என்னினத்தாராகிய என்னுடைய சகோதரருக்குவதிலாக * நானதாலே கிறிஸ்துவைவிட்டுவிலக்கப்பட்டவனாயிருக்க விரும்புவேனே. * ௨ மோ. ௩௨, ௩௨.

௪ அவர்கள் இஸ்ரவேலராமே, * புத்திரசுவிகாரமும் மகிமையும் உடன்படிக்கைகளும் நியாயப்பிரமாணக்கட்டளையும் தேவ ஆராதனையும் வாக்குத்தத்தங்களும் அவர்களுடையதே. * ௨. மோ. ௪, ௨௨.

௫ பிதாக்கள் அவர்களுடைய பிதாக்களாமே, கிறிஸ்துவானவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சருவத்துக்கும் மேலான பராபரன், ஆமென், தேவ மாம்சத்தின்படி அவர்களிலே பிறந்தாரே.

௬ ஆனால் பராபரனுடைய வசனம் * விழுந்துபோச்சுதென்று சொல்லக்கூடாது, ஏனென்றால் இஸ்ரவேலிலே சாத்தியாரெல்லாரும் இஸ்ரவேலரல்ல. * ௨. தீமோ. ௨, ௰௩.

௭ அவர்கள் ஆபிரகாமின் விந்தையினாலே * எல்லாரும் புத்திரருமல்ல. ஈசாக்கினாலே உன் விந்து விளங்குமென்று * * சொல்லியிருக்குது. * யோவ. ௮. ௩௯. * * ௧. மோ. ௨௧, ௰௨.

௮ தேனென்றால், மாம்சத்தின் புத்திரர் பராபரனுடைய புத்திரரல்ல, * வாக்குத்தத்தத்தின் புத்திரரே விந்தென்று எண்ணப்படுகிறார்கள். * கலா. ௪, ௨௮.

௯ ஏனென்றால்: * இக்காலத்திலே வருவேன், அப்போ சாறாளுக்கு ஒரு குமாரன் இருப்பானென்கிற வார்த்தை வாக்குத்தத்தமான வார்த்தையாயிருக்குது. * ௧. மோ. ௰௮, ௰.

௰ ஆனால் இதுமாத்திரமல்ல, நம்முடைய பிதாவாகிய ஈசாக்கென்கிற ஒருத்தனாலே கெற்பவதியான ரெபெக்காளும் அதுக்கத்தாட்சி.

௰௧ ஏனென்றால் பராபரனுடைய தெரிந்துகொள்ளுதலின்படியிருக்கிற அவருடைய தீர்மானம் கிரியைகளினாலல்ல அழைக்கிறவராலே நிலைநிற்கும்படிக்கு.

௰௨ அவளுடனே: * மூத்தவன் இளையவனுக்கு ஊழியஞ்செய்வானென்கிறது, அவர்கள் இன்னம் பிறவாமலும் நன்மைதின்மை ஒன்றுஞ் செய்யாமலுமிருக்கக்கொள்ளச் சொல்லப்பட்டுது. * ௧. மோ. ௨௫, ௨௩.

௰௩ அப்படியே: * யாக்கோபைச் சிநேகித்துச் ஏசா

வைப்

வைப் பகைத்தோமென்றெழுதியிருக்குது. * மல். ௧, ௨. ௩.

௰௪ இப்போதுமென்ன சொல்லுவோம், * பராபரனிடத்திலே அநீதமுண்டோ, இல்லையில்லை. * ரு. மோ. ௩௨, ௪.

௰௫ ஏனென்றால் * அவர் மோசேயுடனே: எவன் மேல் கிருபையாயிருக்கிறேமோ, அவன் மேல் கிருபையாயிருப்போம், எவன் மேல் இரக்கமாயிருக்கிறேமோ அவன் மேல் இரக்கமாயிருப்போமென்கிறார். * ௨. மோ. ௩௩, ௰௯.

௰௬ ஆகையால் வேணுமென்றிருக்கிறவனாலுமல்ல, ஓடுகிறவனாலுமல்ல, இரங்குகிற பராபரனாலேயாம்.

௰௭ ஏனென்றால் * பாரவோனுடனே: நாம் நம்முடைய வல்லமையை உன்னிடத்திலே காண்பிக்கிறதுக்கும், நம்முடைய நாமம் பூமியிலெங்கும் பிறஸ்தாபமாகிறதுக்குமே உன்னை நிறுத்தினோமென்கிறதை வேதமுரைத்துச் சொல்லுது. * ௨. மோ. ௯, ௰௬.

௰௮ ஆகையினாலே தாம் வேணுமென்றிருக்கிறவன் மேலிரங்கி, தாம் வேணுமென்றிருக்கிறவனைக் கடினப்படுத்துகிறார்.

௰௯ ஆனதுகொண்டு நீ என்னுடனே: அவர் இனிக் குத்தம்பிடிக்கிறதென்ன, அவருடைய சித்தத்துக்கு எதிர்த்து நின்றவனாரென்கிறாய்.

௨௰ ஆனால், மனுஷனே, பராபரனுக்கெதிராய்த் தர்க்கிக்கிற நீ ஆர், * உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனுடனே: நீ என்னை இப்படி ஏனுண்டாக்கினாயென்று சொல்லுமோ. * யெச. ௪௫, ௯.

௨௧ அல்லது மிதியிலே ஒரே களிமண்ணினாலே ஒரு பாத்திரத்தைக் கனமான கவைக்கும் மற்றொன்றை ஈனக் கவைக்கும் பண்ண, குயவனுக்கு மண்ணின் மேல் அதிகாரமில்லையோ.

௨௨ ஆனால் பராபரன் கோபத்தைக் காண்பிக்கவும் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணவும் சித்தமாய், அழிவுக்கு ஆயித்தம்பண்ணப்பட்ட கோபத்தின் பாத்திரங்களை வெகு நீண்ட சாந்தமாய்ப் பொறுத்திருந்து,

௨௩ தாம் மகிமைக்கென்று முன்னுக்காயித்தப்படுத்தின இரக்கத்தின் பாத்திரங்கள் மேல் தம்முடைய மகிமையின் ஐசுவரியத்தை விளங்கப்பண்ணச் சித்தமாயிருந்தாரானால், எப்படித் தறிக்கப்பாய்.

௨௪ அப்படிக் கோத்தவர்களாகிய நம்மை யூதரிடத்திலே மாத்திரமல்ல, புறச்சாதிகளிடத்திலுமிருந்து வரவழைத்துமிருக்கிறார்.

௨௫ அப்படி ஒசேயாவின் பொஸ்தகத்திலுஞ் சொல்லுகிறார்: * நம்முடைய சனமல்லாதவர்களை நம்முடைய சனமென்றும், சிநேகிக்கப்படாதிருந்தவளைச் சிநேகிக்கப்பட்டவளென்றுமழைப்போம். * ஒசே. ௨, ௨௩.

௨௬ * நீங்கள் நம்முடைய சனமல்லவென்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட இடத்திலே அவர்கள் சீவனுள்ள பராபரனுடைய பிள்ளைகளென்றழைக்கப்படுவதுண்டென்கிறார். * ஒசே. ௧, ௰.

௨௭ யெசாயாவோவென்றால் இஸ்ரவேலைப்பற்றிச் சொல்லுகிறதாவது: * இஸ்ரவேல் புத்திரருடைய இலக்கஞ் சமுத்திரத்தின் மணலத்தனையாயிருந்தாலும், மீதியாயிருப்பவர்களே ரெட்சிக்கப்படுவார்கள். * யெசா. ௰, ௨௨. ௨௩.

௨௮ ஏனென்றால் காரியத்தை நீதியாகத் தீர்த்துச் சுருக்கிப் பண்ணுவார், கர்த்தர் பூமியிலே காரியத்தைச் சுருக்கிப் பண்ணப்பட்ட காரியமாக்குவாரென்கிறான்.

௨௯ யெசாயா * முன்னுஞ் சொன்னபடி, சேனைகளின் கர்த்தர் நமக்கொரு வித்தை வைக்காதிருந்தாரானால், நாம் சோதோமைப் போலாகி, கொமோராவுக்கு ஒத்திருப்போம். * யெசா. ௧, ௯.

௩௰ இப்போதும் நாமென்ன சொல்லவேணும், நீதியைப் பின்தொடராத புறசாதியார் நீதியைப் பெற்றார்கள், விசுவாசத்தினாலே பலிக்கும் நீதியைத்தானே.

௩௧ நீதியின் நியாயப்பிரமாணத்தைப் பின்தொடர்ந்த இஸ்ரவேலோவென்றால் நீதியின் நியாயப்பிரமாணத்துக்கு வந்தெட்டினதில்லை.

௩௨ அதேதினாலென்றால், அவர்கள் அதை விசுவாசத்தினாலல்ல, நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே வருகிறதாகத் தேடினதினாலே தான். ஏனென்றால் * தடுக்கலின் கல்லிலே இடறிக்கொண்டார்கள். * ௧. பேது. ௨, ௮.

௩௩ * இதோ, சீயோனிலே தடுக்கலின் கல்லையும் இடறுதலின் கன்மலையையும் வைக்கிறேன், அவரிலே விசுவாசிக்கிறவனெல்லாம் வெட்கப்படாதிருப்பானென்றெழுதியிருக்கிறபடிதானே. * யெசா. ௮, ௧௪. ௨௮, ௧௬.

## ௰. அதிகாரம்.

¶ யூதர் தள்ளப்பட்ட முகாந்திரங்கள்.

௧ சகோதரரே, என்னிருதயத்தின் விருப்பமும் நான் இஸ்ரவேலுக்காகப் பராபரனை நோக்கிச் செய்யும் வேண்டுதலும் அவர்களுக்கு ரெட்சிப்புண்டாக இருக்குது.

௨ ஏனென்றால் அவர்களுக்குப் பராபரனுக்காகப் பக்திவயிராக்கியமுண்டென்று அவர்களுக்குச் சாட்சி கொடுக்கிறேன், ஆனால் அது அறிவுள்ளதல்ல.

௩ ஏனெனில் அவர்கள் பராபரனுடைய நீதியை அறியாமல், தங்கள் சுயநீதியை நிலைநிறுத்தப் பார்த்துப் பராபரனுடைய நீதிக்குக் கீழ்ப்படியாதே போனார்கள்.

௪ ஏனென்றால் விசுவாசிக்கிறவனுக்கெல்லாம் நீதியுண்டாக, கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் * நிறைவேறுதலாயிருக்கிறார். * மத. ௫, ௰௭.

௫ அதேதென்றால் நியாயப்பிரமாணத்தினாலே வரும் நீதியைக் குறித்து மோசே: * அதுகளைச் செய்கிற மனுஷன் அதுகளாலே பிழைப்பானென்றெழுதுகிறான். * ௩. மோசே. ௰௮, ௫.

௬ ஆனால் விசுவாசத்தினாலே வரும் நீதி சொல்லுகிறதாவது: * வானத்துக்கேறுபவனார், (அதாவது, கிறிஸ்தது

ஸ்துவை அங்கேயிருந்திறங்கிவரப்பண்ணுபவனார்) என்றும், * ரு. மோ. ௩௰, ௰௨—௰௩.

௭ அல்லது பாதாளத்துக்கிறங்குபவனார்; (அதாவது, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்தேறிவரப்பண்ணுபவனார்) என்றும், நீ உன் இருதயத்திலே சொல்லாதே யென்குது.

௮ பின்னை என்ன சொல்லுது: * வார்த்தை உனக்குச் சமீபமாய் உன் வாயிலும் உன் இருதயத்திலுமிருக்குதென்குதே நாங்கள் பிரசங்கிக்கிற விசுவாசத்தின் வார்த்தையதுதானே. * ரு. மோ. ௩௰, ௰௪.

௯ ஏனென்றால் நீ கர்த்தராகிய யேசுவை உன் வாயினாலே * அறிக்கைபண்ணி, பராபரன் அவரை மரித்தோரிலிருந்தெழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால், ரெட்சிக்கப்படுவாய். * மத். ௰. ௩௨.

௰ ஏனென்றால் நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், ரெட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.

௰௧ அதேனெனில் * அவர் பேரிலே விசுவசிக்கிறவனெல்லாம் வெட்கப்படாதிருப்பானென்று வேதத்தெழுத்துச் சொல்லுது. * யெச. ௨௮, ௰௬.

௰௨ ஏனென்றால் யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமில்லை, அதேனெனில் எல்லாருக்கும் ஏகமான கர்த்தராயிருக்கிறவர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவெல்லார் பேரிலும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். * ௩, ௨௨ ௨௩.

௰௩ ஏனென்றால் * கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்பவனெல்லாம் ரெட்சிக்கப்படுவான். * யோவேல். ௩, ௫.

௰௪ ஆனால் தாங்கள் விசுவாசியாதவரை எப்படித் தொழுதுகொள்ளுவார்கள், தாங்கள் கேழ்விப்படாதவர் பேரிலே எப்படி விசுவாசிப்பார்கள், பிரசங்கிக்கிறவனில்லாமல் எப்படிக் கேழ்விப்படுவார்கள்.

௰௫ அனுப்பப்படாமல் எப்படிப் பிரசங்கிப்பார்கள், * சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களின் கால்கள் எத்தனை உன்னதமானதுகளென்றெழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே. * யெச. ௫௨, ௭.

௰௬ ஆனால் எல்லாருஞ் சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படிந்ததில்லை. * கர்த்தாவே, எங்கள் கேழ்விப்பட்டதை விசுவாசித்தவனாரென்று யெசாயா சொல்லுகிறானே. * யெச. ௫௩, ௧. யோவா. ௰௨, ௩௮.

௰௭ பின்பு விசுவாசங் கேழ்வியினாலும், கேழ்வியோ பராபரனுடைய வசனத்தினாலும் வருகும்.

௰௮ ஆனால் கேளாதிருந்தார்களோவென்கிறேன், இல்லை. * அதுகளின் தொனி பூமியெங்கும், அதுகளின் வசனங்கள் பூச்சக்கரத்தடையாந்தரங்கள் மட்டும் புறப்பட்டுதே. * சங்கீ. ௰௯, ௫.

௰௯ ஆனால் இஸ்றவேல் அதை அறிந்ததில்லையோவென்கிறேன். முந்தி மோசேதானே: * நான் ஜனமல்லாதவர்கள் பேரிலே பொறாமையையுறுத்துவித்து, உங்களுக்குப் புத்தியற்ற சாதியின் பேரிலே எரிச்

சலுண

றுண்டுபண்ணுவோமென்கிறதைச் சொல்லுகிறான். * ௫. மோ. ௩௨, ௨௧.

௨௰ ஏசாயா வேறேவிதமாய்: * நம்மைத் தேடாதவர்களுக்குத் தென்பட்டோம், நம்மைக்குறித்து விசாரித்துக் கேளாதவர்களுக்கு வெளியரங்கமானோமென்று தைரியமாய்ச் சொல்லுகிறான். * ஏசா. ௬௫, ௧.

௨௧ ஆனால் இஸ்ரவேலைக்குறித்து: * கீழ்ப்படியாததும் எதிர்பேசுகிறதுமான சனத்தண்டைக்கு நாள் முழுதும் நம்முடைய கைகளை நீட்டினோமென்கிறதைச் சொல்லுகிறான். * ஏசா. ௬௫, ௨.

## ௰௧. அதிகாரம்.

### யூதரெல்லாருந் தள்ளப்பட்டதில்லையென்பது.

இப்போதும், பராபரன் தம்முடைய சனத்தைத் தள்ளிவிட்டாரோவென்கிறேன், * இல்லையில்லை; நானும் ஆபிரகாமின் வித்துமாய் பென்யமீன் கோத்திரமுமான இஸ்ரவேலனாயிருக்கிறேனே. * எரே. ௩௧, ௩௭.

௨ பராபரன் தாம் முன்னறிந்த தம்முடைய சனத்தைத் தள்ளிவிட்டதில்லை. அல்லது, எலியாவைக்குறித்து வேதஎழுத்துச் சொல்லுகிறதை அறியீர்களோ.

௩ அவன்: * ஆண்டவரே; உம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொன்று, உம்முடைய பீடங்களை இடித்துப்போட்டார்கள்; நானொருத்தன் மீந்திருக்கிறேன், என் பிராணனையும் வாங்கத் தேடுகிறார்களென்று, இஸ்ரவேலுக்கெதிராகப் பராபரனை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். * ௧. ராசா. ௰௯, ௰.

௪ ஆனால் தேவ உத்தரவு அவனுக்கென்ன சொல்லுது: * பாகாலுக்கு முழங்கால் முடக்காத ஏழாயிரம் மனுஷரை நமக்கு மீத்து வைத்தோமென்குது. * ௧. ராசா. ௰௯; ௰௮.

௫ அந்தடவாய் இக்காலத்திலுங் கிருபையினாலே தெரிந்துகொள்ளுதலின்படியே * ஒரு மீதியிருக்கப்பட்டிருக்குது. * ௯, ௨௭:

௬ அது கிருபையினாலே உண்டாயிருந்ததேயானால், கிரியைகளினாலே உண்டாயிராது, மற்றப்படி கிருபை கிருபையல்ல. அது கிரியைகளினாலே உண்டாயிருந்ததேயானால் கிருபையாயிராது, மற்றப்படி கிரியை கிரியையல்ல.

௭ ஆனதுகொண்டென்ன; இஸ்ரவேல் * தேடுகிறதை அடைந்ததில்லை, தெரிந்துகொள்ளப்பட்டவர்களோவென்றால் அதை அடைந்தார்கள். ஆனால் மற்றவர்கள் [illegible] கடினப்பட்டார்கள். * ௯, ௩௧.

௮ * பராபரன் அவர்களுக்குக் கண்ணித்திரையின் ஆவியையும், காணாதிருக்குங் கண்களையுங் கேளாதிருக்குங் காதுகளையுங் கொடுத்தாரென்றெழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே: * ஏசா. ௬; ௰. ௨௯, ௯. ௰.

௯ தாவீதுஞ் சொல்லுகிறதாவது: * அவர்களுடைய

ய பந்தி அவர்களுக்குச் சுருக்குக் கண்ணியும் [illegible] குச் சரிக்குச் சரிக்கட்டுதலுமாகக்கடவது. * சங்கீ. ௬௯. ௨௩. ௨௪.
௰ காணாதபடிக்கு அவர்கள் கண்கள் அந்தகாரப்படக்கடவது, அவர்கள் முதுகைப் போதுங் குனியப்பண்ணுமென்கிறான்.

¶ யூதசாதி என்றென்றைக்குந் தள்ளப்பட்டிருப்பதில்லை என்பது.

௰௧ இப்போதும் அவர்கள் விழுந்திருக்கவேண்டுமென்று இடறினார்களோ என்கிறேன், இல்லையில்லை. அவர்களுக்குப் பொறாமையை வருத்திக்கத்தக்கதாக அவர்கள் விழுதலினாலே புறச்சாதிகளுக்கு இரட்சிப்புக் கிடைத்தது.
௰௨ அவர்கள் விழுதல் லோகத்துக்கு ஐசுவரியமும் அவர்கள் குறைவு புறச்சாதிகளுக்கு ஐசுவரியமுமாய்ச் சமைந்ததானால், எத்தனை அதிகமாய் அவர்கள் நிறைவு அப்படியாம்.
௰௩ ஏனெனில் என் மாம்சத்தாருக்கு நான் பொறாமையை வருத்தி, அவர்களிற் சிலரை இரட்சிப்பேனென்று,
௰௪ புறச்சாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன். நான் * புறச்சாதிகளுக்கு அப்போஸ்தலனாயிருக்கிறபடியினாலே என் ஊழியத்தை மகிமைப்படுத்துகிறேன். * அப்போ. ௯, ௰௫. ௨௨, ௨.
௰௫ ஏனென்றால் அவர்களைத் தள்ளிவிடுதல் லோகத்துக்கு ஒப்புரவாக்குதலாயிருந்தால் அவர்களை ஏற்றுக்கொள்ளுதல் என்னமாயிருக்கும், மரித்தோரின் உண்டான சீவனைப்போலிருக்குமல்லவோ.
௰௬ முதல்விளைச்சல் பரிசுத்தமானால், அம்பாரமும் அப்படியாம், வேர் பரிசுத்தமானால் கிளைகளும் அப்படியாம்.
௰௭ ஆனால் கிளைகளிற் சிலதுகள் ஒடித்துத் தள்ளப்பட்டு, காட்டொலிவமரமாகிய நீ அதுகளுக்குள்ளே பொருத்தவைக்கப்பட்டு, ஒலிவமரத்தினுடைய வேருக்கும் புஷ்டிக்கும் உடன்பங்காளியாய்ப் போனதுண்டானால்,
௰௮ கிளைகளுக்கெதிராய்ப் பெருமைபாராட்டாதே, பாராட்டினாயேயாகில், நீ வேரைச் சுமக்காமல், வேர் உன்னைச் சுமக்கிறதென்று நினைத்துக்கொள்.
௰௯ இப்போதும் நான் பொருத்தவைக்கப்படுவதற்காகக் கிளைகள் ஒடித்துத் தள்ளப்பட்டதென்கிறாய்.
௨௰ நல்லது, அவிசுவாசத்தினால் அதுகள் ஒடித்துத் தள்ளப்பட்டது, நீயோவெனில் விசுவாசத்தினாலே நின்றிருக்கிறாய், மேட்டிமைச் சிந்தையாயிராமல், பயந்திரு.
௨௧ ஏனென்றால் பராபரன் சுவாபக்கிளைகளைத் தப்பவிடாதிருந்தாராகில், உன்னையுந் தப்பவிடாதிருப்பாரோவென்று பயந்திரு.
௨௨ ஆகையால் பராபரனுடைய தயவையுங் கண்டிப்பையும் பார், விழுந்தவர்கள் பேரிலே [illegible]

கண

கண்டிப்பையும், உன்பேரிலோ, நீ தயவிலே நிலை
த்திருந்தால், இருக்கிறதயவையுந்தானே. நிலைத்திரா
யேயானால் நீயும் வெட்டுண்டு போவாய்.

௨௩ அவர்களோவென்றால் * அவிசுவாசத்திலே நி
லைத்திராவிட்டால், பொருத்தவைக்கப்படுவார்கள்.
ஏனென்றால் அவர்களை மறுபடியும் பொருத்தவைக்க
ப் பராபரன் வல்லவராயிருக்கிறார். * ௨. கொ. ௩, ௰௬.

௨௪ ஏனென்றால் நீ சுபாவப்படியே காட்டொ
லிவமரத்திலிருந்து வெட்டப்பட்டு, சுபாவத்து
க்கு விரோதமாய் நல்லொலிவமரத்திலே பொருத்தவைக்கப்பட்டா
யானால், எத்தனை அதிகமாய் சுபாவக்கிளைகளாகிய
இவர்கள் தங்கள் சுய நல்லொலிவமரத்திலே பொருத்தவைக்
கப்படுவார்கள்.

௨௫ ஏனென்றால், சகோதரரே, நீங்கள் உங்களில் தா
னே புத்திமான்களாயிராதபடிக்கு, இந்த ரகசிய
த்தை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. அ
தெனில், * புறசாதிகளின் நிறைவு உள்பிரவேசிக்கு
மட்டும், இஸ்ரவேலில் ஒரு பங்குக்கு மனக்கடின
முண்டாச்சுது. * லூ. ௨௧, ௨௪.

௨௬ இந்தப்படியாய் இஸ்ரவேலெல்லாம் இரட்சிக்க
ப்படும். * மீட்கிறவர் சீயோனுக்கு வந்து, அவபத்தி
யை யாக்கோபை விட்டு விலக்குவாரென்றும், *
யெசா. ௫௯, ௨௰.

௨௭ நாம் அவர்கள் பாவங்களை நீக்கும் போது,
இதுவே அவர்களுக்கு நம்மால் உண்டாகிய உடன்ப
டிக்கையென்றும் எழுதியிருக்கிறபிரகாரமாகத்தா
னே. * யெரே. ௩௧, ௩௩.

௨௮ சுவிசேஷத்தின்படியேயானால், அவர்கள் உங்
கள் நிமித்தியமாகப் பகையாளிகள், ஆனால் தெரிந்து
கொள்ளுதலின்படியே அவர்கள் பிதாக்கள் நிமித்தி
யமாகச் சிநேகிக்கப்பட்டவர்கள்.

௨௯ ஏனென்றால் தம்முடைய வரங்களுக்காக
வும் அழைக்குதலுக்காகவும் பராபரன் திரும்பமன
ஸ்தாபப்படுகிறதில்லை,

௩௰ ஏனென்றால் நீங்கள் முற்காலத்திலே பராப
ரனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்போதோவென்றால்
இவர்களுடைய அவிசுவாசத்தாலே இரக்கம் பெற்றது
போலே,

௩௧ இவர்களும் இப்போ உங்களுக்குக் கிடைத்த இர
க்கத்துக்குக் கீழ்ப்படியாதே போனார்கள், இவர்களு
ம் இரக்கம் பெறத்தானே.

௩௨ ஏனென்றால் பராபரன் எல்லாருக்கும் இரங்
க, * எல்லாரையும் ஏகமாய் அவிசுவாசத்துக்குள் அ
டைத்துப்போட்டார். * கலா. ௩, ௨௨.

௩௩ ஆ பராபரனுடைய ஞானம் அறிவுள்ளதுக
ளின் ஐசுவரியமெத்தனை ஆழம், * அவருடைய ஞாய
த்தீர்ப்புகளெத்தனை பாய ஆராயக்கூடாதது
களும், அவருடைய வழிகளெத்தனையாய் ஆராயப்
படாததுகளுமாயிருக்குது. * சங். ௩௬, ௭.

௩௪ ஏனென்றால் கர்த்தருடைய சிந்தையை அறிந்த
வனார், * அல்லது அவருக்கு உசாவுதுணையானவனார்,
* யெசா. ௪௰, ௰௩.

௩௫ அல்லது * தனக்குப் பதிலாகக் கொடுக்கப்பட, முந்தி அவருக்குக் கொடுத்தவனார் * யோபு. ௪௧, ௨.

௩௬ ஏனென்றால் எல்லாம் அவராலும் அவர் மூலமாகவும் அவருக்கென்றும் இருக்கிறது. அவருக்கு என்றென்றைக்கும் மகிமையுண்டாகக்கடவது. ஆமென்.

## ௰௨. அதிகாரம்.

### ௧ நீதிமான்களாக்கப்பட்டவர்கள் நடக்கவேண்டிய பிரமாணங்கள்.

இப்போதும், சகோதரரே, நீங்கள் புத்தியுள்ள ஆராதனை பண்ணுகிறவர்களாய் * உங்கள் சரீரங்களைச் சீவனும் பரிசுத்தமும் பராபரனுக்கு நல்ல பிரியமுமான பலியாக நிறுத்த, பராபரனுடைய இரக்கங்களைக் கொண்டு உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். * ௬, ௰௩.

௨ நீங்கள் * இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒத்தவேஷந் தரிக்காமல், நீங்கள் * பராபரனுடைய நன்மையும் நற்பிரியமும் பரிபூரணமுமான சித்தம் என்னதென்று அறிவதற்குச் சோதிக்கும்படிக்கு, உங்கள் மனதின் புதிதாகுதலினாலே மறுரூபமாகுங்கோள். * ௧. பேது. ௧, ௰௪. ௰௫. * எபே. ௫, ௰௭.

௩ ஏனென்றால், எண்ணவேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல், * பராபரன் அவனவனுக்குப் பகிர்ந்த விசுவாசத்தின் அளவுக்குத்தக்கதாகத் திரமாய் அவனவன் தெளிவாய் எண்ண, நான் உங்களிலிருக்கிற எவ்வொருத்தனுக்கும் எனக்குக் கட்டளையிடப்பட்ட கிருபையினாலே சொல்லுகிறேன். * ௧. கொ. ௰௨, ௰௧. எபே. ௪, ௭.

௪ ஏனென்றால் * ஒரே சரீரத்திலே நமக்கு அனேக அவயவங்களிருந்தும் எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழிலில்லாததுபோலே, * ௧. கொ. ௰௨, ௨௭.

௫ அனேகராயிருக்கிற நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்கிறோம், ஆனால் அவனவன் பார்த்தால் ஒன்றுக்கொன்று நாம் அவயவங்களாயிருந்து,

௬. நமக்குக் கொடுக்கப்பட்ட கிருபையின்படியே * பலவித வரங்களுள்ளவர்களாயிருக்கிறோம். * ௧. கொ. ௰௨, ௪.

௭ தீர்க்கதரிசனமானாலும், விசுவாசப் பிரமாணத்துக்கொத்ததாயிருக்கக்கடவது * ஒருத்தன் ஊழியக்காரனானால் ஊழியத்திலும் போதிக்கிறவனானால் போதகத்திலும், * ௧. பேது. ௪, ௰. ௰௧.

௮ புத்தி சொல்லுகிறவனானால் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவான். கொடுக்கிறவன் கபடில்லாமையாய்க் கொடுக்கவும், முதலாளியானவன் சாக்கிரதையுடனேயிருக்கவும், இரக்கஞ்செய்கிறவன் உச்சாயத்துடனே செய்யவுங்கடவன்.

௯ சிநேகம் மாயமற்றதாயிருப்பதாக. பொல்லாப்பை அருவருத்து நன்மைக்குப் பற்றிக்கொண்டிருங்கோள்.

௰ * சகோதரசிநேகத்திலே ஒருவருக்கொருவர் பட்சமாயிருங்கோள், கனம்பண்ணுகிறதிலே ஒருத்தருக்கொருத்தர் முந்திக்கொள்ளுங்கோள். * எபே. ௪, ௨. ௩.

௰௧ சாக்கிரதையிலே அசட்டராயிராதேயுங்கோள், * ஆவியிலே அனலாயிருங்கோள், கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கோள். * அபி. ௩, ௰௫.

௰௨ நம்பிக்கையிலே * சந்தோஷமாயிருங்கோள், உபத்திரவத்திலே பொறுமையாயிருங்கோள், செபத்திலே உறுதியாய்த் தரித்திருங்கோள். * லூ. ௰, ௨௰.

௰௩ * பரிசுத்தவான்களுடைய தாட்சங்களுக்கு உதவி செய்யுங்கோள். * * பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ளக் கருத்தாயிருங்கோள். * ௧. கொ. ௰௬, ௧. ௨. * * எபிரே. ௰௩, ௨.

௰௪ * உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களை ஆசீர்வதியுங்கோள், சபிக்காமல் ஆசீர்வதியுங்கோள். * மத். ௫, ௪௪.

௰௫ சந்தோஷப்படுகிறவர்களுடனே சந்தோஷப்படுங்கோள், அழுகிறவர்களுடனே அழுங்கோள்.

௰௬ ஒருவருக்கொருவர் * ஏகசிந்தையாயிருங்கோள், மேட்டிமையானதுகளைச் சிந்தியாமல், தாழ்மையானது * களுக்கு உடந்தையாகுங்கோள், உங்களிலே தானே புத்திமான்களாயிராதேயுங்கோள். * ௧. கொ. ௧, ௰.

௰௭ * ஒருத்தனுக்குந் தின்மைக்குத் தின்மை செய்யாதேயுங்கோள். எல்லா மனுஷருக்கும் முன்பாக நன்மையானதுகளைப் பராமரியுங்கோள். * ௧. தெச. ௫, ௰௫.

௰௮ கூடுமானால் எல்லா மனுஷரோடும் உங்களாலே ஆனமட்டுக்கு * சமாதானமாயிருங்கோள். * எபிரே. ௰௨, ௰௪.

௰௯ பிரியமானவர்களே, நீங்கள் * சரிக்குச்சரிக்கட்டாமல், கோபத்துக்கொழுங்கிப்போங்கோள், ஏனென்றால், * * நீதியைச் சரிக்கட்டுதல் நம்முடையது, நாமே பதிலுக்குக் கொடுப்போமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றெழுதியிருக்குது. * மத். ௫, ௩௯. * * ௫. மோ. ௩௨, ௩௫.

௨௰ ஆகையால் * உன் சத்துரு பசியானால், அவனுக்கு அசனங்கொடு, அவனுக்குத் தாகமானால், அவன் தாகத்தைத் தீரு, ஏனென்றால் நீ இப்படிச் செய்கிறதினாலே அவன் தலையின்மேல் எரிகிற கரிகளைக் குவிப்பாய். * வாக்கி. ௨௫, ௨௧. ௨௨.

௨௧ நீ பொல்லாப்பினாலே வெல்லப்படாமல், பொல்லாப்பை நன்மையினாலே வெல்லு.

## ௰௩. அதிகாரம்.

¶ அப்பாலும் நல்ல நடக்கைக்கான பிரமாணங்கள்.

எந்த ஆத்துமாவும் * மேலப்பட்ட அதிகாரங்களுக்குக் கீழ்ப்பட்டிருக்கக்கடவது. ஏனென்றால் பராபரனாலே உண்டாகாத அதிகாரமில்லை, உண்டான அதி

காரங்

காரங்கள் பராபரனாலே கட்டளையிடப்பட்டதுகள். * தீத்து. ௩, ௧.

௨ ஆனதுகொண்டு அதிகாரத்துக்கு எதிர்க்கிறவன் பராபரனுடைய கட்டளைக்கு எதிர்க்கிறான். எதிர்க்கிறவர்களோ தங்களுக்குத் தானே ஆக்கினையைச் சம்பாதிக்கிறார்கள்.

௩ ஏனென்றால் துரைகள் நற்கிரியைகளுக்கல்ல, துற்கிரியைகளுக்குப் பயங்கரமாயிருக்கிறார்கள். * ஆகையால் நீ அதிகாரத்துக்குப் பயப்படாமலிருக்க வேணுமென்றால், நன்மைசெய், அப்பொழுது அதினால் உனக்குப் புகட்சியுண்டாம். * ௧. பே. ௨, ௰௩. ௰௪.

௪ ஏனென்றால் அவன் உனக்கு நன்மையாகப் பராபரனுடைய ஊழியக்காரனாயிருக்கிறான். நீ பொல்லாப்பைச் செய்தாயேயாகில், பயப்படு, அதேனென்றால் விருதாவாய்ப் பட்டயத்தைப் பிடித்திரான், ஏனென்றால் பொல்லாப்பைச் செய்கிறவன்மேல் கோபாக்கினைவர அவன் நீதியைச் சரிக்கட்டுகிற தேவஊழியக்காரனாயிருக்கிறான்.

௫ ஆகையினாலே நீங்கள் கீழ்ப்படிய வேண்டியதாயிருக்குது, கோபாக்கினையினிமித்தமாத்திரமல்ல, மனச்சாட்சியினிமித்தமாகவுந்தானே.

௬ இதுக்காகத்தானே வரியுங் கொடுக்கிறீர்களே. அதேனென்றால் அவர்கள் இந்த வேலைக்கென்று நிலையாய்த் தரித்து நிற்கிற தேவஊழியக்காரராயிருக்கிறார்கள்.

௭ ஆகையால் * எல்லாருக்குஞ் செலுத்தவேண்டியதைச் செலுத்துங்கோள், இறைசெலுத்தவேண்டியவனுக்கு இறையையும், தீர்வை செலுத்தவேண்டியவனுக்குத் தீர்வையையும், பயத்தைச் செலுத்தவேண்டியவனுக்குப் பயத்தையும், கனத்தைச் செலுத்தவேண்டியவனுக்குக் கனத்தையுஞ் செலுத்துங்கோள். * மத். ௨௨, ௨௧.

௮ ஒருத்தரையொருத்தர் சினேகிக்கிற கடனேயல்லாமல், ஒருத்தருக்கும் ஒன்றுங் கடன்படாதேயுங்கோள், ஏனென்றால் மற்றவனைச் சினேகிக்கிறவன் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினான்.

௯ ஏனென்றால்: விபசாரம்பண்ணாயாக, கொலைசெய்யாயாக, களவுசெய்யாயாக, பொய்ச்சாட்சி சொல்லாயாக, இச்சியாயாக என்றதும், வேறே கற்பனை ஏதுண்டோ, அதுவும்: உனக்கடுத்தவனை உன்னைப்போலச் சினேகிப்பாயாக என்ற இந்த வாக்கியத்தின் தொகையிலே அடங்கியிருக்குது.

௰ * சினேகம் அயலானுக்குப் பொல்லாப்பைச் செய்யாது, அப்படியே சினேகம் நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்குது. * ௧. கொ. ௰௩. ௪. ௫.

௰௧ * நித்திரையை விட்டெழுந்திருக்க வேளையாச்சுதென்று நாம் காலத்தை அறிந்திருக்கிறபடியினாலே, இப்படி எச்சரிக்கிறேன், ஏனென்றால் நாம் விசுவாசிகளான வேளையைப் பார்க்க இப்பொழுது இரட்சிப்பு நமக்குச் சமீபித்திருக்குது. * எபே. ௫, ௰௪.

௰௨ * இராச்சேனம் போச்சுது, பகலோ வெளிச்சமிட்டுது. ஆனபடியினாலே அந்தகாரத்துடைய கி

ரியைக

ளைக்களைப்போட்டுவிட்டு, வெளிச்சத்தின் ஆயுதங்
களைத்தரித்துக்கொள்ளக்கடவோம். * க. யோ. ௨, ௮.
௰௩ பகலிலே நடக்கிறபடியே யோக்கியமாய் நடக்
கக்கடவோம். * பெருந்தீனியிலும் வெறியிலும்
அல்ல, சயனங்களிலும் காமவிகாரங்களிலும் அல்ல,
* * விரோதத்திலும் பொறாமையிலும் அல்ல. * லூ. ௨௧,
௩௪. க. கொ. ௬, ௯, ௰. * * யாக. ௩, ௰௪——௰௬.
௰௪ நீங்கள் * கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைத்தரித்
துக்கொண்டு, இச்சைகளுக்கேதுவாய் உடலைப்பேணா
திருங்கள். * கலா. ௩, ௨௭.

## ௰௪. அதிகாரம்.

¶ விசுவாசபெலயீனரை நடத்தவேண்
டிய மரியாதை.

விசுவாசபெலயீனனைச்சேர்த்துக்கொள்ளுங்கள், அவனுடைய மன அய்யங்களைக்குற்றமாய் நிற்ணிக்கவோ அல்ல.
௨ ஒருத்தன் எல்லாவற்றையும் போசிக்கலாமென்று விசுவாசிக்கிறான், பெலயீனனோவென்றால் மரக்கறிகளைப்போசிக்கிறான்.
௩ போசிக்கிறவன் போசியாதவனை அற்பமாயெண்ணவேண்டாம், போசியாதவன் போசிக்கிறவனைக் குற்றமாய் நிற்ணிக்கவும் வேண்டாம், ஏனென்றால் பராபரன் அவனை ஏற்றுக்கொண்டார்.
௪ * அன்னியனுடைய வேலைக்காரனைக் குற்றமாய் நிற்ணிக்கிற நீயார், தன்னுடைய எசமானுக்கு நிற்கிறான் அல்லது விழுகிறான். ஆனாலும் நிலைநிற்கப்படுவான், ஏனென்றால் பராபரன் அவனை நிலைநிற்கவல்லவராயிருக்கிறார். * யாக. ௪, ௰௨.
௫ ஒருத்தனே * ஒருநாளை மற்றொருநாளிலும் விசேஷித்ததாகத்தீர்க்கிறான், வேறொருத்தனோவென்றால் எல்லாநாளையுஞ்சரியாகத்தீர்க்கிறான். அவனவன் தன்னுடைய சிந்தையிலே முழுநிச்சயத்தோடிருக்கக்கடவான். * கொலோ. ௨, ௰௬.
௬ நாளைப்பார்க்கிறவன் கர்த்தருக்கென்று பார்க்கிறான், நாளைப்பாராதவன் கர்த்தருக்கென்று பாராதிருக்கிறான். போசிக்கிறவன் கர்த்தருக்கென்று போசிக்கிறான், ஏனென்றால் * பராபரனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறான், போசியாதவன் கர்த்தருக்கென்று போசியாதிருந்து பராபரனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறான். * க. கொ. ௰, ௩௧.
௭ அதேதென்றால் நம்மில் ஒருவனுந்தனக்கென்று பிழைக்கிறதுமில்லை, ஒருவனுந்தனக்கென்று மரிக்கிறதுமில்லை.
௮ ஏனென்றால் நாம் பிழைத்தாலுங் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம், நாம் மரித்தாலுங் கர்த்தருக்கென்று மரிக்கிறோம், ஆகையால் நாம் பிழைத்தாலும் மரித்தாலுங் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்.
௯ ஏனென்றால் கிறிஸ்து மரித்தோர்மேலுஞ்சீவனுள்ளோர்மேலும் ஆண்டவராயிருப்பதற்காக, மரித்தும் எழுந்தும் உயிர்த்துமிருக்கிறார்.

௰ நீயோவெனில் * உன் சகோதரனுக்குத் தகமசய் நிருணிப்பானேன், அல்லது நீயும் உன் சகோதரனை அற்பமாயெண்ணுவானேன். ** எல்லாருங் கிறீஸ்துவினுடைய நியாயாசனத்துக்கு முன்பாக நிறுத்தப்படுவோமே. * ஜர். ௯, ௩௭. ** மத். ௨௫, ௩௧ ௩௨.

௰௧ ஏனென்றால்: * முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்குமென்றும், நாவியாவும் பராபரனுக்கு அறிக்கைபண்ணுமென்றும் நம்முடைய சீவனைக் கொண்டு வீமயுகிறேனென்கிறதைக் கர்த்தர் சொல்லுகிறாரென்றெழுதியிருக்குது. * ஏசா. ௪௫, ௨௩. ௨௪. பிலிப். ௨, ௯—௰௧.

௰௨ ஆகையால் நம்மிலொவ்வொருவருந் தன்தனக்காகப் பராபரனுக்குக் கணக்கொப்பிவிப்பான்.

௰௩ ஆனபடியினாலேயினி யொருத்தரொருத்தர்க் குத்தமாய் நிருணியாதிருக்கக்கடவோம், அதைவிட, சகோதரனுக்கு * தடுக்கலையும் அல்லது இடறலையும் போடாதிருக்கவேண்டுமென்று நிருணயம்பண்ணுங்கோள். * மத். ௰௮, ௭.

௰௪ * ஒன்றுந் தன்னாலே தீட்டுள்ளதல்லவென்று கர்த்தராகிய யேசுவுக்குள் நிச்சயத்திருக்கிறேன், யாதொன்றைத் தீட்டுள்ளதாக எண்ணுகிறவனுக்குமாத்திரம் அது தீட்டுள்ளது. * மத். ௰௫, ௰௧.

௰௫ போசனத்தால் உன் சகோதரன் துக்கமடைந்தானேயாகில், நீ சிநேகத்தின்படியே நடவாதே போறாய், கிறீஸ்து மரித்து மீட்டவனை * உன் போசனத்தினாலே கெடுக்காதே. * ௧. கொ. ௮, ௯—௰௨.

௰௬ ஆகையால் உங்கள் நன்மை தூஷணிக்கப்படாதிருப்பதாக.

௰௭ ஏனெனில் பராபரனுடைய ராட்சியம் * போசிப்புங்குடிப்புமல்ல, அது நீதியுஞ் சமாதானமும் பரிசுத்த ஆவியினால் உண்டாகிற சந்தோஷமுந்தானே. * ௧. கொ. ௮, ௮.

௰௮ ஏனென்றாலிதுகளிலே கிறீஸ்துவுக்கூழியஞ்செய்கிறவன் பராபரனுக்குகந்தவனும் மனுஷருக்குத்தமனுமாயிருக்கிறான்.

௰௯ ஆனபடியினாலே சமாதானத்துக்கும் அன்னியோன்னியமொருவனைக் கட்டுதலுக்கும் உதவுகிறதுகளைப் பின்றுடரக்கடவோம்.

௨௰ போசன நிமித்தியமாகப் பராபரனுடைய கிரியையையிடித்துப்போடாதே. எல்லா வஸ்துகளுஞ் சுத்தந்தான், ஆனால் மனத்தடுக்கலுடனே போசிக்கிற மனுஷனுக்கு அது ஆகாததாயிருக்குது.

௨௰௧ மாங்ஷம் போசியாதிருக்கிறதும், மதுபானங் குடியாதிருக்கிறதும், பின்னையெதினாலே உன் சகோதரன் தடுக்கலப்படுகிறானோ, அல்லது இடறிக்கொள்ளுகிறானோ, அல்லது பெலயீனப்படுகிறானோ, அதை விலக்கியிருக்கிறதும் நல்லது. * ௧. கொ. ௮, ௰௩.

௨௰௨ உனக்கு விசுவாசமிருந்தால் அதுஉன்னிடத்திலே தானே பராபரனுக்கு முன்பாக உனக்கிருக்கட்டும், நல்லதென்றறிந்ததிலே தன்னைத்தானே குத்தமாய் நிருணியாதவன் பாக்கியவான்.

௨௩ சந்தேகப்படுகிறவனோவென்னில், போசிக்கால் குத்தவாளியாய்த் தீர்க்கப்படுகிறான், ஏனென்றால் விசுவாசத்தினாலே போசிக்கவில்லை. * விசுவாசத்தினாலே வராதெல்லாம் பாவம். * தீத்து. ௧; ௰௫.

## ௰௫. அதிகாரம்.

### ௧ அப்பருமரியாதையுள்ள நடக்கைக் கானபுத்தி.

பெலத்திருக்கிற நாமோவென்னில் நம்முடைய மேலே தானே பிரியமாயிராமல், * பெலனற்றவர்களுடைய பெலயீனங்களைச் சுமக்கவேணும். * ௧. கொ. ௯, ௨௨.

௨ ஆகையால் நம்மில் ஒவ்வொருத்தன் நன்மையும் ஞானக்கட்டுதலுமுண்டாக அடுத்தவனுக்குப் பிரியப்படக்கடவான்.

௩ ஏனென்றால் கிறிஸ்துவும் நம்முடைய மேல் தானே பிரியம் வைத்திராமல்: * உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்ததென்று எழுதியிருக்கிறபடியேயிருந்தார். * சங்கீ. ௬௯, ௰.

௪ ஆனால் முன்னெழுதப்பட்டதுகளெல்லாம் * நம்முடைய போதனையாக முன்னெழுதப்பட்டது; பொறுமையினாலும் வேதவெழுத்துகளின் தேற்றரவினாலும் நமக்கு நம்பிக்கையுண்டாயிருப்பதற்காகத்தானே. * ௨. தீமோ. ௩, ௰௬. ௰௭.

௫ ஆனால் பொறுமைக்கும் தேற்றரவுக்கும் பராபரனானவர் உங்களுக்குக் கிறிஸ்து யேசுவின்படியே ஏகமனதுகளோடொன்றாகச் சிந்தையாயிருக்கத்தக்கதாக அருளிக்கொடுக்கக்கடவர்.

௬ நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தரான யேசுக்கிறிஸ்துவின் பிதாவாகிய பராபரனை ஏகவாயினாலே மகிமைப்படுத்தக்கதாக.

௭ ஆகையினாலே கிறிஸ்துவும் பராபரனுக்கு மகிமையுண்டாக நம்மையேற்றுக்கொண்டதுபோலே ஒருத்தரையொருத்தர் ஏற்றுக்கொள்ளுங்கோள்:

௮ மேலும் பிதாக்களுக்குப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களைத் திடப்படுத்துகிறதுக்கு, யேசுக்கிறிஸ்து பராபரனுடைய சத்தியத்துக்காக விருத்தசேதனத்துக்கு ஊழியக்காரனானாரென்றும்,

௯ புறசாதிகளோவென்றால் இரக்கத்துக்காகப் பராபரனை மகிமைப்படுத்துகிறார்களென்று சொல்லுகிறேன். * இதுநிமித்தியம் சாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்துக்குச் சங்கீதம் பாடுவேனென்றெழுதியிருக்கிறபடிதானே. * சங்கீ. ௰௮, ௫௰.

௰ பின்னும்: * சாதிகளே, அவருடைய சனத்தோடேகூடச் சந்தோஷப்படுங்கோளென்கிறார். * ௫. மோ. ௩௨, ௪௩.

௰௧ பின்னும்: * எல்லாச் சாதிகளே, கர்த்தரைத் துதியுங்கோள், எல்லாச் சனத்தாருங்களே, அவரைப் புகழுங்கோளென்கிறார். * சங்கீ. ௱௰௭, ௧.

௰௨ பின்னையும்: * ஈசாயின் வேரும், சாதிகளையாளும்படி எழும்புகிறவருமுண்டு. அவர் பேரில் சாதிகள் நம்பிக்கை வைப்பார்களென்று எசாயா சொல்லுகிறான். * ஏசா. ௰௧, ௰.

௰௩ ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியின் பெலத்தினாலே நம்பிக்கையிலே பெருகும்படிக்கு, நம்பிக்கையினுடைய பராபரன் உங்களை விசுவாசத்தினுண்டாகும் எல்லாச் சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிரப்பக்கடவார்.

## ௨ நிருபமுகவு.

௰௪ ஆனால், என் சகோதரரே, நீங்களே நற்குணத்தினாலே நிறைந்தவர்களும் சகல அறிவினாலே நிரப்பப்பட்டவர்களும், ஒருத்தருக்கொருத்தர் புத்தி சொல்ல வல்லவர்களுமாயிருக்கிறீர்களென்று, நான்தானும் உங்களைப்பேரிலே நிச்சயித்திருக்கிறேன்.

௰௫ ஆகிலும், சகோதரரே, புறசாதிகளின் பலி பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டுப் பிரியமான பலியாகும்படிக்கு, நான் பராபரனுடைய சுவிசேஷத்தைப் புறசாதிகளுக்குள்ளே ஆசாரியனைப்போல நடத்துகிற யேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனாயிருக்க, பராபரனாலே எனக்குக் கொடுக்கப்பட்ட கிருபையினாலே,

௰௬ நான் உங்களை நினைப்பூட்டுகிறவனாய் உங்களுக்குச் சற்றுத் துணிவாய் எழுதினேன்.

௰௭ பராபரனுக்கடுத்த காரியங்களிலே கிறிஸ்துயேசுவுக்குள் மேன்மைபாராட்டும் முகாந்தரம் அதினாலே எனக்குண்டு.

௰௮ ஏனென்றால், புறசாதிகளைக் கீழ்ப்படியும்படிக்குக் கிறிஸ்து என்னைக்கொண்டு வார்த்தையினாலும் கிரியையினாலும், அடையாளங்களின் அற்புதங்களுடைய வல்லமையினாலும், பராபரனுடைய ஆவியின் பெலத்தினாலும் நடப்பித்துக்கொள்ளாயே அல்லாமல் வேறொன்றையாகிலுஞ் சொல்ல நான் துணிவதில்லை.

௰௯ அப்படியே யெருசலேம் துவக்கி, சுத்திலும் இல்லிரிக்குந்தேசமட்டாகக் கிறிஸ்துவினுடைய சுவிசேஷ ஊழியத்தை நிறைவேற்றினேன்.

௨௰ இப்படி நான் அன்னிய அஸ்திவாரத்தின் மேலே கட்டாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய நாமம் விளங்காத இடங்களிலே சுவிசேஷத்தை அறிவிக்குங் கனத்தை நாடினேன்.

௨௧ * அவருடைய விசேஷம் அறிவிக்கப்படாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்வார்களென்றும் எழுதியிருக்கிறதின்படியாகத்தானே. * ஏசா. ௫௨, ௰௫.

௨௨ இதினாலே தான் உங்களிடத்துக்கு வர வெகுவிசை தடுக்கப்பட்டேன்.

௨௩ ஆனால் இப்போ இந்தப்புறங்களிலே எனக்கு இடமில்லாதபடியினாலும், உங்களிடத்துக்கு வர அநேக வருஷங்களாய் எனக்கு வாஞ்சையுண்டாயிருக்கிறபடியினாலும்,

௨௪ உங்களிடத்துக்கு நான் ஸ்பானியாவுக்கு

குப

குப்பயணம்பண்ணும்போது வருவேன், ஏனென்றால்
நான் உருவப்பயணம்போகையில் உங்களைக்
கண்டு, உங்களோடேயிருக்கிறதிலே முந்தச் சகதுமனரேமமாய்ப்
பட்டு, பிறபாடு உங்களாலே வழிவிடப்
படுவேனென்று நம்பியிருக்கிறேன்.
௨௫ இப்போதோவெனில் * யெருசலேமுக்குப் பரி
சுத்தவான்களுக்கூழியமாய்ப்பயணம்பண்ணுகிறேன்.
* அப்போ. ௧௯, ௨௧.
௨௬ அதெந்தென்றால் மக்கெதோனியதேசத்தாரும்
அகாயாதேசத்தாரும் யெருசலேமிலிருக்கும் பரிசுத்த
வான்களிலுள்ள தரித்திரருக்குச் சில தருமவுதவிசெ
ய்யப்பிரியப்பட்டார்கள்.
௨௭ பிரியப்பட்டார்கள், அவர்களுக்குக் கடன்
பட்டவர்களுமாயிருக்கிறார்கள், ஏனென்றால் புறச்சா
தியார் அவர்களுடைய ஞானநன்மைகளிலே பங்குபெ
ற்றிருந்தால், அவர்களுக்குச் சரீரநன்மைகளிலே ஊ
ழியஞ்செய்யக் கடனாளருமாயிருக்கிறார்கள்.
௨௮ இதைநான் நிறைவேற்றி, இந்தப்பலனை அவ
ர்களுக்கு முத்திரைப்படுத்தினபின்பு உங்கள் ஊர்
வழியாய் இஸ்பானியாவுக்குப் போய்விடுவேன்.
௨௯ நான் உங்களண்டைக்கு வரும்போதோவென
றால், கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் ஆசீர்வாதப்ப
ரிபூரணத்துடனே வருவேனென்றறிந்திருக்கிறேன்.
௩௰ ஆனால், சகோதரரே, யூதேயாவிலிருக்கிற அ
விசுவாசிகளுக்கு நான் தப்புவிக்கப்படுகிறதுக்கும்,
நான் யெருசலேமுக்குக் கொண்டுபோய்ச் செலுத்து
கிற தருமச்சகாயம் பரிசுத்தவான்களுக்கு நற்பிரியமாகி
றதுக்கும்,
௩௧ நான் பராபரனுடைய சித்தத்தினாலே சந்தோஷ
த்துடனே உங்களண்டைக்கு வந்து உங்களோடே
கூட முசிப்பாறப்படுகிறதுக்குமாக,
௩௨ நீங்கள் பராபரனை நோக்கி என்னுக்காகச் செ
ய்யும் வேண்டுதல்களிலே என்னுடனேகூட * போ
ராட நம்முடைய கர்த்தராகிய யேசுகிறிஸ்துநிமித்தியமா
கவும், ஆவியினுடைய சிநேகத்தின் நிமித்தியமாகவு
ம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். * ௨. தெச.
௩, ௧. ௨. ௧. மோ. ௩௨, ௨௬.
௩௩ ஆறுதலச்சமாதானத்தினுடைய பராபரன் உங்க
ளெல்லாரோடுங்கூட இருக்கக்கடவார், ஆமென்.

## ௧௬. அதிகாரம்.

¶ அப்பாலும் முகவுவாழ்த்துகள்.

கெங்கிரேயாவூர்ச்சபையின் ஊழியக்காரியாகிய ந
ம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் பரிசுத்தவா
ன்களுக்கேற்கப்பிரகாரமாகக் கர்த்தருக்குள் ஏற்றுக்
கொண்டு, எந்தக்காரியத்திலே உங்களாலே சகாயம் அவளு
க்குத் தேவையாயிருக்குமோ, அதிலே அவளுக்குச் சகாயவா
யிருப்பதற்கு அவளை உங்களுக்கு ஒப்புவிக்கிறேன்.
௨ ஏனென்றால் அவளும் அநேகருக்கும் எனக்குங்
கூட, ஆதரவாயிருந்தாள்.

௩ கிறிஸ்துயேசுவுக்குள்ளென் உடன் வேலையாள்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். அப். ௰௮, ௨. ௨௬.

௪ அவர்கள் என் பிராணனுக்காகத் தங்களுடைய கழுத்தைத் தந்திட்டார்கள், அவர்களுடைய உபகாரத்தை நான் மாத்திரமல்ல, புறசாதிகளுடைய எல்லாச் சபைகளும் நன்றியறிகிறார்கள்.

௫ அவர்களுடைய வீட்டில் கூடிய சபையையும் வாழ்த்துங்கள், அகாயாவிலே கிறிஸ்துவுக்கு முதலாகனியாகியனானனுடப் பிரியமான எப்பெனேத்துவை வாழ்த்துங்கள்.

௬ எங்களுக்காக மிகவும் பிரயாசப்பட்ட மரியாளை வாழ்த்துங்கள்.

௭ அப்போஸ்தலருக்குள்ளே பேர் பெற்றவர்களும், எனக்கு முந்திக் கிறிஸ்துவுக்குள்ளானவர்களும், என் இனத்தாரும், என்னுடனே கூடக் காவல்பண்ணப்பட்டிருந்தவர்களுமான அந்திரோனீக்கையும் யூனியாவையும் வாழ்த்துங்கள்.

௮ கர்த்தருக்குள் எனக்குப் பிரியமான அம்பலியாவை வாழ்த்துங்கள்.

௯ கிறிஸ்துவுக்குள் நம்முடைய உடன் வேலையாளாகிய உர்பானுவையும் எனக்குப் பிரியமான ஸ்தாக்கியையும் வாழ்த்துங்கள்.

௰ கிறிஸ்துவுக்குள் உத்தமனாகிய அப்பெல்லேயை வாழ்த்துங்கள், அரிஸ்தொபுலியினுடைய மனுஷரிலுள்ளவர்களை வாழ்த்துங்கள்.

௰௧ என் இனத்தானாகிய ஏரோதியோனை வாழ்த்துங்கள், நற்கீசுவினுடைய மனுஷரில் கர்த்தருக்குள்ளானவர்களை வாழ்த்துங்கள்.

௰௨ கர்த்தருக்குள் பிரயாசப்பட்ட திரிப்பேனாளையும் திரிப்போசாளையும் வாழ்த்துங்கள், கர்த்தருக்குள் மிகவும் பிரயாசப்பட்ட பிரியமான பெர்சியாளை வாழ்த்துங்கள்.

௰௩ கர்த்தருக்குள் தெரிந்துகொள்ளப்பட்ட ரூப்புவையும் எனக்குந் தாயாகிய அவனுடைய தாயாரையும் வாழ்த்துங்கள்.

௰௪ அசிங்கிரீத்துவையும் பிலெகோனையும் எர்மாவையும் பத்றோபாவையும் எர்மேயையும், அவர்களுடனே இருக்கிற சகோதரரையும் வாழ்த்துங்கள்,

௰௫ பிலொலோகுவையும் யூலியாவையும் நேரேயையும் அவனுடைய சகோதரியையும் ஒலிம்பாவையும், அவர்களுடனே இருக்கிற பரிசுத்தவான்களனைவரையும் வாழ்த்துங்கள்.

௰௬ ஒருவரை ஒருவர் பரிசுத்த முத்தத்தினாலே வாழ்த்திக்கொள்ளுங்கள். கிறிஸ்துவினுடைய சபைகள் உங்களை வாழ்த்துது. ௧. கொ. ௰௬, ௨௰.

௰௭ ஆனால் சகோதரரே, நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்துக்கு விரோதமாய்ப் பேதகங்களையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களை நோக்கியிருக்க உங்களை எச்சரிக்கிறேன். அவர்களை விட்டு விலகுங்கள். தீத்து. ௩, ௰.

௰௮ ஏனென்றால் அப்படிக்கொத்தவர்கள் நம்மு

டைய

கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுக்கல்ல. * தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, ** நயவசனிப்பினாலும் ஆசீர்வதிப்பினாலும் பொல்லாப்பை அறியாதவர்களுடைய இருதயங்களை மோசம்போக்குகிறார்கள். * பிலி. ௩, ௰௯. ** ௨ பேது. ௨, ௩.

௰௯ உங்கள் கீழ்ப்படியுதலோவெனில் எல்லாருக்குந் தெரியவந்தது, ஆகையால் உங்களைக்குறித்துச் சந்தோஷப்படுகிறேன். ஆனாலும் நீங்கள் நன்மைக்கு ஞானிகளும் தீமைக்குப் பேதைகளுமாயிருக்க வேணுமென்றிருக்கிறேன்.

௨௰ ஆனால் சமாதானத்தினுடைய பராபரன் சீக்கிரத்திலே * சாத்தானை உங்கள் காலுகளின் கீழே நசுக்கிப் போடுவார். நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூடவிருக்கக்கடவது. ஆமென். * ௧. மோ. ௩, ௰௫.

௨௰௧ * என்னுடனே வேலையாளாகிய தீமோத்தேயும், என்னினத்தாராகிய லூக்கியும் யாசோனுஞ் சோசிப்பத்தருமுங்களை வினவுகிறார்கள். * அப்போ. ௰௬, ௧—௩. பிலி. ௨, ௰௯. ௨௰.

௨௰௨ கர்த்தருக்குள் இந்த நிருபத்தை எழுதின தெற்றியுவென்னப்பட்ட நானுங்களை வினவுகிறேன்.

௨௰௩ என்னுக்குஞ் சபையனைத்துக்கும் விடுதிகொடுக்கிறவனாகிய காயு உங்களை வினவுகிறான். பட்டணத்து உக்கிராணக்காரனாகிய * ஏரஸ்த்துஞ் சகோதரனாகிய குவர்த்துமுங்களை வினவுகிறார்கள். * அப்போ. ௰௯, ௨௨.

௨௰௪ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களெல்லாரோடுங்கூட இருக்கக்கடவது. ஆமென்.

௨௰௫ ஆனால் ஆதிகாலங்களது வக்கியடக்கமாயிருந்து, இப்பொழுது வெளிலத் தீர்க்கதெரிசிகளெழுத்துகளிலே அநாதிபராபரனுடைய கட்டளையின்படி வெளியரங்கமாக்கப்பட்டதும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படியும்படிக்கு எல்லாச் சாதிகளுக்கும் அறிவிக்கப்பட்டதுமாகிய இரகசியத்தை வெளிப்படுத்துகிறதான,

௨௰௬ யேசுக்கிறிஸ்துவினுடைய பிரசங்கமாகிய சுவிசேஷத்தின்படியே உங்களைத் திடப்படுத்துகிறதுக்கு வல்லவருமாய்,

௨௰௭ ஏகஞானியாய்த்தானுள்ளவருமாகிய பராபரனுக்கு யேசுக்கிறிஸ்துவின்மூலமாய் என்றென்றைக்கும் மகிமையுண்டாகக்கடவது. ஆமென். * ௧. தீமோ. ௧, ௰௭.

கொரிந்துப்பட்டணத்திலெழுதி, கெங்க்ரேயசபையின் ஊழியக்காரியாகிய பேபேயாள் கையிலே ரோமாபுரியாருக்கு அனுப்பினது.

# அபபோஸதலனாகிய
# பவுலு
## கொரிநதியருககெழுதின
# முதலாமநிருபம.

### க. அதிகாரம.

### ¶ நிருபமுகவுரை.

ப ராபரனுடையசிததததினாலே * யேசுககிறிஸ
ததுவினுடையஅபபோஸததலனாக அழை
ககபபடடபவுலுவுஞசகோதரனாகியசொ
ஸதேனேயும, * கலா. ௧, ௧.

உ கொரிநதுவிலிருககிற அழைககபபடடபரிசுதத
வானகளாகியகிறிஸததுயேசுவுககுள * பரிசுததமா
ககபபடடபராபரனுடைசபையாருககும, அவர்களி
டததிலுமஎஙககளிடததிலுமஎஙகுமநமமுடைகா்த
தாகியயேசுககிறிஸததுவினுடையநாமததைததொழுது
கொளளுகிற அனைவருககுஙகூடஎழுதுகிறதாவது:
* ௬, ௰௧.

௩ நமமுடையபிதாவாகியபராபரனாலுஙகாததராகிய
யேசுககிறிஸததுவினாலுமஉஙகளுககுககிருபையுஞசமா
தானமுமஉணடாககககடவது.

௪ நீஙகளசகலததிலும, சகலவசனததிலுஞசகல
அறிவிலுமயேசுககிறிஸததுவுககுள அயிசுரியவானக
ளானீர்களானதறகு, அவருககுள உஙகளுககளிககப
படடபராபரனுடையகிருபைககாக,

௫ எபபோதுமானபராபரனைஉஙகளநிமிததிய
மஸதோததிரிககிறேன.

௬ ஏனென்றாலஉஙகளுககொருவரஙகுறையா
யிராமல, நீஙகளநமமுடைகாததராகியயேசுககிறிஸத
துவினுடையவெளிபபடுதலுககுககாததிருககததக
கதாயாய, * பிலி. ௩, ௨௰.

௭ கிறிஸததுவினுடையசாட்சிஉஙகளிலதிடபப
டடது.

௮ நீஙகளநமமுடைகாததராகியயேசுககிறிஸததுவின
நாளிலேகுறறஞசுமததபபடாதவர்களாயிருகக, அ
வர்உஙகளைமுடிவுபரியநதமுநதிடபபடுததுவார்.

௯ உஙகளைததமமுடையகுமாரனாகியநமமுடைகாத
தாயேசுககிறிஸததுவினுடைய * ஐககியததுககழைதத
பராபரன ** உணமையுளளவர். * யோவ. ௰௫,
௫. ** ௧. தெச. ௫, ௨௪.

### ¶ பவுலுகொரிநதியருடையசபையிலே பிறநதபிரிவினைகளைததூணடி ககாடடினது.

௰ ஆனால, சகோதரரே, நீஙகளெலலாருமஒன
றையேபேசவும, உஙகளுககுளளேபிரிவினைகளி
லலாமலநீஙகள * ஏகசிநதையுமஏகநிதானியபுமா
கசசி

ச்சீர்பொருந்தியிருக்கவும நமமுடைய கர்த்தராகிய யேசுக் கிறிஸ்துவின நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன. * பிலி. ௩, ௰௬.

௰௧ ஏனெனனில, என சகோதரரே, உஙகளுககுள்ளே விரோதஙகள உண்டென்று உஙகளைப்பற்றிக், குலோவேயாளின மனுஷராலே எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

௰௨ நான சொல்லுகிறதென்னவெனில உஙகளில ஒவ்வொருவர் நான பவுலினுடையவனென்றும, நான * அப்பொல்லோவினுடையவனென்றும, நான கேபாவினுடையவனென்றும, நான கிறிஸ்துவினுடையவனென்றுஞ் சொல்லுகிறீர்கள. * அப்போ. ௰௮, ௨௪.

௰௩ கிறிஸ்து பிரிந்திருக்கிறாரோ, பவுலு உஙகளுக்காகச் சிலுவையில அறையப்பட்டானோ, அல்லது பவுலினுடைய நாமத்திலே ஞானஸ்நானம பெற்றீர்களோ.

௰௪ என நாமத்திலே ஞானஸ்நானங் கொடுத்தேனென்று ஒருத்தனுஞ் சொல்லக்கூடாதபடிக்கு,

௰௫ நான * கிரிஸ்புக்குங் காயுக்குமெயழிய உஙகளிலே வேறொருத்தருக்கும ஞானஸ்நானங் கொடாதிருக்கிறதுக்காகப் பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன. * அப்போ. ௰௮, ௮.

௰௬ * ஸ்தேவானுடைய வீட்டாருக்கும ஞா[illegible]னங் கொடுத்தேன. அப்புறம நான வேறொரு[illegible]க்கு ஞானஸ்நானங் கொடுத்ததுண்டோவென்றறி[illegible] * ௰௬, ௰௫.

௰௭ ஏனெனனில ஞானஸ்நானங் கொடுக[illegible]லல, சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கக் கிறிஸ்து என[illegible]ப்பினார். ஆனால கிறிஸ்துவின சிலுவை வீ[illegible] போக * வசனிப்பின ஞானத்துடனே பிரசங்கி[illegible]லல. * ௨, ௪. ௫.

லவுகீகஞானம மாயமைகளனறெப[illegible] வித்தது.

௰௮ ஏனெனனால சிலுவையினுடைய வசன[illegible] கெட்டுப்போறவர்களுக்குப் பயித்தியமாயிருக்[illegible] இரட்சிக்கப்படுகிற நமக்கு அது * தேவவ[illegible] யிருக்குது. * ரோ. ௧, ௰௬.

௰௯ ஏனெனனில: * நாம ஞானிகளுடைய ஞா[illegible] அழித்து, விவேகிகளுடைய விவேகத்தை[illegible] துப்போகப்பண்ணுவோமென்றெழுதியிருக்குது. * யெசா. ௨௯, ௰௪.

௨௰ ஞானிகளெஙகே, வேதபாரகனெஙகே, இந்தப் பிரபஞ்சத்தருக்கசாஸ்திரிகளெஙகே. பராபரன இந்த லோகத்தினுடைய ஞானத்தைப் பயித்தியமாக்கினதில்லையோ.

௨௧ ஏனெனனில பராபரனுடைய ஞானத்துக்கேர்த்ததாய லோகம பராபரனை ஞானத்தினால அறியாதபடியினாலே, பிரசங்கத்தின பயித்தியத்தினாலே விசுவாசிக்கிறவர்களை ரட்சிக்க, * பராபரனுக்குப் பிரியமாச்சுது. * மத்தே. ௰௧, ௨௫. ௨௬.

௨௨ ஏனென்றால் * யூதர் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள், * மத். ௰௨, ௩௮.

௨௩ நாங்களோ யூதருக்கு இடறலுங் கிரேக்கருக்குப் பயித்தியமுமாகியச் சிலுவையிலறையுண்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்.

௨௪ அழைக்கப்பட்டிருக்கிற யூதருக்குங் கிரேக்கருக்குந் தேவபெலனும் * தேவஞானமுமாகிய கிறிஸ்துவைத்தானே. * கொலோ. ௨, ௨.

௨௫ ஏனென்றால் தேவனுடைய பயித்தியமானது மனுஷரைப் பார்க்கிலும் ஞானமாயிருக்குது, தேவனுடைய பலவீனமானது மனுஷரைப் பார்க்கிலும் பெலனுமாயிருக்குது.

௨௬ ஏனென்றால், சகோதரரே, அழைக்கப்பட்ட உங்களைப் பாருங்களேன், * மாம்சத்தின்படி ஞானிகளாயிருக்கிறவர்கள் அனேகரில்லை, வல்லவர்கள் அனேகரில்லை, நற்குலத்தார் அனேகரில்லை. * யாக். ௨, ௫.

௨௭ ஞானிகளை வெட்கப்படுத்த, பராபரன் லோகத்திலே பயித்தியமானதுகளைத் தெரிந்துகொண்டார், பலமுள்ளதுகளை வெட்கப்படுத்த, பராபரன் லோகத்திலே பலவீனமானதுகளைத் தெரிந்துகொண்டார்.

௨௮ இருக்கிறதுகளைக் களைய, பராபரன் லோகத்திலே இழிகுலமானதுகளையும் அற்பமாயெண்ணப்பட்டதுகளையும் இல்லாததுகளையுந் தெரிந்துகொண்டார்.

௨௯ தம்முன்பாக ஒருமாம்சமும் பெருமைபாராட்டாதபடிக்குத்தானே.

௩௰ ஆனாலவராலே நீங்கள் கிறிஸ்துயேசுவுக்குள்ளிருக்கிறீர்கள், அவர் பராபரனாலே நமக்கு ஞானமும் * நீதியும் ** பரிசுத்தப்படுத்துதலும் மீட்புமாக்கப்பட்டார். * யெரே. ௨௩, ௫. ௬. ** யொவ். ௰௭, ௰௯.

௩௧ எழுதியிருக்கிறபடியே, * மேன்மைபாராட்டுகிறவன் கர்த்தருக்குள் மேன்மைபாராட்டத்தானே. * யெரே. ௯, ௨௩. ௨௪. ௨. கொ. ௰, ௰௭.

## ௨. அதிகாரம்.

¶ பவுலுதன்னுடைய லவுகிகஞானத்தைத்தான் வெறுத்தேனென்று காணபித்தது.

௧ சகோதரரே, நானும் உங்களண்டைக்கு வந்து உங்களுக்குப் பராபரனுடைய சாட்சியை அறிவிக்கிறபோது, * மேட்டிமையான வசனிப்போடும் அல்லது ஞானத்தோடும் வந்ததில்லை. * ௧, ௰௭.

௨ ஏனென்றால் நான் யேசுக்கிறிஸ்துவை, சிலுவையிலறையுண்டவரையேயொழிய, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறிந்திருப்பதைக் காரியமென்றெண்ணிக்கொண்டதில்லை.

௩ நான் * பெலவீனத்தோடும் பயத்தோடும் வெகு நடுக்கத்தோடும் உங்களிடத்திலிருந்தேன். * அப்போ. ௰௮, ௧. ௯.

௪ உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல
ல * பராபரனுடைய பெலத்திலே நிற்கும்படிக்கு.
* ௨. கொ. ௪, ௭.
௫ என் வசனமும் என் பிரசங்கமும் மனுஷ ஞான
த்துடைய போதனையான வார்த்தைகளாயிராமல், ஆவி
யும் பெலனுமுள்ளதாயிருந்தது.
௬ ஆனாலும் தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப்
பேசுகிறோம், இந்தப் பிரபஞ்சத்து ஞானத்தையல்ல
அழிந்துபோகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்துப் பிர
புக்களுடைய ஞானத்தையுமல்ல.
௭ பராபரன் நம்முடைய மகிமைக்காக லோகத் தோ
ற்றரவுக்கு முன்னே குறித்ததும் மறைக்கப்பட்டது
மாயிருந்த * இரகசியமான ஞானத்தைப் பேசுகி
றோம். * ௧. தீமோ. ௩, ௰௬.
௮ அதை இந்தப் பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒரு
த்தனும் அறிந்துகொண்டதில்லை, அறிந்துகொண்டி
ருந்தார்களானால், அவர்கள் மகிமையினுடைய கர்த்த
ரைச் சிலுவையிலறைவதில்லை.
௯ ஆனால் எழுதியிருக்கிறபிரகாரமாக: * பராபர
ன் தம்மைச் சிநேகிக்கிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணி
னதுகளைக் கண்கண்டதுமில்லை, காதுகேட்டதுமி
ல்லை, அதுகள் மனுஷனுடைய இருதயத்துக்குள்ளே ஏறின
துமில்லை, * எசா. ௬௪, ௪.
௰ நமக்கோவென்றால் * பராபரன் அதைத் தம்முடைய ஆ
வியினாலே வெளிப்படுத்தினார். ஏனென்றால் ஆவியான
வர் எல்லாத்தையும், பராபரனுடைய ஆழங்களை
யும், ஆராய்ந்திருக்கிறார். * மத். ௰௬, ௰௭.
௰௧ ஏனென்றால், மனுஷனிலுள்ள அவனுடைய
ஆவியேயல்லாமல், பின்னை மனுஷரிலெவன் மனுஷனு
டைய காரியங்களை அறிவான், அப்படியே பரா
பரனுடைய ஆவியேயல்லாமல் ஒருத்தரும் பராப
ரனுடைய காரியங்களை அறியான்.
௰௨ நாமோவென்றால், பராபரனாலே நமக்கு அருளப்
பட்டதுகளை அறியும்படிக்கு, லோகத்தினுடைய ஆ
வியையல்ல பராபரனிலிருந்து புறப்படுகிற ஆவியை
ப் பெற்றோம்.
௰௩ அதுகளை நாங்கள் மனுஷ ஞானம் போதிக்
கும் வார்த்தைகளாலல்ல, பரிசுத்த ஆவி போதிக்கு
ம் வார்த்தைகளாலே பிரசங்கம் பண்ணி, ஆவியின்
காரியங்களுக்கொத்த பிரகாரமாக ஆவியின் காரியங்க
ளைப் பேசுகிறோம்.
௰௪ ஆனால் * ஜென்மசுபாவமான மனுஷன் பரா
பரனுடைய ஆவியின் காரியங்களை ஏற்றுக்கொள்
ளான், ஏனென்றால் அதுகள் அவனுக்குப் பயித்தியமா
யிருக்குது, அதுகள் ஞானப்பிரகாரமாக ஆராய்ந்து நி
தானிக்கப்படுகிறபடியினாலே அவன் அதுகளை அறிய
மாட்டான். * யூதா. ௰௯. வசனம். ரோ. ௮, ௫.
௰௫ ஆவியைப் பெற்றவனோவென்றால் எல்லாத்தை
யும் ஆராய்ந்து நிதானிக்கிறான், தானோவென்றால் ஒரு
த்தனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான்.
௰௬ ஏனென்றால் * கர்த்தரைப் போதிக்கத்தக்க
தாக அவருடைய சிந்தையை அறிந்தவனார், எங்களுக்

கொவெனிலகிறிஸதுவினுடையசிநதெஉணடாயிரு
ககுது. ✻ ரோம. ௬௰, ௰௩.

## ௩. அதிகாரம்.

௧ அவனகொரிநதியாருடையபிரிவினை
களைககடிநதுகொணடது.

நானோவெனறால, சகோதரரே, உஙகளை ஆவிககு
ரியவர்களாக எணணி, உஙகளுடனெ பே
சககூடாமல, உஙகளைமாமசததாராகவுங கிறிஸ
துவுககுளகுழநதைகளாகவுமெணணி உஙகளுட
னெபெசவெணடியதாயிருநதது.

௨ உஙகளுககுபபொசனஙகொடாமல, ✻ பாலை
குடிககககொடுததென, ஏனெனில அபபொழுது பெல
னிலலாதிருநதீர்கள, ஆனாலுமஇபபொழுதும
பெலனிலலாதிருககிறீர்கள. ✻ எபிரெ. ௫, ௰௩.

௩ அதெனனெறாலமநீஙகள மாமசததாராயிருக
கிறீர்கள, ஏனெனில ✻ வயிராககியமுமவிரோதமு
மபெதகஙசளுமஉஙகளுககுளளெயிருககககொள
ள, நீஙகளமாமசததாருமமனுஷமாரககமாயநட
ககிறவர்களுமலலவோ. ✻ க, ௰க. ௰உ.

௪ ஏனெனனறால ஒருதன: நானபவுலுவினுடைய
வனெனறும, வெறொருததன: நானஅபபொலலோ
வினுடையவனெனறுஞசொனனால, நீஙகளமாங
சததாரலலவோ.

௫ பவுலுவோவெனறால ஆர், அபபொலலோ
வும ஆர், கர்ததர்அவனவனுககளிததததுககுததக
தாயஅவர்களாநீஙகளவிசுவாசிகளாகிறதுக கெ
னமானஊழியககாரர்மாததிரநதானெ.

௬ நானநடடென, அபபொலலோ தணணீர்
பாயசசினான, ஆனாலுமபராபரனபயிராககினார்,

௭ ஆனபடியினாலெநடுகிறவனுமஒனறுமிலலெ
தணணீர்பாயசசுகிறவனுமஒனறுமிலலெ, பயிரா
ககுகிறபராபரனெயலலாம.

௮ நடுகிறவனுநதணணீர்பாயசசுகிறவனுமொ
னறாயிருககிறார்கள. ஆனாலவனவனதன
னுடையவெலைககுததககதாயததனனுடையகூலியை
பெறுவான.

௯ ஏனெனில ✻ நாஙகளபராபரனுடனெ வெ
யாளாகளாயிருககிறொம, நீஙகளபராபரனுடை
பணணையும ✻✻ பராபரனுடையமாளிகையும
ருககிறீர்கள. ✻ உ. கொ. ௬, க. ✻✻ எபெ.
௨௰—௨௨.

௰ எனககளிககபபடடபராபரனுடையகிரு
யினபடியெ, ஞானமுளளசிறபாசாரியைபபொ
அஸதிவாரததைபபொடடென, வெறொருத
வெனிலஎடுகடடுகிறான, ஆனாலதாஙகள எடுகடு
கிறதெபபடியெனறுஅவனவனபார்ககடவ

௰௧ ஏனெனிலபொடடபபடடஅஸதிவாரமா
யெசுகிறிஸதுவெயனறி அஸதிவாரமெயலலா
வெறஸதிவாரததைஒருததனுமபொடககூடா

பெ

யெசா. ௨௮, ௰௬.

௰௨ ஆனால் ஒருத்தன் இந்த அஸ்திவாரத்தின்மேலே பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்லுகள், மரங்கள், புல்லு, தாள் இவையைக் கட்டினால்,

௰௩ அவனவனுடைய கிரியை வெளியாம், நாளானது அதைத் தெரியப்படுத்தும், ஏனெனில் அக்கினியினாலே வெளியாக்கப்படும், அவனவனுடைய கிரியை எப்படிக்கொத்ததென்று * அக்கினியானது சோதிக்கும்.

* யெசா. ௪௮, ௰.

௰௪ எடுத்துக்கட்டின ஒருத்தனுடைய கிரியை நின்றால்; அவன் கூலிபெறுவான்.

௰௫ ஒருத்தனுடைய கிரியை வேந்துபோனால், அவன் நஷ்டப்படுவான், தானோவெனில் ரட்சிக்கப்படுவான், ஆகிலும் அக்கினியில் அகப்பட்டுத் தப்பின போலேதானே.

௰௬ நீங்கள் * பராபரனுடைய தேவாலயமாயிருக்கிறீர்களென்றும் பராபரனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறதென்றும் அறியீர்களோ. *

௨. கொரி. ௬, ௰௬.

௰௭ ஒருத்தன் பராபரனுடைய தேவாலயத்தைக் கெடுத்தால், அவனைப் பராபரன் கெடுப்பார், ஏனெனில் பராபரனுடைய தேவாலயம் பரிசுத்தமாயிருக்குது, அது நீங்கள்தானே.

௰௮ ஒருத்தனும் தன்னைத்தானே மோசம்போக்கவேண்டாம், தான் இந்த லோகத்திலே ஞானியென்று உங்களில் ஒருத்தனுக்குத் தோணினால் அவன் ஞானியாகும்படிக்கு, பயித்தியக்காரனாகக்கடவான்.

௰௯ அதேனென்றால் இந்த லோகத்தினுடைய ஞானம் பராபரனிடத்திலே பயித்தியமாயிருக்குது ஏனெனில்: * ஞானிகளை அவர்களுடைய தந்திரத்திலே பிடிக்கிறாரென்கிறதும், * யோபு. ௫, ௰௩.

௨௰ பின்னையும்: * கர்த்தர் ஞானிகளுடைய சிந்தனைகள் அதுகள் மாயைகளென்று அறிவாரென்கிறதும் எழுதியிருக்குது. * சங்கீ. ௯௪, ௰௧.

௨௰௧ ஆகையால் ஒருத்தனும் மனுஷரைக்குறித்துப் பெருமைபாராட்டவேண்டாம், ஏனென்றால் எல்லாம் உங்களுடையது.

௨௰௨ பவுலாகிலும் அப்பொல்லோவாகிலும் கேப்பாவாகிலும், லோகமாகிலும் சீவனாகிலும் மரணமாகிலும், நிகழ்காரியங்களாகிலும் வருங்காரியங்களாகிலும், எல்லாம் உங்களுடையது.

௨௰௩ * நீங்களோ கிறிஸ்துவினுடையவர்கள் கிறிஸ்துவோ பராபரனுடையவர்.

## ௪. அதிகாரம்.

¶ கொரிந்தியர் தன்னை எண்ணவேண்டியபிரகாரமாகக் காணல்; மிஞ்சிப்போனதுக்காகப் பவுலு அவர்களுக்குச் சொன்னபுத்தி

எங்களை அவனவன் கிறிஸ்துவினுடைய ஊழியக்காரரும் பராபரனுடைய ரகசியங்களின் உக்கிராணக்

ணக்காரருமாக எண்ணக்கடவான்.

௨ அப்புறம் ஒருத்தன் * உண்மையுள்ளவனென்று கண்டுபிடிக்கப்படுவதே உக்கிராணக்காரரிடத்திலே தேடப்படுங்காரியமாயிருக்குது. * லூ. ௧௨, ௪௨,

௩ நானோவென்றால் உங்களாலே, அல்லது ஒரு மனுஷருடைய நாளின் விசாரிப்பினாலே நியாயந்தீர்க்கப்படுவது எனக்கு வெகு அற்பக்காரியமாயிருக்குது. ஆனாலும் என்னை நானே நியாயந்தீர்க்கிறதுமில்லை.

௪ ஏனென்றால் நான் என்னில் ஒருக்கத்தக்கதையும் அறியாதிருந்தாலும், * இதினாலே நான் நீதிமானாகிறதில்லை, என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரானவர். * சங்கீ. ௱௪௩, ௨.

௫ ஆனபடியினாலே கர்த்தர் வருமட்டாக, நீங்கள் காலத்துக்கு முன்னே ஒன்றும் நியாயந்தீராதேயுங்கோள், அவர் இருளின் அந்தரங்கங்களையும் வெளிச்சமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார். அப்போ புகழ்ச்சியானது அவனவனுக்குப் பராபரனாலே உண்டாம்.

௬ சகோதரரே, எழுதப்பட்டதுக்கு * மிஞ்சின எண்ணம் வேண்டாமென்று நீங்கள் எங்களாலே கற்றுக்கொண்டு, ஒருத்தனுக்காக ஒருத்தனும் மற்றவனுக்கு விரோதமாய் உப்பிப்போகாதிருக்கிறதுக்கும், நான் உங்கள் நிமித்தியமாக என்னையும் அப்போலோவையும் திருஷ்டாந்தமாக வைத்து, இதுகளைச் சொன்னேன். * ரோமா. ௩. ௭. ௧௫. ௧௨, ௩.

௭ ஏனென்றால் உன்னை விசேஷித்தவனாக்குகிறவனார், அல்லது நீ பெறாதிருந்ததென்ன உனக்கிருக்குது; நீயும் பெற்றாயேயாகில், பெறாதவனைப்போலே ஏன் பெருமைபாராட்டுகிறாய். * யாக. ௧, ௧௭.

௮ இப்போதே திருப்தியடைந்தவர்களாயிருக்கிறீர்கள், இப்போதே ஐசுவரியவான்களானீர்கள், எங்களையல்லாமல் ஆண்டீர்கள், ஆனால் நீங்கள் ஆண்டால் தாவிளை, அப்போ உங்களுடனே கூட நாங்களும் ஆளுவோம்.

௯ ஆனால் பராபரன் அப்போஸ்தலராகிய எங்களை மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்களைப்போலே, எல்லாக் கடைசியானவர்களாய்க் காணப்படப்பண்ணினாரென்றெண்ணுகிறேன், ஏனென்றால் லோகத்துக்கும் தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.

௰ நாங்கள் கிறிஸ்துவினிமித்தியமாகப் பயித்தியக்காரர், நீங்கள் கிறிஸ்துவுக்குள் புத்திமான்கள், நாங்கள் பெலயீனர், நீங்கள் பெலவான்கள், நீங்கள் மகிமையுள்ளவர்கள் நாங்களோ கனமற்றவர்கள்.

௧௧ இந்நேரமட்டுக்கும் * பசியுந்தாகமும் அம்மணமுமாயிருக்கிறோம், குட்டுண்டும் நிலையற்றுமிருக்கிறோம். * ௨. கொ. ௧௧, ௨௬—௨௭.

௧௨ * எங்களுடைய கைகளினாலும் வேலைசெய்து உழைக்கிறோம், வையப்பட்டு ஆசீர்வதிக்கிறோம், துன்பப்பட்டு அனுபவிக்கிறோம், தூஷணிக்கப்பட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். * ௧. தெச. ௨, ௯.

௰௩

௰௩ லோகத்தினுடைய குப்பைகளைப்போலவும், இற்றையிலவரைக்கும் எல்லாருந் துடைக்கிற அழுக்கைப்போலவுமானோம்.

௰௪ இதுகளை நான் உங்களை வெட்கப்படுத்தவெழுதாமல், நீங்கள் என் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தியாயெழுதுகிறேன்.

௰௫ ஏனென்றால் கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் வாத்தியார் உங்களுக்கிருந்தாலும், அநேகந் தகப்பன்மார் உங்களுக்கில்லை, ஏனென்றால் உங்களை நானே கிறிஸ்து யேசுவுக்குள் சுவிசேஷத்தினாலே பெற்றேன். *

அப்போ. ௰௮, ௰௧.

௰௬ ஆகையினாலே * என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கோளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். * ௰௧, ௧.

௰௭ இந்நிமித்தியமாக நானெனக்குப் பிரியமுங் கர்த்தருக்குள் உண்மையுமான என்னுடைய குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களண்டைக்கு அனுப்பினேன். இவன் நானெங்குமெந்தச் சபையிலும் எப்படிப் போதிக்கிறேனென்று, கிறிஸ்துவுக்குள்ளான என் வழிகளை உங்களுக்கு நினைப்பூட்டுவான்.

௰௮ நானோவெனில் உங்களண்டைக்கு வருகிறதில்லையென்கிறதாய்ச் சிலர் உப்பிப்போனார்கள்.

௰௯ ஆனாலுநான் சீக்கிரமாய், கர்த்தருக்குச் சித்தமானால், உங்களண்டைக்கு வந்து, உப்பிப்போனவர்களுடைய வசனிப்பையல்ல, பெலத்தை அறிந்துகொள்ளுவேன்.

௨௰ ஏனென்றால் பராபரனுடைய ராட்சியம் வசனிப்பிலேயல்ல, பெலத்திலேயிருக்குது.

௨௰௧ உங்களுக்கென்னவேணும், நான் மிலாறுடனே உங்களண்டைக்கு வரவேணுமோ, அல்லது சிநேகத்தோடும் மெத்தனவின ஆவியோடும் வரவேணுமோ.

## ௫. அதிகாரம்.

௧ முறைகேட்டனொருத்தனிமித்தியமாகப் பவுலு காணபித்த பரிசுத்தவாரிச்சல்.

வெச்சத்தனமுதலாய் உங்களிடத்தில் உண்டென்று கேட்கப்படுகுதே, தகப்பனுடைய பெண்சாதியை ஒருத்தன் வைத்திருக்கிறானென்கிற அஞ்ஞானிகளுக்குள்ளுஞ் சொல்லப்படாத வெச்சத்தனமுந்தானே.

௨ இந்தக் கிரியையைச் செய்தவன் உங்கள் நடுவிலிருந்தெடுக்கப்பட்டுப்போகத்தக்கதாகத் துயரப்படவேண்டிய நீங்களோவென்றால் உப்பிப்போனவர்களாயிருக்கிறீர்கள்.

௩ ஆனால் நான் சரீரத்தூரமாயிருந்தும், * ஆவியாலுன்னோடேயிருக்கிறவனாய், * கொலோ. ௨, ௫.

௪ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்திலே இப்படிப்பட்டவனை, நீங்களும் என்னுடைய ஆவியுங் கூடியக் கூட்டத்திலும், * நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய வல்லமையோடும், * யோவா. ௨௰, ௨௩.

௫ * மாம்சத்தின் அழிவுக்கென்று சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்க, தீர்த்துப்பட்டது நடப்பிக்க வேண்டுமென்பேரிலே, அவன் ஆவி கர்த்தராகிய யேசுவின் நாளிலே ரட்சிக்கப்படும்படிக்கு, நான் அவ்விடத்திலேயிருக்கிறவன் போலே, நிதானித்துக்கொண்டுத் தீர்ந்தது. * சங்கீ. ௮௩, ௰௯. ௰௧, ௧. தீமோ. ௧, ௨௰.

௬ நீங்கள் பாராட்டுகிறது நல்லதல்ல, * கொஞ்சமான புளித்தமாப் பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணுமென்று அறியீர்களோ * கலா ௫, ௯.

௭ ஆனபடியினாலே, நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கப்படிக்கு, நீங்கள் புதிதான பிசைந்தமாவாயிருக்கிறதுக்கு, * பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கோள், ஏனெனில் நம்முடைய பஷா நமக்காக அடிக்கப்பட்டுதே, அது கிறிஸ்து தானே. * ௨. மோ. ௰௨, ௰௮. ௰௬.

௮ ஆகையால் பழைய புளித்தமாவோடேயல்ல, துர்க்குணமும் பொல்லாப்புமான புளித்தமாவோடேயுமல்ல, துப்புரவும் உண்மையுமென்கிற புளிப்பில்லாத அப்பங்களோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.

௯ வேசிக்கள்ளரோடே கலக்கவேண்டாமென்று நிருபத்திலே உங்களுக்கு எழுதினேனே.

௰ ஆனாலும் இந்த லோகத்து வேசிக்கள்ளரோடும், அல்லது பொருளாசைக்காரரோடும், அல்லது கொள்ளைக்காரரோடும், அல்லது விக்கிரக ஆராதனைக்காரரோடுங் கலக்கவேண்டாமென்று அத்தனை அறுதியாய் எழுதினதில்லை, மற்றப்படி நீங்கள் லோகத்தை விட்டுப் புறப்பட்டுப்போகவேண்டியதாமே.

௰௧ இப்போதோ, கலக்கவேண்டாமென்று உங்களுக்கு எழுதினேன், அதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருத்தன் வேசிக்கள்ளன், அல்லது பொருளாசைக்காரன் அல்லது விக்கிரகாராதனைக்காரன், அல்லது உதாசீனன், அல்லது வெறியன், அல்லது கொள்ளைக்காரனானால், * அப்படிக்கொத்தவனுடனே போசிக்கவும் வேண்டாம்.
௨. தெச. ௩, ௬.

௰௨ ஏனெனில் புறத்தியிலே இருக்கிறவர்களையும் நியாயந்தீர்க்க எனக்கென்ன கவலை, உள்ளேயிருக்கிறவர்களையல்லவோ நீங்கள் நியாயந்தீர்க்கிறீர்கள்.

௰௩ புறத்தியிலேயிருக்கிறவர்களையோ தேவன் நியாயந்தீர்க்கிறார். ஆகையால் பொல்லாதவனை உங்களுடைய இடத்திலேயிருந்து எடுத்துப்போடுங்கோள்.

## ௬. அதிகாரம்.

¶ அவிசுவாசிகளின் முன்பாக வழக்காடுகிறது தப்பென்று கடிந்துகொண்டது.

உங்களில் ஒருவனுக்கும் மற்றொருத்தனோடே ஒரு காரியமுண்டானால் அவன் பரிசுத்தவான்களிடத்தில்

யோக

போகாமல் அனீதக்காறரிடத்திலே நியாயத்துக்குப் போகத்துணிகிறதென்ன.
௨ * பரிசுத்தவான்கள் லோகத்தை நியாயந்தீர்ப்பார்களென்றறியீர்களோ, லோகமுங்களாலே நியாயந்தீர்க்கப்பட்டால், அற்பவழக்குகளைத் தீர்க்க அபாத்திரராயிருக்கிறீர்களோ. * மத். ௰௯, ௨௮.
௩ தூதர்களை நியாயந்தீர்ப்போமென்றறியீர்களோ, பிழைப்புக்கடுத்த காரியங்களைத் தீர்க்கக்கூடாதே போறதெப்படி.
௪ நீங்களோவென்றால் பிழைப்புக்கடுத்த வழக்குகளுங்களுக்கிருந்தால் சபையிலே அற்பமாயெண்ணப்பட்டவர்களை அதற்கு வைக்கிறீர்கள்.
௫ உங்களுக்கு வெட்கமுண்டாக நானிதைச் சொல்லுகிறேன், இப்படியே உங்களிலே சகோதரனுக்குஞ் சகோதரனுக்கும் நடுவே வந்ததைத் தீர்க்கத்தக்க ஞானி ஒருத்தனுமில்லையோ.
௬ சகோதரனோடே சகோதரன் வழக்காடுகிறான், அவிசுவாசிகளுக்கு முன்பாகவுந்தானே.
௭ உங்களுக்கொருவரோடொருவர் வழக்குகளுண்டாயிருக்கிறதுதானும் உங்களிலே மகாபழுதாமே. * உங்கள் பார்க்க நீங்கள் அநியாயத்தையும் நஷ்டத்தையும் அனுபவியாதிருப்பானேன். * மத். ௫, ௩௯. ௪௦.
௮ ஆனால் நீங்களே சகோதரருக்குத்தானும் அநியாயஞ்செய்து சேதமுண்டாக்கிறீர்கள்.
௯ அல்லது, அநியாயக்காறர் பராபரனுடைய ராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்றறியீர்களோ, மோசம்போகாதேயுங்கோள், * வேசிக்கள்ளராகிலும், விக்கிரகாராதனைக்காறராகிலும், விபசாரராகிலுந் தம்புணர்ச்சிக்காறராகிலும் ஆண்புணர்ச்சிக்காறராகிலும், * கலா. ௫, ௰௯—௨௧.
௰ திருடராகிலும் பொருளாசைக்காறராகிலும், வெறியராகிலும் உதாசினராகிலும், கொள்ளைக்காறராகிலும் பராபரனுடைய ராச்சியத்தைச் சுதந்தரிப்பதில்லை.
௰௧ * உங்களிலே சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள், ஆனாற் கழுவப்பட்டீர்கள், ஆனால் பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், ஆனால் நீதிமான்களாக்கப்பட்டீர்கள், கர்த்தராகிய யேசுவின் நாமத்தினாலும், நம்முடைய பராபரனுடைய ஆவியினாலுந்தானே. * [illegible]. ௯, ௰௭. தீத்து. ௩, ௩—௭.

¶ அதிகாரத்தைத் துர்விதியாய் அனுபவிக்காதிருக்கவும் வேசித்தனத்தை விலக்கவும் புத்திசொன்னது.

௰௨ எல்லாத்துக்கும் எனக்கதிகாரமுண்டு, ஆனால் எல்லாம் பிறயோசனமாயிராது, எல்லாத்துக்கும் எனக்கதிகாரமுண்டு, ஆனால் நானொன்றினுடைய அதிகாரத்துக்குங் கீழாவதில்லை.
போசனங்கள் வயிற்றுக்கும், வயிறு போசனங்களுக்கும், ஆனால் பராபரன் இதையும் அதுகளையும் அழியப்பண்ணுவார். சரீரமோவென்றால் வேசித்

தனத்து

னத்துக்கல்ல, கர்த்தருக்குத்தானே; கர்த்தர் சரீரத்துக்குந்தானே.

௰௪ ஆனாலும் பராபரன் கர்த்தரையும் எழுப்பினார்; நம்மையுந் தம்முடைய வல்லமையினாலே எழுப்புவார்.

௰௫ உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவினுடைய அவயவங்களென்று அறியீர்களா, இப்போது கிறிஸ்துவினுடைய அவயவங்களை எடுத்துக்கொண்டு வேசியின் அவயவங்களாக்குவேனோ, அப்படி வராதிருப்பதாக.

௰௬ அல்லது, வேசியோடே பட்டுக்கொள்ளுகிறவன் அவளுடனே ஏகசரீரமாயிருக்கிறானென்று அறியீர்களா, ஏனெனில்* இருவரும் ஏகமாம்சமாயிருப்பார்களென்கிறார். * ௧. மோ. ௨, ௨௪.

௰௭ ஆனாலும்* கர்த்தரோடே பட்டுக்கொள்ளுகிறவன் அவருடனே ஏகஆவியாயிருக்கிறான். * யோவா. ௰௪, ௨௩. ௰௫, ௫ ௰௭, ௨௧.

௰௮ வேசித்தனத்துக்கு விலகியோடுங்கோள், மனுஷன் செய்கிற எந்தப் பாவமுஞ் சரீரத்துக்குப் புறம்பாயிருக்கிறது, வேசித்தனஞ்செய்கிறவனோவென்றால் தன் சுயசரீரத்துக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறான்.

௰௯ அல்லது உங்கள் சரீரம், நீங்கள் பராபரனாலே பெற்றிருக்கிற உங்களிலுள்ள பரிசுத்த ஆவியினுடைய *தேவாலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா. * ௩, ௰௬. ௰௭.

௨௰ ஏனென்றால் *உயர்ந்த விலையாய்க் கொள்ளப்பட்டீர்கள், ஆகையினாலே பராபரனுடைய தான உங்கள் சரீரத்திலும் உங்கள் ஆவியிலும் பராபரனை மகிமைப்படுத்துங்கோள். * ௧. பேது. ௧, ௰௮. ௰௯.

## ௭. அதிகாரம்.

¶ சமுசாரமாகிறதுக்காகவுஞ் சந்நியாசத்
துக்காகவுமான புத்தி பலவித
மான நியாயங்கள்.

நீங்கள் எனக்கெழுதின காரியங்களுக்கோவென்றால், ஸ்திரீயைத் தொடாமலிருக்கிறது மனுஷனுக்கு நல்லது.

௨ ஆகிலும் வேசித்தனங்களை விலக்கும் நிமித்தியமாக அவனவனுக்கு அவனவனுடைய பெண்சாதியும், அவளவளுக்கு அவளவளுடைய சொந்தப் புருஷனும் உண்டாயிருப்பதாக.

௩ பெண்சாதிக்குப் புருஷன் செலுத்த வேண்டிய அன்பைச் செலுத்தக்கடவான், புருஷனுக்குப் பெண்சாதியும் அப்படியேதானே.

௪ பெண்சாதி தன் சுயசரீரத்துக்கு அதிகாரியாயிராமல் புருஷன் அதிகாரியாயிருக்கிறான், அப்படியே புருஷனுந் தன் சுயசரீரத்துக்கு அதிகாரியாயிராமல் பெண்சாதி அதிகாரியாயிருக்கிறாள்.

௫ உபவாசத்துக்குஞ் செபத்துக்கும் உங்களுக்குச் சேபோந்த வேளையுண்டாக; நீங்கள் சிலகாலத்துக்

கென்று

கொஞ்சகாலஞ்சம்மதியாயிருந்தாலொழிய மற்றப்படி ஒ
ருத்தரொருத்தர் வெறுப்படாதேயுங்கோள்: உங்
களுக்கு விரத்தத்துவமில்லாமையால் சாத்தான் உங்
களைச் சோதிக்காதபடிக்குத் திரும்பவும் ஒருமாயக்கூடிக்
கொள்ளுங்கோள்.
௬ ஆனாலும் இதை நான் கற்பனையாக அல்ல, உத்தர
வாய்ச் சொல்லுகிறேன்.
௭ எல்லா மனுஷரும் என்னைப்போலே
யிருக்க விரும்புவேன்: ஆகிலும் அவனவனுக்குப்
பராபரனாலே சொந்தவரமிருக்குது, ஒருத்தனுக்கிப்
படியும் ஒருத்தனுக்கப்படியுமாகத்தானே.
௮ விவாகம்பண்ணாதவர்களுக்கும் விதவைகளுக்கும் நா
ன் சொல்லுகிறது, அவர்கள் என்னைப்போலேயிருந்துவிட்
டால் அவர்களுக்கு நல்லதென்று சொல்லுகிறேன்:
௯ விரத்தத்துவமில்லாதவர்களாகில், விவாகம்பண்
ணக்கடவார்கள்: ஏனென்றால் வேகிறதைப்பார்க்கி
லும் விவாகம்பண்ணுகிறது நல்லது. *௧. தீமோ.
௫, ௰௪.
௰ ஆனால் விவாகம்பண்ணினவர்களுக்கு நானல்ல
கர்த்தர் கற்பிக்கிறதாவது; பெண்சாதி புருஷ
னை விட்டுப் பிரியவேண்டாம்:
௰௧ பிரிந்தாளேயாகில், விவாகமில்லாதிருக்க,
அல்லது புருஷனுடனே ஒப்புரவாகக்கடவாள். *
புருஷனும் பெண்சாதியைவிட்டுவிடவேண்டாமெ
ன்று கர்த்தர் கற்பிக்கிறார். *மத். ௰௯, ௪—௯.
௰௨ மற்றவர்களுக்கோவென்றால் கர்த்தரல்ல நா
ன் சொல்லுகிறதாவது: ஒரு சகோதரனுக்கு அவிசுவாசி
யான பெண்சாதியிருந்து, அவள் அவனுடனே வாசமா
யிருக்கச் சம்மதியாயிருந்தால், அவன் அவளைவிட்டு
விடாதிருக்கக்கடவான்.
௰௩ பெண்சாதிக்கும் அவிசுவாசியான புருஷனிரு
ந்து, அவன் அவளுடனே வாசமாயிருக்கச் சம்மதியாயி
ருந்தால், அவள் அவனைவிட்டுவிடாதிருக்கக்கட
வாள்.
௰௪ ஏனென்றால் அவிசுவாசியான புருஷன் பெண்சா
தியாலே பரிசுத்தமாக்கப்பட்டான், அவிசுவாசியான
பெண்சாதியும் புருஷனாலே பரிசுத்தமாக்கப்பட்டாள்;
அப்படியல்லவென்றால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்கு
ம், இப்பொழுதோ அதுகள் பரிசுத்தமாயிருக்குது.
௰௫ ஆனால் அவிசுவாசி பிரிந்தால், பிரியட்டும், இ
ப்படிக்கொத்தவர்களுக்காகச் சகோதரன் அல்லது
சகோதரி அடிமைப்பட்டவர்களல்ல: சமாதானத்தோ
டிருக்கத்தானே பராபரன் நம்மை அழைத்தார்.
௰௬ ஏனென்றால், பெண்சாதியே, நீ புருஷனை ரட்
சிப்பாயென்றெப்படி அறிந்திருக்கிறாய், அல்லது பு
ருஷனே, நீ பெண்சாதியை ரட்சிப்பாயென்றெப்
படி அறிந்திருக்கிறாய்.
௰௭ ஆகிலும் பராபரன் அவனவனுக்குப் பகி
ர்ந்தாரோ, கர்த்தர் அவனவனை எப்படி அழைத்
தாரோ, அப்படியே நடக்கக்கடவான்: இப்படியெல்
லாச் சபைகளிலும் திட்டம்பண்ணுகிறேன்.
௰௮ ஒருத்தன் சுன்னத்துள்ளவனாய் அழைக்கப்பட்

பட்டிருந்தால், சுன்னத்தில்லாமையைத் தேடானாக. ஒருத்தன் சுன்னத்தில்லாதவனாய் அழைக்கப்பட்டிருந்தால், சுன்னத்திடப்படானாக,

௰௯ சுன்னத்தும் ஒன்றுமில்லை சுன்னத்தில்லாமையும் ஒன்றுமில்லை, பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறதே காரியம்.

௨௰ அவனவன் தான் அழைக்கப்பட்டிருக்கிற அழைப்பிலே நிலைநிற்கக்கடவான்.

௨௧ அடிமையாய் அழைக்கப்பட்டிருந்தாயானால், கவலைப்படாதே, நீ தன்னிச்சைக்காரனாகவுங்கூடுமேயானால், தாவிலாவென்றேர்த்துக்கொள்.

௨௨ அடிமையாய் அழைக்கப்பட்டிருக்கிறவனானவன் கர்த்தரிடத்தில் தன்னிச்சைக்காரனாயிருக்கிறான், அப்படியே தன்னிச்சைக்காரனாய் அழைக்கப்பட்டவன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.

௨௩ * உயர்ந்த விலையாய்க் கொள்ளப்பட்டீர்கள், மனுஷருக்கடிமைகளாகாதேயுங்கொள். * ௬. ௨௰.

௨௪ சகோதரரே, அவனவன் அழைக்கப்பட்டிருக்கிற நிலைமையிலே பராபரனுக்கு முன்பாக நிலைநிற்கக்கடவான்.

௨௫ கன்னியாஸ்திரீகளுக்காகக் கர்த்தருடைய கற்பனை யெனக்கில்லை, நானோவென்றால் உண்மையாயிருக்கிறதற்குக் கர்த்தரால் இரக்கம் பெற்றவனாய் என் யோசனையைக் கொடுக்கிறேன்.

௨௬ அதேதென்றால், இப்போதிருக்கிற அவதியினிமித்தம் இப்படியிருக்கிறது மனுஷனுக்கு நல்லதென்றெண்ணுகிறேன்.

௨௭ நீ பெண்சாதியுடனே கட்டப்பட்டிருந்தால், அவிழ்க்கத்தேடாதே, நீ பெண்சாதியற்றவனாயிருந்தால், பெண்சாதியைத் தேடாதே.

௨௮ நீ விவாகம்பண்ணினாயேயாகில், அது பாவமல்ல, கன்னியாஸ்திரீயும் விவாகம்பண்ணினால் பாவமல்ல. இப்படிக்கொத்தவர்களோவென்றால் மாம்சத்திலே உபத்திரவமடைவார்கள், நானோ உங்களைத் தப்பப்பார்க்கிறேன்.

௨௯ சகோதரரே, இனியிருக்குங் காலங்குறுகினதானபடியினாலே, பெண்சாதிகளுள்ளவர்களும் இல்லாதவர்களைப்போலவும்,

௩௰ அழுகிறவர்கள் அழாதவர்களைப்போலவும், சந்தோஷப்படுகிறவர்கள் சந்தோஷப்படாதவர்களைப்போலவும், கொள்ளுகிறவர்கள் கொண்டிராதவர்களைப்போலவும்,

௩௧ இந்த லோகத்தை அனுபவிக்கிறவர்கள் அதைத்துரவஞ்சையாய் அனுபவியாதவர்களாகவும் இருக்கவேண்டுமென்கிறதையே சொல்லுகிறேன். * ஏனென்றால் இந்த லோகத்தினுடைய வேஷம் போகுது. * ௧. யோ. ௰௭.

ஆனால் நீங்கள் கவலையற்றவர்களாயிருக்க ஆசையாயிருக்கிறேன். விவாகமில்லாதவன் தான் * கர்த்தருக்கெப்படி ஏற்றிருப்பதென்று கர்த்தருக்கடுத்தது காரியக் கவலைப்படுகிறான். * ௧. தீமோ. ௫, ௫.

கெ

௩௩ விவாகமபண்ணினவனோ, தான பெண்சாதிக்கெப்படிப்பிரியத்திருப்பேனென்று லோகத்துக்கடுத்ததுகளுக்காகக கவலைப்படுகிறான.

௩௪ விவாகமுள்ளஸ்திரீக்கும கன்னியாஸ்திரீக்கும வித்தியாசமுண்டு, விவாகமில்லாதவள தான சரீரத்திலும ஆவியிலும பரிசுத்தவதியாயிருக்கும்படிக்கு, கர்த்தருக்கடுத்ததுகளுக்காகக கவலைப்படுகிறாள, விவாகமபண்ணினவளோ தானபுருஷனுக்கெப்படிப்பிரியத்திருப்பேனென்று லோகத்துக்கடுத்ததுகளுக்காகக கவலைப்படுகிறாள.

௩௫ ஆகிலும நான உங்களைக கண்ணியிலே சிக்கச்செய்யப்போறதுக்காகச சொல்லாமல, நேர்த்தியாயிருக்கும்ன்றும, தவறாமல கர்த்தரை அடுத்திருக்கவேண்டுமென்றும உங்களுடைய பிரயோசனத்துக்காகச சொல்லுகிறேன.

௩௬ ஆனாலொருத்தன தன்னுடைய கன்னிகை பருவமுதிர்ந்துபோனவளானால, நேர்த்தியல்லவென்றும விவாகமாகத்தேவையென்றுமெண்ணினால, தான சொன்னதின்படி செய்யக்கடவன, அது பாவமல்ல, விவாகமபண்ணட்டும.

௩௭ ஆகிலும தன இருதயத்திலே நிலைநின்று சுயமனதின்படி செய்ய அதிகாரியுமாகியிருந்தாலும அது அவசரத்தக்காரியமல்ல, தன்னுடைய கன்னிகையைக காத்துக்கொள்ள இருதயத்திலே தீர்மானித்தால, நன்றாய்ச்செய்கிறான.

௩௮ அப்படியே விவாகமபண்ணிக்கொடுக்கிறவனும நன்றாய்ச்செய்கிறான, கொடாதவனோ அதிக நன்றாய்ச்செய்கிறான.

௩௯ பெண்சாதி, * தன்னுடைய புருஷனுயிரோடிருக்குங்காலமெல்லாம நியாயப்பிரமாணத்தினாலே கட்டப்பட்டிருக்கிறாள, அவள புருஷன நித்திரையடைந்தாலேயாகில இஷ்டமானவனோடே அவள விவாகமபண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள, ஆனால கர்த்தருக்குள்ளானவனோடேமாத்திரம அதைச்செய்யவேண்டியது. * ரோ. ௭, ௨.

௪௰ அவள அப்படியிருந்துவிட்டாளேயாகில, என்னுடைய யோசனையின்படி அதிக பாக்கியவதியாயிருக்கிறாள. ஆனாலும பராபரனுடைய ஆவியுமென்னிடத்தி[illegible]ண்ணுகிறேன.

## ௮. அதிகாரம்.

௧ விக்கிரகங்களுக்குப்படைக்கப்பட்டதுக்கு விலகியிருக்கப்புத்திசொன்னது.

விக்கிரகங்களுக்குப்படைக்கப்பட்டதுகளின காரியத்துக்கேகாவென்றால, நமக்கறிவுண்டு, ஏனெனில அவரவரும அறிவுள்ளவர்களாயிருக்கிறோம. அறிவு உப்பிப்போகப்பண்ணுது, சிநேகமோ ஊன்றக்கட்டுது. * ரோ. ௰௫, ௨௰.

௨ ஆனாலொருத்தன, * தானயாதொன்றையறிந்திருக்கிறவனென்றெண்ணினால, அவன அறியவேண்டிய

பிர

பிரகாரமாகத்தானே யொன்றும் அறிந்திலன். * கலா. ௬, ௩.

௩ ஒருத்தன் பராபரனைச் சிநேகிக்கிறானேயானால், * அவன் அவராலே அறியப்பட்டிருக்கிறான். * கலா. ௪, ௯.

௪ ஆகையால் விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுகளைப் புசிக்கிற காரியத்துக்கடுத்தவைகளைக் குறித்து, லோகத்திலே விக்கிரகமானது ஒன்றுமல்லவென்றும், ஒருவரேயொழிய வேறொரு தேவனுமில்லவென்றும் அறிந்திருக்கிறோம்.

௫ ஏனென்றால் வானத்திலாகிலும் பூமியிலாகிலும் தேவர்களென்னப்படுகிறவர்கள் உண்டாயிருந்தும், இந்தப் பிரகாரமாக அநேக தேவர்களும் அநேக கர்த்தாக்களுமிருந்தும்,

௬ பிதாவாகிய ஒரே பராபரன் நமக்குண்டு, அவராலே எல்லாம் உண்டாச்சுது, அவருக்கென்று நாமுண்டாயிருக்கிறோம், யேசுக்கிறிஸ்துவாகிய ஒரே கர்த்தரும் நமக்குண்டு, அவரைக்கொண்டு எல்லாம் உண்டாச்சுது, அவரைக்கொண்டு நாமுமிருக்கிறோம்.

௭ ஆனாலெல்லாரிடத்திலும் அந்த அறிவில்லை, ஏனென்றால் சிலர் இதுவரைக்குஞ் சிலர் விக்கிரகமென்னும் அபிப்பிராயத்தோடே அதை விக்கிரகத்துக்குப் படைக்கப்பட்டதாகப் புசிக்கிறார்கள்; அவர்களுடைய மனச்சாட்சி தளர்வானதாகிறபடியினாலே தீட்டுப்படும்.

௮ ஆனாலும் * போசனம் நம்மைப் பராபரனுக்கு உகந்தவர்களாக்குகிறதில்லையே, ஏனென்றால் நாம் புசிக்கிறதினாலே நாம் பெருகுகிறதுமில்லை, புசியாதிருந்தாலே குறைகிறதுமில்லை. * ரோ. ௰௪, ௰௭.

௯ ஆனாலும் * உங்களுடைய இந்த அதிகாரம் பெலவீனருக்கு இடறலாகாதபடிக்குப் பாருங்கோள். * கலா. ௫, ௰௩.

௰ ஏனென்றால் அறிவுள்ளவனாகிய உன்னை ஒருத்தன் விக்கிரகக் கோவிலிலே பந்தியிருக்கக் கண்டால், பெலவீனனாயிருக்கிற அவனுடைய மனச்சாட்சி விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுகளைப் புசிக்கிறதுக்குத் துணிவாக்கப்படுமல்லவோ.

௰௧ * அப்படிக் கிறிஸ்து மரித்துப்போன பெலவீனனான சகோதரன் உன்னுடைய அறிவினாலே கெட்டுப்போகலாமோ. * ரோ. ௰௪, ௰௫.

௰௨ ஆனால் இப்படிச் சகோதரருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து தளர்வாகிய அவர்களுடைய மனச்சாட்சியைப் புண்படுத்துகிறதினாலே கிறிஸ்துவுக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறீர்கள்.

௰௩ ஆகையால் * போசனம் என் சகோதரனுக்கு இடறலுண்டாக்கினால், நான் என் சகோதரனுக்கு இடறலுண்டாகாதபடிக்கு, என்றைக்கும் மாம்சம் புசியாதிருப்பேன். * ரோ. ௰௪, ௨௧.

## ௯. அதிகாரம்.

௧ விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுக்கு விலகியிருப்பதற்குச் சொந்தப் புத்திக்கு அதிக்கியேலனைக் கொடுக்கும்படிக்கு, பவு

லுஞ்

ஊதக்கஞ்செய்தசெல ஊழிய அக்காரரை
ஊழியக்கைச்சுவிசேஷத்துக்கு
தனதனியர்த்தது.

நானப்போஸ்தலனாயிருக்கிறேனல்லவோ, நான சுயாதீனனல்லவோ, நான நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவைக் கண்டதில்லையோ, கர்த்தருக்குள் நீங்கள் * என்னுடைய கிரியையாயிருக்கிறீர்களல்லவோ. * ௫. ௬. ௰.

௨ நான் வேறேமனுஷருக்கு அப்போஸ்தலனாயிராவிட்டாலும் உங்களுக்காகிலும் அப்போஸ்தலனாயிருக்கிறேன, என்னெனில் கர்த்தருக்குள் நீங்கள் * என்னுடைய அப்போஸ்தலத்துவப்பட்டத்தின் முத்திரையாயிருக்கிறீர்கள. * ௨. கொ. ௩, ௨. ௩.

௩ என்னை விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற உத்தரவாவது:

௪ புசிக்கவுங் குடிக்கவும் எங்களுக்கதிகாரமில்லையோ.

௫ மற்ற அப்போஸ்தலருங் கர்த்தருடைய சகோதரரும் * கேப்பாவுஞ் செய்கிறதுபோல, ஒரு சகோதரியை யுத்தியோகத்துக்கு கொண்டுதிரிய எங்களுக்கதிகாரமில்லையோ. * மத். ௮, ௰௪.

௬ அல்லது நானும் வேலைசெய்யாதிருக்க எனக்கும் பர்னபாவுக்கும் மாத்திரம் அதிகாரமில்லையோ.

௭ எவன் தன் சொந்தச் சம்பளமாக, தனக்கொள்ளப்போர் வாக்கு சேவிப்பவனார், திராட்சத்தோட்டம் போட்டு அதின் கனியிலே சாப்பிடாதே போகிறவனார். அல்லது மந்தையை மேய்த்து அதின் பாலிலே கொஞ்சஞ் சாப்பிடாதிருக்கிறவனார்.

௮ நான் மனுஷமாதிரியாய்ச் சொல்லுகிறேனே, நியாயப்பிரமாணமும் இப்படிச் சொல்லுதே.

௯ மோசேயின் நியாயப்பிரமாணத்திலே: * போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாதே யென்றெழுதியிருக்கு. பாரமாடுகளுக்காகத் தேவன் கவலையாயிருக்கிறாரோ. * ௫. மோ. ௨௫. ௪. ௧. தீமோ. ௫, ௰௮.

௰ அல்லது நமக்காகத்தானே சொல்லுகிறாரோ நமக்காகத்தானே யெழுதியிருக்குது, என்னெனில் உழுகிறவன் நம்பிக்கையாயுழவும், போரடிக்கிறவன் தான் நம்பினதுக்குப் பங்குள்ளவனாயிருக்கும்படிக்கு நம்பிக்கையாய்ப் போரடிக்கவும் வேணும்.

௰௧ * நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருந்தோமானால், நாங்கள் சரீரத்துக்கடுத்த உங்களுடைய நன்மைகளை அறுத்தால் பெரிய காரியமோ. * கலா. ௬, ௬.

௰௨ வேறே பேருங்களிடத்தில் இந்த அதிகாரத்துக்குப் பங்குள்ளவர்களானால், நாங்கள் அதிகமாய் அதிகாரமுள்ளவரல்லவோ. ஆனாலும் * நாங்கள் கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்கு யாதொரு தடையுண்டாகாதபடிக்கு, * இந்த அதிகாரத்தை நாங்கள் அனுபவித்துக் கொண்டிராமல், எல்லாம் பொறுமைப்படுகிறோம். * அ. ௰௨. ௨. கொ. ௰௧, ௯.

௰௩ ஆசாரியவூழியத்தைச் செய்கிறவர்கள் ஆசாரி யவசத

யாகத்திலே பொசிக்கிறார்களென்றும், பீடத்தை ஆராதிக்கிறவர்களுக்குப் பீடத்துடனே கூடப் பங்குண்டென்றும் அறியீர்களா. * ரு. மோ. ௰௮, ௧--௪.

௧௪ அப்படியே கர்த்தர் * சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்கள் சுவிசேஷத்தினாலே பிழைக்கக் கட்டளையிட்டார். * லூ. ௰, ௭.

௧௫ நானோ இவைகளிலொன்றையும் அநுபவித்ததில்லை, இப்படியெனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதினதுமில்லை. ஏனென்றால் என் மேன்மையை ஒருத்தன் அவத்தமாக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும்.

௧௬ அதேனென்றால் நான் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தால் அதிலே எனக்கு மேன்மை பாராட்டலில்லை, ஏனென்றால் அது என்மேல் விழுந்த கடன். நான் சுவிசேஷத்தைப் பிரசங்கியாதே போனேனேயாகில், எனக்கு ஐயோ.

௧௭ இதை நான் மனதுள்ளவனாய்ச் செய்தாலெனக்குப் பலனுண்டு, மனதில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராணவிசாரிப்பு எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்குது.

௧௮ அப்போது எனக்குப் பலனென்னவென்றால், நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையிலே அதிலே என்னுடைய அதிகாரத்தை ஆகாதவகையாய் அநுபவியாதபடிக்கு, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைச் செலவில்லாமலாக்குகிறதுதானே எனக்குப் பலன்.

௧௯ ஏனென்றால் நான் எல்லாருக்கும் நீங்கலாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்கு, என்னைத்தானே எல்லாருக்கும் ஊழியக்காரனாக்கினேன்.

௨௰ நான் யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்கு, * யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்கு, அவர்களுக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழானவனைப்போலவுமானேன். * அப். ௰௬, ௩.

௨௧ பராபரனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல் கிறிஸ்துவின் நியாயப்பிரமாணத்துக்குள்ளானவனாகிய நான் நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்கு, அவர்களுக்கு * நியாயப்பிரமாணமில்லாதவனைப்போலவுமானேன். * கலா. ௨, ௩--௰௨.

௨௨ பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளுவதற்கு, * பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன். நானெப்படியுஞ் சிலரை ** ரட்சிப்பதற்கு எல்லாருக்கும் எல்லாமானேன். * ௫, ௧. ௨. ** ௰, ௩௨. ௩௩.

௨௩ இதைச் சுவிசேஷத்தினிமித்தமாக, அதுக்கு நானுடன்பங்காளனாகும்படிக்குச் செய்கிறேன்.

௨௪ ஓடுசாலையிலே ஓடுகிறவர்களெல்லாருமோடினாலும், ஒருத்தனே பந்தயத்தைப் பெறுகிறானென்றறியீர்களோ, நீங்கள் அதைப்பிடிக்கும்படியாயோடுங்கோள்.

௨௫ அல்லாமலும் போராடுகிறவனெல்லாம் எல்லாத்திலும் இச்சையடக்கமாயிருக்கிறான், அவர்களோ அழிவுள்ள கிரீடத்தையும், நாமோ வெனில் * அழிவற

றதை

ஷதையும் பெலப்படுத்துகிறேனே. * ௨. தீமோ. ௪.
௭. ௮. எபி. ௨, ௰.

௨௬ ஆனபடியால் நான் * நிச்சயமில்லாதவனுக்கோடேன், நான் ஆகாசத்தை அடிக்கிறவனைப்போலச் சிலம்பம்பண்ணேன். * ௯. ௮, ௬௮. ௬௯.

௨௭ மற்றவர்களுக்குப் பிரசங்கிக்கிற நானேதானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என்னுடைய சரீரத்தை நானொடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்.

## ௰. அதிகாரம்.

௧ விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதுக்குக் கொ
ரிந்தியரிலிருக்கிறதுக்காக, பவு
லு அவர்களுக்குத் தெளிவுள்ள அனே
கர் வேறு மாதிரத்தில் ஆக்கினையிட்ட
பட்டதிருஷ்டாந்தரங்களைக் காண்
பிக்கிறது.

ஆனால், சகோதரரே, நம்முடைய பிதாக்களெல்லாரும் * மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் ** சமுத்திரத்தைக் கடந்துவந்தார்கள். * ௨. மோ. ௰௩, ௨௧. ௨௨. ** ௨. மோ. ௰௪, ௨௨.

௨ எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள்.

௩ * எல்லாரும் ஒரே ஞானபோசனத்தைப் போசித்தார்கள், * ௨. மோ. ௰௬, ௰௫.

௪ * எல்லாரும் ஒரே ஞானபானத்தைக் குடித்தார்கள், அதேதெனில் கூடவரும் ஞானக் கன்மலையினின்று குடித்தார்கள், அந்தக் கன்மலை கிறிஸ்துவாயிருந்தார். * ௨. மோ. ௰௭, ௬.

௫ ஆகிலும், அவர்களில் மிச்சமானவர்கள் பேரிலே பராபரனுக்குப் பிரியமாயிருக்கவில்லை, அதேதெனில் * வனாந்திரத்திலே மடிவிக்கப்பட்டார்களென்கிறதுகளை நீங்கள் அறியாதே போகிறதுக்கு மனதில்லை. * ௪. மோ. ௨௬, ௬௪. ௬௫.

௬ அவர்கள் * இச்சித்ததுபோல நாமும் ஆகாதது களை இச்சிக்கிறவர்களாயிராதபடிக்கு, இதுகள் நமக்குத் திருஷ்டாந்தங்களாச்சுது. * ௪. மோ. ௰௧, ௪—
௬. ௩௩.

௭ * சனம் போசிக்கிறதுக்கும் குடிக்கிறதுக்கும் உட்கார்ந்து, விளையாடுகிறதுக்கு எழுந்திருந்தார்களென்றெழுதியிருக்கிறபடி, அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரரானதுபோல, நீங்களும் அப்படிக்கொத்தவர்களாகாதேயுங்கோள். * ௨. மோ. ௩௨, ௬.

௮ வேசித்தனம்பண்ணாமலும் இருக்கக்கடவோம், அப்படி அவர்களில் சிலர் * வேசித்தனம் பண்ணி, ஒரேநாளிலே இருபத்துமூவாயிரம்பேர் விழுந்தார்கள். * ௪. மோ. ௨௫, ௧. ௯.

௯ கிறிஸ்துவைச் சோதியாமலுமிருக்கக்கடவோம், அப்படி அவர்களில் சிலர் * சோதித்து, பாம்புகளாலே

[illegible]

௰ [illegible]

௰௧ [illegible]

௰௨ [illegible]

௰௩ [illegible]

௰௪ [illegible]

[illegible]

௰௫ [illegible]

௰௬ [illegible]

௰௭ [illegible]

௰௮ [illegible]

௰௯ [illegible]

௨௰ [illegible]

௨௧ [illegible]

௨௨ அல்லது கர்த்தருக்கெரிச்சலுண்டுபண்ணுவோமோ, அவரைப்பார்க்கிலும் பெலவான்களாயிருக்கிறோமோ.
௨௩ எல்லாத்துக்கும் எனக்கதிகாரமுண்டு, ஆனால் எல்லாம் பிரயோசனமாயிராது, எல்லாத்துக்கும் எனக்கதிகாரமுண்டு, ஆனால் எல்லாம் [illegible]க்காது. * ௬, ௰௨.
௨௪ ஒருத்தனும் * தன்காரியத்தைத் தேடாமல், அவனவன் மற்றவனுடைய காரியத்தைத் தேடக்கடவான். * பிலி. ௨, ௪.
௨௫ நீங்கள் மனச்சாட்சியினிமித்தியமாக ஒன்றையும் விசாரியாமல், மாங்கிஷக்கடையிலே விற்கிறதெதையும் வாங்கிப் புசியுங்கோள்.
௨௬ ஏனென்றால் * பூமியும் அதினுடைய நிறைவுங் கர்த்தருடையதாயிருக்குது. * சங். ௨௪, ௧.
௨௭ அவிசுவாசிகளிலொருத்தன் உங்களை அழைக்கக்கொள்ள நீங்கள் போக மனதுண்டானால், நீங்கள் மனச்சாட்சியினிமித்தியமாக ஒன்றையும் விசாரியாமல், உங்கள் முன் வைக்கப்பட்டதெதையும் புசியுங்கோள்.
௨௮ ஆனால் ஒருத்தன் உங்களுடனே: இது விக்கிரகங்களுக்குப் படைத்ததென்றால், அதை அறிவித்தவனுடைய நிமித்தியமாகவும் மனச்சாட்சியினிமித்தியமாகவும் புசியாதிருங்கோள், ஏனென்றால் பூமியும் அதினுடைய நிறைவுங் கர்த்தருடையதாயிருக்குது.
௨௯ உன் சுயமனச்சாட்சியைக் குறித்தல்ல, மற்றவனுடைய மனச்சாட்சியைக் குறித்துச் சொல்லுகிறேன். ஏனென்றால் என்னுடைய தன்னிச்சல் அன்னிய மனச்சாட்சியினாலே குற்றமாய் நிர்ணிக்கப்படுவானேன்.
௩௰ நான் * ஸ்தோத்திரப்பட்டோனாய் அநுபவித்தால், நான் ஸ்தோத்திரத்து அநுபவிக்கிறதுக்காகத் தூஷணிக்கப்படுவானேன். * ௧. தீமோ. ௪, ௪.
௩௧ எப்போதும் நீங்கள் * போசித்தாலுங் குடித்தாலும் மற்றென்ன செய்தாலும், எல்லாத்தையும் பராபரனுடைய மகிமைக்கென்று செய்யுங்கோள். * கொலோ. ௩, ௰௭.
௩௨ நானென்னுடைய பிரயோசனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோசனத்தை, அவர்கள் * ரெட்சிக்கப்படுவதற்குத் தேடி, எல்லாத்திலும் எல்லாருக்கும் ஏற்க நடக்கிறாப்போலே, * ௯, ௨௨.
௩௩ நீங்களும், யூதருக்குங் கிரேக்கருக்கும் பராபரனுடைய சபைக்கும் * இடறலற்றவர்களாயிருங்கோள். * ரோ. ௰௪, ௰௩.

## ௰௧. அதிகாரம்.

‡ சபைத்தேவாராதனை செய்கையில் புருஷர் முக்காடிடாமலிருக்கிறதும், ஸ்திரீகள் முக்காடிட்டுக்கொண்டிருக்கிறதும் நல்லக்கணமென்பது.

நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்களும் * என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கோள். * ௪, ௰௬.

௨ சகோதரரே, நீங்கள் எல்லாத்திலும் என்னை நினைத்து, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடியே கட்டளைகளைக் கைக்கொண்டிருக்கிறதுக்காக உங்களைப் புகழுகிறேன்.

௩ ஆனாலொவ்வொரு புருஷனுடைய தலைக் கிறீஸ்துவென்றும், * பெண்சாதியினுடைய தலை புருஷனென்றும், ** கிறீஸ்துவினுடைய தலை பராபரனென்றும் நீங்கள் அறியவேணுமென்றிருக்கிறேன். * எபே. ௫, ௨௩. ** ௩, ௨௩.

௪ தலைமூடிக்கொண்டிருந்து செபம்பண்ணினாலுந் தீர்க்கதரிசனஞ் சொன்னாலும் ஒவ்வொரு புருஷனுந் தன் தலையை அவமானப்படுத்துகிறான்.

௫ ஆனால் தலைமூடாமல் செபம்பண்ணினாலுந் தீர்க்கதரிசனஞ் சொன்னாலும் ஒவ்வொரு ஸ்திரீயும் தன் தலையை அவமானப்படுத்துகிறாள், ஏனென்றால் அது அவள் சிரைக்கப்பட்டதுக்குச் சரியாயிருக்கும்.

௬ அந்தப்படி ஸ்திரீ மூடிக்கொள்ளாவிட்டால், மயிரையுங் கத்தரித்துக்கொள்ளக்கடவாள். ஆனால் மயிர் கத்தரிக்கப்படுகிறது அல்லது சிரைக்கப்படுகிறது ஸ்திரீக்கு வெட்கமானபடியினாலே, மூடிக்கொண்டிருக்கக்கடவாள்.

௭ புருஷனோவென்றால் தலையை மூடிக்கொண்டிருக்கவேண்டியதில்லை, ஏனென்றால் * பராபரனுடைய சாயலும் மகிமையுமாயிருக்கிறான், ஆனால் பெண்சாதி புருஷனுடைய மகிமையாயிருக்கிறாள். * ௧. மோ. ௧, ௨௬. ௨௭.

௮ ஏனென்றால் புருஷன் பெண்சாதியாலே தோன்றினவனல்ல, * பெண்சாதி புருஷனாலே தோன்றினவள். * ௧. மோ. ௨, ௨௨.

௯ புருஷன் பெண்சாதிக்காகச் சிஷ்டிக்கப்பட்டவனுமல்ல, * பெண்சாதி புருஷனுக்காகச் சிஷ்டிக்கப்பட்டவள். * ௧. மோ. ௨, ௰௮.

௰ ஆகையால் தூதர்களினிமித்தியமாக ஸ்திரீக்குத் தலையின்மேல் அதிகாரமுண்டாயிருக்கவேண்டியது.

௰௧ ஆகிலுங் கர்த்தருக்குள் பெண்சாதியில்லாமல் புருஷனுமில்லை, புருஷனில்லாமல் பெண்சாதியுமில்லை.

௰௨ ஏனென்றால் ஸ்திரீ புருஷனாலிருக்கிறது போல, புருஷன் ஸ்திரீயினாலுமிருக்கிறான், ஆனால் சகலமும் பராபரனாலேயிருக்குது.

௰௩ ஸ்திரீ தலைமூடிக்கொண்டிராமல் பராபரனைத் தொழுகிறது தகுமோவென்று உங்களுக்குள்ளே நீங்களே நிதானியுங்கோள்.

௰௪ அல்லது புருஷன் மயிரை நீளமாய் வளர்த்தால், அது அவனுக்கு ஈனமாயிருக்குமென்றும்,

௰௫ பெண்சாதியோ மயிரை நீளமாய் வளர்த்தால், அது அவளுக்கு மகிமையாயிருக்குமென்றுஞ் சுபாவமே உங்களுக்குப் போதியாதோ, ஏனென்றால் மயிர் அவளுக்கு முக்காடாகக் கொடுத்திருக்குது.

௰௬ ஆனால் வாதுபிரியனாயிருக்கிற ஒருத்தனைக் கண்டால், எங்களுக்கப்படிக்கொத்த பழக்கமில்லை, பராபரனுடைய சபைகளுக்குமில்லை.

௺ கர்த்தருடைய ராப்போசனத்துக்குப் பரிசுத்தமாய்ச் சேரிக்கிறதுக்கும் பாத்திரமாய் வாங்கிறதுக்கும் புத்தி சொன்னது.

௰௭ உத்தமமையாகவல்ல அதிகக் கேளப்பமாகக் கூடிவருகிறீர்களென்கிற நான் சொல்லிக்காட்டப் போற காரியத்திலேயென்றால் உங்களைப் புகழேன்.
௰௮ அதேதென்னில் முதலாவது, நீங்கள் சபையிலே கூடிவரும்போது, உங்களிலே பிரிவினைகளுண்டென்று கேட்கிறேன், பாதி நம்புகிறேன்.
௰௯ ஏனென்றால் உங்களில் உத்தமர் வெளியாகும்படிக்கு, * மார்க்கபேதங்களும் உங்களிலே உண்டாயிருக்கவேண்டியது. * மத். ௰௮, ௭.
௨௰ நீங்கள் ஒருமிக்கக் கூடிவரும்போதோவென்னில், நீங்கள் செய்கிறது கர்த்தருடைய ராப்போசனத்தைப் போசிக்குகிறதல்ல.
௨௰௧ ஏனென்றால், சாப்பிடுகையிலே அவரவர் தங்கள் சுயராப்போசனத்தை முந்தி வாங்க, ஒருத்தன் பசித்திருக்கிறான், மற்றொருத்தன் மிச்சமாய்ச் சாப்பிடுகிறான்.
௨௰௨ புசிக்கிறதுக்குங் குடிக்கிறதுக்கும் உங்களுக்கு வீடுகளில்லையோ, தேவனுடைய சபையை அசட்டைப்பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களோ, உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன், உங்களைப் புகழுவேனோ, இதிலே உங்களைப் புகழேன்.
௨௰௩ ஏனென்றால் நான் உங்களுக்கு ஒப்புவித்ததை* நான் கர்த்தராலே அடைந்தேன், அதாவது: ** கர்த்தராகிய யேசு, தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று ராத்திரியிலே அப்பத்தை எடுத்துக்கொண்டு, * கலா. ௧, ௰௨. ** மத். ௨௰௬, ௨௰௬ — ௨௰௮. மாற்கு. ௰௪, ௨௰௨ — ௨௰௪. லூ. ௨௰௨, ௰௯, ௨௰.
௨௰௪ ஸ்தோஸ்திரம்பண்ணி அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் போசியுங்கோள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிறதான என்னுடைய சரீரமாயிருக்குது, இதை என்னை நினைக்கிறதுக்காகச் செய்யுங்கோளென்றார்.
௨௰௫ அந்தப்படிதானே, ராப்போசனம்பண்ணின பிறபாடு, அவர் பாத்திரத்தையுமெடுத்துக்கொண்டு: இந்தப் பாத்திரமானது என்னுடைய ரத்தத்திலே புது உடன்படிக்கையாயிருக்குது, இதை நீங்கள் குடிக்கிறபோதெல்லாம் என்னை நினைக்கிறதுக்காகச் செய்யுங்கோளென்றார்.
௨௰௬ ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் போசித்து, இந்தப் பாத்திரத்தைக் குடிக்கிறபோதெல்லாம் கர்த்தருடைய மரணத்தை அவர் வருமட்டுக்கும் அறிவிக்கிறீர்கள்.
௨௰௭ ஆனபடியால் எவனாகிலும் அபாத்திரனாயிருந்து இந்த அப்பத்தைப் போசித்து, அல்லது கர்த்தருடைய பாத்திரத்தைக் குடித்தால், அவன் கர்த்தருடைய சரீரத்துக்கும் ரத்தத்துக்கும் குற்றமுள்ளவனாயிருப்பான்.

௨௰௮

௨௮ ஆகையால் மனுஷன் தன்னைத்தானே சோதித்துக்கொண்டு, பிற்பாடே இந்த அப்பத்திலே புசித்து, இந்த பாத்திரத்திலே குடிக்கக்கடவான். ௨. கொ. ௰௩, ௫.

௨௯ ஏனென்றால் அபாத்திரனாய்ப் புசித்துக் குடிக்கிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்றுணராமற்போறபடியினாலே, தனக்குத்தானே ஞாயத்தீர்ப்பைப் புசித்துக் குடிக்கிறான்.

௩௰ இதுநிமித்தியமாக உங்களிலே பலயீனரும் வியாதிக்காறரும் வெகுபேர்கள் உண்டு, அனேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.

௩௧ ஏனென்றால் நம்மை நாமே நிதானித்து விசாரித்தால், ஞாயந்தீர்க்கப்படோம். சங். ௩௨, ௫.

௩௨ ஞாயந்தீர்க்கப்பட்டோமேயாகில், நாம் லோகத்தோடே ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதபடிக்கு, கர்த்தராலே தண்டிக்கப்படுகிறோம்.

௩௩ ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போசிக்கிறதுக்குக் கூடிவந்தால், ஒருத்தருக்கொருத்தர் காத்திருங்கோள்.

௩௪ ஒருத்தனுக்குப் பசியிருந்ததேயானால் அவன், நீங்கள் ஆக்கினை உண்டாகக் கூடிவராதபடிக்கு, வீட்டிலே சாப்பிடக்கடவான். மற்றக் காரியங்களையோ நான் வரும்போது திட்டம் பண்ணுவேன்.

## ௰௨. அதிகாரம்.

¶ ஞானவரங்களுடைய வித்தியாசங்களின் நிமித்தியமாகப் பிரிவினைகள் வேண்டாமென்றெச்சரித்தது.

ஆனால், சகோதரரே, ஞானவரங்களின் செய்தியை நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.

௨ வழிதப்பிப்போனபடி, நீங்கள் ஊமையான விக்கிரகங்களண்டைக்குக் கொண்டுபோகப்பட்ட அஞ்ஞானிகளாயிருந்தீர்களென்று அறிவீர்கள்.

௩ இப்போதும், பராபரனுடைய ஆவியினாலே பேசுகிற ஒருத்தனும் இயேசுவைத் தூஷணியானென்றும், பரிசுத்த ஆவியினாலேயொழிய ஒருத்தனும் இயேசுவைக் கர்த்தரென்று சொல்லக்கூடாதென்றும் உங்களுக்கு அறிவிக்கிறேன்.

௪ ஆனால் வரங்களுடைய வித்தியாசங்களுண்டு, ஆவியோ ஒருத்தர். ரோ. ௰௨, ௬.

௫ ஊழியங்களுடைய வித்தியாசங்களுமுண்டு, கர்த்தரோ ஒருத்தர்.

௬ பெலன்களுடைய வித்தியாசங்களுமுண்டு, எல்லாத்தையும் எல்லாருக்குள்ளும் நடப்பிக்கிற பராபரனோ ஒருத்தர்.

௭ ஆனால் அவனவனுக்கு ஆவியினுடைய விளக்கம் பிரயோசனத்துக்காகக் கொடுக்கப்படுகுது.

௮ அதேதென்றால், ஒருத்தனுக்கு ஆவியினாலே ஞானத்தினுடைய வசனமும், வேறொருத்தனுக்கு அந்த ஆவியினாலே அறிவினுடைய வசனமும்,

௯ வேறொருத்தனுக்கோ அந்த ஆவியினாலே தானே விசுவாசமும், வேறொருத்தனுக்கோ அந்த ஆவியினாலே தானே குணமாக்கும் வரங்களும்,

௰ வேறொருத்தனுக்கோ வல்லமைகளைச் செய்யும் பெலன்களும், வேறொருத்தனுக்கோ தீர்க்கதரிசனமும், வேறொருத்தனுக்கோ ஆவிகளுடைய வித்தியாசங்களை நிதானிக்குதலும், வேறொருத்தனுக்கோ பலபல பாஷைகளும், வேறொருத்தனுக்கோ பாஷைகளை வியாக்கியானம் பண்ணுதலுங் கட்டளையிடப்படுகுது.

௰௧ ஆனால் அந்த ஒரே ஆவியானவர், * அவரவருக்கு அவர்கள் சேர்ந்த வரங்களைத் தம்முடைய சித்தத்தின்படியே பகிர்ந்து கொடுத்து, இதுகளையெல்லாம் நடப்பிக்கிறார். * எபே. ௪, ௭.

௰௨ ஏனென்னில் சரீரமொன்றும், அனேகம் அவயவங்களுள்ளதுமாயிருந்து, அந்த ஒரே சரீரத்தின் அனேகமான எல்லா அவயவங்களுமொரே சரீரமாயிருக்குதே, அந்தப்பிரகாரமாய்க் கிறிஸ்துவுமிருக்கிறார்.

௰௩ ஏனென்றால் நாம் யூதராயிருந்தாலுங் கிரேக்கராயிருந்தாலும், அடிமைகளாயிருந்தாலுந் தன்னிச்சைக்காறராயிருந்தும் எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரமாக ஸ்னானம் பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவியாகத் தாகந்தீர்க்கப்பட்டோம்.

௰௪ ஏனென்னில் சரீரமுமொரே அவயவமாயிராமல், அனேக அவயவங்களாயிருக்குது.

௰௫ காலானது: நான் கையாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ.

௰௬ காதானது: நான் கண்ணாயிராதபடியினாலே நான் சரீரத்தின் அவயவமல்லவென்றால், அதினாலே அது சரீரத்தின் அவயவமாயிராதோ.

௰௭ சரீரமுழுதுங் கண்ணானால், செவியெங்கே, அதுமுழுதுஞ் செவியானால் மோர்ப்பமெங்கே.

௰௮ இப்போதும் பராபரன் அவயவங்களில் ஒவ்வொன்றைத் தமக்குச் சித்தமானபடி சரீரத்திலே வைத்தார்.

௰௯ அதுகளெல்லாமொரே அவயவமாயிருந்ததேயானால், சரீரமெங்கே.

௨௰ இப்போதும் அவயவங்களோ அனேகம், சரீரமோ ஒன்று.

௨௰௧ ஆனால் கண்ணானது கையுடனே: நீயெனக்குத் தேவையில்லையென்றும், அல்லது தலையானது கால்களுடனே: நீங்களெனக்குத் தேவையில்லையென்றுஞ் சொல்லக்கூடாமல்,

௨௰௨ சரீர அவயவங்களில் பெலயீனமாய்க் காணப்படுகிறதுகளே மிகவுந் தேவையானதுகளாயிருக்குது.

௨௰௩ நமக்குச் சரீர அவயவங்களில் கனயீனமாய்க் காணப்படுகிறதுகளுக்கே அதிக கனத்தையுந் தரிப்பிக்கிறோம், நம்மில் அலங்காரத்தாட்சியானதுகளுக்கே அதிக அலங்கரிப்புண்டு.

௨௰௪ நம்மில் அலங்காரமானதுகளுக்கோ வேண்டியது தேவையில்லை.

௨௰௫ இப்படி சரீரத்திலே பிரிவினையுண்டாயிராமல்

அவ

அவயவங்கள் ஒன்றுக்கொன்று ஏகபராமரிக்கையாயிருக்கும்படிக்கு, பராபரன் தாட்சியானதுக்கு அதிக கனங்கொடுத்து, சரீரத்தை நிரவிவைத்தார்.
௨௬ ஒரே அவயவம் பாடுபட்டால் எல்லா அவயவங்களுங் கூடப் பாடுபடும், ஒரே அவயவம் மகிமையடைந்தால், எல்லா அவயவங்களுங் கூடச் சந்தோஷப்படும்.
௨௭ * நீங்களோவெனில் கிறிஸ்துவினுடைய சரீரமுந் தனித்தனியே அவயவங்களுமாயிருக்கிறீர்கள். * ரோ. ௰௨. ௫.
௨௮ * பராபரன் சபையிலே முதலாவது அப்போஸ்தலரும், இரண்டாவது தீர்க்கதரிசிகளும், மூன்றாவது போதகருமான இந்த நபர்களையும், பிற்பாடு வல்லமைகளையும், பிற்பாடு குணமாக்கும் வரங்களையும், ஆதரிக்குதல்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையுங் கட்டளையிட்டார். * எபே. ௪, ௰௧.
௨௯ எல்லாரும் அப்போஸ்தலரோ, எல்லாருந் தீர்க்கதரிசிகளோ, எல்லாரும் போதகரோ, எல்லாரும் வல்லமைகளைச் செய்கிறவர்களோ,
௩௰ எல்லாருக்குங் குணமாக்கும் வரங்களுண்டோ, எல்லாரும் பாஷைகளைப் பேசுகிறார்களோ, எல்லாரும் வியாறுதிபண்ணுகிறார்களோ,
௩௧ நீங்களோவெனில் * அதிகநன்மையான வரங்களை நாடுங்கோள், ** இன்னமும் மகா மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன். * ௰௪, ௧. ** ௰௩, ௧-௩.

## ௰௩. அதிகாரம்.

¶ சிநேகமே பிரதானமென்பது.

நான் மனுஷருடைய பாஷைகளையுந் தேவதூதருடைய பாஷைகளையும் பேசினாலுஞ் சிநேகமெனக்கில்லாதிருந்தால், நான் முழங்குகிற வெண்கலமும், அல்லது ஓசைதருங் கிண்கிணியுமானேன்.
௨ நான் தீர்க்கதரிசனமுள்ளவனாயிருந்து, சகல ரகசியங்களையுஞ் சகல அறிவையும் அறிந்து, பருவதங்களைப் பேர்க்கத்தக்க சகல விசுவாசத்தையும் பெற்றிருந்தாலும், சிநேகமெனக்கில்லாதிருந்தால் நான் ஒன்றுமில்லை. * மத். ௭, ௨௨. ௨௩.
௩ நானெனக்குண்டானதெல்லாத்தையும் ஏழைகளுக்கூட்டி, நான் சுட்டெரிக்கப்பட என் சரீரத்தை ஒப்புக்கொடுத்தாலுஞ் சிநேகமெனக்கில்லாதிருந்தால் எனக்குப் பிரயோசனமொன்றுமில்லை.
௪ சிநேகம் * நீண்டசாந்தமுந் தயவுமாயிருக்குது, சிநேகம் பொறாமையடையாது, சிநேகங் கோபஞ் செய்யாது, அது உப்பிப்போகாது. * க. பேது. ௪, ௮.
௫ அது இலச்சையானதைச் செய்யாது, அது தனக்கானதுகளைத் தேடாது, அது சினமடையாது, அது பொல்லாப்பாக எண்ணாது.
௬ அது அநியாயத்துக்குச் சந்தோஷப்படாமல், உண்மைக்குச் சந்தோஷப்படுகுது.

௭ அது ✦ எல்லாத்தையும் மூடுது, எல்லாத்தையுமேந்துக்கொள்ளுது, எல்லாத்தையும் நம்புது, எல்லாத்தையுஞ் சயிக்குது. ✦ வாசக். ௰, ௰௨.

௮ சிநேகமொருக்காலும் விழுந்துபோகாது, தீர்க்கதரிசனங்களாகிலும் நின்றுபோம், பாஷைகளாகிலுமொழிந்துபோம், அறிவாகிலுங் கொலைந்துபோம்.

௯ ஏனென்றால் நாம் அறிகிறது குறைவு, நாம் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதுங் குறைவு.

௰ நிறைவு வரும்போதோவென்றால் குறைவு கொலைந்துபோம்.

௰௧ நான் குழந்தையாயிருக்கிறபோது குழந்தையைப்போலே பேசினேன், குழந்தையைப்போலே உணர்ந்தேன், குழந்தையைப்போலே சிந்தித்தேன். நான் புருஷனானபோதோவென்றால், குழந்தைகாரியங்களைப் பரிகரித்தேன்.

௰௨ ✦ இப்போ கண்ணாடியிலே நிழலாகவும், அப்போதோவென்றால் முகமுகமாகவுங் காண்கிறோம், இப்போ நான் அறிகிறது குறைவு, அப்போதோவென்றால் நான் அறியப்பட்டபடி அறிந்துகொள்வேன். ✦ ௨. கொ. ௫, ௭.

௰௩ இப்போதோவென்றால் விசுவாசம் நம்பிக்கை சிநேகம் இம்மூன்றுமிருக்குது, இதுகளிலே பெரியதோ சிநேகம்.

## ௰௪. அதிகாரம்.

௧ தீர்க்கதரிசனஞ்சொல்லிப் போதிக்கப்பண்ணுகிறவரத்தை நாடப்புத்திசொன்னது.

சிநேகத்தைப் பின்தொடருங்கோள், ஞானவரங்களையும் நாடுங்கோள், விசேஷமாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவரத்தைத்தானே.

௨ ஏனென்றால் அந்நியபாஷையாய்ப் பேசுகிறவன் மனுஷருக்கல்ல பராபரனுக்குப் பேசுகிறான், அதென்னென்றால் ஒருத்தனுமுணரான், ஆவியினாலேயோ ரகசியங்களைச் சொல்லுகிறான்.

௩ ஆனால் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் மனுஷருக்கு ஞானக்கட்டுதலாகவும் புத்தியாகவும் ஆறுதலாகவும் பேசுகிறான்.

௪ அந்நியபாஷையாய்ப் பேசுகிறவன் தன்னைத்தானே ஞானக்கட்டுகிறான், ஆனால் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் சபையை ஞானக்கட்டுகிறான்.

௫ நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேச எனக்காசையுண்டு, ஆனாலும் நீங்கள் ✦ தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறதற்கதிக ஆசையுண்டு. ஏனென்றால் அந்நியபாஷைகளாய்ப் பேசுகிறவன் சபை ஞானக்கட்டுதலை அடையும்படிக்கு அதின் அர்த்தத்தையுஞ் சொல்லானாகில், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனைப்பார்க்கிலும் பெரியவன். ✦ ௪. மோ. ௰௧, ௨௯.

௬ இப்போதும், சகோதரரே, நான் உங்களிடத்தில் வந்து, உங்களுடனே ரகசிய வெளிப்படுத்து

தலாக

தலாக, அலலதுஅறிவாக. அலலதுதீரககதெரிசன
மாகஅலலதுபோதகமாகபபேசாமல,மறுபாஷை
களாயபபேசினால, உஙகளுககுநதபபிரயோசன
மாயிருபபேன.
எ சததமிடுகிறஉயிரிலலாததவாததியஙகளாகிய
ய, குழலாகிலுஞசுரமணடலமாகிலுஞசரி, தொ
னிகளிலேவிததியாசஙகாடடாதேபோனால, ஊதி
னதுஅலலதுகொடடினதுஇனனதெனறெபபடித
தெரியும.
அ எககாளமநிசசயமறற சததமிட
டால, எவனயுததததுககு ஆயததமபணணுவான.
கூ அநதபபடியேநீஙகளுமபநாவினாலே தெளிவான
பேசசைசசொலலாமறபோனால, சொலலபபடுகிறதெனன
தெனறெபபடிதெரியும. நீஙகளஆகாசததிலேசொலலுகி
றவர்களாயிருபபீர்களே.
ய லோகததிலேவெனறுல வததனைவிதமான ச
ததஙகளஉணடாயிருநதாலும, அதுகளில ஒனறும
தெளிவறறதலல.
யக பேசசுகிறதின அரததததையறியாதபோனால, பேசுகிறவனுககு நானஅநநியனாயிருப
பேன, பேசுகிறவனுமஎனககு அநநியனாயிருபபான.
யஉ அபபடியேநீஙகளுமஞானவரஙகளைநாடுகி
றவர்களானபடியினாலே, சபையினபகதிவிருததி
ககாகவிசேஷமாயப் பெருகபபாருஙகோள. * மத. உரு,
உகூ.
யங ஆகையாலமறுபாஷையாயபபேசுகிறவன அ
தின அரததததைசசொலலுமபடியாகசசெபமபண
ணுவான.
யச நானமறுபாஷையிலேசெபமபண
ணினால என ஆவிசெபமபணணுது, ஆனால என அ
றிவுகனியறறதாயிருககுது.
யரு இபபோது செயயததககதென்ன, ஆவியா
லசெபமபணணுவேன, ஆனால அறிவுமவிளஙகசசெ
பமபணணுவேன, ஆவியாலபாடுவேன, ஆனால அ
றிவுமவிளஙக * பாடுவேன. * எபே. ரு, யகூ.
யகா நீஆவியினாலேஸதோததிரததால, கலலா
தவனுடையஇடததிலேஇருககிறவன உனஸதோத
திரததுககுஇபபடிஆமெனஎனபான, நீசொலலுகிற
தினனதெனறறியானே.
யஎ நீயோவெனில நனறாயஸதோததிரககிறாய,
மறறவனோவெனில பகதிவிருததிபடுகிறதிலலை.
யஅ நானஉஙகளெலலாரையுமபார்கக அதிகமா
யபாஷைகளைபபேசுகிறேனெனகிறதுககாக என
பராபரனை ஸதோததிரககிறேன.
யகூ ஆகிலுமநானசபையிலேமறுபாஷையாயபத்
தினாயிரமவாரததைகளைபபேசுவதைபபார்ககிலுமஎன
அறிவிளஙகஐநதுவாரததைகளைமறறவர்களையு
முபதேசிககுமபடிககுபபேசமனதாயிருககிறேன.
உய சகோதரரே, * நீஙகளபுததியிலேகுழநதைக
ளாகாமல, துறகுணததுககு குழநதைகளைபபோ
லிருஙகோள, ஆனாலபுததியிலேதேறினவர்களாயி
ருஙகோள. * மத. யஅ, யக.

திருககஎஙகளுககுமனதிலலெ, அதெனனவெனில
பிழைபபொமொவெனறுமநாஙகளமெததசசநதெக
பபடததககதாயக, பெலததுககுமிஞசினமகாப
பாரமெஙகளுககுணடாசசுது. * அப. ௰௯, ௨௩.
௯ ஆனாலநாஙகளஎஙகளபெரிலெ அலல, மரிததொ
ரையெழுபபுகிறபராபரனபெரிலெ நமபிககையா
யிருககததககதாக, மரிககிறொமெனகிறதெஙக
ளுககுளதீரநதிருநதது.
௰ அவரெஙகளை அபபடிபபடடமரணததுககுநீ
ஙகலாகவிடுவிததவருமவிடுவிககிறவருமாயிருககிறார.
௰௧ எஙகளுககாகசசெயயுமவெணடுதலினாலெநீ
ஙகளுஙகூடவுதவியாயிருககககொளள, * இனனம
விடுவிககிறவருமாயிருபபாரெனறு அவரை நமபியி
ருககிறொம, அநெகருமுகாநதிரததினாலெ எஙகளுககு
ணடானவரததுககாக அநெகராலெ எஙகளநிமிததி
யமாயஸதொததிரபபுணடாகுமபடியாககொனெ.
* ௨. தீமொ. ௪, ௰௮.
௰௨ ஏனெனிலநாஙகளலொகததிலெ, விசெஷ
மாகவெ உஙகளிடததிலெ, கவடிலலாமையாக
வுநதெயவபயபாவததுவும, மாமிஷஞானததைக
கொணடலல, பராபரனுடையகிருபையைககொ
ணடுசஞசரிததொமெனறுஎஙகளமனசுஎஙகளுககு
சசொலலுஞசாடசிஎஙகளுடைமெனமையாயிருககுது.
௰௩ ஏனெனறாலநீஙகளவாசிககிறதும அறிநது
கொளளுகிறதுமானகாரியஙகளையெயலலாமலவெ
றெகாரியஙகளைஉஙகளுககெழுதொம.
௰௪ ஆனாலநீஙகளகரததராகியயெசுவினாளி
லெஎஙகளுடையமெனமையாயிருககுமாபபொலெ
நாஙகளுமஉஙகளுடையமெனமையாயிருககிறொமெ
னறுநீஙகளஎஙகளைஒருபடியாயஅறிநதுகொணட
படிமுடிவுபரியநதமுமஅறிநதுகொளளுவீரகளெ
னறுநமபுகிறென.

## ¶ தானஇனனமவராததமுகாநதிரததைச சொனனது.

௰௫ இநதநமபிககையிலெநானஉஙகளுககிரணடா
முபகாரமுணடாக,முநஉஙகளணடைககுவரவும,
௰௬ உஙகளைவழியாகமககெதொனியாவுக
குபபொகவும, மறுபடியுமமககெதொனியாவிலி
ருநதுஉஙகளணடைககுவரவும, உஙகளாலயூதெ
யாவுககுவழிவிடபபடவுமயொசனையாயி
ருநதென.
௰௭ இபபொதுமநானிபபடியொசிததபொராக
காயயொசிததெனொ, அலலது, ஆமஆமெனகிறதும
அலலவலலவெனகிறதுமெனனிடததிலெஉணடா
யிருககுமபடியாக, நானயொசிககிறகாரியஙகளை
மாமிஷததினபடியெயொசிககிறெனொ.
௰௮ நாஙகளஉஙகளுககுபபிரசஙகிததவாததை
யொவெனறாலஆமெனறுமஅலலவெனறுமிரு
ககததிலலெனகிறதுககுபராபரனுடையஉணமை
யெசாடசி.

௰௯ ஏனென்னில் நாங்களாலே, அதாவது, என்னாலும் சில்வானுவினாலும், தீமோத்தேயுவினாலும் உங்களுக்குள்ளே பிரசங்கிக்கப்பட்ட பராபரனுடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்து ஆமென்றும், அல்லவென்றுமிருந்ததில்லை, ஆமென்கிறதே அவரிடத்திலே இருந்தது.

௨௰ ஏனென்றால், எங்களாலே கொண்டு பராபரனுக்கு மகிமையுண்டாக, பராபரனுடைய எல்லா வாக்குத்தத்தங்களும் அவருக்குள் ஆமென் ஆம், அவருக்குள் ஆமெனாம் ஆமெனேயிருக்குது.

௨௧ ஆனால் எங்களை உங்களோடே கூடக் கிறிஸ்துவுக்குள் திடப்படுத்துகிறவரும், நம்மை அபிஷேகம்பண்ணினவரும் பராபரன்.

௨௨ * அவர் நம்மை முத்திரைபோட்டவரும் நம்முடைய இருதயங்களில் ஆவியென்கிற அச்சாரத்தைக் கொடுத்தவருமாமே. * எபே. ௧, ௰௩. ௪, ௩௰.

௨௩ நானோவென்றால் உங்களைத் தப்பவிடப்பார்த்து, கொரிந்துபட்டணத்துக்கின்னம் வராதிருக்கிறேனென்கிறதுக்குப் பராபரனை என் ஆத்துமத்தின் மேலே சாட்சியாக அழைக்கிறேன்.

௨௪ நாங்கள் உங்கள் விசுவாசத்துக்கு * சேமான்களென்கிறதினாலே அல்ல, உங்கள் சந்தோஷத்துக்கு உதவியாளர்களாயிருக்கிறோம். ஏனென்றால் விசுவாசத்தினாலே நிற்கிறீர்கள். * ௧. பேது. ௫, ௩.

## ௨. அதிகாரம்.

¶ மகாத்துக்கம் அடைந்த பெரும்பாவிக்கு மன்னிக்கவும் புத்திசொன்னது.

ஆனால் நான் உங்களண்டையிலே மறுபடியும் துக்கத்துடனே வராதபடிக்கு அப்படியென்று எனக்குள்ளே தீர்த்துக்கொண்டேன்.

௨ ஏனென்னில் நான் உங்களைத் துக்கப்படுத்தினால், என்னாலே துக்கப்பட்டவனே அல்லாமல் என்னைச் சந்தோஷப்படுத்துபவனார்?

௩ நான் வந்து சந்தோஷமடையவேண்டியவர்களாலே துக்கமடையாதபடிக்கு, இந்தக்காரியத்தை உங்களுக்கெழுதியிருந்தேன், ஏனென்னில் என்னுடைய சந்தோஷம் உங்களெல்லாருடைய சந்தோஷமாயிருக்குமென்று நம்பிக்கை எனக்கு உங்களெல்லாரிடத்திலுமிருக்குது.

௪ ஏனென்றால் வெகு வியாகுலமும் மனநெருக்கமும் அடைந்தவனாய் வெகு கண்ணீரோடே உங்களுக்கெழுதினேன், நீங்கள் துக்கப்படவல்ல, உங்கள்பேரிலே விசேஷமாக எனக்கிருக்குஞ் சிநேகத்தை நீங்கள் அறியத்தானே.

௫ ஆனால் நான் உங்களெல்லார்பேரிலும் பாரஞ்சுமத்தாதபடிக்கு, ஒருத்தன் துக்கமுண்டாக்கியிருந்தானானால், அவன் என்னைத் துக்கப்படுத்தினதில்லை, ஒருபங்குக்கு மாத்திரந் துக்கப்படுத்தினான்.

௬ அநேகராலுண்டான இந்தக் கண்டிப்பு கொளறுதலாய் அப்படிக்கொத்தவனுக்குப் போதும்.

௭ அதிதுக்கத்திலேப்பட்டுச் சோர்ந்தவன் முழுங்கப்படாதபடிக்கு, அதைவிட நீங்கள் அவனை மன்னித்துத் தேற்றரவுபண்ணவேணும்.
௮ ஆனதினாலே நீங்கள் அவனுக்குச் சிநேகத்தைக் காண்பிக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.
௯ ஏனென்றால் நீங்கள் எல்லாத்திலும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்கள் உத்தமகுணத்தை அறியவும் அப்படி எழுதியிருந்தேன்.
௰ ஆனாலுங்களுக்கு யாதொன்றை மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன், ஏனென்றால் நானும் எதுக்குப் யாதொன்றை மன்னித்திருந்தால், அதைக் கிறிஸ்துவின் சமுகத்திலே உங்களுக்காக மன்னித்தேன், சாத்தானாலே நாம் நஷ்டப்பட்டுப் போகாதபடிக்குத்தானே.
௰௧ ஏனென்றால் அவனுடைய நினைவுகள் எங்களுக்குத் தெரியாததல்ல.

¶ தன்னுடைய ஊழியத்துக்குப் பராபரன் கட்டளையிட்டுவருகிற ஆசீர்வாதத்தைக்குறித்துச் சொன்னது.

௰௨ நான் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க * துரோவாவுக்கு வந்து கர்த்தருக்குள் எனக்குக் கதவு திறக்கப்பட்டுப்போகிறபோதில், நான் என் சகோதரனாகிய தீத்துவைக் காணாததினாலே என் ஆவியிலே இளைப்பாறுதலில்லாதிருந்து, * அப். ௰௬, ௮.
௰௩ நான் அவர்களை அனுப்பிவித்துக்கொண்டு மக்கெதோனியாவுக்குப் புறப்பட்டுப்போனேன்.
௰௪ ஆனாலும் கிறிஸ்துவுக்குள் எப்போதும் எங்களை வெற்றிசிறக்கப்பண்ணி, எல்லாவிடத்திலும் எங்களைக்கொண்டு தம்முடைய அறிவினுடைய வாசனையை வெளிப்படுத்துகிற பராபரனுக்கு ஸ்தோத்திரம்.
௰௫ ஏனென்றால் இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளேயும் பராபரனுக்கு நாங்கள் கிறிஸ்துவினுடைய சுகந்தமாயிருக்கிறோம்.
௰௬ இவர்களுக்கோ மரணத்துக்கு மரணவாசனையும், அவர்களுக்கோ ஜீவனுக்குச் ஜீவவாசனையுமாகத்தானே. ஆனாலிதுகளுக்கு * சமர்த்தனார். * ௩, ௫.
௰௭ ஏனென்றால் நாங்கள் அநேகரைப்போலப் பராபரனுடைய வசனத்தைக் கலப்பாக்குகிறவர்களாயிராமல், பராபரனுக்கு முன்பாகக் கிறிஸ்துவுக்குள் துப்புரவாகவும் பராபரனாலுண்டானதாகவும் பேசுகிறோம்.

## ௩. அதிகாரம்.

¶ தன்னுடைய சுவிசேஷ ஊழியத்திலே கொரிந்தியர் குணப்பட்டதைப் பவுலவர்களுக்கு நினைப்பூட்டினது.

எங்களைத்தானே நாங்கள் மறுபடியும் மெச்சிக்கொள்ளத்துவக்குகிறோமோ அல்லது சிலருக்குத் தேவையானதுபோல, உங்களண்டைக்கு மெச்சிப்பான நிருபங்கள், அல்லது உங்களையிட வா

வாங்கும் மெய்ப்பான நிருபங்கள் எங்களுக்குத் தேவையாயிருக்குதோ.

உ எங்களிருதயங்களில் எழுதப்பட்டு, சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்படும் எங்களுடைய நிருபம் நீங்கள் தானே.

௩ ஏனென்றால் நீங்கள் எங்கள் ஊழியத்தினாலே உண்டாக, மையினாலல்ல, சீவனுள்ள பராபரனுடைய ஆவியினாலே கற்பலகைகளிலல்ல, இருதயத்தின சதையான பலகைகளில் எழுதப்பட்ட கிறிஸ்துவினுடைய நிருபமென்று விளங்கப்பட்டிருக்கிறீர்கள். யெரெ. ௩௧, ௩௩. எசேக். ௩௬, ௨௬ ௨௭.

௪ ஆனாலும் இப்படிக்கொத்த நம்பிக்கை கிறிஸ்துமூலமாக எங்களுக்குப் பராபரன்மேலிருக்குது.

௫ நாங்கள் யாதொன்றை யெண்ணிச் சிந்திக்க எங்களாலே தானே சமர்த்தராயிருக்கிறோமென்கிறதில்லை, எங்கள் சாமர்த்தியம் பராபரனாலே உண்டாயிருக்குது. பிலி. ௨, ௰௩.

௬ அவர் எங்களைப் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கவும் சமர்த்தராக்கினார், எழுத்தினுடைய ஊழியக்காரராயிருக்கவல்ல, ஆவியினுடைய ஊழியக்காரராயிருக்கத்தானே, ஏனென்றால் எழுத்துக் கொல்லுது, ஆவியோ உயிர்ப்பிக்குது.

ஞாயப்பிரமாணத்தின் போதகத்தைப்பார்க்கச் சுவிசேஷப்போதகம் மகாமேன்மையென்று காண்பித்தது.

௭ கல்லுகளில் பதிந்த எழுத்துகளில் அடங்கிய மரணத்தினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருந்து, மோசேயினுடைய முகத்திலுள்ள வாங்கிப்போற மகிமையின் நிமித்தியமாக இஸ்ரவேல் புத்திரர் அவன் முகத்தை நோக்கிப் பார்க்கக் கூடாதிருந்ததேயானால், ௨. மோ. ௩௪, ௩௰.

௮ எத்தனையதிகமாய் ஆவியினுடைய ஊழியம் மகிமையுள்ளதாயிருக்கும். ரோ. ௮, ௰௫. ௰௬.

௯ ஏனென்றால் ஆக்கினைக்குள்ளாக்குகிறதின் ஊழியம் மகிமையானால், வெகு அதிகமாய் நீதியாக்குகிறதின் ஊழியம் மகிமையிலே பெருகுது. ரோ. ௧, ௰௬. ௰௭.

௰ அதேனென்றால் இந்தப் பிரகாரமாய் பார்த்தால் மகிமைப்பட்டிருந்தது இந்த மகாமேன்மையான மகிமையின் முன்னே மகிமைப்பட்டதுமல்ல.

௰௧ ஏனென்றால் வாங்கிப்போறது மகிமையோடிருந்ததானால், வெகு அதிகமாய் நிலைநிற்கிறது மகிமையுள்ளதாயிருக்கும்.

௰௨ இப்போதும் இப்படிக்கொத்த நம்பிக்கை எங்களுக்குண்டானபடியினாலே, வெகு தாராளமாய்ப் பேசுகிறவர்களாயிருக்கிறோம்.

௰௩ வாங்கிப்போறதின் முடிவை இஸ்ரவேல் புத்திரர் நோக்கிப்பாராதபடியாக மோசே தன் முகத்தின்மேல் முக்காடு போட்டதுபோலே, நாங்கள் போடோம். ௨. மோ. ௩௪, ௩௩—௩௫.

௰௪ அவர்களுடைய சிந்தைகளோவென்றால் ❖ கடினப்பட்டது, ஏனென்றால் இந்நாள்வரைக்கும் பழைய ஏற்பாட்டைப் போஸ்தகம் வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காததாய் நிற்கிறது. அது கிறிஸ்துவுக்குள் நீங்கிப்போம். ❖ ஏசா. ௬, ௰.
௰௫ ஆனாலின்னாளமட்டும், மோசேயினாகமங்கள் வாசிக்கப்படும்போது, முக்காடு அவர்களிருதயத்தின்மேல் கிடக்குது.
௰௬ ❖ அவர்கள் கர்த்தரண்டைக்குத் திரும்பும்போதோவென்றால், முக்காடு எடுபட்டுப்போம். ❖ ரோ. ௰௧, ௨௩. ௨௫, ௨௬.
௰௭ கர்த்தரோவென்றால் ❖ ஆவியாயிருக்கிறார், ஆனால் கர்த்தருடைய ஆவியெங்கேயோ அங்கே விடுதலை உண்டு. ❖ யோவ. ௪, ௨௪.
௰௮ நாமோவென்றால் எல்லாரும் ❖ திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறாப்போலே கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையாய் மறுரூபப்படுகிறோம். ❖ யோவ. ௧, ௰௪.

## ௪. அதிகாரம்.

௧ உத்தம மகிமையான சுவிசேஷப்போதகத்தின் ஊழியத்திலே சோர்க்கரியோமென்றது.

ஆனதுகொண்டு நாங்களுக்குக் கிடைத்த இரக்கத்தின்படியே இந்த ஊழியத்தைப் பெற்றிருக்கிற நாங்கள் சோர்க்கரியாமல்,
௨ ❖ வெட்கமான அந்தரங்கக் காரியங்களை வெறுத்திருந்து, தந்திரமாய் நடவாமலும் பராபரனுடைய வசனத்தைப் புரட்டாமலும் சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே பராபரனுக்கு முன்பாக மனுஷருடைய எல்லா மனச்சாட்சிக்கும் எங்களை விளங்கப்பண்ணுகிறோம். ❖ ௧. தெச. ௨, ௩—௫.
௩ எங்கள் சுவிசேஷம் மறைபொருளுமாயிருந்ததேயானால், ❖ கெட்டுப்போறவர்களுக்குள்ளே மறைபொருளாயிருக்குது. ❖ ௨. தெச. ௨, ௰.
௪ ❖ பராபரனுடைய சாயலாகிய கிறிஸ்துவினுடைய மகிமையான சுவிசேஷத்தின் வெளிச்சம் அவர்களுக்குப் பிரகாசிக்காதபடிக்கு, ❖❖ இந்த லோகத்தின் தம்பிரான் அவிசுவாசிகளாகிய அவர்களுடைய சிந்தைகளைக் குருடாக்கினான். ❖ எபி. ௧, ௩. ❖❖ யோவ. ௰௪, ௩௰.
௫ ஏனென்றால் நாங்கள் எங்களைத்தானே பிரசங்கியாமல்; கிறிஸ்து யேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோவென்றால் யேசுவினிமித்தியமாக உங்களூழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்.
௬ ஏனென்றால், ❖ இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன பராபரன் யேசுக்கிறிஸ்துவின் முகத்திலுள்ள தம்முடைய மகிமையின் அறிவைப் பிரகாசிக்கப்பண்ணுகிறதுக்காக, எங்கள் இருதயங்களில் பிரகாசித்தார். ❖ ௧. மோ. ௧, ௩.
௭ ஆனாலும் பெலத்தினுடைய மேன்மை ❖ எங்களால் உண

உண்டாயிராமல், பராபரனுடையதாயிருக்கிறதுக்காக, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் அடைந்திருக்கிறோம். * க. கொரி. உ, ௫.

௮ எல்லாவிதத்திலும் உபத்திரவப்படுகிறோம், ஆனாலும் நெருங்கிப்போகோம், ஐயப்படுகிறோம், ஆனாலும் மனமுறிவும் அயட்டோமல்ல.

௯ துன்பப்படுகிறோம், ஆனாலும் கைவிடப்படோம், கீழே தள்ளப்படுகிறோம், ஆனாலும் கெட்டுப்போகோம்.

௰ யேசுவினுடைய சீவனும் எங்கள் சரீரத்திலே வெளியரங்கமாகும்படிக்கு * கர்த்தராகிய யேசுவினுடைய சாவை எப்போதும் சரீரத்திலே சுமந்துதிரிகிறோம். * ரோ. ௮, ௩௬. கலா. ௬, ௰௭.

௰௧ ஏனெனில் மரணத்துக்காளாகிற எங்கள் மாங்கிஷத்திலே யேசுவினுடைய சீவனும் வெளியரங்கமாகும்படிக்கு, உயிரோடிருக்கிற நாங்கள் எப்போதும் யேசுவினிமித்தியமாக மரணத்துக்கொப்புக்கொடுக்கப்படுகிறோம்.

௰௨ அப்படி மரணமோ எங்களிலும், சீவனோ உங்களிலும் பெலனாயிருக்குது,

௰௩ ஆனால்: * விசுவாசித்தேன், ஆகையினாலே பேசினேனென்றெழுதியிருக்கிற அந்த விசுவாசத்தினுடைய ஆவியையே நாங்கள் பெற்றிருந்து, நாங்களும் விசுவாசிக்கிறோம், ஆகையினாலே நாங்களும் பேசுகிறோம். * சங். ௱௰௬, ௰.

௰௪ ஏனெனில் கர்த்தராகிய யேசுவை எழுப்பினவர் * எங்களையும் யேசுவைக்கொண்டெழுப்பி, உங்களோடே கூடத் தமக்கு முன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம். * ரோ. ௮, ௰௧.

௰௫ ஏனென்றால், திரளானகிருபை அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பராபரனுடைய மகிமைக்கென்று பெருகும்படிக்கு, இதுகளெல்லாம் உங்களுக்காகச் சம்பவிக்குது.

௰௬ ஆனபடியினாலே நாங்கள் இளக்கரியோம், புறம்பானதான எங்கள் மனுஷன் அழிந்தும், உள்ளானவன் நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறான்.

௰௭ ஏனென்றால் * அதிசீக்கிரமாய் நீங்குகிற லேசான நம்முடைய உபத்திரவம் ** மேன்மைக்கு மேன்மையாயிருக்கும் நித்தியமான கனமகிமையை நமக்குண்டாக்குது. * சங்கீ. ௬௰, ௬. ** ரோ. ௮, ௰௮.

௰௮ காணப்படுகிறதுகளை அல்ல, காணப்படாததுகளை நோக்கியிருக்கிற நமக்குத்தானே. ஏனென்றால் காணப்படுகிறதுகள் அநித்தியம், காணப்படாததுகளோ நித்தியமாயிருக்குது.

## ௫. அதிகாரம்.

௧ மறுமையை நோக்கியிருக்கிறதே விசுவாசமையாய் அப்போஸ்தலன் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறமானது.

ஏனெனில் பூமிக்கடுத்த கூடாரமாகிய நம்முடைய வீடு இடிந்துபோனால், * பராபரனாலே கட்டப்பட்டதுக

வெகுவா

வேலையில்லாததாகிய வீடு நமக்குப் பரமண்டலங்
களிலே உண்டென்றறிந்திருக்கிறோம். * யோ. ௰௪, ௨.
௨ ஏனென்றால் இதிலே * நாம் தவித்து, நம்முடைய பரம
குடியிருப்பைப் பூண்டுகொள்ள வாஞ்சையாயிருக்கி
றோம். * ரோ. ௮, ௨௩.
௩ நாம் * நிருவாணிகளாகக் காணப்படுவர்களாக
வே கண்டுபிடிக்கப்படாமல், அப்படியாம். * வெளி.
௰௬, ௰௫.
௪ அதேதென்றால் கூடாரத்திலிருக்கிற நாம் பாரத்
தைச் சுமந்து தவிக்கிறோம், ஏனென்றால் நாம் உரிந்துபோ
டப்படவேணுமென்றல்ல, மரணத்துக்குள்ளா
னது சீவனாலே விழுங்கப்படுவதற்குத் தரிப்பிக்கப்பட வே
ணுமென்றிருக்கிறோம்.
௫ இதுக்கு நம்மை ஆயத்தப்படுத்தினவர் தேவனா
னவர், அவர் * ஆவியின் அச்சாரத்தை
யும் நமக்குத் தந்தார். * எபே. ௧, ௰௪.
௬ ஆகையினாலே நாம் எப்போதும் திடனாயிருந்து,
நாம் சரீரத்தில் குடியிருக்குமட்டும் கர்த்தரிடத்தில் சே
ராத பரதேசிகளாயிருக்கிறோமென்றறிந்திருக்கிறோம்.
௭ ஏனென்றால் * தரிசித்து நடவாமல், விசுவாசித்
து நடக்கிறோம். * ரோ. ௮, ௨௪. ௨௫.
௮ ஆனால் நாம் திடனாயிருந்து, சரீரத்துக்குப் புறம்பா
யப் போகவும், கர்த்தரண்டையில் குடியிருக்
கவும் அதிக விருப்பமாயிருக்கிறோம்.
௯ ஆகையால் நாம் குடியிருந்தாலும் பரதேசிகளா
யிருந்தாலும், அவருக்குகந்தவர்களாயிருக்குங் கவன
த்தை நாடுகிறோம்.
௰ ஏனென்றால் அவனவன் தன் சரீரத்தினாலே நடப்பி
த்த நன்மைக்காகிலும் தின்மைக்காகிலும் தக்கது
அவனவன் அடையும்படிக்கு, நாமெல்லாரும் * கிறிஸ்துவினு
டைய நியாயாசனத்துக்கு முன்பாக வெளிப்படவேண்
டியது. * மத். ௨௫, ௩௧. ௩௨.
௰௧ ஆனபடியினாலே * கர்த்தருடைய பயங்கரத்
தை அறிந்திருந்து, மனுஷரைப் போதிக்கிறோம், ப
ராபரனுக்கு நாங்கள் வெளியரங்கமாயிருக்கி
றோம், உங்களுடைய மனச்சாட்சிகளிலும் வெளியர
ங்கமாயிருக்கிறோமென்று நம்புகிறேன். * ௨. பேது.
௩, ௰—௰௨.
௰௨ ஏனென்றால் நாங்கள் மறுபடியும்
உங்களுக்கு முன்பாக மெச்சிக்கொள்ளாமல், இரு
தயத்தாலல்ல வெளிவேஷத்தாலே மேன்மைபாரா
ட்டுகிறவர்களுக்கெதிரே உங்களுக்குத் தக்க மேன்மை
பாராட்டுதல் உங்களுக்குண்டாக, உங்களுக்கிடம்
பண்ணுகிறோம்.
௰௩ ஏனென்றால் நாங்கள் விவேகமற்றவர்க
ளைப்போலிருந்தாலும், பராபரனுக்காகத்தானே, புத்தி
யானராயிருந்தாலும் உங்களுக்காக அப்படியிருக்
கிறோம்.
௰௪ ஏனென்றால் கிறிஸ்துவினுடைய சிநேகமெ
ங்களை நெருக்குது. அதேதெனில் * எல்லாருக்காக
வும் ஒருவர் மரித்திருந்தால், எல்லாரும் மரித்தார்க
ளென்றறிந்திருக்கிறோம். * ௧. தீமோ. ௨, ௬.

௰௫ * பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழையாமல், தங்களுக்காக மரித்தெழுந்தவருக்கென்று பிழைக்கவே அவர் எல்லாருக்காகவும் மரித்தார். * ரோ. ௰௪. ௭—௯.

௰௬ ஆனபடியினாலே நாம் இதுமுதற்கொண்டு ஒருத்தனையும் மாம்சப்பிரகாரமாக அறியோம், நாம் கிறிஸ்துவையும் மாம்சப்பிரகாரமாக அறிந்ததுண்டானாலும், இப்போ இனி அப்படியாக அறியோம்.

௰௭ ஆகையால் ஒருத்தன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், * புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழமையானது ஒழிந்துபோச்சுது, ** இதோ எல்லாம் புதிதாச்சுது. * கலா. ௬, ௰௫ ** அப. ௨௧, ௫.

௰௮ ஆனாலே யேசுகிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாகுதலின் ஊழியத்தை எங்களுக்குக் கொடுத்த பராபரனாலே இதெல்லாமுண்டாச்சுது.

௰௯ அதேதென்னில் பராபரன் கிறிஸ்துவுக்குள் இருந்து, லோகத்தாருடைய பாவங்களை அவர்களின்மேலே சுமத்தாமல், லோகத்தைத் தம்மோடே ஒப்புரவாக்கிக்கொண்டு, ஒப்புரவாகுதலின் வசனத்தை எங்களுக்குள்ளே வைத்தார்.

௨௰ ஆனபடியினாலே, பராபரன் எங்களைக்கொண்டு புத்திசொல்லுகிறதாய், நாங்கள் கிறிஸ்துவுக்கு ஸ்தானாபதிகளாயிருந்து: பராபரனோடே ஒப்புரவாகுங்களென்று கிறிஸ்துவுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம்.

௨௰௧ ஏனென்னில் * நாம் அவருக்குள் பராபரனுடைய நீதியாகும்படிக்கு, பாவமறியாதவரை நமக்காக ** பாவமாக்கினார். * யெரே. ௨௩, ௬. ௧. கொரி. ௧, ௩௰. ** எசா. ௫௩, ௪—௬.

## ௬. அதிகாரம்.

௧ பராபரனுடைய கிருபையைச் சேர்க்கப் பரிசுத்தமாய நடக்கிறதுக்குப் பவுல் கொரிந்தியரைத் தன மாதிரியினாலே ஏவினது.

ஆனால் நீங்கள் பராபரனுடைய கிருபையை வீணாய்ப் பெற்றவர்களாயிராதபடிக்கு நாங்கள் உடன்வேலையாளாக உங்களைப் புத்திசொல்லுகிறோம். * ௧. கொரி. ௩, ௯.

௨ ஏனென்னில்: * பிரியமான காலத்திலே உன்னை வேண்டிக்கேட்டு, ரட்சிப்பின் நாளிலே உனக்கு ஒத்தாசைபண்ணினேனென்கிறார். இதோ இப்போ நற்பிரியமான காலம், இதோ இப்போது ரட்சிப்புடைய நாள். * எசா. ௪௯, ௮.

௩ ஊழியம் பழிக்கப்படாதபடிக்கு, நாங்கள் ஒன்றிலும் ஒருத்தருக்கும் இடறலையுமுண்டாக்காமல்,

௪ எல்லாத்திலேயும் எங்களைப் பராபரனுடைய ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம், மிகு பொறுமையிலேயும் உபத்திரவங்களிலேயும், அவதிகளிலேயும் நெருக்கங்களிலேயும்,

௫.

௫ * அடிகளிலுங் காவல்களிலுங் கலகங்களிலும் பிரயாசங்களிலும், கண்விழிப்புகளிலும் உபவாசங்களிலும், * ௰௬, ௨௪. ௨௫.

௬ சுத்தத்திலும் அறிவிலும், நீடியசாந்தத்திலுந் தயவிலும், பரிசுத்த ஆவியிலும், மாயமற்ற அன்பிலும்,

௭ சத்தியத்தினுடைய வசனத்திலும் பராபரனுடைய பெலத்திலும், நீதியினுடைய வலதிடது பக்கத்தாயுதங்களுக்குள்ளும்,

௮ கனத்திலுங் கனயீனத்திலும், அவகீர்த்தியிலும் நற்கீர்த்தியிலுந்தானே. எத்தராகக் காணப்பட்டுஞ் சத்தியவான்களாயிருக்கிறோம் * மத். ௨௭, ௬௩.

௯ அறியப்படாதவர்களாகக் காணப்பட்டும் அறிந்துகொள்ளப்படுகிறோம், சாகிறவர்களாகக் காணப்பட்டும், இதோ பிழைக்கிறோம், தண்டிக்கப்படுகிறவர்களாகக் காணப்பட்டும், கொல்லப்படாதிருக்கிறோம்.

௰ துக்கப்படுகிறவர்களாகக் காணப்பட்டும், எப்போதுஞ் சந்தோஷப்படுகிறோம், தரித்திரராகக் காணப்பட்டும், அநேகரை ஐசுவரியவான்களாக்குகிறோம், ஒன்றுமில்லாதவர்களாகக் காணப்பட்டும், எல்லாவற்றையுமுடையவர்களாயிருக்கிறோம்.

௰௧ கொரிந்தியரே, எங்கள் வாய் உங்களுடனே பேசத் திறந்திருக்குது, எங்கள் இருதயம் விசாலமாயிருக்குது.

௰௨ எங்களுக்குள் நீங்கள் நெருக்கமாயிராமல், உங்கள் உள்ளத்திலே நெருக்கமாயிருக்கிறீர்கள்.

௰௩ ஆனாலும் அதற்குப் பதிலாக, * பிள்ளைகளுடனே பேசுகிறதுபோலப் பேசுகிறேன், நீங்களும் விசாலமாயிருங்கோள். * ௧ கொரி. ௪, ௰௪.

௰௪ * அவிசுவாசிகளுடனே அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதேயுங்கோள், ஏனென்றால் நீதிக்கும் அக்கிரமத்துக்குங் கூட்டேது, * * இருளுக்கும் வெளிச்சத்துக்கும் ஐக்கியமேது. * உபா. ௭, ௩. * * எபே. ௫, ௰௧.

௰௫ பேலியாளுடனே கிறிஸ்துவுக்கேது இசைவு, அல்லது அவிசுவாசியுடனே விசுவாசிக்குப் பங்கேது.

௰௬ விக்கிரகங்களுடனே பராபரனுடைய கோயிலுக்குக் கேது ஒவ்வுதலேது, எனெனில: * நாம் அவர்களுக்குள் வாசம்பண்ணி, அவர்களுக்குள் உலாவி, அவர்களுடைய பராபரனாயிருப்போம், அவர்கள் நமக்குச் சனமாயிருப்பார்களென்று பராபரன் சொன்னபடி, நீங்கள் * * சீவனுள்ள பராபரனுடைய கோயிலாயிருக்கிறீர்கள் * லேவி. ௨௬, ௰௨. * * ௧. கொரி. ௩, ௰௬.

௰௭ * ஆனபடியினாலே நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு, பிரிந்துபோய், அசுத்தமானதைத் தொடாதிருங்கோளென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்போது நான் உங்களை ஏற்றுக்கொண்டு, * ஏசா. ௫௨, ௰௧. வெளி. ௰௮, ௪.

௰௮ * உங்களுக்குப் பிதாவாயிருப்போம். நீங்கள் நமக்குக் குமாரருங் குமாரத்திகளுமாயிருப்பீர்க

 ளென

என்று சர்வத்துக்கும் வல்ல கர்த்தர் சொல்லுகிறர்.
* சங்கீ. ௮௩, ௰௩. எரே. ௩௧, ௯. ௨௰.

## ௭. அதிகாரம்.

௧ தன்னுடைய கடிந்துகொள்ளுதலினாலே அவர்கள் ஏற்த்துக்கொண்டு தேவனுக்கேற்ற மனதுக்கம் அடைந்ததினாலே தான் அடைந்த ஆறுதலைப் புலப்படுத்துகிறது.

இப்போதும், பிரியமானவர்களே, இப்படிக்கொத்த வாக்குத்தத்தங்கள் நமக்குண்டாயிருக்கக்கொள்ள, மாம்ஷத்திலும் ஆவியிலும் உண்டான எல்லாக் கறையையும் நீங்க நம்மை நாம் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்துடனே நிறைவேற்றக்கடவோம்.

௨ எங்களுக்கிடங்கொடுங்கோள், நாங்கள் ஒருத்தருக்கும் அநியாயஞ்செய்ததில்லை, ஒருத்தனையுங்கெடுத்ததில்லை, ஒருத்தனிடத்திலும் பொழிவுகேட்டதில்லை.

௩ உங்களைக் குற்றவாளிகளாக்கத்தச் சொல்லேன், ஏனென்றால் கூடச் சாகவுங்கூடப் பிழைக்கவுந்தக்கதாய் * எங்களிதயங்களிலிருக்கிறீர்களென்று முன்னே சொன்னேனே. * ௬, ௰௧. ௰௨.

௪ உங்களோடே வெகு தயிரியமாய்ப் பேசுகிறேன், உங்களைக்குறித்து மிகவும் மேன்மைபாராட்டுகிறேன், ஆறுதலால் நிறைந்திருக்கிறேன், எங்களுடைய சகல உபத்திரவத்திலும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன்.

௫ அதேதென்றால் நாங்கள் மக்கெதோனியாவிலே வந்தபோது, எங்கள் மாம்ஷத்துக்கு இளைப்பாறுதல் ஒன்றுமில்லாமல், எல்லாத்திலும் உபத்திரவப்பட்டோம், புறம்பே போர்கள், உள்ளே பயங்களிருந்தது.

௬ ஆனால் * தாழ்மையானவர்களைத் தேற்றவுபண்ணுகிற பராபரன் தீத்து வந்ததினாலே எங்களைத் தேற்றவுபண்ணினார். * ௧, ௪. ௫.

௭ அவன் வந்ததினாலே மாத்திரமே அல்ல, அவன் உங்களால் அடைந்த ஆறுதலினாலுந்தானே, அதேதென்றால் உங்கள் வாஞ்சையையும் உங்கள் புலம்புதலையும், எனக்காக உங்களுக்கிருந்த பத்திவயிராக்கியத்தையும் எங்களுக்கறிவித்தான், அதினால் அதிகமாய்ச் சந்தோஷப்பட்டேன்.

௮ ஏனென்றால் * நான் நிருபத்தினாலே உங்களைத் துக்கப்படுத்தியிருந்தும், மனஸ்தாபப்படேன், அந்த நிருபங் கொஞ்சப்போதாகிலும் உங்களைத் துக்கப்படுத்தினதென்று நான் மனஸ்தாபப்பட்டிருந்தாலும், * ௨, ௪.

௯ இப்போ சந்தோஷப்படுகிறேன், நீங்கள் துக்கப்பட்டதுக்கல்ல, நீங்கள் குணப்படத்தக்கதாய்த் துக்கப்பட்டதுக்குத்தானே. ஏனென்றால் நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடியாய், தேவனுக்கேற்றமான துக்கம் அடைந்தீர்கள்.

௰ ஏனென்றால் ✦ தேவனுக்கேதுவான துக்கம் பி-
ன்னுக்கு மனஸ்தாபப்படுகிறதில்லாத இரட்சிப்-
புக்கேதுவானதை உண்டாக்குது, ✦✦ லோகத்துக்கமோ மரண-
த்தை உண்டாக்குது. ✦ மத். ௫, ௪. ✦✦ ௧ தீமோ. ௬, ௯.

௰௧ ஏனென்றால் நீங்கள் தேவனுக்கேதுவான துக்க-
மானதுக்கம் அடைந்ததே உங்களிடத்தில் எத்தனை ஜா-
க்கிரதையையும், எத்தனை குற்றத்தைப் போக்குத-
லையும், எத்தனை தாங்கலையும், எத்தனை பயத்தை-
யும், எத்தனை வாஞ்சையையும், எத்தனை பத்தவைரா-
க்கியத்தையும், எத்தனை சிக்ஷை நடத்துதலையும் உண்-
டாக்கிற்று, அந்தக் காரியத்திலே உங்களைச் சுத்தவா-
ன்களென்று எல்லாவற்றிலும் விளங்கப்பண்ணினீர்-
கள்.

௰௨ ஆகையினாலே நான் உங்களுக்கெழுதியிருந்தும்,
அநியாயஞ்செய்தவன் நிமித்தமுமல்ல, அநியாயஞ்
செய்யப்பட்டவன் நிமித்தமுமல்ல, உங்களுக்காக
எங்களுக்கிருக்குஞ் சாக்கிரதை பராபரனுக்கு முன்பாக
உங்களுக்கு வெளிப்படவேண்டுமென்கிறதி-
னிமித்தமே எழுதியிருந்தேன்.

௰௩ ஆனதுகொண்டு உங்கள் ஆசுவாசத்திலே ஆசுவாசத்
தடைந்தோம், ஆனாலும் விசேஷமாகத் தீத்துவினுடை-
ய ஆவி உங்களெல்லாராலும் உசிப்பாறினதினாலே அ-
வனுக்கு வந்த சந்தோஷத்தினாலே அதிக சந்தோஷப்ப-
ட்டோம்.

௰௪ ஏனென்றால் உங்களைக்குறித்து அவனுடனே
புகட்சியாக ஏதுகாரியஞ்சொல்லியிருந்தேனாகில், அதி-
லே நான் வெட்கப்பட்டுப்போகாமல், நாங்கள் உ-
ங்களுடனே எல்லாவற்றையும் உண்மையாய்ச் சொன்-
னதுபோலத் தீத்துவுடனே நான் உங்களுக்காகச் சொ-
ன்ன புகட்சியும் உண்மையாச்சுது.

௰௫ தன்னைப் பயத்தோடும் நடுக்கத்தோடும் ஏற்ப-
ட்டேற்றுக்கொண்டீர்களென்று உங்களெல்லாரு-
டைய கீழ்ப்படிதலையும் அவன் நினைவுகூருகையி-
ல், அவனுடைய மனசு உங்கள்மேலே பரிபூரண உருக்-
கமாயிருக்குது.

௰௬ ஆகையால், எல்லாத்திலுமெனக்கு உங்கள்
மேலே திடநம்பிக்கையுண்டாயிருக்குதென்று சந்தோ-
ஷப்படுகிறேன்.

## ௮. அதிகாரம்

௧ தருமஞ்சேர்க்குதலுக்கேவினது.

அன்றி, சகோதரரே, மக்கெதோனியா தேசத்துச்சபை-
களில் அருளப்பட்ட பராபரனுடைய கிருபை-
யை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

௨ அதென்னவென்றால், உபத்திரவத்தின் வெகுவான சோ-
தனையிலே, அவர்களுடைய பரிபூரண சந்தோஷம்
அவர்களை, தங்கள் ஆழமான தரித்திரத்திலே கவட்டி-
ல்லாமல் கொடுக்கப்பண்ணினதினாலே, அது ஐசு-
வரியமாகப் பெருகிற்று.

௩ அதெப்படியென்றால் அவர்கள் பெலத்துக்குத் தக்கதாக-
வும்

வமே பெலத்துக்கு மிஞ்சினதாகவுங் கொடுக்கத்தாங்
களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்றதுக்
கு சாட்சியாயிருக்கிறேன்.

௪ அந்த அவர்கள் எங்களை, தங்களுடைய உபகார
த்தையும், பரிசுத்தவான்களுக்குச் செய்யப்படுந் தரும
ஊழியத்தின் பங்கையுமேற்றுக்கொள்ளவும் மிகுந்த
வேண்டுதலாகக் கேட்டுக்கொண்டு. * அப்போ. ௪, ௩௪. ௩௫.

௫ நாங்கள் நம்பியிருந்தபடிமாத்திரஞ் செய்யாம
லே, தங்களைத்தாங்களே முந்தக் கர்த்தருக்கும், பிற்பாடு பரா
பரனுடைய சித்தத்தினாலே எங்களுக்குமொப்புக்கொடு
த்தார்கள்.

௬ ஆனதுகொண்டு நாங்கள் தீத்துவை, தான் முந்
த்தத் துவக்கினபடிக்குத்தானே உங்களிடத்திலே இந்தத் தருமகா
ரியத்தையும் முடிக்கவும் வேண்டிக்கொண்டோம்.

௭ ஆனாலும் நீங்கள் எல்லாக் காரியத்திலும், விசுவா
சத்திலும் வசனத்திலும் அறிவிலும் எல்லாச் சாக்கிர
தையிலும் எங்களிடத்திலுள்ள உங்கள் சிநேகத்திலும்
பெருகுகிறதுபோல, இந்தத் தருமகாரியத்திலும் பெரு
கும்படியாகுங்கோள்.

௮ நான் இதைக் கற்பனையாகச் சொல்லாமல், மற்ற
வர்களுடைய ஜாக்கிரதையைக்கொண்டு உங்கள் சிநேகத்தி
னுடைய உண்மையைச் சோதிக்கும்படிக்குச் சொல்லுகி
றேன்.

௯ எப்படியென்றால் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவா
னவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரி
த்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்க
ளினிமித்தமாகத் தரித்திரரானாரென்கிற அவருடைய கி
ருபையை அறிந்திருக்கிறீர்கள். * சகரி. ௯, ௯. லூக். ௯. ௫௮.

௰ இதிலே என் யோசனையைச் சொல்லுகிறேன்,
ஏனென்றால் செய்கிறதுக்குமாத்திரமல்ல, செய்ய
வேண்டுமென்கிறதுக்கும் போன வருஷமே
துவக்கம்பண்ணின உங்களுக்கு இது பிரயோ
சனமாயிருக்கிறது.

௰௧ இப்போதோ வெனில் செய்கிறதையும் நிறை
வேற்றுங்கோள், வேணுமென்கிற மனப்பூர்வமா
னபடி உண்டாயிருந்ததுபோல, உண்டானதத்தி
லே நடந்து நிறைவேற்றுவதும் உண்டாவதாக. *
பிலி. ௨, ௰௩.

௰௨ ஏனென்றால் மனப்பூர்வமே பிரதானமானால், ஒரு
வனுக்கு இல்லாததின்படியல்ல, உண்டானதின்படியே பிரியமாயிரு
க்கிறது, அவனவனுக்குத் தக்கதாய்க் கொடுக்கிறதா
லே. * மத். ௰௨, ௪௨. ௪௩.

௰௩ ஏனென்றால் மற்றவர்களுக்கு இலேசும் உங்க
ளுக்கு உபத்திரவமுமுண்டாயிருக்கவேண்டுமென்
பதல்ல, சரிசமானத்துக்குச் சொல்லுகிறேன்.

௰௪ அவர்கள் பரிபூரணம் உங்கள் தாழ்ச்சிக்கு உத
வி, சரிசமானமுண்டாக. இக்காலத்திலே உங்கள் ப
ரிபூரணம் அவர்கள் தாழ்ச்சிக்கு உதவுவதாக.

௰௫ அதிகமாய்ச் சேர்த்தவனுக்கு அதிகமானது
மில்லை. கொஞ்சமாய்ச் சேர்த்தவனுக்குக் குறைவான
துமில்லையென்றெழுதியிருக்கிறபடி சமமாகத்தக்க
தாக. * ௨. மோ. ௰௬, ௰௮.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

## க. அதிகாரம்.

[illegible]

[illegible]

[illegible]

புகட்சியிருந்தகாரியத்திலே வீணாய்ப்போகாமல், நான் சொன்னபடி நீங்கள் ஆயத்தப்பட்டவர்களாயிருப்பதற்குச் சகோதரரை அனுப்பினேன்.

௪ மக்கெதோனியர் என்னுடனே கூட வந்து, உங்களை ஆயத்தப்படாதவர்களாகக் கண்டால், உறுதியாய்ப் புகழ்ந்ததுக்காக நீங்கள் என்று சொல்லேன், நாங்கள் வெட்கப்படாதிருப்பதற்குத்தானே.

௫ ஆகையால் முந்தச் சகோதரர் முன்னே உங்களிடத்துக்குப் போகும்படிக்கும், முன்னே விக்கப்பட்டிருக்கிற உங்களுடைய ஆசீர்வாதம் பிசினித்தனம் போலல்ல ஆசீர்வாதம் போலே ஆயத்தமாயிருக்கப் பார்க்கும்படிக்கும் அவர்களை ஏவ வேண்டியதாயிருந்தது.

௬ ஆனாலிதைச் சொல்லுகிறேன், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், ஆசீர்வாதங்களோடே விதைக்கிறவன் ஆசீர்வாதங்களோடும் அறுப்பான். + வாசக். ௰௧, ௨௪. ௰௬, ௰௭.

௭ அவனவன் தான் மனதிலே நிர்ணயித்தபடி கொடுக்கக்கடவன், துக்கத்தினாலே அல்லது கட்டாயத்தினாலேயல்ல, ஏனென்றால் + சந்தோஷமாய்க் கொடுக்கிறவனைப் பராபரன் சிநேகிக்கிறார். + ௨. மோ. ௨௫. ௨.

௮ ஆனால் நீங்கள் எல்லாத்திலும் எப்போதும் எல்லாமான திர்ப்தியோடிருந்து, சகல நற்கிரிகைக்கும் பெருகுவதற்காக, பராபரன் உங்கள் மேலே சகல கிருபையும் பெருகப்பண்ணவல்லவராயிருக்கிறார்.

௯ + வாரியிறைத்து ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபிரகாரமாகத்தானே. + சங். ௱௰௨, ௯.

௰ விதைக்கிறவனுக்கு விதையைக் கொடுக்கிறவரோவென்றால் போசனத்துக்கு அப்பத்தையும் அளித்து உங்கள் விதையைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சல்களை வளரப்பார்.

௰௧ பராபரனுக்கு எங்களாலே ஸ்தோத்திரம் வருத்துவிக்கிற கவடில்லாத தன்மையினாலே நீங்கள் எல்லாத்திலும் ஐசுரியவான்களாயிருக்கும்படிக்குத்தானே.

௰௨ ஏனென்றால் இந்த அமைந்த ஊழியம் பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நிறைவாக்கிறது மாத்திரமல்ல, அநேகர் பராபரனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்தப் பெருகிறதுமாயிருக்கிறது.

௰௩ அவர்கள் இந்த ஊழியத்தின் உத்தமத்தைக் கண்டு, நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிந்ததிலேயும் அவர்களுக்குப் பண்ணுகிறீர்களென்றும், எல்லாருக்கும் அவனவருக்குங் கவடில்லாத கருமயிக்கமாயிருக்கிறீர்களென்றும், பராபரனை மகிமைப்படுத்தி.

௰௪ உங்களுக்காக வேண்டுதல் செய்து உங்களிலுள்ள பராபரனுடைய மகா மேன்மையான கிருபையினிமித்தியமாக உங்கள் மேலே வாஞ்சையாயிருக்கிறார்கள்.

௰௫

௰௫ ஆறுதல்பாராபரனுடைய சொல்லிமுடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம். * ஏசா. ௮, ௩௨.

## ௰. அதிகாரம்.

௧ மாம்சத்தின்படியாய் அதிகாரமும் மேன்மையும் பாராட்டோமென்றது.

முகமுகமாய் உங்களுக்குள்ளேயிருக்கும்போது தாழ்மையும், தூரமாயிருக்கும்போதோ வெளிலே உங்கள்மேல் தைரியமுமான பவுலாகிய நான், * கிறிஸ்துவினுடைய மெத்தனவினாலும் சாந்தத்தினாலும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * மத. ௰௧, ௨௯.

௨ ஆனால் நான் முகதாவிலேயிருக்கும்போது எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்களாக எண்ணுகிற சிலர்மேலே நான் துணிந்தவனென்றெண்ணப்படுகிற தயிரியத்துடனே தைரியங்கொள்ளவேண்டியிராதபடிக்குப் பார்க்கவேண்டிக்கொள்ளுகிறேன்.

௩ ஏனென்றால் நாங்கள் மாம்சத்தில் நடந்துதிரிந்தாலும், மாம்சத்தின்படி யுத்தம்பண்ணோம்.

௪ ஏனென்றால் நாங்கள் யுத்தம்பண்ணும் * ஆயுதங்கள் மாம்சத்துக்குடையதுகளாயிராமல், அரண்களை நிர்முலமாக்க பாராபரனாலே பெலனுள்ளதுகளாயிருக்குது. * எபே. ௬, ௰௪. மு.

௫ அதுகளாலே நாங்கள் மனச்சிந்தனைகளையும், பராபரனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் உயருகிற எல்லா மேட்டிமையையும் நிர்முலமாக்கி, எல்லாப் புத்தியையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருந்து,

௬ உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறினபோது எல்லாக் கீழ்ப்படியாமைக்கும் தக்க நீதியைச் சரிக்கட்ட ஆயத்தப்பட்டிருக்கிறோம்.

௭ முகத்துக்கு முன்னேயிருக்கிறதுகளைப் பார்க்கிறீர்களா. ஒருத்தன் தன்னைத்தானே கிறிஸ்துவினுடையவனென்று நம்பிக்கொண்டால், அவன் பின்னையும், தான் கிறிஸ்துவினுடையவனாயிருக்குமாப்போலே நாங்களும் கிறிஸ்துவினுடையவர்களென்று தன்னிலே தான் சிந்திக்கக்கடவான்.

௮ ஏனென்றால் கர்த்தர் எங்களுக்கு, * உங்களை நிர்முலமாக்கிறதுக்கல்ல, ஸ்தாபிக்கிறதுக்குக் கொடுத்த எங்களுடைய அதிகாரத்தைக்குறித்து நான் இன்னுஞ்சற்று அதிகமாய் மேன்மைபாராட்டப்போனாலும், நான் வெட்கப்பட்டுப்போவதில்லை. * ௰௩, ௰.

௯ நானே வெளிலே நிருபங்களாலே உங்களைப் பயமுறுத்துகிறவனாய்க் காணப்படவெனக்கு மனதில்லை.

௰ அதேனென்றால்: நிருபங்களோ பாரமும் பெலனுமுள்ளதுகள், சரீரத்தின் முகதாவோ பெலவீனமும் வசனம் அற்பமானதுமென்கிறார்கள்.

௰௧ அப்படிப்பட்டவன், நாங்கள் தூரத்திலே நிருபங்களின் வசனத்திலே எப்படியிருக்கிறோமோ அப்படி முகதாவிலே கிரியையினாலும் இருப்போமென்று நினைக்கக்கடவான்.

௰௨ ஏனென்றால் தங்களைத்தாங்களே புகழுகிற சிலருக்குள்ளே நாங்கள் எங்களைச் சேர்க்கவும் ஒப்பிடவும் துணியோம், தங்களாலே தங்களை அளந்துகொண்டு, தங்களுக்குத் தங்களைச் சரிப்படுத்திக்கொள்ளுகிறவர்கள் புத்திமான்களல்ல.

௰௩ நாங்களோ அளவுக்கு மிஞ்சி மேன்மைபாராட்டமாட்டோம், உங்களிடத்திலும் எட்டும்படிக்குத் தேவன் எங்களுக்குப் பகிர்ந்த அளவின் பிரமாணத்தின்படியே மேன்மைபாராட்டுவோம்.

௰௪ ஏனென்றால் உங்களிடத்தில் சேராதவர்கள்போல நாங்கள் அளவுக்கு மிஞ்சி எங்களை நீட்டுகிறதில்லை, கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து உங்களிடத்திலும் வந்து சேர்ந்தோமே.

௰௫ அளவுக்கு மிஞ்சி அன்னியருடைய பிரயாசங்களிலே மேன்மைபாராட்டாமல், உங்கள் விசுவாசம் வளரும்போது உங்களாலே எங்கள் பிரமாணத்தின்படி மிகுதியாய்ப் பெருகுவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம்.

௰௬ உங்களுக்கப்புறமான தேசங்களிலே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், அந்நியருடைய அளவுக்குட்பட்டதிலே ஆயத்தமானவைகளில் மேன்மைபாராட்டாதிருக்கவும் வந்திருக்கிறோம்.

௰௭ * மேன்மைபாராட்டுகிறவனோ கர்த்தருக்குள் மேன்மைபாராட்டக்கடவன். * எரே. ௯, ௨௪. ௧. கொரி. ௧, ௩௧.

௰௮ ஏனென்றால் * தன்னைத்தான் புகழுகிறவன் அல்ல, கர்த்தர் புகழுகிறவனே உத்தமன். * ரோம. ௨, ௨௯.

## ௰௧. அதிகாரம்.

௧ கள்ள அப்போஸ்தலர்நிமித்தியமாகப் பவுல் கொரிந்தியருக்குத் தன்னுடைய உத்தமத்தனத்தையும், சுவிசேஷத்துக்காகத் தான் அநுபவித்த பாடுகளையும் நன்றியாகக் காட்டினது.

மதியீனமாயினதினிமித்தியமாக நீங்கள் என்னைக் கொஞ்சம் பொறுத்துக்கொண்டால் நலமாம், அப்படியே பொறுத்துக்கொள்ளுங்களேன்.

௨ ஏனென்றால் உங்களைக்குறித்து தேவவைராக்கியமாய் வைராக்கியமாயிருக்கிறேன், அதேனென்றால் * உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்கிற ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்கிறதற்காய் நியமித்துவைத்தேன். * ஓசே. ௨, ௰௯. ௨௰.

௩ ஆனாலும் * சர்ப்பமானது தந்திரத்தினாலே ஏவாளை மோசம்போக்கினதுபோல, உங்கள் சிந்தைகளும் கிறிஸ்துவினிடத்திலுள்ள உத்தமத்திலிருந்து விலகிக் கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். * ௧. மோ. ௩, ௪. ௧௩.

௪ ஏனென்றால் எவனாகிலும் வந்து, நாங்கள் பிரசங்கித்திராத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள்

ஏற்று

ஏர்ததுககொணடிராத * வேறொருசுவிசேஷததையும பெற்றீர்களானால, நன்றாயசகிததிருபபீர்களாம.
* கலா. ௧, ௬—௮.

௫ * நானோவெனில மகாபபிரதான அபபோஸதலருககொனறிலுநதாட்சியானவனலலவெனறெணணுகிறேன. * ௧. கொ. ௰௫. ௰.

௬ நான வசனததிலே கலலாதவனாயிருநதாலும நான அறிவிலே கலலாதவனலல, எலலாததிலும எஙகளிலுளள அனைவருககுளளேயும வெளிபபடடிருககிறேமே.

௭ அலலது, நீஙகள உயர்ததபபடுமபடிககு நான எனனைததானே தாழததி, பராபரனுடைய சுவிசேஷததை விஷமாய உஙகளுககறிவிததததினாலே குறறஞசெயதேனோ,

௮ உஙகளுககூழியஞசெயயமறறசசபைகளுக யிலே நான சமபளமபெறறுககொணடேன, நான உஙகளணடையிலிருநது குறைசசலனுபவிககிறபோது மநான ஒருவரையும வருததபபடுததினதிலலை.

௯ ஏனெனில மகசெதோனியாவிலிருநது வநத சகோதரர என குறைவை நிறைவாககினார்கள, நான எலலாததிலும உஙகளுககுப பாரமாயிராதபடிககுப பார்ததேன, இனிமேலும பார்பபேன.

௰ * அகாயாசீமைப பிறஙகளிலே இநதப புகட்சி எனககு நிறுததபபடுவதிலலையெனகிறதை எனனிலுளள கிறிஸதுவினுடைய உணமையைககொணடு சொலலுகிறேன. * ௧. கொரி. ௯, ௰௫.

௰௧ ஏன, நான உஙகளைச சினேகிககாதபடியினாலேயோ, அலலவெனறு பராபரன அறிவார.

௰௨ ஆனாலும நான செயகிறதைச செயவதுமேதுககெனறால, தாஙகள மேனமைபாராட்டுகிறதிலே எஙகளைபபோலக காணபபடசசமையம தேடுகிறவர்களுககுச சமையமறறுபபோகப பணணுகிறதுககுததானே.

௰௩ ஏனெனறால * இபபடிககொததவர்கள அபபோஸதலர்கிறிஸதுவினுடைய அபபோஸதலர் வேஷமெடுதது கவடுளள வேலையாளககளாயிருககிறார்கள. * மத. ௭, ௰௫.

௰௪ இது அதிசயமுமலல, ஏனெனில சாததானதானே வெளிசசததூதனுடைய வேஷமெடுககுது.

௰௫ ஆனபடியினாலே அவன ஊழியககாறரும நீதியினுடைய ஊழியககாறரின வேஷமெடுததால பெரிய அதிசயமலல, அவர்களமுடிவோ அவர்களகிரிகைகளுககுததககதாயிருககும.

௰௬ ஒருதனும எனனை மதியறறவனாக எணண வேணடாமெனறுமறுபடியுஞ சொலலுகிறேன, அலலவெனறு அபபடி எணணினீர்களாகில, நானுஞ சததெமேனமைபாராட்ட எனனை மதியறறவனைப போலாகிலும ஏர்ததுககொளளுஙகோள.

௰௭ நான சொலலுகிறதுகறதருககானபடியே சொலலாமல, இநதததிடமான மேனமை பாராட்டலிலே மதியிலலாதவன போலச சொலலுகிறேன.

௰௮ அனேகர மாஙகிஷததினபடி மேனமைபாரா

டககொளளா • நானுமபாராடடுவேன. • ௰, ௰௩:
௰௯ ஏனெனறால மதியுளளவரகள மதியறறவரக ளைநலலமனதாயசகிததிருககிறீரகள.
௨௰ அதேதெனறால ஒருதன உஙகளைச சிறையாக கினாலும, ஒருதனபட்சிததாலும. ஒருதனபிடிததுக கொணடாலும, ஒருதனதனனை உயரததினாலும, ஒ ருதன உஙகளைமுகததில அறைநதாலுஞ சகிததிருக கிறீரகள.
௨௰௧ நாஙகள பெலவீனரானதுபோலககனவீனப படிசொலலுகிறேன, ஆனாலயாரொருதனஎதிலேது ணிவாயிருக்கிறானோ, அதிலேநானுநதுணிவாயிருக்கிறே னெனறு மதியிலலாமையிலேசொலலுகிறேன.
௨௰௨ எபிரேயராயிருககிறாரகளோ. நானுமஎபிரே யன. இஸறவேலராயிருககிறாரகளோ, நானுமஇஸ றவேலன, ஆபிரகாமினவிததாயிருககிறாரகளோ, நானுமஆபிரகாமினவிதது.
௨௰௩ கிறீஸதுவினஊழியககாரராயிருககிறாரக ளோ, நான அவரகளுககுமேலபடடவனெனறும திகெடடுயசொலலுகிறேன. நானவேலைகளிலஅ திகமும, படஅடிகளிலஅதிகமும. காவலபணணப படுததிலஅதிகமுமானவன, நானமரணஅவதிக ளிலுமவெகுவிசைஅகபபடடவன.
௨௰௪ யூதரகையில • ஒனறுகுறையநாறபதடியாய ஐயநதுதரமபடடேன. • ௫. மோ. ௨௫, ௩.
௨௰௫ மூனறுதரமமிலாறுகளால அடிபடடேன, ஒருதரம • கலலெறியுணடேன. மூனறுதரஙகபப லசேதமானததிலேயிருநதேன, ஒராபபகலமுழு துமஆழததிலேபோககினேன. • அப. போ. ௰௪, ௰௯.
௨௰௬ அநேகநதரமவழிபயணஙகளைபபணணி னேன. ஆறுகளுடைய மோசஙகளிலும, களளர மோசஙகளிலும, சுயசாதியாராலவநதமோசங க ளிலும, புறசசாதியாராலவநதமோசஙகளிலும, ஊரிலுணடானமோசஙகளிலும, வனாநதிரததிலு ணடானமோசஙகளிலும. சமுததிரததிலுணடான மோசஙகளிலும, களளசசகோதரரிடததிலுணடா னமோசஙகளிலும,
௨௰௭ • வேலையிலுமவருததததிலுமவெகுவிசைக ணவிழிபபுகளிலும, பசியிலுந தாகததிலும. வெகு விசைஉபவாசஙகளிலும, குளிரிலும அமமணததிலு மிருநதேன. • ௬, ௫.
௨௰௮ புறககாரியஙகளைதவிர எனககனுதினசநதடி வரததுமஎலலாசசபைகளினவிசாரிபபுமிருககுது.
௨௰௯ எவனஅடைநதபெலவீனமெனககுபெலவீ னமுணடாககாதிருககும, எவனஅடைகிறஇடறல என உளளெரியபபணணாதிருககும.
௩௰ மேனமைபாராடட வேணடியதானால • என பெலவீனததுககடுததவைகளைசசொலலிமேனமைபா ராடடுவேன. • ௧௨. ௫. ௩.
௩௰௧ எனறெனறைககுமஇஸததோததிரககபபட டவராயருமநமமுடைய கறததராகியயேசுகிறீஸததுவி னபிதாவுமானவர நானபொயசொலலேனெனறு அறிவார.

௩௨ தமஸ்குவிலே அரேத்தா ராசாவினுடைய சனத்தலைவன் என்னைப் பிடிக்க வேணுமென்று தமஸ்கியாருடைய பட்டணத்தைக் காவலாய் வைத்துக் காத்தான்.
௩௩ அப்போ பலகணியிலிருந்து கூடையிலே மதிலின் வழியாய் இறக்கிவிடப்பட்டு, அவனுடைய கைகளுக்குத் தப்பிப்போனேன். + அப்போ. ௯, ௨௪. ௨௫.

## ௰௨. அதிகாரம்.

௧ பவுலு தனக்கருளிச்செய்யப்பட்ட மேன்மையான தேரிசனைகளையுந் தானுபத்திரவங்களைச் சகிக்கிறதிலே தமியத்தையுங் கொரிந்தியாருக்கு விபரித்து, தானவர்களை நெருங்காதிருந்த மெய்யட்சத்தையும் அவர்களுக்கு நிரூபிக்கிறது.

மேன்மைபாராட்டுகிறது எனக்குப் பிரயோசனமாயிராதே, ஏனென்றால் கர்த்தருடைய தேரிசனைகளையும் வெளிப்படுத்தல்களையுஞ் சொல்லவருகிறேன்.
௨ கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன், அவன் பதினாலு வருஷத்துக்கு முன்னே மூன்றாவது வானமட்டுக்கும் எடுக்கப்பட்டான், சரீரத்துக்குள்ளானவனாகவோ என்றறியேன், சரீரத்துக்குப் புறம்பானவனாகவோ என்றறியேன், பராபரன் அறிவார்.
௩ அப்படிப்பட்ட மனுஷனை அறிவேன், அவன் பரதீசுக்குள் எடுக்கப்பட்டு, மனுஷன் பேசத்தகாத வாக்குக்கெட்டா வார்த்தைகளைக் கேட்டான்.
௪ சரீரத்துக்குள்ளானவனாகவோ சரீரத்துக்குப் புறம்பானவனாகவோ என்றறியேன் பராபரன் அறிவார்.
௫ அப்படிக்கொத்தவனைக்குறித்து மேன்மைபாராட்டுவேன், ஆனாலென்னைத்தானே குறித்து நான் என் பெலயீனங்களின் பேரிலேயொழிய வேறொன்றின் பேரிலும் மேன்மைபாராட்டுவதில்லை. + ௰௧. ௩௰.
௬ நான் மேன்மைபாராட்டப்போனாலும் நான் மதியற்றவனாயிருப்பதில்லை, ஏனென்றால் உண்மையைச் சொல்லுவேன், ஆனாலும் யாதொருத்தன் என்னிடத்திலே காண்கிறதுக்கும் என்னாலே கேட்கிறதுக்கும் அதிகமாய் என்னை எண்ணாதபடிக்கு அதைச் செய்யாதிருக்கிறேன்.
௭ வெளிப்படுதல்களுடைய மேன்மையினாலே நான் உயர்த்தாதபடிக்கு எனக்கொரு முள்ளு மாம்சத்திலே கொடுக்கப்பட்டது, என்னை நான் உயர்த்தாதபடிக்கு என்னைக் குட்டுஞ் சாத்தானுடைய தூதனதுதானே. + யோபு. ௨, ௭.
௮ இதுக்காக மூன்றுவிசை, அது என்னைவிட்டு நீங்க, கர்த்தரை வேண்டிக்கொண்டேன்.
௯ ஆனாலவர் என்னுடனே: நம்முடைய கிருபை உனக்குப் போதும், ஏனென்றால் பெலயீனத்திலே நம்

முடை

முடபெலனநிறைவெறுதெனறார். ஆகையாலகிறிஸததுவினுடையபெலனெனமேலதஙகியிருககிறததுககாக. நானவெகு அதிகவிருபபமாயெனபெலயீனஙகளினபெரிலெமெனமைபாராடடுவென.

௰ அதுநிமிததியமநானெனககுகிறிஸததுவுககாகவருமபெலயீனஙகளிலுமநிநதைகளிலும, அவதிகளிலுநதுனபஙகளிலுமநெருககஙகளிலும + பிரியமாயருககிறென, ஏனெனிலநானபெலயீனபபடுமபொதெபெலனுளளவனாயிருககிறென. + யாக. க. ௨. ௩.

௰௧ மெனமைபாராடடிமதியறறவனானென, நீஙகளதெதுககெனனைபபெலபநதபபடுததினீர்கள. அதெனனறால உஙகளாலெ நானமெசசிககொளளபபடவெணடியதாயிருநதது, ஏனெனிலநானொனறுமிலலவல, எனறாலும நானமகாபபிறதான அபபொஸததலருககுஒனறிலுநதாழசியானவனலல.

௰௨ ஒருஅபபொஸததலனுடைய அடையாளஙகளஉஙகளுககுளளெஎலலாபபொறுமையொடும. அடையாளஙகளொடும அறபுதஙகளொடும வலலமைகளொடுமநடபிககபபடடதெ.

௰௩ நானதான உஙகளை + வருததபபடுததாதிருநதததிலெஒழிய எதிலெமறறசசபைகளுககுததாழசியாயிருநதீர்கள எனககிநத அநியாயததை மனனியுஙகொள. + ௰௧, ௬.

௰௪ இதொ + மூனறுமவிசை உஙகளிடததுககுவரஆயததமாயிருககிறென, உஙகளை வருததபபடுததாமலுமிருபபென, ஏனெனிலஉஙகளுடையதததையலலஉஙகளைததெடுகிறென. அதெனனறாலபெறறுககுபபிளளைகளலல, பிளளைகளுககுபபெறறொர்பொககிஷஙகளைசசெர்ககவெணடியது. + ௰௩, க.

௰௫ நானெனவெனிலஉஙகளைமிகுதியாயசநெகிதததுதாழசியாயசநெகிககபபடடாலும வெகுநலலமனதுடனெஉஙகளஆததுமஙகளுககாகசசெலவுமபணணசசெலவுமாவெனென.

௰௬ பெபொதுமநானெஉஙகளுககுபபாரமாயிருநததிலலைஎனகிறததைமெயெனபீர்களெ, ஆனாலதநதிரமுளளவனாயிருநதுஉஙகளைககவடடினாலெபபிடிததெனெ.

௰௭ நானஉஙகளிடததுககனுபபினவர்களிலயாதொருததனைககொணடுஉஙகளிடததிலபொழிவுதெடினெனொ.

௰௮ நானததீததுவைபபொகவெணடிககொணடுஅவனுடனெகூடஒருசகொதரனை அனுபபினென, தீததுஉஙகளிடததிலயாதொருபொழிவைததெடினானொ, நாஙகளஒரெஆவியிலுமஅலலவொஒரெகாலடிகளிலுமஅலலவொநடநதொம.

௰௯ நாஙகளஎஙகளுககாகபபெசுகிறொமெனறுமறுபடியுமெணணுகிறீர்களொ, பராபரனுககுமுனபாககிறிஸததுவுககுளபெசுகிறொம. ஆனாலபிறியமானவர்களெ, இதுகளெலலாததையும உஙகளளககடடுதலுககாகசசெயகிறொம.

௨௰ ஏனெனில, நானவநதுஉஙகளைஎனமனதின

படி

படியிருககிறவர்களாககாணுமறும, உஙகளுககு
நானஉஙகளமனதினபடியிருககிறவனாககாணப
படாமறுமிருபபேனெனறும, விரோதஙகளவ
யிராககியஙகளகோபஙகளசணடைகளபினபோ
றணிகளமுணுமுணுபபுகளஉபபுதலகளகலகஙக
ளுணடாயிருககுமோவெனறும,
௨௧ மறுபடியுமநானவருகிறபோது எனனுடை
யபராபரனஉஙகளிடததிலெனனைததாழமைபபடுத
துவதும, முனபாவஞசெயதுமெனனாநதாஙகளநட
பபிதத அசுததததையுமவேசிததனததையுஙகாமவிகா
ரததையுமவிடடுககுணபபடாதேபோன அனேகர்
நிமிததியமநானதுககிபபதுமுணடோவெனறுமபயந
திருககிறேன.

## ௰௩. அதிகாரம.

❡ குணபபடாதவர்களுககுசசுருககிககாணபி
பபோமெனறுபவுலுஅறிவிததது.

இநதமூனறாநதரமஉஙகளணடைககுவருகிறேன, ச
கலவறறுதமானமுமரெணடுமூனறுசாடசிகளு
டையவாககினாலெநிலைவரபபடும.
௨ நானமறுபடியுமவநதால தபபவிடடேனெ
னறுமுனபாவஞசெயதவர்களுககுமமறற எலலா
ருககுமமுனசொனனேன, அதைதேரெணடாமவிசையு
மஉணடையிலிருககிறவனபோலமுனசொலலி, இ
பபோதூரமாயிருககககொணடெழுதுகிறேன.
௩ ஏனெனனிலஎனனிலபேசுகிறவரும உஙகளிட
மாயபெலயீனராயிராமலஉஙகளிடததில வலல
வருமாயிருககிறகிறிஸததுவைபபரிடசைபார்ககவு
ஊகதேடுகிறீர்கள.
௪ ஏனெனனிலஅவர்பெலயீனததால சிலுவையில
அறையபபடடிருநதும, பராபரனுடைய வலலமை
யாலபிழைததிருககிறார் அபபடிநாஙகளுமஅவருக
குளபெலயீனராயிருநாலுமஅவருடனெகூடபரா
பரனுடையவலலமையாலஉஙகளிடததிலெபிழை
ததிருபபோம.
௫ விசுவாசததிலெயிருககிறீர்களோவெனறுஉங
களைததானெசோதிதது உஙகளைததானெ விசாரிதத
றியுஙகோள. அலலது யேசுகிறிஸதது உஙகளிலிரு
ககிறாரெனறுஉஙகளைததானெ அறியீர்களோ, நீங
களஆகாதவர்களாயிராதிருநதால அறிவீர்கள.
௬ நாஙகளொகாரியததுககாகாதவர்களாயிரா
ததைத அறிவீர்களெனறுநமபுகிறேன.
௭ ஆனாலநீஙகளஒருபொலலாபபையுஞசெய
யாதிருககபபராபரனைநோககிவேணடுகிறேன,நா
ஙகளகாரியததுககானவர்களெனறுகாணபபடா
மல,நீஙகளநலமானததைசசெயயவுமநாஙகளோ
காரியததுககாகாதவர்களபோலிருககவுநதானெ.
௮ ஏனெனறாலநாஙகளசததியததுககுவிரோதமா
கஒனறுஞசெயயமாடடாமலசததியததுககாகசசெய
யமாடடுவோம.

௯ ஏனெனில், நாங்கள் பெலவீனருமாய் நீங்களோ பெலத்தவர்களுமாயிருக்கும்போது சந்தோஷப்படுகிறோம், ஆனால் நீங்கள் நற்சீர்பொருந்தவே ஆசையுமாயிருக்கிறோம்.

௰ ஆனதுகொண்டு நான் உங்களிடையில் வந்திருக்கும்போது, * இடிக்கவல்லல்லாணக் கட்டக் கர்த்தர் எனக்குக் கொடுத்த அதிகாரத்தின்படியே நான் கண்டிதம் பண்ணாதபடிக்கு, இதுகளைத் தூரமாயிருந்து எழுதுகிறேன். * ௰, ௮.

¶ நிருபத்தின் முடிவு.

௰௧ கடைசியிலே, சகோதரரே, * சந்தோஷமாயிருங்கோள், நற்சீர்பொருந்துங்கோள், தேற்றரவடையுங்கோள், ஏகசிந்தையாயிருங்கோள், சமாதானமாயிருங்கோள், அப்போ சிநேகத்துக்கும் சமாதானத்துக்கும் பராபரனானவர் உங்களுடனேகூடயிருப்பார். * பிலி. ௪, ௪.

௰௨ * ஒருத்தரொருத்தர் பரிசுத்த முத்தத்திலே வினவிக்கொள்ளுங்கோள். பரிசுத்தவான்களெல்லாரும் உங்களை வினவுகிறார்கள். * ௧. கொ. ௰௬, ௨௰.

௰௩ கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையும் பராபரனுடைய சிநேகமும் பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்களனைவரோடுங்கூடயிருக்கக்கடவது. ஆமென்.

மக்கேதோனியதேசத்துப் பிலிப்பிப்பட்
ணத்திலே எழுதி, தீத்துலூக்கா என்கிற
வர்கள் கையிலே கொரிந்தியருக்
கனுப்பின இரண்டாம்
நிருபம்.

# அப்போஸ்தலனாகிய
# பவுல்
## கலாத்தியருக்கெழுதின
# நிருபம்.

### ௧. அதிகாரம்.

மோசேயின் ஞாயப்பிரமாணக் கட்டளைகளைக்
௰௪ ஒன்று செய்கிறேன், பின்னானதுகளை மறந்து, முன்னானதுகளைத் தாவி, கிறிஸ்த்துயேசுவுக்குள் பராபரனழைத்த * மேலான அழைப்பின்பந்தயத்தையே லக்காகத்தொடருகிறேன். * ௧. கொ. ௯, ௨௪—௨௬.

௰௫ ஆகையால் தேறினயாவரும் இந்தச்சிந்தையாயிருக்கக்கடவோம் நீங்கள் ஏதுகாரியத்திலே வேறே சிந்தையாயிருந்தால், அதையும் பராபரன் உங்களுக்குத் தெளிவிப்பார்.

௰௬ ஆனாலும் நாம் வந்த அந்தப்பிரமாணத்திலேதானே நடந்துகொண்டு, * ஏகசிந்தையாயிருக்கக்கடவோம். * ௧. பேது. ௩, ௮.

௰௭ சகோதரரே, நீங்கள் * என்னோடேகூடப்பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்குமாதிரியாயப்படிநடக்கிறவர்களை நோக்குங்கோள். * ௧. கொ. ௪, ௰௬. ௰௧, ௧.

௰௮ ஏனெனில், அநேகர் நடக்கையைக்குறித்து அவர்கள் கிறிஸ்த்துவினுடைய சிலுவையின் பகைஞரென்று உங்களுக்கு அநேகந்தரஞ்சொன்னேன், இப்போதோ வெகு அழுகையோடே சொல்லுகிறேன்.

௰௯ பூமிக்கடுத்தசிந்தையானவர்களுடைய முடிவு அழிவுதானே, அவர்களுக்கு தேவன் வயிறு, அவர்கள் மகிமை அவர்கள் வெட்கத்திலிருக்குது. * ரோ. ௰௬, ௰௮.

௨௰ நம்முடைய சஞ்சாரமோவெனில் * பரமண்டலங்களிலிருக்குது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற யேசுகிறிஸ்த்துவாகிய இரட்சகரை வரப்பார்த்துக்கொண்டிருக்கிறோம். * எபே. ௨, ௬. கொலொ. ௩, ௧—௪.

௨௧ அவர் தமக்கெல்லாத்தையுங்கீழ்ப்படுத்திக்கொள்ளவல்லமையான தம்முடைய பெலத்தின்படியே * நம்முடைய தாழ்மையான சரீரத்தைத் தம்முடைய மகிமையான

சரீர

சரீரத்துக்கொப்பாகும் அனுரூபப்படுத்துவார். ௧ கொரி. ௰௫, ௫௩.

## ௪. அதிகாரம்.

### ¶ அவர்கள் சற்குணநடக்கைக் கேவினது.

௧ ஆனபடியினாலே என் பிரியமும் வாஞ்சையுமாய் என்னுடைய சந்தோஷமுங் கிரீடமுமான சகோதரரே, நீங்கள் இப்படிக் கர்த்தருக்குள் நிலைகொண்டிருங்கோள், பிரியமானவர்களே. ௧ தெச. ௨, ௰௯ ௨௰.

௨ கர்த்தருக்குள் ஏகசிந்தையாயிருக்க, ஏவோதியாளுக்குப் புத்திசொல்லுகிறேன், சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன்.

௩ என் உத்தமக்கூட்டாளியே, அவர்களுக்குதவியாயிருக்க உன்னையும் வேண்டிக்கொள்ளுகிறேன், அவர்கள் கிலேமெந்தோடும் மற்றென்னுடன் வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷத்திலே என்னோடேகூடப் போராடினார்கள், அவர்களுடைய நாமங்கள் சீவபுஸ்தகத்திலுள்ளது. லூ. ௰, ௨௰. அபி. ௩. ௫ ௨௰, ௰௨. ௨௧. ௨௭.

௪ கர்த்தருக்குள் எப்போதுஞ் சந்தோஷமாயிருங்கோள், மறுபடியுஞ் சொல்லுகிறேன், சந்தோஷமாயிருங்கோள். ௩, ௧.

௫ உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்குந் தெரிந்திருக்கக்கடவது. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். யாக். ௫, ௮. ௯.

௬ நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாத்திலும் உங்கள் விண்ணப்பங்கள் ஸ்தோத்திரப்பட்டோடேகூடிய செபத்தினாலும் வேண்டுதலினாலும் பராபரனுக்கறிவிக்கப்படக்கடவது. ௧ பேது. ௫, ௭.

௭ அப்போ எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையுங் கிறிஸ்துயேசுவுக்குள் காப்பாற்றும். யோவ. ௰௪, ௨௭.

௮ குறைக்காரியமென்னவென்றால், சகோதரரே, எதுகள் உண்மையாயிருக்குதோ, எதுகள் யோக்கியம், எதுகள் நீதி, எதுகள் கற்பு, எதுகள் பிரியம், எதுகள் நற்கீர்த்தியாயிருக்குதோ, புண்ணியமானதுவோ, புகழானதுவோ, அதுகளையே சிந்தித்துக்கொண்டிருங்கோள்.

௯ நீங்கள் என்னிடத்திலே கற்றதும் அடைந்ததுங் கேட்டுக்கண்டதுகளைச் செய்யுங்கோள், அப்போ சமாதானத்தினுடைய பராபரன் உங்களுடனேகூட இருப்பார்.

### ¶ அவர்கள் அனுப்பின காணிக்கையைக் குறித்தெழுதினது.

௰ என்மேலுள்ள உங்கள் விசாரிப்பை நீங்கள் இப்போ திரும்பத் துளிர்க்கப்பண்ணினீர்கள், அதற்காகக் கர்த்

தருக்

திருக்குள்மிகவுஞ்சந்தோஷப்பட்டேன், நீங்கள் மேலுஞ்சிந்தனையுமாயிருந்தீர்கள், ஆனாலுங்களுக்குச்சமயமில்லாதிருந்தது.
௰௧ நானதைத்தாழ்ச்சியினிமித்தியமாகச்சொல்லேன், ஏனெனில் நானெந்தநிலைமையிலிருந்தாலும் * மனரம்மியமாயிருக்கக்கற்றேன். * ௧. தீமோ. ௬, ௬.
௰௨ தாழ்ந்திருக்கவுமெனக்குத்தெரியும், பெருகியிருக்கவுமெனக்குத்தெரியும், எங்குமெல்லாத்திலுந் திருத்தியாயிருக்கவும்பசியாயிருக்கவும்பரிபூரணமுடையவுந்தாட்சியுடையவும்போதிக்கப்பட்டேன்.
௰௩ என்னைப்பெலப்படுத்துகிறகிறிஸ்துவுக்குள் எனக்கெல்லாத்துக்கும்பெலனுண்டு. * யோ. ௰௫, ௫.
௰௪ ஆகிலுமநீங்களென்னுடையுபத்திரத்துக்குதவிக்கமானது நல்லசெய்கையாயிருக்குது.
௰௫ பிலிப்பியரே, சுவிசேஷத்தினுதுவக்கத்திலே நான்மக்கெதோனியாவிலிருந்துபுறப்பட்டபோது, நீங்களேமாத்திரமேயல்லாமலொருசபையுங்கொடுக்கல்வாங்கலைக்குறித்தெனக்குச்சகாயமானதில்லையென்றுநீங்களுமறிந்திருக்கிறீர்கள்.
௰௬ ஏனெனில்தெசலோனிக்கேயிலுநீங்களென்தாட்சிக்குதவ, ரெண்டொருதரமனுப்பினீர்கள்.
௰௭ நான்காணிக்கையைநாடுகிறவனாய்ச்சொல்லேன், * உங்களகணக்குக்கேகனிபெருகுவதைநாடுகிறேன். * உ. கொ. ௯, ௯.
௰௮ ஆனாலெல்லாமெனக்குவந்துசேர்ந்துபரிபூரணமாச்சுது. உங்களாலனுப்பப்பட்டு, சுகந்தவாசனையும்பராபரனுக்குப்பிரியமானதுகந்தபெலியுமானதுகளை நானெப்பாப்பிரோதித்துவினுகையிலேவாங்கிக்கொண்டபோது, எனக்குநிறைவுண்டாச்சுது.
௰௯ என்பராபரனேதேவனாலேதம்முடையஐசுவரியத்தின்படியேயுங்களுக்குறைவையெல்லாங்கிறிஸ்துயேசுவுக்குள்மகிமையிலேநிறைவாக்குவார்.
௨௰ ஆகையால்நம்முடையபராபரனுக்கும்பிதாவுக்குமென்றென்றைக்குமுடிவில்லாசதாகாலங்களிலேமகிமையுண்டாகக்கடவது. ஆமென்.
௨௧ பரிசுத்தவான்களெல்லாங்கிறிஸ்துயேசுவுக்குள்வந்தனவுங்கோள். என்னுடனேயிருக்கிறசகோதரருங்களைவந்தனவுகிறார்கள்.
௨௨ பரிசுத்தவான்களனைவரும், விசேஷமாகராயனரண்மனையிலிருக்கிறவர்களுமுங்களைவந்தனவுகிறார்கள்.
௨௩ நம்முடையகர்த்தராகியயேசுகிறிஸ்துவினுடையகிருபையுங்களனைவரோடுங்கூடயிருக்கக்கடவது. ஆமென்.

ரோமாபுரியிலிருந்து, எப்பாப்பிரோதித்துவின் கையிலேபிலிப்பியருக்கனுப்பினது.

# அப்போஸ்தலனாகிய
## பவுல்
### கொலோசெயருக்கெழுதின
# நிருபம்.

## ௧. அதிகாரம்.

௧ கிறிஸ்துமார்க்கத்துக்குள்ளாயவர்களுக்காகப் பராபரனைத் தோத்திரித்துவேண்டிக்கொண்டது.

பராபரனுடைய சித்தத்தினாலே யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுலும் சகோதரனாகிய தீமோத்தேயும்,

௨ கொலோசெயிலே கிறிஸ்துவுக்குள்ளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கும் விசுவாசிகளுமான சகோதரருக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய பராபரனாலுங் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக்கடவது.

௩ கிறிஸ்துயேசுவின்பேரிலுள்ள உங்கள் விசுவாசத்தின் செய்தியையுஞ் சகல பரிசுத்தவான்கள்பேரிலுமுள்ள சினேகத்தின் செய்தியையும் நாங்கள் கேட்டிருந்து,

௪ நீங்கள் சுவிசேஷத்தின் சத்தியவசனத்திலே முன்னமே கேட்டதும் * பரமண்டலங்களிலே உங்களுக்கு வைத்திருக்கிறதுமான நம்பிக்கையின் நிமித்தியம், * ௧ பேது. ௧, ௪. ௫.

௫ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற பராபரனைத் தோத்திரித்து, உங்களுக்காக எப்போதுஞ் செபம்பண்ணுகிறோம்.

௬ இந்தச் சுவிசேஷம் லோகமெங்கும் வந்து கனிதருகிறதுபோல, உங்களிடத்திலும் வந்து, நீங்கள் பராபரனுடைய கிருபையை உண்மையாய்க் கேட்டறிந்துகொண்ட நாள்முதல் உங்களிடத்திலுங் கனிதருகிறதாயிருக்குது.

௭ அப்படியாக நீங்கள் எங்களுக்குப் பிரியமான உடன்வேலைக்காரனாகிய * எப்பாப்பிறாவினிடத்திலே கற்றவர்களுமாயிருக்கிறீர்கள், அவன் உங்களுக்காகக் கிறிஸ்துவினுடைய உண்மையான ஊழியக்காரனாயிருக்கிறான். * ௪, ௰௨. ௰௨.

௮ அவன் ஆவிக்குள்ளான உங்கள் சினேகத்தை எங்களுக்கு வெளிப்படுத்தினவனுந்தான்.

௯ ஆனபடியினாலே நாங்களும் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காகச் செபம்பண்ணி, * நீங்கள் கர்த்தருக்குப் பாத்திரமாய் எல்லாப் பிரியமாகவும் நடந்து, எல்லா நற்கிரியையிலுங் கனிதந்து, ** பராபரனை அறிகிறத்திலே வளர்ந்து, * எபே. ௫, ௧ — ௩. பிலி. ௧, ௨௭. ** எபே. ௧, ௰௭ — ௰௯.

ய் சநதோஷததோடெகூடிய எலலாப பொறு
மைககும நீணடசாநததுககும அவர்மகிமையினுடை
ய வலலமையினபடிமிகுதியாகவும பெலபபடும்ப
டிககு,
௰௧ நீஙகள அவருடையச சிததததைஎலலாஞானமு
மஞானஉணர்வுமாய அறிகிற அறிவினாலநிறையப
டவேணுமெனறுவிணணபபஞசெயயஒயாதிருநது,
௰௨ வெளிசசததிலுளளபரிசுததவானகளினசுதந
திரபபஙகுககுநமமைஏறறவர்களாககினபிதாவுக
குஸதோததிரஞசெலுததுகிறோம.

¶ கிறிஸததுவினமகததுவமுமஅவர்சுவிசேஷததி
னமேனமையுஙகாணபிககபபடடது.

௰௩ அவர்நமமைஅநதகாரததினுடைய * அதிகாரத
துககுநீஙகலாககி, தமமுடடநேசகுமாரனுடையராட
சியததுககுளபடுததினவததார். * எபேசி. ௨, ௨ — ௬.
௰௪ * அவருககுளநமககுஅவருடையஇரததததினலெ
பாவமனனிபபாகியமீடபுணடாயிருககுது. *
எபே. ௧, ௭.
௰௫ * அவர்அதரிசியமானபராபரனுடையசுருப
முஞசிஷடடியாவுககுமமுநதினபெறமானவர். *
எபிரே. ௧, ௩. ௨. கொறி. ௪, ௪.
௰௬ ஏனனில * அவராலெஎலலாஞசிஷ
டிககபபடடது, பரமணடலஙகளிலுளளதுகளு
மபூமியினமேலுளளதுகளும, காணபபடுகிறதுகளு
ஙகாணபபடாததுகளும, ஆசனஙகளானாலுஙகற
ததததுவஙகளானாலுநதுரைததனஙகளானாலும அதி
காரஙகளானாலுஞசரி, எலலாமஅவரைககொணடு
மஅவருககெனறுஞசிஷடிககபபடடது. * யோவ.
௧, ௩. எபிரே. ௧, ௨.
௰௭ அவரெஎலலாததுககுமமுநதினவராயிருக
கிறார், எலலாமஅவருககுளநிலையாகநிறகுது.
௰௮ அவரேசபையாகியசரீரததுககுததலையானவர்,
எலலாததிலுமமுதலாளியாயிருககஅவரேஆதியும *
மரிததோரிலிருநதெழுநதமுதலபபேறுமானவர். *
அபபோ. ௨௬, ௨௩. ௧ கொ. ௰௫, ௨௰. அறி. ௧, ௫.
௰௯ ஏனனிலஅவருககுள * பரிபூரணமெலலா
மவாசமாயிருககவும, * ௨, ௯.
௨௰ அவருடையசிலுவையினஇரததததினாலெஅவரை
ககொணடுசமாதானமுணடாககினபினபு * எலலா
ததையும, பூமியினமேலுளளதுகளையுஞசரி பரமண
டலஙகளிலுளளதுகளையுஞசரி, அவரைககொணடு
மஅவருககுளளாகவுமஒபபரவாககவைககவுமதே
மியமாசசுது. * ௨. கொ. ௫, ௰௯. ௧. யோவ. ௨, ௨.
௨௰௧ முககாலததிலஅனனியருஞசிநதையிலுநதுற
கிரியைகளினாலுஞசததுருககளுமாயிருநதஉஙகளையு
மஅவர்பரிசுததவானகளாகவுமமாசறறவர்களா
கவுஙகுறறஞசாடடபபடாதவர்களாகவுநதமககுமு
னனிறுததுமபடிககு,
௨௰௨ இபபோதமமுடடமாஙகிஷமானசரீரததிலமர
ணததினாலெஒபபரவாககினார்.

௨௩ நீஙகளகேடடசுவிசேஷததினுடைய நமபிககையைவிடடசையாமல விசுவாசததிலெ அஸததிவாரமபடடவர்களுமஉறுதியுளளவர்களுமாயநிலைகொணடிருநதீர்களானால, அபபடியாம, அதுவானததினகீழிருககிறசகலசிருஷடிகளுககும பிரசஙகிககபபடடுவருகுது, அதுககுபபவுலாகிய நான ஊழியககாறனானேன.

௨௪ இபபொநானஉஙகளநிமிததியமாய அனுபவிககிறபாடுகளிலெ * சநதோஷமாயிருநது, எனமாமிசததிலெ இனனஙகுறையாயிருககிறகிறீஸதுவினுடைய உபததிரவஙகளை ** சபையாகிய அவருடையசரீரததினநிமிததியமாகநிறைவெறறுகிறேன. * ௨. கொ. ௰௨, ௰. ** ௨. தீமொ ௨, ௰.

௨௫ அதுககுநானஉஙகளைவிசாரிககனதுககுககொடுககபபடடபராபரனுடையஉககிராணததினபடியெஊழியககாறனானேன.

௨௬ * சகலகாலஙகளமுதலதலைமுறைதலைமுறையாகமறைவாயிருநது, இபபோதோவெனில அவருடையபரிசுததவானகளுககுவெளியாககபபடடரகசியமாகியதேவவசனததைநிறைவாயபிரசஙகிபபதறகாகததானே. * றோ. ௰௬, ௨௫.

௨௭ இவர்களுககுபபராபரனபுறசாதிகளிடததிலெஇநதரகசியததினுடையமகிமையின அயிசுவரியமினனதெனறு அறிவிககசசிததமாயிருநதார். அதுமகிமையின * நமபிககையாகியஉஙகளிலுளளகிறிஸததுததானே. * ௧ தீமொ. ௧. ௧.

௨௮ எநதமனுஷனையுஙகிறிஸததுவேசுவுககுளதேறினவனாகநிறுததுமபடிககு, இவரையேநாஙகளஅறிவிதது எநதமனுஷனுககுமபுததிசொலலி, எநதமனுஷனையுமெலலாஞானததோடுமபதேசிககிறோம.

௨௯ அதுககெநான எனககுளவலலமையாயககிரியைநடபிககும அவருடையபெலததினபடியெபோராடிஉழைககிறேன.

## ௨. அதிகாரம.

௧ தபபிதபபோதகஙகளைஅருவருதது, சுததசுவிசேஷமாரககததிலெநிலைததுககொணடிருககசசரிததது.

ஏனனெனிலஉஙகளஇருதயஙகளதேறறபபடவெணடுமெனறும நீஙகளசினேகததிலும, * பிதாவாகியபராபரனுஙகிறிஸததுவுமெனகிற எலலாஞானம அறிவினுடையபொககிஷஙகளுமஅடஙகினரகசியததைஅறிநதுகொளளுகிறநிறைநதஉணர்வினுடையஎலலாஅயிசுவரியததுககுமஎனறிணைககபபடவெணடுமெனறும * யோவ. ௰௭, ௩.

௨ உஙகளுககாகவும, லவோதிககெயாவிலிருககிறவர்களுககாகவும, எனமுகததைமாஙகிஷபபிறகாரமாகககாணாதிருககிறஅனைவருககாகவும,

௩ எனககுளளததனைபெரியபோராடடமிருககுதெனறுநீஙகளஅறியஎனககுமனதுணடு.

௪ யாதொருத்தனும் நயவசனிப்பினாலே உங்களை மோசம்போக்காதபடிக்கு இதைச்சொல்லுகிறேன்.

௫ ஏனெனில் நான் மாம்சத்தின்படி தூரமாயிருந்தும், ஆவியிலே உங்களோடேகூட இருந்து, உங்கள் ஒழுங்கையுங் கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் விசுவாசத்தின் உறுதியையுஞ் சந்தோஷமாய்க் காண்கிறேன்.

௬ ஆகையால் நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துயேசுவை ஏற்றுக்கொண்டதுபோலே அவருக்குள்ளே வேரூன்றினவர்களும் * அவர்மேலே கட்டப்பட்டவர்களுமாய் அவருக்குள் நடந்துகொண்டு, * எபே. ௨, ௨௨.

௭ நீங்கள் போதிக்கப்பட்டபடி விசுவாசத்திலே ஸ்திரப்பட்டு, அதிலே * ஸ்தோத்திரத்தினாலே பெருகுங்கோள். * ௧. தெச. ௫, ௰௮.

௮ கிறிஸ்துவின்படியல்லாமல், * மனுஷருடைய பாரம்பரியத்தின்படியும் லோகத்தின் * * வழிபாடுகளின்படியுமான லௌகிகஞானத்தாலும் வீணான தந்திரத்தாலும் உங்களை யாதொருத்தன் கொள்ளையிடாதபடிக்குப் பாருங்கோள். * மத்தே. ௰௫, ௨. * கலா. ௪, ௩. ௯.

௯ ஏனெனில் * அவருக்குள்ளே தெய்வத்துவத்தின் நிறைவெல்லாம் மெய்யாய் வாசமாயிருக்குது. * ௧. ௰௯, ௨௰.

௰ சகலத்துரைத்தனத்துக்கும் அதிகாரத்துக்குந் தலைவராகிய அவருக்குள் நீங்கள் * நிறைவுள்ளவர்களாயிருக்கிறீர்கள். * ௧. கொ, ௧, ௩௰.

௰௧ அவருக்குள் நீங்கள் மாம்சத்தினுடைய * பாவசரீரத்தைக் களைந்துபோடுகிற கிறிஸ்துவினுடைய சுன்னத்தாகிற கையாலல்லாத சுன்னத்தையும் அடைந்து, * ௫. மோ. ௰, ௰௬. ரோ. ௨, ௨௯.

௰௨ * ஞானஸ்நானத்திலே அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டீர்கள், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பராபரனுடைய செயலாகிய விசுவாசத்தினாலேகூடவும் எழுந்திருந்தீர்கள். * ரோ. ௬, ௩ — ௫.

௰௩ பாவங்களாலும் உங்கள் மாம்சத்தின் நுனித்தோலாலும் * மரித்தவர்களாயிருந்த உங்களை அவரோடேகூடவும் அவர் உயிர்ப்பித்து, உங்களுக்குப் பாவங்களெல்லாம் மன்னித்து, * எபே. ௨. ௪. ௫.

௰௪ நமக்கெதிருங்கட்டளைகளால் நமக்கு விரோதமாயிருந்த கையெழுத்தைக் கொல்லத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, அதைச் சிலுவையிலே ஆணியடித்துப்போட்டு,

௰௫ துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கவேஷமாக்கக்காட்டி, அதுகளின்மேலே அவருக்குள் வெற்றிசிறந்தார்.

௰௬ ஆனபடியினாலே போசனத்திலும் அல்லது பானத்திலும், அல்லது பண்டிகைமாதப்பிறப்பு ஓய்வுநாள்களுக்கடுத்த காரியத்திலும் யாதொருத்தன் உங்களைக் குற்றமாய்த் தீர்க்கவேண்டாம்.

௰௭ அதுகள் வருங்காரியங்களினுடைய * நிழலாம், பொருளோவென்னில் கிறிஸ்துவினுடையது: * எபிரே. ௮, ௫.

௰௮ கணுக்களாலுங் கட்டுக்களாலும் உதவி பெற்று இணைக்கப்பட்ட சரீரமனைத்தையுந் தேவவளர்த்தியாக வளரப்பண்ணுகிற தலையைப் பிடித்துக்கொண்டிராமல்,

௰௯ தாழ்மையின்மேலுந் தேவதூதர் ஆராதனையின்மேலும் விருப்பமுற்று, தான் காணாத்துகளில் மேட்டிமையாய் நடந்து, தன் மாங்கிஷசிந்தையால் வீணாய் உப்பியிருக்கிற எவனும் உங்கள் பந்தயத்தைப் பறிக்கப்பண்ணவேண்டாம்.

௨௰ இப்போதும் நீங்கள் கிறிஸ்துவோடேகூட லோகத்தின் ஈனவழிபாடுகளுக்கு மரித்துண்டானால்,

௨௧ நீங்கள் லோகத்தில் பிழைத்திருக்கிறவர்கள்போல: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதேயென்கிற மனுஷர் கற்பனைகளின்படியும் போதகத்தின்படியுமான கட்டளைகளைச் சுமந்துகொள்ளுகிறதென்ன. * தீத்து. ௧, ௰௪.

௨௨ அதுகளெல்லாங் கையாளுகிறதினால் அழிந்துபோமே.

௨௩ மெய்தான், அதுகள் நேமநேஷ்டானுட்டையினாலும் தாழ்மையினாலும், மாங்கிஷத்திருப்தியாகச் சரீரத்தைச் சத்தம் பேணாமல் தெண்டிக்கிறதினாலும், ஞானமென்ற வேஷமுடையதாயிருக்குது.

## ௩. அதிகாரம்.

### ௧. தேவபக்தியான நடக்கைக்கேவுகிற புத்திகள்.

இப்போது நீங்கள் * கிறிஸ்துவுடனேகூட எழுந்துண்டானால், கிறிஸ்து பராபரனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்குமிடத்திலுள்ள மேலானதுகளைத் தேடுங்கோள். * ௨, ௰௨.

௨ பூமியின்மேலுள்ளதுகளையல்ல, மேலானதுகளைச் சிந்தியுங்கோள். * மத். ௬, ௰௯—௨௧.

௩ ஏனென்றால் * நீங்கள் மரித்தீர்கள், உங்கள் சீவன் கிறிஸ்துவுடனேகூடப் பராபரனுக்குள் ஒளித்திருக்குது * ரோ. ௬, ௨.

௪ * நம்முடைய சீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போதோவென்றால் நீங்களும் அவருடனேகூட * * மகிமையிலே வெளிப்படுவீர்கள். * யோவ. ௰௪, ௬. ௰௧. ௨௫ * * ௧. கொ. ௰௫, ௪௯.

௫ ஆகையால் பூமியின்மேலுள்ள உங்கள் அவயவங்களாகிய * வேசித்தனத்தையும் அசுத்தத்தையும் விரகதாபத்தையும், துற்றிச்சையையும், விக்கிரகாராதனையாகிய பொருளாசையையுங் கொன்றுபோடுங்கோள். * ரோ. ௮, ௰௩. எபே. ௫, ௩—௫.

௬ * அதுகளினிமித்தியம் பராபரனுடைய கோபம் அவிசுவாசத்தின் பிள்ளைகள்மேல் வரும். * எபே. ௫, ௬.

௭ நீங்களும் அதுகளில் சீவனம்பண்ணின முற்காலத்திலே அதுகளில் நடந்தீர்கள்.

௮. இப்போதோவென்றால் அதுகளெல்லாத்தையும்,

கோப

கோபத்தையுங் குரோதத்தையுந் துற்குணத்தையுந் தூஷணத்தையும், உங்கள் வாயிலே பிறக்கலாகாத வம்பையும் விட்டுவிடுங்கோள். * எபே. ௪, ௨௯. ௩௰. ௫, ௪.

௯ * ஒருத்தருக்கொருத்தர் பொய் சொல்லாதேயுங்கோள். பழைய மனுஷனை அதின் செய்கைகளோடு கூடக் கழற்றிப்போட்டு, * எபே. ௪, ௨௫.

௰ * தன்னைச் சிருஷ்டித்தவரின் சாயலாக அறிவுண்டாகும்படிக்குப் புதிதாக்கப்பட்ட புதுமனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கோள். * எபே. ௪, ௨௩.

௰௧ * அதிலே கிரேக்கனும் யூதனென்பதும், சுன்னத்துஞ் சுன்னத்தில்லாமையென்பதும், கறுகாத் சாதி ஸ்கித்தா சாதியென்பதும். அடிமைத்தனஞ் சுச்சக்காறனென்பதுமில்லாமல், கிறிஸ்து எல்லாரிலும் எல்லாமாயிருக்கிறார். * ரோ. ௰, ௰௨.

௰௨ ஆனபடியினாலே நீங்கள் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் பரிசுத்தரும் பிரியருமாய் * மனவுருக்கமான இரக்கத்தையும் தயையையும் மனத்தாழ்மையையும் மெத்தனத்தையும் நீடிய சாந்தத்தையுந் தரித்துக்கொண்டு * எபே. ௪, ௩௨.

௰௩ * ஒருவரையொருவர் பொறுத்திருந்து, ஒருத்தன் பேரிலே ஒருத்தனுக்குக் குறை யுண்டாயிருந்தால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல * * நீங்களும் ஒருத்தருக்கொருத்தர் மன்னியுங்கோள். * எபே. ௪, ௨. ௩. * * மத். ௰௮. ௩௩.

௰௪ இவைகளுக்கெல்லாம் மேலாக பூரண சற்குணத்தின் கட்டாகிய சிநேகத்தைத் தரித்துக்கொள்ளுங்கோள்.

௰௫ பராபரனுடைய சமாதானம் உங்களிருதயங்களிலே ஆளக்கடவது, அதுக்கு நீங்கள் ஒரே சரீரமாயிருக்க அழைக்கப்பட்டவர்களுமாமே. நன்றியறிந்தவர்களுமாயிருங்கோள்.

௰௬ கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள் பரிபூரணமாக எல்லா ஞானத்தோடும் வாசமாயிருந்து, * நீங்கள் சங்கீதங்களாலுங் கீர்த்தனங்களாலும் ஞானப்பாட்டுகளாலும் உங்களைப் போதித்து, உங்களுக்குப் புத்திசொல்லிக்கொண்டு, உங்களிருதயத்திலே கர்த்தருக்கினிதாய்ப் பாடி, * எபே. ௫, ௰௯. ௨௰.

௰௭ * நீங்கள் வார்த்தையிலாகிலுங் கிரியையிலாகிலும் என்ன செய்தாலும் அதையெல்லாங் கர்த்தராகிய யேசுவின் நாமத்திலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய பராபரனைத் தோத்திரியுங்கோள். * ௧. கொ. ௰, ௩௧.

## ¶ தனித்தனியான புத்திகள்.

௰௮ * பெண்சாதிகளே, உங்களுடைய புருஷருக்குக் கர்த்தருக்குள் ஏற்கும்படி கீழ்ப்படிந்திருங்கோள். * எபே. ௫, ௨௨ — ௨௪. ௧. பேது. ௩, ௧.

௰௯ புருஷரே, உங்கள் பெண்சாதிகளைச் சிநேகியுங்கோள், அவர்கள் பேரிலே கசப்பாயிராதேயுங்கோள். * எபே. ௫, ௨௫ — ௩௩. ௧. பேது. ௩, ௭.

௨௰ ✝ பிளளைகளெ, பெறறாருக்கு எல்லாத்திலுங் கீழப்படியுங்கொள, ஏனனெனறாலிது கறத்தருக்குப் பிரியமாயிருக்குது. ✝ எபெ. ௬, ௧ — ௩.

௨௧ ✝ பிதாக்களெ, உங்கள பிளளைகள திடனறறுப்போகாதபடிக்கு அதுகளுக்குக் கொபமூட்டாதெயுங்கொள. ✝ எபெ. ௬, ௪.

௨௨ ✝ வெலைகாறரெ. மாங்கிஷத்தினபடி செமானகளாயிருக்கிறவர்களுக்கு நீங்க எல்லாத்திலுங் கீழபபடிந்து, மனுஷருக்கிஷ்டமாயக்காறர்போலெ பார்வைக்கூழியஞ்செய்யாமல, நெறுதயங்கவட்டலலாமையாய்ப் பராபரனுக்குப் பயந்தூழியஞ்செய்து, ✝ எபெ. ௬, ௫ — ௮. ௧. பெது ௨. ௰௮.

௨௩ எனனசெய்தாலும அதை மனுஷருக்கெனறலல, கறத்தருக்கெனறுமனசாரச்செய்து,

௨௪ கறத்தராலெ சுதந்திர மெனகிற பலனைப் பெறுவீர்களெனறறியுங்கொள. ஏனனெனறால கறத்தராகிய கிறிஸ்துவுக்கூழியஞ்செய்கிறீர்கள.

௨௫ அநியாயஞ்செய்கிறவனெ தான செயத அநியாயத்தினபலனை அடைவான, ✝ பாரபட்சமிலலை. ✝ ௧. பெது. ௧, ௰௭.

௪. அதிகாரம.

¶ பொதுவானபுத்தி.

௧ ✝ செமானகளெ, உங்களுக்கும பரமணடலத்திலெ ஒரு செமானுண்டென்றறிந்து, வெலைகாறருக்கு நீதியுஞ்செவ்வையுமானதைச் செய்யுங்கொள. ✝ எபெ. ௬, ௯.

௨ ✝ செபத்திலெ நீங்கள உறுதியாய்த்தரித்து, அதிலெ ஸ்தொத்திரப்படனெ விழித்திருந்து, ✝ லூ. ௰௮. ௧.

௩ கிறிஸ்துவினுடைய ரகசியத்தினிமித்தியமாகக் கட்டுணடிருக்கிற நானதைச் சொலலவெணடியதாகுமெனறும, ✝ சொலவெணடியபிறகாரமாக அதை வெளிப்படுத்துவதறகும,

௪ பராபரன எங்களுக்கு வசனத்தின வாசலைத்திறக்க, ✝ எங்களுக்காகவுங்கூடச் செபமபணணுங்கொள. ✝ எபெ. ௬, ௰௯. ௨௰.

௫ ✝ நீங்கள காலத்தைத்தப்பாமறபிடித்து, புறமபானவர்களை நொக்கிஞானமாய நடந்துகொளளுங்கொள. ✝ எபெ. ௫, ௰௫. ௰௬.

௬ அவனவனுக்கு நீங்கள எப்படி உத்தரஞ்சொலலவெணுமெனறறியும்படியாய உங்கள வசனம எப்பொதும ✝ தெளிதும ✝ ✝ உப்பாலசாரமெறறினதுமாயிருக்கக்கடவது. ✝ எபெ. ௪, ௨௯. ✝ ✝ மறகு. ௯. ௫௰.

¶ நிருபத்தினமுகிவு.

௭ எனசெய்திகளை எலலாம பிரியசகொதரனும உணமையானவூழியக்காறனும, கறத்தருக்குள உடன வெலையாளுமாகிய தீகிக்கு உங்களுக்கறிவிப்பான

௭ உங்களைச்செய்திகளை அறிந்து, உங்களிருதயங்களைத் தேற்றரவுபண்ணுகிறதற்காக,
௮ நான் அவனை உங்களிலொருத்தனாகிய உண்மையுள்ள பிரியசகோதரனான * ஒநேசிமுடனேகூட உங்களண்டைக்கனுப்பினேன். இவிடத்துச்செய்திகளையெல்லாம் உங்களுக்கறிவிப்பார்கள். * பிலே. ௰. ௰௧. வசனம்.
௯ என்னோடேகூடக் காவல்பண்ணப்பட்டவனாகிய அரிஸ்தர்க்கும், பர்னபாவுக்கின்னத்தானாகிய மாற்குமும் உங்களை வினவுகிறார்கள். இவனுக்காகக் கற்பனைகளை அடைந்திருக்கிறீர்கள். இவன் உங்களண்டைக்கு வந்தால் இவனை ஏற்றுக்கொள்ளுங்கோள்.
௰ யுஸ்தென்னப்பட்ட யேசுவும் உங்களை வினவுகிறான். சுன்னத்துள்ளவர்களில் இவர்கள் மாத்திரமே பராபரனுடைய ராட்சியத்துக்கு உடனே வேலையாட்களாயிருந்து எனக்காறுதலானார்கள்.
௰௧ உங்களிலொருத்தனாயிருக்கிற கிறிஸ்துவின் ஊழியக்காறனாகிய எப்பாப்பிறா உங்களை வினவுகிறான். நீங்கள் பராபரனுக்குச்சித்தமானத்திலே யெல்லாந் தேறினவர்களும் நிறைவாளருமாய் நிற்க அவன் எப்போதும் உங்களுக்காகச் செபங்களிலே போராடுகிறான்.
௰௨ ஏனெனில் உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலும் யெராப்போலியிலுமிருக்கிறவர்களுக்காகவும் அவன் மகா கருத்துள்ளவனென்று அவனுக்குச்சாட்சியாயிருக்கிறேன்.
௰௩ பிரியமான * லூக்காயென்கிற வயித்தியனுந் தேமாவும் உங்களை வினவுகிறார்கள். * ௨. திமோ. ௪, ௰௧.
௰௪ லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும் நிம்பாவையும் அவன் வீட்டிலே கூடுகிற சபையையும் வினவுங்கோள்.
௰௫ இந்த நிருபம் உங்களிடத்திலே வாசிக்கப்பட்டபின்பு அது லவோதிக்கேயார் சபையிலும் வாசிக்கப்படவும், லவோதிக்கேயாவிலிருந்து வருகிறதை நீங்களும் வாசிக்கவும் பண்ணுங்கோள்.
௰௬ அற்கிப்புவுடனே: நீ கற்த்தருக்குள்ளே பெற்ற ஊழியத்தை நிறைவேற்றப்பாரென்று சொல்லுங்கோள்.
௰௭ பவுலாகிய நான் என் கையெழுத்தாய் வினவுதலை எழுதினேன். நான் கட்டுண்டிருக்கிறதை நினையுங்கோள். கிருபையானது உங்களுடனேகூட இருக்கக்கடவது. ஆமென்.

றோமாவிலே எழுதி, திக்குஒனேசிமுஎன்றவர்களுகையிலே கொலோசெயருக்கனுப்பினது.

# அபபோஸதலனாகிய
# பவுல
## தெசலோனிககேயருககெழுதின
# முதலாம நிருபம.

### ௧. அதிகாரம

௧ அவர்களநற்சீரசசந்தோஷமாய நினைததது.

பவுலுஞசிலவானுநதீமோததேயும, பிதாவாகியபராபரனுககுளளுஙகாததராகியயேசுககிறீஸதுவுககுளளுமிருககிற தெசலோனிககேயருடையசபைககெழுதுகிறதாவது: நமமுடையபிதாவாகியபராபரனாலுஙகாததராகியயேசுககிறீஸதுவினாலுமஉங்களுககுககிருபையுஞசமாதானமுமஉண்டாககடவது.

௨ பிறியமானசகோதரரே, நாஙகளஎஙகள செபஙகளிலஉஙகளைநினைததுககொண்டேயிருநது,

௩ நமமுடையபிதாவாகியபராபரனுககுமுனபாகஉஙகளவிசுவாசததினகிறிகையையுஞசிநேகததினவேலையையுமநமமுடையகாததராகியயேசுககிறீஸததுவினமேலுளளஉஙகளநமபிககையினபொறுமையையுமஓயாமலநினைவுகூர்நது,

௪ நீஙகளபராபரனாலதெரிநதுகொளளபபபடடவர்களெனறறிநது, எபபோதுமஉஙகளெலலாருககாகவுமபராபரனைஸதோததிரிககிறோம.

௫ ஏனெனிலஎஙகளசுவிசேஷமவாரததையோடேமாததிரமலல, வலலமையோடுமபரிசுததஆவியோடுமமுழுநிசசயததோடுமஉஙகளிடததிலிருநது. உஙகளநிமிததியமாகநாஙகளுஙகளுககுளளேஎபபடிபபபட்டவர்களாயிருநதோமெனகிறதைஅறிநதிருககிறீர்களே.

௬ நீஙகளோவெனிலவெகுஉபததிரததிலேவசனததைபரிசுததஆவியினசநதோஷததோடேஏரததுககொண்டு, எஙகளையும + காததரையும்பினபறறினதினால, * ௧. பே. ௨, ௨௧.

௭ மககெதோனியாவிலுமஅகாயாவிலுமுளளஎலலாவிசுவாசிகளுககுமமாதிரிகளானீர்கள.

௮ ஏனெனிலஉஙகளிடததிலிருநதுகாததருடையவசனமமககெதோனியாவிலுமஅகாயாவிலுமமாததிரநதோனியாமல, நாஙகளஅதைககுறிததொனறுஞசொலலததேவையிலலாதபடியாய, எவவிடததிலுமநீஙகளபராபரனைபபறறினவிசுவாசமவெளியாசசுது.

௯ ஏனெனறாலஅவர்களதாமேநமமைககுறிது, உஙகளிணடைககுளஙகளுககெபபடிககொததபிறவேசமஉணடாசசுதெனறும, நீஙகளசீவனுளளமெயயானபராபரனுககூழியஞசெயவதறகும,

௰ அவர்மரிததோரிலிருநதெழுபபினவருமவருங
கோபததுககுநமமைநீஙகலாககிவிடுகிறவருமான அ
வருடையகுமாரனாகியயேசுவை * பரமணடலஙகளி
லிருநுவரபபாரததுககொணடிருபபதறகுமாக, வி
ககிரகஙகளைவிடடு பராபரனணடைககு எபபடித்திரு
மபினீர்களெனறும அறிவிககிறார்கள். * பிலி. ௩, ௨௰.

## ௨. அதிகாரம.

¶ பவுலுதனனுடைய போதகத்தொழிலையும அவர்களுககு
நனறியபலிதததுககாக அவர்களபேரிலே
வெகுவாஞசையாயெழுதினது.

ஏனெனில, சகோதரரே, நாஙகளுஙகளிடததிலே பி
றவேசிததது வீணாயிருநதிலலையெனறு நீஙகளே
அறிவீர்கள.
௨ நாஙகள முநதி * பிலிபபிபடடணததில, நீஙகள
அறிநதபடி, பாடுமநிநதையுமடைநதிருநதும, உஙக
ளுககு ** பராபரனுடையசுவிசேஷததைவெகுபோ
ராடடததுடனேசொலலஙகளபராபரனுககுளதை
ரியமபெறறிருநதோம. * அப. ௰௬, ௨௨—௨௪.
** அப. ௰௭, ௧—௩.
௩ ஏனனெனறாலநாஙகளசொலலுகிறபுததிமதியானது
வஞசனையுளளதுமலல அசுததததாலுணடானதும
லலை, கபடமானதுமலல.
௪ சுவிசேஷமஙகளநமபிககைககொபபிககப
படடபராபரனாலநாஙகளஉததமரெனறெணணப
படடபடியேநாஙகளமனுஷருககலல, எஙகளிருத
யஙகளைசசோதிககிறபராபரனுககேறககிறவர்
களாகசசொலலுகிறோம.
௫ ஏனெனிலநீஙகளஅறிநதிருககிறபடிநாஙகள
ஒருககாலுமஇசசகவசனிபபோடிருநததுமிலலை,
பொருளாசையாயமாயமபணணினதுமிலலை, ப
ராபரனசாடசி.
௬ மனுஷர்களிடததிலே, உஙகளிடததிலாகிலுஞசரிம
றறவர்களிடததிலாகிலுஞசரி, நாஙகளமகிமையை
ததேடினதுமிலலை. நாஙகளகிறிஸததுவினுடைய
அபபோஸததலரெனறுபாரமாயிருககலாமே.
௭ ஆனாலொருதாததனனுடையபிளளைகளைககாத
ததுபபாறறுகிறதுபோலேஉஙகளநடுவிலேமெதுவா
யிருநதோம.
௮ இபபடிநீஙகளஎஙகளுககுபபிரியரானபடி
யினாலேநாஙகளஉஙகளமேலவாஞசையாயிருநது,
உஙகளுககு * பராபரனுடையசுவிசேஷததைமாததிர
மலலை, எஙகளாததுமாககளையுமபகிர்நதுகொடுகக
ததுமமனதாயிருநதோம.
௯ ஏனனெனில, சகோதரரே, * எஙகளவேலையும
பிரயாசமுமஉஙகளுககுஞாபகமாயிருககுது, அதே
னெனறால உஙகளிலொருததனுககுமபாரமாயிராதப
டிககிராவுமபகலுமவேலைசெயதுபராபரனுடை
யசுவிசேஷததைஉஙகளிடததிலபிரசஙகிததோம. ௧.
கொ. ௪, ௰௨.

௰ விசுவாசிகளாகிய உங்களுக்குள் நாங்கள் எத்தனை பரிசுத்தமாகவும் நீதியாகவுங் குற்றமில்லாமையாயும் இருந்தோமென்கிறத்துக்கு நீங்களும் பராபரனுஞ் சாட்சி.

௰௧ தம்முடைய ராட்சியத்துக்கும் மகிமைக்கும் உங்களை அழைக்கிற பராபரனுக்கு நீங்கள் * பாத்திரமாய் நடக்கவேணுமென்று, * பில். ௧, ௨௭.

௰௨ நாங்கள் எந்தப்பிரகாரமாக உங்களில் அவனவனுக்கு, ஒரு தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் செய்கிறதுபோல, புத்தியும் ஆறுதலுஞ் சாட்சியுஞ் சொன்னோமென்று அறிவீர்களே.

௰௩ ஆனதுகொண்டு நீங்கள் பராபரனுடைய வசனத்தை எங்களாலே கேழ்வியாகி ஒப்புக்கொள்ளுகிறபோது, அதை மனுஷர் வசனமாகவல்ல, பராபரனுடைய வசனமாக ஏற்றுக்கொண்டீர்களென்கிறத்துக்காக நாங்கள் பராபரனுக்கு இடைவிடாமல் ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம். அது மெய்யாய் அவருடைய வசனந்தான், அது விசுவாசிக்கிற உங்களுக்குள் பெலனுறச் செய்யுது.

௰௪ அதேனென்றால், சகோதரரே, நீங்கள் யூதேயாவிலே கிறிஸ்து யேசுவுக்குள்ளான பராபரனுடைய சபைகளைப் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எந்தப் பாடுகளை அனுபவித்தார்களோ, அதுகளை உங்கள் சுயசாதியாராலே நீங்களும் அனுபவித்தீர்கள்.

௰௫ அவர்கள் கர்த்தராகிய யேசுவையுந் தங்களுடைய தீர்க்கதரிசிகளையுங் * கொன்றுபோட்டவர்களும், எங்களைத் துன்பப்படுத்தினவர்களும், பராபரனுக்கேராதவர்களும் மனுஷருக்கெல்லாம் விரோதக்காருமாயிருக்கிறார்கள். * மத். ௨௩. ௩௪—௩௭.

௰௬ தங்கள் பாவங்களை எப்போதும் நிறைவாக்கும்படிக்கு, அவர்கள் எங்களைப் புறசாதியாரோடே, அவர்கள் ரெட்சிக்கப்படுவதற்காகப் பேசத் தடைபண்ணுகிறார்கள். ஆனால் அவர்கள் மேல் கோபமானது முடிவுண்டாக வந்துசேர்ந்தது.

௰௭ நாங்களோவென்றால், சகோதரரே, கொஞ்சக்காலம் இருதயத்தினாலல்ல முகமுகமாய் உங்களைக் காணாமல் பிரிந்திருந்தபடியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்கவெகு ஆசையாய் மெத்தவும் பிறயாசப்பட்டோம்.

௰௮ ஆனபடியால் உங்களண்டைக்கு வர எங்களுக்கு, விசேஷமாய்ப் பவுலுவாகிய எனக்கு, ரெண்டொருவிசை மனதிருந்தது, ஆனால் சாத்தான் எங்களைத் தடைபண்ணினான்.

௰௯ ஏனென்றால் * எங்கள் நம்பிக்கையும் அல்லது சந்தோஷமும் அல்லது புகழ்ச்சியின் கிரீடமும் ஆர், நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் வருகையிலே அவருக்கு முன்பாக நீங்களுந்தானல்லவோ. * ௨. கொ. ௧, ௰௪.

௨௰ ஏனென்றால் நீங்கள் எங்கள் மகிமையுஞ் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்.

## ௩. அதிகாரம்.

¶ உபத்திரத்திலே அவர்களைச் சீராய் நிறுத்தச் செய்தி தங்களுக்குச் சந்தோஷமாயிருந்ததென்பது.

௧ ஆகையினாலே நாங்கள் இனிப் பொறுக்காமல், நாமள் அத்தேனேப்பட்டணத்திலே தனித்து விடப்பட்டு,

௨ நம்முடைய சகோதரனும் பராபரனுடைய ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்திலே எங்கள் உடன்வேலையாளுமாகிய திமோத்தேயுவை உங்கள் விசுவாசத்திலே உங்களைத் திடப்படுத்தவும் உங்களைத் தேற்றரவுபண்ணவும் அனுப்பினோம்.

௩ ஒருத்தனும் * இந்த உபத்திரவங்களிலே தளம்பாதபடிக்குத்தான். ஏனெனில் ✚ ✚ இதுக்கு வைக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்களே அறிவீர்கள். *
எபே. ௩, ௰௩ ✚ ✚ அப்போ. ௰௪, ௨௨.

௪ ஏனென்றால் நமக்கு உபத்திரம் வருமென்று நாங்கள் உங்களிடத்திலிருக்கும்போது உங்களுக்கு முன்னறச்சொன்னேனும், அப்படியுமாச்சுதென்று அறிவீர்கள்.

௫ ஆனபடியினாலே நான் இனிப் பொறுக்காமல், சோதினைக்காரன் உங்களை, எங்கள் வேலை வீணாய்ப் போகும்படியாகச் சோதித்ததுண்டோ என்று உங்கள் விசுவாசத்தை அறிய அவனை அனுப்பினேன்.

௬ இப்போதோவெனில், சகோதரரே, திமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களண்டைக்கு வந்து, உங்கள் விசுவாசத்தையும் சினேகத்தையும் நீங்கள் எப்போதும் எங்களை நன்றாய் நினைத்திருந்து, நாங்கள் உங்களைக் காணவாஞ்சையாயிருக்கிறதுபோல, நீங்களும் எங்களைக் காணவாஞ்சையாயிருக்கிறீர்களென்றதையும் எங்களுக்குக் கல்வித்துச் செய்தியினாலே,

௭ எங்களுடைய எல்லா உபத்திரத்திலும் இக்கட்டிலும் உங்களைத் தொட்டும் உங்கள் விசுவாசத்தைத் தொட்டும் ஆறுதல் அடைந்தோம்.

௮ அதேனென்றால் இப்போ நீங்கள் கர்த்தருக்குள் நிலைநின்றிருந்தால், பிழைத்திருக்கிறோம்.

௯ ஏனெனில் உங்களால் நிமித்தியமாய் நாங்கள் நம்முடைய பராபரனுக்கு முன்பாகச் சந்தோஷிக்கிற எல்லாச் சந்தோஷத்துக்காகவும் நாங்கள் எந்த ஸ்தோத்திரத்தை உங்கள் நிமித்தியம் பராபரனுக்குச் செலுத்தலாம்.

௰ உங்கள் முகத்தைக் கண்டு உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்படியாக ராவும் பகலும் மிகவும் வேண்டுதல் செய்கிறோம்.

௰௧ ஆனாலும் நம்முடைய பிதாவாகிய பராபரனும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவுந்தாமே எங்கள் வழியை உங்களண்டைக்கு நேராக்கக்கடவார்.

௰௨ நாங்கள் உங்கள்மேலுள்ள சினேகத்திலே பெருகுமாப்போலே; கர்த்தர் உங்களையும்

அன்றியு

அன்னியவன்னியசினேகத்திலுமெல்லார்மேலுமுள
க்குச்சினேகத்திலுமரம்பவும்பெருகவும்பண்ணி,
௰௩ இந்தப்பிறகாரமாக, நம்முடைய கர்த்தராகிய யே
சுக்கிறிஸ்து * தம்முடைய பரிசுத்தவான்களனைவரோ
டுங்கூடவரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய
பராபரனுக்குமுன்பாக பரிசுத்தத்திலுக்குற்றமற்றிருக்
க, உங்கள் இருதயங்களைத் திடப்படுத்தக்கடவார். *
மத். ௨௫, ௩௧. யூதா. ௰௫. வசனம்,

## ௪. அதிகாரம்.

¶ பரிசுத்தத்திலுஞ்சகோதரசினேகத்திலும்
வளரப்புத்திசொன்னது.

குறைக்காரியமேதென்ன, சகோதரரே, நீங்களெ
ந்தப்பிறகாரமாக நடக்கவும் பராபரனுக்கேற்க
கவும் வேண்டியதென்கிறதை எங்களிடத்தில் ஏற்
புக்கொண்டபடியே * அதிகம் அதிகமாய்ப்பெருக உங்க
ளை கர்த்தராகிய யேசுவுக்குள் வேண்டிக்கொண்டு பு
த்திசொல்லுகிறோம். * எபே. ௪, ௰௫.
௨ ஏனென்றால் கர்த்தராகிய யேசுவினால உங்களுக்கெ
ந்தக்கற்பனைகளைக்கொடுத்தோமென்றறிவீர்கள்.
௩ ஏதென்றால், * நீங்கள் வேசித்தனத்துக்கு விலகியி
ருந்து, * ௧. கொ. ௬, ௰௮.
௪ உங்களில் அவனவன் தன் சரீரபாண்டத்தை, *
பராபரனை அறியாத அஞ்ஞானிகளைப்போல் இச்
சைரோகத்துக்குள்ளாகவல்ல, * எபே. ௪, ௰௭—௰௯.
௫ பரிசுத்தத்துக்குங்கனத்துக்குமுள்ளாக ஆண்டு,
௬ * தொழிலிலே தன் சகோதரனை ஏடுக்காமலும்
வஞ்சிக்காமலுமிருந்து, பரிசுத்தமாக்கிறதே பராபரனு
டைய சித்தமாயிருக்குது. ஏனென்றால் நாங்களுங்களுக்
குமுன்னே சொல்லிச்சாட்சியாயெச்சரித்தபடி
இதுகளெல்லாத்துக்குங்கர்த்தர் நீதியைச்சரிக்கட்டுகி
றவராயிருக்கிறார். * மத். ௭, ௰௨.
௭ அதேதென்னென்றால் பராபரன் நம்மை அசுத்தத்துக்க
ல்ல பரிசுத்தமாகுதலுக்கழைத்தார்.
௮ ஆகையினால் அசட்டைபண்ணுகிறவன் * மனுஷ
னையல்லத் தம்முடைய பரிசுத்த ஆவியைத் தானெங்களு
க்குக்கொடுத்த பராபரனை அசட்டைபண்ணுகிறான். *
லூ. ௰, ௰௬.
௯ சகோதரசினேகத்தைக்குறித்தோ உங்களுக்கெ
ழுத உங்களுக்குத்தேவையில்லை, ஏனென்றால் உங்களை
ஒருத்தரையொருத்தர் சினேகிக்க நீங்களே பராபரனாலே
உபதேசிக்கப்பட்டவர்களாயிருந்து,
௰ மக்கெதோனியாவெங்குமுள்ள எல்லாச்சகோ
தரருக்கும் அப்படிச்செய்கிறீர்கள். ஆனால், சகோதர
ரே, அதில் அதிகமாய்ப்பெருகவும்,
௰௧ * புறம்பேயிருக்கிறவர்களுக்கு நீங்கள் சீராய்
நடந்து, அவர்களிடத்தில் உங்களுக்கொன்றுந்தே
வையில்லாதிருப்பதற்காக, * கொலோ. ௪, ௫.
௰௨ * நாங்கள் உங்களுக்குக்கற்பித்தபடி அமர்ந்திரு
க்கநாடவும், உங்களுடைய வேலைகளைப்பார்த்து
உங்க

உங்களுடைய கைகளினாலே வேலை செய்யவும் உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம். * ௨. தெச. ௩, ௰—௰௨.

¶ மரித்தோர் திரும்ப எழுந்திருக்கும் ஒழுங்கும் அவர்களுக்கு நிலைப்பூட்டினது.

௰௩ ஆனால், சகோதரரே, நித்திரை அடைந்தவர்களினிமித்தியம் நீங்கள் * நம்பிக்கையிற்றுமிற்றவர்களைப்போலே துக்கத்து அறிவில்லாதிருக்கனக்கு மனதில்லை. * எபே. ௨, ௰௨.
௰௪ ஏனென்றால் யேசு மரித்துத் திரும்ப எழுந்திருந்ததென்று நாம் விசுவாசிக்கக்கொள்ள, யேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் பராபரன் அவரோடேகூட அந்தப் பிரகாரமாகக் கொண்டுபோவார்.
௰௫. ஏனெனில் கர்த்தருடைய வருகையிலே உயிரோடே மீதியான நாம் நித்திரை அடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லையென்று கர்த்தருடைய வார்த்தையாய் உங்களுக்குச் சொல்லுகிறோம்.
௰௬ அதேனென்றால் * கர்த்தர்தாமே ஆர்ப்பரிப்போடும் பிரதான தூதனின் சத்தத்தோடும் பராபரனுடைய ** எக்காளத்தோடும் வானத்திலிருந்திறங்குவார். அப்போ கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முந்தி எழுந்திருப்பார்கள். * மத். ௨௪, ௩௰. ௩௧. ** ௧. கொரி. ௰௫, ௫௧. ௫௨.
௰௭ பின்பாடு உயிரோடே மீதியான நாம் அவர்களோடுங்கூட ஏகமாய்க் கர்த்தருக்கு ஆகாசத்திலே எதிர்கொண்டுபோக, * மேகங்களிலெடுத்துக்கொள்ளப்பட்டு, எப்படியேயெப்போதும் ** கர்த்தருடனே கூடேயிருப்போம். * அப். ௧, ௯. ** யோவ. ௰௨, ௨௬. ௰௪, ௩. ௰௭, ௨௪.
௰௮ ஆகையால் உங்களை ஒன்றுக்கொன்று இந்த வார்த்தைகளால் தேற்றுங்கோள்.

## ௫. அதிகாரம்.

¶ கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாயிருக்க எச்சரித்தது.

ஆனால், சகோதரரே, காலங்களையும் வேளைகளையுங்குறித்து உங்களுக்கு எழுதப்படுவது உங்களுக்குத் தேவையில்லை.
௨ ஏனென்றால் * ராத்திரியிலே திருடன் வருகிற வண்ணமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிவீர்கள். * ௨. பேது. ௩, ௰.
௩ அதேதென்றால் அவர்கள் * சமாதானமென்றுஞ் சுகமென்றுஞ் சொல்லும்போது, அசுப்பிலே கெற்பவதியின்மேலே வேதனை வருகிறதுபோல அவர்களை அழிவு வந்து, தப்பமாட்டாதிருப்பார்கள். * மத். ௨௪, ௩௭—௩௯.
௪ நீங்களோ, சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடிக்க, அந்தகாரத்திலிருக்கிறவர்களல்ல.

௫

௫ நீங்களெல்லாரும் ✦ வெளிச்சத்தின் பிள்ளைகளும் பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள். நாம் ராத்திரிக்கும் அந்தகாரத்துக்கும் உள்ளானவர்களல்ல. ✦ எபே. ௫, ௮.

௬ ஆகையால் மற்றவர்களைப்போல நாம் நித்திரைபண்ணாமல், ✦ விழித்துக்கொண்டு தெளிந்திருக்கக்கடவோம். ✦ லூ. ௨௧, ௩௪—௩௬.

௭ ஏனென்றால் நித்திரைபண்ணுகிறவர்கள் ராத்திரியிலே நித்திரைபண்ணுகிறார்கள், வெறியாயிருக்கிறவர்கள் ராத்திரியிலே வெறியாயிருக்கிறார்கள்.

௮ ✦ பகலின் மனுஷராகிய நாமோவென்றால் தெளிந்திருந்து, விசுவாசத்தினேசமென்ற மார்க்கவசத்தையும் ரெட்சிப்பின் நம்பிக்கையென்ற தலைச்சேட்டையுந் தரித்துக்கொண்டிருக்கக்கடவோம். ✦ ஏசா. ௰௩, ௰௨—௰௪.

௯ ஏனென்றால் பராபரன் நம்மைக் கோபத்துக்கல்ல நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து மூலமாய் ரெட்சிப்பைத் தேடிக்கொள்ளுவதற்குக் குறித்தார்.

௰ ✦ நாம் விழித்திருந்தாலும் நித்திரையடைந்திருந்தாலும், தம்முடனேகூட ஏகமாய்ப் பிழைக்கிறதுக்கு அவர் நமக்காக மரித்தவர். ✦ ரோ. ௰௪, ௮, ௯.

௰௧ ஆகையால் நீங்கள் செய்துவருகிறதுபோல, ஒருத்தருக்கொருத்தர் புத்தி சொல்லி, ஒருத்தரையொருத்தர் ஊணக்கட்டுங்கோள்.

¶ பலவிதமான புத்திகள்.

௰௨ ஆனால், சகோதரரே, ✦ உங்களிடத்தில் பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களுக்கு முதலாளிகளாயிருந்து உங்களுக்குப் புத்தி சொல்லுகிறவர்களை நீங்கள் அறியவும், ✦ எபி. ௰௩, ௰௭.

௰௩ அவர்களின் கிரியையினிமித்தியமாக அவர்களைச் சிநேகத்திலே மிகுதியும் எண்ணவும் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளே சமாதானமாயிருங்கோள்.

௰௪ சகோதரரே, வரிசையற்றவர்களுக்குப் புத்தி சொல்லுங்கோள், திடனற்றவர்களைத் தேற்றரவுபண்ணுங்கோள், பெலயீனரைத் தாங்குங்கோள், எல்லாருக்கும் நீடசாந்தமாயிருங்கோளென்று உங்களை எச்சரிக்கிறோம்.

௰௫ ✦ ஒருத்தனும் யாதொருத்தனுக்குத் தின்மைக்குத் தின்மையைச் சரிக்கட்டாதே பாருங்கோள். எப்போது மொன்றுக்கொன்றும் எல்லாருக்காகவும் நன்மையைப் பின்தொடருங்கோள். ✦ ரோ. ௰௨, ௰௭.

௰௬ ✦ எப்போதுஞ் சந்தோஷமாயிருங்கோள். ✦ லூ. ௰, ௨௰.

௰௭ ✦ இடைவிடாமல் செபம்பண்ணுங்கோள். ✦ லூ. ௰௮, ௧.

௰௮ ✦ எல்லாத்திலும் ஸ்தோத்திரம் பண்ணுங்கோள், ஏனென்றால் கிறிஸ்து யேசுவுக்குள் உங்களைக்குறித்து பராபரனுடைய சித்தமாயிருக்குது. ✦ எபே. ௫, ௨௰.

௰௯ ஆவியை அவித்துப்போடாதேயுங்கோள்.

௨௰ தீர்க்கதரிசனங்களை அற்பமாயெண்ணாதேயுங்கோள்.

௨௧ * எல்லாத்தையுஞ் சோதித்துப்பார்த்து நலமானதைப் பிடித்திருங்கோள். * ௧. யோவ. ௪, ௧.

௨௨ பொல்லாப்பென்றுகாணப்படுகிற தெல்லாத்தையும் விலகியிருங்கோள்.

௨௩ சமாதானத்தினுடைய பராபரன்தானே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக, உங்கள் முழு ஆவியும் ஆத்துமமுஞ் சரீரமும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவருகையிலே குற்றமற்றதாயிருக்கக் காக்கப்படக்கடவது.

௨௪ உங்களை அழைக்கிறவர் * உண்மையுள்ளவர், அவர் அதைச் செய்கிறவருமாயிருப்பார். * ௧. கொ. ௧, ௯.

௨௫ சகோதரரே, எங்களுக்காகச் செபம்பண்ணுங்கோள்.

௨௬ எல்லாச் சகோதரரையும் பரிசுத்த முத்தத்தாலே வினவுங்கோள்.

௨௭ இந்த நிருபம் பரிசுத்த சகோதரர் அனைவருக்கும் வாசிக்கப்பட உங்களைக் கர்த்தர்மேலே ஆணையிடுகிறேன்.

௨௮ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருக்கக்கடவது, ஆமென்.

அத்தேனேப்பட்டணத்திலெழுதி, தெசலோனிக்கேயாருக்கனுப்பின முதலாம் நிருபம்.

---

# அப்போஸ்தலனாகிய பவுல்

## தெசலோனிக்கேயாருக்கெழுதின

# இரண்டாம் நிருபம்.

### ௧. அதிகாரம்.

¶ துன்பப்படுகிறநீதிமான்களுக்குத் தேற்றரவாகவெழுதினது.

பவுலுஞ் சில்வானுந் திமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய பராபரனுக்குள்ளுங் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவுக்குள்ளுமிருக்கிற தெசலோனிக்கேயாருடைய சபைக்கு எழுதுகிறதாவது:

௨ * நம்முடைய பிதாவாகிய பராபரனாலுங் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக்கடவது. * ௧. கொ. ௧, ௩.

௩ சகோதரரே, * நாங்கள் எப்போதும் உங்களுக்காக

காகப் பராபரனைத் தோத்திரிக்க வேண்டியது, அது ஞாயத்துக்கேத்திருக்குது, ஏனென்றால் உங்கள் விசுவாசம் மிகவும் வளருது, உங்களெல்லாரிலும் ஒவ்வொருவனுடைய சிநேகமும் ஒன்றுக்கொன்று பெருகுது. * ௧. தெச. ௧, ௩.

௪ ஆதலால் நீங்கள் சகிக்கிற உங்களுடைய துன்பங்களிலும் உபத்திரவங்களிலுமெல்லாம் உங்களுடைய பொறுமையினிமித்தியமும் விசுவாசத்தினிமித்தியமும் நாங்கள் தானே உங்களைக் குறித்துப் பராபரனுடைய சபைகளிலே மேன்மையாய்ப் பாராட்டுகிறோம்.

௫ * நீங்கள் பராபரனுடைய ராட்சியத்தின் நிமித்தியமாகப் பாடுமனுபவிக்கிறதினால் நீங்கள் அதுக்குப் பாத்திரவான்களாக எண்ணப்படுவீர்களென்கிற பராபரனுடைய நீதியான ஞாயத்தீர்ப்புக்குத் தாட்சியாயிருக்குது. * பிலி. ௧, ௨௮.

௬ ஏனென்றால், * கர்த்தராகிய யேசு தம்முடைய வல்லமையின் தூதரோடும் * சுவாலையாயெரியுமக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்பட்டு, * ௧. தெச. ௪, ௰௬. * * யெசா. ௬௬, ௰௫ ௰௬.

௭ பராபரனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியைச் சரிகட்டும்போது,

௮ உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்குத் துன்பத்தையும், * துன்பப்படுகிற உங்களுக்கு எங்களுடனேகூட இளைப்பாறுதலையும் அளிக்கிறது பராபரனிடத்திலே நீதியாயிருக்குது. * ௧. பேது. ௪, ௰௩.

௯ * கர்த்தர் வந்து தம்முடைய பரிசுத்தவான்களிலே மகிமைப்படவும், எல்லா விசுவாசிகளிலும் ஆச்சரியப்படத்தக்கவராகவும் வரும்போது, * கொலோ. ௩, ௪.

௰ அவர்கள் * அவருடைய சன்னதியினின்றும் அவருடைய பெலத்தின் மகிமையினின்றும் நித்திய அழிவாகிய ஆக்கினையை அடைவார்கள். உங்களிடத்திலோவென்றால் எங்கள் சாட்சி விசுவாசிக்கப்பட்டது. * யெச. ௨, ௰௯.

௰௧ ஆகையினாலே, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய நாமம் உங்களிலும், நீங்கள் அவரிலும் நம்முடைய பராபரனுங் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுதவிசெய்யுங் கிருபையின்படி மகிமைப்பட,

௰௨ நம்முடைய பராபரன் உங்களை அழைப்புக்குப் பாத்திரவான்களாக்கி, தயவினுடைய எல்லாத் தேமியத்தையும் விசுவாசத்தின் கிரியையையும் பெலனாய் நிறைவேற்றவேணுமென்று எப்போதும் உங்களுக்காகச் செபம் பண்ணுகிறோம்.

## ௨. அதிகாரம்.

¶ கிறிஸ்துவுக்கெதிராளியினுடைய வருகையை முன்னறிவித்தது.

ஆனால், சகோதரரே, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய வருகையையும், நாம் அவரண்டையிலே சேர்க்கப்படுவதையுங் குறித்து,

உ

௨ நீங்கள் கிறிஸ்துவினுடைய நாள் கிட்டியிருக்கி
றதென்கிறதாக, * ஒரு ஆவியினாலாகிலும் வார்த்தையினா
லாகிலும், எங்களிடத்திலிருந்து வந்ததென்கிற ஒரு நி
ருபத்தினாலாகிலும், உடனே அறிவு விட்டசையவுங்
கலங்கவும் வேண்டாமென்று உங்களை வேண்டிக்
கொள்ளுகிறோம். * க. யோவ. ௪, க.
௩ ஒருத்தனும் உங்களை எந்தவிதத்தினாலாகிலும் மோ
சம்போக்கவேண்டாம், ஏனெனில், * மருள் விழு
குதல் முந்திவந்து, * * கேட்டினுடைய மகனாகிய பாவத்
துரோமனுஷன் வெளியானாலொழிய அந்தநாள் வராது.
* க. தீமோ. ௪, க—௩. ௨. பேது. ௨, க—௩.
* * யோவ. ௰௭, ௰௨.
௪ அவன் எதிர்த்து நிற்கிறவனும், * தேவனல்ல
தும்கத்துவம் எண்ணப்பட்டதெல்லாத்துக்கும் மே
லாய் உயர்ந்து, பராபரனுடைய தேவாலயத்திலே
தேவனைப்போலே தானே உட்காருகிறவனுமாயி
ருந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிப்பவ
ன். * தானி. ௰௧, ௩௬.
௫ நான் இன்னம் உங்களிடத்திலிருக்கிறபோது இது
களை உங்களுக்குச் சொன்னேனென்று உங்களுக்கு ஞா
பகமாயிருக்கலில்லையோ.
௬ அவன் தன்து காலத்திலே வெளியாகப் பேபோ
அவனைத் தடுத்திருக்கிறதின்னதென்று அறிவீர்கள்.
௭ ஏனெனில் * அக்கிரமத்தினுடைய ர
க்சியம் நடந்தேறுகிறது. ஆனால் இப்போ தடுத்திருக்கிறவ
ன் மாத்திரம் முந்த நடுவிலிராமல் போகவேணும். *
௧. யோவ. ௨, ௰௮. ௰௯. ௪, ௩.
௮ அப்போ அக்கிரமக்காரன் வெளியாவான், அ
வனைக் கர்த்தர் * தம்முடைய வாயின் ஆவியினாலே போக்கிவி
ட்டு, தம்முடைய வருகையின் பிறசன்னத்தினால் நாசம்ப
ண்ணுவார். * யெச. ௰௧, ௪.
௯ அவனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி * எல்
லாப் பொய்யான வல்லமையுடையாளங்களும் அற்
புதங்களுடனேயும்; * மத். ௨௪, ௨௪.
௰ * கெட்டுப்போகிறவர்களிடத்திலே அநீதத்தினு
டைய எல்லாவித எத்துடனேயுமிருக்குது; அவர்க
ள் ரெட்சிக்கப்படுவதற்குச் சத்தியத்தின் சிநேகத்தை ஏற்
றுக்கொள்ளாதே போனதுக்கு வதினாகத்தானே
* ௨. கொ. ௪, ௩. ௪.
௰௧ இதுநிமித்தியமாக அவர்கள் பொய்யை விசுவா
சிக்கவும்,
௰௨ சத்தியத்தை விசுவாசியாமல் அநீதத்திலே பிரிய
மாயிருந்த அனைவரும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்
படவும், பராபரன் அவர்களுக்கு வலுமோசத்தை
அனுப்புவார்.
௰௩ ஆனால், கர்த்தராலே சிநேகிக்கப்பட்ட சகோத
ரரே, உங்களைப் பராபரன் ஆதிமுதலாய் ஆவியினுடை
ய பரிசுத்தமாக்குதலினாலும் சத்தியத்தின் விசுவாசத்தினா
லும் ரெட்சிப்புடையதற்குத் தெரிந்துகொண்டாரென்று,
நாங்கள் எப்போதும் உங்களுக்காகப் பராபரனை
ஸ்தோத்திரிக்கவேண்டியதாயிருக்குது.
௰௪ அதற்கவர் உங்களை, நீங்கள் நம்முடைய கர்த்த

ராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய மகிமையை யடையத் தங்கள் சுவிசேஷத்தினாலே அழைத்தார்.
௰௫ ஆனபடியினாலே, சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, எங்கள் வார்த்தையினாலாகிலும் நிருபத்தினாலாகிலும் நீங்கள் உபதேசிக்கப்பட்டு ஏற்பிடித்துக் கொண்ட தாயங்களைப் பிடித்திருங்கோள்.
௰௬ ஆனால் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துதாமும், * நம்மைச் சிநேகித்து நித்திய ஆறுதலையுங் கிருபையினாலுண்டான நல்ல நம்பிக்கையையுங் கொடுத்த நம்முடைய பிதாவாகிய பராபரனும், * யோவ. ௰௬, ௨௭.
௰௭ * உங்கள் இருதயங்களைத் தேற்றி, உங்களை எல்லா நல் வசனத்திலுங் கிரிகையிலும் திடப்படுத்தக் கடவார். * ௧. தெச. ௩, ௰௩.

## ௩. அதிகாரம்.

¶ சுவிசேஷத்தின் பிரபலியத்துக்காக வேண்டிக் கொள்ளச் சொல்லி, வேலை செய்யாமல் ஒழுங்கற்று நடக்கிறவர்களுக்குக் கற்பனை கொடுத்தது.

குறைக்காரியமென்னவென்றால், சகோதரரே, உங்களிடத்தில் நடக்கிறது போல், கர்த்தருடைய வசனம் * ஓடவும் மகிமைப்படவும், * மத். ௯, ௩௮.
௨ நாங்கள் அவ்க்குணமான பொல்லாமனுஷர்களுக்கு நீங்கி விடுவிக்கப்படவும், * எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கோள். ஏனென்றால் விசுவாசம் எல்லாருடையதுமல்ல. * கொலொ. ௪, ௩.
௩ கர்த்தரோவென்றால், * உண்மையுள்ளவர், அவர் உங்களைத் திடப்படுத்தி, பொல்லாங்கனுக்கு விலக்கிக் காப்பார். * ௧. கொ. ௰, ௰௩.
௪ ஆனால் நாங்கள் உங்களுக்குக் கற்பிக்கிறதுகளைச் செய்கிறீர்களென்றும், செய்வீர்களென்றும் உங்கள் பேரில் கர்த்தருக்குள் நம்பிக்கையாயிருக்கிறோம்.
௫ கர்த்தரோவென்றால் உங்கள் இருதயங்களைப் பராபரனைச் சிநேகத்துக்குங் கிறிஸ்துவின் பொறுமைக்கும் நேராக்கக்கடவார்.
௬ ஆனால், சகோதரரே, எங்களிடத்தில் ஒப்புக்கொண்ட போதனையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற சகோதரனை யெல்லாம் * விலக, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குக் கற்பிக்கிறோம். * ௧. கொ. ௫, ௰௧.
௭ ஏனென்றால் எங்களை எப்படிப் * பின்பற்ற வேண்டியதென்று நீங்களே அறிவீர்கள். ஏனென்றால் உங்களுக்குள்ளே நாங்கள் ஒழுங்கற்று நடவாமல், * ௧. கொ. ௪, ௰௬.
௮ ஒருத்தனுடைய அப்பத்தையும் இலவசமாகச் சாப்பிடாமல், * உங்களில் ஒருத்தனுக்கும் பாரமாயிராதபடிக்கு ராவும் பகலும் பிரயாசமும் வருத்தமுமாய் வேலை செய்து சாப்பிட்டோம். * ௧. தெச. ௨, ௯.
௯ * எங்களுக்கந்த அதிகாரமில்லை யென்கிறத்தினாலேயல்ல, நீங்கள் எங்களைப் பின்பற்றும்படிக்கு

உங்களுக்கு நாங்கள் எங்களையே மாதிரியாகத் தந்தோமே. * மத். ௰, ௰. ௧. கொ. ௯, ௰௪. ௰௫.

௰ ஒருத்தன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால், அவன் சாப்பிடவும் வேண்டாமென்கிறதை நாங்கள் உங்களிடத்திலிருக்கும்போது உங்களுக்குக் கற்பித்துமிருக்கிறோமே.

௰௧ ஏனென்றால் உங்களில் சிலர் வேலை ஒன்றுஞ் செய்யாமல், வீண் அலுவலாய் ஒழுங்கற்றுத் திரிகிறார்களென்று கேட்கிறோம்.

௰௨ இப்படிக்கொத்தவர்களோவெனில் * அமர்ந்திருந்து வேலை செய்து, தங்களுடைய அப்பத்தைச் சாப்பிட, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கற்பித்துப் புத்தி சொல்லுகிறோம். * ௧. தெச. ௪, ௰௧. ௰௨.

௰௩ நீங்களோ, சகோதரரே, * நன்மை செய்கிறதிலே சலிக்கரியாதேயுங்கோள். * கலா. ௬, ௯.

௰௪ ஒருத்தன் இந்த நிருபத்திலுள்ள எங்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படியாதே போனானேயாகில், அவனை நீங்கள் பார்த்து வைத்து, அவன் வெட்கும்படிக்கு அவனுடனே கலவாதிருந்து,

௰௫ * அவனைச் சத்துருவைப்போலும் எண்ணாமல், அவனைச் சகோதரனென்று அவனுக்குப் புத்தி சொல்லுங்கோள். * ௩. மோ. ௰௯, ௰௭.

௰௬ ஆனால் * சமாதானத்துடைய கர்த்தர் தாமே உங்களுக்கெப்போதுஞ் சகல விதத்திலுஞ் சமாதானத்தைத் தந்தருள்வார். கர்த்தர் உங்களெல்லாரோடுங்கூட இருப்பாராக. * ரோ. ௰௫, ௩௩.

௰௭ பவுலுவாகிய நான் * என் கையெழுத்தாய் வினவுதலை எழுதினேன், ஒவ்வொரு நிருபத்திலும் இதுவே அடையாளம்; இப்படி எழுதுகிறேன். * ௧. கொ. ௰௬, ௨௧.

௰௮ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபை உங்களெல்லாரோடுங்கூட இருக்கக்கடவது. ஆமென்.

அத்தேனே பட்டணத்திலே எழுதி, தெசலோனிக்கேயருக்கனுப்பின இரண்டாம் நிருபம்.

# அப்போஸ்தலனாகிய

# பவுல்

## தீமோத்தேயுவுக்கெழுதின

# முதலாம் நிருபம்.

### க. அதிகாரம்.

ஞாயப்பிரமாணத்தின் போக்கத்தை ஞாயப்பி
ரகாரமாய் வழங்காதவர்களுக்காகப்
பவுல் கற்பிக்கிறது, சுவிசேஷத்தின்
மகிமையைத் தன் திருஷ்டாந்தத்தி
னாலே காண்பித்தது.

க நம்முடைய ரட்சகராயிருக்கிற பராபரனும், * நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவும் * * கட்டளையிட்டபடியே யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், * கொலோ. க, உஎ. அப. கூ, யரு.

உ விசுவாசத்திலே * உத்தம குமாரனாகிய * * தீமோத்தேயுவுக்கு நம்முடைய பிதாவாகிய பராபரனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து யேசுவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாக வாழ்த்துகிறேன். * க கொ. சு, யஎ. அப்போ. யசு, க.

ங வேற்றுமையுபதேசம் பண்ணவேண்டாமென்றும், * கட்டுக்கதைகளையும் விசுவாசத்திலுள்ள தேயவீகளாக்கட்டுதலைப் பார்க்கத் தர்க்கங்களையுண்டாக்கிற முடிவில்லாத வம்ச அட்டவணைகளையுங் கவனித்திருக்கவேண்டாமென்றும், * சு, எ.

ச நீ சிலருக்குக் கற்பிக்கத்தக்கதாக, உன்னை * நான் மக்கெதோனியாவுக்குப் போறபோது, எபேசு பட்டணத்திலிருக்கவேண்டிக்கொண்டதுபோலே, நீயிருந்துகொள், * அப்போ. உய, க.

ரு கற்பனையினுடைய பலனென்னவெனில் சுத்த இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் * சிநேகந்தான். * ரோ. யங, அ—ய.

சு இதுகளைச் சிலர் விலக்கித் தப்பி, வீண் வாசனிப்புக்குச் சாய்ந்து,

எ தாங்கள் சொல்லுகிறதின்னதென்றாவது திடப்படுத்துகிறதின்னதென்றும் அறியாதிருந்தும், ஞாயப்பிரமாணப்போதகராயிருக்க மனதாயிருக்கிறார்கள்.

அ ஞாயப்பிரமாணமோவென்னில் * நீதிமானுக்கல்ல, அக்கிரமக்காரருக்கும் அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும் பாவிகளுக்கும், துன்மார்க்கருக்குந் துஷ்டருக்கும், தாய்தகப்பனை வதைக்காரருக்குங் கொலைபாதகருக்கும், * கலா. ரு, யஅ. உஉ, உங.

கூ வேசிக்கள்ளருக்கும் ஆணுப்புணர்ச்சிக்காரருக்கும், * சிறைக்காரருக்கும் பொய்யருக்கும் பொய்யாணைக்காரருக்கும்,

ய என்னம்பிக்கைக்கொப்பிவிக்கப்பட்ட பாக்கியமுள்ள பராபரனுடைய மகிமையான சுவிசேஷத்தின

படி

டாயிருக்கிற சுரோக்கிய உபதேசத்துக்கு வேறேதே
துவிரோதிகளுமாயிருக்கிறவைக்கப்பட்டதாயிரு
க்குதென்றறிந்து,
௰௧ அந்த * தாயப்பிரகாரமாயவருமங்கிற தாயப
பிரமாணம் நல்லதென்றறிவோம். * ரோ. ௭, ௨௰.
௰௨ * முந்தூஷணக்காரனுந்துன்பப்படுத்துகிறவனு
மந்நிந்திக்கிறவனுமாயிருந்தவனை பலப்படுத்தின நம
முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து என்னை உண்மையுள
ளவனென்றெண்ணியூழியத்திலே வைத்தபடியால் அ
வரைத்தோத்திரிக்கிறேன். * அப். அ. ௩. ௬, ௯. ௨.
௰௩ நான் அறியாமல் அவிசுவாசத்திலே அதைச்செ
ய்தபடியினாலே இரக்கம்பெற்றேன்
௰௪ நம்முடைய கர்த்தருடைய கிருபையோவெனில,
அத்துடனே விசுவாசமுங்கிறிஸ்து யேசுவைச் சேர்ந்த
அன்பும் பெருகிற்று.
௰௫ * பாவிகளை ரட்சிக்கக்கிறிஸ்து யேசு லோக
த்திலேவந்தாரென்கிறது உண்மையும் எல்லா அங்கீ
கரிப்புக்கும் பாத்திரமுமான வார்த்தை, அவர்களிலே நா
ன் பிரதானமானவன். * மத். ௯, ௰௩. லூ. ௰௯. ௰.
௰௬ ஆனாலும் நித்தியஜீவனுக்கென்று யேசுகிறிஸ்துவை
விசுவாசிக்கப்போகிறவர்களுக்கு திருஷ்
டாந்தமுண்டாக, பாவிகளில் பிரதானபாவியாகிய என்
னிடத்திலே தீர்க்கசாந்தத்தை எல்லாம் காண்
பிக்கும்படிக்கு இரக்கம்பெற்றேன்.
௰௭ அநாதிகாலங்களுடைய ராசாவாகிய அழி
வில்லாத, அதரிசியமான, * ஒருத்தராய் ஞான முள
ள பராபரனுக்கு என்றென்றைக்கும் எல்லாக்காலங்
களிலுங்கனமும் மகிமையும் உண்டாவதாக, ஆமென். *
ரோ. ௰௬. ௨௭.
௰௮ குமாரனாகிய தீமோத்தேயுவே, உன்பேரிலே மு
ன்னுண்டான தீர்க்கதரிசனங்களின்படியே நான் உ
னக்கு. நீ அதுகளுக்கொத்ததாய் * நல்லபோராட்டம்
போராடி, * * விசுவாசத்தையும் நல்மனச்சாட்சியை
யுமுள்ளவனாயிருக்கும்படிக்கு இந்தக்கட்டளையை உனக்கு ஒப்பு
விக்கிறேன். * ௬, ௰௨. * * ௩, ௯.
௰௯ அதைச்சிலர் தள்ளிவிட்டு, விசுவாசக்கப்பலைச்சே
தப்படுத்தினார்கள்.
௨௰ இமெனேயும் அலெக்சாந்தரும் அப்படிச்சேர்ந்த
வர்கள், அவர்கள் தூஷணியாதபடிக்குச் சிட்சிக்கப்பட, அவர்களை * சாத்தானுக்கு ஒப்புக்
கொடுத்தேன். * ௧. கொ. ௫, ௫.

## ௨. அதிகாரம்.

௧ எல்லாருக்காகவும் வேண்டுதல் செய்யவும்,
சபையிலே புருஷர் செபம்பண்ணி, பெண்
சாதிகள் அமைந்து நல்லமரியாதையாயிருக்க
வும் புத்திசொன்னது.

இப்போதும் நாம் எல்லாத தேவபக்தியிலும் லோக
ஞானத்திலும் அமரிக்கையும் அமைதலுமான ஜீவனம்பண்ணும்படிக்கு,
௨ எல்லா மனுஷருக்காகவும், * ராசாக்களுக்கா
கவும்

கவும மேனமையுளள அனைவருககாகவும விண ணபபஙகளுஞசெபஙகளுமவேணடுதலகளுமஸ்த தோததிரஙகளுஞசெயயபபட, எலலாததுககு முநதி பபுததிசொலலுகிறேன. * யெரே. ௨௯, ௭.

௩ ஏனெனில * எலலாமனுஷருமரெட்சிககபப டடு, சததியததின அறிவுககுவரசசித்தமுளளவராயி ருககிறார, * ௨. பேது. ௩, ௯. எசே. ௰௮, ௨௩.

௪ நமமுடையரெட்சகராகியபராபரனுககுமுனபாக அதுநனமையுமஅஙகீகரிபபுமானது.

௫ ஏனெனில * ஒரேபராபரனும, பராபரனுககும மனுஷருககுமஒரேமததியஸதனுமுணடு, அவர * * எலலாருககாகவுநதமமைமீட்குமபொருளாக ஒ பபுககொடுததமனுஷனாஙகிறிஸததுயேசுதானே. * யோ. ௰௭, ௩. * * க. யோவ ௨, ௨.

௬ இதுஏறறகாலஙகளிலவிளஙகுஞசாட்சியாயி ருககுது.

௭ இதுககுநானபிரசஙகியாகவும அபபோஸததல னாகவும, புறசசாதிகளுககுவிசுவாசமுமஉணமையு மவிளஙகிவிககிறபோதகனாகவுமஏவககபபட்டிருக ககிறேன, நானபொயசொலலாமல, கிறிஸததுவுக குளஉணமையைசொலலுகிறேன.

௮ ஆகையாலபுருஷர எலலாததலததிலுஙகோ பமுஞசநதேகமுமிலலாமலபரிசுததகைகளைஏறெ டுததுசசெபமபணணவும,

௯ அபபடியேபெணசாதிகளுமலஜஜையானவஸததிர ததால * நாணததோடுமமரியாதையோடுநதஙகளை அலஙகரிதது, பினனலமயிரபொனமுததுகளஉயர விலையுடுபபினாலுமலல, * க. பேது. ௩; ௩. ௪.

௰ தேவபததியைபபாராட்டுகிறபெணசாதிகளு ககேறககுமபடியேநறகிரிகைகளாலதஙகளை அ லஙகரிககவுமவேணடுமெனறிருககிறேன.

௰௧ பெணசாதி அமைநதுபிறகாரமாகஎலலாககீ ழபபடியுதலோடுஙகறறுககொளளககடவாள.

௰௨ அனறி * உபதேசிககவும அலலது * * புருஷனை யாளவுமபெணசாதிககுநானஉததாரஙகொடாமல, அவளஅமைநதிருககவேணடுமெனகிறேன. * க. கொ. ௰௪, ௩௪. * * க. மோ. ௩, ௰௬.

௰௩ ஏனெனில ஆதாமமுநதிஉருவாககபபட்டான, பிறபாடுஏவாளஉருவாககபபட்டாள.

௰௪ ஆதாமஏததபபடாமல, பெணசாதியேஏத தபபட்டுமீறுதலுககுளளபபட்டாள.

௰௫ விசுவாசததிலுஞசிநேகததிலுமபரிசுததமாகுத லிலுமமரியாதையோடேகூட நிலைகொணடிருந தாரகளையானால, பிளளைபபெறுதலிலேரெட்சிகக பபடுவாள.

## ௩. அதிகாரம,

¶ கணகாணிகளிடததிலுமஊழியககாரரிடததிலுமி ருககவேணடியலெட்சணஙகளைககாணபிததது.

௧ ஒருததனகணகாணிபபைவிருமபினால, நலலவேலை யை

யை விரும்புகிறான் என்கிறது உண்மையான வார்த்தை.

௨ * கண்காணியோவெனில் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே பெண்சாதியின் புருஷனும், முழித்திருக்கிறவனுஞ் சொஸ்த புத்திமானும் ஒலக்கணனும், பரதேசிகள் சினேகிதனும் போதகசமர்த்தனுமாயிருந்து, * தீத்து ௧. ௬—௯ ௧ பேது. ௫, ௧—௩.

௩ மதுபானப்பிரியனாய் வெட்டன் வெக்காறனாய் லச்சையான ஆதாயக்காறனுமாயிராமல், சாந்தனும் * சண்டை பண்ணாதவனும் பண ஆசையற்றவனும், * ௨. தீமோ. ௨, ௨௪.

௪ தன் சொந்த வீட்டுக்கு நல்முதலாளியும், பிள்ளைகளை எல்லாச் சீரோடுங் கீழ்ப்படியப்பண்ணிக் கொண்டவனுமாயிருக்க வேண்டியது.

௫ ஒருத்தன் தன் சொந்த வீட்டுக்கு முதலாளியாயிருக்க அறியாதிருந்தானேயாகில், பராபரனுடைய சபையை எப்படி விசாரிப்பான.

௬ அவன் உப்பிப்போய், பிசாசு விழுந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, புதியவனாயிருக்கவும் வேண்டாம்.

௭ அவன் நிந்தனையிலும் பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்குப் புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனுமாயிருக்க வேணும்.

௮ அந்தப்படியே ஊழியக்காறரும் நேர்நாக்குள்ளவர்கள் மதுபானப்பிரியர் லச்சையான ஆதாயக்காறருமாயிராமல், சன்மார்க்கரும்,

௯ விசுவாசத்தின் ரகசியத்தைச் சுத்தமனச்சாட்சியிலே அடைந்து காக்கிறவர்களுமாயிருக்க வேண்டியது. * ௧. ௰௮.

௰ ஆனால் இவர்களும் முன்சோதிக்கப்பட்டு, குற்றஞ்சாட்டில்லாதவர்களாயிருந்தால், பிறபாடு ஊழியஞ்செய்யட்டும்.

௰௧ அந்தப்படியே ஸ்திரீகளுஞ் சன்மார்க்கரும், * நிபச்சொற்காறிகளல்லாதவர்களும், முழித்திருக்கிறவர்களும் எல்லாத்திலும் உண்மையுள்ளவர்களுமாயிருக்க வேண்டியது. * தீத்து ௨, ௩.

௰௨ ஊழியக்காறர் ஒரே பெண்சாதியின் புருஷருமாய்ப் பிள்ளைகளுக்குஞ் சொந்த வீடுகளுக்கும் நல்முதலாளிகளுமாயிருக்கக்கடவார்கள்.

௰௩ ஏனென்றால் நன்றாய் ஊழியஞ் செய்கிறவர்கள் தங்களுக்கு * நல்ல படியேற்றத்தையும், கிறிஸ்து யேசுவின் மேலுள்ள விசுவாசத்தில் வெகுதயிரியத்தையுஞ் சம்பாதிக்கிறார்கள். * மத். ௰௩, ௰௨. ௨௫, ௨௯.

௰௪ நான் உன்னிடத்துக்குச் சீக்கிரமாய் வருவேனென்று நம்பியிருக்கிறேன்.

௰௫ தாமதித்தேனேயானால், சீவனுள்ள பராபரனுடைய சபையுஞ் சத்தியத்தின் தூணும் அஸ்திவாரமுமாகிய பராபரனுடைய வீட்டிலே எப்படி நடக்க வேண்டியதென்றறியும்படிக்கு, இதுகளை உனக்கெழுதுகிறேன்.

௰௬ * பராபரன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதிவிளங்கப்பட்டார், தூதருக்குத் தெரிசனையானார், சாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், லோ

கத்தி

க்கலே விசுவாசிக்கப்பட்டார், * * மகிமையிலே ஏறெ
டுத்துக் கொள்ளப்பட்டார் என்கிற தேவபத்தியின் ரக
சியம் விளங்கும்பிறகாரமாகப் பெரியதாயிருக்குது. *
யோவ. ௧, ௧. ௰௪. * * மாற்கு ௰௬, ௰௯.

## ௪. அதிகாரம்.

௧ கிறிஸ்துவுக்கெதிராளியினுடைய கள்ளப்போத
கத்தைக் குறித்தும், நல்ல போதகனு
க்குப்பதற்கான புத்திகளைத் திமொ
த்தேயுவுக்கெழுதினதும்.

ஆ ஞல் விவாகம் பண்ணாதிருக்கவும், விசுவாசிகளு
க்குச் சத்தியத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரப்பு
டனே * வாங்கிக்கொள்ளுவதற்குப் பராபரன் சிருஷ்டித்
தின போசனங்களுக்கு விலகியிருக்கவுங் கற்பித்து, *
௧. மொ. ௯, ௩.

௨ தங்களாசுயமனச்சாட்சியிலே சூடுண்டவர்களா
ன பொய்வசனக்காறர் பண்ணும் மாயத்தினாலே,

௩ * கடையாந்திர காலங்களிலே சிலர் மோசம் போ
க்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் போதகங்களுக்கும்
செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டுமறு விழுவா
ர்களென்று ஆவியானவர் வெளியொருளாய் சொ
ல்லுகிறார். * ௨. தெச. ௨, ௩ — ௰௨. தானி. ௭, ௨௫.
௰௧, ௩௬. ௩௭.

௪ * பராபரன் சிருஷ்டித்தயாவுமநல்லதே, ஸ்த
தோத்திரப்பட்டனே வாங்கிக்கொள்ளப்படுகிறதொன்
றுந்தள்ளுபடியானதல்ல. * ௧. மொ. ௧, ௩௧. மத்.
௰௫, ௰௧. தீத்து ௧; ௰௫.

௫ ஏனென்றால் அது பராபரனுடைய வசனத்தினாலுஞ்
செபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.

௬ நீ இவைகளைச் சகோதரருக்குச் சொல்லி வந்தால் நீ
விசுவாசத்தின் வார்த்தைகளிலும் நீ பின்சென்ற நற்
போதகத்தின் வார்த்தைகளிலும் * வளர்ந்தவனாயிருந்
து, யேசுகிறிஸ்துவினுடைய நல்ல ஊழியக்காற
னாயிருப்பாய். * ௨. திமொ. ௩, ௰௫.

௭ ஆனால் * சீர்கேடுங் கிழவிகளாய் பேசுமான கட்டு
க்கதைகளை நீ வேண்டாமென்று தள்ளி, தேவப
த்தியைப்பற்றியாசித்துக் கொண்டிரு. * ௬, ௨௰. ௨.
திமொ. ௨, ௰௬ ௨௩. தீத்து. ௧, ௰௪. ௩, ௯.

௮ ஏனென்றால் * சரீர அப்பியாசம் அற்பப்பிறயோ
யோசனமாயிருக்குது, * * தேவபத்தியோவென்று
ல்லாக்காரியத்துக்கும் பிரயோசனமாயிருந்து இச்சீவ
னுக்கும் வருஞ்சீவனுக்குமான வாக்குத்தத்தம் பெற்றிருக்
குது. * கொலோ. ௨. ௨௩. * * ௬, ௬

௯ இந்த * வசனமுமெல்லா அங்கீகரிப்புக்கு
பாத்திரமுமான வார்த்தை. * ௧, ௰௫.

௰ இதுக்கென்றே வேலையுஞ் செய்கிறோம் நிந்தை
யும் அடைகிறோம். ஏனென்றால் * எல்லா மனுஷருக்
கும், * * விசேஷமாக விசுவாசிகளுக்கும் ரட்சகராகி
ய சீவனுள்ள பராபரன் மேலே நம்பிக்கையை வைத்
தோம். * ௨, ௩ — ௫. * * எபே. ௫, ௨௩.

௰௧ இதுகளைக் கற்பித்துப் போதித்துக் கொண்டிரு.
௰௨ • ஒருத்தனும் உன் இளமையைக் கண்யீனம் பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும் நடக்கையிலும் சிநேகத்திலும் ஆவியிலும் விசுவாசத்திலும் கற்பிலும் விசுவாசிகளுக்கு •• மாதிரியாயிரு. • தீத்து. ௨, ௰௫. • • ௧. பேது. ௫, ௩.
௰௩ நான் வருமளவாக • படிப்பிலும் புத்திசொல்லுதலிலும் உபதேசிக்குதலிலும் நிலையாயிரு. • யோவ. ௫, ௩௯.
௰௪ மூப்பரானவர்கள் உன்மேல் கைகளை வைத்ததுக்கொட்டே உண்டாகிற தீர்க்கதரிசனத்தால் கொடுக்கப்பட்டிருக்கிற உன்னிலுள்ள வரத்துக்கு அசதியாயிராதே. • ௨. தீமோ. ௧, ௬.
௰௫ எல்லாத்திலும் உன்னுடைய தேறுதல் வெளியரங்கமாயிருக்கும்படிக்கு, இதுகளையே சிந்தித்து இதுகளிலே நிலைத்திரு.
௰௬ உன்மேலும் உபதேசத்தின்மேலும் கவனிப்பாயிரு, இதுகளிலே நிலைகொண்டிரு, ஏனென்றால் இப்படிச் செய்தாயானால், உன்னையும் உன்னுடைய கேட்கிறவர்களையும் ரட்சித்துக்கொள்ளுவாய்.

## ௫. அதிகாரம்.

¶ சபையிலே பெரியசிறியவர்களையும் விதவைகளையும் மூப்பரையும் மூப்பராக்கவைக்கிறவர்களையும் நடத்தவேண்டிய முறைமைகள்.

முதிர்வயதானவனைக் கடிந்துகொள்ளாமல், அவனுக்குத் தகப்பனுக்குச் சொல்லுகிறதுபோலவும், வாலிபருக்குச் சகோதரருக்குச் சொல்லுகிறதுபோலவும், • ௩. மோ. ௰௯, ௩௨.
௨ முதிர்ந்த ஸ்திரீகளுக்குத் தாய்களுக்குச் சொல்லுகிறதுபோலவும், இளவயதுக்காரிகளுக்கு எல்லாக் கற்போடும், சகோதரிகளுக்குச் சொல்லுகிறதுபோலவும் புத்திசொல்லு. • யோவ. ௰௯, ௨௭.
௩ உத்தமவிதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு.
௪ ஆனாலொரு விதவைக்குப் பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகளிருந்தால், இவர்கள் முந்தித் தங்களுடைய வீட்டாருக்குப் பக்திகாண்பித்து, • மூதாக்களுக்கு வதிலான நன்றிகளைச் செய்யப் பழகட்டும், ஏனென்றால் இது நன்மையும் பராபரனுக்கு முன்பாக அங்கீகரிப்புமானது. • எபே. ௬, ௧—௩.
௫ தனித்திருக்கிற உத்தமவிதவையோவென்றால் பராபரனை நம்பி, • இரவும் பகலும் வேண்டுதல்களிலும் செபங்களிலும் தரித்திருக்கிறாள். • லூக். ௨, ௩௭. ௰௮, ௧.
௬ மோகவிகாரியோ • உயிரோடே செத்தவள். • வெளி. ௩, ௧. யாக். ௫, ௫. மத். ௮, ௨௨.
௭ அவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படிக்கு • இப்படிக் கற்பி. • ௪, ௰௧.

௮ ஆனால் ஒருத்தன் தன்னுடையவர்களையும், விசேஷமாய்த் தன் வீட்டாரையும் பிராமரியாதே போனால், அவன் * விசுவாசத்தை மறுதலித்தவன், அவிசுவாசியிலுங் கெட்டவன். * ௨. திமோ. ௩, ௫. தீத்து. ௧, ௰௬.

௯ ஒரே புருஷனுக்குப் பெண்சாதியாயிருந்தவளும், அறுபது வயதுக்குக் கீழ்த்தரமில்லாதவளும்,

௰ பிள்ளைகளை வளர்த்தாள், பரதேசிகளை ஆதரித்தாள், பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவினாள், உபத்திரவப்படுகிறவர்களுக்குத் தவியானாள், நற்கிரியைகளையெல்லாம் பின்பற்றினாளென்று நற்கிரியைக்காகியநற்சாட்சிபெற்றவளுமான வேதனவையே தெரிந்துகொள்ளப்படட்டும்.

௰௧ ஆனால் இளவயது வேதனவைகளை வேண்டாமென்றுவிலக்கு, ஏனென்றால் அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய் மோகவிகாரங் கொண்டால், விவாகம்பண்ண மனதாகி,

௰௨ முந்தின விசுவாசத்தைத் தள்ளின குற்றஞ்சுமந்திருக்கிறார்கள்.

௰௩ அதுவுந்தவிர, சோம்பலாய் வீடுவீடாய்த் * திரியப் பழகுகிறார்கள், ஆனாலவர்கள் சோம்பலாளிகளாய் மாத்திரமல்ல, அலப்பிகளும் அடாதகாரியங்களைப் பேசுகிறவீண் அலுவல்காரிகளுமாயிருக்கிறார்கள். * வாசக. ௭, ௰௯.

௰௪ ஆனபடியினாலே இளவயதுவேதனவைகள் * விவாகம்பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டையாளவும், ** விரோதக்காரனுக்கு அவசவுக்கிடமுண்டாக்காதிருக்கவும் வேணுமென்றிருக்கிறேன். * ௧. கொ. ௭, ௯. ** தீத்து. ௨, ௭.

௰௫ ஏனென்றால் அப்போதே சிலர் சாத்தானைப் பிறகே சாய்ந்துபோனார்கள்.

௰௬ விசுவாசியாகிய ஒருத்தனுக்கு, அல்லது ஒருத்திக்கு வேதனவைகளிருந்தால், அவர்கள் அவர்களுக்குப் போர்ந்த உதவிசெய்யக்கடவார்கள், சபையானது உத்தம வேதனவைகளுக்குப் போர்ந்த உதவியாயிருப்பதற்காக அந்தப் பாரமற்றிருக்கவேணும்.

௰௭ * நல்முதலாளிகளானமூப்பர்கள், விசேஷமாக வசனத்திலும் உபதேசத்திலும் வேலையாயிருக்கிறவர்கள் ரெட்டிப்பான கனத்துக்குப் பாத்திரராக எண்ணப்படக்கடவார்கள். * ௧. தெச. ௫, ௰௨. ௰௩.

௰௮ ஏனென்றால், போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாகாதென்றும், ** வேலையாளுதன் கூலிக்குப் பாத்திரவானென்றும் வேதமெழுதிச்சொல்லுது. * ௫. மோ. ௨௫, ௪. ௧. கொ. ௯, ௯. ** லூக. ௰, ௭.

௰௯ * இரண்டு மூன்று சாட்சிகளிருந்தாலொழிய ஒரு மூப்பனுக்குவிரோதமாகக் குற்றச்சாட்டலை ஏற்றுக்கொள்ளாதே. * ௫. மோ. ௰௯, ௰௫.

௨௰ பாவஞ்செய்கிறவர்களை, மற்றவர்களுக்கும் பயமுண்டாக, எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்.

௨௰௧ நீ பாரபட்சமாய் ஒன்றுஞ்செய்யாமல், மனதுக்குப்பிடிப்பான தோற்றுதலின்றியே இதுகளைக் காத்துநடக்க, * பராபரனுக்குங் கர்த்தராகிய யேசுக்

கிறிஸ

கிறிஸ்துவுக்கும், தெரிந்துகொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாகத் திடச்சாட்சியாயெச்சரிக்கிறேன். * ௨. தீமோ. ௪, ௧. ௨.

௨௨ * கைகளைச் சீக்கிரமாய் ஒருத்தன்மேலும் வைக்காதே, அன்னியபாவங்களுக்குப் பங்காளனுமாகாதே, உன்னைக் கற்புள்ளவனுக்கக்கார். * ௪, ௰௪. அப். ௬, ௬. ௰௩, ௩.

௨௩ நீ இனித் தண்ணீர் குடிச்சுக்கொண்டேயிராமல், உன் வயிற்றுக்காகவும் உனக்கடிக்கடி வருகிற பெலயீனங்களுக்காகவுங் கொஞ்சந் திராட்சப்பழரசங் கூட்டு.

௨௪ சில மனுஷருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, குத்தத்துக்கு முந்திக்கொள்ளும், ஆனாலுஞ்சிலரை அதுகள் பின்செல்லுகிறதுமாயிருக்குது.

௨௫ இந்தப்பிரகாரமாகவுஞ் சிலருடைய நற்கிரியைகள் வெளியரங்கமாயிருக்குது, அப்படியிராததுகளு மொளிக்கப்படக்கூடாது.

## ௬. அதிகாரம்.

¶ வேலைகாறரையும், வேற்றுமைப்போதகரையும் பொருளாசைக்காரர் ஐசுவரியவான்களையுங்குறித்துப் புத்திமதிகளைச் சொல்லி, தீமோத்தேயுவைத் தேவவழியாக ஈனுக்கேர்த்த உன்னைக் கேட்டுப் பிணது.

நுகத்தடிக்குக் கீழான வேலைகாறர் யாவரும் பராபரனுடைய நாமமும் உபதேசமுந் தூஷிக்கப்படாதபடிக்குத் தங்களுடைய எசமானர்களை எல்லாக்கனத்துக்கும் பாத்திரவான்களாக எண்ணக்கடவார்கள். * எபே. ௬, ௫—௮. கொலோ. ௩, ௨௨—௨௫. தீத்து. ௨, ௯. ௧. பேது. ௨, ௰௮.

௨ ஆனாலவர்களுக்கு விசுவாசிகளான எசமான்களுண்டோ, அவர்கள் அவர்களுக்குச் சகோதரராயிருக்கிறத்தினால் அசட்டைபண்ணாமல், விசுவாசிகளும் பிரியருமானவர்கள் நல்ல வேலையை அனுபாயரித்துக்கொள்ளுகிறவர்களுமாயிருக்கிறத்தினால் அதிகமாய்ச் சேவிக்கக்கடவார்கள். இப்படிப் போதித்துப் புத்திசொல்லு.

௩ ஒருத்தன் நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய ஆரோக்கியமான வசனங்களுக்குந் தேவபத்திக்கேர்த்த உபதேசத்துக்குஞ் சேர்ந்துவராமல், * வேற்றுமைப்போதகம்பண்ணினால், * ௧, ௩.

௪ அவனொன்றுமறியாமல், * உப்பிப்போனவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையுந் தேடு நோய்கொண்டவனுமாயிருக்கிறான், அதுகளால் பொறாமையுஞ் சண்டையுந் தூஷணங்களும் பொல்லா அசுங்கைகளும், * ௪, ௭.

௫ தேவபத்தியை * ஆதாயத்தொழிலென்றெண்ணுகிற சிந்தைகெட்டவர்களுஞ் சத்தியமற்றவர்களுமான மனுஷரின் வீணதர்க்கப்போதகங்களுமாயிருக்குது. அப்படிக்கொத்தவர்களை விலகு. * தீத்து. ௧, ௰௧.

௬ * போதுமென்ற மனதுடனே கூடிய * * தேவ

பத்தி

பத்தியே பெரிய ஆதாயம். * வாக். ௰௫, ௰௬. எபி. ௰௩, ௫. ** ௪, ௮.

௭ ஏனென்றால் நாம் ஒன்றும் லோகத்தில் கொண்டுவரவில்லை, நாம் அதிலிருந்து ஏதாகிலுங் கொண்டுபோகவுங் கூடாதென்கிறது வெளியரங்கமாயிருக்குது. * யோபு. ௧, ௨௧. சங். ௪௯, ௰௭. ப்ரச. ௫, ௰௪.

௮ * உண்ணவும் உடுக்கவும் நமக்கிருந்துதேயானால், அதுபோதுமென்றிருக்கக்கடவோம். * ௧. மோ. ௨௮, ௨௰. வாக்கி. ௩௰, ௮.

௯ ஆனால் * ஐசுவரியவான்களாகவேணுமென்றிருக்கிறவர்கள் சோதனையிலுங் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிறமதிகேட்டுஞ் சேதமுமான வெகு இச்சைகளிலும் விழுகிறார்கள். * வாக்கி. ௨௮, ௨௰. மத். ௰௩, ௨௨. யாக். ௰௨, ௨௰. ௨௧.

௰ ஏனென்றால் பணவாசை எல்லாத்துன்மைகளுக்கும் வேராயிருக்குது, அதைச் சிலர் இச்சித்து, விசுவாசத்தை விட்டு மோசம்போய், தங்களை வெகு வேதனைகளால் உருவக்குத்தியிருக்கிறார்கள்.

௰௧ நீயோ, பராபரனுடைய மனுஷனே, இதுகளை விலக்கிவிட்டு, * நீதியையுந் தெய்வபத்தியையும் விசுவாசத்தையுஞ் சிநேகத்தையும் பொறுமையையும் மெத்தனவையும் பின்தொடர்ந்துபோ. * ௨. தீமோ. ௨, ௨௨.

௰௨ * விசுவாசத்தின் நற்போராட்டத்தைப் போராடு, நித்தியசீவனைப் பற்றிக்கொள், அதுக்கு நீ அழைக்கப்பட்டவனும் அநேகஞ் சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கையை அறிக்கைபண்ணினவனுமாமே. * ௧. கொ. ௯, ௨௫. ௨௬. ௨. தீமோ. ௪, ௭. ௮.

௰௩ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினுடைய பிரசன்னமாகுதல் மட்டும் * நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலுங் குற்றஞ்சாட்டில்லாமலுங் கைக்கொள்ள, * ௫, ௨௧.

௰௪ * எல்லாத்தையும் உயிர்ப்பிக்கிற பராபரனுக்கு முன்பாகவும் ** பொந்தியுப்பிலாத்துவின் முன்னால் நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறீஸ்துயேசுவுக்கு முன்பாகவும் உனக்குக் கற்பிக்கிறேன். * ௫. மோ. ௩௨, ௩௯. ** மத். ௨௭, ௰௧. யோவ. ௰௮. ௩௬. ௩௭.

௰௫ அந்தப்பிரசன்னமாகுதலை ஒருத்தராய் சாகாமையுள்ளவரும், சேரக்கூடாத வெளிச்சத்தில் வாசமாயிருக்கிறவரும், * மனுஷரில் ஒருத்தனுங் கண்டிராதவருங் காணக்கூடாதவருமாகிய, * ௧, ௰௭. யோ. ௧, ௰௮. ௨. மோ. ௩௩, ௨௰.

௰௬ * ராசாதிராசாவுங் கர்த்தாதிகர்த்தருமான பாக்கியமுள்ள ஏக சக்கராதிபதி தம்முடைய காலங்களில் காண்பிப்பார். அவருக்குக் கனமும் நித்திய பெலனும் உண்டாவதாக, ஆமென். * ௫. மோ. ௰, ௰௭.

௰௭ இம்மையிலே ஐசுவரியமுள்ளவர்கள் மேட்டிமைச்சிந்தையில்லாதிருக்கவும், சதமல்லா * ஐசுவரியத்தையல்ல, திரளாய் நமக்கெல்லாத்தையும் அனுபவிக்கக்கொடுக்கிற ** சீவனுள்ள பராபரனையே நம்பவும்

வும், * சங்கீ. ௯௨, ௰௧. ** ௬, ௰ ௫, ௫. சங்கீ. ௯௨, ௯.
௰௮ * நன்மைசெய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும் கொடுக்கிறவர்களாயிருக்கவும் அனுசாரிகளாயிருக்கவும், * ௫. ரோ. ௰ ௩, ௭ — ௰௧.
௰௯ * நித்தியசீவனைப் பற்றிக்கொள்ளத்தக்கதாக வருங்காலத்துக்குத் தங்களுக்கு நல்ல ஸ்திரவாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. * மத். ௯. ௰௯. ௨௰.
௨௰ ஓ தீமோத்தேயுவே, * உன்வசமாய் ஒப்புவிக்கப்பட்டதைக் காத்துக்கொண்டு, ** பரிசுத்தமற்ற வீண் பேச்சுக்களையும், ஞானமென்று பொய்யாய் நூலென்னப்பட்ட எதிர்ப்போதகங்களையும் விலக்கு. * ௨. தீமோ. ௧, ௰௪. ** ௨. தீமோ. ௨, ௰௬.
௨௧ அந்தச்சிலர் பாராட்டி, * விசுவாசத்துக்கு விலகித் தப்பினார்கள். கிருபையானது உன்னோடே கூட இருக்கக்கடவது, ஆமென். * ௧, ௯. ௰௬.

பக்காத்திபிரிக்கியாவின் தலைப்பட்டணமாகிய
லவோதிக்கேயாவிலிருந்து தீமோத்தேயுவுக்
கெழுதப்பட்ட முதலாம் நிருபம்.

---

# அப்போஸ்தலனாகிய
# பவுல்
## தீமோத்தேயுவுக்கெழுதின
# இரண்டாம் நிருபம்:

### ௧. அதிகாரம்.

௧ பெற்றவரத்தை அனல்மூட்டி எழுப்பி, மெய்ப்போதகத்தைக் கெட்டியாய்க் கொண்டிருக்கப் புத்திசொன்னது.

கிறிஸ்து யேசுவினுள்ள சீவனுடைய வாக்குத்தத்தத்தின்படியே பராபரனுடைய சித்தத்தினாலே யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், * ௨, ௰.
௨ * பிரியகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு பிதாவாகிய பராபரனாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து யேசுவினாலும் இரக்கமும் சமாதானமும் உண்டாகவாழ்த்துகிறேன். ௧. தீமோ. ௧, ௨.
௩ நான் உன்னை இடைவிடாமல் * இரவும்பகலும் என் செபங்களிலே நினைத்து, உன் கண்ணீரை ஞாபகம்பண்ணி, சந்தோஷத்தால் நிறையப்படுவதற்கு உன்னைக் காணவாஞ்சையாயிருந்து, * ௧. தெச. ௩, ௰.
௧. தீமோ. ௫, ௫.

௪

௪ பிதாக்கள் முதல்கொண்டு * சுத்தமனச்சாட்சியாய் நான் ஆராதனை செய்கிற பராபரனை, உன்னிலுள்ள * மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினாலே ஸ்தோத்திரிக்கிறேன். * அப. ௨௩, ௧. ௨௪, ௰௬. * ௧. திமொ. ௧, ௫.

௫ அது முந்தி உன் பாட்டியாகிய லோயிதாளுக்குள்ளும் * உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் வாசமாயிருந்தது, அது உனக்குள்ளும் வாசமாயிருக்குமென்று நிச்சயித்திருக்கிறேன். * அப். ௰௬, ௧.

௬ ஏதுநிமித்தமாகத், உன்மேலே நான் என் கைகளை வைத்ததினாலே * உன்னிலுள்ள பராபரனுடைய வரத்தை அனல்மூட்டி எழுப்பும்படிக்கு நினைப்பூட்டுகிறேன். * ௧. திமொ. ௪, ௰௪. ௧. தெச. ௫, ௰௯.

௭ ஏனென்றால் பராபரன் நமக்கு * பயத்தின் ஆவியையல்ல, பெலனசிநேகத்து சௌக்கியபுத்தியின் ஆவியைக் கொடுத்தார். * ரோ. ௮, ௰௫.

௮ ஆகையால் * நம்முடைய கர்த்தரின் சாட்சிக்காகவாகிலும் அவருடைய கட்டுண்டவனான எனக்காகவாகிலும் நீ வெட்கப்படாமல், பராபரனுடைய பெலத்தின்படிச் சுவிசேஷத்துடனே கூடத் தீங்கனுபவி. * ரோ. ௧, ௰௬.

௯ அவர் * நம்முடைய கிரியைகளின்படியே அல்ல, தம்முடைய நிர்ணயத்தின்படியேயும் கிறிஸ்து யேசுவுக்குள் லோகத்தோற்றமான காலங்களுக்கு முன்னே நமக்குக் கட்டளையிடப்பட்டதும், * தீத்து ௩. ௫. ௭.

௰ இப்போதோவென்றால் * மரணத்தைத் தவிர்த்தவனாய், சீவனையும் அழியாமையையுஞ் சுவிசேஷத்தினாலே வெளிச்சத்திலே கொண்டுவந்த நம்முடைய ரட்சகராகிய யேசுக்கிறிஸ்துபிரசன்னமானதினாலே வெளியாக்கப்பட்டதுமான கிருபையின்படியேயும் நம்மை ரட்சித்து, பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார். * யேச. ௨௫, ௮. எபி. ௨, ௰௪. ௰௫.

௰௧ அதற்கு நான் பிரசங்கியாகவும் அப்போஸ்தலனாகவும் புறச்சாதிகளுடைய போதகனாகவும் வைக்கப்பட்டேன்.

௰௨ ஏதுநிமித்தம் இந்தப்பாடுகளையும் அனுபவிக்கிறேன். ஆனாலும் நான் வெட்கப்படேன், ஏனென்றால் நான் விசுவாசித்தவனை அறிவேன், அவர் எனக்கு ஒப்புவிக்கப்பட்டதை அந்நாள்மட்டாகக் காக்க வல்லவரென்று நிச்சயித்திருக்கிறேன்.

௰௩ நீ விசுவாசத்தையும் கிறிஸ்து யேசுவுக்குள்ளான சிநேகத்தையுங் கூடிருந்து என்னிடத்திலே கேட்ட * ஆரோக்கியவசனங்களின் மாதிரியை வைத்திரு. * தீத்து. ௨, ௧.

௰௪ அந்த நல்லவைப்பதை நமக்குள் வாசமான பரிசுத்த ஆவியைக் கொண்டுகா.

௰௫ ஆசியாவிலுள்ளயாவரும் என்னை விட்டுத் திரும்பினார்களென்றதை அறிவாய், அவர்களில் பிகெல்லும் எர்மொகெனேயுமிருக்கிறார்கள்.

௰௬ * ஒனேசிப்போருவின் வீட்டுக்குக் கர்த்தர் இரக்கங்கட்டளையிடுவாராக, ஏனென்றால் அவன் வெகுவிசை என்னைக் குளிர்த்தியண்ணினான். * ௪, ௰௯.

௰௭

௰௭ அவன் என் சங்கிலிக்காக வெட்கப்படாமல், தான் ரோமாவுக்கு வந்தபோது வெகு கருத்தாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்.
௰௮ அந்நாளிலே கர்த்தரிடத்திலே இரக்கங் கண்டுபிடிக்க, கர்த்தர் அவனுக்குக் கட்டளையிடக்கடவார். அவன் எபேசுவிலும் எனக்கு எவ்வளவாய் ஊழியங்களைச் செய்தானென்பதை நீ நன்றாய் அறிந்திருக்கிறாய்.

## ௨. அதிகாரம்.

¶ உபத்திரவத்தைச் சயிக்கப்படுத்திச் சொன்னது.

இப்போதும், என் குமாரனே, நீ கிறிஸ்து யேசுவினாலுள்ள கிருபையிலே பெலத்துக்கொண்டு,
௨ நீ வெகு சாட்சிகளின் கூட்டத்திலே என்னிடத்திலே கேட்டதுகளை மற்றவர்களுக்கும் உபதேசிக்கச் சமர்த்தராயிருக்கும் * உண்மையுள்ள மனுஷருக்கொப்புவி. * ௧. தீமோ. ௩, ௨. டு
௩ நீ யேசுகிறிஸ்துவினுடைய நற் சேவகனாய் * தீங்கனுபவி. * ௧, ௮.
௪ தன்னைச் சேவகமெடுத்துக்கொண்டவனுக்கேற்கத் திருக்கவேணுமென்று தண்டிலே சேவிக்கிற எவனும் * பிழைப்பின் சோலிகளிலே சிக்கிக்கொள்ளான். * ௧ கொ. ௯, ௨௫.
௫ ஒருத்தன் போராடினாலும் ஞாயப்பிரகாரமாய்ப் போராடினாலொழிய, கிரீடந்தரிப்பிக்கப்படான்.
௬ வேலைசெய்கிற பயிர்க்குடி பலனை அடைகிறதிலே முந்தினவனாகவேணும்.
௭ நான் சொல்லுகிறதுகளைச் சிந்தித்துக்கொள். கர்த்தரோவெனில் எல்லாத்திலும் உனக்குப் புத்திதரக்கடவார்.
௮ என் சுவிசேஷத்தின்படியே மரித்தோரிலிருந்தெழுந்த * தாவீதின் வித்தாகிய யேசுகிறிஸ்துவை நினைத்துக்கொண்டிரு. * ௨. சாமு. ௭, ௰௨. மத். ௧, ௧.
௯ அதுக்காகக் கட்டுகளைப் பரியந்தமாய்ப் பொல்லாங்கு செய்தவனைப்போலத் தீங்கனுபவிக்கிறேன். ஆனால் * பராபரனுடைய வசனங் கட்டுண்டதல்ல. * பில். ௧, ௰௨ — ௰௪.
௰ இதினிமித்தியம் நான் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்காக அவர்களுங் கிறிஸ்து யேசுவிலுள்ள இரட்சிப்பை நித்திய மகிமையோடேகூட அடையும்படிக்கு எல்லாத்தையுஞ் சகிக்கிறேன்.
௰௧ இது உண்மையான வார்த்தை, ஏனென்றால் * நாம் கூட மரித்தால், கூடவும் பிழைப்போம். * ரோ. ௬, ௫. ௮, ௰௭.
௰௨ நாம் சயித்துக்கொண்டிருந்தால், கூட ராசரீகம் பண்ணுவோம், நாம் * மறுதலித்தால், நம்மை அவரும் மறுதலிப்பார். * மத். ௰, ௩௩.
௰௩ நாம் * அவிசுவாசிகளானாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார், தம்மைத்தாம் மறுதலிக்கமாட்டார். * ரோ. ௩, ௩. ௫. மோ. ௩௨, ௪.

¶ கள்ள

௧ கள்ளப்போதகரைக்குறித்துத்திமோத்தேயுவுக்குப்பவுல்சொன்னது.

௰௪ ஸ்திரீகளானவர்கள் நிர்ப்பலமுடையவர், ஏனென்றால் அவர்களுக்கு மிகுந்த யோசனையில்லாததும், கெடுவியாகிறவர்களைக் கவிழ்க்கிறதுமாகியவர்களுக்கு வாதுபண்ணுதிருக்க, கர்த்தருக்குமுன்பாகத் திடச்சாட்சியாயிருக்கிறார்.
௰௫ வெட்கப்படாமல், சத்தியவசனத்தை நிதானமாய்ப் பகுக்கிறதுக்கு வல்லவனாக உன்னைப் பராபரனுக்குமுன் நிறுத்தக் கருத்துள்ளவனாயிரு.
௰௬ ஆனால் * பரிசுத்தமற்ற வீண் கூக்குரல்களைத் தடுத்துப்போடு, ஏனெனில் அதிக அவபக்திக்குத் தொடர்ந்துபோவார்கள். * ௧. திமோ. ௬, ௨௰.
௰௭ அவர்கள் வசனம் அரிப்புருதிபோல மேய்ச்சல்கொண்டிருக்கும். * இமெனேயும் பிலேத்தும் அப்படிக்கொத்தவர்கள். * ௧. திமோ. ௧, ௨௰.
௰௮ அவர்கள் உயிர்த்தெழுந்தல் ஆய்ப்போச்சுதென்று சத்தியத்துக்கு விலகித்தப்பி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட்டார்கள்.
௰௯ ஆனாலும் பராபரனுடைய உறுதியான அஸ்திவாரம் நிலைநிற்குது. * கர்த்தர் தம்முடையவர்களை அறிந்திருக்கிறாரென்கிறதும்; + * கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லுகிறவனெல்லாம் அக்கிரமத்தைவிட்டு விலகக்கடவானென்கிறதும் அதுக்கு முத்திரையாயிருக்குது. * சங்கீ. ௧, ௬. யோவ. ௰, ௰௪. + * ௧. யோவ. ௨, ௪. ௫.
௨௰ ஆனாலொரு பெரியவீட்டிலே பொன்வெள்ளிப்பாத்திரங்களமாத்திரமல்ல, மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, சிலது கனத்துக்கும் சிலது கனயீனத்துக்குமானது.
௨௰௧ அப்போதும் ஒருவன் இதுகளைவிட்டுத் தன்னைச் சுத்திகரித்தால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உவக்கிறதும் சகல நற்கிரியைக்கு ஆயத்தப்பண்ணப்பட்டதுமாகிய கனத்துக்கான பாத்திரமாயிருப்பான்.
௨௰௨ வாலவயதிச்சைகளையோ நீ விலக்கிவிட்டு, கர்த்தரைச் சுத்த இருதயத்தால் தொழுகிறவர்களோடே * நீதியையும் விசுவாசத்தையும் சிநேகத்தையும் சமாதானத்தையும் பின்தொடர்ந்துபோ. * ௧. திமோ. ௬, ௰௧.
௨௰௩ * புத்தியுங்கல்வியுமில்லாத தர்க்கங்களோவென்றால் சண்டைகளைச் செனிப்பிக்குமென்றறிந்து, அதுகளைச் சேராதிரு. * ௧. திமோ. ௪, ௭. தீத்து. ௩. ௯.
௨௰௪ கர்த்தரின் ஊழியக்காரன் * சண்டைபண்ணாமல், எல்லாருக்கும் மெதுவானவனும் போதிக்கச் சமர்த்தனும் பொல்லாரைச் சகிக்கிறவனுமாயிருந்து, * ௧. திமோ. ௩, ௨. ௩.
௨௰௫ எதிர்ச்சிந்தைக்காரருக்குப் பராபரன் சத்தியத்தை அறிய, குணப்படுதலைத் தருவாரோவென்றும்.
௨௰௬ பிசாசினுடைய இச்சைப்படி பிடியுண்டிருக்கிற அவர்கள் திரும்ப மயக்கந்தெளிந்து அதின் கண்ணிக்கு நீங்குவார்களோவென்றும், மெத்தனவுடனே அவர்களை உபதேசிக்கவேண்டியது.

௩. அதி

## ௩. அதிகாரம்.

¶ துன்மார்க்கப்போதகரை வெறுத்து மெய்ப்போதகத்தில் நிலைத்திருக்கப்புத்தி சொன்னது.

கடைசிநாட்களிலே கொடியகாலங்கள் வருமென்றறி. * ௨. பேது. ௨, ௧ — ௩. யூதா. ௰௮ வசனம்.

௨ அதேதெனில் - மனுஷர் தற்சினேகரும் பணப்பிரியரும் வீம்புக்காரரும் அகந்தையுள்ளவர்களுந் தூஷணக்காரரும், பெற்றாருக்குக் கீழ்ப்படியாதவர்களும் நன்றியறியாதவர்களுந் துன்மார்க்கரும்,

௩ சுவாபவன்பில்லாதவர்களும் ஒப்புரவாகாதவர்களும் நிந்தசொற்காரரும், இச்சையடங்காதவர்களுங் குரூரரும், நல்லோரைச் சினேகியாதவர்களும்,

௪ துரோகிகளுந் துணிகரக்காரரும் உப்பிப்போனவர்களும், பராபரனைப் பார்க்கச் செல்வத்தைச் சினேகிக்கிறவர்களும்,

௫ * தேவபத்தியினுருபைத் தரித்தும் அதின் பெலத்தை மறுதலிக்கிறவர்களுமாயிருப்பார்கள். இப்படிக்கொத்தவர்களை வெறுத்திரு. * தீத்து. ௧, ௰௬.

௬ ஏனெனில் பாவங்களால் அழுத்தப்பட்டு, பலபல இச்சைகளாலே இழுப்புண்டு,

௭ எப்போதுங் கற்றும் ஒருக்காலுஞ் சத்தியத்தின் அறிவுக்குவரமாட்டாத பெண்பெண்சாதிகளை வீடுகளுக்குள் நுழைந்து சிறையாக்கிறவர்கள் அவ்வினத்தாராயிருக்கிறார்கள்.

௮ யந்நேயும் யம்பிரேயும் எப்படி * மோசேயோடெதிர்த்துநின்றார்களோ, அப்படியேபுத்திகெட்டு விசுவாசத்துக்கிவத்தரான இந்த மனுஷருஞ் சத்தியத்தோடெதிர்த்துநிற்கிறார்கள். * ௨. மோ. ௭, ௰௧.

௯ ஆனாலும் மெத்தவும் பெருகிப்போகமாட்டார்கள், ஏனென்றால் அவர்களுடைய மதிகேடு அன்னவருக்கும் * வெளியரங்கமானதுபோல இவர்களுடையதும் அப்படியாம். * ௨. மோ. ௮, ௰௮. ௰௯. ௯, ௰௧.

௰ நீயோவென்றால் என்னுடைய போதகத்திலும் நடத்தையிலும் மனநிர்ணயத்திலும் விசுவாசத்திலும் நீண்டசாந்தத்திலுஞ் சினேகத்திலும் பொறுமையிலும்,

௰௧ எனக்கு * அந்தியோகியாவிலும் இக்கோனியிலும் லீஸ்திரவிலுஞ் சம்பவித்ததுக்கொத்த துன்பங்களிலும் பாடுகளிலும் பின்சென்றுவந்தாய். இப்படிக்கொத்த துன்பங்களைச் சகித்தேன், அதுகளுக்கெல்லாங் கர்த்தரென்னை நீங்கலாக்கிவிட்டார். * அப்போ. ௰௩, ௫௰. ௰௪, ௨. ௰௯.

௰௨ ஆனாலுங் கிறீஸ்துயேசுவுக்குள் தேவபத்தியாய்ச் சீவனம்பண்ணமனதாயிருக்கிற அனைவரும் * துன்பப்படுவார்கள். * அப்போ. ௰௪, ௨௨.

௰௩ பொல்லாதமனுஷரும் எத்தருமோவென்றால் மோசம்போக்கி மோசம்போய், வரவர அதிகக்கேடுள்ளவர்களாவார்கள்.

௰௪ நீயோவென்றாற் கற்றுமெய்யென்றுணர்ந்து
களில் நிலைத்திரு, ஏனென்றால் ஆராலே கற்றாயென்
றறிதும்,
௰௫ யேசுக்கிறிஸ்துவினிடத்திலுள்ள விசுவாசத்தினா
லே உனக்கு இரட்சிப்புக்கு ஞானமுள்ளவனாக்கப்பெ
லனுள்ள பரிசுத்த எழுத்துக்களைச் சிறுவயதுமுதல் அறிந்
திருக்கிறாயென்கிறதும் உனக்குத் தெரியும்.
௰௬ * வேதமெல்லாந் தேவ ஆவியாலுண்
டானதும், பராபரனுடைய மனுஷன் நற்கிரியைக
ளெல்லாத்துக்குந் தீர்ந்த சீருள்ளவனாயிருக்க, * ௨. பேது. ௧.
௨௰. ௨௧.
௰௭ * உபதேசத்துக்கும் கடிந்துகொள்ளுதலுக்கு
ஞ் சீர்திருத்தலுக்கும் நீதியைப்படிப்பிக்கிறதுக்கும் பி
ரயோசனமாயிருக்குது. * சங். ௰௯, ௮. ௯.

௪. அதிகாரம்.

¶ அப்பாலும் மெய்ப்போதகத்தில் நிலைத்திருக்
கப்புத்திசொன்னது.

௧ ஆனபடியினாலே தொடர்ந்து முயற்சியாய், சமையத்திலு
ம் அசமையப் பேதத்திலும் வசனத்தைப் பிரசங்கி,
எல்லாவிதமான சாந்தத்தோடும் போதகத்தோடுங்
கண்டித்துக்கொள், அதட்டு, புத்திசொல்லு,
௨ நானோ பராபரனுக்கு முன்பாகவும் உயிரோடிரு
க்கிறவர்களையும் மரித்தவர்களையுந் தம்முடைய பிரச
ன்னமாகுதலினாலும் இராச்சியத்தினாலும் நியாயந்தீர்க்க
ப்போகிறவராகிய யேசுக்கிறிஸ்துவுக்கு முன்பாக
வுந் திடசாட்சியாய்ச் சாதிக்கிறேன்.
௩ ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதே
சத்தைப் பொறுக்காமல், செவித்தினவுள்ளவர்க
ளாகி, தங்கள் ஆசைகளின்படியாகத் தங்களுக்கு
ப் போதகரைச் சேர்த்துக்கொண்டு,
௪ செவியைச் சத்தியத்துக்கு விலக்கி, கட்டுக்கதைகளு
க்குச் சாய்ந்துபோகுங் காலம் வரும்.
௫ நீயோவென்றால் எல்லாத்திலும் மனத்தெளி
வாயிரு; தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலை
யைச் செய், உன் ஊழியத்தை நிறைவாக்கமாய் நடத்து.
௬ ஏனென்றால் இரத்தம் ஊற்றப்படலாகும் வே
ளை வந்தது, நான் பிரிந்துபோகுங் காலங் கிட்டிநிற்குது.
௭ * நல்ல போராட்டத்தைப் போராடினேன்,
ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்
டேன். * ௧. கொரி. ௯, ௨௫ — ௨௭.
௮ அப்புறம் நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அ
ந்நாளிலே எனக்குக் கொடுக்கப்போற * நீதியினுடை
ய கிரீடம் எனக்கு வைத்திருக்குது. எனக்குமாத்
திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பினவ
ர்களுக்குந்தானே. * ௧. பேது. ௫, ௪. அப. ௨, ௰.

¶ நிருபத்தின் முடிவு.

௯ சீக்கிரமாய் என்னிடத்துக்கு வரச்சாக்கிரதைப்படு.

ய

௰ ஏனெனில் *தேமா இந்தப் பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டு, தெசலோனிக்கேக்குப் போனான், கிரேஸ்கே கலாத்தியாவுக்கும், தீத்து தல்மாத்தியாவுக்கும் போனார்கள். * கொலொ. ௪. ௰௪.

௰௧ * லூக்கா மாத்திரம் என்னோடேகூட இருக்கிறான். ** மாற்குவைக் கூட்டிக்கொண்டுவா, ஏனெனில் ஊழியத்துக்காக அவன் எனக்குப் பிரயோசனமாயிருக்கிறான். * கொலொ. ௪, ௰௪. ** கொலொ. ௪, ௰.

௰௨ தீகிக்குவை நான் எபேசுவுக்கு அனுப்பினேன்.

௰௩ நான் துரோவாவிலே கர்ப்புவினிடமாய் வைத்துவந்த மேலங்கியையும் புஸ்தகங்களையும், விசேஷமாய்த் தோல்சுருள்களையும் நீ வருகிறபோது கொண்டுவா.

௰௪ கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீங்கு செய்தான், கர்த்தர் அவனுடைய கிரியைகளுக்குத் தக்கதாய் அவனுக்குச் சரிக்கட்டுவார்.

௰௫ அவனுக்கு நீயும் எச்சரிக்கையாயிரு, ஏனெனில் அவன் நம்முடைய வார்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்து நின்றான்.

௰௬ நான் முதல்விசை உத்தரவு சொல்லுகிறபோது ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக் கைவிட்டார்கள்; அது அவர்கள் மேல் சுமராதிருப்பதாக.

௰௭ கர்த்தரோ என்னோடேகூட நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவாய் விளங்கவும் சகல ஜாதியாரும் கேட்கவும் என்னைப் பலப்படுத்தினார், சிங்கத்தின் வாயிலிருந்து தப்புவிக்கப்பட்டேன்.

௰௮ கர்த்தர் எனக்கு எல்லாத் துர்க்கிரியைக்கும் விலக்கி விடுவித்து, தமது பரம ராட்சியத்துக்குக் காப்பாற்றுவார். அவருக்கு என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக, ஆமென்.

௰௯ * பிரிஸ்கல்லாளையும் ஆக்கில்லாவையும் ஒநேசிப்போருவின் வீட்டாரையும் வாழ்த்து. * அப்போ. ௰௮, ௧ — ௩.

௨௰ எரஸ்து கொரிந்துவிலிருந்து விட்டான், துரோப்பீமுவை மிலேத்திலே வியாதிப்பட்டவனாக விட்டுவந்தேன்.

௨௧ நீ மாரிகாலத்துக்கு முன்னே வரப் பிரயாசப்படு. ஐபூலுவும் புதேயும் லீனுவும் கிலவுதியாளும் எல்லாச் சகோதரரும் உனக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

௨௨ கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உன் ஆவியுடனேகூட இருப்பாராக. கிருபை உங்களோடேகூட இருப்பதாக, ஆமென்.

பவுல் இரண்டாம்விசை நீரோ ராயனுக்கு முன்னே நிறுத்தப்பட்டபோது ரோமாபுரியிலிருந்து, தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபம்.

# அபபோஸததலனாகிய
# பவுல
## தீததுவுககெழுதின
# நிருபம.

### க. அதிகாரம.

### ¶ நிருபததினமுகவுரை.

பொய சொலலாத பராபரன சதா காலஙக ளுககுமுன * வாககுததததமபணணினதும, * * ஏறறகாலஙகளிலெ நமமுடைய பராபர னாகிய ரெடசகருடைய கடடளையின படி எனனந மபிககைககொபபுவிககபபடட தமமுடைய வ சனததினபிரசஙகததினாலே வெளிபபடுததினதுமான நிததிய சீவனுடைய நமபிககையின பேரிலும, * க. மொ. ௩, ய௫. * * எபே. க, ௯. ௰.

௨ பராபரனாலெதெரிநதுகொளளபபடடவர்களு டைய விசுவாசததினபடியேயுந தேவபததிககு ஒததச சததியததினுடைய அறிவினபடியேயும,

௩ பராபரனுடைய ஊழியககாறனுமயேசுகிறிஸ ததுவினுடைய அபபோஸததலனுமாயிருககிற பவு லு,

௪ ஏகவிசுவாசததினபடியே * உததம குமாரனாகிய தீததுவுககுபிதாவாகியபராபரனாலுநமமுடைய ரெட சகராயிருககிறகறததராகிய யேசுகிறிஸததுவினாலுங கிருபையுமிரககமுஞசமாதானமுமுணடாகவாழத துகிறேன. * க. தீமொ. க, உ.

### ¶ நலலெட்சணமுபபரைவைககிறததுககா கவுநதேவையானகணடிபபுககாக வுமெழுதினது.

௫ நீகுறைககாரியஙகளைச செவவைபபடுததி, ப டடணநதோறும, நான உனககுததிடடமபணணினப டி, மூபபரை வைபபதறகாக உனனைக கிரேததாவி லெவிடடுவநதேன.

௬ * குறறஞசாடடபபடாதவனுமஒரேபெணசாதிககு ப புருஷனும, கெடடமாறககததுககுததச சுமரததலுங கீழபபடியாமையுமிலலாதவிசுவாசமுளள பிள ளைகளுடையவனுமாகிய ஒருததனிருநதால, அவனை யேவைககலாம. * க. தீமொ. ௩, உ — ௫.

௭ ஏனெனில கணகாணி * பராபரனுடைய உககிராண ககாறனைபபோலகுறறஞசாடடபபடாதவனும, தற பிரியம * * கோபககுணமமதுபானபபிரியமவெட டணவுலெசணைசயானசூதாயபபிரியமுமிலலாதவ னும, * க. கொ. ௪, ௧. * * உ. தீமொ. உ, உ௪.

௮ பரதேசிகளைசிநேகிககிறவனும நலலோர்சிநேகிதனும, சொஸததபுததிமானும நீதிமானும பரிசுததனும இசசை படடடஙகினவனும,

சு

௯ சுரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும் எதிர்பேசுகிறவர்களைக் கடிந்துகொள்ளவும் தானவல்லவனாயிருக்கும்படிக்கு உபதேசத்துக்கேத்த உண்மையான வசனத்தைக் கைப்பற்றியாய்ப் பிடிக்கிறவனுமாயிருக்கவேணும்.

௰ ஏனென்றால் உன்னேக், விசேஷமாய் சுன்னத்துக்காறர், அடங்காதவர்களும் வீண்வசனிப்புக்காறரும், மனசைமயக்குகிறவர்களுமாயிருக்கிறார்கள். * க தீமோ. ௧, ௬, ௭.

௰௧ அவர்கள் வாயடைக்கப்படவேணும், அவர்கள் இலச்சையான ஆதாயத்துக்காக அடாதகாரியங்களை உபதேசித்து, முழுவீடுகளைக் கவிழுக்கிறார்கள்.

௰௨ அவர்களில் அவர்களுடைய சுயதீர்க்கதரிசியொருத்தன்: கிரேத்தர் எப்போதும் பொய்யரும் பொல்லாத மிருகங்களுஞ் சோம்பலான வயிறுகளுமாயிருக்கிறார்களென்றான்.

௰௩ இந்தச் சாட்சி உண்மையாயிருக்குது, இதுமுகாந்திரமாக அவர்கள், அவர்கள் விசுவாசத்திலே சுரோக்கியமாயிருக்கவும்,

௰௪ யூதக்கட்டுக்கதைகளுக்குஞ் சத்தியத்தை விட்டுவிலகுகிற மனுஷருடைய கற்பனைகளுக்குஞ் செவிகொடாதிருக்கவுங் கடினமாய்க் கடிந்துகொள்.

௰௫ சுத்தவான்களுக்குச் சகலமுஞ் சுத்தமாயிருக்குது, அசுத்தமானவர்களுக்கும் அவிசுவாசிகளுக்கும் ஒன்றுஞ் சுத்தமாயிராமல், அவர்களுடைய சிந்தையும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்குது. * மத். ௰௫, ௰௧.

௰௬ பராபரனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கைபண்ணுகிறார்கள், ஆனாலும் அருவருப்பானவர்களுங் கீழ்ப்படியாதவர்களும் நற்கிரியைக்கெல்லாம் ஆகாதவர்களுமாயிருந்து, கிரியைகளினாலே மறுதலிக்கிறார்கள்.

## ௨. அதிகாரம்.

¶ தெய்வக்குணைப்பக்கேர்த்தத்தனமாக்குமாய நடக்கையாவருக்கும்படிக்குச் சொல்லவேணுமென்றது.

நீயோவென்றால் சுரோக்கியமான உபதேசத்துக்கேற்றதுகளைப் பேசு.

௨ முதிர்வயதுள்ளவர்கள் தெளிந்திருக்கிறவர்களுங் குணமானகருத்தொழுக்கமானவர்களும், விசுவாசத்திலுஞ் சிநேகத்திலும் பொறுமையிலுஞ் சுரோக்கியவான்களுமாயிருக்கவும்.

௩ அப்படியே முதிர்வயதிலுள்ள ஸ்திரீகளும் பரிசுத்தருக்குக் கேர்ந்தவமையுள்ளவர்களும், நிபந்தசொல்லுக்காரிகளல்லாதவர்களும், அதிபானத்துக்குச் சிறைப்படாதவர்களுமாயிருந்து;

௪ பராபரனுடைய வசனந் தூஷிக்கப்படாதபடிக்கு யௌவனஸ்திரீகளை, தங்கள் புருஷரையும் பிள்ளைகளையுஞ் சிநேகிக்கிறதுக்கும்,

௫ மனசொஸ்தத்துள்ளவர்களுங் கற்புள்ளவர்களும் வீட்டுக்காவலாளிகளும் நல்லவர்களும், * தங்களுடைய புருஷருக்குக் கீழ்ப்படிந்தவர்களுமாயிருக்கத்தக்கதாய்ப் புத்திகற்பிக்கத்தக்க நற்போதகிகளாயிருக்கவும், * எபே. ௫, ௨௨.

௬ அப்படியே வாலிபர்கள் மனசொஸ்தமாயிருக்கவும், நீ புத்திசொல்லி,

௭ * எதிரியானவன் உங்களைப் பொல்லாப்புச்சொல்லுகிறதற்கொன்றுமில்லாமல் நாணத்தக்கதாக, ** எல்லாத்திலும் உன்னைத்தானே நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பி, * க. பேது. உ, ௰௨. ** க. பேது. ௫, ௩.

௮ உபதேசத்திலே கலப்பில்லாமையையும் லெக்கணத்தையும், குத்தம்பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தையும் விளங்கப்பண்ணு.

௯ * வேலைக்காரர் நம்முடைய ரட்சகராகிய பராபரனுடைய உபதேசத்தை எல்லாத்திலும் அலங்கரிப்பதற்கு, தங்களுடைய எசமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்து, எதிர்ப்பேச்சுக்காரராயிராமல் எல்லாத்திலும் பிரியமாய் நடக்கவும், * எபே. ௬, ௫ — ௮.

௰ வஞ்சனைபண்ணுகிறவர்களாயிராமல் நல்லுண்மையையெல்லாங் காண்பிக்கவும் புத்திசொல்லு.

௰௧ ஏனென்றால் பராபரனுடைய ரட்சிப்புள்ள கிருபை எல்லா மனுஷருக்கும் * பிரசன்னப்பட்டிருந்து, * ௩, ௪. மத். உ௮, ௰௯.

௰௨ நாம் அவபத்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, மனசொஸ்தத்தும் நீதியுந் தெய்வபத்தியுமாய் இப்பிரவுகுச்சியத்திலே சீவனம்பண்ணவும், * க. யோ. உ, ௰௫ — ௰௭.

௰௩ பாக்கியமான நம்பிக்கைக்கும், மகாபராபரனும் நம்முடைய ரட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்க்க நம்மை உபதேசிக்குது.

௰௪ அவர் நம்மைச் சகல அக்கிரமத்துக்கும் நீங்கலாக்கிமீட்கவும் * நற்கிரியைகளுக்குக் கண பத்தியான சொந்தச்சனமாகத் தமக்குச் சுத்திகரிக்கவும், ** நமக்காகத் தம்மையே ஒப்புக்கொடுத்தார். * மத். ௫, ௰௬. ** கலாத். க, ௩.

௰௫ இவைகளை நீ சகல அதிகாரத்தோடும் பேசிப் புத்திசொல்லிக் கடிந்துகொள். * ஒருத்தனும் உன்னை அசட்டைபண்ணவேண்டாம். * க. தீமோ. ௪, ௰௨.

௩. அதிகாரம்.

௧ சனமாராசத்துக்குக் கேவுகிறசெழுத்தைத் திடமாய்ப் போதிக்கப்பண்ணவும், தர்க்கங்களையும் புத்திக்கிணங்காத வேதப்பிரட்டரையும் விலக்கவும் எச்சரிக்கது.

துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்குங் கீழ்ப்படிந்தடங்கி, நற்கிரியைக்கெல்லாம் ஆயத்தமாயிருக்கவும், * க. பேது. உ, ௰௩. ௰௪.

௨ ஒருத்தனையுந் தூஷணியாமல், வழக்காடாதவர்களும் * சாதுவானவர்களுமாயிருக்கவும், மனு

ஷரு

௨. ருக்கெல்லாத்துக்குஞ் சகல மெத்தனவையுங் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. * பிலிப். ௪, ௫.

௩ ஏனென்றால் * முன்காலத்திலே நாமும் மதிகெட்டும் இணங்காதவர்களும் வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைகளும், துர்க்குணத்திலும் பொறாமையிலுஞ் சீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும் ஒருத்தரையொருத்தர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். * எபே. ௨, ௨. ௩.

௪ ஆனால் நம்முடைய இரட்சகராகிய பராபரனுடைய * அன்பும் நரசீவதயையும் பிரசன்னமானபோது. * ௨, ௰௧. ௧. யோவ. ௪, ௯.

௫ அவர், நாம் தம்முடைய கிருபையினாலே நீதிமான்களாக்கப்பட்டு, நித்தியசீவனுடைய நம்பிக்கையின்படி சுதந்தரராவதற்கு,

௬ நம்மை நாம் செய்த நீதியின் கிரியைகளினாலல்ல, * தம்முடைய இரக்கத்தின்படியே * * மறுசென்மமுழுக்கினாலும், * எபே. ௨, ௪—௯. ௨. தீமோ. ௧, ௯. ௰. * * யோவ. ௩, ௫.

௭ தாம் நம்முடைய இரட்சகராகிய இயேசு கிறிஸ்துமூலமாய் நம்முடமேல் பரிபூரணமாக * ஊற்றின பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் இரட்சித்தார். * யோவேல். ௩, ௫.

௮ இது உண்மையான வார்த்தை. பராபரனை விசுவாசித்தவர்கள் நற்கிரியைகளுக்கு விசாரிப்பாயிருக்கக் கருத்தும்படிக்கு இதுகளை நீ திடமாய்ப் போதிக்கவேணுமென்றிருக்கிறேன். இதுகளே நன்மையும் மனுஷருக்குப் பிரயோசனமுமான காரியங்கள்.

௯ ஆனால் * பயித்தியமான தர்க்கங்களையும் வங்கிஷ வரிசைகளின் ஆராய்தலையும் வாதாட்டங்களையும் நியாயப்பிரமாணத்தின் மேலுண்டாகுஞ் சண்டைகளையும் நீ தவிர்த்துப்போடு. ஏனென்றால் இதுகள் அப்பிரயோசனமும் வீணுமாயிருக்குது. * ௧. தீமோ. ௧, ௩. ௪, ௭. ௨. தீமோ. ௨, ௨௩.

௰ வேதப்புரட்டனாகிய மனுஷனை ஒன்றிரண்டுதரம் புத்திசொன்னபின்பு அவனை விட்டு விலகு. * மத். ௭, ௰௫. ௧௮. ௰௬, ௰௭. * யோவ. ௰. வ௪.

௰௧ அப்படிக்கொத்தவன் கவிழ்ந்துபோனவனென்றும், தன்னாலேதானே ஆக்கினைக்குள்ளாய்த் தீர்க்கப்பட்டுப் பாவஞ்செய்கிறவனென்றும் அறிந்திரு.

¶ நிருபமுக்கவு.

௰௨ நான் அர்த்தேமாவை அல்லது * தீக்கிக்குவை உன்னண்டைக்கு அனுப்பும்போது நீ நிக்கோப்போலிசுக்கு என்னண்டையிலே வரச்சாக்கிரதைப்படு, ஏனென்றால் அங்கே மாரிகாலத்துக்குத் தங்கத் தீர்த்துக்கொண்டேன். * அப். ௨௰, ௪. எபே. ௬, ௨௧.

௰௩ நியாயசாஸ்திரியாகிய சேனாவையும் * அப்போல்லோவையும், ஒன்றுக்குங் குறைவில்லாதபடிக்குப் பிராமரிசப்போட்டே வழிவிட்டனுப்பு. * அப். ௰௮, ௨௪.

௰௪ ஆனாலும நம்முடையவர்களுங் கனியற்றவர்களா யிராமல, அவசரங்களுக்குதவும நற்கிரியைகளுக் குப்பிரயாசப்படப்பழகட்டும.

௰௫ என்னோடிருக்கிற அனைவரும உன்னை வாழ்த்து கிறார்கள். விசுவாசத்திலே நம்மைச் சிநேகிக்கிறவர்க ளை வாழ்த்து. கிருபையானது உங்களனைவரோடு ங்கூடயிருக்கக்கடவது ஆமென.

மக்கெதோனியதேசத்துப்பட்டணமாகிய நிக்கோ பொலியிலிருந்தெழுதியனுப்பினது.

---

# அப்போஸ்தலனாகிய பவுல் பிலேமோனுக்கெழுதின நிருபம்.

¶ குணப்பட்ட வுனுட வேலைக்காறனாகிய ஒ னேசிமுக்காகஎழுதிக்கொண்டது.

௧ கிறீஸ்த்துயேசுவினுடைய கட்டுண்டவனாகிய பவுலும சகோதரனாகிய தீமோத்தேயும எங்கள் பிரியனும உடன வேலையா ளுமாகிய பிலேமோனுக்கும,

௨ பிரியமான அப்பியாளுக்குமெங்களுடன் சேவ கனாகிய * அர்க்கிப்புக்கும ** உன வீட்டிலே கூடுகிற ச பைக்குமெழுதுகிறதாவது : * கொலோ. ௪, ௰௭. ** ரோ. ௰௬. ௫.

௩ நம்முடைய பிதாவாகிய பராபரனாலுங் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்த்துவினாலும உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும உண்டாகக்கடவது.

௪ கர்த்தராகிய யேசுவின்மேலுமெல்லாப்பரிசுத் தவான்கள் மேலுமுள்ள உன்சிநேகத்தையும, உன் விசுவாசத்தையுநான கேட்டிருந்து,

௫ உங்களுள்ள எல்லா நன்மையையுநீ அறி ந்துகொள்வதினாலே உன விசுவாசத்தினுடைய தன்மை கு ணங்கிறீஸ்த்துயேசுவை நோக்க * பெலனுள்ளதாக வேணுமென்று, * தீத்து. ௩, ௰௪.

௬ நானெப்போதுமென செபங்களிலே உன்னை நி னைத்து, என பராபரனை ஸ்தோத்திரிக்கிறேன.

௭ ஏனென்றால், சகோதரனே, உன்னாலே பரிசுத் தவான்களுடைய இருதயங்களிளைப்பாறினபடியி னாலே உனசிநேகத்துக்காக வெகுசந்தோஷமும ஆறுத லும அடைந்திருக்கிறோம.

௮ ஆனதுகொண்டு, முதிர்வயதுள்ள வனுமிப் போதோ வென்லே யேசுக்கிறீஸ்த்துவினுடைய

கட

கட்டுண்டவனுமாயிருக்கப்பட்ட பவுலுவாகிய நான்;
௯ தகுங்காரியத்தை உனக்குக் கற்பிக்க, கிறிஸ்துவுக்குள் வெகுதைரியம் பெற்றிருந்தும், அப்படிச் செய்யாமல், சிநேகத்தினிமித்தியமாக வேண்டிக்கொள்ளுகிறேன்.
௰ ஏதென்னில், என் கட்டுகளில் நான் பெற்ற, முன் உனக்கு அப்பிறயோசகனும் இப்போதோ வென்னில் உனக்கும் எனக்கும் * நற்பிறயோசகனுமான ஒனேசிமுக்காக உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன். * கொலோ. ௪, ௯.
௰௧ அவனை மறுபடியும் அனுப்பினேன்.
௰௨ நீயோவென்னில் என் கெண உள்ளம் போலிருக்கிற அவனை ஏற்றுக்கொள்.
௰௩ சுவிசேஷத்தினிமித்தியங் கட்டுண்ட நான் அவனை உனக்கு வதிலாக, என் கூழியஞ் செய்யும்படிக்கு, என்னிடத்திலே வைத்துக்கொள்ள வேணுமென்றிருப்பேன்.
௰௪ ஆனாலும் உன்னுடைய கட்டாயத்தாலல்ல, மனப்பூர்வத்தாலிருக்க, உன் யோசனையை அல்லாமல் ஒன்றுஞ் செய்ய நான் மனதாயிருந்ததில்லை.
௰௫ அவனினி வேலைக்காறனைப் போலல்ல; வேலைக்காறனுக்கு மேலான பிரியச் சகோதரனாக என்றைக்குந்திரும்ப உனக்கிருப்பதற்குத்தானே கொஞ்சப்போதுப் பிரிந்திருந்தானாக்கும்.
௰௬ அவனெனக்கு விசேஷமாய், உனக்கோ மாம்சப்படியுங் கர்த்தருக்குள்ளுமெத்தனை அதிகமாயப்படிக்கொத்தவன்,
௰௭ ஆனபடியினாலே நீ என்னை உனக்குண்ணியவுண்ணியமானவனென்றெண்ணினால், அவனை என்னைப்போலேற்றுக்கொள்,
௰௮ அவன் உனக்கு யாதொரு அநியாயஞ் செய்திருந்தும், அல்லது கடன் பட்டதும் உண்டேயானால், அதை என் கணக்கிலேயிடு.
௰௯ பவுலுவாகிய நான் என்னகையெழுத்தாயெழுதினேன், நான் கொடுத்துத் தீர்ப்பேன். எனக்கு நீ பட்ட கடனேவென்னில் நீதானே என்கிறதை நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை.
௨௰ ஆம், சகோதரனே, உன்னாலே நான் கர்த்தருக்குள் அநுபவிக்கட்டும், கர்த்தருக்குள் என்னிருதயத்தைக் குளிர்ப்பாற்று.
௨௰௧ நான் சொல்லுகிறதிலும் அதிகஞ் செய்வாயென்று நான் அறிந்து, உன் கீழ்ப்படியுதலுக்காக நிற்செய்திருக்கிறவனாய் உனக்கெழுதினேன்.
௨௰௨ அதுவுமல்லாமல் எனக்கு வீடுத்தையும் ஆயித்தம்பண்ணு, ஏனென்னில் * உங்கள் செபங்களினாலே உங்களுக்குக் கொடுக்கப்படுவேனென்று * * நம்பியிருக்கிறேன். * ௨. கொரி. ௧, ௰௧. * * பிலி. ௧, ௨௫.
௨௰௩ கிறிஸ்து யேசுவுக்குள் என்னுடனே கூட்டக்காவலப்பட்டவனாகிய * எப்பாப்பிறவும், * கொலோ. ௪, ௰௧.
௨௰௪ என்னுடன் வேலையாளர்களாகிய * மாற்குவும் அரிஸ்தற்குவும் * * தேமாவும் லூக்காவும் உன்னை

மினவுகிறீர்கள. * கொலொ. ௪, ௬: * *கொலொ. ௪, ௰௩.

௨௫ நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவினுடைய கிருபை உங்களெல்லாருடனேகூடயிருக்கக்கடவது. ஆமென.

றோமாவிலேயெழுதி ஒனேசிமுகையிலே பிலேமோனுக்கனுப்பினது.

---

# அப்போஸ்தலனாகிய பவுலு

## எபிரேயருக்கெழுதின

# நிருபம்.

### ௧. அதிகாரம்.

௧ கிறீஸ்துவினுடைய தேவத்துவம் ரூபிக்கப்பட்டது.

பூர்வத்திலே பராபரன் அனேகந்தரமும் பல பல வகையினாலுந் தீர்க்கதெரிசிகளைக் கொண்டு பிதாக்களுக்கு விளம்பினபின, (இ)ந்தக்கடைசிநாளாக்களில குமாரனைக் கொண்டு நமக்கு விளம்பினார்.

௨ * இவரை எல்லாத்துக்குஞ் சுதந்திரவாளியாக வைத்தார், ** இவரைக் கொண்டுலோகத்தையும் உண்டாக்கினார். * மத். ௨௪. ௰௪ ** யோவ. ௧, ௩.

௩ இவர் அவருடைய மகிமையின * பிறகாசமும், ** அவருடைய தம் சுவாபத்தின அச்சுமாயிருந்து, எல்லாத்தையுந் தம்முடைய வல்லமையின வசனத்தால் நடத்திக்கொள்ள, தம்மாலே தானே நம்முடைய பாவங்களின சுத்திகரிப்பையுண்டாக்கி, *** உன்னதங்களிலே மகத்துவத்தின வலதுபாரிசத்தில உக்கார்ந்து, * ௨. மோ. ௩௩, ௰௪. ௰௫ * கொலொ. ௧, ௰௫: *** மற்கு. ௰௬, ௰௯.

௪ தேவதூதரைப்பார்க்கத்தாம் * எத்தனைக்கு விசேஷித்தநாமத்தைச் சுதந்தரித்துக்கொண்டாரோ, அத்தனைக்கு அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். * பிலி. ௨, ௰. ௰௧.

௫ ஏனென்றால: * நீர் நம்முடைய குமாரனாயிருக்கிறீர், இன்றுநாம் உம்மைச் செனிப்பித்தோமென்கிறதாகவும், பின்னையும்: ** நாம் அவருக்குப்பிதாவாயிருப்போம், அவர் நமக்குக்குமாரனாயிருப்பாரென்கிறதாகவும் அவர் தூதரிலெவனுக்காகிலும் எப்போ சொன்னார், * சங்கீ. ௨, ௭. ** ௨. சாமு. ௭, ௰௪.

௬

௬ தாம் *முதற்பேறானவனைத் திரும்ப லோகத்துக்குள் அழைத்துக்கொண்டு வருகிறபோதோவென்றால்: **தேவதூதரெல்லாம் அவனைப் பணியக்கடவார்கள் என்றார். *கொலோ. ௧, ௰௮. **சங்கீ. ௯௭, ௭.
௭ தேவதூதரைக் குறித்தோ: *தம்முடைய தூதரை ஆவிகளுந் தம்முடைய வேலைக்காரரை அக்கினிச்சுவாலைகளுமாக்குகிறாரென்றும் *சங்கீ. ௱௪, ௪.
௮ குமாரனைக் குறித்தோவென்றால்: *பராபரனே, உம்முடைய ஆசனம் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களாக நிற்கும், உம்முடைய ராட்சியத்தின் செங்கோல் செம்மையான செங்கோலாயிருக்குது, *சங்கீ. ௪௫, ௭. ௮.
௯ நீர் நீதியைச் சிநேகித்து, அக்கிரமத்தைப் பகைத்தீர், ஆகையினாலே, பராபரனே, உம்முடைய பராபரன் உம்முடைய பங்காளிகளைப் பார்க்கிலும் உம்மை மகிழ்ச்சியின் எண்ணெயினாலே அபிஷேகம்பண்ணினாரென்றும்,
௰ பின்னையும்: *ஆண்டவரே, நீர் ஆதியிலே பூமியை அஸ்திவாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கைகளின் கிரியைகளாயிருக்குது. *சங்கீ. ௱௨, ௨௬—௨௮.
௰௧ அதுகள் அழிந்துபோம், நீரோ நிலைநிற்கிறீர், அதுகளெல்லாம் வஸ்திரம்போலப் பழசாய்ப்போம்,
௰௨ அதுகளை ஒரு சால்வையைப்போலச் சுருட்டுவீர், அப்போ மாறிப்போம், நீரோவென்றால் ஒரேப்பிரகாரமாயிருக்கிறீர், உம்முடைய வருஷங்கள் முடிந்துபோவதில்லையென்று சொல்லியிருக்குது.
௰௩ *நாம் உம்முடைய சத்துருக்களை உம்முடைய பாதபடியாக்கிப்போடுமட்டும் நம்முடைய வலதுபாரிசத்திலே உட்காருமென்கிறதாய் அவர் தூதரிலே எவனுக்காகிலுமெப்போ சொன்னார். *சங்கீ. ௱௰, ௧.
௰௪ அவர்களெல்லாரும் *ரட்சிப்பைச் சுதந்திரிக்கப்போறவர்களின் நிமித்தியமாக ஊழியத்துக்கு அனுப்பப்பட்ட பணிவிடை ஆவிகளல்லவோ. *சங்கீ. ௩௪, ௮. ௯௧, ௰௧. ௰௨.

## ௨. அதிகாரம்.

நமக்காகத் தாழ்மையாய்ப் பாடுபட்ட கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தின் மேன்மையும் அவருடைய கர்த்தத்துவமும் ருசுப்பிக்கப்பட்டது.

௧ ஆகையினாலே நாம் ஒழுகிவிடாதபடிக்கு, நாம் கேட்டதுகளுக்கு மகா கவனமாயிருக்கவேணும்.
௨ ஏனென்றால் *தேவதூதரைக்கொண்டுரைக்கப்பட்ட வசனம் உறுதியாகி, சகல மீறுதலுங் கீழ்ப்படியாமையும் நீதியான சர்க்கட்டுதலை அடைந்திருக்கக்கொள்ள, *அப். ௭, ௫௩. கலா. ௩, ௰௯.
௩ நாம், இத்தன்னை பெரிய ரட்சிப்புக்குக் கவலையற்றுப்போனோமாகில், எப்படித் தப்பிவிடுகிறோம், இது **கர்த்தரால் உரைக்கப்பட்டதுவே

கக்,

க்க, கேட்டவர்களால் நமக்குறுதியாக்கப்பட்டிருக்குதே. * ௰, ௨௰. ௨௯. ** ௰௨, ௨௫,

௪ தேவனும் கூட * அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலபல வல்லமைகளினாலும், பரிசுத்த ஆவியைத் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்ததினாலுஞ் சாட்சி கொடுத்தாரே. * மாற்கு. ௰௬, ௨௰.

௫ ஏனென்றால் வரப்போகிறதாயிருந்து நாம் பேசுகிறதுமான யுகத்தை அவர் தேவதூதருக்குக் கீழ்ப்படுத்தினதில்லை.

௬ ஒருவிடத்திலே ஒருவன் ஒருத்தன் திட்டசாட்சியாய்ச் சொன்னதாவது: * மனுஷனை நீர் நினைக்கிறதுக்கும், இல்லது மனுஷனுடைய குமாரனை நீர் நோக்கிப் பார்க்கிறதுக்கும் அவன் எம்மாத்திரம். * சங். அ. ௫ — ௯.

௭ நீர் அவனைக் கொஞ்சத்தியால் தேவதூதரிலுஞ் சிறியவராக்கினீர், மகிமையினாலுங் கனத்தினாலும் அவனை முடிசூட்டி, உம்முடைய கைகளுடைய கிரியைகளின்மேல் அதிகாரியாக வைத்து,

௮ சகலத்தையும் அவன் பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீரென்று. சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினதினாலே, ஒன்றையும் அவருக்குக் கீழ்ப்படாததாக வைக்கத்தில்லை. இப்போதோவெனில் சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டதை நாமின்னங் காணவில்லை.

௯ என்றாலும், பராபரனுடைய கிருபையினாலே * ஒவ்வொருத்தனுக்காகவும் மரணத்தை ருசி பார்க்கத்தக்கு, கொஞ்சத்தியால் தேவதூதரிலுஞ் சிறியவராக்கப்பட்டிருந்த யேசு மரணத்தை உத்தரித்ததினால் ** மகிமையினாலுங் கனத்தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். * க. யோவ. ௨, ௨. ** மத். ௨௮, ௰௮.

௰ ஏனென்றால் எல்லாம் ஆருக்காகவும் எல்லாம் ஆராலேயும் உண்டாயிருக்குதோ, அவர் அனேகம் பிள்ளைகளை மகிமைக்குள்ளாய்ப் பிரவேசிப்பித்தவரான அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே முற்றும் முடித்தவராக்க அவருக்கேற்றிருந்தது. * லூ. ௨௪, ௨௬. ௰௧.

௰௧ ஏனென்னில் பரிசுத்தம் பண்ணுகிறவரும் பரிசுத்தம் பண்ணப்படுகிறவர்களுமானவர்கள் எல்லாரும் ஒருத்தனாலே உண்டாயிருக்கிறார்கள். இதுநிமித்தியம் அவர் இவர்களைச் * சகோதரரென்றழைக்க வெட்கமில்லை: * யோவ. ௨௰, ௰௭.

௰௨ * உம்முடைய நாமத்தை என் சகோதரருக்கு அறிவித்து, நடுச்சபையில் உம்மைத் துதிப்பேனென்றும், * சங். ௨௨, ௨௩.

௰௩ பின்னையும்: * நானவரை நம்பியிருப்பேனென்றும், பின்னையும்: ** இதோ நானும் பராபரன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளுமென்றுஞ் சொல்லுகிறார். * சங். ௰௮, ௩. ** யெசா. ௮, ௰௮.

௰௪ ஆனதுகொண்டு, பிள்ளைகள் மாம்சத்துக்கும் ரத்தத்துக்கும் பங்குள்ளதுகளாயிருக்கக்கொள்ள, அவரும் அதற்கொத்தபடியே அதுகளுக்குப் பங்காளியானார், தாம் * மரணத்தினாலே மரணத்தின் வல்லமையுடை

உடை

உடையதாயிருக்கிறபிசாசானவனைத் தன்னாலே அழிப்பதற்கும். * க. யோ. ௩, ௰௫.

௰௫ உயிரோடிருக்குமநாளெல்லாம மரணப்பயமாய அடிமைத்தனத்துக்குள்ளாயிருந்தவர்யும்விடுதலைபண்ணுவதற்குமாகத்தானே.

௰௬ ஏனென்றால அவர் தேவதூதரின சுவாபமாயெடுக்காமல, ஆபிரகாமினுடைய சுவாபத்தையெடுத்திருக்கிறார்.

௰௭ ஆனபடியினாலே, தாமிரக்கமுள்ளவரும, சனத்தினபாவங்களை நிவிர்த்தியாக்க தெய்வ காரியங்களுக்கு உண்மையுள்ளபிரதான ஆசாரியருமாயிருக்கும்படிக்கு, அவர் எல்லாத்திலும * சகோதரருக்கொத்தவராகவேண்டியதாயிருந்தது. * பிலி. ௨, ௭. ௮.

௰௮ ஏனென்றால தாமெதிலே * சோதிக்கப்பட்டுப் பாடனுபவித்தாரோ, அதிலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்குச்சகாயமபண்ணலாம. * ௪, ௰௫. ௰௬.

## ௩. அதிகாரம்.

¶ மோசேயிலுமமேன்மையானகிறிஸ்துவினுடையசொற்கேட்கப்புத்திசொன்னது.

௧ ஆனபடியினாலே, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகியபரிசுத்தசகோதரரே, நாம அறிக்கைபண்ணுகிற * அப்போஸ்தலருமபிரதான ஆசாரியருமாகியகிறிஸ்துயேசுவைத்தியானித்துப் பாருங்கோள். * யோவ. ௨௰, ௨௧.

௨ * மோசே அவர் வீட்டிலெங்குமிருந்தது போல, அவர்தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். * ௪. மோ. ௰௨, ௭.

௩ ஆனால வீட்டைத்தொட்டு அதை உண்டுபண்ணினவனானவனுக்கு அதிககனமுள்ளவனாயிருக்கிறானே, அந்தப்படிக்குமோசேயைப்பார்க்கிலும இவர் அதிகமகிமைக்குப்பாத்திரரானார்.

௪ ஏனென்றால எந்தவீடாகிலும ஒருத்தனாலே உண்டாக்கப்படும, ஆனால அதுகளெல்லாம உண்டுபண்ணினவர் பராபரன்.

௫ மெய்தான, சொல்லப்படப்போற காரியங்களுக்குச்சாட்சியாக மோசே ஒரு ஊழியக்காரனாய அவர் வீட்டிலெங்கும உண்மையுள்ளவனாயிருந்தான.

௬ கிறிஸ்துவோவென்றால அவர் வீட்டுக்கதிகாரியானகுமாரனாய அப்படியிருக்கிறார். நாமதயிரியத்தையுமநம்பிக்கையினபுகழ்ச்சியையுமமுடிவுபரியந்தம உறுதியாயப்பிடித்திருந்தால, * அவருடையவீடு நாமதானே. * ௧. தீமோ. ௩, ௰௫.

௭ ஆகையால, பரிசுத்த ஆவிசொல்லுகிறதினபடியே: * இன்று அவருடைய சத்தத்தைக் கேட்டீர்களாகிலெ, * சங். ௯௫, ௭ — ௰௧.

௮ * வனாந்திரத்திலேகோபமூட்டுதலிலுஞ் சோதனையினநாளிலுமநடந்ததுபோல உங்களிருதயங்களைக்கடினப்படுத்தாதேயுங்கோள. * ௨. மோ. ௰௭, ௧ — ௭. ௪. மோ. ௰௪, ௧ — ௰.

௯ அங்கே உங்கள் பிதாக்கள் நம்மைச் சோதித்து, நம்மைப் பரீட்சைபார்த்து, நம்முடைய கிரியைகளை நாற்பது வருஷங் கண்டார்கள்.
௰ ஆனபடியினாலே நாம் அந்தச் சந்ததியை ரோசித்து: அவர்கள் எப்போதும் மனந்தப்பி நடந்து, நம்முடைய வழிகளை அறியாதிருக்கிறார்களென்று சொல்லி,
௰௧ * அவர்கள் நம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிப்பதில்லையென்று நம்முடைய கோபத்திலே ஆணையிட்டோமென்றார், * ௪ மோ. ௰௪, ௨௧ — ௨௩.
௰௨ சகோதரரே, சீவனுள்ள பராபரனை விட்டு மறுவிழுக்கிற அவிசுவாசமுள்ள பொல்லாத இருதயம் உங்களிலொருத்தனுக்குள்ளேயில்லாதபடிக்கு நீங்கள் பார்த்து,
௰௩ உங்களிலொருத்தனும் பாவமோசத்தினாலே கடினப்பட்டுப்போகாதபடிக்கு, இன்றென்னப்படுமட்டும் ஒருத்தருக்கொருத்தர் தினந்தினமும் புத்தி சொல்லுங்கோள்.
௰௪ ஏனென்றால் துவக்கத்தின் நம்பிக்கையை * முடிவுமட்டும் உறுதியாய்ப் பிடிக்கிறோமானால், கிறீஸ்துவுக்குப் பங்குள்ளவர்களாயிருக்கிறோம். * அதி. ௨, ௰.
௰௫ இன்றென்னப்பட்டக்கோள் அவருடைய சத்தத்தைக் கேட்டீர்களாகில், கோபமூட்டுதலிலே நடந்தது போலே உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதேயுங்கோள்.
௰௬ ஏனென்றாலே கேட்ட சிலர் கோபமூட்டினார்கள், மோசேயாலே எகிப்பத்திலிருந்து புறப்பட்ட எல்லாருமோ அல்ல.
௰௭ இப்போதும், நாற்பது வருஷமாய் எவர்களை ரோசித்தார், பாவஞ்செய்தவர்களையல்லவோ, * அவர்களுடைய சரீரங்கள் தான் வனாந்திரத்திலே விழுந்துபோச்சுது. * ௪. மோ. ௨௯, ௩௪. ௩௫.
௰௮ அவிசுவாசிகளுக்கே அல்லாமல் பின்னை எவர்களுக்குத் தம்முடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசியாதிருக்க ஆணையிட்டார்.
௰௯ அவிசுவாசத்தினாலே தான் அவர்கள் உள்ப்பிரவேசிக்கக்கூடாமல் போனதைப் பார்க்கிறோம்.

## ௪. அதிகாரம்.

௧ கிறீஸ்துவினாலுண்டாகும் இளைப்பாறுதலைத் தப்பவிடாதபடிக்கு எச்சரித்தது.

௧ ஆகையினாலே உங்களில் யாதொருத்தன் அவருடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசிக்கிறதுக்கான வாக்குத்தத்தத்தைத் தப்பவிட்டு, பிந்தியிருக்கிறவனாய்க் காணப்படுவானென்று பயந்திருக்கக்கடவோம்.
௨ ஏனென்றால் சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போலே நமக்கும் அறிவிக்கப்பட்டது, ஆனாலும் பிரசங்கத்தின் வசனங் கேட்டவர்களில் விசுவாசத்தோடே கலவாதபடியினாலே அவர்களுக்குப் பிரயோசனமற்றிருந்தது.

௰ பராபரனால மெலகிசெதெகின வணணமான பி-
ரதானாசாரியரெனறு நாமநதரிபபிககபபடடார.
௰௧ இபபடிககொததவரைககுறிததுபபெசவசன-
மெஙகளுககுவிஸதாரமும, நீஙகள கெட்க அசதி-
யாயபொனபடியாலவியாககியானபபணணுகிறதுககு அ-
ரிதுமாயிருககுது
௰௨ ஏனெனில காலததைபபாரததால, பொதக-
ராயிருககவெணடிய உஙகளுககுபபராபரனுடையதெ-
யவவாககியஙகளின ஆதிசூததிரஙகளை ஒனறெனறும-
படியும உபதெசிககததெவையாயிருக்குது. * நீஙகள
பெலககாரமலல, பாலததெவையுளளவர்களா-
னீர்கள. * ௧ கொரி. ௩, ௧. ௨.
௰௩ ஏனெனில பாலுணகிறவனெலலாம குழந-
தையாயிருககிறபடியினாலெ, நீதியின வசனததிலெப-
ழககாதவனாயிருககிறான.
௰௪ பெலததஆகாரமொநனமைதினமை வகைய-
றுககபபழககததினாலெசிநதைகளை அபபியாசிததிரு-
ககிறதெறினவர்களுடைய ஆகாரமாயிருககுது,

## ௬. அதிகாரம்.

¶ கிறிஸதுமெலகிசெதெகினவணணமானபிரதா-
ன ஆசாரியரெனகிறததைப பவுலவிஸதரிகக-
மனதாய, அவிசுவாசதியாயநமப அசதி-
யானவர்களுககுமுஞசொனனபுததி.

ஆகையினாலெநாமகிறிஸதுவினுடைய ஆதிசூததிரஙக-
ளின வசனததைவிட்டு, செததகிரியைகளுககுநீஙக-
லாகுஙகுணபபடுதல, பராபரன பெரில வைககும
விசுவாசம,
௨ ஞானஸனானஙகளின உபதெசம, கைகளைமெல-
வைககுதல, மரிததொரின உயிர்ததெழுநதல, நிததிய
தாயதீர்பபுஎனறதுகளின அஸதிவாரததைமறுப-
டியுமபொடாமல, தெறினஉபதெசததுககுபபொ-
ககடவொம.
௩ * பராபரனஉததாரஙகொடுததால அபபடிசெய-
வொம. * யொவ. ௰௫, ௫.
௪ ஏனெனில, ஒருதரமவெளிசசமாககபபட்டு, ப-
ரமனனைவருசிபாரதது, பரிசுததஆவிககு பஙகுளளவ-
ர்களாகி,
௫ பராபரனுடையநலவாறதைதையும வரபபொ-
றலொகததின பெலனகளையும ருசிபாரததிருககிற-
வர்கள,
௬ * அகலவிழுநது, பராபரனுடைய குமாரனைத த-
ஙகளுககுமறுபடியுஞசிலுவையிலறைநதுபொட்டு
அவகீர்ததிபபடுததினால, அவர்களைததிருமபககுணப-
படுததுககுபபுத்தாககககூடாதகாரியமாயிருக்குது, *
௰, ௨௬ — ௨௯.
௭ ஏனனறால, கனமெலஅடிககநதரமவருமம-
ழையககுடிததது, தனனைபபணபபடுததுகிறவர்க-
ளுககெறறபயிரையுஞசெனிபபிககிற நிலமபராபர-
னாலஆசீர்வாதமபெறும.

௮ முட்செடிகளையும் முட்பூண்டுகளை
முளைப்பிக்கிறதோ ஆகாதது * சாபத்துக்குச் சமீ
பமாயிருக்குது, அதின் முடிவு * * சுட்டெரிக்கப்பட
ல். * மத். ௰௧, ௨௰ — ௨௰௪. * * மத். ௩, ௰.
௯ ஆனாலும், பிரியமானவர்களே, நாங்களிப்படி
ச் சொன்னாலும் உங்களைக் குறித்து மகா வாசியானதும் ரே
ட்சிப்பைச் சேர்ந்ததுமான நம்பிக்கையாயிருக்கிறோம்.
௰ ஏனென்றால், * பராபரன் உங்கள் கிரிகை
யும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்தி
ருந்துஞ் செய்துவருகிறதினாலுந் தம்முடைய நாமத்துக்கா
க்காண்பித்த சிநேகத்தின் பிரயாசத்தையும் * * மறக்க
அநீதமானவரல்ல. * மத். ௰, ௪௨. * * மல். ௩, ௰௬.
௰௧ நீங்களோவென்றால் அசட்டராகாமல், வாக்
குத்தத்தங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமை
யினாலுஞ் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்ப
ற்றும்படிக்கு,
௰௨ உங்களில் அவனவன் முடிவுமட்டும் பரிபூர
ண நிச்சயமுள்ள நம்பிக்கைக்கான அந்தச் சாக்கிரதை
யையே காண்பிக்க ஆசையாயிருக்கிறோம்.
௰௩ ஏனென்றால் பராபரன் ஆபிரகாமுக்கு வாக்கு
த்தத்தம் பண்ணுகிறபோது, ஆணையிடத் தம்மிலும்
பெரியவரில்லாதபடியினாலே, * தம்முடைய பேரி
லே ஆணையிட்டு: * ௧. மோ. ௨௨, ௰௬ — ௰௮.
௰௪ உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன்னைப்
பெருக்கவே பெருகப்பண்ணுவேனென்றார்.
௰௫ அப்படியே அவன் நீடிய பொறுமையாயிரு
ந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.
௰௬ மனுஷரோவென்றால் தங்களிலும் பெரியவர்
பேரிலே ஆணையிடுகிறார்கள், உறுதியுண்டாக ஆணை
அவர்களுக்கு * சகல எதிர்ப்பேச்சுக்கும் முடிவு. * ௨.
மோ. ௨௨, ௰௧.
௰௭ ஆகையினாலே முன்வைக்கப்பட்டிருக்கிற நம்பிக்
கையைப் பிடிக்க அடைக்கலமாய் ஓடிவந்த நமக்குப் பரா
பரன் பொய்ச்சொல்லக்கூடாத இரண்டு அசையாக் கா
ரியங்களாலே பெலத்த ஆறுதலுண்டாகும்படிக்கு,
௰௮ பராபரன், தாம் வாக்குத்தத்தத்தின் சுதந்திரவா
ளிகளுக்குந் தம்முடைய ஆலோசனையின் அசையாமையை
அதிக பரிபூரணமாய்க் காண்பிக்கச் சித்தமாய், ஆணை
யாலே நடுநின்றார்.
௰௯ அந்த நம்பிக்கைப் பத்திரமும் உறுதியுந் திரைக்குள்
ளாகப் பிரவேசிக்கிறதுமான ஆத்துமநங்கூரமாயிருக்குது.
௨௰ அங்கே முன்னோடினவரும் * என்றென்றைக்கு
ம் மெல்கிசேதேக்கின் வண்ணமாகப் பிரதான ஆசாரிய
னுமான யேசு நமக்காக உள்ளே பிரவேசித்தார். * ௫, ௬. ௰.

## ௭. அதிகாரம்.

மெல்கிசேதேக் நம்முடைய பிரதான ஆசாரியராகிய
கிறிஸ்துவுக்கு விசேஷித்த முன்னடையா
ளமாயிருந்தானென்பது.

இந்த மெல்கிசேதேகோவென்றால் சாலேமின் ராசா
வும்

வும் உன்னதபராபரனுடைய ஆசாரியனுமாயிருந்தான்,
ராசாக்களை முறிய அடித்துவந்த ஆபிரகாமுக்கு அவன்
எதிர்க்கொண்டுபோய், அவனை ஆசீர்வதித்தான். * ௧.
மோ. ௰௪, ௰௮ — ௨௰.

௨ அவனுக்கு ஆபிரகாமெல்லாவற்றிலும் பத்திலொரு
பங்கு கொடுத்தான். அவன் முதலாவது நாமவியா
க்கியானத்தினாலே நீதியின் ராசா, பின்பு சமாதானத்தின் ரா
சாவென்றர்த்தங்கொள்ளுஞ் சாலேமின் ராசாவென்
றுஞ் சொல்லப்படுகிறான்.

௩ அவன் தகப்பனுந் தாயும் வங்கிஷ அட்டவணையு
மற்றவன், அவனுக்கு நாட்களின் துவக்கமுஞ் சீவ
னின் முடிவுமில்லாத்தத்தினாலே அவன் பராபரனுடைய
குமாரனுக்கொப்பிடப்பட்டு, நித்தியகாலமும்
ஆசாரியனாய் நிலைநிற்கிறான்.

௪ இவனெத்தனை பெரியவனென்றதைப் பாரு
ங்கள். கோத்திரத்தலைவனாகிய ஆபிரகாமுங்கூட
அவனுக்குக் கொள்ளையிலே பத்திலொரு பங்குகொடு
த்தான்.

௫ மெய்தான், * லேவியின் புத்திரரில் ஆசாரியப்பட்
டத்தையடைகிறவர்களும், தாங்களும் ஆபிரகாமின்
இடுப்பிலிருந்துவந்த தங்களுடைய சகோதரராகிய சனத்
தனைகையிலே தாயப்பிரமாணத்தின்படி பத்திலொன்
று வாங்கக் கட்டளைபெற்றிருக்கிறார்கள். * ௪. மோ.
௰௮, ௨௰ — ௨௮.

௬ ஆனாலிவர்களுடைய வங்கிஷவரிசையிலவரா
தவன் ஆபிரகாமினிடத்திலே பத்திலொன்று வாங்கி, *
வாக்குத்தத்தங்களைப் பெற்றவனை ஆசீர்வதித்தான். *
௧. மோ. ௰௨, ௨. ௩.

௭ ஆனாலே பெரியதினாலே சிறியது ஆசீர்வதிக்கப்படுமெ
ன்கிறதுக்கு எதிர்ப்பேச்சொன்றுமில்லையே.

௮ பின்னையும் இவ்விடத்திலே மரிக்கிற மனுஷர் பத்திலொ
ன்றை வாங்குகிறார்கள், அவ்விடத்திலோ, பிழைக்கி
றானென்கிறதாய சாட்சிபெற்றவன் வாங்குகிறான்.

௯ பின்னையும் பத்திலொன்று வாங்குகிற லேவியும்
ஆபிரகாமினாலே பத்திலொன்று கொடுத்தவனென்கிற
தாய் சொல்லலாமே.

௰ ஏனென்றால் மெல்கிசேதேக் கென்பவன் அவனை எதிர்க்
கொண்டுபோனபோது, இவனின்னந்தகப்பனிடுப்
பிலிருந்தான்.

¶ மெல்கிசேதேக்கின் வண்ணமான கிறிஸ்துவி
னுடைய ஆசாரியப்பட்டம் லேவிகோத்திர
ஆசாரியப்பட்டத்திலும் எத்தனை மே
ன்மையானதென்பது.

௰௧ பின்பு போதுஞ்சனம் லேவிகோத்திர ஆசாரியப்
பட்டத்துக்குள்ளாய் அல்லோ தாயப்பிரமாணத்தை
ப்பெற்றது, ஆகையால் * தேவத்தலைவனாயிருந்ததே
யானால், ஆரோனின் வண்ணமென்னப்படாமல்,
* * மெல்கிசேதேக்கின் வண்ணமென்னப்படுகிற வே
றொரு ஆசாரியரெழும்பத் தேவையாயிருப்பானேன்.
* குலா. ௨, ௨௧. * * சங். ௱௰, ௪.

௰௨ ஆசாரியப்பட்டம் மாறிப்போகுதேயாகில், நியாயப்பிரமாணத்துக்கும் மாறுதலுண்டாகவேண்டியது.

௰௩ ஏனென்றால் இதுகள் எவரைக்குறித்துச் சொல்லப்படுகுதோ, அவர் வேறே கோத்திரத்துக்குள்ளானவர், அதிலே ஒருத்தரும் பலிபீடத்தை விசாரித்ததில்லை.

௰௪ அதேதென்றால் நம்முடைய கர்த்தர் * யூதாவிலிருந்து உதித்தது வெளியரங்கமாயிருக்குது; அந்தக் கோத்திரத்தைக்குறித்து மோசே ஆசாரியப்பட்டத்துக்காக ஒன்றுஞ்சொன்னதில்லை. * ௧. மோ. ௪௯, ௰. யெச. ௰௧, ௧. ௨.

௰௫ பின்னையும் மாம்சீகக்கட்டளையான நியாயப்பிரமாணத்தின்படியல்ல, அழியாத சீவனுடைய பெலத்தின்படியான வேறொரு ஆசாரியர் மெல்கிசேதேக்கின் சாயலாயெழும்புகிறதினால்,

௰௬ அது இன்னம் அதிக வெளியரங்கமாயிருக்குது.

௰௭ ஏனென்றால் * நீர் என்றென்றைக்கும் மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசாரியரென்று சாட்சி சொல்லுகிறார். * சங். ௱௰, ௪.

௰௮ அதேதென்றால் முந்தின கட்டளை தன் பெலயீனத்தினிமித்தியமும் அப்பிரயோசனத்தினிமித்தியமும் தள்ளப்படுகுது.

௰௯ ஏனென்றால் * நியாயப்பிரமாணம் ஒன்றையும் முடித்ததில்லை, வாசியான நம்பிக்கையை வருவிக்குதலோவென்றால் காரியத்தை முடிக்குது, அதினாலே பராபரனண்டைக்குச் சேருகிறோம். * அப்போ. ௰௩, ௩௯.

௨௰ அவர்களோ ஆணையில்லாமல் ஆசாரியராக்கப்பட்டார்கள்.

௨௧ இவரோவென்றால், * நீர் என்றென்றைக்கும் மெல்கிசேதேக்கின் வண்ணமான ஆசாரியரென்று கர்த்தர் ஆணையிட்டார், மனஸ்தாபப்படாமலுமிருப்பாரென்று தம்முடனே சொன்னவராலே ஆணையோடே ஆசாரியரானார். * சங்கீ. ௱௰, ௪.

௨௨ இப்படியே ஆணையில்லாமலே இயேசு ஆசாரியராக்கப்படவில்லையென்கிறது எத்தனை அதிகமோ, அத்தனைக்கு வாசியான உடன்படிக்கைக்குப் பிணையாளியானார்.

௨௩ அவர்களுமோ, மரணம் அவர்களைத் தரித்திருக்கவொட்டாததினாலே, அநேகர் ஆசாரியரானார்கள்.

௨௪ இவரோவென்றால் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, ஆசாரியப்பட்டம் அவருக்கு மாறாததாயிருக்குது.

௨௫ ஆகையினாலே அவர் தம்முடைய மூலமாய்ப் பராபரனண்டைக்குச் சேருகிறவர்களை முற்றுமுடிய ரட்சிக்கவுங்கூடும், ஏனென்றால் * இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுக்கு என்றென்றைக்கும் பிழைத்திருக்கிறார். * ௧. யோவா. ௨, ௧.

௨௬ ஏனென்றால் இப்படிக்கொத்த பரிசுத்தருங் குற்றமில்லாதவருங் கறையற்றவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயரமானவரும்,

ஆன

௨௭ பிரதான ஆசாரியர்களைப்போல நித்தம் சுயபாவங்களுக்காக முன்னும் ஜனத்தின் பாவங்களுக்காகப் பின்னும் பலிகளையிடத் தேவையில்லாதவருமாகிய பிரதான ஆசாரியர் நமக்கேற்றவராயிருந்தார், ஏனெனில் இதை ஒரேவிசை தம்மையே பலியிட்டதினாலே செய்தார். * ௫, ௩.
௨௮ நியாயப்பிரமாணமோ பெலவீனமுள்ள மனுஷரைப் பிரதான ஆசாரியராக்கவைக்குது, நியாயப்பிரமாணத்துக்குப் பிறகு வந்த ஆணைவார்த்தையோவென்றால் என்றென்றைக்கும் நிறைவாகராண குமாரனை வைக்குது.

## ௮. அதிகாரம்.

¶ கிறிஸ்து பரமபிரதான ஆசாரியரும் உத்தம உடன்படிக்கையின் மத்தியஸ்தருமென்பது.

இப்போது சொன்னதுகளின் தொகை என்னவென்றால், * பரமண்டலங்களிலே மகத்துவ ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்து, * ௪, ௰௪.
௨ பரிசுத்த ஸ்தலத்துக்கும், மனுஷனல்ல கர்த்தரே போட்ட மெய்யான கூடாரத்துக்கும் ஊழியக்காரனாயிருக்கப்பட்ட பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.
௩ ஏனென்றால் எவ்வொரு பிரதான ஆசாரியனும் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தவைக்கப்படுகிறான், ஆகையால் செலுத்துவதற்கு இவருக்கும் ஏதாகிலும் உண்டாயிருக்க வேண்டியதாயிருந்தது.
௪ இவர் பூமியிலிருந்தாரேயானால் ஆசாரியராயிரார், ஏனென்றால் நியாயப்பிரமாணத்தின்படியே காணிக்கைகளைச் செலுத்துகிற ஆசாரியர்களிருக்கிறார்கள்.
௫ இவர்கள் பரமகாரியங்களின் * மாதிரிக்கும் நிழலுக்கும் ஊழியஞ்செய்கிறார்கள். அப்படிக் கூடாரத்தைச் செய்யப்பண்ணப்போகிற மோசேக்கு: * நீ எல்லாத்தையும் பருவதத்தில் உனக்குக் காண்பிக்கப்பட்ட மாதிரியின்படியே செய்யப்பாரென்று தேவவுத்தரவுண்டாச்சுது. * கொலொ. ௨, ௰௭. * * ௨. மோ. ௨௫, ௪௰.
௬ இப்போதுமவரெத்தனை கருவாசியானதும் வாசியான வாக்குத்தத்தங்களின்மேல் கட்டளையிடப்பட்டதுமான உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறாரோ, அத்தனைக்கு விசேஷித்த ஊழியத்தையும் பெற்றார். * ௨. கொரி. ௩, ௬—௯.
௭ ஏனென்றால் அந்த முதலாம் உடன்படிக்கை குற்றப்படாதிருந்ததானால், இரண்டாவதுக்கிடந் தேடப்படுவதில்லை.
௮ ஏனென்றால் இவர் அவர்களைக் குற்றப்படுத்தி அவர்களுக்குச் சொல்லுகிறதாவது: * இதோ நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்போ இஸ்ரவேல் வீட்டோடும் யூதாவின் வீட்டோடும் புது உடன்படிக்கையைப் பண்ணுவோம், * யெரே. ௩௧, ௩௧—௩௪.

௯

௯ நான் அவர்கள் பிதாக்களோடே, அவர்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துவரக் கைப்பிடித்த நாளிலே பண்ணின உடன்படிக்கையின்படியே யல்ல, ஏனென்றால் அவர்கள் நம்முடைய உடன்படிக்கையிலே நிலைநிற்கவில்லை, நானும் அவர்களைப் புறக்கணித்தேனென்று கர்த்தர் சொல்லுகிறார்.
௰ அந்நாட்களுக்குப் பிறப்பாடே நான் இஸ்ரவேல் வீட்டோடே பண்ணப்போற உடன்படிக்கையாவது: நாம் நம்முடைய தாயப்பிரமாணங்களை அவர்கள் மனதிலே கொடுத்து, அதுகளை அவர்கள் இருதயத்திலே எழுதி, அவர்களுக்குப் பராபரனாயிருப்போம், அவர்கள் நமக்குச் சனமாயிருப்பார்களென்று கர்த்தர் சொல்லுகிறார்.
௰௧ ஒருத்தனுந்தனக்கடுத்தவனையும் ஒருத்தனுந்தன் சகோதரனையுங் கர்த்தரையறியென்று போதிப்பதில்லை, ஏனென்றால் அவர்களிலே சிறியவன்துவக்கிப் பெரியவன்மட்டும் எல்லாரும் நம்மை அறிவார்கள்.
௰௨ ஏனென்றால் நாம் அவர்கள் அநியாயங்களை மன்னித்து அவர்கள் பாவங்களையும் அவர்கள் அக்கிரமங்களையும் இனிநினையாதிருப்போமென்கிறார்.
௰௩ புது உடன்படிக்கையென்று சொல்லுகையிலே, முந்தினதைப் பழசாக்கினார். ஆனால் பழசும் முத்தலுமாயிருக்கிறது உருவழிந்துபோகச் சமீபமாயிருக்குது.

## ௯. அதிகாரம்.

¶ அப்பாலும் பழைய ஏற்பாட்டினுடைய ஆசாரியப்பட்டமும் புது ஏற்பாட்டின் பொருளான ஆசாரியப்பட்டமுமொத்துப் பார்க்கப்படுகுது.

மெய்தான; முந்தின உடன்படிக்கைக்கும் ஆராதனையின் நியாயங்களும் லௌகீக பரிசுத்தஸ்தலமுமிருந்தது.
௨ ஏனென்றால் முதலாங் கூடாரஞ் செப்பனிட்டப்பட்டுது, அதிலே * குத்துவிளக்கும் ** மேசையுந் தேவசமுகத்தப்பங்களுமிருந்துது, அது பரிசுத்தமானதென்னப்படும். * ௨. மோ. ௨௫, ௩௧—௩௯. ** ௨. மோ. ௨௫, ௨௩—௩௰.
௩ ஆனால் இரண்டாந்திரைக்குப் பின்பாகத்திலே * பரிசுத்தத்துக்குப் பரிசுத்தமென்னப்பட்ட கூடாரமிருந்துது. * ௨. மோ. ௨௬, ௩௩. ௩௪.
௪ அது பொன்தூபங்காட்டுகிற கலசமும், * எங்கும் பொன்தகடுமூடிய உடன்படிக்கையின் பெட்டியுமுள்ளதாயிருந்தது. அதிலே ** மன்னாவைக்கப்பட்ட பொன்பாத்திரமும், *** துளிர்த்ததாகிய ஆரோனின் கோலும், **** உடன்படிக்கையின் பலகைகளும், * ௨. மோ. ௨௫. ௰—௰௫. ** ௨. மோ. ௰௬. ௩௨—௩௪. *** ௪. மோ. ௰௭, ௧—௰௧. **** ௨. மோ. ௨௫, ௰௬.
௫ அதின்மேலே * கிருபாசனமான மூடிக்கு நிழலிடு

ஸ்டுக்கு மகிமையினுடைய கெருபீன்களுமிருந்தது. இவைகளைக் குறித்துத் தனித்தனியே பேசப்போசமையமல்ல. * ௨. மோ. ௨௫, ௰௭ — ௨௨.

௬ இதுகளிப்படிச் செப்பனிடப்பட்டபின்போ வெளியிலே, ஆராதனைகளைச் செய்துமுடிக்கிற ஆசாரியர்கள் முன்கூடாரத்திலேதானே எப்போதும் உட்பிரவேசிக்கிறார்கள்.

௭ இரண்டாவதிலோ * வருஷத்துக்கொருவிசை பிரதான ஆசாரியன்மாத்திரம் உட்பிரவேசிக்கிறான், ஆனாலுந் தனக்காகவும் ஜனத்தின் தப்பிதங்களுக்காகவுந் தான் செலுத்தும் இரத்தமில்லாமல்லல. * ௩. மோ. ௰௬, ௨. ௰௪. ௩௪.

௮ முதலாங்கூடாரம் நிலைகொண்டிருக்குமட்டும் பரிசுத்தஸ்தலத்துக்குப் போகிறவழி இன்னம் வெளிப்பிரசங்கமானதில்லையென்கிறதைப் பரிசுத்த ஆவி இதினாலே தெரியப்படுத்தினார்.

௯ அந்தக்கூடாரங் காணிக்கைகளும் பலிகளுஞ் செலுத்தப்பட்டுவருகிற அக்காலத்துக்கேற்றவுவமையாயிருந்தது.

௰ இதுகள் ஆராதனை செய்கிறவனை மனச்சாட்சியிலே தேறினவனாக்கமாட்டாமல், போசனங்களோடும் பானங்களோடும் பலவித ஸ்நானங்களோடும் மாங்கிஷநீதிகாயங்களோடும் மாத்திரங் கூடினதுகளாயிருந்து, சீர்திருத்தலின் காலம்மட்டாகச் சுமத்தினவைக்கப்பட்ட காரியங்களாயிருந்தது.

௰௧ ஆனால் கிறிஸ்து வரப்போகிற நன்மைகளின் பிரதான ஆசாரியராய் வந்து, இந்தச் சிஷ்டிப்பாகிய கைவேலையான கூடாரத்தின் வழியாகவல்ல, * அதிகப்பெரிதும் உத்தமமுமானதின் வழியாகவும், * ௰.
௰௯ — ௨௧.

௰௨ கிடாய்கள் கன்றுக்குட்டிகளுடைய இரத்தத்தாலுமல்ல, தம்முடைய சுயரத்தத்தாலும் ஒரேவிசை * பரிசுத்தஸ்தலத்திலே, நித்திய மீட்குதலையுண்டுபண்ணி, உட்பிரவேசித்தார். * ௪, ௰௪.

௰௩ ஏனென்றால், * எருதுகள் கிடாய்களுடைய இரத்தமும், ** தீட்டுப்பட்டவர்கள்மேலே தெளிக்கப்பட்ட கிடாரியின் சாம்பலும் மாங்கிஷத்துய்யமுண்டாகப் பரிசுத்தப்படுத்தினால், * ௩. மோ. ௰௬, ௰௪. ௰௫. ** ௪. மோ. ௰௯, ௨. ௯.

௰௪ எத்தனை அதிகமாய் நித்திய ஆவியினாலே தம்மைத்தானே பராபரனுக்குப் பழுதற்றவராய்ப் பலியிட்ட * கிறிஸ்துவினுடைய இரத்தம் உங்கள் மனச்சாட்சியைச் சீவனுள்ள பராபரனுக்கூழியஞ்செய்யும்படிக்கு, செத்தக்கிரிகைகளறச் சுத்திகரிக்கும். * ௧. பேது. ௧. ௰௯, ௧. யோவா. ௧, ௭. அபி. ௧, ௫.

௰௫ முதலாமுடன்படிக்கையின் கீழ்ச்சுமர்ந்த மீறுதல்களின் மீட்புக்காக மரணமுண்டாகி, அப்படியே அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நித்தியசுதந்திரத்தை அடைவதற்காக, * அவர் புதுஉடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார். * ௰௨, ௨௪. ௧. தீமோ. ௨, ௫.

௰௬ ஏனென்றால் மரணசாதனம் எங்கேயோ, அங்கே

அங்கே

அங்கே அந்தச் சாதகத்தை எழுதினவனுடைய மரணமுண்டாகவேண்டியது.

௰௭ ஏனென்னில் மரணமுண்டானபிற்பாடே, அந்தச் சாதகம் உறுதியானது, அதை எழுதினவன் உயிரோடிருக்கக்கொள்ள அதுக்குப் பெலனில்லையே.

௰௮ ஆனதுகொண்டு முதலாவதும் ரெத்தமில்லாமல் பிரதிஷ்டைபண்ணப்படவில்லை.

௰௯ ஏனென்றால், † மோசேயால் எல்லாச்சனத்துக்கும் நியாயப்பிரமாணத்தின் கற்பனையெல்லாஞ் சொல்லப்பட்டபிற்பாடு, அவன் கன்றுக்குட்டி கிடாய்களுடைய ரெத்தத்தைத் தண்ணீரோடுஞ் சிவப்பான ஆட்டுரோமத்தோடும் ஈசோப்போடுங்கூட வாங்கி, புஸ்தகத்தின்மேலும் எல்லாச்சனத்தின்மேலுந் தெளித்து. † ௨. மோ. ௨௪, ௩—௮

௨௰ தேவபராபரன் உங்களுக்குக் கற்பித்த உடன்படிக்கையினுடைய ரெத்தமானதென்றான்.

௨௧ † கூடாரத்தின்மேலும் ஆராதனையினுடைய எல்லாப் பணிமுட்டுகளின்மேலும் அப்படியே ரெத்தத்தைத் தெளித்தான். † ௩. மோ. ௮, ௰௫. ௰௯. ௩௰ ௰௬, ௰௪. ௨௰.

௨௨ கொஞ்சங்குறைய எல்லாம் நியாயப்பிரமாணத்தின்படியே ரெத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும், † ரெத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்புண்டாகாது. † ௩. மோ. ௰௭, ௰௧.

௨௩ ஆகையால் பரமண்டலங்களிலுள்ளதுகளின் மாதிரிகைகளோ இதுகளினாலும், பரமகாரியங்களோ தானே இதுகளிலும் வாசியான பெலிகளினாலுஞ் சுத்திகரிக்கப்படவேண்டியதாயிருந்தது.

௨௪ ஏனென்றால் கிறீஸ்து மெய்யான பரிசுத்தஸ்தலத்துக்கு நிழல் அடையாளமான கைவேலையாயிருக்கிற பரிசுத்தஸ்தலத்திலல்ல, பரமண்டலத்திலேதானே, † இப்போ பராபரனுடைய சமுகத்தில் நமக்காகப் பிறசன்னமாயிருக்க, உள்ளே பிறவேசித்தார். † ௧. யோவ. ௨, ௧.

௨௫ பிறதான ஆசாரியன் அன்னிய ரெத்தத்தோடே † வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குள்ளே பிறவேசிக்கிறதுபோல, தம்மை அனேகம்விசை பெலியிடுதற்கு இதுக்குள்ளே பிறவேசித்ததுமில்லை. † ௨. மோ. ௩௰, ௰.

௨௬ மற்றப்படி அவர் லோகத்தோற்ற முதல்கொண்டு அனேகம்விசை பாடுபடவேண்டியதாயிருக்கும், இப்போதோவென்றால் லோகமுடிகிற காலத்தில் ஒரேவிசை தம்மைப் பெலியிடுகிறதினாலே பாவத்தை நிவாறணம்பண்ண வெளிப்பட்டார்.

௨௭ ஒரேவிசை மரிக்கிறதும் அதுக்குப் பிற்பாடே நியாயத்தீர்ப்பும் எந்தப்பிறகாரமாக மனுஷருக்குக் குறிக்கப்பட்டிருக்குதோ,

௨௮ அந்தப்பிறகாரமாகக் கிறீஸ்து, † அனேகருடைய பாவங்களைச் சுமந்துதீர்க்க, ஒரேவிசை பெலியான பின்பு இரண்டாம்விசை, தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு ரெட்சிப்பாகப் பாவமில்லாமல் தெரிசனையாவார். † ஷே. ௫, ௰௫. ௰௮.

## ௰. அதிகாரம்.

௧ கிறிஸ்துவுடைய பலியின் பரிபூரணத்தன்மை பொலவைக்காண்பித்து.

நியாயப்பிரமாணமானது மேலான காரியங்களின் சொரூபமாயிராமல், வரப்போகிற நன்மைகளின் நிழலாயிருக்கிறபடியினாலே, அது சேருகிறவர்களை, தாங்கள் எப்போதும் வருஷந்தோறும் செலுத்துகிற பலிகளினாலே ஒருக்காலும் தேறினவர்களாக்கமாட்டாது. * கொலோ. ௨, ௰௬. ௰௭.

௨ ஏனென்றால் ஆராதனை செய்கிறவர்கள் ஒருப்பு மனச்சாட்சியிலே பாவமில்லாமலிருக்கச் சுத்தமாக்கப்பட்டார்களானால், அதுகளைச் செலுத்தப்படாமலிருந்துபோகுமே.

௩ அதுகளாலே வருஷந்தோறும் பாவங்களின் நினைவுகூருதலிருக்குது.

௪ ஏனென்றால் எருதுகளிடைய கிடாக்களுடைய இரத்தம் பாவங்களை நீக்கிப்போடக்கூடாத காரியமாயிருக்குது.

௫ ஆகையால் அவர் லோகத்துக்குள் வந்து சொல்லுகிறதாவது: * பலியையுங் காணிக்கையையும் நீர் விரும்பாமல், சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர். * சங். ௪௰. ௭ — ௯.

௬ சர்வாங்கதகனபலிகளும் பாவத்தின் நிமித்தம் செலுத்தும் பலிகளும் உமக்கிஷ்டமானதல்ல.

௭ இதோ, பராபரனே, பொஸ்தகச்சுருளிலே என்னைக்குறித்தெழுதியிருக்குது, உம்முடைய சித்தத்தின்படி செய்ய வருகிறேனென்றப்போ சொன்னேனென்றார்.

௮ நியாயப்பிரமாணத்தின்படி செலுத்தப்படுகிற பலியையுங் காணிக்கையையுஞ் சர்வாங்க தகனங்களையும் பாவத்தின் நிமித்தம் செலுத்தும் பலிகளையும் நீர் விரும்பினதில்லை, அதுகள் உமக்குப் பிரியமுமில்லையென்று முன்சொல்லி,

௯ பிற்பாடு: இதோ, பராபரனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய வருகிறேனென்றார். இரண்டாவதை நிலைநிறுத்த முதலாவதை நீக்கிப்போடுகிறார்.

௰ அந்தச் சித்தத்தினாலே யேசுக்கிறிஸ்துவினுடைய சரீரத்தின் பலியினாலே * ஒரேவிசையாய்ப் பரிசுத்தமாக்கப்பட்டோம். * ௯, ௰௨.

௰௧ எவ்வொரு ஆசாரியனுந்தினம் ஆராதனை செய்கிறவனும் பாவங்களை ஒருக்காலும் நீக்கிப்போடக்கூடாத பலிகளை அநேகந்தரந் திரும்பத்திரும்பச் செலுத்துகிறவனுமாயிருந்தான்.

௰௨ இவரோவெனில் பாவங்களின் நிமித்தம் ஒரே பலியைச் செலுத்தினபின்பு, என்றென்றைக்கும் * பராபரனுடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்து, * ௧, ௩.

௰௩ * தம்முடைய சத்துருக்கள் தம்முடைய பாதப்படியாக்கப்போடப்படுகிறதுக்கு எதிர்பார்த்திருக்கிறார். * சங். ௱௰, ௧.

௧௪ ஏனென்றால பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரேபலியினாலே அவர் நித்தியத்துக்கும் பூரணவர்களாக்கினார்.

௧௫ இதைப்பரிசுத்தஆவியும நமக்குச்சாட்சியாகச் சொல்லுகிறார், எப்படியென்றால:

௧௬ * அந்நாட்களுக்குப்பின்பு நான அவர்களோடேபண்ணும உடனபடிக்கையாவது: நானென்னுடைய பிரமாணங்களை அவர்கள் இருதயங்களிலேகொடுத்து, அவைகளை அவர்கள் சிந்தைகளிலெழுதுவேனென்று கர்த்தர் சொல்லுகிறாரென்கிறதைச்சொன்னபின்பு, * அ. ௰. ஹு. யெரே. ௩௧, ௩௩. ௩௪.

௧௭ பின்பு: அவர்களுடைய பாவங்களையும அவர்களுடைய அக்கிரமங்களையும இனிநினையாதிருப்பேனென்றுஞ்சொல்லுகிறார்.

௧௮ இதுகளினமன்னிப்பிருக்குமிடத்திலே பாவங்களினிமித்தம் பலிசெலுத்துதலில்லை.

[illegible]
* உண்டாகியபுத்தி.

௧௯ ஆகையால சகோதரரே, யேசுவினுடைய இரத்தத்தினாலே பரிசுத்தஸ்தலத்துக்குள்ப்பிரவேசிக்க,

௨௦ அவர் நமக்கு * தம்முடைய மாம்சமாகிய திரைச்சீலையின் வழியாய்ப் பிரதிஷ்டைபண்ணின புதிதும் ஜீவனுள்ளதுமான வழியாகப் பிரவேசிக்கத் தைரியமும், * மத்தே. ௨௭. ௫௧.

௨௧ பராபரனுடையவீட்டின்மேல அதிகாரியான மகாஆசாரியருமநமக்கிருக்கிறதினால,

௨௨ நாம உண்மையுள்ள இருதயத்தோடும, பரிபூரணவிசுவாசத்தோடும, இருதயங்களைத்துர்மனச்சாட்சியறத்தெளிக்கப்பட்டவர்களாகவும, சரீரத்தைச்சுத்ததண்ணீரிலேகழுவப்பட்டவர்களாகவுஞ்சேர்வோம.

௨௩ நம்பிக்கையின அறிக்கையை அசைவில்லாமலபிசகாமலபிடித்திருக்கக்கடவோம. ஏனென்றால வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவர்.

௨௪ சிநேகத்துக்கும நறகிரியைகளுக்கும் ஏவிவிடும்படி நாமஒருவரையொருவர் கவனித்திருந்து, * ௩, ௰௩. ௧. தெச. ௫. ௰௧.

௨௫ நாமகூடுகிறகூட்டத்தை, சிலருக்குப்பழக்கமாயிருக்கிறதுபோல, விட்டுவிடாமல, நாளசமீபிக்கிறதைநீங்கள்காணுகிறீர்களோ, அத்தனை அதிகமாய * ஒருவரையொருவர் புத்திசொல்லக்கடவோம. * கொலோ. ௩, ௰௬.

௨௬ ஏனென்றால * நாமசத்தியத்தினஉணர்ச்சியைப்பெற்றபின்பு மனப்பூர்வமாயப்பாவஞ்செய்தால, இனிப்பாவங்களினிமித்தமஒருபலியுமிராமல, * ௬, ௪ — ௮.

௨௭ நியாயத்தீர்ப்புக்கும, எதிராளிகளைப்பட்சிக்கப்போகிற * அக்கினிக்குமபயங்கரமானஎதிர்பார்க்குதலேமீந்திருக்கும. * ௨. தெச. ௧, ௮.

௨௮ மோசேயினநியாயப்பிரமாணத்தைத்தள்ளுகிறவ னிரு

ளினாலே, இரக்கமில்லாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறான்.

௨௯ பராபரனுடைய குமாரனை மிதித்துப்போட்டு, தான் பரிசுத்தமாக்கப்பட்ட உடன்படிக்கையின் இரத்தத்தைப் பரிசுத்தமில்லாததென்றெண்ணி, கிருபையினுடைய ஆவியை நிந்திக்கிறவன் எத்தனை அதிகேடான ஆக்கினைக்குப் பாத்திரனாகப்படுவானென்று நினைக்கிறீர்கள்.

௩௰ ஏனென்றால்: * நீதியைச் சரிக்கட்டுதல் நம்முடையது, நானே பதிலுக்குக் கொடுப்போமென்று கர்த்தர் சொல்லுகிறாரென்றும், திரும்பவும்: ** கர்த்தர் தம்முடைய ஜனத்துக்கு நியாயந்தீர்ப்பாரென்று சொன்னவரை அறிவோம். * ரு. மோ. ௩௨, ௩௫. ** ரு. மோ. ௩௨, ௩௬.

௩௧ சீவனுள்ள பராபரனுடைய கைகளிலே விழுகிறது பயங்கரமானது.

௩௨ ஆனால் நீங்கள் வெளிச்சமாக்கப்பட்டு, பாடுகளின் வெகுவான போராட்டத்தைச் சகித்த முந்தின நாட்களை நினைவுகூருங்கோள்.

௩௩ நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் வேடிக்கையுமாக்கப்பட்டீர்களே இப்படி நடத்தப்பட்டவர்களுடைய பங்காளிகளுமானீர்களே.

௩௪ அதேதென்னில் என் கட்டுகளுக்கு நீங்கள் பரிதாபித்தீர்கள், பரமண்டலங்களிலே நித்தியமான நல்ல ஆஸ்தி உங்களுக்குக்குண்டென்றறிந்து, உங்களுக்குள்ளதுகளைச் சந்தோஷத்தோடே சேதமாகவுங் கொடுத்தீர்கள்.

௩௫ ஆகையினாலே * மகா பலனுள்ள உங்களது தயிரியத்தை விட்டுவிடாதேயுங்கோள். * மத். ௰, ௩௨.

௩௬ அதேதென்னால், நீங்கள் பராபரனுடைய சித்தத்தைச் செய்து வந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெறும்படிக்கு, * பொறுமை உங்களுக்குத் தேவையாயிருக்குது. * லூ. ௨௧, ௰௯.

௩௭ * ஏனெனில் வருகிறவர் இன்னங் கொஞ்சப் போதிலே தாமதியாமல் வருவார். * ஆபகூ. ௨, ௩.

௩௮ ஆனால் * விசுவாசத்தினாலே நீதிமானானவன் பிழைப்பான், பின்வாங்கிப்போனானாகில், அப்படிக்கொத்தவன் பேரில் நம்முடைய ஆத்துமம் பிரியமாயிராதென்கிறார். * ஆபகூ. ௨, ௪.

௩௯ நாமோ வெளிலே கெட்டுப்போகப் பின்வாங்கினவர்களாயிராமல், ஆத்துமம் இரட்சிக்கப்பட விசுவாசமானவர்களாயிருக்கிறோம்.

## ௰௧. அதிகாரம்.

### விசுவாசத்துக்கு வெகு திஷ்டாந்தங்கள்.

விசுவாசமோவென்றால் நம்பப்படுகிற காரியங்களின் திட அஸ்திவாரமும், ** காணாத காரியங்களின் நிச்சயத்தைத் தெரிவிக்குதுமாயிருக்குது. * சங். ௨௭, ௭. ௱௨௫, ௧. ௱௪௯, ௫. ௯. ** ௨. கொரி. ௫, ௭.

௨ அதினாலே தானே மூப்பரானவர்கள் நற்சாட்சிபெற்றார்கள்.

௩ விசுவாசத்தினாலே நாம், * லோகம் பராபரனுடைய வசனத்தினாலே செய்யப்பட்டிருக்கிறதென்பதையும், இந்தப் பிரகாரமாகக் காணப்படுகிறதுகள் கண்ணுக்குத் தோன்றுங் காரியங்களாலே உண்டானதல்லவென்கிறதையும் உணருகிறோம். * சங். ௩௩, ௬.

௪ விசுவாசத்தினாலே * ஆபேல் காயீனைப் பார்க்கிலும் மேன்மையான பலியைப் பராபரனுக்குச் செலுத்தினான், அதினாலே அவன், பராபரன் அவனுடைய காணிக்கைகளுக்குச் சாட்சிகொடுத்தபடியால், * * நீதிமானென்று சாட்சிபெற்றான், அதினாலே அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான். * ௧ மோ. ௪, ௪. * * மத். ௨௩, ௩௫.

௫ விசுவாசத்தினாலே * ஏனோக் மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, பராபரன் அவனை எடுத்துக்கொண்டபடியினாலே காணப்படாமல் போனான்; ஏனென்றால் அவன் எடுத்துக்கொள்ளப்படுகிறதுக்கு முன்னே பராபரனுக்குப் பிரியமானவனென்று சாட்சிபெற்றான். * ௧. மோ. ௫, ௨௪.

௬ ஆனால் விசுவாசமில்லாமல் அவருக்குப் பிரியமாயிருக்கக்கூடாது, ஏனென்றால் பராபரனிடத்திற் சேருகிறவன், அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடி வருகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேணும்.

௭ விசுவாசத்தினாலே நோவா, தானின்னுங் காணப்படாத காரியங்களுக்குத் தேவனாலே எச்சரிக்கப்பட்டபோது பயந்து, தன் வீட்டினுடைய இரட்சிப்புக்காகப் பேழையைச் செய்து, அதினாலே லோகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, விசுவாசத்தாலுண்டாகும் நீதிக்குச் சுதந்தரவாளியானான். * ௧. மோ. ௬, ௮. [illegible].

௮ விசுவாசத்தினாலே * ஆபிரகாம், தான் சுதந்தரமாகப் பெறப்போகிற இடத்துக்குப் புறப்பட்டுப்போக அழைக்கப்பட்டபோது, கீழ்ப்படிந்து தானெங்கே சென்று சேருவானென்று அறியாமல், புறப்பட்டுப் போனான். * ௧. மோ. ௰௨, ௧ — ௪.

௯ விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திலே * பரதேசியைப்போலே தங்கி, அந்த வாக்குத்தத்தத்துக்கு உடன்சுதந்தரராகிய ஈசாக்கோடும் யாக்கோபோடுங் கூடாரங்களிலே குடியிருந்தான். * அப். ௭, ௫.

௰ ஏனெனில் * பராபரன் கட்டி உண்டாக்கின அஸ்திவாரங்களுள்ள பட்டணத்துக்கு அவன் காத்திருந்தான். * ௰௨, ௨௨.

௰௧ விசுவாசத்தினாலே * சாராள் தானுங் கெர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள், ஏனென்றால் வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணினாள். * ௧. மோ. ௰௭, ௰ — ௰௨. ௨௧, ௨.

௰௨ ஆனபடியினாலே ஒருவனாலே, * சரீரஞ் செத்தவனாயிருந்தானே; வானத்து நட்சத்திரங்களைப்போலும் எண்ணிமுடியாத கடற்கரை மணலைப் [illegible]

போ

போறுமான ஏராளமாயிருந்தார்கள். * ரோ. ௪, ௰௯. * * ௧. மோ. ௰௫, ௫.

௰௩ இவர்களெல்லாரும் வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதுகளை அடையாமல், * தூரத்திலே அதுகளைக் கண்டு, நம்பி, அணைத்துக்கொண்டு, தாங்கள் பூமியின்மேல் * * அந்நியரும் பரதேசிகளுமென்று அறிக்கைபண்ணி, விசுவாசத்தோடே மரித்தார்கள். * யோவா. ௮, ௫௬. * * ௧. மோ. ௨௩, ௪.

௰௪ ஏனென்றால் இப்படிக்கொத்ததுகளைச் சொல்லுகிறவர்கள் தாங்கள் ஊரை நாடித் தேடுகிறதைத் தெரியப்படுத்துகிறார்கள்.

௰௫ தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களேயானால், அதற்குத் திரும்பிப்போகிறதற்கு அவர்களுக்குச் சமயமிருக்குமே.

௰௬ இப்போதோ வாசியான பரம தேசத்தை விரும்புகிறார்கள், ஆகையினாலே பராபரன் * அவர்களுடைய பராபரனென்னப்பட அவர்களுக்காக வெட்கப்படுகிறதில்லை, ஏனெனில் அவர்களுக்கு ஒரு பட்டணத்தை * * ஆயத்தம்பண்ணினார். * ௨. மோ. ௩, ௬. * * மத். ௨௫, ௩௪.

௰௭ விசுவாசத்தினாலே ஆபிரகாம், தான் சோதிக்கப்பட்டபோது, * ஈசாக்கைப் பலியாக ஒப்புக்கொடுத்தான். * ௧. மோ. ௨௨, ௧௰.

௰௮ * ஈசாக்கினிடத்திலே உன் வித்து விளங்குமென்று அவனோடே சொல்லப்பட்டிருந்து இப்படிக்கொத்த வாக்குத்தத்தங்களைப் பெற்றவன் ஒரே பேறானவனைப் பலியாக ஒப்புக்கொடுத்து, * ௧. மோ. ௨௧, ௰௨.

௰௯ மரித்தோரிலிருந்தும் எழுப்பப் பராபரன் வல்லவரென்று எண்ணினான். ஆகையினாலே அவனை அதற்கொப்பனையாகத் திரும்பவும் அடைந்தான்.

௨௰ விசுவாசத்தினாலே * ஈசாக்கு யாக்கோபையும் ஏசாவையும் வருங்காரியங்களைக் குறித்து ஆசீர்வதித்தான். * ௧. மோ. ௨௭, ௨௮. ௩௯.

௨௧ விசுவாசத்தினாலே யாக்கோபு, * தான் காலமாகிறபோது யோசேப்புடைய குமாரரில் ஒவ்வொருவனையும் ஆசீர்வதித்து, தன் தடியின் முனையிலே சாய்ந்து பணிந்தான். * ௧. மோ. ௪௮, ௧௰.

௨௨ விசுவாசத்தினாலே யோசேப்பு * தான் காலமாகும்போது, இஸ்ரவேல் புத்திரருடைய புறப்படுதலைக் குறித்துப் பேசி, தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளைகொடுத்தான். * ௧. மோ. ௫௰, ௨௪. ௨௫.

௨௩ விசுவாசத்தினாலே மோசே பிறந்தபோது, * பிள்ளை அழகுள்ளதென்று கண்டு, அவனைத் தாய்தகப்பன் மூன்றுமாதம் ஒளித்துவைத்து, ராசாவின் கட்டளைக்குப் பயப்படாதேபோனார்கள். * ௨. மோ. ௨, ௧. ௨.

௨௪ விசுவாசத்தினாலே * மோசே, தான் பெரியவனானபோது, பார்வோனின் குமாரத்தியின் மகனென்னப்படுகிறதை வெறுத்து, * ௨. மோ. ௨, ௰௧ — ௰௫.

௨௫

உரு * பாவத்தின அனித்திய அனுபவத்தை அடைந்திரு
ப்பதைப்பார்க்க, பராபரனுடைய சனத்துடனே து
க்கனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, * சங. அச,
யக.

உசா எகிப்தத்துள்ள பொக்கிஷங்களிலுங் கிறிஸ
துவினிநிந்தையை அதிக ஐசுவரியமாக எண்ணினா
ன; ஏனென்றால் பலனின்மேல் கண்ணோக்கமாயிரு
ந்தான.

உஎ விசுவாசத்தினாலே அவன் ராசாவின் மூர்க்கத்
துக்குப்பயப்படாமல், எகிப்தைவிட்டுவந்தான், ஏ
னென்றால் அதரிசியமானவரை, தான் தெரிசிக்கிறப
டி பொறுத்திருந்தான.

உஅ விசுவாசத்தினாலே அவன் தலைச்சன்களைச் சங்
கரிக்கிறவர் தங்களைத் தொடாதபடிக்கு, * பஸ்காவை
யும் இரத்தப்பூசுதலையும் நடத்தினான். * உ.
மோ. யஉ, உக — உஅ.

உகூ விசுவாசத்தினாலே * சிவந்த சமுத்திரத்தை வெ
டாந்தரையைப்போல உருவநடந்துபோனார்கள்,
அதை எகிப்தியர் செய்யச்சோதித்து, அமிழ்ந்துபோ
னார்கள். * உ. மோ. யச, உக : உகூ.

ஙய விசுவாசத்தினாலே * எரிகோவின் மதில்கள்
ஏழுநாளாய்ச் சுற்றிவரப்பட்டு விழுந்தது. * யோசு. சா
க — உய.

ஙக விசுவாசத்தினாலே * ராகாபென்கிற வேசி, வே
வுகாரரைச் சமாதானத்துடனே ஏற்றுக்கொண்டு
அவிசுவாசிகளோடேகூடச் சேதமாகாதிருந்தாள.
* யோசு. சா, உக — உரு.

ஙஉ அப்புறம் என்ன சொல்லுவேன், நான் கிதே
யோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீத், சா
முவேல் என்பவர்களின் செய்கைகளையுந் தீர்க்கதெ
சிகளின் செய்திகளையும் விபரிக்கப்போனால், என
க்குக் காலங்குறையுமே.

ஙங இவர்கள் விசுவாசத்தினாலே ராட்சியங்களை
ஜெயித்துக்கொண்டதும், நீதியை நடப்பித்ததும், வா
க்குத்தத்தம் பண்ணப்பட்டதுகளை அடைந்ததும், * சி
ங்கங்களின் வாய்களை அடைத்ததும், * தானி. சா, உஉ.

ஙச * அக்கினியின் பெலத்தை அவித்ததும், பட்
டயக் கூர்மைக்குத் தப்பினதும், பெலவீனத்திலே பெ
லன் கொண்டதும், யுத்தத்திலே வல்லவர்களான
தும், அன்னியருடைய பாளையங்களை மடங்கடி
த்ததுமுண்டு. * தானி. ங, உங.

ஙரு * ஸ்திரீகள் சாகக்கொடுத்தவர்களை உயி
ர்களாத் திரும்ப எழுந்தவர்களாக அடைந்தார்கள்;
வேறுசிலரோ, தாங்கள் மேன்மையான உயிர்த்தெழுந்
தலை அடையும்படிக்கு, மீட்குதலை ஏற்றுக்கொள்
ளாமல், வேதனைப்படுத்தப்பட்டார்கள். * க
ராசா. யஎ, உஉ. உ. ராசா. ச, ஙசா. ஙஎ.

ஙசா வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளை
யுங் கட்டுகளையுங் காவலையுங்கூட அநுபவித்தா
ர்கள்.

ஙஎ கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்
புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள்,

டை

—டைய வெட்டால் மரித்தார்கள். ஆட்டுச்சேம்மறி யாடுகளையும் வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக் கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் தீங்கையும் அநுபவித்தார்கள்.

௩௮ லோகம் பாத்திரமாயிராதவர்களவர்கள் வனாந்திரங்களிலும் பர்வதங்களிலும் கெபிகளிலும் பூமியி னிடுக்குகளிலுஞ் சுத்தவண்டலைந்தார்கள்.

௩௯ இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்று, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாதே போனார்கள்.

௪௦ ஏனென்றா லவர்கள் நம்மையில்லாமல் பூரணவான்களாகாதபடிக்குப் பராபரன் நமக்காக விசேஷமானதொரு காரியத்தை முன்னே நியமித்திருந்தார்.

## ௰௨. அதிகாரம்.

¶ பொறுமையும் தேவபக்தியுமாயிருக்கப் புத்திசொன்னது.

௧ ஆகையால் சாட்சிகளுடைய இத்தனை பெரிய மேகத்திரளே சூழப்பட்டிருக்கிறதால், * எல்லாப் பாரத்தையும் நம்மைச் சுற்றிநெருக்கிநிற்கிற பாவத்தைத் தூரக்களைந்துபோட்டு, நமக்குமுன்னே வைத்திருக்கிற போராட்டத்திலே * * பொறுமையுடனே ஓடி, * ரோ. ௭, ௨௧ — ௨௪. * * ௰, ௩௬. ௧. கொ. ௯, ௨௪ ௨௫.

௨ விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய யேசுவை * நோக்கிப்பார்க்கக்கடவோம். அவர் தமக்குமுன்பாக வைத்திருந்த சந்தோஷத்துக்காக லச்சையை யெண்ணாமல், சிலுவையைச் சகித்து, * * பராபரனுடைய ஆசனத்தின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தார். * ௩, ௧. * * அப். ௩, ௨௧.

௩ ஆகையால் உங்கள் ஆத்துமங்களில் நீங்கள் இளைத்துப்போய்விடாதபடிக்கு, நீங்கள், தமக்கு விரோதமாய்ப் பாவிகளாலுண்டான இப்படிக்கொத்த எதிர்ப்பேச்சைச் சகித்தவரைத் தியானித்துக்கொள்ளுங்கோள்.

௪ * நீங்களின்னம் இரத்தப்பரியந்தம் பாவத்தோடே எதிர்த்து நின்று போராடினதில்லை. * ௧. கொரி. ௰. ௰௩.

௫ என்றாலும்: * என்மகனே, கர்த்தருடைய தண்டனையை அற்பமாக எண்ணாதே, அவராலே கண்டிக்கப்படும்போது இளைத்துப்போகாதே, * வாக் ௩, ௰௧. ௰௨.

௬ ஏனெனில் * கர்த்தர் சிநேகிக்கிறவனைத் தண்டித்து, தாமேற்றுக்கொள்ளுகிற மகனெல்லாமை யடிக்கிறாரென்று பிள்ளைகளாகிய உங்களுக்குச் சொல்லப்படுகிற புத்திமதியை மறந்தீர்கள். * அப். ௩, ௰௯.

௭ நீங்கள் தண்டனையைச் சகித்தால், உங்களைப் பராபரன் குமாரர்களென்றெண்ணித் தம்மைக் காண்பிக்கிறார், ஏனென்றால் தகப்பன் தண்டியாத எந்தப்பிள்ளையிருக்குது.

௮ எல்லாரும் பங்குள்ளவர்களான தண்டனை

யை

ளையல்லாமலிருந்தீர்களேயானால், நீங்கள் குமா
ரரல்ல, வேசிப்பிள்ளைகளாயிருக்கிறீர்கள்.
௯ நம்முடைய மாம்சத்தின் பிதாக்களை நமக்குத் தண்
டிப்பாராக இருந்தும் அவர்களுக்கு நாம் அஞ்சினதுமு
ண்டேயானால், வெகு அதிகமாய் ஆவிகளுடைய பிதா
வுக்கு, நாம் பிழைக்கத்தக்கதாக, கீழ்ப்படிய வே
ண்டாமோ.
௰ அவர்களோ கொஞ்சநாளாக, தங்களுக்குத் தோ
ன்றினபடி தண்டித்தார்கள், இவரோ தம்முடைய பரி
சுத்தத்தில் நாம் பங்குள்ளவர்களாகும்படிக்குப் பிரயோச
னத்துக்குத் தக்கதாய் நம்மைத் தண்டிக்கிறார்.
௰௧ ஆனாலும் தண்டிப்பு யாவும் நடக்கிறநேரத்தி
லே சந்தோஷமாய்க் காணாமல், துக்கமாய்க் காணுது,
பிற்பாடோவென்றால் அது தன்னாலே பழக்கப்பட்டவர்
களுக்கு நீதியினுடைய சமாதானமான கனியைக் கொடுக்கும்.
௰௨ ஆகையினாலே * நெகிழ்ந்த கைகளையுந் தளர்ந்
துபோன முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்
து, * யெச. ௩௫, ௩.
௰௩ நொண்டியாயிருக்கிறது சுளுக்கிடையாமல்
குணமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழி
களைச் செவ்வையாக்குங்கோள்.
௰௪ * யாவரோடுஞ் சமாதானமாயிருத்தலையும், *
பரிசுத்தமாகுதலையும் பின்தொடருங்கோள், அதை
யல்லாமல் ஒருத்தனுங் கர்த்தரைத் தரிசிப்பதில்லை. *
ரோ. ௰௨, ௰௮. * மத். ௫, ௮.
௰௫ ஒருத்தனும் பராபரனுடைய கிருபைக்குத் தாழ்ச்சி
யாய்ப் போகாமலும், * யாதொரு கசப்பான வேர் மு
ளைத்தெழும்பி, கலக்கமுண்டாக்கிறதினாலே அநேக
ர் தீட்டுப்படாமலும், * ரு. மோ. ௨௯, ௰௮.
௰௬ ஒருத்தனும் * வேசிக்கள்ளன் அல்லது * * ஒ
ரே போசனத்துக்குத் தன் பிறப்புச் சுதந்தரத்தை
க் கொடுத்துவிட்ட ஏசாவைப்போல் சீர்கெட்டவனுகா
மலுமிருக்கக் கவனித்துப் பாருங்கோள். * எபே.
௫, ௩. * * ௧. மோ. ௨௫, ௩௩.
௰௭ ஏனென்றால் அவன் பிற்பாடு ஆசீர்வாதத்தைச்
சுதந்தரித்துக்கொள்ள மனதாயிருக்கிறபோது ஆகா
தவனென்று தள்ளப்பட்டானென்று அறிவீர்கள், ஏ
னென்றால் அவன் கண்ணீரோடே திரும்பத் தேடி
யும், அதுக்கிடங்காணுதே போனான்.
௰௮ தொட்டப்படத்தக்க * பர்வதத்துக்கும், வே
கிற அக்கினிக்கும்; மந்தாரத்துக்கும் இருளுக்கும், புசலு
க்கும், * ௨. மோ. ௰௯, ௰௮—௰௯.
௰௯ எக்காள முழக்கத்துக்கும், வார்த்தைகளுடை
ய சத்தத்துக்கும் நீங்கள் வந்து சேர்ந்ததில்லையே, அ
தைக் கேட்டவர்கள், * தங்களுக்குப் பின்னை வசனஞ் சொ
ல்லப்படாதபடிக்கு வேண்டிக்கொண்டார்கள். *
௨. மோ. ௨௰, ௰௯.
௨௰ ஏனென்றால், * ஒரு மிருகமாகிலும் பர்வதத்தை
த் தொட்டால் கல்லெறியுண்டு அல்லது அம்பினாலே எய்
யுண்டு சாகவேணுமென்று கற்பிக்கப்பட்டதைச் சகிக்
கமாட்டாதே போனார்கள். * ௨. மோ. ௰௯, ௰௨. ௰௩.
௨௧ திகிலும் அதிநடுக்கமும் பிடித்ததுக்குத் தோன்
மோ

மோசேயுஞ்சொன்னான், அத்தனை பயங்கரமாக அந்த பிரத்தியட்சமிருந்தது.
௨௨ நீங்களோ சீயோனென்னும் பருவதத்துக்கும், * பரமயெருசலேமாகிய சீவனுள்ள பராபரனுடைய பட்டணத்துக்கும், அனேகமாயிரங்களான தேவதூதரிடத்துக்கும், * கலா. ௪, ௨௬.
௨௩ * பரலோகத்திலே பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களுடைய சருவசங்கத்துக்குஞ் சபைக்கும், எல்லாருக்கும் நியாயாதிபதியாகிய பராபரனிடத்துக்கும், நிறைவாகாரரான நீதிமான்களுடைய ஆவிகளிடத்துக்கும், * லூக். ௰, ௨௰.
௨௪ புது உடன்படிக்கையின் மத்தியஸ்தனாகிய யேசுவினிடத்துக்கும், * ஆபேலுடைய இரத்தத்திலும் வாசியானதுகளைப் பேசுகிற தெளிக்கப்படுகுதலின் இரத்தத்துக்கும் வந்து சேர்ந்தீர்கள். * ௧. மோ. ௪, ௰.
௨௫ பேசுகிறவரை நீங்கள் கேட்கமாட்டோமென்று விலகாதபடிக்குப் பாருங்கோள், ஏனென்றால், பூமியிலே பேசினவரைக் கேட்கமாட்டோமென்று விலகினவர்கள் தப்பிப்போகக்கூடாதிருந்தாகில், பரமண்டலங்களிலிருந்து பேசுகிறவரை நாம் விட்டு விலகினால், * எப்படித் தப்பிப்போவோம். * ௨, ௨. ௩. ௰, ௨௮. ௨௯.
௨௬ அவருடைய சத்தம் அப்போது பூமியை அசைத்தது. இப்போதும், * இன்னமொருதரம் நான் பூமியை மாத்திரமல்ல. வானத்தையும் அசைப்பேனென்று அவர் வாக்குத்தத்தம் பண்ணினார். * ஆகா. ௨, ௭.
௨௭ இன்னமொருதரமென்று சொல்லுகிறது அசையுங் காரியங்களின் மாற்றத்தை வெளிப்படுத்துகுது, ஏனென்றால் அசையாக் காரியங்கள் நிலைநிற்கும்படிக்கு அதுகள் உண்டாக்கப்பட்டிருந்தது.
௨௮ ஆகையால் அசையாத இராச்சியத்தைப் பெறுகிற நாம் பராபரனுக்கு இஷ்டமாக * அச்சத்தோடும் பத்தியோடும் ஊழியஞ்செய்கிறதுக்கான கிருபையைப் பிடித்திருக்கக்கடவோம். * பிலி. ௨, ௰௨.
௨௯ ஏனென்றால் * நம்முடைய பராபரன் அழிக்கும் அக்கினியாயிருக்கிறார். * ௫. மோ. ௪, ௨௪.

## ௰௩. அதிகாரம்.

¶ நல்நடக்கைக்குங் கிறிஸ்துவினுடைய சுத்த போதகத்தைக் கைக்கொள்ளும் பத்திக்கும் ஏவுப்புத்தி.

சகோதர சிநேகம் நிலைநிற்கக்கடவது. * ரோ. ௰௨, ௰.
௨ பரதேசிகளைச் சேர்த்துக்கொள்ள மறவாதேயுங்கோள், ஏனென்றால் அதினாலே சிலர் அறியாமல் * தேவதூதரைச் சேர்த்துக்கொண்டதுண்டு. * ௧. மோ. ௰௮, ௧ ... ௰௯, ௧ ...
௩ கட்டுண்டவர்களை, நீங்களுங்கூடக் கட்டுண்டிருக்கிறாப்போலேயும், தீங்கனுபவிக்கிறவர்களை, நீங்களுஞ் சரீரத்தோடிருக்கிறீர்களென்றதாகவும் நினைத்துக்கொள்ளுங்கோள்.

௪ விவாகமெல்லாரிடத்திலுங் கனமுள்ளதும், விவாகமஞ்சந் தீட்டில்லாததுமாயிருக்கக்கடவது. ஆனாலும், + வேசிக்கள்ளரையும் விபசாரரையும் பராபரன் நியாயந்தீர்ப்பார். + கலா. ௫, ௰௯ — ௨௧. அபொ. ௨௨, ௰௫.

௫ + இருக்கிறதுகளே போதுமென்று, உங்கள் நடக்கையானது ஆசையற்றிருக்கக்கடவது, ஏனென்றால்: + உன்னை நான் நெகிழவிடுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லையென்று அவர் சொன்னார். + ௧ தீமோ. ௬, ௬ — ௰௧. + யோசு. ௧, ௫.

௬ ஆனதுகொண்டு + கர்த்தர் எனக்குச் சகாயர் நான் பயப்படேன், மனுஷன் எனக்கென்ன செய்வானென்று நாம் திடநம்பிக்கையாய்ச் சொல்லலாம். + சங்கீ. ௫௬, ௫.

௭ உங்களுக்குப் பராபரனுடைய வசனத்தைச் சொன்ன உங்கள் வழிகாட்டிகளை நினையுங்கோள், அவர்கள் நடக்கையின் முடிவைக் கவனித்து, அவர்கள் விசுவாசத்தைப் பின்பற்றுங்கோள்.

௮ + யேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் அவரே. + அபொ. ௧, ௰௭. ௰௮.

௯ + பலவித அந்நியப்போதகங்களால் அலையுண்டு திரியாதேயுங்கோள், ஏனென்றால் இருதயம் போசனங்களினாலல்ல, + + கிருபையினாலே திடப்படுகிறது நல்லது, அதுகளில் அலுவலாயிருந்தவர்கள் பிரயோசனமடைந்திலர். + எபே. ௪, ௰௪. ௰௫. + + எபே. ௩, ௰௬ — ௰௯.

௰ நமக்கொரு பலிபீடமுண்டு, அதிலெடுத்துச் சாப்பிட, கூடாரத்துக்கு ஆராதனை செய்கிறவர்களுக்கு அதிகாரமில்லை.

௰௧ ஏனென்றால் + பாவங்களினிமித்தியமாக எந்தச் சீவன்களுடைய இரத்தம் பிரதான ஆசாரியனாலே பரிசுத்தஸ்தலத்துக்குள் கொண்டுபோகப்படுகுதோ, அதுகளின் உடல்கள் பாளயத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்படுகுது. + ௨ மோ. ௨௯, ௰௪.

௰௨ ஆனபடியினாலே யேசுவும், தம்முடைய இரத்தத்தினாலே சனத்தைப் பரிசுத்தம்பண்ணுவதற்காக, பட்டணவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.

௰௩ ஆகையால் நாம் பாளயத்துக்குப் புறம்பே அவரண்டையிலே, அவருடைய நிந்தையைச் சுமந்து, புறப்படக்கடவோம்.

௰௪ ஏனென்றால் நிலைநிற்கிறபட்டணம் நமக்கிங்கே இல்லை, வரப்போறதையே நாடித்தேடுகிறோம்.

௰௫ ஆகையால் அவர் முன்னிலையாய்ப் பராபரனுக்கு எக்காலமும் + அவருடைய நாமத்தை அறிக்கைபண்ணும் உதடுகளுடைய கனியாகிய துதியின் பலியைச் செலுத்தக்கடவோம். + சங்கீ. ௫௰, ௨௩. ஓசே. ௰௪, ௩.

௰௬ ஆனாலும் + நன்மைசெய்யவுந் தருமம் ஐக்கியமாயிருக்கவும் மறவாதேயுங்கோள், ஏனென்றால் + + இப்படிக்கொத்த பலிகளுக்குப் பராபரன் பிரியப்படுகிறார். + கலா. ௬, ௰. + + ஓசே. ௬, ௬.

௰௭ + உங்கள் வழிகாட்டிகளுக்குக் கீழ்ப்படிந்து

தடங்

திடங்குங்கோள், ஏனென்றால் அவர்கள் உங்கள் ஆத்
துமங்களுக்காகக் கணக்கொப்பிவிப்பவர்களாயி
ருக்கிறார்கள், அதை அவர்கள் பெருமூச்சுவிட்டுச்
செய்யாமல், சந்தோஷத்தோடே செய்யப்பாருங்
கோள், ஏனென்றால் அது உங்களுக்கு நல்லதல்ல.

௧ தெச ௫, ௰௨. ௰௩.

௰௮ எங்களுக்காகச் செபம்பண்ணுங்கோள், ஏ
னென்றால் அன்னவருக்குள்ளும் நன்றாய் நடக்க மனதா
யிருக்கிற எங்களுக்கு நல்மனச்சாட்சியுண்டென்று நி
றசெயித்திருக்கிறோம்.

௰௯ ஆனால் விசேஷமாக, நான் உங்களுக்குச் சீக்கிர
மாய மறுபடியுங் கட்டளையிடப்பட நீங்கள் அப்படி
செய்யவேண்டுகிறேன்.

௨௰ ஆனால் நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினா
லே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய க
ர்த்தராகிய யேசுவை மறுபடியும் மரித்தோரிலிருந்து
வரவழைத்து வந்த சமாதானத்தினுடைய பராபரன்,

யோவ. ௰, ௰௧. ௧. பேது. ௨, ௨௫.

௨௰௧ தமக்கு முன்பாகப் பிரியமானதை உங்களில்
யேசுக்கிறீஸ்துவைக் கொண்டு நடப்பித்து, உங்களைத்
தம்முடைய சித்தத்தின்படி செய்ய, சகல நற்கிரியையி
லும் சீர்பொருந்தினவர்களாக்கக்கடவார். அவருக்
கென்றென்றைக்கும் சதாகாலங்களிலும் மகி
மை உண்டாவதாக, ஆமென்.

௨௰௨ ஆனால், சகோதரரே, நீங்கள் நற்புத்தியின்
வார்த்தையைப் பொறுத்திருக்க உங்களை வேண்டிக்
கொள்ளுகிறேன். ஏனென்றால், சுருக்கஞ்சுருக்கமாக
உங்களுக்கெழுதினேன்.

௨௰௩ சகோதரனாகிய திமோத்தேயு விடுதலையானதை
அறியுங்கோள், அவன் சீக்கிரமாக வந்தால், அவ
னோடேகூட வந்து உங்களைக் காண்பேன்.

௨௰௪ உங்கள் வழிகாட்டிகள் அனைவரையும் எல்
லாப் பரிசுத்தவான்களையும் மின்னவுங்கோ
ள். இத்தாலியத் தேசத்தார் உங்களை
ம்மின்னவுகிறார்கள்.

௨௰௫ கிருபை உங்களனைவரோடுங்கூட
இருப்பதாக, ஆமென்.

எபிரேயருக்கு இத்தாலியாவிலே எழுதி, திமோ
த்தேயுவின் கையிலனுப்பினது.

# அப்போஸ்தலனாகிய

## யாக்கோபுடைய பொதுவான

# நிருபம்.

### ௧. அதிகாரம்.

¶ சோதனைகளைக்குறித்துச் சொன்னபுத்தி.

பராபரனுக்குங் கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, * சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்குஞ் சந்தோஷமுண்டாக வாழ்த்துகிறேன். * ௧. பேது. ௧, ௨.

௨ என் சகோதரரே, நீங்கள் பலவித சோதனைகளில் விழும்போது,

௩ உங்கள் விசுவாசத்தின் பரீட்சை பொறுமையையுண்டாக்குகிறதென்றறிந்து, * * அதைச் சுத்த சந்தோஷமாக எண்ணுங்கோள். * ரோ. ௫, ௩. ௪. * * மத. ௫, ௰—௰௨.

௪ ஆனால் நீங்கள் ஒன்றிலுங் குறையில்லாமல் தேறினவர்களும் நிறைவாகருமாயிருப்பதற்காக, பொறுமை நிறைவான கிரிகையுள்ளதாயிருக்கக்கடவது.

௫ உங்களில் ஒருத்தனுக்கு * ஞானங்குறையாயிருந்ததேயானால், உத்தமபாதவருமுண்மையாயெல்லாருக்குங் கொடுக்கிறவருமான பராபரனிடத்திலே கேட்கக்கடவான். அப்போ அவனுக்குக் கொடுக்கப்படும். * ௧. ராசா. ௩, ௯—௰௨.

௬ ஆனால் * ஒன்றுஞ் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவான், ஏனென்றால் சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு மோதுண்ட கடலலைக்குச் சமானமானவன். * மாற். ௰௧, ௨௪.

௭ அப்படிக்கொத்த மனுஷன், தான் கர்த்தரிடத்திலே ஏதாகிலும் பெறுவானென்று நினைக்கவேண்டாம்.

௮ இருமனப்பட்ட மனுஷன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவன்.

௯ தாழ்ந்த சகோதரனேவனானாலுந்தன் * உயர்த்தியினாலும், * ௨. கொரி. ௭, ௰.

௰ ஐசுவரியவானோ தன் * தாழ்த்தியினாலுமேன்மை பாராட்டக்கடவான், ஏனென்றால் * * புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான். * மத. ௫, ௩. * * ௧. பேது. ௧, ௨௪.

௰௧ அதெப்படியென்னில் சூரியன் வெய்யிலோடே உதித்து, பிலையையுலர்த்தினபோது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான ரூபம் அழிந்துபோச்சுது. அப்படியே ஐசுவரியவானுந் தன் வழிகளிலே வாடிப்போவான். * சங்கீ. ௱௩, ௰௫. ௰௬.

௰௨ சோதனையைச் சகிக்கிற மனுஷன் * பாக்கியவான், ஏனென்றால் அவனுத்தமனென்றெண்ணப்பட்டபின்பு கர்த்தர் தம்மை

ஞம

மைச் சிநேகிக்கிறவர்களுக்கு * * வாக்குத்தத்தம் பண்ணின சீவனுடைய கிரீடத்தைப் பெறுவான். * ௧. பேது. ௧, ௬. ௭. * * அறி. ௨, ௰.

௰௩ சோதிக்கப்படுகிற ஒருத்தனும்: பராபரனாலே சோதிக்கப்படுகிறேனென்று சொல்லவேண்டாம், ஏனென்றால் பராபரன் பொல்லாங்குகளாலே சோதிக்கப்படாதவருமாயிருக்கிறார் ஒருத்தனையும் அவர் சோதிக்கிறவருமில்லை.

௰௪ அவனவன் தன் சுயஇச்சையாலே இழுப்புண்டு இச்சைப்பட்டதினாலே சோதிக்கப்படுகிறான்.

௰௫ பின்பு இச்சை கெற்பந்தரித்துப் பாவத்தைப் பெறும், பாவம் நிறைவேறின போதோவென்றால் மரணத்தைச் சென்பிக்கும்.

௰௬ என் பிரிய சகோதரரே, மோசம்போகாதேயுங்கோள்.

௰௭ சகல * நல்லனவுங் குறைவற்ற சகல வரமும் உயரேயிருந்துண்டாகி, * * ஒருமாறுதலாகிலும் ஒரு வேறுதுமையின் நிழலாகிலும் இல்லாத வெளிச்சங்களுடைய பிதாவினிடத்திலிருந்து இறங்குகிறது. * மத். ௭, ௰௧. * * ௧. யோவ. ௧, ௫. ௫. மோ. ௩௨, ௪.

௰௮ அவர், தாமிச்சித்தமாய், நம்மை, தம்முடைய சிஷ்டிகளில் நாம் ஒரு முதலவிளைவாயிருக்கத்தக்கதாக, * சத்தியத்தின் வசனத்தினாலே ஜெனிப்பித்தார். * ௧. பேது. ௧, ௨௩.

௰௯ ஆனகையினாலே, என் பிரிய சகோதரரே, ஒவ்வொரு மனுஷனும் கேட்கிறதுக்குத் துத்வரமும், * பேசுகிறதுக்குத் தாமதமும் * * கோபத்துக்குத் தாமதமுமாயிருக்கக்கடவான். * வாக். ௰௭, ௨௭. ௨௮. * * பிறசங். ௭, ௯.

௨௰ ஏனென்றால் மனுஷனுடைய கோபம் பராபரனுடைய நீதியை நடப்பியாது.

௨௰௧ ஆகையால் நீங்கள் * எல்லா அழுக்கையும் மிகுதியான துர்க்குணத்தையும் போட்டுவிட்டு, உள்ளே நடப்பட்டதும் உங்கள் ஆத்துமங்களை ரெட்சிக்க வல்லதுமான வசனத்தை மெத்தனவுடனே ஏற்றுக்கொள்ளுங்கோள். * கொலோ. ௩, ௮. ௯.

௨௰௨ ஆகிலும் நீங்கள் * உங்களையே மோசம்போக்காதபடிக்கு வசனத்தின் கேழ்க்கிறவர்களாய் மாத்திரமிராமல் அதின் செய்கைக்காறராகுங்கோள். * மத். ௭, ௨௪ — ௨௭.

௨௰௩ ஏனென்றால் ஒருத்தன் வசனத்தின் செய்கைக்காறனல்லாத கேழ்விக்காறனாயிருந்தால், அவன் தன் சுபாவ முகத்தைக் கண்ணாடியிலே கண்டறிகிற மனுஷனுக்கொப்பானவன்.

௨௰௪ அதேதென்றால் தன்னைத்தான் கண்டறிந்து, புறப்பட்டுப்போய், உடனே தான் இருந்தவிதத்தை மறந்தான்.

௨௰௫ ஆனாலும் விடுதலையினுடைய நிறைவான வேதத்துக்குள்ளே குனிந்து பார்த்து, அதிலே நிலையாயிருக்கிறவனோ மறதியான கேழ்விக்காறனாயிராமல், கிரியையைச் செய்கைக்காறனாயிருக்கிறபடியினாலே,

தன்

தனசெயகையில * பாககியவானாயிருபபான. * யோவ. ௰௩, ௰௭.

௨௰ உஙகளில ஒருதன, தானதேயவபததியுளளவனெனறுநினைததும, * தனநாவை அடக்காமல, தனனிருதயததைததாததினால, அவனுடையதேயவபததி வீணாம. * சங. ௩௪, ௰௩.

௨௭ திககறறவர்களையும விதவைகளையும அவர்களுடைய உபததிரவததிலேகணடு சநதிக்கிறதும, * தனனைலோகததால கறைபபடாதவனாக காக்கிறதும, பிதாவாகிய பராபரனுககுமுனபாக மாசிலலாத சுததததேயவபததியாயிருக்கிறது. * ௧. யோவ. ௨, ௰௫, ௰௬.

## ௨. அதிகாரம.

௧ பாரபட்சமவிசுவாசததுககொவவாதெனபது.

என சகோதரரே, மகிமையுளள நமமுடைய கறததராகிய யேசுக்கிறிஸததுவினபேரிலுளள விசுவாசம உஙகளுககுப பாரபட்சததுடனே கூடியதாயிருக்கவேணடாம,

௨ ஏனெனில பொனமோதிரமும மினுககுளள வஸததிரமுந தரிததவொருமனுஷனும அழுககுவஸததிரந தரிததவொருதரிததிரனும உஙகளசபையததுககுளபிரவேசிக்கும போது,

௩ நீஙகள மினுககுளள வஸததிரநதரிததவனைககணணோககி, அவனுடனே: நீ இநதநலல இடததிலே உட்காருமெனறும, தரிததிரனுடனே: நீ அஙகேநிலலு, அலலது இஙகே என பாதபடிககுக்கீழாக உட்காருமெனறுஞ சொனனால,

௪ நீஙகள உஙகளுககுளளே பேதகம பணணி, துறசிநதனைகளுளள நிதிக்காறரானதிலலையோ.

௫ என பிரியமான சகோதரரே, கேளுஙகோள, * பராபரனிநதலோகததுத தரிததிரரை, விசுவாசததில அயிசுவரியவானகளாகவும, தமமைச சிநேகிக்கிறவர்களுககுத தாமவாககுததததம பணணின ராட்சியததின சுகநதிரராகவுந தெரிநதுகொணடதிலலையோ. * ௧. கொ. ௧, ௨௬ — ௨௮

௬ நீஙகளோ தரிததிரனை அவமானம பணணினீர்கள. அயிசுவரியவானகளலலோ உஙகளை ஒடுக்குகிறார்கள, அவர்களலலோ உஙகளை நியாயாசனஙகளுக்கிழுக்கிறார்கள.

௭ உஙகளுக்குததரிபபிக்கபபட்ட நலல நாமததை அவர்கள அலலோ தூஷணிக்கிறார்கள.

௮ மேலும: * உனனயலகதவனை உனனைபபோல சிநேகிப்பாயாக எனறுவேத எழுததுச சொலலும ராசசிகர நியாயபபிரமாணததை நீஙகள நிறைவேறறினால, நனமைசெயகிறீர்கள. * மற. ௰௨, ௩௧.

௯ பாரபட்சமாயிருநதீர்களேயாகில, நீஙகள பாவததைககட்டிக்கொணடு, மீறினவர்களெனறு நியாயபபிரமாணததாலகணடிக்கபபடுகிறீர்கள.

௰ ஏனெனனில ஒருதன * நியாயபபிரமாணததை

எலலாம

எல்லாங்களுக்குக் கொண்டுமென்னப் பிலேபட்டினால், அவன் எல்லாத்துக்கும் நேரஸ்தனுனன். * ரு. மோ. ௨௭, ௨௬. மத. ரு, ௰௯:

௰௧ ஏத்தென்னில் விபசாரம் பண்ணுவாயாகவென்று சொன்னவர்: கொலை செய்யாயாகவென்றுஞ் சொன்னார். நீ விபசாரம் பண்ணாதிருந்தாலுங் கொலை செய்தாயானால், நியாயப்பிரமாணத்தை மீறினவனானாய்.

௰௨ * விடுதலையினுடைய வேதத்தால் நியாயந்தீர்க்கப்படப்போறவர்களாய்ப் பேசுங்கோள் செய்யுங்கோள். * ௧, ௨௫.

௰௩ ஏனென்றால் * இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புண்டாம். நியாயத்தீர்ப்புக்கெதிராக இரக்கம் மேன்மைபாராட்டும். * மத. ௰௮, ௨௮ — ௩௫.

¶ கிரிகைகளில்லாத விசுவாசத்துச் செத்ததென்பது.

௰௪ என் சகோதரரே, * ஒருத்தன் தனக்கு விசுவாசம் உண்டென்று சொல்லியுங் கிரிகைகளில்லாதிருந்தால், பிரயோசனமென்ன, அந்த விசுவாசம் அவனை இரட்சிக்கக்கூடுமோ. * மத. ௭, ௨௧.

௰௫ ஒரு சகோதரனாவல்லது ஒரு சகோதரியும் நக்னமானவர்களும் அன்றாடகப் பிழைப்பற்றவர்களுமாயிருக்கும்போது,

௰௬ உங்களில் ஒருத்தன் அவர்களுடனே: நீங்கள் சமாதானத்தோடே போய், குளிர்காய்ந்து பசியாறுங்கோளென்று சொல்லியுஞ் சரீரத்துக்குத் தேவையானதுகளை அவர்களுக்குக் கொடாதேபோனால், பிரயோசனமென்ன.

௰௭ அப்படியே விசுவாசமுங் கிரிகைகளில்லாதிருந்தால், தன்னிலே தானே செத்ததாயிருக்குது.

௰௮ ஆனால் ஒருத்தன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரிகைகளுண்டு, உன் விசுவாசத்தை உன் கிரிகைகளில்லாமல் எனக்குக் காண்பி, நான் என் கிரிகைகளாலே என் விசுவாசத்தை உனக்குக் காண்பிப்பேனென்பானே.

௰௯ பராபரன் ஒருவரென்று விசுவாசிக்கிறாய், அப்படி நீ செய்கிறது நல்லது, அந்தப் பிசாசுகளும் விசுவாசித்து அருக்களக்குது.

௨௰ ஆனால், அவத்த மனுஷனே. கிரிகைகளில்லாத விசுவாசஞ் செத்ததென்று அறிய உனக்கு மனசுண்டோ.

௨௧ நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் தன் குமாரனான ஈசாக்கைப் பலிபீடத்தின்மேலே கொண்டுவந்தேற்றி, கிரிகைகளினாலே அல்லோ நீதித்து விளங்கப்பட்டான். * ௧. மோ. ௨௨. ௯ — ௰௨.

௨௨ விசுவாசம் அவன் கிரிகைகளோடே கூட நடந்தாயிருந்து, கிரிகைகளினாலே விசுவாசம் நிறைவேறிற்றென்று பார்க்கிறாயே.

௨௩ அப்படியே: * ஆபிரகாம் பராபரனை விசுவாசித்தான், அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டுதென்கிற வேதவெழுத்து நிறைவேறி, * பராபரனுடைய

சிநே

சிநேகிதனென்னப்பட்டான். * ௧. மோ. ௰௫, ௬. ** யெச. ௪௧, ௮.

௨௪ ஆனதுகொண்டு, விசுவாசத்தினாலேமாத்திரமல்ல, கிரியைகளினாலேமனுஷன் நீதிவிளங்கப்படுகிறானென்று பார்க்கிறீர்களே.

௨௫ அப்படியே ராகாபென்கிற வேசியும், * தூதர்களை ஏற்றுக்கொண்டு மறுவழியாய் அனுப்பிவிட்டு, கிரியைகளினாலேயல்லோ நீதிவிளங்கப்பட்டாள். * யோசு. ௨, ௧. ௬.

௨௬ ஏனென்றால் ஆவியில்லாதசரீரஞ் செத்ததாயிருக்கிறாப்போலே, கிரியைகளில்லாதவிசுவாசமுஞ் செத்ததாயிருக்குது.

## ௩. அதிகாரம்.

௧ நாவினுடையபாவங்களின்பேரிலே புத்தியிட்டு, மெய்ஞ்ஞானத்தினுடலட்சணங்களைக் காண்பித்தது.

௧ என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோமென்றறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதேயுங்கோள்.

௨ ஏனென்றால் எல்லாரும் பலவாய் இடறுகிறோம், பேச்சிலே ஒருவனிடறாதிருந்தால், அவனே சரீரமனைத்தையுங் கடிவாளம்பிடித்து அடக்கத்தக்க பூரணமனுஷன்.

௩ இதோ குதிரைகள் நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அதுகளின் வாய்களிலே கடிவாளங்களைப் போட்டு, அதுகளுடைய முழுச்சரீரத்தையுந் திருப்பிநடத்துகிறோம்.

௪ இதோ கப்பல்களானவை அப்படிப்பெரியவைகளாயும் பெருங்காற்றுகளாலே நடத்தப்பட்டும் இருக்கையில், நடத்துகிறவனுடைய மனசு எவ்விடத்துக்கு நோக்குதோ, அவ்விடத்துக்கு நோக்கத் திருப்பப்படுகுது.

௫ அப்படியே * நாவும், சின்னஅவயவமாயிருந்தும், பெரிய அமளிபண்ணும். இதோ, சின்னநெருப்பானது பெரியகாட்டைக் கொளுத்திவிடும். * சங்கீ. ௰௨, ௪. ௫. ௫௨, ௫. ௭௩, ௮. ௯.

௬ நாவும் நெருப்புத்தான், அது அக்கிரமமுள்ள லோகம். அப்படி * சரீரமனைத்தையுங் கறைப்படுத்தி, நம்முடைய உயிரின் உலகத்தைக் கொளுத்துகிறது, மற்றது நரகத்தாலே கொளுத்தப்படுகிறதுமான நாவு நம்முடைய அவயவங்களுக்குள்ளேயிருக்குது. * மத். ௰௫, ௰௧. ௰௮. ௰௯.

௭ எல்லாச்சாதிமிருகங்களும் பட்சிகளும் ஊர்வனங்களும் நீர்வாழ்சாதிகளுடைய சுபாவமும் மனுஷசுபாவத்தாலே அடங்கப்பண்ணப்படும், அடங்கப்பண்ணப்பட்டதுமுண்டு.

௮ ஆனாலடங்காப்பொல்லாப்புச் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாகிய நாவை மனுஷரிலொருத்தனுமடக்கப் பண்ணமாட்டான்.

௯ பராபரனும் பிதாவுமானவரை அதினாலே ஸ்தோத்திரிக்கிறோம்; பராபரனுடைய சாயலின்படி

உண்டா

ண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயுஞ் சபிக்கிறோம்.

௰ ஒரே வாயிலிருந்து ஸ்தோத்திரமுஞ் சாபமும் புறப்படுகுது. என் சகோதரரே, இதுகளிப்படி நடக்கலாகாது.

௧௧ ஊற்றானது ஒரே துவாரத்திலிருந்து தித்திப்பையுங் கசப்பையுஞ் சுரக்குமோ.

௧௨ என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் அல்லது திராட்சச்செடி அத்திப்பழங்களையுந் தரக்கூடுமோ. அப்படியே ஒரு ஊற்றும் உப்புச்சலத்தையும் நல்ல சலத்தையுந் தரக்கூடாது.

௧௩ உங்களில் ஞானவானும் விவேகியுமாயிருக்கிறவன், * அவன் நல்ல நடக்கையினாலே தன் கிரியைகளை ஞானத்திலுண்டாகிய மெத்தனவிலே காண்பிக்கக்கடவான். * எபே. ௫, ௮. ௯. ௰௫.

௧௪ உங்கள் இருதயத்திலே கசப்பான பொறாமையும் விரோதத்தையும் வைத்திருந்தீர்களேயானால், உண்மைதப்பின பெருமையையும் பொய்யையுஞ் சொல்லாதேயுங்கோள்.

௧௫ இதுவுயரேயிருந்திறங்குகிற ஞானமாயிராமல், லவுகீகமும் சென்மசுபாவகுணமும் பேய்க்குணமுமானது.

௧௬ ஏனென்றால் பொறாமையுஞ் சண்டையுமெங்கேயோ, அங்கே கலாதியும் எல்லாத் துர்ச்செய்கையுமுண்டு.

௧௭ உயரேயிருந்து வருகிற ஞானமோவென்றால் முந்தலாவது சுத்தமுள்ளதும், பின்பு சமாதானமுஞ் சாந்தமும் இணக்கமுமுள்ளதும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததும், பாரபட்சமில்லாததும் மாயமற்றதுமாயிருக்குது.

௧௮ * நீதியின் கனியோவெனில் சமாதானத்தை நடப்பிக்கிறவர்களுக்கு சமாதானத்திலே விதைக்கப்பட்டு முளைக்கும். * யெச. ௩௨, ௰௭.

## ௪. அதிகாரம்.

¶ மாம்சீக இச்சைகளை விட்டுக் குணப்படச் சொன்ன கண்டிப்புள்ள புத்தி.

௧ உங்களுக்குள்ளே யுத்தங்களுஞ் சண்டைகளுமெதினாலே வந்தது, உங்கள் அவயவங்களிலே போர்ச்செய்யுஞ் செல்லிக்கை இச்சைகளாலல்லவோ. * ௧. பேது. ௨, ௰௧.

௨ நீங்கள் இச்சித்தும் உங்களுக்கில்லை, நீங்கள் பொறாமையும் எரிச்சலுமாயிருந்தும் அடையமாட்டீர்கள். சண்டையும் யுத்தமும் பண்ணுகிறீர்கள், ஆனாலும் நீங்கள் வேண்டிக்கொள்ளாதிருக்கிறதினாலே உங்களுக்கில்லை.

௩ நீங்கள் வேண்டிக்கொண்டும், உங்கள் செலவுகளிலே நீங்கள் சிலவழிக்கவேணுமென்று * ஆகாதவிதமாய் வேண்டிக்கொள்ளுகையால், அடையீர்கள். * யெச. ௧, ௰௫. யோவ. ௯, ௩௧.

௪ விபசாரரே, விபசாரிகளே, * லோகசினேகம்

 பரா

பராபரனைப் பகைக்கிறதென்று அறியீர்களோ? ஆகையால் எவனாகிலும் லோகத்துக்குச் சிநேகிதனாயிருக்க மனதானால், பராபரனுக்குப் பகைஞனாயிருக்கிறான். * ௧ யோவா. ௨, ௰௫. ௰௬.

௫ அல்லது: * நமக்குள்ளே வாசமாயிருக்கிற ஆவியானவர் பொறாமைக்கு விரோதமாய் இச்சிக்கிறாரென்கிற வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுதென்று நினைக்கிறீர்களோ. * ௪ மோ. ௰௧, ௨௯.

௬ அதுவுமல்லாமல் அதிகமான கிருபையை அளிக்கிறார், ஆகையினாலே: * * பராபரன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து, தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையை அளிக்கிறாரென்று சொல்லியிருக்குது. * ௧ லா. ௫, ௨௨. * * வாக். ௩, ௩௪.

௭ ஆகையால் பராபரனுக்குக் கீழ்ப்படியுங்கோள், * பிசாசோடே எதிர்த்து நில்லுங்கோள், அப்போ * * அது உங்களை விட்டோடிப்போம். * பேது. ௫, ௯. * * மத். ௪, ௰௧.

௮ பராபரனண்டை சேருங்கோள், அப்போ அவர் உங்களண்டை சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தமாக்குங்கோள், இருமனக்காரரே, இருதயங்களைக் கற்பாக்குங்கோள். * யெச. ௧, ௰௬.

௯ * சிறுமையாகி, துயரப்பட்டழுங்கோள், உங்கள் நகைப்பு புலம்பலாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது, * மத். ௫, ௪.

௰ * கர்த்தருக்கு முன்பாகத் தாழுங்கோள், அப்போ அவர் உங்களை உயர்த்துவார். * ௧. பேது. ௫, ௬.

¶ சகோதரனைக் குற்றமாய் நிந்தியாமலும் செல்வத்துக்காக வீம்பு பண்ணாமலுமிருக்க எச்சரித்தது.

௰௧ சகோதரரே, * ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதேயுங்கோள் சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றமாய் நிந்திக்கிறவன் நியாயப்பிரமாணத்துக்கு விரோதமாய்ப் பேசி, நியாயப்பிரமாணத்தைக் குற்றமாய் நிந்திக்கிறான். நியாயப்பிரமாணத்தைக் குற்றமாய் நிந்தித்தாயேயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல் அதைக் குற்றமாய் நிந்திக்கிறவனாயிருக்கிறாய். * மத். ௭, ௧ — ௫.

௰௨ நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிட்டவர் ஒருவரே ஒருவர். அவர் ரெட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர், * மற்றொருத்தனைக் குற்றமாய் நிந்திக்கிற நீயார். * ரோ. ௰௪, ௪.

௰௩ இப்போதும்: * நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்துக்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி வியாபாரம் பண்ணி, ஆதாயம் பெறுவோமென்கிறவர்களே, ஏகோ, * வாக். ௨௭, ௧. லூக். ௰௨. ௰௬ — ௨௰.

௰௪ நாளையதினத்தில் நடப்பது இன்னதென்றறியீர்களே, ஏனெனில் உங்கள் ஜீவன் என்ன, கொஞ்சநேரம் தோன்றிப் பிற்பாடு காணாமல் போகிற புகைதானே.

௰௫ அதற்குப் பதிலாக நீங்கள்: * கர்த்தருக்குச் சித்த

ச்சதமாயிருந்து, நாங்கள் உயிரோடிருந்தால், இதை அதைச் செய்வோம் என்று சொல்லவேண்டியதாமே. * அப்போ. ௰௮, ௨௧.

௰௬ இப்போதோ வீண்சலுகைகளில் வீம்புகளில் பெருமைபாராட்டுகிறீர்கள், இப்படிக்கொத்த பெருமைபாராட்டலெல்லாம் பொல்லாங்காயிருக்குது.

௰௭ இப்போதும் * ஒருத்தன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச்செய்யாதேபோனால் அவனுக்குப் பாவமாயிருக்குது. * லூ. ௰௨, ௪௭.

## ௫. அதிகாரம்.

¶ ஐசுவரியவான்களுக்குச் சொன்னபுத்தி.

இப்போதும் * ஐசுவரியமுள்ளவர்களே, உங்கள்மேல் வரும் நிர்ப்பந்தங்களினிமித்தியம் அலறி அழுங்கோள். * லூ. ௬. ௨௪. ௨௫.

௨ * உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போச்சுது * மத். ௬, ௰௯.

௩ உங்கள் பொன்னும் வெள்ளியும் பாசிபிடித்தது, * அதுகளுடைய பாசி உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, உங்கள் மாங்கிஷங்களை அக்கினியைப்போலத்தின்னும். கடைசிநாள்களில் பொக்கிஷங்களைச் சேர்த்தீர்கள், * மத். ௨௫, ௪௨. ௪௩.

௪ இதோ உங்கள் வயல்களை அறுத்த வேலையாள்களுடைய கூலி உங்களால் அக்கிரமமாய்ப் பண்ணப்பட்டுக் கூப்பிடுகுது. அறுத்தவர்களின் கூக்குரல்கள் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில்பட்டுது.

௫ * நீங்கள் பூமியின்மேல் செல்வமுள்ள செருக்குமாயிருந்தீர்கள், கொழுத்ததுகளை அடிக்கும் நாளில் செய்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள், * லூ. ௰௬, ௰௯.

௬ நீதிமானை நிரசலத்தாக்கி, கொன்றுபோட்டீர்கள், அவன் உங்களோடே எதிர்த்துநிற்கிறதில்லை.

¶ நீடியபொறுமையாயிருக்கவும் வீணாணை யிடாதிருக்கவும் எச்சரித்தது.

௭ இப்போதும், சகோதரரே, கர்த்தருடைய வருகைமட்டும் * நீடியபொறுமையாயிருங்கோள். இதோ பயிர்க்குடிப்பூமியின் விலையேறப்பெற்ற கனிக்குக்காத்திருந்து, தான் முன்மாரியையும் பின்மாரியையும் அடையுமட்டும் அதுக்காக நீடியபொறுமையாயிருக்கிறான். * லூ. ௨௧, ௰௯.

௮ நீங்களும் நீடியபொறுமையாயிருந்து உங்கள் இருதயங்களைத் திடப்படுத்துங்கோள், ஏனென்றால் கர்த்தருடைய வருகை சமீபித்திருக்குது.

௯ சகோதரரே, நீங்கள் ஆக்கினைக்குள்ளாயதிருக்கப்படாதபடிக்கு ஒருத்தர்க்கொருத்தர் விரோதமாய்ப் பெருமூச்சுவிடாதிருங்கோள். இதோ நியாயாதிபதி கதவுக்குமுன் நிற்கிறார்.

௰ என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்திலே பேசின

தீர்க்க,

தீர்க்கதெரிசிகளைத் தீங்கனுபவிக்கிறதுக்கும் நீண்டபொ
றுமைக்கும் மாதிரியாக வைத்துக்கொள்ளுங்கோள்.
௰௧ இதோ * சகிக்கிறவர்களைப் பாக்கியவான்க
ளென்கிறோம். நீங்கள் * * யோபுடைய பொறுமை
யைக் கேட்டீர்கள், கர்த்தருடைய முடிவையுங் கண்
டீர்கள், ஏனென்றால் கர்த்தர் வெகு உருக்கமும் இரக்
கமுமுள்ளவர். * மத். ௫, ௰. ௰௧. * * யோபு. ௧. ௨௧.
௰௨ எல்லாத்தையும் பார்க்கிலுமோவென்றால்,
என் சகோதரரே, * வானத்தின் பேரிலாகிலும் பூமியி
ன் பேரிலாகிலும் வேறொரு ஆணையைக்கொண்டே
னாகிலுஞ் சத்தியம்பண்ணாதேயுங்கோள். நீங்கள் ஆக்
கினைத்தீர்ப்புக்குள்ளாய் விழாதபடிக்கு உங்களுக்கு ஆ
மென்கிறது ஆமென்னவும் அல்லவென்கிறது அல்ல
வென்னவுமிருக்கக்கடவது. * மத். ௫, ௩௪—௩௭.

¶ கருத்தாய் செபம்பண்ணுகிறதும் பாவிகளைத் திருப்புகிறதும் எத்தனை பலனுள்ளதென்பது.

௰௩ உங்களில் ஒருத்தன் * தீங்கனுபவித்தால், செ
பம்பண்ணக்கடவான், * ஒருத்தன் மகிழ்ச்சியாயிருந்தா
ல், சங்கீதங்களைப் பாடக்கடவான். * சங்கீ. ௫௰, ௰௫. * * கொலொ. ௩, ௰௬.
௰௪ உங்களில் ஒருத்தன் வியாதியாயிருந்தால், அவன் ச
பையின் மூப்பரை வரவழைப்பானாக, அவர்கள் அவ
ன் மேல் செபம்பண்ணி, கர்த்தருடைய நாமத்திலே *
அவனை எண்ணெயால் பூசக்கடவார்கள். * மாற். ௬, ௰௩.
௰௫ அப்பொ விசுவாசத்தினுடைய செபம் பிணியா
ளியை ரெட்சிக்கும்படியாய் கர்த்தர் அவனை எழுப்
புவார், அவன் பாவங்களைச் செய்திருந்தால், அவனு
க்கு மன்னிக்கப்படும்.
௰௬ நீங்கள் குணமாகிறதுக்கு, * ஒருவரோடொரு
வர் பாவங்களை அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவ
ர் செபம்பண்ணுங்கோள். * * நீதிமானுடைய கருத்து
ள்ள வேண்டுதல் வெகு பெலனாயிருக்கிறது. * மத். ௫, ௨௩—௨௪. * * சங்கீ. ௱௪௫, ௰௮. ௰௯.
௰௭ எலியா நம்மோடொத்தபாடுகளுள்ள மனு
ஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்கு வேண்டிக்
கொண்டு செபம்பண்ணினான், அப்பொழுது மூன்று வரு
ஷமும் ஆறுமாதமும் * பூமியின்மேல் மழைபெய்யாதி
ருந்தது. * ௧. ராசா. ௰௭, ௧.
௰௮ * மறுபடி செபம்பண்ணினான், அப்பொ வா
னம் மழையையுந்தந்தது, பூமி தன் கனியையும் முளை
ப்பித்தது. * ௧. ராசா. ௰௮, ௪௧. ௪௫.
௰௯ சகோதரரே, உங்களில் ஒருத்தன் சத்தியத்துக்கு
விலகிமோசம்போகக்கொள்ளில், ஒருத்தன் அவனைத்
திருப்பினால்,
௨௰ அவன், பாவியை அவனுடைய வழியின் மோசத்து
க்கு விலக்கித்திருப்புகிறவன் ஒரு ஆத்துமத்தை மரணத்
துக்குத் தப்புவித்து, பாவங்களின் திரளை மூடுவனென்
றறியக்கடவான்.

# அபபோஸதலனாகிய

## பேதுருவினுடையபொதுவான

# முதலாமநிருபம.

௧. அதிகாரம.

ரெட்சிப்பினமேனமையைக்காணபிதது; அதுககுததககபரிசுததநடக்கைக் கேவினது.

௧ யேசுக்கிறிஸ்துவினுடைய அபபோஸதலனாகியபேதுரு, * பிதாவாகியபராபரனமுனனறிந்திருக்குதலினபடி, ஆவியினபரிசுததமாக்குதலினாலே கீழப்படியுதலுக்குமயேசுக்கிறிஸ்துவினுடையரெததததெளிப்புக்குதலுக்குநதெரிநதுகொளளப்பட்டவர்களாகிய, * ரோ. ௮, ௨௯.

௨ பொநதிலுங்கலாததியாவிலுங்கப்பதோக்கியாவிலுமஆசியாவிலுமபிததினியாவிலுஞ்சிதறியிருக்கிறபரதேசிகளுக்கெழுதுகிறதாவது: கிருபையுஞ்சமாதானமுமஉங்களுக்குப்பெருகக்கடவது. * யாக. ௧, ௧.

௩ யேசுக்கிறிஸ்துமரித்தோரிலிருந்தெழுநததினாலே நமமை, தமமுடைமிகுந்தஇரக்கத்தினபடியே.

௪ அழிந்திடும * வதங்குமமாசுகந்தரத்தினீவுளளநமபிக்கைக்குமவப்படியுதசெனிப்பிக்கதபராபரனுமநமமுடைகர்த்தராகியயேசுக்கிறிஸ்துவினுடையபிதாவுமானவர்ஸதோத்திரிக்கப்பட்டவர். * ரு, ச.

௫ கடைசிகாலத்திலவெளிப்படஆயத்தமானரெட்சிப்புக்குப்பராபரனுடையபெலத்தினாலேவிசுவாசத்தினாலேகாக்கப்படுகிறஉங்களுக்குஅதுபரமண்டலங்களிலேவைத்திருக்குது.

௬ யேசுக்கிறிஸ்துவெளிப்படுமபோதுஉங்கள்புகழ்ச்சியுங்கனமுமமகிமையுமவர, உங்கள விசுவாசத்தினஉததமமநெருப்பினாலே பிடமிடப்படுகிறஅழிவுளளபொனனிலுமமகாவிலையேறபபெறறதாயக்காணப்பிடிக்கப்படுவதற்கு,

௭ பேபோ * பலவிதசோதனைகளில, தேவையானால, கொஞசக்காலந்துக்கமாயிருக்கிறீர்களாகிலஅப்போதுகளிகூருவீர்கள. * ௨. கொரி. ௪, ௰௭.

௮ அவரைக்காணாமலேயிருக்கிறவர்களுமபோ * தெரிசியாமலஅவர்மேலேவிசுவாசிக்கிறவர்களுமாகியநீங்களசொலலிமுடியாதமகிமையுளளசந்தோஷமாயகளிகூருகிறது. * யோவ. ௨௰, ௨௯.

௯ உங்களவிசுவாசத்தினமுடிவாகியஆத்துமங்களினரெட்சிப்பைஅடைகிறீர்கள.

௰ உங்களமேலவநதகிருபையைக்குறித்துத்தீர்க்கதெரிசனஞ்சொனனதீர்க்கதெரிசிகளந்தரெட்சிப்பைக்குறித்துமெத்தவாராய்ந்துதேடிஆராயந்து,

௰௧ கிறிஸ்துவுக்குணடானபாடுகளையுமஅதுக

ளின

ளின்பிறகுவரும்மகிமைகளையுஞ்சாட்சியாய்முன்னறி
வித்தவராகிய தங்களுள்ள கிறிஸ்துவினுடைய
ஆவியானவர் எந்தக்காலத்தை அல்லது எப்படிக்
கொத்தகாலத்தை குறித்துகாட்டினாரென்று ஆரா
ய்ந்தார்கள்.

௧௨ தாங்கள் தங்களுக்கல்ல நமக்குத்
தான் தங்கள் ஊழியஞ்செய்கிறார்களென்று அ
வர்களுக்கு வெளியாக்கப்பட்டுது. * வானத்திலிரு
ந்தனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியால் உங்களுக்குச் சுவி
சேஷத்தைப்பிரசங்கித்தவர்களைக்கொண்டுஇ
ப்போ உங்களுக்கறிவிக்கப்பட்டுது. இதுகளுக்குள்
தேவதூதர் குனிந்துபார்க்க ஆசையாயிருக்கிறார்க
ள். * அப்போ ௨, ௧ — ௪.

௧௩ ஆகையால் * நீங்கள் உங்கள் சிந்தையின் அரைக
ளைக்கட்டிக்கொண்டு, * * தெளிவுள்ளவர்களாயிரு
ந்து, யேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குக்
கொண்டுவரப்படுங்கிருபையின்மேல் பூரண நம்பி
க்கையைவைத்து, * லூ. ௧௨, ௩௫. ௩௬. * * லூ.
௨௧, ௩௪.

௧௪ கீழ்ப்படிகிற பிள்ளைகளைப்போலே முன்
உங்கள் அறியாமையில் நடந்த இச்சைகளுக்கொத்தரு
பந்தரித்துக்கொள்ளாதிருந்து,

௧௫ உங்களை அழைத்த பரிசுத்தரைப்போலாய் * நீ
ங்களும் எல்லா நடக்கையிலும் பரிசுத்தராயிருங்கோ
ள். * லூ. ௧, ௭௫.

௧௬ ஏனெனில்: பரிசுத்தராயிருங்கோள், ஏனெ
ன்றால் நான் பரிசுத்தராயிருக்கிறேன் என்றெழுதி
யிருக்குது. * ௩. மோ. ௧௯, ௨.

௧௭ பாரபட்சமில்லாமல் அவனவன் கிரியைகளி
ன்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத்
தொழுதுகொண்டிருக்கக்கொள்ள நீங்களிங்கே
மட்டும் * பயத்துடனே நடந்து, * பிலி. ௨, ௧௨.

௧௮ அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியி
னாலும் அல்லது பொன்னினாலுமல்ல,

௧௯ குற்றமில்லாத மாசுமற்ற ஆட்டுக்குட்டியாகிய கி
றிஸ்துவின் * விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே பிதா
க்களுடைய பாரம்பரை நடக்கையின் மாயையைக்கு
ங்கலாக்க மீட்கப்பட்டீர்களென்கிறதை அறிந்தி
ருங்கோள். * அப. ௨௦, ௨௮. ௧. கொரி. ௬, ௨௦.

௨௦ அவர் * லோகத்தோற்றத்துக்குமுன்னாலே
குறிக்கப்பட்டவராயிருந்தும், தம்முடமூலமாய்ப்பரா
பரன்மேல் விசுவாசிக்கிற உங்களுக்காக இந்தக்கடை
யாந்தரகாலங்களில் வெளிப்பட்டார். * ௨. திமோ.
௧, ௯. ௰.

௨௧ உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் பராபரன்
மேலிருக்கும்படிக்கு அவரை அவர் மரித்தோரிலிருந்
தெழுப்பி, அவருக்கு மகிமையைக்கொடுத்தார்.

௨௨ ஆகையால் நீங்கள் சத்தியத்துக்கு * கீழ்ப்படி
கிறதினாலே உங்கள் ஆத்துமங்களை ஆவியைக்கொ
ண்டு மாயமற்ற சகோதர சிநேகத்துக்கென்று சுத்த
மாக்கி,

௨௩ அழிவுள்ள வித்தினாலல்ல, என்றென்றை

க்கு

க்கும்நிற்கிற சீவனுள்ள தேவவசனமென்கிற அழிவில்லாத வித்தினாலே * மறுபடியுஞ் செனித்தவர்களாயொருத்தரையொருத்தர் சுத்த இருதயத்தால் கருத்தாய்ச் சிநேகியுங்கோள். * யோவ. ௧, ௰௩. யாக். ௧, ௰௮.

௨௪ ஏனென்றால் * மாம்சமெல்லாம் புல்லைப்போலேயும், மனுஷனுடைய மகிமையெல்லாம் புல்லின் பூவைப்போலேயுமிருக்குது. புல் உலர்ந்து அதின் பூ உதிர்ந்தது. * சங். ௱௩, ௰௫ — ௰௭. யெச. ௪௰, ௬ — ௮.

௨௫ ஆனாலுங் கர்த்தருடைய வசனமென்றென்றைக்கும் நிற்கும். அதுவோவெனில் உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்ட வசனந்தானே.

## ௨. அதிகாரம்.

¶ கிறிஸ்துவுக்குள் வளர்ந்தேறி, அவனரச சனமாறக நடக்கையால் அறிக்கைபண்ணவினது.

௧ ஆகையால், * கர்த்தர் தயவுள்ளவரென்கிறதை நீங்கள் ருசிபார்த்ததுண்டானால், * சங்கீ. ௩௪, ௯.

௨ * எல்லாத் துற்குணத்தையும் எல்லாக் கபடத்தையும் மாயங்களையும் பொறாமைகளையும் எல்லாப் புறணிகளையும் அகற்றிப்போட்டு, * எபே. ௪, ௩௧.

௩ நீங்கள் * வசனத்தின் கபடற்ற பாலினால் வளரும்படிக்கு, * * இப்போபிறந்த குழந்தைகளைப்போலே அதின்மேல் வாஞ்சையாயிருங்கோள். * சங். ௱௰௯, ௱௩௧. * * மத். ௰௮, ௩.

௪ * மனுஷராலே ஆகாதென்று தள்ளுண்டு பராபரனிடத்திலே தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான சீவனுள்ள கல்லாகிய அவரிடமாகச் சேர்ந்துவந்த நீங்களும், * சங். ௱௰௮, ௨௨.

௫ சீவனுள்ள கல்லுகளைப்போலே * ஞானமாளிகையாகவும், யேசுக்கிறிஸ்துவின்மூலமாய் பராபரனுக்கு நற்பிரியமான * * ஞானப்பெலிகளைச் செலுத்தும் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவுங் கட்டுப்படுங்கோள். * எபே. ௨, ௨௰ — ௨௨. * * ஓசே. ௰௨, ௧. எபி. ௰௩, ௰௫. ௰௬.

௬ * இதோ தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமான கோடிக்கல்லைச் சீயோனிலே வைக்கிறேன், அதின்பேரில் விசுவாசிக்கிறவன் வெட்கப்பட்டுப்போவதில்லை என்கிறது அதற்காக வேதஎழுத்தில் எழுதியிருக்குது. * யெச. ௨௮, ௰௬.

௭ ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது. அவிசுவாசிகளுக்கோவென்றால், வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின இந்தக் கல்லு கோடிக்குத் தலையும் * தடுக்கலின் கல்லும் இடறுதலின் கல்லுமாச்சுது, * யெச. ௮, ௰௪. ௰௫. லூ. ௨, ௩௪.

௮ அவர்கள் இணங்காதவர்களாயிருந்து வசனத்திலே

இடறு

டறுகிறார்கள், அதற்குள்வைக்கப்பட்டவர்களு மாயிருக்கிறார்கள்,

௯ நீங்களோ உங்களை அந்தகாரத்தைவிட்டுத் தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்துக்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கு, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியும், * ராசரீகமான ஆசாரியக்கூட்டமும், பரிசுத்தசாதியும், அவருக்குச் சொந்தமான சனமுமாயிருக்கிறீர்கள். * ௨. மோ. ௰௯, ௫. ௬. அபொ. ௧, ௬. ௫, ௰.

௰ * முற்காலத்திலே சனமல்லாதிருந்தீர்கள் இப்போ பராபரனுடைய சனம், இரக்கம்பெறாதிருந்தீர்கள் இப்போ இரக்கம்பெற்றவர்கள். * ஒசே. ௧, ௰. ௨, ௨௩.

௰௧ பிரியமானவர்களே, ஆத்துமத்துக்கு விரோதமாகப்போர்செய்யும் * மாம்சயிச்சைகளுக்கு நீங்கள் விலகியிருக்கவும், * ரோ. ௰௩, ௰௪. கலாத். ௫, ௨௪.

௰௨ * புறசாதியார் உங்களை எதிலே அக்கிரமக்காரரென்று பழிதூற்றுகிறார்களோ, அதிலே உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, கண்காணிப்பின் நாளிலே பராபரனை மகிமைப்படுத்தும்படிக்கு, நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கையாய் நடக்கவும், * அரதேசிபரதேசிகளாகிய உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். * மத். ௫, ௰௬. எபி. ௰௧, ௰௩.

¶ துரைத்தனத்துக்கும் எசமானர்களுக்குங் கீழ்ப்படிந்து நடக்கப் புத்திசொன்னது.

௰௩ ஆகையால் * எல்லா மனுஷ அதிகாரக்கட்டளைகளுக்குங் கர்த்தர்நிமித்தியமாகக் கீழ்ப்படியுங்கோள், மேன்மை அதிகாரமுள்ள ராசாவுக்கானாலுஞ்சரி, * ரோ. ௰௩, ௧. தீத்து. ௩, ௧.

௰௪ தின்மை செய்கிறவர்களை ஆக்கினைக்கும், நன்மை செய்கிறவர்களைப் புகழ்ச்சிக்கும் அவனாலனுப்பப்பட்ட துரைகளுக்கானாலுஞ்சரி.

௰௫ ஏனெனில் நீங்கள் * நன்மைசெய்கிறதினாலே மதியற்ற மனுஷருடைய அறியாமையை வாயடக்குவது பராபரனுடைய சித்தமாயிருக்குது. * தீத்து. ௨, ௭.

௰௬ * விடுதலையாயிருந்தும், விடுதலையைத் துற்குணத்துக்கு மூடலாகக் கொண்டிராமல், பராபரனுடைய அடிமைகளாயிருங்கோள். * யோவ். ௮, ௩௬.

௰௭ எல்லாரையுங் கனம்பண்ணுங்கோள், * சகோதரரைச் சிநேகியுங்கோள், பராபரனுக்குப் பயந்திருங்கோள், ராசாவைக் கனம்பண்ணுங்கோள்.

௰௮ * வேலைக்காரரே, எல்லாப்பயத்துடனே எசமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கோள், நல்லவர்களுக்குஞ் சாந்தகுணமுள்ளவர்களுக்கும் மாத்திரமல்ல, முரட்டருக்குங்கூடத்தானே. * எபே. ௬, ௫—௮.

௰௯ ஏனென்றால் ஒருத்தன் பராபரன்பேரில் பத்தியான மனச்சாட்சியினிமித்தியம் * துக்கங்களைச் சகித்து, அநியாயமாய்ப் பாடனுபவித்தால், அது வெகுமானம். * மத். ௫, ௰.

௨௰ ஏனெனில் நீங்கள் பாவஞ்செய்தறையப்பட்டு

செயிததால, அதெனனகீறதி. நீஙகள நனமைசெயதுபா டுபடடுசசயிததிர்ககளேயானால, அதுவேபராபரனிட ததிலேகிருபை.

௨௧ ஏனெனறால * இதுக்கழைக்கபபடடீர்கள. ஏனெனனிலகிறிஸததுவும உஙகளுக்காகப பாடுபடடு, நீஙகளதமமுடைகாலடிகளைததொடர்நதுவர, உஙக ளுக்குபபிறமாணமபினனைவைததார். * ௧. தெச. ௩, ௩.

௨௨ * அவர்பாவஞசெயததிலலை, அவர்வாயிலெ வஞசனைகாணபபடடதுமிலலை. * யெச. ௫௩, ௯.

௨௩ அவர்வையபபடுகிறபோது வதிருக்குவைய யாமலும, பாடுபடுகிறபோதுமிரடடாமலும, நீதியா யநதீர்க்கிறவருக்கதைஒபபுக்கொடுததார். * யெச. ௫௩, ௭.

௨௪ நாமபாவஙகளுக்குசசெதது, நீதிககுபபிழைக்க, * நமமுடையபாவஙகளைததாமேதமமுடையசரீரததில எடுததுக்கொணடுமரததிலேறினார். அவர்தழுமபுக ளாலகுணமானீர்கள. * யெச. ௫௩, ௪. ௧. யோவ. ௩, ௫.

௨௫ ஏனெனனில * சிதறுணட ஆடுகளைபபோலிருந தீர்கள, ஆனாலிபபோஉஙகளஆததுமாஙகளுடைய * மெயபபருஙகணகாணியாருமான வரணணடைக்குத திருமபபபடடீர்கள. * யெச. ௫௩, ௬. * யோவ. ௰, ௰௧.

## ௩. அதிகாரம.

¶ பெணசாதிகளுக்குமபுருஷருக்குஞசொனனபுததி.

இபபடியே. * பெணசாதிகளே, சிலர்வசனததாலே இணஙகாதேபோனாலும, பயததோடேகூடியஉ ஙகளகறபானநடக்கையைக்கணணோக்கி, * எபே. ௫, ௨௨ — ௨௪.

௨ வசனமனறியெஸததிரிகளினநடக்கையா லஆதாயபபடுததிக்கொளளபபடுவதறகு, உஙகளு டையபுருஷருக்குக்கீழபபடிநதிருஙகோள.

௩ * புறமபேமயிர்பினனலுமபொனஆபரணப பூணுதலுமவஸததிரஉடுக்குதலுமஉஙகளஅலஙகா ரமாயிராமல, * ௧. திமோ. ௨, ௯. யெச. ௩, ௰௮ — ௨௪.

௪ இருதயததினஅநதரஙகமனுஷனமெததனவான அமைநதஆவியெனகிறஅழியாஅலஙகாரததைததரிததிருக் ககடவது, அதுவேபராபரனுக்குமுனபாகவிலை யெறபபெறறது.

௫ ஏனெனனிலஇபபடியேபூறுவததிலபராபரன மேலநமபிக்கையானபரிசுததபெணசாதிகளும, தங களுடையபுருஷருக்குக்கீழபபடிநது, தஙகளைஅல ஙகரிததார்கள.

௬ இபபடி * சாறாளஆபிரகாமையெஜமானனெனறு அழைததுஅவனுக்குக்கீழபபடிநதாள, நனறுசெயது, ஒருதிகிலுக்குமபயபபடாதிருநதீர்களானால, அவ ளுக்குநீஙகளபிளளைகளானீர்கள. * ௧. மோ. ௰௮, ௰௨.

௭ அப்படியே * புருஷரே, உங்கள் ஜெபங்களுக்குத்
தடைபடாதபடிக்கு, புத்தியுள்ளோராய் அவர்களோடே
வாசமாயிருந்து, உங்களிலும் பெலவீனமான பாண்டமா
கிய ஸ்திரீகளுக்கு, அவர்கள் ஜீவனுடைய கிருபை
க்கு உடன்சுதந்தரரென்று, கனம்பண்ணுங்கள். *
எபே. ௫, ௨௫, ௩௩.

௮ சிநேகமும்பொறுமையுமானகுணமுமாயிருக்க
த்தக்கதாகச்சொன்னபுத்தி.

௮ கடைசியானதென்னவெனில், எல்லாரும் * ஒருமன
ப்பட்டு, விசாரப்படுகிறவர்களோடே விசாரப்பட்டுச் சகோதர நே
சமுள்ளவர்களும், உருக்கமுள்ளவர்களும் பட்சமுள்ளவர்களுமாயி
ருங்கள். * ரோ. ௧௨, ௧௫, ௧௬.
௯ * பொல்லாப்புக்குப் பொல்லாப்பையும், அ
லட்சியத்துக்கு உதாசனத்தையுஞ் சரிக்கட்டாதே
யுங்கோள். அதற்கு எதிரிடையாக நீங்கள் ஆசீர்வா
தத்தைச் சுதந்தரிக்கிறதற்கு அழைக்கப்பட்டீர்க
ளென்றறிந்து, ஆசீர்வதியுங்கோள். * மத்தே. ௫,
௪௪. ௪௫.
௧௦ ஏனெனில் * ஜீவனைவிரும்பிநல்லநாள்களைக்கா
ணவேண்டுமென்றிருக்கிறவன் தன் நாவைப் பொ
ல்லாப்புக்கும் தன் உதடுகளைக் கபடவசனிப்புக்கும்
விலக்கக்கடவன். * சங். ௩௪. ௧௩ — ௧௭.
௧௧ பொல்லாப்பைவிட்டுவிலகி நன்மை செய்ய
வும், சமாதானத்தைத் தேடி அதைத் தொடரவுங்
கடவன்.
௧௨ ஏனென்றால் கர்த்தருடைய கண்கள் நீதிமான்க
ள்மேல் வைக்கப்பட்டு, அவருடைய செவிகள் அவ
ர்களுடைய வேண்டுதலுக்குக் கவனிக்கிறது; கர்த்தரு
டைய முகமோ பொல்லாங்கு செய்கிறவர்களுக்கு வி
ரோதமாயிருக்கிறது.
௧௩ நீங்கள் நன்மையைப் பின்பற்றுகிறவர்களா
னால், உங்களுக்குப் பொல்லாப்புச்செய்பவனும்
ஆர்.
௧௪ அல்லாமலும் * நீதியினிமித்தியமாக நீங்க
ள் பாடனுபவித்தாலும் பாக்கியவான்களாயிருக்கி
றீர்கள். * * அவர்கள் பயமுறுத்தலுக்கு நீங்கள்
பயப்படாமலும் கலங்காமலும், * மத். ௫, ௧௦. *
ஏரே. ௪, ௮.
௧௫ * கர்த்தராகிய பராபரனை உங்கள் இருதயங்க
ளிலே பரிசுத்தம்பண்ணி, உங்களிலிருக்கும் நம்பிக்கை
யைக்குறித்து உங்களை உத்தரவு கேட்கிறவனுக்கெ
ல்லாம் மெத்தனவோடும் பயத்தோடும் உத்தரஞ்
சொல்லப்போதுமாய் ஆயத்தமாயிருங்கள், * ஏச. ௨, ௧௩.
௧௬ * கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் நல்நடக்
கையைத் தூஷிக்கிறவர்கள் உங்களைப் பொல்லா
ங்குசெய்கிறவர்களென்று பொய்யாய்ச் சொல்லுகிறத
தில் வெட்கப்படும்படிக்கு, நல்மனச்சாட்சியுடை
யவர்களாயிருங்கள். * ௨, ௧௨.
௧௭ அதேனென்றால் நன்மைசெய்கிறவர்களாய்ப்
பாடனுபவிக்கத்தகுதியாயிருக்கிலும், பராபரனுக்குச்
சசித்து

ச்சித்தமானால் நன்மைசெய்கிறவர்களாய்ப் பாடனுப விக்கிறது தாவிளை.

௰௮ ஏனென்னில் கிறிஸ்துவும் பாவங்களினிமித்தியமா யொருதரம் பாடுபட்டார், * அநீதியர்களுக்காக நீதியுள்ளவராகப் பாடுபட்டு, நம்மைப் பராபரனண்டைக்குச் சேர்க்கத்தக்கதாக, மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியாலே உயிர்ப்பிக்கப்பட்டார். * ரோ. ௫, ௬.

௰௯ அதிலே அவர் போய், * பூர்வத்திலே பராபரனுடைய நீடிய பொறுமை நோவாவின் நாட்களிலே பேழை ஆயத்தம் பண்ணப்படுகையில் பொறுத்திருக்கும்போது விசுவாசியாமல் போனவர்களாய்க் காவலிலுள்ள ஆவிகளுக்கும் * பிரசங்கித்தார். * ௧. மோ. ௬, ௩. ௫ * ௪, ௬.

௨௰ அந்தப் பேழையிலே கொஞ்சம்பேராகிய எட்டு ஆத்துமாக்கள் உட்பட்டு, தண்ணீராலே காப்பாற்றப்பட்டார்கள்.

௨௰௧ அதற்கு ஒப்பனையாகிய * ஞானஸ்நானம் மாம்சத்தின் அழுக்கை நீக்குதலாயிராமல், பராபரனுடைய நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்போது நம்மையும் இயேசுக்கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுந்ததினாலே ரட்சிக்குது. * மாற்கு. ௰௬, ௰௬. தீத். ௩, ௫.

௨௰௨ அவர் பரமண்டலத்துக்குப் போய், * பராபரனுடைய வலதுபாரிசத்திலே யிருக்கிறார், அவருக்குத் தூதர்களும் அதிகாரங்களும் வல்லமைகளும் கீழ்ப்படிந்திருக்குது. * எபே. ௧, ௨௰ — ௨௰௨.

## ௪. அதிகாரம்.

*பாவத்துக்குச் செத்து, சிநேகமுள்ளவர்களா யிருக்கவும், உபத்திரவங்களிலே நம் சீராயிருக்கவும் புத்திசொன்னது.*

இப்போது கிறிஸ்து நமக்காக மாம்சத்திலே பாடுபட்டபடியால், நீங்களும் * அந்தச் சிந்தையையே ஆயுதமாக உன்றுகொள்ளுங்கோள். * எபி. ௰௨, ௧ — ௩.

௨ ஏனென்னில் மாம்சத்திலே பாடுபட்டவனே ன், மாம்சத்திலே மீதியாயிருக்குங்காலத்தில் மனுஷருடைய இச்சைகளுக்கல்ல, பராபரனுடைய சித்தத்துக்குப்படி பிழைக்கும்படிக்கு, பாவத்தைவிட்டோய்ந்தான்.

௩ ஏனென்றால் * சென்ற ஆயுசின் காலத்திலே காமவிகாரங்களிலும் இச்சைகளிலும் மதுபானவெறிகளிலும் பெருந்தீனிகளிலும் குடிகளிலும் அருவருப்பான விக்கிரகாராதனைகளிலும் நடந்து, அஞ்ஞானிகளின் இஷ்டமானதுக்கேற்கத்தை நடப்பித்தது நமக்குப் போதும். * எபே. ௪, ௰௭ — ௰௯.

௪ நீங்கள் அந்தக் கேடமாகத்தி னராமாறுக்குக் கூட ஓடாமலிருக்கிறதைப் புதுமையென்றெண்ணி உங்களைத் தூஷிக்கிறார்கள்.

௫ அவர்கள் உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந்தீர்க்க ஆயத்தமாயிருக்கிறவருக்குக் கணக்கொப்பிப்பார்கள்.

௬ ஏனெனில் தேற்றகாக * மரித்தோருக்கும், அவர்
கள் மாம்சத்திலே மனுஷர் முன்பாக ஞாயந்தீர்க்கப்
பட்டு, ஆவியிலே பராபரன் முன்பாகப் பிழைப்
பதற்காக, சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. * ௩. ௰௯.
௭ * ஆனால் எல்லாக்காரியங்களின் முடிவுங் கிட்ட
வந்தது, ஆகையால் ** சொஸ்தபுத்தியாயிருந்து, செ
பங்களுக்கு மனத்தெளிவாயிருங்கோள். * ௧. யோவ.
௨, ௰௮. ** லூா. ௨௧, ௩௪.
௮ எல்லாத்தையும் பார்க்கிலுமோ வென்றால் ஒ
ருத்தற்கொருத்தர் கருத்தான சினேகமுள்ளவர்களாயி
ருங்கோள். ஏனெனில் சினேகம் * திரளான பாவங்களை
மூடும். * வாக்கி. ௰, ௨.
௯ நீங்கள் முறுமுறுப்பில்லாமல் ஒருத்தரை ஒருத்த
ர் * சேர்த்துக்கொண்டு, * எபிரே. ௰௩, ௨.
௰ * அவனவன் எப்படி வரம் பெற்றிருக்கிறானோ,
அப்படியே, பராபரனுடைய பலவிதக்கிருபையின்
நல்ல உக்கிராணக்காறரைப்போல ஒருத்தற்கொருத்தர்
அதினாலே ஊழியஞ் செய்யுங்கோள். * றோ. ௰௨, ௬.
௰௧ * ஒருத்தன் பேசினால் பராபரனுடைய வாக்கிய
ங்களாய்ப் பேசக்கடவான், ஒருத்தன் ஊழியஞ் செய்
தால், பராபரன் கொடுக்கிற பெலத்தால் செய்யக்
கடவான், எல்லாத்திலும் பராபரன் யேசுக்கிறிஸ்து
மூலமாய் மகிமைப்படும்படிக்குத்தானே, அவ
ருக்குள்ள என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலு
ம் மகிமையும் பெலனும் உண்டாயிருக்குது, ஆமென். *
றோ. ௰௨, ௭. ௮.
௰௨ பிரியமானவர்களே, * சோதினையாக உங்க
ளுக்குண்டாகுந்தணலினாலே நீங்கள் ஒரு புதுமை உங்
களுக்குச் சம்பவிக்கிறதுபோலே, திகையாமலே, * ௧,
௬. ௭. யெச. ௪௮, ௰.
௰௩ கிறிஸ்துவினுடைய பாடுகளுக்கெப்படிப் ப
ங்குள்ளவர்களானீர்களோ, அப்படி அவருடைய
மகிமையின் வெளிப்படுதலிலுங் களிகூர்ந்து மகிழும்ப
டிக்கும் * சந்தோஷமாயிருங்கோள். * யாக. ௧, ௨. ௩.
௰௪ * நீங்கள் கிறிஸ்துவினுடைய நாமத்தினிமித்
தம் நிந்திக்கப்பட்டால், பாக்கியவான்கள், ஏனெ
னில் மகிமையின் ஆவியும் பராபரனின் ஆவியுமானவ
ர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார், அவர்களிடத்திலே
தூஷணிக்கப்படுகிறார் உங்களிடத்திலே மகிமைப்
படுகிறார். * மத. ௫, ௰௧ ௰௨.
௰௫ ஆனால் உங்களில் ஒருத்தனுங் கொலைபாதகனா
ய், அல்லது திருடனாய், அல்லது பொல்லாங்கு செய்
தவனாய், அல்லது அன்னியகாரியங்களில் தலையிட்
டுக்கொண்டவனாய்ப் பாடுபடவேண்டாம்.
௰௬ கிறிஸ்தவனாய்ப் பாடுபட்டானேயாகில் வெ
ட்காமலிருந்து, பாராபரனை இக்காரியத்திலே * மகி
மைப்படுத்தக்கடவான். * யோவ. ௨௧, ௰௯.
௰௭ ஏனெனில், ஞாயத்தீர்ப்பு * பராபரனுடைய
வீட்டிலே துவக்குங்காலமாயிருக்குது முந்தி நம்மிடத்தி
லே துவக்கப்பட்டதேயாகில், பாராபரனுடைய சுவிசே
ஷத்துக்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு * என்ன
மாயிருக்கும். * யெறே. ௨௫, ௨௯. ** லூா. ௨௩, ௩௧.

௰௮ * நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், ஆகாதவனும் பாவியுமானவனெங்கே நிற்பான். * வாக்கி. ௰௧. ௩௧.

௰௯ ஆகையால் பராபரனுடைய சித்தத்தின்படியே பாடுபடுகிறவர்கள் உண்மையுள்ள சிருஷ்டிகராகிய அவருக்குத் தங்கள் ஆத்துமாக்களை நன்மை செய்கிறவர்களாய் ஒப்புக்கொடுக்கக்கடவார்கள். * சங்கீ. ௩௧. ௫. லூ. ௨௩, ௪௬.

௫. அதிகாரம்.

¶ மூப்பருக்கும் மற்றுமுள்ளவருக்குஞ் சொன்னபுத்தி.

உங்களிலுள்ள மூப்பரை உடன்மூப்பனுங் கிறிஸ்துவினுடைய பாடுகளின் சாட்சியும் வெளிப்படப்போகிற மகிமையின் பங்காளனுமாகிய நான் எச்சரிக்கிறதாவது:

௨ உங்களிடத்திலுள்ள * பராபரனுடைய மந்தையை நீங்கள் கட்டாயத்தினாலல்ல, மனப்பூர்வத்தினாலேயும், ** லோபத்தனமான ஆதாயப்பிரியத்தினாலல்ல, உச்சாயமனத்தோடேயும், * அப். ௨௰, ௨௮. ** ௧. தீமோ. ௩, ௩.

௩ * சுதந்தரங்களை ஆண்டுகொள்ளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு ** மாதிரிகளாகவுங் கண்காணித்து மேயுங்கோள். * ௨. கொரி. ௧, ௨௪. ** பிலிப். ௩, ௰௭.

௪ அப்போ, * பிரதான மேய்ப்பர் வெளிப்படுகையில் ** மகிமையினுடைய வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். * ௨, ௨௫. ** ௨. தீமோ. ௪, ௮. அபொ. ௨, ௰.

௫ அப்படியே, இளைஞர்களே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கோள், * எல்லாரும் ஒருவருக்கொருத்தர் கீழ்ப்படிந்து மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கோள். ஏனெனில் ** அகந்தையுள்ளவர்களோடே பராபரன் எதிர்த்து நின்று, தாழ்மையானவர்களுக்குக் கிருபையை அளிக்கிறார். * எபே. ௫, ௨௧. ** மத்தே. ௨௩, ௰௨.

௬ ஆனபடியினாலே பராபரன் ஏற்றகாலத்தில் உங்களை உயர்த்தும்படிக்கு, * அவருடைய வல்லமையான கைக்குக் கீழாகத் தாழுங்கோள். * யாக். ௪. ௰.

௭ * உங்கள் கவலையெல்லாம் அவர்மேலே எறிந்துபோடுங்கோள், ஏனெனில் அவர் உங்களுக்காகக் கவிசாரிப்பாயிருக்கிறார். * பிலி. ௪, ௬. ௭. எபிரே. ௰௩, ௫.

௮ * மனத்தெளிவாயிருங்கோள், முழித்திருங்கோள். ஏனெனில் உங்கள் எதிரியாகிய பிசாசு கெர்ச்சிக்கிற சிங்கம்போலே, எவனை முழுங்கலாமோவென்றவனைத் தேடிச்சுத்தித்திரியுது. * ௧. தெச. ௫, ௬.

௯ * அவனோடே நீங்கள் விசுவாசத்தில் உறுதியாய் எதிர்த்து நின்று, லோகத்திலுள்ள உங்கள் சகோதரக்கூட்டத்திலே அப்படிக்கொத்த பாடுகளே நிறைவேறி வருகுதென்றறியுங்கோள். * எபே. ௬, ௰—௰௬.

௰ ஆனால் * கொஞ்சக்காலம் பாடுபடுகிற நம்மைக்கிறி

ஸ்து

ஸ்து யேசுவுக்குள் தம்முடைய நித்திய மகிமைக்கு அழைத்துள்ள சகல கிருபையினுடைய பராபரன் உங்களைச் சீர்ப்பொருந்தப்பண்ணி, உறுதியாக்கி, திடப்படுத்தி அஸ்திவாரப்படுத்தக்கடவார். * ௧, ௭.

௰௧ அவருக்கு மகிமையும் பெலனும் என்றென்றைக்கும் சதாகாலங்களிலும் உண்டாயிருக்கக்கடவது, ஆமென்.

௰௨ புத்தியாகவும், நீங்கள் உள்ளே நிற்கிற இந்தக் கிருபை பராபரனுடைய மெய்யான கிருபைதானென்று சாட்சியாகவும் நான் சுருக்கத்துச் சுருக்கமாய் உங்களுக்கு எழுதி, என்னாலே எண்ணப்பட்ட உண்மையாயிருக்கிற சகோதரனாகிய சில்வானுவினுடைய கையிலே அனுப்பினேன்.

௰௩ பாபிலோனியாவிலே கூடத் தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிற சபையும் என் குமாரனாகிய மாற்குவும் உங்களை வாழ்த்துகிறார்கள்.

௰௪ ஒருத்தரொருத்தர் சிநேகத்தின் முத்தத்தினாலே யின்விக்கொள்ளுங்கோள். கிறிஸ்து யேசுவுக்குள்ளாகிய உங்களனைவருக்குஞ் சமாதானம். ஆமென்.

---

# அப்போஸ்தலனாகிய

## பேதுருவினுடைய பொதுவான

# இரண்டாம் நிருபம்.

### ௧. அதிகாரம்.

¶ புண்ணிய நடக்கைக்கு எழுப்புகிற புத்தி.

நம்முடைய பராபரனும் ரெட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களோடே கூட ஒரே அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு யேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும் அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது.

௨ பராபரனையும் நம்முடைய கர்த்தராகிய யேசுவையும் அறிகிற அறிவினாலே * கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது. * ௧. பேது. ௧, ௨.

௩ மகிமையினாலும் புண்ணியத்தினாலும் நம்மை அழைத்தவரை நாம் அறிகிற அறிவினாலே அவருடைய தெய்வ பெலனானது ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டியதெல்லாவற்றையும் * நமக்குக் கொடுத்தபடியினாலும், * ௧. பேது. ௨, ௯.

௪ இச்சையாலே லோகத்திலுள்ள கேட்டுக்கு நீங்கள் தப்பிவித்துக்கொண்டவர்களாயிருந்து தெய்வீக குணத்துக்குப் பங்குள்ளவர்களாகத்தக்கதாக மகா பெரியவைகளும் அருமையான வாக்குத்தத்தங்கள் நமக்குத் தயவாய்ப் பண்ணப்பட்டபடியினாலும்,

ரு நீங்கள் ஒத்தமேலாதோனே எல்லாச்சாக்கிறதை யையும் வைத்து, உங்கள் விசுவாசத்திலே புண்ணியத் தையும், புண்ணியத்திலே அறிவையும், + ஞா. யரு, உச.

சு அறிவிலே இச்சையடக்கத்தையும், இச்சையடக் கத்திலே பொறுமையையும், பொறுமையிலே தே யவபத்தியையும்,

எ தேயவபத்தியிலே சகோதரசினேகத்தையும், சகோதர சினேகத்திலே பொது பட்சத்தையுங் கா ட்டித்துவழங்குங்கோள், + கு. தெச. ங, யஉ.

அ ஏனெனில் இதுகள் உங்களுக்குண்டாயிருந்து பெ ருகினால், உங்களை நம்முடைய கற்தராகிய யேசுக்கிறிஸ்து வை அறிகிற அறிவிலே வீணராக அல்லது + கனியற் றவர்களாக்கிருக்கவொட்டாது. + தீத. ங, யச.

கூ ஏனென்றால் இதுகளில்லாதவன் குருடனாயிருந்து கிட்டப்போகுதோ; அவன் தன் முந்தின பாவங்களின் சுத்திகரிப்பை மறந்து துக்கச் சேருக்கப்போனது ருக்கிறான்.

ய ஆகையால் சகோதரரே, + உங்கள் அழைப்பை யுந் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்குகிறதற்கு ஜாக்கிரதையாயிருங்கோள், ஏனெனில் இதுகளைச் செய்தீ ர்களானால் நீங்கள் ஒருக்காலும் இடறிப்போவதில்லை. + எபி. ங, யசு.

யக ஏனெனில் இப்படியே நம்முடைய கற்தரும் இரட் சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய நித்திய ராட்சிய த்துக்குள்ளே பிறவேசிக்கத்தக்கதாக உங்களுக்குப் பரிபூரண மாய் அளிக்கப்படும்.

யஉ ஆனபடியினாலே + நீங்கள் இதுகளை அறிந்து, இப்போ உங்களுக்கிருக்கிற சத்தியத்திலே உறுதிப்பட்டி ருந்தாலும், எப்போதும் உங்களுக்கு இதுகளை நினைப் பூட்டுகிறதற்கு அசதியாயிருப்பதில்லை. + ரோ. யரு, யச — யசா.

யங + நம்முடைய கற்தராகிய யேசுக்கிறிஸ்து எனக் குத் தெரிவித்தபடி நான் என் கூடாரத்தை விட்டு விடுவது சீக்கிரமாயிருக்குதென்றறிந்து, + யோவ. உக, யஅ, யகூ.

யச இந்தக் கூடாரத்திலிருக்குமட்டும் உங்களை நினைப் பூட்டுகிறதினாலே எழுப்புகிறது யுக்தமாகஎண்ணுகிறேன்.

யரு நானிறந்துபோனதுக்குப் பிற்பாடும் இதுக எப்போதும் நினைவுகூர உங்களுக்குச் சமயமுண் டாகப் பண்ணும்படி பிரயாசப்படுவேன்.

யசு ஏனெனில் தந்திரமான கட்டுக்கதைகளைப் பின் பற்றினவர்களாய் உங்களுக்கு நம்முடைய கற்தராகி ய யேசுக்கிறிஸ்துவினுடைய வல்லமையையும் வரு கையையும் நாங்கள் அறிவியாமல்,

யஎ + அவர் பிதாவாகிய பராபரனாலே கனமும் மகிமையும் பெற்றபோது: இவர் நான் பிரியமாயிருக்கிற நம் முடைய நேசகுமாரனாயிருக்கிறார் என்கிற சத்தம் அவருக்கு மகா மேன்மையான மகிமையிலிருந்து வருகிறபோது, + அவருடைய மகத்துவத்தைக் கண்ணாரக் கண்டவர்க ளாய் அதை உங்களுக்கு அறிவித்தோம். + மத. யஎ, க — ரு. + + யோவ. க, யச.

யஅ இந்தச் சத்தத்தை நாங்கள் அவரோடே கூடப் பரி

சுத்த

சுத்தபர்வதத்திலிருக்கையிலே வானத்திலிருந்து வரக் கேட்டோம்.

௰௯ மிகத் திடமான தீர்க்கதரிசன வசனமும் நமக்குண்டு, பொழுதுவிடிந்து உங்கள் இருதயங்களிலே விடிவெள்ளி உதிக்குமட்டும் நீங்கள் இருளான ஸ்தலத்திலே பிரகாசிக்கிற * வெளிச்சமாகிய அந்தக் கவனித்திருக்கிறது நன்றுசெய்கையாயிருக்குது. * சங். ௱௰௯, ௱௫. ௨. கொரி. ௪, ௬. ௪.

௨௰ வேதவாக்கியத்துள்ள எந்தத் தீர்க்கதெரிசனமுஞ் சுயதோற்றமான வியாக்கியானமாயிராதென்கிறதை முந்த முந்த அறியுங்கோள்.

௨௰௧ ஏதொன்றிலுந் தீர்க்கதேரிசனம் பூருவத்திலே மனுஷ சித்தத்தினாலே வராமல், பராபரனுடைய பரிசுத்த மனுஷர் * பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். * ௨. திமொ. ௩, ௰௬. ௰௭.

## ௨. அதிகாரம்.

¶ கள்ளப்போதகருண்டாக்குங் கேடும் அவர்கள் அடையும் ஆக்கினையையுங் காண்பித்தது.

௧ ஆனால் * கள்ளத்தீர்க்கதேரிசிகள் சனத்துக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் ** கேடான வேதப்பிரட்டுகளை நுழையப்பண்ணி, தங்களைக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்கள் மேலே சீக்கிரமான அழிவை வருத்திவித்துக் கொள்ளுங் கள்ளப்போதகர் இருப்பார்கள். * யெரே. ௨௩, ௨௧. எசேக். ௰௩, ௩. ௯. ** அப்போ. ௨௰, ௨௯.

௨ அவர்களுடைய கேடுகளை அநேகர் பின்செல்லுவார்கள், அவர்களால் சத்தியவழி தூஷணிக்கப்படும்.

௩ கட்டுவார்த்தைகளால் உங்களைப் பொருளாசையாய் வியாபாரம் பண்ணுவார்கள். அவர்களுக்குப் பூர்வகாலந்துவக்கி ** ஆக்கினை அசந்திராமலும் அவர்கள் அழிவு உறங்காமலுமிருக்குது.

௪ ஏனென்றால் * பாவஞ்செய்த தூதரைப் பராபரன் தப்பவிடாமல், நரகத்துக்கென்று தள்ளி, நியாயத்தீர்ப்புக்கு வைக்கப்பட்டவர்களாக இருளின் சங்கிலிகளுக்கு ஒப்புக்கொடுத்து, * யோவ. ௮, ௪௪. யூதா. ௬. ௭. வச.

௫ * பழைய லோகத்தைத் தப்பவிடாமல், நீதியினுடைய எட்டாம் பிரசங்கியாகிய நோவாவைக் காப்பாற்றி, பத்தியற்றவர்களுடைய லோகத்தின் மேலே சலப்பிரளயத்தை வரப்பண்ணி, * ௧. மோ. ௭, ௨௩. ௨௪.

௬ * சோதோம் கொமோறா என்னும் பட்டணங்களைச் சாம்பலாக்கி, கீழது மேலதாகப் போடுகிறதினாலே அவைகளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, அக்கிரமமாய் நடக்கப்போகிறவர்களுக்கு அடையாளமாக வைத்து, * ௧. மோ. ௰௯, ௨௪—௨௫.

௭ அக்கிரமக்காரருடைய காமவிகார நடக்கையாலே வருத்தப்பட்ட நீதிமானாகிய லோத்தை ரெட்சித்துவிட்டாரே.

௮ ஏனெனில அநதநீதிமான அவர்களுக்குளளுடயி ருநது, நாளுககுநாள அககறமககிரியைகளைக்கண டுகேட்கிறதினாலெதனநீதியுளள ஆததுமததை வாத ததான. * சங. ௱௰௬. ௱௫௮.

௯ கறததர் தேவபததியுளளவர்களைச் சோதனை க்குநீஙகலாக்கிவிடுவிக்கவும, அநீதககாறரையோ நியாயந்தீர்க்குமநாளுக்கு ஆக்கினைக்குளளானவர்க ளாகவைக்கவும அறிவார். * ௧. கொரி. ௰, ௰௩.

௰ விசேஷமாக அசுததததினுடைய இசசையாயமாம சததின பினனே போய, கறததததுவததை அசட டைபணணுகிறவர்களைத்தானே. அவர்களதுணிக ரக்காறர், அகஙகாரிகள, அதிகாரஙகளைததூஷணி க்கநடுஙகாதவர்கள. * யூத. ௰ — ௰௬.

௰௧ பெலத்திலுமவலலமையிலுமஅதிகமானதே வதூதர்முதலாய அதுகளுக்குவிரோதமாக கறத ருக்குமுனபாகததூஷணபபானநியாயததீர்ப்பைபபோ டுகிறதிலலை.

௰௨ இவர்களோ, பிடியுணடழிக்கபபடுவதறகு செனிததபுததியறறமிருகசீவனகளைபபோல, தா ஙகளஅறியாததுகளிலெதூஷணஞ்சொலலி, தஙக ளகேட்டிலெகெட்டழிநது, அனிததததினபலனை அ டைவார்கள. * யெரே. ௰௨, ௩.

௰௩ அவர்களஅநுதினசசெருக்கைச்செலவமெனறெ ணணி, கறைகளுமலெசசைகளுமாயிருநது, தங களவஞசகஙகளிலசெருககாயவாழநது, உஙகளோ டெவிருநதுணடு,

௰௪ விபசாரததாலநிறைநதுகளுமபாவததைவி டடோயாததுகளுமானகணகளுளளவர்களாயிரு நது, உறுதியறறஆததுமாககளைஆசைபததஙகாட்டி மயக்கி, பொருளாசைகளுக்குபபழகினஇருதயததையு டைததானசாபததினபிளளைகள.

௰௫ அவர்கள செமமையானவழியைவிட்டுததப பிபபோய. * போசோர்குமாரனாகிய பாலாமினவழி யைபபினசெனறுபோனார்கள. அவன அநியாயததி னகூலியைவிருமபினான. * ௪. மோ. ௨௨, ௫. ௨௩. அபி. ௨. ௰௪.

௰௬ ஆனாலஅவனுடையமீறுதலுக்கானகடிநது கொளளுதலஅவனுக்குணடாசசுது. பெசசாறறமறற வாகனமமனுஷசததமாயபெசி, தீரககதெரிசியினமதி கேட்டைததடுத்தது.

௰௭ இவர்கள தணணீரிலலாதகிணறுகளுஞ்சுழ லகாறறால அடியுணட மெகஙகளுமாயிருககிறார்க ள, இருளினுடைய அநதகாரமஎனறெனறைக்கும அவர்களுக்குவைததிருக்கிறது.

௰௮ ஏனெனில, மோசமாயநடககிறவர்களுக்குமெ யயாயததபபினவர்களை அவர்கள, மாயைககினுடை யமகாமேட்டிமையானவாரததைகளைபபெசி, மாம சஇசசைகளினாலுமகாமவிகாரஙகளினாலும ஆசை பததஙகாட்டுகிறார்கள.

௰௯ தாஙகளே கெட்டுககுடிமைகளாயிருநதும அவ ர்களுக்குவிடுதலையைவாக்குததததமபணணுகிறார்க ள. ஏனெனில எதினாலஒருததனசெயஙகொளளப

பட்டானோ அதுக்கவன் அடிமையானான். * யோவ். ௮, ௩௪.

௨௰ அதேதென்றால் * அவர்கள் கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவினாலே லோகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினபின்பு அதுகளிலே மறுபடியுஞ் சிக்குப்பட்டுத் தோற்றால், அவர்களுக்கு முற்காரியங்களைப் பார்க்கப் பிற்காரியங்கள் கேடாச்சுது * மத். ௰௨, ௪௫. எபி. ௰, ௨௬ ௨௭.

௨௧ ஏனெனில் அவர்கள் நீதியின் வழியை * அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்தக் கற்பனையை விட்டுத் திரும்புகிறதைப் பார்க்க அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்குத் தாவிளையாயிருக்கும். * லூக். ௰௨, ௪௭.

௨௨ ஆனால் * நாய் தான் கக்கினத்தைத் தின்னவும், குளிப்பாட்டப்பட்ட பன்னி சேற்றிலே புரளவுந் திரும்பினதென்கிற மெய்யான பழமொழியின்படி அவர்களுக்குச் சம்பவித்தது. * வர்க்க. ௨௬, ௰௧.

## ௩. அதிகாரம்.

¶ வேதச்சந்தக்காறரைக் குறித்துள் எச்சரிக்கும், ஞாயத்தீர்ப்பின் நாளைச் செய்கதையும் பயங்கரத்தையுங் காண்பித்ததும்.

பிரியமானவர்களே, இந்த ரெண்டாம் நிருபத்தை இப்போ உங்களுக்கு எழுதுகிறேன்.

௨ பரிசுத்த தீர்க்கதரிசிகளாலே முன் சொல்லப்பட்ட வார்த்தைகளையும், ரெட்சகரான கர்த்தரின் அப்போஸ்தலராகிய எங்களுடைய கற்பனையையும் நீங்கள் நினைக்க, அதுகளிலே உங்கள் துப்பரவான சிந்தையை * நினைப்பூட்டி எழுப்புகிறேன். * ௧, ௰௩.

௩ * கடைசிநாள்களிலே தங்கள் சுயஇச்சைகளின்படி நடந்து, * ௨. தீமோ. ௩, ௧.

௪ அவர் வருகையின் வாக்குத்தத்தம் எங்கேயிருக்கிறது, பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு எல்லாஞ் சிருஷ்டியின் தொடக்கமுதலிருந்தபிரகாரமாகவே இருக்குமென்று சொல்லுகிற சக்கந்தக்காறர் வருவார்களென்கிறதை முகமுந்த அறிந்திருங்கோள்.

௫ ஏனெனில் பூர்வகாலத்தில் * பராபரனுடைய வார்த்தையினாலே வானங்களும், ஜலத்தினாலும் ஜலத்திலேயும் நிலைகொண்ட பூமியும் இருந்ததென்கிறதையும், * சங். ௩௩, ௬.

௬ * அதுகளாலே அப்போதிருந்த லோகம் வெள்ளங்கொண்டு அழிந்ததென்கிறதையும் அவர்கள் மனதார அறியாமல் போகிறார்கள். * ௧. மோ. ௭, ௰௭ — ௨௰.

௭ இப்போதிருக்கிற வானங்களும் பூமியுமோவென்றால் அந்த வார்த்தையாலே தண்ணைவைத்து வைக்கப்பட்டு, பக்தியற்ற மனுஷர் ஞாயந்தீர்க்கப்பட்டுக் கெடுகிற நாளுக்கு அக்கினிக்கிரையாக்கக் காக்கப்படுகுது. * ௨. தெச. ௧, ௮. ௭.

௮ ஆனால், பிரியமானவர்களே, * கர்த்தரிடத்தில் ஒருநாள்

ஒருநாள் ஆயிரம் வருஷங்களைப்போலவும், ஆயிரம் வருஷங்கள் ஒருநாளைப்போலவும் இருக்குதென்கிற ஒரே காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம் * சங். ௯௰, ௪.

௯ * சிலர் தாமதமென்றெண்ணுகிறதுபோலக் கர்த்தர் வாக்குத்தத்தத்தைக் குறித்துத் தாமதிக்காமல், ** நம்முடைமேல் நீண்டபொறுமையாயிருந்து, யாதொருத்தர் கெட்டுப்போகவும் வேண்டாமல் எல்லாரும் மனந்திரும்புதலுக்கு வரச்சித்தமாயிருக்கிறார். * ஆப. ௨, ௩. ** எசே. ௩௩, ௰௧. ௧. தீமோ. ௨, ௪.

௰ ஆனால் * கர்த்தருடைய நாளானது இரவிலே திருடன் வருகிறவண்ணமாய் வரும், ** அதிலே வானங்கள் மடமடப்பாய்ப்போய், பூதியங்கள் எரிந்துகரைந்து, பூமியும் அதிலுள்ள கிரியைகளும் வெந்துபோம். * ௧. தெச. ௫, ௨. ** அறா. ௨௧, ௩௩.

௰௧ இப்போதும், இதுகளெல்லாங் கரைந்துபோறதாயிருக்கக்கொள்ள நீங்கள், வானங்கள் வெந்துகரைந்து, பூதியங்கள் எரிந்துருகிப்போற பராபரனுடைய நாளின் வருகைக்குக் காத்திருக்கவுந் தீவிரிக்கவும்,

௰௨ பரிசுத்த நடக்கைகளிலுந் தேவபத்தியிலும் எப்படிப்பட்டவர்களாயிருக்கவேண்டியது.

௰௩ * ஆனால் அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே, நீதிவாசமாயிருக்கிற புதுவானங்களுக்கும் புதுப்பூமிக்குங் காத்திருக்கிறோம். * யெச. ௬௫, ௰௭. அஃ. ௨௧, ௧.

௰௪ ஆகையினாலே, பிரியமானவர்களே, இதுகளுக்குக் காத்திருக்கிற நீங்கள் அவராலே கறையுங் குற்றமுமற்றவர்களாய் சமாதானத்திலே கண்டுபிடிக்கப்பட ஜாக்கிறதையாயிருந்து,

௰௫ நம்முடைய கர்த்தருடைய நீண்டபொறுமையை ரெட்சிப்பாக எண்ணுங்கோள். இப்படியெங்கள் பிரியசகோதரனாகிய பவுலுவுந் தனக்குக் கொடுபட்ட ஞானத்தின்படியே உங்களுக்கு எழுதியிருக்கிறான்.

௰௬ எல்லா நிருபங்களிலும் இதுகளைக் குறித்துப் பேசும்போது அப்படி எழுதினான், * அதுகளிலே அறிதாகிய சிலதுகள் உண்டு. அதுகளைக் கல்லாதவர்களும் உறுதியற்றவர்களும் மற்றவேத எழுத்துகளையுந் தாங்கள் பிரட்டுகிறபோலே தங்களுக்குத் தானே கேடாகப் பிரட்டுகிறார்கள். * ௨. கொரி. ௪, ௩. ௪.

௰௭ நீங்களோவென்றால், பிரியமானவர்களே, அக்கிரமக்காரருடைய மோசத்தினாலே கூட இழுப்புண்டு உங்கள் உறுதியைவிட்டு விழுந்துபோகாதபடிக்கு, இதுகளை முன்னறிந்து, உங்களைக் காத்து,

௰௮ நம்முடைய கர்த்தரும் ரெட்சகருமாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கோள். அவருக்கு இப்போதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக, ஆமென்.

# அப்போஸ்தலனாகிய

## யோவானுடைய பொதுவான

# முதலாம் நிருபம்.

### ௧. அதிகாரம்.

௧ வெளிப்பட்ட தேவகுமாரனாலே பாவிகள் பராபரனோடே ஐக்கியமாகும் வகை.

ஆதி * முதலாயிருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே ** கண்டதும், நாங்கள் நோக்கிப் பார்த்ததும், எங்கள் கைகள் *** தொட்டதுமான சீவனுடைய வார்த்தையின் செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறோம். * யோவ. ௧, ௧. ௨. ** யோவ. ௧, ௰௪. *** லூக். ௨௪, ௩௯.

௨ ஏனெனில் * சீவன் வெளிப்பட்டது, பிதாவினிடத்திலிருந்ததும் நமக்கு வெளிப்பட்டதுமான நித்திய சீவனை நாங்கள் கண்டிருந்து, அதற்குச் சாட்சி கொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். * யோவ. ௧, ௪.

௩ நாங்கள் கண்டதையுங் கேட்டதையும், உங்களுக்கும் எங்களோடே ஐக்கியமுண்டாயிருப்பதற்கு, உங்களுக்கு அறிவிக்கிறோம், ஆனால் * நம்முடைய ஐக்கியம் பிதாவோடும் அவர் குமாரனாகிய யேசு கிறீஸ்துவோடுமிருக்கிறது. * யோவ. ௰௭, ௨௰ — ௨௩.

௪ உங்கள் சந்தோஷம் நிறைந்ததாயிருக்கும்படிக்கு இதுகளை உங்களுக்கு எழுதுகிறோம்.

௫ * பராபரன் வெளிச்சமாயிருக்கிறார், அவரிலே இருளென்பதொன்றுமில்லையென்கிறது நாங்கள் அவராலே கேட்டிருந்து உங்களுக்கு அறிவிக்கிற வாக்குத்தத்தம். * சங். ௱௪, ௨.

௬ அவரோடே நமக்கு ஐக்கியமுண்டென்று நாம் சொல்லியும் இருளிலே நடந்தால், நாம் உண்மையைச் செய்யாமல் பொய் சொல்லுகிறோம்.

௭ அவர் வெளிச்சத்திலிருக்கிறதுபோல நாமும் வெளிச்சத்திலே நடந்தோமேயானால், நமக்குள்ளே யவுன்னிய ஐக்கியமுண்டாயிருந்து, அவர் குமாரனாகிய யேசு கிறீஸ்துவினுடைய இரத்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்குது. * எபி. ௯, ௰௪. அபி. ௧, ௫.

௮ நமக்குப் பாவமில்லையென்றோமானால், உண்மை நமக்குள்ளிராமல், நம்மை நாமே மோசம்போக்கிறோம்.

௯ * நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், அவர் நமக்குப் பாவங்களை மன்னித்து, நம்மை எல்லா அவக்குறையும் நீங்கச் சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார். * சங். ௩௨, ௫.

௰ நாம் பாவஞ்செய்ததில்லையென்றோமானால், அவருடைய வார்த்தை நமக்குள்ளிராமல், அவரைப் பொய்யராக்கிறோம்.

௨. அதி

## ௨. அதிகாரம.

பாவததையுமலோகசசிநேகததையுநீககி யுததுவினைததிராளியையுஙகுறிதது எசசரிததது.

என பிளளைகளே, நீஙகளபாவஞசெயயாதபடிககுததுகளை உஙகளுககெழுதுகிறேன. ஒருததனபாவஞசெயதானேயாகில, நீதிபரராயிருககிறயேசுகிறிஸததுவெனகிற காரியகாததர நமககுபபிதாவினிடததிலிருககிறார. * ரோ. ௮, ௩௪. எபி. ௭, ௨௫.

௨ அவர * நமமுடையபாவஙகளை நிவிர்ததியாககுகிறபலியுணடாககுதலாயிருககிறார, ஆனாலநமமுடையபாவஙகளைநிவிர்ததியமாததிரமலல ** சருவலோகததினபாவஙகளைநிவிர்ததியுமுநதானே. * ௨. கொரி. ௫, ௨௧. ** யோவா. ௧, ௨௯. ௩, ௰௭.

௩ அவருடையகறபினைகளைககைககொணடோமாகில, அவரைஅறிநதிருககிறோமெனபதை இதனால அறிவோம.

௪ அவரை அறிநதிருககிறேனெனறு சொலலியும அவர் கறபினைகளைககைககொளளாதவன உணமையிலலாதபொயயனாயிருககிறான.

௫ ஆனாலெவன * அவருடைய வசனததைககைககொளளுகிறானோ, அவனில பராபரனுடையசிநேகம மெயயாயநிறைவேறறது, அவருககுளளிருககிறோமெனபதை இதினால அறிவோம. * யோவா. ௰௪, ௨௧.

௬ * அவருககுளநிலைததிருககிறேனெனறு சொலலுகிறவன அவர நடநதபடியேதானுமநடககவேணடியது. * யோவா. ௰௩, ௰.

௭ சகோதரரே, புதுககறபினையையலல, நீஙகளாதிமுதலாய பெறறிருககிறபழையகறபினையையுஙகளுககெழுதுகிறேன, அநதப பழையகறபினை நீஙகள ஆதிமுதலகொணடுகேடடவசனநதானே.

௮ மறுபடியும புதுககறபினையையுஙகளுககெழுதுகிறேன, அதாவது: அவரிலிருககிறஉணமை உஙகளிலுமிருககடவது, ஏனெனனில * இருள நீஙகிபபோய, மெயயானவெளிசசம பிரகாசிககுது. * ரோ. ௰௩, ௰௨.

௯ தானவெளிசசததிலிருககிறேனெனறு சொலலியுநதனசகோதரனைபபகைககிறவன இதுவரைககும இருளிலேயிருககிறான.

௰ தனசகோதரனைசசிநேகிககிறவனவெளிசசததிலேநிலைகொளளுகிறான, அவனிடததில இடறலிலலை.

௰௧ தனசகோதரனைபபகைககிறவனிருளிலேயிருநது இருளிலேநடநது, தானெஙகேபோறானெனகிறததை அறியாதிருககிறான, ஏனெனனில இருள அவனகணகளைககுருடாககிறது.

௰௨ பிளளைகளே, * பாவஙகளஉஙகளுககு அவருடையநாமததினிமிததியமமனனிககபபடடதெனறு உஙகளுககெழுதுகிறேன. * லூக. ௨௪, ௪௭.

௰௩ பிதாககளே, ஆதிமுதலாயிருககிறவரை அறி

நதிருககி

நதிருககிறீரகளெனறு உஙகளுககெழுதுகிறேன. வாலிபரே, பொலலாஙகனை வெனறீரகளெனறு உஙகளுககெழுதுகிறேன. பிளளைகளே, பிதாவை அறிநதிருககிறீரகளெனறு உஙகளுககெழுதுகிறேன.

௰௪ பிதாககளே, ஆதிமுதலாயிருககிறவரை அறிநதிருககிறீரகளெனறு உஙகளுககெழுதினேன, வாலிபரே, பெலவானகளாயிருககிறீரகளெனறும, தெயவ வசனம உஙகளிலதரிததிருககுதெனறும, பொலலாஙகனை வெனறீரகளெனறும உஙகளுககெழுதினேன.

௰௫ லோகததையாகிலும லோகததிலுளளவைகளையாகிலும சினேகியாதேயுஙகோள, * ஒருவன லோகததைச சினேகிததால, அவனில பிதாவின சினேகமிலலை. * யாக. ௪, ௪.

௰௬ ஏனெனில மாமிசததினுடைய இசசையுங கணகளுடைய இசசையுஞ சீவனததினுடைய பெருமையுமென்ற லோகததிலுளளதெலலாம பிதாவினாலுணடாயிராமல, லோகததினால உணடாயிருககுது.

௰௭ * லோகமும அதின இசசையும ஒழிநதுபோம, பராபரனுடைய சிததததினபடி செயகிறவனோ என்றெனறைககும நிலைநிறகிறான. * ௧. கொரி. ௭, ௩௧.

௰௮ பிளளைகளே, கடைசிநேரமாயிருககுது, * கிறிஸதுவினெதிராளி வருகிறதை நீஙகள கேடடிருககிறபடியே இபபோவுங கிறிஸதுவினெதிராளிகள அநேகர உணடானாரகள, அதினாலே கடைசிநேரமாயிருககுதெனறறிகிறோம. * மத. ௨௪, ௨௪. ௨. தெச. ௨, ௩ ௪.

௰௯ * நமமிடததிலிருநது புறபபடடாரகள, ஆனாலவரகள நமமுடையவரகளாயிருநததிலலை, ஏனெனறால நமமுடையவரகளாயிருநதாரகளாகில, நமமுடனே தரிததிருபபாரகளாம. ஆனாலெலலாரும நமமுடையவரகளலலவெனறு வெளியாகுமபடிககுப புறபபடடாரகள. * அபபோ. ௨௰, ௩௰.

௨௰ * நீஙகளோ வெனில பரிசுததரால அபிஷேகததைப பெறறு, எலலாததையும அறிநதிருககிறீரகள. * யோவா. ௰௪, ௨௬. ௰௬, ௰௩.

௨௧ நீஙகள சததியததை அறியாததினாலலல, நீஙகளதையுஞ சததியததாலொரு பொயயுமுணடாயிராதெனகிறததையும அறிநதிருககிறபடியினாலே உஙகளுககெழுதினேன.

௨௨ யேசுவெனகிறவர கிறிஸதுவலலவெனறு மறுதலிககிறவனேயொழிய பினனையார பொயயன. பிதாவையுங குமாரனையும மறுதலிககிறவனே கிறிஸதுவினெதிராளி.

௨௩ குமாரனை மறுதலிககிறவனுககெலலாம பிதாவுமிலலை.

௨௪ ஆகையால ஆதிமுதலாய நீஙகள கேடடது உஙகளில நிலைததிருககககடவது. ஆதிமுதலாய நீஙகள கேடடது உஙகளில நிலைததிருநதால, நீஙகளுங குமாரனிலும பிதாவிலும நிலைததிருபபீரகள.

௨௫ * நிததியசீவனே அவர நமககுக கொடுததவாககுததததம. * யோவா. ௩, ௩௬.

ருதயங்களை அவருக்குமுன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.
௨௧ பிரியமானவர்களே, நம்முடைய இருதயம் நம்மை நிரவுத்தராகத்தீர்க்காதிருந்தால், நாம் பராபரனை நோக்கத் தயிரியங்கொண்டிருந்து,
௨௨ எதைக்கேட்கிறோமோ, அதை அவராலடைகிறோம். ஏனென்றால் அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, அவருக்குமுன்பாக ஏர்த்ததுகளைச் செய்கிறோம்.
௨௩ நாம் அவர் குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவினுடைய நாமத்தின்பேரில் விசுவாசித்து, அவர் நமக்குக் கற்பனைதந்தபடி ஒருத்தரொருத்தர் சிநேகிக்கவேணுமென்கிறதே அவருடைய கற்பனை.
௨௪ அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரிலும் நிலைத்திருக்கிறான், அவர் இவனிலும் நிலைத்திருக்கிறார், * அவர் நம்மில் நிலைத்திருக்கிறதையோ அவர் நமக்குத்தந்த ஆவியினாலே அறிகிறோம்.
* ரோ. ௮, ௯.

## ௪. அதிகாரம்.

¶ போதகரெப்படிப்பட்டவர்களென்று சோதிக்கப்படுத்திச்சொன்னது.

பிரியமானவர்களே, * நீங்கள் எல்லா ஆவியையும் நம்பாமல் ஆவிகளை, பராபரனால் உண்டானதுகளோ என்று சோதித்தறியுங்கோள், ஏனென்றால் அனேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் லோகத்திலே புறப்பட்டார்கள்: * மத. ௭, ௰௫: ௰௯. ௨௪, ௪. ௫.
௨ பராபரனுடைய ஆவியை இதினால் அறிகிறீர்களென்றால், மாம்சத்திலே வந்த யேசுக்கிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எல்லா ஆவியும் பராபரனால் உண்டாயிருக்குது.
௩ ஆனாலும் மாம்சத்திலே வந்த யேசுக்கிறிஸ்துவை அறிக்கைபண்ணாதெந்த ஆவியும் பராபரனால் உண்டாயிராது. * இதுவே நீங்கள் வருகுதென்று கேட்டிருக்கிற கிறிஸ்துவுக்கெதிராளியினுடைய ஆவி, அதுவேப்போதானும் லோகத்திலிருக்குது. * ௨, ௰௮. ௨௨.
௪ பிள்ளைகளே, நீங்கள் பராபரனால் உண்டாயிருந்து, அவர்களைச் செயிச்சீர்கள். ஏனென்றால், லோகத்திலிருக்கிறதைப்பார்க்கிலும் உங்களிலிருக்கிறவர் பெரியவர்.
௫ அவர்கள் லோகத்தாராயிருக்கிறார்கள், ஆனபடியினாலே லோகத்தாராய்ப் பேசுகிறார்கள், லோகம் அவர்களைக்கேட்குது.
௬ நாம் பராபரனால் உண்டாயிருக்கிறோம், * பராபரனை அறிகிறவன் நம்மைக்கேட்கிறான், பராபரனால் உண்டாயிராதவன் நம்மைக்கேளான். இதினாலே சத்தியத்தினுடைய ஆவியும் எத்தத்தினுடைய ஆவியும் இன்னின்னதென்று அறிகிறோம். * யோவ. ௮, ௪௭.

¶ சகோதரச்சிநேகத்துக்குந் தெய்வச்சிநேகத்துக்கும் ஏழுப்பினது.

௭ பிரியமானவர்களே, ஒருத்தரொருத்தர் சிநேகிக்கக்கடவோம், ஏனென்றால் சிநேகம் பராபரனாலே உண்டாயிருக்குது. சிநேகிக்கிறவனெல்லாம் பராபரனாலே பிறந்திருந்து பராபரனை அறிகிறான்.
௮ சிநேகியாதவன் பராபரனை அறிந்ததில்லை, ஏனென்றால் பராபரன் சிநேகந்தானே.
௯ பராபரன் தம்முடைய ஏகபேறான குமாரனை, நாம் அவர் மூலமாய்ப் பிழைக்கும்படிக்கு லோகத்திலே அனுப்பினதினாலே நம்முடே பேரிலுள்ள பராபரனுடைய சிநேகம் வெளியாக்கமாச்சுது. ✦ யோவ. ௩. ௰௬.
௰ பராபரனை நாம் சிநேகித்தோமென்பதிலே அல்ல, நம்மை அவர் சிநேகித்து, தம்முடைய குமாரனை நம்முடைய பாவங்களினிமித்தம் கழுவாயுண்டாக்குதலாக அனுப்பினதிலே சிநேகமுண்டாயிருக்குது.
௰௧ பிரியமானவர்களே, ✦ பராபரன் நம்மை இவ்விதமாய்ச் சிநேகித்திருக்கக்கொள்ள நாமும் ஒருத்தரொருத்தர் சிநேகிக்கக்கடனாளிகளாயிருக்கிறோம். ✦ மத. ௰௮, ௩௩.
௰௨ பராபரனை ஒருத்தனும் ஒருக்காலுங் கண்டதில்லை, நாம் ஒருத்தரொருத்தர் சிநேகித்தோமேயாகில், பராபரன் நமக்குள்ளே நிலைத்திருக்கிறார், அவருடைய சிநேகம் நம்மிலே நிறைவேறினதுமாயிருக்குது.
௰௩ ✦ அவர் நமக்குத் தம்முடைய ஆவியிலே கொடுத்ததினாலே நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருக்கிறதை அறிந்திருக்கிறோம்.
௰௪ ✦ பிதாக் குமாரனை லோகரட்சகராக அனுப்பினதை நாங்கள் பார்த்திருந்து, சாட்சியாகவுமிருக்கிறோம். ✦ யோவ. ௧, ௰௪.
௰௫ யேசு பராபரனுடைய குமாரனென்றதை வெளிப்படுத்துகிறானோ, அவனிலே பராபரன் நிலைத்திருக்கிறார், பராபரனிலே அவனும் நிலைத்திருக்கிறான்.
௰௬ பராபரனுக்கு நம்முடமேலுள்ள சிநேகத்தை நாம் அறிந்து விசுவாசித்தோம். பராபரன் சிநேகந்தானே. சிநேகத்திலே நிலைத்திருக்கிறவன் பராபரனிலே நிலைத்திருக்கிறான், பராபரன் அவனிலும் நிலைத்திருக்கிறார்.
௰௭ நியாயத்தீர்ப்பின் நாளிலே நமக்குத் தயிரியமுண்டாயிருக்கும்படிக்கு இதிலே சிநேகம் நம்மிடத்திலே நிறைவேறுது, ஏனென்றால் அவர் இருக்கிறபிரகாரமாக நாமும் இந்த லோகத்திலிருக்கிறோம்,
௰௮ சிநேகத்திலே பயமில்லை, நிறைந்த சிநேகம் பயத்தைப் புறம்பே தள்ளும், ஏனென்றால் பயம் வாதையுள்ளது, பயப்படுகிறவன் சிநேகத்திலே தேறினவனல்ல.
௰௯ நாம் அவரைச் சிநேகிக்கக்கடவோம், ஏனென்றால் ✦ அவர் நம்மை முந்திச் சிநேகித்தார். ✦ ரோ. ௫. ௮.
௨௰ ✦ ஒருத்தன்: பராபரனைச் சிநேகிக்கிறேனென்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன், ஏனென்றால் தான் கண்ட தன் சகோதரனைச் சிநேகியாதவன் தான் காணாத பராபரனை எப்படிச் சிநேகிக்கக்கூடும். ✦ ௨, ௯.

௨௧ பராபரனைச்சிநேகிக்கிறவன தன சகோதரனை
யுஞ்சிநேகிக்கவேணுமெனகிற கற்பனையை அவரா
லே அடைந்திருக்கிறோம.

## ௫. அதிகாரம.

¶ யேசுக்கிறிஸ்துவினமேலுள்ள விசுவாசத்தி
னாலுண்டாகுமுறுதியும்பலனுந
தயிரியமும.

யேசுவென்கிறவர் கிறிஸ்துவாயிருக்கிறாரென்று
விசுவாசிக்கிறவனெல்லாம * பராபரனாலே பிறந்தி
ருக்கிறான, ஆதலால பிறப்பித்தவனைச்சிநேகிக்கிறவனெ
ல்லாம அவராலே பிறந்தவனையுஞ் சிநேகிக்கிறான. *
யோவா. ௧, ௰௨. ௰௩.
௨ பராபரனைச்சிநேகித்து அவர் கற்பனைகளைக்
கைக்கொண்டோமானால, பராபரனுடைய பிள்ளை
களைச் சிநேகிக்கிறோம என்கிறதை அதினால அறிகி
றோம.
௩ ஏனெனில * நாம பராபரனுடைய கற்பனைக
ளைக்கைக்கொள்வதே அவரைச்சிநேகிக்கிறதாகு
ம. ** அவர் கற்பனைகள பாரமானதுமல்ல. * யோவா.
௰௪, ௨௩. ௨௪. ** மத. ௰௧, ௩௰.
௪ ஏனென்றால பராபரனிலேபிறந்ததெல்லாம *
லோகத்தைச்செயிக்கும. நம்முடைய விசுவாசமேலோகத்
தைச்செயித்தசெயம. * ௨, ௰௩—௰௪.
௫ * யேசு பராபரனுடைய குமாரனென்று விசுவா
சிக்கிறவனேயல்லாமல, பின்னையார் லோகத்தைச்செயிக்
கிறவன. * ௧. கொரி. ௰௫, ௫௭.
௬ யேசுக்கிறிஸ்துவாகியவரே * தண்ணீரோடும
இரத்தத்தோடும வந்தவர், தண்ணீரோடேமாத்திரம
ல்ல, தண்ணீரோடும இரத்தத்தோடுந்தானே. ஆவிச
த்தியமானதால ஆவியே சாட்சியுங் கொடுக்கிறவர். *
யோ. ௰௯, ௩௪. ௩௫.
௭ ஏனெனில வானத்திலே சாட்சிகொடுக்கிறவர்
கள * மூவர், பிதா, ** வார்த்தை, பரிசுத்த ஆவி, இம
மூவருமொன்றாயிருக்கிறார்கள, * மத. ௨௮, ௰௯,
௪௩, ௩௩, ௮. யோச. ௮, ௩. ** யோவா. ௧, ௧.
௮ பூமியிலேசாட்சிகொடுக்கிறதுகளும மூன்றுண்
டு. ஆவி, தண்ணீர், இரத்தம, இம்மூன்றும ஒன்றுக
க்கியமாயிருக்குது.
௯ நாம மனுஷருடைய சாட்சியை ஏற்றுக்கொண்
டால. * பராபரனுடைய சாட்சி அதிகமாயிருக்குது,
பராபரனுடைய சாட்சி யேதென்றால தம்முடைய கு
மாரனைக்குறித்து அவர் கொடுத்தசாட்சிதானே. *
யோவா. ௮, ௰௮.
௰ பராபரனுடைய குமாரனமேலே விசுவாசிக்
கிறவன அந்தச்சாட்சியைத் தனக்குள்ளே வைத்திருக்கிறான.
பராபரனை விசுவாசியாதவன அவரைப்பொய்யரா
க்குகிறான. ஏனெனில பராபரன தம்முடைய குமார
னைக்குறித்துத் தந்தசாட்சியின்மேலே விசுவாசியாதி
ருக்கிறான.

௰௧.

௰௧ நித்தியசீவனைப் பராபரன் நமக்குக் கொடுத்தாரென்கிறதும், + இந்தச்சீவன் அவருடைய குமாரனுக்குள்ளிருக்கிறதுமே அந்தச்சாட்சி. + யோவா. ௧, ௪.

௰௨ + குமாரனையுடையவன் சீவனையுடையவன், பராபரனுடைய குமாரனில்லாதவன் சீவனில்லாதவன். + யோவா. ௩, ௩௬.

௰௩ உங்களுக்கு நித்தியசீவனுண்டென்கிறதை நீங்கள் அறிந்து, பராபரனுடைய குமாரன் நாமத்தின்பேரில் விசுவாசிப்பதற்காக, இதுகளைப் பராபரனுடைய குமாரன் நாமத்தின் பேரில் விசுவாசிக்கிற உங்களுக்கு எழுதினேன்.

௰௪ + நாம் அவருடைய சித்தத்தின்படியே ஏதுகாரியங்கேட்டால், நமக்குச் செவிகொடுக்கிறாரென்கிறதே நாம் அவரை நோக்கிப் பெற்றிருக்கிற தயிரியம். + ௩, ௨௨.

௰௫ நாம் எதைக்கேட்டாலும் நமக்குச் செவிகொடுக்கிறாரென்கிறதை அறிந்தோமேயாகில், நாம் அவரிடத்தில் கேட்ட விண்ணப்பங்களைப் பெற்றோமென்றறிந்திருக்கிறோம்.

௰௬ மரணத்துக்கு நேராயிராத பாவத்தை ஒருத்தன் தன் சகோதரன் செய்யக்கண்டால், வேண்டுதல் செய்யக்கடவான், அப்போ அவனுக்குச் சீவனைத் தருவார். ஆருக்கென்றால், மரணத்துக்கு நேராயிராத பாவத்தைச் செய்கிறவர்களுக்குத்தானே. + மரணத்துக்கு நேராகிய பாவமுண்டு, அதின்நிமித்தியம் வேண்டுதல் செய்யச்சொல்லேன். + மற்கு ௩, ௨௯. எபி. ௬. ௪ — ௬. ௰, ௨௬ — ௨௯.

௰௭ எல்லா அக்கிரமமும் பாவந்தான். ஆனாலும் மரணத்துக்கு நேராகிய பாவமுண்டு.

௰௮ + பராபரனில் பிறந்தவனெல்லாம் பாவஞ்செய்யாதிருக்கிறானென்கிறதை அறிவோம். பராபரனில் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், ஆகையால் பொல்லாங்கன் அவனைத் தொடான். + ௩, ௯.

௰௯ நாம் பராபரனால் உண்டானவர்களென்றும், லோகமெல்லாம் பொல்லாங்கனுக்குள் கிடக்குதென்றும் அறிந்திருக்கிறோம்.

௨௰ ஆனாலும் பராபரனுடைய குமாரன் வந்து, நாம் சத்தியமுள்ளவரை அறிவதற்காக நமக்குப் புத்தியைக் கொடுத்தாரென்றறிந்திருக்கிறோம், அவருடைய குமாரனாகிய யேசுக்கிறிஸ்துவென்கிற சத்தியமுள்ளவருக்குள்ளுமிருக்கிறோம், + இவர் மெய்யான பராபரனும் நித்தியசீவனுமாயிருக்கிறார். + ௫. ௬, ௧. திமோ. ௩, ௰௬. எபி. ௧, ௮.

௨௧ பிள்ளைகளே, உங்களை விக்கிரகங்களுக்கு விலக்கமாய்க் காருங்கோள், ஆமென்.

# அப்போஸ்தலனாகிய

## யோவானுடைய

# இரண்டாம் நிருபம்.

௧ தேவபத்தியுள்ளோளாகிய அம்மைக்கும் அவள்
பிள்ளைகளுக்கும் எழுதப்பட்டதாகவும்
ருப்பது.

நமக்குள்ளாந்தலை நிற்கிறதும் என்றென்றைக்
கும் நம்மோடே இருப்பதுமான சத்தியத்தி
னிமித்தம் மூப்பனாகிய நான்மாத்திரமல்ல,
சத்தியத்தை அறிந்திருக்கிற அனைவரும் உண்
மையாய் சிநேகிக்கிற,
௨ தெரிந்துகொள்ளப்பட்ட அம்மைக்கும் அவளுடை
ய பிள்ளைகளுக்கும் எழுதுகிறதாவது:
௩ பிதாவாகிய பராபரனாலும் பிதாவின் குமாரனாகி
ய கர்த்தரான யேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுடனே
கிருபையும் இரக்கமும் சமாதானமும் சத்தியத்தோடும்
சிநேகத்தோடுங்கூட இருக்கக்கடவது.
௪ உம்முடைய பிள்ளைகளில் பிதாவினால் நாம் கற்பி
னை அடைந்தபடி உண்மையிலே நடக்கிறவர்களை
நான் கண்டதினால் மிகவுஞ் சந்தோஷப்பட்டேன்.
௫ இப்போதும், அம்மையே, * நாம் ஒருவரொரு
வர் சிநேகிக்கவேணுமென்று நான் உமக்கு புதுக்க
ற்பினையாகவல்ல, ஆதிமுதலாய் நாம் அடைந்திரு
க்கிற கற்பினையாக எழுதி உம்மை வேண்டிக்கொள்
ளுகிறேன். * ௧. யோவ. ௨, ௭ — ௰.
௬ * நாம் அவருடைய கற்பினைகளின்படி நடப்ப
பதே அந்தச்சிநேகம். நீங்கள் ஆதிமுதலாய் கேட்டிரு
க்கிறபடி நடந்துகொள்ள வேண்டிய கற்பினை இது
வே. * ௧. யோவ. ௫, ௩.
௭ ஏனென்றால், மாம்சத்திலே வந்த யேசுக்கிறிஸ்த
துவை அறிக்கைபண்ணாத அனேகம் எத்தர் லோகத்தி
லே பிறவேசித்தார்கள். இப்படிக்கொத்தவனே எ
த்தனுங் கிறிஸ்துவுக்கெதிராளியுமாயிருக்கிறான்.
௮ * நாம் தேடிக்கொண்டதுகளை இழந்துபோகா
மல், நிறைந்த பலனைப் பெறும்படிக்கு, எச்சரிக்
கையாயிருங்கள். * எபி. ௪, ௧.
௯ கிறிஸ்துவின் போதகத்திலே நிலைநில்லாமல்மீ
றிநடக்கிறவனெவனோ அவன் பராபரனில்லாதவன். கி
றிஸ்துவின் போதகத்திலே நிலைநிற்கிறவனுக்கே பி
தாவும் உண்டு குமாரனும் உண்டு
௰ * ஒருத்தன் உங்களண்டைக்கு இந்தப்போதகத்தை
க்கொண்டுவராமல்வந்தால், அவனை உங்கள் வீட்டி
லேற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்து
தல் சொல்லாமலும் இருங்கள். * ரோ. ௰௬, ௰௭.
௰௧ ஏனென்றால் அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகி
றவன் அவனது துற்கிரிகைகளுக்குப் பங்காளியாகிறான்.
௰௨ உங்களுக்கு எழுதவேண்டிய அனேக காரியங்களெனக்
கிருந்தும், கடுதாசியினாலும் மையினாலும் அதுகளை விப
ரிக்க நான் மனதாயிருந்ததில்லை. உங்கள் சந்தோஷம்
நிறை

நிறைந்ததாயிருக்கும்படிக்கு உங்களண்டைக்கு முக
முகமாய் வந்து பேசலாமென்று நம்பியிருக்கிறேன்.
௰௩ தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய சகோதரியி
ன் பிள்ளைகள் உமக்கு வந்தனஞ் சொல்லுகிறார்கள். ஆமென்.

---

# அப்போஸ்தலனாகிய

## யோவானுடைய

# மூன்றாம் நிருபம்.

¶ தம்மிவாணுக்கிய காயுவுக்குத் திடன் சொன்னது.

மூப்பனாகிய நான் உண்மையாய்ச் சிநேகிக்கிற
பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது:
௨. யோவ. ௧. வசனம்.
௨ பிரியமானவனே, உன் ஆத்துமம் வாழ்ந்
திருக்கிறதுபோல, நீ எல்லாத்திலும்
வாழ்ந்து சுகமாயிருக்கவேணுமென்.
௩ ஏனென்னில் சகோதரர் வந்து, நீ சத்தியத்திலேப
படிநடந்துகொள்ளுகிறாயென்று, உன்னுடைய உண்மை
க்குச் சாட்சிகொடுத்தபோது, மிகவுஞ் சந்தோஷப்பட்
டேன்.
௪ என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதைநா
ன் கேட்பதிலும் அதிக சந்தோஷமானதில்லை.
௫ பிரியமானவனே, நீ சகோதரருக்கும் பரதேசி
களுக்குஞ் செய்கிற எந்தக் கிரியையையும் உண்மையாய்
செய்கிறாய்.
௬ அவர்கள் சபைக்கு முன்பாக உன்னுடைய சிநேகத்
துக்குச் சாட்சிகொடுத்தார்கள், அவர்களை நீ பராபர
னுக்கு முன்பாகப் பாத்திரமானபடி வழிவிட்டனுப்பி
னால் நன்றாய்ச் செய்வாய்.
௭ ஏனென்றால் அவர் நாமத்தினிமித்தியம் அவர்கள்
புறசாதியார் கையிலொன்றும் வாங்காமல் புறப்ப
ட்டார்கள்.
௮ ஆகையால் நாம் சத்தியத்துக்கு உதவியாளர்களா
யிருக்கும்படிக்கு, பேர்ப்பட்டவர்களைச் சேர்
த்துக்கொள்ளக் கடனாளிகளாயிருக்கிறோம்.
௯ சபைக்கு எழுதினேன், ஆனால் அவர்களில் தலைமை
யையிருமபுகிற தியோத்திரேப்பு எங்களை ஏற்றுக்
கொள்ளான்.
௰ ஆனபடியினாலே நான் வந்தால், அவன் நடக்கி
றோதமாய் பொல்லாத வார்த்தைகளை அலப்பி, செ
ய்துவருகிற கிரியைகளை நினைத்துக்கொள்ளுவேன்.
அவன் அதுகளோடே திருப்தியடையாமல், தான்தானும்
சகோதரரை ஏற்றுக்கொள்ளாதிருக்கிறான், ஏற்றுக்
க்கொள்ள மனதாயிருக்கிறவர்களையும் தடுத்து, சபை
க்குப் புறம்பே தள்ளுகிறான்.
௰௧ பிரியமானவனே, நீ பொல்லாப்பானதைப்
பின்

ஆமலை, நலமையானதைபபினபறறு. நனமைசெயகி
றவனபராபரனாலஉணடாயிருககிறான, * பொலலா
பபசெயகிறவனெபராபரனைககணடதிலலை. *
௩. யொவ. ௩, ௬.
௰௨ தெமெததிரியுளளலலாராலுஞசததியததாலுநத
னறுசாடசிபெறறான. நாஙகளுஞசாடசிகொடுக
கிறொம, எஙகளசாடசிமெயயெனறு அறிவீரகள.
௰௩ * எழுதவெணடியகாரியஙகளஅனெகமிருநதும,
மையினாலுமஇறகினாலும அவைகளைஉனககெழுத
மனதாயிராமல, * ௨. யொவ. ௰௨. வசனம.
௰௪ சீககிரததிலுனனைககாணபபாரககலாமெ
னறுநமபியிருககிறென, அபபொழுதுமுகமுகமாயபெ
சுவொம.
௰௫ உனககுசசமாதானம. சினெகிதரஉனககுவன
வககிறாரகள. சினெகிதரைபபெரபெராககெனவு.

---

# அபபொஸததலனாகிய

## யூதாவினபொதுவான

# நிருபம.

௧ எததருககெசசரிககையாயிருககவும, பரிசுதத
பொதககததிலுமநடககையிலுமநிலைவரமா
யிருககவுமஎழுதியனுபபினது.

௧ யேசுக்கிறிஸ்துவினுடைய * ஊழியக்காறனும
யூதாவெனற யாககொபின சகோதரன
பிதாவாகியபராபரனாலபரிசுததமாககபப
டடவரகளுஙகாரககபபடடவரகளுமாகிய
அழைககபபடடவரகளுககெழுதுகிறதாவ
து: * ஊா. ௬, ௰௬.
௨ ரெககமுஞசமாதானமுஞசினெகமுமஉஙகளுக
குபபெருககககடவது.
௩ பிரியமானவரகளெ, பொதுவானரெடசிப
பைககுறிததுஉஙகளுககெழுதவெணடுமெனறிருகக
றததினபெரிலெநானஎலலாககருததையுமவைகக
கையில, பரிசுததவானகளுககொருவிசைஒபபுக
கொடுககபபடடவிசுவாசததுககாகநீஙகளபொரா
டநிறகஉஙகளுககுபபுததியையெழுதஎனககுதெ
வையாயகணடது.
௪ ஏனெனில நமமுடையபராபரனுடையகிருபையை
* காமாவிகாரமாகபபிரடடி, ஏகஆணடவராகி
யபராபரனையுமநமமுடைய கரததராகியயெசுக்கிறிஸ்த
துவையும * * மறுதலிககிறபததியறறசிலமனுஷரபக
கவழியாயநுழைநதாரகள, அவரகளிநதஆககினை
ககுளளாவாரகளெனறுபூரவததிலெஎழுதியிருக
குது. * கலா. ௫, ௰௩. * * ௨. பெது. ௨, ௧.
௫ ஆனாலும * சனததைஎகிபததுதெசததிலிருநதுவரப
பணணி

பண்ணிரெட்சித்தகர்த்தர் பிற்பாடு விசுவாசியாதவர்களை அழித்தாரென்று, நீங்கள் முன்னே அறிந்திருக்கிறதை உங்களுக்கு நினைப்பூட்ட மனதாயிருக்கிறேன். * ௧. கொரி. ௰, ௧—௫.

௬ * தங்கள் ஆதிமேன்மையைக் காக்காமல், தங்களுடைய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதரையும் அவர் மகாநாளின் ஆக்கினைத் தீர்ப்புக்கென்று நித்தியக் கட்டுகளில் இருளின் கீழ் விட்டு வைத்தார். * ௨. பேது. ௨, ௪.

௭ * அப்படியே சோதோமும் கொமோராவும் அதுகளுக்கொத்த பிரகாரமாக விபசாரம் பண்ணிக்கொண்டிருந்து வேறே மாங்கிஷத்தின் பின்னே போனதுகளுடைய சுற்றுப்பட்டணங்களும் நித்திய அக்கினியினாக்கினையை அனுபவித்து, திஷ்டாந்திரமாகக் கிடக்குது. * ௨. பேது. ௨, ௬.

௮ அப்படியே தானே இந்தச் சொற்பனக்காறரும் மாங்கிஷத்தைக் கறைப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி அதிகாரங்களைத் தூஷிக்கிறார்கள்.

௯ பிரதான தேவதூதனாகிய * மிகாவேலோவெனில் மோசேயினுடைய சரீரத்தைக் குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, தூஷணத்தினாக்கினைத் தீர்ப்பை அதின் மேல் போடத் துணியாமல்: கர்த்தருன்னை மடிப்பாராகவென்றான். * தானி. ௰, ௰௩. சகரி. ௩, ௨. அபி. ௰௨, ௭.

௰ * ஆனாலிவர்கள் எதை அறியாதிருக்கிறார்களோ, அதுகளைத் தூஷிக்கிறார்கள், எதைச் சுபாவமாய் * புத்தியற்ற ஜீவன்களைப்போல் அறிந்திருக்கிறார்களோ, அதுகளில் கெடுகிறார்கள். * ௨. பேது. ௨, ௰௨.

௰௧ அவர்களுக்கையோ, ஏனென்றால் * காயீனுடைய வழியிலே நடந்து, ** பிலேயாமுடைய கூலியினால் மோசத்திலே உழண்டுவிழுந்து; *** கோரே எதிர்த்துப் பேசின பாவத்துக்குள்ளாய்க் கெட்டார்கள். * ௧. மோ. ௪, ௮, ** ௨. பேது. ௨, ௰௫. *** ௪. மோ. ௰௬, ௧. ௩.

௰௨ * இவர்கள் உங்கள் சினேகவிருந்துகளில் கூடவிருந்துண்டு, பயமில்லாமல் தங்களை மேய்க்கிற கறைகளும், ** காற்றுகளால் அலையப்படுகிற தண்ணீரில்லாத மேகங்களும், உலர்ந்து கனியற்று இரண்டுவிசை செத்து வேரற்ற மரங்களும், * ௨. பேது. ௨. ௰௩. ** ௨. பேது. ௨, ௰௭.

௰௩ * தங்கள் சுயவெட்கங்களை நுரைதள்ளி எதுக்கிற அமளியான கடல் அலைகளும், தங்களுக்கு என்றென்றைக்கும் வைத்திருக்கிற இருளின் அந்தகாரத்தை அடையப்போற வகைக்கிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள். * யெசா. ௫௭, ௨௰.

௰௪ ஆதாம் முதல் கொண்டு ஏழாந்தலைமுறையான * ஏனோக்கும் இவர்களைக் குறித்து முன்னறிவித்ததாவது: இதோ கர்த்தர் எல்லார் மேலும் நியாயத்தீர்ப்பையிடுவதற்கும், அவர்களில் பத்தியற்றவர்களெல்லாம் அவர்கள் பத்தியற்றுச் செய்ததெல்லா துஷ்காரியக்

கிரியை

க்கிரிகைகளினிமித்தியமும், தமக்குவிரோதமாய் பக்தியில்லாதபாவிகள் பேசினவெல்லாக் கடினவார்த்தைகளினிமித்தியமாகவுங் கண்டிப்பதற்கும், * ௧. மோ. ௫, ௰௮—௨௪.

௰௫ தம்முடைய திரளான சேனைகளாகிய பரிசுத்தவான்களோடுங்கூட வருகிறாரென்றான். * தானி. ௭, ௰ மத். ௨௫, ௩௧

௰௬ இவர்கள் முறுமுறுப்புக்காரரும் முறையிட்டுத் திரிகிறவர்களுந் தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள் இவர்கள் வாய் * மகா மேட்டிமையானதுகளைப் பேசி, பொழிவுக்காக முகங்களை ஆச்சரியமாய்ப் பார்க்கிறார்கள். * ௨. பேது. ௨, ௰௮.

௰௭ நீங்களோ, பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலராலே முன்சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கோள்.

௰௮ * கடைசிக்காலத்திலே தங்கள் ஆகாமிய இச்சைகளின்படி நடக்கிற சக்கந்தக்காரர் இருப்பார்களென்று உங்களுக்குச் சொன்னார்களே. * ௨. திமோ. ௩. ௧—௫.

௰௯ பேதகங்களாக்கப் பிரிந்துகொண்டு, ஆவியில்லாதிருக்கிற சென்மசுவாபத்தார் இவர்கள்தான்.

௨௰ நீங்களோவென்றால், பிரியமானவர்களே, உங்களை உங்கள் மகா பரிசுத்த விசுவாசத்தின்மேலே ஊன்றக்கட்டிக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள்ளாய் ஜெபம்பண்ணி,

௨௧ உங்களைப் பராபரனுடைய சினேகத்துக்குள்ளாகக் காத்து நித்திய சீவனை உடைய நம்முடைய கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவினுடைய இரக்கத்துக்கு எதிர்பார்த்திருங்கோள்.

௨௨ நீங்கள் வித்தியாசம்பண்ணி, * சிலருக்கோ இரங்கி, * கலா. ௬, ௧.

௨௩ சிலரையோவென்றால் பயத்தோடே, * அக்கினிக்குத் தப்புவித்து ரட்சித்து, மாங்கிஷத்தாலே கறைப்பட்ட அங்கியையும் பகையுங்கோள். * ஆமோ. ௪, ௰௧.

௨௪ ஆனால் உங்களை இடறாமல் காக்கவும், மாசற்று மகிட்சியாகத் தம்முடைய மகிமையின் சந்நதியில் நிறுத்தவும் வல்லவரும்,

௨௫ * ஒருத்தராய் ஞானமுள்ளவருமாகிய நம்முடைய ரட்சகரான பராபரனுக்குக் கனமும் மகத்துவமும் பெலனும் அதிகாரமும் இப்போதும் எல்லாச் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென். * றோ. ௰௬. ௨௭.

# தெய்வவாசகனாகிய

## யோவானுக்குண்டான

# ரகசிய அறிவிப்பு.

### ௧. அதிகாரம்.

¶ இந்தரகசிய அறிவிப்பின் முகவுரை.

௧ சீக்கிரத்திலே சம்பவிக்கவேண்டியதுகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிப்பதற்கு பராபரன் யேசுக்கிறிஸ்துவுக்குக் கொடுத்ததும், இவர் தம்முடைய தூதனைக்கொண்டு தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்குக் குறிப்பாய்க் காட்டி அனுப்பினதுமான ரகசிய அறிவிப்பு.

௨ இவன் பராபரனுடைய வசனத்தையும் யேசுக்கிறிஸ்துவினுடைய சாட்சியையும், தான் கண்டயாவையும், சாட்சியாயறிவித்தான்.

௩ * இந்தத் தீர்க்கதரிசனத்தின் வசனங்களை வாசிக்கிறவனுங் கேட்கிறவர்களும், அதிலே எழுதியிருக்கிறதுகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள், ஏனென்றால் காலஞ் சமீபமாயிருக்குது. * ௨௨. ௭.

௪ யோவான் ஆசியாவிலுள்ள * ஏழுசபைகளுக்கெழுதுகிறதாவது: * * இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாயிருக்கிறவராலும், அவர் ஆசனத்துக்கு முன்பாகயிருக்கிற ஏழாவிகளாலும், * ௰௧ : ௨௪. * * ௨. மோ. ௩, ௰௪.

௫ உண்மையுள்ள சாட்சியும், * மரித்தோரிலிருந்து முதற்பிறந்தவரும், * * பூமியின் ராசாக்களுக்கதிபதியுமாகிய யேசுக்கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையுஞ் சமாதானமும் உண்டாகக்கடவது. * * * நம்மை நேசித்து, நம்மைத் தம்முடைய ரத்தத்தினாலே பாவங்களறக் கழுவி, * கொலோ. ௧, ௰௮. * * சங். ௮௯, ௨௮. * * * கலா. ௨, ௨௰.

௬ நம்மைத் தம்முடைய பிதாவாகிய பராபரனுக்கு முன்பாக * ராசாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவருக்கு மகிமையும் பெலனும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென். * ௧. பேது. ௨, ௯.

௭ இதோ, * மேகங்களோடே வருகிறார், அப்போது கண்யாவும் * * அவரைக் குத்தினவர்களும் அவரைக் கண்டு, பூமியின் கோத்திரங்களெல்லாம் அவர் மேலே புலம்புவார்கள். ஆம், ஆமென். * மத். ௨௪, ௩௰. * * சகரி. ௰௨, ௰.

௮ * நான் அல்பாவும் ஓமேகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேனென்று, இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமாகிய சருவத்துக்கும் வல்ல கர்த்தர் விளம்புகிறார். * யேசா. ௪௧, ௪. ௪௪, ௬.

¶ கர்த்தராகிய யேசுக்கிறிஸ்து யோவானுக்குத் தெரிசனையாகி, ஆசியாவிலுள்ள ஏழுசபைகளுக்கும் நிருபங்களெழுதக்கற்பித்தது.

௯ உங்கள் சகோதரனும் யேசுக்கிறிஸ்துவின் உபத்திரவத்திலும் இராட்சியத்திலும் பொறுமையிலும் உடன் பங்காளனுமாயிருக்கிற யோவானாகிய நான், பராபரனுடைய வசனத்தினிமித்தமும் யேசுக்கிறிஸ்துவினுடைய சாட்சியினிமித்தமும் பத்மு என்னப்பட்ட தீவிலிருந்தேன்.

௰ கர்த்தருடைய நாளிலே ஆவிக்குள்ளானேன், அப்பொழுது எனக்குப் பின்னாலே:

௰௧ நான் அல்பாவும் ஒமேகாவும் முந்தினவரும் பிந்தினவருமாயிருக்கிறேனென்றும், நீ காண்கிறதைப் புஸ்தகத்திலெழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியாத்தீரா, சர்தே, பிலதெல்பியா, லவோதிக்கேயா பட்டணங்களிலுள்ள சபைகளுக்கு அனுப்பென்றும் உரைக்கிற எக்காளச்சத்தம் போலொத்த மகா சத்தத்தைக் கேட்டேன்.

௰௨ அப்பொழுது என்னோடே பேசின சத்தத்தைப் பார்க்கத் திரும்பினேன், திரும்பினபோது, * ஏழு பொன் விளக்குத்தண்டுகளையும், * உ. நாளா. உரு, ௬ எ.

௰௩ ஏழு விளக்குத்தண்டுகளின் நடுவே நிலையங்கி தரித்து, மார்பருகே பொற்கச்சை கட்டியிருந்த * மனுஷகுமாரனுக்கொப்பானவரைக் கண்டேன். * எசேக். க. உ௬.

௰௪ அவருடைய சிரசும் மயிரும் வெண்மையான பஞ்சையும் உறைந்த மழையையும் போல வெண்மையாகவும், * அவருடைய கண்கள் அக்கினி ஜுவாலையைப்போலிருந்தன; * தானி. எ. ௯, ௰.

௰௫ அவருடைய காலுகள் உலைக்களத்திலே காய்ச்சின செம்பைப்போல பிரகாசமாகவும், * அவருடைய சத்தம் பெருவெள்ளங்களின் இரைச்சலைப்போலவுமிருந்தது. * ௰௪, உ.

௰௬ தமது வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார். * அவர் வாயிலிருந்து இருபுறமுங் கருக்குள்ள கூர்மையான பட்டயம் புறப்பட்டது, * அவருடைய முகம் பலத்துப் பிரகாசிக்கிற சூரியனைப்போலிருந்தது. * ௰௯, ௰௫. எபி. ௪, ௰௨. ** மத். ௧எ, உ.

௰௭ நான் அவரைக் கண்டபோது, மரித்தவனைப் போல அவர் பாதங்களிலே விழுந்தேன். அப்பொழுது அவர் தமது வலது கரத்தை என் மேல் வைத்து, எனக்குச் சொன்னதாவது: பயப்படாதே, நான் முந்தினவரும் பிந்தினவரும், உயிருள்ளவருமாயிருக்கிறேன்.

௰௮ மரித்திருந்தேன், ஆகிலும் இதோ, என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராயிருக்கிறேன், ஆமென். நான் நரகத்திற்கும் மரணத்துக்குமுரிய திறவுகோல்களை உடையவர்.

௰௯ நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும் இனிமேல் சம்பவிக்கப்போகிறவைகளையும் எழுது.

௨௰ என் வலது கரத்திலே நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் விளக்குத்தண்டுகளின் செய்தியையுந்தானே. அந்த ஏழு நட்சத்திரங்கள் ஏழு சபைகளுடைய * தூதராயிருக்கிறார்கள்,

நீகண்ட

நீகணட அநத ஏழுவிளக்குத்தணடுகளோவெனறால ஏழுசபைகளாயிருக்குது. * மலகி. ௨, ௭.

## ௨. அதிகாரம்.

### முதலாமநிருபம்.

எபேசுசபையினதூதனுக்குநீஎழுதவேணடியது:* ஏழுநட்சேத்திரஙகளைத தமமுடைய வலதுகரததிலேநதியிருநது ஏழுபொனவிளக்குததணடுகளநடுவே உலாவுகிறவர்சொலலுகிறதாவது:* ௧. ௰௬. ௨௰.

௨ உனகிரியைகளையும உனபிரயாசததையும உன பொறுமையையுமநீ பொலலாதவர்களைப பொறுக்ககூடாததையும, அபபோஸதலராயிராவிட டாலுநதஙகளை அபபோஸதலரெனறுசாதிக்கிற வர்களைநீசோதிதது அவர்களைப பொயயராககண டுபிடிததததையும,

௩ நீசகிததுககொணடிருக்கிறததையும, நீபொ றுமையாயிருக்கிறததையும, நீநமமுடைநாமததினநிமி ததியமிளைக்கரியாமலபிரயாசபபடடததையும அ றிநதிருக்கிறேம.

௪ ஆனாலும உனமுதலசிநேகததைவிடடாயெனறு, உ னமேலநமக்குக்குறையுணடு,

௫ ஆகையாலெஙகேயிருநது விழுநதாயெனறுநீ நினைதது, குணபபடடு, முதலகிரியைகளைச செய. இலலாவிடடால, நாமஉனக்குசீக்கிரமாயவநது, நீ குணபபடாதேபோனால, உனவிளக்குததணடை அ தனிடததைவிடடுபபெயர்பபோம.

௬ நாமுமபகைக்கிற * நிக்கொலாமததககாறரின கிரியைகளைநீபகைக்கிறதோஉனக்குணடு. * ௰௫. வசன.

௭ ஆவிசபைகளுக்குசசொலலுகிறதேதெனறு கா துளளவனகேட்ககடவான: எவனஜெயஙகொளளுகி றுனோ அவனுக்கு, பராபரனுடைய * பரதீசினநடுவிலிரு க்கிறசீவவிருட்சததினகனியைபபுசிக்கததருவோ மெனகிறுரெனறெழுது. * ௨௨, ௨. ௧. மொ. ௨, ௯.

### ¶ இரணடாமநிருபம்.

௮ சிமிறுனசபையினதூதனுக்குநீஎழுதவேண டியது:* மரிததிருநது பிழைதத முநதினவருமபிநதின வருமானவர்சொலலுகிறதாவது:* ௧, ௰௭. ௰௮.

௯ உனகிரியைகளையும உபததிரவததையும ஐசுவரிய முளளஉனதரிததிரததையும, தஙகளையூதர் எனறுசொலலியும யூதராயிராமலசாததானுடைய கூட டமாயிருக்கிறவர்களினதூஷணததையும அறிநதிரு க்கிறேம.

௰. நீபடடபபோகிறபாடுகளுக்கொனறுமபய பபடாதே. இதோ, நீஙகளசோதிக்கபபடுவதறகு, பிசாசுஉஙகளிலசிலரைக்காவலிலபோடுவதுணடு; நீஙகளபததுநாளஉபததிரமஅடைவீர்கள. மரண பரியநதமுணமையாயிரு, அபபொழுதுஉனக்கு * * சீவ

னுடைய கிரீடத்தைத் தருவேம் * மத். ௰, ௨௨. * * யாக். ௧, ௰௨.
௰௧ ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவான்: எவன் வெல்லுகிறானோ அவன் * இரண்டாம் மரணத்தால் சேதப்படானென்கிறாரென்றெழுது. * ௨௰, ௰௪. ௨௧, ௮.

¶ மூன்றாம் நிருபம்.

௰௨ பெர்கமுச் சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: * இருபுறமுங் கருக்குள்ள கூர்மையான பட்டயமுடையவர் சொல்லுகிறதாவது: * ௧, ௰௬.
௰௩ உன் கிரிகைகளையும், நீ சாத்தானுடைய சிங்காசனமிருக்குமிடத்திலே குடியிருக்கிறதையும், நீ நம்முடைய நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடியிருக்கிற உங்களிடத்திலே நம்முடைய உண்மையுள்ள சாட்சியாகிய அந்திப்பா கொல்லப்பட்ட நாட்களிலும் நீ நம்முடைய மேலுள்ள விசுவாசத்தை மறுதலியாமலாயிருந்ததையும் அறிந்திருக்கிறேம். * ௰௬, ௨.
௰௪ ஆனால் விக்கிரகங்களுக்குப் படைத்ததுகளைப் போசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் இஸ்றவேல் புத்திரர் முன்பாகத் தேட்டத்தை வைக்க * பாலாக்கைப் போதித்த பாலாமுடைய போதகத்தைப் பிடித்திருக்கிறவர்கள் அங்கே உனக்குண்டென்று உன்மேல் நமக்குக் கொஞ்சங் குற்றமுண்டு * ௪. மோ. ௨௫, ௧ — ௩௧, ௰௬.
௰௫ அப்படியே * நிக்கொலாமத்தாருடைய போதகத்தைப் பிடித்திருக்கிறவர்களும் உனக்குண்டு, அதைப் பகைக்கிறேம். * ௬ வசனம்.
௰௬ குணப்படு, இல்லாவிட்டால் நாம் உனக்குச் சீக்கிரமாய் வந்து, * நம்முடைய வாயின் பட்டயத்தாலே அவர்களோடே யுத்தம்பண்ணுவோம். * ௰௯. ௰௫.
௰௭ ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவான். எவன் வெல்லுகிறானோ அவனுக்கு நாம் மறைக்கப்பட்டிருக்கிற * மன்னாவிலே போசிக்கத்தந்து, அவனுக்கு வெண்மையான குளிகைக் கல்லையும், குளிகைக்கல்லின்மேலே எழுதப்பட்டதும் அதைப் பெறுகிறவனேயல்லாமல் வேறொருவனும் அறியாததுமான புது நாமத்தையுங் கட்டளையிடுவோம் என்கிறாரென்றெழுது. * யோவா. ௬, ௫௰. ௫௧.

¶ நாலாம் நிருபம்.

௰௮ தியாத்திராசபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது: * அக்கினிக் கொழுந்தத்தவான கண்களும் சுத்த வெண்கலங்களுமுள்ள தேவகுமாரன் சொல்லுகிறதாவது: * ௧, ௰௪ ௰௫
௰௯ உன் கிரிகைகளையும் உன் சிநேகத்தையும் உன் ஊழியத்தையும் உன் விசுவாசத்தையும் உன் பொறுமையையும், முந்தினதுகளிலும் அதிகமான உன் பிந்தின கிரிகைகளையும் அறிந்திருக்கிறேம்.
௨௰ ஆனாலும், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற *

யேச

பெசப்பட்டவனாக்கிறதிலேதக்கி போதகமுமுனுக்கிறத்
துயும் நம்முடைய [illegible] வேச்சுதனமுமுன
[illegible] போ
சிக்கவமாத்து [illegible] சிற்றன
து, [illegible] கொத்சாதுனுக்குறுடு. + ௧.
[illegible] . ௰௯ , ௩௧ .

௨௧ அவனுக்கு தனைவேச்சுதனத்தவிட்டுக்குணப்பட்டு
த்தவர்களை கொடுத்தோம், ஆனால் குணப்படா தே
போனுள்.

௨௨ இதோ நாம் அவளைக்கட்டிலிலக்கிடையாகவும், அ
வ [illegible] ன விபசாரமபண்ணினவர்களை, தங்கள்
கிரியைகளை விட்டுக்குணப்படாதே போ
னால், மகா உபத்திரவத்திலும் போடு, + ௰௪, ௬.

௨௩ அவளுடைய பிள்ளைகளைக்கொல்லவேகொண்டு
போடுவோம். அப்போது எல்லாச்சபைகளும்,+ நாம
[illegible] ந்தரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கி
றவரென்று அறியும் உங்களில் ஒவ்வொருவனுக்கும் உங்கள்
[illegible] ளின்படியே கொடுப்போம். + சங்கீ. எ, ௰.

௨௪ ஆனால் உங்களுக்கும் தியாத்தீராவிலே இருந்த ம
[illegible] த்தைக்கொண்டிராமலும், ஆழங்களென்ன
[illegible] அறிந்துகொள்ளாமல் ஆழங்களை அறிந்திராம
[illegible] மற்றவர்களுக்கும் நாம் சொல்லுகிறதா
[illegible] உங்கள் மேல் வேறே பாரத்தைப் போடோம்.

௨௫ + உங்களுக்குள்ளதைத்தானே நாம் வருமட்டு
ம் [illegible] க்கொள்ளு. + ௩, ௰௧.

௨௬ [illegible] முக்கியபரியந்தம் தம்முடைய கி
ரியைகளை [illegible] க்கிறவனுக்கு,+ நம்மு
டைய [illegible] நானும் பெற்றதுபோல, சாதிக
[illegible] அதிகாரங்கொடுப்போம். + சங்கீ. ௨, ௮, ௯.

௨௭ [illegible] பொல் நொறுக்கப்படு
[illegible] அவர்களை ஆண்டவான் .

௨௮ அவனுக்கு விடிவெள்ளியைத்தருவோம்.

௨௯ ஆவியானவர் சபைகளுக்குச்சொல்லுகி
றதைத் காதுள்ளவன் கேட்கக்கடவானென்றெழுது.

# ௩. அதிகாரம்.

## ¶ ஐந்தாம்நிருபம்.

சர்தையிலிருக்கிற சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது:
[illegible] தேவனுடைய * ஏழு ஆவிகளையும் + ஏழு நட்சே
த்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது: உயி
[illegible] உனக்குப்பேர் உண்டாயிருந்தாலும் செத்த
[illegible] உன் கிரியைகளை அறிவோ
ம். [illegible] + ௧. ௰௬.

௨ [illegible] , சாகப்போகிறதுக
[illegible] , [illegible] நாம் உன் [illegible]
[illegible] பூரணமாகக் காணப்
படவில்லை.

௩ ஆகையால் நீ எப்படி [illegible]
பாயென்றதை நினைத்து, அதைக்கைக்கொ

ண்டு, *குணப்படு. நீ விழித்திராமல் போனாலோவெனில் ** திருடனைப்போல் உன்மேல் வருவோம். நாம் உன்மேல் வரும் வேளையை அறியாதிருப்பாய். * ௨. ௫. ** மத். ௨௪, ௪௩. ௧. தெச. ௫, ௨.

௪ தங்கள் வஸ்திரங்களைத் தீட்டுப்படுத்தாத கொஞ்சம் பேர்கள் சர்தேயிலுமுண்டு, அவர்கள் நம்முடனே வெள்ளையுடை தரித்து நடப்பார்கள், ஏனெனில் அதற்குப் பாத்திரராயிருக்கிறார்கள்.

௫ எவன் வெல்லுகிறானோ அவன் வெள்ளை வஸ்திரங்களைத் தரிப்பிக்கப்படுவான், அவன் நாமத்தை நாம் சீவனுடைய புஸ்தகத்திலே கிறுக்கிப்போடாமல், ** அவன் நாமத்தை நம்முடைய பிதாவின் முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அறிக்கைபண்ணுவோம். * ௰, ௰௨. ** மத். ௰, ௩௨.

௬ காதுள்ளவன் ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக்கடவானென்றெழுது.

¶ ஆறாம் நிருபம்.

௭ பிலதெல்பியா சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது: *தாவீதுடைய திறவுகோலுடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாமல் திறந்து ஒருவரும் திறக்கக்கூடாமல் பூட்டுகிறவருமாகிய பரிசுத்தரும் ** சத்தியமுள்ளவர் சொல்லுகிறதாவது: * யெசா. ௨௨, ௨௨. ** ௧, ௫. யோவ. ௰௪, ௬.

௮ உன் கிரியைகளை அறிந்திருக்கிறோம், இதோ உனக்கு முன்பாகத் திறக்கப்பட்ட வாசலைத் தந்தோம்; அதை ஒருவரும் பூட்டக்கூடாது. ஏனெனில் சிறிதே பலனுனக்கிருந்தும், நீ நம்முடைய நாமத்தை மறுதலியாமல் நம்முடைய வசனத்தைக் கைக்கொண்டாய். * ஞா. ௰௨, ௬௨. ௨. கொரி. ௪, ௭.

௯ இதோ, *தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல் பொய் சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய சபையத்தாரில் சிலரை உனக்குத் தருகிறோம், இதோ அவர்கள், உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணியவும் நாம் உன்னை நேசித்தோமென்று அறியவும் பண்ணுவோம். * ௨, ௯.

௰ நீ நம்முடைய பொறுமையின் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, உன்னை நாமும் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கப் பூச்சக்கரத்தின்மீதெங்கும் வரப்போகிற சோதனையின் வேளைக்கு விலக்கிக் காப்போம்:

௰௧ இதோ, *சீக்கிரமாய் வருகிறோம், ஒருவனும் உன் கிரீடத்தை வாங்காதபடிக்கு, உனக்குள்ளதை ** பிடித்துக்கொண்டிரு. * ௨௨, ௰௨. ** ௨. திமோ. ௧, ௰௩. ௰௪.

௰௨ எவன் வெல்லுகிறானோ அவனை நாம் நம்முடைய பராபரனுடைய தேவாலயத்திலே, இனிப் புறம்போகாதிருக்க, *அவன்மேல் நம்முடைய பராபரனுடைய நாமத்தையும், நம்முடைய பராபரனால் வானத்தினின்றிறங்கின **புது யெருசலேமாகிய நம்முடைய பராபரனுடைய பட்டணத்தின் நாமத்தையும், நம்முடைய புத்தான

நாம

நாமத்தையுமெழுதுவேன். * ௨௨, ௪. ** ௨௧, ௨. ௰.

௰௩ காதுள்ளவன் ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக்கடவானென்றெழுது.

¶ ஏழாம் நிருபம்.

௰௪ லவோதிக்கேயா சபையினுடைய தூதனுக்கு நீ எழுதவேண்டியது: *உண்மையும் சத்தியமுமான சாட்சியும் **பராபரனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாகிய ஆமெனானவர் சொல்லுகிறதாவது: * ௧, ௫. ** கொலோ. ௧, ௰௫—௰௭.

௰௫ நீ குளிருமல்ல அனலுமல்லவென்று உன் கிரியைகளை அறிவேன், நீ குளிராக அல்லது அனலாக இருந்தால் நலமாயிருக்கும்.

௰௬ இப்படி நீ குளிருமாயிராமல் அனலுமாயிராமல் வெதுவெதுப்பாயிருக்கிறபடியினாலே, உன்னை என் வாயிலிருந்து வாந்திபண்ணிப்போடுவேன்.

௰௭ ஏனென்றால்: நான் ஐசுவரியவானாயிருக்கிறேன், திரவியசம்பன்னனானேன், எனக்கொன்றுந்தேவையில்லையென்று சொல்லுகிறாய்; ஆனால் நீ நிர்ப்பந்தமும் பரிதபிக்கப்படத்தக்கவனும் தரித்திரனும் குருடனும் நிர்வாணியுமாயிருக்கிறாயென்று அறியாய்.

௰௮ நீ ஐசுவரியவானாகுவதற்கு, நெருப்பிலே புடமிட்ட பொன்னையும், உன் நிர்வாணத்தின் அவலட்சணம் வெளியரங்கமாகாமல் நீ உடுத்தப்படுவதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே * கொள்ளவும், நீ பார்வையடைவதற்கு உன் கண்களுக்குக் கலிக்கம் போடவும் உனக்கு யோசனை சொல்லுகிறேன்; * ௰௮; ௰௫. ** ஏசா. ௫௫, ௧.

௰௯ * நானெவர்களைச் சிநேகிக்கிறேனோ, அவர்களைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறேன்; ஆகையால் கணபக்தியாயிருந்து குணப்படு. * வாக். ௩, ௰௧. ௰௨.

௨௰ இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்; ஒருவன் என் சத்தங்கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்துக்கு நான் உட்பிரவேசித்து அவனோடே சாப்பாடு பண்ணுவோம் அவன் நம்மோடே சாப்பாடு பண்ணுவான். * யோவா. ௰௪, ௨௩.

௨௧ நாம் வென்று நம்முடைய பிதாவோடே அவருடைய ஆசனத்தில் உட்கார்ந்ததுபோலே. * எவன் வெல்லுகிறானோ அவனுக்கும் நம்மோடே நம்முடைய ஆசனத்தில் உட்காருவதை அளிப்போம். * லூக். ௨௨, ௨௮—௩௰. ௨. தீமோ. ௨, ௰௨.

௨௨ காதுள்ளவன் ஆவி சபைகளுக்குச் சொல்லுகிறதைக் கேட்கக்கடவானென்றெழுதினார்.

## ௪, அதிகாரம்.

¶ கர்த்தருடைய ஆஸ்தானத்திலே நடக்கப்பட்ட போற்றுதலுக்கு முன்னுள்ள தரிசனை.

இதுகளுக்குப்பிற்பாடு, இதோ வானத்திலே திறக்கப்பட்ட ஒரு வாசலைக் கண்டேன்: நானெக்காளசத்தமாய

மாயென்னுடனே பேசக்கேட்டிருந்த * முந்தின சத்த
மானது: நீ இங்கே ஏறிவா, இதுகளுக்குப் பிற்பாடு சம
பவிக்கவேண்டியதுகளை உனக்குக் காண்பிப்பே
னென்றுரைத்தது. * ௧, ௰௧.

௨ உடனே நான் ஆவிக்குள்ளானேன், அப்போதோ
வானத்தில் ஒரு ஆசனம் வைக்கப்பட்டிருந்தது, அந்த
ஆசனத்தின்மேல் ** ஒருத்தர் உட்கார்ந்திருந்தார். *
௧, ௰. ** யெசா. ௬, ௧. எசேக். ௧, ௨௬.

௩ உட்கார்ந்திருந்தவர், பார்வைக்கு யஸ்பிக்கக்
லுக்குங் கெம்புக்கும் ஒப்பாயிருந்தார், ஆசனத்தைச்
சுத்தப் பார்வைக்கு மரகதச் சாயலாகிய வானவில்
லும்;

௪ ஆசனத்தைச் சூழ இருபத்துநாலாசனங்களுமிரு
ந்தது, அந்த ஆசனங்களின்மேல் வெள்வஸ்திரங்க
ளைத் தரிப்பிக்கப்பட்டுத் தங்கள் சிரசுகளின்மேல் பொ
ற்கிரீடங்களுள்ளவர்களான இருபத்துநாலு முப்ப
ர் உட்கார்ந்திருக்கக்கண்டேன்.

௫ ஆசனத்திலிருந்து மின்னல்களுங் குமுறல்களுஞ்
சத்தங்களும் புறப்பட்டு, பராபரனுடைய ஏழாவிக
ளாகிய ஏழு தீவட்டிகள் ஆசனத்துக்கு முன்பாக எரி
கிறதாயிருந்தது:

௬ ஆசனத்துக்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான
கண்ணாடிக்கடலும், ஆசனத்தின் நடுவிலும் ஆசனத்தைச்
சுத்திலும் முற்புறம் பிற்புறங் கண்களால் நிறைந்
த * நாலு சீவன்களுமிருந்தது. * எசேக். ௧, ௫.

௭ * முதலாஞ்சீவன் சிங்கத்துக்கொப்பாகவும்,
இரண்டாஞ்சீவன் கன்றுக்குட்டிக்கொப்பாகவும்,
மூன்றாஞ்சீவன் மனுஷன்போல முகமுள்ளதாக
வும், நாலாஞ்சீவன் பறக்கிற கழுகுக்கொப்பாகவு
மிருந்தது. * எசேக். ௧, ௰.

௮ * இந்த நாலு சீவன்களிலும் ஒவ்வொன்று சுத்தி
லும் அவ்வாறு செட்டைகளுள்ளதும், உள்புறங்க
ண்களால் நிறைந்ததுமாயிருந்து: ** இருந்தவரும் இ
ருக்கிறவரும் வரப்போறவருமாயிருக்கிற சருவத்து
க்கும் வல்ல பராபரனாகிய கர்த்தர் *** பரிசுத்தர் பரிசுத்
தர் பரிசுத்தர் என்று சொல்லிக்கொண்டே இரவும் ப
கலும் ஓயவில்லாதிருந்தது. * யெசா. ௬, ௨. ** ௧, ௮.
*** யெசா. ௬, ௩.

௯ ஆனால் ஆசனத்தின்மேல் உட்கார்ந்திருந்து என்
றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிழைக்கி
றவருக்குச் சீவன்கள் மகிமையையுங் கனத்தையும் ஸ்
துத்தோத்திரத்தையுஞ் செலுத்தும்போது,

௰ * இருபத்துநாலு முப்பர் ஆசனத்தின்மேல் உட்
கார்ந்தவர் முன்பாக விழுந்து, என்றென்றைக்கு மு
ள்ள சதாகாலங்களிலும் பிழைக்கிறவரைப் பணிந்
து கொண்டு, தங்கள் கிரீடங்களை ஆசனத்தின் முன்பா
கப் போட்டு:

௰௧ ஆண்டவரே, மகிமையையுங் கனத்தையும் வ
ல்லமையையும் நீர் தக்கக்கொள்ளப் பாத்திரராயிரு
க்கிறீர், ஏனெனில் தேவரீர் எல்லாத்தையுஞ் சிஷ்டி
த்தீர். உம்முடைய சித்தத்தினாலதுகள் உண்டாகச் சிஷ்டிக்
கப்பட்டிருக்குதென்றார்கள்.

## ௫. அதிகாரம்.

௧ முத்திரித்த பொஸ்தகத்தைத் தெய்வ ஆட்டுக்குட்டி வாங்கினதுக்குச் செய்யப்பட்ட கொண்டாட்டமான தெரிசனை.

௧ அன்றியும் உள்ளும் புறம்புமாய் எழுதி ஏழு முத்திரைகளால் முத்திரித்திருந்த ஒரு பொஸ்தகத்தை நான் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலே கண்டேன். * ச. ௨. ௩.

௨ பொஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார் என்று மகாசத்தத்தோடே கூறுகிற பெலமுள்ள ஒரு தூதனைக் கண்டேன்.

௩ ஆனால் வானத்திலாகிலும் பூமியின்மேலாகிலும் பூமியின்கீழாகிலும் உள்ள ஒருவனும் பொஸ்தகத்தைத் திறக்கவும் அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது.

௪ அப்போ ஒருவனும் பொஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரனாகக் காணப்படாதே போனதுக்கு நான் மெத்தவும் அழுதேன்.

௫ ஆனால் * மூப்பரில் ஒருத்தன் என்னோடே: அழாதே, இதோ ** யூதாவின் கோத்திரமும் தாவீதின் வேருமாகிய சிங்கம் பொஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளை உடைக்கவும் செயங்கொண்டதே என்றான். * ௪, ௪. ** ௧. மோ. ௪௯, ௯. ௰. ஏசா. ௰௧, ௧. ௰.

௬ அப்போ இதோ, சிங்காசனத்துக்கும் நாலு சீவன்களுக்கும் நடுவிலும், மூப்பர்கள் நடுவிலும், ஏழு கொம்புகளும் பூமியெங்கும் அனுப்பப்பட்ட பராபரனுடைய * ஏழு ஆவிகளாகிய ஏழு கண்களுமுள்ள, அடிக்கப்பட்டவண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியை நிற்கக் கண்டேன். * ௪, ௫.

௭ அது வந்து, பொஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்தவருடைய வலதுகரத்திலே வாங்கிற்று.

௮ அது பொஸ்தகத்தை வாங்கினபோது, நாலு சீவன்களும் இருபத்துநாலு மூப்பரும் அவரவர் * சுரமண்டலங்களையும், ** பரிசுத்தவான்களுடைய செபங்களாகிய தூபவர்க்கங்களால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்திருந்து, ஆட்டுக்குட்டிக்கு முன்பாக விழுந்து, * ௰௪, ௨. ** அ, ௩. ௪. சங். ௱௪௧, ௨.

௯ பொஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளைத் திறக்கவும் பாத்திரராயிருக்கிறீர், ஏனென்றால் தேவரீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரத்திலும் பாஷையிலும் சனத்திலுஞ் சாதியிலும் எங்களைப் பராபரனுக்கு * உம்முடைய ரத்தத்திலே கொண்டு, * ௧. பேது. ௧. ௰௯.

௰ * எங்களை எங்கள் பராபரனுக்கு முன்பாக ராசாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர், நாங்கள் பூமியின்மேல் ராசரிக்கம்பண்ணுவோமென்று, புதுப்பாட்டைப் பாடினார்கள். * ௧, ௬.

௰௧ அப்போ நான் பார்த்து, சிங்காசனத்தையும் சீவன்களையும் மூப்பர்களையும் சுற்றிலும் அநேகந்தூதருடைய

டைய சத்தத்தைக் கேட்டேன், * அவர்களுடைய லெக்கம் பத்தினாயிரங்களுக்குப் பத்தினாயிரங்களும் ஆயிரங்களுக்காயிரங்களுமாயிருந்தது. * தானி. ௭, ௰. எபி. ௰௨, ௨௨.

௰௨ அவர்கள் மகா சத்தத்துடனே: அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் ஏற்றுக்கொள்ளப் பாத்திரமாயிருக்கிறதென்றார்கள்.

௰௩ * வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழிலுமிருக்கிறவெல்லா சிஷ்டிகளும், சமுத்திரத்தின் மேலிருக்கிறதுகளும் அதுகளுக்குள்ளிருக்கிறதுகளெல்லாவும்: சிங்காசனத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டிக்கும் ஸ்தோத்திரமுங் கனமும் மகிமையும் வல்லமையும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாவதாகவென்று சொல்லக் கேட்டேன். * சங். ௱௪௮, ௧-௰.

௰௪ நாலு ஜீவன்களும்: ஆமென் என்றது, இருபத்து நாலு மூப்பரோ விழுந்து, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிழைக்கிறவரைப் பணிந்துகொண்டார்கள்.

## ௬. அதிகாரம்.

௧ ஆறு முத்திரைகளைத் திறக்கப்பட்டது.

ஆட்டுக்குட்டியானது முத்திரைகளில் ஒன்றைத் திறக்கிறதை நான் கண்டேன், அப்போ நாலு ஜீவன்களில் ஒன்று: நீ வந்து பாரென்று குமுறல் சத்தமாய் உரைக்கக் கேட்டேன்.

௨ அப்போ இதோ, ஒரு வெண் குதிரையைக் கண்டேன், * அதின்மேலிருந்தவர் வில்லைப் பிடித்திருந்தார், அவருக்கொரு கிரீடங் கொடுக்கப்பட்டது, அவர் ஜெயிக்கிறவராய் ஜெயிப்பதற்காகப் புறப்பட்டார். * ௰௯. ௰௧ — ௰௬. சங். ௪௫, ௫. ௬.

௩ அது ரெண்டாம் முத்திரையைத் திறந்தபோது ரெண்டாஞ் ஜீவன்: நீ வந்து பாரென்றுரைக்கக் கேட்டேன்.

௪ அப்போ சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது, அதின்மேலிருந்தவனுக்கு, சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துக்கொள்ளவும், தங்களில் ஒருத்தரை ஒருத்தர் வெட்டவும் அதிகாரம் அளிக்கப்பட்டு, பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது.

௫ அது மூன்றாம் முத்திரையைத் திறந்தபோது மூன்றாஞ் ஜீவன்: நீ வந்து பாரென்றுரைக்கக் கேட்டேன். அப்போ, இதோ, ஒரு கறுப்புக் குதிரையைக் கண்டேன், அதின்மேலிருந்தவன் * ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். * ௩. மோ. ௨௬, ௨௬.

௬ அப்போ: உழக்குக் கோதுமை ஒரு பணம், மூவுழக்கு வாற்கோதுமை ஒரு பணமென்னவும், எண்ணெயையும் திராட்சப்பழரசத்தையுஞ் சேதப்படுக்

தாதே

தாதோனாயும், நாலு சீவன்களின் நடுவிலே உரைக்
கிற சத்தத்தைக் கேட்டேன்.
௭ அது நாலாம் முத்திரையைத் திறந்தபோது நாலா
வது சீவன்: நீ வந்து பாரென்று உரைக்கிற சத்தத்தைக்
கேட்டேன்.
௮ அப்போதோ, மங்கின நிறமான குதிரையைக் கண்
டேன், அதின்மேலிருந்தவனுடைய நாமம் மரணம்:
அவனோடே கூடே நரகமும் பின்சென்றது. அதுகளுக்
கு, பூமியினுடைய காற்பங்கின் மேற்பட்டையத்தா
லும் பஞ்சத்தாலும் சாவாலும் பூமியின் துஷ்டமிருக
ங்களாலுங் கொலைசெய்ய அதிகாரங் கொடுப்பட்டு
து.
௯ அது ஐந்தாம் முத்திரையைத் திறந்தபோது பலிபீ
டத்தின் கீழே நான், * பராபரனுடைய வசனத்தின் நிமி
த்தியமும் தாங்களுக்குண்டான சாட்சியின் நிமித்தியமுங்
கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைக் கண்
டேன். * ௨௰, ௪.
௰ அவர்கள் மகா சத்தத்துடனே: பரிசுத்தமுஞ் சத்
தியமுமுள்ள ஆண்டவரே, எந்தமட்டும் நாயந்தீர்க்
காமலும் பூமியின்மேற் குடியிருக்கிறவர்களிடத்தில்
எங்கள் இரத்தப்பழியை வாங்காமலும் இருப்பீரே
ன்று கூப்பிட்டார்கள்.
௰௧ அப்போ அவர்வருக்கு * வெள்ளை நிலை அங்கி
கள் கொடுக்கப்பட்டு, தங்களைப்போலே கொலையுண்ணக்
கப்போகிறதாங்களுடனூழியக்காரருந் தங்கள் சகோ
தரரும் வந்து நிறையுமட்டும், அவர்கள் இன்னங் கொ
ஞ்சக்காலம் இளைப்பாறவேணுமென்று அவர்களுக்
குச் சொல்லப்பட்டுது. * ௩, ௫. ௭, ௯.
௰௨ அது ஆறாம் முத்திரையைத் திறக்கிறதைக் கண்
டேன், அப்போதோ * மகா பூமி அதிர்ச்சலுண்டா
ச்சுது. ** சூரியன் கம்பிளியைப்போலக் கறுப்பாகி, சந்
திரன் இரத்தம் போலாச்சுது. * ௰௭, ௰௮. ** அப்போ.
௨, ௨௰.
௰௩ வானத்தின் நட்சேத்திரங்கள், பெருங்காத்தினா
லே அசையுண்ட அத்திமரந்தன் காய்களை உதிர்க்கிறது
போல, பூமியிலே விழுந்து,
௰௪ வானஞ் சுருட்டப்படுகிற புஸ்தகத்தைப்
போல அகன்று, எல்லா மலையுந் தீவுந் தங்களிட
ங்களை விட்டசந்து போச்சுது.
௰௫ பூமியின் ராசாக்களும் பெரியோர்களும் ஐசு
வரியவான்களுஞ் சேர்வைக்காரர்களும் பெல
வான்களும், எல்லா அடிமைகளும் எல்லாத்தன்னி
சசைக்காரரும் * பருவதங்களின் கெபிகளிலுங் கல்
மலைகளிலும் ஒளிந்துக்கொண்டு, * ஏசா. ௨,
௰௯ — ௨௧.
௰௬ பருவதங்களையுங் கன்மலைகளையும் பார்
த்து: நீங்கள் எங்கள் மேலே விழுந்து, எங்களை ஆசனத்தின்
மேலுட்கார்ந்தவருடைய முகத்துக்கும் ஆட்டுக்
குட்டியினுடைய கோபத்துக்கும் மறைத்திடக் குங்
கோள்,
௰௭ ஏனென்றால் அவருடைய கோபத்தின் பெரிதா
ன நாள் வந்தது, யார் நிற்கக்கூடுமென்றார்கள்.

எ.

## ௭. அதிகாரம்.

௧ விசுவாசிகளைத் தேவகோபத்தின் ஆக்கினைக்குக்
காக்கிறதுக்கு முத்திரை போடப்ப
ட்டதும், மகா உபத்திரமனுபவித்த
அவர்களுக்கு வரும் பலன் காண்
பிக்கப்பட்டதுமான தெரிசனை.

இதுகளுக்குப்பின்பு பூமியின் நாலுதிசைகளிலே
நாலுதூதர் நின்று, காத்து பூமியின்மேலாகிலுஞ்
சமுத்திரத்தின்மேலாகிலும் ஒரு மரத்தின்மேலாகிலும்
அடிக்காதபடிக்கு, பூமியின் நாலு காத்துகளையும்
பிடித்திருக்கக் கண்டேன்.

௨ சீவனுள்ள பராபரனுடைய முத்திரையையுடை
ய வேறொருதூதன் சூரியன் உதிக்குந்திசையிலிரு
ந்து ஏறிவரக் கண்டேன், அவன், பூமியையுஞ் சமுத்தி
ரத்தையுஞ் சேதப்படுத்த அதிகாரம்பெற்ற நாலுதூத
ரையும் நோக்கி, மகாசத்தமாய்:

௩ * நாம் நம்முடைய பராபரனுடைய ஊழியக்காரரை
அவர்கள் நெத்திகளிலே முத்திரைபோட்டுத் தீருமட்டும்
பூமியையாகிலுஞ் சமுத்திரத்தையாகிலும் மரங்களை
யாகிலுஞ் சேதப்படுத்தாதேயுங்கோளென்று சொல்
லிக்கூப்பிட்டான். * எசே ௯, ௪—௬.

௪ நான் முத்திரைபோட்டவர்களுடைய தொகை
யைக் கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல
கோத்திரங்களிலும் முத்திரைபோட்டவர்கள்
௱௪௰௪௲. பேர்.

௫ யூதா கோத்திரத்தில் முத்திரைபோட்டவ
ர்கள் ௰௨௲. ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோட்ட
வர்கள் ௰௨௲. காத் கோத்திரத்தில் முத்திரைபோ
ட்டப்பட்டவர்கள் ௰௨௲.

௬ ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோட்டவ
ர்கள் ௰௨௲. நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோட்ட
வர்கள் ௰௨௲. மனாசே கோத்திரத்தில் முத்திரை
போட்டவர்கள் ௰௨௲.

௭ சீமேயோன் கோத்திரத்தில் முத்திரைபோட்ட
வர்கள் ௰௨௲. லேவி கோத்திரத்தில் முத்திரைபோ
ட்டப்பட்டவர்கள் ௰௨௲. இசக்கார் கோத்திரத்தில் முத்
திரைபோட்டப்பட்டவர்கள் ௰௨௲.

௮ செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோட்டப்ப
ட்டவர்கள் ௰௨௲. யோசேப்பு கோத்திரத்தில் முத்திரை
போட்டப்பட்டவர்கள் ௰௨௲. பெஞ்சமீன் கோத்திர
த்தில் முத்திரைபோட்டப்பட்டவர்கள் ௰௨௲. பேர்.

௯ இதுகளுக்குப்பின்பு இதோ, சகல சாதியிலுங் கோத்
திரங்களிலுஞ் சனங்களிலும் பாஷைகளிலுமு
ள்ளவர்களாகிய ஒருத்தனும் எண்ணக்கூடாத திரளான கூட்டம், * வெ
ள்ளை நிற அங்கிகளைத் தரிப்பிக்கப்பட்டவர்களும், த
ங்கள் கைகளிலே குருத்தோலைகளைப் பிடித்தவர்களு
மாய், சிங்காசனத்துக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு மு
ன்பாகவும் நிற்கிறதைக் கண்டேன். * ௩, ௫.

௰ அவர்கள் மகாசத்தமாய்: * இரட்சித்த மகிமை சிங்கா
சனத்தின்மீதில் உட்கார்ந்திருக்கிற எங்கள் பராபர
னுக்கும்

ஆட்டுக்குட்டிக்கும் உண்டாகக்கடவதென்று கூப்பிட்டார்கள். * சங். ௩, ௯. ஏசா. ௪௩, ௰௧.
௰௧ * எல்லாத் தூதரும் ஆசனத்தையும் மூப்பரையும் நாலு ஜீவன்களையுஞ் சுத்தி நின்று, ஆசனத்துக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து, பராபரனைப் பணிந்துகொண்டு: * ௫, ௰௧. ௰௨.
௰௨ ஆமென், எங்கள் பராபரனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமுங் கனமும் வல்லமையும் பெலனும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் உண்டாகக்கடவது, ஆமென் என்றார்கள்.
௰௩ அப்போது மூப்பரில் ஒருத்தன் என்னுடனே: வெள்ளை அங்கிகள் தரிப்பிக்கப்பட்டவர்கள் ஆர், எங்கேயிருந்து வந்தார்களென்று சொல்லிக் கேட்டான்.
௰௪ நான் அவனுடனே: ஐயா, நீர் அறிவீரென்றேன். அப்போ அவன் எனக்குச் சொன்னதாவது: பெரிதான உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள் இவர்கள்தானே, இவர்கள் தங்கள் அங்கிகளைத் தப்பி, தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியின் * இரத்தத்திலே வெளுத்தார்கள். * ௧, ௫. ௧ யோவ. ௧, ௭.
௰௫ ஆனபடியால் பராபரனுடைய ஆசனத்துக்கு முன்பாக இருந்து, அவருக்கு இரவும் பகலும் அவருடைய தேவாலயத்திலே ஆராதனை செய்கிறார்கள், ஆசனத்தின்மீதில் உட்கார்ந்தவர் அவர்கள்மேல் வாசமாயிருப்பார்.
௰௬ * இனிப் பசியுமாயிரார்கள், இனித் தாகமுமாயிரார்கள், அவர்கள்மேல் வெய்யிலாகிலும் எந்த உஷ்ணமாகிலும் படுவதுமில்லை. * ஏசா. ௪௯, ௰.
௰௭ ஏனெனில் ஆசனத்தின் நடுவிலிருக்கிற ஆட்டுக்குட்டி * அவர்களை மேய்த்து, அவர்களை ஜீவனுள்ள நீரூற்றுகளண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோம், ** பராபரன் எல்லாக் கண்ணீரையும் அவர்கள் கண்களிலே இல்லாமல் துடைப்பாரென்றான். * சங். ௨௩, ௧. ௨. ** ௨௧, ௪. ஏசா. ௨௫, ௮.

## ௮. அதிகாரம்.

¶ ஏழாவது முத்திரை திறக்கப்பட்டது.

அவன் ஏழாவது முத்திரையைத் திறந்தபோது, வானத்திலே அரைமணித்தியாலமட்டும் அமைச்சல் உண்டாச்சுது.

¶ ஏழு எக்காளத் தோனிப்புகளுக்கு ஆயத்தப்படுத்தல்.

௨ பின்னையும், பராபரனுக்கு முன்பாக நின்றுகொண்டிருக்கிற ஏழு தூதரைக் கண்டேன், அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுபட்டுது.
௩ தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்திருக்கிற வேறொரு தூதனும் வந்து, பெலிபீடப்படியிலே நின்றான், அவனுக்கு ஆசனத்துக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மீதில், எல்லாப் பரிசுத்தவான்களு

டைய

டைய • செபங்களுக்கென்று கொடுக்க, அனேகங் கெந்தவர்க்கங்கள் தரப்பட்டது. • ௫, ௮.

௪ அப்படியே • பரிசுத்தவான்களுடைய செபங்களுக்கென்று கொடுப்பட்ட கெந்தவர்க்கங்களுடைய புகையானது தூதனுடைய கையிலிருந்து பராபரனுக்கு முன்பாக எழும்பிற்று. • சங். ௱௪௧, ௨.

௫ பிற்பாடு தூதன் தூபகலசத்தை எடுத்துக்கொண்டு, அதைப் பலிபீடத்தின் நெருப்பினாலே நிரப்பி, பூமியிலே கொட்டினான், அப்போ சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் பூமியதிர்ச்சியும் உண்டாச்சுது.

௬ ஆனாலேழு எக்காளங்களைப் பிடித்திருந்த ஏழு தூதர்கள் எக்காளமூதத் தங்களை ஆயித்தம்பண்ணினார்கள்.

¶ நாலு எக்காளத் தொனிப்புகள்.

௭ முதலாந்தூதன் எக்காளமூதினான், அப்போ இரத்தங் கலந்த கல்மழையும் அக்கினியுமுண்டாகி பூமியிலே கொட்டுண்டது. அதினாலே மரங்களில் மூன்றத்தொரு பங்கு வெந்து, பச்சைப்புல்லெல்லாம் எரிந்துபோச்சுது,

௮ இரண்டாந்தூதன் எக்காளமூதினான், அப்போ அக்கினியாய் வேகிற ஒரு பெரிய பருவதம்போலான்னது சமுத்திரத்திலே கொட்டுண்டுது, அதினாலே சமுத்திரத்தில் மூன்றத்தொரு பங்கு இரத்தமாகி,

௯ சமுத்திரத்திலிருந்த சீவனுள்ள சிஷ்டிகளில் மூன்றத்தொரு பங்கு செத்தது, கப்பல்களில் மூன்றத்தொரு பங்கும் அழிந்தது.

௰ மூன்றாந்தூதன் எக்காளமூதினான், அப்போ வானத்திலிருந்து தீவட்டியைப்போல எரிகிற ஒரு பெரிய நட்சேத்திரம் விழுந்து, அது ஆறுகளில் மூன்றத்தொரு பங்கின்மேலும் நீரூற்றுகள் மேலும் விழுந்தது.

௰௧ அந்த நட்சேத்திரத்தின் நாமம் எட்டி என்னப்படும், அதினாலே தண்ணீர்களில் மூன்றத்தொரு பங்கு எட்டிக்கசப்பாகி, தண்ணீர்கள் கசப்பானபடியால் மனுஷரில் அனேகர் செத்தார்கள்.

௰௨ நாலாந்தூதன் எக்காளமூதினான், அப்போ சூரியனில் மூன்றத்தொரு பங்கும் சந்திரனில் மூன்றத்தொரு பங்கும் நட்சேத்திரங்களில் மூன்றத்தொரு பங்கும் சேதப்பட்டது; அதுகளில் மூன்றத்தொரு பங்கு இருண்டுபோகவும், பகலும் அந்தப்படியே இராவும் மூன்றத்தொரு பங்கு பிரகாசமற்றிருக்கவுந்தானே.

௰௩ அப்போ நடுவானத்திலே பறக்கிற ஒரு தூதனைக் கண்டேன். அவன் மகா சத்தத்தோடே: எக்காளந் தொனிக்கப்போற மூன்று தூதருடைய குரல் எக்காளச் சத்தங்களால் பூமியிலே குடியிருக்கிறவர்களுக்கையோ, ஐயோ, ஐயோ என்றுரைக்கக் கேட்டேன்.

௯. அதிகாரம்.

¶ ஐந்தாம் எக்காளத் தொனிப்பு.

௧ ஐந்தாந்தூதன் எக்காளமூதினான், அப்போ • வானத்திலிருந்து பூமியிலே விழுந்த ஒரு நட்சேத்திரத்தைக்

கண்

கண்டேன், அதுக்குப் பாதாளத்துரவின் திறவுகோல் கொடுக்கப்பட்டுது. * ௨; ௰.
௨ அது பாதாளத்துரவைத் திறந்தது. அப்பொழுது பெருஞ்சூளையின் புகையைப் போலே புகை துரவிலிருந்தெழும்பி, துரவின் புகையால் சூரியனும் ஆகாசமும் அந்தகாரப்பட்டுது.
௩ புகையிலிருந்து வெட்டுக்கிளிகள் பூமியின் மேல் புறப்பட்டு வந்தது; அதுகளுக்குப் பூமியிலுள்ள தேள்களுக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்துக்கொத்த அதிகாரங் கொடுக்கப்பட்டுது.
௪ அதுகள் * பராபரனுடைய முத்திரை நெத்திகளிலில்லாத மனுஷரை மாத்திரமேயல்லது பூமியின் புல்லையாகிலும் எந்தப் பச்சைப் பூண்டையாகிலும் எந்த மரத்தையாகிலும் சேதப்படுத்தவேண்டாமென்று அதுகளுக்குச் சொல்லப்பட்டு, * ௭, ௩.
௫ அவர்களைக் கொல்லவல்ல, ஐந்துமாதமட்டும் பாதிக்க அதுகளுக்கதிகாரங் கொடுக்கப்பட்டுது. அதுகளின் வாதனை தேள் மனுஷரைக் கொட்டும்போதுண்டாகும் வாதனையாயிருக்கும்.
௬ அந்நாட்களிலே மனுஷர் மரணத்தைத் தேடியும் அதைக் காணாதிருப்பார்கள், சாக ஆசைப்படுவார்கள், ஆனால் மரணம் அவர்களை விட்டோடிப்போம்.
௭ அந்த வெட்டுக்கிளிகளுடைய ரூபம் யுத்தத்துக்காயத்தமான குதிரைகளுக்கொப்பாயிருந்தது, அதுகளின் தலைகளின் மேலே பொன்னுக்கொப்பான கிரீடங்களைப் போலவும், அதுகளின் முகங்கள் மனுஷர் முகங்களைப் போலவுமிருந்தது.
௮ அதுகளுக்குப் பெண்களுடைய கூந்தலைப் போலே கூந்தல்களுண்டாயிருந்தது, அதுகளின் பல்லுகள் சிங்கங்களின் பல்லுகளைப் போலிருந்தது.
௯ அதுகளுக்கு இரும்புமார்க்கவசங்களைப் போல மார்க்கவசங்களிருந்தது, அதுகளுடைய செட்டைகளின் இரைச்சல் யுத்தத்துக்கோடுகிற அநேகங் குதிரைகள் பூண்ட இரதங்களின் இரைச்சலைப் போலிருந்தது.
௰ அதுகளுக்குத் தேள்வால்களுக்கொப்பான வால்களும், அதுகளின் வால்களில் கொடுக்குகளுமிருக்குது. அதுகளின் அதிகாரம் மனுஷரை ஐந்து மாதஞ் சேதப்படுத்துவதற்கானது.
௰௧ அதுகளுக்கு * பாதாளத்தின் தூதனைத் தங்கள் மேலான ராசாவாக வைத்திருக்குது. அதுக்கு எபிரேயிலே அபாத்தோனென்றும் கிரேக்கிலே அப்பொல்லியோனென்றும் பேருமுண்டு. * ௧ வசனம்.
௰௨ * ஒரு ஐயோ போச்சுது. இதோ இன்னம் இரண்டையோ இதுகளுக்குப் பிறகு வரும். * ௮, ௰௩.

¶ ஆறாமெக்காளத்தொனிப்பு.

௰௩ ஆறாந்தூதனெக்காளமூதினான், அப்போது பராபரனுக்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின் நாலு கொம்புகளிலுமிருந்துண்டான ஒரு சத்தம் எக்காளத்தைப் பிடித்திருக்கிற ஆறாந்தூதனுடனே:

௰௪

யச ஐப்பிராத்தென்கிற பெரிய ஆற்றண்டையிலே கட்டப்பட்டிருக்கிற நாலு தூதரை அவிழ்த்துவிடென்று உரைக்கக்கேட்டேன்.
யரு அப்பொழுது மனுஷரில் மூன்றத்தொருபங்கைக் கொல்லுவதற்காக நாழிகைக்கும் நாளுக்கும் மாதத்துக்கும் வருஷத்துக்கும் ஆயத்தப்பட்டிருந்த நாலு தூதர் அவிழ்த்துவிடப்பட்டார்கள்.
யசா குதிரைராவுத்தரான ராணுவங்களின் தொகை இருபதுகோடியாயிருந்தது, அதுகளின் தொகையைக் கேட்டேன்.
யஎ நான் குதிரைகளையும் அதுகள்மேலிருந்தவர்களையுந் தரிசனத்திலே கண்டவண்ணமாவது: அக்கினியும் பதுமராகமுங் கெந்தகமுமான மார்க்கவசங்கள் அவர்களுக்குண்டாயிருந்தது, குதிரைகளின் தலைகள் சிங்கங்களுடைய தலைகளைப்போலிருந்தது, அதுகள் வாய்களிலிருந்து அக்கினியும் புகையுங் கெந்தகமும் புறப்படுகுது.
யஅ அதுகள் வாய்களிலிருந்து புறப்பட்ட அக்கினி புகை கெந்தகமென்கிற இம்மூன்றினாலே மனுஷரில் மூன்றத்தொருபங்கு கொன்றுபோடப்பட்டது.
யகூ ஏனென்றால் அதுகளுடைய அதிகாரங்கள் அதுகள் வாயிலிருக்குது, அதேனென்றால் அதுகள் வால்கள் பாம்புகளின்சாயலாயிருந்து, தலைகளுள்ளதுகளாயிருக்குது, இதுகளால் சேதப்படுத்துகுது.
உய ஆகிலும் இந்த வாதைகளாலே கொலைசெய்யப்படாததான மனுஷர், தாங்கள் பிசாசுகளையும், *பார்க்கவுங் கேட்கவும் நடக்கவுமாட்டாத, பொன் வெள்ளி செம்பு கல்லு மரமுமான விக்கிரகங்களையும் பணிந்துகொள்ளாதபடிக்குத் தங்கள் கைகளுடைய கிரியைகளைவிட்டுக் குணப்படவுமில்லை, * சங்கீ. ௱யரு, சா—எ.
உக தங்கள் கொலைபாதகங்களையுந் தங்கள் சூனியங்களையுந் தங்கள் வேசித்தனங்களையுந் தங்கள் களவுகளையும் விட்டுக் குணப்படவுமில்லை.

## ய. அதிகாரம.

¶ கடைசி உபத்திரவங்களை அனுபவிக்கப்போகிற சபைக்குச் சத்தியப்பிரமாணமாய்ச் சொல்லப்பட்ட ஆறுதல்.

க பின்பு மேகத்தைச் சூழ்ந்திருந்து, வானத்திலிருந்திறங்கிற பெலமுள்ள வேறொரு தூதனைக் கண்டேன், * அவர் சிரசின்மீதில் வானவில்லிருந்தது, ** அவருடைய முகஞ் சூரியனைப்போலவும், *** அவருடைய கால்கள் அக்கினித்தூண்களைப்போலவுமிருந்தது.
* ச, ௩. ** மத். யஎ, உ. *** க. யரு.
உ அவர் திறக்கப்பட்ட ஒரு சின்ன புஸ்தகத்தைத் தம்முடைய கையிலே பிடித்திருந்து, தம்முடைய வலதுபாதத்தைச் சமுத்திரத்தின்மேலும் இடதுபாதத்தைப் பூமியின்மேலும் வைத்து,
௩ சிங்கங் கெர்ச்சிக்கிறதுபோலே மகாசத்தமாய்

கூப்பிட்டுக்கொண்டார், கூப்பிட்டபோது ஏழு குமுறல்களானவைகள் தங்கள் சத்தங்களை உரைத்தது.

௪ ஏழு குமுறல்களானவைகள் சத்தங்களை உரைத்தபோது நான் எழுதவேண்டுமென்றிருந்தேன், ஆனால் வானத்திலிருந்து என்னோடே: ஏழு குமுறல்களானவை உரைத்ததுகளை நீ முத்திரைபோட்டு அதை எழுதாதே என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்டேன். * தானி. ௰௨,௯.

௫ நான் சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கக்கண்ட தூதரானவர் தம்முடைய கையை வானத்துக்கு ஏறெடுத்து: * தானி. ௰௨,௭.

௬ இனிக் காலஞ்செல்லாமல். * ஏழாந்தூதன் எக்காளமூதப்போகிற சத்தத்தின் நாள்களிலே, பராபரனுடைய ரகசியம் அவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய அடியார்களுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி நிறைவேறுமென்று, * ௰௧, ௰௫.

௭ வானத்தையும் அதிலுள்ளதுகளையும் பூமியையும் அதிலுள்ளதுகளையும் சமுத்திரத்தையும் அதிலுள்ளதுகளையும் சிருஷ்டித்த வராகிய என்றென்றைக்கும் உள்ளாசதாகாலங்களிலும் ஜீவிக்கிறவர் பேரிலே ஆணையிட்டார்.

௮ நான் வானத்திலிருந்து பேசக்கேட்ட சத்தம் மறுபடியும் என்னோடே பேசி: சமுத்திரத்தின்மேலும் பூமியின்மேலும் நிற்கிற தூதர் கையிலிருக்குந் திறக்கப்பட்ட * சின்னப்போஸ்தகத்தைப் போய் வாங்கென்று உரைத்தது. * ௨. வசனம்.

௯ அப்போ நான் தூதர் அண்டைக்குப் போய், அவரோடே: அந்தச் சின்னப்போஸ்தகத்தை எனக்குத் தாரும் என்றேன். அப்போ அவர் என்னோடே: அதை வாங்கிப் பட்சித்துப்போடு, அது உன் வயிற்றைக் கசப்பாக்கும், உன் வாயிலோ அது தேனைப்போலே மதுரமாயிருக்குமென்றார். * எசேக். ௨,௮—௰. ௩, ௧—௩.

௰ நான் அந்தச் சின்னப்போஸ்தகத்தைத் தூதர் கையிலே வாங்கி அதைப் பட்சித்துப்போட்டேன். அது என் வாயிலே தேனைப்போலே மதுரமாயிருந்தது, நான் அதைப் பட்சித்தபோதோவென்றால், என் வயிறு கசந்தது.

௰௧ அப்போ அவர் என்னோடே: நீ மறுபடியும் அனேகஞ் சனங்களுக்கும் சாதிகளுக்கும் பாஷைக்காரருக்கும் ராசாக்களுக்கும் முன்பாகத் தீர்க்கதரிசனஞ் சொல்லவேண்டியதென்றார்.

## ௰௧. அதிகாரம்.

¶ கடை உபத்திரவங்களின் காலமும் அதிலே வல்லாங்குச் சாட்சியும்,

தடிக்கொத்த ஒரு அளவுகோல் எனக்குக் கொடுபட்டது, * தூதனானவர் நின்று சொன்னதாவது: நீ எழுந்து, பராபரனுடைய தேவாலயத்தையும் பலிபீடத்தையும் அதிலே பணிகிறவர்களையும் அளந்துபார்த்து, * ௰, ௧.

உ

௨ தேவாலயத்துக்குப் புறம்பே யிருக்கிற பிராகாரத்தை அளவாமல் அதைப் புறம்பாக்கிப்போடு, அது புறஜாதியாருக்குக் கொடுக்கப்பட்டது, அவர்கள் பரிசுத்தப் பட்டணத்தை * நாற்பத்திரண்டு மாதமாக மிதிப்பார்கள். * ௰௩, ௫.

௩ ஆனாலும் என்னுடைய இரண்டு சாட்சிகளுக்கு அதிகாரந் தருவேன், அவர்கள் இரட்டுடுத்துக்கொண்டிருக்கிறவர்களாய் ஆயிரத்திருநூற்றறுபது நாள் தீர்க்கதெரிசனஞ் சொல்லுவார்களென்றார்.

௪ * பூமியினுடைய பிரபுவுக்கு முன்பாக நிற்கிற ** இரண்டு ஒலிவமரங்களும் இரண்டு விளக்குத்தண்டுகளும் இவர்கள்தானே. * ௨. தெச. ௨, ௪. ** சகரி. ௪, ௩. ௭. ௰௨. ௰௪.

௫ இவர்களுக்கு ஒருத்தன் பொல்லாப்புச் செய்யமனதாயிருந்தால், அக்கினி அவர்கள் வாயிலிருந்து புறப்பட்டு அவர்கள் சத்துருக்களைப் பட்சித்துப்போடும், அவர்களுக்கு ஒருத்தன் பொல்லாப்புச் செய்ய மனதாயிருந்தால், அவன் இப்படி மடியவேணும்.

௬ தங்கள் தீர்க்கதெரிசன நாள்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க இவர்களுக்கதிகாரமுண்டு ** தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தாங்கள் வேணுமென்கிறபோதெல்லாம் பூமியைச் சகல வாதையால் அடிக்கவும் அவர்களுக்கதிகாரமுண்டு. * ௧ இராசா. ௰௭, ௧. * ௨ மோ. ௭, ௰௭.

௭ அவர்கள் தங்கள் சாட்சியை முடித்திருக்கும்போது பாதாளத்திலிருந்தேறுகிற * மிருகம் அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களைச் செயித்து அவர்களைக் கொன்றுபோடும். * ௰௩, ௧. ௭.

௮ அவர்களுடலங்கள், நம்முடைய கர்த்தர் சிலுவையிலறையுண்டதும், ஞான அர்த்தமாய்ச் சோதோமும் எகிப்துமென்னப்படுகிறதுமான மகாப்பட்டணத்தின் வீதியிலே கிடக்கும்.

௯ சனங்களிலுங் கோத்திரங்களிலும் பாஷைக்காரருஞ் சாதிகளுமான பலபேர் அவர்களுடலங்களை மூன்றரைநாளாய்ப் பார்ப்பார்கள், அவர்கள் உடலங்களைக் கல்லறைகளிலே வைக்கவொட்டார்கள்.

௰ பூமியின்மேற்குடியிருக்கிறவர்கள் அவர்கள் நிமித்தியஞ் சந்தோஷமும் பூரிப்புமாயிருந்து, இந்த இரண்டு தீர்க்கதெரிசிகள் பூமியின்மேலே குடியிருக்கிறவர்களை வாதைப்படுத்தினார்களென்று, ஒருவருக்கொருவர் காணிக்கைகளை அனுப்புவார்கள்.

௰௧ மூன்றரைநாளுக்குப் பிற்பாடு பராபரனிடத்திலிருந்து சீவனுடைய ஆவி அவர்களுக்குள்ப் பிரவேசித்தது, அப்போது அவர்கள் தங்கள் காலூன்றினார்கள், அவர்களைப் பார்க்கிறவர்கள் மேலே மகா பயம் இறங்கிற்று.

௰௨ இங்கே ஏறிவாருங்கோளென்று வானத்திலிருந்து தங்களுக்குச் சொன்ன ஒரு பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு ஒருமேகத்திலே வானத்துக்கு ஏறினார்கள், அவர்கள் சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்.

௰௩ அந்நேரத்திலே மகா பூமியதிர்ச்சியுண்டாய், பட்டணத்தில் பத்திலொருபங்கு விழுந்து, மனு

ஷர்

ஷர்ஏழாயிரம்பேர்பூமியதிர்ச்சலால அழிந்தார்கள், அப்பொழுது மற்றவர்கள் பயம் அடைந்து பரமண்டலத்தினுடைய பராபரனுக்கு மகிமையைச் செலுத்தினார்கள்.
௰௪ * இரண்டாவது ஐயோ போச்சுது, இதோ மூன்றாவது ஐயோ சீக்கிரமாய் வரும். * ௯, ௰௩. ௬, ௰௨.

¶ ஏழாமெக்காளத்தொனிப்பு.

௰௫ * ஏழாந்தூதனெக்காளமூதினான், அப்பொழுது லோகத்தின் ** இராட்சியங்கள் நம்முடைய கர்த்தரையும் அவருடைய கிறிஸ்துவையுஞ் சேர்ந்தது, அவர் என்றென்றைக்குஞ் சதாகாலங்களிலும் இராசரிக்கம்பண்ணுவாரென்றுரைக்கிற *** மகாசத்தங்கள் வானத்திலுண்டாச்சுது. * ௰, ௭. ** ௰௨, ௰. *** ௰. ௯, ௭. தானி. ௭, ௰௭.
௰௬ அப்பொழுது பராபரனுக்கு முன்பாகத் தங்கள் ஆசனங்களின் மேலுட்கார்ந்திருந்த இருபத்துநாலு மூப்பர் முகங்குப்புற விழுந்து, பராபரனைப் பணிந்துகொண்டு: * ௪, ௰.
௰௭ * இருக்கிறவரும் இருந்தவரும் வரப்போறவருமாயிருக்கிற சர்வத்துக்கும் வல்ல பராபரனாகிய ஆண்டவரே, தேவரீரை ஸ்தோத்திரிக்கிறோம், ஏனென்றால் உம்முடைய பெரிய வல்லமையைத் தரித்துக்கொண்டு, இராசரிக்கம்பண்ணினீர். * ௧, ௮.
௰௮ சாதிகள் கோபித்தது, உம்முடைய கோபம் வந்தது, மரித்தோர் ஞாயந்தீர்க்கப்படவும், தீர்க்கதரிசிகளாகிய உம்முடைய ஊழியக்காறருக்கும் பரிசுத்தவான்களுக்கும், உம்முடைய நாமத்துக்குப் பயந்த சின்னோருக்கும் பெரியோருக்கும் பலனளிக்கவும், * பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கவும், காலம் வந்ததென்றார்கள். * ௰௯, ௨. ௩.
௰௯ அப்பொழுது வானத்தில் * பராபரனுடைய தேவாலயந்திறவுண்டு, அவருடைய தேவாலயத்திலே அவருடைய உடன்படிக்கையின் பெட்டி காணப்பட்டு, ** மின்னல்களுஞ் சத்தங்களும் இடிமுழக்கங்களும் பூமியதிர்ச்சலும் பெருங்கல்மழையுமுண்டாச்சுது. * ௰௫, ௫. ** ௰௬, ௰௪. ௲.

௰௨. அதிகாரம்.

¶ சபையினத்துருக்கங்களைக் காண்பிக்கிற வேறே ரகசிய அறிவிப்புண்டாகி, வலுசர்ப்பமென்ற பிசாசான சத்துருவுந் தக்கதாகக் காண்பிக்கப்பட்டது.

ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது, சூரியனை அணியப்பட்டிருக்கிற ஒரு ஸ்திரீ இருந்தாள், அவள் பாதங்களின் கீழ்ச் சந்திரனும் அவள் சிரசின் மீதிலே பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமுமிருந்தது.
௨ அவள் கெற்பவதியாயிருந்து, * வேதனைப்பட்டு, பெறவாதைப்பட்டலறினாள். * ரு. மொ. ௪, ௩௰.

௩ அப்போ வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது. இதோ, ஏழு தலையும் பத்துக் கொம்பும், தன் தலைகளின்மேலே ஏழு முடியுமுள்ள சிகப்பான பெரிய வலுசர்ப்பமிருந்தது.

௪ அதின் வாலானது வானத்தினுடைய நட்சத்திரங்களிலே மூன்றத்தொரு பங்கை இழுத்து, அதுகளைப் பூமியிலே விழத்தள்ளிற்று. பெறப்போகிற ஸ்திரீ பெறுகிறபோது அவள் பிள்ளையைப் பட்சித்துப்போட அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.

௫ அவள் * எல்லா ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளப்போற ஆண்பிள்ளையை ** பெற்றாள். அவளுடைய பிள்ளை பராபரனிடத்துக்கும் அவர் ஆசனத்தினிடத்துக்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. *

சங். ௨, ௯. ** எசே. ௩, ௪. ௫. கல. ௪, ௰௬.

௬ ஸ்திரீயோவெனில் வனாந்தரத்துக்கு ஓடிப்போனாள், அங்கே அவளை * ஆயிரத்திருநூற்றறுபது நாள் போஷிப்பதற்காகப் பராபரனாலே ஆயத்தம் பண்ணப்பட்ட இடமவளுக்குண்டு. * ௰௧, ௩.

௭ வானத்திலே யுத்தமுண்டாயிற்று, *மிகாவேலும் அவனுடைய தூதரும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள், வலுசர்ப்பமும் அதின் தூதரும் யுத்தம் பண்ணினார்கள். * தானி. ௰௨, ௧.

௮ ஆனாலதுகள் மேற்கொள்ளாமலும் அதுகளுடைய இடமும் இப்புறம் வானத்திலே காணப்படாமலும் போயிற்று.

௯ லோகமனைத்தையும் மோசம்போக்கிறதும், பிசாசுஞ் சாத்தானுமென்னப்பட்டதுமான * பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டு, பூமியிலே தள்ளுண்டுது, அதின் தூதருந் தள்ளுண்டுபோனார்கள். * ௧. மோ. ௩, ௧.

௰ வானத்திலே ஒரு பெரிய சத்தமானது: * இப்போது ரெட்சிப்பும் வல்லமையும் ராட்சியமும் நம்முடைய பராபரனையும், அதிகாரம் அவருடைய கிறிஸ்துவையுஞ் சேர்ந்தது, என்னென்றால் இரவும் பகலும் நம்முடைய சகோதரரைப் பராபரனுக்கு முன்பாக ** நேரஞ்சுமத்திக் குத்தஞ்சாட்டினது தாழத் தள்ளுண்டுபோச்சுதென்றும், * ௰௧, ௰௫. ** யோபு. ௧, ௯. ௨, ௪. ௫ சகரி. ௩, ௧.

௰௧ அவர்கள் அதை ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் வென்று, தங்கள் ஜீவனை மரணபரியந்தஞ் சினேகியாதிருந்தார்கள்.

௰௨ ஆகையால், வானங்களே, அதுகளிலே வாசமானவர்களே, மகிழுங்கோள், பூமியிலுஞ் சமுத்திரத்திலுங் குடியிருக்கிறவர்களே, உங்களுக்கையோ, என்னென்றால் பிசாசு, தனக்குக் கொஞ்சக்காலம் உண்டென்றறிந்து மகா கோபமுள்ளதாய் உங்களிடத்துக்கிறங்கிவந்ததென்றும் உரக்கக் கேட்டேன்.

௰௩ தான் பூமியிலே தள்ளுண்டதை வலுசர்ப்பங் கண்டு, ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைப் பின்தொடர்ந்தது.

௰௪ ஆனாலந்த ஸ்திரீ, தான் * ஒருகாலமுங் காலங்களும் அரைக்காலமுமாகப் போஷிக்கப்படும்

வனாந்தர

வனாந்தரத்திலுள்ள தன்னுடைய இடத்துக்கு, பாம்பின் முகத்துக்கு விலகிப் பறந்துபோவதற்கு, அவளுக்குப் பெருங்கழுகின் இரண்டு செட்டைகள் கொடுபட்டுது. * தானி. ௭, ௨௫. ௰௨, ௭

௰௫ அப்போ ஸ்திரீயை வெள்ளங்கொண்டு போகப்பண்ணுவதற்கு சர்ப்பமானது அவளின் பின்னாகத் தன் வாயிலிருந்து நதியத்தனை தண்ணீரை ஊற்றிவிட்டுது.

௰௬ ஆனாலும் பூமி ஸ்திரீக்கு உதவிசெய்தது. பூமி தன் வாயைத் திறந்து, வலுசர்ப்பந் தன் வாயிலிருந்து ஊற்றிவிட்ட நதியை விழுங்கிற்று.

௰௭ அப்போ வலுசர்ப்பம் ஸ்திரீயின் மேல் கோபமாயிருந்து, பராபரனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் யேசுக் கிறிஸ்துவின் சாட்சியை உடையவர்களுமாகிய அவளுடைய வித்தில் மீதியிருக்கிறவர்களோடே உயித்தம்பண்ணப் போச்சுது.

## ௰௩. அதிகாரம்.

௧ பத்துக் கொம்புள்ள மிருக மெழும்புகிறது.

நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன், அப்போ, * ஏழு தலையும் ** பத்துக் கொம்புந் தன் கொம்புகள் மேல் பத்து முடியுந் தன் தலைகளின் மேல் தூஷண நாமமுமுள்ள ஒரு மிருகஞ் சமுத்திரத்திலிருந் தெழும்புகிறதைக் கண்டேன். * ௰௭, ௩. ௯. ௰௨. ** தானி. ௭, ௭.

௨ நான் கண்ட அந்த மிருகஞ் சிவிங்கிக்கொப்பாயிருந்தது, அதின் கால்கள் கரடியின் கால்களைப்போலவும், அதின் வாய் சிங்கத்தின் வாயைப்போலவுமிருந்தது, அதுக்கு வலுசர்ப்பந் தன் வல்லமையையுந் தன் ஆசனத்தையும் பெரிய அதிகாரத்தையுங் கொடுத்தது.

௩ அதின் தலைகளில் ஒன்று சாவுக்காயமாய் அடிக்கப்பட்டதாகக் கண்டேன், ஆனால் அதினுடைய சாவுக்காயம் ஆறிப்போச்சுது, பூலோகத்தாரெல்லாரும் மிருகத்தைப் பின்பற்றத்தக்கதாய் ஆச்சரியப்பட்டு,

௪ மிருகத்துக்கதிகாரங் கொடுத்த வலுசர்ப்பத்தைப் பணிந்துகொண்டு: மிருகத்துக்கொத்தவனார், அத்தோடே உயித்தம்பண்ணத்தக்கவனார் என்று மிருகத்தையும் பணிந்துகொண்டார்கள்.

௫ * பெருமைகளையுந் தூஷணங்களையும் பேசும் வாய் அதுக்குக் கொடுபட்டு, ** நாற்பத்திரண்டு மாதம் உயித்தம்பண்ண அதுக்கதிகாரம் அளிக்கப்பட்டுது. * தானி. ௭, ௨௫. ** ௰௧, ௨.

௬ அது பராபரனுடைய நாமத்தையும் அவருடைய கூடாரத்தையும் வானத்தில் வாசமாயிருக்கிறவர்களையுந் தூஷணிக்கத் தன் வாயை அவருக்குத் தூஷணமாகத் திறந்தது.

௭ * பரிசுத்தவான்களோடே உயித்தம்பண்ணி அவர்களைச் செயிக்கத்தக்கதாய் அதுக்களிக்கப்பட்டுது, எல்லா கோத்திரம் பாஷை சாதியின் மேலும் அதுக்கதிகாரங் கொடுபட்டுது. * ௰௧, ௭. தானி. ௭, ௨௧.

௮ லோகத்தோற்றமுதல் அடிக்கப்பட்
குட்டியின் ✝ஜீவபுஸ்தகத்திலே பேரெழு
தபூமியின் குடிகள் அனைவரும் அதைப்பணி
ளுவார்கள். ✝ ௩, ௫. ௰௭, ௮.
௯ யாதாமொருத்தனுக்குக் காதிருந்தால் கே
டவான்.
௰ ஒருத்தனைச் சிறைப்பிடித்தால், சிறையாகப்பட
போவான், ✝ ஒருத்தன் பட்டயத்தாலே கொன்
அவன் பட்டயத்தாலே கொலையுண்கவேண்ட
து, ✝ இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையும்
விசுவாசமுமிருக்குது. ✝ மத். ௨௬, ௫௨. ✝ ✝௰௪, ௰௨.

¶ கள்ளத்தீர்க்கதெரிசியாகிய இரண்டு கொம்புள்ள மிருகமென்பது. ௰௬, ௰௩. ௰௯, ௨௰.

௰௧ வேறொரு மிருகம் பூமியிலிருந்தேறக் கண்டேன். அது ✝ ஆட்டுக்குட்டியைப் போல இரண்டு கொம்புள்ளதாயிருந்து வலுசர்ப்பத்தைப் போலே பேசிற்று, ✝ மத். ௭, ௰௫.

௰௨ முதலாம் மிருகத்தின் அதிகாரத்தையெல்லாம் அதின் முன்பாக நடப்பித்து, பூமியையும் அதிலே குடியிருக்கிறவர்களையுஞ் சாவுகாயம் ஆறின முதலாம் மிருகத்தைப் பணியப்பண்ணி,

௰௩ மனுஷருக்கு முன்பாக அக்கினியையும் வானத்திலிருந்து பூமியிலே இறங்கப்பண்ணத்தக்க ✝ மகா அடையாளங்களைச் செய்து, ✝ மத். ௨௪, ௨௪. ௨ தெச. ௨, ௯. ௰.

௰௪ மிருகத்தின் முன்பாகச் செய்யத்தனக்களிக்கப்பட்ட அடையாளங்களினாலே பூமியின் மேல் குடியிருக்கிறவர்களை மோசம் போக்கி, பட்டயக்காயம் பட்டுப்பிழைத்த மிருகத்துக்குச் சொரூபம் பண்ணவேணுமென்று பூமியின் மேல் குடியிருக்கிறவர்களுக்குச் சொல்லுது.

௰௫ மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை எவர்களாகிலும் பணியாதே போனால் அவர்களைக் கொலைப்படுத்தத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்துக்கு ஆவியைக் கொடுக்க அதுக்குச் சத்துவம் அளிக்கப்பட்டுது.

௰௬ அது சிறியோர் பெரியோர், ஐசுவரியவான்கள் தரித்திரவான்கள், தன்னிச்சைக்காரர் அடிமைகள் அனைவரையும், தங்கள் தங்கள் வலது கையிலாகிலும் அல்லது தங்கள் நெத்திகளிலாகிலும் முத்திரை அடையாளந் தரப்பண்ணிக்கொள்ளவும்,

௰௭ அந்த முத்திரை அடையாளத்தையாகிலும் மிருகத்தின் நாமத்தையாகிலும் அதினுடைய நாமத்தின் லெக்கத்தையாகிலும் உடையவனே ஒழிய வேறொருத்தனுங் கொள்ளவும் விற்கவுங் கூடாதிருக்கவும் பண்ணுது.

௰௮ ✝ இங்கே ஞானமிருக்குது, புத்தியையுடையவன் மிருகத்தின் லெக்கத்தைக் கணக்குப் பார்க்கக்கடவான், ஏனெனில் அது மனுஷனுடைய லெக்கமாயிருக்குது, அதினுடைய லெக்கம் ௬௱௬௰௬. ✝ ௰௭, ௯.

## ௰௪. அதிகாரம்.

¶ சனுபயினசத்துருக்களைச் சேவிப்பவர்.

இதோ நான் * சீயோன்பருவதத்தின் மேலே ஆட்டுக்குட்டியும் அததுடனேகூட அவருடைய பிதாவின் நாமந் தங்கள் நெற்றிகளிலே எழுதப்பட்டிருந்த ** நூற்றுநாற்பத்துநாலாயிரம்பேரையும் நிற்கக் கண்டேன். * சங். ௨, ௬. ** ௭, ௪.

௨ * வெகுதண்ணீர்களினிரைச்சலாகவும் மகா முழக்கமான இடிமுழக்கமாகவும் ஒருசத்தம் வானத்திலிருந்துண்டாகக் கேட்டேன்; தங்கள் சுரமண்டலங்களை வாசிக்கிற சுரமண்டலக்காரரோசையையுங் கேட்டேன். ௰௯, ௬.

௩ அவர்கள் சிங்காசனத்துக்கு முன்பாகவும் நாலு சீவன்களுக்கும் மூப்பருக்கும் முன்பாகவும் * புதுப்பாட்டைப் பாடினார்கள், பூமியிலிருந்து மீட்கப்பட்ட அந்த நூற்றுநாற்பத்துநாலாயிரம்பேரல்லாமல் வேறொருவரும் அந்தப் பாட்டைக் கற்றுக்கொள்ளக்கூடாதிருந்தது. * ௫, ௰.

௪ ஸ்திரீகளோடே கறைப்படாதிருக்கிறவர்கள் இவர்கள்தானே. ஏனென்றால் * கன்னியாஸ்திரீகளாயிருக்கிறார்கள், ** ஆட்டுக்குட்டியானவர் எங்கே போனாலும் அவரைப் பின்செல்லுகிறவர்கள் இவர்கள்தானே. இவர்கள் மனுஷரிலிருந்து பராபரனுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் முதற்பலனாகக் கொள்ளப்பட்டார்கள். * ௨. கொரி. ௰௧, ௨. ** மத். ௰௯, ௨௮.

௫ இவர்கள் வாயிலே கபடு காணப்படவில்லை, ஏனென்றால் பராபரனுடைய சிங்காசனத்துக்கு முன்பாக * மாசற்றவர்களாயிருக்கிறார்கள். * எபே. ௫, ௨௭.

¶ செய்யப்புகுமுன்கூட்டிய விசேஷங்கள்.

௬ வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன், அவனுக்குப் பூமியின் மேற்குடியிருக்கிறவர்களுக்கும், சகல சாதிக்கும் கோத்திரத்துக்கும் பாஷைக்கும் சனத்துக்கும் அறிவிக்கத்தக்கதாக, நித்திய சுவிசேஷமுண்டாயிருந்தது.

௭ அவன் மகா சத்தத்துடனே: நீங்கள் பராபரனுக்குப் பயந்து அவருக்கு மகிமையைச் செலுத்துங்கோள், ஏனென்றால் அவருடைய நியாயத்தீர்ப்பின் வேளை வந்துதே ஆனதினாலே, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரைப் பணிந்துகொள்ளுங்கோள் என்று உரத்தான். * சங்கீ. ௩௩, ௮. ௱௪௬, ௭. ...

௮ வேறொரு தூதன் பின்சென்று: மகாப்பட்டணமாகிய பாபிலோன் விழுந்தது விழுந்தது, ஏனென்றால் தன் வேசித்தனத்தின் உக்கிரமான மதுபானத்திலே எல்லாச் சாதிகளுக்குங் குடிக்கக் கொடுத்ததென்றான். * ௰௮, ௨, ௩. எசா. ௨௧, ௯.

௯ மூன்றாந்தூதன் அவர்களைப் பின்சென்று, மகா சத்தமாய் உரத்ததாவது: ஒருத்தன் மிருகத்தையும் அதின் சுருபத்தையும் பணிந்து, தன் நெற்றியிலாவது தன் கையிலே

கையிலேனும் முத்திரையடையாளந் தரித்துக் கொண்டால்,

௰ அவன் * பராபரனுடைய கோபத்தின் பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்டதுவருடைய உக்கிரமான மதுபானத்திலே குடிக்கு, பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டிக்கு முன்பாகவும் அக்கினியாலுங் கெந்தகத்தாலும் வாதிக்கப்படுவான். * சங்கீ. ௭௫, ௮.

௰௧ அவர்களை வாதையின் புகை * என்றென்றைக்கும் எழும்பும், மிருகத்தையும் அதின் சுருபத்தையும் பணிந்துகொள்ளுகிறவர்களுக்கும், யாதொருத்தன் அதினுடைய நாமத்தின் முத்திரை அடையாளத்தைத் தரித்துக்கொண்டால் அவனுக்கும். * இரவும்பகலும் இளைப்பாறுதலில்லை. * ௰௯, ௩. மற்கு. ௯, ௪௪.

௰௨ * இங்கே பரிசுத்தவான்களுடைய பொறுமையிருக்குது, இங்கே பராபரனுடைய கற்பனைகளையும் இயேசுவைப் பற்றும் விசுவாசத்தையுங் கைக்கொள்ளுகிறவர்கள் உண்டென்றன. * ௰௩, ௰. எபி. ௰, ௩௬.

௰௩ வானத்திலிருந்துண்டாகிற ஒருசத்தத்தைக் கேட்டேன், அது என்னோடே சொன்னதாவது: கர்த்தருக்குள்ளாக மரித்தோர் * இதுமுதலாய் பாக்கியவான்களென்றெழுது. ஆம், தங்கள் வேலைகளை விட்டு இளைப்பாறத்தானென்று, ஆவியானவர் சொல்லுகிறார். அவர்களின் கிரிகைகளோ அவர்களுடனே கூடப் பின்செல்லுகுதென்றது. * லூ. ௨௩, ௪௩.

¶ சபையின் சத்துருக்கள்மேலே நேருங்கும் ஆக்கினைகளை உவமையாய்க் காண்பிக்குதல்.

௰௪ பிறபாடு இதோ, வெள்ளை மேகத்தையும், அந்த மேகத்தின்மேலே * ஒருமனுஷகுமாரனுக்கொப்பாயிருந்து, தம்முடைய சிரசின்மேலே பொற்கிரீடத்தையுந் தம்முடைய கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடையவரான ஒருத்தர் உட்கார்ந்திருக்கிறதையுங் கண்டேன். * ௧, ௰௩. தானி. ௭, ௰௩.

௰௫ வேறொருதூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு மேகத்தின்மேல் உட்கார்ந்தவருடனே: * உம்முடைய அரிவாளை அனுப்பி அறும், ஏனெனில் அறுக்க உமக்கு வேளைவந்தது, அதேனென்றால் பூமியின் அறுப்புலர்ந்ததென்று மகா சத்தமாய்க் கூப்பிட்டான். * யோவே. ௩, ௰௩.

௰௬ அப்போ மேகத்தின்மேல் உட்கார்ந்தவர் தம்முடைய அரிவாளைப் பூமியின்மேலே போட்டார், பூமி அறுக்கப்பட்டுது.

௰௭ வேறொருதூதன், தானுங் கருக்குள்ள அரிவாளைப் பிடித்து, வானத்திலுள்ள தேவாலயத்திலிருந்து புறப்பட்டுவந்தான்.

௰௮ அக்கினியின்மேலே அதிகாரமுள்ள வேறொருதூதனும் பெலிப்பீடத்திலிருந்து புறப்பட்டுவந்து, கருக்குள்ள அரிவாளைப் பிடித்தவனுடனே: உன்னுடைய கருக்குள்ள அரிவாளை அனுப்பி பூமியின் திராட்சக்குலைகளை அறு, ஏனெனில் அதின் பழங்கள் பழுத்ததென்று மகா கூக்குரலாய்ச் சத்தமிட்டான்,

௰௯ அப்போ அந்தத் தூதனுந் தன் அரிவாளைப் பூமியிலே போட்டு, பூமியின் திராட்சையை அறுத்து, பராபரனுடைய கோபத்தின் பெரிதான ஆலையிலே போட்டான்.

௨௰ ✠ அந்த ஆலை பட்டணத்துக்குப் புறம்பே மிதியுண்டது, ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதியுரத்துக்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்களமட்டும் வந்தது. ✠ ௰௯, ௰௫.

## ௰௫. அதிகாரம்.

¶ சபையின் சத்துருக்களுக்கு ஆக்கினை வருகிறதுக்கு ஆயத்தம்.

நான் வானத்திலே பெரிதும் ஆச்சரியமுமான வேறே ஒரு அடையாளமாகிய ஏழு கடைசி வாதைகளுடைய ஏழு தூதரைக் கண்டேன். ஏனெனில் அதுகளாலே பராபரனுடைய கோபம் முடிந்தது.

௨ நான் ✠ அக்கினி கலந்த கண்ணாடிக் கடலைப் போலொத்த ஒரு கடலையும், மிருகத்துக்கும் அதின் சுருபத்துக்கும் அதின் முத்திரையடையாளத்துக்கும் அதின் நாமத்தின் இலக்கத்துக்கும் உள்ளாகாமல் செயங்கொண்டவர்கள் கண்ணாடிக் கடற்கரையிலே நின்று பராபரனுடைய சுரமண்டலங்களைப் பிடித்திருக்கிறதையுங் கண்டேன். ✠ ௪, ௬.

௩ அவர்கள் பராபரனுடைய ஊழியக்காரனாகிய ✠ மோசேயின் பாட்டையும் ஆட்டுக்குட்டியின் பாட்டையும் பாடி: சர்வத்துக்கும் வல்ல பராபரனாகிய கர்த்தாவே, தேவரீருடைய கிரியைகள் பெரிதும் ஆச்சரியமுமானதுகள், பரிசுத்தருடைய ராசாவே, தேவரீருடைய வழிகள் நீதியுஞ் சத்தியமுமானதுகள்: ✠ ௨. மோ. ௰௫, ௧. ஞு.

௪ ✠ கர்த்தாவே ஆர் உமக்குப் பயப்படாமலும் உம்முட நாமத்தை மகிமைப்படுத்தாமலும் இருக்கலாம் ஏனெனில் தேவரீர் ஒருத்தரே பரிசுத்தமுள்ளவர், எல்லாச் சாதிகளும் வந்து உமக்கு முன்பாகப் பணிவார்கள், அதேனென்றால் உம்முட நீதிக்ஞாயங்கள் வெளியரங்கமாச்சுதென்றார்கள். ✠ யெரே. ௰, ௭.

௫ இதுகளுக்குப் பிற்பாடு நான் கண்டதாவது. இதோ, ✠ வானத்திலே சாட்சியினுடைய கூடாரத்தின் தேவாலயந் திறக்கப்பட்டு; ✠ ௰௧, ௰௯.

௬ ஏழு வாதைகளையுடைய அந்த ஏழு தூதர் சுத்தமும் மினுக்குமான பிடவை தரித்து, மார்புகளிலே பொற்கச்சைகளைக் கட்டிக்கொண்டவர்களாய்த் தேவாலயத்திலிருந்து புறப்பட்டார்கள்.

௭ அப்போ நாலு சீவன்களிலே ஒன்று என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் இருக்கிற பராபரனுடைய கோபத்தால் நிறைந்த ஏழு பொற்கலயங்களை அவ்வேழு தூதருக்குங் கொடுத்தது.

௮ ✠ பராபரனுடைய மகிமையாலும் அவருடைய வல்லமையாலுந் தேவாலயம் புகையினாலே நிறைந்தது, ஏழு தூதருடைய ஏழு வாதைகளும் முடியுமட்டாக ஒருத்தனுந் தேவாலயத்துக்குள் பிரவேசிக்கக்கூடாதிருந்தது. ✠ ௧ ராசா. ௮, ௰.

## ௰௬. அதிகாரம்.

௧ சபையின் சத்துருக்கள் மேல் வருகும் ஆக்கினைகள் ஏழு கோபக்கலசங்கள் ஊற்றின உவமையினால் காண்பிக்கப்பட்டுது.

அப்போ தேவாலயத்திலிருந்துண்டாகிற ஒரு பெரிய சத்தம் * அந்த ஏழு தூதருடனே: நீங்கள் போய், பராபரனுடைய க்கோப க்கலசங்களை பூமியின் மேல் ஊற்றுங்கோளென்றுரைக்கக் கேட்டேன். * ௰௫, ௬. ௭.

௨ முதலாந்தூதன் போய், தன் கலசத்தைப் பூமியின் மேல் ஊற்றினான், அப்போ * மிருகத்தின் முத்திரை அடையாளத்தை உடையவர்களும் அதின் சுரூபத்தைப் பணிகிறவர்களுமாகிய மனுஷரில் ** பொல்லாத கடும் பரு உண்டாச்சுது. * ௰௩, ௰௬—௰௭. ** ௨. மோ. ௯, ௰. ௰௧.

௩ இரண்டாந்தூதன் தன் கலசத்தை சமுத்திரத்தில் ஊற்றினான், * அப்போ அது செத்தவன் இரத்தம் போலாகி, சமுத்திரத்திலுள்ள சீவப் பிராணியாவும் மாண்டுது. * ௨. மோ. ௭, ௰௭—௨௧.

௪ மூன்றாந்தூதன் தன் கலசத்தை ஆறுகளிலும் நீரூற்றுகளிலும் ஊற்றினான், அப்போ அதுகள் இரத்தமாச்சுது.

௫ அப்போ தண்ணீர்களுடைய தூதன்: * இருக்கிறவரும் இருந்தவரும் பரிசுத்தருமாகிய ஆண்டவரே, இப்படி ஞாயந்தீர்க்கு தேவரீர் நீதியுள்ளவர். * ௧, ௪. ௰௧, ௰௭.

௬ ஏனெனில் * பரிசுத்தவான்களின் இரத்தத்தையுந் தீர்க்கதரிசிகளின் இரத்தத்தையுஞ் சிந்தினார்கள், இரத்தத்தை அவர்களுக்குக் குடிக்கவுங் கொடுத்தீர், ஏனெனில் அதற்குப் பாத்திரராயிருக்கிறார்களென்று சொல்லக் கேட்டேன். * ௰௭, ௬.

௭ வேறொருத்தன் * பலிபீடத்திலிருந்து: ஆம், சர்வத்துக்கும் வல்ல பராபரனாகிய கர்த்தாவே, உம்முடைய தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானதுகளென்று சொல்லக் கேட்டேன். * ௬. ௯. ௰.

௮ நாலாந்தூதன் தன் கலசத்தைச் சூரியனில் ஊற்றினான், அப்போ தீயினால் மனுஷரைச் சுடுதல் அதுக்களிக்கப்பட்டுது.

௯ அப்படியே மனுஷர் மகா சூட்டாய் சுட்டப்பட்டு, இந்த வாதைகள் மேல் அதிகாரமுடைய பராபரனுடைய நாமத்தைத் தூஷணித்து, அவருக்கு மகிமையைச் செலுத்தக் குணப்படாதே போனார்கள்.

௰ ஐந்தாந்தூதன் தன் கலசத்தை மிருகத்தினுடைய ஆசனத்தின் மேல் ஊற்றினான், அப்போ அதின் இராட்சியம் இருண்டு போச்சுது, அவர்கள் தங்கள் நாவுகளை வருத்தத்தினாலே கடித்துக்கொண்டு,

௰௧ தங்கள் வருத்தங்களாலுந் தங்கள் பருக்களாலும் பரமண்டலத்தினுடைய பராபரனைத் தூஷணித்து, * தங்கள் கிரியைகளை விட்டுக் குணப்படாதே போனார்கள். * ௯, ௨௰. ௨௧.

௰௨ ஆறாந்தூதன் தன் கலசத்தை ஐப்பிராத்தென்கிற பெரிய ஆற்றின் மேல் ஊற்றினான், அப்போ சூரிய உ

தய

உதயத்திலிருந்து * வரப்போற ராசாக்களுக்கு ஆயத்தமாகும்படிக்கு அதின் தண்ணீர் வற்றிப்போச்சுது. * ௯, ௰௪ — ௰௯.

௰௩ அப்போ வலுசர்ப்பத்தின் வாயிலேயும் மிருகத்தின் வாயிலேயும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலேயும் நின்று தவளைகளுக்கொப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்படக் கண்டேன்.

௰௪ ஏனென்றால் அதுகள் பிசாசுகளின் ஆவிகளாயிருந்து, அடையாளங்களைச் செய்து, பூமியிலும் பூச்சக்கரம் அனைத்திலுமுள்ள ராசாக்களை * சர்வவல்லபராகிய பராபரனுடைய பெரிதான அந்நாளின் யுத்தத்துக்குக் கூட்டிச்சேர்க்க அவர்களண்டைக்குப் புறப்பட்டுப்போகுது. * ௰௯, ௰௧ — ௰௯.

௰௫ இதோ, * திருடனைப்போலே வருகிறேன்; விழித்திருக்கிறவனும், * * தன் அவமானங் காணப்பட நிருவாணியாய் நடவாதபடிக்குத் தன் வஸ்திரங்களைக் காக்கிறவனும் பாக்கியவான். * லூ. ௨௧, ௩௬. ௩௬. ௧. தெச. ௫, ௨. ௩. * * ௩, ௰௮.

௰௬ அவர்களை எபிரேயிலே அர்மகெத்தோனென்னப்பட்ட தலத்திலே கூட்டிச்சேர்த்தது.

௰௭ ஏழாந்தூதன் தன் கலயத்தை ஆகாசத்திலே ஊற்றினான், அப்போ பரமண்டலத் தேவாலயத்திலுள்ள ஆசனத்திலிருந்து: * ஆச்சுதென்று உரக்கச் சொல்லுஞ் சத்தம் புறப்பட்டுது. * ௰௧, ௰௫.

௰௮ சத்தங்களும் இடி முழக்கங்களும் மின்னல்களுமுண்டாய், * மகா பூமியதிர்ச்சியுமுண்டாச்சுது, அப்படிப்பட்டதும் அத்தனை பெரிதுமான பூமியதிர்ச்சியில் பூமியின்மேல் மனுஷர் இருந்தது முதல் உண்டானதில்லை. * ௰௧, ௰௩. ௰௯.

௰௯ அப்போ மகாப்பட்டணம் மூன்று பங்காக, ஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்து, மகாப்பாபிலோனுக்கு * பராபரனுடைய கோபத்தினுடைய உக்கிரமான மதுபானத்தின் பாத்திரத்தைக் கொடுப்பதற்கு, அது அவருக்கு முன்பாக நினைக்கப்பட்டுது. * ௰௪, ௮ — ௰.

௨௰ * தீவுயாவும் அகன்றோடி, பருவதங்கள் காணப்படாதேபோய், * ௬, ௰௪. ௱.

௨௧ தாலந்து நிறையான மகா * கல்மழையும் வானத்திலிருந்து மனுஷர்மேலே இறங்கிறது, அந்தக் கல்மழையின் வாதையால் மனுஷர் பராபரனைத் தூஷித்தார்கள், ஏனென்றால் அதின் வாதை மிகுதியும் பெரியதாயிருந்தது. * ௰௧, ௰௯.

## ௰௭. அதிகாரம்.

¶ மிருகத்தின்மேலே ஏறியிருக்கிற ஸ்திரீயான மகாவேசியினுடைய ரூபமும் ஆக்கினையும் பின்னையும் சத்தத்தே வெளிப்போருளாய் காண்பிக்கப்பட்டது.

௧ ஏழு கலயங்களையுடைய அந்த ஏழு தூதரிலொருவன் வந்து, என்னோடே சொன்னதாவது: வா, * திரளான தண்ணீர்களின்மேலே உட்கார்ந்தவளோடே பூ ராசாக்கள் * வேசித்தனம்பண்ணினார்களே,

ளாவேசித்தன மதுபானத்தாலே பூமியின் குடிகளும் வெறியாக்கப்பட்டார்களே, * யெரே. ருக, யங. ** யச, அ. யஅ, ங.

உ அந்தமகாவேசியின் ஆக்கினையை உனக்குக் காண்பிப்பேனென்றென்னுடனே சொல்லி,

ங ஆவிக்குள்ளானவனாக வனாந்திரத்திலே கொண்டுபோனான். அப்போது தூஷணநாமங்களால் நிறைந்ததாய் ஏழுதலையும் பத்துக்கொம்புமுள்ளதுமான சிகப்பு வர்ணமிருகத்தின்மேலே ஒரு ஸ்திரீ உட்கார்ந்திருக்கிறதைக் கண்டேன்.

ச அந்த ஸ்திரீ * ரத்தாம்பரமுஞ் சிகப்பானவையுந்தரித்து, பொன்னினாலும் ரத்தினத்தாலும் முத்துக்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்து தன் வேசித்தனத்தின் அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொன்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். * யஅ. யசு.

ரு அவளுடைய நெற்றியிலே: வேசிகளுக்கும் பூமியின் அருவருப்புகளுக்குந் தாயாகிய * மகா பாபிலோனென்னும் ** ரகசியமான நாமம் எழுதியிருந்தது. * யசு. யகூ. தானி. கூ. உஎ. ** உ. தெச. உ, எ.

கூ அந்த ஸ்திரீ * பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் யேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறித்திருக்கிறதைக் கண்டேன், அவளைக் கண்டபோது மிகவும் ஆச்சரியப்பட்டேன். * யஅ, உச.

எ அப்பொழுது தூதனென்னுடனே சொன்னதாவது: ஏனாச்சரியப்படுகிறாய், நானந்த ஸ்திரீயுடையும், அவளைச் சுமந்திருக்கிற ஏழுதலையும் பத்துக்கொம்புமுடைத்தான மிருகமுடையவும் ரகசியத்தை உனக்குச் சொல்லுவேன்.

அ நீ கண்ட மிருகம் முன்னேயிருந்து, இப்பொழுதில்லை, அது பாதாளத்திலிருந்தேறிவந்து, * அழிவுக்குப்போகப்போகுது. லோகத்தோற்றமுதல் ஜீவபுஸ்தகத்திலே பேரெழுதப்படாத பூமியின்குடிகள் இருந்ததும், அதுவிருந்ததென்றும், அது இருந்தாலும் இல்லாதிருக்கிறதென்றும் பார்த்து, ஆச்சரியப்படுவார்கள். * யக, எ. ** யகூ, உய.

கூ * ஞானமுள்ள சிந்தையிருக்குது ** அந்த ஏழுந்தலைகள் ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழுமலைகளாயிருக்குது. * யங, யஅ. ** யங, க.

ய ஏழு ராசாக்களுண்டு. ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவனிருக்கிறான், மற்றவனின்னம் வரவில்லை, அவன் வரும்போது கொஞ்சக்காலமிருக்கவேண்டியது.

யக இருந்ததும் இல்லாதிருக்கிறதுமாகிய மிருகமே எட்டாவதும் அவ்வேழிலொன்றுமாயிருந்து, அழிவுக்குள்ளே போகுது.

யஉ நீ கண்ட * பத்துக்கொம்புகளும் இன்னும் ராஜ்யம்பெறாத ராசாக்களாம்; மிருகத்துடனே கூட ஒருமணிநேரமளவாய் ராசாக்களாக அதிகாரம்பெறப்போகப்பட்ட ராசாக்களாயிருக்கிறார்கள். * யங, க. தானி. எ, உசு.

யங இவர்களுக்கு ஒரே கருத்துண்டு, தங்களுடைய வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்துக்குக் கொடுப்பார்கள்.

௰௪ இவர்கள் கூட்டுக்குட்டியுடனே யுத்தம்பண்ணுவார்கள். கூட்டுக்குட்டி அவர்களைச் செயிக்கும், ஏனென்றால் அது * கர்த்தாதிகர்த்தருமாராசாதிராசாவுமாயிருக்குது, அத்துடனே கூடயிருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களுந் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் விசுவாசிகளுமாயிருக்கிறார்களென்றான். * ௰௯. ௰௬.

௰௫ பின்னையும் அவன் என்னுடனே சொன்னதாவது: அந்த வேசி உக்காந்திருக்கிற தண்ணீர்களைக் கண்டாயே, அதுகள் சனசதங்களுங் கும்புகளுஞ் சாதிகளும் பாஷைகளுமானது.

௰௬ நீ மிருகத்தின்மேலே கண்ட பத்துக் கொம்போவென்றால், இவர்கள் வேசியைப் பகைத்து, அவளைப் பாழும் நிருவாணமுமாக்கி, அவள் மாங்கிஷத்தைத் தின்று, அவளை நெருப்பினாலே சுட்டெரித்துப் போடுவார்கள்.

௰௭ ஏனென்றால் தாம் நினைத்ததை அவர்கள் செய்யவும், ஏகநினைவாய்ச் செய்யவும் பராபரனுடைய வாக்குகள் நிறைவேறுமட்டுந் தங்கள் ராட்சியத்தை மிருகத்துக்குக் கொடுக்கவும் வேணுமென்பதைப் பராபரன் அவர்கள் இருதயங்களிலே கொடுத்தார்.

௰௮ நீ கண்ட ஸ்திரீயோவென்றால் பூமியின் ராசாக்கள்மேலே ராசரீகம்பண்ணிக்கொண்டிருக்கிற மகாப்பட்டணமானவளென்றான்.

## ௰௮. அதிகாரம்.

¶ மகாவேசியின்மேலே நேரும் ஆக்கினையின் பிறஸ்தாபவிபரம்.

இதுகளுக்குப்பிறபாடு மகா அதிகாரமுள்ள ஒரு தூதன் வானத்திலிருந்திறங்கக் கண்டேன், அவன் மகிமையினாலே பூமி வெளிச்சமாச்சுது.

௨ அவன் மகாசத்தத்துடனே வலுவாய்க் கூப்பிட்டுச் சொன்னதாவது: * மகாப்பாபிலோன் விழுந்து விழுந்தது, ** அது பிசாசுகளின் குடியிருப்புக்குஞ் சகல அசுத்த ஆவியின் காவலும் அசுத்தமும் அருவருப்புமான சகல பட்சியின் காவலுமாய்ப் போச்சுது. * ௰௪, ௮. யெசா. ௨௧, ௯. ** யெசா. ௰௩, ௨௧. ௨௨. யெரே. ௫௰, ௩௯. ௪௰. ௫௧, ௩௭.

௩ ஏனென்றால் * அதினுடைய வேசித்தனத்தின் உக்கிரமான மதுபானத்திலே எல்லாச்சாதிகளுங் குடித்து, பூமியின் ராசாக்கள் அத்துடனே வேசித்தனம்பண்ணி, பூமியின் வியாபாரிகள் அதினுடைய மோகவிகாரத்தின் வலுமையினாலே அயிசுரியவான்களானார்களென்றான். * ௰௭, ௧. ௨.

௪ பிறகு வேறொரு சத்தம் வானத்திலிருந்துண்டாகிறதைக் கேட்டேன், அது உரைத்ததாவது: * நம்முடைய சனமே, நீங்கள் அதின் பாவங்களுக்குடந்தையாகாமலும் அதின் வாதைகளிலே பங்கு பெறாமலுமிருப்பதற்கு, அதிலிருந்து புறப்படுங்கோள். * யெசா. ௪௮, ௨௰. யெரே. ௫௧, ௬. ௪௫.

௫ ஏனென்றால் * அதின் பாவங்கள் வானபரியந்தந்

டர்ந்துபோச்சுது, அதின் அக்கிரமங்களைப் பராபரன் நினைவுகூர்ந்தார். * யெரே. ௫௧, ௯.

௬ * அது உங்களுக்குக் கொடுத்ததுபோல நீங்கள் அதுக்குப் பதில் கொடுத்து, அதின் கிரியைகளின்படி அதுக்கு இரட்டிப்பாகக் கொடுத்திருங்கோள், அது உங்களுக்கு வார்த்த பாத்திரத்திலே அதுக்கு இரட்டிப்பாக வாருங்கோள். * சங்கீ. ௱௩௭, ௮. யெரே. ௫௰, ௰௫. ௨௯.

௭ * எத்தனைக்கத்தனை மகிமைப்பட்டுத் தோக விகாரமாயிருந்ததோ, அத்தனைக்கு வாதனையையுந் துக்கத்தையும் அதுக்குக் கொடுங்கோள், ஏனெனில் * * தன்னிருதயத்திலே: ராசாத்தியாய் உட்கார்ந்திருக்கிறேன் நான் விதவையல்ல, நான் துக்கங்காண்பதில்லையென்குது * யெசா. ௪௭, ௧—௫ * * யெசா. ௪௭, ௭—௰.

௮ அதுநிமித்தியம் ஒரே நாளிலே அதின் வாதைகளாகிய சாவுந் துக்கமும் பஞ்சமும் வரும், அது * அக்கினியாலே சுட்டெரிக்கப்படும். ஏனெனில் அதைத் தீர்க்கிற பராபரனாகிய கர்த்தர் பெலமுள்ளவர். * ௰௭; ௰௬.

௯ * அதுடனே வேசித்தனம் பண்ணி மோகவிகாரமாய் வாழ்ந்த பூமியின் ராசாக்கள் அது வேகிற புகையைக் காணும்போது அதுக்காக அழுது அதின் மேலே புலம்பி. * ௰௭, ௨.

௰ அதின் வாதையின் பயத்தினாலே தூரத்திலே நின்று: ஐயையோ; மகாப்பட்டணமாகிய பாபிலோனே, வலுப்பட்டணமே, ஒரே மணிவேளைக்குள் உன் ஆக்கினை வந்துதேயென்பார்கள்.

௰௧ பூமியின் வியாபாரிகளும் அழுது, தங்கள் சரக்காகிய பொன்னும் வெள்ளியும் ரத்தினமும் முத்தும், உயர்ந்த விலைப்பட்டையும் ரெத்தாம்பரமும் பட்டுக் குசிகப்பா[...]யும்,

௰௨ சகல[...]சந்தனக் கட்டையுஞ் சகல தந்தமுட்டுகளும், விலை உயர்ந்த மரமும் வெண்கலமும் இரும்பும் வெண்கல்லுமாகிய சகலவித முட்டுகளும்,

௰௩ கறுவாப்பட்டையுஞ் சுகந்த வர்க்கங்களுந் தயிலமுந் தூபவர்க்கமும், திராட்சப்பழரசமும் எண்ணெயும் மெல்லிய மாவுங் கோதுமையும், மிருகங்களும் ஆடுகளுங் குதிரைகளும் ரதங்களும் மேனிகளும் மனுஷரின் ஆத்துமங்களுமான இந்தச் சரக்கை இனி ஒருங்கொள்ளாதேயென்று, அதுக்காகத் துக்கப்படுவார்கள்.

௰௪ உன் ஆத்துமம் இச்சிப்பலாதிகள் உன்னை விட்டுப்போச்சுது, கொழுத்ததுகளுஞ் சம்பிரமானதுகளும் எல்லாம் உன்னை விட்டுப்போச்சுது, அதுகளை இனிக் காணாய்.

௰௫ அதினாலே ஐசுவரியவான்களானதுகளின் வியாபாரிகள் அதின் வாதையின் பயத்தினாலே தூரத்திலே நின்று:

௰௬ ஐயையோ, உயர்ந்த விலைப்பட்டையும் ரெத்தாம்பரமுங் குசிகப்பாவடையுந் தரித்து, பொன்னினாலும் ரெத்தினங்களினாலும் முத்துக்களினாலும் மினுக்கங்கொண்டிருந்த மகாப்பட்டணமே, ஒரே மணிவேளைக்குள்ளே இத்தனையான ஐசுவரியம் பாழாய்ப்போச்சுதேயென்று அழுது துக்கிப்பார்கள்.

௰௭

௰௭ * மாலிமிகாரரும், கப்பல்களமேறு
வாளுட்டம் அனைத்துங்கப்பலாளுகளுஞ்சமுத்திரத்
திலே தொழில்பண்ணுகிறயாவருந்தூரத்திலேநின்
று, * எசே. ௨௭, ௨௯—௩௧.

௰௮ அதுவேகிற புகையைப் பார்த்து: இந்தமகாப்
பட்டணத்துக்கொப்பாயிருந்த பட்டணமேது என்று
சத்தமிட்டு,

௰௯ தங்கள்தலைகளின்மேலே புழுதியைப்போட்டு
க்கொண்டு: ஐயையோ, மகாபட்டணமே, சமுத்
திரத்திலே கப்பல்களுள்ளவரனைவரும் அதிலே உதி
ச்சிதசம்பூரணத்தினாலே ஐசுவரியவான்களானார்க
ள், ஒரேமணிவேளைக்குள்ளே அது பாழாய்ப்போச்ச
தென்றழுது, துக்கித்துக்கூப்பிட்டார்கள்.

௨௰ * வானமே, பரிசுத்த அப்போஸ்தலருந்தீர்
க்கதரிசிகளுமானவர்களே, அதின்மேல்மகிழுங்கோ
ள், ஏனெனில் பராபரன் உங்கள் ஞாயத்தை அதினிட
த்தில் * தீர்த்தாரென்றுரைத்தது. * எசா. ௪௪, ௨௩.

௨௧ பெலமுள்ள ஒருதூதன் பெரிய எந்திரக்கல்
லைப்போலொத்த ஒருகல்லையெடுத்து, * சமுத்திரத்தி
லே எறிந்துசொன்னதாவது: இப்படிமகா பட்ட
ணமாகிய பாபிலோன் வேகமாய்த்தள்ளுண்டு, இனி
க்காணப்படாமற்போம். * எரே. ௫௧, ௬௩. ௬௪.

௨௨ இனிச்சுரமண்டலக்காரர் கீதவாத்தியக்கார
ர் நாகசுரக்காரர் எக்காளக்காரருடைய சத்தமுன்
னுள் கேட்கப்படுவதில்லை, இனி எந்தத்தொழிலா
ளியும் உனக்குள் காணப்படுவதில்லை, இனி எந்திர
சத்தமுனக்குள் கேட்கப்படுவதில்லை.

௨௩ இனி விளக்குவெளிச்சம் உனக்குள் பிரகாசிப்
பதில்லை, இனி மணவாளன் மணவாட்டியினுடைய
சத்தமுனக்குள் கேட்கப்படுவதில்லை, ஏனென்றா
ல் பூமியின் பெரியோர்கள் உன்னுடைய வியா
பாரிகளாயிருந்தார்கள், உன் சூனியத்தால் எல்லா
சாதிகளும் மோசம்போனார்கள்.

௨௪ * தீர்க்கதரிசிகளின் இரத்தமும் பரிசுத்தவான்க
ளின் இரத்தமும், பூமியின்மேல் கொல்லப்பட்ட அ
னைவருடைய இரத்தமும் அதுக்குள் கண்டுபிடிக்கப்
பட்டதென்று. * ௰௭, ௬.

## ௰௯. அதிகாரம்.

¶ மகாவேசியின்மேலிறங்கின ஆக்கினைக்
காகப்பாடின வெளிப்பாடு.

இதுகளுக்குப்பிறபாடு * வானத்திலே திரளான ஜனங்களு
டைய மகாசத்தமாக ஒருசத்தத்தைக் கேட்டேன்,
அவர்கள் சொன்னதாவது: * * அல்லேலூயா,
ரட்சிப்பும் மகிமையுங் கனமும் வல்லமையும் நம்மு
டைய பராபரனாகிய ஆண்டவருக்குண்டாவதாக. * ௰
௨௰. * * ௰௧, ௰௫—௰௮.

௨ ஏனென்றால் தன் வேசித்தனத்தினாலே பூமியைக்கெ
டுத்த மகாவேசியை அவர் ஞாயந்தீர்த்து, தம்முடைய ஊழி
யக்காரருடைய இரத்தப்பழியை அவள் கையிலே

வாங்